செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி
தமிழ் வினைச்சொல் அகரமுதலி

A COMRESHENSIVE ETYMOLOGICAL DICTIONARY
OF THE TAMIL LANGUAGE

TAMIL VERBAL DICTIONARY

அஃகு–தல் aḵku, *5 செ.கு.வி.* (v.i.) *1) உயிரெழுத்து அளவிற் குறுகுதல்;* to be shortened, as a vowel. "*தொடர்மொழி யிறுதி வன்மையூர் உகரம் அஃகும்*" *(நன். 94). 2) சுருங்குதல்;* to shrink, to be reduced. "*கற்பக் கழிமட மஃகும்*" *(நான்மணிக். 30). 3) குவிதல்;* to become closed, compressed, as a flower. "*ஆம்பல்... மீட்டஃகுதலும்*" *(காஞ்சிப்பு. திருக்கண். 104). 4) கூம்புதல்;* to become coniform, to taper to a point at one end. *5) கூராதல்;* to become sharp, acute."*அஃகியகன்ற அறிவென்னாம்*" *(குறள், 175) 6) மனங்குன்றுதல்;* to be dejected. *7) கழிந்துபோதல்;* to pass away. "*அல்லாயிர மாயிர மஃகினவால்*" *(கம்பரா. யுத்த அதிகா. 68)*

க. அக்குடிசு; து. அக்கரு, அஃகு

cf. acus, needle, pin. L., fr. I.-E. base ak-, 'sharp pointed', whence also ācer, 'sharp', see acrid and cp. the first element in aciform.

E. acute, L. acūtus, 'sharp'. lit. 'sharpened', p.p, of acuere, 'to sharpen'. which is rel. to acus, 'needle' (K.C.E.D.E.L.).

அக்கியெழுது–தல் akki-ye-ḻudu-, *5 செ.கு.வி.* (v.i.) *அக்கிப் படலத்திற்கு மருந்தாக, அதன் மேற் செங்காவிக் குழம்பினால் மடங்கல் (சிங்கம்) அல்லது நாய் உருவம் வரைதல்;* to paint the figure of a lion or dog with red ochre on the herpes sore, as a cure.

ம. அக்கியெழுத்து.

அக்குள்பாய்ச்சு–தல் akkuḷ-pāyccu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.விளையாட்டாகப் பிறர் கமுக்கூட்டுள் கைவிட்டு மெல்லச் சொறிந்து கூச்சமுண் டாக்குதல்;* to tickle a person's armpit for fun. *2) காமக் குறிப்பொடு ஒரு பெண்ணின் கமுக் கூட்டுள் கைவிடுதல்அல்லது கூச்சமுண்டாக்குதல்;* to touch or tickle a female person's armpit as an amorous gesture.

ம. கிக்கிளி, கிக்கிளியிடல்; க. அக்கள; தெ. கிதகித பெட்டு.

அக்குளு–த்தல் akkuḷu, *4 செ.கு.வி.* (v.i.) *அக்குளிற் கூச்சமுண்டாக்குதல்;* to tickle the armpit. "*அக்குளுத்துப் புல்லலு மாற்றேன்*" *(கலித். 94 : 20).*

[*அக்குள் (பெ.)* → *அக்குளு (வி.).*]

அக்குளுக்காட்டு–தல் akkuḷu-k-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *அக்குளிற் கூச்சமுண்டாக்குதல் (கிச்சுக்கிச்சு மூட்டுதல்) (கலித். 94 : 20, உரை);* to tickle the armpit.

அகங்கரி–த்தல் agangari-, *4 செ.கு.வி.* (v.i.) *செருக்குதல்;* to be self-conceited."*தம்முனடிவீழ்ந் தகங்கரித்தான்*" *(பாரத. பதினே. 162).*

அகட்டு–தல் agaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அகல வைத்தல்;* to open wide. "*அண்ணாந்து காலை யகட்டி நடந்து*" *(பஞ்ச. திருமுக. 876).*

ம. அகற்றுக, அகத்துக; க. அகலிசு; தெ. அகலிம்பு.

அகடுசெய்–தல் agaḍu-šey, *1 செ.குன்றாவி.* (v.t.) *துன்புறுத்துதல் (வின்);* to tease, vex.

அகத்திடு–தல் agattiḍu, *17 செ.குன்றாவி.* (v.t.) *1) கையால் உள்ளணைத்தல் (திவா.);* to fold in the arms, embrace. *2) செருகுதல்;* to insert (W.). *3) உள்ளிடுதல் (கலித்.4, உரை);* to enclose, enfold.

அகநகை–த்தல் aga-nagai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *இகழ்ச்சியாகச் சிரித்தல்;* to laugh in derision. "*அகநகைத் துரைத்து*" *(சிலப். 16 : 164).*

அகப்படு–தல் aga-p-paḍu, *20 செ.கு.வி.* (v.i.) *1) உட்படுதல், உள்ளடங்குதல்;* to be included. "*சத்தவிருடிக் கணமகப்பட . . . . . முனித்தலை வரும்*" *(உத்தரரா. வரையெடு. 69). 2) குறைதல்;* to be diminished, shortened. *(தொல். பொருள். செய். 134, பேரா. உரை.). 3) சிக்கிக் கொள்ளுதல்;* to be entangled. *மான் வலைக்குள் அகப்பட்டுக் கொண்டது (உ.வ.) 'அகப் பட்டுக் கொள்வேன் என்றா கள்வன் களவெடுக்கிறது' (பழ.). 4) பிடிபடுதல்;* to be caught. "*கொண்டல் வண்ண கைப்படா னெவர்க்கும்*" *(பாரத. கிருட். 174). வேட்டைக்குப் போனால் முயல் அகப்படுமா? (உ.வ.) 5) வசப்படுதல்;* to be brought under one's influence, to become subordinate. *ஊரெல்லாம் அவனுக்கு அகப்பட்டிருக்கிறது (உ.வ.). 6) கிடைத்தல்;* to be obtained. "*யாழுடை யார்மணங் காணணங் காய்வந் தகப்பட்டதே*" *(திருக்கோ. 7). 'அகப்பட்டதைச் சுருட்டடா கம்பளி யப்பா' (பழ.).*

ம. அகப்பெடுக; க.,தெ. அகபடு.

அகப்படுத்து–தல் aga-p-paḍuttu, *2 பி.வி.* (v.caus.) *1) சிக்க வைத்தல்;* to entrap."*பரதவர் வலையி னகப்படுத் தரிய*"

(பாரத. குரு.105). 2) பிடித்தல்; to catch hold of. "*மற்றவன் பெருமுரண் முருக்கிக் கையகப்படுத் துய்ப்பனால்*" *(கந்தபு. மகேந்.வச்சிர. 6).*

அகமரி–த்தல் aga-mari, *4* செ.கு.வி. (v.i.) *கருப்பையில் இறத்தல் (சீவரட்.207);* to die in the womb.

அகமுகமா(கு)–தல் aga-mugam-ā-, *6* செ.கு.வி. (v.i.) *உள்நோக்குதல்;* to be turned or pointed in ward. "*அகமுகமாந் தொடர்பால்*" *(ஞானவா. சுரகு. 12).*

அகரமேற்று–தல் agaram-ēṟṟu-, *2* பி.வி. (v.caus.) *பிராமணரை மருதநிலத்தூரிற் குடியேற்றுதல்;* to establish Brāhmin colony in an agricultural tract. "*அகரமேற்றி நன்றிகொடேவதான நல்கி*" *(திருவாலவா. 48 : 22).*

அகல்(லு)–தல் agal-, *12* செ.கு.வி. (v.i.) *1. விரிவடைதல்;* to widen, spread, extend. "*விலங்ககன்ற வியன்மார்ப*" *(புறநா. 3 : 16). 2. ஆக்க முறுதல், பெருகுதல், வளர்ச்சி யடைதல்;* to prosper, increase, develop, grow, progress. "*அழுக்கற்றகன்றாரு மில்லை*" *(குறள், 170). 3. நீங்குதல்;* to leave, vanish. "*பாயிருளகல*" *(புறநா. 25 : 1). 4. பிரிதல்;* to separate, part. "*அகன்றபூங் கொடியை*" *(பாரத. குரு. 79). 5. கடத்தல் (திவா.);* to pass beyond, cross, leap over. *6. நைந்து கிழிதல்;* to be worn out, to be torn. '*வேட்டி அகன்று போயிற்று (வின்.).*

ம. அகலுக; க. அகல்; தெ. அகலு.

அகலக்கால்வை–த்தல் agala-k-kāl-vai-, *4* செ.கு.வி. (v.i.) *செலவு, வினைமுயற்சி முதலியவற்றில் அளவுகடந்த போதல்;* to go beyond limits, as in enterprise, spending, etc. '*அகலக்கால் வைக்காதே*' *(பழ.).*

அகலத்தேடு–தல் agala-t-tēḍu-, *5* செ.கு.வி. (v.i.) *நீங்க வகைபார்த்தல்;* to seek escape. "*அவன்றான் அகலத் தேடிலும்*" *(திவ்.திருவாய். பன்னீ.) -, 5* செ.குன்றாவி. (v.t.) *விரிவாகத் தேடிப்பார்த்தல்;* to search extensively.

அகலநில்–தல் agala-nil-, *14* செ.கு.வி. (v.i.) *ஒதுங்கி நில், விலகி நில்;* to stand aloof, to stand afar. '*அகல இருந்தால் புகல உறவு*' *(பழ.).*

அகலவுழு–தல் agala-v-vuḷu-, *1* செ.கு.வி. (v.i.) *மேலாக உழுதல்;* to plough shallowly.

அகலி–த்தல் agali-, *4* செ.கு.வி. (v.i.) *1. விரிவுறுதல்;* to broaden out, extend, widen. *2. பெருகுதல்;* to enlarge. "*அகலியாவினை யல்லல் போயறும்*" *(தேவா. 2161 : 1).*

ம. அகலிக்குக; க. அகலிசு; தெ. அகலின்சு.

அகவு–தல் agavu-, *5* செ.கு.வி. (v.i.) *1. மயில் அகவுதல்;* to call or cry, as a peacock. "*பல் பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ*" *(திரு முருகு. 122). 2. பாடுதல்;* to sing. "*அகவலன் பெறுக மாவே*" *(பதிற்றுப். 43 : 28). 3. நடஞ் செய்தல் (பிங்.);* to dance, as a peacock. *4. நெடுமையாதல் (ஈடு, 6.2 : 9);* to become long, lengthen out. *-, 5* செ.குன்றாவி. (v.t.) *அழைத்தல்;* to call, summon.

[***Skt.*** ā-hvē.]

அகழ்–தல் agaḷ-, *2* செ. குன்றாவி. (v.t.) *1. தோண்டுதல்;* to dig out, excavate. "*அகழ் வாரைத் தாங்கும் நிலம்போல*" *(குறள்,151). 2. பிடுங்குதல்;* to pluck out, as an eye. "*தனது கண்ணகழ்ந்து*" *(திருக்காளத். பு. 6 : 36). 3. அடியோடு களைதல், மூலத்தோடு நீக்குதல்;* to uproot. "*அகழ்தரு பாவத் தினராய்*" *(சூத. சிவ. 13 : 31).*

ம. அகழுக; க. அகழ்; துட. அட; கோத. அவ்; கொலா. அகுல்.

அகழானெடு–த்தல் agaḷāṉ-eḍu-, *4* செ.குன்றாவி. (v.i.) *வளை தோண்டுதல் (வின்.);* to make holes in the earth; to burrow, as rats.

அகழிதிருத்து–தல் agaḷi-tiruttu-, *5* செ.கு.வி. (v.i.) *பயிரிடுதற்காகச் சிறிய பள்ளங்களைத் தூர்த்துச் சமமாக்குதல்;* to fill up small pits and level the ground for cultivation. '*புன்செய்த்திடல் கல்லி அகழி திருத்தி*' (S.I.I.v, 216).

அகற்று–தல் agaṟṟu-, *2* பி.வி. (v.caus.) *1. விரிவு படுத்துதல்;* to widen, broaden, extend. "*களிறுசென்று களனகற்றவும்*" *(புறநா. 26 : 3). 2. பெருகச்செய்தல்;* to increase. "*மடங்கொன் றறிவகற்றுங் கல்வி*" *(நீதி நெறி.3). 3. நீக்குதல்;* to remove. "*இன்பம் பெருக்கி யிருள கற்றி*" *(திருவாச. 47 : 11).*

ம. அகற்றுக; க. அகலிசு; தெ. அகலின்சு (விரிவுபடுத்துதல்).

அகை[1]–தல் agai- *2* செ.கு.வி. (v.i.) *1. தளிர்த்தல்;* to sprout. "*கொய்குழையகை காஞ்சி*" *(கலித்.74:5). 2. செழித்தல்;* to thrive, flourish, grow well, as vegetation. "*கயமகைய வயனிறைக்கும்*" *(மதுரைக்.92). 3. மலர்தல்;* to blossom, to expand. "*அகைமத்தத் தளி வர்க்கத் தளகத்கொத் தினரே*" *(தக்க யாகப். 98).*

ம. அக; க. அகெ; தெ., கூ. ஆகு; து. அகெ; குட. அகெ; கோண். ஆகீ; கொலா. எக்; குரு. அகரார்ன.

அகை[2]–தல் agai- *2* செ.கு.வி. (v.i.) *1. எரிதல்;* to burn. "*அகையெரியானாது*" *(கலித்.139:26). 2. வருந்துதல்;* to suffer. "*அகையேலமர் தோழி*" *(சீவக. 1524).*

அகை[3]–தல் agai- *2* செ.கு.வி. (v.i.) *1. ஒடிதல்;* to be broken, crumpled. "*அகைந்தவித்துணை மலரெனக்கருளுதியென்றாள்*" *(பாரத. புட்பயாத். 40). 2. காலந்தாழ்த்தல்;* to delay. "*அகையாதெனதாவி தழைக்குமென*" *(சீவக. 1379).*

அகை–தல் agai- *2* செ.கு.வி. (v.i.) *செல்லுதல்;* to go forth, proceed.

அ ை க [1]– த் த ல் agai-, *2 ெ ப ா . வி . (c o m . v .)* *1. தளிர்த்தல், கிளைத்தல்;* to sprout. "குப்பைக் கீரை கொய்கண்ணைகைத்த" *(புறநா. 159 : 9). 2. மலர்த்துதல்;* to spread or expand by force. *அகைத்தல் - வலிய மலர்த்தலுமாம் (தக்க யாகப். 98).*

அகை[2]–த்தல் agai-, *4 செ.கு.வி.* (v.t.) *வருந்துதல், துன்புறுத்தல் (சூடா.);* to trouble, oppress.

அகை[3]–த்தல் agai-, *2 செ.கு.வி.* (v.i.) *விட்டு விட்டுச் செல்லுதல் (தொல். பொருள். செய். 229, பேரா. உரை);* to quit, desert, leave behind. *-, 4 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒடித்தல், முறித்தல்;* to break. "உம்பலகைத்த வொண்முறி யாவும்" *(மலைபடு. 429). 2. அடித்தல் (பிங்.);* to beat. *3. அறுத்தல்;* to cut into pieces. "மயிருக்கொன்றாகவாங்கி யகைத்தகைத் திடுவர்" *(சீவக. 2766).*

அகை[4]–த்தல் agai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. செலுத்துதல் (சூடா.);* to drive cause to go, send forth. *2. இழுத்தல் (பொதி.தி.);* to draw towards.

அங்கலாய்–த்தல் aṅgalāy-, *4 செ.கு.வி.* (v.i.) *1.துயருறுதல்;* to lament, grieve, sorrow. "அங்கலாய்ப் பாளே" *(இராமநா. ஆரணிய. பக். 187). 2. பொறாமை கொள்ளுதல்;* to be envious, jealous. 'ஆடுமறித்தவன் செய் விளையுமா, அங்கலாய்த்தவன் செய் விளையுமா?' *(பழ.) -, 4 செ. குன்றாவி* (v.t.) *வெஃகுதல் (இச்சித்தல்);* to covet (W.).

அங்கா–த்தல் aṅgā-, *3 செ.கு.வி.* (v.i.) *வாய் திறத்தல்;* to open the mouth. "அஆ ஆயிரண்டங்காந்தியலும்" *(தொல். எழுத்து. பிறப்.3).*

து. அங்காவுனி; குட. அங்காவ்; கூ. அங்கலங்க; குவி. அங்கலசலி; பர். அஙால்ப்; மா. அங்கலெ; கொலா. அங்கசி; குரு. அங்கல்; கோண். அங்ஙல; மண். அங்கலா; மங். அங்கை.

அங்காடிகூறு–தல் aṅgāḍi-kūṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *பண்டங்களை விற்குமாறு பெயர் சொல்லிக் கூவுதல் (இராட்.);* to cry out the names of goods for sale in order to attract buyers (R.).

அங்கேணல்–தல் aṅgaṇ-ēl-, *(9) செ.கு.வி.* (v.i.) *துயிலுணர்தல் (தூக்கத்தினின்று விழித்தல்);* to awake. "தேவியை.... அங்கணேற்றபிற் காணாது" *(பெருங். வத்தவ. 7 : 92).*

அச்சடி–த்தல் accaḍi-, *4. செ.குன்றாவி.* (v.t.) *1. உருக் கெழுத்தைப் பதித்தல்;* to print, as a book. *2. முத்திரையைப் பதித்தல்;* to stamp, impress pattern.

ம. அச்சடி.

அச்சடுக்கு–தல் acc(u)-aḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) *உருக்கெழுத்தைச் சொல்லாகக் கோத்தல்;* to compose, set up type to form words.

அச்சிடு–தல் acc(u)-iḍu-, *7 செ.குன்றாவி* (v.t.) *பொத்தகம் முதலியவற்றிற்கு உருக்கெழுத்துப் பதித்தல்;* to print, as a book.

அச்சுக்கட்டு–தல் accu-k-kaṭṭu-, *5. செ.கு.வி.* (v.i.) *1. ஓவியம் வரையுமுன் ஈணை வரைந்து கொள்ளுதல் ;* to draw the out line of a picture. *2. நன்செய் புன்செய் வரம்பு கட்டுதல்;* to form a ridge around a field.

அச்சுக்கோ–த்தல் accu-k-kō-, *4 செ. குன்றாவி.* (v.t.) *உருக்கெழுத்தைச் சொல்லாக அடுக்குதல்;* to set up type to form words, compose.

அச்சுத்திரட்டு–தல் accu-t-tiraṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *பழுதுற்ற வண்டியச்சினை உருப்படுத்துதல்;* to repair a worn-out axle by welding with iron and turning on a lathe.

அச்சுத்திருத்து–தல் accu-t-tiruttu, *5 செ.கு. வி.* (v.i.) *1. நன்செய் நேர்த்தி செய்தல்;* to arange plots in a field in suitable order. *2. அச்சுத் தாள்களைத் திருத்துதல்;* to correct the printed proofs.

அச்சுப்பூட்டியிழு–த்தல் accu-p-pūṭṭi-y-iḻu-, *4 செ.கு.வி.* (v.i.) *தறியூடு நூலைச் செலுத்துதல் (வின்.);* to pass the thread through the loom (W.).

அச்சுப்பூட்டி விளையாடு–தல் accu-p-pūṭṭi-viḷai-yāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *பந்து, புளியங் கொட்டை முதலியன கொண்டு விளையாடுதல் (இராட்.);* to play with balls, tamarind seeds, etc. (R.).

அச்சுறு–தல் accuṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *அச்ச மடைதல்;* to fear, dread. "அச்சுறுகின்றதென்னாவ தாகுமால்" *(கந்தபு. யுத்த. தரும கோ. 19).*

அச்சுறுத்து–தல் accuṟuttu-, *2 பி.வி.* (v.caus.) *அச்ச முண்டாக்குதல்;* to frighten, intimidate. "அஞ்சியச் சுறுத்தலும்" *(தொல். பொருள். கள. 24).*

ம. அஞ்சுக; க.,தெ. அஞ்சு.

அ ச் சே று – தல் acc(u)-ēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *அச்சடிக்கப்படுதல்;* to be printed.

அசக்கு–தல் ašakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அசைத்தல்;* to shake. "அகடசக்கரவின் மணியா" *(கந்தபு. பாயிரம், 1).*

அசக்கு - cf. **E.** shake; **ME.** schaken, shaken. fr. **OE.** scacan, 'to shake, to move, quickly, flee, depart' rel. to **ON.** and **Swed.** skaka; **Dan.** skage, 'to shift, turn, reel'. **F.** secourer, to shake-(K.C.E.D.E.L.).

[*அசங்கு (த.வி.)* → *அசக்கு (பி.வி.)*].

அசங்கு–தல் ašaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *அசைதல்;* to stir, move, shake. "சங்கர நான்முகர் கைத்தலம் விண்ட சங்கிட"

(கம்பரா. யுத்த. இராவணன் வதை. 28).

ம. அசங்குக; க. அசி; தெ. அசியாடு; குருக். அசர்னா.

அசடுதட்டு–தல் aśaḍu-taṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அறியாமை புலப்படுதல்;* ignorance or folly becoming evident. *2. பொலிவழிதல்;* to lose beauty,brightness, as a town. *அந்த ஊர் அசடுதட்டியிருக்கிறது (உ.வ.).*

அசடுவழி–தல் aśaḍu-vaḷi-, *2 செ.கு.வி.* (v.i.) *அறியாமை பெருகி வெளிப்படுதல்;* to display gross ignorance. *அவனிடத்தில் அசடுவழிகிறது (உ.வ.).*

அசர்–தல் aśar-, *2 செ.கு.வி.* (v.i.) *1. களைப்பாற் சோர்வடைதல்;* to become weary or worn-out with fatigue. *2. ஆழ்ந்த துரக்கத்தில் உணர் விழத்தல்;* to lose sensation during deep sleep. *அசர்ந்து தூங்கிவிட்டேன் (உ.வ.). 3. வியப்பால் மயங்குதல்;* to become astonished or amazed. *அந்தச் சிறுமியின் நடனத்தைக் கண்டு அவையோரெல்லாரும் அசர்ந்து போயினர் (உ.வ.).*

ம. அயர்க்க; க. அசுர்; தெ. அசுருசுரு; து. அசுரு.

அசறுபாய்–தல் aśaru-pāy-, *2 செ.கு.வி.* (v.i.) *அசும் பொழுகுதல் (திவ். பெரியாழ். 5. 4 : 8, வியா.);* to trickle.

அசறுபிடி–த்தல் aśaru-piḍi, *4 செ.கு.வி.* (v.i.) *1. செடியில் அல்லது பழத்தில் பூச்சி பிடித்தல்;* sticking of small insects to fruits or herbs. *2. புண்ணின்மேல் பக்கு உண்டாதல்;* the formation of scab on a sore while it is healing *(சா.அக.).*

அசாவிடு–தல் aśā-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *இளைப் பாறுதல்;* to rest. *"இரைதேர்ந் துண்டசா விடுஉம் புள்ளினம்" (கலித். 132 : 3.).*

அசாவு–தல் aśāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *தளர்தல்;* to be discouraged, to lose heart, to droop, languish, grow slack. *"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்" (குறள், 611).*

அசாவுறு–தல் aśā-v-uṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *தளர்தல்;* to be discouraged. *"அசாவுறு செருவில்வென் றாடல்கொள் வதற்கு" (கந்தபு. யுத்த. முதனாட். 383).*

அசிர்–த்தல் aśir-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஐயுறுதல்;* to doubt. *'தாய்வழியை நினைத்து அசிர்த்தாரிறே' (ஈடு, 6.7 : 1).*

அசும்பு–தல் aśumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒழுகுதல்;* to flow. *"அசும்புபொன்வரை" (சீவக. 533). 2. பரவுதல்;* to spread, be diffused. *"அவிரொளி யசும்ப " (காஞ்சிப்பு. பன்னிரு. 164). 3. வழுக்குதல் ;* to be slipeery. *"சோலைத்தே னொழுகநின் றசும்புயர் சந்தனத் தொகுதிக் குன்றம்" (சீவக. 3063).*

அசும்புசெய்–தல் aśumbu-śey-, *1 செ.கு. வி.* (v.i.) *ஒளிர்தல்;* to shine, emit light. *"ஆய பொதியில் வளைபொன்னா லசும்பு செய்து" (திருவிளை. உலவா. 17).*

அசை[1]–தல் aśai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அலுங்குதல்;* to shake slightly. *ஓர் இலைகூட அசையவில்லை (உ.வ.) 'அசைந்து தின்கிறது மாடு, அசையாமல் தின்கிறது வீடு' (பழ.). 2. நுடங்குதல், துவளுதல்;* to be flexible. *"அசையியற் குண்டாண்டோர் ஏளர்" (குறள், 1098). 3. தள்ளாடுதல்;* to totter, stagger. *"வெங்கழுத் தசைய நின்று சுமந்திளைத்தனர்" (பாரத. முதற்போ. 36). 4. இயங்கு தல்;* to move, stir. *'அவனன்றியோரணுவும் அசையாது' (பழ.). 5. ஆடுதல், கூத்தாடுல் (பிங்.).;* to dance. *6. மெல்லச் செல்லுதல்;* to walk or ride slowly. *7. புடைபெயர்தல், செல்லுதல், விட்டுப்போதல்;* to go away, depart. *"அசைந்திடா தொழிகவென" (ஞானவா. சிகித். 70). 8. உலாவுதல்;* to move along, as wind. *"தென்றியா யசைந்து மெல்லச் சினகரம் புகுது மெல்லை" (கந்தபு. உற்பத். திருவவ. 11). 9. கைகாலோய்தல், உடம்பு தளர்தல்;* to become weary, exhausted, weak, infirm as a limb of the body, to become wornout with fatigue. *"நடைமெலிந்தசை இய நன்மென் சீறடி" (சிறுபாண். 32).10. உளைதல், நோதல்;* to ache, as an exhausted limb of the body. *11. நீர்வேட்கையால் இளைத்தல், விடாய்த்தல்;* to suffer from thirst. *"உண்ணு நீர்வேட்டசைந்தே னெனவுரைப்ப" (சீவக. 1592). 12. கலங்குதல், தடுமாறுதல்;* to be perplexed, disconcerted. *"மடங்கலின் றோற்ற நோக்கி யந்தக னசைந்து நின்றான்" (கந்தபு. யுத்த. சிங்க. 310). 13. நீங்குதல், குறைதல்;* to be removed, to diminish. *"அசையாது நிற்கும் பழி" (ஆசாரக்.74). 14. இளைப்பாறுதல்;* to rest. *"புன்மேய்ந் தசைஇ" (பு.வெ. 1 : 11), "கடும் பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ" (புறநா. 141 : 3). 15. இராத் தங்குதல்;* to stay for the night. *"கல்லென சீறூரெல்லியினசைஇ" (அகநா. 63). 16. தங்கியிருத்தல்;* to lodge, to stay. *"தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவி னன்குடி யசைதலு முரியன்" (திருமுருகு. 175-6). 17. திரிதல், பலவிடந் தங்குதல்;* to wander, sojourn. *"அங்கண் அசைந்திடு தன்மை யுன்னி யருள்செய்" (கந்தபு. உற்பத். தேவகிரி. 10). 18. இருத்தல், கிடத்தல்;* to be or lie in a place. *"குறங்கின் மிசை யசைஇய தொருகை" (திருமுருகு. 109). 19. சோம்புதல்;* to be idle, inactive, indolent *"இலமென்றசைஇ யிருப்பாரைக் காணின்" (குறள், 1040). 20. அஞ்சுதல் (சங்.அக.);* to fear, to be afraid of.

ம. அயவு; க. அசி; தெ. அசியாடு; து. அசலெ; குரு. அசர்னா.

அசை[2]–த்தல் aśai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. அலுங்குதல்;* to shake slightly. *" ஆடி யாடி யசைந்தசைந் திட்டு" (திவ். பெரியாழ். திரு. 137). 2. ஆட்டுதல்;* to shake violently. *"நந்திபிரான்றிருப்பிரம்பை யசைத்தருள" (காஞ்சிப்பு. மணிகண். 34). 3. இயக்குதல்;* to move, stir. *4. வீசுதல்;* to fan. *" ஆலவட்ட மசைத்தனர்" (கந்தபு. உற்பத். திருக்கைலா. 21). 5. கட்டுதல்;* to tie, bind, fasten.

" புலித் தோலை யரைக்கசைத்து" (தேவா. 7. 24 : 1). 6. வருத்துதல்; to afflict, persecute. " நாய் நாவினல் லெழிலசைஇ" (சிறுபாண். 17). 7. தட்டுதல்; to knock at. " கதவஞ்சேர்ந் தசைத்தகை" (கலித். 68). 8. சார்த்துதல்; to join with. " அசைநிலைக் கிளவியாகி வருநவும்" (தொல். சொல். இடை. 2). 9. ஓசை யெடுத்தல்; to raise the pitch. 10. ஒற்றறுத்தல்; to set to time-measure. " அசைவிளங்கும் பாடலொடு" (பு.வெ. 7 : 18). 11. சொல்லுதல்; to say. " சேடனாயிர நாவினாலு மசைக்கினும்" (குற்றா. தல. திருக்குற்றா. 70).

அசைந்தாடு–தல் ašaind(u)-āḍu-, 5 செ.கு.வி. (v.i.) கூத்தாடுதல் (இராட்.); to dance (R.).

அசைபறி–தல் ašai-paṟi-, 2 செ.கு.வி. (v.i.) அசைபோடுதல் (இராட்.); to chew the cud (R.).

அசைபோடு–தல் ašai-pōḍu-, 20 செ.கு.வி. (v.i.) ஆடுமாடுகள் தாம் உட்கொண்ட இரையை இரைப்பையின் முதலறையிலிருந்து வாய்க்குக் கொண்டுவந்து ஓய்வாக மெல்லுதல்; to bring back the cud from the first chamber of the stomach into mouth and chew at leisure, as ruminating animals.

ம. அயிவிறக்குக, அகவிறக்குக; க. அகி; தெ. அக்கியுனி; துட. அக்ச்.

அசைமீட்டு–தல் ašai-miṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) அசைபோடும் விலங்குகள் தாம் உண்ட இரையை மீட்டும் மென்று இரைப்பையினுட் செலுத்துதல் (சங்.அக.); to chew the cud and pass it on to the second chamber of the stomach, as ruminating animals.

அசையிடு–தல் ašai-y-iḍu-, 20 செ.கு.வி. (v.i.) அசை போடுதல்; to chew the cud (W.).

அசைவாடு–தல் ašaiv(u)-āḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அசைதல்; to shake, move, stir. 2. மேலுலாவிச் செல்லுதல்; to hover over, move or stir, as wind on the surface of water (W.).

அசைவிடு–தல் ašai-viḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. அசைபோடுதல்; to chew the cud. " அசை விட் டுறங்குங் கன்று" (கூர்மபு. கண்ணனவ. 83). 2. இளைப்பாறுதல் (பரிபா. 6 : 2); to rest.

அசைவுசெய்–தல் ašaivu-šey-, 1 செ. குன்றாவி. (v.t.) உண்ணுதல்; to eat. " நஞ்சினை யசைவு செய்தவன்" (தேவா. 3. 111 : 3).

ம. அசிக்க; க.,தெ. அசன.

[அலகசைத்து உண்பதால், உண்ணுதல் அசைவுசெய்தல் எனப்பட்டது.]

அசைவுதீர்–தல் ašaivu-tir-, 2 செ.கு.வி. (v.i.) இளைப்பாறுதல்; to take rest.

அசைவுபோடு–தல் ašaivu-pōḍu-, 20 செ. கு.வி. (v.i.) அசையிடுதல்; to chew the cud.

அசைவெட்டு–தல் ašaiv-veṭṭu-, 5 செ. கு.வி. (v.i.) அசைபோடுதல்; to chew the cud (W.)

ம. அசவெட்டுக, அயவெட்டுக.

அஞ்சப்படு–தல் añja-p-paḍu-, செயப். வி. (pass.v.) மதிக்கப்படுதல்; to be respected, esteemed " அலரேந்தி அஞ்சலிசெய் தஞ்சப் படுவான்" (சீவக. 1610).

அஞ்சல்தா–தல் (தருதல்) añjal-tā-, 18 செ.கு. வி. (v.i.) அடைக்கலந்தருதல்; to give or assure protection, as saying 'Fear not'. "அடைக்கலங்கொண் டஞ்சல்தந்து" (தேசிகப். 3 : 9).

அஞ்சல்பரப்பு–தல் añjal-parappu-, 5 செ. குன்றாவி. (v.t.) மறு ஒலி/ ஒளி பரப்புதல்; relaying the broadcast or transmission received from other Radio and Television stations.

அஞ்சல்வழங்கு–தல் añjal-vaḻaṅgu-, 5 செ.குன்றாவி.(v.t.) அஞ்சலில் வந்த மடல்களை உரியவர்களுக்குக் கொண்டு போய்க் கொடுத்தல்; delivery of letters from the post-office.

அஞ்சலளி–த்தல் añjal-aḷi-, 4 செ.கு.வி. (v.i.) அஞ்சல்தா-தல் பார்க்க; see añjal-tā-.

அஞ்சு–தல் añju, 5 செ.கு.வி., 5 செ.குன்றாவி. (v.i. & v.t.) 1. வெருவுதல் (பயப்படுதல்); to fear, dread. "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை" (குறள், 428). 2. மதித்தல்; to respect, venerate. 3. வணங்குதல்; to worship.

ம. அஞ்சுக; க.,தெ. அஞ்சு; து. அஞ்சுனி; பட. அஞ்சினெ; கொலா., கொண்., கோத. அஞ்த்; துட. ஒத்; கூ. அது; பிரா. கீதிங்; குவி. அச்சலி, அத்சரி, அத்சி.

அஞர்–தல் añar-, 2 செ.கு.வி. (v.i.) 1. தளர்தல்; to become weary to faint. 2. சோம்புதல் (திவா.); to be lazy, slothful.

அட்டம்பாரி–த்தல் aṭṭam-pāri-, 4 செ.கு.வி. (v.i.) 1. பக்கஞ்சார்ந்து செல்லுதல் (யாழ்ப்.); to walk by the side, walk abreast. 2. பக்க வாட்டில் அகலித்தல், பருத்தல் (யாழ்ப்.); to grow in bulk as a tree, an animal (J.).

ம. அட்டம்; தெ. அட்டமு; க. அட்ட.

அட்டமிடு–தல் aṭṭam-iḍu-, 17 செ.குன்றாவி. (v.t.) சுற்றுதல் (இராட்.); to turn, to move round (R.).

க. அடன; தெ. அடனமு.

அட்டங்கால் போடு–தல் aṭṭāṅgāl-pōḍu-, 20 செ.கு.வி. (v.i.) மீன்வலை சுருட்டும்போது அல்லது மீன் பிடிக்கும்போது மீனவர்கள் சிறிதே உட்கார முயன்றாற்போல் முன்கால் அகற்றி அசைந்தவாறு நடத்தல் (மீனவ.); to step out and walk as fishermen do with kness bent almost in a sitting posture while handling their nets (Fisher.).

அட்டு[1]–தல் aṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *வடிதல்;* to be discharged, as pus; to flow, as honey. "*சீயட்டு முயவுநோய்*" *(சீவக. 2798). -, 5 செ.குன்றாவி.* (v.t.) *1. வார்த்தல்;* to pour as water or oil. "*யாப்பினுளட்டிய நீர்*" *(குறள், 1093). 2. நீர்வார்த்துத் தானஞ் செய்தல்;* to make gifts by pouring water on the right hand of the donee. *3. நீர்வார்த்தாற் போற் கொண்டுவருதல்;* to bring, as a river. "*அட்டித்தரப் பணியே*" *(தேவா. 7.20 : 1). 4. தான பட்டயம் (சாசனம்) அளித்தல்;* to endow, as on a temple. 'கோக்கரு நந்தடக்கன்..... *அட்டின பூமி*' (T.A.S. i, 6) *5.* இடுதல்; to give. "*அளகத்தினட்டிய தாதும்*" *(திருக்கோ. 122). 6.* செலுத்துதல் (S.I.I. ii, 147); to remit money.

க. அட்டு; து. அட்டுனி; கோத. அட்; துட. ஓட்

அட்டு[2]–தல் aṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) ஒட்டுதல்; to join, stick, paste.

க. அண்டிசு; தெ. அண்டு; து. அண்டு; கோத. அண்ட்; கோண். அட்க்; கொண். அட்கி; கொலா., நா. அட்.

அட்டு[3]–தல் aṭṭu-, ஏ.து.வி. (imp.aux.v.) *ஓர் ஈரேவல் (வினை) ஒருமையீறு;* a verbal singular suffix used as imperative auxiliary in the sense of 'let'.

எ-டு : அவன் செய்யட்டு, அது வரட்டு.
இதன் பன்மையீறு 'அட்டும்'.

எ-டு : அவன் செய்யட்டும், அது வரட்டும்.

ம. அட்டே

அடக்கஞ்செய்–தல் aḍakkañ-cey-, *1 செ. குன்றாவி.* (v.t.) *சவத்தைப் புதைத்தல்;* to bury the corpse.

அடக்கம்பண்ணு–தல்aḍakkam-paṇṇu-,*5 செ.குன்றாவி.* (v.t.) *1. உள்ளடக்கி வைத்தல்;* to pack, stow away. *2. சவத்தைப் புதைத்தல்;* to bury, inter, entomb. *3. மறைத்து வைத்தல்;* to conceal, put out of sight.

அடக்கமா(கு)–தல் aḍakkam-ā(gu)-, *6 செ.குன்றாவி.* (v.t.) *1. பள்ளி (சமாதி) புகல்;* to enter into šamādhi voluntarily to attain union with the Universal soul or the Divine spirit. *2.* ஒடுக்கமாதல்; to become modest. *3.* சுருங்குதல்; to shrink *(சா.அக.). -5 செ. குன்றாவி. (v.t.)* மூச்சொடுக்கல்; to control the breath.

அடக்கமெழுப்பு–தல் aḍakkam-eḻuppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மயக்கத் தெளிவித்தல்;* to restore consciousness as from stupor caused by snake bite, fits, etc. *2.* நஞ்சிறக்கல்; to dispel poisonous effects through medicine or magical chant *(சா.அக.).*

அடக்கு–தல் aḍakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அடங்கு என்பதன் பி.வி.* (caus. of aḍaṅgu). *1. அடங்கச் செய்தல்;* to bring under control. *கலகத்தை அடக்கி விட்டார்கள் (உ.வ.). 2. கீழ்ப்படுத்துதல்;* to constrain, repress, bring to terms, to subjugate, curb, coerce, tame, break, as a horse. *3.* சுருக்குதல் *(வின்.);* to condense, abbreviate. *4. உள்ளடக்குதல்;* to pack, stow away. *5. புதைத்தல்;* to bury. *6. சிறுநீர், மலங்களை வெளிப் படுத்துவதைக் கடத்தி வைத்தல்;* to postpone answering calls of nature.

ம. அடக்குக; க. அடக்கு; தெ. அடாசு; கோத. அதற்கு; கூ. ஆட்ப; துட. ஓர்க்; குட. அடக்; து. அடேவுனி; கொலா. டாங்க்த்; மா. அர்கெ; கொண். டாங்; குரு. அர்க்னா.

அடக்குப்பண்ணு–தல் aḍakku-p-paṇṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *தடைசெய்தல்;* to hinder, stop.

அடகுபிடி[1]–த்தல் aḍagu-piḍi-, *4 செ. குன்றாவி* (v.t.) *கடனாகப் பணங்கொடுத்து அதற்கீடாக விலை பெறும் பொருள்களை வாங்கி வைத்தல்;* to do pown-broking.

அடகுபிடி[2]–த்தல் aḍagu-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *(நடம்) கூத்தில் நளிநயக்கை பிடித்தல்;* (Dan.) to assume poses in dancing.

அடங்கு–தல் aḍaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கீழ்ப்படிதல் ;* to obey, yield, submit. *பெற்றோர்க் கடங்கி நடத்தல் வேண்டும் (உ.வ.).2. அறத்தின்கண் அமைந் தொழுகுதல்;* to behave righteously. "*கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான்*" *(குறள், 150). 3. புலன் ஒடுங்குதல்;* to be still, to be subdued, as the mind of a sage. "*சிந்தையு மென் போலச் செயலற் றடங்கிவிட்டால்*" *(தாயு. பராபர. 325). 4. உறங்குதல்;* to sleep. "*விழித்துழி விழித்தும் அடங்குழி யடங்கியும்*" *(கல்லா. 7). 5. மக்கள் உறங்கி அமைதி நிலவுதல்;* to become quiet, as a result of all the inhabitants of a place having gone to sleep. *ஊர் அடங்கிவிட்டது (உ.வ.). 6. உடம்பு ஒடுங்குதல்;* to be reduced, as the body, through disease, old age or grief. *ஆறு மாதத்திற்குள் ஆள் அடங்கிவிட்டான் (உ.வ.). 7. நாடி நின்றுவிடுதல்;* to stop beating as the pulse. *நாடியடங்கிவிட்டது (உ.வ.). 8. மூச்சு நின்றுவிடுதல்;* to stop breathing. *மூச்சடங்கிவிட்டது (உ.வ.). 9. நொசிப்புநிலை யடைதல்;* to attain a state of intense contemplation as the final stage of intense contemplation as the final stage of *yoga*. *இராமலிங்க அடிகள் இறுதியில் அடங்கி விட்டார் (உ.வ.). 10. இறத்தல் (மங்.வ.);* to die (euphem.). *எங்கள் அப்பனார் சென்ற ஆண்டே அடங்கி விட்டார் (உ.வ.).11. உள்ளாதல்;* to be comprised, included. "*அளவை, காண்டல் கருத லுரையென் றிம் மூன்றி னடங்கிடுமே*" *(சி.சி. சுபக். அளவை. 1). 12. படிதல்;* to settle, subside, as dust. *தூசி யடங்கத் தண்ணீர் தெளி (உ.வ.). 13. தங்குதல்;* to remain, stay. *14. கிடத்தல்;* to lie, lie down. "*வெள்ளேற் றெருத்தடங்கு வான்*" *(கலித். 104 : 19). 15. மனத்துள்ளிருத்தல்;* to confine in the mind as a secret. "*அடங்கரு நாணமும் பயமுங் கொண்டனன்*" *(சூத. எக்கி. 2.4 : 23). 16. சினையாதல்;* to be with young, as a cow impregnated. *மாடு அடங்கியிருக்கிறது (இ.வ.). 17.* நெருங்குதல்; to be close

together, thick or crowded."அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய" (கலித். 85 : 6). 18. செய்யக்கூடியதாதல்; to become possible for doing. "இடங்கொளுந்தாதைய ரிட்ட காரிய மடங்கலின் றாயினு மமையு மாயினும்" (சேதுபு. அவைய. 2). 19. தீர்தல்; to be extinguished. "தழற்பசி யடங்கிடாது" (சூத. எக்கி. பூ. 20 : 6). 20. நின்றுபோதல்; to cease. "ஊறுநீரடங்கலி னுண்கயங் காணாது" (கலித். 13 : 7). 21. மறைதல்; to disappear or set, as a heavenly body. "ஆதித்தனடங்கு மளவில்" (கலித். 78 : 15, நச். உரை).

அடசு–தல் aḍašu-, 5 செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to be crowded. 2. சிறிது ஒதுங்குதல்; to move aside. அடசி நில் (உ.வ.). - 5 செ. குன்றாவி. (v.t.) அடையச்செய்தல், செறித்தல்; to set closely (சா.அக.)."அழுந்த வாளி யொன்று பத்துநூறு வன்பொ டடசினான்" (பாரத. பதினா. 30).

க. அடசு

அடர்–தல் aḍar-, 2 செ.கு.வி. (v.i.) 1. நெருங்குதல், செறிதல்; to be close together, thick, crowded. "அறுகையு நெருஞ்சியு மடர்ந்து" (மணிமே.12 : 60). 2. போர் செய்தல்; to fight, engage in a battle. "எண்ணுறு படைகளிவ்வாறெதிர் தழிஇ யடரும் வேலை" (கந்தபு. உற்பத். தாரக. 39).-, 2 செ.குன்றாவி.(v.t.). 1. நெருக்குதல்; to press round, hem in. "வரைசேர்ந்தடர்ந்தென்ன வல்வினை" (திருவாச. 6 : 37). 2. புடைத்தல்; to beat, strike. "வச்சிரங்கொண் டிந்திரன்வெற் படர்வ தென்ன" (ஞானவா. சனகரா. 14). 3. தட்டியுரு வாக்குதல்; to fashion, mould by beating. "ஐதடர்ந்த நூற்பெய்து" (புறநா. 29 : 2).

ம. அடர்; க.,தெ. அடரு; கோத. அய்ர்; குட. அடிச்; கொண். அட்.

அடர்[1]–த்தல் aḍar-, 4 செ.குன்றாவி. (v.t.) 'அடர்தல்' என்பதன் பி.வி. (caus. of aḍardal) 1. அமுக்குதல்; to press down, crush, squeeze. "திருவிரலா லடர்த்தான் வல்லரக்கனையும்" (தேவா. 7. 97 : 8). 2. நெருக்குதல்; to press hard, exert pressure upon. 3. வருத்துதல்; to oppress. "அடர்புலன் போக்கற் றோர்க்கும்" (கோயிற்பு. பாயி. 18). 4. தாக்குதல், போர் செய்தல்; to attack, make an onset upon, begin a quarrel. "ஆளையாள் கொண்டடர்த்தனர்" (கந்தபு. யுத்த. முதனாட். 111). 5. கொல்லுதல்; to kill. "இடங்கரை யாழி வலவ னடர்த்தது போல" (கல்லா. 59).6. கெடுத்தல்; todestroy, remove. "பாவமடர்த்தமர்வா ரேசிவலோ கத்து" (சைவச. பொது. 567).

ம. அடர்க்கு; க. அடரிசு; தெ. அடரின்சு.

அடர்[2]–த்தல் aḍar-, 4 செ. குன்றாவி. (v.t.) பறித்தல்; to pluck, as coconuts. தேங்காயடர்த்தல் (நாஞ்.).

க. அடர்ச்சு; தெ. அடலின்சு.

அடாசு–தல் aḍāšu-, 5 செ.கு.வி. (v.i.) விலகுதல்; to recede, give place to. 5 செ. குன்றாவி. (v.t.) திணித்தல்; to stuff.

க. அடசு

அடாவடியடி[1]–த்தல் aḍā-v-aḍi-y-aḍi-, 4 செ.கு.வி.(v.i.) 1. வல்லடி வழக்காடுதல்; to lay unjust claim to the property of others using force. அடாவடியடித்து அவன் பணத்தை யெல்லாம் அக்கம்பக்கத்தார் கவர்ந்து கொண்டார்கள் (உ.வ.). 2. வம்புரையாடுதல்; to harass by mischievous talk, as a rowdy.

ம. அடாபிடி; க. அடாவுடி; தெ. அடாவடி.

அடாவடியடி[2]–த்தல் aḍā-v-aḍi-y-aḍi-, 4 செ.கு.வி. (v.i.) கொடுமையாகப் பேசுதல்; to speak outrageously. ஓயாமல் அவனிடம் போய் அடாவடி யடிக்கிறார்கள். நேற்று இரவெல்லாம் எல்லாருஞ் சேர்ந்து அவனை அடாவடியடித்தார்கள் (உ.வ.)-, 4 செ.குன்றாவி. (v.t.) கொடுமை செய்தல்; to do violence, to perpetrate outrage. அவன் பங்காளிகள் அடாவடியடித்து அவன் சொத்தையெல்லாம் பறித்துக்கொண்டார்கள் (உ.வ.).

அடி–த்தல் aḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. விளையாடுதல்; to sport, play. குண்டடித்தல், கோலி யடித்தல், சிலம்படித்தல், நொண்டியடித்தல் முதலியன. 2. தனியாக அல்லது கூடிக் கூத்தாடுதல்; to dance singly or in groups. கூத்தடித்தல், கழியலடித்தல், கும்மியடித்தல் முதலியன. 'நான் இவ்வமணக் கூத்தெல்லா மடித்தேன்' (திவ். திருமாலை. 34, வியா.). 3. ஒரு நன்னிகழ்ச்சியின்போது கண்ணன்ன உறவினர் ஒருவரின்மையால் மனம் வருந்துதல்; to suffer in mind due to the absence of a beloved person on a festive occasion. நேற்று நிகழ்ந்த விருந்திற்கு நீங்களின் மையால் என் மனம் மிகவும் அடித்துக்கொண்டது (உ.வ.). 4. துடித்தல்; to twitch, move spasmodically. இருநாளாய் எனக்குக் கண் அடித்துக்கொள்கிறது, என்ன நேருமோ, தெரியவில்லை (உ.வ.) 5. சாடை காட்டுதல்; to hint by gesture. அவன் அவளைப் பார்த்துக் கண்ணடிக்கிறான் (உ.வ.) 6. உடம்பு சுடுதல்; to suffer from fever. அவனுக்குக் காய்ச்சலடிக்கிறது (உ.வ.). 7. பூசுதல்; to besmear, daub. வீட்டிற்கு வெள்ளையடிக்க வேண்டும் (உ.வ.). 8. தடவுதல்; to stroke, brush over. அவனுக்குக் குழையடித்துத் தேட்கொட்டு வலியைப் போக்கினார்கள் (உ.வ.). 9. அலப்புதல்; to chatter, prattle, swagger, bluff. நாள் முழுவதும் அரட்டையடிக்கிறான். எங்கே போனாலும் வாயடிக்கிறான் (உ.வ.) 10. அசைத்தல்; to wag. நாக்கடித்தல் = நாவசைத்தல், நாவசைத்துச் சொல்லுதல் அல்லது பேசுதல். இளநாக்கடித்தல் = ஒன்றன்மேல் விருப்பமில்லாததுபோற் காட்டுதல். இழந்த நாக்கடித்தல் = எண்ணிப் பாராது வாய்நேர்தல் (வாக்களித்தல்). 11. துணி காற்றில் அசைந்தாடுதல்; to flutter, as a flag or cloth hung for drying.

காயப்போட்ட வேட்டி காற்றிற் படபடவென்று அடிக்கிறது (உவ.).12. மணி ஒலித்தல்; to sound or ring, as a bell. கோயில் மணியடிக்கிறது (உவ.).13. காற்று வீசுதல்; to blow, as strong wind. புயற்காற்றடிக்கிறது (உவ.) "சண்ட மாருதச்சுழல் வந்துவந்தடிப்ப" (தாயு. தேசோ. 2). 14. மூக்கிற்குப் புலனாதல்; to be perceived by the sense of smell. பூக்கடைக்குப் போனால் நல்ல மணம் (வாசனை) அடிக்கிறது; குப்பைப் பக்கம் போனால் தீய நாற்றம் அடிக்கிறது (உவ.) 15. ஒளிர்தல்; to shine, as moon; to flash, as lightning. நிலாப் பட்டுப்பட்டென்று அடிக்கிறது. நாலுபக்கமும் மின்னலடிக்கிறது (உ.வ.) 16. பொறியியங்குதல்; to work, as a machine. இந்தத் தையற்பொறி நன்றா யடிக்குமா? (உ.வ.). 17. ஆக்கவாய்ப்பு மிகுதல்; to have continued good luck. அவனுக்கு ஆக்கவாய்ப்பு (அதிர்ஷ்டம்) அடிக்கிறது (உவ.) 18. பழைய நிலை கொள்ளுதல்; to resile, as elastic bodies. இந்த வில்லை (spring) முறுக்கினால் எதிர்த்தடிக்கும் (உவ.).19. தாக்குதல்; to afflict the body. வெக்கையடிக்கிறது, வாடை யடிக்கிறது, பனியடிக்கிறது. 20. மழை கனத்துப் பெய்தல்; to rain heavily. மழை உரத்தடிக்கிறது. 21. தண்ணீர் வேகமாய்ப் பாய்தல்; to issue forcibly, as water from a pipe. தண்ணீர் குழாயிலிருந்து 'சர்' என்றடிக்கிறது (உ.வ.). 22. இயற்றுதல்; to perform, as an athletic feat. அல்லாப்பாண்டியடித்தல். 23. இயங்குதல்; to move. குதிரைபின்னுக்கடிக்கிறது. 24. சேறு தெறித்தல்; to splash, as mud. வண்டி வரும்போது விலகு, இல்லாவிட்டாற் சேறடிக்கும் (உ.வ.).25. நீந்தும்போது கைகால்களால் நீரையடித்தல்; to dabble, to strike water with hands and feet while swimming. நீச்சலடித்தல். 26. திரும்புதல்; to turn. குப்புற அடித்து விழுந்தான். 27. உணர்வு கெடுதல்; to become unconscious. மயக்கமடித்து விழுந்தான். 28. ஒருவன் அல்லது ஒருத்தி வீணாகத் தன்னை வருத்திக் கொள்ளுதல்; to worry oneself unnecessarily, to complain vociferously and respeatedly. ஏன் இப்படி அடித்துக் கொள்ளுகிறாய்? 29. ஒன்றன்மேலடித்துச் சூளுறுதியை மிகுத்தல்; to increase the effect of swearing by striking on something important, dear or held sacred. நீ திருடவில்லை யென்று உன் பிள்ளை தலையில் அடித்துச் சொல் (உவ.) 30. விலைபேசிச் செய்த முடிவைக்கையிலடித்து உறுதிப் படுத்துதல்; to confirm a bargain by striking the palm of another. விலைபேசி முடித்தவுடன் மாட்டுக்காரன் வாங்குகிறவன் கையில் அடித்துக் கொடுத்தான். 31. தேர்வில் தவறுதல்; to fail in an examination, மதியழகன் ஆட்டை (ஆண்டு)த் தேர்விற் கோட்டமடித்து விட்டான். 32. சுண்டுவில்லடித்தல்; to catapult. நான் போனபோது மாட்டுக்காரப் பையன் கவட்டை யடித்துக் கொண்டிருந்தான். 33. மார்பில் அறைந்து கொள்ளுதல்; to beat the breast and bewail the dead, as women do. பெண்கள் மாரடித்து அழுகிறார்கள் (உ.வ.). 34. துளையடித்தல்; to punch a hole. சுவரில் கண்டகண்ட இடமெல்லாம் இப்படியா துளையடிப்பது? 35. பூசணம் பூத்தல்; to become mouldy. மூடிவைத்த பலகாரத்திற் பூஞ்சான் அடித்துவிட்டது. 36. படர்தல்; to spread, as moss. பாசியடித்த குளத்தில் இறங்காதே. 37. மழித்தல்; to shave. தம்பிக்கு மொட்டையடி. 38. தங்குதல்; to abide. அது மூதேவியடித்த முகம்; அதனொடு பேசாதே (இ.வ.) 39. ஒரு திசை நோக்கியியங்குதல்; to proceed in a particular direction. காக்கை வலமடித்தது; கரிக்குருவி இடமடித்தது (உ.வ.). 40. புலம்புதல்; to lament. நேற்று நடுச்சாமத்தில் இந்தப் பக்கம் பேயடித்துக் கொண்டு போனதே; அது உன் காதில் பட்டதா? (இ.வ.). 41. மலங்கழிதல்; to have loose motion. மூன்று முறை வயிற்றாலடித்தது, களைத்துப் போய்விட்டான் (இ.வ.) 42. நெஞ்சு பதைத்தல்; to funk. இருவர் நெஞ்சமும் அடித்துக்கொண்டன. 43. திரிதல்; to roam about. ஊரெல்லாம் சுற்றியடித்துவிட்டு வந்திருக்கிறான். 44. தீம்பு செய்தல்; to be iniquitous and unruly, to make an insolent display of wealth and luxury. அண்ணனுந் தம்பியும் செல்வச் செருக்கினால் தலைகால் தெரியாமற் பெருங் கொட்ட மடிக்கிறார்கள். 45. ஒரு வினையில் ஒட்டாரம் பண்ணுதல்; to be obstinate, to persist in anything. எருது மொண்டியடிக்கிறது, எவ்வளவு அடித்தாலும் எழவில்லை. நகரவில்லை. 46. சாய்தல்; to capsize, overturn, as a cart. வண்டி பள்ளத்திற் போனபோது ஓசாரமடித்துவிட்டது (உ.வ.). 47. நடித்தல்; (fig.) to pretend, feign. அவனுக்கு உண்மையாக நோயில்லை; நோயாளிபோல் நாடகமடிக்கிறான். 48. புறப்பட்டுப் போதல்; to proceed to a place. பள்ளிக்கூடம் விட்டவுடன் நேரே ஊருக்கு அடித்துவிட்டான். 49. காலிற் கட்டியடித்தல்; to be tied to the feet and beaten about, an act of humiliation.

4 செ.குன்றாவி. (v.t.) 1. விரித்த கையினாலாவது, கோல் முதலிய கருவியினாலாவது, ஆளை அல்லது அஃறிணைப் பொருளை அறைதல்; to beat a person, place or thing with open hand or an instrument, smite, hammer. அவனைக் கன்னத்தில் ஐந்து விரலும்பட அடித்தான் (உவ.). 2. தண்டித்தல்; to punish. "அக்கிரமத்தாற் குற்ற மடித்துத் தீர்த்து" (சி.சி. சுபக். 2 : 15). 'அடிக்கும் ஒரு கை, அணைக்கும் ஒரு கை' (பழ.). குட்டையிலடித்தல். 3. தோற்கருவி யியக்குதல்; to play on musical instruments made of hollow cylinder or hemisphere with parchment stretched over the opening like drums (S.) அழகநம்பி நன்றாய் மதங்கம் (மிருதங்கம்) அடிப்பான் (உ.வ.) 4. மணியொலிப் பித்தல்; to ring a bell. நிலையத்தில் சுமைதூக்கி (porter) மணியடித்தவுடன் வண்டி புறப்பட்டுவிட்டது. 5. சிறகியக்குதல்; to flap the wings. கூட்டிலிருந்த குஞ்சு சிறகடித்துப் பறந்துபோய்விட்டது. 6. கல்லெறிந்து காய் வீழ்த்துதல்; to throw a stone and cause fruit(s) to fall from a tree. ஒரே கல்லால் ஒரு மாங்குலையை அடித்து விட்டான் (உவ.).7. தண்ணீரை வலுவாகத் தெளித்தல்; to splash water with force. முகத்தில் தண்ணீரை அடி. 8. மருந்து அல்லது மருந்துநீர் சிவிறியால் தெளித்தல்; to spray liquid or powdered

medicine. புன்செய்களுக்குப் பூச்சிமருந் தடித்தார்கள். 9. மோதுதல்; to dash. அலையடிக்கிறது. தொடர் வண்டியிற் போகும் போது பல கணிக்கு வெளியே தலையை நீட்டியதால் தொலைவரிக் கம்பம் அடித்து விட்டது (உ.வ.).10. துவைத்தல்; to wash by beating wet clothes on a stone. வேட்டியை இரண்டடி அடித்துத் தா. 11. மாப் பிசைதல்; knead, as flour. அப்பத்திற்கு மாவடிக்க வேண்டும்.12. உடைத்தல்; to break, as clods of earth. நிலத்தை உழுதபின் கட்டியடிக்க வேண்டும் (உ.வ.) 13. போரில் தாக்குதல்; to attack in battle. அடித்தான் பகதூர்வெள்ளை கங்கை கொண்டான் கயத்தாறுவரை. 14. வண்டி குலுங்குதல்; to jerk, jolt. பேரியங்கியின் (bus) பின்புறமும், இயங்கி நர வண்டியும் (auto-ricksha) ஓடும்போது தூக்கியடிக்கும்.15. காலங் கடத்தி வருத்துதல்; to annoy by undue postponding. வாங்கின கடனைக் கொடாமல் இழுத்தடிக்கிறான்.16. முத்திரை பொறித்தல்; to stamp, impress, mark on. முத்திரையடித்தல். 17. பதித்தல்; to strike into, deive in. சுவரில் ஆணியடித்திருக்கிறது. நிலத்தில் முளையடிக்க வேண்டும் (உ.வ.). 18. அச்சிடுதல்; to print. அச்சடிக்கும் இடம். 19. பொறியில் தைத்தல்; to sew on machine. ஒரு சொக்காய் (shirt) அடித்துக் கொடு. 20. வெட்டுதல்; to dig. நீர்ப்பாசனத்திற்கு ஒரு கிணறடிக்கவேண்டும். 21. செய்தல், கட்டுதல், அமைத்தல், பதித்தல்; to make, build, construct, pitch. (அ) கல்லிற் கருவி சமைத்தல்; to make a stone implement by chiselling. அம்மி திரிகையுரல் அடிக்குமிடம். (ஆ) கல்லில் அல்லது மாழையில் (உலோகத்தில்) உருவம் அமைத்தல்; to sculpture by chiselling stone or casting metal. வள்ளுவர்கோட்டத்தில் திருவள்ளுவர் படிமை கருங்கல்லில் அடித்துவைத்திருக்கிறது. அவன் அடித்துவைத்த சிலைபோலிக்கிறான் (உ.வ.) (இ) வீடு கட்டுதல்; to build, construct. மரத்தாலடித்த மனை. சோற்றாலடித்த சுவர். (ஈ) படமாடம் அமைத்தல்; to pitch a tent. புதிதாய் வந்த வட்டக்காட்சிக்குப் (circus) பெரிய கூடாரம் அடித்திருக்கிறார்கள். 22. நகையாடிக் கூறுதல்; to joke, to make fun of. புது மணவாளப் பிள்ளையை முறைகாரப் பெண்கள் நையாண்டி யடிப்பது வழக்கம். 23. குறை சொல்லுதல்; to critise. கட்டத்தெரியாவிட்டாலும் கட்டின வீட்டிற்கு வக்கணையடிக்கத் தெரியும் (உ.வ.). 24. ஓட்டுதல்; to drive as cart, plough, bullocks, ect. வண்டியடித்தல், ஏரடித்தல், பிணையலடித்தல் முதலியன. 25. வண்டியிற் கொண்டுவருதல்; to cart. நாலுவண்டி மணலடித்தான் (உ.வ.). 26. வண்டியிற் கொண்டு நிலத்திலிடுதல்; to cart dry clay, manure, etc. நன்செய்க்குக் கரம்பையும் உரமும் அடிக்க வேண்டும். 27. உள்ளிடுதல்; to apply, inject. காரைமுள் தைத்துக் களைந்தெடுத்த இடத்தில் எருக்கம் பால் அடிக்கவேண்டும். 28. வாரிக்கொண்டு போதல்; to sweep away, as flood. களத்திலிருந்து நெல்லை யெல்லாம் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. 29. கவர்தல்; to seize, snatch, steal, rob, plunter, take by force. கோழிக்குஞ்சைப் பருந்தடித்துக் கொண்டு போய்விட்டது. அவன் பணப் பையை எவனோ அடித்துக்கொண்டு போய் விட்டான். அவன் சொத்தையெல்லாம் கொள்ளையடித்து விட்டார்கள். 30 நீக்குதல்; to remove, erase, cross out, nullify. அந்த மாணவன் பெயரை அடித்து விட்டார்கள். பிழையான விடைகளை யெல்லாம் ஆசிரியர் அடித்து வைத்திருக்கிறார். ஒரு சட்டம் இன்னொரு சட்டத்தை அடிக்கும். 31. மறுத்தல்; to refute, contradict. அவன் சொல்வதையெல்லாம் அடித்துப் பேசு. 32. வெல்லுதல்; to defeat, overcome, win the game. அவனை ஓட்டப் பந்தயத்தில் அடித்து விட்டான். 'அடித்தது ஆட்டம், பிடித்தது பெண்டு' (பழ.) 33. வென்று பெறுதல்; to win, as a prize. அவன் பேச்சுப் போட்டியில் ஒரு வெள்ளிக் கிண்ணத்தை அடித்து விட்டான். 34. கொல்லுதல்; to kill. 'புலி யடிக்குமுன் கிலியடிக்கும்' (பழ.). அவன் பேயடித்துச் செத்தான். பழைய வீட்டுப் புறக்கடையில் ஒரு பாம்பும் ஒரு தேளும் அடித்தார்கள். மருமகன் வந்திருந்தபோது கோழியடித்து விருந்திட்டார்கள். வேட்டைக் காரன் ஒரு முயலடித்துக்கொண்டு வந்தான். 35. அழித்தல்; to ruin, destroy. திரௌபதி வஞ்சினம் கவுரவர் மரபை அடித்துவிட்டது. 36. அடித்து உதிர்த்தல்; to beat down fruits from trees. 37. கதிரினின்று தவசமணிகளை அடித்துப் பிரித்தல்; to beat and separate grains from spike or head of corn. இன்று களத்தில் நெல்லடித்தோம். 38. பயிர்செய்தல், தவசம் விளைவித்தல்; to raise a crop, produce food grain. அதே நிலத்தில் சென்ற ஆண்டு பத்து மூட்டை சாமையடித்தோம் (தரும.).39. கரண்டியால் அடித்துக் கலக்குதல்; to stir with a spoon. ஒரு முட்டையடித்து அடைசுடு; ஒரு குவளை தேநீர் அடித்துக்கொடு. 40. பேரளவாயுண்ணுதல்; to eat voraciously, to drink excessiely. கருப்பண்ணன் இன்று காலை இருபது இட்டிலியும் ஐந்து குவளை கொழுந்துநீரும் (தேநீரும்) அடித்துவிட்டான். 41. கொல்லாமற் சாக வைத்தல்; to cause death through indirect means. அவனைப் பட்டினிபோட்டுச் சாகடித்தார்கள். 42. வெடி குண்டு வீசுதல்; to fire shots, discharge cannon balls. விட்டடித்தான் இரண்டு குண்டு. 43. தொலைவரி விடுதல்; to send telegraphic message. மகனை உடனே வரச்சொல்லித் தொலைவரி (தந்தி) யடித்தார்கள். 44. தூசி துடைத்தல்; to dust. மேசை நாற்காலியில் தூசியடி. 45. ஏமாற்றுதல்; to cheat, defraud, swindle. ஊரையடித்து உலையிற்போட்டு வாழ்கிறான் (உ.வ.). 46. கஞ்சாப் புகை குடித்தல் அல்லது கஞ்சாக் குழம்பு (லேகியம்) உண்ணுதல்; to smoke *ganja* or eat *bhang*. கஞ்சா (பங்கி) அடிக்கிறான். 47. காசு உரு வாக்குதல்; to mint, coin money. காசடிக்கும் இடம் (தங்கசாலை) 48. விற்றல்; to sell. என் வண்டியை எப்படியாவது கையடிக்கப் பார்க்கிறேன். 49. மனப்பாடஞ் செய்தல்; to memorize, learn by rote.

பாடத்தையெல்லாம் உருவடித்துவிட்டான் (உ.வ.). 50. கையாளுதல்; to employ, use, handle, practise. ஆங்கிலமுந் தமிழுங் கலந்தடிக்கிறான் (உ.வ.). எ-டு: உழப்பியடித்தல், கலங்கடித்தல், சிதறடித்தல், போக்கடித்தல். 51. அரித்தல்; to gnaw as white ant, to eat as moth. பொத்தகத்தைப் பூச்சியடித்து விட்டது (இ.வ.). 52. மழித்தல்; to shave. அண்ணனுக்கு மீசையடி. 53. நைத்தல்; to crush. இந்த வேரையடித்துப் புண்ணின்மேல் வைத்து கட்டு (இ.வ.). 54. ஒன்றில் மாட்டி வைத்தல்; to involve, entangle, implicate. என்னைக் குழப்பத்திலடித்துவிட்டு வந்து விட்டான். 55. கழித்தல்; to pass, as urine. சிறுவன் நின்று கொண்டே அடிக்கிறான் (நகை.). 56. அழுத்துதல்; to press down. வண்டியில் முன்பொறை (முன்பாரம்) அடிக்கிறது, கொஞ்சம் பின்னால் நகருங்கள் (இ.வ.). 57. கெடுத்தல்; to spoil. கருமத்தை (காரியத்தை) உழப்பியடித்துவிட்டான். 58. ஒன்றை எங்கேனும் தெரியாது விட்டு விடுதல்; to mislay a thing unwittingly and lose it. மாணவன் தன் ஊற்றுத்தூவலைப் போக்கடித்துவிட்டான். 59. பொறியாற் குத்துதல்; to punch. 60. ஒன்றைச் செய்வித்தல்; to cause anything. கன்னெய் (petrol) விலையேற்றம் பல நாடுகளைக் கலங்கடித்து விட்டது. (கலங்க + அடித்தல் → கலங்கடித்தல் = கலங்கச் செய்தல்). 61. துன்புறுத்துதல்; to afflict, persecute. இட்டிலர் (Hitler) செருமானிய யூதரைச் சிதறடித்தார் (சிதற + அடித்தல் → சிதறடித்தல் = உலகெங்கும் சிதறிப் போமாறு துன்புறுத்துதல்). 62. தூக்கந் தாக்குதல்; to be affected by sleepiness. அவனைத் தூக்கம் அடிக்கிறது, போய்த் தூங்கச் சொல். 63. சாய்த்தல்; to bend, tun down. காற்று வேலியை அடித்து விட்டது. 64. விதை நசுக்குதல்; to castrate. அது காயடித்த காளை (உ.வ.).

ம. அடி., அடிக்குக; க. அடசு; தெ. அடுசு; து. அடிபுனி.

அடிக்கட்டு–தல் aḍi-k-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) புண் புடைத்தல்; to become inflamed, as a boil.

அடிக்கொள்(ளு)–தல் aḍi-k-koḷ-, 16 செ.கு.வி. (v.i.) முளைத்தல், தோன்றுதல்; to sprout, originate. "வாட்டடங் கண்ணி மார்பில் வந்தடிக் கொண்ட ஞான்றே" (கூர்மபு. கண்ணனவ. 25.).

அடிக்கோலு–தல் aḍi-k-kōlu-, 7 செ.கு.வி. (v.i.) 1. அடிப்படையிடுதல்; to lay a foundation, make preparations. 2. தொடங்குதல்; to begin. "அடிக்கோலி ஞாலத்தாள் பின்னு நலம்புரிந்த தென்கொலோ" (திவ். இயற். 2 : 82).

அடிகுளிர்–தல் aḍi-kuḷir-, 2 செ.கு.வி. (v.i.) 1. கால் சில்லிடுதல்; to become chill, as the legs or extremities of limbs. 2. அண்டி சில்லிடுதல்; to become chill, as the anus (சா.அ.க.).

அடிகொள்(ளு)–தல் aḍi-koḷ-, 16 செ.கு.வி. (v.i.) தொடங்குதல்; to begin, commence (சா.அக.).

அடிசாய்–தல் aḍi-šāy-, 2 செ.கு.வி. (v.i.) அடிக்கீழ் நிழல் சாய்தல்; sun's declining as indicated by the lengthening of the shadow under one's foot.

அடித்தள்ளிப்போ–தல் aḍi-t-taḷḷi-p-pō-, 8 செ.கு.வி (v.i.) 1. இருக்கை (ஆசன) வாய் மூலம் வெளிப்பிதுங்கி நிற்றல்; protrusion of the rectal walls beyond the anus, prolapse of the rectum. 2. பெண்கட்குக் கருப்பை வாய் தள்ளல் (உறுப்புத் தள்ளல்); protrusion of the womb beyond the vulva, prolapse of the uterus (சா.அக.).

அடித்துக்கொண்டுபோ–தல் aḍittu-k-koṇḍu-pō-, (8) செ.குன்றாவி. (v.t.) 1. வாரிக் கொண்டு செல்லுதல்; to sweep away, as a flood, carry away with a rush. வெள்ளம் வீடுகளையெல்லாம் அடித்துக் கொண்டு போய்விட்டது. 2. கொள்ளைகொண்டு செல்லுதல்; to plunder, rob and get away. விசயநகர் அரண்மனையில் எஞ்சியிருந்த செல்வங்களை யெல்லாம் கொள்ளைக் கூட்டம் அடித்துக் கொண்டு போய்விட்டது. 3. துயர மிகுதியால் ஒரு பெண் தன் தலையில் அடித்துக்கொண்டு செல்லுதல்; to go about beating on the head, as a grief-stricken woman. தன் மகன் இறந்து விட்டானென்று தொலைவரி (தந்தி) வந்ததும், தாய் தன் தலையில் அடித்துக்கொண்டு போனாள். 4. ஊர்காவலர் குற்றவாளிகளை அடித்துச் சிறைக்குக் கொண்டுச்செல்லுதல்; to beat the law-breakers and take them to prison, as policemen.

அடித்துக்கொல்(லு)–தல் aḍittu-k-kol(lu)-, 7 செ.குன்றாவி. (v.t.) கையால் அல்லது கருவியாலடித்துக் கொல்லுதல்; to kill a person or animal by beating with hand(s) or weapons.

அடித்துக்கொள்(ளு)–தல் aḍittu-k-koḷ(ḷu)-, 16 செ.கு.வி. (v.i.) 1. தன்னை அறைந்து கொள்ளுதல்; to beat oneself once or repeatedly. தன் தலையில் அடித்துக்கொண்டாள். 2. பன்முறை தடுத்துரைத்தல்; to repeatedly protest against. அது செய்யத்தகாதென்று முன்னமே எத்தனையோ முறை அடித்துக் கொண்டேன். 3. அடிக்கடி சண்டையிடுதல்; to quarrel again and again. இவ்விருவரும் நாள்தோறும் அடித்துக் கொள்கிறார்கள். 4. மனம் வருந்துதல்; to suffer in mind. திடு மென்று ஆற்றில் வெள்ளம் வந்ததனால், என் மகன் திரும்பி வரும்வரை என் மனம் மிகவும் அடித்துக்கொண்டது (உ.வ.).

அடித்துக்கொளுத்து–தல் aḍittu-k-koḷuttu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பொதுமேடையில் தலைசிறந்த சொற்பொழி வாற்றுதல்; to deliver an excellent speech at a public meeting. அன்று நடந்த பொதுக்கூட்டதில் இராமசாமி அடித்துக்கொளுத்தி விட்டார் (உ.வ.). 2. பேச்சுப் போட்டியல் ஒப்புயர்வற்ற திறமை காட்டுதல்; to exhibit extra-ordinary talents in an oratorical contest. நேற்றுப் பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டியில், உங்கள் மகன் அடித்துக் கொளுத்தி விட்டான் (உ.வ.).

ம. அடிச்சுதகர்க்குக.

அடித்துச்சொல்(லு)–தல் aḍittu-c-col(lu)-, *8 செ.குன்றாவி.* (v.t.) *வலியுறுத்திக் கூறல்;* to say emphatically.

அடித்துப்புரள்(ளு)–தல் aḍittu-p-puraḷ-, *16 செ.கு.வி.* (v.i.) *சினந்து அடம்பிடிக்கும் குழந்தை அல்லது தினவுகொண்ட கழுதைபோல் தரையில் புரண்டு உருளுதல்;* to roll on the ground, as a naughty child in anger or as an ass, to allay itching.

அடித்துப்பேசு–தல் aḍittu-p-pēšu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *மறுத்துப் பேசுதல்;* to refute, contradict emphatically.

அடித்துவிடுதல் aḍittu-viḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.) *வலிமையாகச் செய்துமுடித்தல் (இராட்.);* to accomplish by force (R.).

அடித்துவிழு–தல் aḍittu-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *இழவு வீட்டில் மாரடித்துக்கொண்டு விழுதல்;* to beat the breasts and fall down at the house where death has occurred, as a woman.

அடித்துவிழுந்தழு–தல் aḍittu-viḻund(u)-aḻu-, *1 செ.கு.வி.* (v.i.) *இழவு வீட்டில் மாரடித்துக் கொண்டு விழுந்தழுதல்;* to beat the breasts and fall down and bewail, as a woman, at the house where death has occurred.

அடித்தொண்டையிற் பேசு–தல் aḍi-t-toṇḍaiyiṟ-pēšu-, *5 செ.கு.வி., 5 செ. குன்றாவி.* (v.i & v.t.) *குரலை அடித் தொண்டையிலடக்கிப் பேசுதல்;* to speak in guttural voice.

அடிதலை தடுமாறு–தல் aḍi-taḻai-taḍumāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *தொடக்கவிறுதி தெரியாவாறு குழம்புதல்;* to be confused, in the statement of serial or chronological order of things or events. "*அந்தமில் மறையெல்லா மடிதலை தடுமாறி*" *(கந்தபு. பாயிரப். 1).*

அடிதவ்வு–தல் aḍi-tavvu-, *5 செ.கு.வி.* (v.i.) *அடிதாண்டிப் பழகுதல் அல்லது விளையாடுதல்;* to jump over, as an exercise of children or young animals (W.).

அடிதிரும்பு–தல் aḍi-tirumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *பொழுது சாய்தல்;* sun's declining as indicated by the turning eastward of the shadow under foot.

அடிதொடு–தல் aḍi-toḍu, *20 செ.கு.வி.* (v.i.) *தெய்வத்தின் பாதந் தொட்டுச் சூளிடுதல்;* to take an oath by touching the feet of God or a deity. "*ஒழியப் போகே னுன்னடி தொட்டேன்*" *(மணிமே. 18 : 171). -, 19 செ. குன்றாவி* (v.t.) *பெரியோரின் பாதந் தொட்டு வணங்குதல்;* to pay homage to great men by touching their feet. "*கோனடி தொட்டேன்*" *(கலித். 94 : 36).*

அடிநகர்–தல் aḍi-nagar-, *2 செ.கு.வி.* (v.i.) *இடம்விட்டுப் பெயர்தல்;* to move a little, to be dislodged.

அடிப்படர்–தல் aḍi-p-paḍar-, *2 செ.கு.வி.* (v.i) *1. கீழ்ப் பரவுதல்;* to spread underneath, as roots, creepers. *2. சூழ்நிலைகள் இசைந்து வருதல்;* to be propitious."*நல்லூழி யடிப் படர*" *(மதுரைக். 21). (சா. அக.).*

அடிப்படு–தல் aḍi-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. கீழ்ப்படையிலிருத்தல் (சங்.அக.);* to be in the lower stratum. *2. அடிச்சுவடுபடுதல்;* to be worn-out by passing feet, as a path. "*சிலநாளடிப்படிற் கல்வரையு முண்டா நெறி*" *(நாலடி. 154). 3. கீழ்ப்படிதல்;* to obey, do another's will willingly. "*ஆணைகொண்டடிப்பட விருந்தன்று*" *(பு.வெ. 6 : 31).* "*உரிய வம்புவி பல்லாண்டடிப்பட வாண்டான்*" *(பாரத. உலூகன். 3). 4. பழகுதல்;* to become accustomed to. '*ஒழுகுதலைக் கற்றலாவது அடிப்படுதல்*' *(குறள், 140, பரிமே. உரை). 5.பழைமையாகவருதல்;* to be long established. '*அடிப்பட்ட சான்றோர்*' *(நன். 266, மயிலை. உரை).*

அடிப்படுத்து–தல் aḍi-p-paḍuttu-, *2 பி.வி.* (v. caus.) *1. கீழ்ப்படுத்துதல், அடக்கியாளுதல்;* to subdue,subject, as a country, a foe. "*பிறபுலங்களடிப்படுத்து*" *(பெரியபு. ஐயடி. 2). 2. பாதத்தின்கீழ் அடங்கச் செய்தல்;* to hold or contain under a foot. "*மாவலி யளிப்ப ஞால முழுவது மாய னெய்திப் பாவடிப் படுத்தி முன்னம் பண்பொடு கவர்ந்த வாறும்*" *(கூர்மபு. அனுக்கிரமணி. 9). 3. நிலைபெறச் செய்தல்;* to establish firmly. '*தன் நெறிமுறைமை அடிப்படுத்து வருதற்குப் பிரிவன்*' *(கலித். 26, நச். உரை).*

ம. அடிப்பெடுக.

அடிப்பதறு–தல் aḍi-p-padaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கால் நடுங்குதல்;* to tremble, as the feet (W.) *2. நிலை தவறுதல் (யாழ்ப்.);* to fall in business, lose a situation or property (J.). *3. மனங்கலங்குதல் (யாழ்ப்.);* to be perplexed in consequence of failure (J.).

அடிப்பரத்து–தல் aḍi-p-parattu-, *5 செ. கு.வி.* (v.i)*பூப்புக் குளிப்பு (ருதுஸ்நான)ச் சடங்கில் நிலத்தில் நெற்பரப்பி மணையிட்டு அதன்மேற் பூப்படைந்த பெண்ணை உட்காரவைத்தல்;* to seat a girl on paddy spread on the ground, as part of the ceremony perfomed on her attaining puberty.

அடிப்பற்று–தல் aḍi-p-paṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அடுகலத்தின் அடியிற்சோறு, கறிமுதலியன தீய்ந்துபோதல்;* to be scorched or charred, as rice, curry. etc., for want of water or over-heating when cooking. *2. மிகு தீயினால் சோறு, கறி முதலியன அடுகலத்தினடியில் பற்றிக் கொள்ளுதல்;* to stick to the bottom of the inside of the cooking vessel, as rice, curry, etc. "*கனலடிப்பற்றா வண்ணமிடைவி டாமற்றுழாவி*" *(தைலவ. தைல. 94). 3. இறைவன் திருவடியைப் பற்றுதல் (ஈடு, 2.6 : 9);* to cling to the feet of God.

ம. அடிக்குபற்றுக; க. அடிகத்து.

அடிப்பாய்–தல் aḍi-p-pāy-, *2 செ.கு.வி.* (v.i.) *தாவிக் குதித்தல்;*

to leap over a mark, as a child, play at leap-frog (W.).

அடிப்பார்–த்தல் aḍi-p-pār-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நிழலளந்து பொழுதறிதல்;* to measure time by one's shadow. *2. தகுந்த சமயம் நோக்குதல்;*to wait for an opportunity.

அடிப்பிடி–த்தல் aḍi-p-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சோறு, கறி முதலியன சமையற் கலத்தினடியிற் பற்றிப்போதல்;* to stick to the bottom of the cooking vessel and become scorched, as rice, curry, etc. *(யாழ்.அக.). 2. அடிச் சுவட்டைக் கண்டுபிடித்தல்;* to trace a footprint. *3. குறிப்பறிதல்;* to get the clue. *4. முதலிலிருந்து தொடங்குதல்;* to begin from the beginning. *5. தட்டி முடைதல் (செ.அக.);* to weave palmleaf screen. *6. காலைப்பிடித்து வேண்டுதல்;* to take hold of the feet in supplication. *-, 4 செ. குன்றாவி.* (v.t.) *பின்றொடர்தல்;* to follow, pursue (W.).

அடிப்போடு–தல் aḍi-p-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. தொடங்குதல்;* to lay the foundation, begin (W.). *2. ஒருவரிடம் உதவி பெறுதற்கு ஏற்ற செய்திகளை முன்னடிப்படையாகச் சொல்லிவைத்தல்;* to say or do things as preparing the ground for getting favours from somebody. *இவன் பணத்திற்கு அடிப்போடுகிறான் (உ.வ.).*

அடிபடு–தல் aḍi-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. அடிக்கப் படுதல்;* to be beaten, struck. "*பிட்டமுதுக்கடி படுவோன்" (திருப்பு. 451). "விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்" (பாரத. அருச். தவ. 107). 2. தாக்குண்ணுதல்;* to hit against, stub, be attacked. "*அவசமாகி யடிபட் டெனைத்தா முறுப்புந் தூளாய்" (ஞானவா. மனத். 6). 3. நீக்கப்படுதல்;* to be struck off, removed. *அவன் பெயர் அடிபட்டுப்போயிற்று. 4. தானாக நீங்கிவிடுதல்;* to be automatically cancelled, repealed, nullified. *புதுச் சட்டத்தால் பழைய சட்டம் அடிப்பட்டுவிட்டது. 5. பலர் வாயில் வழங்குதல்;* to be in every one's mouth, be a household word. *அடுத்த ஆளுநராக அவர் வருவாரென்று, அவர் பெயர் எல்லார் வாயிலும் அடிப்படுகிறது. 6. செவிக் கெட்டுதல்;* to reach ones ear's, as a rumour. *அந்தச் செய்தி நேற்றுத்தான் என் காதில் அடிப்பட்டது (உ.வ.). 7. உலகப் பட்டறிவில் அழுந்துதல்;* to be involved, plunged. *பல வகைக் துன்பங்களிலும் கட்டங்களிலும் அடிபட்டவன் (உ.வ.) 8. செலவழித்தல்;* to be spent, expended. *எத்தனை கலம் நெல்லானாலும் இந்தக் குடும்பத்தில் அடி பட்டுப்போம் (உ.வ.) 9. கொல்லப்படுதல்;* to be slaughtered. *இந்த நகரில் ஒரு நாளைக்கு இருநூறு ஆடுகள் அடிபடும் (உ.வ.). 10. நோய் நீங்குதல்;* to be cured, eradicated, as a disease. *இந்த மருந்தாற் பல நோய்கள் அடிப்படும் (உ.வ.). 11. தட்பவெப்ப நிலையால் தாக்குண்ணுதல்;* to be weather-beaten. *இந்தக் கட்டடம் காற்றிலும் மழையிலும் அடிபட்டு உரங்குன்றி விட்டது (உ.வ.). 12. அச்சிடப்படுதல்;* to be printed, to be struch, as composed matter. *நாளைக்கு நாலு படிவம்* (formes) *அடிப்படும் (உ.வ.).*

அடிபணி–தல் aḍi-paṇi-, *2 செ.கு.வி.* (v.i.) *தண்டனிடுதல்;* to fall at one's feet, worship. "*அடிபணிந்தேன் விண்ணப்பம்" (திவ். பெரியாழ். 3.10 : 2).*

அடிபறி–தல் aḍi-paṟi-, *2 செ.கு.வி.* (v.i.) வேரொடு பெயர்தல்; to be uprooted. '*ஊசி வேர் அடிபறிய' (தக்கயாகப். 144, உரை).*

அடிபிடி–த்தல் aḍi-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. எண்ணெய், மெழுகு முதலிய மருந்து வகைகளைக் காய்ச்சும் போது, அடிக்கடி கிண்டாமையால் அடியிலுள்ள மருந்து தீய்ந்து சட்டியுடன் ஒட்டிக்கொள்ளுதல்;* to stick to the bottom of vessel after having been scorched, as medicines such as oil and electuary, when they are not stirred up properly in the course of prepartion *(சா.அக.). 2. ஒருவனுடைய அடிச்சுவடு பற்றிப்போதல்;* to trace one's footstep. *3. துப்பறிதல்;* to get a clue, as to a crime. *-, 4 செ. குன்றாவி* (v.t.). *1. அணை அல்லது கரை கட்டுதல்;* to construct a dam or bank. "*அண்டகடாகம் வெடித்து அடிபிடிக்க வேண்டும்" (திவ். அமலனாதி. 3, வியா.). 2. தொடருதல்;* to pursue.

க. அடிவிடி.

அடிபிழை–த்தல் aḍi-piḻai-, *4 செ.கு.வி.*(v.i.) நெறிதவறி நடத்தல்; to act unlawfully, illegally. "*வேந்தன் அடிபிழைத்தாரை யொறுக்குந் தண்டத்து" (மணிமேக. 19 : 43).*

அடிபிறக்கிடு–தல் aḍi-piṟakkiḍu-, *20 செ. கு.வி.* (v.i.) *பின்வாங்குதல்;* to fall back, retreat. '*அடிறிக்கிட் டோனையும்' (தொல். பொருள். புறத். 10, நச். உரை).*

அடிபெயர்–தல் aḍi-peyar-, *2 செ.கு.வி.* (v.i.) காலெடுத்து வைத்தல்; to move a step, move from the spot where one stands.

அடிபெயர்–த்தல் aḍi-peyar-, *4 செ.கு.வி.* (v.i.) *அடிப்போடு-தல் பார்க்க;* see aḍi-p-pōḍu-.

அடிமடியில் நெருப்பைக்கட்டு–தல் aḍi-maḍiyil-neruppai-k-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *கன்னிப் பெண்ணை மணம் முடித்துத் தரும்வரை மிகவும் விழிப்போடு காக்கும் கடும் பொறுப்பேற்றல்;* to take up the heavy responsibility of protecting as a mother or a matron, the virginity of a matured girl still she is given away in marriage, lit., to kee tied up embers in the inner fold of the waist-cloth.

அடிமாண்டுபோ–தல் aḍi-māṇḍu-pō-, *7 செ.கு.வி.* (v.i.) *அடியோடழிதல்;* to perish completely, root and branch.

அடிமேலடியடி–த்தல் aḍi-mēl-aḍi-y-aḍi-, *4 செ.கு.வி.*(v.i.) ஒரேயிடத்தில் மேலும் மேலும் அடித்தல்; to beat or strike repeatedly on the same spot. '*அடிமேல் அடியடித்தால்*

அம்மியும் நகரும்' (பழ.).

அடிமைப்படு–தல் aḍimai-p-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) அடிமையாதல்; to become a slave, to be enslave.

அடிமைப்படுத்து–தல் aḍimai-p-paḍuttu-, *2* பி.வி. (v.caus.) அடிமையாக்குதல்; to enslave.

அடிமைபூண்(ணு)–தல் aḍimai-p-pūṇ-, *12* செ.கு.வி.(v.i.) *1.* அடிமையாயமைதல்; to become a bond-slave. *2.*திருத்தொண்டனாதல்; to become a devotee. "நானடிமை பூண்டேன்" *(*திவ்.பெரியதி.*7.2:5).*

அடியறி–தல்aḍi-y-aṟi-, *2* செ.கு.வி.(v.i.) மூல காரணந் தெரிதல்; to find out the first or primary cause."அடியறியும் வியாசமுனிவர்" *(*ஈடு, *1.1 : 8).*

அடியறு–த்தல்aḍi-y-aṟu-,*4* செ.குன்றாவி. (v.t.) மூலத்தோடு நீக்குதல்; to eradicate."அஹங்கார மமகாரங் களையும்..... அடியறுத்து" *(*ரஹஸ்ய.*320).*

ம. அடியறுக்குக.

அடியறு–தல் aḍi-y-aṟu-, *2* செ.கு.வி.(v.i.) மூலமறுதல், முழுதும் அழிதல்; to be uprooted, completely removed. 'அடியற்ற மரம்போல் அலறி விழுகிறது', 'அடியற்றால் நுனி விழாம லிருக்குமா?' *(*பழ.*).*

அடியிடு–தல் aḍi-y-iḍu-,*20* செ.கு.வி.(v.i.) *1.* தொடங்குதல். தொடக்கஞ் செய்தல்; to make a beginning, commence an undertaking. "படிந்தழுவ தற்குப் பாவாயடியிட்ட வாறு" *(*சீவ.*1391). 2.* கூடை, பாய் முதலிய முடைதற்கு அடியமைத்தல்; to make the bottom of a basket or one end of a mat as the first step in basket making or mat weaving. *3.* நடக்கக் காலெடுத்து வைத்தல்; to step forward."பரவை வாயி லம்மட்டு மடியிட்டு" *(*தாயு.மலைவளர்.*4). 4.*நடத்தல்; to walk. "ஆடுந ராட நெஞ்சி னெண்ணினோ ரடியிட் டோர்கள்" *(*கூர்மபு. நவகண்.*31). 5.* மிதித்தல்; to tread on. "சேடன் முடியுங் கதிர்கொள் சென்னி வரையுந் தூளாட வடியிட்டு" *(*திருவிளை. மாயப்.*6). 6.* சீர்கள் தொடர்ந்து செய்யுளடியாக வமைதல்; to form a line in a verse, as metrical feet."அடியிட்ட செந்தமிழினருமை யிட்டாரூரில்"*(*தாயு. மலைவளர்.*4).*

ம. அடியிடுக.

அடியிரட்டி–த்தல் aḍi-y-iraṭṭi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* இட்ட அடியின்மேல் அடியிடுதல்; go take steps without advancing, to mark time. "அடியிரட்டித் திட்டாடு மாட்டு" *(*பு.வெ. *2 : 8). 2.* அம்மானைச் செய்யுளின் இரண்டாமடியிரட்டுதல்; to be repeated immediately like the doubling of the second line of an ammāṉai verse.

அடியிலேயுறை–தல் aḍiyilē-y-uṟai-, *2* செ.கு.வி. (v.i.) வழிபடுதல்; to worship, to be in reverence. 'அயிலே யுறைதல் வழிபாடென்னும் பொருடந்து நிற்றலின்' *(*கலித். *140,* நச். உரை*).*

அடியிறங்கு–தல் aḍi-y-iṟaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* சூலிக்குப் பிள்ளைப்பேற்றுக் காலத்தில் வயிறு தளர்தல்; sinking due to loosening of the muscles of the abdomen in a woman, as a sign of approaching labour *(*சா.அக.*). 2.* அடித்தள்ளிப்போ-தல் *2* பார்க்க; see aḍi-t-taḷḷi-pō-, 2.

அடியுண்(ணு)–தல் aḍi-y-uṇ(ṇu)-, *12* செ.கு. வி. (v.i.) *1.* அடிக்கப்படுதல்; to beaten. *2.* பல விடத்துந் திரிந்து துன்பப்பட்டுப் பழகுதல்; to wander along experiencing all sorts of troubles.

அடியெடு–த்தல் aḍi-y-eḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* அடிவைத்தல்; to step. "அடியெடுத்துக் கொண்டென்பால் வரலா குங்கொல்" *(*சடகோபரந். *28). 2.* அப்பாற் போதல்; to go beyond. "அடியெடுப்ப தன்றோ வழகு" *(*திவ். இயற். பெரிய திருவந். *30).*

அடியெடுத்துக்கொடு–த்தல் aḍi-y-eḍuttu-k-koḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* மாணவன் ஒரு வனப்பு *(*காவியம்*)* இயற்றுவதற்குத் தொடக்கச் சொல்லை அல்லது சொற்றொடரை ஆசிரியன் சொல்லியுதவுதல்; to help a student, as a teacher, to compose a poem, by suggesting an apt beginning word or pharse. *2.* ஓர்அடியாரான புலவர் ஒரு திருவனப்பை இயற்றுதற்கு, இறைவனே தொடக்கச் சொல்லை உடம்பிலிக் கூற்றாக வுரைத்தருளுதல்; to help a devotee to compose a sacred poem, by uttering the apt beginning word, as God Almighty in His invisible form often does.

அடியொற்று–தல் aḍi-y-oṟṟu-, *5* செ. குன்றாவி. (v.t.) *1.*பின்பற்றுதல்; to follow.'அதை அடியொற்றி யாயிற்று, இவர் இப்படி அருளிச் செய்தது' *(*திருவாய். நூற். *1,* வியா.*). இ*யேசுவின் மாணவர் பன்னிருவருட் பதினொருவர் அவரை அடியொற்றிச் சென்றனர். மறைமலையடிகளின் சாகுந்தல நாடகம் எல்லா வகையிலும் மூலத்தை அடியொற்றியது. *2.* புறப்படுதல்; to start, to step out. 'பரமபதத்தினின்றும் அடியொற்றினான், திருமலை யளவும் பயண முண்டாயிருந்தது' *(*திவ். அமலனாதி. *3,* வியா.*).*

ம. அடியிருத்துக; தெ. அடுகுபெட்டு.

அடிவருடு–தல் aḍi-varuḍu-, *5* செ.கு.வி. (v.i.) கால்பிடித்தல், உளைச்சல் சோம்பல் முதலியன தீரப் பாதங்களைப் பிடித்துப் பிசைதல்; to massage the feet to stimulate them to action or relieve pain.

அடிவிடு–தல் aḍi-viḍu-, *20* செ.கு.வி. (v.i.) அடிவிரி-தல் பார்க்க; see aḍi-viri-.

அடிவிரி–தல் aḍi-viri-, *2* செ.கு.வி. (v.i.) *1.* பாதம் வெடித்தல்; to become cracked, as the skin of the feet. *2.* சமையற் கலத்தில் அடி கீறிப்போதல் அல்லது வெடித்தல்; to crack at the bottom, as a cooking vessel.

அடிவிள்(ளு)–தல் aḍi-viḷ(ḷu)-, *16* செ.கு.வி. (v.i.) அடிவிரி-தல் பார்க்க; see aḍi-viri-.

அடிவிளக்கு–தல் aḍi-viḷakku-, *5* செ.கு.வி. (v.i.) இறையடியார், ஆசிரியர், துறவியர் முதலிய கண்ணியமுள்ள விருந்தினரின் பாதங்களைக் கழுவிச் சிறப்புச் செய்தல்; to wash the feet of an honoured guest. "திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்" *(மணிமே. 24 : 96).*

அடிவீழ்–தல் aḍi-viḻ-, *2* செ.கு.வி. (v.i.) தண்டனிடுதல், காலில் விழுந்து கும்பிடுதல்; to fall at another's feet, as in worship or paying homage. "அடிகண் முன்னர் யானடி வீழ்ந்தேன்" *(சிலப். 13 : 87).*

க. அடிபீழ்.

அடிவெயிற்காய்–தல் aḍi-veyiṟ-kāy-, *2* செ.கு.வி. (v.i.) அடையுங்கால மஞ்சள் வெயிலிற் காய்தல்; to expose oneself to the rays of the setting sun *(சா.அக.).*

அடிவை–த்தல் aḍi-vai-, *4* செ.கு.வி. (v.i.) *1.* காலடி வைத்தல்; to place one's foot. *2.* குழந்தை அடியெடுத்து வைத்து நடக்கப் பழகுதல்; to learn to walk, as a child. *3.* தொடங்குதல்; to begin. *4.* ஒரு வினை முயற்சியை மேற்கொள்ளுதல்; to enter into an affair. *5.* பிறர் கருமத்தில் தலையிடுதல்; to meddle in another's affair. -, *4* செ. குன்றாவி. (v.t.) உள்நோக்கமாக ஒன்றைக் கொள்ளுதல்; to harbour an unrevealed intent or purpose in one's mind. அவன் எதையோ அடிவைத்துக் கொண்டு பேசுகிறான் *(உ.வ.).*

அடு¹–தல் aḍu-, *17* செ.குன்றாவி. (v.t.) *1.* சுடுதல், வாட்டுதல், வறுத்தல், பொரித்தல்; to roast, fry. *2.* காய்ச்சுதல்; to boil. "அட்டாலும் பால்சுவையிற் குன்றாது" *(மூதுரை, 4). 3.*சமைத்தல்; to cook, dress, as food. "அமுதமடு மடைப்பள்ளி" *(கல்லா. 14). 4.* உருக்குதல்; to melt. "அட்டொளி யரத்த வாய்க் கணிகை" *(சீவக. 98). 5.* கொல்லுதல்; to kill. "அடுநையாயினும்" *(புறநா. 36 : 1).6.* பொருதல்; to fight, wage war. "அடுவா ரடலுளோர்" *(சேதுபு. தனுக்கோ. 34). 7.* வெல்லுதல்; to conquer, subdue, as the senses, passions. "ஐம்பொறியு மட்டுயர்ந் தார்" *(சீவக. 1468). 8.* வருத்துதல்; to trouble, afflict. "கழிபசி நோயடக் கவலும் பூதரும்" *(கந்தபு. மகேந். சூரன் அமைச். 59). 9.* அழித்தல்; to destroy, consume. "எல்லாப் புவனமும்... ... அடுபவர்" *(கந்தபு. யுத்த. ஏமகூடப். 18). 10.* குற்றுதல்; to pound, as rice. "வித்திட் டுண்டனை" *(புறநா. 227 : 2). 11.* இயக்கமறச் செய்தல்; to stop moving. "வியாத னீட்டிய கையடு நந்தி" *(கந்தபு. கடவுள் வாழ்த்து, 19).*

ம.,க.,குட. அடு; தெ. வண்டு; து. அடுபினி; கோத. அட்; கோண். அட்டாணி; துட. ஒட்; மா. அடான்; மரா. அட்ணெம்; பிராகி. அட்டை.

அடு²–த்தல் aḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.*அண்மையிலிருத்தல்; to be adjacent, next, near. "அடுத்தநாட் டரசியல் புடைய" *(கம்பரா. யுத்த. வீடணன். 79). 2.* தகுந்த தாதல்; to be fit, becoming, deserving. இப்படிச் செய்திருக்கிறாயே! இஃது உனக்கு அடுக்குமா? *(உ.வ.). 3.* நிகழ்தல்; to happen, occur. "ஆவி நைந்திற வடுத்ததென்?" *(கம்பரா. அயோத். நகர்நீங்கு. 13). 4.* கூத்தாடுதல் *(பிங்.)*; to dance. -, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* கிட்டுதல்; to approach, approximate to, come in contact with. "மயிலன்னா ளடுத்து வயமா ருதியை" *(பாரத. மணிமா. 3). 2.* புகலடைதல்; to take refuge. "கற்பகந் தனையடுத் துய்வாம்" *(சூத. முத். 1). 3.* அடைதல்; to reach, arrive at. தலைநகர் அடுத்தோம் *(உ.வ.). 4.* சார்தல், சேர்தல்; to join. "முனிவர் யாரு மடுத்திடு மவைக் கணெய்தி" *(கந்தபு. தக்க. ததீசியுத்தரப். 39). 5.* சேர்த்தல்; to join together. "வெண்டுகிலடுத்து" *(சீவக. 617). 6.* அண்டிப் பற்றுதல்; to join, to seek protection from. அடுத்தவனைக் கெடுக்கலாமா? *7.* கொடுத்தல்; to give. "வளைக்கரத் தார்க்கடுத்தோம்" *(திருக்கோ. 357). 8.* அமுக்குதல்; to press down. "எடுத்தான் புயந்தனை யடுத்தான் மருதரை" *(தேவா. 1.95 : 8). 9.* ஒப்புவித்தல் (S.I.I. ii, 250); to assign. "இடித்து மின்னி யிருண்டு மேக மெழுந்த போதிது பெய்யுமென் றடுத்ததும்" *(சி.சி. பர. உலகா. மறு. 2). 10.* கருதுதல்; to infer, think, know.

ம. அடுக்க; க. அட்டு; தெ.,து. அண்டு; குட. அடி; கூ. அட்ப; குவி. அடு; மா. அட்தெ, அட்யெ.

'ad-, pref. of Latin origin expressing direction toward or addition to. -ad- appears in this form before a vowel and before the consonants d, h, j, m, v. It is simplified to a- before sc, sp,st. Before c, f, g, l, n, p, q, r, s and t. ad-is assimilated to ac-, resp. af-,ag-, al-, an-, ap-, ac-, ar-, as, at-. -L. ad-, etc., fr. ad, 'to, toward', rel. to Umbr. ar-, ars-, Oscan ad-, az (for ad-s), 'to, toward', and cogn. with Goth. at, OE. αt, at.

E. add, v.t. and v.i. **L.** addere, 'to puto, lay on, give in addition to, add', fr. ad -and-dere, fr. dare, 'to give'. See date, 'point of time', and cp. addendum, additament. addition.

E. at, prep. - OE. αt, rel. to ON.,OS., Goth. at, OFris et, at, OHG. az, and cogn. with L. ad, 'to, toward', Olr. ad-, W. add-, Phryg. αδ-, αβ-, 'to'. Cp. ad-. at-, assimilated form of ad- before t.', (K.C.E.D.E.L.)

அடக்கலிடு–தல் aḍukkal-iḍu-, *17* செ. குன்றாவி. (v.t.) உமியை முற்றும் போக்க, நெல் முதலியவற்றை இரண்டாம்முறை குற்றுதல்; to pound grains like paddy a second time to remove all husks (W.).

அடுக்கு–தல் aḍukku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.*கலங்கள் போல் ஒன்றன்மேலொன்றாக வைத்தல்; to pile up one on top of another. "திங்கண்மூன் றடுக்கிய திருமுக்குடைக்கீழ்" *(சிலப். 11 : 1).* 'அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா? *(பழ.). 2.* வரிசைப்பட வைத்தல்; to arrange in a series, row, or order. பொத்தகங்களையெல்லாம் வரிசையாக அடுக்கிவை *(உ.வ.) 3.* பணத்தை மேன் மேலும் பெருக்குதல்; to accumulate money or wealth. "அடுக்கிய கோடி பெறினும்" *(குறள், 954). 4.* சொற்களை மேன்மேலும் தொடுத்தல்; to go on speaking or adding words. சொல்லச் சொல்ல கேட்காமல் அடுக்கிக்

கொண்டே போகிறாள் (உ.வ.).

ம. அடுக்கு; க. அடுகு; துட. ஒட்த்.

அடுக்குக்குலை–தல் aḍukku-k-kulai-, 2 செ.கு.வி. (v.i.) 1. வரிசை கலைதல்; to get into dis-order, as a row or pile of things (W.) 2. நிலை கெடுதல்; to become derange, as one's business or circumstances. 3. கற்பிழத்தல்; to lose one's chastity, as a woman.

அடுக்குச்சாத்து–தல் aḍukku-c-cāttu-, 5 செ.கு.வி. (v.i.) தெய்வத் திருமேனிக்குக் கொய்து ஆடையணிதல் (கோயிலொ.38); to adorn an idol with a cloth gathered in folds.

அடுக்குப்பண்ணு–தல் aḍukku-p-paṇṇu-, 5 செ.குன்றாவி. (v.t.) அணியம் (ஆயத்தம்) செய்தல்; to prepare, to make preparation(s).

அடுக்குப்பார்–த்தல் aḍukku-p-pār-, 4 செ.கு.வி. (v.i.) 1. தக்க துணை தேடுதல் (இ.வ.); to look out for suitable help or companion (Loc.). 2. ஒத்திகை பார்த்தல் (யாழ்ப்.); to rehearse, as stage players (J.).

அடுத்தவரைக்கெடு–த்தல் aḍuttavarai-k-keḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) புகலடைந்தவர்க்குத் தீங்கு செய்தல்; to ruin or kill refugees treacherously. 'அடுத்தவரைக் கெடுக்கலாமா?' (பழ.).

அடுத்துக்கெடு–த்தல் aḍuttu-k-keḍu- 4 செ.குன்றாவி. (v.t.) நட்புப்போற் சேர்ந்து கேடு செய்தல்; to ruin a person by associating with him, to kill by treachery. 'அடுத்துக் கெடுப்பான் கபடன், தொடுத்துக் கெடுப்பாள் மடந்தை' (பழ.).

அடுத்துமுயல்–தல் aḍuttu-muyal-, 13 செ.கு.வி. (v.i.) இடைவிடாது முயலுதல்; to make continuous effort. "அடுத்து முயன்றாலும்" (மூதுரை, 5). 'அடுத்து முயன்றாலும் ஆகும் நாள்தான் ஆகும்' (பழ.).

அடுத்துவிளக்கு–தல் aḍuttu-viḷakku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மாழை (உலோக)ப் பற்று வைத்தொட்டுதல்; to solder. 'அடுத்து விளக்கின் மொட்டும் பறளையும்' (S.I.I.ii, 96). 2. அடுத்தாற்போல் விளக்கிச் சொல்லுதல்; to explain subsequently.

அடுப்புப்பற்றவை–த்தல் aḍuppu-p-paṟṟa-vai-, 4 செ.கு.வி. (v.i.) அடுப்பில் நெருப்பு மூட்டுதல்; to kindle fire in the ovem.

அடுப்பூது–தல் aḍupp(u)-ūdu-, 5 செ.கு.வி. (v.i.) அடுப்பில் விறகு எரியாதபோது ஊதாங்குழல் வாயிலாகக் காற்றூதியெரிய வைத்தல்; to blow and kindle the fire in the oven. 'அடுப்பூதும் பெண்ணிற்குப் படிப் பென்னத்திற்கு?' (பழ.).

அடுப்பெரி–தல் aḍupp(u)-eri-, 2 செ.கு.வி. (v.i.) 1. அடுப்பில் நெருப்பு எரிதல்; to burn, as fire in the oven. 2. வீட்டில் சமையல் நடைபெறுதல்; to do cooking in a house. பணமுடையால் ஐந்து நாளாய் அடுப் பெரியவில்லை (உ.வ.).

அடுப்பேற்று–தல் aḍupp(u)-ēṟṟu-, 5 செ. குன்றாவி. (v.t.) உலைவைத்தல், சமைத்தற்கு நீரிட்ட கலத்தை அடுப்பின்மேல் வைத்தல்; to set a pot of water on the fire for boiling or cooking anything.

அடை[1]–தல் aḍai-, 2 செ.கு.வி. (v.i.) 1. பறவைகள் கூட்டில் இராத் தங்குதல்; to go to roost, as birds. 2. பாம்புகள் வளைக்குட் புகுதல்; to resort to holes, as snakes. 3. ஆடுமாடுகள் கூடிக்கிடத்தல்; to gather together and lie down for rest, as shee or cattle. 4. கோழி அடைகாத்தல்; to sit on eggs, as a hen. 5. மாந்தர் இறந்தடங்குதல்; to attain eternal rest, die. அந்தப் பெரியவர் அடைந்துவிட்டார் (உ.வ.). 6. தூசி சேர்தல்; to collect, gather as dust. மேசை நாற்காலிகளில் நாள்தோறும் தூசி வந்தடைகிறது (உ.வ.). 7. வண்டல் படிதல்; to be deposited, as alluvium. 8. கிணறு தூர்தல்; to be silted up, choked up, filled up, closed, as a well. 9. கடன்தீர்தல்; to be paid-up, as a debt. கடனெல்லாம் அடைந்துபோயிற்று (உ.வ.). 10. சேர்ந்திறுகுதல்; join, to settle, as sand by rain. 11. பொருந்துதல்; join, mingle. "அணுவினோ டெல்லா மாகி யடைந்திடுந் தத்துவங்கள்" (சி.சி. சுபக். 2:78). 12. அடை காயடைதல்; to be preserved, as pickles (W.). -, 2 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்தல்; to reach, arrive at. "கரையடைந்தனர்" (பாரத. வாரணா. 2). 2. அடைக்கலம் புகுதல்; to take refuge in. "அடைந்தவர்க் கருளானாயின்" (கம்பரா. யுத்த. வீடண. 108). 3. பெறுதல்; to get. இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆங்கிலராட்சியினின்று விடுதலை யடைந்தது (உ.வ.). 4. சாணை அல்லது சூடு சேர்த்தல்; to heap up sheaves or ears of corn in pyramidal shape with round, square or rectangular base. உழவர், அறுவடையின் பின், அரிக்கட்டுகளை அல்லது கதிர்களைச் சாணையாக அடைந்து வைப்பர் (உ.வ.).

ம. அடயுக; க., பட. அடெ; தெ. அடகு; துட.,கோத. அட்த; து. அடெபுனி.

அடை[2]–த்தல் aḍai-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஊழால் முன்னமே நெறியிடப்படுதல் (விதிக்கப்படுதல்); to be pre-ordained by destiny. 'தனக்கடைத்த நாளறுதலின்', 'சீவக. 2831, நச். உரை). 2. வேலைக் கமர்த்தப்படுதல்; to be appointed, assigned. "கழனிக் கடைத்த மகளிர்" (திவா. 2 : 140). 3. உறுப்பின் புலன் அல்லது செயல் கெடுதல்; to be obstructed, as the ear, throat. வெடியோசை கேட்டதும் காது அடைத்துக் கொண்டது. அந்த மருந்து உண்டதிலிருந்து தொண்டை அடைக்கிறது (உ.வ.). 4. உரியதாதல்; to be appropriate. 'அக் காலத்துக்கு அடைத்த காற்றுக்கள்' (ஈடு, 10 : 3, பிர.). -, 4 செ. குன்றாவி. (v.t.) 1. கதவு சாத்துதல்; to shut, close the door. "படுநர்க் கடைத்த கதவின்" (புறநா. 151 : 10). 2. வழிதடுத்தல்; to obstruct, block, as a passage. "வாழ்நாள் வழியடைக்குங்கல்" (குறள், 38). 'அடைத்தவன் காட்டைப் பார், மேய்த்தவன் மாட்டைப் பார்' (பழ.). 3. துளையடைத்தல்; to fill up, a hole.

எலி வளையை அடைத்துவிட்டேன் (உ.வ.). 4. புகுத்துதல்; to put in, insert. "கடுகிற் பெரிய கடலடைக்கும்" (தாயு.சொல்லரிய.1). 5. பூட்டுதல், தாழிடுதல்; to lock, fasten. "அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ்" (குறள், 71). 6. சிறையில் வைத்தல்; to imprison."செழிய னடைத்த சென்னி பாட" (கல்லா. 34 : 7). 7. ஒளித்துவைத்தல்; to conceal, hide. 8. ஒப்புவித்தல், ஒப்படைத்தல்; to entrust."கணங்கடமக் கடைத்துப் புறப்பட்டான்" (திருவாலவா. 28 : 13). 9. குத்தகைக்கு விடுதல்; to lease, give in contract, farm out. என் நிலத்தை வாரத்திற்கு அடைத்திருக்கிறேன் (உ.வ.).10. கொடுத்தல்; to bestow. "உயிர்க்கின்ப மென்று மடைப்பானாம்" (சி.சி. சுபக்.1 : 54).11. பிரித்தல்; to divide. 'நாலு கூறாக அடைப்பதாகவும்' (S.I.I. i, 64).

ம. அடெக்க; க. அடயிசு; பர். அட்டொமர்; பட. அட்டெக.

அடைக்கலஞ்செய்–தல் aḍaikkalañ-cey-, 1 செ. குன்றாவி. (v.t.) சவத்தைப் புதைத்தல் (மதி. களஞ். ii, 145); to bury, intern, entomb.

ம. அடக்கு

அடைக்கலம்புகு–தல் aḍaikkalam-pugu-, 2 செ.கு.வி. (v.i.) புகலடைதல்; to fly to one for shelter, take refuge.

அடைகட்டு–தல் aḍai-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நீர்ப்பெருக்கைத் தடுக்க அணைக்கட்டுதல்; to construct a dam. 'அண்ட கடாகம் வெடித்து அடைகட்ட வேண்டும்படி' (திவ். அமலனாதி. 2, வியா.). 2. வண்டி நராதபடி சக்கரத்திற்குமுன் தடைவைத்தல்; to place a bar of wood or stone in front of a wheel of carriage to prevent it from moving. 3. தேர் வண்டிகளின் சக்கரத்தைத் தூக்க அடியில் முட்டுக் கொடுத்தல்; to insert a piece of wood under a car or cart and thus lift the wheel out of a rut.

ம. அடயல்; க. அட்டகட்டெ; தெ. அட்டகட்ட.

அடைகா–த்தல் aḍai-kā-, 4 செ.கு.வி. (v.i.) 1. கோழி அவயங்காத்தல்; to incubate, as a hen.

அடைகிட–த்தல் aḍai-kiḍa-, 4 செ.கு.வி. (v.i.) 1. கோழி அடைகாத்தல்; to incubate, as a hen. 2. தங்கியிருத்தல்; to abide, stay permanently. "முயலடை கிடக்குந் திங்கள்" (கூர்மபு. மேருவின். 16).

அடைகு–தல் aḍaigu-, 9 செ.கு.வி. (v.i.) சேர்தல்; to reach. -, 5 செ.குன்றாவி. (v.t.) பெறுதல்; to obtain. "புரையில் வீட்டின்பமடைகுவான்" (வைராக். 17.).

அடைகுத்து–தல் aḍai-kuttu-, 5 செ. குன்றாவி. (v.t.) அடைமானம் வைத்தல்; to mortgage. 'குடியொடு குடி பெறும் விலைக்கு அடை குத்துக என்று' (S.I.I.v, 305).

அடைகொடு–த்தல் aḍai-koḍu-, 4 செ.கு.வி. (v.i.) நிலவிளைவில் அரசன் பங்கைச் செலுத்துதல்; to pay the king's share of the produce (W.). 2. நிறைத்து வைத்தல்; to fill up. 3. அடைமொழி முன்வைத்தல்; to prefix an adjunct or epithet.

அடைகொள்(ளு)–தல் aḍai-koḷ(ḷu)-, 10 செ. குன்றாவி. (v.t.) 1. பாதுகாப்பிற்காக ஒப்படைக்கப்பட்ட பொருளை ஏற்றுக்கொள்ளுதல்; to accept a deposit for safe keeping. 'அடைகொண்டு பாழ்போக்குவானொருவ னன்றே' (ஈடு, 5.10 : 5). 2. நிலத்தை ஒற்றியாகப் பெறுதல்; to take a land on mortgage. 'இலட்சுமண நம்பி அடைகொண்ட நிலமும்' (S.I.I. iv, 81).

அடைச்சு–தல் aḍaiccu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அடைவித்தல், சேரச்செய்தல்; to put, place. "அடைச்சிய கோதை பரிந்து" (கலித். 51 : 2 -3). 2. செருகுதல் (சூடா.); to insert, stick in, as flower in the hair. 3. உடுத்துக் கொள்ளுதல்; to clothe or wrap oneself in. "நெடுந் தொடர்க் குவளை வடிம்புற வடைச்சி" (மதுரைக். 588). 4. பொத்துதல்; to shut, to close. "கையாற் செவிமுதலடைச்சிச் சொன்னாள்" (சீவக. 1048).

க. அடசுவிகெ.

அடைசு–தல் aḍaišu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அடைதல் (சங்.அக.); to reach. 2. கிட்டுதல்; to get near. 3. நெருங்குதல்; to crowd, get close together. "அஞ்சு பூத மடைசிய சவடனை" (திருப்பு. 638). 4. பொருந்துதல்; to be joined, placed. 'உள்ளே சீலை யடைசின.... சட்டை' (சீவக. 819, நச். உரை). 5. ஒதுங்குதல்; to deviate, recede, give place, make room. அடைசி நில் (உ.வ.). -5, செ.குன்றாவி. (v.t.) 1. நெருங்கச் சொரிதல் அல்லது எய்தல்; to shower upon. "அழுந்த வாளியொன்று பத்துநூறு வன்பொ டடைசினான்" (பாரத. பதினான். 30). 2. நெருக்குதல்; to press hard, exert pressure upon.

க. அடசு.

அடைத்துப்பெய்–தல் aḍaittu-p-pey, 1. செ.கு.வி. (v.i.) வானம் முகில் (மேகம்) மூடி, விடாது பெய்தல்; to rain incessantly with the whole sky overcast.

அடைத்தேற்று–தல் aḍaitt(u)-ēṟṟu-, 5 செ. குன்றாவி. (v.t.) வருந்திக் கருமம் முடித்தல் (ஈடு, 6. 8 : 1); to accomplish with difficulty, as lifting water to an upper channel.

அடைநேர்–தல் aḍai-nēr-, 2 செ. குன்றாவி. (v.t.) மகட்கொடைக்கு உடம்படுதல்; to agree to give one's daughter in marriage. 'தலைவர்க்கே நம்மை அடைநேர்ந்திலராயினும்' (குறிஞ்சிப். 23, நச். உரை).

அடைப்புண்(ணு)–தல் aḍaippuṇ(ṇu), (13) செ.கு.வி. (v.i.) ஒன்றனுள் அடங்குதல்; to be included. 'கழிந்தவற்றிலும் வருமவற்றிலும் அடைப் புண்ணுமிறே வர்த்தமானம்' (ஈடு, 1.1 :4).

அடைப்பைகட்டு–தல் aḍai-p-pai-k-kaṭṭu-, 5 செ.கு.வி.(v.i.)

வெற்றிலை மடித்துக் கொடுத்தல்; to prepare and serve rolls of betel leaves with spices for chewing. 'பிரதாபருத்திரனிடத்திற் போய் அவன் அடைப்பை கட்டிவரக் கம்பர் பாடிய வெண்பா' (பெருந்தொ.1203).

அடைபடு–தல் aḍai-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) 1. அடைக்கப் படுதல்; to be shut or enclosed. 'அடைபட்டுக் கிடக்கிறான் செட்டி, அவனை அழைத்துவா, பணம் பாக்கி என்கிறான் பட்டி' (பழ.). 2. முடிதல்; to be completed. 3. கடன் தீர்தல்; to be paid up, as debt.

அடைமதிற்படு–தல் aḍai-madiṟ-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) முற்றுகையிடப்படுதல்; to be besieged. 'நெடுநாட்பட அடைமதிற்பட்ட காலத்தே விளைத்துக் கோடற்கு' (பதிற்.16:2, உரை).

அடையுண்(ணு)–தல் aḍai-y-uṇ(ṇu)-, 13 செ.கு.வி.(v.i.) அடைபடுதல்; to be shut up or enclosed. 'புலிக்குட்டி கூட்டிடத்தே அடையுண் டிருந்து' (பட்டினப்.221, நச்.உரை).

அடையெழுது–தல் aḍai-y-eḻudu, 5 செ.குன்றாவி.(v.t.) கணக்கிற் பதிவு செய்தல்; (S.I.I. iv, 150); to make an entry in an account.

அடைவுபடு–தல் aḍaivu-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) ஒழுங்காதல் (திவ்.திருநெடுந்.22, வியா.); to be in order, orderly.

அடைவை–த்தல் aḍai-vai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடைகாக்கும்படி கோழியை முட்டைகளின் மேல் வைத்தல்; to make a hen sit on eggs for incubation. 2. தேன்கூடுகட்டுதல்; to build a hive, as bee. தேன் அடைவைத்திருக்கிறது (உவ.).

அண்டக்கட்டு–தல் aṇḍa-k-kaṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) வீங்குதல்; to swell, as on account of a boil. -, 5 செ.குன்றாவி. (v.t.) முட்டித்தாங்க வைத்தல்; to prop up, support, buttress.

அண்டக்கொடு–த்தல் aṇḍa-k-koḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) அண்டக்கட்டு-தல் பார்க்க; see aṇḍa-k-kaṭṭu-.

அண்டப்பார்–த்தல் aṇḍa-p-pār-, 4 செ.குன்றாவி.(v.t.) பொருந்தச் செய்தல்; to unite, join.

அண்டு–தல் aṇḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கிட்டுதல்; to approach. "அண்டினள் சேர்தலும்" (கந்தப.தக்க. திருமண.45). 2. ஏற்றல், பொருந்துதல்; to fit, to be appropriate to. "ஆகார மாமுவமைக் கண்டா தென்னும்" (ஞானவா. முமுட்சு.27). 3. பற்றுக் கோடாகக் கொள்ளுதல்; to have as a support. ஒருவனை அண்டிப் பிழைக்க இடமில்லை (உவ.). 4. ஒதுங்குதல்; to take refuge in, retire for shelter. 'அண்ட நிழலில்லாமற் போனாலும் ஒண்ட அடியுண்டு' (பழ.). 5. அழுந்துதல் (சங்.அக.); to get pressed, to be impressed, to press hard.

ம. அண்டுக; க. அண்டிசு; தெ. அண்டு; கோத. அண்ட்.

அண்டுபடு–தல் aṇḍu-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) பிடிபடுதல் (இ.வ.); to be within reach (Loc.).

அண்டைகட்டு–தல் aṇḍai-kaṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) ஒருறுப்பில் உண்டான கட்டி அல்லது காயத்தின் விளைவாக மற்றோருறுப்பில், பொதுவாகக் கமுக்கூட்டில் அல்லது கவானில், வலி அல்லது வீக்கம் தோன்றுதல்; to get pain or swelling in the glands generally in the armpit or in the loins as a sympathetic response to swelling or pain in the connected limbs of the body.

அண்டைகொள்(ளு)–தல் aṇḍai-koḷ(ḷu)-, 10 செ.குன்றாவி.(v.t.) பக்கத்துணை கொள்ளுதல்; to gain the support of, secure the help of. 'கிருஷ்ணனை அண்டை கொண்டு' (திவ்.திரு நெடுந்.13, வியா.).

அண்டைபோடு–தல் aṇḍai-pōḍu-, 20. செ.கு.வி. (v.i.) ஒட்டுபோடுதல் (இ.வ.); to mend, patch (Loc.)

அண்டைவெட்டு–தல் aṇḍai-veṭṭu-, 5 செ. குன்றாவி. (v.t.) வரப்புவெட்டுதல் (இ.வ.); to cut or trim the ridge or bunds in the field (Loc.).

அண்ணா–த்தல் aṇṇā-, 3 செ.கு.வி.(v.i.) 1. மேல்நோக்குதல்; to look upward. செம்பில் வாய்படாமல் தண்ணீரை அண்ணாக்கக் குடி (உவ.) 2. மேனோக்கிப் பார்த்தல்; to look up intently. "அண்ணாந்து கேட்ப ரழகழ கென்பர்" (தனிப். தி. 2, பக். 293). 3. தலை நிமிர்தல்; to hold the head erect. "நண்ணார் நாண அண்ணாந் தேகி" (புறநா. 47 : 8). 4. நிமிர்ந்து நிற்றல்; to stand erect. "அண்ணாந் தேந்திய வனமுலை" (நற். 10 : 1). 5. வாய்திறத்தல்; to gape, open the mouth. "அண்ணாத்தல் செய்யா தளறு" (குறள், 255).

ம. அண்ணா; க. அண்ணெ; து. அண்ணாவுனி, அணாவு.

அண்ணாந்தாள்பூட்டு–தல் aṇṇāndāḷ-pūṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) அண்ணாந்தாள் தண்டனை யிடுதல்; to inflict aṇṇāndāḷ punishment.

அண்ணாந்துபார்–த்தல் aṇṇāndu-pār-, 4 செ.கு.வி. (v.i.) மேல்நோக்கிப் பார்த்தல்; to look upward. -, 4 செ. குன்றாவி. (v.t.) கூர்ந்து பார்த்தல்; to look into, consider deeply. "அண்ணாந்து பார்க்க வழியு முடம்பே" (திருமந். 2139).

அண்ணி–த்தல் aṇṇi-, 4 செ.கு.வி. (v.i.) 1. நெருங்குதல்; to come near, get close. 2. பொருந்துதல்; to join, unite. "அடியார்க் கென்று மாரமுதா யண்ணிக்கு மையாற் றான் காண்" (தேவா. 6.30 : 2). 3. தித்தித்தல்; to taste sweet. "சிந்தை செயச்செயக் கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" (தோ. 5.61 : 5).

அண்ணு–தல் aṇṇu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிட்டுதல்; to approach, draw near. "அண்ணிய தாயுமகன்றும்" (கூர்மபு. பொது. 12). 2. சேர்தல்; to join, unite with.

"உன்னடிக்கீழண்ணியமெய் யடியவர்க்கு" *(திருவிளை. மெய்க்காட். 8). 3. ஒத்தல்;* to resemble. "புகலும் வாளரிக் கண்ணியர்" *(கம்பரா. பால. வரைக்காட். 28).*

து. அண்டுளி.

அண்பு–தல் aṇbu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அண்ணுதல்;* to approach *(தேவா. 3.379 : 6). 2. அண்டுதல்;* to associate with, to take refuge.

அண்முறுதல் aṇmu-, *5 செ.குன்றாவி.* (v.t.) கிட்டுதல்; to approach "அணிமாடத் திடையோர் மண்டபத்தை யண்மி" *(கம்பரா. பால. திருவவ. 61).*

அண்வரு–தல் (அண்வா–தல்) aṇ-varu-(aṇ-vā-), *18 செ.கு.வி.* (v.i.) *1. அருகில் வருதல்;* to come near. *2. அருகிலிருத்தல்;* to be close, near. 'ஆவண வீதியெல் லாம்நிழல் பாயநின்றண்வருமே' *(இறை. 2, உரை, பக். 53).*

அண[1]–த்தல் aṇa-, *3 செ.கு.வி.* (v.i.) பொருந்துதல்; to be joined, united. "முலைமூன்றணந்த சிறுநுதல்" *(கல்லா. 13 : 12).*

அண[2]–த்தல் aṇa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. தலையெடுத்தல்;* to lift the head. "பாம்பணந்தன்ன" *(பொருந. 13). 2. மேனோக்குதல்;* to look upward. "நெற்கொ ணெடுவெதிர்க் கணந்த யானை" *(குறிஞ்சிப். 35).*

து. அணவு, அணாவுனி.

அணங்கயர்–தல் aṇaṅg(u)-ayar-, *2 செ.கு.வி.* (v.i.) திருவிழாக் கொண்டாடுதல்; to celebrate a religious festival. "சுறவ முண்மருப் பணங் கயர் வனகழிச் சூழல்" *(பெரியபு. திருக்குறிப். 7).*

அணங்காடு–தல் aṇaṅg(u)-āḍu, *5 செ.கு.வி.* (v.i.) தெய்வமேறி யாடுதல்; dance of one possessed by the spirit of Vēlaṉ. "அணங்காடுத லன்றந்தோ" *(திவ். திருவாய். 4.6 : 5).*

அணங்கு[1]–தல் aṇaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) ஒலித்தல்; to sound; make noise. "புகை யணங்க" *(பு. வெ. 10 : 8).*

அணங்கு[2]–தல் aṇaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அஞ்சுதல் (சங்.அக.);* to fear, to be afraid. *2. வருந்துதல்;* to suffer, to be distressed. "ஆடியுட் பாவை போனீயணங்கிய தணங்க வென்றான்" *(சீவக. 957). 3. இறந்துபடுதல்;* to die, to be slain. "நற்போ ரணங்கிய" *(பு.வெ. 7 : 27). 4. பொருந்துதல்;* to be joined united. 'உரையணங்குத் தமிழ்வேந்தன்' *(இறை. 50, உரை, பக். 230). 5. பின்னி வளர்தல்;* to grow, thick with branches interlaced as bamboos. "முழுநெறி யணங்கிய நுண்கோல் வேரலோடு" *(மலைபடு. 223). 6. விரும்புதல் (சங்.அக.);* to desire. **-,** *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அஞ்சுதல்;* to dread. *2. வருந்துதல்;* to afflict. "புறத்தோ ணணங்கிய பக்கமும்" *(தொல். பொருள். புறத். 10). 3. கொல்லுதல்;* to kill, murder, slay. "அணங்குவாள் விடவரா" *(கம்பரா. அயோத். மந்தரை. 53).*

அணங்கெழுந்தாடு–தல் aṇaṅg(u)-eḻund(u)-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) அணங்காடு-தல் பார்க்க; see aṇaṅg(u)-āḍu-. *(சிலப். 5 : 70).*

அணரிடு–தல் aṇar-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) கொக்கரித்தல்; to shout in token of triumph. "சொக்கனுமங் கணரிட்டுத் துடைதட்டிச் சிரித்தருளி" *(திருவாலவா. 52 : 8).*

அணவா[1]–தல் (அணவரு–தல்) aṇa-vā-(aṇa-varu-), *18 செ.கு.வி.* (v.i.) அணுகுதல்; to come near.

அணவா[2]–தல் (அணவரு–தல்) aṇa-vā-(aṇa-varu-), *18 செ.கு.வி.* (v.i.) மேலுயர்த்தப் படுதல்; to be raised. "நீர்வழிக் கணவரு நெடுங்கையவாகி" *(பெருங். உஞ்சைக். 54 : 42).*

அணவு[1]–தல் aṇavu-, *5 செ.கு.வி.* (v.i.) மேல் நோக்கிச் செல்லுதல்; to go upward, ascend. "அந்தர வகடுதொட் டணவு நீள்புகழ்" *(சீவக. 1239).*

அணவு[2]–தல் aṇavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அணுகுதல் (சூடா.);* to go near, approach, come close to. *2. தொடுதல், புல்லுதல் (சூடா.);* to embrace. "மாடக்கொடி கதிரணவுந் திருவெள்ளியங்குடி" *(திவ்.பெரிய திரு. 4.10 : 4). 3. பொருந்துதல்;* to unite. *4. ஒட்டுதல் (பிங்.);* to stick to, adhere to. *5. புணர்தல்;* to have sexual intercourse *(சா. அக.).*

ம. அணவு; க. அணசு.

அணாப்பு–தல் aṇāppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) ஏமாற்றுதல்; to deceice, cheat. "அணாப்பித் துலக்கஞ் சீர்த்துத் திரிமானார்" *(திருப்பு. 381).*

அணாவு–தல் aṇāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) கிட்டுதல்; to approach."அருக்கன் மண்டலத் தணாவு மந்த ணாரூர்" *(தேவா. 2. 237 : 1).*

அணிதல் aṇi-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அழகாதல்;* to be beautiful. "பாஅ யன்ன பாறை யணிந்து" *(மதுரைக். 278). 2. அணிகலமாதல் (செ.அக.);* to be an ornament. "ஐயிரு திசையினு மணிந்து செல்வன" *(கந்தபு.தேவ.தெய்வ. 65). 3. வரிசையாதல்;* to be drawn up in lines."ஐயிரு திசையினு மணிந்து செல்வன" *(கந்தபு.தேவ.தெய்வ. 65)-(சங். அக.). 4. பரத்தல்;* to spread. "சுணங்கணி யாகம்" *(கலித். 4 : 17). -2,* செ.குன்றாவி. (v.t.) *1.அலங்கரித்தல்;* to adorn. "இக்கோ நகரணிக" *(கம்பரா. அயோத். மந்தரை. 33). 2. தாங்குதல்;* to bear, as weapons; to wear, as dress. "ஆத லாற்றனை வியப்பதற் கன்றவை யணிதல்" *(கந்தபு. தக்க. ததீசியுத். 14). 3. பூணுதல்;* to wear, as jewels. *4. பொருந்துதல்;* to join with. "சாறயர்ந் தன்ன காரணி யாணர்த் தூம்பகம்" *(பதிற். 81 : 20-21). 5. படை வகுத்தல்;* to put in array, as an army. "இத்தக வாக வணிந்திரு சேனையும்" *(பாரத. பதின்மூன்.8).6.*

சூழ்தல்; to surround." துகிலணி யல்குற் றுளங்கியன் மகளிர்" (சிறுபாண். 262). 7. வண்ணித்தல்; to describe in embellished language. "அனையதை யணியமாட்டாது" (பிரபுலிங்க. கைலாச. 8).

அணிந்தற்றுப்போ–தல் aṇindaṟṟu-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) வறுமைப்படுதல் (இராட்.); to become destitute (R.).

ஒருகா. அழிந்தற்றுப்போ → அணிந்தற்றுப் போ.

அணிபடு–த்தல் aṇi-paḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சுவடித்தல், அழகுபடுத்துதல்; to decorate. "அண்டம் வெஃக அணிபடுத் திட்டவை" (கந்தபு.உற்பத். திருக்கல்.31). 2. ஒழுங்காக்குதல்; to sent in order, arrange, regulate.

அணிபெறு–த்தல் aṇi-peṟu-, 5 செ.குன்றாவி.(v.t.) அழகு பெறச் செய்தல், புனைதல்; to adorn. "அந்நகருக் கோர்நாம மணிபெறுத்தி யளித்தனனே" (கந்தபு. அசுர. நகர்செய்.22).

அணிவகு–த்தல் aṇi-vagu-, 4 செ.குன்றாவி. (v.t.) தானை, குதிரை, யானை, தேர் என்னும் நால்வகைப் படைகளையும், வெற்றிபெறற் கேற்றவாறு பெரும்படைத் தலைவன் தான் கருதியபடி போர்க்களத்தில் வகுத்து நிறுத்துதல்; to draw up in battle array, as the commander-in-chief or generalissimo, all the four constituents of an army, namely infantry, cavalry, elephantry and chariotry, on the battle-field in strategic formation."மண்ணகத்தணி யணிகளாக மகீபர்தம்மை வகுத்துளான்" (பாரத. படையெழுச்.38).

அணுகு–தல் aṇugu-, 5 செ.குன்றாவி.(v.t.) கிட்டுதல், நெருங்குதல்; to draw near, approach. "தாணிழன் மருங்கி லணுகுபு" (பொருந.149).

அணுப்பிரி–த்தல் aṇu-p-piri-, 4 செ. குன்றாவி. (v.t.) நீரை நுண்துளிகளாகப் பிரித்தல்; the mechanical process of breaking liquid into spray, atomization (சா.அக.).

அணை[1]–தல் aṇai-, 2 செ.கு.வி. (v.i.) 1. உண்டாதல், பிறத்தல்; to be born. தவத்தாலணைந்த புதல்வன் (உவ.). 2. படுத்தல்; to be laid down. "அணைவ தரவணை மேல்" (திவ்.திருவாய்.2.8:1). 3. அவிதல்; to be extinguished. விளக்கணைந்தது (உவ.). -2 செ.குன்றாவி, (v.t.) 1. அடைதல், சார்தல்; to approach, come near. "பெருந்துறை மருங்கினி லணைந்தார்" (திருவாத. திருப்பெருந். 23)."அணைந்திது நெஞ்சஞ் சாமலறைவதென்" (திருவாலவா.29:14). 2. பொருந்துதல்; to touch, come in contact with. "பாரணையாவடிதாங்க" (திருநூற். 91)."அடுகொலைக் கணைந்த முகிலுருப் பெறும்" (கல்லா.15:26-7). 3. புணர்தல்; to copulate with. "கிரது வினையணைந்து பெற்றாள்" (கூர்மபு.பிருகுவா.8).

ம. அணயுக; க. அணெ; தெ. அண்டு; து. அணெபுனி.

அணை[2]–த்தல் aṇai-, பெ.(n.) 4 செ.குன்றாவி. (v.t.) 1. உண்டாக்குதல்; to produce. "மம்மரே யணைக்குங் கள்" (சேதுபு.திருநாட்.54). 2. அடுத்துச்சேர்த்தல்; to join, put close to, as heaping with earth the base of a tree trunk. மரத்துக்கு மண் அணைத்தான் (உ.வ.). 3. அமைத்துவைத்தல்; to cause to happen, to predestine. "அல்லன்மிக வுயிர்க் கிவைதா னணைத்தது" (சிவப்பிர.25). 4. அடைகிடத்தல்; to incubate. "குருகு மன்னமும் வால்வளைக் குப்பையை யண்டமும் பார்ப்பு மாமென வணைக்கும்" (கல்லா.46:23-4). 5. தழுவுதல்; to embrace, hold, clasp in the arms. "அன்னை யடுங்கனா வொழித்து வல்லே யணைத்திடப் பெறுஞ்சிறார்" (காஞ்சிப்பு.தக்கே.59). 6. கட்டுதல்; to tie, fasten, as animals. "களிறணைக்குங் கந்தாகும்" (நாலடி.192). 7. கூட்டி முடித்தல்; to tie up in a bunch. "அணைத்த கூந்தல்" (திருமுருகு.200). 8. அவித்தல்; to quench, extinguish. விளக்கை யணைத்தான் (உவ.). தீயணைக்கும் பொறி.

க. அணெ

அணைக்கட்டிப்பேசு–தல்aṇai-kaṭṭi-p-pēšu-,5 செ.குன்றாவி. (v.t.) ஒருவன் தன் குற்றத்தை மறைத்துப் பேசுதல்; to speak in veiled terms to escape blame.

அணைகட்டு–தல் aṇai-kaṭṭu-, 5 செ. குன்றாவி. (v.t.) அணைக்கட்டு அமைத்தல்; to construct a *dam*."குரக்கினத் தாலே குரைகட றன்னை நெருக்கி யணைகட்டி" (திவ். பெரியாழ்.1.6 : 8).

அணைகடத்தல் aṇai-kaḍa-, 3 செ.கு.வி. (v.i.) 1.வெள்ளம் எல்லைகடந்து மீளாநிலை யடைதல்; to overflow an embankment, as flood, beyond control. 'அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது' (பழ.). 2. ஒரு வினை உரிய காலத்திற் செய்யப்படாமையால் ஒரு வாய்ப்பு என்றும் இழக்கப்படுதல்; to be lost for ever, as a chance, owing to failure to do a thing in time.

அணைகோலு–தல் aṇai-kōlu-, 10 செ.கு.வி. (v.i.) வெள்ளத்தைத் தடுக்க அணை அமைத்தல்; to form an embankment to confine flood. "வெள்ளம் வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்" (நன்னெறி, 30).

அணைசு–தல் aṇaiš-, 5 செ.கு.வி. (v.i.) ஒதுங்குதல், விலகுதல்; to step aside and give way to a superior, as a mark of respect.

அத்தாயப்படு–தல் attāya-p-paḍu, 20 செ. கு.வி. (v.i.) கட்டப்படுதல், துன்பப்படுதல் (இ.வ.); to suffer, to be distressed (Loc.). அவன் மிக அத்தாயப்படுகிறான் (உவ.).

அத்து[1]–தல் attu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அப்புதல்; to apply, as medicine to a wound. மருந்தைக் காயத்தின்மேலத்தி வைத்தான் (வின்.). 2. இரு அல்லது பல துண்டை ஒன்றாகப் பொருத்தியிசைத்தல்; to join two or more parts making them fit in with one another. அத்தித் தைத்தான் (வின்.). 3. சார்தல்; to lean on. என் தோளை அத்திக்கொண்டுவா (வின்.). 4. எட்டுதல்; to reach. அந்தச் செய்தி தலைவர்

காதிலும் அத்திப்போய் விட்டது (உ.வ.).

ம. அத்துக; க. அதுகு; தெ. அத்து.

அதக்கு–தல் adakku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மெல்ல அமுக்குதல்; to press gently or softly as is done to a boil to bring out the pus or other matter (சா.அக.). 2. கீழ்ப்படுத்துதல், அடக்குதல்; to subdue, subject, control. "மாவலியைக் குறும்பதக்கி" (திவ். பெரியாழ். 4. 9 : 7). 3. கசக்கியிளக்குதல் (வின்.); to grind, rub in the hand, press softly, soften, as fruit. 4. வாயில் அடக்குதல்; to cram in the mouth, as betel, as a monkey, its food. 5. குதப்புதல்; to turn about food in the mouth, munch.

ம. அதக்குக; க. அதுக்கு; தெ. அதுமு.

அதட்டு–தல் adaṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. உறுக்குதல்; to rebuke authoritatively, hector. "எவரு மடங்க..... அதட்டு வான் போன்று" (பிரபோத. 11 : 1). 2. ஒலித்து உரப்புதல்; to frighten with a vehement or sudden noise, as a beast. "உரத்த தொனியோ டதட்டி" (நல். பாரத. உத்தரநிரை. 334) 'அதட்டிப் பேசினால் உண்மை அழிந்தா போகும்?' (பழ.).

க. அதடு

அதம்பு[1]–தல் adambu-, 5 செ.கு.வி. (v.i.) அடங்காது பேசுதல் (இ.வ.); to speak intemperately (Loc.).

அதம்பு[2]–தல் adambu-, 5 செ. குன்றாவி. (v.t.). கண்டித்தல் (வின்.); to rebuke. தெ. அதல்பு.

அதர்படு–தல் adar-p-paḍu-, 20.செ.கு.வி. (v.i.) நெறிப் படுதல்; to conform to rules. "அதர்ப்பட யாத்தலோடனைமரபினவே" (தொல். பொருள். மர. 99).

அதர்பறி–த்தல் adar-paṛi, 4.செ.கு.வி. (v.i.) நீளக்கிடங்கு வெட்டுதல்; to dig a long pit for a foundation, ditch or trench.

அதரஞ்செய்–தல் adarañ-cey-, 1 செ. குன்றாவி. (v.t.) தடைசெய்தல்; to obstruct. "புரை யிடத்திற் சென்று அதரஞ் செய்யு மவர்களும்" (T.A.S. iii, 194).

அதவு–தல் adavu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்த்து நெருக்குதல்; to attack. "அதவிப் போர் யானை யொசித்து" (திவ். இயற். 2 : 89). 2. கொல்லுதல்; to kill. "முதலை மடுவினி லதவிய புயலென" (திருப்பு. 282).

அதறு–தல் adaṟu-, 5 செ.கு.வி. (v.i.) பதறுதல் (திசைச்.); to be shaken by fear (Prov.) (சா.அக.). .

அதி[1]–த்தல் adi-, 4 செ.கு.வி. (v.i.) 1. மிகுதல்; to increase, to become abundant. 2. மிகையாதல்; to exceed, to become excessive. 3. சிறத்தல்; to excel, to become excellent. "அதிக்கின்ற ஐவருள் நாத மொடுங்க" (திருமந். 610).

அதி > ***Skt.*** ati. *Sinh.* ati.

அதிகப்படு–தல் adiga-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) மிகுதியாதல்; to increase, become greater.

அதிகரி–த்தல் adigari-, பெ. (n.) 4 செ.கு.வி. (v.i.) 1. மிகுதல், அதிகப்படுதல்; to increase, enlarge. "அதிகரித்த குந்தனை" (தைலவ. தைல. 13). 2. வளர்ச்சியடைதல்; to grow, develop, make progress. 3. வினையில் முனைதல்; to be diligently engaged in. 'ஐவர்க்கும் பரதந்த்ரனாய்க் கொண்டு தூதக்ருத்யத்திலே அதிகரித்து' (திவ். பெரியாழ். 1. 8 : 3, வியா.). 4. நூற் பெரும்பிரிவாதல்; to be the subject or topic forming the major section of a literary work.எழுத்ததிகாரம்,சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்றாற் போல்வன. 5. அதிகாரத்தொடு பொருந்தவருதல்; to fit in with the theme of a chapter or major section of a literary work. 'அதிகாரமாவது: எடுத்துக் கொண்ட அதிகாரம் இதுவாதலின், இச் சூத்திரத்து அதிகரித்த பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்க வேண்டுழி உரைத்தல்' (நன். 21, சங்கரநமச். உரை). 6. உரிமைபூண்டு கொண்டாடல்; to cherish, as a right. 'மறைமொழிகளை யதிகரிக்கும் பிராமணர்' (சிவதரு. பாயி. 9, உரை). 7. உரிமைபூண்டு கற்றல்; to learn a best-suited art or study an appropriate literary work."அவைநீ அதிகரித்தற் குரியை" (அரிசமய. பராங்குச. 78). 8. அதிகாரஞ் செலுத்துதல்; to exercise authority; 'அதிகாரம்-அதிகரித்தல். அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று, வேந்தன் இருந்துழி யிருந்து தன்நிலம் முழுவதும் தன்னாணையின் நடப்பச் செய்வது'.... (நன். எழுத்து. முன்னுரை, சிவஞான. விருத்.). 9. தலைமைப் பட்டு நிற்றல்; to be supreme.

ம. அதிகரிக்குக; க. அதிகரிசு.

அதிகாரஞ்செலுத்து–தல் adigārañ-celuttu-, 5 செ.கு.வி. (v.i.) ஆட்சி நடாத்துதல், தன் கட்டளையை நிறைவேற்று வித்தல்; to exercise authority.

அதியுமிழ்–தல் adi-y-umiḻ, 2 செ.குன்றாவி. (v.t.) 1. அதிகமாக வாய்நீரூறலால் அடிக்கடி துப்புதல்; constant spitting owing to excessive flow of saliva. 2. இதள் (ரச) மருந்தைத் தவறாகப் பயன்படுத்தலால் அளவிற்கு மிஞ்சி வாய்நீர் ஒழுகல்; abnormal flow of saliva due to misuse of mercury drugs. Mercurialism alias *Mercury ptyalism* (சா.அக.).

அதிர்–தல் adir-, 2 செ.கு.வி. (v.i.) 1. குலுங்குதல்; to shake, quake, tremble, as by an earthquake, by the fall of a tree, by the rolling of chariots, by the loud report of a gun. நில மதிர்ந்தது (உ.வ.). "பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமிதானதிரும்" (நீதிவெண். 31). 'அதிர அடித்தால் உதிர விளையும்', 'அதிர ஆடிக் குடியைக் கெடுத்தாள்' (பழ.). 2. உடம்பு நடுங்குதல்; to be startled, as by the sound of a cannon. 3. உளம் நடுங்குதல்; to be alarmed, as by reports of robbery, by the prevalence of an epidemic. "அதிர வருவ தோர்நோய்" (குறள், 429). 4. விசையாகத் துடித்தல்; to vibrate. 5. முழங்குதல்; to resound, as thunder, to reverberate, to sound as a drum, to roar as a lion. "அதிர மாமுழவு" (திருவாலவா. 37 : 23). 6. எதிரொலித்தல்; to echo. "குரல்கேட்ட கோழி குன்றதிரக் கூவ" (பரிபா. 8 : 19).

ம. அதிருக; க. அதிரு; தெ. அதரு; து. அதுருனி.

அதிர்–த்தல் adir-, *4 செ.கு.வி.* (v.i.) *1. முழங்குதல்;* to thunder, roar, as the sea. "மதித்த வேலையவ் வேலையி னுடைந்தென வாய்விட் டதிர்த்த" *(கந்தபு. தக்க. தீசியுத். 325). 2. கலங்குதல்;* to be confused. "கற்றானதிர்ப்பிற் பொருளதிர்க்கும்" *(நான்மணிக். 21). -, 4 செ.குன்றாவி.* (v.t.) *1. அசைத்தல்;* to shake. *2. நடுங்கச் செய்தல்;* to cause alarm by shouting, intimidate. "பின்னதிர்க்குஞ் செய்வினை" *(நான்மணிக். 69). 3. அதட்டுதல்;* to rebuke, menace. "அரிப்பதாக னுரகப் பதாகனை யதிர்த்து" *(பாரத. பதினெட். 186). 4. சொல்லுதல்;* to say, tell *(பிங்.). 5. அசைத்துத் தள்ளுதல் (சங்.அக.);* to shake and push away. "அஞ்செழுத்தா லதிர்த்தெழுந்து" *(கோயிற்பு. பாயி. 9).*

அதுக்கு–தல் adukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அமுக்குதல்;* to press with the fingers, as a ripe fruit or boil. *2. பிசைதல்;* to squeeze, pinch, as the stomach in grief. "அவ்வயிறதுக்கும்" *(திருவிளை. வன்னியுங். 41). 3. கடித்தல்;* to bite, as one's lips. "நண்ணுந் துயரந்தனை நோக்கி நகையாச்சினவி யிதழதுக்கி" *(கூர்மபு. தக்கன்வே. 32). 4. நறுக்குதல்;* to cut into pieces, mince as vegetables. "வீரநோய் வெகுளி தோற்றி விழுப்பற வதுக்கியிட்டுக் காரகற் பொரிப்பர்" *(சீவக. 2771). 5. மெல்லுதல்;* to chew. "வாயினி லதுக்கிப் பார்த்து" *(பெரியபு. கண்ணப்ப. 118). 6. வாயிலடக்குதல்;* to stuff into the mouth, as does a monkey. *7. அடித்தல்;* to slap with the hand, beat with a stick. "தாளிற மூர்க்க ரதுக்கலின்" *(சீவக. 936).*

ம. அதுக்குக; க. அதகு; தெ. அதுமு; து. அலமுனி.

அதுக்கெடு–த்தல் adukk(u)-eḍu-, *4 செ. கு.வி.* (v.i.) *ஏனங்களைத் தட்டி நெளிவெடுத்தல்;* to remove a dent, smooth out the dented surface of a metal utensil.

அதுங்கு–தல் aduṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அமுங்குதல்;* to be forced out or in by pressure, to be stuffed in, compressed. *2. ஒதுங்குதல்;* to draw to one side.

அதும்பு–தல் adumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *மொய்த்தல்;* to swarm. "முரல்வண்டதும்புங் கொழுந்தேன்" *(திருவாச. 6 : 36).*

அதை–த்தல் adai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வீங்குதல்;* to swell, to be puffed up. கன்னம் அதைத்திருக்கிறது. *2. செருக்குதல்;* to grow arrogant, become proud. இவனுக்கு அதைத்துப்போயிற்று *(வின்.). 3. தாக்கி மீளுதல்;* to rebound, recoil. அதைத்து விழுந்த பந்து. *4. அலைதல்;* to wander about. "உனை நாடி யதைத்தொழிந் தேன்" *(திருமந். 1691).*

அந்தி–த்தல் andi-, *4 செ.கு.வி.* (v.i.) *பொருந்துதல் (பொதி.நி.);* to pit in. *-, 4 செ.குன்றாவி.* (v.t.) *1. கிட்டுதல்;* to approach. "வேதம் அந்தித்தும் அறியான்" *(திருவிளை. நகர.106). 2. சந்தித்தல்;* to unite, join, meet. "யமபடையென வந்திக்குங் கட்கடையாலே" *(திருப்பு. 55). 3. முடித்து வைத்தல்;* to tie up in a knot. "அந்தித் திருக்கும் பொரு ளில்லை" *(திருவாலவா. 30 : 14). 4. ஏற்படுத்துதல் (நியமித்தல்);* to appoint, ordain. "அந்தித்த நின்புணர்ப்பை" *(கந்தபு. மகேந்திர. சயந்தன்புலம். 58).*

க., தெ. அந்து.

அந்திகூப்பு–தல் andi-kūppu-, *5 செ.கு.வி.* (v.i.) *மாலைத் தெய்வ வணக்கஞ் செய்தல்;* to offer evening prayers or perform evening worship. "மந்திரத் தந்தி கூப்பி" *(பெருங். உஞ்சைக். 55 : 7 -8.).*

ம. அந்தி வழங்குக

அப்பளி–த்தல் appaḷi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *சுவரிற் சாந்து பூசும்போது சமனாக்கித் தேய்த்தல்;* to remove unevenness in the wall when plastering. சுவரை அப்பளித்துப் பூசுகிறான் *(உ.வ.).*

க. அப்பளிசு; தெ. அப்பளிஞ்சு; து. அப்பரீவு.

அப்பு[1]–தல் appu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பூசுதல்;* to stick or daub with the hand, as sandal paste, to plaster with a trowel, as mortat. "அரைபடு மகிலுஞ் சாந்து மப்பி" *(திருவிளை. நாட்டு. 13). 2. சாத்துதல்;* to put on. "மலர்த்தார்.... அப்ப" *(பதினொ. கோயிற்றிருப். 4). 3. ஒற்றுதல்;* to apply repeatedly, as a fomentation (W.). *4. தாக்குதல்;* to come to grips, to grapple with, as in wrestling. "இருவரும் புயங்களி னப்பி மொத்தினர்" *(பாரத. பதினேழா. 147). 5. அறைதல் (சங்.அக.);* to beat, strike. *6. கும்முதல் (சங்.அக.);* to pommel. *7. கவ்வு தல்;* to snatch at firmly. நாய் அப்பிக்கொண்டு போய்விட்டது *(உ.வ.). 8. வாயில் திணித்தல்;* to thrust in the mouth. "அவல்தேனு மப்பி யமுதுசெயும்" *(திருப்பு. 1147). 9. கொட்டுதல் (சங்.அக.);* to throw or cast into a vessel.

ம. அப்புக; க. அப்பிகெ; தெ. அப்பளிஞ்சு; து. அப்பளிபுனி; பிராகி. அப்பால; பட. அப்பு.

அப்புறப்படுத்து–தல் appuṟa-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *இடத்தைவிட்டு அகற்றுதல், வேறிடத்திற்குக் கொண்டுபோய் வைத்தல்;* to remove, send away.

அப்பூச்சிகாட்டு–தல் a-p-pūcci-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *கண்ணிதழை மடித்துச் சிறு பிள்ளைகளை அச்சுறுத்துதல்;* to frighten children by the ghastly look of eyes with eyelids folded inside out. "அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான்" *(திவ். பெரியாழ். 2.1 : 1).*

அம்பலத்திற்கு வா(வரு–தல்) ambalattiṟku-vā-, *18 செ.கு.வி.* (v.i.) *மறைவு வெளிப்படுதல்;* to become public, as a secret. இன்னம்ப ரான்றன் இணையடியே" *(தேவா. 4. 100 : 1).*

அம்மமுண்ணு–தல் ammam-uṇṇu, *12 செ.கு.வி.*(v.i.) *முலைப்பால் குடித்தல்;* sucking milk from woman's breast.

அம்மிமிதி–த்தல் ammi-midi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *திருமணக் கரணத்தில் மணமகன் மணமகள் வலக்காலைத் தூக்கிவைக்க உதவ, அவள் அதை அம்மிமேல் வைத்தல்;* to perform the ceremonial procedure in which the bride places her right foot on the grinding-stone, the bridegroom helping her to do so. "*அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்*" *(திவ். நாய்ச். 6 : 8).*

ம. அம்மிசவிட்டுக

அம்மு–தல் ammu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முகில் படிந்து வானம் மந்தாரமாதல் (யாழ்ப்.);* to spread thickly, as a mass of motionless clouds that overspread the heavens, obscuring the rays of the sun (J.). *2. மாயம் பண்ணுதல் (வின்.);* to dissemble, on hearing a thing spoken of, by seeming to know nothing about it, to act with reserve and duplicity. -, *5 செ. குன்றாவி.* (v.t.) *1.அமுக்குதல்;* to press down. "*வல்லிய மாமனெகிழ்த்து*" *(மருதூரந். 91). 2. விரைந்து மிகுதியாயுண்ணுதல்;* to eat voraciously. *சோற்றை நன்றாய் அமுக்குகிறான் (உ.வ.). 3. அடைத்தல்;* to plug *(சா.அக.). 4. மூடுதல்;* to cover *(சா. அக.). 5. ஏமாற்றுதல்;* to deceive.

ம. அம்முக

அம்மைகுத்து–தல் ammai-kuttu-, *5 செ.கு. வி.* (vi.) *1. ஆவின் அம்மைக் கொப்புளத்தினின்று எடுத்த பாலை அம்மைநோய் தாக்காவாறு மக்களுடம்பில் ஊசிவாயிலாகச் செலுத்துதல்;* to inoculate with vaccine (virus of cow-pox) to procure immunity from small-pox or atleast mitigate its virility or severity, vaccinate. *2. அம்மைகுத்தல்;* vaccination.

அம்மைபோடு–தல் ammai-pōḍu, *20 செ.கு. வி.* (v.i.) *அம்மை வார்த்தல்;* to have an attack of small-pox, chicken-pox or any other allied disease. *வீட்டில் குழந்தைக்கு அம்மை போட்டிருக்கிறது (உ.வ.).*

அம்மைவார்–த்தல் ammai-vār-, *4 செ.கு.வி.* (v.i.) *அம்மை போடுதல்;* to have small-pox, chicken-pox, etc.

அம்மைவிளையாடு–தல் ammai-viḷaiyāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *அம்மைநோய் காணுதல்;* to have an attack of small-pox, chicken-pox, etc.

அமட்டு–தல் amaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. புரளுதல் (வின்.);* to wobble. *2. நிலைப்படாதசைதல் (சங்.அக.);* to be unsteady, as a bench on uneven legs. - 5 *செ. குன்றாவி.* (v.t.) *1. அதட்டி அச்சுறுத்துதல்;* to hector, bully, intimidate. "*ஆராலு மென்னை யமட்ட வொண் ணாது*" *(திருமந். 2960). 2. மயக்குதல்;* to overcome, as by sleep. *தூக்கம் வந்து என்னை அமட்டுகிறது (உ.வ.). 3. சிக்கவைத்தல் (வின்.);* to inveigle, entrap, ensnare.

ம. அமட்டுக; க. அமரிசு; தெ. அதடு.

அமடு (த.வி.) - அமட்டு (பி.வி.)

அமர்–தல் amar-, *2 செ.கு.வி.* (v.i.) *1. இருத்தல்;* to abide, be seated, remain. "*திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவோம்*" *(கந்தபு. கடவுள்வா. 12). 2. அமைதியாதல்;* to become still or tranquil. *காற்றமர்ந்தது (உ.வ.). 3. இளைப்பாறுதல்;* to rest, repose. *4. படிதல்;* to settle, be deposited. as a sediment, become close and hard, as sand by rain. *5. பொருந்துதல்;* to resut upon, as a javelin on the person."*தன்னம ரொள்வாளென் கைதந் தான்*" *(பு. வெ. 4 : 5). 6. பொலிதல் (திவா.);* to flourish, to be abundant. *7. விளக்கணைதல்;* to be extinguished, as a lamp. *'விளக்கானது..... காற்றினால் அமருமா போலே' (குருபரம்.305). 8. ஏற்றதாதல்;* to be suitable; *குலத்துக் கமர்ந்த தொழில் (உ.வ.). 9. திட்டமாதல்;* to be settled, as an affair, to be engaged, as a house. *10. வேலையிற் சேர்தல்;* to join duty, to be established in a work. *வேலையில் அமர்ந்தான் (உ.வ.). 11. மகிழ்தல்;* to be glad, to rejoice, to be delighted. "*அகனமர்ந் தீதலி னன்றே*" *(குறள், 92). 12. உள்ளங் கிளர்ந்திருத்தல், இன்முகமாயிருத்தல்;* to be cheerful. "*முகனமர்ந்து இன்சொல னாகப் பெறின்*" *(குறள், 92).* - *2 செ. குன்றாவி.* (v.t.). *1. நெருங்குதல்;* to get close to. "*அமரப்புல்லும்*" *(திருக்கோ. 372). 2. ஒப்பாதல் (விதான. குணா. 38);* to resemble. *3. விரும்புதல்;* to wish, desire. "*அகனமர்ந் தீதிலினன்றே*" *(குறள், 92). 4. செய்தல்;* to do, perform. "*நீயிவணமர்ந்தன யாவுந் தூதர் கூற*" *(கந்தபு. யுத்த. முதனாட். 60). 5. பொந்திகை (திருப்பதி) கொண்டமைதல்;* to rest satisfied. *6. மேற்கொள்ளுதல்;* to undertake, take upon oneself to do. "*ஆட லமர்ந்தா னமர்வெய்யோன்*" *(பு.வெ. 7 : 15). 7. விரும்புதல்;* to wish, desire, like, to be pleased with. *8. நேசித்தல், அன்புவைத்தல்;* to love. "*ஆத்தி சூடியமர்ந்த தேவனை*" *(ஆ. சூ. கடவுள்வா.). 9. காமித்தல், காமத்தோடு காதலித்தல்;* to have sexual love.

ம.,க. அமர்; தெ. அமரு; து. அமரி.

L. *amo,* to love. *amor,* love from inclination. **E.** *amorist,* one who professes (esp. sexual) love. **L.** amōrem*;* **F.** *amor,* love; **E.** *amour,* love affair **L.** amīcus, friend. **E.** *amicable,* friendly. **L.** amicābilem, **OF.** *amiable,* **F.** *amiable;* **E.** *amiable,* lovable. **L.** *amatorius,* **E.** *amatory,* pertaining to a lover (sexual love). **L.** amātōrem, **F.** *amateur;* **E.** *amateur,* one who is fond of anything.

அமர்–த்தல் amar-, *4 செ.கு.வி.* (v.i.) *பொருதல், மாறுபடுதல்;* to be at strife. "*பேதைக்கமர்த்தன கண்*" *(குறள், 1084).*

ம. அமருக; க. அமர்; தெ. அமரு.

அமர்த்து–தல் amarttu-, *2 பி.வி.* (v. caus.) *1. அமைதியாயிருக்கச் செய்தல்;* to make quiet, tranquillize. *2. அடக்குதல்;* to restrain. *3. திட்டப்படுத்துதல்;* to engage as, a house, a servant. *குடியிருக்க வீடமர்த்தி விட்டான்*

(உ.வ.). 4. நிலைநிறுத்துதல்; to establish, as one in life. *5. இருத்துதல்;* to seat. *6. குடியிருக்கச் செய்தல்;* to make one settle down. - *5* செ.கு.வி. (v.i.) *பெருமிதம் பட நடித்தல்;* to pose, affect greatness. "*அமர்த்துத லிவ்வளவு வேணுமடி*" *(கவிகுஞ். 34.).*

க. அமரிசு; தெ. அமர்ச்சு; து. அமருனி.

அமராடு–தல் amar-āḍu-, *5* செ.கு.வி. (v.i.) போர் செய்தல்; to fight, carry on war. "*அந்தண் சேய்களுக் காயம ராடுநின் மைந்தன் றானு மடிந்தனன்*" *(சேதுபு. இராமதீ. 54).*

அமல்(லு)–தல்amal-,*13* செ.கு.வி.(v.i.) *1. நெருங்குதல்;* to be close, thickly grown. "*வேயமலகலறை*" *(கலித். 45: 1). 2. பொருந்துதல்;* to join, unite with. *3. மிகுதல், அதிகரித்தல்;* to be abundant, to increase. "*தருக்கமல மலமென்ன*" *(திருவானைக். கோச். 3). 4. பரவுதல்;* to spread, pervade. "*எங்கணுந் தானினி தமலும்*" *(ஞானா. 14). -, 7* செ. குன்றாவி. (v.t.) *1. அடைதல், சேர்தல்;* to reach, arrive at."*அமலும் வேறிட மளவை யின்றியே விமல ரூபமாய் வரவும்*" *(சேதுபு. சீவதீர்த்த. 70). 2. அணைதல்;* to embrace. "*அமல லகல மகல லபய*" *(தண்டி. சொல். 6).*

ம. அமலிக்குக

அமளிபண்ணு–தல் amaḷi-paṇṇu-, *5* செ.கு. வி. (v.i.) *1. ஆரவாரஞ் செய்தல்;* to make a great noise, raise hue and cry, make a fuss. *2. சச்சரவு விளைத்தல்;* to create disturbance, cause commotion.

அமிழ்–தல் amiḻ-, *2* செ.கு.வி. (v.i.) *முழுகுதல், ஆழ்தல்;* to sink, to be immersed, to plunge. "*இன்பக் கடலூடே யமிழுவேனை*" *(திருப்பு. 36).*

ம. அமிழுக; க. அவுகு; து. கமரு; பட. அமுகு.

அமிழ்த்து–தல் amiḻttu-, *2* பி.வி. (v.caus.) *1. அமுக்குதல்;* to press down. *2. முழுக்குதல், ஆழ்த்துதல்;* to cause to sink, immerse, ingulf, down."*ஆடன் மைந்த ரடங்க வமிழ்த்தினான்*" *(சேதுபு. அக்கினி. 31). 3. மறைத்தல்;* to cover, as eyelids cover the eyes."*அமிழிமைத் துணைகள்*" *(கம்பரா. பால. கோலங். 3).*

அமிழ் (த.வி.) - அமிழ்த்து (பி.வி.)

ம. அமிழ்த்துக; க. அமுகு; து. அமபுனி; பட. அமுக்கு; கோத. அம்ங்; துட. ஒம்க்.

அமிழ்ந்து–தல் amiḻndu, *5* செ.கு.வி. (v.i.) ஆழ்தல், முழுகுதல்; to sink. "*சூழ்ந்த புனற்கய மதனோர் விழுந்த மிழ்ந்தி மீள வெழும்*" *(சேதுபு. அகத். 14).*

ம. அமிழ்ந்துக; தெ. அமுகு.

அமுக்கு–தல் amukku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. அழுத்துதல், நெருக்குதல், கசக்குதல்;* to crush, press, squeeze, as a fruit or a boil. *2. அமரச்செய்தல், பிடித்திழுத்தல்;* to press down, pull back. "*வெற்பி னுச்சிதொட் டமுக்கின சிலகரம்*" *(உபதேச. கூர்ம.15). 3. நீருள் அமிழ்த்துதல்;* to press down into water, immerse. "*ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலுள்*" *(மூதுரை, 19). 4. தோற்கடித்தல், அடக்கி யொடுக்குதல்;* to overcome, repress. *அவனைச் சண்டையில் அமுக்கி விட்டான் (உ.வ.).*

ம. அமுக்குக; க. அமுகு, அவுங்கு; தெ. அவுக்கு, அன்சு; து. அமபுனி; கோத. அம்க்; துட. ஓம்க்; பட. அமக்கு.

அமுங்கு–தல் amuṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. அமர்தல் (சங்.அக.);* to become compressed, to sink to a lower level. *கட்டமுங்கிவிட்டது. 2. அமிழ்தல்;* to sink. *3. அழுந்துதல்;* to be pressed down, mashed, as ripe fruit. *4. நெரிபடல்;* to be crushed, as by a weight. *வீடுவிழ எல்லாரும் அமுங்கிப் போனார்கள் (உ.வ.).*

ம. அமுங்ஙுக, அமங்ஙுக; க. அமுக்கு, அமுகு; தெ. அதுமு; கோண். அதமன; கொலா., நா. அதும்.

அமுதுகுத்து–தல் amudu-kuttu-, *5* செ.கு.வி. (v.i.) பிரைமோர் ஊற்றுதல் *(மாலியப்பிராம.);* to add a litle butter-milk to boiled milk to make curd (Vaiṣṇ. Brāhm.).

அமுதுசெய்–தல் amudu-šey-, *1* செ. குன்றாவி. (v.t.) உண்ணுதல் *(ஒரு கண்ணிய வினைச் சொல்);* to eat, dine (a term used to enhance respect.). "*நறுவெண்ணெ யாயர் மங்கைய ரிடவிட வமுது செய்து*" *(பாரதநச்சு.1).*

அமுதுபடை–த்தல் amudi-paḍai-, *4* செ. குன்றாவி. (v.t.) உணவு பரிமாறுதல்; to serve food. "*உழையிடை யமுது படையென*" *(திருவாலவா. 31 : 11).*

அமுதூட்டுதல் amud(u)-ūṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) *1. குழந்தைக்குப் பாலூட்டுதல்;* to feed a child with milk, to suckle. *2. பிள்ளைக்கு ஏழாம் மாதம் சோறூட்டுதல் (பிங்.);* to start feeding a child with boiled rice in the seventh month.

அமுது + ஊட்டு. உண் (த.வி.) - ஊட்டு (பி.வி.).

அமுரிமுறி–த்தல் amuri-muṟi-, *4* செ.கு.வி. (v.i.) சிறுநீரிலுள்ள களகங்களை நீக்குதல்; to retention of urinary matter normally eliminated by kidneys, uraemia *(சா.அக.).*

அமை–தல் amai-, *2* செ.கு.வி. (v.i.) *1. நெருங்குதல்;* to be near, crowd together, be close. "*வழையமை சாரல்*" *(மலைபடு.181). 2. பொருந்துதல்;* to be attached, connected, joined. "*பாங்கமை பதலை*" *(கந்தபு. தேவ. திருப்பர. 9). 3. நிறைதல்;* to be full, complete. "*உறுப்பமைந்து*" *(குறள், 761). 4. மாட்சிமை யுடையதாதல்;* to be excellent, glorious. *5. அடங்குதல்;* to be comprised, included. *6. அடக்கமாயிருத்தல்;* to become still, quiet, to become submissive, modest or humble. "*அமையா வென்றி யரத்தநெடு வேலோய்*" *(கல்லா. பாயி. வேலன். 15). 7. ஒடுங்குதல்;* to be reverentially obedient or silent. "*வாய் மொழி யமைந்து நின்றான்*" *(ஞானவா. வைராக்.134). 8. தங்குதல்;* to abide. "*மறந்தவ ணமையா ராயினும்*" *(அகநா.37:1). 9. பதிதல்;* to be impressed,

as on the mind. *10. நட்பாய்ப் பொருந்துதல்;* t become friendly or amiable. "*அமைந்தாங் கொழுகான்*" *(குறள், 474). 11. வசமாதல்;* to be brought into one's possession. "*அமைந்தாலுமின்பந் தேடும்*" *(ஞானவா. வைராக். 79). 12. உடன்படுதல்;* to agree, acquiesce, submit. "*கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை*" *(குறள், 803). 13. (இலக்.) வழுவாயினும் ஏற்புடையதாதல்;* to be regularized, as irregular expressions. "*பொருள் வேறுபட்டு வழீஇ யமையுமாறு*" *(தொல்.பொருள்.பொருளியல், 2, நச். உரை). 14. தகுதியாதல்;* to be suitable, appropriate. *15. அணியமாதல் (ஆயத்தமாதல்);* to prepare. "*அமைதிர் போருக்கு*" *(கந்தபு. மகேந். வச்சிர. 14). 16. பொந்திகை (திருப்தி) யடைதல்;* to be satisfied, contented. *அமைய வுண்மின் (வின்.).17. போதியதாதல்;* to suffice. "*கற்பனவுமினி யமையும்*" *(திருவாச. 39 : 3). 18. தீர்மானமாதல்;* to be settled, fixed up. *அந்த வீடு எனக்கு அமைந்துவிட்டது. 19. ஏற்படுதல்;* to come into existence, to become formed, to be produced or created. *எனக்கொருவர் துணையாயமைந்தார் (உ.வ.). 20. நிகழ்தல்;* to happen, occur. *21. முடிவடைதல்;* to come to an end, to be finished. "*அமைந்த தினிநின் றொழில்*" *(கலித். 82 : 35). 22. கூடியதாதல்;* to be possible, practicable. "*காரியம்..... அமையு மாயினும்*" *(சேதுபு. அவை. 2). 23.இல்லையாதல்;* to be non-existent. "*துணையமை வடிவுஞ் சொல்லின்*" *(சீவக.1721).*

ம. அமயுக

அமை–த்தல் amai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. சேர்த்தல்;* to bring together. "*அனாதியாதியமைக்க வேண்டும்*" *(சி.சி.பர. லோகா. மறு. 18). 2. சாத்துதல்;* to offer in worship. "*அருமறைத் தாபதனமைத்திடு செம்மலர்*" *(கல்லா. 15). 3. நாட்குறித்தல்;* to appoint, fix, as time. "*நாளமைத் தழைக்க*" *(கல்லா. 15). 4. ஏற்படுத்துதல், தோற்றுவித்தல், அமர்த்துதல்;* to appoint, constitute, set up as a committee. *அதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் (உ.வ.). 5. அடக்குதல்;* to control, keep in subjection. "*புலனைந்தும் விடயங் களிற் செலாதமைத்து*" *(வைராக். சத. 37). 6. நிறுத்துதல்;* to stop. '*திருவடிகளின் மார்த்தவத்தை நினைத்து இந்தக் கூத்தை அமைக்கைக்காக வணங்க*' *(திவ். பெரியாழ். 1. 9 : 8, வியா.). 7. வசமாக்குதல்;* to get into possession, get over to one's interest.*8. அமைதி பெறச் செய்தல்;* to cause to be still, patient. "*பாரிடக் கணங்களைப் பாணியாலமைத்து*" *(கந்தபு. யுத்த. அக்கினி. 67). 9. அழுத்துதல், பதித்தல்;* to inlay. "*பொற்குட முகட்டுக் கருமணியமைத்தென*" *(கல்லா. 5). 10. (இலக்.) வழுவமைத்தல்;* (Gram.) to regularize, as irregular expressions. '*வழுப் படக் கூறினும் வரைவு காரணத்தாற் கூறலின் அமைக்க வென்றவாறாம்*' *(தொல். பொருள். பொருளியல், 16, நச். உரை). 11.பொறுத்தல்;* to bear with, tolerate. "*குற்றம மைத்தருள்*" *(சேதுபு. துத்தம. 10). 12. சமைத்தல்;* to cook, prepare food. "*ஐந்துபல் வகையிற் கறிகளும் வெவ்வேற்றுசுவை மாறுமா றமைப்பேன்*" *(பாரத. நாடுகர. 14). 13. நூற்பா (சூத்திரம்) இயற்றி முடித்தல்;* to compose a grammatical aphoirsm, which though succinct in form is comprehensive in import. *(தொல். பொருள். செய்.162).14. படைத்தல்;* to create. "*அரனய னெனவுல கழித்தமைத் துளனே*" *(திவ். திருவாய். 1. 1 : 8). 15. கட்டுதல்;* to build, construct, as a town-ship. *நகரமைப்புத் திட்டம். 16. அரசியற் சட்டதிட்டம் வகுத்தல்;* to frame a Constitution. *அரசியலமைப்பு. 17. ஊழிடுதல் (விதித்தல்);* to destine, fore-ordain, as God. *கடவுள் அமைத்தபடியே எல்லாம் நடக்கும் (உவ.). 18. ஒழுங்குபடுத்துதல்;* to organize.

அமைதல் (த.வி.) - அமைத்தல். (பி.வி.).

ம. அமய்க்குக

அயக்கு–தல் ayakku-, *5* செ.குன்றாவி. (v.t.) *அசைத்தல்;* to shake, cause to tremble. "*குன்றுக ளயக்கலின்*" *(கம்பரா. யுத்த. சேதுப. 10).*

அயங்கு–தல் ayaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *விளங்குதல்;* to shine, appear bright. "*பல்லயங்குதலை யேந்தினார்*" *(தேவா. 2. 211 : 4).*

அயர்[1]–தல் ayar-, *2* செ.கு.வி. (v.i.) *1. விளை யாடுதல்;* to play, sport. "*மடக்குறு மாக்களோடோரை யயரும்*" *(கலித். 82 : 9). 2. சோர்தல், தளர்தல், இளைத்தல்;* to become weary, to be fatigued, to be exhausted. "*அடி யேனு மயலார் போல வயர்வேனோ*" *(திரு வாச. 32 : 9). 3. உணர்வழிதல்;* to lose consciousness, as in fainting, sleep or drunkenness. "*கள்ளுண் டயர்தல்*" *(கூர்மபு. திரிபுர. 28). -, 2* செ. குன்றாவி. (v.t.) *1. மெய்வருந்திச் செய்தல்;* to labour hard, to do diligently. *2. செய்தல் (திவா.);* to do, perform. *3. தேர் செலுத்துதல்;* to drive, as a chariot. "*திண்டே ரயர்மதி*" *(கலித். 30 : 19). 4. வழிபடுதல்;* to worship. "*பலிசெய்தயரா நிற்கும்*" *(திருக்கோ.348). 5. வேலன் வெறியாடுதல்;* to dance under possession by *Murugan*. "*வெறியயர் வியன்களம் பொற்ப*" *(அகநா. 98 : 19). 6. விழாக் கொண்டாடுதல்;* to celebrate a festival. *7. விருந்தோம்பல்;* to entertain guests. *8. விரும்புதல்;* to desire. "*செலவயர்தும்*" *(பு.வெ. ஒழிபு, 1). 9. மறத்தல்;* to forget. "*ஆயா தறிவயர்ந்து*" *(பு.வெ. 10, காஞ்சி. 2).*

ம. அயர்க்குக; க., தெ. அசுரு.

அயர்[2]–த்தல் ayar-, *4* செ. குன்றாவி. (v.t.) *மறத்தல்;* to forget. "*அங்கவ டன்றிற மயர்ப்பாயென்றே*" *(மணிமே. 19 : 9).*

அயர்க்கு–தல் ayarkku-, *4* செ.குன்றாவி. (v.t.) *மறத்தல்;* to forget. "*தன்னை யயர்க்குதல்*" *(உபதேசகா. சிவபுண்ணி. 28).*

அயர்வுயிர்–த்தல் ayarv(u)-uyir-, *4* செ.கு. வி. (v.i.) *1. இளைப்பாறுதல்;* to rest. "*திருவயர் வுயிர்க்கு மார்பன்*" *(சூளா. துற. 23). 2. சிந்துதல்;*

to be spilled."கள்ளயர் வுயிர்க்குஞ் செழுங்கமல மென்பொகுட்டு வள்ளல்" (கூர்மபு. அட்ட. 8). 3. சோர்வு நீங்குதல்; to be relieved of fatigue, to recoup one's energy. "குருகயர் வுயிர்க்குஞ் சோலை" (சூளா. துற. 23). 4. மயக்கந் தீர்தல்; to recover from stupor. 5. வருத்தந் தீர்தல்; to be releived of suffering.

அயல்–தல் ayal-, 11 செ.கு.வி. (v.i.) காரம் மிகுதல், உறைத்தல்; to be acrid, pungent. குழம்பு அயலுகிறது (உ.வ.).

அயாவு–தல் ayāvu-, 5 செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to be distressed. "மானயா நோக்கியர்" (சீவக. 1822).

ம. அயவு

அயாவுயிர்–த்தல் ayā-v-uyir-, 4 செ.கு.வி. (v.i.) 1. நெட்டுயிர்த்தல், பெருமூச்செறிதல்; to take a deep breath, to sigh. "அழுதன ளேங்கியயாவுயிர்த் தெழுதலும்" (மணிமே. 21 : 26). 2. இளைப்பாறுதல்; to take rest.3. மயக்கந் தெளிதல்; to recover from swoon. 4. வருத்தந் தீர்தல்; to be relieved of distress or pain. 5. கொப்புளித்தல்; to bubble up, burst forth. "நறவயாவுயிர்க்கு மாலை" (சீவக. 1125). -, 4 செ.குன்றாவி. (v.t.) இளைப்பாற்றுதல்; to give rest to, to refresh. "எம்மைச் சுமந்தயாவுயிர்த்த வாண்மை" (சீவக. 2947).

அயிர்–த்தல் ayir-, 4 செ.கு.வி. (v.i.) ஐயுறுதல் (சந்தேகித்தல்); to suspect. "அருங்கடி வாயி லயிராது புகுமின்" (மலைபடு. 491). -, 4 செ. குன்றாவி. (v.t.) மறைத்தல்; to hide, conceal. "உயிரனை யாயயிராமலுரையெனக்கே" (தஞ்சைவா. 303). - (சங்.அக.).

அயில்–தல் ayil-, 7 செ.குன்றாவி. (v.t.) 1. உண்ணுதல்; to eat. "அடிசி லயில்வோர் தம்மை" (திருவளை. உக். வேல்வளை. 60). 2. பருகுதல், குடித்தல்; to drink. "பாலயி லுற்றிடு பொழுதத் தினில்" (கந்தபு. உற்பத். சரவண. 33).

அரக்கு–தல் arakku-, 4 செ.கு.வி. (v.i.) நெளிந்து நடத்தல்; to waddle. -, 5 செ. குன்றாவி. (v.t.) 1. அழுத்துதல்; to press down. "விரலாற் றலைய ராக்கினான்" (தேவா. 5. 20 : 10). 2. தேய்த்தல்; to rub with the palm of the hand or the sole of foot. கண்ணரக்கல் (சினேந். 456). "அரக்கனீரந்து வாயுமலறவே யரக்கினா னடியாலும்" (தோ. 5. 27 : 10). 3. கனத்த வுடம்பை இருப்புவிட்டுப் பெயர்த்தல் (யாழ்ப்.); to push, drag or otherwise move, as heavy body (J.). 4. குழந்தை புட்டத்தை நிலத்தில் தேய்த்துப் பெயர்தல்; to move by rubbing the buttocks against the ground, as a child. பிள்ளை யரக்கி யரக்கி வந்தது (உ.வ.). 5. துடைத்தல்; to wipe, as tears. "பெருமதர் மழைக்கண் வருபனி யரக்கி" (பெருங். உஞ்சைக். 33 : 136). 6. அரைத்தல்; to grind. 7. வருத்துதல்; to cause trobuld to aflict. "எல்லரக்குமயினுதிவே லிராவணனும்" (கம்பரா. சுந்தர. ஊர்தேடு. 230). 8. சிதைத்தல் (சூடா.); to waste, ruin. 9. கிளைதறித்தல்; to clip off, prune. 10. வெட்டுதல்; to cut, sever. "தாளுந் தோளு மரக்கி" (விநாயகவு. 42 : 4). 11. குறைத்தல்; to cause to diminish. "காரரக்குங் கடல்" (தேவா. 1. 65 : 8). 12. வாய் நிறைய உண்ணுதல்; to eat incessantly in large mouthfuls. ஆடு குழையரக்குகிறது (இ.வ.).13. முழுது முண்ணுதல் (இ.வ.); to eat up. 14. கரத்தல்; to hide, conceal. (திவ். திருச்சந். 32, வியா.) 15. அழித்தல் (சங்.அக.); to destroy.

அரங்கு–தல் araṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. தேய்தல்; to wear away by friction. 2. அழுந்துதல் (உரி.நி.); to be pressed down. 3. அம்பு முதலியன தைத்தல்; to pierce, penetrate, as an arrow. "வேலம்பு.... துணை முலையினுள் ளரங்கி மூழ்க" (சீவக. 293). 4. சிதைதல்; to be injured. 5. குறைதல்; to diminish. 6. வருந்துதல்; to suffer. "கடகரிக் கோடரங் கிடவெழுங் குவிதடங் கொங்கையார்" (கம்பரா. பால. எதிர்கொள். 33). 7. உருகுதல் (இ.வ.); to melt, as ghee (Loc.). நெய்யை அரங்கவை. 8. கெடுதல், அழிதல், நீங்குதல்; to be destroyed, to be removed. "பிணியரங்க" (கம்பரா. பால. குலமுறை. 2).

ம. அரங்ஙுக

அரங்கேற்று–தல் araṅg(u)-ēṟṟu-, 5 செ. குன்றாவி. (v.t.) 1. ஒரு நல்லிசைப் புலவர் தம் புதுநூலை அல்லது பனுவலைத் தலையாய புலவரவையிற் படித்துக் காட்டி, அவர் நிகழ்த்தும் தடைகட்கெல்லாம் தக்க விடைகள் கூறி, அவர்தம் ஒப்பம் பெறுதல்; to present, as an author, a new literary work, before an eminent body of learned men and get its approval, after countering all objections raised.

அரங்கேறு–தல் araṅg(u)-ēṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1.புதுநூலாசிரியன் அல்லது இளங்கணிகை அறிஞரின் ஒப்பம் பெறுதல்; to get the approval of competent authorities, as an author or a dancing girl. 'அவருட் கவியரங் கேறினார் எழுவர் பாண்டிய ரென்ப' (இறை.1, உரை). மாதவி கரிகாலன் முன்னிலையில் ஆடல் பாடலரங்கேறினாள். 2. புதுநூல் அல்லது கணிகை திறம் அறிஞரின் ஒப்பம் பெறுதல்; to be approved by the authorities, as a new treatise or a dancing girl's ability.

அரசளி–த்தல் araš(u)-aḷi-, 4 செ.குன்றாவி. (v.t.) அரசாறுதல்; to rule, as a king. "திருவாரூரரச ளிப்பவர்" (பெரியபு. திருஞான. 506).

அரசாள்(ளு)–தல் arašāḷ-, 10 செ. குன்றாவி. (v.t.) அரசன் ஆட்சி செய்தல்; to reign, rule, govern. "மூண்டபகை செற்றுலக முற்று மரசாளும் பாண்டியன்" (திருவாத. பு. மந்திரி. 2).

க. அரசாளு

அரசிரு–த்தல் araš(u)-iru-, 3 செ. குன்றாவி. (v.t.) அரசாக வீற்றிருத்தல்; to sit in state, as a king. "கன்னிப்பெண் ணரசிருந்து" (திருவிளை. தடாதகை. 43).

அரசுசெய்–தல் arašu-šey-, 1 செ.குன்றாவி. (v.t.) ஆளுதல்; to govern, regin, rule.

அரசுசொல்(லு)–தல் arašu-šol(lu)-, *(8) செ.கு.வி.* (v.i.) *சதுரங்க விளையாட்டில் அரசனுக்குப் பகைக்காயை எடுத்துவைத்து, 'அரசு' என்று சொல்லுதல்;* to say 'check' in chess game.

அரசுதலைபணி–த்தல் arašu-talai-paṇi-, *4 செ.கு.வி.* (v.i.) *முடிசூட்டப் பெறுதல்;* to be crowned as king. "*அங்கர்கோனா யரசுதலை பணித்து*" *(ஞானா. 32).*

அரட்டு–தல் araṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அச்சுறுத்தல்;* to frighten, terrify,

ம. அரட்டு

அரட்டையடி–த்தல் araṭṭai-y-aḍi-, *4 செ.கு. வி.* (v.i.) *1. வீண்பேச்சுப் பேசுதல்;* to gossip, talk purposelessly. *2. வீண்பெருமை பேசுதல் (உ.வ.);* to swagger, bluster (Com.u.).

அரணம்வீசு–தல் araṇam-vīšu-, *5செ.கு.வி.*(v.i.) *கவசமணிதல்;* to put on a coat of mail. "*அரைசரு மமர்மலைந் தரணம் வீசினார்*" *(சீவக. 777).*

அரணி–த்தல் araṇi-, *4 செ.கு.வி.* (v.i.)*1.உரத்தல், கடினப்படுதல்;* to grow hard, as a boil. *2. அரண் செய்தல்* (M.); to fortify, strengthen. *2. காவல் செய்தல்;* to adorn.

அரத்தந்ததும்பு–தல் arattan-tadumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முகஞ் சிவந்துகாட்டுதல்;* to be florid, as the flushed countenance (W.). *2. சினத்தால் முகஞ்சிவத்தல்;* to be inflamed, as the face through anger (W.). *3. அரத்தம் நிறைந்த கலத்தில் தளம்புதல்;* to wabble, flap, fluctuate, as blood in a moving or shaking vessel which is full to the brim.

அரத்தம் பெய்–தல் arattam-pey-, *1 செ. குன்றாவி* (v.t.) *அரத்தங் கலந்து சிறுநீர் விடு தல்;* to discharge urine mixed with blood *(சா.அக.).*

அரவஞ்செய்[1]–தல் aravañ-cey-,*1*செ.கு.வி. (v.t.) *ஒலித்தல், ஓசையுண்டாக்குதல், கத்துதல்;* to sound, make a noise, shout.

அரவஞ்செய்[2]–தல் aravañ-cey-, *1 செ. குன்றாவி.* (v.t.) *மனங்கலங்குதல், வருத்துதல்;* to confuse the mind, to torment."*கண்ணும் புருவமு மரவஞ் செய்ய*" *(சீவக. 2806).*

அரவணை–த்தல் arav(u)-aṇai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. கட்டித்தழுவுதல் (ஏமாம். உலா. 436);* to embrace, fondle.*2. தாங்குதல், உதவிசெய்து அன்பாகப் போற்றிக் காத்தல்;* to support, cherish, protect dearly.

அரவு[1]–தல் aravu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒலித்தல், அரவஞ்செய்தல்;* to sound, hum. "*வண்டரவு கொன்றை*" *(தேவா. 3.339.3).*

அரவு[2]–தல் aravu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *வருத்துதல்;* to torment. "*வேளரவு கொங்கை யிள மங்கையர்கள்*" *(தேவா. 3.332.2).*

அரவுருட்டு–தல் arav(u)-uruṭṭu-, *5 செ. கு.வி.* (v.i.) *வைக்கோற் புரியை உடைப்பிற் செலுத்துதல்;* to thrust twisted straw into a breach. "*அரவு ருட்டுவார்*" *(திருவிளை. மண்சுமந். 5).*

அரவு + உருட்டு. உருள் (த.வி.) → உருட்டு (பி.வி.).

அரவை–த்தல் aravai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *புடமிடுதல் (சா. அக.);* to calcine, refine metals.

அரள்(ளு)–தல் araḷ-,*16. செ.கு.வி.* (v.i.) *மாபேரச்சங் கொள்ளுதல்;* to be extremely terrified. '*அரண்டவன் கண்ணுக்கு இருண்ட தெல்லாம் பேய்' (பழ.).*

ம. அரளுக; க. அரள்; தெ. அரடொணு; பட. அருண்டு.

அரற்று–தல் araṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. திடுமென்று அஞ்சிக் கதறுதல்;* to shout suddenly with fear. *2. கதறியழுதல்;* to cry, weep aloud, bewail."*மடந்தை.... கனவி னரற்றின்று*" *(பு.வெ.கைக்கிளை.9). 3. பலவுஞ் சொல்லித் தன் குறைகூறிப் புலம்புதல் (தொல். பொருள். மெய்ப். 12, பேரா. உரை);* to pour out one's troubles in lamentation. *4. உரத்து முறையிடுதல்;* to complain vociferously. "*அருமறை யின்னமுங் காணா தரற்ற*" *(தாயு. ஆகார. 4). 5. ஆரவாரித்தல் (பிங்.);* to utter loudly. "*அங்க சரீரி யரற்றிய மாற்றம்*" *(பாரத. முண்டகச். 80).7. ஒலித்தல்;* to sound, tinkle. "*நோன்கழல் கல்லென வரற்றிட*" *(கந்தபு. யுத்த. முதனாட். 22). 8. பிதற்றுதல் (நாநார்த்த.);* to blabber.

ம. அறளுக

அரறு–தல் araṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *பேரொலி செய்தல், முழங்குதல்;* to roar. "*அரறுவ போல வார்க்கும்*" *(பெருங். உஞ்சைக். 38 : 40).*

அராத்து–தல் arāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.)*1. அராவுதல் (சங். அக.);* to file, grate. *2. முட்டுதல் (சங்.அக.);* to butt, hit against.*3. உள்குதல் (சிந்தித்தல்) (சங்.அக.);* to consider, ponder, meditate. *4. மிண்டுதல் (யாழ்ப்.);* to talk arrogantly, resist openly (J.).

அராவு–தல் arāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *மாறுபடுதல் (வின்.);* to clash with, disagree with. - *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அரத்தால் தேய்த்தல்;* to file. "*வைய ராவிய மாரன் வாளியும்*" *(கம்பரா.அயோத். கைகேயி. 58). 2. உரசுதல்;* to rub, grate. "*பொருப்ப ராவி யிழிபுனல்*" *(தேவா. 5 . 30 : 7). 3. அறுத்தல்;* to cut. "*மெய்ய ராவிட*" *(கம்பரா. அயோத். கைகேயி. 58).*

ம. அராவுக

அரி–தல் ari-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. நெல், சாமை, வரகு முதலியவற்றின் தாளை யறுத்தல்;* to cut the stalk of paddy, poor man's millet, common man's millet, etc. "*நெல்லரி தொழுவர்*" *(புறநா. 379 : 3). 2. உறுப்பறுத்தல்;* to cut off, as an organ. "*நாக்கரியுந் தயமுகனார்*" *(கம்பரா. ஆரணிய. சூர்ப்ப*

125). 3. செங்கலறுத்தல் (யாழ்ப்.); to cut and remove the excess clay spilling out of the mould in makings bricks. *4. சங்கறுத்தல்;* to cut chank for making ornaments. "*சங்கை யரிந்துண்டு வாழ்வோம்*" *(தனிப்பா. 1, பக். 213). 5. காய்கறிகளைப் பொடியாக நறுக்குதல்;* to cut vegetables into very small pieces. *அரிவாள்மணை.*

ம. அரியுக; க.,து.,பட. அரி; துட. அர்கி; கொலா., நா. அர்க்.

அரி[1]–த்தல் ari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தினவெடுத் தல்;* to have an acute itching sensation. *2. இடைவிட்டொலித்தல்;* to sound intermittently. "*வாட லுழுஞ்சில் விளைநெற் றந்துணர் ஆடுகளப் பறையி னரிப்பன வொலிப்ப*" *(அகநா. 45 : 1-2). 3. இடைவிடுதல்;* to intermit "*உண்கண் கலுழ்ந்துவா ரரிப்பனி*" *(புறநா. 144 : 4 -5). -, 4 செ. குன்றாவி.* (v.t.)*1. கறையான் தின்னுதல்;* to gnaw, as white ants. "*கணச்சித லரித்த*" *(சிறுபாண். 133). 2. புழு பூச்சி துளைத்தல்;* to burrow, as worms or insects. *3.உருக்கிநோய் தோல் சதை யெலும்பைக் குறைத்தல்;* to corrode the skin, flesh or bone, as emaciating diseases *4. துருப்பிடித்தல்;* to be eaten away away by rust. *5. வண்டுண்ணுதல்;* to feed, browse or eat away, as beetles. "*மாலையை வேய்ந்தரிக்கு மிஞிறு*" *(சீவக. 1769). 6. நீர் அறுத்துச் செல்லுதல்;* erosion of the bank or shore by waves. "*அரித் தொழுகும் வெள்ளருவி*" *(தேவா. 4 . 3 : 3). 7. அரிசியை நீரிற் கழுவிக் கொஞ்சங் கொஞ்ச மாகப் பிரித்தல்;* rinse, as rice. *8. கொழித் தெடுத்தல்;* to sift, separate the longer from smaller bodies with the hand, with a sieve or riddle. *சல்லடையால் அரித்தெடுக்க வேண்டும். 9. தொந்தரவு செய்தல்;* to vex by importunity. *10. கடுமையா யொலித்தல்;* to sound hard. "*அரிப்பறை மேகலை யாகி யார்த்தவே*" *(சீவக. 2688). 11. தீயதை நீக்குதல்;* to remove the bad. "*ஆய்ந்தரிக்குந் நறவம் மலர்மாலை*" *(சீவக. 1769).12. கீரை முதலியவற்றில் கூளம் பார்த்தெடுத்தல்;* to remove straw, grass, etc. from greens. *13. கழித்தல்;* to subtract. *14. வகுத்தல் (சூடா. உள். 378, உரை);* to divide. *15. தேடுதல்;* to search through and through. *16. கெடுத்தல்;* to spoil, corrupt. *17. அழித்தல்;* to destroy. "*உலகரிப்பான்*" *(சீகாழி. ஆபத்து. 4).*

ம. அரிக்குக; க.,குட. அரி; து. அரிபுனி.

அரி[2]–த்தல் ari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சிறிது சிறிதாகக் கூட்டிச் சேர்த்தல்;* to sweep up, gather little by little. *'சருகரிக்க நேரமன்றிக் குளிர்காய நேரமில்லை' (பழ.). 2. பூதங்களைச் சேர்த்துப் படைத்தல்;* to create. "*ஓங்குலகை யரித்து மளித்து மழிப்பவ ராத்த ரென்னு*" *(திருநூற். 16).*

அரிசியற்றுப்போ–தல் ariši-y-aṟṟu-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *வாழ்நாள் இறுதியடைதல் (நாஞ்.);* to reach the closing days of one's life (Nāñ.).

[அரிசி + அற்று + போ.]

அரிசியிடு–தல் ariši-y-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *பிணத்தின் வாயில் உறவினர் அரிசியிடுதல்;* to put rice into the mouth of a deceased person, as part of the funeral rites. "*அள்ளி யிடுவ தரிசியோ*" *(பட்டினத். பொது. தாயா. 6).*

அரிப்பரி–த்தல் aripp(u)-ari-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. சிறிது சிறிதாகச் சேர்த்தல்;* to gather in small quantities. *அரிப்பரித்துப் பொருள் சேர்க்கிறான். 2.வயலில் அல்லது களத்தில் விழுந்த நென்மணிகளைக் கூட்டிக் கொழித்தெடுத்தல்;* to separate grains by sifting. "*கைத் தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித் தாங்கு*" *(நீதிநெறி. 8).*

அருக்களி–த்தல் arukkaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *அஞ்சுதல் (வின்.);* to be frightened. - *2 செ. குன்றாவி.* (v.t.) *அருவருத்தல்;* to loathe, abominate.

அருக்கு[1]–தல் arukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அஞ்சுதல்;* to be afraid, terrified. "*பலவிலங்கிற் கருக்கி*" *(உபதேசகா. சிவவிரத. 66). 2. மனமின்மை காட்டுதல், செய்யப் பின்வாங்குதல்;* to show disinclination in a bargain. "*அம்புவி தனிற்பொன் னுள்ளோ னுலோ வியா யருக்கி னானேல்*" *(மச்சபு. சங்கிரா. 11).*

அருக்கு[2]–தல் arukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அருமை பாராட்டுதல்;* to cherish, value, regard as precious. "*நம்மை அருக்கினான் போனோக்கி*" *(கலித். 104 : 69-70). 2. சுருங்கு தல் குறைத்தல்;* to reduce in quantity, make scarce. "*மழையருக்குங் கோள்*" *(திரிகடு. 50). 3. காய்ச்சுதல், காய்ச்சியளவு குறைத்தல்;* to boil. "*நீரருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி*" *(பதார்த்த. 1520). 4. சுண்டக் காய்ச்சுதல்;* to boil down to a thick liquid. *5. விலக்குதல்;* to stop, put a stop to. "*அருக்குக யார் மாட்டு முண்டி*" *(நான்மணிக். 88). 6. அழித்தல்;* to destroy. "*அரிமுதலோ ருயிரருக்கி*" *(உபதேசகா. சிவத்து. 422).*

ம. அருக்குக; க., தெ. அருகு.

அருக்கு[3]–தல் arukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அணைத்தல், சாரச்செய்தல்;* to embrace. "*அருக்கு மங்கையர் மலரடி*" *(திருப்பு. 12).*

அருகித்தோன்று–தல் arugi-t-tōṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அரிதாகத் தோன்றுதல்;* to appear rarely "*விண்ணிலங் கருகித் தோன்று மேதகு வடமீ னன்றி*" *(பாரத. சூது. 201). 2. சுருங்கித் தோன்றுதல்;* to appear diminished in size or quantity. *'அம்மலை முடிமே லேறிநின்று மீண்டு பார்க்குமிடத்து, முன்னிருந்த மாநிலமும் பின் வந்த மலையிடமுந் தானின்ற விடத்திற்குக் கீழ்ப்பட் டருகித் தோற்றுமா போலும்' (ஒழிவி. பொது. 43, உரை).*

அருகு[1]–தல் arugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. குறைதல்;* to diminish, to be reduced, to become scarce. "*ஒன்னார் மதிநிலை யருக*" *(இராகு. யாக. 34). 2. அரிதாதல்;* to happen rarely, to be of uncommon occurence. "*அருகுவித் தொருவரை யகற்றலின்*" *(கலித். 142. 2). 3. மானமொடுங்குதல், அஞ்சுதல்;* to be

afraid, to fear. "அஞ்செஞ் சாய லருகா நணுகும்" *(சிலப். 30 : 126). 4. நோவுண்டாதல் (வின்.);* to smart, prick, pain. *ஒ.நோ : அருவு. 5. கெடுதல், சாதல்;* to be ruined, to perish, die.

ம. அருகுக; க.,பட. அருகு; தெ. உருகு; து. அரு.

அருகு[2]–தல் arugu-, *செ.கு.வி.* (v.i.) *1. பெருகுதல்;* to increase. "அருகு நேமிபா தாளம்" *(தக்கயாகப். 104). - 5 செ.குன்றாவி.* (v.t.) *1. கிட்டுதல் (சூடா.);* to approach. *2. அறிதல் (இறை. 11, உரை);* to know. *3. குறிப்பித்தல் (இறை. 11, உரை);* to indicate one's intention.

தெ. எருகு

அருகு–தை–த்தல் arugu-tai-, *4 செ. குன்றாவி.* (n.) *மடித்துத் தைத்தல்;* to hem.

[*அருகு → ஓரம். அருகு-தைத்தல் = ஓரத்தில் மடித்துத் தைத்தல்.*]

அருகுவை–த்தல் arugu-vai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *குழந்தைகட்கு இழுப்பு வரும்போது சூடு போடுதல் (இ.வ.);* to brand children with the intention of arresting convulsions (Loc.).

அருட்டு–தல் aruṭṭiu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மயக்குதல்;* to confuse, bewilder, frighten. "அருட்டிக்கண் சிமிட்டி" *(திருப்பு. 647). 2. துயிலுணர்த்துதல்;* to wake up. *3. எழுப்பி விடுதல்;* to rouse to action, wake from inactivity. *4. ஏவிவிடுதல், தூண்டிவிடுதல்;* to excite, instigate.

ம. அரட்டுக.

அருத்து–தல் aruttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உண்பித்தல்;* to feed. "வேதியர்க் கருத்திப் பின்னர்" *(நைடத. நாட்டு. 14). 2. நுகர (அனுபவிக்க)ச் செய்தல்;* to cause to experience.

அருந்து–தல் arundu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உண்ணுதல்;* to eat, as a meal. "அருந்தேல் விடலிபதி மனையி லன்னம்" *(சைவச. பொது. 245). 2. தின்னுதல்;* to eat a thing like sweet - meat, to eat, as a bird or animal. "அருந்துதற் கினியமீன் கொணர" *(கம்பரா. யுத்த. வீடணன். 29). 3. குடித்தல்;* to drink "தண்ணீரருந்தி" *(தாயு. எந்நாள். அருளி. 11). 4. விழுங்குதல்;* to swallow. "அங்க வற்றையும் பற்றி யருந்தினான்" *(கந்தபு. யுத்த. இரண்டாநாட்சூர. 65). 5. நுகர்தல் (அனுபவித்தல்);* to experience, either good or evil, pleasure or pain, reap the fruits of actions done. *6. தன்னிடத்துக் கொள்ளுதல்;* to contain, hold. "சாந்தருந்தி மைந்திறை கொண்ட மலர்ந்தேந் தகலத்து" *(குறிஞ்சிப். 120).*

ம. அருந்துக

அருநெஞ்சுப்படு–தல் aru-neñju-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *விருப்பமில்லாதிருத்தல்;* to be unwilling, reluctant.

அரும்பி–த்தல் arumbi-, *4 செ.கு.வி.* (v.i.) *அரும்பு தோன்றுதல், தோன்றுதல்;* to bud, sprout, rise. "அரும்பித்த செஞ்ஞாயி றேய்க்கு மடி" *(தேவா. 6.6 : 4).*

அரும்பு–தல் arumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அரும்பு தோன்றுதல், முகிழ்த்தல்;* to bud, sprout. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி" *(குறள், 1227). 2. சற்றே அல்லது சிறிதே தோன்றுதல்;* to sprout slightly or a little. "அரும்பு மிளநகை போற்றி" *(திருவிளை. கடவுள். 4),* "அமுதூற் றரும்பி" *(தாயு. பொருள்வண. 2). 3. தோன்றுதல்;* to sprout, spring forth.

ம. அரும்புக; து. அரும்பு.

அரும்பூது–தல் arumbūdu-, *பெ.* (n.) *5 செ.கு. வி.* (v.i.) *ஊதிப் பொன்மணி செய்திணைத்தல் (வின்.);* making globules out of melted gold by blowing and joining them with one another.

அருமைசெய்–தல் arumai-šey-, *1 செ.கு.வி.* (v.i.) *அருவினை செய்தல், பேராண்மை காட்டுதல் (சூடா.);* to perform heroic deeds. -, *1 செ. குன்றாவி* (v.t.) *மிகுதியாக அருமை பாராட்டுதல்;* to cherish greatly, appreciate highly, treat endearingly.

அருவரு–த்தல் aru-v-aru-, *4 செ. குன்றாவி.* (v.t.) *துப்புரவின்மை, தீயொழுக்கம், கடும்பகை முதலியவற்றால் மிக வெறுத்தல்;* to loathe, abhor, feel disgusted with on account of filthiness, evil conduct or rancour.

அருவா–தல் aru-v-ā-, *6 செ.கு.வி.* (v.i.) *பிறப்பறுதல்;* to be freed from rebirths. "அழுந்தேன் வந்துன் னடியடைந்தே னருவாய்ப் போத லழகிதோ" *(சீவக. 3021).*

அருவு[1]–தல் aruvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அறுத் தொழுகுதல்;* to wear away, as a flood the banks of a river. *கரையை ஆற்று வெள்ளம் அருவுகிறது (இ.வ.). 2. துன்புறுத்துதல்;* to afflict, gripe. "அருவிநோய் செய்து" *(திவ். பெரியதி. 9. 7 : 6)-, 5 செ.கு.வி.* (v.i.) *வெள்ளம்போல் மெல்லச் செல்லுதல்;* to move or flow down gently.

அருவு[2]–தல் aruvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கிட்டுதல் (வின்.);* to approach.

அருள்[1](ளு)–தல் aruḷ-, *11 செ.கு.வி.* (v.i.) *1. இரக்கங் காட்டுதல்;* to be gracious to, to show favour. "அருளாத நீரருளி" *(திவ். திருவாய். 1. 4 : 6). 2. சிவன் (இறைவன்) பழுத்த ஆதன்கட்கு (பக்குவ ஆன்மாக்கட்கு) வீடளித்த லாகிய ஐந்தாம் தொழிலைச் செய்தல்;* to grant eternal bliss, as Šiva (God), to perfected souls. *3. மகிழ்தல்;* to rejoice. "அரிமயி ரொழுகுநின் னவ்வயி றருளி" *(தொல்.பொருள். கற். 5, நச். உரை மேற்கோள்). 4. தூக்கம் விழித்தல்;* to keep awake *(சா.அக.). -, 6 செ.குன்றாவி.* (v.t.) *1. அளித்தல்;* to grant, bestow, *ஏற்றவர்க்கு மாற்றா தருள் செய்கை (தஞ்சைவா. 126). 2. படைத்தல்;* to create. "ஆரணத் தானருள் பாரளித்தான்" *(தஞ்சைவா. 265). 3. காத்தல்;* to protect, preserve. "பொறுத்தே யருள்வா யென்னா விருதாள் சென்னி புனைந்தேன்" *(கம்பரா. அயோத். நகர்நீங்கு. 82). 4. அருளோடு சொல்லுதல்;* to speak graciously. "நீதான் யாவன் அந்தோ வருள்கென்று" *(கம்பரா.*

அயோத். நகர்நீங்கு. 76). 5. இறைவன் அரசன் முதலிய வணக்கத்திற்குரியோர் கட்டளையிடுதல்; to command, as God, king or other venerable persons. "கொண்டுவரு கென வருளுங் குலவுதிரு வருள்கேளா" (கோயிற்பு. இரணிய. 51) -, (பொது) இறைவன் அரசன் முனிவன் முதலிய வணக்கத்திற் குரியோர் செயல் கூறும் வினைச்சொல்லுடன் கூடிவரும் துணை வினை; an auxiliary verb added to the verbs denoting the actions God, kings, sages or other venerable persons. "நாத னெழுந் தருள" (கோயிற்பு. பதஞ். 25). "தெண்டிரை சேர் சடையாருந் திருவுள்ள மகிழ்ந்தருளி" (கோயிற்பு. இரணிய. 51).

அருள்[2](ளு)–தல் aruḷ-, 16 செ.கு.வி. (v.i.) அச்சமுறுதல்; to be frightened, terrified, bewildered. "அருண் டென்மேல் வினைக் கஞ்சி" (தேவா. 7. 66 : 2).

க. அரள், அரலு.

அருள்செய்–தல் aruḷ-šey, 1 செ.குன்றாவி. (v.t.) அருளொடு சொல்லுதல்; to speak graciously. "உள்ளபடி யருள்செய்ய வேண்டுமென" (கோயிற்பு. பதஞ். 6).

அருளிச்செய்–தல் aruḷi-c-cey-, 1 செ. குன்றாவி. (v.t.) கடவுள் அல்லது வணங்கப்படத்தக்க பெரியோர் அருளொடு சொல்லுதல்; to speak, as God or venerable persons. "நம் பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்" (பெரியபு. காரைக். 57).

அரை[1]–தல் arai-, 2 செ.கு.வி. (v.i.) 1. தேய்தல்; to become macerated, worn out. "நீளிடை யங்கமெங்கு மரைந்திட" (பெரியபு. திருநாவு. 360). 2. அரைபடல் (சங்.அக.); to be ground.

ம. அரயுக; க., பட. அரெ; குட. அர; து. அரெபுனி; தெ.ராசு; கோத. அர்வ, அர்த்; கொலா.ராக்; கோண். அரீதானா; கூ. ராத்; குவி. ராச.

அரை[2]–தல் arai-, 4 செ.குன்றாவி. (v.i.) 1. தேய்தல்; to rub against, graze, mash. "அரைத்த வாரமும்" (பாரத. நிரை. 29). 2. கொட்டை நீக்குதல்; to remove seeds. பஞ்சரைக்கும் ஆலை; gin. 3. நசுக்குதல் (சங்.அக.); to crush. 4. அம்மியில் வைத்து அரைத்தல்; to grind. "அரைத்த மஞ்சள் தாவதை" (தேவா. 7. 60 : 2). 5. பொடித்தல், தூளாக்குதல், மாவாக்குதல்; to pulverise. மாவரைக்கும் ஆலை. 6. அழித்தல் (வின்.); to destroy. 7. நோயிலழுந்தல் (சங்.அக.); to be afflicted with sickness. 8. வெட்கப்படுதல் (நாஞ்.); to be ashamed (Nāñ.).

ம. அரய்க்குக; க. அரெயிசு; தெ. அரகதீயு; துட. யெரை; து. அரெபு; பட. அரெ.

அரைக்கண்போடு–தல் arai-k-kaṇ-pōḍu-, 20 செ.கு.வி. (v.i.) கால்நடை முதலியன அரைக்கண்ணோடு பார்த்தல் (பெரியமாட். 129); to see with eyes half-closed, as cattle, etc.

அரைத்தரை–த்தல் araittarai-, 4 செ. குன்றாவி. (v.t.) முன் அரைத்ததையே திரும்பவும் அரைத்தல்; to grind again (சா.அக.).

அரைத்துச்சேவி–த்தல் araittu-c-cēvi-, 4 செ. குன்றாவி. (v.t.) வீக்கம், புண் முதலியன வற்றிற்கு மருந்தை அரைத்துத் தடவுதல்; to grind and apply medicine as a protective covering for swelling, burns, wounds, ulcers, etc. (சா.அக.).

அரைப்பையாக்கு–தல் arai-p-pai-y-ākku-, 5 செ. குன்றாவி. (v.t.) வேண்டிய போதெல்லாம் சிறிது சிறிதாக எடுத்து நுகர்தல் (ஈடு, 1. 7 : 2); to enjoy little by little, whenever wanted.

அரைபடு–தல் arai-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. அரைக்கப் படுதல்; to be ground. சாந்து நன்றாய் அரைபடவில்லை (உ.வ.). 2. உரைசப் படுதல்; to be rubbed, irritated by rubbing. தொடைச்சந்து அரைபட்டுப் போயிற்று (உ.வ.). 3. பழிக்கப்படுதல்; to be derided. அவன் பலர்வாயிலும் அரைபடுகின்றான் (உ.வ.).

அரை = அரைப்பு. 'படு' து.வி.

அரையாறுபடு–தல் arai-y-āṟu-paḍu-, 20 செ.கு. வி. (v.i.) குறைதல்; to decrease, lessen, to be reduced. "பிரிவாலே அரையாறு பட்டுச் சிவந்திருக்கும்" (ஈடு, 1. 4 : 2, பக். 176.).

அரை (பாதி) + ஆறு + படு. படுதல் = உண்டாதல்.

அல்கு[1]–தல் algu-, 5 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல் (பிங்.); to stay, abide, lodge. 2. நிலைத்து நிற்றல்; to be permanent. -, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்தல்; to reach, arrive at. "அவ ரல்கு வர்போய்..... பழனங்களே" (திருக்கோ. 249). 2. உணவைப் பலநாட்குச் சேமித்து வைத்தல்; to preserve, as food for many days. "சிலைகெழு குறவர்க் கல்குமிசை வாகும்" (புறநா. 236 : 2).

அல்குதல் = பொருந்தி தங்குதல் , கெடுதல்.

அல்கு[2]–தல் algu-, 5 செ.கு.வி. (v.i.) 1. சுருங்குதல்; to shrink, diminish, lessen, diminish in quantity gradually. 2. அழிதல்; to be destroyed. "அளியி னாற்றொழு வார்வினை யல்குமே" (தேவா. 5. 23 : 10).

அல்லகுறிப்படு–தல் alla-kuṟi-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) (அகப்.) களவொழுக்க இரவுக் குறியிடத்துக் குறியல்லாத குறியால் தலைவி மயங்குதல்; (Agap.) to be misled, as the heroine, at night by occurrence of signs happening casually (தொல். பொருள். கள. 42, உரை).

அல்லத்தட்டு–தல் alla-t-taṭṭu-, 5. செ. குன்றாவி. (v.t.) 1. ஏவினதைச் செய்ய மறுத்தல், அறிவுரையைப் புறக்கணித்தல் (உ.வ.); to refuse compliance, disobey, reject advice, object to (Com.u.). 2. நம்பிக்கையைக் கெடுத்தல்; to frustrate, disappoint (W.).

க. அல்லகளெ

அல்ல = தகாதது (என்று), தட்டுதல் = தடைசெய்தல்.

அல்லா[1]–த்தல் allā-, 3 செ.கு.வி. (v.i.) துன்புறுதல்; to suffer, to

be in distress. "ஆக்க மிழந்தேமென் றல்லாவார்" *(குறள், 593). வாயுநோய் நலிதலி னல்லாந்தார்" (கலித். 29 : 1 - 2).*

தெ. அல்லட

அல்லா²–த்தல் allā-, *3 செ.கு.வி.* (v.i.) *மகிழ்தல்;* to rejoice, to be glad. "*அதனெதிர் சொல்லே மாதலி னல்லாந்து கலங்கி" (குறிஞ்சிப். 143).*

மல்லாந்து = மலர்தல், மகிழ்தல். மல்லா → அல்லா.

அல்லாடு–தல் allāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அலைந்துதிரிதல்;* to wander from place to place. *2. தொந்தரவுபடுதல்;* to suffer, to be troubled.

க., தெ. அல்லாடு; து. அலெயுனி.

அல்லாப்பாண்டியடி–த்தல் allā-p-pāṇḍi-y-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *மல்லாக்க வளைந்து கரணம் போடுதல் (நெல்லை);* to perform a somersault (Tn.).

அல்லு–தல் allu-, *5 செ.கு.வி.* (v.i.) *பின்னிக்கொள்ளுதல் (இ.வ.);* to interlace closely (Loc.). *மரங்கள் அல்லிக்கொண்டன. -, 5 செ.குன்றாவி.* (v.i.) *முடைதல் (இ.வ.);* weaving. *குருவி கூட்டை அல்லுகிறது.*

க., தெ. அல்லு; கொல. அல்; பர். அல்ச்; நா. அல்; கூ. அல்ப்; குவி. அல்லினய்.

அல–த்தல் ala, *3 செ.கு.வி.* (v.i.) *1. அலைதல் (சங்.அக.);* to wander, roam about. "ஐவர் வந்து முறைமுறை துயரஞ் செய்ய வற்றுநா னலந்து போனேன்" *(தேவா. 4. 52 : 8). 2. துன்பமுறுதல்;* to suffer, to be in distress. "அலந்தாரை யல்லனோய் செய்தற்றால்" *(குறள், 1303). 3. வறுமைப்படுதல்;* to suffer privaton, to be in want. "அலந்தவர்க் குதவுதல்" *(கலித். 133 : 6). 4. ஆசைப்படுதல்;* to desire, long for, hanker after. *கறிக்கு அலந்துபோய்க் கிடக்கிறான் (உ.வ.).*

தெ. அலகுவ

அலக்கழி–தல் alakkaḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *மிக வருந்துதல், துன்புறுதல்;* to be vexed, troubled, harassed. "கலக்கநா னலக்கழிந் தேன்" *(தேவா. 4. 70 : 3).*

அலக்க (நி.கா.வி.எ.) + அழி. அலத்தல் = துன்புறுதல். அழிதல் = மனம்நோதல்.

அலக்கழி–த்தல் alakaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அலைத்து வருத்துதல் ((பணவிடு. 177);* to vex, harass, harry, perplex. tease, distress, worry by continual putting off. *2. கெடுத்தல்;* to ruin, destroy. "தக்கன்பெரு வேள்வியங் கலக்கழித்து" *(தேவா. 5. 73 : 1). 3. அழகு காட்டுதல்;* to mimic in derision.

அலக்கழிதல் (த.வி.) → அக்கழித்தல் (பி.வி.).

அலக்கு–தல் alakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அசைவித்தல்;* to shake, cause to move. "சங்கலக்குந் தடங்கடல்வாய்" *(வோ. 7. 51 : 3). 2. ஆடைவெளுத்தல்;* to wash, as clothes.

ம. அலக்கு; க. அலகு, அலி; து. லம்பு; பட. அலுக்கு.

அலக்கொடு–த்தல் ala-k-koḍu-, *4 செ. குன்றாவி.* (v.t.) *தொந்தரவு செய்தல், தொல்லை கொடுத்தல் (இ.வ.);* to give trouble, cause worry to (Loc.).

அலகிடு¹–தல் alagiḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. அளவிடுதல், அலகுவைத்துக் கணக்கிடுதல்;* to reckon, compute, measure, estimate. *2. செய்யுளில் தளையும் ஓசையும் வழுவாவாறு அசைகளைப் பிரித்துக் கணக்கிடுதல்;* to scan, as a verse.

அலகிடு²–தல் alagiḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *துடைப்பத்தாற் பெருக்குதல்;* to sweep with a broom. '*அலகிடுவனென் றுள்ளங் குளிர அலகிட்டான்' (இறை. 1, உரை).*

அலகுகட்டு–தல் alagu-kaṭṭu, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மந்திரத்தினால் தீய வுயிரிகளின் (பிராணிகளின்) வாய் திறவாதிருக்கச் செய்தல்;* to charm a snake or beast, so as to prevent it from biting or opening its mouth. *2. வாள் வெட்டை மந்திரத்தால் வலியற்ற தாக்குதல் (வின்.);* to render the sword powerless by enchantment. *3. கணக்குத் தீர்த்தல் (வின்.);* to settle accounts.

அலகுகழி–த்தல் alagu-kaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கணக்கிடுவதிற் பலகறை. விதை முதலியவற்றைக் கொண்டு தொகை குறைத்தல் (வின்.);* to subtract, deduct a number in reckoning, with cowries, seeds, etc.

அலகுகிட்டு–தல் alagu-kiṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *இசிவு (சன்னி) நோயிற் பல் பூண்டுகொள்ளுதல்;* jaws being rigidly locked, as in tetanus.

அலகுகுத்து–தல் alagu-kuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *தெய்வத்திற்கு நேர்த்திக்கடனாகவும், தன் தீவினைக்குத் தன் தண்டனையாகவும், நாவொடு இரு கன்னங்களிலும் அல்லது உடம்பின் பலவிடங் களிலும், வெள்ளி யூசிகளாலும் கம்பிகளாலும் ஊடுருவக் குத்திக் கொள்ளுதல்;* to have one's tongue and cheeks pierced with silver pins, or to have small skewers inserted in many parts of the body, in fulfilment of a vow or as an act of self mortification for atonement of one's own sins.

அலங்கு¹–தல் alaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்;* to shake, move, swing, dangle. "அலங்குகளைப் புரவி" *(புறநா. 2 : 13). 2. மனந்தத்தளித்தல் (வின்.);* to be agitated in mind, troubled. *3. இரங்குதல் (பிங்.);* to pity, sympathise.

ம. அலங்ஙு; க., தெ. அலகு; து. அலங்கு.

அலங்கு²–தல் alaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒளி செய்தல் (பிங்.);* to shine, glitter, flash. "மறையருளா லடைந்தலங்கு முத்தியில்" *(சூத. முத். 8 : 84).*

அலசு–தல் alašu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்;* to shake, be agitated. "இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு" *(மணிமே. 9 : 7). 2. உடம்பு அல்லது உளம் வருந்துதல்;* to suffer, to be afflicted. "திருவுடம் பலச நோற்கின் றான்" *(கம்பரா. ஆரணிய. சூர்ப்ப. 18). ம. அலசுக. 3. சோர்தல் (சிலப். 16 : 197, அரும்.);* to be exhausted, to become weary. -, *5 செ. குன்றாவி* (v.t.) *1. அசைத்து அல்லது கசக்கிக் கழுவுதல்;* to rinse, as soaked cloth. *ஊறவைத்த வேட்டியை அலசு (உ.வ.) 2. வெட்கும்படி பலபடப் பேசுதல், ஒருவர் கூற்றைத் திறம்பட மறுத்தல்;* to scold, snub, to rufute forcibly. *அவனை நன்றாய் அலசி விட்டான் (உ.வ.). 3. ஆராய்தல்;* to analyse, examine minutely. *அக் குற்றச்சாட்டை நன்றாய் அலசிப் பார்த்தபோது, அது கட்டுச் செய்தியென்று தெரிந்தது.*

க.,தெ. து. அலசு.

அலட்டு¹–தல் alaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வீண் பேச்சுப் பேசுதல்;* to talk vainly or incessantly. *2. பிதற்றுதல்;* to talk foolishly or incoherently. -, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அரட்டுதல்;* to bully, bluster. *2. தொல்லைப்படுத்துதல்;* to tease, annoy, pester.

ம. அலட்டுக; **Skt.** lapita.

அலட்டு²–தல் alaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. (நோயாளி) ஓயாது உடம்பை அசைத்துத்தன்னை வருத்திக்கொள்ளுதல்;* to trouble oneself by constantly changing posture, esp. as a sick person in bed. *உடம்பை வீணாய் அலட்டிக் கொள்ளாதே. 2. அலைக்கழித்தல்;* to trouble and cause restlessness in another person.

ம. அலட்டல்; தெ. அலன்சுட.

அலப்பாட்டு–தல்alappāṭṭu-,*5செ.கு.வி.*(v.i.) *மனஞ்சுழலுதல், மயங்குதல்;* to become confused. "பேதைக ளுரைப்பன வேசொல்லிப் பெரிதலப் பாட்டினைநீ" *(நீலகேசி, 448).*

அலப்பாரி–த்தல் alappāri-, *4 செ.கு.வி.* (v.i.) *வீண்பேச்சுப் பேசி ஆரவாரித்தல் (இ.வ.);* to shout empty words (Loc.).

அலப்பு–தல் alappu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வீண்பேச்சுப் பேசுதல்;* to chatter, prattle, gossip talk in vain. *2. பிதற்றுதல்;* to talk nonsense, to talk incoherently. "அலப்பிய தக்கன் பெருவேள்வி" *(தேவா. 5. 73 : 1). 5 செ.குன்றாவி. அலைத்தல், வருத்துதல்;* to harass, vex, annoy, afflict. "அமர்க்கண் மகளி ரலப்பிய வந்நோய்" *(கலித். 75 : 7).*

ம. அலப்பு

அலம்பு¹–தல் alambu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒலித்தல்;* to sound, tinkle, murmer, as a brook. *2. ஆரவாரித்தல்;* to make loud noise. "மாட லம்பின மாமணித் தேர்மணி பாட லம்பின பாய்மத யானையே" *(கம்பரா. யுத்த. முதற்போர். 17). 3. அலைதல்;* to wander, fluctuate. "வண்டலம்புஞ் சோலை" *(திவ். திருவாய். 2. 8 : 11). 4. ததும்புதல் (வின்.);* to move, dance or wabble, as water in a vessel which is not full. *5. தவறுதல் (வின்.);* to swerve from a proper line of conduct. *5 செ.குன்றாவி* (v.t.)² *1. அலைத்தல்;* to cause to wander on account of panic. "அலம்பா வெருட்டாக் கொன்று திரியு மரக் கரை" *(திவ். பெரியாழ். 4. 2 : 1). 2. கழுவுதல்;* to wash, rinse. *'வடிம்பலம்ப நின்றான்' (புறநா. 9, உரை).*

ம. அலம்பு; க. அலும்பு, அலம்பு; தெ. அலமு; து. அலம்புனி.

அலம்பு²–தல் alambu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கலத்தல் (தக்கயாகப். 93, உரை);* to mix.

அலம்வா(வரு)–தல் alam-vā-, *18 செ.கு.வி.* (v.i.) *1. சுழலுதல்;* to whirl, spin around. *2. மனஞ்சுழலுதல்;* to be perturbed in mind, agitated. "வெறியோ டலம்வரும் யாய்" *(ஐந்திணை ஐம். 20).*

அலமரு–தல் alamaru-, *18 செ.கு.வி.* (v.i.) *1. சுழலுதல்;* to whirl, spin around. "விளரி வண் டினங்க ளலமருங் கழனி" *(நைடத. அன்னத்தைத்தூ. 10). 2. மனஞ் சுழலுதல், கலங்குதல்;* to be confused, agitated, confounded, nonplussed, perturbed in mind. *'அலமர லாயம்' (தொல். சொல். உரி. 13, நச். உரை). 3. அசைதல்;* to shake, tremble. "ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" *(மலைபடு. 119). 4. அஞ்சுதல் (திவா.);* to be afraid. "ஐமே லுந்தி யலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வான்" *(தேவா. 1. 130 : 1). 5. வருந்துதல், துன்புறுதல்;* to be vexed, distressed. "கொம்பரில் லாக்கொடி போலல மந்தனன்" *(திருவாச. 6 : 20). 6. இளைத்தல் (க.அக.);* to grow weary, to be fatigued, to get exhausted. "ஓடி யலமந்து" *(யோயிற்பு. இரணி. 28).*

க. அலெமாடு; தெ. அலமடிஞ்சுட.

[அலம்வருதல் → அலமருதல்.]

அலமல–த்தல் alam-ala-, *3 செ.கு.வி.* (v.i.) *1. அங்கலாய்த்தல்;* to lament, grieve, sorrow. *2. மனங்கலங்குதல்;* to be confounded, nonplussed. *3. பரபரப்படைதல்;* to be eager, anxious, restless.

அலமலத்து–தல் alamalattu-, *2 பி.வி.* (v.caus.) *கலக்க முறச் செய்தல், மயக்குதல்;* to confuse, confound. "ஆளைப் பகட்டி யலமலத்தி" *(பஞ்ச. திருமுக. 1366).*

அலர்–தல் alar-, *2 செ.கு.வி.* (v.i.) *1. மலர்தல், பூ விரிதல்;* to blossom, open up, as a flowerbud. "தாமரை யலர்ந்த பூந்தடம்" *(நல். பாரத. நகர. 24). 2. பரத்தல்;* to spread, to expand, to be diffused, as the rays of the Sun, as water. "அலர்தலை மாநிலம்" *(நைடத. சிறப்பு. 1). 3. பருத்தல், பெருத்தல்;* to increase in size, become large. "அலர்முலையாகத்து" *(கலித். 14 : 5). 4. விளங்குதல், விளங்கித் தோன்றுதல்;* to shine forth, manifest oneself. "ஆழியங் கிழவனா யலரும்" *(சூளா. குமார. 43). 5. சுரத்தல்;* to form, collect, as milk in the breast. "அலர்முலைச் செவிலியம் பெண்டிர்த் தழீஇ" *(பெரும்பாண். 250).*

ம.,க.,து. அலர்; தெ. அலரு.

அ ல ர் த் து – த ல் alarttu-,*2 பி . வி . (v . caus .)1 . ம ல ர ச் செய்தல்;* to cause to blossom. "*பதிரி யலர்த்திடு வதுபோல்*" *(சி.சி. சுபக்.11 : 8). 2. விரித்தல்;* to open, expand, unfold. "*கரகம லப்போ தலர்த்தித் தாங்கினான்*" *(திரு விளை. வெள்ளையா. 3).*

அலவு–தல் alavu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வருந்துதல்;* to be troubled in mind. "*அன்பனைக் காணா தலவுமென் னெஞ்சன்றே*" *(சிலப். 18 : 17). 2. சிந்துதல்;* to spill. "*அலவு நுண்டுளி யருவிநீர்*" *(கம்பரா. அயோத். சித்திர. 25.).*

க., தெ. அலவு.

அலற்று–தல் alaṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *இடை விடாமலும் முறையின்றியும் பேசுதல்;* to talk unceasingly and with impropriety. *(திவ். திருவாய். 1. 3 : 10) (செ.அக.).*

அலறு[1]–தல் alaṟu, *5 செ.கு.வி.* (v.i.) *1. அச்சத்தால் திடுமென்று கதறுதல்;* to cry aloud due to sudden fright. *2. உரத்தழுதல்;* to weep aloud, cry from sorrow. "*பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியும்*" *(திருவாச. 2 : 134). 3.மிக்கொலித்தல்;* to vociferate, roar. "*அலறுஞ் சிறுவெண் சங்கும்*" *(சீவக. 2195). 4. ஆடுமாடு ஆந்தை முதலியன கதறுதல்;* to bellow, bleat, hoot.

ம. அலறு

அலறு[2]–தல் alaṟu, *5 செ.கு.வி.* (v.i.) *விரிதல்;* to spread out, branch. "*அலறுதலை யோமை*" *(ஐங்குறு. 321).*

ம. அலருக; க. அலர்; தெ. அலரு; து. அலருனி.

அலாரி–த்தல் alāri-, *4 செ.கு.வி.*(v.i.) *நடனத் தொடக்கப் பாட்டைப் பாடுதல்;* to sing the opening song in a dance programme.

அலு–த்தல் alu, *4 செ.கு.வி.*(v.i.) *களைத்தல், சோர்தல்;* to be tired, weary, fatigued by over work or long journey.

க. அல; தெ. அலயு.

அலுக்கு–தல் alukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. சிறிது அசைத்தல்;* to shake slightly. *நான் கையெழுத்துப் போடும்போது என் தூவலை (pen) அலுக்கிவிட்டான் (உ.வ.). 2. பாடும் போது குரலை இனிமையாக வுருட்டுதல்;* to sing with graceful nuances in melody. *தியாகராச பாடகர் நன்றாய் அலுக்கிப் பாடுவார் (உ.வ.). 3. பிலுக்குப் பண்ணுதல் (வின்.);* to strut, swagger.

அலுக்குலை–தல் alu-k-kulai–, *2 செ.கு.வி.* (v.i.) *சீர்கெடுதல் (வின்.);* to become disorganised, to get out of order.

ம. அலுக்குலுக்கு

அலுங்கு–தல் aluṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *சிறிது அசைதல்;* to shake slightly or gently. *காற்றில்லாமல் ஈ யாடவில்லை; இலையலுங்க வில்லை (உ.வ.).*

ம. அலுங்ஙுக; க. அலகு, அலுங்கு; தெ. அலகு; து. அலங்குனி.

அலை[1]–தல் alai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்;* to wave, shake, play in the wind, move, as a reflection in water. "*அலைந்தன நாகம்*" *(கந்தபு. யுத்த. முதனாட். 50). 2. தள்ளாடுதல் (வின்.);* to stagger, totter. *3. திரிதல்;* to roam, wander, go here and there in search of an object. "*புசிப்புக் கலைந்திடல்*" *(தாயு. சித்தல். 5). 4. வருந்துதல் (வின்.);* to be harassed, to wander in weariness.

ம. அல, அலயுக; க., து., பட. அலெ; தெ. அல; கோத. அல்த்; துட. அல்க்.

அலை[2]–த்தல் alai-, *4 செ.கு.வி.* (v.i.) *அலை மோதுதல்;* to dash, as waves. "*அலைக்கு மாழி*" *(கம்பரா. ஆரணிய. சூர்ப்ப. 75). - 4 செ.குன்றாவி.* (v.t.) *1. அசைத்தல்;* to shake, move. "*காலலைத் தலைய வீழ்ந்து*" *(திருவிளை. பழியஞ். 8). 2. அலையச் செய்தல்;* to cause to wander back and forth, drive hither and thither. *3. அடித்தல்;* to beat, slap. "*ஊதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்*" *(கலித்.128 : 19). 4. அடித்துப் பறித்தல்;* to rob on the highway. "*வன்கண்ண ராட்டிவிட் டாறலைக்கு மத்தம்*" *(ஐந்திணை ஐம். 34). 5. வருத்துதல்;* to harass, vex, annoy, afflict. "*பெருமுலை யலைக்குங் காதின்*" *(திருமுரு. 50). 6. நிலைகெடுத்தல்;* to disorganize, reduce to poverty. "*ஆனிரை முழுவது மலைத்து*" *(கந்தபு. ஆற்று. 16). 7. உருட்டுதல்;* to roll down. "*தேறல் கல்லலைத் தொழுகு மன்னே*" *(புறநா. 115 3-4).*

ம. அலய்க்குக

அலைக்கழி[1]–தல் alaikkaḻi-, *3 செ.கு.வி.* (v.i.) *அலைந்து வருந்துதல்;* to suffer wandering here and there in search of work, be vexed by repeated disappointments. "*ஐம்பூதத் தாலே யலைக்கழிந்த தோடமற*" *(தாயு. எந்நாட். தத். 1).*

[*அலைக்க + அழிதல் (நோதல், வருந்துதல்).*]

அலைக்கழி[2]–த்தல் alaikkaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அலைத்து வருத்துதல்;* to put one to continued trouble, to make one tramp up and down for nothing.

[*அலைக்கழிதல் (த.வி.)* → *அலைக்கழித்தல் (பி.வி.).*]

அலைகொள்(ளு)–தல் alaikoḷ(ḷu)-, *16 செ. கு.வி.* (v.i.) *கலக்கமுறுதல், துன்புறுதல்;* to be agitated, harassed. "*காமன் கணைகொண் டலை கொள்ளவோ*" *(திருக்கோ. 90).*

[*அலை* → *அலைவு.*]

அலைசு–தல் alaiš̆u-, *5 செ.கு.வி.* (v.i.) *சோம்பு தல் (பிங்.);* to be lazy. -, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஆடையைக் கசக்கிக் கழுவுதல்;* to wash clothes, rinse. *2. குலுக்குதல்;* to shake. *தண்ணீர்விட்டு அலைசிக் குடி. 3. பேச்சில் வெல்லுதல், நாவெழாதவாறு கலக்கடித்தல்;* to discomfit one in debate, to confound by powerful arguments. *அவனைப் பேச்சில் அலைசிவிட்டான்.*

க. அலசு; து. அலசுனி.

அலையெறி–தல் alai-y-eṟi-, *2 செ.கு.வி.* (v.i.) நெடுந் தொலைவு பரவுதல்; to spread abroad. *'கிருட்டிணனுடைய இங்குத்தை நீர்மை பரம பதத்திலுஞ் சென்று அலையெறியும்படி' (திவ். திருப்பா. 1, வியா.).*

அவ்வி–த்தல் avvi-, *4 செ.கு.வி.* (v.i.) பொறுமை நீங்குதல்; to become intolerant, impatient. "அவ்வித் தழுக்கா றுடையானை" *(குறள், 167).*

அவப்படு–தல்ava-p-paḍu, *20 செ.கு.வி.* (v.i.) பயனற்றதாதல்; to become useless. "அருந்தவ மவப்படா தருளி" *(உபதேசகா. சூராதி.129).*

[அவம் (கேடு, வீண்) + படு. படுதல் = பொருந்துதல், நேர்தல்.]

அவமதி–த்தல் ava-madi, *4 செ.குன்றாவி.* (v.t.) இகழ்தல், மதிப்புக்குறைவாக நடத்துதல்; to insult, to disgrace, to treat with disrespect or contempt. "பரனைக் குருவை யவமதித்தோர்" *(தணிகைப்பு.அகத்.336).*

அவமாக்கு–தல் avam-ākku-, *5 செ. குன்றாவி.* (v.t.) வீணாக்குதல்; to waste, make useless.

[அவம் + ஆக்கு. ஆகு *(த.வி.)* → ஆக்கு *(பி.வி.)*]

அவமானி–த்தல் ava-māṉi-, *4 செ.குன்றாவி.* (v.t.) அவமதித்தல், அவமானப்படுத்துதல், மதிப்புக் குறைவாக நடத்துதல்; to despise, dsgrace, treat with contempt. "அவையினி லவமானித்த பாதகன்" *(நல். பாரத. சொர்க்க. தெரி. 31).*

ம. அவமானிக்குக; க. அவமானிசு; தெ. அவமானிஞ்சு; து. அபமானமுள்புனி.

அவலி–த்தல் avali-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* வருந்துதல்; to suffer, to be distressed in mind. "அருவரை மார்ப னவலித் திருந்தான்" *(சீவக. 515). 2.* அழுதல்; to weep, lament. "அவலித் தணங்கு நையாவகை தேறற்கு" *(தணிகைப்பு. களவு. 532). 3.* பதறுதல்; to be flurried. "அவலித் திழிதலின்" *(சிலப். 23 : 186).*

அவாவாறு–த்தல் avā-v-aṟu-, *4 செ.கு.வி.* (v.i.) ஆசையொழித்தல் *(குறள், 37 ஆம் அதி.);* to extirpate desire.

அவாவு–தல் avāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* விரும்புதல்; to desire, wish for. "உலக வாம் பேரறி வாளன்" *(குறள், 215). 2.* பற்றுச்செய்தல்; to long for intensely, crave for, covet. *3. (இலக்.)* சொற்றொடரில் ஒரு சொல் தன்னொடு பொருந்திப் பொருள் முடித்தற்கு மற்றொரு சொல்லை வேண்டுதல்; (Gram.) to want a word to complete the sense of a sentence.

அவி[1]–தல் avi-, பெ. (n.) *1.* வேதல், சமைதல்; to be boiled, cooked by boiling or steaming. *2.* வெப்பத்தாற் புழுங்குதல், வேர்த்தல்; to swelter, perspire. *3.* காய்கனி முதலியன சூட்டால் வெந்துபோதல்; to become softened and decayed, as fruit, vegetable matter, from heat. *4.* உரக் குப்பைகள் வெந்து ஆவிவிடுதல்; to ferment, as manure heaps. *5.* அறுவை மருத்துவத்திற் கெட்டநீர் வெளியேறும்படி புண் செய்யப்படல்; to be inflamed by cauterisation to get rid of bad accumulation of fluid, in surgery *(சா.அக.). 6.* கண்கெடுதல்; to be blinded, as the eye, by disease. உனக்கென்ன கண் அவிந்தா போயிற்று? *7.* அழிதல்; to perish, cease to exist. அவன் குடும்பம் அவிந்து போயிற்று. *8.* சாதல்; to die. "அவியினும் வாழினு மென்" *(குறள், 420). 9.* தீ அல்லது விளக்கு அணைந்து போதல்; to become extinguished, as fire or light. "காலவியாப் பொன்விளக்கு" *(சீவக. 1045). 10.* ஓய்தல்; to cease, desist from action. "கோலவியா வெஞ்சிலையான்" *(சீவக. 1045). 11.* ஒடுங்குதல்; to become subdued, repressed, to be kept under control. *12.* பணிதல்; to bow, stoop, be humble, obey. "ஆன்றவிந் தடங்கிய கொள்கை" *(புறநா. 191 : 6). 13.* குறைதல்; to diminish. "வெஞ்சுடரி னாண்டகை யவிந்தான்" *(சீவக. 289).*

ம. அவியுக; க. அவி; **Mar.** avikaṇēm (to over ripen and spoil - a fruit).

அவி[2]–த்தல் avi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* வேகவைத்தல்; to boil in a liquid, cook by boiling or steaming. "அறுத்தவித் தாரச் சமைத்த பிள்ளைக் குகந்தார்" *(மறைசை. 20). 2.* கெட்ட நீரை வெளியேற்ற வெப்பூட்டல்; to apply heat to eliminate the accumulation of bad fluids from the system *(சா.அக.).3.* அடக்குதல்; to subdue, suppress, repress. "ஐந்தவித்தான்" *(குறள், 25). 4.* அணைத்தல்; to extinguish, put out. விளக்கை அவித்து விட்டான். *5.* கெடுத்தல், அழித்தல்; to destroy. "ஒருமூன் றவித்தோன்" *(சிலப். 10 : 194). 6.* துடைத்தல்; to wipe of, dust, brush. "சிலம்பிற் போர்த்த பூந்துக ளவித்து" *(சீவக. 2064). 7.* நீக்குதல்; to remove, avoid. "செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித் தொழுகல்" *(குறள், 694).*

ம. அவிக்குக, அவிச்சல்.

அவிர்[1]–தல் avir-, *2 செ.கு.வி.* (v.i.) விளங்குதல், ஒளிர்தல்; to glitter, shine, glisten. "அவிர்மதிக்குப் போல" *(குறள், 1117).*

[அவிர்தல் = வேதல், எரிதல், ஒளிர்தல்.]

அவிர்[2]–தல் avir-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* கிழிதல் *(பொதி.நி.);* to be torn, to be rent asunder.*2.* பீறுதல்; to be lacerated *(சா.அக.).*

அவிழ்[1]–தல் aviḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* நெகிழ்தல்; to becme loose, united. "ஆப்பவிழ்ந்தும்" *(திவ்.இயற். திருவிருத்.95.). வேட்டி அவிழ்ந்துவிட்டது. 2.* மலர்தல்; to expand, open. "கருநனைக் காயாக் கணமயி லவிழவும்" *(சிறுபாண். 165). 3.* உதிர்தல்; to drop off, as leaves; to fall out, as hair. "அவிழ்பன்ன மூணாய்" *(ஞானவா.*

சுரகு. 35). 4. சொட்டுதல்; to drip. "மட்டவி ழலங்கல் மறவோனுடன்" (பாரத. மணி. 38). 5. இளகுதல்; to melt, soften. "சிந்தை யவிழ்ந்தவிழ்ந்து" (தாயு. பராபர. 75).

அவிழ்²–த்தல் aviḻ-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டு நீக்குதல்; to loosen, untie, unbind, unpack. பொட்டணத்தை அவிழ்த்தான். 'அம்பலத்திற் கட்டுச்சோறு அவிழ்க்க லாகாது' (பழ). 2. மலரச்செய்தல்; to cause to open. "புல்லிதழ்த் தாமரை புதுமுகை யவிழ்ப்ப" (கல்லா. 53 : 6). 3. விடுகதைப் பொருளை விடுத்தல்; to solve, as a riddle.

அவிழ்த்துக்கொடு–த்தல் aviḻttu-k-koḍu, 4 செ.குன்றாவி. (v.t.) சொந்தப் பொருளிலிருந்து எடுத்துக் கொடுத்தல்; to pay from one's own pocket.

அவை¹–த்தல் avai-, 4 செ.குன்றாவி. (v.t.) அவித்தல் (பிங்.); to cook, boil.

அவை²–த்தல் avai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நெல் அரிசி முதலியவற்றைக் குற்றுதல்; to pound, thump, in a mortar. "அவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு" (சிறுபாண். 194). 2. கையாற் குத்துதல்; to cuff, prod. "ஆவி யயர்ந்துன தங்கை யவைத்தலின்" (சேதுபு. தேவிபுர. 61). 3. நெரித்தல்; to squeeze, press down, crush. "இறைவிரலா லவைத்துகந்த வீசா" (தேவா. 6. 55 : 11).

ம. அவய்க்குக; க. அவல்; து. அபெபுனி.

அழங்காட்டு–தல் aḻagaṅ-kāṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) அழகுகாட்டி நகையாடுதல் (நெல்லை); to mimic and make fun of (Tn.).

அழகுகாட்டு–தல் aḻagu-kāṭṭu-, 5 செ. குன்றாவி. (v.t.) உடம்பின் அல்லது உறுப்பின் சைகைகளால் நகையாடுதல் (பரிகசித்தல்) அல்லது பழித்தல்; to mimic, make faces at, for sport or ridicule.

[அழகு + காட்டு. காண் (த.வி.) → காட்டு (பி.வி.).]

அழல்–தல் aḻa-, 13 செ.கு.வி. (v.i.) 1. எரிதல்; to burn, to glow. "விளக்கழ லுருவின்" (பொருந. 5). 2. திகழ்தல் (பிரகாசித்தல்); to shine. "மணிவிளக் கழலும் பாயலுள்" (கம்பரா. பால. கடிமண. 67). 3. 'காந்துதல்' (புறநா. 25 : 10, உரை); to burn. 4. உறைப்பாதல்; to be acrid, pungent. 5. வெகுள்தல்; to get into a rage. "அதிவேகமொ டழலா" (பாரத. மணிமா. 19).

ம. அழலுக (நோதல், துயருறுதல்); க. அழல், அடலு; தெ. அடலு (வருந்துதல்); து. அரதெ, அர்ல, அர்லுனி.

அழல்விழி–த்தல் aḻal-viḻi-, 4 செ.கு.வி. (v.i.) சினத்தொடு பார்த்தல், வெகுளியாற் கண் சிவந்து நோக்குதல், தீப் புறப்பட விழித்தல்; to flash fire from the eyes in anger. "அங்க ணேவ வழல்விழித்து" (திருவாலவா. 14 : 5).

[அழல் + விழி. சினம் நெருப்பின் தன்மையது. அதனால், அழலுதல், கனலுதல், வெகுளுதல் முதலிய வினைச்சொற்கள் பிறந்தன. இனி, ஒரோவொரு சமையத்தில் வெகுளி வேகத்தாற் கண்களினின்று தீப்பொறி பறப்பது முண்டு.]

அழலூட்டு–தல் aḻal-ūṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) தீயுண்ணச் செய்தல், தீ வைத்துக் கொளுத்துதல்; to set on fire, burn. "அரியன முப்புரங்கள் அவை ஆரழ லூட்ட லென்னே" (தேவா. 7. 99 : 8.).

[அழல் + ஊட்டு. உண் (த.வி.) → ஊட்டு (பி.வி.). ஊண் + து - ஊட்டு. 'து' பி.வி. ஈறு.]

அழலோம்பு–தல் aḻal-ōmbu-, 5 செ.கு.வி. (v.i.) 1. தீ வளர்த்தல்; to tender the sacred fire. 2. தீயிற் படைத்தல் (அக்கினி காரியஞ் செய்தல்) (சைவச. பொது. 325); to offer oblations in fire.

அழவணங்காட்டு–தல் aḻa-vaṇaṅ-kāṭṭu-, 5 செ. குன்றாவி. (v.t.) முகத்தைச் சுழித்து ஒருவர் முகவமைப்பைப் பழித்துக் காட்டுதல்; to mock by mimicking or by making faces at. அவனை அழவணங் காட்டுகிறான்.

அழற்குத்து–தல் aḻar-kuttu-, 5. செ.கு.வி. (v.i.) 1. மணம் உறைத்தல் (இ.வ.); to have a strong smell (Loc.) (செ.அக.). 2. கொடிய நாற்றம் வீசுதல்; to emit a strong offensive smell like the smell of puturefaction, to stink (சா.அக.).

அழற்று–தல் aḻaṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வெம்மைசெய்தல்; to burn, scorch, heat, cauterise; cause smarting as a burn, or a caustic, or a poison; to inflame, irritate. "அழற்றிய பல்கதிர்" (கந்தபு. தேவ. திருப்பரங். 6). (செ.அக.) (சா.அக.). 2. சுடல்; to burn, to make sore. 3. வெம்மையுறல்; to cauterise or to cause smarting pain by the use of a cane. 4. (கடுங்காய்ச்சலால்) துன்புறல் (வாதனைப்படல்) அல்லது அலற்றுதல்; to be in anguish as in virulent fever.

அழி¹–தல் aḻi-, 2 செ.கு.வி. (v.i.) 1. நாசமாதல்; to perish, to be ruined or destroyed. 2. சிதைதல், கெடுதல்; to decay, to be mutilated. to collapse. "ஆரவண்ட லழியும்" (நைடத. கைக்கி. 10). 3. செலவாதல்; to be spent, used up, sold out, exhausted. என்னிடமிருந்த சரக்கெல்லாம் அழிந்து விட்டது. 4. தவறுதல்; to fail, to be frustrated. "நீ யுரைத்த தொன்று மழிந்திலது" (கம்பரா. யுத்த. சீதைகளங்க. 30). 5. நிலைகெடுதல்; to lose one's standing, to be reduced to lower state, to become bankrupt. அழிந்தகுடி. 6. தோற்றல்; to be defeated. "வாதி லழிந்தெழுந்த" (தேவா. 3. 297 : 3) . 7. காதலால் உருகுதல்; to melt with love. 8. பரிவுகூர்தல்; to sympathise with. "புணர்ந்த நெஞ்சமொ டழிந் தெதிர் கூறி விடுப்பினும்" (தொல். பொருள். அகத். 40). 9. வருந்துதல்; to suffer, to be troubled. "சூணயத்திறத்தாற் சோர்வுகண் டழியினும்" (தொல்.பொருள். கற்பு. 9). 10. மனந்தளர்தல், மனமுடைதல்; to be disheartened. "இதற்குஉள் ளழியேல்" (கம்பரா. அயோத். நகர்நீங்கு. 17). 11. கரையுடைந்து நீர்பெருகுதல்; to swell, increase, as flood water. "அழியும் புன லஞ்சன மாநதியே"(சீவக.

1193). 12. காய்ப்பு ஓய்ந்தபின் தோட்டத்திலுள்ள செடிகள் அல்லது தோப்பிலுள்ள மரங்கள் நீக்கப்படுதல்; to be cleared, as a garden or tope after the plants or trees have ceased to bear fruit. "*எங்கள் மிளகாய்த் தோட்டம் நேற்றே அழிந்துவிட்டது.*" *13. குளம் (ஏரி) வற்றி மீன்பிடிக்கப்படுதல்;* to have the water in a tank become considerably reduced to allow easy and effective fishing. "*நாளைக்குப் பனையூர்க் குளம் அழியப் போகிறது.*" *14. எழுத்து அல்லது வரைவு கலைக்கப்படுதல்;* to be erased, as a writing or a drawing. "*கடிதம் மழையில் நனைந்து எழுத்தெல்லாம் அழிந்துவிட்டது.*" *15. சொல் அல்லது மொழி வழக்கறுதல்;* to become obsolete as a word. "*ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையாவுன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே*" *(மானோன். த.வா.).*

ம.,க. அழி; தெ. அடி., அடுவ; து. அளி புனி; கோத. அள்ச்.

அழி²–த்தல் aḻi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. நாசஞ் செய்தல்;* to destroy, exterminate. "*உலகழித்து நிற்கும் ஒருபெருங் கடவுள்*" *(கந்தபு. மகேந். நகரழி. 6). 2. கெடுத்தல்;* to ruin, damage. *3. பழித்தல்;* to vilify, abuse, slander. '*அழித்துச் சொன்னவாறு*' *(தக்கயாகப். 494, உரை). 4. கலைத்தல்;* to efface, obliterate. "*கேல மழித்தி யாகிலும்*" *(திவ். நாயச். 2 : 5). 5. நீக்குதல்;* to leave off, bring to a close. "*அசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை*" *(கலித். 131 : 34). 6. குலைத்தல்;* to disarrange. "*ஈடுசால் போரழித்து*" *(சீவக. 59). 7. மறப்பித்தல்;* to cause to forget. "*பொய்த லழித்துப் போனா ரொருவர்*" *(சிலப். 7 : 43). 8. உள்ளதை மாற்றுதல்;* to change the form or mode of. '*உடையினைப் பலகாலு மழித்துடுத்தல்*' *(தொல். பொருள். மெய்ப். 14, பேரா. உரை). 9. செலவழித்தல்;* to spend. "*தேடா தழிக்கிற் பாடாய் முடியும்*" *(கொ. வே. 44). 10. விடுகதை விடுவித்தல், அழிப்பாங்கதை;* to solve a riddle. *இந்த விடுகதையை அழி. 11. தடவுதல்;* to smear. "*சுண்ண மழித்திலை தின்று*" *(உபதேச. சிவ புண்ணிய. 225). 12. தோட்டத்திலுள்ள செடிகளை அல்லது தோப்பிலுள்ள மரங்களை நீக்கி விடுதல்;* to clear a garden or tope of trees. "*செட்டியார் மாந்தோப்பை அழித்து வீடு கட்டிக்கொண்டார்.*" *13. சூடு (சாணை) பிரித்தல், களத்திற் கடாவிடுதற்கு (பிணைய லடித்தற்கு) முன் அரிக்கட்டுக் குவியலை அல்லது கதிர்க் குவியலைப் பிரித்துப் பரப்புதல்;* to untie the bundles of reaped grain stalks and spread them out on the threshing floor preparatory to treading out the grain. *சூடழித்தலைச் 'சூடு சுள்ளாப்பித்தல்' என்பது யாழ்ப்பாண வழக்கு.*

க. அழி

[*அழிதல் (த.வி.)* → *அழித்தல் (பி.வி.).*]

அழிசெய்–தல் aḻi-šey-, *1.* செ.குன்றாவி. (v.t.) *1. கெடுத்தல்;* to spoil, ruin, destroy. *2. கற்பழித்தல்;* to deflower the virginity of a women. "*கன்னியை யழிசெயக் கருதினோன்*" *(கம்பரா. அயோத். பள்ளி. 110.).*

அழித்தியங்காட்டு–தல் aḻitiyaṅ-kāṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) *முகத்தை அருவருப்பாகத் திரித்துக் காட்டி ஒருவரைப் பழித்தல் (நெல்லை);* to make faces at someone (Tn.). "*என்னைப் பார்க்கும்போதெல்லாம் அழித்தியங் காட்டுகிறான்*" *(உ.வ.).*

அழிப்படுத்து–தல் aḻi-p-paḍuttu-, *2* பி.வி. (v.caus.) *தவசக் கதிரைக் கடாவிட்டுழக்குதல்;* to thresh the grain with cattle. "*ஆளழிப் படுத்த வாளே ருழவ*" *(புறநா. 368 : 13).*

அழிபடு–தல் aḻi-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1. சிதைதல், மறைதல்;* to be erased. *2. செலவாதல்;* to be spent.

அழியமாறு–தல் aḻiya-māṟu-, *5* செ.கு.வி., செ.குன்றாவி. (v.i & v.t.) *1. நோயாற் பீடிக்கப் பட்டு அடையாளந் தெரியாதபடி உருவம் மாறுதல் (சா.அக.);* to be reduced and wasted by disease so as to render identification difficult. *2. அடையாளந் தெரியாதவாறு தன் நிலையை மாற்றி வேறாதல்;* to so change as to obliterate one's identification. '*தன்னை யழிய மாறியும் உதவினவனுடைய*' *(ஈடு, 4. 2 : 6).*

அழு–தல் aḻu-,*1* செ.கு.வி. (v.i.) *1. கண்ணீர் விட்டுக் கதறி வருந்துதல்;* to weep aloud shedding tears. "*அல்லற்பட் டாற்றா தழுத கண்ணீர்*" *(குறள், 555). 2. வருந்திக் கண்ணீர் விடுதல்;* to shed tears and weep silently. *3. புலம்பிக் கதறுதல்;* to cry aloud without shedding tears, to lament. *4. சிணுங்குதல்;* to whine, whimper. *5. ஒன்றை அவாவி வருந்துதல்;* to crave. '*குடல் கூழுக்கழக் கொண்டை பூவுக் கழுகிறதா?*' *(பழ.). 6. வீணுக்குச் செலவழித்தல்;* to waste, spend in vain. *உனக்கு ஆயிரம் உருபா அழுதேனே!* **-, *1*** செ. குன்றாவி. (v.t.) *அழுதுமறத்தல் (உ.வ.);* to cease thinking of or sever connexion from, after weeping over someone or something (lit. and fig.). "*அவனை அன்றைக்கே அழுது விட்டேன்*".

ம., க. அழு; தெ. அடலு, ஏடுசு; து. அர்ப்பினி; கொ., நா. அர்; பர். அள்; பட. அவ்வு.

அழுக்கடி–த்தல் aḻukk(u)-aḍi-, *4* செ. குன்றாவி. (v.t.) *அழுக்குப் போக்குதல்;* to wash. "*அழுக்கடிக்கும் வண்ணார் போலாய்*" *(தாயு. உடல். 65).*

அழுக்கடை–தல் aḻukk(u)-aḍai-, *2* செ.கு.வி. (v.i.) *அழுக்காதல், துப்புரவுகெடுதல்;* to become unclean, dirty.

அழுக்கறு–தல் aḻukkaṟu-, *20* செ.கு.வி. (v.i.) பொறாமை கொள்ளுதல்; to be envious. "*அழுக்கற் றகன்றாரு மில்லை*" *(குறள், 170).*

அழுக்குத்தேய்–த்தல் aḻukku-t-tēy-, *4* செ.கு. வி. (v.i.) *அழுக்கைக் கையினாலாவது கருவியினாலாவது உரசிப் போக்குதல்;* to rub off dirt, either with the hand or with an implement.

அழுக்குப்படி–தல் aḻukku-p-paḍi-, *2 செ.கு. வி.* (v.i.) *தூசி, புழுதி முதலிய மாசு ஒன்றன்மேல் விழுந்து தங்குதல்;* to settle, as dust or mould, on anything.

அழுக்குப்போடு–தல் aḻukku-p-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.)*அழுக்குத் துணிகளைச் சலவை செய்ய வண்ணானிடம் கொடுத்தல்;* to put dirty clothes for wash.

அழுக்குருட்டு–தல் aḻukk(u)-uruṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *உடம்பிலுள்ள அழுக்கைத் தேய்த்து உருட்டுதல் அல்லது உருளுமாறு தேய்த்தல்;* to rub and scrape off the dirt from the body while bathing or even while not bathing.

அழுக்குவிழு–தல் aḻukku-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *1. பிள்ளை பெற்றவுடன் கருப்பையினின்று மாசு வெளிப்படுதல் (சா.அக.);* the discharge from the uterus immediately after child-birth. *2. நஞ்சுவிழுதல்;* casting off of the placenta after child - birth.

அழுக்கெடு–த்தல் aḻukk(u)-eḍu-, *4 செ.கு. வி.* (v.i.) *1. அழுக்குத் துணிகளைச் சலவை செய்ய வண்ணான் எடுத்துக்கொள்ளுதல்;* to take away dirty clothes for wash, as by a washerman. *2. நகையிலுள்ள அழுக்கைப் போக்குதல்;* to clean and polish, as jewels.

அழுகு–தல் aḻugu-, *5 செ.கு.வி.* (v.i.) *பதனழிதல்;* to rot, decompose, putrefy.

ம., க. அழுகு

அழுங்கு–தல் aḻuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வருந்துதல் (பிங்.);* to suffer, to be in distress, in anguish. *2. அஞ்சுதல் (உரி.நி.);* to fear. *3. துயரப்படுதல் (பிங்.);* to grieve, sorrow, regret. *4. அழுதல் (நாநார்த்த.968);* to weep. *5. கெடுதல்;* to be spoiled, injured. "*அழுங்க லிரக்கமுங் கேடுமாகும்" (தொல். சொல். உரி. 52). 6. மாசுறுதல்;* to be tarnished, to suffer damage of reputation. "*குண னழுங்கக் குற்ற முழைநின்று கூறும்" (நாலடி. 353). 7. உருவழிதல்;* to be disfigured. "*பிணனழுங்கக் களனுழக்கி" (புறநா. 98 : 5). 8. சோம்புதல் (திவா.);* to be idle, lazy. *9. தவிர்தல்;* to dispense with. "*அழுங்கின னல்லனோ வயர்ந்ததன் மணனே" (அகநா. 66 : 26).10. ஒலித்தல் (சூடா.);* to sound.

ம. அழுங்கு; க. அழகு.

அழுங்குவி–த்தல் aḻuṅguvi-,*1 பி. வி.* (v.caus.) *1. துன்பமுறுத்துதல்;* to distress. "*அன்புருகு நெஞ்ச மழுங்குவிக்க மாலை" (சீவக. 2051). 2. தவிர்த்தல், நிகழவொட்டாது தடுத்தல்;* to prevent, stop. *'சொல்லுஞ் செயலும் ஒவ்வாமைக் குற்றம் அவர்க்கெய்தும்; அஃதெய்தாவகை அழுங்குவி யென்பது கருத்து' (குறள், 1154, பரிமே. உரை).*

[*அழுங்கு (த.வி.)* → *அழுங்குவி (பி.வி.).*]

அழுத்து–தல் aḻuttu-,*5 செ.குன்றாவி.* (v.t.) *1. அழுந்தச்செய்தல்;* to press down, press hard, impress."*முத்திரை யழுத்து. தலையிற் கையைவைத் தழுத்திவிட்டான்". 2. பதித்தல்;* to encase, inlay. "*மைதீர் பசும்பொன் மேன் மாண்ட மணியழுத்தி" (நாலடி. 347). 3. அமிழ்த்துதல்;* to plunge, immerse, press down. "*குரல்வளையை நெரித்துக் குளத்தில் அமிழ்த்தி விட்டான்." 4. அம்பெய்தல், அம்பெய்து ஒருடம்பிற் பதியச் செய்தல்;* to shoot or implant an arrow into a body. "*பகழி வாங்கிக் கடுவிசை யண்ணல் யானை யணி முகத் தழுத்தலின்" (குறிஞ்சிப். 170 : 1). 5. ஒருவர் பிழைப்பைக் கெடுத்துவிடுதல்;* to ruin one."*நெருக்கடி காலத்தில் அவனை ஒரே அழுத்தாய் அழுத்தி விட்டார்கள்". 6. உறுதியாக்குதல்;* to make firm or compact, confirm. *7. வற்புறுத்துதல்;* to insist on, affirm.

ம. அழுத்துக; க., தெ. அத்து (அமிழ்த்து).

அழுதுதொலை–த்தல் aḻudu-tolai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. அழுது மறந்துவிடுதல்;* to lament over and forget. "*அவனை முன்னமே அழுது தொலைத்து விட்டேன்". 2. வருத்தத்துடன் செலவிடுதல்;* to spend grudgingly. "*அவனுக்கு ஆயிரம் உருபா அழுது தொலைத்தேன்".*

அழுதுவழி–தல் aḻudu-vaḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *பொலிவின்றி யிருத்தல்;* to be dull, dispirited, gloomy.

அழுந்து–தல் aḻundu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அமுங்குதல்;* to become pressed down, to press tight. "*நிலம் அழுந்திவிட்டது". 2. முத்திரை யடிபடுதல்;* to be impressed, imprinted. *3. மனத்திற் பதிதல்;* to be impressed on the mind. *4. அமிழ்தல்;* to sink, to be immersed, drowned."*அழுந்தேனரகத்து" (திருக்கோ. 166). 5. மணி பதிதல்;* to be inlaid, encased. *6. உறுதியாதல்;* to become firm, close, compact. *தளம் அழுந்தியிருக்கிறது. 7. உறுதியாகப் பற்றுதல்;* to persist, become deeprooted. *எலும்பிற் சுரம் அழுந்திவிட்டது. 8. பட்டறிவு பெறுதல்;* to gain experience. *உலகநடப்பில் அழுந்தினவன். 9. வருந்துதல் (நாநார்த்த.);* to suffer.

ம. அழுந்துக

அழுந்துபடு–தல் aḻundu-paḍu-, *20 செ.கு. வி.* (v.i.) *தொன்றுதொட்டு வருதல்;* to be long-standing, to have existed for generations. "*அழுந்துபட்டிருந்த பெரும்பாணிருக்கையும்" (மதுரைக். 342.).*

[*அழுந்து (முத.தொ.பெ.). 'படு' து.வி.*]

அழும்பு–தல் aḻumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *செறியக் கலத்தல்;* to be intimate, in communion. "*அமர வழும்பத் துழாவி யென்னாவி" (திவ். திருவாய். 1. 7 : 9).*

அழுவணங்காட்டு–தல் aḻu-vaṇaṅ-kāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஒரு பிள்ளை அழும்போது இன்னொரு பிள்ளை அதைப்போல் அழுது பழிப்புக் காட்டுதல்;* to mock a weeping child by mimicking it. "*இந்தப் பிள்ளை அந்தப் பிள்ளையை அழுவணங் காட்டுகிறது." (உ.வ.).*

அழை–த்தல் aḻai, *4 செ.கு.வி.* (v.i.) *1.கதறுதல் (பிங்.);* to cry out, utter a loud cry, shout. *2. கூப்பிடுதல்;* to call, invoke, invite.

"ஆதியே யடியே னாதரித் தழைத்தால்" *(திருவாச. 29 : 1). 3. பெயரிட்டுக் கூப்பிடுதல்;* to call by name. "*சிரீதரா வென் றழைத்தக்கால்*" *(திவ். பெரியாழ். 4 . 6 : 2). 4. வரவழைத்தல்;* to summon, direct to appear or to be brought, to send for. "*அரசிய லுரிமைக் கெல்லா மாங்கவ ரழைத்து*" *(கந்தபு. தேவ. விண்குடி. 40).*

அழைப்பி–த்தல் aḻai-p-pi-, *1 பி.வி.* (v.caus.) *தருவித்தல்;* to fetch, to get at, to invite through another, to import, to send for. "*தம் திருமணத்திற்கு அமைச்சரைத் தம் நண்பரைக் கொண்டு அழைப்பித்தார்.*"

[*அழை (த.வி.)* → *அழைப்பி (பி.வி.). 'பி' பி.வி. ஈறு.*]

அழையுறு–த்தல் aḻai-y-uṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *அகவுதல்;* to screech, to utter sound as a peacock. "*அழையுறுத்து மாமயில்க ளாலுஞ் சோலை*" *(தேவா. 6. 47 : 7).*

[*அழை + உறு - அழையுறு (த.வி.)* → *அழை யுறுத்து (பி.வி.). 'உறு' து.வி.*]

அள்ளாடு–தல் aḷḷāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *செறிதல்;* to be close. "*அள்ளாடிய கவசத்தவிர் மணியற்றன*" *(கம்பரா. யுத்த. முதற்போ. 177).*

அள்ளிக்குத்து–தல் aḷḷi-k-kuttu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1.செடி முதலியவற்றின்மேல் நீர் தெளித்தல் (யாழ்ப்.);* to sprinkle water on plants. etc. (J.). *2. கஞ்சியுணவைச் சிறுகக் கொடுத்தல் (யாழ்ப்.);* to give liquid food in small quantities (J.).

அள்ளிக்கொட்டு–தல் aḷḷi-k-koṭṭu-, *5 செ.கு. வி.* (v.i.) *உடம்பு முழுதும் பரவுதல்;* to spread over the whole body, as small-pox."*அம்மையள்ளிக்கொட்டி யிருக்கிறது*". *5 செ.குன்றாவி.* (v.t.)*1. மிகு பொருள் தேடுதல்;* to acquire wealth in unlimited measure. "*அவன் வணிகஞ் செய்து பணத்தை அள்ளிக்கொட்டுகிறான்*".*2.தாராளமாகக் கொடுத்தல்;* to give liberally. "*செண்டத்தூர் ஐயாத் துரை முதலியார் ஏழைகட்குப் பணத்தை அள்ளிக் கொட்டினார்*".

அள்ளிக்கொண்டுபோ–தல் aḷḷi-k-koṇḍu-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. நீர்க்கால் வேகமா யோடுதல்;* to run swiftly, as a water-course. -, (8) *செ. குன்றாவி.* (v.t.) *2. மிகுதியாக வாரிக் கொண்டு போதல்;* to sweep away, as a tornado. "*சூறாவளி அள்ளிக்கொண்டு போகிறது*". *3. நோய் கடுமையாகக் கொள்ளை கொள்ளுதல்;* to cause havoc in a severe epidemic form."*அந்தவூரில் நச்சுக் கழிச்சல் (பேதி) அள்ளிக்கொண்டு போகிறது*".

அள்ளிச்செருகு–தல் aḷḷi-c-cerugu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *சிற்ப இலக்கணப்படி அரசர், அரசியர் கொண்டைக் கூந்தலை மொத்த மாகக் கையால் வாரியெடுத்து நெகிழ்ச்சி யாகச் செருகுதல்;* to gather by the hands the long flowing tresses of hair, of a king or queen, and tie them up in a loose knot. '*தலையிலுள்ள கேசத்தை அள்ளிச்செருகியும்*' *(சி.செ.பக்.74).*

அள்ளித்துள்ளு–தல் aḷḷi-tuḷḷ(u)-, *5 செ.கு.வி.* (v.i.) *மிகச் செருக்குதல்;* to be overbearing, to give oneself airs. '*அள்ளித்துள்ளி அரிவாண் மனையில் விழாதே*' *(பழ.).*

அள்ளிமுடி–த்தல் aḷḷi-muḍi-, *பெ.* (n.) *4 செ. குன்றாவி.* (v.t.) *1. அரசர் அரசியர் கொண்டைக் கூந்தலை மொத்தமாகக்கையால்வாரியெடுத்து முடிச்சிடுதல்;* to gather and tie into a knot, as the flowing tressess of hair of a king or queen. '*தலையிலுள்ள கேசத்தை அள்ளிச் செருகியும் முடித்தும்*' *(சி.செ.பக்.74). 2.கூந்தலை முடிக்கும் பொது வகைகளுள் ஒன்று;* a general method of gathering and tying into a knot, as the flowing tressess of hair.

அள்ளியிறை–த்தல் aḷḷi-y-iṟai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. கையால் முகந்து எறிதல்;* to take something in the hollow of the hands and then scatter it. *கோழிகட்குத் தீனியை அள்ளியிறைத்தான். 2. அளவிற்கு மிஞ்சிச் செலவிடுதல்;* to spend extravagantly, squander.

[*அள்ளி* → *அள்ளி (இ.கா.வி.எ.). இறைத்தல் = வீசித் தெளித்தல்.*]

அள்ளிவிடுதல் aḷḷi-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *மிகக் கொடுத்தல்;* to give liberally.

[*அள்* → *அள்ளி (இ.கா.வி.எ.). விடுதல் =நீக்குதல், போக்குதல், கொடுத்தல்.*]

அள்ளு–தல் aḷḷu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.செறிதல்;* to be dense, thickly interwoven. "*அள்ளிலை யணிந்த வைவேல்*" *(சீவக. 615). 2. கையால் முகத்தல்;* to take, collect or gather in the hollow of the hand or hands. "*அள்ளிக் கொளலாய்*" *(நள. சுயம். 98). 3. வாரிக்கொண்டு போதல்;* to sweep away, carry off in large quantities or numbers. "*அள்ளிக் கொள்வற்றே பசப்பு*" *(குறள், 1187). 4. எற்றுதல், எறிதல் (பிங்.);* to throw up. *5. நுகர்தல்;* to enjoy. "*அள்ளுற வளிந்த காமம்*" *(சீவக. 1387).*

ம. அள்ளு

அள்ளுக்கட்டு–தல் aḷḷu-k-kaṭṭu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. பெட்டி முதலியவற்றை இரும்புத் தகட்டால் இறுக்குதல்;* to fasten with clamps or plates of iron, bind together with wire (W.). *2. வலுப்படுத்துதல்;* to strengthen, confirm, encourage by promises (W.).

அள்ளுறு–தல் aḷḷūṟu-, *5 செ.கு.வி.* (v.i.). *வாயூறுதல்;* to water in the mouth. "*அமுதனென்றள்ளுறித் தித்திக்க*" *(திருவாச. 7 : 3.).*

அள்ளெடு–த்தல் aḷ-ḷ-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நோயினால் விலா எழும்புதல்;* an involuntary rising of the intercostal muscles from a disease. *2. இறக்குங்கால் மூச்சுவிட முடியாமல் விலாப்பக்கத்தைத் தூக்கிவிடுதலான சாவுக்குறி;* repiration due to the action of the intercostal and other thoracic muscles, Thoracic respiration alias T. breathing, observed in persons gasping for breath just before death and considered a symptom of death *(சா.அக.).*

[அள் = விலா. எடுத்தல் = எழுப்புதல்.]

அளந்தறி–தல் aḷand(u)-aṟi, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. அளவிட்டு அறிதல்;* to know by measurement. *2. மதித்து அறிதல்;* to know by discernment.

[அள → அளந்து (இ.கா.வி.எ.) + அறி.]

அளப்பள–த்தல் aḷapp(u)-aḷa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. அலப்புதல்;* to prate, chatter, gossip, repeat needlessly (W.). *2. வீண்பெருமை பேசுதல்;* to boast, bluff. *3. புரளி சொல்லுதல்;* to speak falsehood, to propagate false rumor. *4. முறு முறுத்தல்;* to complain, grumble, express dis-satisfaction *(செ.அக.).*

அளப்பறி–தல் aḷapp(u)-aṟi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒருவருடைய மனத்தை ஆராய்ந்தறிதல்;* to fathom, gauge, as the mind of a person. *2. ஒருவருடைய உட்கருத்தை வலக்காரமாய் (தந்திரமாய்) அறிதல்;* to discover another's designs, find out another's intentions.

அளபெடு–த்தல் aḷab(u)-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *(இலக்.) செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் எழுத்து மாத்திரை மிக்கொலித்தல்;* (Gram.) to lengthen the sound of a letter either in poetry or in common usage.

அளம்படு–தல் aḷam-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.)வருந்துதல்; to suffer."*அளம்பட் டறிவொண் ணாவகை*" *(தேவா. 1.13 : 9).*

அளம்பற்று–தல் aḷam-paṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *உப்புப் பூத்தல்;* to wear away through the action of salt. *'உளுத்து அளம்பற்றின சுவர்' (திவ். திருக்குறுந். 19, வியா.).*

அளமரு–தல் aḷamaru-, *18 செ.கு.வி.* (v.i.)மனஞ் சுழலுதல், கலங்குதல், மயங்கி வருந்து தல்; to be bewildered, to be distressed. "*அளமரு குயிலினம்*" *(சீவக. 49).*

அளவளாவு–தல் aḷavaḷāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *கலந்து பேசுதல்;* to hold intimate talks, converse freely, live socially. "*அளவளாய் நட்டாலும்*" *(மூதுரை, 4).*

அளவாக்கு–தல் aḷav(u)-ākku-, *5 செ. குன்றாவி.* (v.t.). *மட்டமாக்குதல்;* to make even, to level, to straighten, to set right. *'நூற்பிடித்த பத்தியை அளவாக்க வேணும்' (திவ். திருக் குறுந். 10, வியா.).*

அளவிடு–தல் aḷaviḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *அளத்தல்;* to measure, explore. "*மண்ணுற்ற வெல்லை யளவிட் டிடுமால்*" *(கந்தபு. அசுர. அகத். 7).*

ம. அளக்குக; க. அளதெவடு; து., குட. அளதெ; பட. அளெ.

அளவிற–த்தல் aḷav(u)-iṟa-, *3 செ.கு.வி.* (v.i.) *1.எல்லையிலதாதல், அளந்தறிய முடியாத தாதல்;* to be unlimited, to be immeasurable. *இறைவ னாற்றல் அளவிறந்தது. 2. குறித்த அளவு கடத்தல்;* to exceed appointed limits. "*ஆவியும் ஒற்றும் அளவிறந் திசைத்தலும்*" *(நன்.101).*

அளவு–தல் aḷavu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வரவுதல்;* to blend, mingle.

அளவுபடுத்து–தல் aḷavu-paḍuttu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *வரையறை செய்தல்;* to limit.

அளவெடு–த்தல் aḷav(u)-eḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஒன்றன் நீளம் அகலம் முதலியவற்றை அளந்தறிதல்;* to take the dimensions of.

அளறு–தல் aḷaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நெரி தல் (வின்.);* to be fractured by a fall or blow, broken, bruised. *2. பிளத்தல் (வின்.);* to split due to falling. *3. சிதறி வெடித்தல்;* to be mauled, shattered.

[அளறுதல் = செறிந்து நெரிதல், பிளத்தல், வெடித்தல்.]

அளறுபடு–தல் aḷaṟu-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. சேறாதல்;* to turn into mire. *2. நிலை கலங்குதல்;* to be disconcerted, perplexed. "*இராவணனை யளறுபட வடர்த்தானிடம்*" *(தேவா. 1.10 : 8).*

[அளறு + படு (து.வி.). அளறு = குழம்பு, சேறு. அளறுபடுதல் = மனங்குழம்புதல், மனங் கலங்குதல்.]

அளாவு–தல் aḷāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *கலத்தல்;* to mingle. "*பாலோ டளாய் நீர்*" *(நாலடி. 177).* -, *5 செ.குன்றாவி* (v.t.) *1. பொருந்துதல்;* to reach, extend up to touch. "*விசும் பினை யளாவு மன்னவன் கோயிலை*" *(கந்தபு. யுத்த. மூவாயி. 1). 2. கையால் அளைதல், கறண்டியால் துழாவுதல்;* to stir, as with a hand or spoon. *3. கலந்துறவாடல்;* to have social intercourse, mingle freely with relatives.

அளி[1]–தல் aḷi-, *2 செ.கு.வி.* (v.i.) *1.செறிதல்;* to become crowded, dense. *2.கலத்தல்;* to mix, mingle. "*சிறியார்களோ டளிந்தபோது*" *(கம்பரா.சுந்தர.ஊர்தேடு.154). 3.குழைதல்;* to be overboiled. *சோறளிந்து போயிற்று. 4.அறக்கனிதல்;* to become overripe, mellow. "*அளிந்ததோர் கனியே*" *(திருவாச.37 : 4). 5. புரியமாயிருத்தல் (பிரியமாயிருத்தல்);* to be attached. "*மந்தி யளிந்த கடுவனையே நோக்கி*" *(திவ். இயற். மூன்றாம்திருவந். 58).*

அளி[2]–த்தல் aḷi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. செறித்தல் (பிங்.);* to crowd together. *2. அறம்நோக்கிக் கொடுத்தல்;* to give in charity. "*அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்*" *(கலித். 11 : 1). 3. தகுதிபற்றிக் கொடுத்தல்;* to give as prize or reward, to confer a title or degree. *பரிசளிப்பு, பட்டமளிப்பு விழா. 4. அன்பினாற் கொடுத்தல்;* to give free or as a token of love. *அன்பளிப்பு. 5. ஈனுதல்;* to yield, beget. "*காந்தார பதியளித்த மெய்க்கன்னி*" *(பாரத. சம்பவ. 22). 6. அருளிப்படைத்தல்;* to create. "*றாவையு மயன்கணின் றளிப்பான்*" *(கந்தபு. தக்க. ததீசியுத். 9). 7. அருளி அல்லது அன்பினாற் காத்தல் (பிங்.);* to protect, take care of nourish. *8. அன்பினாற் சொல்லுதல்;* to speak, express with affability."*முகமனளித்தும்*" *(கல்லா. 14 : 17). 1. அருள்செய்தல்;* to be gracious, show favour.

"அஞ்சினர்க் களித்தலும்" (சிறு பாண். 210). 2. சோர்வை நீக்குதல்; to remove weariness. "கொண்டவற் களித்ததோர் குளிர்கொள் பொய்கை" (சீவக. 1622).

ம. அளிக்குக

அளிப்பாய்ச்சு–தல் aḷi-p-pāyccu-, 5 செ.கு.வி. (v.i.) வலைத்தட்டி யிடுதல்; to construct a lattice.

[அழி → அளி. பாய் (த.வி.) → பாய்ச்சு (பி.வி.). 'சு' பி.வி. ஈறு.]

அளுக்கு–தல் aḷakku-, 5 செ.கு.வி. (v.i.) குலைதல் (திவா.); to be perturbed, disconcerted.

அலுங்கு (த.வி.) → அலுக்கு (பி.வி.) → அளுக்கு. அலுங்குதல் = அசைதல்.

க. அலுகு; தெ. அலுகு.

அளை–தல் aḷai-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. தழுவுதல்; to embrace, caress. "என்னணியார் முலையாக மளைந்து" (திருவாச. 49 : 4). 2. சூடுதல்; to wear. 'அனிச்சப்பூவை மயிரில் அளைந்தாள்' (குறள், 1118, மணக். உரை). 3. துழாவுதல்; to stir with the hand or a ladle, to dabble with the hand, as a child. "இன்னடிசில் புக்களையுந் தாமரைக்கை" (நள. கலிதொ. 63). 4. கலத்தல்; to mix up, mingle with. "ஊனளைந்த வுடற்குயி ராமென" (கம்பரா. அயோத். பள்ளி. 16). 5. நுகர்தல் (அனுபவித்தல்); to enjoy, experience. "அளைவது காமம்" (சீவக. 1551). -, 2 செ.கு.வி. (v.i.) 1. கூடியிருத்தல்; to be mixed, mingled. "ஆர்வமொ டளைஇ" (தொல். பொருள். கற். 5). 2. வயிறு வலித்தல் (இ.வ.); to suffer from gripes, as in dysentery (Loc.).

அளையெடு–த்தல் aḷai-y-eḍu-, 4 செ.கு.வி. (v.i.) 1. வளை தோண்டுதல் (வின்.); to burrow. 2. புரைவைத்தல் (வின்.); to grow hollow, as in ulcers.

அற்கு–தல் aṟku-, 5 செ.கு.வி. (v.i.) நிலை பெறுதல்; to be permanent, to remain, endure. "அற்கா வியல்பிற்றுச் செல்வம்" (குறள், 333).

அற்றப்படு–தல் aṟṟa-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. இல்லாதிருத்தல்; to be unavailable. "ஆளற்றப்பட் டிரந்தாள்" (திவ். இயற். திருவிருத். 30). 2. மறதியாயிருத்தல், கவனம் இடையறவுபடுதல்; to be forgetful. 'பொதுச் சாப்பென்பது அற்றப்படுதல்; அஃதாவது, பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓரிகழ்ச்சியான் இடையறவுபடுதல், (தொல். பொருள். மெய்ப். 12, பேரா. உரை).

அற்றுப்போ–தல் aṟṟu-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. இடைமுறிதல்; to be severed, to be broken as a string. 2. முழுவதும் நீங்குதல்; to cease completely, as a disease. நோய் முழுவதும் அற்றுப்போயிற்று. 3. ஓர் உயிரினம் இறந்து படுதல்; to become extinct, as a species. ஓதிமம் (அன்னம்) தமிழ்நாட்டில் அற்றுப் போயிற்று. 4. முழுவதும் கைவருதல்; to have complete possession (Com.u.) (செ.அக.).

அறக்கண்டி–த்தல் aṟa-k-kaṇḍi-, 4 செ. குன்றாவி. (v.t.) நோயை முழுதும் நீக்குதல்; to effect a radical cure, as in a disease (சா.அக.).

அறக்கொள்(ளு)–தல் aṟa-k-koḷ(ḷu)-, 10 செ. குன்றாவி. (v.t.) முழுதும் பெறுதல்; to receive in full. 'விலைத் திரவியமும் இறைத் திரவிய மும் அறக்கொண்டு' (S.I.I. iii, 16).

அறப்பாடுபடு–தல் aṟa-p-pāḍu-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) மிக உடல்வருந்தி யுழைத்தல்; to work hard, labour.

அறப்பார்–த்தல் aṟa-p-pār-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தீர ஆராய்தல்; to examine thoroughly. 2. ஒருவரை அழிக்க வழிதேடுதல் (யாழ்ப்.); to take measures to ruin a person. 3. சூனியம் வைத்தல்; to ruin a person by the evil influence of spirits, as by sorcery (சா.அக.).

அறம்பாடு–தல் aṟam-pāḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அறநூல் கூறுதல்; to state or declare, as a poetic treatise on virtue. "அறம்பா டிற்றே யாயிழை கணவ" (புறநா. 34 : 7). 2. தீச் சொற் பட்டுத் தீங்குண்டாகப் பாடுதல்; to compose verse wich contains letters or words that cause harm or ruin. அந்தப் புலவரைப் பகைத்துக்கொள்ளக் கூடாது; அறம்பாடி விடுவார் (உ.வ.).

அறவிடு–தல் aṟa-viḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றும் நீக்குதல்; to give up completely, renounce altogether. "உளதுமிலது மறவிட்டு" (ஞானவா. மானுவே. 17). 2. விற்றல்; to sell off. 'ஆபத்துக் காலத்திலே அறவிட்டு ஜீவிப்பாரும்' (ஈடு, 3. 6 : 9).

அறவூது–தல் aṟa-v-ūdu-, 5 செ.குன்றாவி. (v.t.) புடமிடுதல் (வின்.); to refine, as gold, sublimate, as chemicals.

அறவை–த்தல் aṟa-vai-, 4 செ.குன்றாவி. (v.t.) புட மிடுதல்; to refine "அறவைத் தோங்கும் பொன்னி றத்தர்" (கூர்மபு. நவகண். 5).

அறவைப்பிணஞ்சுடு–தல் aṟavai-p-piṇañ-cuḍu-, 17 செ.குன்றாவி. (v.t.). கவனிப்பாரற்ற பிணத்தை யெடுத்துச் சுடுதல் (பிங்.); cremating an unclaimed corpse.

அறாவு–தல் aṟāvu-, 5 செ.குன்றாவி. (v.t.) அடித்தல்; to strike, beat, whip. "மத்திகை யினா லறாவி" (சீவக. 703).

அறி–தல் aṟi, 2 செ.குன்றாவி. (v.t.) 1. ஐம்புலனால் உணர்தல்; to perceive by the senses. 2. மதியினா லுணர்தல்; to know, understand, comprehend, recognise. "ஆவதறிவார்ப் பெறின்" (நாலடி. 73). 3. மனத்தினா லுணர்தல்; to conceive, to know by imagination or deliberation. 4. புதிதாய்க் கண்டுபிடித்தல் (புதுவை); to discover (Poṇḍ.). 5. தேறுதல், திட்டஞ்செய்தல்; to ascertain, determine, decide. "அழிபட லாற்றா லறிமுறை யேன்று" (பு.வெ. 8 : 19).

6. நினைத்தல் (பிங்.); to think. *7. மதித்தல்;* to esteem, prize. "*யாமறிவ தில்லை யறிவறிந்த மக்கட்பே றல்ல பிற*" *(குறள், 61). 8. நுகர்தல் பட்டறிதல் (அறுபவித்தல்);* to experience. "*கண்டுகேட் டுண்யிர்த் துற்றறிவு மைம்புல னும்*" *(குறள், 1101). 9. பயிலுதல்;* to know by practice, to be accustomed to. "*களவறிந் தார் நெஞ்சிற் கரவு*" *(குறள், 288).*

ம. அறியுக; க., குட., து. அறி; தெ. எறுகு; பட. அறதனெ; கோத. அர்ச்; துட. அர்ச், அர்யி; குரு. அறிதனெ; பிரா. கறிபிங்.

அறிக்கைபண்ணு–தல் aṟikkai-paṇṇu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. விளம்பரப்படுத்துதல்;* to advertise, notify, inform. *2.(கிறித்.) குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்;* (Chr.) to confess.

அறிக்கையிடு–தல் aṟikkai-y-iḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.) *அறிக்கைபண்ணு - பார்க்க;* see aṟikkai-paṇṇu-.

க. அறியிக; தெ. எறுகபடு.

அறிக்கைவாசி–த்தல் aṟikkai-vāši-, *4 செ.கு.வி.* (v.i.) *(கிறித்.) கோயிலில் ஓலை கூறுதல், திருமண அறிக்கை விளம்புதல்;* (chr.) to publish banns of marriage.

அறியக்கொடு–த்தல் aṟiya-k-koḍu-,*4 செ. குன்றாவி.* (v.t.) *1. தெரிவித்தல்;* to communicate information, to instruct. *2. குற்றமேற்றுதல் (வின்.);* to indict, impeach, inform against.

அறிவழி–தல் aṟiv(u)-aḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *மதிமயங்குதல்;* to lose one's reason, to be bereft of sense, be infatuated *(செ.அக.) - மதிமயங்கல், ஒரு சாவுக்குறி;* losing sense and consciousness, a symptom of approaching death *(சா.அக.).*

அறிவறைபோ–தல் aṟiv(u)-aṟai-pō-,*8 செ.கு.வி.* (v.i.) *அறிவு கீழற்றுப் போதல், அறிவு கெட்டழிதல்;* to have one's knowledge or sense undermined. "*அறிவறை போகிய பொறியறு நெஞ்சத் திறைமுறை பிழைத் தோன்*" *(சிலப். 20 : 25 - 6).*

அறிவி–த்தல் aṟivi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தெரிவித்தல்;* to inform, make known, relate, communicate. *2. வெளியிடுதல்;* to publish, announce.

ம. அறியிக்கு

அறிவுகொளுத்து–தல் aṟivu-koḷuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *அறிவூட்டுதல், மதிபுகட்டுதல்;* to impart instruction, teach, advise.

க. அறிகிசு

அறிவுகோணு–தல் aṟivu-kōṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *தவறான வழியில் அறிவைச் செலுத்துதல்;* to be perverted, crooked, as misuse of intellect.

அறிவுபிற–த்தல் aṟivu-piṟa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. அறிவுண்டாதல்;* to dawn as knowledge in the mind, to become enlightened. *2. மயக்கந் தெளிதல் (வின்.);* to be restored to consciousness.

அறிவுபுகட்டு–தல் aṟivu-pugaṭṭu-, *5 செ.கு. வி.* (v.i.) *அறிவூட்டுதல்;* to give instruction, impart knowledge, advise.

அறிவுமடம்படு–தல் aṟivu-maḍam-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *அறிந்தும் அறியாததுபோன் றிருத்தல்;* to assume ignorance. "*அறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்*" *(சிறுபாண். 216).*

அறிவுமயங்கு–தல் aṟivu-mayaṅgu-, *5 செ. கு.வி.* (v.i.) *1. உணர்ச்சி கெடுதல்;* to faint, lose consciousness by swooning, by fits, by sleep, by approach of death. *2. மனந்தடு மாறுதல், திகைத்தல்;* to be stunned or bewildered.

க. அறிவுமறெ

அறிவுறு–தல aṟivuṟu-, *(20) செ. குன்றாவி.* (v.t.) *அறிதல்;* to know. - *20 செ.கு.வி.* (v.i.) *1. துயிலெழுதல்;* to wake from sleep. "*கிடந் துறங்குஞ் சீரிய சிங்க மறிவுற்று*" *(திவ். திருப்பா. 23). 2. உணர்ச்சி மீளப்பெறுதல்;* to regain consciousness.

அறிவுறுத்து–தல் aṟiv(u)-uṟuttu-,*5 செ.கு.வி.* (v.i.) *அறிவுபுகட்டுதல்;* to give instruction. -, *5 செ.குன்றாவி.* (v.t.) *தெரிவித்தல்;* to inform, make known.

[*அறிவு + உறுத்து. உறு (த.வி.)* → *உறுத்து (பி.வி.).'து' பி.வி. ஈறு.*]

அறு[1]**–தல்** aṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. கயிறு முதலியன இறுதல்;* to be severed, to break, as a rope. "*சாப நாணறு குமில வோதை*" *(இரகு. யாகப். 87). 2. உண்டது செரித்தல்;* to be digested. "*அற்றது போற்றி யுணின்*" *(குறள், 942). 3. கருமங் குதிர்தல்;* to be decided, settled. "*அற்ற காரியம்*" *(சிலப். 17, முன்னிலைப் 2, உரை). 4. நீங்குதல், பிரிதல், நோய் முதலியன இல்லாமற் போதல்;* to separate, to be cured as a disease. *5. பாழ்படுதல்;* to go to ruin. "*வீடறக் கவர்ந்த வினைமொழிந் தன்று*" *(பு.வெ. 3. 15, கொளூ). 6. முடிதல்;* to cease, come to an end, perish, become extinct. *7. தாலி நீங்குதல்;* to be removed, as the marriage insignia of a woman. *அவளுக்குத் தாலியறுந்தது.*

ம.,க. அறு; தெ. அறுகு, அறு; கோத. அர்த; குட. அர; துட. அர்த்; து. அர்ப்புனி.

அறு[2]**–த்தல்** aṟu-,*4 செ.குன்றாவி.* (vt.) *1. பன்னறுவாளாற் கதிரறுத்தல்;* to reap corn with a sickle. *2. அறுவாளால் அல்லது கத்தியாற் கயிறறுத்தல்;* to cut a rope with a knife or sickle. *3. காய்கறியறுத்தல்;* to cut in two or into pieces, as a fruit or vegetable. *4. செங்கலறுத்தல்;* to mould, as bricks. *5. ஊடறுத்தல்;* to sever, cleave, cut in two. "*விசும்பறுத் திழிந்து*" *(சீவக. 3055). 6. பங்கிட்டுக் கொடுத்தல்;* to distribute.

"அற்றார்க் கறாது வதிந்தோரும்" (பிரமோத்.16 : 37). 7. வளை தோண்டுதல் (உ.வ.); to burrow, form subterraneous passages (Com.u.). 8. வருத்துதல்; to tease, worry. என்னை எப்போதும் அறுக்கிறான். 9. வெல்லுதல்; to outdo, excel. "ஆடுசிறை யறுத்த நரம்புசேரின்குரல்" (பதிற்றுப். 43 : 21). 10. செரித்தல்; to digest. "ஆரவுண்டறுக்க லாற்றாது" (சீவக. 2839). 11. நீக்குதல்; to remove, as obstacles, obviate, as objections, break, as enchantments. தடை யறுத்துக் கொடுப்பேன். 12. இல்லாமற் செய்தல்; to root out, exterminate. "துயரங்ளண்டா வண்ண மறுப்பான்" (தேவா. 2. 197 : 1). "அவர் வேரறுப்பென் வெருவன் மின்" (கம்பரா. ஆரணிய. அகத்தியப். 22). 13. தாலி நீக்குதல்; to remove the marriage insignia, as a widow. அவள் நேற்றுத் தாலி யறுத்தாள். 14. தீர்மானித்தல், முடிவுசெய்தல்; to determine, resolve, decide, settle. "மறைக ளெல்லா முடிய வரையறுத் துணர்ந்து புகலினும்" (வெங்கைக்கலம். 89). 15. இடை விடுதல்; to move in jerky rhythm. "அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்" (தொல். பொருள். செய். 229). 16. தாலியறுத்துக் கைம்பெண்ணாதல்; to become a widow, by cutting away the marriage insignia known as tāli.

ம. அறுக்குக; கொலா., நா. அர்க்; துட. அர்ட்; குவி, பர். எர்க்; குரு. அற; பிரா. தரெ.

அறுகிடு–தல்aṟug(u)-iḍu-,20செ.கு.வி.(v.i.) திருமணத்தில் அறுகிட்டு வாழ்த்துதல்; to bless the bride and the bride-groom by throwing on their heads rice with cynodon grass. "மங்கைக் கறுகிட வந்துநின் றார்மணப் பந்தலிலே" (தமிழ்நாவ. 54).

அறுகெடு–த்தல் aṟug(u)-eḍu-, 4 செ.கு.வி. (v.i.) 1. அரிசி கலந்த அறுகம்புல்லைத்தலையில்தூவி வாழ்த்துதல்; to invoke blessings on a person by scattering on his head, rice with cynodon grass. "மறையோ ரெதிர் கொண்டறுகெடுப்ப" (சேக்கிழார். பு. 88). 2. வழிபடுதல், பூசை செய்தல்;to worship."அரசரப்பொழுதடிமை யறு கெடுத்திட" (கலிங். 264).

அறுத்துக்கட்டு–தல் aṟuttu-k-kaṭṭu-, 5 செ.குவி. (v.i.) கணவனையிழந்தோ தீர்வை செய்யப் பட்டோ தாலி நீங்கிய பின், மறுதாலி கட்டி மணத்தல்; to remarry, in the case of castes that allow remarriage of widows and divorced women, as removing the marriage insignia known as tāli tied by a former husband and having a new one tied by another.

அறுத்துப்பேசு–தல் aṟuttu-p-pēšū-,5 செ.குன்றாவி. (v.t.) தீர்மானமாகச் சொல்லுதல்; to speak definitely, decisively, conclusively.

அறுத்துரை–த்தல் aṟutt(u)-urai-, 4 செ. குன்றாவி. (v.t.) 1. வரையறுத்துச் சொல்லுதல்; to speak positively, definitely. 2. பிரித்துச் சொல்லுதல்; to interpret by breaking up a sentence and making a subordinate clause a principal one. 'திருந்துங் கடனெறியைச் செல்லுமென்றும், களவாகிய இவ்வாற்றைச் சிதைக்குமென்றும், முற்றாக அறுத்துரைப் பாருமுளர்' (திருக்கோ. 272, உரை).

அறுதியிடு–தல் aṟudi-y-iḍu-, 18 செ. குன்றாவி. (v.t.) 1. முடிவிற்குக் கொண்டு வருதல்; to bring to completion or to a close.2. தீர்மானித்தல்; to determine. "அமர்வமென் றறுதியிட்டு" (திருவாலவா. 27 : 41). 3. காலங் குறித்தல்; to specify a time, appoint a day.

அறுபடு–தல்aṟu-paḍu-,20செ.கு.வி.(v.i.)அறுக்கப்படுதல்; to be cut asunder.

அறுவா–தல் aṟuvā-, 6 செ.கு.வி. (v.i.) 1. செலவழிந்து போதல் (நெல்லை); to be spent, exhausted (Tn.). 2. முடிதல் (இராட்.); to be finished, completed. 3. தண்டப்படுதல், தொகுக்கப்படுதல் (இராட்.); to be collected, gathered.

அறுவாக்கு–தல் aṟuvākku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1.செலவழித்துவிடுதல் (நெல்லை); to spend, use up, exhaust (Tn.). 2. முடித்தல் (இராட்.); to complete, conclude, finish.

அறுவாய்ப்போ–தல் aṟuvāy-p-pō-, 8 செ.கு. வி. (v.i.) முற்றுஞ் செலவாய்விடுதல் (நெல்லை); to be completely spent (Tn.). அரிசி அறுவாய்ப் போய்விட்டது.

அறுவிடு–தல் aṟu-viḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) நிலுவையை முற்றுந் தண்டிவிடுதல்; to recover completely, as arrears. நிலுவை யறுவிட.

அறை–தல் aṟai-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. அடித்தல்; to beat, strike, slap. "அறைந்த கற்றூணிடை வந்தாய்" (பாரத. கிருட். 41).2. பறைகொட்டுதல்; to beat, as a drum. "அறைபறை யன்னர் கயவர்" (குறள், 1076). 3. கடாவுதல்; to hammer, as a nail. "நினைப்புடை யிதயத் தாணி யறைந்ததும்" (இரகு. இந்துமதி. 85). 4. மண்ணெறிந்து கட்டுதல்; to construct, as a mud wall by slapping the mud on. மண்சுவர் நாலுபடை யறைந்தேன். 5. துண்டித்தல்; to cut in pieces, hack. (தொல். பொருள். செய். 155, பேரா. உரை). 6.சொல்லுதல்; to state, relate, utter, declare, narrate. "ஆசைபற்றி யறைய லுற்றேன்" (கம்பரா. சிறப்புப்பாயி. 4). 7. ஒலித்தல்; to sound. "அறை கழல் வீரர்" (நைடத.நாட்டு. 13). 8. அலை காற்று முதலியன மோதுதல்; to beat upon, as wind, as waves, dash, as a mountain torrent. "முரசறையு மாக்கடல் காரென வார்த்தன" (சீவக. 2168).

ம. அற; க. அரெ; தெ. அறசு; குரு. அச்னா.

அறைக்கழி–த்தல் aṟai-k-kaḻittal, செ.கு.வி (n.) பிள்ளைப் பேற்றறையினின்று தாய் வெளிவரு தற்குரிய சடங்கு (இ.வ.); ceremony performed when a woman comes out of the lying-in chamber after delivery (Loc.).

அறைகுறைபார்–த்தல் aṟai-kuṟai-pār-, 4 செ. குன்றாவி. (v.t.) பழுதுபார்த்தல் செப்பனிடுதல் (இ.வ.); to carry out repair (Loc.).

அறைகூவு–தல் aṟai-kūvu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. போருக்கழைத்தல்;* to challange, summon to a combat. "அருமுனையா னறைகூ வினபின்" *(பு.வெ. 4 : 7, கொளு). 2. வலியக் கூவியழைத்தல்;* to make a compeling call. "அந்தணனா யறைகூவி வீடருளும்" *(திருவாச. 8 : 1).*

அறைசெய்–தல் aṟai-šey-, *1 செ. குன்றாவி.* (v.t.) *அறுத்துத் துண்டமாக்கல்;* to cut into thin slices, to slice *(சா.அக.).*

அறைபோ–தல் aṟai-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. கீழறுக்கப் படுதல்;* to be corrupted or seduced, as an army by the enemy. "அழிவின் றறை போகா தாகி" *(குறள், 764). 2. மதி கெட்டழிதல்;* to be bewildered, to become non-plussed, be ruined. "அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து" *(சிலப். 20 : 25).*

அறைமுறையிடு–தல் aṟai-muṟai-y-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) குறை தெரிவித்தல்; to ventilate one's grievances, state one's wants (W.).

அறையிடு–தல் aṟai-y-iḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.) *அறைகூவுதல்;* to challange. "மாரிகை யேறி யறையிடுங் காலத்தும்" *(திவ். இயற். திருவிருத். 19).*

அறைவகு–த்தல் aṟai-vagu-, *4 செ.கு.வி.* (v.i.) புரையோடுதல் *(பரராசசே. 230);* to become fistulous, as an ulcer.

அன்புகூர்–தல் aṉbu-kūr-, *2 செ.கு.வி.* (v.i.) மிக நேசித்தல்; to abound in affection for, love intensively. "பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ" *(பாரத. மிகைப். காப்பு. 1.).*

[அன்பு + கூர். கூர்தல் = மிகுதல். "கூர்ப்புங் கழிவும் உள்ளது சிறக்கும்" *(தொல். சொல். உரி. 16).* "சால வுறுதவ நனிகூர் கழிமிகல்" *(நன். 456).*]

அன்றியுரை–த்தல் aṉṟi-y-urai-, *4 செ. குன்றாவி.* (v.t.) மாறுபட்டுச் சொல்லுதல்; to speak in opposition or contradiction. "ஆரையு மன்றி யுரைப்பேன்" *(தேவா. 7. 73 : 10).*

அன்று–தல் aṉṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சினத்தல்;* to get angry with. "அவ்வானத்தை யன்றிச் சென்று" *(திவ். இயற். திருவிருத். 18). 2. பகைத்தல்;* to hate. "அன்றிய வாணன்" *(திவ். பெரியதி. 4. 3 : 8).*

அனல்(லு)–தல் aṉal-, *13 செ.கு.வி.* (v.i.) அழலுதல்; to burn, glow, blaze, to be hot, to cause heat, as the Sun, a fire, as fever. "ஊர லோவா தனன்று" *(சூளா. சீய. 164).*

ம. அனலுக; க. அனலு; து. அர்ளுனி.

அனல்வீசு–தல் aṉal-višu-, *5 செ.கு.வி.* (v.i.) வெக்கை யடித்தல்; heat being radiated, as by a flame.

அனற்று–தல் aṉaṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சுடுதல், சூடுண்டாக்குதல்;* to heat, make hot. வெயில் உடம்பை அனற்றுகிறது. *2. எரித்தல்;* to burn, consume with fire. "அனற்றினா னல்ல னென்றிக் காலத்தும் வெறுத்தார்" *(காஞ்சிப்பு. கழுவாய். 179). 3. கடுஞ் சூட்டினால் உடம்பு காய்தல்;* to affect with excessive heat, as in fever, used impersonally. "காய்ச்சல் உடம்பை அனற்றுகிறது". *4. வயிறுளைதல்;* to affect with colic pains used impersonally. எனக்கு வயிற்றை அனற்றுகிறது. *5. சினத்தல்;* to be angry with. "குமரனை யனற்று மாற்றலர்" *(சூளா. அரசியற். 89). 6. வீணாக வுதவுதல்;* to give in vain, as to a worthless person or for a useless purpose. ஐம்பது உருபா உனக்கு *(அதற்கு)* அனற்றினேன். -, *5 செ.கு.வி.* (v.i.) முணங்குதல்; to moan, groan with pain (W.).

அனுக்கு–தல் aṉukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அசைத்தல்;* to shake. *2. கொக்கான் முதலிய விளையாட்டில் தொடக்கூடாததைத் தொடுதல் (யாழ்ப்.);* to touch or strike undesignedly, as in the kokkāṉ play (j). *3. வருத்துதல்;* to distrees, cause to suffer, oppress. "மென்மருங் கனுக்குங் குன்ற வெம்முலை" *(உபதேசகா. சிவவிரத. 381). 4. கெடுத்தல்;* to ruin. "அல்லனுக்கு பன்மணிச் சிலம்பிடை" *(தணிகைப்பு. நகரப். 5).*

அனுங்கு–தல் aṉuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்;* to shake. ஓர் இலைகூட அனுங்க வில்லை. *2. கொக்கான் முதலிய விளையாட்டில் தொடக் கூடாதது தொடப்படுதல் (யாழ்ப்.);* to be touched unawares as in the kokkāṉ play, causing a forfeit (J). *3. முணுமுணுத்தல் (யாழ்ப்.);* to mumible, mutter, moan (J.). *4. வருந்துதல்;* to suffer pain, to be in distress. "பஞ்சனுங் கடியினார்" *(சூளா. நகர. 25).* "அனுங்க வென்னைப் பிரிவுசெய்து ஆயர் பாடி கவர்ந்துண்ணும்" *(திவ். நாய்ச். 638). 5. வாடுதல் (பிங்.);* to fade, wither, droop. *6. கெடுதல்;* to perish. "வாட்படை யனுங்க வேடர்" *(சீவக. 436). 7. இழுகுதல், பின் வாங்குதல் (யாழ்ப்.);* to be reluctant, unwilling, to back away (J.).

அனுப்படியிறக்கு–தல் aṉu-p-paḍi-y-iṟakku-, *8 செ.கு.வி.* (n.) பழைய நிலுவையைப் புதுக்கணக்கிற்குக் கொண்டு வருதல்; to carry forward the balance to a new account.

அனுப்பு–தல் aṉuppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. போகச் செய்தல்; விடுத்தல்;* to send, despatch. 'எனைச் சோழ நாட்டுக் கனுப்ப வேணும்' *(தமிழ்நாவ. 254),* மறைமலையடிகள் எழுதிய பொத்தகங்களின் ஒரு முழுத்தொகுதி ஒவ்வொரு பெருநூல் நிலையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது . *2. வழி விடுதல்;* to accompany a person for a short distance out of respect or love.

ம., தெ. அனுப்பு.

அனுமதி–த்தல் aṉu-madi-, *4 செ.கு.வி., செ.குன்றாவி.* (v.i. & v.t.) உடன்படுதல், இசைவுதரல்; to permit, to consent to.

ம. அனுமதிக்கு; க. அனுமோதிசு.

அனுமானி–த்தல் aṉu-māṉi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. அனுமான அளவையாலறிதல்;* to determine by inference. *2. உன்னித்தல்;* to guess. *3. அயிர்த்தல்;* to suspect.

M

ஆ–தல் ā-, *6 செ.கு.வி.*(v.i.) *1. உண்டாதல்;* to come into existence. *அந்த அம்மையார் ஆகியிருக்கிறார் (நெல்லை.). 2. நிகழ்தல்;* to happen, occur. *3. இணக்க மாதல்;* to be agreeable, congenial, on friendly terms. *தென் கலையார்க்கும் வடகலையார்க்கும் ஆகாது. 4. ஒப்பாதல்;* to be like, equal, to resemble. "*எனக்காவா ராரொருவர்*" *(திவ். இயற். 1 : 89). 5. அமைதல்;* to be, *இதற்கிது பொருளாகும். 6. உறவு முறையாதல்;* to be related to, as a blood or marital relation. *இந்தத் திருமணத்தால் அவர் உனக்கு என்ன ஆவார்? 7. சமைதல்;* to be cooked, as food. *சோறு ஆகிறது. 8. வளர்தல்;* to grow, as a child or crop. *அவன் இப்போது ஆளாகிவிட்டான்; கரிசற் காட்டிற் கம்பு நன்றாய்ப் பயிராகும். 9. ஆக்கம் பெருகுதல்;* to prosper, flourish. *ஆகிற குடி அரைக் காசால் ஆகும். (பழ.). 10. ஒன்று இன்னொன்றாக மாறுதல்;* to become changed into another. *'நீர் ஆவியாகும், ஆவி நீராகும், முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?' (பழ.). அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம் (பழ.). 11. ஒன்றிற்கு இன்னொன்றை மாற்றுதல்;* to be exchanged. *உழவர் தாம் விளைத்த நெல்லில் தம் உணவிற்குவேண்டிய அளவு எடுத்துக்கொண்டபின் மிச்சமெல்லாம் காசாகும். 12. மதிப்புயர்தல்;* to become more valuable. *சென்ற இரண்டாம் உலகப் போரில் இரும்பெல்லாம் பொன்னாயிற்று. (உ.வ.). 13. செலவாதல்;* to be spent. *ஒரு வீடு கட்ட எவ்வளவாகும்? நான் இங்கு வந்து மும்மாதம் ஆகிறது. (உ.வ.). 14. பயன்படுதல்;* to be useful. *பலாக்கட்டை வீணைக்காகும். அவன் ஒன்றிற்கும் ஆகான். (உ.வ.). 15. முடிதல்;* to be done, finished, completed, exhausted. *கருமம் ஆகிறவரை கழுதையையுங் காலைப் பிடிக்க வேண்டும். (பழ.).*

ம., க., தெ., பட. ஆ; கு.வி.ஆயலி; கூ. ஆவ.

ஆக்காட்டு–தல் ā-k-kāṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *குழந்தை தன் தாய்க்கு ஆவென்று தன் வாயை விரிவாகத் திறந்து காட்டுதல் (கு.வ.);* to open the mouth wide as in pronouncing the back vowel 'a', as a child in response to its mother's command. (Nurs.).

[ஆ + காட்டு. காண் (த.வி.) → காட்டு (பி.வி.)]

ஆக்கு–தல் ākku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. செய்தல்;* to make, effect. "*எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்*" *(நாலடி. 124). 2. படைத்தல், தோற்றுவித்தல்;* to cause to be, create. "*அனைத்துலகு மாக்குவாய் காப்பா யழிப்பாய்*" *(திருவாச. 1:42). 3. அமைத்துக கொள்ளுதல்;* to arrange, make preparations. "*நொய்யும் நுறுங்குங் களைந்து அரிசியமைத்தாரை அரிசியாக்கினா ரென்ப*" *(தொல். சொல்.1. சேனா, உரை). 4. சமைத்தல்;* to cook. "*அஞ்சும் மூன்றும் உண்டானால் அறியாப் பெண்ணுங் கறியாக்கும்*". "*ஆக்கி அரைத்துப் போட்டவள் கெட்டவள், வழிகூட்டி அனுப்பினவள் நல்லவள்*". "*ஆக்குகிறவள் சலித்தால் அடுப்புப் பாழ், குத்துகிறவள் சலித்தால் குந்தாணி பாழ்*" *(பழ.).* "*ஆக்கப் பொறுத்த நமக்கு*" *(இராமநா. அயோத். 13). 5. நிலைமையுயர்த்துதல்;* to elevate, bring prossperity to. "*ஒன்னார்த்தெறலு முவந்தாரை யாக்கலும்*" *(குறள், 264). 6. வளர்த்தல்;* to rear, to bring up. *பிள்ளையை ஆளாக்க வேண்டும்.(உ.வ.). 7.பெருக்கிச் சொல்லுதல்;* to exaggerate. *ஒன்றை ஒன்பதாக்குவான், துரும்பைத் தூணாக்க லாமா? (உ.வ.) 8.பெருக்குதல்;* to increase, multiply. *தந்தை தந்த பத்தாயிரத்தைப் பத்திலக்க மாக்கினான். (உ.வ.). 9. மாற்றுதல்;* to change, convert. "*முல்லையை மருதமாக்கி*" *(கம்பரா. ஆற். 17). 10. பெறுதல்;* to receive. *11. உண்டாக்குதல்;* to bring into being. "*முயற்சி திருவினையாக்கும்*" *(குறள். 616).*

ம. ஆக்குக; க. ஆகிசு; தெ. காவின்சு.

ஆகிவா(வரு)–தல் āgivā(varu)-, *18 செ.கு.வி.*(v.i.) *நன்றாகக் கூடி வருதல். (நெல்லை.);* have auspicious progress (Tn.); to come to fruition in the desired way.

ஆகு–தல் āgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. உண்டாதல்;* to become, come to have. *உடம்பெல்லாம் புண்ணாகி விட்டது. 2. அமைதல்;* to be. *கம்பலை என்னுஞ் சொல்லிற்கு அழுகையரவம் என்பது பொருளாகும். 3. நிகழ்தல்;* to happen, occur. *உங்கள் மகனுக்குத் திருமணம் எப்போது ஆகும்? 'இன்றைக்கு ஆகிறது நாளைக்கு ஆகட்டும்' (உ.வ.). 4. வளர்தல்;* to grow. *நெல் பயிராகிவிட்டது, பையன் ஆளாகி விட்டான். 5. ஆக்கமுறுதல்;* to prosper, flourish. *'ஆகிறதும் பெண்ணாலே அழிகிறதும் பெண்ணாலே'. 6. ஒன்று இன்னொன்றாதல்;* transformation of one thing into another. *இவ்விருபதாம் நூற்றாண்டிற் காடெல்லாம் நாடாகிவிட்டது. 7. மாறுதல்;* to become, get changed. *கரும்பு காசாக வேண்டும். 8. சமைதல்;* to be cooked. *சோறு ஆகிறது. 9. ஒப்பாதல்;* to be equal. *'உயரவுயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?' 'கடிவாளமும் சேணமும் இட்டாலும் கழுதை குதிரையாகுமா?' (பழ.). 10. இழிதல்;* to diminish in value, depreciate. *'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?' (பழ.). 11. உயர்தல்;* to appreciate, rise in value. *இரண்டாம் உலகப் போரில் இரும்பெல்லாம் பொன்னாகி விட்டது. (உ.வ.). 12. இணக்கமாதல்;* to be intimate, close. *அன்பில்லாவிடத்து அண்ணனுக்கும் தம்பிக்கும் ஆகுமா? 13. உதவுதல்;* to be of use. *அவன் ஒன்றுக்கும் ஆகாதவன். (உ.வ.). 14. அடுத்தல், தகுதல்;* to befit someone, something. *அமைச்சனா யிருந்து கொண்டு*

இப்படிச் செய்வது உனக்கு ஆகுமா? (உ.வ.). 15. முதிர்தல்; to ripen. காய் பழமாகி விட்டது. (உ.வ.). 16. செய்ய முடிதல்; to be possible. 'உலக முழுதுங் கட்டியாண்டாலும் ஊழிற்குத் தப்ப எவராலாகும்?' (உ.வ.). 17. வினை முடிதல்; (work) to be done or accomplished. இன்று காலை வழிபாடு ஆகிவிட்டது. 18. செய்ய விலக்குண்டிருத்தல்; to be excepted. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழித்தலாகுமா'? 'தண்ணீரைப் பழித்தாலுந் தமிழைப் பழித்த லாகாது'. (பழ.). 19. செலவாதல்; to be expended, to cost. ஒரு வீடு கட்ட எவ்வளவு ஆகும்?

ம., க. ஆகு; தெ. ஆகு, ஆவு; குட. ஆக், ஆவு; து. ஆகு, ஆபி; கோத. ஆக்; துட. ஓங்; கூ. ஆவ; குவி. ஆய்யலி, ஆனை; நா. அண்டு; கொலா. அன்; பிரா. ஆன், ஆன்னிங்.

ஆங்கு–தல் āṅgu-, 7 செ.கு.வி.(v.i.) போதியதாதல்; to suffice, to be sufficiant. குழந்தைக்குப் பால் ஆங்கவில்லை. (சென்னை வ.)

ம. ஆங்ஙித்துரங்ஙக

ஆசறு–தல் āšaṟu-, 20 செ.கு.வி.(v.i.) 1. குற்றம் நீங்குதல்; to be free from blame or blemish. "ஆசறு நல்லநல்ல அவை நல்ல" (தேவா. 221. 1). 2. முடிதல்; to end, terminate, to be finished. "ஊழிசென் றாசறுங் காலத் தந்நிலையதாக" (கம்பரா. சரபங். 30).

ஆசி–த்தல் āši-, 11 செ.குன்றாவி.(v.t.) விரும்புதல்; to desire, wish earnestly, long for. "ஆசித்தார் மனதிற் புகுமுத்தம்" (திருப்பு. 403).

ஆசிடு–தல் āšiḍu-, 12 செ.கு.வி.(v.i.) 1. பொன் நகைகளிற் பற்றாசு வைத்தல்; to cement particles of gold. 2. நேரிசை வெண்பா முதற்குறளின் இறுதிச் சீர்க்கும் தனிச் சொற்கும் இடையே விட்டிசைப்பின், ஓரசையேனும் ஈரசையேனும் சேர்த்துக் கொள்ளல் (காரிகை.செய். 2, உரை); to affix, for preventing hiatus one or two metrical syllables to the third foot of the second line in nērišaiveṇbā. 3. செய்யுள் எதுகையில் ய், ர், ல், ழ் மெய்கள் நான்கிலொன்றை ஆசாக இடுதல்; to insert ய், ர், ல் or ழ் in the rhyming foot in one or two lines of a stanza. "யரலழ வாசும்" (இலக். வி. 748).

ஆசைப்படு–தல் āšai-p-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) ஆசை கொள்ளுதல்; to set one's heart upon. 18 செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to desire.

க. ஆசெவடு, ஆசெபடு; து. ஆசெபுனி; பட. ஆசெபடு.

ஆசைவை–த்தல் āšai-vai-, 4 செ.கு.வி.(v.i.) ஒன்றன் மேல் அல்லது ஒருவரிடம் விருப்பம் கொள்ளுதல்; to desire, to long for, place affection on an object.

க. ஆசெ கொள்ளு; பட. ஆசெபீ.

ஆட்டங்கட்டு[1]–தல் āṭṭaṅkaṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. நடித்து ஏமாற்றுதல்; to cheat by clever means. 2. நாடகத்தில் வேடம் புனைதல்; to enact a part in a drama. அவன் சிவனாக ஆட்டங் கட்டுகிறான் (உ.வ.).

க. ஆட்ட கட்டு

ஆட்டங்காட்டு[2]–தல் āṭṭaṅkāṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. அலையச் செய்தல்; to make one wander here and there. என்னை ஏன் இப்படி ஆட்டங்காட்டுகிறாய்? (உ.வ.). 2. மிகவும் வருந்தச் செய்தல்; to annoy some one. அவனை அளவுக்கு மீறி ஆட்டங்காட்டி விட்டான் (உ.வ.). 3. ஏய்த்தல், ஏமாற்றுதல்; to cheat. எனக்குப் பணம் தராமல் ஆட்டங்காட்டாதே (உ.வ.). 4. காலம் நீட்டித்தல்; to delay. இன்று நாளையென்று ஆட்டங்காட்டுகிறான் (உ.வ.).

ஆட்டங்காணு–தல் āṭṭaṅkāṇu-, 12 செ.கு.வி.(v.i.) 1. அசைவுறுதல்; to be shaky. பல் ஆட்டங் கண்டு விட்டது (உ.வ.). 2. தீங்கு நேர்தல், ஊறு நேர்தல்; to become harmful, decay. பதவி ஆட்டங் கண்டுவிடும் (உ.வ.). 3. விளையாட்டு அல்லது நாடகம் காணுதல்; to see a match or drama. 3 ஆம் ஆட்டங் கண்டேன். (உ.வ.).

ஆட்டம் போடு–தல் āṭṭam-pōḍu-, 16 செ.கு.வி.(v.i.) 1. கொட்டமடித்தல்; to display pleasure by way of shouting and behaving indecently. "என்னமாய் ஆட்டம் போடுகிறார்கள். (உ.வ.). 2. கொடுஞ் செயல் புரிதல்; to display arrogance. 'ஆட்டம் போட்டு அடங்கி விட்டான். (உ.வ.). 3. தெருக்கூத்து நடத்துதல்; to conduct a street drama. 'பழையனூரில் நாளைக்கு ஆட்டம் போடுகிறார்கள்' (உ.வ.). 4. சிறுவர்கள் விளையாடி ஆரவாரம் செய்தல்; children making a noise while playing. அப்பா! இந்தப் பிள்ளைகள் என்னமாய் ஆட்டம் போடுகிறார்கள் (உ.வ.).

ஆட்டமடங்கு–தல் āṭṭam-aḍaṅgu-, 21 செ.கு.வி.(v.i.) திமிர் அடங்குதல், செருக்கடங்குதல்; to get pride and arrogance become subdued. "ஆட்டமும் கூத்தும் அடங்கிற்று அத்தோடே" (பழ.).

ஆட்டமடித்தல் āṭṭamaḍi-, 4 செ.கு.வி.(v.i.) 1. கொட்ட மடித்தல், ஆரவாரம் செய்தல்; to shout, make a noise, to show pomposity. 2. விளையாட்டில் வெல்லுதல்; to win a game.

ஆட்டமாட்டு–தல் āṭṭamāṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. ஆடுமாறு செய்தல்; to make one dance. 2. சொன்னபடி செய்வித்தல்; to make one act as directed.

க. ஆட்டமாடிசு.

ஆட்டமாடு[1]–தல் āṭṭamāḍu-, 5 செ.கு.வி.(v.i.) 1. விளை

யாட்டாகப் பேசுதல்; to make fun. 2. விளையாடுதல்; to play. 3. ஏமாற்றுதல்; to cheat.

ஆட்டமாடு²–தல் āṭṭam āḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஒரு விளையாட்டை ஆடுதல்; to play a particular game. 2. ஒரு நாடகம் ஆடுதல்; to enact a drama.

க. ஆட்டவாடு; பட. ஆட்ட ஆடு.

ஆட்டமெடு–த்தல் āṭṭameḍu-, 4 செ.கு.வி.(v.i.) 1. நடுங்குதல்; to shiver. குளிரால் உடம்பெல்லாம் ஆட்டமெடுத்து விட்டது. (உ.வ.). 2. விளையாட்டில் வெல்லுதல்; to win a game. இரண்டாட்டமும் அவர்களே எடுத்துவிட்டார்கள் (உ.வ.). 3. வழி தேடுதல், வழிவகை மேற்கொளல்; to take a step, adopt a measure. (செ.அக.).

ஆட்டவை–த்தல் āṭṭavai-, 4 செ.கு.வி.(v.i.) பின்னாலிருந்து தூண்டிவிட்டுச் செயற்படுத்துதல்; to make one act according to the will of another who forces from behind. 2. படாதபாடு படுத்துவித்தல்; to make one undergo untoward sufferings. அவனை ஆட்டவைக்கிறேனா இல்லையா பார் (உ.வ.).

ஆட்டு–தல் āṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. அசைத்தல்; to move, shake, wave, rock as a cradle, to swing. 2. துரத்துதல்; to drive away, score off. "ஆட்டி விட்டாறலைக்கும்" (ஐந். ஐம். 34). 3. அலைத்தல்; to harass, afflict, vex. "ஒருவனாட்டும் புல்வாய் போல" (புறநா. 193). 4. வெல்லுதல்; to conquer. "இகலமராட்டி" (சிலப். 5, 225). 5. ஆடச் செய்தல்; to cause to dance, as a girl, a cobra or a monkey. "நச்சர வாட்டிய நம்பன் போற்றி" (திருவாச. 3, 106). 6. நீராடுதல், குளித்தல்; to bathe. "ஆன்பாறழைத்த வன்பா லாட்ட" (சேதுபு. கடவு. 12). 7. அரைத்தல்; to grind in a mill, as sesamum or sugar cane. "கரும்பாட்டிக் கட்டி சிறு காலைக் கொண்டார்" (நாலடி. 35).

ம. ஆட்டு; க.,பட. ஆடு; தெ. ஆடு; து. ஆடுனி.

[ஆடு (த.வி.) → ஆட்டு (பி.வி.)]

ஆட்படு–தல் āṭpaḍu-, 20 செ.கு.வி.(v.i.) 1. அடிமையாதல்; to become a devoted servant, commonly to a deity. "ஆனாலவனுக்கிங் காட்படுவாராரேடி" (திருவாச. 12 : 12). 2. தலைப்படுதல்; to become involved voluntarily. நானே ஆட்பட்டேன் (உ.வ.). 3. உயர்நிலையடைதல்; to raise from obscurity, become a man of some property and consequence. அவன் என்னால் ஆட்பட்டான் (யாழ்ப்.). 4. உடல் நலமடைதல்; to recuperate after sickness. (J).

ஆட்பார்–த்தல் āṭpār-, 4 செ.கு.வி.(v.i.) 1. ஆள் தேடுதல்; to be on the look out for *victims* as *Yama*. "ஆட்பார்த் துழலுமருளில் கூற்று" (நாலடி. 20). 2. பணி செய்தற்கு ஆட்பார்த்தல்; to recruit person for work. 3. வேற்றாள் வாராமல் நோக்குதல்; to watch against detection as an accomplice.

ஆடு–தல் āḍu-, 5 செ.கு.வி.(v.i.) 1. அசைதல்; to move, to wave, to swing, to shake, to vibrate. ஆடு கழை. 2. கூத்தாடுதல் (பிங்.); to dance, to gesticulate, to play. "அம்பலத்தாடுவான்" (பெரியபு. கடவுள் வா). 3. விளையாடுதல்; to play. "அகன்மலையாடி" (மணிமே. 10; 55). 4. நீராடுதல்; to bathe, to play in water. "பூக்கமழ் பொய்கை யாடச் சென்றோன்" (மணிமே. 17 : 32). 5. பொருதல்; to fight. "மற்றவனோ டாடி ..... மாய்ந்ததனை" (கந்தபு. யுத்த. சிங்கமு. 460). 6. அலைதல், திரிதல்; to go, to proceed, to wander about, to pass to and fro. "ஆடித் திரிந்து நான் கற்றதும் கேட்டதும்" (தாயு. சச்சிதா. 5). 7. முயலுதல்; to practice, to presevere, to make continued exertion. "இளையானே ஆடுமகன்" (பழமொ. 150). 8. பிறத்தல்; to be born. "மாசை மாக்கடன் மன்னவ னாடலின்" (சீவக. 911). 9. உலாவுதல்; to wander. "இளமழை யாடும்" (கலித். 41). 10. சுற்றி வருதல்; to rotate. பம்பரம் ஆடுகிறது. 11. சண்டையில் திரிதல்; to move as if in a fight. "வருந்தி ஆடினாள் பாடினாள்" (தனிப்பா. தி. 1. பக். 103). 12. அளவுக்கு மீறி அதிகாரஞ் செய்தல்; to exercise powers transgressing the limits. ஒரேயடியாய் ஆடாதே (உ.வ.). 13. மனந்தளர்தல், மனங்குழம்புதல்; to vacillate, to be confused. ஆடிய உள்ளம். 14. வலி தளர்தல்; to become weak. பல் ஆடிப் போயிற்று (உ.வ.). 15. ஒலித்தல்; to throb. வண்டாடும் பூம்பொழில். 16. துடித்தல்; to quiver. "வாட் கண்ணிடனாட" (பு.வெ. 12). 17. குலுங்குதல்; to shudder, to tremble. கையில் வளையாடுகிறது. 18. தடுமாறுதல் (புதுவை); to be disconcerted (Pond.). 19. பொறி (எந்திரம்) முதலியவற்றில் அரைத்தல்; to be crushed in a mill. "ஆடுகைக்கு பக்குவமான கரும்புபோல இனிதாயிருக்கிற மொழியையும்" (திவ். பெரியாழ். 2.9.5, வியா. பக். 464). 20. விழுதல்; to fall. "இவளிடையை யாசைப் பட்டாயிற்று கோட்டிடையாடிற்று" (திவ். பெரியதி. 1.2.3, அரும். பக். 65). 21.புணர்தல் (நாமதீப.); to cohabit. 22. செருக்குதல்; to be proud or conceited. 23. சொல்லுதல்; to tell. "அவர் சொல்லியவாறே யாடினார்" (திருவிளை. விறகு. 61). 24. செய்தல்; to do, perform, to fight. "அமராடுதல்" (பிரபோத. 27, 21). 25. நுகர்தல்; to enjoy. (சிலப். பதிக. 15). 26. பூசுதல்; to rub, to smear as with sandal paste. சந்தனம் ஆடிய மேனி. 27. அளைதல், துழாவுதல்; to mix, to stir. வண்டு தேனாடியது. ம.வி. (idio-u). 28. அசைந்தாடுதல், மென்மெல அசைதல்; to sway. தென்றலில் பூங்கொடி அசைந்தாடுகிறது. 29. ஆலையாடுதல், ஆலையிலிட்டு அரைத்தல்; to crush in a machine.

இன்று தான் கரும்பு ஆலையாடி முடிந்தது. 30. இணலாடுதல் - புணர்தல்; to copulate, as snake do. பாம்பு இணலாடுகிறது. 31. ஈயாடுதல் - ஈமொய்த்தல்; to swarm about. இனிப்புள்ள இடத்தில் ஈயாடும். 32. ஈயாடாமை-பொலிவின்மை; to show no emotion. அவன் முகத்தில் ஈயாடவில்லை. 33. உண்டாடுதல் - விருந்துண்டு மகிழ்தல்; tto revel. உண்டாடும் செல்வரா நாம்? 34. உரையாடுதல் - கலந்து பேசுதல்; to converse. அவரொடு நாங்கள் உரையாடினோம். 35. உறவாடுதல் நட்புக் கொள்ளுதல்; to become friendly. பகையாளி குடியை உறவாடிக் கெடு. 36. ஊடாடுதல் - இடைப்புகுதல்; to intervene. ஐயம் ஊடாடாத நட்பு. 37. எண்ணெயாடுதல் - செக்கிலிட்டு அரைத்தல்; to press oil seeds. ஒரு மூட்டை எள்ளை, எண்ணெயாடினர். 38. எடுத் தாடுதல் - சொல்லிக் காட்டுதல்; to mention and dwell on - as one's own good actions. பெரிய உதவி செய்துவிட்டவள் போல் அவள் என்னை எடுத்தாடி விட்டாள் (உ.வ.). 39. எதிராடுதல் - எதிர்த்துப் பேசுதல்; to oppose. என்னொடு எதிராட உனக்கென்ன துணிச்சல்? 40. ஒப்புக்கு ஆடுதல் - பற்றுள்ளவன் போல் நடித்தல்; to behave as if interested. அவன் ஒப்புக்கு ஆடுகிறான், நம்பாதே. 41. ஒளிந்தாடுதல் - நம்பிக்கையூட்டி ஏமாற்றுதல்; to deceive by giving hope. இந்த ஒளிந்தாட்டமெல்லாம் என்னிடம் செல்லாது. 42. (அ). ஓடியாடுதல் - விரைந்து செயற்படல்; to act vigorously. அவரால் முன்னைப் போல ஓடியாட முடியாது. (ஆ) ஓடியாடுதல் - அலைந்து வேலை செய்தல்; to run hither and thither, work hard. இளமைக் காலத்தில் ஓடியாடிச் சம்பாதித்தார். 43. (அ) ஓரியாடுதல் - தன்னை எவரும் தொடமுடியாதபடி நீருள் மூழ்கியும் நீந்தியும் நெடுநேரம் விளையாடுதல்; to play in water by diving and swimming so as to make it impossible for others to catch him. ஓரியாடுதலில் அவன் வல்லவன். (ஆ). ஓரியாடுதல் - துணைக்கு எவருமின்றித் தானே வருந்திப் பணியாற்றுதல்; to work all alone without help. அவளொருத்தியே ஓரியாடுகிறாள்; யாராவது துணைக்குப் போகக் கூடாதா? 44. கடலாடுதல் - விழாவின் போது கடலில் நீராடுதல்; to bathe or swim in the sea. இந்திர விழாவின் போது மக்கள் கடலாடுவர். 45. கண்டவ னோடாடுதல் - கண்டவர்களோடு பழகுதல்; to move with worthless people. கண்டவனோடாடிச் செல்வமெல்லாம் தொலைத்து விட்டான். 46. கண்ணாமூச்சியாடுதல் - ஒளித்து வைத்துப் பேசுதல்; play hide and seek. என் புத்தகம் எங்கே சொல், என்னோடு கண்ணாமூச்சியாட வேண்டாம். 47. (அ) கயிறாடுதல் - கயிற்றின் மேல் நடக்கும் கழைக்கூத்தாடுதல்; to perform on stretched rope. "ஆரியர் கயிறாடு பறையின்" (குறுந். 7). (ஆ) கயிறாடுதல் - கயிற்றின் இரு முனைகளையும் இரு கைகளில் பிடித்தவாறு மேல் கீழாக வீசிச் சுழற்றிச் சிறுமியர் குதித்தாடும் விளையாட்டு; to play with skipping ropes. அவள் நன்றாகக் கயிறாடுகிறாள். 48. களித்தாடுதல் - பெருமகிழ்ச்சியடைதல்; to rejoice. பிறந்த நாளன்று மாமா பரிசுப் பொருள்களோடு வரக்கண்டு குழந்தைகள் களித்தாடினர். 49. கழையாடுதல் - கழைக் கூத்தாடுதல்; to dance on a pole. அவன் கழையாடலில் வல்லவன். 50. காலாடுதல் - செல்வமுடையராதல்; to become rich. "காலாடு - போழ்தில் கழிகிளைஞர் வானத்து மேலாடு மீனின் பலராவர்" (நாலடி. 113). 51. (அ) காற்றாடுதல் - காற்று வீசுதல்; to blew. இன்று கொஞ்சமும் காற்றாடவில்லை. (ஆ) காற்றாடுதல் - உலர்தல்; to dry in the wind. ஈரத்துணியைக் காற்றாடப் போடு. 52. குடித்தாடுதல்; மதுவருந்திச் செல்வம் அழித்தல்; to squander wealth through drinking. அவன் சொத் தெல்லாம் குடித்தாடி விட்டான். 53. குறையாடுதல் - விலை குறைக்குமாறு கெஞ்சிக் கேட்டல்; to ask repeatedly to lower the price. நாளெல்லாம் குறையாடினாலும் விலை குறையாது. 54. கூத்தாடுதல் - மகிழ்ச்சியிற்றிளைத்தல்; to revel in happiness. முதல் வகுப்பில் தேறியதற்காக ஒரேயடியாகக் கூத்தாடுகிறான். 55. கெஞ்சிக் கூத்தாடுதல் - விடாமல் குறையிரந்து கேட்டல்; to beg, to request repeatedly. நீ என்ன தான் கெஞ்சிக் கூத்தாடினாலும் அவன் தரப் போவதில்லை. 56. கையாடுதல் - பணம் மோசடி செய்தல்; to swindle money. அவன் ஒரு பெருந்தொகையைக் கையாடி விட்டான். 57. (அ) கொண்டாடுதல் - புகழ்தல்; to praise. கொடுப்பவனை எல்லாரும் கொண்டாடுகின்றனர். (ஆ) கொண்டாடுதல் - விழாச் செய்தல்; to celebrate a festival. நாங்கள் பிறந்த நாள் கொண்டாடினோம். 58. கோலாடுதல் - அடித்தல்; to beat with a stick. கோலாடினால் குரங்காடும். 59. சதையாடுதல் - அன்பு (பாச) உணர்வு வெளிப்படுதல்; to express feeling of affection, attachment. தன்னை மதிக்காத மகனென்றாலும் அவன் நோய்வாய்ப்பட்டதறிந்து தந்தை கதறுகிறார்; தானாடாவிட்டாலும் தன் சதையாடுகிறது. 60. (அ) சாமியாடுதல், மருளேறியாடுதல்; to speak and act as if possessed by a spirit. அவன் நேற்றுச் சாமியாடினான். (ஆ) சாமியாடுதல் - அலைக்கப்படுதல்; to undergo suffering frequently. எனக்கு ஒன்றுந் தெரியாதென்று ஏய்க்கப் பார்க்கிறான்; அவனைச் சாமியாட வைக்கிறேனா இல்லையா பார். 61. சீறாடுதல் -

பிணங்கிக் கொள்ளுதல்; to get angry and quarrel. அவள் சீறாடிக் கொண்டு தாய்வீட்டுக்குப் போய்விட்டாள். 62. சும்மா ஆடுதல், காரணமின்றிப் பேசுதல் அல்லது செயற்படுதல்; to speak or act without reason. கண்டவன் பேச்செல்லாம் கேட்டு இப்படிச் சும்மா ஆடாதே. 63. சூறையாடுதல் - கொள்ளையடித்தல்; to rob, to plunder. திருடர் புகுந்து அவன் கடையைச் சூறையாடி விட்டனர். 64. சொல்லாடுதல் - பேச்சுக் கொடுத்தல்; to converse. அவனோடு சொல் லாடிப்பார். 65. சோற்றுக்கு ஆடுதல் - சோற்றுக்காகச் சொன்ன படி செய்தல்; to do anything just to eke out a living. அவன் சோற்றுக்கு ஆடுகிறவன். 66. சோற்றுக்குத் திண்டாடுதல் - வறுமையில் வாடுதல்; to starve and suffer from poverty. அவன் சோற்றுக்குத் திண்டாடுகிறான். 67. தலை கால் தெரியாமல் ஆடுதல் - செருக்குடன் நடத்தல்; to behave with pride. திடீரென்று பணக்காரனாகி விட்டதால் அவன் தலை கால் தெரியாமல் ஆடுகிறான். 68. தலைமேல் வைத்துக்கொண்டாடுதல் - அளவுக்கு மீறிப் போற்றுதல்; to praise excessively. தொடக்கத்தில் 'அவரே என் தலைவர்' என்று தலைமேல் வைத்துக் கொண்டாடினான். 69. தலை மேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுதல் - கட்டுக் கடங்காத பற்றால் அடிமையாதல்; to shower love in excess and become a slave to it. திருமணமான புதிதில் அவளைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினான். 70. தலையாடுதல் - தலைநடுங்குதல்; shake of head because of old age. அந்த மூதாட்டிக்குத் தலையாடுகிறது. 71. தலைவிரித்தாடுதல் - மிக்குப் பரவி மேலோங்கி நிற்றல்; to dominate by wide spreading. எங்கும் வறுமை தலைவிரித்தாடுகிறது. 72. திக்குமுக் காடுதல் - திணறுதல்; to be choked strangled. என்ன செய்வதென்றறியாமல் திக்கு முக்காடினான். 73. திண்டாடுதல் - எய்தப்பெறாது வருந்துதல்; to lament over not acquiring. செலவுக்குக் காசு இல்லாமல் திண்டாடினான். 74. திருமுழுக்காடுதல் - தெய்வத் திருமேனியை முழுக்காட்டுதல்; to ceremoniously immerse an idol in water. இறைவன் திருமுழுக்காடுங் காட்சி அடியார்க்கு இன்பந்தரும். 75. நகையாடுதல் - எள்ளி நகைத்தல்; to laugh derisively. அவன் கோலத்தைக் கண்டு அனைவரும் நகையாடினர். 76. (அ) நடமாடுதல் - அங்குமிங்கும் நடத்தல்; to walk about. அவர் நோய்வாய்ப்பட்டதிலிருந்து சரியாக நடமாடுவதில்லை. (ஆ) நடம் ஆடுதல் - நடனம் ஆடுதல்; to dance. இறைவன் நடம் ஆடும் கோயில் தில்லையம்பலம். 77. (அ) நாடகமாடுதல் - நடித்தல்; to act as in a play. நன்றாக நாடகமாடுகிறாள் இவள். (ஆ) நாடகமாடுதல் - நடித்து ஏமாற்றுதல்; to cheat by acting cleverly. இப்படி நாடகமாடியே என் செல்வமெல்லாம் கரத்து விட்டார்கள். 78. நாவாடுதல் - பேச்சுக்குப் பேச்சு எதிர்த்துப் பேசுதல்; to retaliate. இப்படி நாவாடினால் எந்த மாமியார் தான் பொறுத்துக் கொள்வாள்? 79. நிழலாடுதல் - குறிப்பாகத் தோன்றுதல்; to appear like a shadow. வெற்றி பெறுவேன் என்பதற்கான அறிகுறிகள் நிழலாடுகின்றன. 80. நின்றாடுதல் - நிலை பெயராமல் சுழலுதல்; to rotate firmy fixed to a spot. பம்பரம் நின்றாடுகிறது. 81. (அ) நீராடுதல் - நீர் நிலையிலிறங்கிக் குளித்தல்; to bathe in stagnant or running water. அவர் ஆற்றில் நீராடினார். (ஆ) நீராடுதல் - வாலாமை நீங்கக் குளித்தல்; to bathe after menstruation or child birth. மகவீன்ற அவள் இன்று நீராடினாள். (இ) நீராடுதல் - முழுக்க வியர்த்தல்; to perspire, to sweat. வெயிலில் இரைக்க இரைக்க ஓடி வந்ததால் அவர் உடம்பு நீராடிப் போயிற்று. 82. நீறாடுதல் - இடித்துப் பொடிபடச் செய்தல்; to pulverise. இருநிலக் கரம்பைப் படுநீ றாடி" (பெரும்பாண். 93). 83. (அ) நெளிந்தாடுதல் - ஒசிந்தாடுதல்; to dance twisting the waist. பாம்பைப் போல் அழகாக நெளிந்தாடுகிறாள். 84. (அ) பகடையாடுதல் - சூதாடுதல்; to gamble. தருமன் பகடையாடி நாடிழந்தான். (ஆ) பகடையாடுதல் - எளிதில் பணம் திரட்டுதல்; to earn by easy means. இதென்ன பகடையாடிக் கிடைத்த சொத்தா? 85. (அ) படமாடுதல் - உருவப்படம் அல்லது உருவச்சிலை இருத்தல்; presence of idol or photo. "படமாடுங்கோயில் பரமற் கொன்றீயில்" (திருமந்.). (ஆ) படம் ஆடுதல் - திரையிடப்படுதல்; to screen a film. அந்தக் கொட்டகையில் என்ன படம் ஆடுகிறது? 86. படமெடுத்தாடுதல் - சீறிப் பேசுதல்; to speak with fury. அவன் ஏன் இப்படிப் படமெடுத்தாடுகிறான்? 87. பணம் ஆடுதல் - செல்வம் மிக்கிருத்தல்; to have plenty of money. அவனிடம் பணம் ஆடுகிறது. 88. பணம் கட்டி ஆடுதல் - பணத்தைப் பந்தயமாக வைத்து ஆடுதல்; to lay money as bet. சீட்டாடுவோர் பணம் கட்டி ஆடுவது தவறு. 89. பணம் விளையாடுதல் - பணம் செலவழித்து நினைத்ததை முடித்தல்; to achieve things desired by bribing. அவன் வென்றதன் காரணம் பணம் விளையாடியதுதான். 90. பந்தாடுதல் - செம்மையாக உதைத்தல்; to give a severe kick. அந்தத் திருடன் கிடைத்திருந்தால் எல்லோரும் அவனைப் பந்தாடி விட்டிருப்பார்கள். 91. பம்பரமாடுதல் - ஓய்வின்றி அலைந்து வேலை

செய்தல்; to work hard without taking rest. ஒரே நேரத்தில் அத்தனை வேலை கொடுத்தால் என்ன செய்வது? என்னால் பம்பரமாட முடியாது. 92. பாய்ந்தாடுதல் - அஞ்சத்தக்க விரைவுடன் விளையாடுதல்; to play with such speed as to frighten the opponents. சடுகுடு விளையாட்டில் அவன் பாய்ந்தாடினால் எதிரணி தோற்பது உறுதி. 93. புகுந்து விளையாடுதல் - திறங்காட்டி ஆடுதல்; to play with remarkable skill. அந்த வேலையை அவனிடம் கொடுங்கள்; புகுந்து விளையாடி விடுவான். 94. பூத்தாடுதல் - அழகால் பொலிதல்; to shine with beauty. தாமரை பூத்தாடுகிறது. 95. பேயாடுதல் - தனக்குத் தானே வருந்துமாறு செய்தல்; to make one feel sorry for his own faults. எனக்கொன்றும் தெரியாதென்று நினைத்திருக்கிறான். நான் அனைத்தையும் வெளிப்படுத்தினால் அவன் பேயாடுகிறானா இல்லையா என்று பார். 96. பொடியாடுதல் - புழுதி படிதல்; to be covered with dust. "பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ" (சிலப். 19, 40). 97. (அ) போராடுதல் - தொடர்ந்து சண்டையிடுதல், இடைவிடாமல் முயலுதல்; to struggle continuously to work hard restlessly to achieve the objective. எத்தனை காலம்தான் போராடுவது? போராடாமல் நலம் விளையுமா? (ஆ) போராடுதல் - மல்லுக்கு நிற்றல். தொடர்ந்து வம்புச் சண்டைக்கு நிற்றல்; to argue unnecessarily. உன்னோடு போராட என்னால் முடியாது. 98. மஞ்சாடுதல் - வெண்மேகம் தவழ்தல்; white cloud seen above the hills or mountain. மலைமேல் மஞ்சாடுகிறது. 99. மல்லாடுதல் - விடாப்பிடிச் சண்டையிடுதல்; to quarrel wantonly. அவளோடு மல்லாட யாரால் முடியும்? 100. மாலாடுதல் - கயிற்றைப் பிடித்துத் தொங்கியவாறு ஊசலாடுதல்; to swing by gripping the rope with one hand. வேடன் மலைத் தேனழிக்க மாலாடுகிறான். (ஆ) மாலாடுதல் - வட்டக் காட்சியில் விளையாட்டு வீரர் கயிற்றூசல் கம்புகளை மாறிப் பற்றிப் பாய்ந்தாடுதல்; to perform an aerial trapeze. கோமாளி கூட வட்டக் காட்சியில் வேடிக்கையாக மாலாடிக் கீழே விழுகிறான். 101. மன்றாடுதல் - கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுதல்; to make a humble request. தன்னை மன்னிக்குமாறு மன்றாடினான். 102. மாறாடுதல் - மாறான கருத்தைக் கூறுதல்; to speak opposing a doctrine. இந்தக் கொள்கைக்கு அவன் சார்பாக இருப்பான் என்று நினைத்தோம். ஆனால் அவனே மாறாடுகிறான். 103. மூச்சாடுதல் - உயிரிருத்தல்; to breathe gently to show presence of life. அவன் இறக்கவில்லை, இன்னும் மூச்சாடுகிறது. 104. வழக்காடுதல் - வழக்குத் தொடுத்தல்; to file a case. உன் மீது வழக்காடப் போகிறேன். 105. வளையாடுதல் - மங்கலமாதல்; to become auspicious. வளையாடுங்கையால் உணவுண்ண வேண்டும். 106. வளைந்தாடுதல் - இசைந்து செல்லுதல், ஒத்துப் போதல்; to consent, lacquiesce. உன் விருப்பத்துக்கு என்னால் வளைந்தாட முடியாது. 107. வாயாடுதல் - தொடர்ந்து பேசித் தீர்த்தல்; to go on speaking to one's own satisfaction. என்னதானிருந்தாலும் இப்படி வாயாடக் கூடாது. 108. வாலாடுதல் - பலரிருக்கவும் வேண்டுமென்றே தான் முந்திச் செல்தல்; to carry out a work not wanted by. தலையாடுமுன்னே வாலாடுகிறது பார்த்தாயா? 109. வீம்புக்கு ஆடுதல் - தன் இயலாமையை வெளிக்காட்டிக் கொள்ளாமல் செயற்படுதல்; to do a work concealing one's inability. அந்தப் பயல் வீம்புக்கு ஆடுகிறான்; அந்த வேலை அவனால் முடியாது. 110. வேடங்கட்டியாடுதல் - திறமையாகப் பொய்த்து நடித்தல்; to act with talent. நீ என்னதான் வேடங்கட்டியாடினாலும் இங்கு ஒன்றும் நடக்காது. 111. வேண்டுமென்றே ஆடுதல் - வம்புக்கிழுத்தல்; to indulge in a quarrel wantedly. நான் சும்மாயிருந்தாலும் அவன் வேண்டுமென்றே ஆடுகிறான். 112. விலையாடுதல் - விலைபேசுதல் (நெல்லை); to bargain. 113. களையாடுதல் - பிஞ்சு பிடித்தல்; forming of young fruit. பலாமரம் களையாடியிருக்கிறது (நெல்லை.). 114. நாடாடுதல் - பலவிடங்களில் திரிதல்; to wander. அவன் ஒரு நாடோடி (உ.வ.). 115. உடனாடுதல் - இணை பிரியாது தோழமை கொள்ளுதல்; to become close friend. அவன் இவனுக்கு உடனாடி (உ.வ.).

ம., க., தெ., பட. ஆடு; கோத; து. ஆடுவி; குட., கொலா. ஆட்; துட. ஓடு; நா. ஆர்.

ஆண்டுவா–தல் (ஆண்டு வருதல்) āṇḍu-vāru-, 18 செ.கு.வி.(v.i.) பயன்பாட்டிற்குப் போதியதாதல்; to be sufficient for use. நித்தம் ஒருபடி தயிர் வாங்கியும் ஆண்டு வரவில்லை (உ.வ.).

ஆணாடு–தல் āṇāḍu-, 5 செ.கு.வி.(v.i.) விருப்பப்படி நடத்தல்; to do as one pleases. "அசோதை யாணாட விட்டிட்டிருக்கும்" (திவ். நாச்சி. 3, 9).

ஆணிதை–த்தல் āṇitai-, 4 செ.கு.வி.(v.i.) 1. பொருந்த ஆணியடித்தல்; to nail, fasten with nails, as reapers. 2. காலில் ஆணி குத்திப் பாய்தல்; piercing of nail in the foot.

ஆணைசெல்(லு)–தல் āṇai-cel(lu)-, 13 செ.கு.வி.(v.i.) அரசோச்சுதல், அதிகாரம் செயற்படல்; power or authority or command being implemented or put to practice.

ஆது–தல் ādu-, *12 செ.குன்றாவி.*(v.t.) *ஆதல்;* to come into existence, happen, occur, become, flourish. "*ஆ அது மென்னுமவர்*" *(குறள், 653) (நாலடி. 181 - 3, 359-1).*

ஆப்படி–த்தல் āppaḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மரம் முதலியவற்றைப் பிளக்க ஆப்பினை அடித்தல்;* to drive wedge to split wood etc. *2. ஒருவரை இக்கட்டில் மாட்டிவிடுதல்;* to entrap some one or to drive someone the wedge circumvent. *சரியான நேரத்தில் அவனுக்கு ஆப்படித்துவிட்டான்.*

ஆப்பிடு–தல் āppiḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *அகப்படுதல்;* to be entangled, to be caught. "*மண்ணைச் சுமந்தே யாப்பிட்டுக் கொண்டடிபட்ட*" *(தனிப்பா.ii.1,2).*

ஆம்பு–தல் āmbu, *5 செ.கு.வி.*(v.i.) *புல், இலை, தழை முதலியன ஈரமிகுதியால் புழுங்கிப் போதல் (மது.வ.);* decaying of shoots, leaves, grass etc; due to excessive dampness.

ஆய்[1]–தல் āy-, *2 செ.கு.வி.*(v.i.) *1. நுணுகுதல்;* to diminish, to be reduced. "*ஓய்தலாய்தல் .... உள்ளதன் நுணுக்கம்*" *(தொல். சொல். 330). 2. அழகமைதல்;* to be or become beautiful. "*ஆய்ந்த மோட்டினவான்*" *(சீவக. 2395).*

க. ஆய்.

ஆய்[2]–தல் āy-, *2 செ.கு.வி.*(v.i.) *1. முன்னாற்சாய்தல், முன்செலல்;* to lean forward, to go forward. *2. வருந்துதல்;* to suffer pain. "*மடவாய் ஆய சிறிதவள் செல்லாள்*" *(திணைமாலை. 17). 3. அசைதல்;* to shake. "*ஆய்மறியே*" *(திருக்கோ. 125, உரை). 4. படர்தல், பரவுதல், உருகுதல், கலத்தல்;* to spread, melt, mix. *5. வருதல்;* to come, arrive.

ம., க., தெ. ஆய்; து. ஆயுனி; பாலி. ஆய் (ஊதியம், இலாபம்)

ஆய்[3]–தல் āy-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. ஆராய்தல்; தேடுதல்;* to search, examine, investigate. "*ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான்*" *(குறள், 792). 2. சிந்தித்தல் (பிங்.);* to consider. *3. தெரிந்தெடுத்தல்;* to select, seek out. *கீரையை ஆய்ந்தாள் (உவ.). 4. கொண்டாடுதல்;* to celebrate, to extol. "*ஆயும் ஆடுதிறலாற்கு*" *(பு.வெ.16). 5. பிரித்தெடுத்தல், திரட்டுதல், சேர்த்தல்;* to seperate, sift, collect. *6. கொய்தல்;* to pluck, gather. *7. காம்பு களைதல்;* to nip off. *8. குத்துதல்;* to stab. *அரக்கன்றனைச் சூலத்திலாய்ந்தது*" *(தேவா.).*

க. ஆய், ஆயி; து. ஆயு, ஆயுனி; குட. ஆய்; பிரா. ஆச்; கோண். ஆச்ன; கூ. அஸ்க்; குவி. ஆசலி; குருக். ஆதா; மா. ஆதே; **Pers.** ac.

ஆய்வா(வரு)–தல் āyvā(varu)-, *18 செ.கு.வி.*(v.i.) *1. கூடி வருதல், மேம்பட்டு வருதல் (இ.வ.);* to bring good luck (Loc.). *ஆய்வந்த வீடு (தருமபுரி).*

ஆயத்தப்படு–தல் āyatta-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *அணியமாதல், (தயாராதல்) (கதி.அக.);* to get ready.

ஆர்[1]–தல் ār-, *2 செ.கு.வி.*(v.i.) *1. நிறைதல்;* to become full. "*ஆரப்பருக*" *(திவ். திருவாய். 10, 10, 5). 2. பரவுதல்;* to spread over. "*போதாரி வண்டெலாம்*" *(திணைமாலை. 95, உரை). 3. மனநிறைவாதல்;* to be satisfied. "*ஆராவமுதாம்*" *(திவ். திருவாய். 2, 5, 5). 4. பொருந்துதல்;* to combine with, belong to. "*சீரார் செழும்பந்து*" *(திவ். இயற். சிறியதி. 11, கண்ணி). 5. தங்குதல் (திவா.);* to abide by, stay. *6. உண்ணுதல்;* to eat, to drink. "*அமலைக் கொழுஞ்சோறார்ந்த பாணர்க்கு*" *(புறநா. 34, 14). 7. நுகர்தல்;* to experience. "*ஆர் வுற்றார் நெஞ்சமழிய*" *(கலித். 42, 13). 8. ஒத்தல்;* to resemble. "*மணியார் கண்டத் தெம்பெருமான்*" *(பெரியபு. திருநா. 314). 9. அணிதல் (பிங்.);* to wear, put on. *10. பெறுதல்;* to get, obtain. "*ஆர்கின்ற தின்றோ ரலரே*" *(கந்தபு. தேவரையே. 11).*

ம. ஆர்; க. ஆர், ஆரு; து. ஆருனி; கூ. சார்.

ஆர்[2]–தல் ār-, *2 செ.கு.வி.*(v.i.) *1. ஒலித்தல்;* to shout, roar, bellow. "*அலைகடற்றிரையி னார்த்தார்த் தோங்கி*" *(திருவாச. 3, 151). 2. போர்புரிதல் (திவா.);* to fight, make war. *3. தட்டுதல்;* to pat oneself. "*மார்பார்த்தல்*" *(இன்னா. 19). 4. உடைத்தல்;* to breadk into two. *5. அலர்தூற்றல்;* to slander, vilify. "*முனியவந் தார்ப்பது போலும்*" *(கலித். 33, 14). 6. நெருக்குதல், கட்டுதல்;* to bind, tie, gird. "*பாம்பொன்றார்த்து*" **(தேவா. 16, 11). 7. பூணுதல் (திவா.);* to put on, wear.

ம. ஆர்க்குக; க. ஆர், ஆர்ச்சு; தெ. ஆர்ச்சு; து. ஆர்குனி, ஆர்ப்புனி; கோத. ஆர்; குட. ஆர்; கூ. ஆர்; பிரா. ஆர்.

ஆர்ப்பரி–த்தல் ārppari-, *4 செ.கு.வி.*(v.i.) *1. ஆரவாரித்தல்;* to shout, roar, resound. "*மறைகளார்ப் பரிப்பும்*" *(மச்சபு. திரிபுரநிருமாணவ. 14). 2. தொடங்குதல்;* to begin. *(கதி. அக.).*

ஆர்வலி–த்தல் ārvali-, *4 செ.கு.வி.*(v.i.) *1. அன்பு கூர்தல்;* to love, to be extremely kind, affectionate. "*சிந்தை யாரவார்வலித்து*" *(தேவா. 997, 5). 2. மிகவிரும்புதல்;* regard with strong affection, to desire passionately.

ஆராய்–தல் ārāy-, *1 செ.குன்றாவி.*(v.t.) *1. ஆய்ந்து பார்த்தல், நோட்டமிடுதல் (சோதித்தல்);* to investigate, scrutinize, examine, explore. *2. கலந்தாய்தல், உசாவுதல் (ஆலோசித்தல்);* to consider, deliberate upon. *3. தேடுதல்;* to seek, search for. *4. ஒத்தொலி (சுருதி) சேர்த்தல்;*

to set the pitch of a musical instrument. "நரம்பின்... ஓசை செவியுற வாராய்த லாராய்தல்" (கூர்மபு. கண்ணன்மண. 148).

ம. ஆராச்ச; க. ஆரய்; து. ஆரய்சு; தெ. ஆரயு, ராசு.

ஆரி–த்தல் āri-, 4 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to sound. கொக்கரித்து ஆரவாரித்துப் போருக் கெழுந்தனர் (உ.வ.).

ஆலி–த்தல் āli-, 4 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; to make a noise, roar. "வெங் கூற் றாலிப்ப" (பு.வெ.4,4). 2. நீர் தூவுதல்; to spray water. "ஆலித்தே வாளி கண் மீண்டே யுறுகாலை" (கந்தபு. சூர. 401). 3. களித்தல்; to rejoice. "ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற" (திருப்பல். 9 : 8). 4. செருக்குறுதல்; to be proud. "பகலவனோடிகல் செயக்கருதியிருடிரண் டாலித் தெழுந்தன" (அரிச். விவாககா. 11) (த.சொ.அக.).

ம. ஆலிக்குக; க. ஆலிடு; தெ. ஆலின்சு.

ஆலு[1]–தல் ālu-, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல்; raise a noise, cry aloud. "அன்னச் சேவல் மாறெழுந்தாலும்" (புறநா. 128, 4). 2. களித்தல்; to rejoice. (திவ். திருமாலை, 14. வியா.). 3. ஆடுதல்; dance. "கரை நின்றாலு மொருமயில் தனக்கு" (மணிமே. 4, 11).

ம. ஆலுக.

ஆலு[2]–தல் ālu-, 5 செ.கு.வி.(v.i.) 1. நிறைதல் (த.சொ.அக.); to become full. 2. தங்குதல்; abide. (கலித். 36, 2, உரை).

ஆலைபாய்–தல் ālaipāy-, 2 செ.கு.வி.(v.i.) 1. ஆலையாட்டுதல்; to work a sugar-cane mill. "ஆலை பாயோதை" (சேதுபு. நாட்டு. 93). 2. அலைவுறுதல்; to move, toss as a ship. 3. மனஞ்சுழலுதல்; to be undecided, vacillating. "நெஞ்சம் அலைபாய்ந்துள்ள மழிகின்றேன்" (திருவருட். விண்ணப்பக் கலி. 406).

ஆலையாட்டு–தல் ālai-y-āṭṭu-, 15 செ.கு.வி.(v.i.) கரும்பாலைச் சுழற்றுதல், இயக்குதல்; to work a sugar-cane press.

க. ஆலெயாடு.

ஆவரி–த்தல் āvari-, 14 செ.குன்றாவி. (v.t.) மறைத்தல் (சி.சி.4.19 சிவாக்); to conceal. (செ.அக.).

ஆவரு–தல் āvaru-, 18 செ.கு.வி.(v.i.) 1. சுற்றிவருதல்; to go round. 2. உடுத்திக் கொள்ளுதல்; to dress. 3. அணிதல்; to wear.

ஆவலி–த்தல் āvali, 4 செ.கு.வி.(v.i.) 1. கொட்டாவி விடுதல்; to yawn. 2. வாய் திறத்தல்; to open the mouth. "அங்குள்ள பரிசனங்கள் ஆவலித் திரங்கிசூழ" (திருவிளை. வன்னியும்.12). து. ஆவல். 3. அழுதல், புலம்பல்; to weep, cry, lament. "ஆவலித் தூற்றுறு கண்ணிளன் (கம்பரா. பள்ளி. 57). 4. ஆசைப்படுதல்; to desire.

ஆவி–த்தல் āvi-, 4 செ.கு.வி.(v.i.) 1. வாய்விடுதல், வாய்திறத்தல்; to open the mouth so as to express some thing loudly. 2. பெருமூச்சு விடுதல்; to sigh, as expressing grief. "இரும்பசியது கூர வரவமா விக்கும்" (திவ். பெரியதி. 1, 2, 8). 3. கொட்டாவி விடுதல் (பிங்.); to gape, to yawn. 4. செ.குன்றாவி. (v.t.) 1. வெளிவிடுதல்; to let out, to smoke. "தூய பாத்திரம் ஆவர்த புகையைச் சுழற்றி" (சீவக. 2426, உரை). 2. வேகவைத்தல்; to boil, stream. 3. வெப்பமூட்டுதல்; to heat. 4. அழிதல், கெடுதல்; to delay, to parish. 5. ஆரத்தழுவுதல்; to embrace. "ஆவி ஆவி ஆவி ஆவி அன்பருள்ள முற்றதே".

க. ஆகலிசு (வாய்திற); ம. ஆவிக்குக; தெ. ஆவுலின்சு (வாய்திற); து. ஆவளு; கோத. ஆவச், ஆய்வ; து. ட ஓபள்யு, ஒய்யு; குட. ஆவளிச்; பர். ஆமு, ஆவு; கட. ஆமு; குரு. ஔவி, ஆனா; மா. ஆலொலெ; பிரா. ஆவானிங்.

ஆழ்–தல் āḻ-, 1. செ.குன்றாவி. (v.t.) அகழ்தல்; to dig. "ஆழ்ந்து காணாருயர்ந் தெய்த கில்லார்" (தேவா. 1153, 9). -2 செ.கு.வி. (v.i) 1. மூழ்குதல்; to sink, plunge, dive. "ஆழ்கலத் தன்ன கலி" (நாலடி. 12). 2. அழுந்துதல்; to be absorbed, immersed, overwhelmed. "அல்லலுற் றழுங்கி நெஞ்சிற் கட்டியங் காரனாழ்ந்தான்" (சீவக. 438). 3. தாழ்தல்; to get lowered. "இன்னலங் கடலுளாழ்ந்திறக்குமே கொலாம்" (நைடத. அன் - கண். 68). 4. ஆழமாதல்; to deep on. ஆழ்கடல். 5. பதிதல்; to enter, pierce. "ஆளிகளன்னவை..... நிறத் தினாழ்பவே" (கம்பரா. நகர. 64). 6. விழுதல்; to fall down. "கைம்முதல் துணிந்து களிறாழ" (சீவக. 282). 7. சோம்புதல் (திவா.); to be idle, lazy. 8. வருந்துதல் (பதினொ. காரைக். திருவிரட்டை. 6); to suffer. 9. மனம் ஒன்றி ஈடுபடல்; get involved. 10. கட்டல்; to bind.

ம., க. ஆழ்; தெ. ஆடு.

ஆழு–தல் āḻu-, 2 செ.கு.வி.(v.i.) 1. அழுந்தல்; to be immersed, absorbed. 2. தாழ்தல்; to be lowered. "சொல்லரும்பிற வியுட்டுன்பத் தாழுவார்" (கந்தபு. காசிபனு. 21). 3. முழுகுதல்; to sink, dive.

ஆள்விடு–தல் āḷviḍu-, 20 செ.கு.வி.(v.i.) ஆள்வாயிலாகச் செய்தி அனுப்புதல்; (ஈடும். 1. அவ.) to send a person, as a messenger.

ஆளறி–தல் āḷaṟi-, 2 செ.கு.வி.(v.i.) ஆள் அடையாளம் அறிதல்; to identify.

ஆளா(கு)–தல் āḷā(gu)-, 9 செ.கு.வி.(v.i.) 1. அடிமையாதல், அடியவனாதல்; to become a servant or devotee. (திவ். பெரியதி. 11.7.9). 2. பெருமையடைதல்; become eminent,

distinguished. *ஊரில் அவர்தான் ஆளாயுள்ளவர் (உ.வ.).* 3. *மகளிர் பருவமடைதல்;* attain puberty, used only with reference to girls. *அந்தப் பெண் ஆளாகி விட்டாள் (உ.வ.).* 4. *கட்டமைந்த உடலினனாதல்;* attain well built body. *பையன் நல்ல ஆளாய்விட்டான் (உ.வ.).*

ஆற்றிடைப்படு–தல் āṟṟiḍai-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. வழியிலிருத்தல்;* to be in the way. *2. வழியெதிர்படல்;* to meet in the way (W.).

ஆற்று¹–தல் āṟṟu-, *15 செ.கு.வி.*(v.i.) *1. வலிவுறுதல்;* to become strong, powerful. "*ஆற்றாருமாற்றியடுப*" *(குறள், 493).* 2. *செய்யக் கூடியதாதல்;* to be possible. "*ஆற்றுந் துணையும் பொறுக்க*" *(நாலடி., 75).* 3. *போதியதாதல்;* to be sufficient. "*தட்டு முட்டுவிற்று மாற்றாது*" *(பணவிடு. 225).* 4. *தப்பித்தல், உய்தல் (பிங்.);* to escape, obtain deliverance, survive.

ஆற்று²–தல் āṟṟu-, *12 செ.குன்றாவி.*(v.t.) *1. தேடுதல்;* to seed, acquire. "*ஆற்றிய மக்களென்று மருந்தவமிலார்களாகில்*" *(சீவக. 2986).* 2. *செய்தல்;* to do, perform. "*மகன் தந்தைக் காற்றுமுதவி*" *(குறள், 70).* 3. *உதவுதல்;* to give, as alms, to help, assist. "*ஒரு வீரொருவீர்க் காற்றுதிர்*" *(புறநா. 58).* 4. *நடத்துதல்;* to lead, guide, conduct. "*அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின்*" *(குறள், 46).* 5. *பொறுத்தல்;* to bear, as on the head or shoulders. "*ஆற்றுவாராற்றல் பசியாற்றல் (குறள், 225).* 6. *சுமத்தல்;* to sustain, carry. "*புடவி வைத்தாற்றிய பஃறலைப் பாந்தள்*" *(கல்லா. முருக. துதி.).* 7. *கூட்டுதல்;* to accumulate, as wealth. 8. *உவமையாக்குதல்;* to make equal to, compare with. "*வையகமும் வானகமும் ஆற்றல் அரிது*" *(குறள், 101).* 9. *சுதை மாவாற்குழம்பாகப் பூசுதல்;* to apply powder, etc. 10. *பசி முதலியன தணித்தல்;* to assuage, appcase, alleviate, mitigate. "*அரும்பசி களையவாற்றுவது கானார்*".

ம. ஆற்று; க. ஆறு; தெ. ஆந்து, ஆத்து; குட. ஆத்.

ஆறாடு–தல் āṟāḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. விழா முடிவில் ஆற்றில் அல்லது ஓடும் நீரில் நீராடுதல்;* to bathe at the close of a festival, said of a temple idol and its worshippers. "*ஏழுநாள் திருவிழாச் செய்து பங்குனி வியாகம் ஆறாடுவதாகவும்*" *(T.A.S.I.Vg. 1, 6).* 2. *ஆற்றில் நீராடுதல்;* to bathe in a river.

ம. ஆறாடு.

ஆறு–தல் āṟu-, *10 செ.கு.வி.*(v.i.) *1. நீங்குதல்;* to be relieved. "*ஆறாவிட ரென்வயிறுக் கிணையால்*" *(கந்தபு. அக்கி. 235).* 2. *ஓய்தல் (கதி.அக.);* to be tired, to cease. *அவன் ஆறி அடங்கிவிட்டான் (உ.வ.).* 3. *அடங்குதல், குறைதல்;* to be suppressed, to be reduced. "*ஐம்புலனும் ஆறியவர்களும்*" *(கம்பரா. தேரேறு. 25).* 4. *புண் காய்தல்;* to heal as a wound. "*தீயினாற் சுட்ட புண் ணுள்ளாறும்*" *(குறள், 129).* 5. *அமைதியாதல்;* to be preserved with patience, as chastity. "*ஆறிய கற்பு*" *(சிலப்பதி. 42, உரை).* 6. *வெப்பம் குறைதல், சூடு தணிதல்;* to abate, cool, grow cold. *ஆறின கஞ்சி பழங்கஞ்சி (பழ.).* 7. *குறைவாதல், தணிதல்;* to be appeased, alleviated, mitigated. *உண்டதும் பசியாறியது (உ.வ.).* 8. *இளைப்பாறல் (கதி.அக.);* to take rest. *இப்பொழுது தான் வந்தீர்கள்; ஆற அமர இருந்து போங்கள் (உ.வ.).*

ம., க., தெ. ஆறு; து. ஆருணி; நா. ஆர்; பர். ஏர்; கோண். ஆரானா (தண்ணீர்); குவி. ஆச; **Chinese -** rong (dissolve, throw away).

ï

இஃகு–தல் iggu-, *21 செ.கு.வி.*(v.i.) *இழுத்தல்;* pull, draw.

க., து. இக்கு.

இக¹–த்தல் iga-, *18 செ.குன்றாவி.*(v.t.) *1. தாண்டுதல் (திவா.);* to leap over, jump over. *2. கடத்தல். வரம்பிகந்தோடி (கம்பரா. நாட். 9);* to over flow, go beyond. *3. வரம்புகடத்தல்;* to transgress, violate, deviate from a rule or justice. "*நெறியிகந்து... நீரல செய்யும்*" *(காசிகா. சிவகன்மாவாயு. 28).* 4. *போதல்;* to depart, go away. 5. *நீங்குதல்;* to leave. "*முனிவிகந்துயர்ந்த*" *(நன். சிறப்புப்பா.).* 6. *நடத்தல்;* to walk. 7. *புறப்படுதல்;* to start. 8. *விட்டுவிடுதல்;* to abandon. 9. *பிரிதல்* "*இகந்துறைவரேதிலர்*" *(குறள், 1130);* to leave behind, go away from. 10. *பொறுத்தல் (பிங்.);* to bear, endure.

ம. இயய்க்குக; மரா. இக் (செல்லுதல்).

இக²–த்தல் iga-, *18 செ.கு.வி.*(v.i.) *1. புடைத்தல்;* to beat. *2. காழ்த்தல்;* to become hard, mature. *3. நெருங்குதல்;* to be close together, crowd. *4. பழித்தல்;* to abuse. *5. மீறுதல்;* to transgresse.

இகழ்–தல் igaḻ-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. அவமதித்தல்;* to slight, despise, opp. to *புகழ்.* "*இளையர் இனமுறையர் என்றிகழார்*" *(குறள், 698).* 2. *மறத்தல்;* to forget. "*செய்யா திகழ்ந்தார்க் கெழுமையுமில்*" *(குறள், 538).* 4 *செ.கு.வி.* (v.i.) *கவனிப்பின்மை;* to be careless, regligent. "*பிரியாரென விகழ்ந்தேன்*" *(திருக்கோ. 340).*

ம. இகழுக.

இகள்(ளு)–தல் igaḷ(ḷu)-, *2 செ.கு.வி.*(v.i.) *1. மாறுபடுதல்;* to be in disparity or disagreement with one. *2. எதிராடல்;* wrangle.

இகு¹–த்தல் igu-, *18 செ.குன்றாவி.*(v.t.) *1. கொல்லுதல் (சூடா.);* to kill, destroy. *2. வீழ்த்துதல் (திவா.);* to throw

down, to fell, as a tree. *3. தாழ்த்துதல்;* to hand down loosely, as hair, lower. "கணங்கொடோகையிற் கதுப்பிகுத் தசைஇ" *(மலைபடு. 44). 4. சொரிதல்;* to pour forth, to shed, as tears. "இகுத்த கண்ணீர்" *(புறநா. 143, 13). 5. ஓடச்செய்தல் (சூடா.);* to put to rout, as an army. *6. அறைதல்;* to beat, as a drum. "முரசுகடிப் பிகுப்பவும்" *(புறநா. 158, 1). 7. இசைக் கருவிகளை இசைத்தல்;* to play, as on an instrument. "தும்மருப் பிகுத்து" *(மலைபடு. 391). 8. அழைத்தல் (பிங்.);* to call, invite. *9. கொடுத்தல் (திவா.);* to give, bestow. *10. விரித்தல்;* spread out, to disheveled, as hair. "கணங்கொள் பேய்மகள் கதுப்பிகுத்தாட" *(சிலப்.26, 210). 11. மறித்தல் (நாநார்த்த.);* to stop, prevent, to hinder. *12. எறிதல் (நாநார்த்த.);* to throw. *13. துன்புறுத்தல் (நாநார்த்த.);* to harass pai or affliction. *14. துடைத்தல் (அக.நி.);* to wipe, to clean. *(செ.அக.). 15. புடைத்தல் (ஆ.அக.);* to winnow.

இகு[2]–த்தல் igu-, *21* செ.கு.வி.(v.i.) *1. ஒலித்தல்;* to produce a sound, as from a drum. "மழை யெதிர்படுகை முழவுக ணிகுப்ப" *(மலைபடு. 532) (செ.அக.). 2. தாண்டுதல் (நாநார்த்த.);* to leap, jump. *3. பரத்தல், பரவுதல்;* to spread.

இகுர்–தல் igur-, *21* செ.கு.வி.(v.i.) *1. முளைத்தல்;* to sprout, germinate. *2. மொட்டு அரும்புதல்;* to bud.

க., து. இகுர்.

இங்கு–தல் iṅgu-, *5* செ.கு.வி.(v.i.) *1. அழுந்துதல்;* to plant, go deep, sink. "வேனிறத்திங்க" *(களவழி. 41). 2. தங்குதல்;* to abide, stay. "இங்கு சுவை யின்னமிர்த மேந்த" *(சீவக. 2025). 3. குத்துதல்;* to stab. *4. துன்புறுத்தல்;* to tease. *5. எரிதல்;* to burn. *6. கரியாதல்;* to become black. *(செ.அக.).*

க. இங்கு.

இச்சி–த்தல் icci-, *4* செ.குன்றாவி.(v.t.) விரும்புதல்; to desire, wish, crave for, covet. "இச்சித்த இன்பம் நுகராமல் இளைத்த மெய்யாள்" *(பாரத. திரௌபதி. 75) (செ. அக.).*

இசி[1]–த்தல் iśi-, *4* செ.கு.வி.(v.i.) *1. நரம்பிழுத்தல் (கொ.வ.);* to contract, as the muscles in spasms. *2. நோவுண்டாதல் (கொ.வ.);* to ache, as the muscles from over exertion.

இசி[2]–த்தல் iśi-, *4* செ.குன்றாவி.(v.t.) *1. இழுத்தல்;* to pull, draw, drag. "முட்களிற் கட்டியிசித்திட" *(திருப்பு. 310). 2. முறித்தல் (திவா.);* to break off. *3. உரித்தல் (வின்.);* to strip off, as bark. *(செ.அக.). 4. ஒடித்தல் (ஆ.அக.);* to snap. *5. இணுங்கல், நகத்தால் களைந்தெடுத்தல்;* to nip.

இசி[3]–த்தல் iśi-, *4* செ.கு.வி.(v.i.) சிரித்தல் *(சது.);* to laugh. *(செ. அக.).*

H. hangsna.

இசை[1]–தல் išai-, *4* செ.கு.வி.(v.i.) *1. பொருந்துதல்;* to fit in, as one plank with another in joining. *2. ஒத்துச்சேர்தல்;* to harmonise; to conform, as time-measure and melody. தாளம் அராகத்திற்கு இசைந்துள்ளது. *3. உடன் படுதல்;* to consent, acquiesce, agree. "விண்பெறினு மிசையார் கொலைபொய்" *(திருநூற். 83). 4. கிடைத்தல்;* to acquire or get possession of. "ஈண்டு கனகமிசையப் பெறா அது" *(திருவாச. 2, 39). 5. இயலுதல்;* to be possible, to be with in one's power. "இசையாவொரு பொருளில்லென்றல்" *(நாலடி. 111) (செ.அக.).*

ம். இசயுக.

இசை[2]–த்தல் išai-, *3* செ.குன்றாவி.(v.t.) *1. உண்டு பண்ணுதல்;* to bring about. "இறுதியையிசைத்த கந்தனை" *(விநாயகபு. 75, 578). 2. கட்டுதல் (திவா.);* to bind, tie, fasten. *3. ஒத்தல்;* resemble. "கூற்றிசைக்கு மென" *(பாரத. இராச. 52). 4. மிகக் கொடுத்தல் (பிங்.);* to give lavishly. *(செ.அக.).*

இசை[3]–த்தல் išai-, *4* செ.கு.வி.(v.i.) *1. ஒலித்தல் (தொல். பொருள். 195);* to sound. *2. யாழ் முதலியன ஒலித்தல்;* to sound as a musical instrument. "பறையெழுந் திசைப்ப" *(கலித். 104, 29). 3.* செ.குன்றாவி. (v.t.) *1. சொல்லுதல்;* to disclose, express. "மார்பனிற்றென விசைத்த லோடும்" *(சீவக. 203). 2. அறிவித்தல்;* to indicate, signify. "காலையிசைக்கும் பொழுதொடு புலம்புகொள்" *(பதிற்றுப். 81, 5). 3. பாடுதல்;* to sing. "கோகிலப் பறவைகளிசைத்தல்" *(கந்தபு. நாட்டு. 44). 4. இசைக்கருவி இசைத்தல்;* to play, as on a flute. "யாழிசைக்குப்புக்கு" *(தொல். சொல். 310, உரை).*

இஞ்சு[1]–தல் iñju-, *15* செ.கு.வி.(v.i.) *1. சுவறுதல் (இ.வ.);* to e absorbed, as water in the ground. *2. சுண்டுதல் (இ.வ.);* to evaporate. *3. இறுகுதல் (வின்.);* to be curdled, as milk, become congealed; get thick, as ghee.

க. இங்கு; தெ. இங்கு, இகுசு, இவுரு, இமுரு, இனுகு, ஈகு; து. இங்கு.

இஞ்சு[2]–தல் iñju, *12* செ.குன்றாவி.(v.t.) *1. குத்துதல்;* to pierce, to stab. *2. வருத்துதல், துன்புறுத்துதல்;* to cause pain, inflict.

இட்டுக்ககட்டு–தல் iṭṭu-k-kaṭṭu-, *5* செ.குன்றாவி.(v.t.) *1. இல்லாததை ஏற்றிச் சொல்லுதல் (கொ.வ.);* to concoct. *2. கற்பனை செய்தல் (ஆ.அக.);* to draw upon the imagination, as in wrirting poetry or drama. 'அவன் கவி இட்டுக் கட்டுகிறான்' *(செ.அக.). 3. செயலை முடிக்க முனைந்து நிற்றல்;* to determine, to finish a deed.

இட–த்தல் iḍa-, *3* செ.கு.வி.(v.i.) *1. பிளவுபடுதல்;* to be cracked, broken. "களிறு வழங்கலினிடந்தமண்" *(கூர்மபு. அந்தக. 40). 2. உரிதல்;* to be stripped off, as

the outer covering. *'முத்துக்கள் தோல்தேய்ந்தனவும் தோலிடந்தனவும்' (S.I.I. 93, 49). 3 -* செ.குன்றாவி. (v.t.). *1.* தோண்டுதல் *(பெரியபு. கண்ணப்.183);* to dig, scoop out, hollow. ம. இட. *2.* பிளத்தல்; to force away through, as an elephant in battle; to root up, as a hog; to gore, as a bull. "பொன்பெயரோன் மார்பிடந்த" *(திவ். இயற். 1, 23). 3.* பெயர்த்தல்; to dislodge, as a stone, to throw up, as clods in a furrow. "எயிற்றுப் படையாலிடந்து" *(பு.வெ. 6, 13). 4.* குத்தியெடுத்தல், *(திவ். இயற். 1,2);* to fork. *5.* உரித்தல் *(திவா.);* to peel off. *(செ.அக.).*

இடக்கு–தல் iḍakku-, செ.கு.வி.(v.i.) விழுதல்; to fall down, fall. "மேனின்றிடிக்குமேல்" *(சினேந். 444).*

இடங்கொடு–த்தல் iḍaṅ-koḍu-, *4* செ.கு.வி.(v.i.) *1.* கண்டிப் பின்றி நடக்கவிடுதல்; to be indulgent or lax; to show lenience. சிறுபிள்ளைகட்கு இடங்கொடுத்தால் தலைமேறும். *2.* பிடிகொடுத்தல்; to yield, give in. "என்னவுமிடங்கொடாமலெதிருற" *(பாரத. நிரைமீட்சி. 124). (செ.அக.).*

க. எடகொடு.

இடங்கோலு–தல் iḍaṅ-kōlu-, *16* செ.கு.வி.(v.i.) *1.* ஊன்ற இடஞ்செய்து கொள்ளுதல் *(வின்.);* to gain a foooting, establish oneself in a place. *2.* முன்னேற்பாடு செய்தல்; to take preparatory measures. *(செ.அக.).*

இடம்படு–தல் iḍam-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) *1.* அகலித்தல்; to be broad, be spacious, to cover a vast extent; "இடம்பட வீடெடேல்" *(ஆத்திசூடி.). 2.* மிகுதியாதல்; to be intense, outreach. "இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும்" *(நாலடி, 116). 3.* விரிதல்; to expand. *(செ.அக.).*

ம. இடம்பெடுக.

இடம்பு–தல் iḍambu-, *15* செ.கு.வி.(v.i.) *1.* விலகுதல் *(யாழ்ப்.);* to keep aloof, as persons who are not on good terms with each other. *(செ.அக.). 2.* அகலித்தல்; to widen. *3.* பெருமை பேசுதல்; to boast.

ம. இடம்பல். *(பகைமை).*

இடமிடு–தல் iḍamiḍu-, *20* செ.கு.வி.(v.i.) பருத்தல்; to become large in size. இந்தப்புண் இடமிட்டுக்கொண்டு வருகிறது. *(உ.வ.).*

இடர்ப்படு–தல் iḍar-p-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) *1.* வருத்த முறுதல்; to suffer affliction. *2.* நலிந்துகொள்ளுதல்; to labour hard, to put forth considerable effort, as in comprehending the sense of a passage. இடர்ப்பட்டுப் பொருள் கண்டார். *(உ.வ.).*

க. எடர்பாடு.

இடறு–தல் iḍaṟu-, *9* செ.கு.வி.(v.i.) *1.* கால்தடுக்குதல்; to stumble, strike one's foot against. இடறின காலிலேயே இடறுகிறது. *(உ.வ.). 2.* துன்பப்படுதல்; to be afflicted, troubled. "ஈமினெமக்கொரு துற்றென் றிடறுவர்" *(திவ். திருவாய். 4, 1, 7) - 12* செ.குன்றாவி. (v.t.) *1.* எற்றுதல் *(பெரியபு. திருநாவுக். 110);* to strike against, kick, to kick off, as the elephant does the head of a criminal. *3.* மீறுதல்; to transgress. "எண்டரு நெறிமுறை யிடறு கீசகன்" *(பாரத. கீசகன். 33). 4.* ஊறுபடுத்துதல்; to wound. "ஊனிடறு வாளிகள்" *(பாரத. மணிமான். 30). 5.* தடுத்தல்; to obstruct, hinder. "இடையிலேன் கெடு வீர்காளிடறேன்மினே" *(தேவா. 717, 1). (செ.அக.). 6.* கடத்தல் *(ஆ.அக.);* to pass.

ம. இடறு; க. இடறு, எடறு; து. எட்டுனி.

இடாசு–தல் iḍāšu-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.* நெருக்குதல் *(வின்.);* to press. *2.* மோதுதல் *(வின்.);* to strike, collide. *3.* மேற்படுதல் *(வின்.);* to beat, as in a competition. *4.* அவமதித்தல் *(வின்.);* to disregard, neglect.

OE. dassche; **E.** dash; **Dan.** dske; **Sw.** daska.

இடாப்பு–தல் iḍāppu-, *15* செ.கு.வி.(v.i.) காலை அகலவைத்தல் *(வின்.);* to straddle in walking. *(செ.அக.).*

இடி[1]–தல் iḍi-, *4* செ.கு.வி.(v.i.) *1.* தகர்தல் *(கம்பரா. மகுடபங். 15);* to break, crumble, to be in ruins, as a wall; to fall to pieces. *2.* கரையழிதல்; to be washed away; to become eroded, as the bank of a river. *3.* முனை முறிதல்; to become bruised; to be broken, as the grain of rice. அரிசி இடிந்து போயிற்று. *(கொ.வ.). 4.* வருந்துதல்; suffer. "என்னோயுங் கொண்டதனை யெண்ணி யிடிவேனோ" *(அருட்பா. ஆற்றா. 5). 5.* மலைத்தல்; to be stunned, staggered. அவள் அந்த துக்க சமாசாரம் கேட்டு இடிந்து போனாள். *6.* முறிதல் *(பிங்.);* to break in two, part in two. *(செ.அக.).*

தெ., க., ம. இடி.

இடி[2]–த்தல் iḍi-, *4* செ.கு.வி.(v.i.) *1.* முழங்குதல்; to sound loud; to make a noise, as a gun, to roar, as a lion. "அரிமா னிடித்தன்ன" *(கலித். 15). 2.* இடியொலிபடுதல்; to thunder. "இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்" *(நாலடி. 100). 3.* நோதல்; to throb, to beat, to ache, as the head. தலையிடிக்கிறது. *4.* தாக்கிப்படுதல்; to come in contact with, hit against. *'*கதவு நிலை தலையில் இடிக்கும்'. *5.* மோதுதல்; to strike against, as a ship against the shore. கப்பல் கரையில் இடித்தது *(வின்.). 6.* சினத்தல்; to be angry, furious. "கூற்றின் னிடிக்குங் கொலைவேலவன்" *(சீவக. 432) - 4* செ.குன்றாவி. (v.t.) *1.* தூளாக்குதல்; to pound in a mortar; to bray with a pestle; to reduce flour. "பொற்சுண்ண மிடித்து நாமே" *(திருவாச. 9, 1). 2.* தகர்த்தல்; to beat so as to break, to batter to pieces, demolish,

shatter. 'வீட்டையிடித்துத் தள்ளினான்'. 3. நசுக்குதல்; to press; to crush, as sugarcane. "கரும்பினை... யிடித்துநீர் கொள்ளினும்" (நாலடி, 156). 4. தாக்குதல்; to push or thrust side-wise, as with the elbow. 'குந்தத்தால் இடித்தான்'. 5. முட்டுதல்; to attack with the horns, as a bull; to butt against the udder, as a sucking calf. அந்த மாடு இடிக்கும். 6. கழறிச் சொல்லுதல்; to reprove sharply or admonish incisively. "இடிப்பாரையில்லாத வேமரா மன்னன்" (குறள், 448). 7. கொல்லுதல்; to kill, slay. "இடிக்குங்கொலிவனை யென்பார்" (சீவக. 1108). 8. தோண்டுதல்; to dig. "கணிச்சிகளிற் கயம்பட நன்கிடித்து" (சீவக. 592). 9. கெடுத்தல்; to destroy, annihilate. "விருப்பிடித்து" (இரகு. தேனுவ. 71). 10. உதைத்தல்; to kick. 11. துடித்தல்; to palpitate. 12. இடியிடித்தல் (ஆ.அக.); to thunder.

ம. இடிக்குக; க. இடி, இடகு, டிகா, டகு; துட. இட்; து. எடபுனி, எடுபுனி, எட்புனி; தெ. டகொனு; கொலா. இட்.

இடிபடு–தல் iḍi-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) 1. தாக்கப்படுதல்; to be assaulted, elbowed. 2. நொறுங்குதல்; to e comminuted, as rice. இடிபட்ட அரிசி. 3. வெடிபடுதல்; to crackle, as fire. இடிபடமுழங்கிச் செந்தீ. (சீவக. 1084). 4. துன்பப்படுதல்; to be vexed or harried. 'அவன் தரித்திரத்தால் இடிபடுகிறான்'. (கொ.வ.) (செ.அக.).

இடிவிழு–தல் iḍi-viḻu-, 2 செ.கு.வி.(v.i.) இடி தரையில் இறங்குதல்; to strike, as lightning; to fall with a crash, as a thunderbolt. 'அடி வயிற்றில் இடி விழுந்தாற்போல' (பழ.).

இடு[1]–தல் iḍu-, 18 செ.குன்றாவி.(v.t.) 1. குத்துதல்; to hit against, thrust in. "இடுமருப்பியானை" (கலித். 24, 10). 2. வெட்டுதல்; to cut off. 3. போகடுதல்; to throw, cast away. "ஈந்தான் சிலைநிலத்தி லிட்டான்" (கந்தபு. வள்ளி. 36). 4. வைத்தல்; to place, deposit, put in, keep. "காயத்திடுவாய்" (திருவாச. 33, 8). 5. பரிமாறுதல்; to serve, distribute. 'இடுகிறவள் தன்னவளானால் அடிப்பந்தியிலிருந்தாலென்ன, கடைப்பந்தியி லிருந்தாலென்ன?' (உ.வ.). 6. கொடுத்தல்; to give, grant, bestow, as alms. "இட்டார் பெரியோர்" (நல்வ. 2). 7. சொரிதல் (திவா.); to pour, shower as rain. 8. அணிவித்தல்; to put on, as a bangle on one's wrist. "புங்கவனிடுவளை" (திருவிளை. வளையல். 27). 9. உவமித்தல் (சீவக. 2423, உரை); to compare. 10. குறியிடுதல்; to give, as a name to a new-born child, to assign. இட்டதொரு பேரழைக்க வென்னென்றாங்கு" (சி.போ. 2, 1, 1). 11. ஏற்றிச் சொல்லுதல்; to charge, to incriminate by laying a false charge against. "படாத தொரு வார்த்தையிட்டன ரூரார்" (சிலப். 9, 48). 12. சித்திரமெழுதுதல் (சீவக. 2383); to draw, as a figure. 13. உண்டாக்குதல்; to yield, generate. "கள்ளியிட்ட வகில்" (இரகு. நகர. 52). 14. முட்டையிடுதல்; to lay, as an egg. 15. தின்பண்டம் முதலியன உருவாக்குதல்; to form or fashion, to mould, as cakes. 'இன்றைக்கு எத்தனை அப்பளம் இட்டாய்?' (உ.வ.). 16. தொடுத்து விடுதல்; to discharge, as arrows. "கணையிட்டு" (திருப்பு. 4180). 17. கைவிடுதல்; to forsake, desert. "இளையவள நாகிட்டு" (சீவக. 1226). 18. தொடங்குதல் (திவ். திருவாய். 2,10, பன்னீ. ப்ர.); to begin. 19. செய்தல்; to do. "அரக்கனாங்காளமேகமிடுகின்ற வேள்வி" (கம்பரா. நிகும். 99). 20. புதைத்தல்; to bury. (சீவக. 1680, உரை). - து.வி. (v.caus.) ஒரு துணைவினை; auxiliary of verbs which become vbl.pple. of the past-tense before it. 'உரைத்திடுகின்றான்'. (செ.அக.).

ம., க., தெ., து. இடு; கோத. இட்; குட. ஈட்; து. இடுபிணி; நாய். இர்; கட. இர்; கொண். இட்; குவி. இட.

இடு[2]–த்தல் iḍu-, 20 செ.கு.வி.(v.i.) சிறுத்தல்; to be small. (வே.க.13).

இடுக்கு–தல் iḍukku-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கவ்வுதல் (ஆ.அக.); to take between the fingers or toes, to grasp or grip, as with pincers. 2. அணைத்தல்; to take under one's arm. "இடுக்குவார் கைப்பிள்ளை" (தாயு. பன்மா. 6). 3. நெருக்குதல்; to press or squeeze as between two boards. 'இடுக்கு மரம்' (வின்.).

ம. இடுக்கு; க. இடிகு.

இடுகு–தல் iḍugu-, 6 செ.கு.வி.(v.i.) 1. ஒடுங்குதல்; to shrink. "கண்களையிடுகக்கோட்டி" (சீவக. 2086). 2. சிறுகுதல்; to become shrivelled or dwindled. "இடுகிடைத்தோகாய்" (கம்பரா. சித்திர. 19). (செ. அக.). 3. சுருங்குதல் (ஆ.அக.); to contract.

இடுங்கு–தல் iḍuṅgu-, 15 செ.கு.வி.(v.i.) உள்ளொடுங்குதல்; to shrink, contract. "கண்ணிடுங்கி" (திவ். பெரியதி. 1,3,4). (செ.அக.).

இடை–தல் iḍai-, 4 செ.கு.வி. (v.i.) 1. சோர்தல் (சீவக. 446, உரை); to grow weary, as with long waiting. 2. மனந் தளர்தல்; to be damped in spirits. "இடைந்திடைந் துருகு மெளியனேன்" (தாயு. சிற்சு, 3). 3. பின் வாங்குதல்; to retreat, fall back. "அசமுகி யிடைந்து போனாள்" (கந்தபு. மகாகாளர். 20). 4. விலகுதல்; to make room, get out of the way. 'இடைந் தொதுங்குகை' (ஈடு. 5, 4, 6). 5. தாழ்தல்; to submit. 'அவனுக்குச் சிறிது இடைந்துபோ' (செ.அக.).

இடையறு–தல் iḍai-yaṟu-, 2 செ.கு.வி.(v.i.) தடைப்படுதல்; to be interrupted, to cease in the middle. "இன்பமிடையறா தீண்டும்" (குறள், 369) (செ.அக.).

இணக்கு–தல் iṇakku-, 12 செ.குன்றாவி.(v.t.) இசைவித்தல்

(திவ். திருவாய். 6, 2, 8); to cause to agree; to unite, connect, adjust, fit, persuade. *(செ.அக.).*

ம. இணக்குக; *தெ.* எனியின்சு *(ஒன்றாதல், இணைதல்).*

இணங்கு¹–தல் iṇaṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) மனம் பொருந்துதல், ஒத்துக்கொள்ளல்; to consent, comply with, agree to. "இச்சையாயின வேழையர்க்கே செய்தங் கிணங்கியே திரிவேனை" *(திருவாச. 41, 9). (செ.அக.).*

ம. இணங்கு; *க.* எணெ, எண; *தெ.* எனுசு, என்க; *குட.* எணெ; *து.* இனெ, இணை.

இணங்கு²–தல் iṇaṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) நட்புச் செய்தல்; to be friend. "இனிச் சிவபத்தர்களோடிணங்குக" *(சி.போ.12, 2) (செ.அக.).*

ம. இணங்கு *(நட்பு).*

இணர்–தல் iṇar-, *2 செ.கு.வி.*(v.i.) நெருங்குதல்; to be dense, to intensify. "இணரிய ஞாட்பினுள்" *(களவழி. 34) (செ. அக.).*

ம. இணர்.

இணை¹–தல் iṇai-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* சேர்தல்; to join, unite. "இணைந்துடன் வருவ திணைக்கை" *(சிலப். 3, 18, உரை). 2.* இசைதல்; to agree, acquiesce; to be suited. *3.* ஒத்தல் *(தணிகைப்பு. நாட்டு. 53);* to be like, to resemble. *(செ.அக.). 4.* கூடுதல்; to couple.

ம. இணையுக; *க.* எணெ, எண; *தெ.* எனயின்சு; *குட.* எணெ; *து.* இனெ, இணெ.

இணை²–த்தல் iṇai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.* கட்டுதல்; to fasten together, entwine, as a garland. "இணைத்த கோதை" *(திருமுருகு. 200) (செ.அக.). 2.* சேர்த்தல்; to link, interconnect, unite. *3.* உவமித்தல்; to compare. *(ஆ.அக.).*

ம. இணய்க்குக.

இதமி–த்தல் idami-, *4 செ.கு.வி.*(v.i.) *1.* பற்றுச்செய்தல்; to be attached. "இதமித்தல் பாசத்திலின்றி" *(சி.போ.10,2,5) (செ.அக.). 2.* ஒன்றித்தல் *(ஆ.அக.);* unite.

Skt. hita.

இமிர்¹–தல் imir-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* ஒலித்தல்; to sound, hum. "சுரும்பிமிர்ந் திம்மென" *(கலித். 119, 8). 2.* ஊதுதல்; to blow. "கைவைத் திமிர்பு குழல்" *(பரிபா. 19, 41).*

ம. இமிருக.

இமிர்²–தல் imir-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* உலர்தல்; to dry up. *2.* ஆறுதல், வற்றுதல்; to evaporate as in boiling, to disappear, as a boil. *3.* களை குன்றுதல் *(கருநா.);* to waste away. *4.* அவிதல், கெடுதல்; to get spoiled. 'அவனுக்குக் கண் இமிர்ந்து விட்டதா?' *(கொங். வ).*

க. இமரு, இமிரு, இமுரு; *தெ.* இவுரு, இமுரு.

இமிழ்–தல் imiḻ-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* ஒலித்தல்; to sound. "புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்" *(புறநா. 15, 4). 2.* யாழொலித்தல் *(பிங்.);* to buzz, to make a low continued sound, as the strings of a yāḻ. *3.* தழைத்தல்; to sprout, shoot forth. "மருதிமிழ்ந் தோங்கிய நளியிரும் பரப்பின்" *(பதிற்றுப். 23). 4.* மிகுதல்; to abound. "உண்மகிழுவகை யூக்க மிமிழ" *(பெருங். நரவாண. 7, 3).*

இமை¹–த்தல் imai-, *4 செ.கு.வி.*(v.i.) தூங்குதல்; to sleep. "பூணாக நோக்கி யிமையான்" *(கலித். 60) (செ.அக.).*

இமை²–த்தல் imai-, *4 செ.குன்றாவி.*(v.t.) இமை கொட்டுதல்; to wink. "அழித்திமைப்பின்" *(குறள். 775). - 4 செ.கு.வி.* (v.i.) *1.* ஒளிவிடுதல் *(திவா.);* to glitter, twinkle, shrine. *2.* சுருங்குதல்; to diminish, shrink. "இமையா வருங்கடன்" *(கல்லா. 7).*

ம. இமய்க்குக; *க.* சிமிடு, சிவடு, சிவிடு; *தெ.* சிமிடு.

இயக்கு–தல் iyakku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.* செலுத்துதல்; to drive, cause to go. "தேதாணியியக்குவான்" *(நாலடி. 136). 2.* தொழிற்படுத்துதல்; to activate and influence the movements of, as God prompts, all living beings. *3.* பழக்குதல்; to train or break in, as a bull or a horse. "காளையை இயக்குகிறது' *(வின்.). 4.* ஒலிப்பித்தல்; to cause, to sound. "கோடுவாய் வைத்துதுக் கொடுமணி யியக்கி" *(திருமுருகு. 246). 5.* நடத்துதல்; to conduct. "இயக்கக் கடவனாகவும்" *(S.I.I.i, 79) (செ.அக.).*

ம. இயக்குக.

இயங்கு¹–தல் iyaṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) *1.* அசைதல்; to move, stir. *2.*போதல் *(திவா.);* to go, travel, proceed. *3.* உலாவுதல் *(பிங்.);* to walk about, promenade. *(செ.அக.).*

ம. இயங்ஙக.

இயங்கு²–தல் iyaṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) ஒளி செய்தல் *(நாநார்த்த.);* to shine, glitter. *(செ.அக.).*

இய–த்தல் iya-, *3 செ.குன்றாவி.*(v.t.) கடத்தல்; to pass beyond; excel, transcend. "உணர்ந்துரு வியந்தவிந் நிலைமை" *(திவ். திருவாய். 1, 3 6) (செ.அக.).*

இயம்பு¹–தல் iyambu-, *11 செ.கு.வி.*(v.i.) *1.* ஒலித்தல்; to sound. "ஓசை... கடிமனையியம்ப" *(புறந. 36). 2.* இசைக்கருவி ஒலித்தல்; to sound, as a musical instrument. "வென்றிகெழு தொண்டகம் வியன்றுடியியம்ப" *(கந்தபு. வள். 92) - 4 செ.குன்றாவி* (v.t.). *1.* சொல்லுதல் *(பிங்.);* to say,

speak, utter. *2. துதித்தல்;* to praise. "ஞானக்கொடிதனை... இயம்புவோமே" *(குற்றா. குற. 7) (செ.அக.).*

ம. இயம்புக.

இயம்பு[2]–தல் iyambu, *11 செ.கு.வி.*(v.i.) கூப்பிடுதல்; to call, as for help. "மடப்பிடி... நெடுவரை யியம்பும்" *(மலைபடு. 309, உரை) (செ.அக.).*

இயல்(லு)–தல் iyal-, *13 செ.கு.வி.*(v.i.) *1.* கூடியதாதல்; to be possible. "இயல்வது கரவேல்" *(ஆத்திசூ.). 2.* நேர்தல்; to befall, happen. "இயன்றதென் பொட்டினாலிவ்விட முனக்கு" *(கம்பரா. குகப். 40). 3.* பொருந்துதல்; to be associated with. "வெயிலியல் வெஞ்சுரம்" *(வின்.). 4.* தங்குதல்; to abide. "மாவியல்கின்ற வீரமகேந்திர புரத்துக்கு" *(கந்தபு. ஏமகூ. 4). 5.* செய்யப்படுதல்; to be made or constituted. "சிறியவர்கட் கெற்றாலியன்றதோ நா" *(நாலடி. 353). 6.* அசைதல் *(திருமுருகு. 215);* to move, dance, frisk about. *7.* நடத்தல்; to go on foot; to move forward. "அரிவையொடு மென்மெலவியலி" *(ஐங்குறு. 175). 8.* உலாவுதல்; to walk about gaily. "பீலி மஞ்ஞையினியலி" *(பெரும்பாண். 331) - 8 செ.குன்றாவி.* (v.t.) *1.* உடன்படுதல்; to accept, agree to. "யாதுநீ கருதிற் றன்ன தியன்றனன்" *(ஞானவா. வைராக். 42). 2.* அணுகுதல் *(கலித். 83, 16);* to draw near, approach. *3.* ஒத்தல்; to resemble, to be like. "பொன்னியலுந் திருமேனி" *(திருவாச. 49, 6). 4.* போட்டியிடுதல்; to complete, wager. "இயலுமாலொடு நான்முகன்" *(தேவா. 601, 8) (செ.அக.).*

ம. இயலுக; க. ஈலு (விலங்குகள் மக்களுடன் கொள்வது போன்ற பிணைப்பு); து. இயவுனி.

இயற்று–தல் iyaṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.i.) *1.* செய்தல்; to do, make, perform, effect, execute. "இசையாதெனினு மியற்றியோ ராற்றால்" *(நாலடி. 194). 2.* நடத்துதல்; to cause to act, direct or control the movements of "நெஞ்சேயியற்றுவாயெம்மொடு" *(திவ்.இயற்.பெரிய திருவந். 1.). 3.* பொருள்தேடல்; to acquire, earn. "ஒண் பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு" *(குறள், 760). 4.* தோற்றுவித்தல்; to create, germinate. "கெடுக வுலகியற்றி யான்" *(குறள், 1062). 5.* நூல் செய்தல்; to compose; to write, as a book. 'சாத்தனார் இயற்றிய மணிமேகலை'. *(செ.அக.).*

ம. இயற்றுக; க., தெ. எசகு; து. இயருனி, இயவுனி.

இயை–தல் iyai-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* பொருந்துதல்; to be agreeable, be palatable. "என்போடியைந்த வமிழ்து" *(நாலடி. 210). 2.* இணங்குதல்; to agree, harmonise. *3.* நிரம்புதல்; to become quite full. "மாக்கடல் கண்டியைய மாந்திக் கார் தோன்ற" *(திணை மாலை. 100) - 2 செ.குன்றாவி.* (v.t.) ஒத்தல் *(நன். 367);* to resemble. *(செ. அக.).*

ம. இயயுக; க. ஈலு; தெ. ஈயகோலு, உய்யகோலு (ஒப்புகை.); து. இயருனி, இயவுனி.

இரங்கு[1]–தல் iraṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) *1.* கூறுதல்; tell, speak. "புலம்பெலாந் தீர்க்குவேமன் னென்றிரங்குபு" *(கலித். 83-23). 2.* ஈடுபடுதல்; to be absorbed, involved. "இரங்குங் கூம்பும்" *(திவ். பெரியாழ். 3, 6, 10).*

இர–த்தல் ira-, *3 செ.குன்றாவி.*(v.t.) *1.* பிச்சையெடுத்தல்; to beg alms, solicit aid, seek livelihood by begging. "இரந்து முயிர்வாழ்தல் வேண்டின்" *(குறள், 1062). 2.* வேண்டுதல்; to pray, beseech, entreat, solicit. "இனி யுன்னையென்னிரக்கேனே" *(திருவாச. 22, 5). (செ. அக.).*

ம. இரக்குக; க. எரெ; தெ. எரவு (கடன்); து. எரவு; குவி. ரீசல லசலி, ரிஹனை; குட. எர.

இரட்டி[1]–த்தல் iraṭṭi-, *4 செ.கு.வி.*(v.i.) இகழ்தல்; to slight, despise. "இதை நாம் இரட்டிக்கப் போகாது" *(தமிழறி. 43) (செ.அக.).*

இரட்டி[2]–த்தல் iraṭṭi-, *11 செ.குன்றாவி.*(v.t.) *1.* இரு மடங்காக்குதல்; to double. *2.* திரும்பச் செய்தல்; to repeat; to continue crosswise as ploughing. "அடியிரட்டித் திட்டாடு மாட்டு" *(பு.வெ.2, 8). 4 செ.கு.வி.* (v.i) *1.* ஒன்று இரண்டாதல்; to be doubled. மகரம் இரட்டித்தது. *2.* மீளவருதல்; to return, relapse. 'நோய் இரட்டிக் கின்றது' *(வின்.). 3.* மாறுபடுதல்; to differ from; to be discrepant; to disagree. "இந்தச் சாட்சி அந்தச் சாட்சிக்கு இரட்டிக்கிறது" *(வின்.) (செ.அக.). 4.* ஒவ்வாமை; unfitness. *(ஆ.அக.).*

ம. இரட்டிக்குக; தெ. ரெட்டின்சு.

இரட்டு–தல் iraṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* இரட்டித்தல்; to double, as a consonant in ***sandhi*** or combination of words. "டற வொற்றிரட்டும்" *(நன். 183). 2.* மாறியொலித்தல்; to sound alternately, as the beating of a double drum or the bells on an elephant. "இலங்கு வெள்ளருவியொடு சிலம்பகத் திரட்ட" *(மதுரைக். 299). 3.* ஒலித்தல்; to sound. "நுண்ணீராகுளியிரட்ட" *(மதுரைக். 606). 4.* அசைதல்; to wave, as a leaf; to oscillate. "மென்கா லெறிதலினிரட்டல் போலும்" *(கந்தபு. திருவா. 111). 5 செ.குன்றாவி.*(v.t.) *1.* வீசுதல்; to wave alternately on apposite sides, as fly-whisks in a procession. "குளிர்சாமரையிருபாலுமிரட்ட" *(பாரத. அருச்சுனன்றவ. 150). 2.* கொட்டுதல்; to cause to sound; beat, as a drum. "அரசுடை வாணன்.... குடமுழ விரட்ட" *(கல்லா. 21). 3.* உச்சரித்தல்; to pronounce; utter. "அஞ்செழுத்துக் குறையா திரட்ட" *(கல்லா. 57). 4.* தெளித்தல்; to sprinkle, as water. "நீரையிரட்டிக்

கொள்ளுமா போலே" (திவ்.திருக்குறுந். 1, வ்யா) (செ.அக.).

இரட்டுறு–தல் iraṭṭuṟu-, செ.கு.வி.(v.i.) 1. இரு பொருள்படுதல்; to be ambiguous. 2. ஐயுறுதல்; to be in doubt. "இரட்டுற வெண்ணெலிர்" (சேதுபு. பலதீ. 14). 3. மாறுபடுதல்; to change, metamorphose. "தானத்து மணியுந் தானு மிரட்டுறத் தோன்றினானே" (சீவக. 387).

இரண்டறக்கல–த்தல் iraṇḍaṟa-k-kala-, 3 செ.கு.வி.(v.i.) 1. வீடுபேறடைதல்; to so realize God in one's self as to merge emotionally with him; to attain salvation. (செ.அக.). 2. ஒன்றாகக் கலத்தல்; to become merged into one.

இரற்று–தல் irarṟu-, 15 செ.கு.வி.(v.i.) 1. ஓலமிடுதல்; to shout; utter a shriek as a bird. "கடலினாரையிரற்றும்" (ஐங்குறு. 114). 2. ஒலித்தல்; to sound.

இரி[1]–தல் iri-, 4 செ.கு.வி.(v.i.) 1. கெடுதல், தோற்றோடுதல்; to be destroyed. "மாறிரியச்சீறி" (பு.வெ.2, 9). 2. ஓடுதல்; to run, to flee away, as a defeated army; to scamper away through fear. "புனலொழுகப் புள்ளிரியும்" (நாலடி. 212). 3. விலகுதல்; to fall away, as a garment; to drop; to recede. "உத்தரீயங்களு மிரிய வோடுவார்" (கம்பரா. ஊர்தேடு. 51). 4. வடிதல்; to drop as perspiration; to ebb as the tide. 5. அஞ்சுதல் (திவா.); to fear, dread (செ.அக.). 6. பின்னுக்கோடுதல் (மு.தா); to retreat.

ம. இரிதல் (அழிவு).

இரி[2]–த்தல் iri-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. தோற்றோடச் செய்தல்; to rout, defeat. 2. கெடுத்தல்; to destroy, ruin; to dispel. "வெஞ்சிலைக் காய்ந்திரிக்கும் புருவக் கருங்கண்ணியர்" (சீவக.1769). 3. ஓட்டுதல்; to drive away, scare away. "மள்ளர் குழுஉக்குரல்... அன்ன மிரிக்கும்" (கம்பரா. நாட். 32) (செ.அக.).

இரு–த்தல் iru-, 2 செ.கு.வி.(v.i.) 1. உளதாதல்; to exist. 'ஊரிலே ஏரி இருக்கிறது' (தெ.ஆ.). 2. நிலை பெறுதல்; to remain. "வலம் வரும்படியிருப்பது கயிலைமால் வரையே" (கந்தபு.திருக்கைலாச.12). 3. உட்காருதல்; to sit down. "நிற்றலிருத்தல் கிடத்தலியங்குதலென்று" (நாலடி. 334). 4. உள்ளிறங்குதல்; to sink, as a foundation; to disappear, come down. 'சுவர் இருந்து போயிற்று'. 5. உயிர்வாழ்தல்; to live. "நெடுநாளிருந்த பேரும்" (தாயு. பரிபூ. 10). 6. அணியமாயிருத்தல்; to be ready to act., to be in readiness for any duty or project; to be on the pont of acting or going. 'மீன் பிடிக்க இருக்கிறான்' (கொ.வ.). 7. நினைத்தல்; to fancy; imagine, expect, hope. 'நம்பிமா ரென்றிருந்தோம்' (தமிழ் நா. 216). - இடை (part.) ஒரு துணை வினை; auxiliary verb. 'எழுந்திருந்தான்'. (செ.அக.).

ம. இரி; க. இரு; ஆத். இக்கத்தி.

இருட்டு–தல் iruṭṭu-, 15 செ.கு.வி. (v.i.) 1. இருளடைதல்; to grow dark. 2. மந்தாரமிடுதல்; to darken; as when clouds gather. 'வானம் இருட்டி வருவதால் மழை விரைவில் வரும்' (செ.அக.).

ம. இருட்டுக; க. இருளாகு.

இருத்து–தல் iruttu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. உட்காரச் செய்தல்; to cause to sit. "உபசாரமுடனருகுறவிருத்தி" (பாரத. நாடுகரந். 31). 2. தாமதிக்கச் செய்தல்; to detain, cause one to wait for a time. 3. அழுத்துதல்; to press down; to bear upon, as with a style or other instrument. "பொன் மௌலியையிருத்தினான்" (பாரத. பதினெட்டாம். 187). 4. அடித்து உட்செலுத்துதல்; to beat down, as a floor, to drive in, as a nail, to make firm or compact by beating. 'ஆணியை உள்ளே இருத்து'. 5. நிலை பெறச் செய்தல் (குறள், 660, உரை); to fix permanently make stationary. - 5 செ.கு.வி.(v.i.) கீழிறங்குதல்; to sink down, as a foundation. "வீடு இருத்திக் கொண்டது" (செ.அக.).

இருமு–தல் irumu-, 8 செ.கு.வி.(v.i.) இருமல்; cough. "இருமியிளைத்தீர்" (திவ். பெரியதி. 1, 3, 8) (செ.அக.).

க., பட. கெம்மு; தெ. செருமு.

இருள்(ளு)–தல் iruḷ(ḷu)-, 16 செ.கு.வி.(v.i.) 1. ஒளிமங்குதல்; இருட்டாதல்; வானம் மேகத்தால் மறைத்து இருட்டாதல்; to become dark, as the sky over-cast, to become dim, to become obscure. 2. கறுப்பாதல்; to be black in colour. "இருண்ட கல்லையும்" (கம்பரா. வரைக்காட்சி). 3. அறியாமை கொள்ளுதல்; to be darkened, as the mind. "இருளாத சிந்தையராய்" (திவ். இயற். 3,19) (செ.அக.).

ம. இருளுக.

இரை[1]–தல் irai-, 2 செ.கு.வி.(v.i.) ஒலித்தல்; to sound; to roar, as the sea; to rumble as a crowd; to wamble, as the bowels; to whizas birds when flying. (செ.அக.).

ம. இர.

இரை[2]–த்தல் irai, 2 செ.கு.வி.(v.i.) 1. ஒலித்தல் (பாரத. வெளிப்பாட்டு. 5); to cry out, as in anger. 2. சீறுதல்; to hiss and dart forth as a snake. "இரைக்கின்ற பாம்பினை' (பதினொ. காரைக். திருவீரட். 7). 3. மூச்சு வாங்குதல்; to pantbreathe hard; to palpitate, as from running; to wheeze, as an asthmatic. "ஈண்டு துன்பத்திரைத்திட வோடினான்" (உபதேசகா. அயமுகி. 55). 4. வீங்குதல்; to puff up; to swell, as the body

sometimes does after the use of sulphur. *(செ.அக.).*

ம. இரய்க்குக.

இரையெடு–த்தல் irai-y-eḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. பறவை, பாம்பு முதலியன உணவு கொள்ளுதல்;* pick up food, as birds; to catch prey, as snakes. *2. உணவு தின்னுதல்;* to eat food, usu. said of dogs and cattle. *3. அசை போடுதல்;* to chew the cud. *(செ.அக.).*

இலக்கு¹–தல் ilakku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. ஒளிர்தல்;* to brighten, cause to blaze. "*எரியத்திரத்திலக்கியே*" *(சைவச. பொது. 294). 2. அடையாளமிடுதல் (ஆ.அக.);* impress a sign or stamp for identification. *(செ.அக.).*

இலக்கு²–தல் ilakku, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. குத்துதல்;* to pierce. *2. வரைதல்;* to draw, delineate. '*இரேகை யிலக்குக*' *(சைவச. பொது. 274). 3. தைத்தல்;* stitching. *(செ.அக.).*

இலக்குவை–த்தல் ilakku-vai-, *4 செ.கு.வி.*(v.i.) *குறிவைத்தல்;* to take aim. *(செ.அக.).*

இலகு–தல் ilagu-, *7 செ.கு.வி.*(v.i.) *1. விளங்குதல் (திவ். திருவாய். 8, 8, 1);* to shine, glisten, glitter. *2. மிகுதல் (சங்கற்பநி. சங்கிராந்த. 96);* to increase aggravate, expand. *(செ.அக.).*

ம. இலகு.

இலங்கு¹–தல் ilaṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) *ஒளிவிடுதல் (பிங்.);* to shine, emit rays, gleam, glitter, be bright. *(செ.அக.).*

இலங்கு²–தல் ilaṅgu-, *15 செ.கு.வி.*(v.i.) *செல்லுதல், போதல்;* to go to pass.

இலவு–தல் ilavu-, *8 செ.குன்றாவி.*(v.t.) *எழுதுதல்;* to write.

இலிர்–த்தல் ilir-, *9 செ.குன்றாவி.*(v.t.) *சிலிர்த்தல்;* to stand erect, as the hair stands on end from fright, rapture, anger or cold. "*இலிர்த்த மெய்ம்மயிர்*" *(சீவக. 3009) - 4 செ.கு.வி.* (v.i.) *தளிர்த்தல் (திவா.);* to sprout, germinate. *(செ.அக.).*

க. எலர்க; தெ. எலருச்சு.

இலை–த்தல் ilai-, *4 செ.கு.வி.*(v.i.) *1. சோர்தல் (கொ.வ.);* to grow weary. *2. தன்மை குன்றுதல்;* to diminish or grow less and less. '*அவன் நிலைமை வரவர இலைத்துப் போயிற்று*' *(கொ.வ.). 3. சுவை குன்றுதல்;* to become tasteless, as food when unseasoned or kept too long. *4. சுவை குன்றல் (கொ.வ.);* to lose the sense of taste as one's mouth in sickness. *(கொ.வ.) (செ.அக.).*

இலைச்சு–தல் ilaiccu-, *4 செ.கு.வி.*(v.i.) *முத்திரையிடுதல் (பெருங். நரவா. 1, 46);* to mark with a seal. *(செ.அக.).*

இவர்–தல் ivar-, *15 செ.கு.வி.*(v.i.) *1. உயர்தல்;* to rise on high, ascend. "*விசும்பிவர்ந் தமரன் சென்றான்*" *(சீவக. 959). 2. செல்லுதல்;* to go, proceed. "*இருவிசும் பிவர்தலுற்று*" *(சீவக. 959). 3. உலாவுதல்;* to move about pass to and fro. "*இரைதேர்ந்திவருங் கொடுந்தாண் முதலையொடு*" *(மலைபடு. 90). 4. பரத்தல்;* to spread, as a creeper. "*தூவற் கலித்த விவர்நனை வளர்கொடி*" *(மலைபடு. 514). 5. செறிதல் (திவா.);* to be close, crowded. *6. பாய்தல்;* to spring, leap, rush out. "*குன்ற விறுவரைக் கேண்மாவிவர்ந்தாங்கு*" *(கலித். 86. 132). 7. பொருந்துதல்;* to be an integral part of, be united with, become inseparable from. "*மாதிவர் பாகன்*" *(திருவாச. 43,1) - 15 செ.குன்றாவி.* (v.t) *1. மேற்கொள்ளுதல் (குறள். 1055);* climb over; mount, as on horseack. *2. விரும்புதல்;* to desire, long far, hanker after. "*ஆனெய் பாற் கிவர்ந்த தொத்தது*" *(சீவக. 1051). 3. ஒத்தல் (பு.வெ.11. ஆண்பாற். 1);* to resemble, look like. *(செ.அக.).*

இவரி–த்தல் ivari-, *18 செ.குன்றாவி.*(v.t.) *எதிர்த்தல்;* to oppose, contend against, to attack, as an army. "*இவரித்தரசர் தடுமாற*" *(திவ். பெரியதி. 8,8,9) (செ.அக.).*

இவல்–தல் ival-, *13 செ.கு.வி.*(v.i.) *1. மேலுயர்தல்;* to go up. *2. மேலேறுதல்;* to ascend. *3. மேன்மேலும் ஆசைப்படுதல்;* to become greedy. *4. மேற்செல்லல், நடத்தல்;* to go proceed.

இவறு–தல் ivaṟu-, *8 செ.குன்றாவி.*(v.t.) *1. விரும்புதல்;* to desire, earnestly wish for. "*ஈட்டமிவறி யிசைவேண்டா வாடவர்*" *(குறள், 1003). 2. மறத்தல் (பிங்.);* to forget - *5 செ.கு.வி.* (v.i.) *1. ஈயாமை (கருமித்தனம்) (குறள், 432);* to be niggardly. *2. மிகுதல்;* to heighten, enhance, as pleasure. "*இன்பத்திவறினார் காமவெள்ளத்து*" *(சீவக. 966). 3. உலாவுதல்;* to roll, as billows, to and fro. "*இவறு திரைதிளைக்கு மிடுமணல்*" *(ஐங்குறு.177) (செ.அக.).*

ம. இவருக; க. எகுரு; தெ. எகரு.

இழ–த்தல் iḻa-, *3 செ.குன்றாவி.*(v.t.) *1. தவறவிடுதல் (நாலடி. 9);* to lose, forfeit. *2. சாகக் கொடுத்தல்;* to lose by death. "*மக்களிழந்த விடும்பையினும்*" *(உத்தர. திக்குவி. 138) (செ.அக.).*

ம. இழக்குக.

இழி¹–தல் iḻi-, *2 செ.கு.வி.*(v.i.) *1. இறங்குதல் (அகநா. 66);* to descend, dismount. *2. விழுதல்;* to fall, drop down. "*வெண்மதியம்... நிலத்திழிந்த தொத்தனவே*" *(சீவக. 2238). 3. இழிவுபடுதல்;* to be degraded,disgraced, reduced in circumstances. "*மாந்தர் நிலையி னிழிந்தக்*

கடை" (குறள், 964). 4. தாழ்தல்; to be inferior, low in comparison. "நாலிலும்கீழிழிந்து" (திவ். திருவாய். 3, 7, 9). 5. வெளிப்படுதல்; to be revealed. "வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின்" (கம்பரா. அயோத். மந்திர.1). 6. நுழைதல்; to enter into. "தருமத்தினெறிக் கென்று மிழியா" (கம்பரா. பிரமா. 111) (செ.அக.).

ம. இழியுக; க. இழி; தெ. ஈடு, டிகு; கோத. உக்; துட. ஊக், ஊங்க்; குட. இளி; துட. இழி, இளியுனி; கொலா. டிக், டிக்கு; நா. டிக்கு; பர். இர், இர்வ், இரி; கூ. தீவ; கோண். ஈய்யானா; குவி. ரீயதி; பிரா. டரிங்கி; பட. ஈகு, எரகு.

இழி[2]–த்தல் iḻi-, 2 செ.குன்றாவி.(v.t.) 2. இறக்குதல்; to lower, let-down, degrade. "இழித்தனனென்னையானே" (திருவாச. 5, 66). 2. நிந்தித்தல்; to condemn, despise. 3. அருவருத்தல்; to loathe. 4. கெஞ்சுதல்; to entreat, crave.

இழிகு–தல் iḻigu-, 7 செ.கு.வி.(v.i.) 1. தாழ்தல், இறங்குதல்; to come down, godown. 2. வீழ்தல்; to fall. 3. குத்துதல்; to stab.

இழிச்சு–தல் iḻiccu-, 12 செ.குன்றாவி.(v.t.) 1. இறக்குதல்; to lower, let down, help or hand down. "அரிவழிபட்டிழிச்சிய விமானத் திறையவன்" (தேவா. 584, 7). 2. தள்ளிக் கொடுத்தல்; to remit, as taxes. "இறையிழிச்சிக் கொடுத்தோம்" (தெ.கல்.தொ.1, 69). 3. இடித்தல்; to pull down, dismantle as a building. 'திருமண்டபமிழிச்சி யெடுப்பதற்கு' (தெ.கல்.தொ.3, 93). 4. அவமதித்தல் (வின்.); to disgrace, insult. (செ.அக.).

இழிசு–தல் iḻicu-, 12 செ.குன்றாவி.(v.t.) பூசுதல்; to smear, plaster, spread over. "சாந்திழிசிய கோலம்" (திவ். பெரியதி. 2, 8, 7) (செ.அக.).

இழித்து–தல் iḻittu-, 12 செ.குன்றாவி.(v.t.) 1. இறக்குதல்; to lower, let down. 2. வரிநீக்குதல்; to remit as taxes. 'எப்பேர்ப்பட்ட இறையும் இழித்தி' (தெ.கல்.தொ.3, 103). (செ.அக.).

இழு–த்தல் iḻu-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. ஈர்த்தல்; to draw, pull, haul, drag along the ground. 2. கவர்தல்; to draw to oneself, attract as a magnet. 3. வயப்படுத்துதல்; to influence, persuade by coaxing, wheedle. 4. நீளச் செய்தல்; to lengthen, stretch, attenuate by pulling, draw out. 5. வலிந்து தொடர்பு படுத்துதல்; to drag one into an affair; to haul up a person, as to court; to delibrately bring in one's name in support of an argument. 6. காலநீட்டித்தல் (கொ.வ.); to protract as time. 7. ஒலியை நீட்டுதல் (கொ.வ.); to lengthen, as the sound in singing, speaking or in reading. 8. உள்வாங்குதல்; to draw into, as whirlwind; to swallow up, engulf, as vortex in a stream. 'வெள்ளம் இழுக்கிறது'. 9. உறிஞ்சுதல்; to absorb as a sponge. - 4 செ.கு.வி. (v.i.) 1. வலிப்புண்டாதல்; to have one's features or limbs distorted in spasms, have convulsions; to be twitched with pain, often used impersonally. 'கைகால் வாயுவினால் இழுக்கிறது'. 2. மூச்சு வாங்குதல்; to grasp for breath, as from asthma or from approach of death. 3. பின்வாங்குதல்; to draw back, retreat. (செ.அக.).

ம. இழு; க. இழ்; தெ. இடு, ஈட்சு; பட. இகி.

இழுக்கடி–த்தல் iḻukkaḍi-, 3 செ.குன்றாவி.(v.t.) அலைய வைத்தல்; cause vexatious trouble to a person by constantly putting off the fulfilment of an obligation to him. "இழுக்கடித்ததாய் நெஞ்சே" (தாயு. உடல்பொய். 65) (செ.அக.).

இழுக்கு–தல் iḻukku-, 7 செ.கு.வி.(v.i.) சாதல்; to die. "முள்ளினெய்தெற விழுக்கிய கானவர்" (மலைபடு. 301, உரை) (செ.அக.).

ம. இழுக்குக; க. எழவு.

இழுகு–தல் iḻugu-, 7 செ.கு.வி.(v.i.) 1. வீசுதல்; waft, blow, as the wind. "தென்றலிழுக மெலிந்து" (கம்பரா. ஊர்தேடு. 174). 2. பரத்தல்; to extend, spread over. "மழைக்குலமிழுகித் திக்கெலாம்" (கம்பரா. இராவணன் வதை. 62). 3. படிதல்; to settle, as particles of dust. "சீறடி கதுவுந்துகளிழுகப் பெற்றனன்" (உபதேசகா. சூராதி. 73). 4. தாமதித்தல்; to procrastinate, linger; to be tardy - 5 செ.குன்றாவி. (v.t.) பூசுதல்; to daub, to smear, rub over, as mortar. "வெண்சுதையிழுகிய மாடத்து" (மணி. 6, 43) (செ.அக.).

இழுத்தடி–த்தல் iḻu-t-taḍi-, 4 செ.குன்றாவி.(v.t.) இழுக்கடி-த்தல் பார்க்க; see iḻu-k-kaḍi-.

இழை[1]–தல் iḻai-, 4 செ.கு.வி.(v.i.) 1. நூற்கப்படுதல்; to be reeled as yam. "இழைந்த நூலிணை" (கம்பரா. சித்திர. 9). 2. உராய்தல்; to rub against as the shoots of the bamboo tree. 'மூங்கில் ஒன்றோடொன்று இழைந்து பற்றிக்கொள்ளும்' (உ.வ.). 3. சோறு குழைதல் (வின்.); to become soft and pasty, as boiled rice by being overcooked. 4. நெருங்கிப் பழகுதல்; to associate intimately. 'அவர்களிருவரும் இப்போது நிரம்ப இழைகிறார்கள்' (உ.வ.). 5. உள் நெகிழ்தல்; to have tender emotions as in love. 'விழைந்திழைந்து வேண்டியவர்க் கண்ட கண்' (குறள். 1177). 6. கூடுதல்; to be together as husband and wife. "இழைந்தவர் நலத்தை யெய்தி" (சீவக. 2720). 7. பிணைதல்; to copulate as snakes. 'பாம்புகள் ஒன்றோடொன்றிழையும்' (வின்.). 8. மூச்ச சிறுகுதல்; breathe in a scarcely audible manner, as by a dying person. 'உயிரிழைந்து கொண்டிருக்கிறது'. 9. மனம் பொருந்துதல்; to agree, be in accord. "இழையச் சொல்வி" (சீவக. 1593) (செ.அக.).

இழை[2]–தல் iḻai-, 2 செ.கு.வி.(v.i.) மெலிதல்; to become emaciated, reduced. 'குழந்தை நூலாய் இழைந்து விட்டது' (செ.

அக.).

இழை[3]–த்தல் iḻai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. நூற்றல்;* to spin. "சின்னூல் பலபல வாயாலிழைத்துச் சிலம்பி பின்னும்" *(அட்டப். திருவரங். மாலை. 18). 2. செய்தல்;* to make do, construct, fabricate. "இழைத்தவிச் சிற்றிலை" *(திவ். நாச். 2,2). 3. சூழ்தல் (சீவக. 1089);* to turn over in one's mind, deliberate calmly, consider. *4. செதுக்குதல் (ஈடு. 1.4, 7);* to plane, scrap off. *5. நுண் பொடியாக்குதல் (பரிபா. 10. 91);* to grind into fine powder. *6. மா முதலியன மெதுவாக்குதல்;* to make soft, as fine powder. "இழையஞ்சன மால்களிறு" *(கம்பரா. அதிகாய. 21). 7. பதித்துச் செய்தல்;* to set as precious stones. "மணியினிழைத்த செய்குன்றின்" *(நைடத. நகர. 6). 8. கூறுதல்;* to utter, say. "கிழவனை நெருங்கி யிழைத்து" *(தொல். பொ. 150). 9. விதித்தல்;* to appoint, determine, destine, fix. "இழைத்த நாளெல்லை கடப்பதன்றால்" *(தேவா. 727, 5). 10. வரைதல்;* to paint, draw, daub. "குங்கும வருணங் கொங்கையினிழைத்து" *(சிலப். 14, 90). 11. அமைத்தல்;* to take, accept. "பொற்பாவிழைத்துக் கொளற்பாலர்" *(சீவக. 4). 12. திரட்டி வைத்தல்;* to store up. "பொங்கரி னிழைத்த" *(மாறன. பக். 244). 13. தீர்மானித்தல்;* to determine; to take a vow. "இழைத்த திகவாமை" *(குறள், 779). 14. மாத்திரை முதலியன உரைத்தல் (கொ.வ.);* to rub so as to be dissolved as a pill in honey or milk. *15. இழை யாக்குதல்;* to divide into strands as a thread. "கதிரிலுள்ள நூலையிழைத்தான்" *(கொ.வ.). 16. நிமிண்டுதல்;* to squeeze the flesh so as to give pain. 'கன்னத்தைப் பிடித்து இழைத்தான்' *(இ.வ.). 17. பஞ்சு முதலியன ஆய்ந்தெடுத்தல் (வின்.);* to select, pickout, separate, to cull as cotton. *18. பின்னுதல்;* to braid, as mats; to plait, weave. 'பாயிழைத்தான்' *(J.); 19. நுண்ணிதாக ஆராய்தல்;* to scrutinize. "இழைத்துணர்ந்து" *(குறள். 417) - 4 செ.கு.வி.* (v.i.) *மூச்சிரைத்தல்;* to breathe hard. *(செ.அக.).*

இள்(ளு)–தல் iḷ(ḷu), *15 செ.கு.வி.*(v.i.) *1. பொருந்துதல்;* to fit. *2. இணைதல்;* to join. *3. மெல்லியதாதல்;* to become tender. *4. இளையதாதல்;* to become young. *5. குத்துதல்;* to pierce. *6. பிளத்தல்;* to cut, divide. *7. பள்ளமாக்குதல், தாழ்த்துதல்;* to make a dip, to lower the position or plane. *8. இழிவு படுத்துதல்;* to degrade, look down, under-estimate.

இள–த்தல் iḷa-, *3 செ.கு.வி.*(v.i.) *மெல்லியதாதல்;* to become tender. *(வே.க.16).*

இளஃகு–தல் iḷakku-, *5 செ.கு.வி.*(v.i.) *தளிர்த்தல்;* to be so refreshed as to put on a fresh glow. "இன்னுயிர் ..... இளஃகுமே" *(சீவக. 149) (செ.அக.).*

இளக்கரி–த்தல் iḷakkari-, *4 செ.கு.வி.*(v.i.) *1. வேகந் தணிதல்;* to relax, slacken. *2. கருமத்தில் விழிப்பின்றி யிருத்தல்;* to be negligent in action. *3. தளிர்தல்;* to become weary, dispirited, disheartened. "இளக்கரிப்பதேன்" *(இராமநா. அயோத்.). 4. இளகிப் பின்னிடுதல் (வின்.);* to yield before an opponent or a rival; the lose in a race or trial of strength. *(செ.அக.). 5. மதிப்பின்மை;* to dishonour.

இளகு–தல் iḷagu-, *7 செ.கு.வி.*(v.i.) *1. நெகிழ்தல்;* to liquify; to grow soft; to become tender, mild, yielding. *2. மெல்குதல்;* to get reduced in hardness owing to moisture, to become pliable, as heated iron. "நீர்நின் றிளகிற் றிதுவேண்டா" *(சீவக. 718). 3. கட்டுநெகிழ்தல்;* to become relaxed as a bowstring; to get loose as screws. "வார்நின்றிளகும்" *(சீவக. 718). 4. களைத்தல்;* to grow weary, to become tired. "மல்லாவிளகாது மலைந்தனன் மால்" *(கம்பரா. அதிகாய. 68). 5. அசைதல்;* to shake, agitate. "காடிளகப் பரிகொண்டவே" *(சீவக. 1778). 6. படுதல் (சீவக. 2146);* to fade away, an euphemism meaning to die, to perish. *7. தழைத்தல்;* to sprout afresh, send forth tender shoots. இளகு காடு *(சீவக. 1778). 8. தணிதல்* (J); to diminish, abate; lessen in intensity or severity as wind, rain, sunshine. fever etc. *9. உருகுதல்;* to melt. *(செ.அக.).*

ம. இளகு; க. எளது.

இளி[1]–தல் iḻi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. இணுக்குதல்;* to pluck. "இளிந்த வீயும்" *(சீவக. 1241). 2. உரித்தல் (சூடா.);* to strip off. - *2 செ.கு.வி.* (v.i.) இகழப்பட்டு எளியனாதல் *(தொல். பொ. 253, உரை);* to become low spirited because of being ridiculed by others. *(செ.அக.).*

இளி[2]–த்தல் ili-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. இகழ்தல் (வின்.);* to disgrace, condemn. *2. எள்ளல் (வின்.);* to laugh, scorn, ridicule. - *4 செ.கு.வி.* (v.i.) பல்லைக் காட்டுதல்; to grin; to show the teeth, as in cringing or in craving servilely. *(செ.அக.).*

ம. இளிக்குக.

இளிப்படு–தல் iḻi-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *அகப்படுதல்;* to be caught, trepanned. "இளிப்பட்டன வீகைப்போர்" *(கலித். 95) (செ.அக.).*

இளை[1]–த்தல் iḷai, *4 செ.கு.வி.*(v.i.) *1. சோர்தல்;* to grow weary, to be fatigued, to get exhausted. "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" *(திருவாச. 1, 31). 2. மெலிதல்;* to be emaciated, to grow lean, to become worn out. "இளைத்தனர் நாயனா ரென்று" *(பெரியபு. கண்ணப். 123). 3. பின்னடைதல்;* to fail before a foe; to lag behind a rival; to yield to superior force. "மதனனம்புக் கிளையார்" *(பதினொ. திருவிடை மும். 21). 4. ஏழைமைப்படுதல்;* to become impoverished. 'அந்தக் குடும்பம் இளைத்துப் போயிற்று'

(கொ.வ.). 5. வளங் குறைதல்; to reach the stage of diminishing returns as land; to grow weak and lacking in fruitfulness, as trees, to fade, lose vigour as a plant. *'பயிர் இளைத்துக் காட்டுகிறது' (வின்.) (செ.அக.).*

இளை²–த்தல் iḷai-, *4 செ.கு.வி.*(v.i.) நெகிழநிற்றல்; to get slack. "தானே யிளைக்கிற் பார்கீழ் மேலாம்" *(திவ். இயற். பெரியதிருவந். 24) (செ.அக.).*

இற–த்தல் iṟa-, *3 செ.குன்றாவி.*(v.t.) கடத்தல்; to go beyond, transcend, pass over. "புலவரை யிறந்த தோன்றல்" *(புறநா. 21) - 3 செ.கு.வி.*(v.i.) *1. கழிதல்;* to pass by, elapse, as time. "இறந்தநாள் யாவர் மீட்பார்" *(சீவக. 2616). 2. நெறிகடந்து செல்லுதல்;* to transgress, trespass, overstep. "இல்லிறப்பா னெய்தும்... பழி" *(குறள். 145). 3. மிகுதல்;* to excel, to be pre-eminent. "இறந்த கற்பினாட்கு" *(கலித். 9). 4. சாதல்;* to die. "இறந்தாரை யெண்ணிக் கொண் டற்று" *(குறள். 22). 5. வழக்கு வீழ்தல்;* to cease to be current, become obsolete. 'இது இறந்த வழக்கு' *(சீவக. 2108, உரை). 6. நீங்குதல்;* to depart, leave. "உம்பரிமை பிறப்ப" *(பரிபா. 17, 31) (செ.அக.).*

ம. இறக்குக.

இறக்கு–தல் iṟakku-, *15 செ.கு.வி.*(v.i.) *1. இறங்கச் செய்தல்;* to lower, let-down, put down as a load; to land, unload as from a boat. *2. எண்ணெய் முதலியவை வடித்தல்;* to distil. *3. அடக்குதல்;* to reduce or bring down as pride. *'கொழுப்பை யிறக்கி விடுவேன்'. 4. உயர்த்துவது போல இகழ்தல்;* to praise ironically. *5. கெடுத்தல்;* to injure, to annihilate. "இத்தர்மமிறக்குவான்" *(தெ.கல்.தொ.1.77). 6. கொல்லுதல்;* to kill, slay. "எரிமாலை வேணுதி யினிறக்கி" *(சீவக. 961). 7. பணத்தைக் கட்டாயப் படுத்தித் திரும்பப் பெறல் (கொ.வ.);* to compel repayment *(செ.அக.). 8. நஞ்சைத் தணித்தல்;* to counteract or subdul the effect of poisons or personous bites.

ம. இறக்கு; க. எறகு.

இறங்கு¹–தல் iṟaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. விட்டு நீங்குதல்;* to leave, abandon. "அருணோக்கமிறங்காத தாமரைக்கணெம் பெருமான்" *(கம்பரா. விராதன். 50). 2. தொடங்குதல்;* to commence, begin to act. 'அறவழியில் இறங்கியுள்ளான்' *(செ.அக.).*

இறங்கு²–தல் iṟaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. இழிதல்;* to descend; to get down, as from a tree; to alight, as from a horse; to fall, as rain; to flow down, as a torrent. *2. கரைசேர்தல்;* to disembark, to be unladen. *'கப்பலிலிருந்து பயணிகள் இறங்கின பின்புதான் பொருள்கள் இறங்கும்'. 3. அடியில் தங்குதல்;* to sink to the bottom as sediment in water. *'கலங்கல் தெளியும் பொழுது அழுக்கெல்லாம் அடியில் இறங்கிவிடுகிறது'. 4. உட்செல்லுதல்;* to settle into its place as a peg in a hole; to be driven home as a nail. *'பலகையினுள்ளே ஆணியெல்லாம் இறங்கின'. 5. தங்குதல்;* to halt; to stay; to encamp as a company or an army. *'முதலியார் சென்னையில் சத்திரத்தில் இறங்குவது வழக்கம்'. 6. தாழ்வடைதல்;* to be reduced in circumstances. *'அந்தக் குடும்பம் இறங்கிப் போயிற்று' (கொ.வ.). 7. நஞ்சு, நோய் முதலியன தணிதல்;* to abate as poison, small pox and other diseases, which are popularly supposed to pass away from the head, downward to the extremities. *8. விலை குறைதல்;* to fall or be reduced as the prices of articles. *'அரிசி விலை இறங்கியிருக்கிறது' (கொ.வ.). 9. தாழ்ந்து வணங்குதல்;* to bow respectfully, show reverence. "இறங்கிச் சென்று தொழுமின்" *(தேவா. 1131, 2). 10. நிலைகுலைதல்;* to fall from a high state. "இறங்கு கண்ணிமையார்" *(சீவக. 248) (செ.அக.).*

ம. இறங்ஙக; க., பட. எறகு, இறகு; தெ. எறகு; கோத. எர்க்; துட. எர்க்; குட. எறங்க்; பிரா. இரிங்க்.

இறாய்–த்தல் iṟāy-, *4 செ.கு.வி.*(v.i.) பின்வாங்குதல்; to draw back, retreat. "அவ்விருளுக் கிறாய்த்து அங்கே யிங்கே சஞ்சரியாநிற்க" *(ஈடு.2,1,8) (செ.அக.).*

இறு¹–தல் iṟu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. முறிதல்;* to break, to snap, as a stick; to become severed, as a limb, to crackle and split. "பீலிபெய் சாகாடு மச்சிறும்" *(குறள். 475). 2. சாதல்;* to perish, die. "இறுமளவுமின்புறுவ தின்புற்று" *(நாலடி. 209). 3. முடிவுறுதல்;* to end, terminate. "உயிரிறு கிளவியும்" *(தொல். எழுத். 202). 4. கெடுதல்;* to moulder, to be corroded, to decay. "கபால முமிற்று மண்ணாமே" *(திருமந். 371). 5. தளர்தல்;* to grow weak, to be wearied. "பாதவைப்பிற" *(இரகு. தேனு. 45) (செ.அக.).*

ம. இறு, இறுக.

இறு²–த்தல் iṟu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. முறித்தல் (திவா.);* to break off, as a branch; to snap asunder. *2. உடைத்தல்;* to smash; to knock out, to break in pieces, as pottery. "இருவிகளி லொருவன்பல் லிறுத்துக் கொண்டார்" *(தேவா. 1233, 9). 3. அழித்தல்;* to destroy. "ஏழுலகத்தையு மிறுக்க" *(கம்பரா. மூலபல. 12). 4. முடித்தல்;* to bring to an end, finish. "உரைத்திறுக்கு மேல்வையில்" *(கம்பரா. யுத். மந்திர. 28). 5. வீழ்த்துதல்;* to bring down. "என்படு மிறுத்தோன்" *(பாரத. பழம். 3). 6. தாக்குதல், அடித்தல்;* to attack, beat. *(செ.அக.).*

இறு³–த்தல் iṟu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. வரிமுதலியன செலுத்துதல் (திவ். திருவாய். 5, 2, 8);* to pay, as a tax, a debt. *2. எறிதல்;* to throw, as a spear; to fling. "முனைகெட

விறுத்த வென்வேலாடவன்" (பு.வெ.3-24, கொளு). 3. விடை சொல்லுதல்; to answer in reply. "இல்லெனுந் தீச்சொலிறுத்தனர் தோமும்" (கல்லா. 74). 4. வினாதல்; to question, enquire. "எங்கே மகளென் றிறுப்பாள்" (வெங்கைக்கோ. 319). 5. வடித்தல்; to strain; to percolate as a liquid. "பதத்திறுத்துப் பருக" (தைலவ. தைல. 32) - 4 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல்; to tarry, stay. "அந்தியென்னும் பசலை மெய்யாட்டி வந்திறத்தனளால்" (மணி.5,141). 2. அம்பு முதலியன தைத்தல்; pierce through, as an arrow; to gore, stab. "அம்புசென் றிறுத்தவரும் புண் யானை" (புறநா. 19,9) (செ.அக.).

இறு[4]–த்தல் iṟu-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. சொல்லுதல் (நாநார்த்த.); to express. 2. நிறுத்துதல்; to stop. "வலஞ்செயவிடா விறுத்தனவேறு" (கலித். 104) (செ.அக.).

இறுக்கு–தல் iṟukku-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. அழுந்தக் கட்டுதல்; to tighten, tie close or hard, make compact. "புயங்களாற் பிடித்திறுக்கினன்" (கம்பரா. கும்பக. 266). 2. இறுக வுடுத்துதல் (சூடா.); to clothe tightly. 3. ஒடுக்கு தல்; to repress, restrain. 'அவற்றை நன்றாய் இறுக்கிவிட்டான்'. 4. உள்ளழுத்துதல்; to drive in, as a nail. "இறுக்காணி காட்டி" (திருப்பு.695). 5. உறையச் செய்தல் (வின்.); to thicken a liquid inspissate. 6. உடும்பு, நண்டு முதலியவற்றின் கடி; to pinch or sting (of an insect). 7. இறுக்குகால்; crab's claw. (சேரநா.) (செ.அக.).

ம. இறுக்குக; க., பட. இறுகு; கோத. இர்க்; துட. இகொட்; து. இரியுனி; தெ. இறுகு.

இறுகு–தல் iṟugu-, 5 செ.கு.வி.(v.i.) 1. முடிச்சு முதலியன நெகிழாது அழுத்தமாதல் (நாலடி.328); to become tight, as a knot. 2. கெட்டிப்படுதல்; to harden, as land dried by the sun or as molten metals when they are cooled; to become dry, as mortar or as clay. 3. நெய் முதலியன உறைதல்; to thicken, as phlegm; to congeal, as wax; to coagulate; to be clotted, as blood; to soldify. 4. உறுதியாதல்; to become firm. "இறுகவேண்டும் பாவனை" (ஞானவா. வேதாள. 12). 5. நிலைபெறுதல்; to be fixed, to be rooted in. "அச்சத் திறுகல் நீ" (சீவக. 946). 6. நெருங்குதல்; to be rich, luxuriant, as growing corn or as fruitful trees. "வாழை யிறுகு குலை முறுக" (மலைபடு. 132). 7. மூர்ச்சித்தல்; to swoon. "இறுகி மெய்ம் மறந்து சோர்ந்தான்" (சீவக. 299) (செ.அக.).

ம. இறுகு; தெ. இறுகு; க. இறுகு.

இறை[1]–தல் iṟai-, 2 செ.குன்றாவி.(v.t.) வணங்குதல்; to bow before as in salutation; to worship. "இணையடி யிறைமின்" (பதினோ. ஆளு. திருக்கலம். 48). (செ.அக.).

க. எறகு.

இறை[2]–தல் iṟai-, 2 செ.கு.வி.(v.i.) சிதறிப் போதல்; to scatter, disperse. "வளை முத்திறைய வெற்றும்..... வெண்டிரை" (சூத. சிவமான்... 2,2) (செ.அக.).

இறை[3]–த்தல் iṟai-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. நீரை வீசித் தெளித்தல்; to splash, spatter, dash. 'அவன் முகத்தில் நீரை யிறைத்தான்'. 2. சிதறுதல்; to scatter abroad, strew, cast forth. 'பண்டங்களையெல்லாம் இறைத்து விட்டான்'. 3. நீர் பாய்ச்சுதல்; to draw and pour out water, irrigate, bale out. "இறைப்பவர்க் கூற்றுநீர் போல மிகும்" (குறள், 1161). 4. நிறைத்தல்; to fill, as one's ears with strains of music. "வீணையரின்னிசை செவிதொறு மிறைப்ப" (உபதேசகா. சிவபுண்ணிய. 318). 5. மிகுதியாகச் செலவிடுதல்; to lavish squander. 'பணத்தை வாரி யிறைக்கிறான்'.

இறைஞ்சு–தல் iṟaiñju-, 5 செ.கு.வி.(v.i.) 1. தாழ்தல்; to hang low, as a cluster of coconuts; to bow, bend. "குலையிறைஞ்சிய கோட்டாழை" (புறநா. 17, 9). 2. வீழ்ந்து கிடத்தல்; to fall down. "புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி" (கலித். 3, 13). - 5 செ.குன்றாவி. (v.t.) வணங்குதல்; to make obeisance; to pay reverence; to worship by bowing or prostrating. "எழிலார் கழலிறைஞ்சி" (திருவாச. 1, 21).

ம. இரஞ்சுக; க. எரகு; தெ. எரகு; து. எரகுனி.

இனை[1]–தல் iṉai-, 2 செ.கு.வி.(v.i.) 1. வருந்துதல்; to be thrown into an agony of grief. "இனைந்திரங்கிப் பள்ளி படுத்தார்களே" (சீவக. 292). 2. இரங்குதல் (திவா.); to lament, cry. 3. அஞ்சுதல்; to be afraid. "என்னை வருவதெனக் கென்றினையா" (பரிபா. 7, 68) (செ.அக.).

இனை[2]–த்தல் iṉai-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. வருத்துதல் (ஐங்குறு. 237); to torment, worry. 2. கெடுத்தல்; to destroy, consume, ravage. "வெவ்வெரி யினைப்ப" (புறநா. 23) (செ.அக.).

<

ஈ[1]–தல் ī-, 2 செ.குன்றாவி.(v.t.) 1. ஈனுதல்; to give birth to. 2. கொடுத்தல்; to give. "ஈதல் இசைபட வாழ்தல்" (குறள். 23). 3. பகிர்ந்து கொடுத்தல்; to distribute, apportion. 4. இழிந்தோர்க்குக் கொடுத்தல்; to give to inferiors, give alms, bestow, grant. "ஈயென்கிளவி இழிந்தோன் கூற்றே" (தொல்.சொல்.445). 5. வீசுதல்; to give liberally, throw.

தெ. ஈ, இச்சு; க. ஈ, ஈயு; கோண். சீயானா, சீ; நா. சீ; பர். சீ; குவி. சீவ.

ஈ[2]–தல் ī-, 2 செ.குன்றாவி.(v.t.) 1. வகுத்தல்; to divide (arith.) (w.), ஈய (கணக்கதி.). 2. படிப்பித்தல்; to arrange instruction. "ஈதலியல்பே யியம்புங் காலை" (நன். 36). 3. படைத்தல்; to create. "எவ்வுயிர்களு மீந்தான்" (கம்பரா.

அகலி. 49). 4. பரவுதல்; to spread.

ஈ[3]–தல் ī-, 6 செ.கு.வி.(v.i.) நேர்தல் (பரிபா. 9,17); to agree, consent.

ஈகு–தல் īgu-, 2 செ.கு.வி.(v.i.) 1. ஈ-தல் பார்க்க; see ī-dal. 2. கட்டியாதல்; to solidify. "திரட்டுப்பாலும் ஈகின நெய்யும் கட்டித் தயிரும்" (திவ். பெரியாழ். 3,2,6, வியா. பக். 545).

ஈட்டு[1]–தல் īṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கூட்டுதல் (பிங்.); to collect, amass, accumulate. 2. தடித்தல்; பருத்தல், கொழுத்தல்; to become fat. 3. தேடுதல்; to earn, acquire, secure. "அறநோக்கா தீட்டிய வொண் பொருள்" (குறள். 1009) (செ.அக.).

ம. ஈட்டுக.

ஈடழி–தல் īḍaḻi-, 2 செ.கு.வி.(v.i.) வலிமை, பெருமைகள் கெடுதல் (திவ். நாச்சி. 8,3); to suffer, loss of power, of authority, of dignity or of wealth; to become poor. (செ.அக.).

ஈடுகொடு–த்தல் īḍu-koḍu-, 4 செ.கு.வி.(v.i.) 1. இணையாதல் (வின்.); to be equal. 2. போட்டி போடுதல் (வின்.); to compete. 3. எதிர்ப்புக்குத் தளராது நிற்கை; to bear the brunt. 'வீடு பலமாக விருப்பதால் புசலுக்கு ஈடு கொடுக்கும்' (இ.வ.). 4. பொந்திகை (திருப்தி) செய்தல்; to give satisfaction. (செ.அக.).

ஈடுபடு–தல் īḍu-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) 1. வலியழிதல்; to become weak, feeble. 2. அகப்படுதல்; to be ensnared, entangled. "விலங்க ரீடுபட்டதே" (பாரத. வாரணா. 79). 3.மனங்கவிதல்; to be absorbed, engrossed, involved. 'பகவத் குணங்களில் ஈடுபட்டவர்கள்'. 4. துன்பப்படுதல் (சிவப்பிர. உண்மை. 40. உரை); to suffer.

ஈடேறு–தல் īḍēṟu-, 5 செ.கு.வி.(v.i.) 1. முடிவுறுதல்; to be completed. 2. உய்வடைதல்; to be liberated from a worldly life, saved from ruin, rescued from danger, difficulty or disease. "தொண்டர் குழா மீடேற" (குற்றா. தல. கடவுள், 13). 3. வாழ்வடைதல்; to become prosperous. "என்னை நீ யிடேற்றத் திருவுளத் தருள் செய்குக" (பாரத. நச்சு. 5) . 4. மனநிறைவடைதல்; to be pleased.

ம. ஈடேறுக.

ஈண்டு[1]–தல் īṇḍu-, 15 செ.கு.வி.(v.i.) 1. கூடுதல்; to gather, come together. "ஈண்டிய வடியவ ரோடும்" (திருவாச. 2, 144). 2. செறிதல்; to be close together, to get to be a compact mass, as the atoms of matter/element. "இமிழ்கடல் வளைஇய வீண்டகன் கிடக்கை" (புறநா. 19). 3. மிகுதல்; to abound, to be numerous. "இயைந் தொருங் கீண்டி" (சிலப். 6, 145). 4. விரைந்து செல்லுதல்; to speed, make haste. "இடுக்கண் களைதற் கீண்டெனப் போக்கி" (சிலப். 13, 101) - 5 செ.குன்றாவி. (v.t.) தோண்டுதல்; to gouge, extract, pluck out, dig out. "மலர்க்கண்ணை யீண்ட..... ஆழி யீந்தார்" (தேவா. 192. 5).

க. இடி.

ஈண்டு[2]–தல் īṇḍu-, 15 செ.கு.வி.(v.i.) 1. வருதல்; to come. 2. செல்லுதல்; to go.

சிந். ஈண்டு.

ஈணு–தல் īṇu-, 16 செ.குன்றாவி.(v.t.) 1. ஒடித்தல்; to break. 2. முன்னும் பின்னுமாக வளைத்தல்; to bend backward and forward to snap.

ம. ஈணுக.

ஈப்புகு–தல் ī-p-pugu-, 21 செ.கு.வி.(v.i.) காதில் ஈ நுழைதல்; entry of fly (into the ear) (சா.அக.).

ஈர்[1]–தல் īr-, 2 செ.குன்றாவி.(v.t.) அறுத்தல்; to saw. "உயிரீரும் வாளது" (குறள், 334) - 2 செ.கு.வி. (v.i.) இழுக்கப்படுதல்; to be drawn out. "ஈர்ந்து நிலந் தோயு மிரும்பிடித் தடக்கை" (சிறுபாண். 19).

ம. ஈர்.

ஈர்[2]–த்தல் īr-, 2 செ.குன்றாவி.(v.t.) 1. இழுத்தல்; to draw along, pull; to attract, as a magnet; to carry away as does a current. "சிறுதே ரீர்த்து" (மணிமே. 7.55). 2. உரித்தல்; to excoriate, as a tiger does; to flay. "புலியினீருரி யுடுக்குமோ" (கந்தபு. ததீசியுத். 3). 3. எழுதுதல்; to draw, paint, write. "மென்றோட் பெய்கரும் பீர்க்கவும் வல்லன்" (கலித். 143, 32) (செ. அக.).

ஈரலி–த்தல் īrali-, 4 செ.கு.வி.(v.i.) 1. ஈரமாதல்; to become moist, damp (j.). 2. பதனழிந்து நீர்கசிதல்; to perish and become moist. 'பலாப்பழம் அறக்கனிந்து ஈரலித்தது' (உவ.).

ஈரி–த்தல் īri-, 4 செ.கு.வி.(v.i.) 1. ஈரமாதல்; to become wet, moist, damp, cool. "சோறு ஈரித்துவிட்டது". 2. குளிர்தல்; to be cool, as a breeze; to be benumbed, or stiffened, by coldness or disease. "ஈரித்த தென்றல்" (குமர. பிர.மதுரைக்.31).

ஈன் (னு) –தல் īṉ(ṉu)-, 14 செ.குன்றாவி.(v.t.) கருவுயிர்த்தல் (நாலடி. 400); to bear, bring forth, yean. 2. உண்டாக்குதல்; to produce, yield, bring into being. "நயனீன்று நன்றி பயக்கும்" (குறள். 97).

ம. ஈனுக; க., தெ., கோத., துட., பட., பர். ஈன்; பிரா. கீனிங்க்.,

C

உக்கரி[1]த்தல் *ukkari-*, 4. செ.குன்றாவி. (v.t..) வாயா லெடுத்தல்; to vomit. (W).

உக்கிப்போ–தல் *ukki-p-pōḍu, 8.*செ.கு.வி. (v.i) *1. உருகிப் போதல்;* wasting away with grief or pain. *2. இளைத்துப் போதல்;* to pine away *3. அழுகல்;* to rot. *(சா.அக.).*

உக்கு[1]–தல்–, *ukku-,* 5. செ.கு.வி. (v.i) 1. மேலெழும்புதல்; to rise, go up. *2. பொங்குதல்;* to spring

க., து. உக்கு

உக்கு[2]–தல்–, *ukku-,* 5. செ.கு.வி. (v.i) 1. மக்கிப்போதால்; to rot, decay moulder, உக்கின மரம், *2. மெலிதல்;* to pine away waste away அவள் துக்கத்தால் உக்கிப் போகிறாள் *(இ.வ.). (செ.அக.)*

ம. உக்குக

உக[1]–த்தல் *uga-, 3.* செ.கு.வி. (v.i) *1. உயர்தல்;* to ascend, rise stately soar upward "மாவிசும் புகுந்து *(மதுரைக். 334) 2. உயரப் பறத்தல் (பதிற். 779)*; to fly high.

ம. உக்குக; க. உக்கு (உப்பு); து. உக்கு; தெ. உக்கின்சு (குதித்தல்); Goth hanhs; Ger hock; ice har; As heat E high.

உக[2]–த்தல் *uga-, 3.* செ.கு.வி. (v.i) *1. மகிழ்தல்; (திவ். இயற். 2,8)* to enjoy to be glad, pleased, satisfied *2. விரும்புதல்;* to like "காக்கையுகக்கும் பிணம்" *(வாக்குண். 24)*

உகட்டு–தல் *ugaṭṭu-, 20.* செ.கு.வி. (v.i) *1. அருவருப்பாதல்;* to nauseate.

உகல்[1]–தல் *ugal-, 2.* செ. கு. வி. (v.i.) *1. உதிர்தல் கீழேவிழுதல்;* to drop off; as leaves fruits to fall out, as hair to be blasted nipped ,shaken with the wind, to drop down as ters. 2 *சிந்துதல்;* to be spilliterseed to fall. *3. சொரிதல்* to pour out. *4. சுழலல்;* to be disconnected *5. இறங்குதல்;* to descend. *6. குதித்தல்;* to jump.

உகல்(லு)-தல் *ugal(lu)-, 2.* செ.கு.வி (v.i.) *1. குதித்தல்;* to jump. *2. தாவு;* to billow. "உகலியாழ் கடலோங்கு பாருளீர்" *(தேவா . 75. 1).*

உகளி[1]த்தல் *ugaḷi-, 4.* செ. கு.வி. (v.i) *1. குதித்தல்;* "பேய்பிண மிக்கன வென்றுகளித் தனவே" *(பாரத. பதினாறாம். 51) 2. மகிழ்ச்சி மிகுதல்;* to delight, exult. "மேலைத் தொண்டு களித்து" *(திவ். திருவாய்.10.8,7) 3, பாய்தல்;* to jump to leap.

உகளு[1]-தல் *ugaḷu-, 5.* செ.கு.வி. (v.i) *1. தாவுதல்;* to leap bound, frisk "இரலை... யுகள" *(குறுந் . 65) 2. ஓடித் திரிதல்;* to run about "பன்மயிர்ப் பிணவோடு கேழலுள" *(மதுரை. 74) 3. பாய்தல்;* to leap over, bound *4. கடத்தல்;* to pass over *(ஆ. அக.) 5. நழுவி விழுதல்;* to slip down, fall off "ஒளிமேகலையுகளும்" *(திருக்கோ. 350). 6. பிறழ்தல்;* to turn upside down"பொருகயலுகளிப் பாய" *(சீவக.1854) 7. வாயா லெடுத்தல்;* to vomit

Mar. ugal

உகு[1]தல் *ugu-, 21* செ.கு.வி. (v.i.); *1. உதிர்தல்;* to shed or part with, as leaves from a tree to shed as feathers of hair to become separated. "போயுகு மிலைகள்" *(சி.சி. 1,15). 2. சிதறுதல்;* to be strewed, scattered "உண்கவுகாமை நன்கு' *(ஆசாரக். 21.) 3. சிந்துதல்;* to be spilled to flow; to pour out. அங்கணத்துளுக்க வமிழ்தற்றால் *(குறள். 720). 4. சுரத்தல்;* to trickle gently as water from a spring, or gush forth, as milk from cow's udder. (j). *5. கெடுதல்;* to wear off, pass away to be lost "இளமையுகா நின்ற மேனியும்' *(திருநூற். 45) 6. சாதல்;* to fall down fig to die"உக்கார் தலைபிடித்து" *(தேவா. 641, 4) 7. கரைந்து தேய்தல்;* to melt pine, languish, wither "உக்குவிடு மென்னுயிர்" *(கலித். 138) 8. மறைதல்;* to set as heavenly bodies "உதயக் குன்றினின்றுகு குன்றில்" *(கம்பரா. இராவணன்றா. 39) 9. பறத்தல்;* to fly about "ஊதவுகு தன்மையினொ டொல்கியுற நின்றான்" *(சீவக 2014) 10. நிலை குலைதல்;* to be agitated நெஞ்சுக.. கண்ணீர் மல்க *(தஞ்சைவா. 150) 11. உமிழ்தல்;* to spit

கூ. து. உகு, உகி.

உகு[2]தல் *ugu-, 21* செ.கு.வி. (v.i.); *1. முளைத்தல்; தோன்றுதல்; ;* to sprout appear *2. சிறத்தல்;* to be glorified

உகு[3]த்தல் *ugu-, 21* செ.கு.வி. (v.i.); *1. சிதறச்செயதல்;* to let fall, spill, scatter. "ஊஉனன்மையி னுண்ணா துகுத்தென" *(மலைபடு. 148) 2. உதிர்த்தல்;* to cast as leaves, to exuviate, as a bird its feathers "பழன மஞ்ஞை யுகுத்த பீலி" *(புறா.13). 3. வெளியிடுதல்;* to emit, pour out "சீற்றமுகுத்த செந்நீ" *(கம்பரா. இராவணன்றா 27). 4. சிந்துதல்* to shed as tears "நெடுங்கணீருகுத்து" *(சிலப். பதிக. 32). 5. சொரிதல்;* to pour "மென்பழ னுகுத்த தேனும்" *(நைடத - நாட்டுப் . 20).*

கூ. உகிசு.

உகை [1]–தல் *ugai-,* 4. செ. கு. வி (v.i.); செல்லுதல்; to move, as boat; to go as a vehicle; to walk, as an animal "காமவுததியைக் கரைவிட வுகையு நாவாயானும்" *(கல்லா. 19). (செ. அக.).*

உகை[2]–த்தல் *ugai, 4* செ. குன்றாவி (v.t.); *1. செலுத்துதல்;* to drive as a carriage, to ride as a horse, to row as a boat, to discharge as an arrow. "பெருந்தோணி பற்றி யுகைத்தலும்" *(திருவாச. 30.4) 2. எழுப்புதல்;* to stir up, as dust. "பலபுரவிநீறுகைப்ப" *(மதுரைக் 184) 3.பதித்தல்;* to set as a gem. "நீலமொன்றுகைக்கு நிறைந்த கணையாழி" *(பணவிடு.97) 4.*செ.கு.வி. (v.i.) *1.* எழுதல் to rise "உகத்தின் முடிவினிலுகைத்த கனைகடல்" *(கலிங் 342. புதுப் 11.44) 2.*உயர வெழும்புதல்; to leap, jump up; "கொடித்தடந் தேரினின் றுகைத்துமுன் குதியா" *(பாரத நிரை மீ. 41)*

கூ. உகு **GK.** ago; **L.** ago

உங்கரி–த்தல் *uṅgari-*, 4. செ.கு.வி. (v.i.); *1. உம்மென் றொலித்தல்;* to utter the exclamatory sound of 'hum' expressive of contempt or displeasure.“*காமர் வில்லாளியாகி யுங்கரித்து*” *(திருக்காளத். பு. 6, 39). 2. அதட்டுதல்;* to rebuke authoritatively, hector, threaten. *3. உரப்புதல், அச்சமுறுத்துதல்;* to whoop, vociferate inarticulately as when driving cattle or in scaring away brids, beasts, or human being. *4. உங்காரஞ் செய்தல்;* to utter 'hum' expressive of menace.

உச்சரி²–த்தல் *uccari-*, 4, செ.கு.வி.(v.i.);*1.இதழ் முதலியவற்றின் தொழில்களால் எழுத்துகளைப் பிறப்பித்தல்; பலுக்குதல்;* to pronounce, enunciate, articulate wiith the organs of speech. *2. ஓதுதல்;* worship; pray “*அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க*” *(சி. சி. 9.1).*

உச்சிமோ–த்தல் *ucci*mō-*; 3. செ. குன்றாவி* (v.t..); *உச்சந்ததலையை மோந்து அன்பு பாராட்டுதல்;* smell the crown of the head especially of a child from affection. “*தனிப் புதல்வன்றனை உச்சி மோந்து*” *(கோயிற்பு. வியாக்கிர. 2).*

உச்சியெடு –த்தல் *ucci-, y- eḍu 4. செ.கு.வி.* (v.i.); *1. வகிர் எடுத்தல்* Part the locks of hair in two with a cleavage line from the crown to the forehead (J). *2. உச்சி முடியை மென்மையாகப் பற்றியிழுத்தல்;* slow pull of few hairs in the crown to relieve aliment.

உச்சு¹–தல் *uccu-*, 5. செ.கு.வி. (v.i.);*1. இலக்கிற் காய் முதலியன எறிதல்;* to pitch at a mark, to play such a game of pitching with areca nuts, shells or coins. *2.(வஞ்சகத்தால்) வெல்லுதல்;* to conquer in a game come out successful in a controversy, win secure an advantage by subtlely or artifice. 3. *பிறர் பொருளை ஏய்த்துக் கவர்தல்;* to get possession of another's property by fraud, stratagem, cunning, or deceit 4. *பித்துப் பிடித்தல்;* to go mad, to become demented. *(செ.அக)*

உச்சுக்காட்டு–தல் *uccu - k-* kāṭṭu-, *5. செ. கு.வி.* (v.i.) *நாயைத் தூண்டிவிடுதல்;* to urge or set a dog on a person or an object by repeating the sound ‘*உச்சு, உச்சு*’ while simultaneously pointing to the object of attack *நாயை உச்சுக்காட்டு (கொங்.வ).*

உசவு¹ – தல் *uavu-*, *5. செ. கு.வி* (v.i.)1. *சிந்தித்தல்; கலந்தாய்தல்;* to consider, to think and decide to scrutinize. “*ஏவவென்றுசவியோ*” *(பாரத. பதினேழாம். 221). 2. வேவுபார்த்தல்;* to spy, to discern by careful observation.

உசாவு–தல் *u*šāvu-, *5. செ. குன்றாவி* (v.t.); *1. சிந்தித்தல்;* to consider, to take counsel with onself, delibrate “*அரசியலுசாவி*” *(பாரத. வாரணா. 128) 2. கேட்டறிதல்;* to enquire or investigate. “*உசாவுகோ வையசிறிது*” *(கலித். 7-4) 3 . செவியுறுதல் (ஆ. அக)* to hear to listen “*உரைத்தமையனைவரு முசாவி*” *(விநாயகபு. 75. 84)*

உசிப்பித்தல் *u*šippi-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. சேர்த்தல்;* to unite, associate, to join with another. “*உன்னிடத் தெங்களை யுசிப்பித்துக் கொள்வாய்*” *(திருக்காளத். பு. காளன். 60).*

உசு¹–த்தல் *u*šu-, *4 செ.கு.வி.* (v.i.) *துளைத்தல்;* to bore punch.

உசுப்பு²–தல் *u*šuppu-, *5. செ. குன்றாவி* (v.t.) *1. எழுப்புதல்;* to rouse wake up to urge as dogs. *2. வெருட்டுதல்;* to frigten to drive away as birds.

உசும்பு–தல் *u*šumbu-, *5. செ.கு.வி* (v.i.)*1. அசைதல்;* to move stir, to be in motion as wind. -5 *செ.குன்றாவி.* (v.t.) *அதட்டுதல்;* to rebuke, rant, hector. “*மாக்களதிர்ப் பினுசும்ப*” *(பெருங். மகத. 13.59) (செ. அக).*

உட்காரவை–த்தல் *uṭkāravai -5. செ. குன்றாவி* (v.t.) *1. இருக்கையிலிருக்கச் செய்தல்;* to seat, to make one sit by providing a seat 2. *அடக்குதல்;* to floor, as an opponent, fig. to put to silence, as by a decisive argument, vanquish, overcome.

உட்கு¹–தல் uṭku-, *5. செ.கு.வி.* (v.i.) *1. அஞ்சுதல்;* to be afraid, to stand in awe, to show signs of fear. “*நண்ணாரு முட்குமென்பீடு*” *(குறள். 1088). 2. நாணுதல்;* to be bashful, be shy. “*சேரன் வருக.. உட்காதே*” *(தமிழ்நா. ஔவை) 3. நிலை கெடுதல்;* to be nervous, to collapse. 4. *மடிதல்;* to die, to be ruined *(செ. அக).*

உட்கு²– *தல் uṭku-, 5. செ.குன்றாவி.* (v.t.) *வெட்டுதல்;* to cut.

உட்கொள்¹ (ளு)–தல் *uṭkoḷḷu-,u 10. செ. குன்றாவி* (v.t.) 1. *தன்னகத்துக் கொள்ளுதல்;* to take, enclose as one's own to appropriate “*பாலையுட் கொண்டிடு செருக்கால்*” *(கந்தபு. ஆற்று 14) 2. உட்கருதல்;* to regard, look upon, consider. *3. உண்ணுதல்;* to take in, as one's food or drink to swallow “*யாவரு மணிந்துட் கொண்டு*” *(கந்தபு. திருக்கல். 82). 4. உள்ளிழுத்தல்;* to draw in or absorb, as the earth absorbs the rain water. *(செ. கே)*

ம. உள்கொள்ளுக; க. ஔகொள்.

உட்செல் – தல் *uṭsel-,13 செ. கு.வி.* (v.i.) *உள்ளே செல்லுதல்;* to enter, go in

க. ஔகெகோரு, ஔகெசேரு

உட்செல்லுத்து – தல் *uṭseluttu-, 13. செ. குன்றாவி* (v.t) *1. உள்ளே செலுத்துதல்;* to insert, inject. 2. *சூழ்ச்சி செய்து உள்ளே புகுவித்தல்;* to administer, as a medicine or a poison, by sweet persuasion. 3. *கையூட்டுக் கொடுத்தல்;* to send in a bribe secretly. *(செ. அக).*

உட்படு¹–தல் *uṭpaḍu-, 20. செ.கு.வி.* (v.i.) *1. உள்ளாதல்;* to be within, included. *2. கீழாதல்;* to be under, as in age. *3. அகப்படுதல் (பு.வெ. 8.34.);* to fall into, as a trap to be caught. *4. உடன்படுதல்;* to be taken in concerned in; to become a party. *5.சேர்தல்;* to join “*ஆறுட்பட்டவை யிருகாலத்து*”*(கந்தபு. அக்கினி 205). (செ. அக.).*

ம. உள்பெடுக. க. ஔபடு

உட்படு²–த்தல் *uṭpaḍu-, 18. செ. குன்றாவி.* (v.t.) *1. உள்ளாக்குதல்;* to cause to be put in.

2. அகப்படுத்துதல்; to inclose,ensnare, envelop. *3. உடன்படுத்துதல்;* to persuade, bring round. *4. உட்செலுத்துதல்;* to thrust in, as is done wit a gauze through a wound or injury. *(சா.அக.).*

உட்புகு–தல் *uṭpigu-*, *21.* செ. கு. வி. (v.i.) *1. உள்ளே புகுதல்;* to get into enter, "*உட்புகுந் தென்னுளமன்னி*" *(திருவாச. 31.3.).* 2. *ஆழ்ந்து கவனித்தல்;* to enter deeply into, get into the heart of. *அந்தச் செய்தியை உட்புகுந்து பார். (உ. வ .). (செ. அக.).*

ம. உள்புகு; க. ஒளவோகு. ஒளபுகு.

உடக்கு[1]தல் *uḍakku-*, *5.* செ.குன்றாவி (v.t.) *1.* செலுத்துதல்; to dart or shoot, as an arrow. "*வில்வாங்கியுடக்குஞ் சரத்தால்*" *(மாறன. பா. 660). 5.* செ.கு.வி. (v.i) *2.நாணிற்செறிதல் (மாறன. பா. 374);* ro be fitted to the string of the bow, as an arrow.*(செ. அக)*

உடம்படு–தல் udampadu-,*20.*செ.கு.வி. (v.i.) ஒப்புதல்; to consent, agree to acquire.

ம. உடம்பெடுக; க. ஒடம்படு.

உடம்பெடு–த்தல் *uḍambeḍu-*, *4* செ.கு.வி. (v.i.) *1. பிறத்தல்;* to be born with material body. "*படிக்கவுடம் பெடுத்தேன்*" *(இராமநா. ஆரன். 25). 2.*செயலுடையனாதல்; to lift oneself up; to have the strength to move. *அடித்த அடியால் அவன் உடம்பெடுக்க முடியவில்லை. 3. உடம்பு தேறல்;* recover from ailment. *ஆ .அக.).*

உடல்(லு)– தல் *uḍal-*, *13.* செ.கு. வி. (v.i.) *1.சீற்றங் கொள்ளுதல்;* to be enraged "*உடன்று மேல் வந்த வம்ப மள்ளரை*" *(புறநா. 77.9). 2. மாறுபடுதல்;* to quabble; to bicker, wrangle. "*உடலினேனல்லேன்*" *(ஐங். குறு.66) 3. போர் புரிதல் (திவா.);* to fight, wage war. *4. ஆசையால் வருந்துதல்;* to pine for, yearn after. "*உள்ளமுடன் றெழுகின்றதே*" *(சீவக. 2005). 5. ஒளிர்தல் (ஆ. அக.);* to shine, glitter.

உடற்று[1]–தல் *uḍaṟṟu-*, *5.* செ. குன்றாவி. (v.t.) *1.* பொருதல்; to fight. *2. சிதறடித்தல்;* to make the enemies flee.

உடற்று[2]–தல் *uḍaṟṟu-*,*5.* செ.குன்றாவி (v.t.) *1.* வருத்துதல்; to afflict, forment. "*உண்ணின்றுடற்றும் பசி*" *(குறள் 13). 2. சினமூட்டுதல்;* to provoke, infuriate, enrage "*நின்னுடற்றியோர் நாடே*" *(புறநா. 4) 3. மூண்டு நடத்துதல்;* push on vigorously as a campaign in war. "*அமருடற்றினான்*" *(பாரத. இராச. 50). 4. விடுத்தல்;* to discharge briskly, as a shower of arrows. "*பலகோடிபாண முடற்றினான்*" *(பாரத பதின்மூ. 24). 5.கெடுத்தல்;* to balk, spoil, damage, thwart. "*ஒல்லுங்கரும முடற்றுபவர்*" *(குறள், 818).*

உடறு–தல் *uḍaṟu*, செ.கு.வி. (v.i.) *சினத்தல்;* to be enraged at "*காலனைத் துண்டமதாவுடறிய சேவடியான்*" *(தேவா. 524 . 7) . (செ. அக.).*

உடன்படு[1]தல் *uḍaṉ-paḍu*, *20.*செ.கு.வி. (v.i) இசைதல் *(பிங்);* to agree, assent, consent, acquiesce, yield. *(செ. அக.).*

க. ஒடம்படிக; தெ. உடம்பருன்சு.

உடனா–தல் *uḍaṉ-a-*, *6.*செ.கு.வி. (v.i) கூடிநிற்றல் *(சி.சி.2,80);* to be in company with associate.

உடு–த்தல் *uḍu-*, *18* செ. குன்றாவி. (v.t.) *1.* சேர்தல், பொருந்துதல்; to join, stick. *2.* ஆடை முதலியன அணிதல்; to put on as clothes. "*பட்டுந்துகிலு முடுத்து*" *(நாலடி. 264). 3. சூழ்தல்;* to surround, encircle "*அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்*" *(புறநா. 21). 3.* சேர்தல்; பொருந்தல்; to join, stick.

ம. உடுக்குக; க. ஒடு, உடி, உடிகெ, உடுகெ, ; தெ. உடுபு; துட, உட்ப; குட. உடி, உடிபி; து. உடுங்ரே; கோண்., கட. ஊட் .

உடுத்து–தல் *uḍuttu-5,* செ. குன்றாவி.(v.t.) ஆடையணி வித்தல்; to dress on. *(செ. அக).*

உடை[1]–தல் *uḍai-*, *3.* செ. கு.வி. (v.i.) *1. தகர்தல்;* break as a pot; to burst into fragments. "*என்னாகும் மண்ணின் குடமுடைந்தக் கால்*" *(வாக்குண். 18.). 2. பிளத்தல்;* to crack, split, to be cloven, "*உடைகவட்டோமை*" *(கல்லா. 7.). 3. ஏரி ஆறு முதலியன கரையுடைதல்;* to be breached, as a tank, *வீராணத்தேரி உடைந்தது. (உ.வ.) 4. புண்கட்டியுடைதல்;* to burst open, as a boil. *5. முறுக்கு அவிழ்தல்;* to become untwisted, as a rope. *கயிற்றின் முறுக்குடைந்தது. (உ.வ.). 6. மலர்தல்;* to blossom as a flower."கோடுடையும்.. சேர்ப்பன்"*(பு.வெ. 12, பெண். 3.). 7. தோற்றோடுதல்;* to be discomfited, routed, broken, as the ranks of an army. "*வழுதி சேனையுடைந்ததே*" *(திருவிளை. கந்தரப்.18.). 8.மனங்குலைதல்;* to be dispirited, dejected, as one's heart with grief; to be in despair. "*உடைபு நெஞ்சுக*" *(கலித்.10.). 9. எளிமைப்படுதல் (பிங்);* to become poor, reduced in circumstances *10. வெளிப்படுதல்;* to be divulged, to become publicly known *11. சாதல்;* to die. "*உடைந்துழிக் காகம்போல்*" *(நாலடி . 284.). 12. கெடுதல்;* to be ruined (w.). *13. உலைதல்;* to break down, as a witness in cross - examination. *(mod.). சாட்சியுடைந்து போயிற்று (உ.வ.) (செ. அக)*

ம. உடயுக; க. ஒடி, ஒடெ, உடி; கோத. ஒட்வ்; துட. வட்; குட. ஒடெ, ஒட; து. உடெபுனி, உடெவினி ; தெ. ஒடபி; கொலா. நாட்; நா. ஒட்வ; பர். ஒட்; கோண். வோடானா; கட . ஒர்.

உடை[2]–த்தல் *uḍai-*, *4.* செ.குன்றாவி. (v.t.) *1. தகர்த்தல்;* to break into pieces, as a vessel a lamp, a clod, any solid or massive substance, teeth. "*மகுட கோடி களுடைத்தலின் "* *(பாரத. காண்டவ. 27.). 2.குட்டுதல் (திவா.);* to cuff on another's head with the knuckles. 3. *பிளத்தல்;* to split, as wood, to fracture, as the skull,

"கட்டையையுடைத்துக்கொடு" (உ.வ). 4. கரை உடைத்தல்; to burst, as the bank of a river. "செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்" (நாலடி 222.). 5 புண்கட்டியுடைத்தல்; to open, as a boil. 6. முறுக்கவிழ்த்தல்; untwist, untwine. 7. தோற்கச் செய்தல்; to defeat, rout, put to disorderly fight "படைக்குட்டம் பாய்மாவுடையா னுடைக்கிற்கும்" (நான்மணி. 18.). 8.வெளிப்படுத்துதல்; to break, as news; to reveal. அவன் அந்த இரகசியத்தை உடைத்து விட்டான் (உ.வ.). 9.அழித்தல்; to damage, ruin impoverish. "பெண்மையுடைக்கும் படை"(குறள் 1258.). 10. வருத்துதல்; to trouble, distress "பொறாமை யுள்ளு டைக்கு மென்க"(இரகு. யாக. 12.). (செ.அக.).

உடைப்பெடு–த்தல் uḍaippeḍu-, 4 செ.கு.வி(v.i)வெள்ளத்தாற் கரையழிதல்; to be breached, as a tank ஏரி உடைப் பெடுத்தவிட்டது. (உ.வ.). (செ.அக.).

உண்[1](ணு)–தல் uṇ(ṇu)-, 13. செ. குன்றாவி. (v.t.) 1. உண்ணுதல்; to eat or drink; to suck as a child; take food. 2. உணவைக் கடியாது உட்கொள்ளுதல் (திவ். திருவாய் 6,7,1) to swallow without biting. 3.துய்த்தல்; to enjoy, experience."மங்கையரிளநலமைந்த ருண்ண" (கம்பரா. உண்டா. 63). 4. உட்கொள்ளுதல்; to draw in, receive "நதியுண்ட கடல்" (தாயு.மலைவளர். 1). 5.பொருந்துதல்; to be fitted to. "உறியுண்ட கரகத்தோடு" (திருவிளை. யானையெய். 38) 6. ஒத்தல்; to resemble "சேலுண் கண்ணியர்" (சீவக. 2383) 7. சுவர்தல்; to seize grasp. "அவுணனாருயிரையுண்ட கூற்றினை" (திவ். திருக்குறுந். 2.). 8. இசைவாதல்; to harmonise with, to be agreeable to "ஓசை யூட்டினு முண்ணாத வாறும்" (யாப். வி.பக்.97) து.வி.(aux.v) செயப்பாட்டுவினைப்பொருள் உணர்த்தும் ஒரு ஈறு; used with vbl. bases and vbl. nonus to form the passive. as in கட்டுண்டான்,கேடுண்டான். (செ.அக.).

ம. உண்ணுக; க. உண்ணு; தெ. ஊடு (குடித்தல்) கோத. உண்; துட. உண் (குடித்தல்); குட. உண்ண; து. உண்பினி உணுபினி, கொலா. உண் (குடித்தல்) நா. உண். பர். உண்; கூ. உண். கோண். உண்டினா; குரு. ஒணா; மால் ஒனெ; பிரா. குனிங்.

உண்டறு[1] – த்தல் uṇḍaṟu-, 4.செ. குன்றாவி. (v.t.) 1. புசித்துச் செரிப்பித்துக் கொள்ளுதல் (ஈடு. 10, 5,11); eat and digest. 2. துய்ந்து முடித்தல்; experience to the fullest extent, enjoy the maximum benefit of."உண்டறுக்க வொண்ணாத போக்யதாதிசயத்தை" (ஈடு 10.3.2). 3. நன்றி மறத்தல்; to be ungrateful "அல்லாத உபகாரங்களை உண்டறுக் கிலும்" (திவ். திருநெடுந். 2. வ்யா). (செ. அக.). 4. ஈடுசெய்து தீர்த்தல்; to exhaust.

உண்டா – தல் uṇḍā-, 6 செ.கு.வி. (v.i.) 1. உளதாதல்; to come into existence rise into being to be formed. "நன்றுண்டாகவென" (சீவக. 1159). 2. விளைதல் (பிங்); to grow as vegetables; to thrive, flourish. 3. செல்வச் செழிப்பாதல்; to become rich, wealthy, opulent, to prosper. "உண்டாய போழ்தில்... தொண்டாயிரவர் தொகுபவே" (நாலடி, 284) 4. நிலையாதல்; to be permanent, lasting, durable "செல்வமொன் றுண்டாக வைக்கற்பாற் றன்று" (நாலடி. 1) 5. கருவுண்டாதல்; to conceive. அந்த அம்மையார் உண்டாகியிருக்கிறார் (உ.வ.).

உண்டாக்கு – தல் uṇḍākku-, 5. செ. குன்றாவி. (v.t.) 1. ஒன்றை உண்டாக்குதல்; to make, produce "மண்ணால் பழமை யுண்டாக்கினான்" (உ. வ.). 2. படைத்தல்; to bring into being, create. "தீர்த்தமிங்குண்டாக்கெனச் செப்பலோடும்" (திருவிளை. தீர்த்தவி. 8) 3. விளைவித்தல்; to raise as crop or trees; to cultivate. "நந்தனம்.. உண்டாக்கி" (திருவிளை. தருமிக். 4) 4. வளர்ச்சிக்குக் கொண்டு வருதல்; to enrich, raise to affluence அந்த அதிகாரி அவனை உண்டாக்கி வைத்தார். (உ.வ) 5. பணம் ஈட்டுதல்; to earn (சேரநா.) (செ. அக.).

ம. உண்டாக்கு.

உண்டாயிரு–த்தல் uṇḍāy-iru, 4. செ.கு.வி. (v.i.) 1. கருக்கொண்டிருத்தல்; to be pregnant. அவள் உண்டாயிருக்கிறாள் (கொ.வ.). 2. உளதாயிருத்தல்; to come into existence, rise into being, be formed.

உண்டுபண்ணு–தல் uṇḍu-paṇṇu-, 12.செ.குன்றாவி. (v.t.) 1. உண்டாக்குதல்; to make, create, give rise to. " துவிதமே அத்துவித ஞானத்தையுண்டு பணு ஞானம்" (தாயு. எங்கு. 3). செ.அக.).

உணக்கு[1]–தல் uṇakku-, 5. செ. குன்றாவி (v.t.) 1. உலர்த்துதல்; to cause to dry; to dry in the sun. "தொடிப் புழுதி கஃசாவுணக்கின்" (குறள். 1037.). 2. கெடுத்தல்; to injure, ruin. "உணக்கினான்... என் வாழ்க்கை" (விநாயகபு. 80. 120.). 3. வருத்து; torment give trouble. (செ. அக.).

ம. உணக்குக; க. ஒணத்த, கோத. ஒண்க், துட. விண்க். குட. ஒணக். து. உணங்கு; பட. ஒணக்கு.

உணங்கு–தல் uṇaṅgu-, 5 செ. கு.வி (v.i.) 1. உலர்தல்; to dry, as grain, vegetables or fish. "தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்கும்" (தமிழ்நா. 154.). 2. மெலிதல்; to become gaunt, as the body by fasting. "ஊடலுணங்க விடுவாரோடு" (குறள். 1310) 3. வாடுதல்; to be dejected in mind, to languish. "வணங்கிய சிந்தையீர்" (கந்தபு. மோன. 21.). 4. சுருங்குதல்; to shrink, shrivel. "உணங்கரும் புகழ்" (காஞ்சிப்பு. நாட்டுப். 1.). 5. செயலறுதல்; to pine away, droop, becomes listless. "உணங்கிடுங் கரண மென்னில்" (சி. சி. 4. 7.).

ம. உணங்ஙக; க. ஒணகு; கோத. ஒண்க்; துட. விங்க்; விண்க்; குட. ஒணங்க்; து. ஒணகட்டு

(உலர்ந்தது).

உணத்து–தல் uṇattu-, *5. செ. குன்றாவி* (v.t.) *1.காயவிடுதல்;* to cause to dry; *நெல்லையுணத்தினான் 2. வற்றுவித்தல்;* to emaciate as the body; to attenuate. "*மெய்யுணத்தலும்*" *(தைலவ. தைல. 110). (செ. அக.).*

உணர்[1]–தல் uṇar-, *2. செ. குன்றாவி* (v.t.) *1. அறிதல்;* to be conscious of; to know make out. understand. "*முன்ன முகத்தினுணர்ந்து*" *(புறநா. 3.25.). 2. கருதுதல் (திவா.);* to think, reflect, consider, contemplate. *3. ஆராய்தல்;* to examine, test, oberve, scrutinize "*உற்று நாறியுங் கண்டு முணர்ந்து*" *(சீவக. 885.). 4. நுகர்தல்;* to experience, as a sensation "*ஐந்தினையுமொன்றொன்றாப் பார்த்துணர்வது*" *(சி.போ. 11.11.). 5. நினைத்தல்;* to realize, conceive, imagine. "*அண்டனையான் மாவி லாய்ந்துணர*" *(சி.போ. 9, 2, 3,). 6. உள்ளம் நெகிழ்தல்;* to feel . 7.*பகுத்தறிதல் (ஆ.அக.).* to rationalize. *8. உணர்ந்தறிதல் (ஆ. அக.).* to know by sense or perception *(செ. அக.).*

ம. உணருக; க. ஒணர்

உணர்[2]தல் uṇar-, *2. செ. குன்றாவி* (v.i.)*1. துயிலெழுதல்;* to wake from sleep. "*மன்னநீ யுணர்தி யென்னா*" *(கம்பரா. கும்ப. 44.). 2. அயர்வு நீங்குதல்;* to get back to consciousness, recover from languor. *3. பிரிதல் (பிங்);* to separate. *4. ஊடல் நீங்குதல்;* to become reconciled as a husband to his wife; to be reunited after a love quarrel. "*ஊடலுணர்தல்*" *(குறள் 1109.). (செ. அக.).*

உணர்த்து – தல் uṇarttu-, *15 செ. கு. வி.* (v.i.) *1. அறிவித் தல்;* to teach, instruct, cause to feel or understand, enlighten, convince "*உடல நைந்தொருத்தியுருகுமென்று ணர்த்துமினே*" *(திவ். திருவாய். 6, 1, 4). 2. துயிலெழுப்புதல்;* to wake from sleep. "*ஏனல் காப்போருணர்த்திய கூஉம்' (புறநா. 28.). 3. ஊடல் தீர்த்தல்;* to pacify, as the husband his wife. "*உணர்த்தல் வேண்டிய கிழவோன்*" *(தொல். பொருள். 150). 4. நினைப்பூட்டுதல்;* to put in mind, remind, recall to mind. "*உணர்த்தலுட லுணர்ந்து*" *(திவ். திருவாய். 6, 1, 5). 5. பெரியோர் அறியுமாறு செய்தல்;* to inform a superior, to submit.

ம. உணர்த்து. க. உன்னிக

உணை–தல் uṇai; *2. செ. கு.வி.*(v.i.) *1. உடல் மெலிதல்;* to emaciate, slacken. *2. உள்நைதல்;* to be frayed to be wornout as cloth.

உத்தரவுகொடு – த்தல் uttaravu-kḍu-, *4. செ. கு. வி.* (v.i.) *1. இசைவளித்தல்;* to give permission *2. கட்டளை கொடுத்தல்;* to issue an order *3 போகச் சொல்லுதல்;* to send away dismiss *(செ. அக.).*

உத்து[1]–தல் uttu, *5. செ. குன்றாவி.* (v.t.) *1. கழித்தல்* to discard throw away. "*பொன்னெல்லா முத்தி யெறிந்து*" *(கலித். 64). 2. முன்தள்ளுதல்;* to push *(செ. அக.).*

உதப்பு[2]–தல் udappu-, *5. செ. குன்றாவி* (v.t.) *1. கடிந்து கூறுதல் (வின்);* to scold, reprove. *2. அச்ச மூட்டுதல்; இகழ்ந்து நீக்குதல்; (வின்);* to reject with an exclamation of disdain, to rebuff. *3. குதப்புதல்;* to move about in the mouth, mumble. *4. வாயினின்று உண்ணும் பொருள் வெளிவரும்படி மிகுதியாய்ச் சுவைத்தல் (சொ.ஆ.க.);* munching awkwardly *(செ.அக.).*

உதம்பு–தல் udambu-, *5. செ. குன்றாவி* (v.t) *மறுத்தல்;* to deny refuse.

உதவு[1]தல் udavi, *5. செ. குன்றாவி.* (v.t) *1. கொடுத்தல்;* to give, contribute, bestow "*ஈக்காற்றுணையு முதவாதார்*" *(நாலடி . 218) 2. துணை செய்தல்;* to help, aid, assist. "*நம்மாட்டுதவிய நன்னர்க்கு*" *(பெருங். வத்தவ. 3;11). 3. தடுத்து நிற்றல்;* to withstand as an invading army "*இடத்துதவும் நல்லாளுடைய தரண்*" *(குறள். 746). 4. சொல்லுதல்;* to report, tell inform "*அன்னையர்க்குதவல் வேண்டும்*" *(கல்லா. 40)*

உதறு[1]–தல் udaṛu-, *5. செ. குன்றாவி* (v.t) *1. அசைத்து எற்றுதல்;* to shake off, throw off, shake out as a cloth. "*பாய லுதறிப் படுப்பது*" *(கம்பரா. கடல்தா. 4). 2. விலக்குதல்;* to renounce, as the world. friends. etc. "*பேறனைத்து மணுவெனவேயுதறித்தள்ள* " *(தாயு. ஆகார. 3).*

உதறு[2]–தல் udaṛu-, *5. செ. குன்றாவி* (v.t.) *1. விரைந்து அசைதல்;* to move to and fro, to shake. 2.*குளிர், அச்சம் முதலியவற்றாற் கைக கால் நடுங்குதல்* as one's hands, feet or body, through cold, fear or anger. *(செ. அக.).*

ம. உதறுக; உ. ஒதறு. ஒதரு; தெ. உதரு, உதுரு, உதிலு; து. உதேவுனி; கட. உதர்ப்; பட. ஒதரு.

உதி –த்தல் udi-, *4. செ. கு.வி.* (v.i) *1. எழுதல்; உதயமாதல்;* to rise or appear as a heavenly body. "*மீளவு முதித்தனன்*"*(பாரத.இரண்டாம்.32). 2.தோன்றுதல்;* to spring up, come into existence, arise, as primitive elements one out of another. "*உதிப்பது மீறு முண்டு*" *(சி. சி. 1, 2). 3. பிறத்தல்;* to commence, as a new year, an age; to be born, as a great personage (w.)

உதிர்–தல் udir-, *2. செ.கு.வி.* (v.i.) *கீழ்விழுதல்;* to drop off, as leaves, fruits; to fall out, as hair; to be blasted, nipped, shaken with the wind; to drop down as tears. "*தீவளியா னற்கா யுதிர்தலு முண்டு*" *(நாலடி. 19). 2. பிதிர்தல்;* to crumble, fall to pieces, as cakes. "*உதிருகின்ற சிற்றுண்டி கொண்டு (கந்தபு. ஆற்றுப். 27). 3. சாதல்;* to die, used in imprecations. (w.). *நீ சீக்கிர முதிர்ந்து போவாய். (வின்.). 4. குலைதல்;* to be demolished. "*உதிராமதிலு முளகொல்*" *(பு.வெ. 6.4.).*

ம. உதிருக; க. உதிர், உதிரு, உதுர்; துட. வித் (இடை ஆடை நெகிழல்); து. உதுருனி, உதருனி.

உதிர்[3]–த்தல் udir-, *2. செ. குன்றாவி.* (v.t.) *1. வீழ்த்துதல்;* to cast leaves or fruits, as trees, to cause to drop or fall in numbers or succession to shake off, beat off, peel off, strip; to knock out, as teeth to shed, as tears. "*குயில் குடைந் துதிர்த்த புதுப்பூஞ் செம்மல்*" *(சிறு பாண். 4.). 2. பிதிர்த்தல்;* to break in pieces. *பிட்டையு திர்த்தான். 3. உதறுதல்;* to shake out, as cloth "*பலரிடையாடை யுதிரார்*" *(ஆசாரக். 37) (செ. அக.).*

ம. உதிர்; க. உதிரிக.

உதை[1]–தல் udai-, *4. செ. குன்றாவி* (v.t) *1. காலால் எற்றுதல்;* to kick, *அவன் என்னை உதைத்தான். 2. நன்றாக ஊன்றுதல்;* to plant the foot firmly against a post or a wall. '*முட்டுக்கட்டை சுவரை உதைத்துக் கொண்டிருக்கிறது*' *(இ .வ.). (செ. அக.). 3. தாக்கி மீளுதல்;* to dash and retreat. *(ஆ. அக.).*

உதை[2]–த்தல் udai, *4. செ. குன்றாவி.* (v.i) *1. காலாலெற் றுதல்;* to kick. "*கூற்றொன்றை யுதைத்தாய் போற்றி*" *(தேவா. 966.). 2. அவமதித்தல்;* to spum, reject, as advice. (w).*அவன் என் பேச்சை தள்ளி விட்டான் (இ.வ). 3.செலுத்துதல்;* to discharge, as an arrow. "*இச்சிலையுதைத்த கோற் கிலக்கம்*" *(கம்பரா. கார்முக. 9.). 4. அடித்தல்;* to beat, strike. *அவனை நன்றாய் உதைத்தான். (உவ.).*

உதைகொடு[1]–த்தல் udai-koḍu-, *4. செ. குன்றாவி.* (v.i.) *உதைத்தல்;* to give kicks.

உதைகொடு[2]–த்தல் udaikoḍu-, *4. செ. குன்றாவி.* (v.i.) *1. முட்டுக்கொட்டுத்தல்;* to set a prop, put a buttress as against a wall or a tree. *2. ஊஞ்சலை ஆட்டிக் கொள்ளுதல்;* to push and give impulse to a swing. (J). *(செ. அக.).*

உந்து[1] – தல் undu-, *5. செ. குன்றாவி.* (v.t.) *1. தள்ளுதல்;* to push out, thrust forward."*உந்திடவெழுந்து மூழ்கி*" *(ஞானா. 16,17.). 2.வீசியெறிதல்;* to cast away. "*கரிகடோர்த்தொகை... யள்ளியே யுந்தினன்*" *(கந்தபு. நகரழி. 23.). 3. அம்பு முதலியன விடுதல்;* to shoot, as an arrow, as a spear "*சரங்கள், வீமனுந்த*' *(பாரத. புட்ப. 104.). 4. செலுத்துதல்;* to drive as a chariot. "*தேரினைத் துரோணனுந்தினான்*" *(பாரத. நிரைமீ. 86.). 5. அனுப்புதல்;* to despatch, send. "*வயிரவி தன்னை யாங்கேயுந்தினன்*" *(பரபோத. 24, 45.). 6. வெளிப்படுத்தல்;* to produce cause to appear "*கடல் வண னுந்தியுந்திய நூற்றிதழ்த் தாமரை*"*(கம்பரா. கிளை. 121.). 7. யாழ்நரம்பு தெறித்தல்;* to thrum, as a string of the yāḻ "*வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்*" *(பொருந. 23.). 8. மரமுதலியன கடைதல்;* to turn in a lathe, to rub, as two sticks together till they ignite."*உந்தவே காட்டாக் கிற்றோன்றி*"*(சி. போ. 9, 3, 2.). 9.ஆயக்காய் முதலியன உருட்டுதல்;* to toss, as dice. *கவறுந் தினார். (வின்.).*

உந்து[2]–தல் undu, *15. செ. கு. வி.*(v.i.) *1. எழும்புதல்;* to rise, flow, as water; to swell, as the sea."*உந்து நீர்க்கங்கை*" *(கூர்மபு. இராமனவ. 39). 2. பெருகுதல்;* to grow, enlarge, as wisdom. "*உந்துசுடர் ஞானத்தை*" *(சேதுபு. நாட்டு. 3.). 3. செல்லுதல்;* to go, move along "*வானுந்துமாமதி (திருக்கோ. 147.). 4. நகர்தல்;* crawl, trudge "*அன்பர்..... உந்தினர் மார்பினால்*" *(பெரியபு. திருநா. 358.). 5. நீங்குதல்;* to cease."*உந்தாத வன்போடு*' *(பதினொ. திருத்தொண். 19). 6.பொருந்துதல்;* to be united. "*தானந்தோறு முந்திடுங் கரணம்*" *(சி. சி. 4, 34 சிவஞா.).*

ம. உந்துக. கோத. உத்; துட., உத்; பட. உந்து; L. unda G.K. hunder, Goth lato; Lith wandu; E water; OHG warar *உந்து* > *வ. உந்த் (இ.வே.). (வ.மொ. 93.).*

உப்பமை–த்தல் uppamai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *உப்பு விளைத்தல்;* to produce salt. *(ஆ. அக.).*

உப்பிடு – தல் uppiḍu-, *20. செ. கு.வி.* (v.i.) *உப்பிட்ட உணவளித்தல்;* to furnish food seasoned with salt. *உப்பிட்டவரை உள்ளவும் நினை. (செ. அக.).*

உப்பு–தல் uppu, *15 செ. கு. வி.* (v.i.)*1. பருத்தல் (வேதா. சூ. 67, உரை);* to become big, as a seed; to bloat, puff up as the abdomen by wind from indigestion. *2. பொங்குதல்;* to raise, as leaven *(செ. அக.).*

ம. உப்புக; க. உப்பு; தெ. உப்பரின்சு, உப்பு; கோத., துட. உப்; து. உப்புவி

உப்புக்கட்டு[1]–தல் uppu-k-kaṭṭu-, *12. செ. குன்றாவி* (v.t) *குழந்தையை முதுகில் தூங்கி விளையாடுதல்;* to carry a child on one's back and cry out merrily, salt for sale in a game.

உப்புக்கட்டு[2]–தல் uppu-k-kaṭṭu-, *5. செ. கு. வி.* (v.i.) *சடுகுடு விளையாட்டிற்கு மணல் குவித்தல்;* to make a sand goal in the game of '*Paliṅjaḍugudu*'.

உப்புக்கரி–த்தல் uppu-k-kari, *4. செ. கு. வி.* (v.i.) *1. உவர்ப்பு மிகுதல்;* to have an intensely saline taste. *2. உப்புலர்த்தல்;* to dry salt. *(செ. அக.).*

உப்புப்பார்–த்தல் uppu-p-pār-, *11. செ. குன்றாவி* (v.t) *சுவைபார்த்தல்;* to try seasoning as of curry by the taste *(செ. அக.).*

உப்புப்பூ – த்தல் uppu-p-pū, *4. செ.கு.வி.* (v.i) *1. உப்புண்டாதல்;* to form, as salt or a lamina. *2. உப்புப்படிதல்;* to form, a coating salt on any surface. *3. உடலிலுப்புப் படர்தல்;* to form, as concretion on the skin, from perspiration (w.). *4. உப்பங்காற்றாலிற்றுப் போதல்;* to crumble, as masonry because of weathering by a salt atmosphere.

உப்புறை–த்தல் uppuṟai-, *4. செ. கு. வி.* (v.i.) *1. உப்புச் சுவை காணுதல்;* to be well flavoured with salt. *2. உப்புக் கரித்தல்;* to be over - flavoured with salt. *(செ. அக.).*

உம்கொட்டு – தல் umkoṭṭu, *5. செ.கு.வி.* (v.i) *1. உம்மொலியிட்டுப் பிறர் கூறுவதைக் கேட்டல்;* to respond by ejaculating 'um' as in listening to a story that is told *2. இசைவு*

தெரிவித்தல்; to say 'yes' agree without questioning.

தெ. ஊகொட்டு; பட. ஊங்கட்டு; ஆத். உங்கூ

உம்மு[1]–தல் ummu, 5. செ.கு. வி. (v.i.) கூடுதல்; இணைதல்; உடனிருத்தல்; பொருந்துதல்; ஒட்டுதல்; ஒத்தல்; to join, fix together, mix, mingle.

ம., க. உம்.

உம்மு – த்தல் ummu, 5. செ. கு. வி. (v.i.) காய்தல்; to become dry.

உமி[1] – தல் umi-, 4. செ.குன்றாவி. (v.t.) 1. கொப்புளித்தல்; to gargle. "நீராடும்போது... நீந்தா ருமியார்" (ஆசாரக். 15.). 2. இதழ் (உதடு) கூட்டித் துப்புதல் (தனிப்பா. 1,25,45); to spit.

ம. உமிக்குக; க. உகி, உகழ், உகுழ்; து. உபி (உமிழ் நீர்) உகிபுனி; தெ. உமியு

உமி[2] – தல் umi, 4. செ. குன்றாவி (v.t) உறிஞ்சுதல்; to suck, sip முலையுமிந்து குடிக்க (யாழ்ப்.)

உமி[3] – த்தல் umi, 2. செ.கு.வி. (v.t) 1. பதராதல்; ro become chaff. 2. சாரமறுதல்; to become insipid, spoiled (w). சோறு உமித்துப் போயிற்று. (செ . அக.).

உமி[4]–த்தல் umi-, 2 செ.கு.வி. (v.i) 1. கொப்புளங் கொள்ளுதல்; to blister, become sore. ."உள்ளடியுமித் துமித் தழன்ற" (சூளா. அரசி. 93.). 2. பதன் அழிதல்; to decay, deteriorate, to lose soundness as timber வீட்டு மரங்கள் உக்கியுமித்துப் போயின. (செ . அக.).

உமிழ்–தல் umi 2. செ. குன்றாவி (v.t.) 1. துப்புதல்; to spit. 2. கொப்பளித்தல் (திவா.); to gargle 3. வாயாலெடுத்தல்; to vomit, reject from an overcharged stomach. 4. வெளிப்படுத்துதல்; to emit as rays fo light, to discharge, as arrows to send forth, as sparks, to yield as fragrance, to reveal as news. "உள்ளத்தாலுமிழ வேண்டா" (சீவக. 2149.). 5. தெவிட்டுதல் (திவா.); to be satiated. 6. சொரிதல்; to pour.

ம. உமிழ்க; க. உகி; உகுழ், உகழ்; து. உம்பியுனி; உகிபுயு; தெ. உமியு; கோண். உகியன், உச்சான்; கொலா. நா. உச்; பர். உச், உச்ச; பட. உகி.

உமை – த்தல், ūmai-, 2. செ.கு.வி. (v.i.) தினவு தின்னுதல்; to itch. "உமைத்துழிச் சொறியப் பெற்றாம்" (சீவக.2617.).

உய் – தல், ūy-, 2.செ.கு.வி. (v.i.) 1. பிழைத்தல்; வாழ்த்தல்; to live, to subsist, have being. "உண்ணா வறுங்கடும் புய்தல் வேண்டி" (புறநா.181.). 2. ஈடேறுதல்; to be saved, redeemed. "தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ" (தேவா.5.1). 3. நீங்குதல்; to be relieved, as from trouble. "தாவலுய்யுமோ" (பதிற்றுப். 41.17). 4. துன்பத்தினின்று தப்புதல்; to escape as from danger. "சார்புடைய ராயினு முய்யார்" (குறள்.900). 5. உண்டாக்குதல்; to make, prepare. 6. வலிதல்; to get strong. 7. ஆற்றுதல்; to engage. 8. முற்செல்லுதல்; செலுத்தல்; to lead.

ம. உய்யுக.

உய் – த்தல், ūy-, 4. செ.குன்றாவி (v.t.) 1. செலுத்துதல்; to direct, guide. "நன்றின் பாலுய்ப்பதறிவு" (குறள்.422). 2. படைக்கலம் விடுதல்; to descharge, let fly, as an arrow. "அம்புய்க்கும் போர்" (கம்பரா. மாரீச. 186). 3. அனுப்புதல்; to send, dispatch."பட்டிமையோலை யுய்ப்பான்"(திருவிளை. மெய்க்கா. 13). 4. நடத்துதல்; to conduct, lead, direct."உய்த்திடு மிச்சை செய்தி" (சி.சி., 1, 62, நிரம்ப.). 5. கொண்டு போதல்; to carry. "வேட்டுவ ருய்த்தனரோவென" (சீவக.425). 6. நுகர்தல்; பட்டறிதல்; to enjoy, experience."காதலகாத லறியாமை யுய்க்கிற்பின்" (குறள். 440.). 7. கொடுத்தல்; to give. "மீளியாளர்க்கு மிகவுய்த் தன்று" (பு.வெ.3.9. கொளு.) 8. அறிவித்தல்; to make known, tell, reveal. "அவ்வழி யரசற் குய்த்தார்க்கு" (சீவக.1407). 9. ஆணை செலுத்துதல்; to rule. "ஞால முழுதுமுய்த்திடு மகவு" (பாரத. சம்பவ.10). 10. குறிப்பித்தல்; to mention. 11. ஊர்தியில் செல்லுதல்; to fly as vehicle. 12. அமிழ்த்தல்; to press, sink. 13. ஈடேறச் செய்தல்; to realise. "உய்யத்த வியோமரூபர்" (சதாசிவ.29). மதியைச் செலுத்தி ஆராய்தல். உய்த்தறிதல், உய்த்துணர்தல், உய்த்தலில் பொருண்மை என்னும் தொடர்களை நோக்குக.

ம. க, உய்.

உய்த்துணர்–தல், ūyttunar-, 8. செ.குன்றாவி (v.t.) மனத்தைச் செலுத்தி ஆராய்ந்தறிதல்; to know by careful investigation. "உய்த்துணர்ந்த வருரைத்த" (சூளா. சீய.37). (செ.அக.).

உய்வி–த்தல், ūyvi-, 4. செ.குன்றாவி (v.t.) பிழைக்கச் செய்தல்; to restore one to life. (சா.அக.).

உயங்கு–தல் ūyangu-, 5. செ.கு.வி. (v.i.) 1. வருந்துதல்; to suffer, to be in distress, to be pained in body or mind. "உயங்குவன் கிடந்த கிழத்தியை" (தொல்.பொருள்.146.). 2. மெலிதல்; to grow thin, become emaciated. "உயங்குசாய் சிறுபுறம்" (அகநா.19). 3. துவளுதல்; to be flexible, slender. "உயங்கு செங்கழுநீர்" (திருவாத.பு. மண்சுமந்த.4.).

உயந்து–தல், ūyañdu-, 3. செ.கு.வி. (v.i.) ஏப்பம் விடுதல்; to belch. (சேரநா.).

ம. உயந்துக.

உயர்[1]–தல் ūyar-, 2. செ.கு.வி. (v.i.) 1. மேலெழுதல்; to rise, as water; to ascend, as a body in the air; to move towards the meridian, as a heavenly body. "வடபுவி தாழ்ந்து தென்பா லுயர்தலும்" (கந்தபு.பாயி.63). 2. உயர்வுள்ளதாதல்; to be high, elevated, tall, lofty. உயர்ந்த மலை 3. வளர்தல்; to grow, increase, expand. "நெல்லுயரக் குடியுயரும்". 4. மேன்மையுறுதல்; to be excellent, exalted, eminent, dignified, superior. "உயர்ந்தவர்க்குதவியவுதவி" (கம்பரா. வே.எ். 35). 5. நீங்குதல்; to vanish, disappear, to be removed. "இனிவரினுயருமற் பழியென" (கலித். 129.17) (செ. அக.). 6. அலை முதலியன மேல் எழும்புதல்; to rise as

water or waves. *7.* நீர் பொங்கி மேலே வருதல்; to spring, bubble up, gush, flow forth. *8.* குனிந்து கிடக்கும் தலை, மேலே உயர்தல்; to be raised (as head).

ம. உயருக.

உயர்த்து–தல், ūyarttu-, *5.* செ.குன்றாவி (v.t.) *1.* உயரச்செய்தல்; to lift up, elevate; to build up as a wall in building. *2.* அதிகப் படுத்துதல்; to raise, as price; to increase, as expenditure. விலையையுயர்த்தினான். *3.* மேனிலைக்குக் கொண்டு வருதல்; to promote to higher office, exalt, ennoble. *4.* மேன்மைப்படுத்துதல்; to honour, treat with respect; to praise, maginify. "எப்புன்மையரை மிகவே யுயர்த்தி" *(திருவாச.5.10). 5.* இசையெடுத்தல்; to raise the voice, as in singing or speaking. உயர்த்திப் பாடினான். *6.* தூக்குதல்; to lift, hold up, as a scepter; to hoist, as a flag. 7. ஒரு பொருளைக் கொள்ளச் சில ஏமாற்று வேலைகளைக் கையாளுதல்; to get something by playing a trick, deceive. 7. திருடுதல்; to steal, lift.

ம. உயர்த்துக; *உய்த்துக; க., தெ.* எத்து.

உயல் (லு) – தல், ūyal-, *13* செ.கு.வி. (v.i.) *1.* அசைதல்; to wave, shake. "உயலுங்கோதை" *(பதிற்றுப். 52 ,17). 2.* செல்லுதல்; நடத்தல்; to go, to walk.

உயவு – தல்,ūyavu-, *5.* செ.கு.வி. (v.i.) வருந்துதல்; to suffer. "உண்டென வுணரா வுயவு நடுவின்" *(பொருந. 38). (செ.அக.).*

உயவு²–தல், ūyavu-, *5.* செ.கு.வி. (v.i.) வண்டிச் சக்கரத்திற்கு மையிடுதல்; to apply grease to a cart-wheel. "தஞ்சாகாடேனு முயவாமற் சேறலோவில்" *(பழ.168.) (செ.அக.).*

உயாவு–தல், ūyavu-, *5.* செ.குன்றாவி (v.t.) கேட்டறிதல்; to inquire after. *(செ.அக.).*

உயிர்¹–த்தல், ūyir-, *4.* செ.கு.வி. (v.i.) *1.*உயிர் பெற்றெழுதல்; to revive, to regain consciousness; to be re-animated. *2.* தொழிற்படுதல்; to be in vigorous functioning activity. "அவ்வுடலி னின்றுயிர்ப்ப வைம் பொறிகள்" *(கி.போ.3.4.). 3.* மூச்செறிதல்; to breathe hard. "உரைதடு மாறாவுயிர்த்து" *(பாரத. பதினெட்.173). 4.* கமழ்தல்; to be wafted as fragrance. "உயிர்த்த தாமத்தன" *(கம்பரா. நிகும்.114). 5.* இறந்துபடுதல்; to breathe one's last. "உயிர்ப்பது மோம்பி" *(சீவக.1989.).*

உயிர்²–த்தல்,ūyir-, *4.* செ.குன்றாவி (v.t.) *1.* ஈனுதல்; to give birth to, bring forth. "குழந்தையை யுயிர்த்தமலடிக் குவமை கொண்டாள்" *(கம்பரா. உருக்காட். 65). 2.* மோத்தல்; to smell. "கண்டு கேட்டுண்டுயிர்த் துற்றறியும்" *(குறள். 1101). 3.* கூறுதல்; to say, declare. "வி.ட்டுயிர்த் தழுங்கினும்" *(தொல்.பொருள்.111). 4.* பெருக்குதல்; to multiply a number. அம்மூ வாறுமுயிரொடு முயிர்ப்ப *(நேமிநா. 3,உரை). 5.* வெளிப்படுத்துதல்; to emit, send forth. "கொங்குயிர்த்த பூந்தடத்துலாய்" *(நைடத. நாட்டுப்.5). (செ.அக.).*

ம. உயிர், உயிர்க்குக; *க.* உயிர், உசுர்; *குட.* உசிரி *(மூச்சு.) து.* உசுரு; *கோத.* உசிர்; *துட.* உசிர்; *குரு.* உச்சனா; *மால்.* உசெ.; *பிரா.* உச்ர்.

உயிர்குடி–த்தல், ūyir-kudi-, *4.* செ.குன்றாவி (v.t.) உயிரைப்போக்குதல்; to devour life, said of blood thirsty demons and malevolent deities. "வானவரை யெல்லாந் தின்றுயிர்குடித்து" *(கந்தபு. சூரபன். வதை. 455). (செ.அக.).*

உயிர்த்தெழு–தல், ūyir-t-telu-, *2.* செ.கு.வி. (v.i.) *1.* மயக்கமடைந்தவர் தெளிவு பெற்றெழுதல்; to be revived, restored to life. *2.* செத்தவன் மீட்டும் உயிர் பெற்றெழுதல்; to rise from the dead. இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். *(செ.அக.).*

[உயிர்த்து + எழு-தல்.]

உயிர்ப்பி¹–த்தல், ūyirppi-, *1.* பி.வி. (caus). *1.* பிழைக்கச் செய்தல்; reviving; restoring to life; reanimating. *2.* உயிர்கொடுத்தல்; giving life. *3.* இறந்தோரை எழுப்புதல்; animating persons apparently dead. *(சா.அக.).*

ம. உயிர்ப்பிக்குக; *க.* உசிரிக்கு.

உயிர்பிழை–த்தல்,ūyir-pilai-, *4.* செ.கு.வி. (v.i.) *1.* உயிர் வாழ்தல்;to live subsist. *2.* தப்பிப்பிழைத்தல்; to survive, escape with life, live through a time of peril. *(செ.அக.).*

உயிர்போ–தல், ūyir-po-, *8.* செ.கு.வி. (v.i.) *1.* சாதல்; to expire, die. *2.* அறிவு போதல்; to become insensible, lose consciousness, faint. "உயிர் போயிருந்தான் மாதோ" *(சீவக.2196). (செ.அக.).*

உயிர்வாங்கு–தல்,ūyir-vāṅgu-, *5.* செ.குன்றாவி. (v.i.) கொல்லல்; to kill. (சா.அக.).

உரஞ்சு–தல்,ūrañju-, *15.* செ.குன்றாவி (v.t.)*1.* துடைத்தல்; to rub. *2.* தேய்த்தல்; to scrape.

உரஞ்செய்–தல்,ūrañjey-. *7.* செ.கு.வி. (v.i.) *1.* உறுதி கொள்ளுதல்; to take effect; to be forceful, as in an argument. அவரெடுத்த காரியங்களொன்றும் உரஞ்செய்யவில்லை, *2.* வலியுறுதல்; to grow strong. (W).

ம. உரசெய்யுக *(சொல்லுதல்).*

உர–த்தல் ūra-, *3.* செ.கு.வி. (v.i.) *1.* கெட்டியாதல்; to become firm, hard as the soil. "உரத்துத் தரிக்கு மிகுதரணி தானே" *(சிவப்பிர.2.27). 2.* முருடாதல்; to become thick, coarse, as paper. உரத்த கடுதாசி. *3.* வலத்தல்; to become strong, furious as the wind. உரத்த காற்று. *4.* எடுப்பாதல்; to become loud, as the voice; to become harsh, as a noise. உரத்துப் பேசினான். *5.* கொந்தளித்தல்; to rage, be boisterous as the sea. உரத்த கடல். *6.* கடுமையாதல்; to become sharp, as a contest; to become violent as a controversy. உரத்த தருக்கம். *7.* மிகுதல்; to become powerful, intense, as the hot sun. உரத்த காய்ச்சல்.

ம. உரக்குக; க. ஒரபு (கெட்டி); தெ. உக்கு (கெட்டி).

உரப்பு[1]–தல், ūrappu-, *15*. செ.கு.வி. (v.i.) *1.அதட்டி யொலித்தல்*; to whoop, vociferate inarticulately as in driving cattle or in scaring away birds, beasts, or human beings, to shout so as to menace or intimidate. "*நின்றுரப்பி*" *(திவ். இயற். சிறிய. ம. 37). 2. திரண்டொலித்தல். (பிங்.)*; to bluster, roar, sound loudly.

உரப்பு[2]–தல், ūrappu-, *5*. செ.குன்றாவி (v.t.) *1. அச்ச முறுத்துதல்*; to frighten. "*காலனை.. உரப்பிய சேவடியான்*" *(தேவா.524.3). 2. வடமொழி யெழுத்தின் ஐவருக்கத்திலும் இரண்டாம் எழுத்தை உச்சரித்தல்*; to sound kh, ch, th, th, ph, the aspirates of hard consonants in Skt. *ஐந்தன் வருக்கத்திலும் உரப்பியும் எடுத்துங்கனைத்தும் சொல்லப்படும் மூன்றும் (நன்.146.மயிலை) 3. உரத்து ஒலிக்கச் செய்தல்*; to cause to sound loudly. "*ஒலி முரசுரப்பினானால்*" *(தணிகைப்பு. வள்ளி.38). (செ.அக.).*

உரம்விழு–தல், ūram-vilu-, *2*. செ.கு.வி. (v.i.) *விழிப் பின்மையால் குழந்தையைத் தூக்கும் போது சுளுக்கு உண்டாதல்*; to be sprained to suffer sprain, from rolling on the ground or from being carelessly lifted up, as an infant by one arm. *குழந்தைக்கு உரம் விழுந்திருக்கிறது (கொ.வ.). (செ. அக.).*

உரமடி–த்தல், ūram-adi-, *4*. செ.கு.வி. (v.i.) *எருக் கொணர்ந்திடுதல்*; to cart manure. *(உ.வ.) (செ.அக.).*

உரமாயிரு–த்தல், ūramayiru-, *2*. செ.கு.வி. (v.i.) *1. வலுவாயிருத்தல்*; to be strong. *2. சுளுக்குக் கொண்டிருத்தல்*; to be in a sprained condition. *(சா.அக.).*

உரமெடு–த்தல், ūramedu-, *18*.செ.குன்றாவி (v.t.) *குழந்தையின் சுளுக்கை நீக்குதல்*; to relieve an infant of the sprain caused by careless handling. *(உ.வ.) (செ.அக.).*

உரவு[1]–தல், ūravu-, *5*. செ.கு.வி. (v.i.) *வலியுறுதல்*; to become vigorous, get strong. "*வாசிகள் புனலுண்டுரவாவிடில்*" *(பாரத.பதினான்.51). (செ.அக.).*

உரவு[2]–தல், ūravu-, செ.கு.வி. (v.i.) *உலாவுதல்*; to be in constant motion, as the sea, a river. "*உரவுநீரழுவத் தொடுகலம்*" *(பெரும்பாண்.350).*

ம. உரவுக.

உரற்று–தல், ūrarru-, *5*. செ.கு.வி. (v.i.) *முழங்குதல்*; to resound; to roar, as an elephant; to roll, as thunder. "*யானை யுரற்றொலி யோசையும்*" *(சீவக.865). (செ.அக.).*

உரறு–தல், ūraru-, *5*. செ.கு.வி. (v.i.) *முழங்குதல்*; to resound, reverberate, roar; "*உருமுரறு கருவிய பெருமலை பிற்பட*" *(மலைபடு.357).*

உராய்–தல், ūray, *2*. செ.கு.வி. (v.i.) *உரிஞ்சுதல் (பிங்.)*; to rub, as an animal against a tree, as two branches together. *(செ.அக.).*

உராய்ஞ்சு–தல், ūraynju-, *8*. செ.கு.வி. (v.i.) பொருத்தித் தேய்த்தல்; to rub.

உராவு[1]–தல், ūravu-, *5*. செ.கு.வி. (v.i.) *1. பரவுதல்*; to move away, spread. *2. பரத்தல்*; to spread over, extend. "*நிறை கடன் முகந்துராய்*" *(பரிபா.6.1.). 3. இடம் விட்டுப் பெயர்தல்*; to move from its place, to be dislodged. "*பொன்னகும்பாடி யளைந்துராய்*" *(சீவக.37) 4. செல்லுதல்*; to go, pass. "*காலென்னக் கடிதுராய்*" *(மதுரைக்.125). (செ.அக.).*

உரி[1]–தல், ūri-. *4*. செ.குன்றாவி (v.t.) *1. ஆடைகளைதல்*; to strip off, as clothes. "*உரிந்த கூறையுருவத்தொடு*" *(தேவா.1011.10). 2. தானே எடுத்துக்கொள்ளல் (அபகரித்தல்)*; to deprive of, rob. *அவன் சொத்தையெல்லாம் உரிந்து விட்டான். (உ.வ.) (செ.அக.). 3. இடம் பெயர்தல்*; *பரவுதல்*; to shift, spread.

உரி[2]–தல், ūri-, *4*. செ.கு.வி. (v.i.) *தோல் முதலியவை கழலுதல்*; to peel, as skin, bark. *(செ.அக.).*

ம. உரி.

உரி[3]–த்தல், ūri-, *4*. செ.குன்றாவி (v.t.) *1. தோல், பட்டை முதலியவற்றைக் கழற்றுதல்*; to slough off, as a serpent its skin; to flay, excoriate; to strip off, as bank. "*உரித்திடு முழுவைவன்றோல்*" *(கந்தபு.தீதீசியு.127). (செ.அக.). 2. பரவுதல்*; to spread.

உரிஞ்சு–தல் uriñju-, *5*. செ.குன்றாவி (v.t.) *1. தேய்தல்;* to wear away by rubbing to grind away, as sandal. to scrap, triturate "*நறுங்குறடுரிஞ்சிய..... தேய்வை*" *(திருமுரு. 33). 2. பூசுதல்;* to rub on, smear anoint as wi th oil soap, aromatics. "*ஊடுமின்னனாருரிஞ்சி யாட்டினார்*" *(சீவக. 2418) (செ.அக.).*

உரிஞ்சு–தல் uriñju-, *5*. செ.குன்றாவி (v.t.) உள்ளிழுத்துக் கொள்ளுதல்; to sip suck up.

உரித்துவை–த்தல் urittuval-, *4* செ.குன்றாவி (v.t.) *1. வெளிப்படுத்தி வைத்தல்;* to disclose, revceal, make know. "*கீழே உரித்து வைத்தாரிறே அவர்கள் ஸ்வரூபத்தை*" *(ஈடு. 3,9,2) 2. நேரொப்பாதல்;* to resemble completely இந்தப் பிள்ளை தகப்பனை உரித்து வைத்திருக்கிறது. *(உ.வ) (செ.அ.க.).*

உரிமையெடு–த்தல் urimai-y-ēḍu-, *4*. செ. கு. வி. (v.i) உரிமை பெறுதல் *(வின்);* to take possession of one's share as of an inheritance or of produce *(செ. அக.).*

உரு[1]–த்தல் uru-, *4*. செ.கு.வி. (v.i) *1. பெருஞ்சினங் கொள்ளுதல்;* to get angry, to be provoked; to exhibit signs of anger. "*ஒருபக லெல்லா முருத்தெழுந்து*" *(கலித். 39, 23) 2. அழலுதல்;* to burn, smart. "*ஆக முருப்ப நூறி*" *(புறநா. 25, 10). 3. முதிர்தல்;* to become ripe, mature. "*பண்டையூழ்வினை யுருத்தென்*" *(சிலப். 16,217).*

உரு[2]–த்தல் uru-, *4. செ.குன்றாவி.* (v.t) *1. வெருளுதல்;* to angry with. "ஒள்வாட்டானை யுருத்தெழுந்" *(பு.வெ. 3, 2). 2.ஒத்தல்;* to bear likeness to, resemble." *நின்புக ழுருவின கை" (பரிபா. 3, 32).*

உரு[3]–த்தல் uru-, *4. செ. கு. வி.* (v.i) *1. தோன்றுதல்;* to appear, come, into existence "உம்மை வினைவந்துருத்த லொழியாதெனும்" *(மணிமே. 26, 32) 2. முளைத்தல் (திவா.);* to sprout, shoot up. *3. உருவெடுத்தல்;* to take shape, assume a from. "அறமுருத்தனையான்" *(அரிசமய. பரகால. 91) 4. சுரத்தல்;* to issue forth, flow up, well, as a spring "உருத்துருத்தமுதூற்றிருந்து" *(உபதேசகா. அயமுகி. 16)*

உருக்கனடி–த்தல் urukkaṉaḍi-, *4. செ.குன்றாவி* (v.t) 1. *கருகச்செய்தல் (யாழ்ப்.);* to blight, as disease, esp. in plantains. 2.*உடம்பை இழக்கச் செய்தல்;* to reduce to leanness. to cause to emaciate. *(சா.அக.).*

உருக்கு[1]–தல் urukku-, *5. செ.குன்றாவி* (v.t) *1. இளகிவிழச் செய்தல்;* to melt with heat as metals or congealed substances to dissolve, liquefy, fuse. "தீயிடை யுருக்குதன் முயன்றான்" *(கந்தபு. மார்க்க. 131) 2. மனம் நெகிழ்த்துதல்;* to soften as feelings to melt as one's heart. *எம்பிரானாமஞ்சொல்லியுருக்கினன் (கம்பரா. உருக்காட் 27) 3. மெலியச் செய்தல்* to reduce, emaciate as the body *அந்த நோய் உடம்பை உருக்கிவிட்டது. 4. அழித்தல் (திவா.);* to destroy *5. வருத்துதல்;* to afflict, distress.

க.உக்கு (உருக்கப்பட்ட பொருள்); ம.உருக்குக; குரு. உர்.

உருக்குலை–தல் *uru-k-kulai-, 2. செ. கு. வி.* (v.t) *1. முன்னுருவம் அழிதல்;* to become dismembered to be disunited as parts of a lock, a house to become loose deranged, disorganized. *2. உடல் மெலிதல்;* to be emaciated, as the body by illness. *(செ. அக.).*

உருகு–தல் *urugu-, 9. செ. கு. வி.* (v.t) *1. வெப்பத்தால் இளகுதல்;* to dissolve with heat; to melt, liquefy, to be fused. *2.மனநெகிழ்தல்;* to become tender, to melt, as the heart to be kind, to commisserate, to synpathize, to glow with love. "பூண்முலையார் மனமுருக" *(பு.வெ. 9.41. கொளு) 3. மெலிதல்;* to be emaciated. "அந்த நோயால் உடம்பு உருகிவிட்டது" *(செ. அக.).*

ம. உருகு

உருங்கு–தல் *uruñgu-, 5. செ. குன்றாவி.* (v.t) *1. உண்ணுதல்;* to eat "அரவினுட லுயிருருங் குவணம்" *(பரிபா. 4,42). 2. தேய்தல்;* to wear away. *3. உராய்தல்;* to rub *(சேரநா.).*

ம. உருங்ஙுக.

உருசிபார்–த்தல் *uru*šipār-, *4. செ. குன்றாவி.* (v.t) *சுவைத்தறிதல்;* to taste examine, ascertain as the nature of a thing by tasting it. *(செ.அக.).*

உருசு–தல் *uru*šu-, *5. செ. குன்றாவி.* (v.t) *உறிஞ்சுதல்; சிறிது சிறிதாகக் காற்றை உள்ளிழுப்பதன் வாயிலாக நீர்ம உண்பொருளை நாவில் சுவைத்தவாறே மென் மெல விழுங்குதல்;* to suck

உருட்டிப்பார்–த்தல் *uruṭṭi-p-par-, 4. செ. குன்றாவி.* (v.t) *1. விழியை உருட்டிப் பார்த்தல்;* staring after rolling the eyes. *2. கண்சிமிட்டாது விழியை உருட்டி உற்றுப் பார்த்தலாகிய ஒரு சாக்குறி;* a symptom of death in which the dying person rolls his eyes and stares at or looks intently. *3. மண்டையோட்டுப் பகுதியால் விழியையுருட்டிக் கீழாகச் சொருகி, மேற்புருவம் வளையமிட்டுக் காணுதல்;* peculiar expression of the eyes in meaning it is due to downward rolling of the eye ball and retraction of the upper lid - post basic stare. *(சா.அக.).*

உருட்டு[1]–தல் *uruṭṭū-, 5. செ. குன்றாவி.* (v.t) *1. உருளச் செய்தல்;* to roll, as a ball or wheel, as a barrow, to bowl, turn about, revolve, as a thing on a plane, to throw, as dice, to whirl, as a discus. "அறக்கதிராழி திறப்பட வுருட்டி" *(மணிமே. 5,76) 2. உருண்டையாகச் செய்தல்;* to form as clay or other substances into balls or globules *முருடீர்ந்துருட்டற்கு (கம்பரா.மாரீசன். 139) 3.வருத்துதல்;* to afflict cause pain to vex. "உய்ந்து போம்வழி யுருட்டுவா னொருவனை" *(சூளா. முத். 9) 4. இசை நரம்பை வருடுதல் (கூர்ம்பு. கண்ணன்.147);* to play upon a stringed musical instrument with pressur of fingers, as lute springs *5. விளையாட்டில் வெல்லுதல்;* to overcome in athletic exercises of games. *6. ஒலியன் வேறுபாட்டால் மருட்டுதல்;* impose and confound as by hard sounding verbiage *கடபடமென்றுருட்டு தற்கோ" (தாயு நின்ற. 3) (செ.அக.).*

ம. உருட்டுக; க., பட. உருடு; கோத. உர்ண; துட. ஊட்; குட. உரிட் உரிக்; து. உருண்டு. தெ. உரலு; குவி. டூபலி.

உருத்திரி–தல் *uruttiri-, 4. செ. கு. வி.* (v.i) *1. உருமாறுதல்;* to be metamorphosed, changed in form. *2. மாறுவேடங் கொள்ளுதல்;* to wear a mask, assume a disguise, "உருத்திரிந்து தனித்து வந்து" *(திருவிளை விடையிலச்.7) (செ.அக.).*

ம. உருத்திரியுக.

உருப்படியா–தல் *uruppaḍiyal-, 6. செ. கு. வி.* (v.i) *உருவாதல்;* to take a tangible shape, come to something (Colloq) *அந்தக் காரியம் உருப்படியாகாமற் போயிற்று. (செ.அக.).*

ம. உருப்பிடிக்குக.

உருப்படு–தல் *uruppaḍu-, 20. செ. கு. வி* (v.i) *1. உருவாதல்;* to be formed shaped *2. சீர்ப்படுதல் ;* to improve in body, mind or morals to rise to a position *3. மருந்தைப் புடமிட்டு நிறைவாக்கல்;* completing the preparation of a medicine by calcining it.

உருமாறு–தல் urumāṟu-, *5. செ. கு. வி.* (v.i) *1. வேற்றுருக் கொள்ளுதல்;* to change one's shape, disguise oneself. "*வாசி வணிகர் போலவேயேசிலாவுருமாறினார்*" *(திருவாத. பு. குதிரையிட்ட. 2) 2. தோற்றம் வேறாதல்;* to become changed in appearance, as by disease *(செ.அக.).*

ம. உருவழியுக (மறைத்தல்)

உருமி–த்தல் urumi-, 4. *செ. கு. வி* (v.i) *1. வெப்பமாதல்;* to be hot sultry, close as the weather. (W.) 2. *மனவெப்பமடைதல்;* to grow excited in mind. *(சா.அக.).*

உருமு–தல் urumu-, *5. செ. கு. வி* (v.i) *1. உரப்புதல்;* to thunder, roar "*உருமிநக்கு*" *(கந்தபு. அசுரேந் 35) 2. முறு முறுத்தல்;* to growl, grumble. *(செ.அக.).*

தெ. உருமு

உருவழி–தல் uruvaḻi-, *4. செ. கு. வி.*(v.i) *1. உருவம் வேறாதல்;* to become disfigured by disease, to be deformed. *2. முழுதுஞ் சிதைதல்;* to be entirely ruined. *3. கரு கலைதல்;* to abort *4. மறைதல்* to disappear. *(சேரநா.) (செ.அக.).*

ம. உருவழியுக.

உருவா–தல் uruvā-, *6. செ. கு. வி.* (v.i) *1. வடிவுறுதல்;* to assume a form, take shape. *2. சீர்ப்படுதல்;* to become sound, to improve, to be reformed *(செ.அக.).*

ம. உருவிக்குக.

உருவாக்கு–தல் uruvākku-, *5. செ. குன்றாவி.* (v.t) *1. உருவமுடையதாகச் செய்தல்;* to shape, fashion, mould. *2. சீர்ப்படுத்துதல்;* to repair, reform, improve.

ம. உருவாக்குக.

உருவிடு–தல் uruviḍu-, *18. செ. குன்றாவி* (v.t) *மந்திரத்தை உருப்போடுதல்;* to repeat (as a mantra), learn by note, repeat so as to commit to memory. *(செ.அக.).*

ம. உருவிடுக.

உருவு[1] **–தல்** uruvu-, *5. செ. குன்றாவி* (v.t) *1. உறை கழித்தல்;* to unsheath, as a sword. "*வாளுரீஇ யினானே*" *(சீவக. 2247) 2. கையாற் பொருள் வரும்படி உருவுதல்;* to strip, as beads from a string, as leaves from a twig, "*அடகுரீஇ*" *(சீவக. 2625) 3. சுளுக்கு முதலியவற்றைப் போக்கத் தடவுதல்;* to massage, draw the hand down over a sprained part of the body. *4. கயிற்றுச் சுருக்கை யுருவுதல்;* to loosen or tighten a noose. *5. ஊடுருவிச்செல்லுதல்;* to pierce through, penetrate as an arrow a needle."*உலக மூடுருவுஞ் செம்பெருமானே*" *(திருவாச. 28. 2).*

ம. உருவுக; க. ஒரெ; தெ. ஒரி (பறித்தல்)

உருவு[2] **– தல்** uruvu-, *7. செ. கு. வி.* (v.i) *1. தப்பித்துக் கொள்ளுதல்;* to escape, to give slip. *பையன் உருவிவிட்டான். 2. துளைத்தல் (ஆ.அக);* to pierce. *(செ.அக.).*

உருவெடு–த்தல் uruveḍu-, *4. செ.கு.வி.* (v.i) *வடிவ மெடுத்தல்;* to take a body, as a soul; assume a form as a deity, to represent a character, as in a drama. *(செ.அக.).*

உருவேற்று–தல் uruvēṟṟu-, *5. செ. குன்றாவி.* (v.t) *1. மந்திரத்தைப் பலமுறை உருவேற்றுதல்;* to repeat mantras "*எட்டெழுத்தாலுரு வேற்றலார்*" *(சேதுபு. சேது. பல. 114). 2. நெட்டுருப் பண்ணுதல்;* to repeat or rehearse a lesson frequently in order to learn it by heart. *3. ஆத்திரமேற்றுதல்;* to cause a spirit to possess some one for uttering oracles or for ascertaining future events. (W.). *4. முறையற்ற தீயறிவூட்டுதல்;* to give evil advice, usu. taking the form of a persuasive talk. (colloq). *(செ.அக.).*

உருவேறு–தல் uru-vēṟu-, *5. செ. கு. வி.* (v.i.) *1. மந்திரவுரு அதிகமாதல்;* to increase in number as repetition of mantras. '*உருவேறத் திருவேறும்*' *2. வெறியுணர்வு மிகுதிப்படல்;* to be possessed by a spirit for the utterance of oracles (w.).*3. கடுஞ்சீற்றம் கொள்ளுதல் (மூர்க்கமிகுதல்);* to become furious. (W.) *4. நிலை தளர்தல்;* to fall into a fit. *(செ.அக.).*

உருள்[1] **(ளு)–தல்** urul-, *16. செ. கு. வி.* (v.i.) *1. தொடர்ந்து புரளுதல்;* to turn about, as dice; to roll, tumble over and over, revolve on a plane, as a wheel; to spain, whirl round, as discus. "*திண்வரை யுருள் கிலேன்*" *(திருவாச. 539). 2. உருண்டு திரளுதல்;* to become round, to grow globular *அரத்தக் கட்டியுருண்டு வருகிறது. 3. அழிதல்;* to perish die as in battle or by an epidemic to become extinct "*உலகெலா முருளுமின்றென*" *(சீவக.2452). 4. செல்லுதல்;* to go proceed. "*நூல்வழியுருள்விலா மனத்தவர்க்கு*" *(சூளா. முத்தி 13). 5. சக்கரம் உருண்டு செல்லுதல்;* to roll on "*உருள் பெருந்தேர்க்கு அச்சாணி யன்னா ருடைத்து*" *(குறள். 66).*

ம. உருள்; க. உருள், உருளி, உருளு; கு. உரிட். து. உருளு; தெ. உரலு; குவி. பட. உருணு; **E.** roll ; OF rolle **D.** rotutus.

உரை[1]**–தல்** urai-, *3. செ. கு.வி.* (v.i.) *1. தேய்தல்;* to be reduced in to a powder or paste; to wear away by attrition; to be indented or effaced by rubbing (w). *2. வீணாதல்;* to áove abortive (w). *காரிய மெல்லா முரைந்து போயிற்று.*

க. ஒரே; ம. உர; தெ. ஒரபு.

உரை[2]**–த்தல்** urai-, *3. செ. குன்றாவி.* (v.t.) *1. தேய்த்தல்;* to rub in to a paste, wear away by rubbing, grate. "*வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே*" *(கலித். 115). 2. மருந்திழைத்தல்;* to rub in to a nice powder, or paste to levigate or titrate. *3. மாற்றறியத் தேய்த்தல் (திவ். பெரியாழ் 5,4,5)* to test to the touchstone, as valuable metals like gold. *4. பூசுதல்;* to smear, daub "*உரைக்கு நானமும்*" *(சீவக. 831) 5. மெருகிடுதல்;* to polish "*ஓட வைத்துரைத்த*" *(ஈடு. 3,1,2). (செ.அக.).*

தெ. ஓரச்சு; க. உரே; ம. உர; து. உரெ.

உரை[3]–த்தல் urai-, *3.* செ. குன்றாவி. (v.t.) *1.* சொல்லுதல்; to tell, speak. *2.* ஒலித்தல்; to sound.

ம. உர; க. ஒரே.

உரைசு–தல் uraiśu-, *5.* செ. கு. வி. (v.i.) *1.* உரிஞ்சுதல்; to rub against, as a post; to chafe 2. தேய்தல் ; to wear away by use, as a seat, as one's feet by walking.

உரைஞ்சு–தல் uraiñju-, *5.* செ. குன்றாவி. (v.t.) உரைசுதல்; to rub ஆனையுமானையு முதுகுரைஞ்ச இடையி லிருந்து கொசுகு நசுங்குகிறது (செ.அக).

உரையாடு–தல் urai-y-āḍu-, *5.* செ. குன்றாவி. (v.t.) *1.* சொல்லுதல்; to say, tell. "பணிந்த சொல்லுரை யாடினன்" (பிரபுலிங். இட்டலிங். 42) *2.* கலந்து பேசுதல்; to converse. (செ.அக).

உரையிடு–தல் urai-y-iḍu-, *20.* செ. கு. வி. (v.i.) *1.* நூற்கு உரை செய்தல்; to annotate *2.* சொற்போர் செய்தல்; to enter into controversy to debate. "ஒருவர்க் கொருவருரையிடு மவ்வோலை" (தெய்வச் விறலிவிடு. 99).

உல–த்தல்,ūla-, *3.* செ.கு.வி. (v.i.) *1.* குறைதல்; to become diminished; to be spent, wasted. "உலவாக் கோட்டை" (திருவாலவா. 50,13). *2.* அழிதல்; to be devoid of, to be ruined. "நட்புலந்தவரால்" (பாரத.நச்சு.33). *3.* சாதல்; to die, pass away. "உலந்தவன் றாரொடு பொங்கி" (பு.வெ. 10. சிறப்பிற்பொது. 4). *4.* கழிதல்; to terminate, expire. "உலந்த பிறவியை.. காட்..." (மணிமே. 25,13.5). *5.* நீங்குதல்; to leave, be away from. *6.* முடிவு பெறுதல்; to be full, complete, perfect. "எங்குலக்க வோதுவனே" (திவ். திருவாய்.3,1.5). *7.* எரிதல்; to glow. *8.* காய்தல்; to wither.

ம. உலக்குக.

உலம்பு–தல், ūlambu-, செ.கு.வி. (v.i.) *1.* பேரொலி செய்தல்; to make a loud noise, cry out, roar thunder. "யாளிநின்றுலம்புமே" (சீவக. 1900). *2.* அலப்புதல்; prate, chatler. "ஒல்காதார் வாய்விட்டுலம்புப" (நீதிநெறி.72).

ம. உலம்புக; க. உலி; தெ. உலியு.

உலர்–தல்,ūlar-, *2.* செ.கு.வி. (v.i.) *1.* காய்தல்; to become dry, to wither, to be parched up. *2.* வாடுதல்; to pine away, as from grief, disease or hunger; to flag, droop. "உலர்ந்து போனே னுடையானே" (திருவாச.32.1.) (செ.அக.).

ம. உலருக.

உலர்த்து–தல்,ūlarttu-, *5.* செ.குன்றாவி (v.t.) ஈரம் புலர்த்துதல்; to dry, air, desiccate. "நனைந்த வான்றுகி லுலர்த்திய" (சேதுபு.கந்த.41). (செ.அக.).

ம. உலர்த்துக.

உலவி–த்தல்,ūlavi-, *4.* செ.கு.வி. (v.i.) கூசியொழுகுதல்; to be bashful in eating, to evince diffidence in accepting favours or gifts, to be backward in coming into company. (J.). உலவியாமற் சாப்பிடும். (செ.அக.).

உலவு–தல்,ūlavu-, *5.* செ.கு.வி. (v.i.) திரிதல்; to go around. "ஒருங்குதிரையுலவுசடை" (திருவாச.38.1) (செ.அக.).

ம. உலவுக.

உலறு[1]–தல்,ūlaru-, *5.* செ.கு.வி. (v.i.) *1.* வற்றுதல் (அகநா. 19.); to dry up, wither. *2.* சிதைதல்; to be injured, to be spoiled, worn out as clothes. "உலக்கையுலறியுடம்பழிந்தக் கண்ணும்" (நாலடி. 141). *3.* பொலிவழிதல்; to become rough, shaggy, brush. "கண்ணு முகமுமுலறி" (சீவக.2966). (செ.அக.).

உலறு[2]–தல்,ūlaru-. *5.* செ.கு.வி. (v.i.) உரை தடுமாறுதல்; to howl, scream; to babble, as in a rapture. "அலறிடே னுலறிடே னாவி சோரேன்" (திருவாச.5.22) (செ.அக.).

ம. உலறுக.

உலாங்கு–தல்,ūlangu-, *5.* செ. கு.வி. (v..i.) *1.* அசைதல்; to move. *2.* தள்ளாடுதல்; to stagger.

உலாஞ்சு–தல்,ūlanju-, *5.* செ.கு.வி. (v.i.) *1.* அசைந்தாடுதல்; to move, work about, as the head. கப்பல் உலாஞ்சுகிறது. *2.* தலைசுற்றுதல்; to be giddy, dizzy, to suffer swimming in the head. *3.* தள்ளாடுதல்; to stagger as sway in walking. (செ.அக.).

உலாத்து[1]–தல்,ūlattu-, *6.* செ.கு.வி. (v.i.) *1.* உலாவச் செய்தல்; to take out for a walk, as a child; to lead about, as a horse. *2.* பரவச் செய்தல்; to spread out, extend on all sides. வேட்டியை யுலாத்திக் கொண்டு போகிறான். (உவ.). *3.* அசைத்தாட்டுதல்; to cause to shake (செ.அக.) கொண்டையுலாத்தி கொண்டையை ஆட்டும் பறவை. *4.* சிறுநடை கொள்ளல்; to walk taken by a patient in convalescent state.

ம. உலாத்துக.

உலாவு[1]–தல்,ulāvu-, *6.* செ.கு.வி. (v.i.) *1.* அழைதல் ; to move about, walk or ride for recreation take a jaunt,a stroll or a ramble. "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" (பெரியபு. பாயி 1). *2.* வீதிவலம் வருதல்; to go in procession,parade the streets,as festal processions. 3.இயங்குதல்; வீசுதல்; to move, stir. "வந்துலாய்த் துயர்செய்யும் வாடை" (பு.வெ. 8, 16, கொளூ.). *4.* பரவுதல்; to spread over, as a flood. "உயிரெனவுலாய தன்றே" (கம்பரா. ஆற்றுப். 20) (செ.அக.).

ம. உலாவுக; தெ. ஓலயு; பட. ஓலாத்து.

உலுக்கு[1]–தல்,ūlukku-, *5.* செ.குன்றாவி (v.t.) குலுக்குதல்; to shake, as a tree.

ம. உலுக்கு; க. உலுகு; குட. ஒலிப், ஒலிச்; தெ. உலுகு, உலுக்கு.

உலுக்கு[2]–தல்,ūlukku-, *7.* செ.கு.வி. (v.i.) நடுங்குதல்; to tremble,

as in an earthquake.

உலுப்பு–தல், ūluppu-, *8. செ.குன்றாவி* (v.t.) *1. உதிர்த்தல் (யாழ்ப்.)*; to shake off, cause to shed, as fruits or leaves from a tree. *2. அசைத்தல்*; to shake. *(செ.அக.)*.

உலை[1]–தல்,ūlai-, *2. செ.கு.வி.* (v.i.) *1. நிலைகுலைதல்*; to be disordered, as one's affairs; to become deranged, unsettled, loose; to degenerate in morals or character; to be overipe, as fruit. "உலையாமுயற்சி" *(நீதிநெறி. 51.) 2. அழிதல். (திவா.)*; to perish; to be ruined, as houses, land or crops. *3. அஞ்சுதல்.....(திவா.)*; to be afraid, to be agitated in mind. *4. கலைந்து போதல்*; to be dispersed, as an assembly; put to rout, as an army. "ஒன்னாத் தெவ்வருலைவிடத்து" *(பெரும்பாண். 491.). 5. அலைதல்*; to wander about."உலகஞ் சுற்றி.....உலையவிட்டாயெனின்" *(தாயு. சுகவாரி, 6.). 6. சோறு கெடுதல்*; to spoil, as of boiled rice etc.

உலை[2]–த்தல்,ūlai-, *4. செ.குன்றாவி* (v.t.) *1. கெடுத்தல்*; to ruin, injure. *காரியத்தை உலைத்துவிடாதே. 2. கலைத்தல்*; to throw into disorder, derange, unhinge, unsettle. "சான்றாளியை உலைத்து விட்டான்" *3. அலைத்தல்*; to harass as a demon. *பேய் அவனை உலைத்துப் போட்டது. (செ.அக.)*.

உலைகட்டு–தல், ūlai-kattu-, *15. செ.கு.வி.* (v.i.) *பொங்கற் பானைக்கு மாவிலை செருகிய கயிறு கட்டுதல்*; to decorate the top of a pot with mango leaves and set it on the fire with water for boiling rice for a sacred meal. *(செ.அக.)*.

உலைகொதி–த்தல்,ūlai-kodi-, *4. செ.கு.வி.* (v.i.) *சோறு சமைத்தற்குரிய நீர் கொதிப்புறுதல்*; to boil, as water in a pot, when rice should be put in for cooking. *(செ.அக.)*.

உலைவை–த்தல்,ulai-vai-, *6. செ.கு.வி.* (v.i.) 1. *சமையல் செய்வதற்கு உலைப்பானையை அடுப்பில் வைத்தல்*; to set a pot of water on the fire for boiling rice. "தமக்கென் றுலையேற்றார்" *(ஆசாரக். 40).(செ.அக.). 2. அடுத்தவரின் பிழைப்பைக் கெடுத்தல்*; to terminate one's livelyhood. *அவரின் உயிருக்கு உலை வைத்து விட்டான்*.

உவ்வு[2]–தல், ūvu-, *6. செ.கு.வி.* (v.i.) *1. முளைத்தல்*; to sprout. *2. தழைத்தல்*; to foliage.

உவ[1]–த்தல், ūva-, *3. செ.கு.வி.* (v.i.) *1. மகிழ்தல் (திருமுருகு.1)*; to be glad, to rejoice, to be delighted. *2. விருப்பமுடையதாதல்*; to be pleased with, to approve of, like. *3. உள்ளத்தாற் பொருந்துதல்*; to be agreed. *4. பொருந்துதல்*; to be joined. *5. ஒத்தல்*; to be resembled.

ம. உவக்கு; க. கோத. ஒக். ஒக்ய (புணர்தலின் மிகுவிருப்பம்.); *தெ. உவ்வி, உவ்வாயி (மகிழ்ச்சி)*.

உவ[2]–த்தல், ūva-, *3.செ.குன்றாவி* (v.t.) *விரும்புதல்*; to be pleased with, to approve of, like.

உவட்டி–த்தல்,ūvatti-, *4. செ.குன்றாவி* (v.t.) *அருவருத்தல்*; to nauseate, loathe. (J.).

உவட்டு[1]–தல்,ūvattu-, *5. செ.கு.வி.* (v.i.) *1. வெறுப்புறுதல்*; to loathe abominate, recoil from."மாய வாழ்க்கையிலுானமே யிருத்தலென் றுவட்டினோர்களும்" *(அருட்பா, குடும்ப.18). 2. தெவிட்டுதல்*; to satiate, surfeit. "உவட்டாத பேரின்பமான சுகவாரியினை" *(தாயு. சின்மயா. 2.). 3. மிகுதல்*; to increase. *மயலுவட்டி.... கதமொடு பிளிறும்" (கல்லா. 20.37) 4. புரளுதல் (ஆ.அக.)*; to roll.

ம. உவட்டுக; க. உகி (துப்பு). ஒகெ. (மேலெழு); *து. உச்சியுனி (துப்பு)*; *தெ. உமியு (துப்பு), உகி.(துப்பு)*.

உவட்டெடு–த்தல்,ūvattedu-, *4. செ.கு.வி.* (v.i.) *பெருக் கெடுத்தல்*; to swell, as a river. "உவட்டெடுத் தொழுகருவி" *(தணிகைப்பு. வீராட்ட. 76). (செ.அக.)*.

உவமி–த்தல்,ūvami-, *4. செ.குன்றாவி* (v.t.) *ஒப்புக் கூறுதல்(கந்தரல.9)*; to liken, compare. *(செ.அக.)*.

உவர்[1]–த்தல்,ūvar *4. செ.கு.வி.* (v.i.) *1. உப்புக்கரித்தல்*; to taste saltish, to brackish, as a mineral salt. *2. துவர்த்தல் (சங்.அக.)*; to taste, astringent. *(செ.அக.)*.

உவர்[2]–த்தல்,ūvar-, *4. செ.குன்றாவி* (v.t.) *அருவருத்தல்*; to dislike, abhor, feel aversion to, loathe.

உவளி–த்தல், uvali-, *4.செ.குன்றாவி* (v.t.) *தூய்மை செய்தல் (பிங்.)*; to cleanse, purify. *(செ.அக.)*.

உவற்று–தல், ūvarru-, *6.செ.குன்றாவி* (v.t.) *சுரக்கச் செய்தல்*; to cause to swell up, to flow. "ஒண் செங்குருதி யுவற்றியுண் டருந்துபு" *(அகநா.3)*.

உவறு–தல், ūvaru-, *6. செ.கு.வி.* (v.i.) *சுரத்தல்*; to spring up. well up, to flow. "ஒண்செங்குருதி யுவற்றியுண் டருந்தபு" *(அகநா.3)*.

உவணி–த்தல், ūvaṇi-, *4. செ.குன்றாவி* (v.t.) *1. தூய்மை செய்தல் (பிங்.;Ms.)* ; to clean, as the bow before shooting. *2. எய்யத் தொடங்குதல்*; to begin to shoot an arrow from the bow. "வில்லன்றே யுவனிப்பாரும்" *(சீவக.2179). 3. ஈரமாதல்*; to grow moist when exposed to dew; to become damp, as the ground, clothes, furniture. (J.) *(செ.அக.)*.

உவாவு–தல்,ūvavu-, *6. செ.குன்றாவி* (v.t.) *நிறைதல்*; to fill in. "பெருமண்ணுவாவும் பேராப் பல்படை" *(பெருங். உஞ்சைக். 58,106.). (செ.அக.)*.

உவி[1]–தல், ūvi-, *2. செ.கு.வி.* (v.i.) *1. வற்றுதல்*; to boil away, as water in a pot of rice. *2. சாதல்*; to die in great numbers as in war or pestilence. *அம்மையினால் வெகுசனம் உவிந்து போயிற்று. (செ.அக.)*.

உவி[2]–த்தல்,ūvi-, *18. செ.குன்றாவி* (v.t.) *அவித்தல்*; to boil."சாந்த விறகினுவித்த புன்கம்" *(புறநா.168.11). (செ.அக.)*.

உழ[1]–த்தல்,ūla-, *3. செ.கு.வி.* (v.i.) *1. வருந்துதல்*; to suffer, to experience sorrow, pain, trouble or fatigue. "அருந்துத லின்றியடைகட லுழந்தோன்" *(மணிமே. 16.74)*.

2. பழகுதல்(சீவக.597); to be accomplished, as in an art. *3. முயற்சி செய்தல்*; to try, make an effort. "*செயற்றலை நின் றுழப்பவர்கள்*" *(தணிகைப்பு. நாட்டு.130). (சா.அக.).*

உழக்கு[1]–தல்,ūlakku-, *5. செ.குன்றாவி* (v.t.) *1. கலக்குதல்*; to disturb, stir up. "*பேரகழியினுழக்கியகரிகள்*" *(நைடத. நகர. 2). 2. மிதித்தல்*; to trample down, tread upon. "*அவரைக் கழலவுழக்கி*" *(கலித்.106,18). 3. கொன்றுதிரிதல்*; to ravage, devastate. "*சினஞ் சிறந்து களனுழக்கவும்*" *(மதுரைக்.48). 4. உழுதல் (பிங்.)*; to plough. *(செ.அக.).*

உழக்கு[2]–தல்,ūlakku-, *7. செ.கு.வி.* (v.i.) *1. விளையாடுதல்*; to play. "*உரவுத்திரை யழக்கியும்*" *(பட்டினப்.101). 2. பழகுதல் (நாநார்த்த.)*; to be used or accustomed to.

உழப்பு[1]–தல்,ūlappu-, *6. செ.குன்றாவி* (v.t.) *1. சொற் களால் மழுப்புதல்*; to confuse, disconcert, embroil, mix altogether, nonplus. "*உழப்பிப்போட்டாய் குறியைக் குழப்பிப் போட்டாய்*" *(குற்றா. குற.73.2). 2. போலியாக எதிராடல்*; to fictitious argument. *3. காலங்கடத்துதல்*; to delay, protract. "*பரிசி லுழப்புங் குரிசிலை*" *(பன்னிருபா.353). 4. பழக்குதல் (யாழ்.அக.)*; to practice. *(செ.அக.).*

உழம்பு–தல், ūlambu-, *6.செ.கு.வி.* (v.t.) *1. பலவோசை கலந்தொலித்தல் (திவா.)*; to make a confused hullababo of many noises. *2. குழம்புதல்*; to be disturbed, disconcerted, thrown into disorder. (W.) *(செ.அக.).*

உழல்(லு)–தல், ūlal(lu)-, *13. செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்*; to oscillate, swing, to be in motion. "*சிறுகாற்றுழலும்*" *(கல்லா. கண.). 2. சுழலுதல்(பிங்.)*; to whirl, revolve. *3. அலைதல்*; to wander, roam about. "*ஆட்பார்த்துழலு மருளில் கூற்றுண்மையால்*" *(நாலடி.20). 4. நிலை கெடுதல்*; to lose condition or status, become poor. (Loc.). *அந்தக் குடி ஊழன்று போயிற்று. 5. துன்புறுதல்*; to suffer.

உழவடை[1]–த்தல்,ūlavadai-, *2. செ.கு.வி.* (v.i.) *உழுவதற்காக நிலத்தை ஒப்படைத்தல்*; to make over to another a piece of land for purposes of cultivation (W.) *(செ.அக.).*

உழவுகட்டு–தல்,ūlavu-kattu-, *பெ.* (n.) *5. செ.கு.வி.* (v.i.) *முதற்சால் போதல்*; to take the lead in ploughing so as to mark the course, as done by the head team. (J.) *(செ.அக.).*

உழற்று[1]–தல், ūlarru-, *6.செ.குன்றாவி* (v.t.) *1. அலையச் செய்தல்*; to drive to and fro, cause to wander. *என்னை யவமேயுழற்றி (திருக்கோ. 100, உரை. அவ.) 2. சுழற்றுதல்*; to twist, whirl about. *3. வருத்தத்தோடு கழித்தல்*; to pass tediously, as time. (J.). *(செ.அக.).*

ம. உழற்றுக.ண

உழற்று[2]–தல்,ūlarru-, *6. செ.கு.வி.* (v.i.) *கைகால்நோவாற் புரளுதல்*; to writhe, move the arms and legs about on account of pain.

உழறு –தல், ūlaru-, *5. செ.கு.வி.* (v.i.) *1. அலைதல்*; to move about. "*உழறலர் ஞானச்சுடர் விளக்காய்*" *(திவ். இயற்.திருவிருத். 58). 2. அளைதல்*; to mix with, play about. "*திருத்துழாயிலே புக்குழறி*" *(திவ். இயற்.திருவிருத். 74.பெரியவாச்.). 3. உருக்காட்டுதல்*; to show oneself."*உழறு மேலுலகிறும்*" *(தக்க யாகப்.32) (செ.அக.). 6 செ.கு.வி.* (v.i.) *கலங்குதல்*; to be disturbed. "*என்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய்*" *(திவ். பெருமாள் 6.8) (செ.அக.).*

உழன்றறு–த்தல், ūḷāñṟāṟū-, *4. செ.கு.வி.* (v.i.) *1. கடிய வேலை செய்தல்*; to labour hard, strive with might and main. *2. பழகித்தேர்தல்*; to become skilful or dexterous by practice. *(செ. அக.).*

உழி–தல் ūḷi-, *2. செ.கு.வி.* (v.i.) *1. அலைதல்*; wander about. "*உழிதலை யொழிந்துள ருமையுந் தாமுமே*" *(தேவா. 553.10). 2. வளைதல்*; to bend. *(செ.அக.).*

உழு–தல், ūḷu-, *1.செ.குன்றாவி.* (v.t.) *1. நிலத்தைக் கிளைத்தல்*; to dig up, root up, as pigs. "*உழுது மாநிலத் தேனமாகி*" *(தேவா. 929.9.). 2. நிலத்தை ஏரால் துன்னுதல்*; to plough. "*உழவருழுபடைக்கு*" *(நாலடி.178). 3. கிண்டுதல்*; to scratch, grub, as bees in a flower. "*அறுகாலுழுமலர்*" *(இரகு. தசரத.95). 4. மயிரைக் கோதுதல்*; to arrange or adjust, as the hair with the fingers. "*உகிரி னுழுதாங் கணிந்தாரே*" *(சீவக.2692).*

ம. உழுக; க. உழு; கோத. உக்; துட. உழ்வ்; குட. ஊழு. ஊலு, ஊள்; து. ஊடுனி; தெ. துன்னு, துனு; நா. உர்; கொலா. உர்; குவி. ருயிலி, லுானை; கூ. ழுவ. ருவ; கோண். உரான, உழன; பர். உழ். உர்; குரு. உயினா, உய்னா; மால். உசெ.

உழை[1]–த்தல்,ūḷāi-, *4. செ.கு.வி.* (v.i.) *1. முயற்சி செய்தல்*; to labour hard, toil, drudge. "*உழைத்தாலுறுதி யுண்டோதான்*" *(திருவாச.33.1). 2. வருந்துதல்*; to suffer hardship, to be afflicted. "*வலையிற் பட்டுழைக்கின்றேற்கு*" *(திவ்.திருமாலை.36). (செ. அக.).*

ம. உழ.

உழை[2]–த்தல், ūḷāi-, *4.செ.குன்றாவி* (v.t.) *1. ஈட்டுதல்*; to earn. (J.) *அவன் மாதம் பத்து ரூபா உழைக்கிறான்.*

உள்கு–தல், ūḷgu-, *2. செ.கு.வி.* (v.i.) *உள்ளழிதல்*; to be disheartened, dispirited. "*சிந்தையுள்கி*" *(இரகு. அயனுதய.20). (செ.அக.).*

உள்படு–தல், ūl-padu-, *20. செ.கு.வி.* (v.i.) *1. மனமொப்பி நடத்தல்*; to engage in or take to willingly. "*கருமமு முள்படா*" *(நாலடி. 250). 2. அறிதல்*; to know understand. "*ஒன்றிய சுடர்நிலை யுள்படுவோரும்*" *(பரிபா. 19.47). (செ. அக.).*

உள்வாங்கு–தல், ūl-vāṅgu-, *5. செ.குன்றாவி* (v.t.)

1. உள்ளுக்கிழுத்தல்; to draw in, as the head; to withdraw; to absorb, as moisture. *2.* படைத்தல்; to create. "ஒருநான்று நீயுயர்த்தி யுள்வாங்கி" *(திவ்.இயற்.4,5.). (செ.அக.).*

உள்விழு[1]–தல், ūḷ-viḻu-, *2.* செ.கு.வி. (v.i.) உள்ளாதல்; to fall in with, join a party.

உளவிழு[2]–தல்,ūl-viḻu-, *2.* செ.குன்றாவி (v.t.) பயன்கருதி நண்பராதல்; to assume the appearance of friendship for a sinister object, to pretend kindness.

உள்ளடக்கு–தல், ūḷ-ḷ-āṭākkū-, *5.* செ.கு.வி. (v.i.) *1.* உட்படச் செய்தல்; to enclose, shut in, shut up, in a place. *2.* மறைத்தல்; to conceal, keep secret. "அறிவினை யுள்ளடக்கி" *(நாலடி.196.) (செ.அக.).*

உள்ளடங்கு–தல், ūḷ-ḷ-āṭāṅgū-, *15.* செ.கு.வி. (v.i.) உட்படுதல்; to be shut in, included. *(செ.அக.).*

உள்ளழி–தல்,ūḷ-ḷ-āḻī-, *2.* செ.கு.வி. (v.i.) மனமழிதல்; to lose heart. "அகவாயி லின்றிக்கே யிருக்கை யன்றிக்கே யுள்ளழியா நின்றாள்" *(ஈடு. 4.2.1.) (செ.அக.).*

உள்ளா–தல் ūḷ-ḷ-ā-, *6.* செ.கு.வி. (v.i.) *1.* வயப்படுதல்; to submit. *2.* உட்படுதல்; to be involved as in suffering. துன்பத்திற்குள்ளானான். *3.* உடன்படுதல்; to become privy to an affair. (W.). *(செ.அக.).*

உள்ளாடு–தல், ūḷ-ḷ-āṭū-, *5.* செ.கு.வி. (v.i.) உளவறிய உள்ளே பயிலுதல்; to have intimate intercourse with an enemy in order to effect ulterior object. (W.).

உள்ளிடு–தல், ūḷḷīṭū-, *18.* செ.குன்றாவி (v.t.) உள்ளடக்குதல்; to include, comprise. "உரையா சிரியரை உள்ளிட்டோ ரெல்லாரும்"*(தொல். விருத். 45). (செ.அக.).*

உள்ளிழிச்சு–தல், ūḷḷiḻiccū-, *6.* செ.குன்றாவி. (v.t.) உட்கொள்ளுதல்; to gulp, to swallow. ஸாரஸ்யத்தாலே உள்ளிழிச்சவும் மாட்டாதே உமிழவும் மாட்டாதே நடுவே நாக்கடியிலே வைத்திருக்கிற படியைச் சொல்லுதல்*(திவ்.திருநெடுந்.11,வ்யா.). (செ.அக.).*

உள்ளுறு–தல்,ūḷḷū-, *6.* செ.குன்றாவி (v.t.) *1.* நினைதல்; to think of, remember. "ஒருதிசையொருவனை யுள்ளி" *(புறநா.121). 2.* ஆராய்தல்; to revolve in the mind, investigate. "உள்ளப்படுவனவுள்ளி" *(திருக்கோ. 87). 3.* நன்கு மதித்தல்; to honour, esteem. "வேந்தன்கணுாறெய்தி யுள்ளப் படும்" *(குறள். 665). 4.* திரும்ப நினைத்தல்; to recollect. "உள்ளினேனென்றேன் மற்றென் மறந்தீ ரென்றென்னைப் புல்லாள் புலத்தக் கனள்" *(குறள். 1316). 5.* இடைவிடாது நினைத்தல்; to think without ceasing. *(செ.அக.).*

உள்ளுடை–தல், ūḷḷūṭaī-, *2.* செ.கு.வி. (v.i.) *1.* மனமுறிதல்; to be heart broken, sorely grieved. "பிணிக் குள்ளுடைந்தேன்" *(மறைசை. 63). 2.* முழு துஞ்சிதைதல்; to be destroyed utterly. "ஊக்கித்தாங் கொண்ட விரதங்களுள்ளுடைய" *(நாலடி. 57). (செ.அக.).*

உள்ளுருகு–தல், ūḷ-ḷ-ūṟūgū-, *5.* செ.கு.வி. (v.i.) மனங்கரைதல்; to melt, as the heart. "உண்ணிறைந்த பேரனபா லுள்ளுருகி" *(தாயு.பொருள்.10). (செ.அக.).*

உள்ளுறு[1]–தல் ūḷḷūṟū-, *4.* செ.கு.வி. (v.i.) உள்ளிருத்தல், உட்படுதல்; to be in ,concerned in, involved. *(செ.அக.).*

உள்ளுறு[2]–த்தல், ūḷ-ḷ-ūṟū-, *4.* செ.குன்றாவி. (v.t.) *1.* உட்செலுத்துதல்; to thrust in , insert, instill, as principles. "மட்பெருங் குகையினின் மருந்தையுள்ளுறுத்தான்" *(கந்தபு. மார்க்.132). 2.* உட்கருதுதல்; to consider, think about. "உள்ளுறுத்திதனோ டொத்துப் பொருண் முடிகென" *(தொல். பொருள்.48). 3.* உள்ளிடுதல்; to include, comprise. "தோழி யுள்ளுறுத்த வாயில்" *(தொல். பொருள். 149). (செ.அக.).*

உள்ளொற்று–தல், ūḷḷōṟṟū-, *15.* செ.கு.வி. (v.i.) உண்ணிகழ்ச்சியை உய்த்துணர்தல்; to discern a thing that is hidden from public view. "உள்ளொற்றியுள்ளூர் நகப்படுவர்" *(குறள், 927). (செ.அக.).*

உளதா–தல்,ūḷāḍā-, *18.* செ.கு.வி. (v.i.) உண்டாதல்; to originate; come into being. "இலதுகாரிய முதலுளதாகு மென்னில்" *(சி.சி. 1.7). 2.* இருத்தல்; to exist. *(செ.அக.).*

உளப்படு[2]–தல், ūḷā-p-pāḍū-, *20.* செ.கு.வி. (v.i.) *1.* உள்ளடங்குதல்; to be included. "அன்னென் கிளவி யுளப்பட" *(தொல். எழுத். 119). 2.* உரியதாதல்; to be proper, fitting, appropriate. "மன்னவற் குளப்படு கடன் முறையுதவி" *(கந்தபு. திருநாட்.25). (செ.அக.).*

உளம்பு[1]–தல், ūḷāṃbū-, *6.* செ.குன்றாவி. (v.t.) *1.* அலைத்தல்; to stir up, beat up, as game. "கைம்மா வுளம்புநர்" *(கலித். 23) 2.* புதரைத் தட்டி வேட்டை விலங்கைக் கிளப்புதல்; to drive out the animal from thicket in hunting.

உளர்[1]–தல், ūḷāṟ-, *5.* செ. குன்றாவி. (v.t.) *1.* கோதுதல்; to adjust, smooth out, as birds their feathers. "கதுப் புளரி" *(குறுந்.82.) 2.* தலை மயிர் ஆற்றுதல்; to spread out and draw the fingers through, as in drying wet hair. "கூந்தலுலர" *(கலித்.105). 3.* அசைத்தல்; to shake, cause to move or fly about. "விரைவளர் கூந்தல் வரைவளியுளர" *(புறநா. 133.4) 4.* சிதறுதல்; to scatter, throw about, strew. "கனைத்துவண் டுளர்ந்த தார்க் காளைசீவ கன்னரோ" *(சீவக.707). 5.* தடவுதல்; to draw the fingers over, as a bow string. "வல்வின்ஞாணுளர்தீயே" *(கலித். 7). 6.* யாழ் முதலியன இசைத்தல்; to thrum, as a yāḻ ; to play, as an instrument. "மென்மொழி மேவல ரின்னரம் புளர" *(திருமுரு.142). 7.* கலக்குதல்; to disturb, ruffle, stir up, as fish the water of a pool. "சேலங் குளர்வயற் சேவூர்" *(இறை.2.பக்.41).*

உளர்[2]–தல், ūḷāṟ-, *5.* செ.கு.வி. (v.i.) *1. காலம் கடத்துதல்;* to delay. "*அவனையுளராதழிக்க*" *(விநாயகபு. 52.18). 2. அசைதல்;* to stir, move. "*நீருளர் பூந்தா மரைப் போது*" *(கலித். 112) 3. சுழலுதல்;* to whirl, whiffle, as wind (W.). *4. உறுதியற்றாடுதல்;* to be loose, as a pin or a screw.

உளவறி–தல் ūḷāvāṟi-, *2.* செ.கு.வி. (v.i.) *துப்பறிதல்;* to spy out the secrets of a person, family or state, for some sinister object. *(செ.அக.).*

உளறு–தல், ūḷāṟu-, *10.* செ.கு.வி. (v.i.) *1. ஆரவாரித்தல் (பிங்.);* to roar, shout, vociferate. *2. கண்டபடி பிதற்றுதல்;* to clamour without sense, utter unmeaning vociferations, speak incoherently as through fear, talk blatantly. "*பந்த மயக்கிருக்கப் பற்றொழிந்தே னென்றுளறும்*" *(தாயு. பராபர.336.) (செ.அக.).*

ம. உளறுக; க. ஒளறு; தெ. ஊல் (நரி ஊளையிடல்); பட. ஊவலிக்கு (ஊளையிடல்).

உளிவை–த்தல், ūḷivai-, *4.* செ.கு.வி. (v.i.) *மரத்தை உளியிட்டுப்பிளத்தல் (யாழ்.அக.);* to split wood with an iron tool. *(செ.அக.).*

[உளி + வை.]

உளு–த்தல், ūḷu-, *4.* செ.கு.வி. (v.i.) *மர முதலியவை புழுவால் அரிக்கப்பட்டுக் கெடுதல்;* to be worm eaten, as wood; to be eaten out by insects, as grain, as seeds. *(செ.அக.).*

உளுக்கா–த்தல், ūḷukkā-, *4.* செ.கு.வி. (v.i.) *1. உள்ளொடுங்குதல்; ஓரிடத்தில் இருத்தல்;* to sit down. "*சோளேந்திரசிங்கனை யுளுக்காக்கப் புண்ணுகிறேன்*" *(ஈடு 6,4,9). 2. சுவர் முதலியவை கீழிறங்குதல்;* to sink as a wall. (W.) *(செ.அக.).*

உளுக்கு[1]–தல், ūḷukku-, *15.* செ.கு.வி. (v.i.) *1. சுளுக்குதல்;* to be sprained, dislocated. *2. நெளிதல்;* to writhe. "*நிலமுது குளுக்கிக் கீழுற*" *(கம்பரா. கார்முக. 10). (செ.அக.).*

உளுத்துப்போ–தல், ūḷuṭṭu-*p*-*p*ō *8.* செ.கு.வி. (v.i.) *1. புழு வரித்தல்;* to be eaten up by worm. *2. வெடிப்பினால் உளுத்தல்;* to be corroded by salt.petre. *(சா.அக.).*

உளை[1]–தல், ūḷāi-, *2.* செ.கு.வி. (v.i.) *1. குடைச்சல் நோவடைதல்;* to ache or suffer pain in the limbs, as from weariness, cold, rheumatism. *கால் உளைகிறது. 2. வயிறுளைதல்;* to suffer griping pain, as with dysentery. *3. பேறுகால வேதனைப்படுதல்;* to travail. *4. மனம் வருந்துதல்;* to suffer in mind, to be in distress; to touch deeply. "*உளையச் சொன்னான்*" *(கம்பரா. கையடை.10). 5. அழிதல்;* to perish; to be destroyed. "*உளையாவலியொல்க*" *(தேவா.570.8). 6. தோற்றல்;* to be defeated, vanquished. "*சுடருக் குளைந்து*" *(திவ். இயற். திருவிருத்.69) 7. சிதறிப்போதல்;* to disperse, scatter, to be diffused. "*காலுளைக் கடும்பிசி ருடைய வாலுளை*" *(பதிற்றுப்.41.25).*

உளை[2]–த்தல், ūḷāi-, *2.* செ.கு.வி. (v.i.) *1. ஒலித்தல்;* to sound, roar. "*கடலுளைப்பதும்*" *(கம்பரா. நட்புக்.45). 2. ஊளையிடுதல்;* to howl, as a jackal. "*உலப்பி லின்பமோ டுளைக்கு மோதையும்*" *(மணிமே. 6.111). 3. யாழ் ஒலித்தல் (திவா.);* sound of a harp. *4. சிந்துதல்;* over flowing. *5. தடவுதல்;* shampooing. *(செ.அக.). 12.* செ.குன்றாவி. (v.i.) *அழைத்தல்;* to call, invite *(செ.அக.).*

உற்றறி–தல், ūṟṟāṟi-, *2.* செ.குன்றாவி (v.t.) *1. தொட்டறிதல்;* to feel by touch; to make observation by the sense of touch. "*ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே*" *(தொல். பொருள். 582.) 2. பயின்றறிதல்;* to learn by experience. (W.) *(செ.அக.).*

உற்றுக்கேள்–(ட்)த(ட)ல், ūṟṟū-k-kēḷ-, *11.* செ.குன்றாவி (v.t.) *கூர்ந்து கேட்டல்;* to listen attentively. *(செ.அக.).*

உற்றுநோக்கு–தல், ūṟṟū-ñōkkū-, *5.* செ.குன்றாவி. (v.t.) *கவனித்துப் பார்த்தல்;* to look steadfastly. "*உற்று நோக்குழி*" *(காஞ்சிப்பு. நகரே. 198). 2. கூர்ந்தாராய்தல்;* to examine minutely; to scrutinize carefully. *(செ.அக.).*

ம. உற்றுநோக்குக.

உற–த்தல், ūṟā-, *4.* செ.குன்றாவி (v.t.) *1. கிள்ளி யெடுத்தல்;* to nip, pinch off, tear open. "*பொற்கை நகத்தாலுறக்கும்*" *(காளத். உலா, 460). 2. பிளத்தல்;* to split with force, cleave, rend, rive. "*உகிர்களாலுறக்கும்*" *(கம்பரா. இரணி.138.) 3. அழுத்துதல்;* to squeeze out, as juice. *உறந்துபிழி (வின்.) 4. உறிஞ்சுதல்;* to suck in. *இரத்தத்தை உறந்து போட்டது (இ.வ.). 5. ஒட்டக் கறத்தல்;* to milk to the last drop. *கன்றுக்கு விடாமல் பாலை உறந்து விட்டான் (இ.வ.). 6. முற்றங்கவர்தல்;* to drain to the last farthing. *அவன் சொத்துகளையெல்லாம் உறந்து போட்டான் (இ.வ.). 7. பிழிதல்;* pressing out the juice as from leaves, flowers etc. *8. பிதுக்கல்;* pressing out the pulp from any grain as in shelling peas etc.

உறக்கு[1]–தல், ūṟākkū-, *5.* செ.குன்றாவி. (v.t.) *1. தூங்கச் செய்தல்;* to put to sleep, as a child (W.) *2. இமையை மூடச்செய்தல்;* to weight down the eyelids, as in sleep. *நித்திரை கண்ணை உறக்குகின்றது (இ.வ.). 3. அழித்தல்;* to destroy, ruin (W.) *என் குடியை உறக்கிப்போட்டான் (இ.வ.). (செ.அக.).*

ம. உறக்கு; பட. ஒரகுக.

உறகு–தல், ūragu-, *4.* செ.கு.வி. (v.i.) *ஒடுங்கித் தூங்குதல்;* to sleep. "*பறவையரையாவுறகல்*" *(திவ்.பெரியாழ்.5,2,9).*

க., பட. ஒரகு.

உறங்கு–தல், ūṟāṅgū-, *15.* செ.கு.வி. (v.i.) *1. தூங்குதல் (குறள்,339);* to sleep, slumber. *2. தூக்க மயக்கமுறுதல்;* to feel drowsy, as on account of a tedious journey, disease, or want of food. *3. ஒடுக்க நிலையடைதல்;* to become closed; to droop, as flowers or leaves by the absence of the sun. "*தண்டலைக் காவுறங்கின*" *(தமிழ்நா. 132) 4. சோர்தல்;* to be weary. *5. தங்குதல்;* to dwell, abide, reside. "*தாமரையுறங்குஞ் செய்யாள்*" *(கம்பரா. நாட்டுப். 6).*

து. ஒரங்கு, ஒரகுனி; தெ. ஒரகு; கோண். வீரன்கு;

பர். ஓர்க். ம. உறங்ஙக; எர., பட. ஓரகு; க. ஓரகு, ஓரங்கு; துட. வொர்க்; கோத. ஓர்க்; குரும். வொகினெ; குட. வரகு, ஓர்.

உறட்டு[1]–தல், ūṟāṭṭū-, 6. செ.குன்றாவி (v.t.) வறட்டுதல்; to dry, reduce, cause to wither, emaciate. (W).

உறண்டு–தல், ūṟāñḍū-, 5. செ.குன்றாவி (v.t.) 1. வறளுதல்; to become reduced, emaciated, by journeying, by want of sufficient food, by disease (J.) சாப்பாடில்லாமல் உறண்டிப் போனான். (இ.வ.) (செ.அக.).

உறவாடு–தல், ūṟāvāḍū- 5. செ.கு.வி. (v.i.) 1. உறவு கொண்டாடுதல்; to be on terms. intimacy with one's relations. 2. நட்புப் பாராட்டுதல்; to be friends with. "தம்பலவாயொடு பேசிக் கொண்டுறவாடி" (திருப்பு.581). (செ.அக.).

உறவுகல–த்தல், ūṟavu-kla-, 3. செ.கு.வி. (v.i.) 1. திருமணத்தினால் புதிய தொடர்பு ஏற்படுதல்; to form new relationship by intermarriage. 2. தொடர்பு பாராட்டுதல்; to be friends."காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்" (தாயு. காடுங்கரையும். 3.) (செ.அக.).

உறவெடு–த்தல், ūṟavedu-, 4. செ.கு.வி. (v.i.) 1. ஊறி வருதல்; to ooz out. 2. உண்டாதல்; to originate, form. (சேரநா.).

ம. உறவெடுக்குக.

உறழ்[1]–தல், ural-, 2. செ.கு.வி. (v.i.) 1. வேறுபடல்; to admit of option, in combination of words, as to whether a letter undergoes any chage or remains unchanged. "கன்னவ் வேற்று மென்மையோ டுறழும்" (நன். 217). 2. திரிதல்; to change, vary. "உறழ்ச்சி வாரத்து" (தொல். எழுத். 102). 3. எதிராதல்; to be contrasted. "உறழுங் கிளவி" (தொல்.பொருள்.238).

உறழ்[3]–தல், ūral-, 2. செ.கு.வி. (v.i.) 1. இடையிடுதல் (திவா.); to interfere. 2. வீணையில் அல்லது யாழில் ஒரு நரம்பைவிட்டு ஒரு நரம்பைத் தெறித்தல்; to change, as the string in playing a viṉā. "வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும" (பொருந்.23). 3. பெருக்குதல்; to multiply. "இருநான்குருபு முறழ்தர" (நன். 240). 4. ஒத்தல்; to resemble. "துப்புறழொண்டளிர்" (ஐங்குறு. 273).

உறாவு–தல், uṟāvu-, 7. செ.கு.வி. (v.i.) 1. சோர்தல்; to be weary, exhausted; to faint. இவள் பரிஸரத்தி லுள்ளவையிறே உறாவிக் கிடப்பன (ஈடு, 6,8,4). (செ.அக.).

உறி[1]–தல், ūṟī-, 2. செ.குன்றாவி (v.t.) உறிஞ்சுதல்; to snuff up, sip up. (செ.அக.).

க. உறி.

உறிஞ்சு–தல், ūṟīñju-, 10.செ.குன்றாவி (v.t.) 1. வாயால் உள்ளிழுத்தல்; to sip, suck up, draw into the mouth, as in tasting liquids. "நன்குறிஞ்சிப் பேய்த்தநஞ் சுவைத்தார்" (அஷ்டப். திருவே, மாலை, 41.). 2. மூக்கால் உறிஞ்சுதல்; to snuff up, sniff, draw in sharply through the nose. "மூக்குறிஞ்சி முலை யுணாயே" (திவ். பெரியாழ்.2.2.2). 3. உள்ளேயிழுத்தல்; to suck up, take in, absorb, as a sponge. மழை நீரைப் பூமி உறிஞ்சி விட்டது (உ.வ.) (செ.அக.).

ம. உறிஞ்சுக.

உறு[1]–தல், ūṟu-, 4. செ.கு.வி. (v.i.) 1. இருத்தல்; to be exist. 2. நேர்தல்; to happen, occur, befall, as good or evil. "மெய்த்திரு வந்துற்றாலும்" (நள. சுயம்.5) 3. தங்குதல்; to dwell, reside. 4. நன்மையாதல்; to be desirable, useful, worthy of choice. "இரவாமை கோடியுறும்" (குறள். 1061). 5. உறுதியாதல்; to be permanent, lasting, stable. "வேல்வாயுயிர் வழங்கும் வாழ்க்கையுறும்" (பு.வெ. 2,13) 6. மனத்தில் நிகழ்தல்; to pass in one's mind. "நினக்குறுவது சொல்லுதி" (கம்பரா. கும்பக. 325). 7. மிகுதல்; to be numerous "பல்லெலாம் உறத்தோன்றும் பகுவாயாள்" (கம்பரா. சூர்ப்ப.138). 8.சார்ந்திருத்தல்; to be attached. "அங்குற்றேனல்லேன்" (திவ். திருவாய். 5, 8, 2). 9. பொருத்துதல்; to join, associate with. "நீலுறு மணிசெய் மாடம்" (இரகு. நகரப். 42). 10. படுதல்; to touch, come in, contact with. "நெருப்புற்ற போல" (சீவக. 2339). 11. ஓரிடம் அடைதல்; to move towards a point. "எங்குற்றாயென்ற போதாலிங்குற்றே னென்கண்டாயே" (தேவா. 1190.8).

உறு[2]–தல், ūṟu-, 4. செ.கு.வி. (v.i.) 1. வருந்துதல் (பழ. 226); to suffer. 2. பழுதுபடுதல் (குறள். 662); to be infructuous, damaged, spoiled.

உறு[3]–தல், ūṟu-, 4. செ.குன்றாவி (v.t.) 1. தொடுதல்; to perceive by touch. "கண்டு கேட் டுண்டுயிர்த் துற்றறியும்" (குறள். 1101) 2. அன்பு கொள்ளுதல்; to love. "யாமுற்றாலுறா அதவர்" (குறள். 1245). 3. ஒத்தல்; to resemble. "உண்டு பொழிலிமைய வர்களுலக முறுவதுவே" (சீவக.1780). 4. தொடங்குதல்; to begin, commence, start, usu. with a vbl. noun. "யான் மொழியலுற்றேன்" (கம்பரா. நாட்டுப். 1) 5. அடைதல்; to approach, gain access to, each. 6. நுகர்தல்; to enjoy. "உற்றலாற் கயவர்தேறார்" (தேவா. 523.8.) 7. நினைத்தல்; to think. "வில்லு மல்ல திழைக்க லுறாள்" (திவ். பெரியாழ். 3,7,8).

ம. உறுக, க. உறு, ஊறு; துட. உர்வ்; து. உந்துனி; தெ. உறு.

உறு[4]–த்தல், ūṟu-, 4. செ.குன்றாவி (v.t.) 1. அடைவித்தல்; to cause to move towards a point. 2. சேர்வித்தல்; to cause to join.

உறு[5]–த்தல், ūṟu-, 4. செ.குன்றாவி (v.t.) 1.துன்புறுத்துதல்; to cause to suffer. 2. முள்போல் குத்துதல்; to pierce. 3. மிகச் சினத்தல்; to have wrath.

உறுக்கு[1]–தல், ūṟukku-, 5. செ.குன்றாவி (v.t.) 1.அதட்டுதல்; to menace, threaten."தஞ்சொலாற்றின் வந்திடாவிடி லுறுக்கி

வளாரினா லடித்து" (சி.சி. 2,16). 2. சினத்தல்; to address with harshness, severity, anger. உறுக்கிக் கட்டுவிப்பாரைப் போலே (ஈடு. 7.1.1.) 3. தண்டித்தல்; to punish. "காலனைத் தானலறயுறுக்கிய சேவடியான்" (தேவா. 524.4.) 4. தாண்டுதல் (பிங்.); to jump, leap over. (செ.அக.).

ம. உறுக்குக.

உறுத்தா(தரு)தல், ūṟuṭṭā-, 15. செ.குன்றாவி (v.t.) நெருக்குதல்; to crowd, constrict. "ஓரியவுறுத்தர" (பரிபா. 6.37). (செ.அக.).

உறுத்து–தல்,ūṟuttu-, 5. செ.குன்றாவி (v.t.) 1. உண்டாக்குதல்; to cause to be to originate. "அறவரே தோழரிவர்க்கஞ் ருறுத்தல்" (தணிகைப்பு. அகத். 234) 2. அமைத்தல்; to put up, as the saddle on a horse, to fit up. "புரவி பண்ணுறத் திடுவார்" (நைடத. சுயம். 58). 3. அடைவித்தல்; to arrange to get, cause to obtain. "கொடிச்சியை யிலைவேல் இளவற்கும்... கானத்தம்ம முந்துபுக்குறுத்துவன்" (தணிகைப்பு. விநா. காப்.) 4. ஒற்றுதல் (திவா.); to bring in contact, clap together. 5. பதித்தல்; to insert, encase. 6. மனத்தழுந்தச் செய்தல்; to strongly impress upon the mind. அச்செய்தியை உறுத்திப் பேசினான் (இ.வ.). 7. அழுத்துதல்; to cause smarting, as a thron in the flesh; to produce irritation, as dust in the eye; to press uncomfortably, as a rough or uneven surface on one stitting or lying down. "முள்ளுறுத்தி" (சேதுபு. அனும.12). 8. மனத்தை வருத்துதல்; to cause pain of mind, afflict, rankle, as by a sarcastic remark. அவன் கூறிய சொல் என்னை உறுத்தியது. (உ.வ.) 9. மிகுத்தல்; to increase. "இல் வலியுறுத்தல்" (தொல். பொருள். 263). 10. விரித்தல்; to spread out, open. "முடங்கதளுறுத்த முகிழ்நகை யெய்தியும்" (கல்லா.12).11. சினந்து சீறுதல்; to huff with anger, swell with rage. "உறவுறுத்தினரொட்டலர்" (பிரபுலிங். சித்த.12).

ம. உறுத்துக.

உறுதிப்படுத்து–தல், ūṟudi-p-puḍu-, 20. செ.கு.வி. (v.i.) நிலைப்படுதல்; to be firmly established, to be assured. 2. திடப்படுதல்; to be confirmed, as a member in a church. (செ. அகக.).

உறுதிமுடி–த்தல், ūṟudi-mudi-, 4. செ.கு.வி. (v.i.) ஆவணம் எழுதிக் கொடுத்தல்; to execute a title deed or bond. (J.) (செ. அக.).

உறுமியடி–த்தல், ūṟumi-y-aḍi-, 4. செ.குன்றாவி (v.t.) குறுந்தடியால் ஒலியுண்டாகுமாறு உறுமியைத் தேய்த்தடித்தல்; to alternately rub and beat on one side of *urumi* with a curved stick in order to produce a characteristic humming sound. (செ.அக.).

உறுமு–தல், ūṟumu-, 10. செ.கு.வி. (v.i.) 1. உறுமென்று ஒலித்தல்; to growl, as a wild beast; to grunt, as a pig; to rumble, as thunder; to sound, as te *urumi* drum. 2. முறுமுறுத்தல்; to murmur angrily. "இல்லத்துறுமி நெடிது மிராஅர்" (ஆசாரக். 81). 3. எழும்புதல் (திவா.); to rise; to be stirred up. (செ.அக.).

ம. உறுமுக; க. ஓரல் (கீச்சிடுதல்); தெ. உறுமு; பர். உறும்பில் (இடி.); கூ. ரும்பு.

உறுவி–த்தல், ūṟuvi-, 4. செ.குன்றாவி. (v.t.) நுகர்வித்தல்; to cause to experience, as pleasure or pain. "பலமுறுவிப்பான் வேண்டும்" (சி.சி. 2.21.) (செ.அக.).

உறை[1]–தல், ūṟai-, 2. செ.கு.வி. (v.i.) 1. இறுகுதல்; to thicken, curdle to coagulate, congeal, freeze. "குடப்பாலுறையா" (சிலப். ஆய்ச்சி.1. உரைப்பாட்டுமடை.) 2. செறிதல் (வின்.); to be close, dense, as tress in a forest. 3. கட்டியாதல்; to thicken. 4. வாழ்தல்; to reside, dwell. உம்ப ருறைவார் பதி (நாலடி.137). 5. ஒழுகுதல்; to live, conduct oneself. "உலகத்தோடவ்வதுறைவதறிவு" (குறள். 426..) (செ.அக.).

ம. உறயுக; குட. ஒரெ; து. உர்குனி; கோண். உர்ரானா.

உறை[2]–த்தல், ūṟai-, 2. செ.கு.வி. (v.i.) 1. துளித்தல்; to drop, as the rain ; to form as the dew. "தெண்பனி யுறைக் குங்கால்" (கலித்.15). 2. உதிர்தல்; to fall down, as pollen from flowers. "தாதுறைக்கும் பொன்னறை" (கலித். 39, 32). 3. சுவையுறைத்தல்; to be pungent, biting, sharp. "உப்புறைத்தன மேகமுகுத்தநீர்" (கம்பரா. சேதுபந். 60). 4. கூடுதல்; to scorch, as the sun. இன்றைக்கு வெயிலுறைக்கிறது. 5. தாக்கிப் பயன் விளைத்தல்; to produce effect, as words of advice, to sting, as a rebuke or sarcasm. "ஆற்றவுமஃ துனக்குறைக்குங் கண்டாய்" (திவ். நாய்ச்.1,9). 6. முள் முதலியன உறுத்துதல்; to prick, as a throrn. "பாத மெல்லிய வுறைக்கும்." (கம்பரா. கோல. 24). 7. ஊன்றுதல்; to become firm, steadfast, decided, as the mind. "புந்திநின்றுறைக்க" (கைவல். சந்.5). 8. மோதுதல்; to beat upon, as wind. "ஆடை வளியுறைப்பப் போகார்" (ஆசாரக். 37) 9. மிகுதல்; to increase grow. "யானை யிருஞ் சினமுறைக்கும்" (ஐங்குறு. 352). (செ.அக.).

உறையிடு–தல், ūṟai-y-idu-, 18. செ.குன்றாவி (v.t.) பேரளவைக் குறிப்பதற்குச் சிற்றளவுக் குறியமைத்துக் கொள்ளுதல்; to put down a particular mark or symbol to stand for a number, in numbering, measuring a weighing as 1 for 100. "உறையிடத் தேய்ந்திடும் இவ்வந்தி வானத்து உடுக்குலமே" (அட்டப். திருவேங்கடத்தந். 34) (செ.அக.).

உன்னி–த்தல், ūnni-, 4. செ.கு.வி. (v.i.) 1. எண்ணுதல்; to think, consider. 2. உயர்தல்; to climb up.

ம. உன்னிக்குக; க. உன்னிக, உன்னுக.

உன்னு[1]–தல், ūññu-, 11. செ.கு.வி. (v.i.) பேசவாய் கூட்டுதல்; to be on the point of speaking, as having words on the tongue. பேசவுன்னுகிறான். (இ.வ.).

உன்னு[2]–தல், ūnnu-, 11. செ.கு.வி. (v.i.) 1. எழும்புதல்; to rise.

குதிரை யுன்னிப் பாய்ந்தது. (உவ.). 2. முன்னங்கால் விரலை யூன்றி நிமிர்தல்; to be on tiptoe.

C

ஊக்கு –தல் *ukku-, 5.* செ.குன்றாவி.(v.t) *1.* ஆட்டுதல்; to swing, shake. "ஐய சிறிதென்னை யூக்கி யெனக்கூற" *(கலித். 37) 2.* நெகிழ்த்துதல்; to loosen, as one's hold "கைகளை யூக்கப் பசந்தது.....நுதல்" *(குறள். 1238). 3.* தப்புதல்; to miss the mark. "ஊக்கருங் கணையினர்" *(மதுரைக். 647). 4.* ஊக்கமூட்டுதல்; to encourage, motivate, prompt. அந்தக் காரியத்தில் அவனை ஊக்கினார். *5.* முயலுதல்; to make an effort, act with energy. "நீணெறி யூக்கினானுவவுறு மதியினொண்மையான்" *(சீவக.1409) 6.* கற்பித்தல்; to teach, instruct.

ஊகு[1]–தல் *ugu-, 7.* செ.கு.வி. (v.i.) *1.* அசைதல்; to move. *2.* ஊசலாடுதல்; to swing *3.* நீளுதல்; to lengthen.

க. ஊகு.

ஊங்கொட்டு–தல் *u-n-kottu-, 5.* செ.கு.வி. (v.i.) பிறர் சொல்வதைத் தொடர்ந்து கேட்பதற்கும், சரி என்று ஒப்புவதற்கும் அடையாளமாக 'ஊ' என்று சொல்லுதல்; to respond by ejaculating 'um' as in listening to a story that is to say 'yes', agree without questioning. *(செ. அக.)*

ம., க. ஊம் தெ. ஊ.

ஊச்சு[1]–தல் *uccu-, 5.* செ.குன்றாவி. (v.t.) உறிஞ்சுதல்; to absorb. "கள்ளத்தினூாச்சுஞ்சுரம்" *(ஐந்.ஐம்.38).*

ஊசலாடு–தல் *usal-adu-, 5.* செ.கு.வி. (v.i.) *1.* ஊஞ்சலாடுதல்; to swing "பொன்னூசலாடாமோ" *(திருவாச. 161.) 2.* அசைதல்; to move to and fro. "ஊசலாடு பைங்கமுகு" *(சீவக.68) 3.* போக்குவரத்தாயிருத்தல் *(லின்.)*; to frequent, come and go *(செ. அக.) 4.* உலவித் திரிதல் *(ஆ. அக.)*; to wander, roam.

ஊசிப்போ–தல் *usi-p-po-,* பெ.(n.) ஊசல் நாற்றமடித்தல்; becoming putrified from being kept long; becoming stale and nauseous. *(சா. அக.).*

ஊசியோடு–தல் *usi-y-odu-, 5.* செ.கு.வி. (v.i.) ஊசித் தையல் செல்லுதல்; to pass the needle through in sewing. *(செ. அக.).*

ஊசு[1]–தல் *usu-, 7.* செ.கு.வி. (v.i.) 1. அழுகுதல்; to decay, become fetid, rotten; to putrefy, as a corpse. "ஊசிடு மிடும்பை யாகிய உடம்பு" *(திருப்பு.). 2.* சுவை கெடுதல்; to become stale, sour, rank insipid, as food by keeping. "மாசி லோதனம்..... ஊசு மேலினியென் செய்வது" *(திருவாலவா. 6.4.)*

ம., க. ஊசு; து. ஊக.

ஊட்டவிடு–தல் *uttavidu-, 18.*செ.குன்றாவி (v.t.) கன்றை அல்லது குட்டியைப் பால் குடிக்கவிடுதல்; to let the young of an animal suck. *(சா. அக.)*

ஊட்டி[1]–த்தல் *utti-, 5.* செ. குன்றாவி. (v.t.) தாளியடித்தல்; to level a field with a harrow.

ஊட்டு[1]–தல் *uttu-,* செ. குன்றாவி (v.t.) *1.* உண்ணும்படி உணவைப் பிறர் வாயிலே யிடுதல்; to put small quantity of food into the mouth, as of a child, of a sick person, as of a token of affection. "பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவும்" *(கலித்.11) 2.* உண்ணச் செய்தல்; to coax and make one eat one's food, as a mother, her child, to entertain, as a guest "ஊற்றுப் பெருக்காலுலகூட்டும்" *(நல்வ. 9) 3.* புகட்டுதல்; to instil, infuse. அறிவூட்டினான் *(உவ.) 4.* வண்ண மேற்றுதல்; to dye. "அரக்கார்ந்த பஞ்சி கொண்டூட்டினும்" *(நாலடி.396) 5.* நுகரச்செய்தல்; to cause, to experience, as the fruits of one's actions "உறற்பால வூட்டா கழியு மெனின்" *(குறள். 378) 6.* கன்று அல்லது குட்டி பால்குடித்தல்; to suck as a calf or a kid. இரண்டாட்டில் ஊட்டின குட்டியானான். *7.* விருந்திடல்; to give a feast. *(செ. அக.).*

ம. ஊட்டுக; க. ஊடிக. ஊடு; கோத. உண்க்ச்; தெ. ஊடு (கால்நடைக்கு நீர்கொடுத்தல்); கொலா. உணிப், ஊர்ன், உர்ன்; நா. ஊர்ன்.

ஊட்டுமற–த்தல் *uttamara-, 3.*செ. குன்றாவி. (v.t.) கன்று பால் குடி மறத்தல்; to make the calf to forget milk.

ஊடறு[1]–த்தல் *udaru-, 4.* செ. குன்றாவி. (v.t.) *1.* ஊடுருவுதல்; to cut through, cleave, sunder, pierce as an arrow; to force one's way through. *2.* வழக்குத் தீர்த்தல்; to decide between parties, settle amicably. (W).

ஊடாடு–தல் *udadu-, 5.* செ.கு.வி. (vi.) *1.* நடுவேதிரிதல்; to move about, go among. "ஊடாடு பனிவாடாய்" *(திவ். திருவாய். 1.4.9) 2.* பலகாற் பயிலுதல்;to frequent move about very often. "தேன் கொண்டூடாடுங் கூந்தல்" *(கம்பரா மாரீசன்.79) 3.* கலந்து பழகுதல்; to be familiar, to get into close intimacy, சீதையென்னு மான்கொண்மூடாடும் வண்ணம்" *(கம்பரா. மாரீசன்.79) 4.* கலத்தல்; to come in contact, get in touch. "கையெழுத்தோடூடாடாமறை" *(குற்றாதல. திரிகூட.34) 5.* பெரு முயற்சி செய்தல்; to make supreme effort. அவன் அதுநிறைவேற மிகவும் ஊடாடுகிறான். *(இ.வ.) (செ.அக.) 6.* கல்வி பயிலுதல் *(ஆ.அக.)*; to gain knowledge.

ம. ஊடாடுக; க. ஓடாடு; தெ. ஊடாடு.

ஊடு[1]–தல் *udu- , 5.* செ.கு.வி. (v.i.) *1.* புலத்தல்; to feign displeasure, as a wife of her husband or vice versa in order to enhance his or her affection. "ஊடுதல் காமத்திற்கின்பம்" *(குறள். 1330) 2.* பிணங்குதல்; to be impatient, to show resentment. "செறுத்தோறுடைப்பி னுஞ் செம்புனலோ டூடார்" *(நாலடி. 222).*

ஊடு[2]–தல் *udu-, 5.* செ.கு.வி. (v.i.) உண்ணுதல்; to eat பன்றி வள்ளிக்கிழங்கை ஊட்டிவிட்டது. *(இ.வ.).*

ஊடுசெல்(லு)–தல் *udu-cel-, 13.* செ.கு.வி.(v.i.) *1.* நடுவிற் போதல்; to pass through, the centre "உடைகப்பல் கப்பலாய்த் திரையாழி யூடுசெலுமோ" *(தாயு.சுகலா. 11) 2.* இடையே போதல்; to enter in between.

ஊடுருவு–தல் *uduru-, 5.* செ.கு.வி. (vi.) *1.* இடையுருவிச் செல்லுதல்; to penetrate pierce, as weapons "நெற்றிதொறு மோரொரு வடிக்கணை யூடுருவ." *(பாரத. இரண்டாம்போ. 26).*

ம. ஊடுருவுக.

ஊணு–தல் *unu-,* 13. செ. குன்றாவி (v.t.) உணவு கொடுத்துப் பேணுதல்; to feed and nourish. "ஊழலை யாக்கையை யூணுமூணர்விலீர்" *(தேவா. 588.6).*

'உண்' என்னும் தன்வினை 'ஊண்' என நெடுமுதலாகிப் பிறவினையாகும் பெற்றியுடைய தாயினும் முதனிலை திரிந்த தொழிற்பெயராகிய 'ஊண்' என்பதனின்றும் வேறுபடுத்த 'ஊணு' என உகர ஈறுபெற்றுப் பிறவினை ஏவலாகி 'ஊட்டு' எனப்பொருள் தந்துநின்றது.

ஊத்தையட்டு–தல் *ūttai-y-aṭṭu-. 5.* செ.கு.வி. (v.i.) ஊனமுறுதல்; to sustain dishonour, suffer disgrace "கோழிப் போரில் ஊத்தையட்டாமல்" (S.II.II. 251) *(செ.அக.).*

ஊத்தையெடு–த்தல் *ūttai-y-eḍu-; 4.* செ.கு.வி. (v.i) அழுக்ககற்றுதல் *(யாழ்ப்.)*; to remove tarnish from jewels, stain from silk or other cloth. *(செ. அக.).*

ஊதிப்பார்–த்தல் *ūdi-p-pār-, 4.* செ.குன்றாவி. (v.t.) *1.* புடமிட்டு நோக்குதல்; to test by blowing as a goldsmith. *(செ. அக.) 2.* மந்திரித்தல் *(வின்.)*; to attempt a cure by enchantment consisting in part of blowing into the patient's body.

ஊதியிரு–த்தல் *ūdiyiru-,3.* செ.கு.வி. (v.i.) *1.*வீங்கியிருத்தல்; to be in a swollen condition. *2.* பருத்திருத்தல்; to be stout or bloated. *(சா. அக.).*

ஊது[1]–தல் *ūdu-, 5.*செ. குன்றாவி. (v.t.) *1.* குழல் முதலியன ஊதுதல்; to blow as a wind instrument. "ஊதுகின்ற குழலோசை" *(திவ்.பெரியாழ்.3.6.1). 2.* தீ எரிய ஊதுதல்; to blow, as a fire, to kindle a blaze. 3. விளக்கு முதலியன அவிய ஊதுதல்; to blow out, as a lamp "ஊழித்தீயவிய வூதுவான்" *(கம்பரா.கும்பக.311). 4.* நோவு தீர ஊதுதல்; to blow, breathe upon, in order to allay pain. *5.* துளைத்தல்; to gnaw through and bore holes, as a beetle, to injure by drilling through as a moth. வண்டூதின மரம். *6.* பொன்னைப் புடம் போடுதல்; to refine with fire, as gold ஊதின பொன். *7.* நுகர்தல்; to feed on, as bees honey. "பாய்ந்தூதிப்படர்தீர்ந்து" *(கலித்.66). 8.* சூடாற்ற ஊதுதல்; to blow chaff away. *10.* ஊத்தாம்பை ஊதுதல்; to blow pipe. *11.* காய்களை மூட்டம்போட்டு ஊதிப் பழுக்க வைத்தல்; fumingation to ripen unripe fruit. *12* நோயாளி உடம்பிற்குள் ஊதி மந்திரித்தல்; to blow on a patient's body to cure by enchantment. 13. உடல் வீங்குதல்; swelling.

ஊது[2]–தல் *ūdu-, 7.* செ.கு.வி. (v.i.) *1.* வண்டு முதலியன ஒலித்தல்; to hum, as bees or beetles, in getting out honey from flowers. "சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" *(திருவாச.10.1). 2.* வீங்குதல்; to swell, as the stomach after eating; to be inflated. "ஊதியூதி வயிறுள்ளனவெல்லாம்." *(சூளா. சுயம்.15). 3.* துருத்தியாற் காற்றெழுப்புதல்; to blow with bellows with a blow-pipe. "ஊதுலைக் குருகி னுயிர்த்து" *(மணி. 2.43). (செ. அக.).*

ம. ஊதுக; க. ஊது, ஊதலு, ஊதிகெ, கோத. ஊத; கொலா. ஊந்த்; நா. ஊந்த்; கூட. ஊந்த; கோண். உக் காரை, உதானா; கூய். ஊகுடி; பர். ஊத்; குவி. ஊகலி.

ஊப்பு–தல் *ūppu-, 5.* செ.குன்றாவி.(v.t.) உறிஞ்சுதல், உறுப்புதல், பருகுதல், உட்கொளல்; to suck.

ஊபு–தல் *ubu-, 7.* செ.கு.வி. (v.i.) *1.* ஊதுதல்; to blow. *2.* சூடேற்றுதல்; to heat.

ஊய்–தல் *ūy-, 2.* செ.கு.வி. (v.i.) பதனழிதல்; to become overripe, to deterioate to decay. *(யாழ். அக.) (செ. அக.).*

ஊர்[1] –தல் *ūr-,* 2.செ.கு.வி. (v.i.) *1.* அடர்தல்; to come to close quarters. "வெஞ்சமமூர்ந்தமருழக்கி" *(சிலப் 27.28.அரும்) 2.* நகர்தல்; to move slowly, to creep as a infant, to crawl, as a snake. "நந்தூரும் புனனாட்டின்" *(பாரத.கிருட்டிண.11) 3.* பரவுதல்; to spread, circulate, as blood, to extend over a surface, as spots on the skin. "இவக்காணென் மேனி பசப்பூர்வது" *(குறள். 1185). 4.* வடிதல்; to flow, as juice from the sugarcane. "கரும்பூர்ந்த சாறுபோல்" *(நாலடி. 34). 5.* கழலுதல்; to unloosen, be relaxed. "அவிர்தொடியிறையூர" *(கலித். 100) 6.* சுற்றி வருதல்; to go round.

ஊர்[2]–தல் *ūr- 2.* செ.குன்றாவி. (v.t.) *1.* ஏறுதல்; to mount "பாசடும்பு பரியவூர் பிழிபு ..... வந்தன்று ..... தேர்" *(ஐங்குறு.101) 2.* ஏறிநடத்துதல்; to ride, as a horse, to drive as a vehicle. "சிவிகை பொறுத்தானோ டோர்ந்தானிடை" *(குறள்.37) (செ. அக.).*

ம. ஊருக; க. உரிசு, உச்சு; துட. உச்த்: தெ. ஊடு: நா. உயப்; கொலா. உட்பேங், ஊர்பேங்; குரு. உர்னா.

ஊர்[3]–தல் *ūr-, 2.* செ.குன்றாவி. (v.t.) *1.*நிலை கொள்ளுதல், ஊன்றுதல்; to set firmly, to plant. *2.* உட்கொள், உறிஞ்சு; to suck. "ஊர்த்துயிருன்னை யுண்ண" *(சீவக.2286). (செ. அக.).*

க. ஊர்; து. ஊரு (நிலைகொள், ஊன்று).

ஊர்க்கூடு–தல் *ūr-k-kūḍu-, 5.*செ.கு.வி.(v.i.) ஊரார் திரளுதல்; to throng in a body, as all the villagers for any common purpose. ஊர்

கூடிச் செக்குத் தள்ளுதல் போல. (பழ.) (செ. அக.).

ஊர்கொள்(ளு)–தல் ūr-koḷ-, 16.செ.கு.வி. (v.i.) 1. சுற்று வட்டங் கொள்ளுதல் (திருக்கோ.262. உரை); to have a halo as the sun or moon. 2. குறைவின்றி மண்டலமாக ஒளிபரத்தல் (திருக்கோ. 262. உரை.) ; to shine in its fulness, as the moon.

[ஊர் + கொள்.]

ஊரு–தல் ūru-,7 செ.கு.வி.(v.i.) நிலைகொள்ளுதல்; to set firm.

க. து. ஊரு

ஊரெறி–தல் ur-eri-, 2. செ.கு.வி. (v.i.) ஊர்க் கொள்ளை யிடுதல் (இறை.1.பக்.18); to sack a village. (செ. அக.)

[ஊர் + எறி-தல்.]

ஊல்[1]–தல் uḷ-, 13. செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல், நிலைகொள்ளல்; to join, to set firm. 2. முதிர்தல் ; to ripen.

ஊல்[2]–தல் uḷ-, 13. செ.கு.வி. (v.i.) 1. வேகுதல்; to boil. 2. கெடுதல், அழிதல்; to decay.

ஊழ்[1]–தல் uḷ-, 2. செ.கு.வி. (v.i.) முதிர்தல்; to grow old. "பெரும்பாம் பூழ்ந்து தோலுரிப்பன போல்" (சீவக.1560). (செ. அக.).

ஊழ்[2]–த்தல் uḷ-, 2. செ.கு.வி. (v.i.) 1. முதிர்தல்; to grow old, pass the prime of life. "காந்த ளூழ்த்துச் சொரிவபோல்" (சீவக.1742). 2. உட்குலைதல், பதனழிதல்; to decay, as flesh, as fruits, to become putrid, to be spoiled, to rot, to fade. "அருவிதந்த பழம்... ஊழ்த்து (மலைபடு.174, 180). 3. நாறுதல் (பிங்.); to stink. 4. விரிதல், மலர்தல்; to blossom. "நனையூழ்த்த செருந்தி" (கலித்.26). (செ. அக.).

ஊழ்[3]–த்தல் uḷ-, 2. செ.குன்றாவி. (v.t.) 1 நினைத்தல் (நாமதீப.); to think 2. மூடுதல் (நாமதீப.); to cover. 3. சிந்துதல் (நாமதீப.); to spill. (செ. அக.).

ஊழ்[4]–த்தல் uḷ-, 2.செ.கு.வி. (v.i.) உதிர்தல்; to fall off. (நாநார்த்த.)

ஊழ்கு–தல் ūḻku-, 5.செ.குன்றாவி.(v.t.) அடிமனம் ஒன்றித்தல், மனமொருங்கு குவிதல்; to meditate "புனிதன் பங்கய மூழ்கி" (கோயிற்பு.பாயி.17). (செ.அக.).

ஊழலி[1]–த்தல் ūḻali-, 4. செ.கு.வி. (v.i.) 1. பதனழிதல்; to become spoiled. 2. மெலிதல்; to break down, as the constitution by diseases; to grow thin. ஊழலித்த நண்டு. 3. சோர்தல்; to be dispirited. ஊழலித்த மனம். (இ. வ.).

ஊழலி[2]–த்தல் ūḻali-, 4.செ.குன்றாவி.(v.t.) அருவருத்தல்; to loathe, to be disgusted with. (செ. அக.).

ஊழுறு–தல் ūḻ-ūṟu-,4. செ.குன்றாவி. (v.t.) குடைதல்; to scoop out. "காழியர் மோதகத் தூழுறு விளக்கமும்." (சிலப் 6.137 அரும்.), (செ. அக.).

ஊளையிடு–தல் ūḷai-y-iḍu-, 20. செ.கு.வி. (v.t.) நாய் நரி முதலியவை கூக்குரலிடுதல்; to howl as jackal or dog. "முதிர்நரிகளூளையிடின்" (சூத. ஏக்கிபூ 46.20). (செ. அக.).

பட. ஊவலிக்கு: க. ஊளிடு.

[ஊளை + இடு.]

ஊற்றிரு–த்தல் ūṟṟiru-, 3. செ.கு.வி. (v.i.) தொழும்பு கொண்டிருத்தல்; to be devoted. "இத்தலை ஊற்றிருக்க வேணும்" (ஈடு). (செ. அக.).

ஊற்றிறை–த்தல் ūṟṟirai-, 4. செ.கு.வி. (vi) ஊற்றிலுள்ள நீரை யிறைத்துத் தூய நீர் ஊறச் செய்தல்; to scoop and throw out the water of a spring in the bed of a river until it becomes pure. (செ. அக.).

ஊற்று –தல் ūṟṟu-, 5. செ. குன்றாவி. (v.t.) 1. வார்த்தல்; to pour out, cause to flow; spill. "ஒழிவுறக் கடத்தினீரூற்றி" (சேதுபு. கந்தமா.87) 2. எண்ணெய் வடித்தல்; to extract, as oil from the castor seeds by boiling them. கொட்டை முத்தினின்று எண்ணெய் ஊற்றுவார்கள். 3. வெளியே விடுதல்; to pour out, cast away as useless, empty or clean as a vessel of its contents. "கங்கை புடையூற்றுஞ் சடையான்" (கம்பரா. கையிடை.12). (செ. அக.).

ம. ஊத்து.

ஊற்றெடு–த்தல் ūṟṟeḍu-, 4. செ.கு.வி. (vi.) 1. ஊற்றுத் தோன்றுதல்; to flow from a spring, as water into a well. 2. ஊற்றுத்தோண்டுதல்; to scoop out a spring (செ. அக.).

ஊறவை–த்தல் ūṟa-vai-, 4. செ. குன்றாவி. (v.t.) நீரிற்பதம் பெறச் செய்தல்; to steep, soak, pickle, (செ. அக.).

ஊறு[1]–தல் ūṟu-, 5. செ.கு.வி. (v.i.) 1. நீரூறுதல்; (குறள்.396); to spring, flow, as water in a well, to issue. 2. கசிதல்; to ooze, percolate. (W). 3. ஊறுகாய்ப் பதமாதல்; to soak, to be steeped, pickled. 4. பால் முதலியன சுரத்தல்; to gather, as milk in the breast, as toddy in palm flowers. 5. மை முதலியன ஊறுதல்; to run, to spread, as ink on flimsy paper, to keep, as moisture around a spring or in a river bank. 6. காயத்தில் ஊன் வளர்தல் (வின்); to form, as new flesh in a sore, to heal. 7. மெலிந்தவுடல் தேறுதல்; to increase, as flesh in a person wasted by disease, to improve by slow degrees. 8. பெருகுதல்; to increase. அவனுக்குச் செல்வம் ஊறுகிறது. 9. வாயூறுதல்; to water, as the mouth. "கனிகாண்டொறு மூறுமேயெயினூறுமே." (சூளா.சுயம்.66). (செ. அக.).

ம. ஊறுக: க., து. ஊறு: தெ. ஊறு.

ஊன்றிப்படி–த்தல் ūṉṟi-p-paḍi-, 5.செ.குன்றாவி. (v.t.)

1. கருத்தாய்ப் படித்தல்; to read attentively. 2.*நிறுத்தி வாசித்தல் (வின்.);* to read with proper intonation or emphasis. *(செ. அக.).*

ஊன்று[1]–தல் ūṉṟu-, *5.செ.கு.வி.* (v.i.) *1. நிலைபெறுதல்*; to be fixed, settled, gain a firm footing, become established, strike root. *"கற்பினிற்றிரிதலின்றியூன்றுக." (சீவக.604) 2.சென்று தங்குதல்*; to stop in a place. *"புகை.... விசும்பு னூன்றுஞ் சூளை" (புறநா. 228.3).*

ஊன்று[2]–தல் ūṉṟu-, *5.செ.குன்றாவி.* (v.t.) *1.அழுந்த வைத்தல்*; to fix, place firmly, as a pole in fixing a boat. *"முன்னொரு கோலூன்றி" (திவ். பெரியதி. 1, 3, 2.). 2. பள்ளத்தில் அல்லது குழியில் நடுதல்*; to plant, set firmly in the ground, as a post. *"காழூன்றிய கவிகிடுகின்" (பட்டினப். 167). 3. நிலைநிறுத்துதல்*; to establish, as fame, position. *"புதையம்பிற் பட்டுப்பாடூன்றுங் களிறு" (குறள்.597). 4. துணையாகப் பற்றுதல்*; to lean upon, recline or depend on, as a staff, a person. *"கைதருவார் தமையூன்றி" (பெரியபு. திருநாவு.61) 5. தாங்குதல்*; to support. *"துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (குறள்.615.) 6. தீர்மானித்தல்*; to determine, decide. *"ஊன்றியிவ்விரண்டினுள்ளு முறுதிநீயுரைத் திடென்ன" (சீவக.1235). 7. அமுக்குதல்*; to press down, bear down with pressure. *"உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றி" (பெரும்பாண்.200). 8. தள்ளுதல் (திவா.)*; to push, propel. *9. உறுத்துதல்*; to hurt, to cause smarting, irriation. *"அல்லியூன்றிடுமென்றஞ்சியரவிந்தந் துறந்தாட்கு" (கம்பரா. நாடவி.42). 10. குத்துதல்*; to drive in as a spear *"மருப்பதனாலூன்றிப் பிளந்திரு கூறுசெய்து" (கூர்மபு. அந்தசா.80).*

ம. ஊன்னுக; க. ஊறு. ஊர்; கோத. ஊத்: துட. ஊண்: குட. ஊர்: து. ஊரணி, ஊண்; துனி. ஊடுனி, ஊடபுளி, ஊண்டுனி: தெ. ஊட், ஊனு, ஊஞ்சு: கூ. உக: பர். உத்: கட. ஊண்டுப்குர், ஊத்னா.

ஊனமா–தல் *unam-a-, 8.* செ. குன்றாவி. (v.t.) *1. நொண்டியாதல்*; to be crippiled. *2. பழுதுறல்*; to be maimed. *3. அங்கம் பழுதாதல்*; to be defective of any organ in the body. *(சா. அக.).*

V

எஃகா–தல் ek̲ku-, *6.செ.குன்றாவி.* (v.t.) உருக்காக மாறுதல்; to turn into steel, acierate.

[எஃகு + ஆ.]

எஃகு[2]–தல் ek̲ku-, *7. செ.கு.வி. 1. நெகிழ்தல்*; to be yielding, pliable.(w.). *2. அவிழ்தல்*; to become unfastened, unclasped, loosened. *3. வளைவு நிமிர்தல்*; to spring back, rebound, as a bent bow. *வளைந்த வில் எஃகிற்று (உ.வ.) 4. தாழ்ந்தெழும்புதல்*; to lift, carry as a well sweep. *துலா அதனைக் கொண்டெஃகிற்று. 5. ஏறுதல் (திவா.)*; to climb, mount, get up. *6. உருகுதல்*; to melt. *7. வயிற்றுப் பக்கத்தை மேலெழும்பச் செய்தல்*; lift up the abdomen. *8. பஞ்சை மேலெழச் செய்தல்*; to draw the cotton up.

ம.எக்குக; க.எக்கு, எகரு; துட.பிடெக்; து.எக்கு, எக்கல் யுனி; தெ. எக்கு எக்கின்சு, எகரு, எகயு; குவி. என்கலி; கூ. எகசி, என்கசி.

எஃகுறு–தல் el̤kuṟu-, 4.செ.கு.வி.(v.i.) *1. அறுக்கப் படுதல்*; to be sawn through. *"எஃகுற்றிருவேறாகிய..... மாவினறுவடி" (அகநா.29). 2. பின்னப்படுதல்*; to be pulled thinly with the fingers, as cotton. *"எஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன" (அகநா.217).*

எக்களி–த்தல் ekkaḷi-, 4. செ.கு.வி.(v.i.) பெருகமகிழ்தல்; to be overjoyed. *"எக்களித்து வாழ்கின்றேன் யான்" (அருட்பா. சிவநேச.78). (செ.அக.).*

ம. எக்களிக்குக; க. எக்கு (முன்னங்காலால் நிற்றல்); து. எக்கல்யுனி (உடம்பை நீட்டுதல்); தெ. எக்கு; கூ. எகசி; குவி. என்கலி.

எக்கிடு–தல் *ekkiḍu-*, 20. செ.கு.வி.(v.i.) தாராளமாகக் கொடுத்தல்; to be profuse or liberal, as in giving alms or presents.

எக்கு[2]–தல் *ekku-*, 5.செ.குன்றாவி.(v.i.) *1. தாக்கியூடுருவுதல்*; to force through, as one's way in a crowd. *"கூட்டத்தை எக்கிக் கொண்டு வந்துவிட்டான். 2. உள்ளிழுத்தல்;* to contract the abdominal muscles, as beggars do to show hunger, as persons while dressing round the waist, as a cow in refusing to give milk. *"எக்கும் வயிறு" (திருக்காளத். 4,31,110). 3.மேலே செல்ல வீசுதல்*; to squirt, throw up, as water. *"நீரெக்குவோரும்" (பரிபா.11.57). 5. எட்டுதல் (வின்)*; to stand on tip-toe. *(செ.அக.).*

ம. எக்குக; க. எக்கு; எகரு, துட. பிடெக்; து. எக்கு, எக்கல்யுணி; தெ.எக்கு, எக்கின்சு, எகுரு, எகயு, அக்கலின்சு; கூ. எகசி, என்கசி; குவி. என்கலி.

எகிறு–தல் egiṟu-, 3. செ.கு.வி.(v.i.) துள்ளுதல்; to cut capers to leap to bounce. *"ஓடும்போது சட்டையிலிருந்து தூவல் எகிறி வழுந்தது" (உ.வ.).*

தெ. எகுரு; சு. எசுரு.

எச்சமிடு–தல் eccam-iḍu-, 20. செ.கு.வி.(v.i.) பறவைகள் மலங்கழித்தல்; to drop excrement, as birds. *(செ.அக.).*

எச்சரி–த்தல் *eccari-*, 4. செ.குன்றாவி.(v.t.) *1. முன்னறிவித்து எச்சரிக்கை செய்தல்*; to caution, warn, forewarn. *(செ.அக.). 2. அறிவுரை கூறுதல்*; to instruct, admonish. *3. விழிக்கப் பண்ணுதல் (ஆ.அக.)*; to awaken.

க. எச்சரிசு; து. எச்சரி; தெ. எச்சரின்சு.

எச்சிலாக்கு–தல் eccil-ākku-, 5. செ.குன்றாவி.(v.i.) உண்ணும்

போது எச்சில் படச் செய்தல்; to defile food or anything else either by bringing it into contact with the mouth or by touching it with the hand that has already come into contact with the mouth..

க. எஞ்சலிசு.

எச்சிலிடு–தல் ***eccil-idu-,*** 20. செ.கு.வி.(v.i.) உண்ட இடத்தைச் சாணமிட்டு மெழுகுதல்; to clean the place where food has been eaten, by smearing cowdung and water.

எச்சிலெடு–த்தல் eccil-eḍu-, 4.செ.கு.வி.(v.i.) எச்சிலி லையை அகற்றுதல்; to remove the leaf-plate after one has eaten from it.

எச்சிற்படு[1]–தல் eccir̤-paḍu-, 20.செ.கு.வி.(v.i.) உமிழ் நீர்பட்டுத் தூய்மை கெடுதல்; to become defiled, as food by contact with the mouth.

எச்சிற்படு[2]–த்தல்eccir̤-paḍu-, 18. செ.கு.வி.(v.t.) *1.* எச்சிலாக்கு பார்க்க; see ***eccil-akku-*** *2.* புண்படுத்தல்; to cause a sore, to injure. "இரும்பெச்சிற் படுத்த மார்பர்" *(சீவக.2353). 3.* கன்னிமை கெடுதல்; to deprive a damsel of her virginity, either by force or with her consent (W.).

எச்சு–தல் ***eccu-,*** 5. செ.குன்றாவி. (v.t.) வணங்குதல்; to worship. "பெருமானையெச்சமடியார்கட் கில்லை யிடர் தானே". *(தேவா.410.10).*

எஞ்சலி–த்தல் eñjali-, 4. செ.குன்றாவி. (v.t.) எஞ்சல், குறைவு செய்தல்; to bring discredit upon, to cause degradation, as of a person; to cause discomfiture. "படைக்கடலா லமரேசனையெஞ்சலித்திட" *(ஞானவா.தாமவியாள. 21)*

எஞ்சிநில்(ற்)–த(ற)ல் ***eñji-nil-,*** 14. செ.கு.வி.(v.i.) *1.* தொக்கு நிற்றல்; to be elliptical, as a word. "சொல்லென்னும் முதனிலை மாத்திரை தன்னுள்ளேயே எஞ்சி நிற்றலல்லது" *(தொல். சொல். 441. உரை). 2.* ஒழிந்து நிற்றல்; to remain, to be left. உணர்த்துதற்கு இடமின்றி எஞ்சிநின்ற சொல்லிலக்கணங்களை. *(தொல். சொல். 397. உரை).*

எஞ்சு[1]–தல் ***eñju-,*** 15. செ.கு.வி.(v.i.) *1.* குறைதல்; to lack, diminish, to be deficient. "எஞ்சா வின்னருணுண்டுளி கொள்ள" *(திருவாச.3, 76) 2.* கெடுதல்; to be spoiled, injured, marred. "வகையெழில் வனப்பெஞ்ச" *(கலித். 17.13) 3.* ஒழிதல் *(குறள்.382)*; to cease. *4. (இலக்.)* தொக்குநிற்றல்; to be elliptical, as a world-to. "சொல்லளவல்ல தெஞ்சு தலின்றே" *(தொல்.சொல். 441). 5.* செய்யாதொழிதல்; to refrain. "இறுதி பயப்பினும் எஞ்சாது" *(குறள். 690).*

எஞ்சு[2]–தல் ***eñju-,*** 15.செ.கு.வி.(v.i.) *1.* மீதியாதல்; to remain, to be left behind, to survive. "எஞ்சினாரிவ்வுலகத்தில்" *(நாலடி.21) 2.* கடத்தல்; to transgress, go beyond, overstep. "இரக்குவாரேனெஞ்சிக் கூறேன்" *(பதிற்றுப்.61.11).*

எஞ்சு[3]–தல் ***eñju-,*** 5. செ.குன்றாவி.(v.t.) தனக்குப்பின் உரிமையாக வைத்தல்; to leave behind, as to one's heir. "நின் பெருஞ்செல்வம் யார்க்கெஞ்சுவையே" *(புறநா.213).*

எட்டு[1]–தல் eṭṭu-, 5. செ.கு.வி.(v.i.) *1.* ஒன்றையடைய நெருங்குதல்; to reach up to. " பிறையையெட்டினள் பிடித்து" *(கம்பரா. சித்திர. 22). 2.* கிட்டுதல்; to come within reach, approach. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை. *3.* அகப்படுதல்; to be attained, realised, gained. "முன்னம் பலர்... முடிவுதேடவு மெட்டா" *(பாரத. அருச்சுனன்றீர்.18) 4.* புலப்படுதல்; to be with mental grasp, within the powers of comprehension. "எண்ணுதற்கெட்டாவெழிலார் கழலிறைஞ்சி" *(திருவாச.1.22). 5.* நீர் கழுத்துக்கு மேற்படாதிருத்தல் *(யாழ்ப்.)*; to be so shallow, as water, as not to submerge one. *6.* தாவிப் பாய்தல்; to spring, leap up or forward. "எட்டின வயவரியென" *(இரகு. திக்குவி.89). 7.* விலகுதல்; to go out of reach, move away from. "எட்டியன்ன மிரிந்துபறக்க" *(அரிச்.பு.நாட்டு.51.) 8.* நீளம் போதியதாதல்; to be sufficient in length so as to reach, as a rope, the water in a well. கிணற்றுக்கு இந்தக் கயிறு எட்டாது.

ம். எட்டு. க. எண்டு.

எடு[1]–த்தல் eḍu-, 4. செ.கு.வி.(v.i.) *1.* உயர்த்துதல்; to take up, raise. "பாண்டிலெடுத்த பஃறாமரை *(திருக்கோ.249). 2.* தூக்கிப் பிடித்தல்; to hold up எடுக்கப்பட்ட குடைநிழலிலே *(கலித்.9.உரை) 3.* மேற்கொள்ளுதல்; to undertake, take in hand. அந்தச்செயலை எடுத்திருக்கிறேன். *4.* திரட்டுதல்; to recruit "சிலசேனையெடுத்தெழுதிக் கொள்கென்றான்" *(திருவிளை. மெய்க்கா.5). 5.* தெரிந்தெடுத்தல்; to select, choose. "எடுத்தணி கையேறினவளையார்ப்ப *(திருக்கோ.352) 6.* விலைக்கு வாங்குதல்; to buy as in a bazaar, to purchase as in auction. *7.* நீக்குதல்; to remove, take off வண்ணான் ஆடையிலழுக்கெடுப்பான். *8.* வாயுட்கொள்ளுதல்; to take into the mouth, as fish the bait. "தூண்டிலெடுத்த வரால்" *(திருக்கோ. 249). 9.* எடுத்து வளர்த்தல்; to bring up. "ஆண்டி லெடுத்தவரா மிவர்" *(திருக்கோ.249). 10.* வாயிலெடுத்தல்; to vomit. சாப்பிட்ட தெல்லாம் எடுத்துவிட்டான். *11.* தனக்கென எடுத்துக் கொள்ளுதல்; to take to one's self.

ம்.எடுக்குக; க.எத்து, எர்பு; தெ., பட. எத்து; எரு. யெடுசு; கோத. எட்வ; துட. ஓட்; குட. எடி., எடிப்; து. எர்புனி; கொலா. எத்; நா. எத்த; பர். எதிப்; கோண். அத்தானா; குரு. யெத்த; பிரா. கேபிங்.

எடு[2]–த்தல் eḍu-, 4. செ.குன்றாவி. (v.t.) சுமத்தல்; to bear, carry, hold. "நிலனெடுக்கல்லாவொண்பல் வெறுக்கை" *(மதுரைக்.215) 2.* நிறுத்துதல்; to weigh (in a balance). *3.* உண்டாக்குதல்; to produce, cause. "கௌவை யெடுப்பவள்போல்" *(கலித். 109) 4.* கட்டுதல்; to build, raise up, as a wall. "உதிரநீராற் சுவரெடுத்து" *(தேவா.838).*

ம். எடுக்குக; கூ. எத (குழந்தையை இடுப்பில் வைத்தல்): குவி. எதலி, தெகலி (தோளில்

வைத்துத்தூக்குதல்).

எடு[3]–த்தல் eḍutteṟi-, 2. செ.குன்றாவி. (v.t.) 1. உரைத்துச் சொல்லுதல்; to utter in high pitch of voice."எடுத்தல் படுத்தனிதலுழப்பின்" (நான்.88).2.குரலெடுத்துப்பாடுதல்; to sing in a loud voice."கொடிச்சிய ரெடுத்தவின்குறிஞ்சி" (கம்பரா. சித்திர. 24). 3. மேம்படுத்துரைத்தல்; to speak highly. "மழைதரு மிவளென.... நங்கையை யெடுத்தாலும்" (மணி.22, 94). 4. எடுத்துக்காட்டுதல்; to adduce,as an argument. உண்மையை யெடுத்துச் சொன்னான். 5. குறிப் பிடுதல்; to bring in, introduce, as one's name. அவன் பெயரையெடுத்தால் பொங்கிக் கொண்டு வருகிறது.

எடுத்துக்கொள்(ளு)–தல் eḍuttu-k-koḷ-, 13. செ.குன்றாவி. (v.t.) 1. ஏற்றுக்கொள்ளுதல்; to accept, admit, approve. 2. தூக்கிக் கொள்ளுதல்; to take up. குழந்தையை எடுத்துக்கொள். 3. தத்தெடுத்தல்; to adopt as a child. அந்தப் பணக்காரர் ஒரு பிள்ளையை எடுத்துக் கொண்டிருக்கிறார். 4. இறப்பு வாயிலாகக் கடவுள் அழைத்துக் கொள்ளுதல்; (Chr.) to take into Himself by death, as god. என் பிள்ளையைக் கர்த்தர் எடுத்துக் கொண்டார். (இ.வ.).

தெ. எத்து கொனு.

எடுத்தெறி–தல் eḍutteṟi-, 2. செ.குன்றாவி. (v.t.) 1. பறை முழக்குதல்; to beat, as a drum. 2. பொருட்படுத்தாமை; to disregard one's advice or commands. நான் சொன்னதை அவன் எடுத் தெறிந்து விட்டான். (உ.வ.).

ம. எடுத்தெறியுக.

எடுப்பு–தல் eḍuppu-, 5. செ.குன்றாவி. (V.t) 1.துயிலெழுப்புதல்; to awake, rouse from sleep. "ஊர்துயி லெடுப்பி" (சிலப்.4.79) 2. இசை யெழுப் புதல்; to raise, produce, as harmonious sounds from an instrument. "மகரவீணைத் தெள்விளியெடுப்பி" (சீவக.608). 3. போக்குதல்; to dispel, drive away, banish. "அரவம் வந்தெடுப்புமே" (கலித்.70).

எடுபடு[1]–தல் eḍu-paḍu-,20. செ.கு.வி.(v.i.) 1. நீக்கப்படுதல்; to be taken out, be abolished. 2. நிலைபெயர்தல் (வின்.); to be detached, displaced, dislodged. குடியெல்லாம் எடுபட்டுப் போயிற்று (இ.வ.). 3. அதிர்தல்; to be stirred. அவள் பேச்சினால் அயலெல்லாம் எடுபடுகின்றது. (இ.வ.) 4. வழக்கில் தோற்றுப் போதல்; to be overcome in argument, refuted. உன்னால் நான் எடுபட்டுப் போவேனோ? 5. விற்றழிதல்; to be spent, sold out. வந்த சரக்கெல்லாம் எடுபட்டுவிட்டன. 6. கைக் கொள்ளப்படுதல்; to be taken over. வண்டியி லிருந்து சரக்கெல்லாம் எடுபட்டு விட்டன. 7. மேம்படுதல்; to be exalted or elevated. அவன் பணத்தினால் எடுபடுகிறான். (இ.வ.).

ம. எடுபெடுக; தெ. எடுபடு (பிரித்தல்).

எடைகட்டு[1]–தல் eḍaikaṭṭu-,5. செ.கு.வி.(v.i.)1.பாலில் நீர்சேர்த்தல்; to dilute milk with water இன்று பாலில் எவ்வளவு எடைகட்டப் போகிறீர் (மதுரை .வ.).

எண்ணங்குலை–தல் eṇṇaṇ-kulai-, 4. செ.கு.வி.(v.i.) 1. மனம் கலங்குதல் (வின்.); to be perplexed in mind. 2. எண்ணம் வீணாதல்; to be disconcerted in a plan, thwarted in one's expectation. 3.மதிப்புக் கெடுதல் (வின்.); to lose reputation.

எண்ணப்படு–தல் eṇṇa-p-paḍu-, 20.செ.கு.வி. (v.i.) 1. கணிக்கப்படுதல்; to be counted, reckoned. 2. மதிக்கப்படுதல்; to be esteemed, respected.

ம. எண்ணப்பெடுக.

எண்ணிடு–தல் eṇ-ṇ-idu-, 18.செ.குன்றாவி. (v.t.) 1. கணக்கிடுதல்; to count, calculate. 2. வரிசையில் எண் குறித்தல்; to allot a number in a series.

எண்ணு–தல் eṇṇu-, 12.செ. குன்றாவி. (v.t.) 1. நினைத்தல் (பிங்.); to think, to ruminate. 2. ஆராய்தல்; to consider, ponder on, weigh mentally. "எண்ணித் துணிக கருமம்" (குறள்.467). 3. தீர்மானித்தல் (பிங்.); to resolve upon, decide, determine. 4. மதித்தல்; to esteem, respect. "வெயிலோன் மகற்கு முடனெண்ணத்தகுந் திறலினான்" (பாரத.பதினெட்.4) 5. உன்னித்தல்; to guess, conjecture, surmise. 6. வழிபடல்; to meditate upon. "எண்ணி யஞ்செழுத்து மாறி" (சிவப்பிர. உண்மை.47). 7. கணக்கிடுதல்; to count, reckon. "அன்ன கேள்வ ரனேகரை யெண்ணினான்" (உபதேசகா.அயமுகி.59) 8. மதிப்பிடுதல்; to value. "எண்ணற்கரிய முடிவேந்தர்" (பாரத. இராச. 32). 9. துய்த்தல்; to enjoy. "எண்ணான் சிவனசத்தை" (சி.போ. 5.2.1.).

ம. எண்ணுக; க. எண்ணு, எணிகெ; துட. ஒண்; குட. எண்ண்; து. எண்ணுனி; தெ. என்னு; பர். எச சாச்; குவி. எசிகீனை; கூ. இன்பெ; நா. யன்னேர்; குர. ஆன்னா.

எண்பி–த்தல் eṇbi-, 4. செ.குன்றாவி. (v.t.) மெய்ப்பித்தல் (யாழ்ப்); to prove, show, substantiate.

மறுவ. மூதலித்தல், மெய்ப்பித்தல், நிறுவுதல்

தெ. எனிபின்சு.

எத்து[1]–தல் *ettu,* 5.செ.குன்றாவி (v.t.) ஏய்த்தல், ஏமாற்றல்; to inveigle, lure, cheat, seduce, defraud."நேசித் தாரையு மெத்தி வடிப்பவர்" (திருப்பு,403).

எதிர்[1]–தல் *edir-,* 4.செ.கு.வி. (v.i.) 1. தோன்றுதல்; to appear. "எதிர்நலப் பூங்கொடி" (சீவக.2115). 2. நிகழ்தல்; to happen, befall. "இனி யெதிராசன்மங்கள்" (அஷ்டப் நூற்றெட்காப்பு 3) 3. முன்னாதல்; to precede.

"பனியெதிர் பருவமும்" (தொல். பொருள்.7) 4. மலர்தல் (திவா.) ; to blossom. 5. மாறுபடுதல்; to be opposed, be at variance. "செய்வினைக் கெதிர்ந்த தெவ்வர் தேவத்து" (புறநா.6.11) 6. எதிர்காலத்து வருதல்; to come to pass in future. "எதிர்வநல்லவல்லவையடாது" (இரகு. குறைகூ.1) 7. தம்மிற் கூடுதல்; to joint together. "போரெதிர்ந்தேற்றார்" (பரிபா.18.1) 8. அறம் செய்தல்; to be hospitable. "துறவோர்க்கெதிர்தலும்" (சிலப்.16,72). - 4. செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்த்தல்; to oppose, confront. "விண்ணுளோர் எதிர்ந்த போதும்" (பாரத.சூத.21). 2. பெறுதல்; to receive. "சென்றுபயனெதிர" (தொல். பொருள்.91) 3. கொடுத்தல்; to give. "உலகெல்லா மெதிரும் பலியுணவாகவும்" (தேவா.1025.4). 4. சந்தித்தல்; to meet. "தானினி தெதிர்ந்த தானத் தருகே." (பெருங். மகத. 8.38) 5. பொருந்துதல்; to rest on, hover over, as clouds. "காரெதிரிய கடற்றானை," (பு.வெ.4.10) 6. ஏற்றுக்கொள்ளுதல்; to accept, submit to. "அடியடைந்தேவலெதிராது" (பு.வெ.6.32).

ம. எதிருசு; க. எதிரிக; தெ. எதிரின்சு.

எதிர்[2]–த்தல் *edir-*, 4.செ.குன்றாவி. (v.t.) 1. இகலித் தாக்குதல்; to encounter, oppose, withstand, resist. "இத்திறமாகிய படையோடெப்படி நாஞ்சிற் படைகொண் டெதிர்ப்பதென்றான்" (பாரத. பதினெட்.15). 2. தடுத்தல்; to prevent, hinder.

ம. எதிர்க்குக; க. இதிர், இதரு, இதுரு, எதரு, எதிர், எதுர்; கோத. எத்ய்ர்; து. எதுரு; தெ. எதுரு.

எதிர்நில்[1]–தல் *edirnil-*, 14.செ.கு.வி. (v.i.) 1. மாறுபட்டு நிற்றல் (வின்.); to be perverse contumacious. 2. முன்னிற்றல்; to stand before. "காகமானவை..... ஒரு கல்லின்முன் னெதிர் நிற்குமோ"(தாயு. எங்கு. 6).

எதிர்படு[1]–தல் edir-p-paḍu-, 20.செ.கு.வி. (v.i.) முன்தோன்றுதல்; to appear."ஈசனெதிர்ப்படு மாடியிலே" (திருவாச. 49,3) - 18. செ. குன்றாவி. (v.t.) சந்தித்தல்; to meet, encounter. "எதிர்ப்பட்டாற் பின்னை விடுமே விறல்மீன்" (பாரத. பதினேழாம். 143).

ம. எதர்பெடுக; க. எதுருபீளு; து. எதுரு; தெ. எதுருபடு.

எதிர்பார்–த்தல் *edir-pār-*, 4. செ.குன்றாவி. (v.t.) 1. ஒன்றை நோக்கிக் காத்திருத்தல்; to expect, look forward to envisage 2. வரவு பார்த்திருத்தல்; to await, the arrival, as one expected. 3. பிறருதவி நோக்குதல்; to look up to others for help. அவன் பிறர் கையை எதிர் பார்பவன். (உ.வ.)

ம. எதிர்நோக்குக; க. எதுருதோடு.

எதிரிடு–தல் edir-iḍu-, 18.செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்ப் படுதல்; to meet, encounter. 2. எதிர்த்தல்; to oppose in battle. 3. மாறுபடுதல்; to be opposed; to be at variance. 'அனந்தர க்ஷணத்திலே எதிரிடா நிற்பார்கள்' (ஈடு.1.3.10.).

ம. எதிரிடுக; க. எதுரிசு, எதுரிடு; தெ. எதிரின்சு.

எதிருரை–த்தல் *edir-urai*, 4.செ.குன்றாவி. (v.t.) எதிர்த்துப் பேசுதல்; to oppose, contradict, speak against – 4. செ.கு.வி. (v.i.) பொருதற்குறுதியாய் எதிர்நிற்றல்; to take a firm; stand for making an attack. "சேனையுடன் மீண்டு மெதிரூன்றாமல்" (பாரத.பதினேழாம்.163).

எதிரெடு–த்தல் edir-eḍu, 4.செ.குன்றாவி. (v.t.) 1. வாயா லெடுத்தல்; to vomit. "குமட்டி யெதிரேயெடுக்கும்" (மீனாட்.பிள்ளை.காப்பு.6).

எதிரொலி–த்தல் *edir-oli-*, 4.செ.கு.வி.(v.i.) மாறி ஒலி செய்தல்; to echo, reverberate. "நீடுகுன்றெதிரொலிக்கவே" (பாரத. வேத்திர.10).

எந்திரி[1]–த்தல் *endiri-*, 4.செ.கு.வி. (v.i.) மந்திரச் சக்கரம் வரைதல்; to draw a mystical diagram. "எந்திரித்த விருக்கைதனில்" (கந்தபு. சிங்கமு. 228).

எம்பு–தல் *embu-*, 7.செ.கு.வி. (v.i.) மேலெழுதல் அல்லது துள்ளுதல்; to rise, spring up. ஓர் எம்பு எம்பினான் (கொ.வ.).

எய்[1]–தல் *ey-*, 1. செ.குன்றாவி. (v.t.) அம்பெய்தல்; to discharge arrows. "மின்னுங்கணையாலிவனெய் திட" (பாரத.சம்பவ.49).

ம. எய்யுக; க. ஏய், எசெ; இக. எச்செ, எசு; கோத. எய், இய், இசிவ், இச்; துட. எவ்; து. எய்யுளி, ஈபுளி; தெ. ஏயு, எகுசு; பர். எய், எய்க்; கோண். எசுனா; குரு. இன்சனி; மால். இன்கெ.

எய்[2]–த்தல் *ey-*, 1. செ.கு.வி. (v.i.) 1. இளைத்தல்; to grow weary by exertion; to fall on strength as in battle; to flag as from want of food. "எய்த்த மெய்யெ னெய்யேனாகி" (பொருந.68). 2. மெய் வருந்துதல்; to take pains, exert onself. "எய்யாமை யெல்லாவறமுந் தரும்" (குறள்.296). 3. குறைவுறுதல் ; to be deficient. "எய்த்தெழு பிறையினை வளைவின்றாகநேர் வைத்துளதெனின்" (இரகு. யாகப்.8). 1. செ.குன்றாவி. (v.t.) அறிதல்; to know, understand. நொந்தவென் றெய்த்தடிச் சிலம்பிரங்கும். (சீவக.2683). 2. மெலிதல்; to grow weak and thin for want of food.

எய்து–தல் *eydu-*, 10. செ.கு.வி. (v.i.) 1. அணுகுதல்; to approach. "நெடியோ யெய்த வந்தனம்" (புறநா.10). 2. அடைதல்; to obtain, attain. "ஏமவைகலெய்தின்றாலுலகே" (குறுந். கடவுள்.வாழ்த்து.) 3. சேர்தல்; to reach, as a place."தூநிறக் கங்கையாள் சூழலெய்தினான்." (பாரத. குருகுல. 34). 4.பணிதல்; reverse, surrender. "இளங் கொடியே யெய்தும்" (தஞ்சையா.386). 5. நீங்குதல்; to leave, depart. "எய்தலில்லாத்திருவின்" (தஞ்சைவா.386). - 10.செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்; to be adapted, be suitable. "காலத்தோடெய்தவுணர்ந்து செயல்"

(குறள்.516). 2. நிகழ்தல், தோ்தல்; to happen, occur. "*எட்டி குமர னெய்திய துரைப்போன்*" *(மணி.4.64). 3. உண்டாதல்*; to appear, become, crop up. "*மாசெனக் கெய்தவும்*" *(கம்பரா.சிறப்.6). 4. போதியதாதல்*; to be sufficient, adequate. "*சுனைவாய்ச் சிறுநீரை யெய்தாதென் றெண்ணி*" *(ஐந்.ஐம்.38).*

ம. எய்துக; க. அய்து; துட. இச்; குட. எத்த; து. எத்தாவுணி, எத்தாடுனி; தெ. எயிது, எது; கொலா. எந்த்; பர். ஏத், ஏய், எயிபிப்; கோண். எனாவா; கூ. எப; குவி. எசலி.

எரி[1]–தல் *eri-*, 4.செ.கு.வி.(v.i.) *1. தீமூளல், சொலித்தல்*; to flame, ignite. "*எரியுந் தீயோடு*" *(திவ்.திருவாய்.3,6,5) 2. ஒளிர்தல்*; to glow, shine. "*எரியுஞ் செம்பொன் மணிமுடி*" *(சூளா.மந்தி.6). 3. எரிச்சலுண்டாதல்*; to burn, as a sore, as fever, to smart, to suffer pain; to feel pangs, as the stomach from hunger. *கண்ணெரிகின்றது (உ.வ.). 4. பொறாமை கொள்ளுதல்*; to be envious, jealous. *அவனைப் பார்த்து இவன் வயிறு எரிகிறான் (உ.வ.). 5. மனம் வருந்துதல்*; to experience a painful emotion. *அதைப் பார்க்கும்போது மனம் எரிகிறது. 6. சினம் கொள்ளுதல்*; to be angry, indignant. *எரிந்து விழாதே (உ.வ.) 7. முதிர்தல்*; to become old. "*எரிகின்ற மூப்பினாலும்*" *(கம்பரா. மருந்து.17). 8. மிகுதல்*; to go on increasing.

ம. எரி; க. உரி; குட. எரி; து. எரி; தெ. ஏர்பு; கோண். அர்சி, எரக (சுரம்); கூ. ஏர்ப.

எரி[2]–த்தல் *eri-*, 4. செ.குன்றாவி. (v.i.) *1. தீயால் வெந்தழியச் செய்தல்*; to burn, consume by fire, scorch. "*புரமூன் றெரித்தவா*" *(திருவாச.13,6). 2. விளக்கு, பந்தம் முதலியன எரிதல்*; to keep burning, as a lamp or torch. "*வீட்டுக்கெரித்த விளக்கு*" *(தமிழ்நா.237). 3. மருந்து முதலியன புடமிடுதல்*; to sublimate, calcine, as metals; to reduce to powder by fire for making medicine. *எரிமருந்து (இ.வ.) 4. அழற்றுதல்*; to inflame, as a sore; to cause to burn as poison. *அந்த மருந்து உடம்பை எரிக்கிறது. 5. செரிக்கச் செய்தல்*; to digest. *இந்த மருந்து உண்டதை யெல்லாம் எரிக்கும். (உ.வ.).*

தெ. எரியின்சு; ம. எரி; க. உரிசு.

எரியிடு–தல் eri-yiḍu-, 20. செ.கு.வி.(v.i.) *1. எரியவைத்தல்*; to cause to burn. *2. தீமூட்டுதல்*; to set fire.

எரியூட்டு–தல் eri-y-ūṭṭu-, 5. செ.குன்றாவி.(v.t.) *தீக் கொளுத்துதல்*; to set fire to. *இலங்கை யெரியூட்டு படலம் (கம்பரா.).*

ம. எரியிக்குக.

எருக்கட்டு[1]–தல் eru-k-kūṭṭu-, 5. செ.குன்றாவி.(v.t.) *1. கிடைவைத்தல்*; to fold sheep, herd cattle for manure, keep cattle panned in a field that they might manure it. 2. *சாணஞ்சேர்த்தல் (வின்.)*; to collect dung.

எருக்கு–தல் *erukku*, 5. செ.குன்றாவி. (v.i.) *1. கொல்லுதல்*; kill. *(திவா.). 2. வருத்துதல்*; to harass, trouble. "*படிறெருக்கி*" *(கலித். 81). 3. வெட்டுதல்*; to cut, hew. "*பைம்புத லெருக்கி*" *(முல்லைப். 25). 4. தாக்குதல்;* to beat "*வீதிதோறெருக்கி..... முரசறைந்த காலை*" *(சீவக.609). 5. அடித்தல்;* to strike as a bush. "*பகுவாய் ஞமலியொடு பைம்புதலெருக்கி*" *(பெரும்பாண்.112). 6. அழித்தல்* "*நாடுகெட வெருக்கி*" *(பதிற்றுப்.83.7). 7. சுமத்துதல் (வின்.)*; to lay a burden upon *(வன்.). 8. தாக்கி ஒலியெழச் செய்தல்* "*இன்னிசை முரச மியமர மெருக்க*" *(பெருங். நரவாண.6,63).*

எருகு–தல் *erugu-*, 7.செ.கு.வி.(v.i.) *மாடு கழிதல்*; to have loose motions, used with reference to cattle. *மாடு எருகியிருக்கிறது. (இ.வ.).*

ம. எருகுக; க. எரும்பு, எரு; தெ. எருகு; கொலா. எர்ங்கு; நா. எர்ங்கு; குரு. எர்கானா; மால். எர்கெ, எர்க்த்ரெ.

எருதடி–த்தல் erudaḍi-, 4.செ.குன்றாவி.(v.i.) *1. உழுதல்*; to plough. *2. சூடடித்தல்*; to thrash out grain by making cattle tread over the stalks.

எருபோடு–தல் eru-p-poḍu-, 20 .செ.கு.வி.(v.i.) *1. உரமிடுதல்*; to manure land. 2. *மாடு சாணமிடுதல்;* to pass excrement.

எருவடை–த்தல் eru-vaḍai-, 4.செ.கு.வி.(v.i.) *எருவுக்காக ஆடுமாடுகளை அடையச் செய்தல்*; to fold sheep, herd cattle for manure.

எல்லு–தல் *ellu-*, 13.செ.கு.வி.(v.i.) *ஒளிமங்குதல்*; to become dim as the sun. "*எல்லு மெல்லின்றுஞுமலியு மிளைத்தன*" *(குறுந்.179.).*

எல்லைக்கட்டு–தல் ellai-k-kaṭṭu-, 5.செ.குன்றாவி.(v.t.) *1. கட்டுப்படுத்துதல்*; to limit, restrain, circumscribe. *2. வரையறுத்தல்*; to determine, decide. *3. வழக்குத் தீர்த்தல்*; to settle matters of dispute.

எல்லைகட–த்தல் ellai-kaḍa-, 3.செ.கு.வி.(v.i.) *1. வரம்பு மீறுதல்*; to tresspass. *2. நேர்மை தவறுதல், எல்லை மீறுதல்*; to exceed limits, transgress. *3. அளவிறத்தல்*; to be beyond all measure.

எல்லைகுறி–த்தல் ellai-kuṟi-, 4.செ.கு.வி.(v.i.) *வரம்பு ஏற்படுத்துதல்*; to mark limits, set boundaries.

[*எல்லை + குறி*]

எல்லையோடு–தல் ellai-y-ōḍu-, 5.செ.கு.வி. (v.i.) *எல்லை யைச் சுற்றிவருதல்(வின்)*; to march around the bounds of a village or distirct, a religious ceremony performed by some of the Hindu sects.

எவ்வு[1]–தல் *evvu-*, 5. செ.குன்றாவி. (v.t.) *செலுத்துதல்*; to discharge, as a missile or an arrow.

எவ்வு[2]–தல் *evvu-*, 5. செ.கு.வி. (v.i.) *எழும்புதல்*; to rise, spring up."*தீக்கணை மேருவைக் கால்வளைத் தெவ்வினான்*"

(கம்பரா. ஊர்தே. 177).

எழில்காட்டு–தல் eḻil-kāṭṭu-, 5. செ.கு.வி.(v.i.) குறிப்புக் காட்டுதல் *(வின்.)*; to give an inkling to hint.

எழில்சொல்லு–தல் *eḻil-collu-,* 8. செ.குன்றாவி. (v.t.) குறிப்பிற் சொல்லுதல் *(வின்)*; to hint by words, allude to. *(செ.அக.).*

எழில்பிடி–த்தல்eḻil-pḍi-,4. செ.குன்றாவி. (v.t.) நறுமணத்தால் கவரப்படுதல் *(யாழ்.அக.)*; to be attracted by smell. *(யாழ். அக.) (செ.அக.).*

எழு–தல் eḻu-, 2. செ.கு.வி.(v.i.) *1.* எழுந்திருத்தல்; to rise, as from a seat or bed. *2.* மேல் எழும்புதல்; to ascend, as a heavenly body; to rise by one's own power, as a bird; to ascend, by buoyancy, as a balloon. *3.* தோன்றுதல்; to appear, arise, originate. "அமிழ்தெழக்கடைமின்" *(கம்பரா. அகலி.21). 4.* புறப்படுதல்; start, as from a dwelling. "எம்பெரு முதல்வ நீயெழுதியால்" *(கந்தப. சரவண.4) 5.* தொழிலுறுதல்; to function. "காலுமெழா" *(திவ். பெரியாழ்.5,3,5) 6.* மனங்கிளர்தல்; to be excited, roused. "ஒள்வாட்டானையுருத்தெழுந்தன்று" *(பு.வெ.3.2). 7.* மிகுதல்; to increase, swell. "எழு மரவக் கடற்றானையான்" *(பு.வெ7,6) 8.* வளர்தல்; to grow increase in stature, as a tree; to rise, as a building; to swell, as breasts. "எழுகிளை மகிழ்ந்து" *(சீவக.330). 9.* உயிர்பெற்றெழுதல்; to become resuscitated, return of life. "அந்நிலையெழும்வகையருள்செய்தானரோ" *(கந்தப.திருவிளை.78) 10.* துயிலெழுதல்; to awake. "அரியின் இனமெழுந்தன" *(கந்தப. குமார.59). 11.* பரவுதல்; to spread, as fame or rumour. "நாமத் தன்மை நன்கனம் படியெழ" *(பரிபா.15,25). 12.* தொடங்குதல்; begin, commence. "இன்னாமை வேண்டி னிரவெழுக" *(நான். மணி.17).*

ம. எழுக; *க.* எழ், ஏழ், ஏழு; *கோத.* எட்வி; *துட. நட்.*; *குட.* ஏள்; *து.* எர்குனி; *தெ.* எக்குட, லேச்சு; *கொலா.* லெசு; *நா.* லேப்; *மால்.* இலெ; *பட.* எல்லு.

எழுத்திடு–தல் eḻuttiḍu, 20. செ.கு.வி. (v.i.) கைச் சாத்திடுதல்; to put one's signature. "எழுத்திட்டுத் தாருங்கோள்" *(ஈடு.5,10,4).*

எழுதிக்கொடு–த்தல் eḻudi-k-koḍu-, 4. செ.குன்றாவி.(v.t.) எழுத்து மூலமாகத் துணை செய்தல் *(ஆதரவு கொடுத்தல்)*; to grant in writing, to write and deliver, as a voucher, an agreement a contract."திருக் கண்களுக்காயிற்று அநந்யார்கமாக எழுதிக் கொடுத்தது" *(ஈடு.7.3.3,).*

எழுது–தல் eluḍu-, 5. செ.குன்றாவி.(v.t.) *1.* ஓவியம் வரைதல்; to paint, draw. "எழுதுங்காற் கோல் காணாக் கண்ணேபோல்" *(குறள்.1285.). 2.* பாவைமுதலியன செய்வித்தல்; to produce by art, to sculpture, as an image. *3.* எழுத்துவரைதல்; to write. *4.* இயற்றுதல்; to write as author, to compose. அவன் ஒரு நூல் எழுதியுள்ளான். *5.* நெறியேற்படுத்தல்; to foreordain, presdestine as Brahmā by writing on the head. "இட்டமுடனென்றலையி லின்னபடி யென்றெழுதி விட்ட சிவனும்" *(தனிப்பா. 1.119.1).*

ம. எழுதுக; *கோத.* எள்தி; *குட.* எளித்.

எழுந்தருள்(ளு)–தல் eḻundaṟuḷ-, 15. செ.கு.வி.(v.i.) *1.* வருதல்; to come; arrive. "எங்கு நின்றி வண்மற்றெழுந்தருளியது" *(பாரத.நாடுகரந்.12) 2.* புறப்படுதல்; to go forth, start. "வினதைமுன் பயந்த யானமீதெழுந்தருளி வந்து" *(பாரத. குருகுல.30). 3.* ஆவியுள்ளுறுத்தல். *(வின்)*; to take abode, as a deity in an idol on consecration.

ம. எழுந்நருளுக.

எழுந்திரு–த்தல் eḻunḍiru-,3. செ.கு.வி.(v.i.) எழுதல்; to rise from one's seat, to get up. "முனிவரெல்லாம் வந்தபோது மன்னவ னெழுந்திருந்து" *(அரிச்பு: விவா.37).*

எழுப்பு[1]–தல் eḻuppu-, 5. செ.குன்றாவி.(v.t.) *1.* எழும்பச் செய்தல்; to cause or help to rise, to erect, as a building. *2.* துயிலெழுப்புதல்; to awake, rouse. "நாளை நானேயெழுப்புவனென்றலும்" *(திருவாச.7,6). 3.* உயிர்பெற்றெழச் செய்தல்;to raise from the dead, resuscitate, restore of life. "மெய்க்குக னெழுப்பு தலும்" *(கந்தப.திருவிளை.79). 4.* ஊக்கமுண்டாக்குதல்; to excite, stimulate, inspire. 5. கலகமுதலியன மூட்டுதல்; to instigate, to inflame, as the passions. *6.* ஓசையெழுப்புதல்; to raise, as the voice in speaking or singing; to call forth, as melody; from an instrument. "சங்குக ளெழுப்பிய நாதம்" *(பாரத.பதினெட்.24).*

எழுவு–தல் eḍuvu, 5. செ.குன்றாவி. (v.t.) *1.* எழச்செய்தல்; to cause to rise, raise. "எழுவுஞ் சீப்பு" *(சிலப்.15,215). 2.* ஓசையெழுப்புதல்; to produce or call forth sound. "எழுவும் முரசு" *(சூளா. கலியாண. 248) 3.* இசைக் கருவியினின்று ஒலியெழச் செய்தல்; to produce musical note. சாத்தியாழெழூஉம் *(சேனா.உரை).*

எள்கு[1]–தல் eḷgu-, 5. செ.குன்றாவி. (v.t.) *1.* இகழ்தல்; to despise, slight. "எள்கலின்றி... ஈசனைவழிபாடு செய்வாள்" *(தேவா.1049.10). 2.* அஞ்சுதல் "எண்டிசை யோரு மெள்க" *(சீவக.1749). 3.* ஏய்த்தல்; to diceive. "ஓர் பாலகன்வந் தென்மகளை யெள்கி" *(திவ். பெரியாழ்.3,7,4). 7.* செ.கு.வி. (v.i.) *1.* கூசுதல்; to be beshful, to hesitate. "பழிவந்து மூடுமென்றெள்குதுமே *(திருக்கோ.92)*." *2.* வருந்துதல்; to be in difficulty. "செங்களம் பற்றி நின்றெள்குபுன்மாலை" *(திவ். இயற்.திருவிருத்.77).*

எள்ளு[1]–தல் eḷḷu-, 6. செ.குன்றாவி.(v.t.) *1.* இகழ்தல்; to ignore, disregard. "உருவுகண்டெள்ளாமை வேண்டும்" *(குறள்.667). 2.* இகழ்ந்து நகைத்தல் *(திவா.)*; to ridicule, deride, laugh at. *3.* ஒப்பாதல்; to be equal, similar. எழிலிவான மெள்ளினன் றரூஉம். *(தொல். பொருள். 289.உரை).*

ம. எள்ளுக.

எளி[1]–தல் eḷi-, 4. *செ.கு.வி.(v.i.) எளிமையடைதல்*; to become feeble, low spirited. "*பொருதிறல் வன்மைய திலனாயெளிந்தான்*" *(கந்தபு.அக்கினிமுகா.90).*

எளி[2]–த்தல் eḷi-, 2. *செ.குன்றாவி.(v.t.) தாழ்த்திக் கூறுதல்*; to cry down, disparage. "*எளித்தலேத்தல்*" *(தொல்.பொருள்.207).*

எற்றி–த்தல் eṟṟi-, 4. *செ.கு.வி. (v.i.) இரங்குதல் (திவா.)*; to take pity, have compassion.

எற்று–தல் eṟṟu-, 5. *செ.குன்றாவி. (v.t.) 1. அடித்தல்*; to strike, cuff, hit with the fist. "*எற்றிய வயிற்றள்*" *(கம்பரா.மாரீசன்.63) 2. உதைத்தல்*; to kick. *3. மோதுதல்*; to butt, as an elephant, to dash against, as the waves of the sea. "*எற்று தெண்டிரை*" *(தேவா.92.2) 4. எறிதல்*; to throw out, as water from a vessel. *நீரெற்றும் மரம். 5. வெட்டுதல்*; to cut, cleave, rend. "*எற்றாமழுவும்*" *(கலித்.85). 6. குத்துதல் (திவா.)*; to pierce, stab. *7. கொல்லுதல் (திவா.)*; to kill. *8. நீக்குதல்*; to cast away, get rid of. "*எற்றுவமே பாசமெலாம் யாம்*" *(சைவச.பாயி.7) 9. நூல் தெறித்தல்*; to snap, as a carpenter's line for making a board. "*எற்று நூல்போன்று*" *(நைடத. சந்திரோ. 33) 10. எழுப்புதல் (திவா.)*; to raise.

ம. எற்றுக.

எறி[1]–தல் eṟi-, 2. *செ.குன்றாவி. (v.t.) வீசியெறிதல்*; throw, cast, fling, discharge, hurl. "*கல்லெறிந்தன்ன*" *(நாலடி.66). 2. வெட்டுதல்*; to hack, cut into pieces. "*எறிந்து களம்படுத்த வேந்துவேள்*" *(புறநா. 19.12). 3. அறுத்தல்*; to chop, as mutton. "*எறிகதிற்றி*" *(பதிற்றுப்.18.2). 4. முறித்தல்*; to shiver into pieces, smash. "*கதவெறியாச் சிவந்துரா அய்*" *(புறநா.4,10). 5. பறித்தல்*; to pick, as flowers. "*எறியார் பூங்கொன்றையினோடும்*" *(தேவா.189.5) 6. அழித்தல்*; to destroy. "*குறும்பெறிந்தன்று*" *(பு.வெ.1,8) 7. அடித்தல்*; to beat, as a drum. "*சிறுவரை நின்றே யெறிப பறையினை*" *(நாலடி.24) 8. அறைதல்*; to drive, as a nail. "*பொன்னெறிந்த நலங்கிளர் பலகையொடு*" *(புறநா.15). 9. கொடுக்காற் கொட்டுதல்*; to sting, as a scorpion. "*விடத்தேளெறிந்தாலேபோல*" *(திவ்.நாய்ச்.3,6). 10. ஒதுக்கிவிடுதல்*; to reject brush aside, as advice. *11. உண்ணாமல் நீக்கிவிடுதல்*; to leave uneaten, said of part of food. *ஏன் சோற்றை எறிகிறாய்? 12. ஓட்டுதல்*; to drive off, scare away, as birds from corn. "*கிளியைச் செப்பேந்திள முலையாளெறிசீபர்ப்பதம்*" *(தேவா.1148.7) 13. வெல்லுதல்*; to throw into the shade, outvie. "*மின்னெறிசெஞ்சடைக் கூத்தப்பிரான்*" *(திருக்கோ.49). 14. கொள்ளையிடுதல்*; to rob, plunder, sack, pillage. *15. பொழிதல்*; to shower, as rain. "*நீர் கல்குறைபட வெறிந்து*" *(பரிபா.20,1). 16. செறித்தல்*; to fasten as a ring on an elephant's tusk. "*யானைவான் மருப்பெறிந்த வெண்கடை*" *(புறநா.39,2) 17. நுகர்வித்தல்*; to cause to experience. "*எச்சத்துளாயினு மஃதெறியாது விடாதேகாண்*" *(கலித்.149). 18. சீறுதல்*; displease irritate, insult, "*எறிசொல்லாகச் சொல்லுகிறான் (வின்.) 19. தெறித்தல்*; to finger the string of a musical instrument as a yāḻ. "*குறுநரம் பெறிவுற்றெழுவு... யாழ்*" *(கம்பரா.சித்திர.28).*

எறி[2]–த்தல் eṟi-, 4. *செ.கு.வி.(v.i.) 1. ஒளி வீசுதல்*; to shine, to glitter. "*காட்டுக் கெறித்த நிலா*" *(தமிழ்நா. 237). 2. தைத்தல்*; to nail, fasten with nails, pin. "*மாண்டவெறித்த படைபோல்*" *(கலித்.94). 3. உறைத்தல்*; to irritate, suffocate, as smoke, to affect. "*வாடுக... நின்கண்ணி... நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே*" *(புறநா.6). 4. பரத்தல்*; to spread. "*உணர்வுசென்றெறித்தலானும்*" *(சீவக.380).*

ம. எறிக்குக.

என்பி[1]–த்தல் eṉbi-, 4. *செ.குன்றாவி.(v.t.) சொல்லச் செய்தல்*; to make one speak or prove, as a statement. *அதை அவன் வாயினாலே என்பிப்பேன் (யாழ்ப்.).*

தெ. அனிபின்சு.

என்பி[2]–த்தல் eṉbi-, 4. *செ.குன்றாவி.(v.t.) புகழ்பெறுதல்*; to cause to be known; to proclaim. "*என் சொல்லால் யான்சொன்ன இன்கவியென்பித்து*" *(திவ். திருவாய்.7,9,2).*

V

ஏக்கறு–தல் ēkkaṟu-, 4. *செ.கு.வி.(v.i.) 1. இளைத்து இடைதல்*; to suffer from weariness, to languish... "*கடைக்கணேக்கற*" *(சீவக.1622). 2. ஆசையால் தாழ்தல்*; to bow before superiors, as one seeking some favour at their hands. "*ஏக்கற்றுங் கற்றார்*" *(குறள்.395).*

தெ. ஏகரு

ஏக்கெறி[1]–தல் ēkkeṟi-, 2. *செ.கு.வி.* (v.i.) *கவலைநீங்குதல்*; to cast away care, get rid of anxiety.

ஏக்கெறி[2]–தல் ēkkeṟi, 2. *செ.கு.வி.* (v.i.) *அச்சமுறுதல்*; to be frightened. "*ஏக்கெறிந்துலகெங்கு மிரைத்திட*" *(இரகு.ஆற்று.3).*

ஏகு–தல் ēgu-, 7. *செ.கு.வி.* (v.i.) *1. போதல்*; to go, pass. "*தாய்த் தாய்க்கொண் டேகுமளித்திவ் வுலகு*" *(நாலடி.15). 2. நடத்தல் (பிங்.)*; to walk. *3. கழலுதல்*; to become loose, to slip off. "*நல்வளையேக*" *(பு.வெ.11,பெண்பாற்.12).*

ம., ஏகுக; தெ. ஏகு.

ஏங்கிப்போ–தல் ēṅgi-*p*-pō-, 8. *செ.கு.வி.* (v.i.) *ஏக்கம் பிடித்தல்*; to be in low spirits, to languish. *தாயைப் பிரிந்ததனால் குழந்தை ஏங்கிப் போயிற்று. (உ.வ.)*

ஏங்கு–தல் ēṅgu-, 7. *செ.கு.வி.* (v.i.) *1. ஒலித்தல்*; to sound, as a lute; to roar; to scream, as a peacock. *2. இளைத்தல்*; to pine, languish. "*தாழ்ந்து தளர்ந்தேங்கி*" *(சீவக.2012) 3. மனம் வாடுதல்*; to long for, yearn after.

"மக்கட்கென்றேங்கி" (நாலடி.130). 4. அழுதல்(சூடா.); to weep, cry, wail, sob. 5. அஞ்சுதல்; to be in fear, to be panic-stricken. "நேரலன் படையை நோக்கியேங்கினர்" (கந்தபு. சூரபன்.வதை.50) 6. இரங்கல்; it is said of a devotee whose mind is always longing for God, as in ... "ஏங்குதே நெஞ்சமையோ" (தாயுமான.), (செ.அக.).

க. ஏங்கு; பட. ஏங்கு; ம. ஏங்குக; கோத. ஏங்; தே. ஏக்கு, வெக்கு; பர். நேஞ்ஞு; கேண். நேசுகானா; கூ. நேஞ்ச; குரு. நாக்னா; மால். நகாயெ.

ஏசறு[1]–தல் ēsaru-, 4.செ.கு.வி.(v.i.) ஆசைப்படுதல்; to long for desire. "வரைத்தோள் கூடுதற் கேசற்ற கொம்பினை" (பதினொ.ஆளு.திருவந்.45).

ஏசறு[2]–தல் ēšaṟu-. 4.செ.குன்றாவி. (v.t.) 1. பழித்தல்; to blame, reproach. "ஏசறு மூரவர் கவ்வை" (திவ்.திருவாய்.5,3,1) 2. வருத்தமுறுதல்; to be troubled, to feel sorry.

ஏசு[1]–தல் ēšu-, 5. செ.குன்றாவி (v.t.) இகழ்தல்; to abuse, reproach, rail at, insult. "ஏசவெண்டலையிற் பலிகொள் வதிலாமையே" (தேவா.425.6).

தே. ஏகு.

ஏசு[2]–தல் ēsu-, 5. செ.குன்றாவி. (v.t.) செலுத்துதல்; to hurl, dart. "கொல்லம் பேசி" (தேவா. 380.6).

ஏடுகோ–த்தல் ēḍu-kō-, 4. செ.கு.வி. (v.i.) பனை யோலைகளினாலமைந்த பொத்தக விதழ்களைக் கயிற்றிற் கோத்தல்; to string together the leaves of a palmyra leaf-book.

ஏடுசேர்–த்தல் ēḍu-šēr-, 4.செ.கு.வி.(v.i.) பனையோலைகளை ஏடுகளாகச் சீவிப் பொத்தகமாக்குதல்; to make up a book of the strips of palmyra leaves.

ஏத்து–தல் ēttu-, 5. செ.குன்றாவி.(v.t.) 1. வாழ்த்துதல்; to bless. "பகைதவ நூறு வாயென... ஏத்தினாள்" (சீவக.324). 2. புகழ்கை; praising, extolling. "இழிப்பு மெடுத்தேத்தும்" (நாலடி.163).

ஏதலிடு–தல் ēdal-iḍu-, 20. செ.கு.வி.(v.i.) 1. பொறா மையோடு பேசுதல் (வின்.); to speak with envy. 2. எள்ளி உரையாடுதல்; mocking.

ஏதுப்பார்–த்தல் ēdu-p-pār-, 4.செ.கு.வி. (v.i.) நேரம் பார்த்தல் (வின்.); to wait for a suitable opportunity.

ஏந்து–தல் ēndu-, 5. செ.குன்றாவி. (v.t.) 1. உயரத் தூக்குதல்; to lift. 2. உயரத்தூக்கிப் பிடித்தல்; to hold a thing after lifting it. 3. கைநீட்டுதல்; to stretch out the hands. நீ தர நான் ஏந்தி வாங்கினேன், 4. கையிலெடுத்தல்; to receive in the hands நீரை ஏந்திப் பருகினான். 5. தாங்குதல்; to hold in the hands. "அங்குசபாசமேந்தி" (சூடா.). 6. சுமத்தல்; to support as a beam. உத்திரத்தைத் தூண் ஏந்தி நிற்கிறது.

ஏம்பு–தல் ēmbu-, 5.செ.கு.வி.(v.i.) 1. பெருகக் களிப்படைதல்; to rejoice, to be overjoyed. "மள்ள ரேம்பலோடார்க்கு மோதை" (கந்தபு. ஆற்று. 33).

ஏம்பு[2]–தல் ēmbu-, 5. செ.கு.வி. (v.i.) 1. வருந்துதல்; to suffer. "மத்திகை தாக்க வேம்பலுற்றனம்" (திருவிளை. பரிநரி.12). 2. மனங்கலங்குதல்; to be confused in mind.

ஏமரு[2]–தல் ēmaru-, 2.செ.கு.வி. (v.i.) திகைத்தல் (யாழ்.அக.); to be bewildered or perplexed.

ஏமா[1]–தல் ēmā-, 18. செ.கு.வி. (v.i.) 1. அரணாதல்; to be protected by, guarded by. "ஏமாப்ப முன்னேயயற்பகை தூண்டிவிடுத்து" (பழ.306). 2. ஆசைப்படுதல்; to desire. "அருந்தேமாந்த நெஞ்சம்" (புறநா.101). 3. இன்புறுதல்; to be exhilarated, be overjoyed, be in an ecstasy; to experience the highest delight. "காமர் நெஞ்ச மேமாந் துவப்ப" (புறநா.198,8). 4. செருக்குறுதல்; to feel proud to be highly elated. "இரங்கு நமக்கம்பலக் கூத்த னென்றென் றேமாந்திரப்பேனை" (திருவாச.21,7).

ஏமா[2]–த்தல் ēmā-, 18. செ.கு.வி. (v.i.) கலக்கமுறுதல்; to be distressed. "புணர்ந்தோர் நெஞ்சேமாப்ப வின்றுயிறுறந்து" (மதுரைக்.575).

ஏமா[3]–த்தல் ēmā-, 15.செ.குன்றாவி. (v.i) உறுதிப் படுத்துதல்; to be certain. "கனவென மருண்டவென்னெஞ் சேமாப்ப" (பொருந.98).

ஏமார்–த்தல் ēmār-, 15. செ.குன்றாவி. (v.t.) வலுப் படுத்துதல்; to strengthen, establish firmly, make secure. "சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல்" (குறள்.660).

ஏமாற்று–தல் ēmāṟṟu-, 5. செ.குன்றாவி. (v.t.) ஏய்த்தல்; to hoodwink, disappoint, deceive. "மகனுத் தியினாலவரை யேமாற்ற" (இராமநா. உயுத்த. 57).

ம. ஏமாற்றுக.

ஏமாறு–தல் ēmāṟu-, 2. செ.கு.வி. (v.i.) அலமருதல் (யாழ். அக.); to be confused, bewildered.

ஏமுறு–தல் ēmuṟu-, 13. செ.கு.வி. (v.i.) 1. மகிழ்வுறுதல்; to be delighted. "ஏமுறு விளையாட் டிறுதிக்கண்ணும்" (தொல்.பொருள்.147). 2. தன்மை திரிதல்; to be changed in nature or disposition. "ஏமுறு விரண்டு முளவென மொழிப" (தொல்.பொருள்.109). 3. காப்படைதல்; to be protected, saved. "எஞ்சிய பொருள்களை யேமுற நாடி" (திருமுருகு. 97). 4. பொருத்தமுறுதல்; to be suited, be appropriate. "காமமும் பொருளுமே முறத்தழுவி" (இலக்.வி.704).

ஏய்[1]–தல் ēy-, 4. செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்; to be suited. "ஏய்ந்த பேழ்வாய்" (திவ்.பெரியதி.1,7,3) 2. தருதல்; to be

fit. "*தில்லையூரனுக்கின் றேயாப்பழி*" *(திருக்கோ. 374).*

ஏய்²–த்தல் ēy-, *4. செ. குன்றாவி.* (v.t.) *1. பொருந்தச் சொல்லுதல்*; to tell a seeming truth. "*பொய்குறளை யேய்ப்பார்*" *(பழ.77) 2.* ஒத்தல்; to resemble, to be like, be similar to. "*அல்லிப் பாவை யாடுவனப் பேய்ப்ப*" *(புறநா. 33,17) 3. வஞ்சித்தல்*; to deceive cheat, defraud.

ம. ஏ.

ஏர்¹–தல் ēr-, செ.கு.வி. (v.i.) *எழுதல்*; to rise "*பனிக்கடல் பருகி வலனேர்பு*" *(முல்லை.4).*

ஏர்²–தல் ēr-, *2. செ.குன்றாவி.* (v.t.) *ஒத்தல்*; to be like, similar. "*முத்தேர் முறுவலார்*" *(இனி.நாற்.2).*

ஏர்கட்டு–தல் ēr-kaṭṭu-, *5.செ.கு.வி.* (v.i.) *நிலத்தில் உழவுமாட்டைப் பூட்டி உழத் தொடங்குவதல்*; to yoke the plough. *நல்ல அந்தியேர் கட்டுகிற நேரம்.(உ.வ.).*

ஏர்பூட்டு–தல் ēr-pūṭṭu-, *5.* செ.கு.வி. (v.i.) *ஏரில் மாடுகட்டுதல்*; to yoke the oxen to the plough. "*ஏர்பூட்டினல்லது*" *(ஏரெழு.17).*

ஏரோட்டு–தல் ēr-ōṭṭu-, *5.* செ. குன்றாவி. (v.t.) *உழுதல்*; to plough.

ஏலு–தல் ēlu-, *13.* செ.கு.வி. (v.i.) *1. நிகழ்தல்*; to happen, occur. *2. பொருந்துதல்*; to join, mingle. *3. செய்ய முடிதல்*; to be possible. *இது உன்னாற் செய்ய ஏலுமா.*

ம. ஏலுக,

ஏவு¹–தல் ēvu-, *8.* செ.குன்றாவி. (v.t.) *1. ஆணையிடுதல்*; to command, order, direct. *2. தூண்டிவிடுதல்*; to incite, prompt, urge, instigate, to conjure and set on, as a demon. *3. திருவருளால் தூண்டப்படுதல்*; chr. to inspire, as God. *ஆவியானவர் பவுலையேவினார் (கிறித்.). 4. செலுத்துதல் (பிங்.)*; to discharge, as an arrow, to throw, as a dart. *5.* சொல்லுதல்; to speak, say. "*ஏலாவிருந்த வடிகள்*" *(சீவக.3036).*

ம. ஏவுக; க. ஏசு.

ஏவுண்ணு–தல் ēvuṇṇu-, *12.* செ.கு.வி. (v.i.) *அம்பு தைத்தல்*; to be injured by an arrow. "*பகழியினேவுண்டு*" *(இறை.6. 64).*

ஏற்படு–தல் ēṟpaḍu-, *20.* செ.கு.வி. (v.i.) *1. உண்டாதல்*; to come into existence; to become formed, to be produced or created. *அந்த ஊர் அவனால் ஏற்பட்டது. 2. தலைப்படுதல் (யாழ்ப்)*; to be engaged in, to enter upon, as a business.*3. உடன்படுதல் (யாழ்ப்)*; to agree, consent, become a party to a contract.

ம. ஏர்ப்பெடுக; க. ஏர்படு; கோத. ஏர்பட்த; து. ஏர்படு, ஏபுண; தெ. ஏர்படு; பர். ஏப் (அடைதல்); கோண். ஏதானா (எடுத்தல்); கூ. ஏண்ப (வாங்குதல்).

ஏற்படுத்து–தல் ēṟpaḍuttu-, *5.* செ.குன்றாவி (v.t.) *1. உண்டுபண்ணுதல்*; to create, make, form, construct, establish. *அவன் அந்த ஊரை ஏற்படுத்தினவன். 2. இணங்கச்செய்தல்(யாழ்ப்)*; to persuade, prevail upon, induce.*3. நிறுவுதல்*; to find, as guilty or not guilty. *அவனைக் குற்றவாளியென்று ஏற்படுத்தினார்கள் (பே.வ.). 4. அமர்த்துதல்*; to ordain, appoint, assign, institute, put into office. *அவனை அச்செயலுக்குத் தலைவனாக ஏற்படுத்தினார்கள். 5.அணியப்படுத்துதல் (வின்.)*; to prepare, arrange, get ready.

ம. ஏர்ப்பெடுத்துக; க. ஏர்படிசு; தெ. ஏர்பரட்சு.

ஏற்பி–த்தல் ēṟpi-, *4.*செ.குன்றாவி. (v.t) *ஒப்படைத்தல் (இ.வ.)*; to entrust.

ம. ஏல்பிக்குக.

ஏற்றம்போடு–தல் ēṟṟam-pōḍu-, *20.*செ.கு.வி. (v.i.) *1. துலாமரம் அமைத்தல்*; to set a well sweep or picottah *2. தோப்புக்கரணம் போடுதல்*; to punish or humble one's self by taking hold of the right ear with the left hand and the left ear with the right hand and then raise and lower the body many times in quick succession.

ஏற்று–தல் ēṟṟu-, *5.* செ. குன்றாவி.(v.t.) *1. தூக்குதல்*; to lift up, raise, hoist *உத்தரத்தை ஏற்றினான். 2. மிகைப் படுத்துதல்*; *விலையை ஏற்றுதல்* to increase, as price. *3. சுமத்துதல்*; to load as a cart or ship; to impose as a responsibility. *4. ஏறச் செய்தல்*; to run over, a a wheel over a person. *காலில் வண்டியை ஏற்றிவிட்டான். 5. அடுக்குதல் (திவா.)*; to pile up, stow away, pack. *6. மேம்படுத்துதல்*; to eulogise, praise. "*ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்*" *(தொல். பொருள். 147). 7. குடியேற்றுதல்*; to colonize, populate, *கொண்டு வந்து ஏற்றின தளிச்சேரிப்பெண்டுகளுக்கும்* (S.I.I.iii,261) *8. நிலைநிறுத்தல்*; to found, establish "*நம் பெயரால் ஏற்றின வீரசோழன் திருமடை விளாகத்தில்*" (S.I.I.iii,47). *9. உட்செலுத்துதல்*; to put in, cause to enter, insert, to drive in, as a nail. *நகத்தில் ஊசியை ஏற்றினான். 10. மேற்செலுத்துதல்*; to ascribe, foist upon. *தன் குற்றத்தை அவன் மேலேற்றினான். 11. ஏற்றுமதி செய்தல்*; to export. *12. சுடர் கொளுவுதல்*; to ligt, as a lamp. "*விளக்கேற்றினேன்*" *(திவ். இயற். 2,1). 13. நினைத்தல்*; to think, consider. "*கானலஞ் சேர்ப்பன் கொடுமை யேற்றி*" *(தொல்.சொல்.337). 14. துணிதல் (தொல்.சொல். 337)*; to decide *15. படைத்தல்*; to offer, as an oblation. "*ஏற்றிக் கழித்த வெண்சோற்றையருந்தி*" *(காசிக. ஓங்காரவி. கி.11).*

ம. ஏற்றுக; து. ஏராவுனி; தெ. ரெச்சு; கொலா. எத்; நா. எத்; கூ. எத; குவி. எதலி.

ஏற்றெழு–தல் ēṟṟeḻu-, *2.* செ.கு.வி. (v.i.) *1.மயக்குந்துயில் களினின்றும் எழுதல்*; to rise after recovery of consciousness from a swoon, from sleep. "*மெய்யறிந்தேற்றெழுவேனாயின்*" *(கலித்.37)*

2. ஓங்கி யெழும்புதல்; to ascend, as a flame. "*ஏற்றெழு வன்னிமேலினிது துஞ்சலாம்" (கந்தபு.விடைபெறு.31) 3. மேற்செல்லுதல்;* to proceed against.

ஏறக்கட்டு–தல் ēṟa-k-kaṭṭu-, *5. செ. குன்றாவி.*(v.t.) *1.உயரக் கட்டுதல்;* to build up. *2.விலையேறுதற்காகச் சரக்கை விற்காமல் வைத்தல்;* to put off selling so that price may rise. *3. மேகம் பெய்யாமற் கரத்தல்;* to withhold or keep back, as clouds their showers. *வானம் மழையேறக் கட்டிவிட்டது. 4. இறைந்த பொருள்களைக் குவித்தல்;* to collect together scattered articles, as grain into a heap. *5. அடியோடு நிறுத்துதல்;* to give up altogether, as a person his studies.

ம. ஏற வய்க்குக.

ஏறடு–தல் ēṟaḍu-, *19. செ.குன்றாவி.*(v.t.) *1. மேல் வைத்தல்;* to place over. "*கொம்பினிடத்தேயேறட்ட தம்கையிடத்தே" (முல்லைப்,34,உரை.) 2. மேற் கொள்ளுதல்;* to take upon one's self. *இவை சுண்ணமென்பதொரு பெயரையேறட்டுக் கொண்டு (சீவக.876.உரை).*

ஏறவிடு–தல் ēra-vidu-, *18. செ.குன்றாவி.* (v.t.) *1. ஏறும்படிச் செய்தல்;* to make climb, to allow to ascend. *ஏறவிட்டேணியை வாங்கினதுபோல. 2. மரக்கலத்தைக் கரைக்குத் தொலைவாக விடுதல் (வின்.);* to keep off from the shore, as a vessel. *3. காற்றுமுகமாய்க் கப்பலை விடுதல் (வின்.);* to sail along with the wind. *4. கரை சேர மரக்கலத்தை விடுதல் (வின்.);* to turn towards the shore, as a vessel. *5. மேற்போகவிடுதல்;* to allow to spread, to circulate, as poison. *நஞ்சு ஏறவிடக்கூடாது. (உ.வ.).*

ஏறிட்டுப்பார்[1]–த்தல் ēṟiṭṭu-p-pār-, *4. செ.கு.வி.*(v.i.) *நிமிர்ந்து பார்த்தல்;* to look up.

ஏறிட்டுப்பார்[2]–த்தல் ērittu-*p-p*ār-, *4. செ.குன்றாவி.* (v.t.) *கவனித்தல்;* to take notice of, care for. *அவர் என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை.*

ஏறிடு[1]–தல் ēṟiḍu-, *18. செ. குன்றாவி.* (v.t.) *1. குற்றம் சாட்டுதல்;* to cast upon, to superimpose, as blame. *2. நாணேற்றுதல்;* to bend, as a bow. *ஏறிட்ட வில் (சீவக.657.உரை). 3. தூக்குதல்;* to lift up. "*கருமுகை மாலைபோலே எடுத்து ஏறிட்டுக் கொண்டு போனான்" (ஈடு.1,3,1) 4. உயர்த்துதல்;* to raise. "*தூசு நீக்கியேறிட வார்த்தபோது" (கம்பரா.இந்திர.56) 5.புகப்பண்ணுதல்;* to probe into, to cause to penetratre. *பருவிற் சலாகையை யேறிட்டான் (வின்.)*

ம. ஏறிடுக.

ஏறு–தல் ēṟu-, *5. செ.கு.வி.* (v.i.) *1. உயர்தல்;* to go up, as the eyebrows, in anger. "*ஏறியு மிழிந்து மூளும் புருவங்கண் முரிய" (சீவக.2507.) 2. மேலேறுதல்;* to rise, ascendr as the heavenly bodies, to mount, climb. "*குன்றேறி யொளிப்பினும்" (நாலடி.90) 3. முற்றுப் பெறுதல்;* to terminate end. "*ஆண்டெலாமின்றொடேறுமோ" (கம்பரா. கிளை.114) 4. மிகுதல்;* to abound in number, weight or measure, to increase in price, quality. *5. பரவுதல்;* to spread, to be diffused, as poison. *நஞ்சேறுகிறது. 6. மருளுறல், தெய்வமேறப் பெறல்;* to become possessed. "*கடல் ஞாலத் தீசன்வந்தேறக்கொலோ" (திவ். திருவாய்.5,6,1) 7.வளர்தல்;* to grow. *பயிரேறிவிட்டது. 8. உட்செல்லுதல்;* to enter, to penetrate, to run into, as a thorn. *அவன் சொன்னது மனத்திலேறவில்லை. 9. குடியேறுதல்;* to settle to be domiciled. *திருக்கோயிலைச் சூழ்ந்த இடத்திலும் சன்னதியிலும் ஏறின பல குடிக்கும்* (S.II.1,93). *10. ஏற்றிவைக்கப்படுதல்;* to be laden, as cargo. *மூட்டைகள் கப்பலில் ஏறின.*

ம. ஏறுக; க. ஏறு; கோத. ஏர்; துட. ஓர்; குட. ஏர் (தலைக்கு உயர்த்து) ; து. ஏருனி; தெ. ரேகு; கொலா. லேப்; நா. லேப்; குவி. ரெனெய்.

ஏறுதழுவு–தல் ēṟu-taḻuvu-, *9. செ.கு.வி.* (v.i.) *ஆய்க்குலக் காளையர் மணமுடிக்கும் பொருட்டு எருதினை கத்தழுவிப் பிடித்தல்;* capture a bull at large as proof of bravery in ēṟu-kōḷ contests, a custom among herdsmen in ancient times. *அந்நிலத்தியல்பு பற்றி ஏறுதழுவி (தொல். பொருள்.53, உரை.).*

ஏறுவிடு–தல் ēṟu-viḍu-, *20. செ.கு.வி.*(v.i.) *ஆயர் தம்மகளை மணம்புரியத் தக்கோர், தழுவிப் பிடிக்கும் பொருட்டு எருதுவிடுதல்;* to set a bull at large to be captured, as a test of bravery, by a man who seeks the hand of a woman in marriage, a custom among herdsmen in ancient times.

ஏறெடு–த்தல் ēṟeḍu-, *4. செ. குன்றாவி.* (v.t.) *1. மேலெடுத்தல்;* to lift up, as the head, eyes. *(செ.அக.). 2. தலை நிமிர்தல்;* to be in an upright or a perpendicular posture. *3. உயர்த்துதல்;* to highten *(சா.அக.).*

ஐ

ஐந்தடக்கு–தல் *aindaḍakku-, 7. செ.கு.வி.* (v.i.) *ஐம்புலன் களையும் ஒடுக்குதல்;* to control the five senses."*ஆமைபோலைந்தடக்க லாற்றின்" (குறள்.126) (செ.அக.).*

ஐயுறு–தல் *ai-y-uṟu-, 17.செ.குன்றாவி.*(v.i.)*தெளிவு பெறாமை;* to doubt or suspect. "*ஐயுற்றெண்ணமுஞ் செயலும் வேறாய்" (பாரதி.நிரைமீட்சி.128) (செ.அக.).*

X

ஒ–த்தல், o-, 4. செ.குன்றாவி. (v.i.) *1. தகுதியாதல்*; to be suited to be consistent with, to be appropriate. "*ஒப்பநாடியத்தக வொறுத்தி*" *(புறநா.10.4.) 2. இசைதல்*; to be acceptable. *அவனுக்கு ஒத்த செய்தி. 3. ஒழுக்கமுடையராதல்*; to be of good character; to be well behaved. "*ஒப்பார் மற்றெனைவர்*" *(சீவக.1543). 4. ஒற்றுமைப்படுதல்*; to be harmonious, be in happy concord. "*எத்தால் வாழலாம்; ஒத்தால் வாழலாம்*" *5.இல்லாத தொன்று இருந்தாற் போலுதல்*; to appear as if it were. "*கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே*" *(திவ். அமலனாதி.1.). (செ.அக.).*

ம. ஒக்குக; க. ஒர்பு, ஒப்பு; கோத. ஒப்; துட. உப்; குட. ஒ; து. ஒப்பியுனி; தெ. ஒப்பு; குரு. ஒக்ன்னா.

ஒக்கடி[1]–த்தல்,okkadi-, *4.செ.கு.வி.* (v.i.) *தாளங் கொட்டுதல் (சீவக.156.உரை)*; to keep time either with hands or with cymbals.

ஒக்கடி[2]–த்தல், ōkkadi-, *4.செ.குன்றாவி.* (v.t.) செப்பனிடுதல்; to repair, renovate. "*திருவாபரணங்கள் ஒடிந்தது ஒக்கடிக்கிறதும்*" *(கோயிலொ. 93.) (செ.அக.).*

ஒக்கலி[1]–த்தல்,okkali-, 4. செ.கு.வி. (v.i.) *1.ஆவலங் கொட்டுதல்*; to shout in joy, hulla-baloo, as a mark of triumph "*பேய்கள் கூடி யொன்றினையொன்றடித்து ஒக்கலித்து*" *(பதினொ. திருவாலங் காட்டு மூத்த.1,11). 2. உறவினரோடு கலந்து பேசுதல்*; to converse freely, hold friendly communion wth one's relations. (W.).

ஒக்கலி[2]–த்தல், okkali-, 4. செ.கு.வி. (v.i.) *1.இனத்தாருடன் உறவாடுதல்*; to encourage one's class or community maintain them, give them medical aid, etc. *2. ஒத்துப்போதல்*; to become reconciled. *(செ.அக.). 3. ஒப்பாதல்*; to become equal.

ஒக்கிடு[1]–தல்,okkiḍu-, 18. செ.குன்றாவி. (v.t.) செப்பனிடுதல்; to repair. *(செ.அக.).*

ஒக்கு[1]–தல்,okku-, *5.* செ.குன்றாவி. (v.t.) *1.*கொப்புளித்தல்; to gargle. *2. பிற்பட விடுதல்*; to leave behind *(செ.அக.).*

ம. ஒக்குக.

ஒக்கு[2]–தல்,okku-, 5. செ.குன்றாவி. (v.t.) *1. உழுதல்*; to till the land. *2. குத்துதல்;கழித்தல்;* to pierce, dig.

க., து. உக்கு, ஒக்கு.

ஒக்கு[3]–தல்,okku-, 5. செ.குன்றாவி. (v.t.) *1.சமப் படுத்துதல்*; to equalize. *2. செப்பனிடுதல்*; to set right, repair. *3. மூட்டுதல்*; to sew together two pieces of any material. *(வின்.).*

ஒசி[2]–த்தல்,oši-, *2.* செ.குன்றாவி. (v.t.) *1. முறித்தல்*; to break, as a stick. "*யானைபோர்க்கோடொசித்தனவும்*" *(திவ். இயற்.1.27.) 2. அசைத்தல்*; to move, shake, wave. *(வின்.) (செ.அக.).*

ஒசி[1]–தல்,oši-, *2.* செ.கு.வி. (v.i.) *1. முறிதல் (பிங்.)*; to break, become broken, as a stick. *2. நுடங்குதல்*; to bend under a weight, as the tender branch of a tree or the waist of a woman. "*மாந்துணரொசியவேறி*" *(சூளா.இரத.44). 3. சாய்தல்*; to lean, incline. "*வாயருகு வந்தொசிந்து மறிய*" *(சீவக.595.) 4.நாணுதல்*; to be coy, bashful. "*கண்ணரக்கி நோக்கா தொசிந்து*" *(சீவக.2541.). 5. வருந்துதல்*; to suffer. "*உருகு நுண்ணிடையொசியப்புல்லினாள்*" *(சீவக.989.) 6. ஓய்தல் (திவா.)*; to become tired or weary. *(செ.அக.).*

ஒஞ்ச[1]-ரித்தல்,oñjari-, 4. செ.குன்றாவி. (v.t.) கதவைச் சிறிது சாத்துதல்; to close the door slightly. "*மதனசுந்தரி கதவை யொஞ்சரி*" *(செ.அக.).*

ஒஞ்சரி[2]–த்தல்oñjari-, 4. செ.கு.வி. (v.i.) ஒருபக்கஞ் சார்தல்*(வின்.)*; to go sideways. *(செ.அக.).*

ஒஞ்சி[1]–த்தல்oñji-, 4. செ.கு. வி. (v.i.) நாணுதல்; to feel abashed, to be shy. "*ஒஞ்சித்துச் சாப்பிடாமல் விட்டுவிட்டான்*" *(வின்.) (செ.அக.).*

ஒஞ்சி[2]–த்தல்oñji-, 4. செ.கு.வி. (v.i.) மனத்தை அடக்குதல் *(யாழ்.அக.)*; to contol one's mind.

ஒஞ்சு[1]–தல்oñju-, *5.* செ.கு.வி. (v.i.) குறுகுதல், சுருங்குதல்; to shorten, shrink.

ஒஞ்சு[2]–தல்oñju-, 5. செ.கு.வி. (v.i.) அடங்குதல்; to subdue.

ஒட்டிடு–தல்,oṭṭiḍu-, *20.* செ.கு.வி. (v.i.) *1.* பந்தயம் போடுதல்; to lay a wager. *2.* ஆணையிடுதல்; to take on oath. *(செ.அக.).*

ஒட்டிப்போ–தல்,oṭṭ-p-pō-,8. செ.கு.வி. (v.i.)கூடப் போதல் *(வின்.)*; to go along with. *2. வற்றுதல்*; to become lean; to get emanciated, to shrink. "*கன்னம் ஒட்டிப் போயிருக்கிறது*" *(செ.அக.).*

ஒட்டியாக்கு–தல்,oṭṭiyākku-, 5. செ.குன்றாவி. (v.t.) இணையாக்குதல்; to equalize, to make equal.

ஒட்டு[1]–தல்,oṭṭu-, *5.* செ.குன்றாவி. (v.t.) *1. ஒட்டவைத்தல்*; to stick, as with paste or gum, to glue on. *இந்தத் தாளைப் புத்தகத்திலே ஒட்டு (உ.வ.) 2. தடுத்தல்; அணைக் கட்டுதல்*; to obstruct, to construct a dam. *3. சார்தல்*; to be take one's self to, as for support, for protection, to be near to. "*திருவடியை யொட்டாத பாவித் தொழும்பரை*" *(திருவாச.10.7.) 4. பந்தயம் வைத்தல்*; to wager, stake. "*மாதுதன்னை யொட்டி*" *(பாரத. சூது.182.) 5. துணிதல்*; to resolve, make up one's mind, decide. "*காண்பதே கருமமாக வொட்டி*" *(சீவக.2143.) 6. தாக்குதல்*; to assail, attack, invade."*மாந்தருறை நிலத்தோ டொட்ட லரிது*" *(குறள்.499.) 7. படைத்தல் (உரி.நி.)*; to create, make. 8. *கூட்டுதல்*; to enhance, raise, as the sale price of an article. "*விலையைச் சிறிதொட்டி வைத்தான். 9. கிட்டுதல்*; to advance towards, come into close quarters with. "*ஒட்டித் தன் கையைப் பற்றி யீர்த்ததும்*" *(திருவிளை.அங்கம்.23.) 10.*

இசைதல் (சம்மதித்தல்); to acquiesce, brook, tolerate "ஒட்டேனரசோ டொழிப்பேன் மதுரையை" (சிலப்.21.37.). 11. அறுதியிடுதல்; to undertake, bind oneself to do a thing. "யாதுமொழியாமலொட்டி ... முயல்கின்றார்" (சீவக.591.) 12. நட்பாக்குதல்; to make friends with. "ஒட்டாரை யொட்டிக் கொளல்" (குறள்.679.).

க., ம., து. ஒட்டு.

ஒட்டு[2]–தல்,oṭṭu-, 5. செ.கு.வி. (v.i.) 1. ஒட்டிக் கொள்ளுதல்; to dry to become parched up, as the tongue. "தாய் முலையையகலில் நாக்கு ஒட்டுமாபோலே" (ஈடு.1,3,9) 2. வஞ்சினம் கூறுல் (சபதம் செய்தல்); to challenge, debate. "ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்" (மணிமே.1,60) 3. உள்ளொடுங்குதல்; to shrink, contract "ஒட்டிய வயிறு" 4. பதுங்கி நிற்றல்; to play the eaves-dropper; to lurk; to lie in ambush. 5. பொருந்துதல்; to be suitable, appropriate. "பருவத்தோ டொட்ட வொழுகல்" (குறள்.482.) (செ.அக.).

ம. ஒட்டுக; க. ஒட்டு; கோத. ஒட்; து. ஒட்டுனி; தெ. ஒட்டு; பர். ஒட்ப்.

ஒட்டுக்கொடு–த்தல்,oṭṭu-k-koḍu-, 4. செ.கு.வி. (v.i.) 1. அணுக இடங்கொடுத்தல்; to allow access, to be accessible. 2. கேட்டது கொடுத்தல்; to comply with, yield to, grant to a request. (செ.அக.).

ஒட்டுப்பொறுக்கு–தல்,oṭṭu-p-poṟukku-, 5. செ.குன்றாவி. (v.i.) 1. சிதறியவற்றைச்சோர்த்தல்; to glean scattered remains,as of food; to scrape together. (செ.அக.).

ஒட்டுவை–த்தல்,oṭṭu-vai-, 4. செ.கு.வி. (v.i.) 1. பறவை களைப்பிடிக்க ஒட்டுப்பிசின் வைத்தல்; to set bird-lime in order to ensnare birds. 2. ஆணையிடுதல்; to swear, take an oath. 3. அகழ்தோண்டுதல் (R); to dig trenches or moats round a city. (செ.அக.).

ம. ஒட்டுவய்க்குக.

ஒடி[1]–தல்,oḍi-, 4. செ.கு.வி. (v.i.) 1. முறிதல்; to break as a stick, a branch, a rib; to break off, snap. "விலா வொடிந்து" (பாரத.வேத்திரகீய.61.) 2. கெடுதல்; to be broken in strength, ruined. "ஒடியாப் பருவத்து" (கலித்.93,25.) 3. இடையறுதல்; to cease for a time, break off, discontinue, suspend. "ஒடியா முறையின் மடிவிலையாகி" (புறநா.29.) (செ.அக.).

ம. ஒடியுக; க. ஒடி, உடி; கோத. ஒட்வ்; துட. வட்; குட. ஒடெ; து. ஒடியுனி, ஒடெயுனி; தெ. ஒடியு; கொலா. ஒட்; நா. நாட், நாக்; கட. ஒட்; கூ. ஓச, ஒக்ப்; பர். ஒட்; கோண். வோடானா.

ஒடி[2]–த்தல்,oḍi-, 4. செ.குன்றாவி. (v.t.) 1. முறித்தல்; to break, short off; to snap, as a branch, a stick, to cause to fracture, as a limb of the body. "தோள்களைத் தமது கைகளாலொடித்தன ராமென" (கந்தபு. திக்குவிசய. 110) 2. அழித்தல்; to destroy, devastate. "காள கூடமொடிக்கு முலகங்களை" (தேவா. 614,10.) (செ.அக.).

ஒடியெறி–தல்,oḍi-y-eṟi-, 2. செ.குன்றாவி. (v.t.) 1. காட்டுப் புதர்களைவெட்டியெறிதல்; to cut down a forest thicket while hunting. "நெறியினை யொடி யெறிகிற் பவரொத்து" (கலிங்.411.புது.) 2. மரக்கொம்பைப் பாதி குறைத்தல்; to snap or break, as a short branch that it might hang down within easy reach of the flock. "ஒடி யெறிந்தவர்வயின்" (கலித்.68)3.குற்றுயிராக்குதல்; to beat within an inch of a person's life. "கண்ணழகாலேயாயிற்று இவரை ஒடியெறிந்தது" (ஈடு.3,4,2) (செ.அக.).

ஒடுக்கு[1]–தல்,oḍukku-, 5. செ.குன்றாவி. (v.t.) 1. அடக்குதல்; to subjugate to bring down, as another's pride; to keep down, suppress, subdue பகைவரை ஒடுக்கிவிட்டான். 2. வருத்துதல்; to cause distress, as cold or dew. குளிர் மிகவும் ஒடுக்குகிறது. 3. ஒன்றச்செய்தல்; to dissolve, as the elements; to cause to merge one in another, to cause to destroy as the world, at the close of an age. 4. செலவு முதலியன குறைத்தல்; to reduce or retrench, as expenses. 5. உடம்பு சிறுகுதல்; to grow thin or lean, as the body. 6. சுருக்குதல்; to thrust within a shorter compass to epitomize. "ஒடுக்கி யொடுக்கிச் சொன்னாலும் ராமன் கீர்த்தி" (இராமநா.கிட்கிந்.3.) 7. கருவூலத்தில் சேர்த்தல்; to remit or lay up, as in to a treasury to deposit or garner, as in a storehouse. "தம் பண்டாரத்தி லடைவுறவொடுக்கி" (பெரியபு.குங்கிலிய.13.). 8. கீழ்ப்படுத்துதல்; to restrain, subdue. "அடிக்குடில் ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்" (திருவாச.3,161.). 9. திருடுதல்; to rob. "நாணும் நிறையுமான ஒடுக்கு மாட்டைப் பாரித்துக் கொண்டு" (ஈடு. 5, 3 ,9.) (செ.அக.).

ம. ஒடுக்குக; க. உரிகிடு; தெ. ஒடுக்கின்சு.

ஒடுக்கெடு–த்தல்,oḍukkeḍu-, 4. செ.குன்றாவி (v.t.) நெளிவெடுத்தல்; to remove a dent, smooth out the dented surface of a metal utensil. (செ.அக.).

ஒடுங்கு–தல்,oḍuṅgu-, 7. செ.கு.வி. (v.i.) 1. அடங்குதல்; to be restrained, as th senses or the desires; to calm down to become tranquil. "என்னிதயமூமொடுங்கவில்லை" (தாயு.ஆனந்தமா.9.) 2. குறைதல்; to become reduced; to grow less "ஊணொடுங்க வீணொடுங்கும்". 3.சுருங்குதல்; to shrink, shrivel. 4. ஒதுங்குதல்; to respectfully slide on to one side, as when meeting a superior to move to a side. "மேலையோன் புடைதனி லொடுங்கியே" (கந்தபுதாரகன்வதை.164.). 5. மறைந்திருத்தல்; to be concealed, hidden. "தொழுத கையுள்ளும் படை யொடுங்கும்" (குறள்.828.). 6. கீழ்ப்படிதல்; to be subservient. அவன் அவனிடத்து ஒடுங்கி யிருக்கின்றான். 7. சோம்புதல்; to be lazy inactive. "ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகை" (புறநா.8.4.) 8. குவிதல்; to close, as the petals of the lotus flower. "தாமரையின் றடம்போதொடுங்க" (திவ்.இயற். திருவிருத்.76.) 9. அமைதல்; to cease, as noise, bustle, to

be quiet, silent *ஊர் ஒடுங்கிவிட்டது. 10.* சோர்தல்; to be weary, exhausted to sink. *உடல் ஒடுங்கிவிட்டது. 11.* ஒன்றுதல்; to become dissolved, involved one within another as the elements, worlds, till all is absorbed in the great infinite. *காரியங்கள் காரணத்தில் ஒடுங்கும்.12.* ஒளி மங்குதல் *(வின்.)*; to grow dim, as light. *(செ.அக.).*

ம. ஒடுங்ஙுக; க. உடுகு, உடகு; கோத. ஓட்க்; துட. வீட்க்; து. ஒடுங்கெடு; தெ. உடுகு; கொலா. ஊட்ப்; கூ. யும்ப்; குரு. ஒடொக்னா; மால். ஓட்கெ.

ஒண்டு–தல், oṇḍu-, 5. செ.கு.வி. (v.i.) *1.* மரம், சுவர் முதலியவற்றைச் சார்தல்; to lean or sit closely to a tree, wall etc. *2.* ஒளிந்து கொள்ளுதல், மறைந்து கொள்ளுதல்; to hide.

ம. ஒண்டுக; க. ஒண்டு; தெ. ஒண்டு.

ஒண்ணு–தல், oṇṇu-, 15. செ.கு.வி. (v.i.) *1.* இயலுதல்; to be possible, feasible. "ஒண்ணுமோ வவர்தஞ் செயலோதவே" *(கந்தபு.பாயி.15.) 2.* தக்கதாதல்; to be fit, proper. அப்படிச் செய்ய ஒண்ணாது. *3.* பொருந்துதல்; to be united. *(செ. அக.).*

ஒத்தறு–த்தல், ōttaru-, 4. செ.குன்றாவி (v.t.) தாளவரையறை செய்தல் *(பிங்.)*; to measure time. *(செ.அக.).*

ஒத்திரு[2]–த்தல், ottiṟu-, 3. செ.குன்றாவி. (v.t.) போன்றிருத்தல்; to be similar to. *(செ.அக.).*

ஒத்து[1]–தல், ottu- 10. செ.கு. வி. (v.i.) *1.* தாளம் போடுதல்; to keep time with cymbals or with the hands. "குணலைக் கொத்தின பாணி" *(கோயிற்.நட.30.). 2.* தாக்குதல்; to strike against each other, butt against bunt. "புயசயில மொன்றோ டொன் றொத்தினார்" *(பாரத. வேத்திர. 14.) 3.* ஒற்றுதல்; to forment. பூவைக் கண்ணில் ஒத்திக் கொண்டான். *4.* தள்ளுதல்; to push. *(செ.அக.).*

ம. ஒத்துக; க. ஒத்து; குட. ஒத்த; து. ஒத்துனி; தெ. ஒத்து; குரு. ஒத்தனா.

ஒத்துழை–த்தல், ottuḻai-, 4. செ.கு.வி. (v.i.) பலர்கூடி மனமொத்து வினைசெய்தல்; to co-operate; to work together. *(செ.அக.).*

ம. ஒத்துழய்க்குக.

ஒதுக்கு–தல், odukku-, 5. செ.குன்றாவி. (v.t.) *1.* ஒதுங்கச் செய்தல்; to put on one side, as the hair, to casue to get out of the way, as cattle, in the road, to wash ashore, as floating or other bodies to push into a corner, to cast to one side, to a hedge, as dry leaves. *2.* பிணக்கை விலக்குதல்; to separate, as persons in a quarrel. சண்டையிடாமல் இருவரையும் ஒதுக்கினார்கள். *3.* அணைத்துக் காத்தல்; to shelter, as a bird its young to brood. (Loc.) கோழிதன் குஞ்சுகளைச் செட்டைகளுக்குள் ஒதுக்குகிறது. *4.* ஒருபுறமாய்ச் சேர்த்தல்; together on one side to tuck up, as one's clothes while crossing a river. நீ ஆடையை யொதுக்கிக் கொண்டு நீரிலிறங்கு. *5.* சொத்துக்களை மறைத்தல்; to place out of reach, remove by unfair means, secure for one's self clandestinely. சொத்துக்களையெல்லாம் வழக்குக்காக ஒதுக்கி விட்டான். *6.* விலக்குதல்; to separate to put away to expel, as from caste. அவனைச் சாதியினின்று ஒதுக்கி யிருக்கிறார்கள். *7.* தீர்த்தல்; to despatch, as a business (W.) வழக்கைத் தங்களுக்குள் ஒதுக்கிக் கொண்டார்கள். *8.* கொல்லுதல்; to kill. ஆள்களை யொதுக்க *(வின்.). 9.* வறுமைக்குட்படுத்துதல்; to impoverish. (W.). *(செ.அக.).*

ம. ஒதுக்குக; க. உடுகிசு, உடகிசு; தெ. உடிகின்சு, டுங்க; கூ. டுப்ப; குரு. ஒடொக்னா; மால். ஓட்கெ.

ஒதுங்கு–தல், oduṅgu-, 4. செ.கு.வி. (v.i.) *1.* விலகுதல்; to get out of the way, as to well. *2.* கரையிற் சார்தல்; to drift ashore. *3.* அடைக்கலம் புகுதல்; to seek refuge, take shelter. "நின்றளிக்கும் குடைநிழற்கீழதினொதுங்கி" *(கம்பரா. கையடை.8.) 4.* ஒடுங்குதல் *(பிங்.)*; to step aside and bow as a mark of respect, before a superior. *5.* நடத்தல்; to tread, step, walk. "கோல்காலாகக் குறும்பல வொதுங்கி" *(புறநா.159.3.) 6.* பின்னடைதல்; to lag behind. "செந்தளி ரொதுங்க மிளிர்சீறடி" *(கந்தபு.தெய்வயானை. 232.) 7.* தீர்தல்; to be finished, settled, adjusted, completed. காரிய மொதுங்கிவிட்டது. *8.* வறுமைப்படுதல் *(யாழ்ப்.)*; to be impoverished to be in want. *9.* இறத்தல் *(யாழ்ப்.)*; to die. ஆள் ஒதுங்கிப் போயிற்று *(செ.அக.).*

ம. ஒதுங்கு; க. ஒதுகு, ஒதகு; து. ஒதுங்க; தெ. ஒடுக.

ஒப்படை[1]–த்தல், oppaḍai-, 4. செ.குன்றாவி. (v.t.) *1.* ஒப்புவித்தல்; to entrust, consign, deliver, give over to the charge of another. அவனிடத்தில் எல்லாப் பொறுப்பையும் ஒப்படைத்திருக்கிறான். *(உ.வ.) 2.* ஈடுகொடுத்தல்; to make amends give satisfaction, furnish a security, compensate, Indemnify. பணம் வாங்கத் தன் சொத்துக்களையெல்லாம் ஒப்படைத்தான். *(உ.வ.). 3.* பரிந்துரைசெய்தல் *(வின்.)*; to recommend. (செ.அக.).

ஒப்பணி[1]–தல், oppaṇi-, 4. செ.குன்றாவி. (v.t.) ஒப்பனை செய்தல்; to decorate, embellish. "ஒப்பணிதலிற் சிவப்பாதல்" *(திவ்.பெரியாழ்.3,6,8.வ்யா.பக்.690.)* (செ.அக.).

ஒப்பந்தம்பண்ணு–தல், oppandam-paṇṇu-, 15. செ.கு.வி. (v.i.) *1.* உடன்படிக்கை செய்தல்; to agree, to contract, covenant. *2.* ஈடாகக் கொடுத்தல் *(வின்.)*; to give as equivalent for. *3.* சமம்பண்ணுதல் *(வின்.)*; to level, smooth on. *(செ.அக.).*

ஒப்பமிடு[1]–தல், oppam-iḍu-, *18.* செ.குன்றாவி. (v.t.) *1.* சமமாக்குதல்; to smoothen, level, make even. *2.* மணி முதலியன துலக்குதல் *(புறநா.147,7).*; to polish, as a gem. *3.* ஒப்பனை செய்தல் *(அலங்கரித்தல்)*; to ornament. பொன்னிலே நீலமணியை அழுத்திப் பேணி ஒப்பமிட்டாற் போன்ற *(கலித். 117.உரை). (செ.அக.).*

ம. ஒப்பமிடுக.

ஒப்பமிடு[2]–தல்,oppam-iḍu-, 18. செ.குன்றாவி. (v.t.) *1. கையொப்பமிடுதல்*; to subscribe one's name to. *2. ஆணை ஓலை (அதிகார பத்திரங்) கொடுத்தல்*; to grant a certificate of privileges or honours to grant a diploma or sanad. *(செ.அக.)*.

ஒப்பா–தல்,oppā-,6. செ.கு.வி. (v.i.) *1. உவமையாதல்*; to be similar. *2. நேராதல்*; to equal. *(செ.அக.)*.

[ஒப்பு + ஆ(கு)தல் ஒப்பாதல்.]

ஒப்பாக்கு–தல்,oppākku-, 5. செ.குன்றாவி. (v.t.) *இணையாக்குதல், சமனாக்குதல்*; to make equal, level.

ஒப்பாரியிடு–தல்,oppari-y-iḍu-, 20. செ.கு.வி. (v.i.) *இறந்த வரை நினைத்துப் புலம்பியழுதல்*; to lament the death of a person making numerous reference to his or her personal appearance and excellent qualities. *(செ.அக.)*.

ஒப்பி–த்தல்,oppi-, 4. செ.குன்றாவி. (v.t.) *1. ஒத்துக் கொள்ளச் செய்தல்*; to cause to agree. *2. ஏற்கும்படிச் சேர்ப்பித்தல்*; to deliver, surrender, handover, make over. *3. பாடத்தை மனனஞ்செய்து சொல்லுதல்*; to recite by recalling to mind what has been learnt, as a lesson. *(செ.அக.)*.

ம. ஒப்பிக்குக.

ஒப்பிடு–தல்,oppiḍi-, 18. செ.குன்றாவி. (v.t.) *1. உவமித்தல்*; to liken. *2. ஒத்துப் பார்த்தல்*; to compare with other copies, as manuscripts; to collate. *(செ.அக.)*.

ஒப்பு[1]–தல்,ōppu-, 5. செ.குன்றாவி (v.t.) *ஏற்றுக் கொள்ளுதல் (சம்மதித்தல்)*; to agree, accede to assent, approve.

ஒப்புக்கழு[1]–தல்,oppukkaḻu-,1. செ.கு.வி. (v.i.) *போலியாக அழுதல்*; to lament the death of a person for the sake of convention.

ஒப்புரவறி–தல்,oppuravaṟi-, 2. செ.கு.வி. (v.i.) *உலக நடைக் கேற்ற பாங்குகளைத் தெரிதல் (குறள். அதி.22)*; to know what is accepted by the world as proper, as in relation to gifts. *(செ.அக.)*.

ஒப்புரவா–தல்,oppuravā-, 6. செ.கு.வி. (v.i.) *அமைவுறுதல்* (chr.); to be reconciled. *(செ.அக.)*.

ஒப்புரவாக்கு–தல்,oppuravākku-, 5.செ.குன்றாவி. (v.t.) *அமைவு செய்தல் (விவிலி.2. கொரிந்.5,18)*; to reconcile. *(செ.அக.)*.

ஒப்புவி–த்தல்,oppuvi-,4. செ.குன்றாவி. (v.t.) *1. ஏற்கும்படி சேர்த்தல்*; to surrender, deliver, consign, handover. "*அன்னைபால் வினையேனை யொப்புவித்து*" *(தாயு.சச்சிதா.9.)*. *2. மெய்ப்பித்தல்*; to prove, demonstrate. *3. எடுத்துக்காட்டுத் தருதல்*; to illustrate. 4. *கடன்சாட்டுதல்(வின்.)*; to transfer, as a debt. *(செ.அக.)*.

ஒய்–தல், oy-, 2. செ.குன்றாவி. (v.t.) *1. இழுத்தல்*; to drag along, as flood. "*கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்*" *(அகநா.68.)* *2. செலுத்துதல்*; to launch, as a boat to send forth. "*ஓய்யுநீர்வழிக்கரும்பினும்*" *(பதிற்றுப்.87.4.)*. *3. கொடுத்தல்*; to give. "*வளராப் பார்ப்பிற் கல்கிரை யொய்யும்*" *(நற்.356.)* *4. போக்குதல்*; to wipe out, efface. "*ஒய்யா வினைப்பயனுண்ணுங்காலை*" *(சிலப்.14.33.)*

ஒரி–த்தல்,ori-, 4. செ.கு.வி. (v.i.) *ஒற்றுமையாயிருத்தல் (யாழ். அக.)*; to be united, in harmony. *(செ.அக.)*.

ஒருக்கணி–த்தல்,oru-k-kaṇi-, 4. செ.கு.வி. (v.i.) *ஒரு பக்கமாய்ச் சாய்தல்*; to lie on one side. "*ஒருக் கணித்தோ மல்லாந்தோ கண் வளர்ந்தருளுகிறது*" *(திவ்.திருமாலை, 23,வ்யா.81.)*.

ஒருக்களி–த்தல்,orukkaḷi-, 4. செ.கு.வி. (v.i.) *ஒரு பக்கம் சாய்தல்*; to lie on one side, to lean on one side. *(செ.அக.)*.

ஒருக்கு–தல்,orukku-, 7. செ.கு.வி. (v.i.) *1. ஒன்று சேர்த்தல்*; to bring together; to gather. *ஒருக்கின பண்டங்களைக் கொண்டு போகின்றமை (சீவக.60.உரை.)*. *2. அடக்குதல்*; to subdue, control. "*மனத்தை யொருக்கு மொருக்கத்தினுள்ளே*" *(பதினொ.திருவிடைமும்.24.)* *3. அழித்தல்*; to kill, slay. "*இன்றொருக்கினேனித்தனை வீரரை*" *(கம்பரா.பிரமா.195.)* *(செ.அக.)*.

ம. ஒருக்குக.

ஒருகைபார்–த்தல்,oru-kaiapār-,4. செ.கு.வி. (v.i.) *வெல்ல முயலுதல்*; to make a determined effort to win. "*உனக்காச்செனக் காச்சென்றொரு கை பாராமல்*" *(இராமநா.யுத்த.2.)* *(செ.அக.)*.

ஒருங்கு[1]–தல்,oruṅgu-, *7*. செ.கு.வி. (v.i.) *ஒருபடியாதல்*; to be concentrated; to have a singleness of aim of purpose. "*நினதா ளொருங்கப் பிடித்து*" *(திவ். திருவாய்.5,8,8)*. *2.ஒன்றுகூடுதல்*; to join together. "*மருத்து மிரும்புனற்கிறை வருமாகிச் செவ்விதி னொருங்கி*" *(கந்தபு. சூரனரசிரு.11.)* *3.* ஒடுங்குதல்; to sink, decline, to become reduced. "*உரமொருங்கியது... வாலியது மார்பு*" *(கம்பரா.யுத்த. மந்தி.90.)* *4. அழிதல்*; to be ruined, to perish. "*நமரெல்லோரு மொருங்கினர்*" *(பிரபோத.38.1.)*

க. ஒர்கூடு; ம. ஒருங்ஙு.

ஒருச்சரி–த்தல்,ōru-c-cari-,4. செ.குன்றாவி. (v.t.) *ஒரு பக்கமாய்ச் சாய்த்தல்*; to shut partially, as a door. "*கதவை ஒருச்சரித்து*" *(ஈடு.10,8,3)*.

ஒருத்தளி–த்தல்,oruttaḷi-, 4. செ.கு.வி. (v.i.) *வயலிற்பயிர் முழுவதிலும் கதிர் பரிதல் (இ.வ.)*; to shoot simultaneously, as ears of corn in a field. (Loc.) *(செ.அக.)*

ஒருப்படு–தல்,oru-p-paḍu-, 20. செ.கு.வி. (v.i.) *1. ஒருதன்மையாதல் (சி.சி.2,5, மறைஞா.)*; to become one unite, coalesce. *2. ஒத்துக்கொள்ளுதல் (இறை. 1.உரை.7)*; to consent, agree. *3.ஒருநினைவாதல் (வின்.)*; to have the mind fixed on one object, to be abstracted from outward objects. (W.). *4. துணிதல்*; to venture dare. "*போக்கொருப்பட்டு நின்று*" *(தொல்.பொருள்.41, உரை.)* *5. முயலுதல்*; to attempt, try. "*போக வேணுமென்றொருப்பட*" *(ஈடு.7.3.ப்ர.)* *6. ஒன்று கூடுதல்*; to come together. "*ஆட்பட்டீர் வந்தொருப் படுமின்*" *(திருவாச.45.1)*. *7. தோன்றுதல்*; to appear.

"ஒளியொளியுதயத் தொருப்படுகின்றது" (திருவாச. 20.3) (செ.அக.).

ஒருப்படுத்து–தல்,oru-p-paḍuttu-, 14. செ.குன்றாவி (v.t.) *1. ஒன்று கூட்டுதல்*; to bring together, reconcile. *2. வழிவிடுதல்*; to bid adieu. *"திருவணுக்கன் திருவாசலளவும் ஒருப்படுத்தி மீள" (ஈடு.7.3.ப்ர.) 3. முடிவு செய்தல்*; to finish, settle. *"ஒருப்படுத் தூர்க்கு மீள்வான்" (சீவக.505.). 4.ஏற்றுக்கொள்ளச் செய்தல்*; to bring to an agreement, cause to consent *(இறை.6.65.) (செ.அக.).*

ஒருமனப்படு–தல்,oru-maṉa-p-paḍu-, 20. செ.கு.வி. (v.i.) *1.* ஒருமனமாதல்; to be unanimous. *2. மனத்தை ஒன்றிலே செலுத்துதல்*; to concentrate the mind intensely upon an object; to be deeply engaged in the pursuit of one idea. *(செ.அக.).*

ஒருமி–த்தல்,orumi-, 4.செ.கு.வி. (v.i.) ஒன்றுசேர்தல்; to be in unison, to unite. *"காதலிருவர் கருத்தொரு மித்து" (பெருந்தொ.221.) (செ.அக.).*

ம. ஒருமிக்குக; க. ஒம்மு, ஒக்கு; து. ஒம்மெபுனி, ஒக்காபினி, ஒர்குனி; தெ. ஒம்மு, ஒருமு.

ஒருமைப்படு–தல்,orumai-p-paḍu-, 20. செ.கு.வி. (v.i.) *1. ஒற்றுமைப்படுதல்*; to become united. *2. மனம் ஒருமுகப்படுதல்*; to become concentrated. *"சாத்திரங்களிற் சொல்லுகிறவழியே நெஞ்சு ஒருமைப் பட்டு" (ஈடு.10.4.10.) (செ.அக.).*

ஒருவழிப்படு–தல்,oru-vāḻi-p-paḍu-, 20. செ.கு.வி. (v.i.) *1. ஒருமுகப்படுதல்;* to concentrate. *படிப்பில் மனம் ஒருவழிப்பட வேண்டும். (உ.வ.). 2. ஒன்றுபடுதல், ஒற்றுமையாதல்;* to be united. *மாறுபட்டவ ரெல்லாம் இப்போது ஒருவழிப்பட்டு விட்டார்கள். (உ.வ.). (செ.அக.).*

ஒருவிதமா–தல்,oru-vida-ā-, 6. செ.கு.வி. (v.i.) *1. புதிய வகையாதல்;* to be peculiar. 2.*வேறுபடுதல்;* to be of a different kind of attitude."*பாங்கி யொருவித மாக நடந்தாள்*" *(அருட்பா, VI,தலைவி வருந்தல்.12, பக். 645). 3. கவனியாமை, மாறுபாடாக இருத்தல்;* to be indifferent. *இப்போது அவர் என்னிடம் ஒருவிதமாக யிருக்கிறார். (செ.அக.).*

ஒருவு–தல்,oruvu-, 5. செ.குன்றாவி. (v.t.) *1. நீங்குதல், விடுதல்*; to abandon, renounce. *"ஒருவுக வொப்பி லார் நட்பு" (குறள்.800.) 2. கடத்தல்*; to cross, pass over. *"இருவினை வேலை யொருவினைநீ" (திருநூற்.67.) 3. ஒழிதல்*; to be expected. *"வேந்தனி னொரீஇய வேனோர்" (தொல். பொருள்.32) 4. தப்புதல்*; escape. *"பருந்தினேறு குறித்தொரீஇ" (புறநா.43,5) (செ.அக.).*

ஒரூஉ–தல்,orūu-, 7. செ.கு.வி. (v.i.) *1. நீங்குதல்*; விலகுதல்; to remove, separate. *2. ஓடுதல்*; to run flee.

ஒல்கு–தல்,ogu-, 7. செ.கு.வி. (v.i.) *1. தளர்தல்*; to grow weak, or faint; to pine, to be disheartened. *"ஒல்கலுள்ள மொடு" (புறநா.135.8.) 2. மெலிதல்*; to become reduced, thin, slender; to be emaciated. *"ஒல்கு தேவியை" (கந்தபு.காமதகன.61.) 3. குழைதல்*; to become soft, mellow. *"ஒல்குதீம்பண்டம்" (சீவக.62). 4. நுடங்குதல்*; to tremble as from weakness or from being over-burdened; to bend with trembling. *"ஒல்கு... நுண்மருங்குல்" (சிறுபாண்.135) 5. சுருங்குதல்*; to shrink; to flinch. *"ஒழுக்கத்தி னொல்காருரவோர்" (குறள்.136). 6. அசைதல்*; to shake, move. *"இயலின னொல்கினளாடு மடமகள்" (பதிற்றுப்.51.10). 7. ஒதுங்குதல்*; to wave, move to a side. *"பொன்னலங்கல் காலசைப்ப வொல்கி" (சீவக.595.) 8. சாய்தல்*; to incline. *"நெடுந்தூ ணொல்கத் தீண்டி" (பட்டினப்.250) 9. நடத்தல்*; to walk, tread. *"நீலந்தழீஇத் தளர்பொல்கி" (கலித்.115.14.) 10. வளைதல்*; to become bent. *"புள்ளொற்ற வொசிந் தொல்கி" (கலித்.77-5) 11. வறுமைப்படுதல்*; to be impoverished. *"ஒல்கிடத் துலப்பிலா வுணர்விலார்" (கலித்.25.20.) 12. மேலேபடுதல்*; to come in contact. *"அசைவளி வந்தொல்க" (கலித்.126.12.) 13. மனமடங்குதல்*; to be self-controlled. *"ஒல்காதார் வாய்விட் டுலம்புப" (நீதிநெறி.72.) 14. கெடுதல்*; to be injured, spoilt. *"ஒல்கிய வெழில் வேழம்" (கலித்.8.4).*

ம. ஒல்குக; தெ. ஒல்லாம் போவு.

ஒல்லு–தல்,ollu-, 8. செ.குன்றாவி (v.t.) *1. இயலுதல்*; to be able, possible, particable. *"ஒல்லும்வா யெல்லாம் வினை நன்றே" (குறள்.673.) 2. உடன்படுதல்*; to agree. *"பாசறை யல்லது நீயொல்லாயே" (புறநா.31.6) 3. தகுதல்*; to be fit, suitable. *"கங்குற்போதி லீங்கு வந்திடுவ தொல்லாது" (கந்தபு.வள்ளியம்.162) 4. பொருந்துதல்*; to combine, unite, join. *"கானத் தொல்லும் பேரழல்" (கந்தபு.ஆற்று.7.). 5. நிகழ்தல் (வின்.)*; to occur, happen, take place. *6. ஒத்தல்*; to resemble. 7. *நிறைவேற்றல்*; to effectuate. 8. பொறுத்தல்; to tolerate, endure. *"ஒல்லுவ சொல்லாது" (பரிபா.12-65).*

ஒலி[1]–தல்,oli-, 4. செ.கு.வி. (v.i.) தழைத்தல்; to shoot forth to be luxuriant to prosper, thrive. *"ஒலிந்த கூந்தல்" (பதிற்றுப்.31.24) (செ.அக.).*

ஒலி[2]–த்தல்,oli-, 4. செ.கு.வி. (v.i.) ஓசையெழுப்புதல்; to sound, as letter; to roar, as the ocean. *"ஒலித்தக்கா லென்னாமுவரி" (குறள்,763.).*

ஒவ்வு–தல்,ovvu-, 5. செ.கு.வி. (v.i.) *1.* பொருந்துதல்; to be congruous, consistent. *"ஊகமனுபவம் வசன மூன்றுக்கு மொவ்வும்" (தாயு.எங்கு.3). 2. ஒத்திருத்தல்*; to be like to be similar. *(செ.அக.).*

ம.ஒவ்வு; க. ஒப்பு; கோத.ஒப்; குட.ஒ; து. ஒம்புனி; தெ. ஒவ்வு, ஒப்பு; குரு. ஒக்னா.

ஒழி[1]–தல்,oli-, 4. செ.கு.வி. (v.i.) *1. தீர்தல்*; to cease, desist, stop; to discontinue, to be finished, ended. *"பொய்க்கோலஞ் செய்ய*

வொழியுமே" *(நாலடி.43). 2. அழிதல்;* to decline, to become extinct, annihilated. "ஒழிந்திடு மணுரூபங்கள்" *(சி.சி.1.11). 3. சாதல்;* to die, perish. "ஈரைம்பதின்மரும் பொருது களத்தொழிய" *(புறநா.2,15). 4. வெளிச்செல்லாது தங்குதல்;* to remain. "அரசர் வாய்மொழி நம்பா லொழிகு வதாயின்" *(சிலப்.26,11). 5. முடிவாதல். (தீர்மானமாதல்);* to be settled, decided. "தமக்கொழிமரபின் . . . நல்லறம்" *(மணி.16.110). 6. தவிர்தல்;* to be excepted. 7. விட்டு நீங்குதல்; to leave off, forbear. "இற்பிறப்பு நாணு மிடையொழிய" *(பு.வெ. 7,27). 8. வேலை செய்யாது இருத்தல்;* to be at leisure. ஒழிந்த வேளையில் வா. *(உ.வ.) 9. வெறுமையாதல்;* to be empty, unoccupied. இந்த வீடு ஒழிந்திருக்கிறது. *(உ.வ.).* - ஓர் துணைவினை; auxiliary verb. "கெடுத்தொழிந்தனை யென்னையு முன்னையும்" *(கம்பரா. இரணியன். 24). (செ.அக.).*

ம. ஒழி.

ஒழி²–த்தல்,oli-, 2. செ.குன்றாவி. (v.t.) *1. முடித்தல்;* to bring to an end, finish. எல்லாவேலையையும் ஒழித்துக் கொண்டு வா. *2. அழித்தல்;* to ruin, destroy, kill. *3. நீக்குதல்;* to put away, cast off, expel, dismiss, exclude. அவனை வீட்டைவிட்டு ஒழித்தேன். *4. தவிர்த்தல்;* to except, avoid, omit. அதை யொழித்து மற்றெல்லாம் சரி. *(உ.வ.). 5. வெறுமையாக்கல்;* to clear out, empty, vacate. பெட்டியை ஒழித்தாயிற்றா? *(உ.வ.) 6. ஒடுக்குதல்;* to contain. *7. துறத்தல்;* to renounce. *8. குறைத்தல்;* to reduce. *9. போக்குதல்;* to remove. *(செ.அக.).*

ம. ஒழிக்குக; க. உழிசு, உழிபு; குட. ஒய்.

ஒழிவி–த்தல்,oḷivi-, 4. செ.குன்றாவி. (v.t.) அழிவித்தல்; to cause to destroy, annihilate. *2. முடித்தல்;* to cause to terminate.

ஒழுக்கு¹–தல்,oḷukku-, 5. செ.குன்றாவி. (v.t.) மிதந்து போக விடுதல்; to cause to float along or flow down. பேராற்றிடை மிதவைப்பேழையினிட்டு ஒழுக்கின இளங்குமரனும் *(பாரத.வெண்.195.உரை.) (செ. அக.). 2. புடைத்தல்;* to winnow. *3. ஊற்றுதல்;* to pour. *(சேரநா.).*

ஒழுக்கு²–தல்,oḷukku-, 5. செ.குன்றாவி (v.t.) *1. வார்த்தல்;* to cause to drop, drip. "ஒழுக்க வென் கணுக் கொருமருந்து" *(தேவா.1110.1.) 2. நடப்பித்தல்;* to help to conduct. "ஆற்றினொழுக்கி" *(குறள்.48.). 3. நீளஇழுத்தல்;* to draw out, as gold thread. "அச்சிலுறுத்தியன பொற்கயி றொழுக்கியன போலும்" *(இரகு.தேனு.5.) (செ.அக.).*

ஒழுகிப்போ–தல், oḷugi-p-pō-, 8. செ.கு.வி. (v.i.) *1. நீர்ப்பண்டஞ் சிந்தி விழுதல்;* to spill. *2. மனங்கரைந் துருகுதல்;* to brood over sorrow of disappointment pine. இவளென்ன ஒழுகிப் போகிறாளே. *(இ.வ.). (செ. அக.).*

ஒழுகு–தல்,oḷugu-, 7. செ.கு.வி. (v.i.) *1. நீர்பாய்தல்;* to flow, as a stream. "ஒழுகு தீம்புனல்" *(நைடத, நாட்டு.6) 2. நீர்ப்பண்டம் சொட்டுதல்;* to leak, drop as water, to fall by drops, trickle down. "அசும்பொழுகிய பொய்க்கூரை" *(திருவாச.26,7.) 3. நடத்தல்;* to go, pass, walk. *4. முறைப்படி நடத்தல்;* to act according to laws as the subject of a state. "வையங்காவலா வழிமொழிந் தொழுக" *(புறநா.8.1.) 5. நேர்மைப்படுதல்;* to be arranged in regular order. "ஒழுகுகொடிமருங்குல்" *(தொல்.சொல். 317. உரை.) 6. நெடுமையாதல்;* to be long or tall. மால்வரை யொழுகியவாழை *(தொல்.சொல்.317.உரை.). 7. பரத்தல்;* to spread out extend, to be diffused. "மின்னொழுகு சாயல்" *(சீவக.494.). 8. வளர்தல்;* to grow. "ஒழுகு பொற்கொடி மூக்கும்" *(சீவக.165.). 9. மிகுதல்;* to increase, become intense "மன்னற் கொழுகு மன்பு கொண்டு" *(உபதேசகா. சிவத்துரோ.173.) 10. அமிழ்தல்;* to sink. "இட்டதொன் றொழுகா வண்ணம்" *(கம்பரா. வருணனை.84). 11. இளகுதல்;* to melt. ஒழுகக் காய்ந்த இரும்பு *(சிவப்பிர. 4,1,பக்.385,உரை.) (செ.அக.).*

க. ஒழ்கு, ***E.*** *walk;* ***OE.*** *wealcal;* ***OHG.*** *walckan;* ***MDU., MLG.*** *walken;* ***ON.*** *walka.*

ஒழுங்கு¹–தல்,oḷuṅgu-, 5. செ.குன்றாவி. (v.t.) *1. நேர் படுத்துதல்;* to plance in line, set in order."ஒழுங்கி முன்னர்த் திருமுறை வகுத்த காலை" *(திருவாலவா. 38, 19).*

ஒளி¹–தல்,oḷi-, 4. செ.கு.வி. (v.i.) *1. மறைதல்;* to hide, steal away, flee into concealment. "ஒளியா வெண் ணெயுண்டா னென்று" *(திவ். பெரியதி.6,7,4.). 2. தவிர்தல்;* to fail. "ஒளியாது செல்வா ரென்றாய்" *(திணைமாலை.86) (செ.அக.).*

ம. ஒளியுக; க. உளி; கோத. ஒய்ள்; குட. ஒளி; து. ஒள (மந்தணம்); தெ. ஓலமு (தங்கிடம்); குரு. ஒல்தாநன்னா; பட. உணி.

ஒளி²–த்தல்,oḷi, 4. செ.குன்றாவி. (v.t.) *1. மறைத்தல்;* to hide, conceal, keep out of sight. "கன்றொளித் தகலவைத்த கறவையின்" *(சீவக.371.) 2. மனத்திலடக்குதல்;* to keep in mind; to disguise. ஒளிக்காமற் சொல் *(உ.வ.)*

ஒளியிரு–த்தல், oḷi-y-iru-, 2. செ.கு.வி. (v.i.) பதுங்கி யிருத்தல்; to lie in concealment, to lie in ambush, to lurk. "கிளிக்குலங்கள்..... ஒளியிருந் தனுதினம் பயிலும்" *(காஞ்சிப்பு. திருநாட்டு.41.) (செ.அக.).*

ஒளிர்¹–தல்,ōlir-, *2.* செ.கு.வி. (v.t.) ஒளிசெய்தல்; to shine; to emit light; to be resplendent. "உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே" *(திருவாச. 37. 5) (செ.அக.).*

ஒளிர்²–த்தல்,oḷir-, *2.* செ.குன்றாவி. (v.t.) ஒளிரச் செய்தல்; to shed light upon. "ஊனமின்மினியு நானீ தொளிர்ப்ப னென்று ரைத்தல் போலாம்" *(விவேக.சூடா.பாயி.7) (செ.அக.).*

ஒளிவை–த்தல்,oḷi-vai-, 4. செ.கு.வி. (v.i.)*1. கண்ணி வைத்தல்*; to set a snare for animals or birds. *2. பார்வை விலங்கு வைத்தல்*; to place a decoy. *(செ.அக.).*

ஒளிறு–தல்,oḷiṟu-, 2. செ.கு.வி. (v.i.) *விளங்குதல்*; to shine, glitter. *"ஒளிறுவாண் மறவரும்" (மணிமே.1,68) (செ.அக.).*

ஒற்றிடு–தல்,oṟṟiḍu-, 20. செ.கு.வி. (v.i.) *ஒற்றடமிடுதல் (வின்.)*; to apply fomentation. *(செ.அக.).*

ஒற்றிவை[1]–த்தல்,oṟṟi-vai-, 4. செ.குன்றாவி.(v.t.) *அடைமானம் வைத்தல்*; to mortgage, as land, as trees."*விற்றுக்கொ ளொற்றிவை யென்னி னல்லால்" (திருவாச.6.18) (செ. அக.).*

க. ஒத்தெயிடு.

ஒற்றிவை[2]–த்தல், oṟṟi-vai-, 4. செ.குன்றாவி.(v.t.) *1. தொலைவில் வைத்தல்*; to place out of the way. *2. தவணை தள்ளி வைத்தல்*; to adjourn, as a hearing to postpone. *(செ.அக.).*

தெ. ஒத்து.

ஒற்று[1]–தல்,oṟṟu-, 5. செ.குன்றாவி (v.t.)*1. ஒன்றிற் படும்படிச் சேர்த்தல்*; to bring into contact; to press, hug close. *"வீணை ..... மாத ரணி முலைத் தடத்தி னொற்றி" (சீவக.1746). 2. முத்திரையிடுதல்*; to stamp, as a seal. *"கொடுவரி யொற்றி" (சிலப்.5,98). 3. உளவறிதல்*; to spy out. *"கண்மா றாடவ ரொடுக்க மொற்றி" (மதுரைக்.642). 4. தாளம் போடுதல்*; to beat, as cymbals in keeping time. *"காமரு தாளம் பெறுதற்கொற்றுவதுங் காட்டுவ போல்" (பெரியபு. திருஞான.46.) 5. தீண்டுதல்*; to touch. *"கதவொற்றிப் புலம்பியா முலமர" (கலித்.8.2) 6. தழுவுதல்*; to embrace."*சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த் தொற்றும்" (கலித்.103,51.) 7. மறைதல்*; to hide. *8. உய்த்துணர்தல்*; to pry into. *"உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவர்" (குறள்.927). 9. கட்டுதல்*; to tie, fasten. *"வலைவலி தொற்றினர்க்கு" (கல்லா.66.6.). 10. தீர்மானித்தல்*; to decide, to determine. *"ஒன்று நினைந்தொற்றி" (அகநா.5.20.) (செ.அக.).*

ம. ஒற்றுக.

ஒற்று[2]–தல், oṟṟu-, 5. செ.குன்றாவி. (v.t.) *1. துடைத்தல்*; to wipe away, as tears. *"கொடியனாடன் கண்பொழி கலுழி யொற்றி" (சீவக.1397.) 2. தள்ளுதல்*; to push, as a door. *"பாவையன்னா ளறிவுறா வகையி னொற்றி" (சீவக.1505). 3. வீழ்த்தல்*; to fell down. *"புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்" (புறநா.237,16). 4. வலித்தல்*; to tug, to strain. *"எருதுகயிற்றை யொற்றி யிழுக்கின்றது" (வின்.)*

ஒறு[1]–தல்,oṟu-, 4. செ.குன்றாவி. (v.t.) குறைதல்; to be reduced, to diminish.

ஒறு[2]–த்தல், oṟu-, 4. செ.குன்றாவி. (v.t.) *1. உறுப்புக் குறைத்துத் தண்டித்தல்*; to punish, chastise by cutting the limbs. *"ஒப்பநாடி யத்தகவொறுத்தி" (புறநா.10.4). 2. கடிதல்*; to rebuke, reprove. *"ஒறுப்ப வோவலை" (அகநா.342). 3. வெறுத்தல்(திவா.)*; to dislike, to be disgusted with. *4. இகழ்தல்*; to deride, ridicule. *"யாரே பிழைத்த தொறுக்கிற்பவர்" (குறள்.779) 5. அழித்தல்*; to destroy. *"ஒறுத்தானா மொன்னார் புரங்கண் மூன்றும்" (தேவா.407.11). 6. ஒடுக்குதல்*; to suppress, as the desires, to restrain, as the senses, to mortify, as the body; to curb, as the appelite; to subdue as the passions. *"சற்றும் வாயொறுக்கிறா னில்லை" (வின்.) 7. வருத்துதல்*; to afflict, distress, cause pain to. *"ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்" (குறள்.).*

ஒன்றி[1]–த்தல்,oṉṟi-, 5. செ.கு.வி. (v.i.) பொருந்துதல்; to unite, combine. *"ஒன்றித்து வாழவேண்டும்" (வின்.). (செ.அக.).*

ஒன்று–தல்,oṉṟu-, *5.* செ.கு.வி. (v.i.) *1. ஒன்றாய்ச் சேர்தல்*; to unite; to coalesce; to grow together, as two trees, to become one. *2. ஏற்றுக்கொள்ளுதல்*; to agree. *3. மனங்கலத்தல்*; to be on intimate terms with *"நிரயங்கொள்பவரோ டொன்றாது" (புறநா.5.6.). 4. ஒருமுகப்படுதல்*; to set one's mind solely on an aim or object. *"நன்புல னொன்றி நாதவென் றரற்றி" (திருவாச. 4.82). 5. உவமையாதல்*; to resemble, to be similar. *வேயொன்றுதோ ளொருபால் (தொல். பொருள். 286.உரை). (செ.அக.).*

ம. ஒன்னுக; க., பட. ஒந்து; தெ. ஒனருஉ, ஒண்டு.

ஒன்னு–தல்,oṉṉu-, *15.* செ.கு.வி. (v.i.) பொருந்துதல்; to agree, to be friendly. *"ஒன்னாப் பூட்கைச் சென்னியர் பெருமான்" (பதிற்று. 85-3).*

X

ஓ[1]-தல் ō-, *6.*செ.கு.வி. (v.i.) *1. முளைத்தல்*; to sprout *2. தோன்றுதல்*; to originate. *3. எழுதல்*; to rise.

ஓ[2]–தல் ō-, 6.செ.கு.வி. (v.i.) *1. உயர்தல், ஓங்குதல்*; to become high, rise, go up *2. தொலைவு ஆதல்*; to become distant.

ஓ[3]–தல் ō-, *6.* செ.கு.வி. (v.i.) *நீங்குதல், கடத்தல், விலகுதல்*; to be removed, pass off. to keep away.

ஓக்காளி–த்தல் ōkkāḷi-, *4.* செ.கு.வி. (v.i.) வாய்க்குமட்டல்; to heave, to nauseate, to retch from sickness. - *4.* செ.குன்றாவி. (v.t.) கக்கல்; to vomit. "குழந்தை பாலையெல்லாம் ஓக்காளித்து விட்டது".

ம. ஓக்காளிக்குக, ஓக்கானிக்குக; க. ஓகரிசு, ஓகளிசு, ஓக்கரிசு, ஓகடிசு; து. ஓங்கதெ; தெ. ஓகரின்சு.

ஓக்கு–தல் ōkku-, *5.* செ.குன்றாவி. (v.i.) *1. உயர்த்துதல்*; to raise, lift up. "ஓக்கிய வொள்வாள்" *(நாலடி. 129).*

2. எழும்பச் செய்தல்; to cause to rise. "வேலினோக்கிய விளக்குநிலையும்" *(தொல். பொருள்.90) 3. வரைந்து வைத்தல்*; to set apart. "நிணப்பலி யோக்குவல்" *(திருக்கோ.235). 4. தருதல் (திருக்கோ.235, உரை). 5. எறிதல்*; to throw. "சந்தனத்தளிர் நன்மாலை யோக்கினார்." *(சீவக.2661). 6. ஆக்குதல்*; to make, produce. "ஓக்கினே வென்னையும்" *(திவ்.இயற். 2.59). 7. கொடுத்தல்*; to give.

ஓங்கியடி–த்தல் ōṅgi-y-aḍi-, *4. செ.குன்றாவி.* (v.t.) *1. ஓச்சித்தாக்குதல்*; to raise the hand or a weapon and strike with a heavy blow. *2. பிறன்சொல்வது ஓங்காமல் மறுத்து மொழிதல்*; to argue or affirm stoutly; to brush aside the opponent's arguments; to browbeat the opposite party.

ஓங்கு–தல் ōṅgu-, *7. செ.கு.வி.* (v.i.) *1. உயர்தல்*; to grow, rise high, as a tree; to ascend, as a flame; to be lofty, as a building or a mountain. "ஓங்கிய வெண்குடை" *(இறை. 14.95). 2. பரவுதல்*;to spread, extend, expand. "அகில முற்றுமா யோங்கிய கால்களும்" *(கந்தபு. திருவவதார.48) 3. வளர்தல்*; to grow, as a child "செறிந்தொர் செம்மலா யோங்குபு" *(கந்தபு திருவவதார.75). 4. பெருமையுறுதல்*; to be exalted, dignified "ஓங்கு மெப்பொருட்கு மேலா மோரெழுத்து" *(கந்தபு. அயனைச் சிறைநீக்கு.42). 5. பெருகுதல்*; to increase in wealth, in renown, in learning; to flourish. "ஓங்கொளியா யோங்கி" *(தாயு. பராபர.6). 6. மேலேபறிதல்:* to depart, as the spirit. "உயங்கினா ளோங்கிற் றுயிர்" *(பு.வெ. 4.13). 7. குமட்டுதல்*; to heave, retch, vomit. - *5. செ.குன்றாவி.* (v.t.) *உயர்த்துதல்*; to lift up, riase as the arm or a weapon or a pestle. அடிக்கக் கையோங்கினான்.

ம. ஓங்ஙு; கோத. ஓக.

ஓச்சு–தல் ōccu-, *5. செ.குன்றாவி.* (v.t.) *1. எறிதல்*; to cast, throw, discharge, as a weapon. "செழியன்செண் டெடுத்துந்தியன் றோச்சலும்" *(காஞ்சிப்பு.நகர.67) (சூடா). 2. உயர்த்துதல்*; to raise in order to strike as the arm, a weaon; to lift up in a threatening manner. "கடிதோச்சி மெல்ல வெறிக" *(குறள்.562). 3. ஓட்டுதல்*; to drive away, chase வண்டோச்சி மருங்கணைதல். *4. செலுத்துதல்*; to cause to go; to ride; to govern; to wield; to sway, as a sceptre. "கோலோச்சு மாநில மன்னன்" *(குறள்.544). 5. பாய்ச்சுதல்*; to insert, thrust into, stick in. "ஒரு புனிற்றா போற்று மவன்மேன் மருப்போச்சு" *(பெரியபு. சண்டேச.17) 6. தூண்டிவிடுதல் (வின்)*; to excite, spur on, incite.

ம. ஓச்சுக.

ஓட்டங்காட்டு–தல் ōṭṭaṅ-kāṭṭu-, *5.செ.கு.வி.* (v.i.) *1. முன்னோடிக் காட்டுதல்*; to lead the way, precede, Inducing others to follow. *2. ஓடுவதுபோல் நடித்தல்*; to make a pretence of running.

ஓட்டம்பிடி–த்தல் ōṭṭam-piḍi-, *4.செ.கு.வி.* (v.i.) *தப்பி யோடுதல்*; to flee, run away.

ஓட்டறு–தல் ōṭṭaṟu-, *4. செ.கு.வி.* (v.i.) *1. உருக்கித் துப்புரவு செய்யாமல் இயற்கையிலே தூய்மை யுடை யதாதல்*; to be naturally pure without refining process. "ஓட்டற்ற செம்பொன்போலே" *(ஈடு.1.10.9). 2. உருக்கித் தூய்மை (சுத்தஞ்) செய்தல்*; to purify by melting, as fine gold.

ஓட்டு–தல் ōṭṭu-, *5. செ.குன்றாவி.* (v.i.) *1. செலுத்துதல்* ; to cause to run; to drive, prople; to steer, as a vessel. "நும்மூர்த் தெருவதனி லோட்டுவேன்" *(கந்தபு. வள்ளி. 136). 2. நீங்கச்செய்தல்;* to drive away, put to flight, chase, expel,disperse, as ignorance,as darkness.பேயை யோட்டிவிட்டான். *3. புகுத்துதல்;* to pass in, insert. "உரைத்தது செவியிற் காய்ந்த நாராச மோட்டியதென" *(அரிச். பு. மீட்சி. 30). 4.அழித்தல்;* to destroy. "அடுகள மார்ப்ப வமரோட்டி" *(பு. வெ. 9, 5). 5. செய்துமுடித்தல்;* to finish,complete. "உரவு நல்லணை யோட்டிய வூற்றமும்" *(கம்பரா. ஒற்றுக். 40). 6.காலந் தாழ்த்துதல்;* to delay. "ஓட்டியுங் கோறு மன்றே" *(சீவக. 1741). 7. நூலால் இழையிடுதல்;* to darn; to stitch a running stitch. ஓரிழை யோட்டிக் கொடு. *8. கட்டடத்துப் பூசிய சாந்தை வழுவழுப்பாகக் கொத்துக்கரண்டி முதலியவற்றால் தேய்த்தல் (இ.வ.);* to polish a plastered wall with a float. இந்தச் சுவரை நன்றாய் ஓட்ட வேண்டும் *(இ.வ.)*.

ஓட்டெடு–த்தல் ōṭṭeḍu-, *4.செ.கு.வி.* (v.i.) விரைந்தோடுதல்; to run, flee. "ஒப்ப வனைவரு மோட்டெடுத்தாரே" *(திருமந்.154)*.

ஓடியாடு–தல் ōḍi-y-āḍu-, *5. செ.கு.வி.* (v.i.) ஓட்டமும் ஆட்டமுமாயிருத்தல்; to run about vigourously, as a lad. "இளமையி லோடியாடு மியக்கத்தில்" *(பிரபோத.6.26)*.

ஓடு–தல் ōḍu-, *5. செ.கு.வி.* (v.i.) *1. ஓட்டமாய்ச் செல்லுதல்*; to run, flee away, pass quickly. "கூற்றங்கொண் டோடும் பொழுது" *(நாலடி.120). 2. செல்லுதல்*; to go, as a watch; to pass, as time to sail. "திரைகட லோடியும் திரவியந்தேடு" *(கொன்றைவே.). 3. மனம்பற்றுதல்*; to operate, follow, as the mind. அவனுக்குப் படிப்பில் ஓட்டமில்லை. *4. நீளுதல்*; to extend, go far. வழி மிக வோடுகிறது. *5. வருந்துதல்*; to suffer, to be distressed. "ஓடியதுணர்தலும்" *(சிறுபாண்.214) 6.நேரிடுதல்*; to happen, occur. 'இவளுக்கோடுகிற நோவும்' *(ஈடு.4.6.ப்ர.). 7. பிறக்கிடுதல்*; to turn back, retreat; to be defeated. "ஓடா வம்பலர்" *(பெரும்பாண்.76). 8. கழலுதல்*; to come off, as a ring, bangle. "ஓடுவளை திருத்தியும்" *(முல்லைப். 82). 9. பொருந்துதல்*; to be endowed with. "கூர்மையோ டம்பு" *(தேவா. 533.3). 10. குலைதல் (பிங்.)*; to be dismantled. *11. எண்ணஞ் செல்லுதல்*; to pass, as in the mind. "திருவுள்ளத்தில் ஓடுகிறதறியாதே" *(திவ். இயற். திருவிருத். 99.வ்யா) 12. விரைதல்*; to run away, to hasten. அவன் எதைச்செய்யத்தொடங்கினாலும்ஓடுகிறான்.

13. பரத்தல்; to spread. "குழுமிளை யோடெரிவேய" (பு.வெ. 6.30) 14. மதிப்புக்குரியதாதல்; to be worth, as a jewel. அந்த நகை நூறு ரூபாவுக்கு மேல் ஓடவில்லை. 15. தீர்மானிக்கப்படுதல்; to be determined, resolved. 'இதில் ஓடுகிறவிசயம் என்னென்னில்' (ஈடு. 2,9,ப்ர.).

ம. ஓடு; கை. ஓடெ; கொர. ஓட; எரு. ஓடு; இரு. வோடு; க., பட. ஓடு; கோத. ஓட், வொடெ; குரு. வோடு; துட. வீட்; குட. ஓட்; து. ஓடுனி; தெ. ஓடு; கோண். சோடினா; குவி. கோதவி, கோதை.

ஓதியிடு–தல் *ydi-y-idu-*, 18. செ.குன்றாவி. (v.t.) திருமண முதலியவற்றில் வாழ்த்துக்களுடன் வழங்கப்படும் அன்பளிப்பு; to present gifts on occasions like marriage with blessings (brah).

ஓது–தல் ōḍu-, 5. செ.குன்றாவி. (v.i.) 1. படித்தல்; to read, recite audibly in order to comit to memory. "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும்" (குறள்.834). 2. சொல்லுதல்; to speak, say, declare. "ஓதரிய சுகர் போல" (தாயு. ஆகார.32). 3. மறை ஓதுதல்; to recite the Vāda with the appropriate intonation. 4. மந்திரம், வழிபாடு முதலியன செய்தல்; to utter mantras, repeat prayers. 5. கமுக்கமாகக் கூறுதல்; to persuade clandestinely; to breathe out; to whisper, as communicating information. அவன் காதில் அடிக்கடி ஓதுகிறான். 6. பாடுதல்; to sing. ஓதி..... களிச்சுரும் பரற்றும்" (சிறபாண். 22).

ம. ஓதுக; க., பட. ஒது; கோத. ஓத். துட. வீத்; குட. ஒத்; து. ஓதுனி; தெ. சதுவு.

ஓதுவி–த்தல் ōduvi-, 1. பி.வி. (c.v.) 1. சிறந்த நூல் முதலியன கற்பித்தல்; to teach the standard book and subject to others. "ஓதுவித்த தக்கணையா" (திவ். பெரியாழ் 4.8.1). 2. படிப்பித்தல்; to teach, instruct.

ம. ஓதிக்குக; க. ஒதிசு; து. ஓதாவுது.

[ஓது → ஒதுவி.]

ஓப்பு–தல் ōppu-, 5. செ.குன்றாவி. (v.t.) 1. ஓட்டுதல்; to drive away; to cause to flee; to scare away, as birds. "கழனிப் படுபுள் ளோப்புநர்" (புறநா. 29.13). 2. உயரவெடுத்தல் to raise "கொடிக ளோப்புவும்" (சூளா. அரசி.144): (செ.அக.) 3. நீக்குதல்: to remove "குருவி ஓப்பியும் கிளி கடிந்தும்" (சிலப்பதிகாரம்).

ம. ஒப்புக.

ஓம்படு[1]–தல் ōm-baḍu-, 18. செ.குன்றாவி. (v.t.) உடன்படுதல் (யாழ்ப்); to express assent; to consent.

ஓம்படு[2]–த்தல் ōmbaḍu-, 4. செ.குன்றாவி. (v.t.) 1. பாதுகாக்குமாறு சேர்த்தல்; to protect. சிறைப்புறமாக வோம்படுத்தது (தொல். பொருள். 114.உரை.). 2. ஒதுங்குதல்; to avoid. "படைத்தலைக் கொள்ளாமை யோம்படுத்த வுயர்வு" (பு.வெ. 7,3,கொளூ.). 3. உறுதிகூறுதல்; to confirm, to encourage. "பூம்பொழிற் புறங் காவலனை யோம் படுத்தற்கும்".

ஓம்பு[1]–தல் ōmbu-, 5. செ.குன்றாவி. (v.i.) 1. பாதுகாத்தல்; to protect, guard, defend save. "குடிபுறங் காத்தோம்பி" (குறள். 549). 2. பேணுதல்; to preserve, to keep in mind, to cherish, nourish. "ஈற்றியாமை தன்பார்ப் போம்பவும்" (பொருந்.186). 3. தீதுவராமற் காத்தல்; to remove, separate to kee off; to ward off as from evil. 4. பரிகரித்தல்; to dispel. "எனைத்துங் குறுகுத லோம்பல்." (குறள்.820). 5. வளர்த்தல் (தேவா.1.1); to maintain, support; to cause to increas; to bring up. "கற்றாங் கெரி யோம்பி" (தேவா.1.1).

ஓம்பு[2]–தல் ōmbu-, 5. செ.குன்றாவி. (v.i.) 1. சீர்தூக்குதல்; to consider,discriminate. "ஓம்பாவீகையும்" (பு.வெ. 9,1). 2. மனத்தை யொருக்குதல்; to concentrate the mind. "தெரிந்தோம்பித் தேரினு மதே துணை" (குறள்,132). 3. இவறுதல்; to clutch or grasp tightly, as a miser. "பெற்றேமென் றோம்புத றேற்றாதவர்" (குறள். 626).

ம. ஓமன; து. ஓமன; தெ. ஓமு.

ஓய்–தல் ōy-, 2. செ.கு.வி. (v.i.) 1. முடிவுறுதல்; to cease; to come to an end. மழை ஓய்ந்தது. 2. மாறுதல்; to change. "செய்வினை யோயற்க" (பரிபா.10,128). 3. முன் நிலை சுருங்குதல் (தொல். சொல். 330); to diminish; to be reduced to become small. 4. தளர்தல்; to become tired, weary, weak, infirm, as a limb of the body கை ஓய்ந்து போயிற்று. 5. அழிதல்; to expire, perish. "ஊனையானிருந் தோம்பு கின்றேன் கெடு வேனுயிரோ யாதே" (திருவாச.5.38). 6. இளைப் பாறுதல்; to rest. ஓய்ந்தவேளை (செ.அக.).

ம. ஓயுக.

ஓர்[1]–தல் ōr-, 2. செ. குன்றாவி. (v.t.) 1. ஆய்ந்தறிதல்; to consider attentively, examine, investigate. "ஓரும் வையத்தியற்கை" (சீவக.888) 2. அறிதல்; to know. (செ.அக.)

ஓர்[2]–த்தல் ōr-, 2. செ. குன்றாவி. (v.t.) 1. ஆராய்தல்; to consider. 2. தெரிந்தெடுத்தல்; to select, choose. "ஆயிரத் தோர்த்த விப்பத்தே" (திவ். திருவாய். 1.2.1). 3.நினைத்தல்;to think, regard."வேள்வி யோர்க்கும்மே யொருமுகம்" (திருமுரு. 96). 4. கூர்ந்து கேட்டல்; listen attentively. "புலிப்பு கர்ப்போத் தோர்க்கும்" (புறநா. 157.12).

ம. ஓர்.

ஓர்ச்சி–த்தல் ōrcci-, 4. செ.கு.வி. (v.i.) நினைவூட்டுதல்; to cause, to remember, remind.

ம. ஓர்ப்பிக்குக.

ஓர்மி–த்தல் ōrmi-, 4. செ.கு.வி. (v.i.) 1. மனந்திடப் படுதல்(வின்); to be courageous, daring, brave, valiant, adventurous.

ம. ஓர்மிக்குக (நினைவுபடுத்துதல்).

ஓரங்கட்டு–தல் ōraṅkaṭṭu-, 5. செ.கு.வி. (v.i.) 1. ஓரமாகச் சேர்த்தல்; to gather to one side. 2. ஒரு ஓரமாகச் செல்லுதல்; to go along the edge. 3. வேண்டாதவரை ஒதுக்கிவைத்தல்; to avoid the unwanted.

ஓராட்டு–தல் ōraṭṭu-, 5. செ.குன்றாவி. (v.i.) தாலாட்டுதல்

(யாழ்ப்.). ; to lull, lullaby.

ஓரிபிடி–த்தல் *yripidi-, 4.*செ.கு.வி. (v.i.) *1.* ஒட்டாரம் செய்தல், அடம்பிடித்தல்; to be obstinate. *2.* ஓயாமல் அழுதல்; to weep continuously. *3.* நச்சரித்தல்; to give trouble.

க. ஓரெ.

ஓரியாடு–தல் *ōri-y-āḍu-, 5.* செ.கு.வி. (v.i.) *1.* பிறர் தொடாத வண்ணம் நெடுநேரம் வலிமைகாட்டி நீருள் மூழ்கி விளையாடும் நீச்சல் விளையாட்டு; game of swimming. இவன் ஓரியாடுவதில் கெட்டிக்காரன் *(திருச்சி).* *2.* துணைக்கு எவரும் வராத நிலையில் ஒருவரே பெரும்பணியை நெடுநேரம் செய்தல்; to work all alone to finish a heavy task. அவள் ஒருத்தியே இவ்வளவு பெரிய கலியாணச் சமையல் வேலையில் ஓரியாடுகிறாள். யாராவது உதவி செய்யுங்கள் *(உ.வ.).*

ஓலமிடு–தல் *ōlam-iḍu-, 20.*செ.கு.வி. (v.i.) *1.* காப்பு வேண்டுதல்; to call for succour, cry for protection, appeal. "சிவனேசிவனேயென் றோலமிடினும்" *(திருவாச.7.5)* *2.* சத்தமிடுதல்; to make a noise. "ஓலமிட்டிரியல் போக" *(ஞான.பாயி.6.24).*

ம. ஓலமிடுக.

ஓலாடு–தல் *ōlāḍu-, 5.*செ.கு.வி. (v.i.) முன்பின்னாக அசைதல், தாலாட்டுதல்; to move back and forth, rocking the cradle.

க. ஓலாடு.

ஓலிடு–தல் *ōl-iḍu-, 20.*செ.கு.வி. (v.i.) ஓசையிடுதல்; to make a noise. "பணைவித மோலிட" *(பாரத. மணி மான்.20).*

க. ஓலிசு.

ஓலையெழுது–தல் *ōlai-y-eḻudu-, 5.* செ.கு.வி. (v.i.) *1.* ஏடெழுதுதல்; to inscribe on a palmyra leaf. *2.* கடிதம் அனுப்புதல்; to send a letter. *(செ.அக.).*

ஓலைவார்–தல் *ōlai-vār-, 2.* செ.கு.வி. (v.i.) எழுதுவதற்கு உதவுமாறு ஓலைசீவுதல்; to trim a palmyra leaf for writing up on.

ஓவு–தல் *ōvu-, 7.* செ.கு.வி. (v.i.) *1.* நீங்குதல்; to remove, separate. "மலங்க ளெல்லா மோவின போது" *(சி.சி.4.37)* *2.* முடிதல்; to cease, terminate, become extinct. "கூப்பீ டோவிற்று" *(ஈடு.2.9.1.).* *5.* செ.குன்றாவி. (v.i.) நீக்குதல்; to shun, avoid, give up. "ஓவுதல் வேண்டும்." *(குறள்.653).*

ம. ஓவுக.

XS

ஔவு–தல் *auvu-, 5.*செ.கு.வி. (v.i.) *1.* வாயாற்பற்றுதல்; to grasp, seize,take hold of, with the mouth. கன்று புல்லை யௌவித் தின்கிறது. *2.* அழுந்தியெடுத்தல்; to graze; to rub off, as the skin, to burn, scald so as to excoriate. *(செ.அக.).*

f

கக்கு¹–தல் kakku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* வாயாலெடுத்தல்; to vomit, spew from the stomach. *2.* வெளிப்படுத்துதல்; to eject, as a snake its poison. "புனல்பகுவாயிற் கக்க" *(கம்பரா. யுத்த.இரணி.89).*

ம. கக்குக; *கு.* கக்வி; *க.* கக்கு, கழ்க்கு; *கோத.* கக்; *துட.* கக்; *குட.* கக்க; *து.* கக்குனி; *தெ.* கக்கு, க்ராயு, க்ரக்கு; *கோண்.* கக்கானா; *பிரா.* கழழ்ங்க்; *பட.* கக்கு.

கக்கு²–தல் kakku-, *5* செ.கு.வி. (v.i.) *1.* ஆணி முதலியன பதியாமல் எதிரெழுதல்; to skip with a rebound, fly back, recoil, as a nail. வயிரமேறிய மரத்தில் அடிக்கும் ஆணி கக்குகிறது *(உ.வ.).* *2.* ஆறு முதலியன பெருக்கெடுத்தல்; to overflow, as a river. ஆற்றில் வெள்ளம் கக்கிப் பாய்கிறது *(உ.வ.).* *3.* கதிர்ஈனுதல்; to shoot out as ears of corn. நெற்பயிர் கதிர் கக்கும் பருவம். *4.* மருந்துச் சாறமிறங்குதல்; to yield the essence, as drugs put in boiling water. *5.* தோலிலிருந்து எண்ணெய் முதலியன கசிதல்; to ooze out, as oil through the pores of the skin.

ம. கக்குக; *க.* கக்கு; *து.* கக்கு; *பிரா.* கழிழ்ங்; *பட.* கக்கு.

கக்கு³–தல் kakku-, *5* செ.கு.வி. (v.i.) *1.* திரிபு பெறல்; to change from the normal position. *2.* விலகுதல்; withdraw. *3.* திக்குதல்; stammering.

கக்கு⁴–தல் kakku-, *5* செ.கு.வி. (v.i.) இருமுதல்; to cough. .

கோத. கக்கு; *பட.* கக்கு *(இருமச் செய்யும் நெடி).*

கச்சு–தல் kaccu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* கடித்தல்; to bite. *2.* இணைத்தல்; to bind. *3.* அரித்தல்; gnawing. *4.* இறுக்கிக் கட்டுதல்; to tie tightly.

க., பட. கச்சு; *கொலா., பர்.* கச்ச; *கட.* கச்ச், கச்; *மால்.* கீரசவெ; *து.* கச்சுனி; *குவி.* கசளி; *கூ.* கச்ச்.

கச–த்தல் kaša-, *3* செ.கு.வி. (v.i.) *1.* கைத்தல்; to taste bitter. வேப்பங்காய் கசக்கும், வேப்பம் பழம் இனிக்கும் *(உ.வ.).* *2.* வெறுப்படைதல்; to be embittered, as the mind, to be disgusted, alienated.

ம. கசய்க்குக

கசக்கு–தல் kašakku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* கசங்கச் செய்தல்; to rub; to bruise between the fingers or hands; to squeeze, as a lemon; to crumple, as paper; to mash, as fruits. எலுமிச்சையைக் கசக்கிக் கொடு *(உ.வ.).* *2.* ஆடையைக் கும்முதல்; to roll gently and wash, as linen. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு' *(பழ.).* *3.* நெருக்குதல்; to harass, nag, bring under discipline. வங்கி மேலாளர் கசக்குதலால் கடன் தண்டல் அதிகரித்துள்ளது *(உ.வ.).*

ம. கசக்குக, கயக்குக; *குரு.* கச்னா, கச்சச்.

கசகச–த்தல் kaša-kaša-, *4 செ.கு.வி.* (v.i.) *1. இறுக்கத்தால் அல்லது புழுக்கத்தால் உடல் வியர்த்தல்;* to feel uneasy from clamminess due to perspiration on account of heat or sultriness. *உடம்பெல்லாம் கசகசத்துப் போயிற்று (உ.வ.). 2. ஒழுங்கற்று ஒலித்தல் (வின்.);* to sound rattle, as the crumpling of fine paper to rustle. *கூட்டம் தொடங்கும் முன் உறுப்பினர்கள் கசகச வென்று பேசிக்கொண்டனர் (உ.வ.).*

கசகு[1]–தல் kašagu-, *9 செ.கு.வி.* (v.i.) *1. பின்வாங்குதல்;* to be unwilling, reluctant. *2. நழுவுதல்;* to skid, slip. *3. ஐயத்தால் தளர்தல்;* to have misgivings; to show hesitancy.

கசகு[2]–தல் kašagu-, *9 செ.கு.வி.* (v.i.) *பண்டமாற்று முதலியவற்றில் சிறு ஊதியம் கருதிச் சொல்லாடுதல்;* to bargain.

கசங்கு–தல் kašaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. குழைதல்;* to be squeezed, crumpled, rubbed, as a leaf. *2. தொடுவதால் மெல்லிய பொருள் தன் நிலை கெடுதல்;* to lose freshness, as a flower that has been much handled. *மலர்கள் கசங்கிவிட்டன (உ.வ.). 3. வேலையினால் இளைத்தல்;* to be exhausted, worn out by labour; to become wearied, as by walking too much. *பணிச்சுமையால் கசங்கிவிட்டான் (உ.வ.). 4. மனம் நோதல்;* to be displeased, hurt in mind. *அவனுடைய மனம் கசங்கிப் போயிற்று (உ.வ.).*

ம. கசங்க; குரு. கச்னா.

கசி–தல் kaši-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஈரங்கசிதல்;* to ooze out as moisture from a wall; to spread as humidity around a water body. *சென்ற மழையில் மேற்றிசைச் சுவர் முழுவதும் கசிந்தது (உ.வ.). 2. நுண்துளை வழியாக வளி முதலியன வெளியேறுதல்;* to leak as gases through pores. *நச்சுக்காற்றுக் கசிந்தால் உயிருக்கு ஏதம் ஏற்படும் (உ.வ.). 3. ஊறுதல்;* water coming out from sand bed. *ஆற்றுப்படுகையில் பல கசிவு வாய்க்கால்கள் தோன்றுவதுண்டு (உ.வ.). 4. வியர்த்தல்;* to perspire as the hands and feet. *கடும் உழைப்பால் வியர்வை கசிந்தது (உ.வ.). 5. குருதி, கண்ணீர், சீழ் முதலியன அரும்பி ஒழுகுதல்;* to dribble as of blood tears, pus etc. *கடிவாயிலிருந்து குருதி கசிந்துகொண்டிருக்கிறது (உ.வ.). 6. அழுதல் (திவா.);* to weep. *7. உப்பு, வெல்லம் முதலியன இளகுதல்;* to melt as of salt, jaggery etc. *மழைச்சாரலால் உப்புக் கசிந்துவிட்டது (உ.வ.). 8. மனம் நெகிழ்தல்;* to relent as the heart in pity. *"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" (தேவா.3,307:1).* 9. *கவலைப்படுதல் (நாநார்த்த);* to be distressed, troubled.

க. கசி; கசபா.

கஞல்[1](லு)–தல் kañal-, *13 செ.கு.வி.* (v.i.) *1. நெருங்குதல்;* to be close, crowded, to be densely packed. *"புதுமலர் கஞல" (புறநா.147:8). 2. சிறிதாதல்;* to wear out, to attenuate. *3. சினத்தல் (திவா.);* to become enraged. *4. செறிதல்;* crowded. *"துவரப் புலர்ந்து தூமலர் கஞலித் தகரம் நாறும் தண்ணறுங் கதுப்பிற் புதுமண மகடூஉ" (அகநா.141:12-13).*

கஞல்[2](லு)–தல் kañal-, *13 செ.கு.வி.* (v.i.) *1. எழுதல் (பிங்.);* to rise, ascend. *2. சிறப்புறுதல் (திவா.);* to flourish, prosper. *3. மிகுதியாதல், ஊறுதல் (திவா.);* to abound. *4. விளங்குதல்;* to be prominent; to shine forth. *"நூல் கஞலு மார்பன்" கம்பரா.அயோத்தியா.கைகேசி.99).*

கஞற்று–தல் kañaṟṟu-, *8 செ.குன்றாவி.* (v.t.) *1. நிரப்புதல்;* to fill, cause to be filled. *"தீர்த்தமும்... கஞற்றினார்" (திருவானைக்.அகிலா.73). 2. செய்தல்;* to do, perform. *"பூசனை கஞற்றி" (தணிகைப்பு.அகத்.257).*

கட்கு–தல் kaṭku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *களைதல்;* weed out. *"சிறுமா ணெய்த லாம்பலொடு கட்கும் மலங்குமிளிர் செறு" (புறநா.61:2).*

கட்டவிழ்–தல் kaṭṭaviḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *1. முடிச்சு அவிழ்தல்;* to loosen the knot. *2. முறுக்கு நெகிழ்தல்;* to loosen as the petals of a flower. *"கட்டவிழ் கண்ணி வேய்ந்து" (திருவிளை.உக்கிர.வேல்வளை.42). 3. ஒற்றுமை நீக்குதல்;* become disunited.

பட. கட்டகி

கட்டழி[1]–தல் kaṭṭaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) *கட்டுக்குலைதல்;* to lose vigour; to become shattered, as in health. *"சரீரங் கட்டழிந்து" (ஈடு.6.1:4).*

கட்டழி[2]–த்தல் kaṭṭaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நிலை கெடுத்தல்;* to ruin, degrade; to cause humiliation. *"இலங்கை கட்டழித்தவன்" (திவ்.திருச்சந்.54). 2. காவலைச் சிதைத்தல்;* to deprive of protection. *"கடிமதிலுங் கட்டழித்த" (சீவக.1245). 3. கற்பைக் குலைத்தல்;* to seduce.

கட்டளையிடு–தல் kaṭṭaḷai-y-iḍu-, *20 செ.குன்றாவி.* (v.t.) *1. பணித்தல்;* order, command, direct, prescribe. *'சர்வ மானியமாகக் கட்டளையிட்டு'* (S.I.I.V.452A10). *2. வழங்குதல்;* to bestow. *3. முடிவாக உரைத்தல்;* utter a decision. *நமக்கீசனிட்ட கட்டளை இதுதான் (உ.வ.).*

கட்டிக்கொடு–த்தல் kaṭṭi-k-koḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பெண்ணுக்குத் திருமணம் செய்தல்;* to give a girl in marriage. *2. மிகவும் உதவுதல்;* to help liberally; to pay handsomely. *3. ஈடுசெய்தல்;* to make good, as loses, compensate. *4. சோறு முதலியவற்றைப் பயணத் திற்காக கட்டித்தருதல்;* to pack food for travel. *'கட்டிக்கொடுத்த சோறும் சொல்லிக்கொடுத்த சொல்லும் எதுவரைக்கும்?' (பழ.).*

கட்டிக்கொள்(ளு)[1]–தல் kaṭṭi-k-koḷ-, *7 செ.குன்றாவி.* (v.t.) *1. தழுவுதல்;* to hug; embrace. *இறுகக் கட்டிக்கொண்டு கண்ணீருடன் வழியனுப்பினான் (உ.வ.). 2. மணம் செய்துகொள்ளுதல்;* to marry. *முறைப்பெண்ணைக்*

கட்டிக்கொள்ள இவனுக்கு விருப்பமில்லை (உ.வ.). 3. பற்றுதல்; to cling to. *அவ்வேலையைக் கட்டிக் கொண்டு இன்னலுறுகிறான் (உ.வ.). 4. வயமாக்குதல்;* to bring within one's power or influence; to bring round; conciliate. *அவன் தன் பக்கமாக இருக்கும்படி எல்லாரையும் கட்டிக்கொண்டான் (உ.வ.). 5. ஏற்றுக்கொள்ளுதல்;* to lay up; accumulate, as virtuous deeds to store up; as sins for future retribution. *அந்தப் புண்ணியத்தை அவன் கட்டிக் கொண்டான் (உ.வ.). 6. பறித்தல்;* to seize, acquire, annexe, take unjustly. *அவன் அனைத்தையும் கட்டிக்கொண்டு போனதால் இவன் ஏதிலியானான் (உ.வ.).*

தெ. கட்டுகொனு

கட்டிக்கொள்(ளு)²–தல் kaṭṭi-k-koḷ-, *7 செ.குன்றாவி.* (v.t.) *உடுத்தல்;* to tie around as a garment.

கட்டிப்பிடி–த்தல் kaṭṭi-p-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. இறுகத் தழுவுதல்;* to hug, embrace. *2. குளிர்சுரம் முதலிய நோய்களினாலும், அன்பு, அச்சம், காமம் முதலிய மனவேறுபாடுகளினாலும் தனக்குத்தானே இறுகத் தழுவுதல்;* grasp or seize by himself indelirium etc. *3. செலவை மிகச் சுருக்குதல்;* to practice severe economy.

ம. கெட்டிப்பிடிக்குக; **Thai.** kord.

கட்டிப்புரள்–தல் kaṭṭi-p-puraḷ-, *12 செ.கு.வி.* (v.i.) *ஒருவரை ஒருவர் வலிமையாகப் பிடித்துக்கொண்டு உருளுதல்;* to roll over, one holding the other as in a fight. *அவர்கள் கட்டிப்புரண்டு சண்டையிட்டார்கள் (உ.வ.).*

கட்டிபிடி¹–த்தல் kaṭṭi-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *கூழ், உப்புமா, களி முதலிய உணவுப் பொருள் ஆக்கும் போது சரியாகக் கிண்டி விடாததால் கட்டிகட்டியாக நின்றுவிடுதல்;* to form into a lump while preparing porridge - like eatable *(சா.அக.).*

கட்டிபிடி²–த்தல் kaṭṭi-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வெல்லம் பிடித்தல்;* to give a shape of balls as of jaggery. *இன்று எத்தனை கொப்பரைப் பாகினைக் கட்டிபிடித்தீர்?*

கட்டு¹–தல் kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பிணைத்தல்;* to tie, to bind, fasten, shackle. "*நாரினாற் கட்டி*" *(நாலடி.153). 2. அமைத்தல்;* to build; construct, erect. *'திருமணம் செய்து பார்; வீட்டைக் கட்டிப்பார்' (பழ.). 3. பதித்தல்;* to fix. *அட்டிகைக்குக் கல்கட்டிக் கொடு (உ.வ.). 4. தோற்றுவித்தல்;* to establish as a theory. "*கட்டிய மெய்ந்நிலை காணா வெகுளியும்*" *(திரிகடு.65). 5. தழுவுதல்;* to hug, embrace. "*கால்கள் கால்களோடு கட்டவும்*" *(பாரத.வேத்.60). 6. தாலிபூட்டி மணத்தல்;* to marry. *அத்தை மகளை இவன் கட்டிக்கொள்வான் (உ.வ.). 7. இறுகச் செய்தல்;* to harden, condense, consolidate. "*கட்டுச்சரக் கெல்லாம்*" *(பணவிடு.226).*

தெ., க. கட்டு; ம. கெட்டு; கோத. கட்; து., கொர. கட்டி; குட. கேட்; கொலா. கட்; நா., கோண். கட்ட்; பர். கட்ட், கட், கட.

Egypt. q-d; Hung. kōto; **Qst.** *kattem*; **Syr.** *kuta*; **Fin.** *keitt;* **Lap.** *kareto;* **Si.** *kuda.*

கட்டு²–தல் kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பேணுதல்;* to support; sustain. *'நான் என்னுடம்பைக் கட்டிக் கொண்டு கிடக்கவோ' (ஈடு.4.8:9). 2. வெல்லுதல்;* to win, checkmate, overcome. *3. அடக்குதல்;* to control. *இவன் ஆவியைக் கட்டுவதில் வல்லவன் (உ.வ.). 4. ஒரு வரம்பிற்குள் அடக்கிவைத்தல்;* to thrust into a limited space. *அனைத்துத் தட்டுமுட்டுச் சாமான்களையும் இந்தப் பெட்டியிலேயே கட்டிவை (உ.வ.).*

கட்டு³–தல் kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சூடுதல்;* to tie on, adorn with. "*கட்டுதிர் கோதை*" *(கல்லா.10). 2. உடுத்தல்;* to wear, to be dressed in, to put on as clothes. "*கட்டப் புடவையின்றி*" *(பணவிடு.160).*

கட்டு⁴–தல் kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தடை செய்தல்;* to bind by spells, magic. "*கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்*" *(தாயு.தேசோ.8). 2. மூடுதல்;* to shut up, close up. *நேரமாகிவிட்டது கடையைக் கட்டு (உ.வ.). 3. விலக்குதல்;* to make aloof, remove. *4. பஞ்சாயத்திற்குக் கட்டுப்படாததால் ஊர்ப் பணியாளர்களைக் கட்டிவிட்டார்கள் (உ.வ.).*

கட்டு⁵–தல் kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. செலுத்துதல்;* to remit; pay up. *தேர்வுக்கட்டணம் கட்டியாயிற்று (உ.வ.). 2. பொருள் சேர்த்தல்;* to acquire. *'இவர் கவிபாடிக் கட்டினயானை' (ஈடு.3.9:1). 3. மொத்தமாகச் சேர்த்தல்;* to store, gather, together. *நெல் கிடைக்கும்போது வாங்கிக்கட்டு (உ.வ.). 4. தேக்குதல்;* to fill, as a tank with water. *ஓடைநீரைக் குளத்தில் கட்டு (உ.வ.). 5. சோறு கட்டிக் கொடுத்தல்;* to prepare packed meals for tour etc. *6. அயலூருக்குப் பண்டம் அனுப்புதல்;* to export. *7. சுற்றுதல்;* to wander. *உலகத்தைக் கட்டி வந்தவன் (உ.வ.).*

கட்டு⁶–தல் kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *செய்யுள் இயற்றுதல்;* to compose, as verse. *கவிஞன் கட்டிய பாட்டு (உ.வ.). 2. பொய்யாகப் புனைதல்;* to fabricate; contrive, invent. "*பறிதலையவர்கள் கட்டிய மொழி*" *(தேவா.553:10).*

கட்டு⁷–தல் kaṭṭu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. பிடுங்குதல்;* to pluck, to pull off. "*அடாத வான்களைக் கட்டினர்*" *(கந்தபு. திருநாட்டு.15).*

கட்டு⁸–தல் kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.t.) *1. இறுகுதல்;* to harden, consolidate, form, as concretions; to congeal, coagulate. *நெறி கட்டிற்று (உ.வ.). 2. தொண்டை கட்டுதல்;* to be congested, as the throat in acute pharyngitis. *3. புண்கட்டி திரளுதல்;* to swell, as a boil, or a tumour. *4. முகில் மூடுதல்;* to overspread as clouds. *மேகங் கட்டியிருக்கிறது (உ.வ.). 5. செலவோடு வரவு பொருந்துதல்;* to be worth while, just paying. *இந்த விலைக்கு விற்றால் கட்டும் (உ.வ.). 6. இணையாதல்;* to compare with, to be equal to. *அதற்கு*

இது கட்டாது (உவ.). 7. கையை மடக்கிவைத்தல்; fold. கையைக் கட்டிக்கொண்டு நின்றான் (உ.வ.). 8. பிணைத்தல், பூட்டுதல்; yoke. வண்டி கட்டிக் கொண்டு ஊருக்குப் போனான் (உ.வ.).

கட்டுக்குலை–தல் kaṭṭu-k-kulai-, 17 செ.கு.வி. (v.i.) 1. அவிழ்தல்; to become loose. ஏற்றி இறக்கும் பொழுது கட்டுக்குலையாமல் பார்த்துக்கொள் (உ.வ.). 2. ஒற்றுமை கெடுதல்; to be disassociated. தலைவர் சரியில்லாததால் கட்சி கட்டுக்குலைந்து விட்டது (உ.வ.). 3. நிலைகெடுதல்; to be deranged, upset. வணிக நட்டத்தினால் கட்டுக் குலைந்துவிட்டான் (உ.வ.). 4. மனம் குழைதல்; to loose one's heart, become melted, softened. அக்கதையைக் கேட்டு நான் கட்டுக் குலைந்து போனேன் (உ.வ.). 5. சினத்தல்; to show signs of anger.

கட்டுடை–தல் kaṭṭuḍai-, 2 செ.கு.வி. (v.i.) 1. நோய், மூப்பு ஆகியவற்றால் உடல் தளர்வுறுதல்; to suffer a breakdown in constitution. 2. பூ முறுக்கவிழ்தல்; to blossom, open the petals. 3. கொப்புளம் உடைதல்; to open, as of a boil. 4. நெறி முறை (விதி) அல்லது உறுதியினின்று தளர்வுறுதல்; to violate a rule or fail to keep a promise. 5. கட்டமைப்புச் சிதைவுறுதல்; to be dissolved as of an association, committee etc.

க. கட்டொடெ

கட்டுடை–த்தல் kaṭṭuḍai-, 2 செ.கு.வி. (v.t.) 1. அஞ்சல் (மடல்) கட்டிய பையை உடைத்தல் (வின்.); to brak the seal, as of a letter bag. 2. கருத்தை வெளிப்படுத்துதல்; to reveal one's mind. 3. கரையுடைத்தல் (வின்.); to make a breach of banks in a channel. 4. மந்திரத்தினால் உடம்பு தளர்ச்சி அடையும்படி செய்தல்; to cause breakdown of constitution through sorcery. 5. கட்டி, புண் இவை உடையும்படி செய்தல்; to cause boils and abcessess to open (சா.அக.).

கட்டுப்படு–தல் kaṭṭu-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. கட்டுக்குள் அடங்குதல்; to yield, to submit; to be influenced by; to become bound, as by a compact or engagement. ஆசிரியர் ஆணைக்கு மாணவர்கள் கட்டுப்படுவர் (உ.வ.). 2. தடைப்படுதல்; to be constipated, to be obstructed, as blood, as fluid in the system. 3. கட்டப்படுதல்; to be worn, to be tied.

ம. கெட்டுபெடுக; தெ. கட்டுபடு; க. கட்டும்படு, கட்டுபடு, கட்டுவடு.

கட்டுப்படு–த்தல் kaṭṭu-p-paḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுவிச்சிபாற் குறிகேட்டல்; to consult omens, signs, as through a female soothsayer. "கட்டுப்படுத்திரே லாரானு மெய்ப்படுவன்" (திவ்.இயற்.சிறிய திரு ம. 19). 2. பிடித்தல், கட்டுதல்; to bind, to tie, to fetter, as culprits. 3. ஒழுங்குபடுத்துதல்; to make a regulation, to order, to discipline.

மறுவ. கட்டுப்படுத்தி

கட்டுப்படியாகு–தல் kaṭṭu-paḍi-y-āgu-, 7 செ.கு.வி. (v.i.) 1. போதியதாய் இருத்தல்; to be enough. சம்பளம் எனக்குக் கட்டுபடியாகவில்லை (உ.வ.). 2. ஈடுகொடுத்தல்; to meet adequately. சம்பளத்தில் பாதி கொடுத்தால்தான் செலவுக்குக் கட்டுபடியாகும் (உ.வ.).

மறுவ. கட்டுபடியாதல்

கட்டுவி–த்தல் kaṭṭuvi-, பி.வி. (caus.) ஏற்பாடு செய்வித்தல்; to arrange. "காவலன்நான் நிபந்தங்கள் கட்டுவித்தே" (திருத்தொண்டர் புராணசார.31).

கட்டைகட்டு–தல் kaṭṭai-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. கொண்டி மாட்டுக்குத் தடி கட்டுதல்; to suspend a piece of wood from the neck of an unruly cow so that the block may act as a drag and thus prevent the animal from straying away. 2. ஒரு நிலையில் இல்லாத இளைஞனை மணம் புரிவித்து இணைத்து வைத்தல் (இ.வ.); lit., to bind or yoke, fig., to unite a person in marriage that he may there after be obliged to lead a steady life.

கட–த்தல் kaḍa-, 3 செ.கு.வி. (v.i.) 1. கடந்து போதல்; to pass through; to traverse, cross, as a river, a country. "கடக்கருங் கானத்து" (நாலடி.398). 2. தாவுதல் (திவா.); to jump over, step over. 3. மேற்படுதல் (திவா); to exceed, excel, surpass, transcend. "கரும்பையும் கடந்த சொல்லாள்" (கம்பரா.கிட்கிந்தா.நாடவிட்.36). 4. மீறுதல்; to transgress, disobey, contravene, violate, as a rule, a command, a custom. "கவராக் கேள்வியோர் கடவாராகலின்" (மணிமே.1:10). 5. அளத்தல்; to measure. "இருநிலங் கடந்த திருமறு மார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை" (பெரும்பாண்.29). 6. நீங்குதல்; to keep clear of, get away from, escape from, as the world, the sea of births. "நேசத்தால் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை, ஆண்டானே" (திருவா.5:24). 7. நேரே பொருதல்; to openly resist. "சிலம்பிற் சிலம்பிசை ஓவாது ஒன்னார்க் கடந்தட்டான் கேழிருங் குன்று (பரிபா.15:45). 8. வெல்லுதல்; to win, overcome, conquer, vanquish. "பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர் ஆராச் செருவின் ஐவர் போல" (பெரும்பாண்.416,17). 9. அழித்தல்; to destroy. "வெப்புடைய வரண்கடந்து துப்புறுவர்" (புறநா.11:8).

ம. கடக்க; தெ. கடட்சு; கோத. கர்வ்; துட. கட்; பட. கடெ; து. கடபுனி; **Russ.**kod.

கடகட–த்தல் kaḍa-kaḍa-, 3 செ.கு.வி. (v.i.) 1. நெகிழ்வடைதல்; to become loose, as teeth. பல்லெல்லாங் கடகடத்துப் போயிற்று (உ.வ.). 2. ஆட்டங்கொடுத்தல்; to rattle, as a pin in a jewel. கொலுசுத் திருகாணி கடகடத்திருக்கிறது (உ.வ.).

ப. கடகட

கடத்து–தல் kaḍattu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செலுத்துதல்; to cause to go; to drive. 2. கடப்பித்தல்; to transport, carry

across. "அடியார் பவக்கடலைக் கடத்துமணியை" (திருப்போ.சந்த பிள்ளைக் காப்பு.6.). 3. காலம் போக்குதல்; to pass, as time. இளமையில் கல்லாமல் நாளைக் கடத்தி விட்டான் (உ.வ.). 4. குழப்புதல்; to do carelessly, as work; to dawdle. அவன் வேலையைக் கடத்துகிறான் (உ.வ.). 5. வானூர்தி முதலியவற்றை அச்சுறுத்திக் கொண்டு செல்லுதல்; hijack. 6. தடை செய்யப்பட்ட பொருள்களை - ஆள்களை இசைவின்றிக் கொண்டு போதல்; kidnap, smuggle. போதைப் பொருள்களைக் கடத்துதல் சட்ட மீறலாகும் (உ.வ.). 7. விலக்குதல்; to remove.

க. கடெகாயிசு; ம. கடத்துக; தெ. கடபு, கடுபு; து. கடபாவுனி; கோத., துட. கட்த்; பட. கடுசு. கசபா. கய்த்தி.

கடம்படு[1]–தல் kaḍam-paḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) நேர்ந்துகொள்ளுதல்; to devote, as fruits etc., to the temple, in pursuance of a vow. "கருவயிறு றுகெனக் கடம்படு வோரும்" (பரிபா.8:106).

கடம்படு[2]–தல் kaḍam-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) சினமடைதல்; to be angry, to grow indignant.

கடல்–தல் kaḍal-, *13 செ.கு.வி.* (v.i.) அகலுதல் விரிதல்; to expand, to extend.

தெ. கடலு

கடவு–தல் kaḍavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* செலுத்துதல்; to cause to go; to ride, drive, as animal or vehicle. "ஆனந்த மாக் கடவி" (திருவாச.35:4). *2.* விரைவுபடுத்துதல்; to speed up. *3.* முடுக்குதல்; to urge. "விரைபரி கடவி" (பு.வெ,1:8). *4.* ஓட்டுதல்; to drive as animals. *5.* படைக்கலன் செலுத்துதல்; to despatch, to discharge, as a missile. *6.* உசாவுதல்; to enquire. "யான்தற் கடவின்" (குறுந்.276).

ம. கடவுக; க. கடயிசு; கோத. கட்த; து. கடபாபுளி; கே. கடப்பு; குரு. கற்னான; மால. கட்டத்ரே.

கடன்கழி–த்தல் kaḍaṉ-kaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* கடமையைச் செய்தல்; to perform a duty, as repaying a kindness. "செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்" (பாரத. பதினேழாம்.248). *2.* சமயச் செய்கைக்குரிய செயல்களைச் செய்தல்; to perform the rites enjoined by religion. *3.* மனமின்றிச் செய்தல் (வின்.); to do a service for another out of mere compliment and not heartily.

கடன்படு–தல் kaḍaṉ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.* கடனுக் குள்ளாதல்; to become indebted. "தாளளாள னென்பான் கடன்படா வாழ்பவன்" (திரகிடு.12). *2.* செய்த உதவிக்குக் கைம்மாறு செய்யும் உணர்வில் இருத்தல்; to feel a debt of gratitude to some one.

ம. கடப்பெருக; து. கடதெப்புனி

கடன்வாங்கு–தல் kaḍaṉ-vāṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* பிறரிடமிருந்து வட்டிக்குப் பணம் பெறுதல்; to borrow money, contract a debt. 'கடன்வாங்கிக் கடன் கொடுத்தவனும் செத்தான், மரமேறிக் கை விட்டவனும் செத்தான்' (பழ.). *2.* ஒரு மொழியினின்று இன்னொரு மொழி சொல்லையும் இலக்கணக் கூறுகளையும் கடன் வாங்குதல்; to borrow words and other grammatical elements from other languages. *3.*கணிதத்தில் ஓர் இடமதிப்பிலிருந்து ஓர் எண்ணைக் கடன் வாங்குதல்; to borrow from next decimal number, in deduction.

கடனடை–த்தல் kaḍaṉ-aḍai-, *4 செ.குன்றாவி.*(v.t.) வாங்கின கடனைத் திருப்பித் தருதல்; to discharge, pay off a debt.

கடா–தல் kaḍā-, *5 செ.குன்றாவி.* (v.t.) வினாதல்; to inquire, question. "ஈங்குளவோ வென்னைக் கடாதலும்" (காஞ்சிப்பு.திருநகர.58).

கடாவு–தல் kaḍāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* ஏவுதல்; to discharge, as missiles; to propel."கடாயின கொண்டொல்கும் வல்லி" (திவ்.இயற்.திருவிருந்.6). *2.* செலுத்துதல்; to ride, as an animal; to drive, as a car. "தேர்கடாவி" (தேவா.839,3). *3.* ஆணி முதலியன அறைதல்; to drive in, as a nail, a peg, a wedge; to nail on; to join by nail as boards. "கவியாப்பைக் கடாவுவனே" (தனிப்பா.171.24). *4.* குட்டுதல்; to buffet, cuff. "வேதன் பொற் சிரமீது கடாவி" (திருப்பு.164). *5.* வினாவுதல் (திவா.); to interrogate, question. *6.* தூண்டுதல்; to urge, impel, influence. இயற்கை யன்பினானும்... செயற்கை யன்பினானும் கடாவப்பட்டு (திருக்கோ.11,உரை).

மறுவ. கடாவல்

ம. கடாவுக; க. கடாயிசு; தெ. கடவு; து. கடபாவுனி.

கடி[3]–த்தல் kaḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.* பல்லாற் கடித்தல்; to bite with teeth. "கடித்த வாயிலே" (திருவாச.41:37). *2.* பற்களை இடுக்கி நெரித்தல்; to clench teeth. பல்லைக் கடித்துக் கொண்டு கையை ஓங்கினான். *3.* உண்பதற்காகக் கடித்தல், கறித்தல்; to bite off, as a piece of bread. 'கடித்தவாய் துடைத்தாற் போல்' (பழ.). *4.* மெல்லுதல்; to chew. கடித்துண்ணுதல் உடலுக்கு நல்லது (உ.வ.). *5.* பாம்பு முதலியன தீண்டுதல்; to bite, as snake. "காலைச் சுற்றின பாம்பு கடிக்காமல் விடாது" (பழ.). *6.* கொடுக்கால் கொட்டுதல்; to sting, as of scorpion. *7.* பூச்சிகடித்தல்; to puncture as of mosquito. கொசுக்கடி தொல்லை தாளவில்லை. *8.* சிறுபூச்சி அரித்தல்; to gnaw, gnash. புத்தகத்தைப் பூச்சி கடித்துவிட்டது (உ.வ.). 9. தேனீப் போன்றவை கொட்டுதல்; to smart as of bee. குளவி கடித்தால் தடிக்கும் (உ.வ.). 10. துண்டித்தல்; to cut off. "கடித்துக் கரும்பினை" (நாலடி.156). 11. வடுப்படுத்துதல்; to pinch, hurt. "பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே" (கலித்.96:30). 12. செத்தி

எடுத்தல்; to chip as a plank. 13. குழித்தல்; to dig as a well ditch, etc.

ம. கடிக்குக; க. கடி; தெ. கரசு, கரன்சு; து. கடெபினி, கடெயுனி, கடெவுனி; கோத. கயிட், கட்ச்; துட. கொட்ய, கொட்ச்; குட. கடி; கொலா. கச்ச்; பர். கட்; கட. கச்; கோண். கச்கானா, கசானர்; கூ. கசி, கச; குவி. கசலி; குரு. கச்னா; மா. கக்வே; பிரா. கட்ட்; பட. கச்சு.

கடி[4]–த்தல் kaḍi, *4 செ.கு.வி.* (v.i.) *1. கமழ்தல்;* to waft an aroma; to emit fragrance. "துழாய்க் கடிக்கும்" *(அஷ்டப். திருவரங்கத்தந்.43). 2. நிறைவேறுதல்;* to be successful. "கடிக்கும் பணியறமெல்லாம்" *(அஷ்டப். திருவரங்கத்தந்.43).*

கடி[5]–த்தல் kaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கவ்வுதல்;* to gorge, to cram in to mouth, to seize with a mouth. *2. இறுகப் பிடித்தல்;* to hold. *3. ஒன்றாக இணைத்தல்;* to join. *4. விடாது பற்றுதல்;* to clutch. *5. வயிறு வலித்தல்;* to be painful as of stomach. *6. கயிறு முதலியன இறுகப் பிடித்தல்;* to be tight. அரைநாண் இடுப்பிற் கடித்துக் கொண்டிருக்கிறது.

கடி[6]–த்தல் kaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மிகுதல்;* to be excess. *2. காரத்தன்மையாதல்;* to be pungent.

கடி[1]–தல் kaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. விலக்குதல்;* to exclude, discard, reject renounce, disapprove. "கொடிது கடிந்து கோற்றிருத்தி" *(புறநா.17:5). 2. ஓட்டுதல்;* to scare away drive off, as birds. "கலாஅற் கிளிகடியும்" *(நாலடி.283). 3. ஒழித்தல்;* to get rid off. "குடிபுறங்காத்தோம்பிக் குற்றங் கடிதல் வடுவன்று வேந்தன் தொழில்" *(குறள்.549). 4. அரிதல்;* to cut away. "தங்கை மூக்கினைக் கடிந்துநின்றான்" *(கம்பரா.ஆரண்ய. மாரீச.83). 5. அழித்தல்;* to destroy. "செற்றவனை யினிக்கடியுந் திற மெவ்வாறு" *(பெரியபு.திருநாவுக்.108).*

ம. கடியுக *(முள்ளிலிருநது மூங்கிலை விலக்குதல்)*; க. கடி; து. கடி, கட்; குரு. கட்நா; மால். கடெ; தெ. கடி *(கவளம்)*, கடி கண்டலு *(துண்டுகள்)*.

கடி[2]–தல் kaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. குற்றஞ் செய்தவனைச் சினந்து கண்டித்தல்;* to rebuke. "குற்றங்கண் டெனைநீ டியவம் போதமுன் கண்ட துண்டோ" *(மருதூரந்.56). 2. அடக்குதல்;* to restrain, subdue, as the senses; to overmaster, overpower. "ஐம்புலன் கடிந்து நின்றே" *(அறிவானந்த சித்தியார்:வின்.).*

கடு[1]–தல் kaḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வெட்டுதல்;* to cut. *2. களை எடுத்தல்;* to weed. "கண்ணீலக் கடைசியர்கள் கடுங்களையிற் பிழைத்தொதுங்கி" *(பெரியபு. மானக்கஞ்.2.).*

கடு[2]–த்தல் kaḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நோவெடுத்தல், பூச்சிக்கடி முள் தைப்பு போன்றவற்றால் உடலில் குத்துவலி உண்டாதல்;* to throb and pain, as from a sting, a venomous bite, a prick or toothache. "நுணிங்கிக் கடுத்தலுந் தணிதலும் இன்றே" *(குறுந்.136). 2. உளைதல் (மூட்டுவலி, வயிற்றுளைச்சல், நடப்பதால் உண்டாகும் சோர்வு, சுமப்பதால் ஏற்படும் களைப்பு போன்றன);* to ache, as from rheumatism, colic or dysentery; to pain, as the leg from walking, the head from carrying a load, the arm from writing. "புணரிக ணீந்தி நீந்திக் கையிணை கடுத்து" *(பிரமோத்.4:53). 3. உறைத்தல்;* to be too highly seasoned, pungent, as curry. உணவில் உப்புக்கடுத்தால் சுவை கெடும் *(உ.வ.). 4. மிகுதல்;* to be full; to pervade. "நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்" *(குறள்,706).*

ம. கடுக்க; க., தெ., து., கொண். கடு; குட. கடிப; கொலா. கெடெட்; நா. கறு *(கசப்பு, புளிப்பு)*; கோண். கடி; கூ. கடிநோமொழி *(கடுங்காய்ச்சல்)*.

த. கடு → **Skt.**kat

கடு[3]–த்தல் kaḍu-, *4 செ.கு.வி.* (v.i.) விரைந்தோடுதல்; to move swiftly, run fast. "காலென கடுக்கும் கவின்பெறு தேரும்" *(மதுரைக்.388).*

கடு[4]–த்தல் kaḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சினத்தல்;* to be angry, indignant wrath. "மங்கையைக் கடுத்து" *(அரிச்சந்நகர்நீ.110). 2. வெறுத்தல்;* to dislike, detest, abhor. "பொன்பெய ருடையோன் தன்பெயர் கடுப்ப" *(கல்லா.5). 3. ஐயுறுதல்;* to doubt. "நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்தும்" *(கலித்.24). 4. ஒத்தல்;* to resemble. "அவிரறல் கடுக்கு மம்மென் குவையிருங் கூந்தல்" *(புறநா.25:13).*

கடுக்கு[1]–தல் kaḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) சினக்குறி காட்டுதல்; to show signs of indignation. "ராமதூத னானென்று கடுக்கி" *(இராமநா.உயுத்.62).*

கடுக்கு[2]–தல் kaḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நச்சுயிரிகளின் கடியினாலும் முள்ளின் குத்தலினாலும் கடிவாய் வலித்தல்;* to throb with pain due to venomous insect bite or pricking of thorn. *2. நரம்புத் தளர்வாலும், கடுங்குளிராலும் இசிவு ஏற்படுதல்;* to ache due to severe cold and weakness of nerves *(சா.அக.)*.

கடுகடு–த்தல் kaḍu-kaḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சினக் குறிப்புக் காட்டுதல்;* to show signs of anger, as by sour looks, harsh words, etc. "முகங்கடு கடுத்தான்" *(பிரபோத.11:46). 2. விறுவிறுப்போடு வலித்தல்;* to throb, as from the sting of a scorpion. தேள் கொட்டினால் கடுகடுவென்று இருக்கும். *3. உறைத்தல்;* to be too highly seasoned. கறி கடுகடுத்துப் போயிற்று.

தெ. கடகடா சூலிபடு *(சினப்படுதல்)*

கடுகு[1]–தல் kaḍugu-, *9 செ.கு.வி.* (v.i.) *1. விரைதல்;* to move fast; to blow hard, as wind. "கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்" *(மணிமே.14:80). 2. மிகுதல்;* to increase. "பசி கடுகுதலும்" *(இறை.1:6).*

ம. கடுகுக; க. கடு (விரைவு); குட. கடிப (விரைவு).

கடுகு[2]–தல் kaḍugu-, *9 செ.கு.வி.* (v.i.) குறைதல்; to diminish, grow short. "*உறைகடுகி ஒல்லைக் கெடும்*" *(குறள்,564).*

கடை[1]–தல் kaḍai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. கெட்டி நீர்மப் பொருளில் மத்துப் போன்றவற்றைக் கொண்டு சுழலச் செய்தல்;* to churn. "*நெய்கடை பாலின் பயன்யாதும் இன்றாகி*" *(கலித்.110:17). 2. மரம், இரும்புப் போன்ற வற்றைக் குடைதல்;* to turn in lathe. "*கடைந்த மணிச் செப்பென வீங்கு*" *(கூர்மபு.தக்கன்வே.52). 3. மசித்தல்;* to mash to a pulp. *4. அரைத்தல்;* to grind.

ம. கடயுக; க.டெ, கடி.; கோத. கட்வ்; துட. கட், கற்த்; குட. கடெ; து. கடெயுனி, கடெவுனி; மா. கட்யெ; கூ. கட்ச; **Skt.**khaja(stirring,churning).

கடை[2]–தல் kaḍai-, *2 செ.கு.வி.* (v.i.) மிகச் செய்தல், பெருகுதல்; to increase, as the passion of love "*காதலாற் கடைகின்றது காமமே*" *(சீவக.1308).*

கடை[3]–தல் kaḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அரித்தல்;* to trickle. "*கடையுங் கட்குரல்*" *(சீவக.1202). 2.தொண்டையில் ஏற்பட்ட சளியினால் கடைவது போன்ற ஒலியுண்டாதல்;* to rattle and wheeze, as the throat from accumulation of phlegm. *தொண்டையிற் கோழை கடைகிறது (இ.வ.).*

கடைகெடு–தல் kaḍai-keḍu-, *20 செ.கு.வி.* (v.i.) மிக இழிவடைதல்; to reach the stage of grovelling wretchedness. *'கடைகெட்ட மூளிக்குக் கோபம் கொண்டாட்டம்" (பழ.).*

கடைபரப்பு–தல் kaḍai-parappu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கடையில் பொருள்களைப் பரப்பி வைத்தல்;* to display of goods in a shop. *2. ஒரு செயல் செய்யும்பொழுது அது பார்ப்பவர்களுக்குப் பெரிதாகத் தோன்றுமாறு பலவற்றையும் பரப்பி வைத்தல்;* to make a show; to exhibit one's work in an attractive manner with intent more or less to deceive.

கடைப்பிடி–த்தல் kaḍai-p-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உறுதியாகப் பற்றுதல்;* to hold firmly to the end; to have an unwavering faith in. "*நன்மை கடைப்பிடி*" *(ஆ.சூ.).* 2. *தெளிவுறவறிதல்;* to ascertain clearly, know certainly, understand correctly. "*அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க*" *(குறள்,944). 3. மறவாதிருத்தல்;* to remember, bear in mind; to be grateful for as benefits. "*மற்றதன் கள்ளங் கடைப்பிடித்த னன்று*" *(நாலடி.20).* 4. *சேர்த்து வைத்தல்;* to accumulate, provide. "*வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை யறிந்து கடைப்பிடித்தலும்*" *(குறள்,51,உரை). 5. மேற் கொள்ளுதல்;* observe (mourning, etc.) *தலைவருக்கு இன்று துக்கநாள் கடைப்பிடிக்கப்படுகிறது (உ.வ.).*

கடையழி[1]–தல் kaḍai-y-aḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *தேய்தல் (யாழ். அக.);* to diminish by degrees.

கடையழி[2]–தல் kaḍai-y-aḻi, *2 செ.கு.வி.* (v.i.) *1. வருந்துதல்;* suffer, to be afflicted with a painful lingering disease *(யாழ்.அக.) . 2. மதிப்பிழத்தல்;* to lose respectabilites. *கணவனை இழந்ததில் கடையழிந்து போனேன் (நெல்லை.).*

கடையழி[3]–தல் kaḍai-y-aḻi-, *2 செ.கு.வி.*(v.i.) *1.வறுமையுறுதல்;* to be distressed with poverty. *2. கேடுறுதல்;* to degenerate.

கடைவிரி–த்தல் kaḍai-viri-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வணிகப் பொருள்களைப் பரப்புதல்;* to spread out goods in a shop for sale. " *கடைவிரித்தேன் கொள்வாரில்லை*" *(அருட்பா.). 2. பலர்முன் தன் ஆற்றலைச் சொல்லுதல்;* to brag, swagger about one's own abilities.

ம. கடவிரிக்குக

கண்கட்டு–தல் kaṇ-kaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *கண்ணைக் கட்டி விடுதல்;* to blind - fold. *2. மந்திரத்தால் கண்ணை மறைத்தல்;* to blind the eyes by magic. "*ஈதென்ன கண்கட்டு மாயம்*" *(இராமநா.ஆரணிய.28). 3. வஞ்சித்தல்;* to deceive.

ம. கண்கெட்டுக; க., பட. கண்கட்டு, கண்ணுகட்டு. து. கண்ணுகட்டுநி.

கண்கலங்கு–தல் kaṇ-kalaṅgu-, *7 செ.கு.வி.* (v.i.) தூசி முதலியன விழுதலால் கண்கலக்கமடைதல்; to be dimmed, as the eyes from dust, tears, etc. "*தண்ணிமையைக் கண்டிருக்க மாட்டாமற் கண்கலங்கு மாறன்*" *(திவ். திருவாய்.நூற்.39).*

கண்கவர்தல் kaṇ-kavar, *2 செ.கு.வி.*(v.i.) *பிறர் பார்வையை ஈர்த்தல்;* to fascinate, attract.

கண்காணி–த்தல் kaṇ-kāṇi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *மேலாய்வு செய்தல் (கல்வெட்டு);* to oversee, supervise, superintend.

ம. கண்காணிக்குக; தெ. கனிபெட்டு.

கண்டி–த்தல் kaṇḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. குற்றஞ் செய்தவன் திருந்துமாறு கடிந்து கூறுதல்;* to reprove, censure. *குழந்தையைத் தண்டிப்பதை விடக் கண்டிப்பதே மேல். 2. துண்டித்தல் (தி.வா.);* to chop mince, slash out into pieces. *கரும்பைக் கண்டித்துக்கொடு (உ.வ.). 3. பகிர்தல் (வின்.);* to divide. *காணி நிலத்தைக் கண்டிப்ப தெப்படி (உ.வ.). 4. பருத்தல்;* to grow fat. *ஆள் நன்றாய்க் கண்டித்திருக்கிறான் (இ.வ.). 5. வரையறைப்படுத்துதல்;* to prescribe. *பேசும் போதே கண்டித்துப் பேசிவிடு. 6. முடிவுகட்டிப் பேசுதல் (வின்.);* to have a precoeived talk. *வீட்டிற்கு வரமாட்டாயா? கண்டித்துச்சொல் (உ.வ.). 7.நோயைத் தணித்தல்;* to cure as of adisease. *இம்மருந்தை முறையாய் உண்டால் அந்நோயைக் கண்டிக்கும் (உ.வ.).*

த. கண்டி > **Skt.**khant

கண்டிப்புப்பண்ணு–தல் kaṇḍippu-p-paṇṇu-, *12 செ.குன்றாவி.* (v.t.) *திட்டம் செய்தல்;* to impose strict discipline. *கண்டிப்புப் பண்ணினால் கரை சேருவான் (உ.வ.).*

கண்டுபிடி–த்தல் kaṇḍupiḍi-, *4 செ.குன்றா.வி.* (v.t.) *1. ஆய்ந்து கண்டறிதல்;* to find out. *2. புதிதாகக் கண்டுபிடித்தல்;* to discover. *எடிசன் மின் விளக்கைக் கண்டுபிடித்தார் (உ.வ.). 3. தேடிக் கண்டுபிடித்தல்;* to search and find. *காவலர் திருடனைக் கண்டுபிடித்தனர் (உ.வ.). 4. உண்டாக்குதல்;* to invert. *மார்க்கோனி வானொலியைக் கண்டுபிடித்தார் (உ.வ.).*

ம. கண்டு பிடிக்குக; க., பட. கண்டுகிடி

கண்ணடி–த்தல் kaṇ-ṇ-aḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *கண்ணாற் குறிப்புக் காட்டல், கண்சாடை செய்தல்;* to instigate, to encourage by winking at.

மறுவ. கண்ணசைத்தல்

து. கண்ஒத்துநி

கண்ணடை[1]–தல் kaṇ-ṇ-aḍai-, *2 செ.கு.வி.*(v.t.) *1. துளை அடைபடுதல்;* to be blocked up, as a hole. *இடியப்பக்குழல் கண்ணடைந்து போயிற்று (உ.வ.). 2. பயிரின் குருத்துக் கண்ணடைதல்;* to cease shooting, as the head of a plant. *3. திரிந்து கேடுறுதல்;* to be spoiled, as milk when kept too long. *கண்டைந்த பால் (வின்.).*

கண்ணடை[2]–தல் kaṇṇ-aḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. கண் பஞ்சடைந்து போதல் ஒரு சாக்குறி;* to dim the eyes as symptom of death. *2. கண் நேர் கொள்ளுதல்;* to close the eyelid *(சா.அக.).*

கண்ணா–தல் kaṇṇā-, *6 செ.கு.வி.* (v.i.) *1. கருத்துவைத்தல்;* to be intently bent upon, mindful. *கருமமே கண்ணாயினார்". (நீதிநெறி.53). 2. அருமையாதல்;* to be as precious as the eye. *என் கண்ணான குழந்தை (உ.வ.).*

கண்ணாயிரு–த்தல் kaṇṇāyiru-, *2 செ.கு.வி.* (v.i.) *1. விழிப்பாயிருத்தல்;* to be watchful, vigilant, closely attentive; to look steadfastly. *2. அருமையாய் இருத்தல்;* to be dear, precious. *3. உன்னிப்பாயிருத்தல் (சா.அக.);* to look keen.

கண்ணிடு[1]–தல் kaṇ-ṇ-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. கண்ணால் பார்த்தல்;* to set an eye on, to aim. *2. இரக்க உணர்வுடன் நோக்குதல்;* to look upon with gracious favour. *3. கண்ணூறு தரும் வகையில் பார்த்தல்;* to cast an evil eye *4. (ஒன்றை) விரும்புதல், மனம் வைத்தல்;* to like. *5. விழிப்புடனிருத்தல், காவலிருத்தல்;* to be cautious, to guard.

மறுவ. கண்வைத்தல்

ம. கண்ணிடுக; க. கண்ணிடு; தெ. கன்னுந்த்சு.

கண்ணிடு[2]–தல் kaṇṇiḍu-, *செ.கு.வி.* (v.i.) *மை தீட்டுதல்;* apple collyrium. *அவள் கண்ணிட்டுக் காத்திருந்தாள் (உ.வ.).*

கண்ணு–தல் kaṇṇu-, *2 செ.குன்றாவி.* (v.t.) *பார்த்தல் (நாமதீப.);* to see.

கண்படு–தல் kaṇ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. உறக்கம் கொள்ளுதல்;* to sleep. "*அன்னங் கண்படு தண்பணை*" *(நைடத.நாட்டுப்.2). 2. பரவுதல்;* to spread over a surface. "*வயலும் புன்செய்யுங் கண்பட வேர்பூட்டி*" *(பு.வெ.12,வென்றிப்.4). 3.கண்ணோடுதல்;* to be in favour of, partial to. "*கண்பட்டாழ்ந்து நெகிழ்ந்து*" *(சிறுபஞ்.78). 4. கண்ணூறுபடுதல்;* to be affected by the evil eye. *என் பிள்ளைக்கு யார் கண்பட்டதோ? (உ.வ.).*

க. கண்படு

கண்புதை–தல் kaṇ-pudai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அறிவு கெடுதல்;* to weaken, as understanding. "*கண்புதைந்த மாந்தர்*" *(நல்வழி.28). 2.மறைத்தல், மூடப்பட்டு மறைதல்;* to lie covered and hidden. "*பாருருவும் பார்வளைத்த நீருருவங் கண்புதையக் காருருவன் நிமிர்ந்த கால்*" *(திவ்.இயற். பெரிய.திருவ.21).*

கண்மலர்–தல் kaṇ-malar-, *2 செ.கு.வி.* (v.i.) *விழித்தல்;* to open wide.

க. கண்மலர், கண்மலரு.

கண்வை[1]–த்தல் kaṇvai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அருள் செய்தல்;* to be benignant, gracious, kind. "*கண் வைத்தமரரை யோம்பிய கந்தன்*" *(தணிகைப்4.சீவரி.65). 2. பார்த்தல்;* to see. "*திசையில் கண் வைக்குந் தொறும்*" *(கம்பரா. பிணி.44.). 3. பெறுதற்கு ஆசை வைத்தல்;* to look wishfully, to gaze upon amourously. *அவன் அதனிடத்துக் கண் வைத்திருக்கிறான் (உ.வ.).*

க., பட. கண்ணு பீ; ம. கண்ணு வைக்குக.

கண்வை[2]–த்தல் kaṇvai-, *4 செ.கு.வி.* (v.i.) *கண்காணித்தல், நோட்டமிடுதல்;* to keep an eye, watch. *அவன் போக்குச்சரியில்லை, அவன் மேல் ஒரு கண்வை (உ.வ.).*

தெ. கனிபெட்டு, கணுபெட்டு

கண்வை[3]–த்தல் kaṇvai, *4 செ.கு.வி.*(v.i.) *கண்ணூறுபடுதல்;* to cast the evil eye. *அவன் கண்வைத்தால் அழிவு (உ.வ.).*

ம. கண்ண வைக்குக; க., பட. கண்ணுபீ

கண–த்தல் kaṇa-, *4 செ.குன்றாவி.* (v.i.) *1. கூடுதல்;* to come together. *2. பொருந்துதல்;* to agree, consent. *3. ஒத்தல்;* to be similer. *குரங்கு கணக்க ஓடுகிறான் (நெல்லை வழக்கு).*

கணி–த்தல் kaṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கணக்கிட்டுக் கண்டுபிடித்தல்;* to compute, reckon, calculate, count. *2. அளவிடுதல்;* to estimate, conjecture, surmise. "*கணித்த நாள்களேழ்*" *(சீவக.2518). 3. மதித்தல்;* to esteem, honour,

respect. அவன் என்னைக் கணிக்கவில்லை (இ.வ.). 4. படித்தல்; to study. "கணியாது முழுதுணர்ந்த" (சூளா.இரத.64). 5. தோற்றுவித்தல்; to create. "மலரின் மேலான் கணித்த வுலகு." (பிரமோத்.21,53). 6. நெஞ்சாரப் போற்றுதல்; to repeat mentally in worship as mantram. "திருவஞ்செழுத்து அவ்விதிப்படியறிந்து கணிக்கப் படும்" (சி.போ.பா.). 7. கருதுதல் (கருநா.); to see, to consider.

க. கணிசு; த. கணி > **Skt**.gan

Sinha.ganinne; **Portu.**contar,cimin,giri.

கணீரிடு–தல் kaṇīriḍu-, *20 செ.கு.வி.* (v.i.) வெண்கலம் போன்று ஒலித்தல்; to sound as of the brass.

கத்தரி[1]**–த்தல்** kattari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* சிறிது சிறிதாய் வெட்டியறுத்தல்; to cut with scissors, clip, snip, shear. *2.* புழுவரித்தல்; to gnaw, nibble off, as insects, as vermin. செடியை எலி கத்தரித்து விட்டது (உ.வ.). 3. அறுத்தல்; to cut away, to chop off. "தலைபத்துங் கத்தரிக்க வெய்தபுன்" (கந்தரலங்.22). 4. நட்புப் பிரித்தல்; to separate from, break away from friendship. அவன் தொடர்பைக் கத்தரித்துக் கொள் (உ.வ.).

க. கத்தரிசு; தெ. கத்திரிஞ்சு, கத்தரில்லு; து. கத்தெரியுனி, கத்தெருனி.

கத்தரி[2]**–த்தல்** kattari-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* நெருப்பு ஒழுங்காய்ப் பற்றாமல் இடைவிடுதல்; to flash, as priming powder, to go out, as a match or a lighted bamboo. *2.* கவராதல்; to divide, fork, as a path, to branch off. "கழி கத்தரித்துப் போகிறது". 3. மாறுபடுதல்; to change, alter, as fortune. "ஆ கூழ்க் கத்தரித்துப் போயிற்று" (உ.வ.).

கத்து[1]**–தல்** kattu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* காக்கை கரைதல், மயில் அகவுதல், குயில் கூவுதல், கோழி, கவுதாரி போன்றன கொக்கரித்தல், நாய் குரைத்தல், நரி ஊளையிடுதல், யானை பிளிறல், அரிமா உரப்புதல், வரிமா உறுமுதல், குதிரை கனைத்தல், வண்டு முரலுதல், மாடு, கழுதை, தவளை, பூனை போன்றவை கத்துதல்; to caw as a crow, to screch as a peacock, to coo as a cuckoo, to chuck as a partridege and cock, to yelp as a puppy, to howl as a bear, to trumpt, as an elephant, to roar as a lion, to growl as a tiger, to neigh as a horse, to hum as a bee, to croak as a frog, to maa as a cow, to browl, as a donkey, to mew as a cat. *2.* குரலெழுப்பிச் சொல்லுதல்; to scream. தன் கருத்தை வலியுறுத்த கத்திப் பேசினான் (உ.வ.). 3. கூவுதல்; to bowl, cry. கூப்பிடு தொலைவில் உள்ளவனையும் கத்தி அழைக்க இயலாதவன் (உ.வ.). 4. இரைச்சலிடுதல்; to make continued noise. வகுப்பறையில் மாணவர்கள் கத்திக் கொண்டுள்ளனர் (உ.வ.). 5. அழுதல்; cry. பாலுக்காக குழந்தை கத்திக் கொண்டிருக்கிறது (உ.வ.). 6. பிதற்றுதல்; to babble, jabber, chatter talk in vain. "பேதையோராய்க் கத்திடு மான் மாக்கள்" (சி.சி.பா.பாயி.8). 7. முழங்குதல்; to roar as the sea. "கத்துகடல் சூழ் நாகை" (தனிப்பா.i.31:58).

ம. கத்துக; க. கத்து

கத்து[2]**–தல்** kattu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* எரிதல்; to burn, kindle, burn with flame. *2.* பசியால் வயிற்றெரிச்சல் உண்டாதல்; to pinch, to feel a burning sensation in the stomach due to hunger.

ம. கத்துக; க, பட. கத்து; கோத. கத்; துட. கொத்; குட. கத்த்; து. கத்துணி; தெ. கத்து.

கத்து[3]**–தல்** kattu-, *5 செ.குன்றாவி.* (v.t.) வெட்டுதல்; to cut.

கத்து[4]**–தல்** kattu-, *5 செ.குன்றாவி.* (v.t.) ஓதுதல்; to recite, read. "பொய்நூல் கத்திக் குவித்த பல்புத்தகத்தீர்" (அஷ்டம், திருவேங்கடத்தந்.33).

கதல்(லு)–தல் kadal-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* அசைதல் (யாழ். அக.); to move (செ.அக.). *2.* நடுங்குதல், அஞ்சுதல்; to tremble, fear. *3.* இருக்கும் இடத்தை விட்டுச் சரிதல்; to slip, to go away (கருநா.).

க. கதலு; தெ. கதலு; ம. கதர்து; கதலு, கதெலு; பர். கத்ல்.

கதவு[1]**–தல்** kadavu-, செ.குன்றாவி. (v.t.) *1.* சினம் கொள்ளுதல்; to be angry with; to be displeased with; to quarrel with. "கதவிக் கதஞ்சிறந்த கஞ்சன்" (திவ்.இயற். 2,89). *2.* பொங்குதல்; to heave. *3.* துடித்தல்; to pant.

ம. கதய்க்குக.

கதவு[2]**–தல்** kadavu-, செ.கு.வி. (v.i.) விரைதல்; to fasten.

கதழ்[1]**–தல்** kadaḻ, *2 செ.குன்றாவி.* (v.t.) *1.* அசைதல்; to move. *2.* பிளத்தல்; to cleave, cut into to; "கனக னாகிய கடுந்திறலோ னெஞ்சு கதழ்ந்த" (பாசுவத 1.மாயவ.31).

க. கதழ்

கதழ்[2]**–தல்** kadaḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* விரைதல்; to be hasty, impetuous; to run swiftly. "கதழொரி சூழ்ந்தாங்கு" (கலித்.25:4). *2.* வெப்பமாதல்; to be furious; to rage, as fire. "இந்தனங் கதழ விட்டு" (கந்தபு.மாயையுட்.19). *3.* மிகுதல்; to abound. "கதழொளி" (சீவக.1749). *4.* சினத்தல்; to be angry with, displeased with.

க. கதடு, கதரு, கரடு; து. கதலு, கதெலு; தெ. கதலு; பர். கத்லெ.

கதறு–தல் kadaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* உரக்க அழுதல்; to cry aloud from pain or grief, to shriek; to scream, as a child. "கதறி யோலமிட" (தேவா.68,9). *2.* விலங்கு முதலியன கத்துதல்; to bellow, as a cow for its calf; to roar, yell, as a beast. "கானேறு கரிகதற வுரித்தார் போலும்" (தேவா.596,1).

ம. கதறுக; க. கதறு; தெ. கதுமு, கத்தின்சு; து. கத்தல.

கதாவு–தல் kadāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *செல்லுதல்;* to pass, move. "*கதாவுகின்ற கிராமியமாங் கருமச் சழக்கில்*" *(ஞானவா.நிருவா.11).*

ம. கதாவுக

கதி¹–த்தல் kadi-, *4 செ.குன்றா.வி.* (v.t.) *சொல்லுதல்;* to tell, direct. "*கண்ணனுக் குதவென கதித்தான்*" *(பாரத. இராசசூ.112).*

கதி²–த்தல் kadi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. விரைதல்;* to hasten, move rapidly. "*அரியேறு கதித்தது பாய்வதுபோல்*" *(கம்பரா.பஞ்சசே.56). 2. நடத்தல் (வின்.);* to go, move proceed. *3. எழுதல் (பிங்.);* to rise, to be high, to grow high; to start. *4. நற்கதியடைதல்;* to attain final bliss. "*கதிப்பவ ரில்லை யாகும்*". *(சி.சி.1,46,சிவஞா.). 5. பருத்தல்;* to become large, to grow big. "*கதித்தெழுந்த தனம்*". *(தஞ்சைவா.235). 6. மிகுதல்;* to abound. "*மல்கதிக்க*" *(இரகு.நகரப்.74). 7. ஒலித்தல்;* to sound.

க. கதெ; தெ. கதி.

கதி³–த்தல் kadi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *சினம் கொள்ளுதல்;* to be angry with. "*கதியாதி யொள்ளிழாய்*" *(கலித்.83).*

கதி⁴–த்தல் kadi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கடத்தல் (வின்.);* to exceed in quality; to out weigh to be superior to; to out do, outstrip, out match. *2. அறிதல்;* to know, understand, "*தாதை கதித்துரைத்த மொழி*" *(காஞ்சிப்பு. திருநெறிக்.42).*

கதிர்¹–த்தல் kadir-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஒளிர்தல்;* to shine; glow. "*கதிர்த்த நகைமன்னும்*" *(திருக்கோ.396). 2. வெளிப்படுதல்;* to become manifest. *வாய்மை கதிர்ப்பச் சென்ற (கம்பரந்.1). 3. மிகுதல்;* to abound, increase. *கதிர்த்த கற்பினார். 4. இறுமாத்தல் (யாழ்.அக.);* to be conceited, puffed up.

ம. கதிர்க்குக; க. கதிரு; தெ. கதுரு

கதிர்²–த்தல் kadir-, *4 செ.கு.வி.* (v.i.) *கூர்த்தல் (யாழ்.அக.);* to be sharp *(செ.அக.).*

கதிர்³–த்தல் kadir-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கதிர் தோன்றுதல்;* to appear ear of grain; *சோளம் கதிர்த்தது (இ.வ.). 2. கன்னித்தன்மையடைதல்;* to attain the stage of puberty.

கதுக்கு–தல் kadukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பெருந்தீனி கொள்ளுதல் (இ.வ.);* to gorge, glut, swallow greedily. *2. அதக்குதல்;* to cram in the mouth, as betel, as a monkey, its food.

கதுவு¹–தல் kaduvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நார் முதலியன வரிந்து இழுத்தல் (யாழ்.அக.);* to tighten, as strands, etc *(செ.அக.). 2. அழுத்துதல்;* to press. *3. இறுக்கிப் பிடித்தல்;* to seize or hold firmly. *4. தொல்லை தருதல்;* to distress, to trouble. *5. ஓட்டாரத்துடன் (பிடிவாதத்துடன்) ஊக்குதல்;* to urge with vehemence. *6. கவ்வுதல்;* to grosp.

க. கதுபு; தெ. கதுமு.

கதுவு²–தல் kaduvu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. பற்றுதல்;* to seize, catch, grasp, lay hold of. "*கராவதன் காலினைக் கதுவ*" *(திவ்.பெரியதி.2,3,9). 2. கைப்பற்றுதல் (யாழ்ப்.);* to take more than a proper share of, encroach upon. *3. செதுக்குதல்;* to pare, share off, slice off, whittle, strip off, as fibres from a nut; to chisel.

க. கதுபு, கதுகு, கதும்பு, கதுபு; தெ. கதுமு; து. கதிபு.

கதுவு³–தல் kaduvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கலங்குதல்;* to be troubled perturbed. *2. எதிரொளித்தல்;* to be reflected as in a mirror; *தற்படிக மணிக்கதுவு மறிவொளி*" *(வேதா.சூ.107).*

கதை–த்தல் kadai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சொல்லுதல் (திவா.);* to tell, narrate, say. *2. சிறப்பித்துச் சொல்லுதல்;* to speak well of; to praise. "*கதையுந் திருமொழியாய் நின்ற திருமாலே*" *(திவ்.இயற்.2,64).*

ம. கதிக்குக; குவி. கதஆ, கதங்ஆ; **Pkt.** kattha; **H.** kahana.

கந்தடி–த்தல் kandaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *சூடு மிதித்த பின் கதிர்த்தாளைக் கோல்கொண்டடித்தல் (வின்.);* to thresh, beat out straw after it has been trodden over.

கந்தி–த்தல் kandi-, *4 செ.கு.வி.* (v.i.) *மணத்தல்;* to waft fragrant smell. "*தாதகித்தார் கந்தித்த மார்பன்*" *(குலோத். கோ.291).*

கந்து–தல் kandu-, *10 செ.கு.வி.* (v.i.) *1. கெடுதல் (வின்);* to be injured, spoiled, ruined. *2. நாணுதல் (இ.வ.);* to fell shy.

கப்பலேறு–தல் kappal-ēṟu, *5 செ.கு.வி.*(v.i.) *மானக்கேடு உண்டாதல்;* to be got ashame. *நேற்றைய நிகழ்வில் அவனுடைய மானம் கப்பலேறிவிட்டது (உ.வ.).*

கப்பி–த்தல் kappi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கவர்படுதல்;* to fork, as a branch. "*கப்பித்த காலையுடைய ஞெண்டினது*" *(பெரும்பாண்.208,உரை). 2. பெருத்தல்;* to grow in size. "*அரும்பிக் கப்பித்த தனத்தந்திரி*". *(திருப்பு.412).* 3. *முகையரும்பல்;* to bud.

ம. கப்பு; க. கப்பு; து. கப்பு (கிளை)

கப்பு¹–தல் kappu-, *செ.கு.வி.* (v.t.) *1. தோண்டுதல்;* to dig. *2. குழி செய்தல்;* to make a hole.

கப்பு²–தல் kappu-, *5 செ.கு.வி.* (v.t.) *1. மூடிக்கொள்ளுதல்;* to overspread, as cloud. "*நற்பொற் சரத்தினொளி கப்பத்தெருக்களளவும்*" *(தனிப்பா.11,195,471). 2.கொள்ளுமளவுவாயிலிட்டுவேகமாகவிழுங்குதல்; கவளங்கவளமாக விழுங்குதல்;* to gorge, cram into the mouth. "*அவல்பொரி கப்பிய கரிமுகன்*" *(திருப்பு. விநாயகர்.1). 3. பிறர் பொருளை ஒளித்துக்*

கொள்ளுதல்; to steal. 4. உரையாடலின் போது களைத்தல்; to be hoarse (சேரநா.).

ம. கம்முக; க. கப, கம்ப, கபப்பு; குட. கம்பம்; து. கப்புனி; தெ. கமுசு; கூய். கப்ப; குரு. கப்னா; பட. துப்பு; குவி. கப்.

Pali.kabala;**Skt.**kavala.

கம்பலை–த்தல் kambalai-, 4 செ.கு.வி. (v.i.) பேரொலி செய்தல்; to roar, shout. "கம்பலைத்தெழு காமுறு காளையர்" (தேவா.3,4.).

து. கம்பியுனி (நடுங்குமாறு செய்).

கம்பி[1]–த்தல் kambi-, 4 செ.கு.வி. (v.i.) 1. அசைதல்; to loss shake. "கம்பித் தலையெறி நீர்" (கம்பரா. பரசுராமப்.8.). 2.நடுங்குதல்; to tremble, quake. "அழுதுடல் கம்பித்து" (திருவாச.4:61). 3. முழங்குதல்; to roar, sound. "அதிரக்கம்பிக்குந் தெய்வ முரசுடையான்" (காளத். உலா.540).

கம்பி[2]–த்தல் kambi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அசைத்தல்; to shake, vibrate. "செவ்விய செங்கையுஞ் சிரமுங் கம்பியா" (பிரபோத.23:12). 2. நடுங்கச் செய்தல்; to cause to tremble; to frighten. "இவனைக் கம்பித்தனை யென்னைகொல் காரணமே" (உபதேசகா.சிவநாம.48).

கம்பிநீட்டு–தல் kambi-nīṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) திருட்டு முதலிய செயல்களால் தலைமறைவாதல்; to run away, go off slily, steal away, take to one's heels. திருடன் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு கம்பி நீட்டிவிட்டான் (உ.வ.).

து. கம்பிநீடுனி; க. கம்பிகீளிசு.

கம்பியெண்ணு–தல் kambi-yeṇṇu-, 5 செ.குன்றாவி.(v.t.) சிறைத்தண்டனை பெறுதல்; to undergo imprisonment. திருடியதால் இன்று கம்பியெண்ணுகிறான் (உ.வ.).

கம்மிடு–தல் kammiḍu-, 20 செ.கு.வி. (v.t.) மணம் பரவுதல்; to emit fragrance.

க. கம்மேறு

கம்மு[1]–தல் kammu-, 5 செ.கு.வி. (v.i.) 1. குரல் குன்றி மாறுபடுதல்; to become hoarse, to be rough, jarring, as a wind instrument. "மென்குரல் கம்மாமே" (குமர.பிர. முத்துக்.18). 2. ஒளி குறைதல்; to be overcast, cloudy, gloomy, dark.

ம. கம்முக; க. கம்மு; **Mar.**kammi.

கம்மு[2]–தல் kammu-, 5 செ.குன்றாவி. (v.t.) மூடுதல்; to cover.

கம–த்தல் kama-, 3 செ.கு.வி. (v.i.) நிறைதல்; to be full, to occupy fully. "கமந்த மாதிரக் காவலர்" (கம்பரா. மிதிலைக்.132.).

கமர்–தல் kamar-, 2 செ.கு.வி. (v.i.) எண்ணெய் போன்ற வற்றைக் காய்ச்சும்பொழுது முடைநாற்றம் வீசுதல்; to spread disagreable smell of oil etc.

மறுவ. கமரு

கமரு[1]–தல் kamaru-, 2 செ.கு.வி. (v.i.) அழுதல்; to weep (இ.வ.).

க. குமுலு

கமரு[2]–தல் kamaru-, 2 செ.கு.வி. (v.i.) தொண்டை கரகரத்தல்; to feel irritation in the throat.

கமழ்[1]–தல் kamaḻ-, 2 செ.கு.வி. (v.i.) நறுமணம் வீசுதல்; too emit fragrance. "தேங்கமழ் நாற்றம்" (நாலடி.199). 2. தோன்றுதல்; to appear. "மணங்கமழ் மாதரை மண்ணியன்ன" (பொருந.19.) 3. பரத்தல்; to spread. "வியலிடங் கமழ விவணிசையுடை யோர்க்கு" (புறநா.50:13).

ம. கமிழுக; க. கமரு (நெடி.); தெ. கம்பு (நறுமணம்); பட. கமலு (நறுமணம்).

கமறு–தல் kamaṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மிகவொலித்தல்; to roar as thunder. "முகிலுங் கமற" (திருப்பு.750). 2. மிக அழுதல்; to weep bitterly, cry very loud. 3. மிக வேகுதல்; to be excessively heated, to become dry and hard. "கடல்தீவுகள் கமற வெந்தழல் வேல்விடு சேவக" (திருப்பு.784.). 4. நெடியுண்டாதல்; to feel a pungent sensation as that produced by chillies on the fire; மிளகாய் கமறுகிறது (கொ.வ.).

ம. கமக்குக; க. கமரிசு; பட. கமரு (நெடி).

கமனி–த்தல் kamaṉi-, 4 செ.கு.வி. (v.i.) செல்லுதல் (யாழ். அக.); to go, pass swiftly.

கமாரிடு–தல் kamār-iḍu-, 20 செ.கு.வி. (v.i.) மெதுவாய் ஓசை எழுப்புதல், ஒலி செய்தல்; to cry softly, utter a faint sound. அங்கே ஒருவருங் கமாரிடக் கூடாது (வின்.).

கமி[1]–த்தல் kami-, 4 செ.கு.வி. (v.i.) நடத்தல் (பிங்.); to walk.

கமி[2]–த்தல் kami-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தாங்குதல்; to support. "கமித்துநின்றிடு களையெலாம்" (சேதுபு. மங்கல.64). 2. பொறுத்தல்; to bear with, endure, forgive, pardon. "எங்க ளறியாமையாதி கமி" (தேவா.1184,7.).

த. கமி > **Skt.**ksami.

கமை–தல் kamai-, 4 செ.கு.வி. (v.i.) நிரம்புதல்; to be full. "கமையாக் காதல்" (சங்கற்ப.2.).

கய[1]–த்தல் kaya-, 3 செ.கு.வி. (v.i.) கசத்தல்; to be bitter.

ம. கைக்க, கசக்க; க. கய், கயி, கய்யி; கோத. கச்; துட. கொய்; குட. கய்; மா. காசெ; பட. கயி.

கய[2]–த்தல் kaya-, 3 செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to abhor, loathe, detest. "கயந்து நவின்றீரே" (சிவதரு.

சுவர்க்கநரக.188).

கயக்கு–தல் kayakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கசங்கச் செய்தல்;* to squeeze in the hand, rub, bruise, mash. *2. கலக்குதல்;* to disarrange, throw into confusion. "*கயக் கருங் கடற்றானை*" *(பு.வெ.9,35,கொளூ.).*

கயங்கு–தல் kayaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கசங்குதல்;* to be squeezed in the hand, bruised, mashed, to shrivel. "*கயங்கி வாடாதே*" *(அருட்பா, vi, திருவருட்பேறு, 10, பக்.565.). 2. சோர்தல்;* to be tired, exhausted, to droop. "*கயங்கா நிலையும்*" *(அருட்பா.திருவருள்.203.). 3. கலங்குதல்;* to be disturbed, as in mind. "*கயங்கு நெஞ்ச*" *(திருக்காளத்.பு.4,5.).*

கயறு–தல் kayaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) மேலே ஏறுதல்; to climb, ascend, mount. *2. நுழைதல்;* to get in, instruded,enter. *3. முன்னேறுதல்;* to advance, to go ahead. *4. பெருகுதல்;* to increase. *5. பரவுதல்;* to spread *(சேரநா.).*

ம. கயறுக; தெ. கசரு.

கர்¹–த்தல் kara-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. மறைத்தல்;* to conceal, hide, disguise. "*தன்னு ளடக்கிக் கரக்கினும்*" *(புறநா.1,8.). 2. கவர்தல்;* to steal, pilfer. "*கழுத்தின தெழிலைச் சங்கங் கரந்தன*" *(கந்தபு.மாயை.48.). 3. கொடாதிருத்தல் (பிங்);* to withhold; to refue to give. *4. முதற்காரணத்தோடு ஒடுக்குதல்; அழித்தல்;* to destroy, to reduce to primal elements. "*காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி*" *(திருவாச.7,12.).*

கர்²–த்தல் kara-, *3 செ.கு.வி.* (v.i.) *1. சேர்தல், அடைதல்;* to join, to unite with. "*பதுக்கையு மிருங்கதி கரக்கும்*" *(உபதேசகா.சிவபுராண.42).*

கர்³–த்தல் kara-, *3 செ.கு.வி.* (v.i.) *1. மறைதல்;* to hide, abscond, lie hidden, keep one's self out of sight. "*கரந்துறை கணக்கு*" *(மணிமே.226.). 2. கெடுதல்;* to be injured, ruined. "*புரங்கரப்ப*" *(திருக்கோ.213).*

கரடிவிடு–தல் karaḍi-viḍu-, *20 செ.கு.வி.*(v.i.) பொய்யைக் கூட்டிக் கூறுதல்; to spin a yarn. *தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்று கரடிவிடுகிறான் (உவ.).*

கரண்டு–தல் karaṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அரித்தல், தோண்டுதல்;* to gnaw as a rat, to paw as a dog. "*நாவினையென்பால்... கரண்டுகின்ற நாய்க்கும்*" *(அருட்பா,1,மகாதேவ.86). 2.சுரண்டுதல்,செதுக்குதல்;* to scrape. *3. சிறிது சிறிதாகத் தன்வயப்படுத்துதல்;* to usurp gradually.

ம. கரண்டுக

கரி¹–தல் kari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கரியாதல்;* to char, to become charcoal. "*கரிகுதிர் மரத்த கான வாழ்க்கை*" *(அகநா.75). 2. கருமையாதல்;* to become black. "*கரிந்த நீள்கயல்*" *(திருவிளை.விருத்தகு.20). 3. தீய்தல்;* to be scorched, burnt. "*தளிர்.... காயெரிக் கரியக் கரிய*" *(கம்பரா. மிதிலை.81).*

ம. கரிக்க

கரி²–த்தல் kari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. எரித்துக் கரியாக்குதல்;* to be become charred. "*கரித்த மூன்றெயில்*" *(கம்பரா.ஊர்தேடு.44). 2. தாளித்தல் (வின்.);* to season, as curries, with ghee or oil and spices.

ம. கரிக்குக; கோண். (அடிலா) கரு.

கரி³–த்தல் kari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உப்புச்சுவை மிகுதல்;* to be saltish to the taste. *இந்தக் குழம்பு உப்புக்கரிக்கிறது (உவ.).2. உறுத்துதல்;* to smart, as the eyes from oil or soap or chilly. *கண்ணில் பட்டால் கரிக்குமா புருவத்தில் பட்டால் கரிக்குமா (பழ.). 3. உண்ட உணவு செரியாமையினால் நெஞ்சில் உறுத்துதல்;* to feel an irritating sensation in the chest due to acidity of the stomach. *உண்ட சோறு நெஞ்சிற் கரிக்கிறது (உவ.).*

கரி⁴–த்தல் kari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. குற்றங்கண்டு குறை கூறுதல்;* to nag, worry; to blacken. *என் பெண்ணைக் கரிக்கிறான் (உ.வ.). 2. வெறுத்தல்;* to shun, despise. "*கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை*" *(திருமந்.2431).*

கரிபூசு–தல் kari-pūšu-, *5 செ.குன்றாவி.* (v.t.) வெட்கித் தலைகுனியச் செய்தல்; to deliberately put a person to shame, to disgrace one, lit., to be grime a person's face.

கரு–த்தல் karu, *4 செ.குன்றாவி.* (v.i.) செய்தல்; to do.

கருக்கு–தல் karukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கருகச் செய்தல்;* to burn, scorch, tan, darken by heat. *2. காய்ச்சுதல்;* to toast, fry parch, boil. "*கருக்கா மெருகுப்பச்சை நெய்யிதே*" *(தைலவ.தைல.84). 3. எரித்தல்;* to burn up, consume. "*இவன்றனைக் கருக்கி*" *(அரிச்.பு.மயான.33). 4. திட்டுதல்;* to harass, to abuse. *ஆளைக் கருக்கிப் போட்டார்கள் (உவ.).*

க. கரகிசு; பட. கரக்கு.

கருக்கொள்(ளு)–தல் karuk-koḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. ஒரு பொருளைக் குறித்து எண்ணுதல்;* to form a concept in mind. *2. நீர்கொண்ட மேகங்கள் ஒன்று சேர்தல்;* to form clouds. *3. மலர்களில் துகள் (மகரந்தச்) சேர்க்கை நடந்து முடிதல்;* to pollinate. *4. குழந்தைப் பேற்றிற்காகக் கருப்பம் உண்டாதல்;* to conceive, to be impregnated.

கருகு¹–தல் karugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. உருகுதல்;* to melt, dissolve, liguety. *2. நிறங்கறுத்தல்;* to be scorched, scarred, to blacken by fire or the sun; to be tanned, as the face. "*ஒளிகருகா*" *(பாரத.அருச்.தீர்த்.5). 3. பயிர் முதலியன தீய்தல்;* to turn brown, to wither from lack of water, as plants. *4. இருளுதல்;* to become dark, grow dim, to deepen into night, as the shades of evening twilight. "*கருகு கங்குலிற் போதரும்*" *(உபதேசகா.கைலை.46).*

க. கரங்கு, கரகு; து. கரகுனி; தெ. கரகு; பட. கரகு.

கருகு[2]–தல் karugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மனம் வருந்துதல்;* to be pained. "இப்படியிருக்கிறவனை நான் கருக நியமிக்கமாட்டேன்" *(திவ்.பெரியாழ்.2,9,2. வ்யா. ப. 454). 2. வாடுதல்;* to fade, to be famished. உடல் கருகிப் போயிற்று *(உ.வ.).*

க. கருகொள்; து. கரகுனி.

கருது–தல் karudu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சற்று விருப்பத்தோடு முன்னுதல் (பிங்.);* to intend, purpose, design. *2. மறந்ததை நினைத்தல்;* to recall to mind, recollect. "கருத லாராய்ச்சி" *(தொல்.பொருள்.260.). 3. தீர்மானித்தறிதல்;* to judge calmly, take heed. "காலங் கருதி யிருப்பர்" *(குறள். 485). 4. ஓர்ந்தறிதல்; ஊகித்தல்; உறுதிசெய்தல்;* to suppose, consider, imagine, to take it into one's head. *5. மதித்தல்;* to regard. "செல்வத்தே புக்கழுந்தி நாடோறும் மெய்யாக் கருதி" *(திருவாச.10,17). 6. விரும்புதல்;* to wish for, desire. *7. உன்னித்தறிதல்;* to infer, deduce. "அளவை காண்டல் கருதல்" *(சி.சி.அளவை.1.). 8. இறுதியாக ஆராய்தல்;* to ponder, think deeply, meditate. "கருதி நீமனம்" *(தேவா.889,2). 9. ஒத்தல்;* to resemble. "கார்கருதி வார்முரச மார்க்கும்" *(பு.வெ.6,9.).*

ம. கருதுக; கோத. கர்ந்த்; க. கரு (குறித்தல்).

Chin. Kaolu

கரும்பு–தல் karumbu-, *5* செ.குன்றாவி. (v.t.) ஒரு பொருளின் ஓரத்தில் சிறிது சிறிதாய்க் கடித்தல்; to nibble.

கருள்(ளு)–தல் karuḷ-, *15 செ.கு.வி.* (v.i.) *கருநிறமடைதல்;* to become black. "அம்பொனல் வானங் கருண் டொன்று கூறுதலிற் கார்" *(பதினெராந். காரொட்டு.3).*

கரை[1]–தல் karai-, *3 செ.கு.வி.* (v.i.) *1. கரைந்து போதல், நீரில் கரைதல், நீரியலாதல்;* to dissolve, as salt or sugar in water. *2. மண்ணரிப்பு உண்டாதல்;* to wear away as soil by the action of water. *3. உருகுதல்;* to be reduced from a solid to a liquid form. "கருங்கற்றான் வெண்ணெயெனக் கரைந்தோட" *(அழகர்கல.1.). 4. இளைத்தல்;* to become emaciated as the body. உடம்பு கரைந்துவிட்டது *(கொ.வ.). 5. கெடுதல்;* to become gradually attenuated. "இந்திரன் செருக்குக் கரைய" *(திருவிளை. திருநகரப்.101). 6. வருந்துதல்;* to undergo difficulties. "ஞெகிழங் கரையாமல் வாங்கிய கள்வன்" *(சிலப்.18,26.). 7. காலந்தாழ்த்தல் (சிலப்.18,26,உரை.);* to linger, delay. *8. அழுதல்;* to weep, lament. "கரையாவயர் வேனெனை" *(கம்பரா.நகர்நீங்.33). 9. பதனழிதல்;* to be over ripe, as fruit. "கரைந்த பழம்" *(வின்.). 10. கனிதல்;* to become ripe.

க. கரகு, கரங்கு; து. கரகுனி; தெ. கராகு; கோண். கரெமன்; பட. கரகு; கோத. கர்க்; துட. கர்க்.

E.Cry (toweep).

கரை[2]–தல் karai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. அழைத்துச் சொல்லுதல்;* to call, invite. "அஞ்சிலோதியை வரக் கரைந்தீமே" *(ஐங்குறு.391). 2. சொல்லுதல்;* to tell, expound. "அறங்கரை நாவின்" *(தொல்.பாயிரம்). 3. ஒலித்தல்;* to sound, roar. "கல்லெனக் கரைந்து வீழும்" திருவிளை திருநா. *(தேவா,742.1.).*

மறுவ. கரைதல், இயம்பல், இசைத்தல், அறைதல்

ம. கர; க. கரெ; து. கரெ; பர். கெரிப்; குரு. கர்க்கா; மா. கர்க்ரெ.

S.gritar; **E.** call, kalde; **Nor., Dan.**kalle; **Gk.** Kalo Skrike; **OF.** cier; **Port.** gritar; It. gridare; **L.** quizitare Aramic. **keri. Hebrew.** kara; **Pol.** kryzyemec; Czeco; kricetc **Russ.** Kri-hat. **Fr.** Cier; **Span.** gri-tar, **E.** Cry; Aram; **Keri.** Swedish; Skrike.

கரை[3]–தல் karai-, *2 செ.குன்றாவி.* (v.t.) கொண்டு போதல்; to take, as a load. "கருங்கடல் வளந்தரக் கரையும் பண்டியும்" *(சீவக.63).*

த. கரை; க. கரெ; கரை.

கரை[4]–த்தல் karai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கரையச் செய்தல்;* to dissolve in water. *2. உருக்குதல்;* to melt, as metal, to liquify. *3. அழித்தல்;* to extirpate. "உள்குவார் வினையைக் கரைக்கும்" *(தேவா.1040,5.). 4. நிமிண்டுதல்;* to pinch, squeeze so as to cause pain. *5. பணம் செலவழித்தல்;* to expend. கையில் இருந்த பணம் கரைந்துவிட்டது *(உ.வ.).*

ம. கரக்குக; தெ., பட. கரகு; க. கரங்கு, கரகு; துட., கோத. கர்க்; க., குட. கர் (செறித்தல்); து. கரகுனி, கரவுனி; கோண். கரெமன்; குவி. கரன்கலி; கசபா. கரா.

கரை[5]–த்தல் karai-, *பி.வி.* (caus.v.) அழைப்பித்தல், வரவழைத்தல்; to call, summon. "உழையரிற் பலரைக் கரைத்து" *(கந்தபு.குமாரபுரி.66.).*

க., து. கரெ; ம. கர; பர். கெரிப்; குரு. கர்க்னா; மா. கக்ரெர்

கல்(லு)[1]–தல் kalu-, *14* செ.குன்றாவி. (v.t.) *1.* குத்துதல்; to pierce, to stab, to make a hole. *2.* தோண்டுதல்; to dig.

கல்[2](லு)–தல் kal(lu)-, *14 செ.குன்றாவி.* (v.t.) *1. தோண்டி வெளிக்கொணர்தல், தோண்டி எடுத்தல்;* to dig out. *2. கல்லடைப்பை நீக்குதல்;* to remove the obstruction of the stone.

கல்[3](ற்)–த(ற)ல் kal-, *9 செ.கு.வி.* (v.i.) *1. படித்தல்;* to learn, study. "கல்லென்று தந்தை கழற" *(நாலடி.,253). 2. பயின்றறிதல்;* to practise, as arts; to acquire skill in the use of arms. "கல்லாமா வன்னார்' *(குறள்.814).*

தெ. கரசு; ம., க., து. கல்; பட. கல்லு.

கல்லு[1]–தல் kallu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தோண்டுதல்;* to work away gradually, as earth, pebbles, to dig out, as a hole; to hollow, as

a rat; to excavate. "கல்லுற்றுழி" *(நாலடி.185). 2. துருவுதல் (வின்.);* to scoop out, as a nut. *3. நீர் அரித்தல்;* to wash out, erode, as flowing water. வெள்ளம் கரையைக் கல்லிவிட்டது *(உ.வ.). 4. தின்னுதல்;* to eat away as caustic. இந்தக் காரமருந்து கல்லிக்கல்லி எடுத்துவிடும் *(வின்.). 5. எழுத்தாணிக் கூர் கழித்தல் (யாழ்ப்.);* to tear, as a style, the palmyra leaf when writing upon.

ம. கல்லுக; கோத. கெல்வ்; பர். கெல்ச்.

கல்லு²–தல் kallu-, *15 செ.கு.வி.* (v.i.) *ஒலித்தல்;* to cause to sound, as a drum. "மங்கல வியங் கல்ல" *(திருவிளை. திருமணப்.103).*

கல¹–த்தல் kala-, *3 செ.கு.வி.* (v.i.) *1. கூடுதல்;* to mix, unite, join; to commingle, combine; to be absorbed, as the individual soul into the Godhead. "கலந்து நின்னடியாரோடன்று" *(திருவாச.32,1.). 2. கூட்டுறவாடுதல்;* to unite in friendship, grow intimate, to hold communion with, associate in friendship with, or matrimonial alliance friendly. "ஒரு மூவேங்கலந்த காலை" *(கம்பரா.சூர்ப்ப.140.). 3. பரத்தல்;* to spread as news. "கட்டுரை கலந்த காலை" *(கம்பரா.கரன்.68.). 4. தோன்றுதல்;* to appear, come into being. "அமுதொடு கலந்த நஞ்சை மிடற்றினி லடக்கிய" *(தேவா.473,1.). 5. நெருங்குதல்;* to get close together; to come into close quarters with. "கலந்து போர்செய்தாரோர்சிலர்" *(கந்தபு.சகந்திரவா.32.) 6. பொருந்துதல்;* to be welded, held. "அலங்கலந் தார்" *(புலியூரந்.1.).*

க. கலெ, கலசு; தெ. கலயு; ம. கலருக; து. கலடுனி; துட. கசவ்; குட. கல (பிசைதல்.); கோத. கல்வ்; கொலா. கலய்; நா. கல்ய்; கோண். கலீதாநா; குவி. கன்கினை; குரு. கன்நா; உரா. கலாசு; எரு. கலிப்பி; கசபா. கலாக்கி. கோண். (கோயா); கல்ப; **Skt.**kalka (medicinal mixture)

கல²–த்தல் kala-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. கூட்டுதல்;* to mix, blend, compound, amalgamate. "பாலொடு தேன்கலந் தற்றே" *(குறள்.1121). 2. புணர்தல், கூடுதல்;* to copulate. "பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல்" *(குறள்.1276).*

க. கலசு

Basq. gale (wishful); **E.** Hamit. e-kala-inkala; Rum & **Allan.** galash.

கல³–த்தல் kala-, *3 செ.கு.வி.* (v.i.) இடைவிட்டிருத்தல் *(இ.வ.);* to have intervening spaces.

கலக்கு–தல் kalakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கலங்கச் செய்தல்;* to confuse. "கலக்கியமா மனத்தினளாய்க் கைகேசி வரம் வேண்ட" *(திவ்.பெரியாழ்.3,10,3.).*

ம. கலக்குக; க. கலகு, கலகிசு; தெ. கலயு, கலியு, கலசு; கோத. கல்வ்; துட. கல்வ்; குட. கல (பிசைதல்); து. கலபுனி; கொலா. கல்ய்; நா. கலய், கல்ப்; கோண். கலீநானா (சந்தித்துத் தழுவி); குவி. கல்பினெய்; குரு. கல்; **Skt.**avakalkana (mingling, mixing together.).

கலகல–த்தல் kala-kala, *3 செ.கு.வி.* (v.i.) *1. கலகலவென்று ஒலித்தல்;* to reiterate in sound; to rustle, as dry leaves, to tinkle, as little bells; to chink, as money; to clink, as chains; to rattle, as pebbles in a shell. "வற்றிய வோலை கலகலக்கும்" *(நாலடி.256.). 2. கட்டுக்குலைதல்;* to become shaky, get loose in the joints, as an old cart. இந்த வண்டி கலகலத்துப் போயிற்று.

க. கலகலிசு, களகளிசு.

கலகி–த்தல் kalagi-, *4 செ.கு.வி.* (v.i.) *கலகஞ் செய்தல்;* to create a disturbance, cause a commotion.

கலங்கு–தல் kalaṉgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நீர் முதலியன குழம்புதல்;* to be stirred up, agitated, ruffled as water. "கலங்க முந்நீர் கடைந்து" *(திவ்.பெரியதி.6,5,1.). 2. மனங்குழம்புதல்;* to be confused, confounded. "கலங்காமற் காத்துய்க்கும்" *(நாலடி.59.). 3. மயங்குதல்;* to be abashed, embarrassed, perplexed. "காம நலியக் கலங்கி" *(பு.வெ.11. பெண்பாற்.1.). 4. அஞ்சுதல்;* to fear, to be intimidated; to be cowed. "விண்ணு மண்ணுமெல்லாங் கலங்க" *(திருவாச.6,28.). 5. துன்பமுறுதல் (வின்.);* to be sad; to grieve; to experience sorrow. *6. தவறுதல்;* to fail. "கலங்காது ஞாலங் கருதுபவர்" *(குறள்,485).*

ம. கலங்ஙுக; கோத. கல்க்; க., பட., கலங்கு; குட. கலங்க். து. கலங்குனி; தெ. கலாகு. கூ. கல்ப்; குரு. கலாக்சனா; மால். கல்லுகெ.

Skt.kalusa (turbid of water or mind.).

கலசு–தல் kalašu-, *10 செ.கு.வி.* (v.i.) *கலத்தல்;* to mingle. பிரமருத்திரர்கள் நடுவே கலசி நின்றான் *(ஈடு.).*

க. கலசு

கலப்பு–தல் kalappu-, *5 செ.குன்றா.வி.* (v.t.) *ஒன்று சேர்த்தல் இணைத்தல்;* to join, to unite.

க. கலபு; பட. கலப்பு.

கலவு–தல் kalavu-, *5 செ.கு.வி.* (v.t.) *கலத்தல்;* to mix. "கனியின் றிரளுங் கலவி" *(சூளாசீய.230).*

கலாய்–த்தல் kalāy-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கலகித்தல்;* to quarrel; to be at variance. "யாமினிக் கலாய்த்தல் வேண்ட லொழிகென" *(காஞ்சிப்பு.அனந்த.5.). 2. சினத்தல்;* to get angry. "கலாய்த் தொலைப் பருகு வார் போல்" *(சீவக.1950.).*

து. கலம்புனி

கலாவு¹–தல் kalāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *கலத்தல்;* to mix, join together, unite. "வானத்து வீசுவளி கலாவலின்" *(குறிஞ்சி.48.).*

கலாவு²–தல் kalāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கலக்கமடைதல்;* to be perturbed, confused. "கண்ணி நீரலைக் கலாவ" *(நெடுநல்.6.). 2. சினத்தல்;* to be displeased, angry. "வசந்த மோகினி பெரு

நிலாவினொடு கலாவினாள்" (குற்றா.குற.29).

கலி[1]–த்தல் kali-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound, clamour, roar. "கடவுட் பராவி நமர்கலிப்ப" (திருக்கோ.279.). 2. யாழொலித்தல் (திவா.); to sound as Yāḻ. 3. செழித்தல்; to grow luxuriantly. "ஆர்பெயற்கலித்த.... நெல்லின்" (நெடுதல்.21).

தெ. கலுகு. கலிகின்சு (உருவாக்கு)

கலி[2]–த்தல் kali-, 4 செ.கு.வி. (v.i.) 1. முளைத்தல், பிறத்தல்; to sprout, come into being. "களியிடைக் கலித்த தென்ப" (ஞானா.11).மழை பெய்தால் மீன் கலிக்கும் (நெல்லை). 2. எழுதல்; to appear, become manifest. 3. உயர்தல்; to grow high. 4. பெருகுதல்; to increase. "செய்யார் தேஎந் தெருமரல் கலிப்ப" (பொருந.134.). 5. மகிழ்தல்; to rejoice. "கலித்த வியவர்" (மதுரைக்.304). 6. செருக்குதல்; to swell, to be proud, to grow arrogant. "கராஅல் கலித்த... அகழி" (புறநா.37.7). 7. வேகமாதல் (யாப்.வி.55,207); to be swift, quick. 8. நெருங்கியிருத்தல் (யாப்.வி.55-207); to be dense, crowded. 9. கக்குதல்; rejecting through the mouth. 10. தழைத்தல்; sprouting (சா.அக.). "கலிகொள் யாணர் வெண்ணிப்பறந்தலை" (புறநா.99).

கலி[3]–த்தல் kali-, 4 செ.குன்றாவி. (v.t.) செலுத்துதல் (சி.போ. பா.151); to cause to go, move.

கலி[4]–த்தல் kali-, 4 செ.குன்றாவி. (v.t.) நீக்குதல்; to remove.

கலிழ்–தல் kaliḻ-, 4 செ.கு.வி. (v.i.) 1. அழுதல்; to weep shed tears; to be troubled in mind. "கூதிராயிற்றண் கலிழ்தந்து" (ஐங்குறு.45.). 2. ஒழுகுதல்; to shine forth, as beauty. "அங்கலிழ் மேனி" (ஐங்குறு.174). 3. புடைபெயர்தல்; to change position. "காலொடு மயங்கிய கலிழ்கடலென" (பரிபா.8,31).

கலுழ்[1]–தல் kaḻuḻ-, 2 செ.கு.வி. (v.i.) 1. கலங்குதல்; to become turbid, as water. "உண்கண் கலுழ்ந்து வாரரிப்பனி" (புறநா.144). 2. தடுமாறுதல்; to be troubled, disturbed in mind. "தன்னெஞ்சு கலுழ்ந்தோனை" (தொல். பொருள்.39). 3. அழுதல்; to weep, wail, shed tears. "கண்டாங் கலுழ்வ தெவன் கொலோ" (குறள்.1171). 4. ஒழுகுதல்; to shine forth, as beauty. "அங்கலுழ்மாமை" (அகநா.41). 5. உருகுதல்; to be touched, as the heart. "கலுழத் தன்கையிற் றீண்டி" (சீவக.1926). 6. கலத்தல்; to mix. (த.ம.50).

ம. கலம்புக

த. கலுழம் > **Skt.**kaludi.(வே.க.142).

கலுழ்[2]–தல் kaḻul-, 2 செ.குன்றாவி. (v.i.) பொருந்துதல்; to join with. "கண்முத்தமாலை கலுழ்ந் தனவே" (திருக்கோ.397.).

கலை[1]–தல் kalai-, 4 செ.கு.வி. (v.i.) 1. கூட்டம் முதலியன பிரிந்து போதல், குலைதல்; to disperse, as an assembly, a defeated army; to be driven to different parts, as clouds. "உடலுமுயிரு நினைவுந் தம்மிற்கலையா" (அஷ்டப்-அழகரந்.12.). 2. அழிதல்; to be ruined, destroyed. "காத்தும் படைத்துங் கலைத்து நிற்போர்" (அருட்பா.விண்ணப்பக்கலி,50.). 3. நிலைகுலைதல்; to be absent minded, to wonder in thought. ஊழ்கம் (தியானம்) கலைந்துவிட்டது. 4. பலகை முதலியவற்றில் எழுதப்பட்டவை அழிதல்; to be blurred beyond recognition, as the writing on slate. பலகையில் எழுதியது கை பட்டு கலைந்து போயிற்று (இ.வ.).

ம. கலயுக; தெ. கலயு.

கலை[2]–தல் kalai-, 4 செ.கு.வி. (v.i.) 1. இசையில் சரம் குலைதல் (வின்.); to be out of tune, as an instrument. 2. பண் (இராகம்) மயங்குதல்; to glide from one tune into another.

கலை[3]–தல் kalai-, 4 செ.கு.வி. (v.i.) மிரளுதல் (திருநெல்.); to be startled, to shy. குடையைக் கண்டால் மாடு கலையும் (நெல்லை).

கலை[4]–த்தல் kalai-, 4 செ.குன்றாவி. (v.i.) 1. குலைத்தல்; சிதைத்தல்; to disperse, derange, break up, disorganize, scatter, rout. 'பற்றலரைக் கலை... வேந்தர்" (அஷ்டப். திருவரங்கத்.25.). 2. பிரித்து நீக்குதல்; to separate from a company, detach, banish, exile, exclude. "குருவிக் கூட்டைக் கோலால் கலைத்தது போல". 3. எண்ணத்தைக் கணித்தல்; to frustrate or thwart an object. "இராட்சத குலத்தைத் தொலைக்கின்றான் இராவணனைக் கலைக்கின்றானே" (இராமநா.உயுத். 31). 4. பலகை முதலியவற்றில் எழுதப்பட்ட வற்றை அழித்தல்; to erase, as writing on slate. 5. ஓட்டுதல்; to chase. அவன் என்னை வெகுதூரம் கலைத்தான் (யாழ்ப்.).

ம. கலய்க்குக

கலை[5]–த்தல் kalai-, 4 செ.குன்றாவி. (v.t.) இசையின் ஓசை குலைத்தல் (வின்.); to relax, put out of tune, as stringed instruments.

கவ்வு–தல் kavvu-, 5 செ.கு.வி. (v.i.) வௌவுதல்; to seize, grasp with eagerness. "கவ்வித் தோ றின்னும் குணுங்கர் நாய்" (நாலடி.322.).

கவட்டு[1]–தல் kavaṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மெல்லுதல்; to chew. 2. சப்புக் கொட்டல்; touching the palate with the tongue and withdrawing it by a sound to find the taste of anything.

கவட்டு[2]–தல் kavaṭṭu-, 5 செ.கு.வி. (v.t.) 1. வளைத்தல் (யாழ். அக.); to bend.

கவர்[1]–தல் kavar-, 2 செ.குன்றாவி. (v.t.) அகப்படுத்துதல்; to seize, grasp, catch, capture, take by force, steal. "கான்முளை மூங்கிற் கவர்கிளை போல உய்தல் யாவது நின்னுடற்றியாரே" (பதிற்றுப்.84,12.). 2. கொள்ளையிடுதல்; rob, plunder, pillage. "கூடார் முனை கொள்ளை சாற்றி வீடறக் கவர்ந்த வினை

மொழிந்தன்று" (பு.வெ.3,15,கொளூ.). 3. தன்னகப் படுத்துதல்; to get control of, charm, captivate. "காடுடைய கடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்" (தேவா.1;1). 4. கைப்பற்றுதல்; to confiscate. "கண்கவர் வனப்பிற் சிந்துரம்" (நைடத. அன்னத்தைத்தூ.12.). 5. ஆசைப்பெருக்கம் (பேரவா); extreme desire. "அடியவரேசிவமாகக் கவர்ந்தொழுகி அருச்சிக்குங் கடப்பாட்டின் நெறி நின்றோன்" (திருவிளை மெய்க்கா.). 6. விரும்புதல் (திவா.); to desire. "கவர்வு விருப்பாகும்" (தொல்.உரி.64.). 7. பெற்றுக் கொள்ளுதல்; to receive. "வறியோர் கவர முத்துந்துகிரு மிரங்குந்தரங்க முகந்தெறிந்து" (தஞ்சைவா.26.). 8. நுகர்தல்; to experience, enjoy. "கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" (குறள்.100). 9. முயங்குதல்; to have sexual connection with. "காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச் சாமனார் தம்முன் செலவு காண்க" (கலித்.94,33-34.). 10. பிடித்தல்; to catch, hold. "கவர்வான் வரல்கண்டு" (நைடத.அன்னத்தைத்தூ. 48). 11. கடைதல் (திவா.); to churn, reduce by trituration or attrition. 12. அழைத்தல்; to call, summon. "கானக்கோழிக் கவர்குரற் சேவல் கானப்பலவின் முழவும்" (மலைபடு. 510-511).

ம. கவருக; க. கவர்; தெ. கமுசு.

கவர்²–தல் kavar-, *2* செ.கு.வி. (v.i.) *1.* பிளவுபடுதல்; to split. "கவராதவன்" (திருவிளை.மெய்க்கா.11). (ஒ.மொ.37.). *2.* பல பிரிவாகப் பிரிதல்; to separate into various channels. "காவிரி வந்து கவர்பூட்டத் தோடுகொள் வேலின் தோற்றம் போல" (புறா.35,8-9). *3.* மாறுபடுதல்; to deviate, depart from instructions. "கவராக் கேள்வியோர் கடவாராகலின்" (மணிமே.1,10.).

கவர்³–த்தல் kavar-, *2* செ.கு.வி. (v.i.) *1.* பிரிவுபடுதல்; to branch off, as roads. "அறைவாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்" (சிலப்.11,73). *2.* கவடுபடுதல்; to fork, bifurcate. கவர்த்த கொம்பு (உவ.).

தெ., ம. கவ; க. கவலு; உரா. கவர்.

கவல்(லு)–தல் kaval-, *13* செ.கு.வி. (v.i.) மனம் வருந்துதல்; to be distressed, anxious, troubled. "மாணிழை மகளிர் கவல் ஏமுற்று வெய்துவீழ் அரிப்பணி" (நற்.30). "யாதுநீ கவல வேண்டா" (சீவக.1456.).

கவவு¹–தல் kavavu-, *5* செ.குன்றா.வி. (v.t.) *1.* அகத்திடுதல்; to put in, insert. "ஆயிடைக் கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி" (அகநா.26.16-17). *2.* விரும்புதல்; to desire. "கன்னிக் கலிங்கமகிலார்ந்து.... கவவிக் கிடந்த குறங்கினாள்" (சீவக.1658.). *3.* கையால் தழுவுதல்; to embrace. "கவவுக்கை தாங்கும் மதுகை அம் குவவுமுலை" (நற்.350.7.). "கண்ணு நுதலுங் கவுளுங் கவவியார்க்கு" (கலித்.83,17.). *4.* முயங்குதல்; to copulate. "வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும் கவவுப்புலந்துறையுங் கழிபெருங் காமத்து" (அகநா.361.5-6.).

Sq.querido

கவவு²–தல் kavavu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* நெருங்குதல்; to crowd, to draw near. "நயந்தகாதலர் கவவுப் பிணித்துஞ்சிப் புலர்ந்து விரிவிடிய லெய்த விரும்பி" (மதுரைக்.663-664.). *2.* பொருந்துதல்; to be connected. "பவபயங் கவவ" (ஞானா.62,21.).

கவளி–த்தல் kavaḷi, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* கவுள் அளவு அல்லது வாய் கொள்ளுமளவுக்கு நீரைக் கொப்புளித்தல்; to argle with a mouth full of water. *2.* கவுள் அல்லது வாய்கொள்ளும் அளவுடைய உணவு உண்ணுதல்; to eat a mouthful of food.

கவற்று–தல் kavaṟṟu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* கவலையுறுத்துதல்; to cause anxiety or sorrow. "காதல் கவற்று மனத்தினால் கண்பாழ்பட்டேதில வரை இரவு." (நாலடி,306.). *2.* வருத்துதல்; afflict. "களிகொண்ட நோக்கங்கவற்ற" (பு.வெ.15.).

கவனி–த்தல் kavaṉi, *4* செ.குன்றாவி. (v.t.) நுட்பமாய்ப் பார்த்தல்; to be attentive to, to attend to, take notice of, heed, observe. போக்குவரத்துச் சாலையைக் கவனித்துக் கடக்கவும் (உவ.).

கவி¹–தல் kavi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* மூடுதல்; to cover, overspread, bend in or over, over shadow. "வாய்கவிந்த வையகம் எல்லாம் பெறினும் உரையற்க பெய்யோடிடைமிடைந்த சொல்" (நால.80). *2.* வளைதல்; to surround, hem in, invest. "கயந்தலைக் குழவிக் கவியுகிர் மடப்பிடி" (அக.நா.229).

ம., க., கவி; தெ. கவிபு; து. கபி.

கவி²–தல் kavi, *4* செ.கு.வி. (v.i.) *1.* கருத்தூன்றுதல்; to be eagerly intent upon, to be absorbed earnestly in. அவர் மனம் அதிற்கவிந்திருக்கிறது (உவ.). *2.* இடிதல்; to break down, as the bank of a river; to crash, fall. "பிணியகத்திருந்து, பீடுகாழ் முற்றி அருங்கரை கவியக் குத்தி" (பட்டினப்.222, 223). *3.* கவிழ்தல்; to hang down, as the head. "கவிதலை எண்கின் பருஉமயிர் ஏற்றை" (நற்.325.1.).

கவி³–த்தல் kavi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* வளைந்து மூடுதல்; to cover as with an umbrella; to over-shade; to cover over, as an arch. "கொல்லாற் செய்த வேலாற்குக் குடையாய் நின்று கவித்ததுவே" (சூளா.அரசி.213). *2.* முடியைக் கவித்துச் சூட்டுதல்; to invest with, as a crown. "இளையவற் கவித்த மோலி யென்னையுங் கவித்தியென்றான்" (கம்பரா.விபீடன.145). *3.* மூடுதல்; to close. "கன்றுபுகு மாலை நின்றோள் எய்திக் கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகி" (அகநா.9-21).

Port.cobrir

கவிழ்[1]–தல் kaviḻ-, *4* செ.கு.வி. (v.i.) *1. தலைகீழாதல்;* to be capsized, turned bottom upwards, to turn down. *தோணி கவிழ்ந்தது (உ.வ.). 2. நாண முதலியவற்றால் தலையிறங்குதல்;* to bow one's head from modesty; to hang down, as the head, with shame, confusion, defeat. "*காணின் குவளை கவிழ்ந்தது நிலனோக்கும் மாணிழை கண்ணொவ்வேம் என்று*" *(குறள்.1114). 3. குனிதல்;* to stoop, bend down. "*கவிழ்ந்து நிழறுழாம் யானை*" *(யாப்.36.). 4. நிலைகுலைதல்;* to be overthrown, discomfited, routed. *எதிரிகள் சேனை கவிழ்ந்தது. 5. அழிதல்;* to die, perish. "*தான் சாவ உலகு கவிழும்*" *(சிலப்.7,50.அரும்.). 6. முழுகிப்போதல்;* to be submerged, to founder. "*மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்*" *(புறநா.238.16).* "*கங்கையிற் கவிழ்ந்திட்டான் கொலோ*" *(பாகவ.1,6,6.). 7. தாழ்தல்;* to fall low. "*கதிர்தெறக் கவிழ்ந்த உலறுதலை நெறியயல் மராஅம் ஏறி*" *(அகநா.81,7-8).*

ம. கவிழ்; க. கவிசு, கவசு, கவுசு; குட. கவின்; து. கப்பெ, கப்ய.

கவிழ்[2]–த்தல் kaviḻ-, *11* செ.குன்றாவி. (v.t.) *1. கவிழச் செய்தல், தலைகீழாக இறங்குதல்;* to turn upside down, capsize, invert. "*கவிழ்மயி ரெருத்திற் செந்நா யேற்றை குருளைப்பன்றி கொள்ளாது கழியும்*" *(ஐங்குறு.397,1-2). 2. கெடுத்தல்;* to topple, ruin, destroy. *நாட்டையெல்லாங் கவிழ்த்துப் போட்டான் (உ.வ.). 3. மூடுதல்;* to put a cover. *பானையின் மேல் சட்டியைக் கவிழ். 4. ஒழுகவிடுதல்;* to pour out. "*இருகவுள் கவிழ்த்த மதநதி உவட்டின்*" *(கல்லா.கணபதிதுதி). 5. வெளிப்படுத்துதல்;* to shed, as tears; to emit. "*கார்கண்டு கவிழ்த்த விழிப்புனல்*" *(தணிகைப். நாட்டுப்.71). 6. நிலை குலைத்தல்;* to overthrow. *ஆட்சியைக் கவிழ்த்து விட்டார்கள் (உ.வ.).*

க. கவிசு; ம. கவிழ்த்து, கமிழ்த்துக; குட. கவின்ம்ப், பட. கவுசு.

கவின்(னு)–தல் kaviṉ, *13* செ.கு.வி. (v.i.) *அழகு பெறுதல்;* to be beautiful, fair, graceful, comely.

கவுளி–த்தல் kavaḷi, *4* செ.குன்றாவி. (v.t.) *கவுளில் அடக்கிக் கொள்ளுதல் வாய்கொள்ளும் சிற்றளவாக உண்ணுதல்;* to chew slowly what is held between cheek and teeth.

கவை[1]–த்தல் kavai-, *4* செ.கு.வி. (v.i.) *1. கவடுபடுதல்;* to fork, as a branch. "*கவைமுள்ளிற் புழை யடைப்பவும்*" *(புறநா.98-8). 2. உளதாதல்;* to be, exit. "*சிற்றிடைப் பெருமுலைப் பொற்றோடி மடந்தைதன் கவைஇய கற்பினைக் காட்டுழி இதுவே*" *(கல்லா.6,21-22).*

ம. கவய்க்குக

கவை[2]–த்தல் kavai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. அகத்திடுதல்;* to contain within oneself, to include. "*கழுஉவிளங்கு ஆரங் கவைஇய மார்பே*" *(புறநா.19,18.). 2. அணைத்தல்;* to join with embrace. "*நாணுமுட்கு கண்ணுவழி யடைதர ஒய்யெனப் பிரியவும் விடாஅன் கவைஇ*" *(குறிஞ்சிப்.185-186).*

கழப்பு–தல் kaḻappu-, *5* செ.கு.வி. (v.i.) *வேலை செய்யாது வீண்பொழுது போக்குதல்;* to be idle, making excuses, to shirk work.

கழல்(லு)–தல் kaḻal-, *13* செ.கு.வி. (v.i.) *1. நெகிழ்ந்து போதல்;* to become loose, as a fastening, nail, shoe, handle, lock, leaf, hair, braclets, knot, part of any mechanism, to be unhinged, to slip off, to slough off, as snake's skin, to become extricated, disentangled. "*நங்கைதன்றுகிலொடு சரிவளை கழல்கின்றதே*" *(திவ்.பெரியாழ்.3,4,8.). 2. உடற் பொருத்து விலகுதல்;* to be put out of joint, dislocated. *விழுந்து முழந்தாள் கழன்றது (இ.வ.). 3. வெளியேறுதல்;* to pass through as an arrow. "*தங்கா தப்புறங் கழன்று*" *(கம்பரா.தாடகை.72.). 4. ஓடுதல்;* to run away. "*அவரைக் கழல வுழக்கி எதிர் சென்று சாடி*" *(கலித்.106,20). 5. நீங்குதல்;* to pass away, to disappear. "*துயரெல்லாங் கழன்றது*" *(உபதேசகா.சிவபுரா.16). 6. பிதுங்குதல்;* to prot rude, bulge out. "*கழல்கட் கூகையொடு கடும் பாம்பு தூங்க*" *(திருமுரு.49). 7. விழுதல்;* to fall out, as a loose tooth. "*சொல்தளர்ந்து கோல் ஊன்றிச் சோர்ந்த நடையின ராய்ப் பல்கழன்று*" *(நாலடி,13.). 8. செலவாதல்;* to be expended. *மாதம் எவ்வளவு தொகை கழலும் (இ.வ.). 9. அவிழ்தல்;* to loose as knot.

ம., க. கழல்; கோத. ககெ; துட. கோள்; குட. கய். து. கனெயுனி. தெ. க்ராலு; கட. கரைங்கான; பெங். கரங், கூ. கரெங்கு.

கழற்று–தல் kaḻaṟṟu-, *5* செ. குன்றா.வி. (v.t.) *1. நெகிழச் செய்தல்;* to make loose, to unfasten, loosen, unhinge, dislocate, unlock, unbolt, unscrew, unbutton, disentangle, extricate, disencumber. *2. ஆடையணிகலன் போன்றவைகளை நீக்குதல்;* to strip, take off, divest, dismantle, unrig, to slough off, as a snake, its skin,. "*கழற்றிப் பொன்னணி*" *(இரகு.திக்கு.255.). 3. போக்குதல்;* to remove, to be freed, as from sin. "*வல்வினையைக் கழற்றலாமே*" *(தேவா.1225,7.).*

கழறு[1]–தல் kaḻaṟu, *5* செ.கு.வி. (v.i.) *1. இடித்தல்;* to thunder. "*கமஞ்சூல் அகலிரு விசும்பின் அதிர்சினஞ் சிறந்து... கடுஞ்சிலை கழறி*" *(பதிற்றுப்.81.4.). 2. சூளுரைத்தல்;* to make solemn declaration, bind oneself by a vow. "*கொல்வோ மென்றாங் கவரவர் கழறிப்பேசி*" *(திருவாலவா.36.17). 3. உறுதி சொல்லுதல்;* to urge, exhort, charge earnestly. "*கல்லென்று தந்தை கழற அதனையோர் சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்*" *(நாலடி.253).*

ம. களரு (அறிவுரை)

கழறு[2]–தல் kaḻaṟu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. கடிந்து சொல்லுதல்;* to say angrily declare, tell. "*சிலர் கழறிச் சோர்வார்*" *(பாகவ.1.4.35). 2. வன்மையாகக் கண்டித்தல்;* scold angrily. "*கடிந்தது மிலையாய் நீ கழறிய வந்ததை*" *(கலித்.76.13.). 3. அவமதித்தல்;* to abuse, dishonour. "*கற்றவர் தம்மையும் கழற நோக்குமே*" *(சூளா.முத்.16.).*

மறுவ. கடிதல்

கழாலு–தல் kaḻālu-, *13 செ.கு.வி.* (v.i.) நெகிழ்தல்; to become loose. "கழாலுகின்ற பல்காழுடை மேகலை" *(கந்தபு. திருக்கல்.15.).*

கழி[1]–தல் kaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கடந்து போதல்;* to pass away. *(அ). காலம், இடம், பருவம் முதலியன கடந்து போதல்;* to pass as time, season. கோடைக் காலம் கழிந்து குளிர் காலம் வந்தது *(உ.வ.). (ஆ) வளமை, இன்பம் முதலியன நழுவுதல்;* to slip away as prosperity, adversity. *2. செலவிடுவதால் கழிதல்;* to elapse, become spent. "பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும்" *(கம்பரா.சூர்ப்ப.1+8). 3. நடத்தல் (பிங்);* to walk, proceed.

ம. கழியுக, கழிக்க; க. கழி, களி, கழெ, களெ; து. கரியுனி, கரிபுனி; பட. கயி; து.இ. கொடி; குட. கய்ய (பொழுதுகழித்தல்); கெ. கட சுட (பொழுது போதல்).

கழி[2]–தல் kaḻu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. குறைபடுதல்;* to be abated, deducted, discounted. "கழியாம லளித்தனை கண்ணதுகில்" *(பாகவ.1.4.37). 2. அழிதல்;* to be ruined. "அங்குரங் கழியும் வேனில்" *(சிசி 1.9.). 3. ஒழிதல்;* to be removed. பாவங்கழிந்தது *(உ.வ.). 4. இறத்தல்;* to expire, die. கழியா தலந்தினையும் *(பு.வெ.10.சிறப்பிற்.18.). 5. முடிவடைதல்;* to finish, come to an end, cease. "மாழைமென்னோக்கி யிடையாய்க் கழிந்தது" *(திருக்கோ.61).*

ம. கழி

கழி[3]–தல் kaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. துயருறுதல்;* to suffer. *2. இன்னலுறுதல், வருந்துதல்;* to be troubled. "தாழிக்குவளையொடு தண்செங்கழுநீர் வீழ்பூஞ் சேக்கை மேவாது கழிய" *(சிலப்.4.65).*

கழி[4]–தல் kaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சிறுநீர் மலம் போன்றவை உடம்பினின்று வெளியேறுதல்;* materials like urine, excrement etc to be discharged. *2. நோயாளி குணமாகி மருத்துவமனையினின்று வெளியேறுதல்;* patient's discharge from hospital. *3. கசிதல்;* leakage as of water or oil. குடிநீர்க் குழாயில் கழிவுண்டாகித் தண்ணீர் வீணாகிறது *(உ.வ.).*

கழி[5]–தல் kaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) அச்சங்கொள்ளுதல்; to be in terror. அவரைக் கண்டால் கழிவான் *(உ.வ.).*

கழி[6]–தல் kaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கடத்தல்;* to pass through. "விளிமுறை அறியா வேய்கரி கானம் வயக்களிற்றன்ன காளையொ டென்மகள் கழிந்தற்கு அழிந்தன்றோ இலனே" *(அகநா.4-6). 2. ஒத்தல் (பரிபா.3,32.உரை);* to resemble.

கழி[7]–தல் kaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) அளவில், தன்மையில் பண்பில் பரப்பில், பாங்கில், மிகுந்து நிற்றல்; to be great in a quantity or quality, excessive to be abundant, copious, intense, extensive. "கழிகின்றதோர் கடலேபுரை காமந்தெறு நோயால்" *(கந்தபு.அசமுகிப்.4).*

கழி[8]–தல் kaḻi, *4 செ.குன்றாவி.* (v.t.) இயலுதல்; to be able. எனக்கு இது கழியாது *(இ.வ.).*

கழி[9]–த்தல் kaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நீக்குதல்;* to reject, expel, discard, exclude, dislodge, remove, strip off, separate, eliminate. "மாண்ட குணத்தொடு மக்கட்பேறில் லெனினும்பூண்டான் கழித்தற் கருமையால்" *(நாலடி.56.) 2. ஒதுக்குதல்;* to eject, to leave as refuse, to abandon. ஆடு தின்று கழித்த பயிர் விளங்காது *(உ.வ.). 3. பெரிய எண்ணினின்று சிறிய எண்ணைக் குறைத்தல்;* to substract. பத்தில் ஐந்தைக்கழி *(உ.வ.). 4. குறைத்தல்;* to deduct, abate, discount, remit. பத்து விழுக்காடு கழிவில் துணி வாங்கினேன் *(உ.வ.). 5. வெட்டுதல்;* to cut off, as hair, to pare off as nails; to clear off, clear away; to smooth off, as knots; to prune top. மூங்கிலில் இருந்து முள்ளைக் கழித்தான். *6. போக்குதல்;* to spend, waste, as time. "கருவிலே திருவிலாதீர் காலத்தை கழிக்கின்றீரே" *(திவ். திருமாலை.11.) . 7. வரி முதலியவை தள்ளிக் கொடுத்தல்;* to exempt, release, free as from duties or postage. வருமானத்தில் பத்து விழுக்காடு கழிவு செய்து வரி கட்டினான் *(உ.வ.). 8. மலம் முதலியவற்றை வெளிப்படுத்துதல்;* to cast off, as exudate, to evacuate, void, as excreta. குழந்தை நின்ற இடத்திலேயே மலம் கழித்துவிட்டது. *9. உருவுதல்;* to unsheath. "கழித்துறை செறியாவாளுடை எறுழ்த்தோள்" *(அகநா.24.).*

ம. கழி, கழிக்குக; க. கழி, களி, கழெ, களெ; து. கரி, களெ; பட. கயி; துட. கொடி; குட. கய்ய (பொழுது கழித்தல்); தெ. கடசு (பொழுது போதல்); உரா. களெ.

கழிப்பு–தல் kaḻippu-, *5 செ.கு.வி.* (v.t.) *1. போக்குதல்;* to spend, pass, as time. "பன்னாட் கழிப்பி" *(பொருந.111.). 2. செய்து முடித்தல்;* to complete. "மூவேழ் துறையு முறையுளி கழிப்பி" *(புறநா.152.20.).*

க. கழிபு, களிபு, களுபு, களுவு, களுகு, கழிப்பு, கழுபு, கழ்பு.

கழுமு–தல் kaḻumu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சேர்தல்;* to join, unite. "பெண்டிர்... செந்தீக் கழுமினார்" *(பு.வெ.7.28.). 2. பொருந்தியதாதல்;* to be fitting, suited. "கழுமிய காதல்" *(பு.வெ.10.முல்லைப்.5.கொளு). 3. திரளுதல்;* to come together, to crowd. "மென்புகை கழுமு சேர்க்கை" *(சீவக.1350.). 4. கலத்தல்;* to mix together. "கழுமிய ஞாட்பு" *(தொல்.சொல்.351.உரை.). 5. நிறைதல்;* to be full, complete. "கழுமிற்றுக் காதல்" *(சீவக.1870.). 6. மிகுதல் (சூடா.);* to be abundant, copious plentiful, to overflow. *7. மயங்குதல்;* to be fascinated, bewildered, confused. "கழுமிக் கோதை கண் படுக்கும்" *(சீவக.349.).*

தெ. க்ரம்முு; கூய். தூர்ச்

கழுவு[1]–தல் kaḻuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நீரால்*

தூய்மையாக்குதல்; to wash, cleanse by washing, rinse, purify. "கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால்" (குறள்,840.). 2. நீக்குதல்; to remove. "அருவினை கழூஉ மாதி முதல்வன்" (மணிமே.12,36.).

ம. கழுவுக, கழுகுக; க. கர்சு, கச்சு; கோத. கழ்த்; குட. கத்த். தெ. கக்கி, கடுகு, கட்கூ, கடுவு, கட்வு; கூய். கடுப், குவி. க்லாபினை; குரு. கச்ச்னா; மால். கசெ.

கழுவு^{2}–தல் kaḻuvu-, 5 செ.குன்றாவி. (v.t.) வட்டாக உருக்குதல்; to melt iron and mould as ingot. "இரும்பறக் கழுவி" (சீவக.698.).

கள்–தல் kaḷ-, 6 செ.கு.வி. (v.t.) 1. களைபிடுங்குதல்; to weed. "ஏரினும்நன்றால்எருவிடுதல்நட்டபினீரினுநன்றதன் காப்பு" (குறள்.1038.). 2. பறித்தல் (சூடா.); to pluck. 3. திருடுதல் (5.115); to rob, steal. "கட்போ ருளரெனின்" (சிலப்.). 4. ஏய்த்தல்; to deceive, entertain furtive designs upon.

ம. கள்க்குக, கக்குக; கோத. கள்வ்; துட. கொள்; குட. கள்; க. கள்; து. களு; தெ. கல்லெ; பட. கல்லு; கோண். கல்லானா; குரு. கர்னா; மா. கலெ.

கள்ளு–தல் kaḷḷu, 5 செ.கு.வி. (v.i.) கூடுதல்; to join. பன்மை பல்பொருட் கூட்டமாதலால், கூடுதலைக் குறிக்கும் 'கள்ளுதல்' என்னும் வினைச் சொல்லி னின்று 'கள்' என்னும் பன்மையுருபு அமைக்கப்பட்டது. (எ.டு.) மக்கள் (மக + கள்), மரங்கள், விலங்குகள், யாங்கள், நீங்கள், இவர்கள் (வேர்ச்.கட்.14.).

களி^{1}–த்தல் kaḷi-, 4 செ.கு.வி. (v.i.) 1. மகிழ்ச்சியில் திளைத்தல்; to exult, rejoice, glow with delight. "கருணைமுட்டப் பருகிக்களித்து" (திருவாச.6,33). 2. கள்ளைப்பருகி வெளி கொள்ளுதல்; to be intoxicated to revel, as bees feeding on toddy. "களிப்பவர் தமக்கு மோர்கதி யுண்டாகுமோ" (கந்தபு.திருநாட்.12.). 3. மதமுடைய தாதல்; to be in rut, as an elephant. "கண்ணயற் களிப்பன வண்ணல் யானை" (சீவக.566.). 4. செருக்குதல்; to be proud, vain, conceited. "முழுவதூஉங் கற்றனமென்று களியற்க" (நீதிநெறி.14.).

ம. களி, களிக்குக; க. கள்; தெ. கல்லு; து. கலி; **Afric.**ge luk.

களி^{2}–த்தல் kaḷi-, 4 செ.குன்றாவி. (v.t.) நுகர்தல்; enjoy. "பொற்கொடிமாதரைக் களிப்பதினும்" (பாரதி. பாஞ்சாலி.34.).

களை^{1}–தல் kaḷai-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. பிடுங்கியெறிதல்; to weed, pull up, pluck out. "களையுநர் கைகொல்லும்" (குறள்,879.). 2. நீக்குதல்; to remove, expel, separate; to extirpate, as disease; to share; to pare, as the nails, to moult as feathers. "இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள்,788.). 3. ஆடையணி முதலியன கழற்றுதல்; to strip or put off, as clothes or ornaments. "உடுத்துக் களைந்தநின் பீதகவாடை" (திவ்.திருப்பல்.9). 4. அழித்தல்; to exterminate, as a family or foe; to kill, destroy. "பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" (திவ்.திருப்பா.13.). 5. குழைதல்; to soften, melt, as the heart. 6. அரிசி கழுவுதல்; to wash or cleanse as rice.

ம. கள; க. களெ; தெ. தூசு; து. களையுனி, களெவுனி.

களை^{2}–தல் kaḷai-, 2 செ.குன்றாவி. (v.t.) கட்டி முடித்தல்; to tie, fasten, as a tuft of hair. "குடுமி களைந்தா னெங்கோ" (பு.வெ.9.21.).

களை^{3}–த்தல் kaḷai-, 2 செ.கு.வி. (v.i.) இளைப்புறுதல்; to be fatigued or exhausted; to be languid; to flag, faint, swoon. "ஓடிக் களைத்தோ" (இராமநா.பக்.20.).

தெ. களாசின்சு

கற்பி^{1}–த்தல் karpi-, பி.வி. (cani.) பயிற்றுவித்தல்; to teach, instruct. "அருங்கற்பனை கற்பித்து" (திருவாச.21.7.).

கற்பி^{2}–த்தல் kaṟpi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. புதிதாக உண்டாக்குதல்; to create; to construct; to invent, as a term; to compose; as a poem. "நான்முகன் கற்பிக்க வொருகடவுளோ" (தாயு.சுகவா.3.) 2. கட்டளையிடுதல்; to direct , command. "கனையிருள் வாய்வரக் கற்பித்த நீ" (தஞ்சைவா.193). 3. முறைப்படுத்துதல்; to prescribe, ordain. 4. ஏற்பாடு செய்தல்; to arrange. "அருந்துமிடங் கற்பித்தானே" (பாரத.அருச்சுனன்றீர்.23.). 5. நிலை கொள்ளச் செய்தல்; (insc.) to install as a deity in a temple. அக்கோயிலில் முருகனைக் கற்பித்தான் (இ.வ.). 6. கொடுத்தல்; to donate, present. "மேற்படியூரில் இருக்கும் அம்மைமாரில் ஆண்டினார் மகள் சீரங்கம் வழிபாடாகக் கற்பித்த திருநந்தா விளக்கு" (S.i.i.vol.5. Part II insc. 748.S.9.).

ம. கல்பிக்குக; க. கலிசு; பட. கல்சு.

கற்பி^{3}–த்தல் kaṟpi-, 4 செ.கு.வி. (v.i.) கற்பனை செய்தல்; to imagine, build castles in the air.

கற–த்தல் kaṟa-, 3 செ.குன்றாவி. (v.t.) 1. பால் கறத்தல்; to milk. "ஆவின்பாலைக் கறந்து கொண்டாட்டக்கண்டு" (தேவா.192, 3.). "கறந்த பாலும் எச்சில், பிறந்த பிள்ளையும் எச்சில்' (பழ.). 2. பால் கொடுத்தல்; to yield milk, as a cow. இந்த மாடு எத்தனைபடி கறக்கும்? (உவ.). 3. கவர்தல்; to misappropriate, as another's property; to extort. எதிரி சொத்துகளையெல்லாம் கறந்து கொண்டான் (இ.வ.). கறக்கக் கறக்க ஊறும் பசுவின் பால் படிக்கப் படிக்க ஊறும் மெய்யறிவு (பழ.). 'முந்நாழி கறக்கிற பசுவானாலும் முன் இறப்பைப் பிடுங்கிற பசு ஆகாது' (பழ.).

ம. கறக்குக; க. கறெ, கரசு; பட. கறெ; கோத. கர்வ்; துட. கற்; உரா. கற.

கறக்கு–தல் kaṟakku-, 5 செ.கு.வி. (v.i.) 1. நூன்

முறுக்கேற்றுதல்; to spin, as yarn. நூல் கறக்கினான் (இ.வ.). 2. நிமிண்டுதல்; to pinch, jerk so as to cause severe pain. அவன் துடையைக் கறக்கினான் (இ.வ.).

கறங்கு[1]–தல் kaṟaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound. "முரசங் கறங்க" (புறநா.36,12.). 2. சுழலுதல்; to whirl. "பம்பரத்து.... கறங்கிய படிய" (கந்தபு.திருநகரப்.28) (ம.கரங்ஙு). 3. சூழ்தல்; to surround, overwhelm, envelop as darkness. "கறங்கிருண் மாலைக்கும்போர்" (வள்ளுவமா.34.).

ம. கறங்குக; க. கறங்கு; கற; து. கரு.

கறங்கு[2]–தல் kaṟuṅgu-, 5 செ.கு.வி. (v.i.) கறுப்பு வண்ணமாதல்; to be blackened.

கறண்டு–தல் kaṟaṇḍu-, 5 செ.கு.வி. (v.i.) வறண்டுதல்; to scratch.

கறள்(ளு)–தல் kaṟaḷ-ḷu, 16 செ.கு.வி. (v.i.) 1. வளர்ச்சியறுதல்; to be stunted in growth. 2. எண்ணெயின்மையால் திரி மங்கியெரிதல்; to burn low, as a wick for want of oil.

கறி–த்தல் kaṟi-, 4 செ.குன்றாவி. (v.t.) மெல்லக் கடித்தல்; to chew; to eat by biting or nibbling, as biscuits, grass. "அரிமா கொடிப்புற் கறிக்குமோ" (நாலடி.141).

ம. கறி; க. கர்சு, கர்ச்சி; தெ. கரசு; து. கசெபுனி, கச்சுனி; கொலா., பர். கச்ச்; கோண். கச்கானா, கசீன; கூ. கச; குரு. கச்சினை; மா. க்வலவெ; கசபா. கறி; குவி. கர்கி.

Mal.kerat, **Norw.**klippe.

கறு[1]–த்தல் kaṟu-, 4 செ.கு.வி. (v.i.) 1. கருமையாதல்; to grow black, darker. "கறுத்தா யுருவம்" (கம்பரா.நகர்நீங்.58). [ம.கறு.]. 2. முற்றுதல்; to mature, come to a climax. "கௌவை கறுப்ப" (மதுரைக்.271). 3. அழுக்காதல்; to become impure, polluted, to contract moral defilement.

கறு[2]–த்தல் kaṟu-, 4 செ.குன்றாவி. (v.t.) சினத்தல்; to resent, to get angry with. "வசையுநர்க்கறுத்த பகைவர்" (பதிற்றுப்.32,15.).

ம. கறுக்குக; க. கர்கு, கறங்கு; துட. கர்வ்; குட. கற.

கறும்பு–தல் kaṟumbu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. துன்புறுத்தல்; to torment. "கறும்பி யூர்வன வைந்துள காயத்தில்" (தேவா.370,6.). 2. சிறிது சிறிதாகக் கடித்துண்ணுதல்; to eat bit by bit.

ம. கறும்புக

கறுமு–தல் kaṟmu-, 5 செ.கு.வி. (v.i.) சினத்தல்; to show signs of anger, to be enraged.

கறுவு–தல் kaṟuvu-, 5 செ.கு.வி. (v.i.) 1. சினக் குறிப்புக் காட்டுதல்; to exhibit signs of displeasure, frown, look sternly. 2. மனவுரங் கொள்ளுதல்; to rankle; to entertain malice, implacable hatred. "கறுவி வெகுண்டுரைப்பான்" (திரிகடு.46.). 3. பல்லால் துருவுதல்; to nibble, as a rat. எலி தேங்காயைக் கறுவுகிறது (செ.அக.).

கன்று–தல் kaṉṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முதிர்தல்; to mature, grown intense. "களவின்கட் கன்றிய காதல்" (குறள்.284). 2. அடிபடுதல்; to get accustomed. "கடனடிறய கடளவடன" (சிலப்.16,152.). 3. சினக் குறிப்புக் கொள்ளுதல் (தி.வா.); to be enraged. 4. வெயிலாற் கருகுதல்; to be scorched; to be sunburnt, as the face. வெயிலில் முகம் கன்றிவிட்டது (உ.வ.). 5. களைகுன்றுதல்; to become dim or dull. 6. மனமுருகுதல்; to feel compassion; to melt, as the heart. "கலையின்பிணை கன்றிடுமென்று" (சீவக.1188). 7. வருந்துதல்; to suffer, to be aggrieved. நெஞ்சு கன்றக் கவிபாடுகிற (ஈடு.3,9,6.). 8. குழப்பமடைதல்; to be vexed, confused. 9. நோதல்; to become sore, as with a blow, as the feet with walking, as the hands with first using a tool. நடந்து நடந்து கால்கன்றியது (இ.வ.). 10. வாடுதல்; to fade, become pale, as from exhaustion. "தன்னுடம்பு கன்றுங்கால்" (திரிகடு.91.). 11. அடிபடுதலால் காய் முதலியன பதனழிதல்; to become hard and unfit for use, as fruits injured in their growth. காய்கன்றி விழுந்தது (உ.வ.).

ம. கன்னுக; க., தெ., பட. கந்து. குட. கந்தி; து. கந்துனி.

கன்னு[1]–தல் kaṉṉu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பழுத்தல்; to rippen. 2. அரத்தங்கட்டிச் சிவப்பாதல்; to be black or yellow spot produced by extravasated blood caused by a confusion.

கன்னு[2]–தல் kaṉṉu-, செ.குன்றாவி. (v.t.) குழந்தை பெறுதல், ஈனுதல்; to give birth to.

தெ. கன

கன–த்தல் kanna-, 4 செ.கு.வி. (v.i.) 1. பாரமாதல்; to be heavy. "கனக்கும் வெண்டரள வடம்" (பாரத.குருகுல.137). 2. மிகுதியாதல்; to be abundant, copious, numerous. "சாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும்" (ஈடு.1,3,9.). 3. பருத்தல்; to be stout. "கனத்தெழு விலங்கற்றிண்டேர்" (இரகு.இரகுவ.59.). 4. தடித்தல்; to grow dense or thick. 5. கட்டைக் குரலாதல்; to be hoarse; to break, as the voice of a youth. குரல் கனத்துவிட்டது (உ.வ.). 6. பெருமையுறுதல்; to be honourable, noble, illustrious. கனத்த குடியிற் பிறந்தவன் (உ.வ.).

ம. கனக்குக; **H.**kan; **Skt.**ghana.

கனல்[1](லு)–தல் kaṉalu-, 13 செ.கு.வி. (v.i.) 1. எரிதல்; to be hot; to glow, as fire. 2. கொதித்தல்; to boil, as hot water. "தீப்பொறி கனலுமே" (நாலடி.,291). 3. சினத்தல்; to be angry, to be enraged. "மாமுனி கனல மேனாள்" (கம்பரா. நீர்விளை.2.). 4. சிவத்தல்; to redden. "கண்கனன்று... நோக்குதலும்" (பு.வெ.6,23.).

க. கனல்; தெ. கனலு. கூ. கம்ப.

கனல்²–(லு)தல் kaṉal(lu)-, *14 செ.குன்றாவி.* (v.t.) *சுடுதல்;* to burn, to be warm, as body in temperature. "*சுலவி வயிற்றகங் கனலுஞ் சூலை நோய்*" *(பெரியபு. திருநா.62).*

கனவரி–த்தல் kaṉavari-, *4 செ.கு.வி.* (v.i.) *கனவில் தனக்குத்தானே பேசுதல்;* to talk in sleep.

கனவு¹–தல் kaṉavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தூக்கத்தில் நேரில் நிகழ்வது போன்ற காட்சிகளைக் காணுதல்;* to have visions in sleep as seen while awake, to dream. "*பரந்திலங் கருவியொடு... நரந்தங் கனவும்*" *(பதிற்றுப்.11,22).*

ம. கனவுக; க. கனகான்; தெ. கலகனு; பட. கனசு; காணு.

கனவு²–தல் kaṉavu-, *5 செ.கு.வி.* (v.i.) *மயங்குதல்;* to be charmed, allured. "*சிந்தை மாத்திரங் கனவலின்*" *(ஞானா.41,9.).*

கனற்று¹–தல் kaṉaṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. எரிவித்தல்;* to cause to burn. "*கலந்தவர் காமத் தைக் கனற்றலோ செய்தாய்*" *(கலித்.148.). 2. சுடு வித்தல்;* to heat gently, to impart heat by direct rays, not applicable to heating in a vessel. *வெயில் பிள்ளையைக் கனற்றியது (வின்.). 3. வெதுப்புதல்;* to render warm. "*கனற்றக் கொண்ட நறவென்னாம்*" *(புறநா.384.).*

கனற்று²–தல் kaṉaṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *மிக விளங்குதல்;* to shine brightly. "*காதல் கனற்ற நின்றானும்*" *(தேவா.696,7.).*

கனி¹–தல் kaṉi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பழுத்தல்;* to ripen, as fruits; to turn mellow, luscious sweet. "*கால மின்றியுங் கனிந்தன கனி*" *(கம்பரா.வனம்பு.44.). 2. அளிதல்;* to be over ripe. *3. முதிர்தல்;* to become complete, perfect. "*கன்னிமை கனியா*" *(பரிபா.11,136.). 4. இனித்தல்;* to be mellifluous, to be full of sweetness. "*கனிந்த சொல்லாய்*" *(தஞ்சைவா.174). 5. மனமுதலியன இளகுதல்;* to melt, grow tender, become soft, as the heart by affection, love devotion. "*விஞ்சையர் கனிந்து சோர்ந்தார்*" *(சீவக.727) (தகரி.). 6. தழல் மிகுதல்;* to be red-hot, to glow. *நெருப்புக் கனிகின்றது (உவ.). 7. பழுக்கக் காய்தல்;* to become red - hot, as a metal. *கனிய வெந்த இரும்பு. 8. முன்சினம் அடைதல் (சூடா.);* to get suddenly angry, to be irritable.

ம. கனியுக; க. கனிகரிசு, கழி, களி; தெ. கனி. து. கனி, கணி; குவி. கம்பலி.

கனி²–த்தல் kaṉi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *இளகச் செய்தல்;* to melt, soften. "*அனங்கனைக் கனிக்கு நீராள்*" *(சீவக.607.).*

ம. கனிக்குக.

கனுக்கு¹–தல் kaṉukku-, *5 செ.கு.வி.* (v.i.) *பாடும் போது கண்டத்தொனி உருளுதல்;* to shake the voice in singing, quaver or flourish.

கனுக்கு²–தல் kaṉukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கசங்கப் பண்ணுதல்;* to emaciate, to grow lean by disease or by labour, to train, inure, keep closely engaged; to cause to grow mellow by heat, or by reiterated pressure. *காய்ச்சல் நாளுக்கு நாள் அவனைக் கனுக்கிப் போட்டது (உ.வ.).*

கனுகு–தல் kaṉugu-, *7 செ.கு.வி.* (v.i.) *நோயால் இளைத்தல்;* to emaciate as from diseases *(சா.அக.).*

கனை¹–தல் kaṉai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெருங்குதல்;* to be crowded. "*கனைதுளி சிதறென*" *(கலித்.16,7.). 2. மிகுதல்;* to be intense. "*காமங் கனைந்தெழ*" *(பரிபா.10,63.). 3. ஒலித்தல்;* to sound, as a drum. "*ஆடுதொறு கனையும்... துடி*" *(அகநா.79.).*

ம. கனெக்க; கோத. கன்வ் (மாடு அல்லது எருமை கன்றுக்காகக் கத்துதல்) துட. கென்வ் (உருமுதல்); க. கனெ; குட. கெனெ; பட. கனெ (கால் நடைகள் ஒலி எழுப்புதல்).

கனை²–த்தல் kaṉai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தொண்டையைச் சீர்படுத்துதல்;* to become clear or shrill as the voice. *2. ஒலித்தல்;* to sound, as a drum; to bellow, as a buffalo. "*கனைகடற் றண்சேர்ப்ப*" *(நால.349). "மேதி கன்றுள்ளிக் கனைப்ப" கம்பரா.நாட்டுப்.13.). 3. குதிரை முதலியன கத்துதல் (உ.வ.);* to neigh, as a horse. *4. கொக்கரித்தல் (வின்.);* to laugh in contempt, ridicule, hum and haw. *5. வட மொழி ஐவர்க்க எழுத்துகளுள் நான்காம் மெய்களை அழுத்தியொலித்தல் (நன்.146,மயிலை.);* to sound the aspirated soft consonants in Sanskrit.

கனை³–த்தல் kaṉai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. திரளுதல்;* to mature; to grow round, as fruits. "*கவிழ் கனைத்து... தீங்கழைக் கரும்பு*" *(மலைபடு.117). 2. இருளுதல் (சூடா.);* to become darkened. *3. மூண்டு செல்லுதல்;* to proceed in eager, haste. "*மனத்தினார் மாண்பலா நெறிகண் மேலே கனைப்பரால்*" *(தேவா.9,8.). 4. கதறல்;* to bleat. "*மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த பாலுண்டு*" *(இராமா.நாட்டு.13).*

ம. கனய்க்குக; க. கெனெ; கோத. கன்வ்; துட. கென்வ். **E.**neigh.

fh

கா¹–த்தல் kā-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. காவல் செய்தல்;* to guard, keep guard over, watch. "*சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?*" *(குறள், 57). 2. கெடாது பேணுதல்;* to keep safe from harm or loss. *குளிர்ப்பதனத்தில் பழங்களைப் பல நாள் காத்து வைக்கலாம் (உ.வ.). 3. அழியாது காத்தல்;* to keep safe from danger or death. *இடையன் ஆடுகளைக் காத்து வளர்க்கிறான் (உ.வ.). 4. உயிருடன் வைத்துப் பேணுதல்;* to keep alive. *முடமான சிறுவனை அவன் தாய் காத்து வருகிறாள் (உ.வ.). 5. நடைமுறையில் இருக்குமாறு செய்தல்;* to keep in existence. *பாவாணர் அறக்கட்டளையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் காத்து வருகிறது (உ.வ.). 6. பாதுகாத்தல்;* to preserve, shelter. "*காக்கக்*

கடவியநீ காவா திருந்தக்கால்" (திருமுரு. இறுதி. 8). 7. அரசாளுதல்; to govern, rule, reign. "மன்னுயிர் காக்கு மாயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட" (சிலப்.5:163, 164). 8. பின் பற்றுதல்; to observe, as vow, a fast. அவள் நோன்பு காத்தாள் (உ.வ.). 9. அரண்காப்புச் செய்தல்; to keep watch. 10. பேணி வளர்த்தல், பேணிக் காத்தல்; to tend, to nourish. 11. கவனித்துப் பேணுதல்; to take care of. 12. ஆடுமாடு முதலியன மேய்த்தல்; to graze cattle. மாடுகாத்த மாயவன் (உ.வ.).

ம. கா, காக்குக; க. கா, காய், காயு; தெ. காச்சு; து. காபுனி; கோத. காவ்; துட. கோவ்; குட. கா; கொலா. கய்; பர்., கட. காப்; கோண். கேபனா; கூ. காப; குவி. காசலி; குரு. காப்ன; மா. க்வபெ; பிரா. க்வாப்ங்க்; பட. காலு.

கா²–த்தல் kā-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. விலக்குதல்; to prohibit. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை" (குறள், 429). 2. தடுத்தல்; to restrain. "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்த லரிது" (குறள், 29). 3. தீமை வரவொட்டாமல் காப்பாற்றுதல்; to rescue, safe-guard. "கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்" (கம்பரா. பால. வேள்வி. 41).

ம. காக்குக.

கா³–த்தல் kā-, 4 செ.கு.வி.(v.i.) எதிர்ப்பார்த்திருத்தல்; to wait for, to maintain. அவனுக்காகக் காத்திருந்தாள் (உ.வ.).

குட. க.

காசாக்கு–தல் kāšākku-, 5 செ.கு.வி.(v.i.) 1. தன் வருவாயையே குறியாகக்கொண்டு எதையும் விற்றுப் பணம் சேர்த்தல்; cashing on something. நடிகையின் தந்தை மகளின் புகழைக் காசாக்குவதில் குறியாக இருக்கிறார் (உ.வ.).

காசிடு–தல் kāšiḍu-, 20 செ.கு.வி.(v.i.) பணஞ்செலுத்துதல்; to remit. "நெல்லுக்குத் தலை அகப்படி காசு இடவும்" (தெ.இ.க.தொ.VII. 1039, 18).

காட்சிகொடு–த்தல் kāṭci-koḍu-, 5 செ.கு.வி.(v.i.) தோற்றமளித்தல்; to appear or manifest oneself, as God to worshippers, to give audience, as a king to his subjects. "பேதையுந் தாமுமாங் காட்சிமுன் கொடுத்தார்" (பெரியபு. அமர்நீதி 46).

காட்டிக்கொடு–த்தல் kāṭṭi-k-koḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கற்றுக்கொடுத்தல்; to put one in the way, to teach or show the method of doing anything. 2. தன் பக்கத்தானொருவனை எதிரி கைக்கொள்ளும் நிலைமையை உண்டாக்குதல்; to play false, to accuse; to betray, as a person to his enemy. 3. ஆய்வு முறையைக் கையாண்டு வெளிப்படுத்துதல்; reveal. பையில் வைத்திருக்கும் பேனாக் கத்தியைக்கூட இந்த மின்கருவி காட்டி கொடுத்துவிடும் (உ.வ.).

காட்டிக்கொள்ளு–தல் kāṭṭi-k-koḷḷu-, 16 செ.குன்றாவி.(v.t.) இல்லாததை உள்ளதுபோலக் காட்டிக்கொள்ளுதல்; try to pass for; put on airs. அவன் தன்னை அறிவாளி போலக் காட்டிக் கொண்டான் (உ.வ.).

காட்டு–தல் kāṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. காண்பித்தல்; to show, exhibit, display. "எம்மில்லங் காட்டுதும்" (நாலடி, 293). 2. அறிவித்தல்; to reveal, disclose, set forth. "காணாதாற் காட்டுவான்" (குறள், 849). 3. நிறுவுதல்; to prove. "நிறைமொழி மாந்தர்.... மறைமொழி காட்டிவிடும்" (குறள், 28). 4. நினைவூட்டுதல்; to remind. "முறுவற் குறிகாட்டி முத்தே யுலகை முடிப்பாயோ" (கம்பரா. கடல் காண். 8). 5. திருவமுது படைத்தல்; to offer to a deity. "ஆழ்வார்க்குக் காட்டுகின்ற திருவமுதும்" (S.I.I.III. 49-3:102). 6. நிழலுருச் செய்தல்; to reflect, as a mirror or water. "அடுத்தது காட்டும் பளிங்கு போல்" (குறள், 706). 7. உண்டாக்குதல்; to create, bring to pass. "களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி" (சிலப். 19:17). 8. அறிமுகஞ் செய்வித்தல்; to introduce. "செவ்வழி யுள்ளத் தோனைக் காட்டுதி தெரிய வென்றான்" (கம்பரா. கிட்கிந் அனுமப். 23). 9. நறுமண முதலியன ஊட்டுதல்; to apply, as incense or perfume to the hair. "ஆவிகாட்டி... சோர்குழல்" (கம்பரா. கிட்கிந். நாடவி. 59). 10. வெப்பம் உறைக்கச் செய்தல்; to heat, as a vessel of ghee. நெய்ப்பாத்திரத்தை நெருப்பிற்காட்டி உருக்கினான் (உ.வ.). 11. மீட்டுத்தருதல்; to bring back. "ஆழிகாட்டியென் னாருயிர் காட்டினாய்" (கம்பரா. சுந்தர. பிணிவீட்டு. 34).

ம.காட்டுக; க.காணிசு; கானிபின்சு; து.காணுசாபுனி, காணிசாவுனி; குட., கோத. காட்; துட. கோட்.

காடு–தல் kāḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) அலைக்கழித்தல், துன்புறுத்துதல்; to treat harsly, give trouble.

க. காடு; து. காட்யுனி, காடியுனி.

காண்¹(ணு)–தல் kāṇ-, 16 செ.குன்றாவி.(v.t.) 1. பார்த்தல்; to see, perceive, view. "காணிற் குடிப்பழியாம்" (நாலடி, 84). 2. இறைவன் பெரியமனிதர், முழுநிலவு போன்றவற்றைக் காணுதல்; to gain sight of, as a deity, a great person, the moon. "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" (திவ். இயற்.3:1). 3. கண்டறிதல்; to discover, find out. "காணாதாற் காட்டுவான் தான்காணான்" (குறள், 849). 4. உண்டாக்குதல்; to make, create. "முனைவன் கண்டது" (தொல். பொருள். மரபு. 95). 5. பொறியாலறிதல்; to perceive by the sensse. அவன் பேச்சைக் கண்டு (திருவாலவா.16:28). 6. ஆராய்தல்; to consider, investigate. "அறம் பொருள் கண்டார் கணில்" (குறள்:141). 7. தானே நுகர்ந்து அறிதல்;

to experience. 8. மதித்தல்; to regard. "தானெனைக் கண்டும்" (கல்லா. 51:7). 9. வணங்குதல் (பிங்.); to worship, venerate, reverence. 10. புறங்காணுதல்; to put to flight, drive away, as seeing the back of enemies. "நிலவுக் காண்பது போல" (கலித் : 119. 4). 11. பெறுதல்; to attain, abtain, get. "முற்று மிடங்கண்டபின்" (குறள், 491). 12. சொல்லுதல்; to tell say. "யாவருங் கண்ட நெறி" (ஆசாரக்.17). 13. ஒத்திருத்தல்; to look like, resemble. "மழைகாணு மணிநிறத்தோய்" (கம்பரா. அயோத். குகப். 26). 14. பொருந்துதல்; to be fit. "மற்காணுந் திரடிண்டோள்" (கம்பரா. குக. 26).

காண்²(ணு)–தல் kāṇ-, 12 செ.கு.வி.(v.i.) 1. உண்டாதல், பலித்தல்; to accure, result. இவ்வாண்டு விளைச்சல் எவ்வளவு காணும்? (உ.வ.). 2. கண்ணுக்குத் தெரிதல்; to appear, to be found, to become visible evident. "காண்கின்ற நிலமெல்லாம் யானே யென்னும்" (திவ். திருவாய். 5.6:3). 3. போதியதாதல்; to be sufficient. இப்பொருள் எத்தனை நாளைக்குக் காணும் (உ.வ.).

காண்பி–த்தல் kāṇbi, 1 பி.வி. (v.caus.) 1. காட்டுதல்; to show, exhibit, display. 2. மெய்ப்பித்தல், சரியென்று காட்டுதல்; to prove, demonstrate.

காணி–த்தல் kāṇi-, 4 செ.குன்றாவி.(v.t.) காட்டுதல் (நாஞ்.); to show.

ம. காணிக்கு; க. காணிசு; தெ. கனுபின்சு.

காத்திரு–த்தல் kāttiru-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. எதிர்பார்த்திருத்தல்; to wait, expect, watch for, look for. 2. காவல் பூண்டிருத்தல்; to safeguard, as one's property. "பொருள் காத் திருப்பனேல் அ ஆ இழந்தான்" (நாலடி, 9).

து. காதொநுநி.

காதடை–த்தல் kāḍaḍai-, 4 செ.கு.வி.(v.i.) நோய், பசி முதலியவற்றால் செவி கேளாது போதல்; to experience a choking sensation in the ear owing to fatigue, hunger, disease etc.

ம. காதடையுக.

காதலி–த்தல் kādali-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. அன்பு கூர்தல்; to love, delight in; to be fond of; to be warmly attached to. "காதலித் தாதுநா மென்னு மவாவினை" (நாலடி, 181). 2. விரும்புதல்; to long for, desire. "கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோதுவார்" (கந்தபு பாயி. நூற்பய.).

காது–தல் kādu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கொல்லுதல்; to kill, slay, murder. "அவுணர் தங்கிளையைக் காதி" (கந்தபு. விடை. 43). 2. வெட்டுதல்; to cut. "குயத்தாற் காதி" (கந்தபு. வில்வலன் வாதாவிவதை. 15). 3. பிரிவு செய்தல் (வின்.); to divide, dissect.

க., பட. காது; து. காதுநி.

Fin. kātā; Karel. koada; **ED.** kāduma; Jap. katsu; **Q.** fatikaca.

காதுகுத்து–தல் kādu-kuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. காதில் அணிகலன் அணிய துளை போடுதல்; to bore the ear for wearing ear ornaments. "கேசவ நம்பீ யுன்னைக் காதுகுத்த" (திவ்.பெரியாழ்.2,3:1.). 2. வஞ்சித்தல்; to beguile, deceive, mislead.

ம. காதுகுத்துக

காதுகொடு–த்தல் kādu-koḍu-, 4 செ.கு.வி. (v.i.) கவனித்துக்கேட்டல்; to give ear, hearken, listen, give attention to; அவர்கள் பேசுவதை காது கொடுத்துக் கேட்டேன் (உ.வ.).

ம. காதுகொடுக்குக

காதைநெறி–த்தல் kādai-neṟi-, 4 செ.கு.வி.(v.i.) உற்றுக் கேட்கும்படி குதிரை முதலிய விலங்குகள் காதை நிமிர்த்தல் (வின்.); to cock the ear, as horses on hearing a frightful noise.

காந்து¹–தல் kāndu-, 5 செ.கு.வி.(v.i.) 1. எரிவெடுத்தல்; to burn, smart as a sore. கைப்புண் காந்துகிறது. 2. வெப்பங்கொள்ளுதல்; to feel burning sensation in the body. 3. கருகுதல்; to be scorched, charred, reduced to cinder. சோறு சாந்திப் போயிற்று. 4. மனங்கொதித்தல்; to be hot with indigation. "புத்திபோய்க் காந்துகின்றது" (கம்பரா. சடாயுகா.37). 5. ஒளிவிடுதல்; to shine, give out lustre, emit rays. "பரம்பிற் காந்து" (கம்பரா. நாட்டுப்.7.). 6. பொறாமை கொள்ளுதல்; to burn with envy. அவளைக் கண்டு காந்து கிறான். 7. வீணாய் எரிதல்; to burn without use, as oven.

ம. காந்துக.

காப்புக்கட்டு¹–தல் kāppu-k-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மஞ்சணூற்காப்பு அணிதல்; to tie an amulet, a yellow string on the arm in token of a vow and as a pledge of its fulfilment. 2. மூலிகைக்குக் காப்புநாண் கட்டுதல் (இ.வ.); to tie a string round herbs in order to dispel any evil curse. 3. ஊக்கத்துடன் செயலைத் தொடங்குதல்; to engage in a pursuit with earnestness. 4. கோயிலில் திருவிழாத் தொடங்குதல்; to commence a temple festival.

ம. காப்புகட்டுக

காப்புக்கட்டு²–தல் kāppu-k-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.t.) கொங்கு நாட்டில் பொங்கல் நாளுக்கு முதல்நாள், வீட்டின் முகப்பில் பூளைப்பூ, ஆவாரம்பூ, வேப்பிலை ஆகிய மூன்றையும் கொத்தாகச் செறுகிவைத்தல்; inserting the bunch containing, pūḷai, avārai and neem.

காந்து²–தல் kāndu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. சினத்தல்; to be angry with. "காந்தி மலைக்குத்து மால்யானை" (வள்ளுவமா. 11). 2. சுட வைத்தல் (யாழ்ப்.); to heat. 3. சுவறச் செய்தல் (யாழ்ப்.); to absorb, exhaust by evaporation, as water, rain. 4. பல்லினாற் கறுவுதல் (யாழ்ப்.); to bite off,

scrape out with the teeth, as a coconut.

ம. காந்துக.

காப்பவிழ்–த்தல் kāppaviḻ-, *2 செ.கு.வி.*(v.i.) மணம் முதலிய விழாவில் கையில் கட்டிய காப்பு நாணை நீக்குதல்; to untie the ceremonial string from the wrist with appropriate ceremonies.

காப்பாற்று–தல் kāppāṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) உதவி செய்து காப்பாற்றுதல்; to preserve, guard, watch, take care of, protect, save. *உன்னைக் கடவுள் காப்பாற்றுவார் (உ.வ.).*

ம. காப்பாற்றுக, காப்பாத்துக; க., தெ. காபாடு.

காப்புச்செய்–தல் kāppu-c-cey-, *1 செ.கு.வி.*(v.i.) ஓலைச் சுவடியைக் கட்டிவைத்தல்; to tie up, as a cadaster bundle. "*உடன்காப்புச் செய்து*" *(தணிகைப்பு. அகத். 167).*

காம்பு–தல் kāmbu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* அரிசி பயறு முதலிய உணவுப் பொருள்கள் நீண்ட நாளுக்குப்பின் சுவையற்றுப் போதல்; to become insipid, as food stuff.

காமுறு–தல் kāmuṟu-, *20 செ.குன்றாவி.*(v.t.) *1.* விரும்புதல்; to desire, wish for. "*இன்பமே காமுறுவ ரேழையார்*" *(நாலடி, 60). 2.* வேண்டிக் கொள்ளுதல்; to beseech, pray for. "*கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ*" *(கலித். 16).*

காய்[1]–தல் kāy-, *4 செ.கு.வி.*(v.i.) *1.* நீர் முதலியன வெப்பமுறுதல்; to become hot. *2.* சுடுதல்; to burn; to be warm, as body in temperature. *சுரத்தால் உடல் காய்கிறது. 3.* உலர்தல்; to wither, as vegetables by the sun; to parch, as the lips or mouth; to dry, as the ground. *வெயிலிற் காய்ந்த பொருள். 4.* மெலிதல் *(வின்.)*; to be dried up, as the humours of the body; to become emaciated. *5.* வயிறு பசியால் வருந்துதல்; starving due to hunger.

ம. காயுக; க. காய்; தெ. காகு; து. காயுனி; குட., கோத். காய்; துட. கேகாய்; கொலா., நா. காங்க்; பர். காபிப்; கோண். காசனா; குரு. காய்னா; மா. க்வயெ; கூ. காந்த.

Fin. kajo; **Es.** kajastada; **Jap.** kaga; **Q.** jaya.

காய்[2]–தல் kāy-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1.* எரித்தல்; to burn, consume. "*மதவேள் தன்னுடலங் காய்ந்தார்*" *(தேவா. 15:6). 2.* அழித்தல்; to kill, destroy. "*கஞ்சனைக் காய்ந்தானை*" *(திவ். பெரியதி. 7.6.5). 3.* விலக்குதல்; to remove, do away with, lay aside. "*கோப முதலிய குற்றங் காய்ந்தார்*" *(பெரியபு. அப்பூதி. 2). 4.* வெறுத்தல்; to be prejudice to dislike, hate. "*காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க ணாய்தல்*" *(அறநெறி. 22).*

ம. காயுக.

காய்[3]–த்தல் kāy-, *4 செ.கு.வி.*(v.i.) மரம்செடி முதலியன காய்களைக் கொள்ளுதல்; to bear fruit.

ம. காய்க்குக; க. காய்; தெ. காசு, கான்சு; து. காயுனி.

காய்[4]–த்தல் kāy-, *2 செ.கு.வி.*(v.i.) நுகர்வு முதிர்தல்; to be of ripe experience. "*உணரு மாண் பினாற் காய்த்தவர்*" *(கம்பரா. விபீடண. 95).*

காய்[5]–த்தல் kāy-, *4 செ.கு.வி.*(v.i.) தழும்புண்டாதல்; to become callous; to form hard bunches, knots, warts excrescences on the body, as from wounds, from walking, from using tools. *கையெல்லாம் காய்த்துப்போயிற்று.*

காய்கொள்(ளு)–தல் kāy-koḷḷu-, *16 செ.கு.வி.*(v.i.) *1.* காய்த்தல்; to bear fruit. *2.* காயாதல்; to take the shape of a fruit.

து. காயிபோபுனி

காய்ச்சிவடி–த்தல் kāyccivaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* வாலையிலிட்டிறக்கல்; distilling. *2.* நெருப்பிற் கொதிக்கவைத்து வடிகட்டுதல்; filtering after boiling *(சா. அக.).*

காய்ச்சு–தல் kāyccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* காயச் செய்தல்; to boil. *கஞ்சி காய்ச்சினாள். 2.* சமைத்தல்; to cook. *3.* தீயாற் சூடாக்குதல்; to heat by fire. *4.* உலர்த்துதல் *(வின்.)*; to dry, warm, as in the sun or by putting near the fire. *5.* கடிதல்; to scold, reprove, take to task. *6.* நையப்புடைத்தல்; to beat, belabour. *முதலாளி அவளை நன்றாகக் காய்ச்சிவிட்டார் (உ.வ.). 7.* சாயமிடுதல் *(யாழ்.)*; to dye, tinge, as a cloth.

ம. காயிக்குக; பட. காசு.

Fin. keittā; **Es.** keeta; **Mari.** kūam; **Jap.** gutaguta; **Q.** janchay.

காய்த்து–தல் kāyttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.* எரியச் செய்தல்; to ignite, cause to burn. "*காய்த்திய பொற்றொடி யேவ*" *(சிலம்பு. 21; 55). 2.* சினத்தல் *(சிலப். 21:55 அரும்.).*

காய்ந்துபோ–தல் kāyndu-pō-, *8 செ.கு.வி.* (v.i.) உலர்தல்; growing dry *(சா.அக.).*

காயடி–த்தல் kāyaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) விரையடித்தல்; to castrate.

மறுவ. விதையடித்தல்

கார்[1]–த்தல் kār-, *4 செ.கு.வி.*(v.i.) கறுப்பாதல்; to darken, grow black. "*கார்க்கின்ற மெய்யவுணர்*" *(கந்தபு. பானுகோ. 122).*

கார்[2]–த்தல் kār-, *4 செ.கு.வி.*(v.i.) *1.* உறைத்தல் *(பிங்.)*; to be pungent, acrid, hot to the taste. *2.* உப்புக்கறித்தல் *(வின்.)*; to be very saltish or brackish.

கார்[3]–த்தல் kār-, *4 செ.குன்றாவி.*(v.t.) வெறுத்தல்; to hate. "*பாலர்கள் கார்ப்பார்*" *(ஏலா. 54).*

உறைத்தல் பொருள் வெறுத்தல் பொருளில்

வளர்ந்தது.

கார்⁴–த்தல் kār-, *4 செ.குன்றாவி.* (v.t.) அரும்புதல்; to bud. "வண்கொன்றைகள் கார்த்தனவே" *(திவ்.இயற். திருவிருத்.68).*

காரறு–த்தல் kār-aṟu-, *4 செ.கு.வி.*(v.i.) கார் நெற்பயிரை அறுவடை செய்தல்; to reap kār paddy.

கால்(லு)–தல் kāl-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* வெளிப்படுதல் *(திவா.);* to flow, as saliva from the mouth, poison from a serpent's fang; to issue, as blood from a vein. " உருமுகான் றென்னப் பல்லியங்களு மார்த்தன" *(கந்தபு. முதனாட். 3). 2.* குதித்தல்; to leap forth, as a water fall. "விடர்கா லருவி வியன்மலை" *(சிறுபாண். 170). 3.* கக்குதல் *(திவா.);* to vomit, disgorge. *4.* தோற்றுவித்தல்; to bring to public view; to reveal; to shoot forth, as ears of corn. "பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி" *(பெரும்பாண். 2).*

ம. காலுக; க., பட. காறு.

கால்கழுவு–தல் kāl-kaḻuvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* பாதபூசை செய்தல்; to wash the feet of a guru or saint. *2.* மலங்கழுவுதல் *(உ.வ.);* to wash oneself after evacuation.

கால்சுகூ–தல் kāl-kūšu-, *5 செ.கு.வி.*(v.i.) பிறவிடஞ் செல்ல மனங்கூசுதல்; to feel shy of entering a house, as of a stranger.

கால்பிடி–த்தல் kāl-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* காலை வருடுதல்; to press and rub the legs to induce sleep, to shampoo. *2.* காலைப் பற்றிக் கெஞ்சுதல்; to fall at one's feet for a favour. 'பால்குடிக்கக் கால்பிடிக்க வேண்டி யிருக்கிறது' *(ஈடு). 3.* தொண்டு புரிதல்; to do service. "கேசவ நம்பியைக் கால்பிடிப்பா ளென்னு மிப்பேறு" *(திவ். நாய்ச்.1:8). 4.* வாய்க்கால் வெட்டுதல்; to excavate or dig a channel. *5.* விதையடித்தல்; to castrate.

ம. கால்பிடிக்குக

கால்முளை–த்தல் kāl-muḷai-, *4 செ.கு.வி.*(v.i.) குழந்தை நடை கற்கத் தொடங்குதல் *(உ.வ.);* to begin to walk, as a child.

கால்வை–த்தல் kāl-vai-, *4 செ.கு.வி.* (v.i.) உள்நுழைதல்; lit., to place the foot, to step in, enter. அவன் வீட்டில் நான் கால் வைக்கமாட்டேன்.

ம. கால்வய்க்குக, கால்குத்துக; க. காலிடு; பட. கால்பீ.

காலஞ்செல்(லு)–தல் kālañ-cellu-, *1 செ.கு.வி.* (v.i.) *1.* இறந்து போதல்; to depart this life, die. *2.* காலத்தாழ்வுப்படுதல் *(யாழ்ப்.);* to be late. *3.* காலயிறுதியாதல் *(உ.வ.);* to be time barred by limitation.

காலந்தள்ளு–தல் kālan-taḷḷu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* உழைத்து வாழ்தல்; to pass one's days, maintain oneself. "பிச்சைவேண்டிக்... காலந் தள்ளாமல்". *(தனிப்பா.* i:*396.7). 2.* காலந்தாழ்தல்; to delay. *3.* வீண்காலம்; to waste time.

காலந்தாழ்த்து–தல் kālan-tāḻttu-, *5 செ.கு.வி.* (v.i.) காலத்தாழ்வு செய்தல்; to make delay.

காலம் பார்–த்தல் kākam-pār-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* நேரம் பார்த்தல்; to look out for a suitable time, watch for an opportunity *(கம்பரா.ஊர்தே.222). 2.* ஒருவனது இறுதிக்காலத்தைக் கணக்கிடுதல்; to calculate the time of death. "காலனுங் காலம் பார்க்கும்" *(புறநா.41).*

காலமறி–தல் kālam-aṟi-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* வினைசெயற் கேற்ற காலத்தையறிதல்; to ascertain the time suitable for the accomplishment of one's object. "கருவியாற் கால மறிந்து செயின்" *(குறள்,483). 2.* முக்காலத்தும் நிகழ்வனவற்றைத் தமது சிறப்பு ஆற்றலால் அறிதல்; to know of events past, present or future, intuitively or by spiritual vision, as yogis.

காலமாகு–தல் kālam-āgu-, *6 செ.கு.வி.* (v.i.) வாழ்நாள் முடிந்ததால் இறந்துபோதல்; to pass away, as having one's life time spent out.

மறுவ. காலம் அடை, காலம் செய், காலம் பண்ணு. காலம்செல், காலம் ஆ(தல்).

காலறு–தல் kālaṟu-, *20 செ.கு.வி.*(v.i.) பிறங்கடை *(சந்ததி)* அற்றுப்போதல் *(திருக்களிற்றுப்.97 உரை);* the become extinct as a family, lineage.

காலாறு–தல் kāl-āṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.*நடை ஓய்ந்திருத்தல்; to rest from walking. *2.* காலில் அரத்தவோட்டம் உண்டாக உலாவுதல்; to walk about for overcoming numbness of feet. குதிரை சிறிது காலாறட்டும் *(உ.வ.).*

ம. காலாறுக

காலில்விழு–தல் kālil-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* காலில் விழுந்து வணங்குதல்; to fall prostrate, do homage at one's feet. *2.* மன்னிப்பு வேண்டுதல்; to seek forgiveness. *3.* புகலடைதல்; to take refuge.

காலூர்–தல் kāl-ūr-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* பயண அறிகுறியாகக் காலில் தினவுண்டாதல்; to feel an itching sensation in feet as foreboding an impending journey. *2.* ஓடியாடப் பிள்ளைகள் விரும்புதல்; to be impatient, restless to walk run or move about, as a child.

காலூன்று–தல் kāl-ūṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* நிலையுறுதல்; to set foot firmly on the ground to become established. *2.* பந்தற்கால் நாட்டுதல்; to have a doecorated post planted in front of house as a preliminary to a marriage festival, etc.

க., பட. காலூறு

காலெடு–த்தல் kāl-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* வாய்க்கால் வெட்டுதல்; to dig irrigation channels. *2.* பின்னும்படி மயிரை வகிர்ந்தெடுத்தல்; to divide the hair into locks for braiding it.

காலைச்சுற்று–தல் kālai-c-cuṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *தொடர்ந்து பற்றுதல்;* to cling to one, to hold persistently. "*பாம்பு காலைச் சுற்றுகிறது*".

காவல்கா–த்தல் kāval-kā-, *4 செ.குன்றாவி.* (v.t.) *காவற்றொழில்செய்தல்;* to watch, guard, protect.

க. காவல்குடு

காவு[1]–தல் kāvu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. தோளாற் காத்தண்டு சுமத்தல்;* to carry on the shoulder as a palanquin; a pole with a weight at each end. "*காவினெங் கலனே*" *(புறநா. 206). 2. சுமத்தல்;* bear or sustain anything heavy on the arms or on the head. "*ஊனைக்காவி யுழிதருவர்*" *(தேவா. 338 : 1).*

Fin. kantaa; **Es.** kanda.

காவு[2]–தல் kāvu-, *5 செ.குன்றாவி.*(v.t.) விரும்புதல்; to long for, desire. "*தேனைக்காவி யுண்ணார் சிலதெண்ணர்கள்*" *(தேவா. 338 : 1).*

காவு[3]–தல் kāvu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. கடி;* to bite. *2. உண்ணு;* to eat.

காழ்[1]–த்தல் kāḻ-, *4 செ.கு.வி.*(v.i.) *1. முற்றுதல்;* to become hard, mature. "*காழ்த்த மரம்*" *(திரிடுக. 75). 2. மனக்காழ்கொள்ளுதல்;* to be firm, strong in mind, implacable. "*காழ்த்த பகைவர் வணக்கமும்*" *(திரிகடு. 24). 3. அளவுகடந்து மிகுதல்;* to increase beyond measure, abound. "*ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்கு*" *(குறள், 760). 4. உறைத்தல் (திவா.);* to be pungent, acrid.

காழ்[2]–த்தல் kāḻ-, *செ.கு.வி.*(v.i.) *கொல்லத் துணிதல்;* to determine to kill. "*அவன் கருமங் காழ்த்தமை கண்டவர் தம்முளான்*" *(சீவக. நாமக. 213) (த.சொ.அக.).*

காற்று[1]–தல் kāṟṟu-, *5 செ.கு.வி.*(v.i.) வெளிப்படுத்துதல்; to make manifest, reveal, put forth. "*பொலிகதிர் காற்றியும்*" *(கல்லா. 13).*

காற்று[2]–தல் kāṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) அழித்தல்; to destroy, ruin. "*ஆற்றல் காற்றுஞ் செயல்*" *(தணிகைப்பு. நந்தியுப. 120).*

காற்று[3]–தல் kāṟṟu-, *5 செ.கு.வி.*(v.i.) போக்குதல்; to remove, to drive. "*அடர்மலவாற்றல் காற்றுஞ் செயறலை நின்ற வின்பத்தருவுரு முதன்மை போற்றி*" *(தணிகைப்பு. நந்தியுப. 121) (த.சொ.அக.).*

காற்றுவாங்கு–தல் kāṟṟu-vāṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *காற்றைத் துய்த்தல் (அனுபவித்தல்);* to take an airing, enjoy, breeze. *கடற்கரைக்குக் காற்று வாங்கப் போனேன் (உ.வ.).*

காறியுமிழ்–தல் kāṟi-y-umiḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *காறித் துப்புதல்;* to hawk and spit.

ம. காறித்துப்புக; பட. காரியுகி

காறு[1]–தல் kāṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. காறற் சுவையாதல்;* to taste bitter musty or rancid, as stale food. *2. கோழையை மிடற்றினின்று கொணர முயலுதல்;* to hawk, bring up phlegm.

ம. காறுக; க., பட. காறு (வாந்தியெடு); தெ. காறு, காயு, க்ராயு; து. கார்.

காறு[2]–தல் kāṟu-, *5 செ.கு.வி.*(v.i.) கறுத்தல்; to be blackened. "*காறு கண்டத்தர்*" *(தேவா.1088 : 3). 2. காழ் (வைரம்) கொள்ளுதல்;* to harbour revenge. "*காறின வுள்ள நோவ*" *(கம்பரா. இராவணன்கள. 20).*

க., ம. காறு.

கான்று–தல் kāṉṟū-, *5 செ.கு.வி.*(v.i.) வாயாலெடுத்தல்; to vomit.

ம. கான்றுக; பட. காரு.

»

கிசுகிசு–த்தல் kišukišu-, *7 செ.கு.வி.*(v.i.) பிறர் கேட்காதவாறு ஒருவருடைய காதில் மெதுவாக ஒன்றைச் சொல்லுதல்; கமுக்கம் (இரகசியம்) பேசுதல்; to whisper, something in to the ears, tell a secret, in whispering voice. *அவருடைய காதில் அவள் ஏதோ கிசுகிசுத்தாள்.*

பட. குசுகுசு.

கிட்டு[1]–தல் kiṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நெருங்குதல்;* to draw near, in time or place. "*தீவினை கிட்டிய போதினில்*" *(கம்பரா. விபீடண. 67). 2. உறவு நெருங்குதல்;* to be on friendly terms with, closely related to. *3. கிடைத்தல்;* to be attained, accomplished. "*கிட்டாதாயின் வெட்டென மற*" *(கொன்றைவே.). 4. பல் முதலியன ஒன்றுட னொன்று பூண்டு இறுகுதல்;* to be clenched, as the teeth in lock jaw.

க., ம. கிட்டு.

கிட்டு[2]–தல் kiṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. அணுகுதல்;* to approach. *அவ்வூரைக் கிட்டினான். 2. எதிர்த்தல்;* to attack, meet. *3. கட்டுதல் (சூடா.);* to tie, bind.

தெ. கிட்டு.

கிட்டு[3]–தல் kiṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.* கைக்கு அகப்படுதல்; to come to hand, get, obtain. *2. எட்டுதல்;* to reach, attain.

ம. கிட்டுக; க., தெ., பட. கிட்டு; குட., துட. கிட்.

கிட–த்தல் kiḍa-, *2 செ.கு.வி.*(v.i.) *1. ஓய்வெடுக்க அல்லது உறங்க வேண்டித் தரையில் அல்லது கட்டிலில் கை, கால்களை நீட்டிப் படுத்தல்;* to be in a prostrate position, to lie, lie down. "*மால் யாழ்கேளாக் கிடந்தான்போல்*" *(கலித். 123). 2. ஓரிடத்தில் இருத்தல், தங்குதல்;* to be remain, exist, to dwell. "*புலி கிடந்த தூறு*" *(வாக்குண். 21). 3.*

மீதமிருத்தல்; to be left over, remain. 4. உயிருடன் இருத்தல், வாழ்தல்; to exist, live in, dwell. 5. உறங்குதல்; to sleep, rest, reposs. "தாவி னல்லிசைக் கருதிய கிடந்தோர்க்கு" (தொல். பொருள். 91). 6. நோயால் படுத்த படுக்கையாதல்; to be bed-riddess, as from disease. அவள் நிரம்பக் கிடக்கிறாள். 7. அவமதித்து ஒதுக்குதல்; to be unworthy of any attention. அவன் கிடக்கிறான், நீ போ.

ம. கிடக்குக; க. கெடெ; குட. கடாக.

கிடாசு–தல் kiḍāšu-, 5 செ.கு.வி.(v.i.) 1. ஆணி முதலியன அறைதல்; to drive in, as nail. 2. விட்டெறிதல்; to cast off, throw away. அழுகிப்போன பழங்களைக் கிடாசினார்.

க. கடாய்; ம. கிடவு.

கிடாவு–தல் kiḍāvu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடாவுதல்; to drive. 2. வினாவுதல்; to question.

கிடை¹–த்தல் kiḍai-, 4 செ.கு.வி.(v.i.) 1. அடைதல்; to be obtained, recovered, found, to come into one's possession. "திங்க ளெட்டாவதிற் கிடைக்கும்" (கனா.2). 2. இயைதல்; to join, come together. "கரத்தொடு கரதலங் கிடைப்பப் பூட்டி" (கம்பராஉத்த. மந்திர. 100).

ம. கிடெக்க.

கிடை²–த்தல் kiḍai-, 4 செ.கு.வி.(v.i.) 1. அருகாதல்; to come near, approach. "கிடந்தானைக் கிடைத்திரு தடங்கை கூப்பினன்" (கம்பரா. கிட்கிந்தை. 23). 2. எதிர்த்தல்; to encounter, oppose, meet in battle-field. "இருபடைகளு மெதிர் கிடைக்கவே" (கலிங். 393).

கிண்டு¹–தல் kiṇḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கிளறுதல் (பிங்.); to poke, to stir with a ladle, to scratch, as a fowl; to dig up as with a stick or iron bar, to burrow in, as rats, as worms; to penetrate, as bees into flower. 2. தோண்டுதல்; to excavate, as pit; to hoe up, hollow out, dig out, as a hole in a wall. 'மண்கிண்டி வயிறு வளர்க்கிறவன்' (வின்.). 3. ஆராய்தல்; to probe, scrutinize, investigate, inquire, pry into, search, examine. அவன் ஒவ்வொரு செய்தியையும் கிண்டிப் பார்க்கிறவன். 4. நினைப் பூட்டுதல் (வின்.); to remind, prompt. 5. தூண்டுதல் (வின்.); to incite, as to a quarrel.

ம. கிண்டு; தெ. செண்டு (வெட்டுதல்); து. செண்டாடுனி (கழித்தல்); கோத. கெச்; துட. கொச்; கோண். கிட்டி; மா. கிண்டெ.

கிண்டு²–தல் kiṇḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடைதல்; to churn. "பாம்புகயி றாய்ப் பிணித்துப் பாற்கடலைக் கிண்டாமல்" (நெல்விடு. 226). 2. கிளறிச் சமைத்தல்; to cook by constant stirring over the oven. உப்புமா கிண்டினாள் (யாழ்.அக.). 3. வெளிப்படுத்துதல் (யாழ்.அக.); to publish. 4. ஏளனப்படுத்துதல் (இ.வ.); to ridicule.

கிண்ணு–தல் kiṇṇu-, 5 செ.கு.வி.(v.i.) 1. போதல்; to go. "கேரளத்தை நோக்கி வைச்சுக் கிண்ணினனே" (பஞ்ச. திருமுக. 1530). 2. நிரம்பவுண்ணுதல்; to eat to the full. "கிச்சடியாம் வைச்சடிச்சுக் கிண்ணுவனாம்" (பஞ்ச. திருமுக. 1877).

கிணுகிணு–த்தல் kiṇu-kiṇu-, 4 செ.கு.வி.(v.i.) 1. வண்டுகளைப் போல் முரலுதல், கொசுக்களைப் போல் ஒலியெழுப்புதல்; (onom.) to hum as beas or buzz as mosquitoes. 2. சிறுவர்களைப்போல் சிணுங்குதல்; to whimper. 3. முணுமுணுத்தல்; to mumble, mutter. 4. மணி முதலியன குறைவான வோசையுடன் ஒலித்தல்; tinkle. சைக்கிள் மணி கிணுகிணுத்தல்.

ம. கிணுகிணுக்குக.

கித்து–தல் kittu-, 5 செ.கு.வி.(v.i.) ஒற்றைக்காலால் தாவி நடத்தல்; to hop, leap about on one leg, as boys do in the game of kindi-y-aḍittal. "கித்தி நின்றாடு மரிவையர்" (திருவிசை. கருவூ. திருக்கீழ்க். 11) (வே.க.178).

ம. கித்துக.

கிந்து–தல் kindu-, 5 செ.கு.வி.(v.i.) 1. முன்னங்கால் அல்லது விரல் குத்தி நடத்தல்; to stand or walk on toes of one foot or both, to go on tip-toe. 2. நொண்டி விளையாடுதல்; to hop, to leap about on one leg, as boys do in the game of kindi-y-aḍittal. 3. நொண்டி நடத்தல்; to limp, halt, hobble.

மறுவ. படங்குந்துதல்.

பட. கொந்து.

கில்லு–தல் killu-, 5 செ.கு.வி.(v.i.) தோண்டுதல்; to dig up.

க. கீல்; தெ. சீலு (c). கீன்ளுல்.

கிலாய்–த்தல் kilāy-, 4 செ.கு.வி.(v.i.) 1. சினத்தல்; to be angry. பிரணயரோஷந் தலையெடுத்துக் கிலாய்ப்பதும் (ஈடு, 8.1:2). 2. துன்பம் கொள்ளுதல் (அங்கலாய்த்தல்); to be distressed afflicted, to grieve. "தனிமையைப் பார்த்துக் கிலாய்க்கையும்" (திவ். திருநெடுந். 9, வியா).

கிலுக்கு–தல் kilukku-, 5 செ.குன்றாவி.(v.t.) ஒலிக்கச் செய்தல்; to ring, rattle, clink.

ம. கிலுக்குக; க. கிலுகு.

கிழி¹–தல் kiḻi-, 4 செ.கு.வி.(v.i.) 1. பீறுண்டு போதல்; to be torn, rent in shreds; to be scratched. 2. பிளந்து போதல்; to give way, burst out, split. 3. பேர்தல்; to be broken. "முழந்தாள் கிழிந்தானை" (பழமொ.19). 4. தோல்வியுறுதல்; to be defeated, to meet with repulse. "வானவர் போர் கிழிந்து புறந்தர" (கம்பரா. முதற்போ. 65). 5. அழிதல்; to perish. "என்றுங் கிழியாதென் பாட்டு" (தமிழ்நா. 53).

ம. கிளி.

கிழி²–த்தல் kiḻi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பீறச் செய்தல்; to tear, rend, split, cut, pull to pieces, rip up, lacerate. "தரியி னங்கடம் மெயிற்றினாற் சிதையக் கிழிந்த பேரிறால்" (கந்தபு. ஆற்று. 23). 2. பேர்த்தல்; to split, break, cleave,

uproot. "நெடுங்கிரி கிழிந்து" (கம்பரா. நிகும். 88). 3. கீறுதல்; to scratch, as with claws or thorns. காலை முள் கிழித்தது. 4. கோடுவரைதல்; to mark, to line, to indent, to paint, to draw, as a line. நான் கிழித்த கோடு. 5. முடித்தல், நிலை நிறுத்தல்; to accomplish (used in contempt). செய்து கிழித்து விட்டாயோ (உ.வ.). 6. சொல்லாற் கண்டித்தல்; to rebuke. சில வசனங்கள் சொல்லிக் கிழிப்பதும் (கவிகுஞ்.2.). 7. அங்காத்தல்; to open the mouth wide. "வாயுழுவை கிழித்தது" (திருக்கோ. 72). 8. தின்னுதல்; to eat, consume. "குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொடு" (புறநா. 34.11).

kir-i, to tear. **Comp**. khur, **Sans.** to cut, to scratch.

கிள்ளிவிடு–தல் kiḷḷi-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) தூண்டிவிடுதல்; to stir up, incite, instigate. பிள்ளையையுங் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாள் (உ.வ.).

கிள்ளு¹–தல் kiḷḷu-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. நகத்தாலெடுத்தல்; to pinch with the finger and thumb with the nails, to pluck, nip, piece off, as a leaf. "கற்கிள்ளிக் கையிழந் தற்று" (நாலடி.336). 2. தோண்டுதல்; to dig out, scoo. "கிள்ள வெழுகின்ற புனல்" (கம்பரா.வரைக்.23). 3. அழித்தல்; to destroy, as by nipping off the head. "பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை" (திவ்.திருப்பா. 13). 4. சிறிதளவு எடுத்தல் (வின்.); to hold, carry, as with the beak, with the fingers and thumb, to take up a little, a pinch.

ம. கிள்ளு; தெ. கில்லு; க. கில்லு; பட. சிள்ளு

கிள்ளு²–தல் kiḷḷu-, *1 செ.கு.வி.*(v.i.) துணித்தல்; to cut. "பங்கயாசனனொருதலை கிள்ளியே" (கந்தபு. கடவுள். 9) (த.மொ.அக.).

கிள–த்தல் kiḷa-, *3 செ.கு.வி.*(v.i.) 1. ஒன்றைத் தெளிவாய்க் குறிப்பிட்டுச் சொல்லுதல்; to express clearly. "இயற்கைப் பொருளை பிற்றெனக் கிளத்தல்" (நன்.404). 2. விதந்து கூறுதல் (சி.போ.4,1, பக்.85, சிற்.); to make special mention of, to state specifically.

Chin. kēng.

கிளத்து–தல் kiḷattu-, *5 செ.குன்றாவி.*(v.t.) புலப்படக் கூறுதல்; to express clearly. "குல முறைக் கிளத்துப்படலம்" (கம்பரா.).

Fin. kĭltā; **Es.** kĭta; **Kuwi.** gĭta (word); **Mong.** gedeg, getel (to say); **Jap.** kĭto.

கிளப்பு–தல் kiḷappu-, *5 செ.குன்றாவி.*(v.t.) 1. எழுப்புதல்; to raise up some heavy thing, as with a lever. கல்லைக் கிளப்பினான். 2. சுவர் முதலியன எழச்செய்தல்; to raise, as a wall, to erect, cause to grow high. 3. நீக்குதல்; to turn out, discharge, dismiss. அவனை வேலையை விட்டுக் கிளப்பினான். 4. உண்டாக்குதல்; to excite, as a disturbance, to induce, as fever, to bring about. இந்தத் தூற்றல் சூட்டைக் கிளப்பிவிடும். 5. தூண்டி விடுதல்; to rouse, animate. கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கிறான். 6. மிதத்தல் (த.மொ.அக.); to float.

கிளம்பு–தல் kiḷambu-, *5 செ.கு.வி.*(v.i.) 1. மேலெழுதல்; to rise in air or water ascend. இந்தச் செடி இப்போதுதான் கிளம்புகிறது. 2. தோன்றுதல்; to emerge from obsecurity, to be elevated. அவனுடைய பேர் கிளம்பிற்று. 3. நில மட்டத்திற்கு மேல் வருதல்; to rise above the surface. இந்தக் கட்டடம் நாற்புறமும் கிளம்பிவிட்டது. 4. மூண்டெழுதல்; to be stirred, agitated. அவன்மீது பகை கிளம்பிற்று. 5. உண்டாதல்; to crop up, break out. ஊரில் போய் கிளம்பியிருக்கிறது. 6. புறப்படுதல்; to set out, start. அந்தப் படை கிளம்பிவிட்டது. 7. அதிகப்படுதல்; to increase. விலை கிளம்பவில்லை. 8. எடுபடுதல்; to become loose, detached, as a brick that still adheres. பழங்கட்டடத்தில் செங்கல் கிளம்பிவிடும்.

ம. கிளம்பு; க. கெரளு; தெ. கெரலு.

Aust. ngowalle.

கிளர்–தல் kiḷar-, *2 செ.கு.வி.*(v.i.) 1. மேலெழுதல்; to rise, ascend. "ஆழி கிளர்ந்ததோ" (கம்பரா. மிதிலைக். 67). 2. மேன்மேல் வளர்தல்; to spring up, grow higher, and higher, shoot up. "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த" (திவ். திருவாய். 4.9.4). 3. மிகுதல்; to be intense, to increase. "பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல்" (சிலப். பதி. 4). 4. விளங்குதல்; to shine, to be conspicuous, resplendent. "மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை" திருவாச. 8:18). 5. சிறத்தல் (வின்.); to be exalted, great. 6. உள்ளக்கிளர்ச்சி கொள்ளுதல்; to become spirited, fealous. "வீடு செய்யும் கிளர்வார்க்கே" (திவ். திருவாய். 2.9.11). 7. சினத்தல்; to be roused, infuriated, to become angry. "காலன் கிளர்ந்தாலும் போல்வார்" (பு.வெ.2:2). 8. இறுமாப்புக் கொள்ளுதல் (வின்.); to become vain, conceited.

ம. கிளருக; க. கெளர், கொளு; தெ. கொலு.

கிளர்த்து–தல் kiḷarttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) 1. எழுப்புதல்; to raise up, rouse. 2. நிறைத்தல்; to fill, satiate.

ம. கிளர்த்துக.

கிளறு–தல் kiḷaṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) 1. கிண்டுதல்; to poke, ransack, dig up. "ஏனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்தும்" (தேவா.101:9). 2. கலக்குதல்; to disturb, derange, confuse. 3. துழாவுதல்; to stir, as with a ladle. மாட்டுத் தொட்டியைக் கிளறினான். 4. துருவி யாராய்தல்; to probe, search, pry into. 5. வெளியாக்குதல் (வின்.); to disclose, expose.

ம. கிளறுக; க. கெளர்; தெ. கெலகு.

கிளுகிளு–த்தல் kiḷu-kiḷu-, *4 செ.கு.வி.* (v.i.) 1. மகிழ்ச்சி யாலுண்டாகும் ஓரொலிக்குறிப்பு; to feel joy, inwardly rejoice. "கெண்டைத் தடங்கண்ணா ளுள்ளே கிளுகிளுத்தாள் (கம்பரா. மாயாசனக. 87).

கிளை¹–தல் kiḷai-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. நீக்குதல்;* to remove, purge. "*மனத்து மாசு கிளைவானை*" *(தேவா. 682 : 3). 2. அரிசி களைதல் (வின்.);* to wash, as rice. *3. ஆடைகளைதல்;* to put off, as garments. *4. கிளறுதல் (யாழ்ப்.);* to pry out, as a thorn from the flesh with a needle.

கிளை²–த்தல் kiḷai-, *2 செ.கு.வி.*(v.i.) *1. மரம் கப்புவிடுதல்;* to ramify, branch out. "*விண்பெருஞ் சென்னிக் கிளைஇய காந்தள்*" *(குறிஞ்சிப்.196). 2. பெருகுதல்;* multiply, increase in number, as families. *அவர்கள் கிளைத்து விட்டார்கள் (உ.வ.). 3. நெருங்குதல்;* to be close, to throng, to crowd, grow thick or close, as the beard, boughs, herbage, grain. "*கிருத்திம வினம்பல குதித்தன கிளைத்தே*" *(இரகு. திக்கு. 113). 4. விளைதல்;* to come into being, appear. "*உழுநீர் வயலுட் பொன்கிளைப்ப*" *(திவ். பெரியதி. 8, 8 : 5). 5. நிறைதல் (பிங்.);* to abound, to be copious, plenteous.

ம. கிளிக்குக.

கிளை³–த்தல் kiḷai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *கிளறுதல்;* to dig up to stir, scratch up us fowls, to root up, as pigs, to burrow into as rats, to excavate. "*கேழலுழுத விருஞ்சேறு கிளைப்பின்*" *(புறநா. 176 : 2).*

ம.கிளய்க்குக; தெ. கெலகு; து. கிலெகுனி; குட. கள; துட. கிள்ய்; பட. கலகு.

கிற்புறு–தல் kiṟpuṟu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. எழுதுதல்;* to write. *2. எழும்புதல்;* to rise up. *3. கட்டுப்படுதல்;* to submit oneself. "*கிற்புறு செய்ய பூண்கிழியை நோக்கினான்*" *(கந்தபு. குமார. 24). (த.மொ.அக.).*

கிறக்கு–தல் kiṟakku-, *5 செ.கு.வி.*(v.i.) *ஒருவரை தூக்கம், காமம், குடிபோதை முதலியன நிலைதடுமாறச் செய்தல், மயக்குதல்;* induce languor, stupor. *தூக்கம் கிறக்குகிறது (உ.வ.) அவளுடைய நினைவு மனத்தைக் கிறக்கிற்று (உ.வ.).*

கிறங்கு–தல் kiṟaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. ஒருவர் தூக்கம், குடிபோதை, காமநுகர்ச்சி முதலியவற்றால் நிலை தடுமாறுதல், மயங்குதல்;* be in languor, stupor. *போதைப் பொருள்கள் நரம்பைத் தூண்டிக் கிறங்க வைக்கும் (உ.வ.). 2. சோர்வடைதல்;* get jaded dizzy. *வெயிலில் நடந்து வந்ததால் குழந்தை கிறங்கிப் போய்விட்டான் (உ.வ.).*

கிறி–த்தல் kiṟi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. மாயஞ் செய்தல்;* to play pranks. "*பொய்யர்களைப் பொய்செய்து போதுபோக்கிக் கிறிப்பானை*" *(தேவா. 684 : 10).*

ம. கிளிக்குக (பல்லிளித்தல்).

கிறுக்கு¹–தல் kiṟukku-, *5 செ.கு.வி.*(v.i.) *1. எழுதுதல் (பிங்.);* to write. *2. உருத்தெரியாமல் எழுதுதல்;* to scribble, write illegibly. *3. வரைந்த எழுத்தை அடித்தல் (வின்.);* to cancel, score out.

ம. கிறுக்க; க. கீசு; தெ. கிர்க்கு; கோத. கீர் (கோடு).

கிறுக்கு²–தல் kiṟukku-, *5 செ.கு.வி.*(v.i.) *தலை சுற்றுதல்;* to feel giddy, to be delirious, dizzy.

கிறுகிறு–த்தல் kiṟu-kiṟu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மயக்கமாதல்;* to be giddy, dizzy, to swim as the head. *தலை சுழன்று கிறுகிறுத்து (பிரபோத. 18, 54). 2. தடுமாறுதல்;* to be confounded, confused, disconcerted (u.). *'கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா' (கவிமணி.).*

ம. கிறுஞ்சுக.

கிறுங்கு–தல் kiṟuṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அசைதல்;* to move, stir, shake, stagger. *அவன் சற்றுங் கிறுங்கவில்லை (உ.வ.).*

ம. கிறுங்ஙுக; தெ. கிரசு.

கினி–தல் kiṉi-, *4 செ.கு.வி.*(v.i.) *முற்றுங் கவிதல்;* to envelope, engulf, swallow. "*ஒரு மேருவைக் கினியக் காளமேகம் படிந்தாற் போலே*" *(ஈடு. 3, 8 : 1).*

Ñ

கீச்சிடு–தல் kīcciḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *கீச்சென்று ஒலியெழுப்புதல்;* to chrip, as birds, lizards to twitter, chatter, as monkeys, to speak or call with a shrill sound, to speak, scream, as an infant.

ம. கீச்சுக.

கீல்(லு)–தல் kīl-, *9 செ.குன்றாவி.*(v.t.) *கிழித்தல் (சூடா.);* to rend, tear.

ம. கீள்; க. சீள்.

கீழ்¹(ழு)–தல் kīḻ-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. கிழித்தல்;* to rend, tear. "*பழம்விழுத்து... பஃறாமரை கீழும்*" *(திருக்கோ. 249). 2. பிளத்தல்;* to rive, split, cleave. "*உறுகால் வரைகீழ்ந்தென*" *(சீவக. 1157). 3. சிதைத்தல்;* to destroy, demolish. "*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு*" *(குறள், 801). 4. தோண்டுல்;* to dig. "*வேரொடுங் கீழ்ந்து வெளவி*" *(சீவக. 2727). 5. மீறுதல்;* to break, as a promise, to transgress, as a command. "*தாய்வார்த்தை கீழாத வாண்மை*" *(விநாயகபு. 21 : 19). 6. பறியுண்ணுதல்;* to be uprooted, dislocated. "*மரங்கள் வேரொடுங் கீழ்ந்தென*" *(சூளா. சீய. 144).*

க. கீழ்.

கீழ்²(ழு)–தல் kīḻ-, *4 செ.கு.வி.*(v.i.) *1. இழுத்தல்;* to pull. *2. கோடு கிழித்தல்;* to draw, as a line, a diagram.

கீழ்ப்படி–தல் kīḻ-p-paḍi-, *2 செ.கு.வி.*(v.i.) *அடங்கி நடத்தல்;* to submit, yield, obey. *நீதிமன்றத்தின் ஆணைக்குக் கீழ்ப்படியாமல் இருக்க முடியாது (உ.வ.).*

ம. கீழ்பற்றுக; க. கிழ்படு

கீழ்ப்படு[1]–தல் kīḻ-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. அடங்குதல்;* to submit, succumb, yield. *2. இழிவுபடுதல்;* to be degraded, mean, base, to become degenerate.

ம. கீழ்ப்பெருக.

கீழ்ப்படு[2]–த்தல் kīḻ-p-paḍu-, *18 செ.குன்றாவி.*(v.t.) *கீழ்மைப் படுத்துதல்;* to subdue, put down. "*கிறியெலா மிகக் கீழ்ப்படுத்தாய்*" *(திருவாச. 5 : 32).*

கீழறு[1]–தல் kīḻ-aṟu-, *4 செ.கு.வி.*(v.i.) *சேனைகளின் மனப்போக்குப் பகைவரால் வேறுபடுத்தப்படுதல் (சிலப். 4 : 60. அரும்.);* to be undermined, to become disaffected, to become treacherous as an army corrupted by foes. *2. பதறுதல் அல்லது அச்சப்படுதல்;* to be perplexed or frightened.

ம. கீழறுக.

கீழறு[2]–த்தல் kīḻ-aṟu-, *4 செ.கு.வி.*(v.i.) *நிலத்திற் சுரங்கஞ் செய்தல்;* to burrow, excavate, make a sub-terranean passage, undermine.

ம. கீழறுக்குக.

கீழறு[3]–த்தல் kīḻ-aṟu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *மறைமுகமாகப் பிறரைக் கெடுக்கப் பணிசெய்தல்;* to injure by any underhand, treacherous means. "*பகைமை தோன்றாமல் உள்ளாயிருந்தே கீழறுத்தலின்*" *(குறள். 883, உரை).*

கீழாதல் kīḻādal, *6 செ.கு.வி.*(v.i.) *1. தாழ்தல்;* to become low. *2. பயனற்றுப்போதல்;* to become useless.

து. கீட் அப்புனி.

கீள்[1](ளு)–தல் kīḷ-, *10 செ.குன்றாவி.*(v.t.) *கிழித்தல்;* to rend, split, tear. "*கீண்டிலென் வாயது கேட்டு நின்றயான்*" *(கம்பரா. பள்ளி. 71).*

கீள்[2](ளு)–தல் kīḷ-, *16 செ.கு.வி.*(v.i.) *உடைதல்;* to burst, as the bund of an overfull tank; "*தெண்ணீர்ச் சிறுகுளங் கீள்வது மாதோ*" *(புறநா.118, 3).*

Fin. kiduttā; **Es.** kiduda; **Hung.** kikezd; **Mong.** kidu; **Jap.** kisu.

கீறு–தல் kīṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. வரிகீறுதல்;* to draw lines. *2. எழுதுதல்;* to scribble, make marks, write, engrave. *3. கிறுக்கியடித்தல்;* to score out. *4. கிழித்தல்;* to slit, tear, rend. *5. பறண்டுதல்;* to scratch, as a cat, a fowl, to work over, as one's toes. *6. ஆய்தத்தால் அறுத்தல்;* to cut, gash, lance, dissect. "*புண்கீறிய குருதிப்புனல்*" *(கம்பரா. பரசுராமப். 9). 7. வகிர்தல்;* to slice, cut off longitudinally. *8. குறிப்பித்தல்;* to give a clue to, as a subject.

ம. கீறுக, கீளு; குட. கீறு; து. கீறுனி; தெ. கீறு, கியு, கீளு; துட., கோத. கீற்; கொலா. கீற; கொண்., பர். கீர்; கூ. கீர; படா. கீயி.

Fin. kirjotta; **FD.** kiruttoa; **Es.** kirjata; **Mong.** ziru; **Q.** qilqay.

F

குக்கு[1]–தல் kukku-, *5 செ.கு.வி.*(v.i.) *இருமுதல்;* onom, to whoop, hoop, as in whooping cough. "*பிணியுற்றவனாகிக் குக்கிக் கக்கி*" *(திருப்பு. 430).*

ம. குக்குக (கூடாதல்).

குக்கு[2]–தல் kukku-, *5 செ.கு.வி.*(v.i.) *ஒடுங்குதல்;* to be restrained as the senses or the resigned, to calm down.

குக்கு[3]–தல் kukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. துணிகளைத் துவைக்க மெல்ல கல்லின் மேல் அடித்தல்;* to beat cloth somewhat stony by in washing. *2. கைமுட்டியால் குத்துதல்;* to strike with the fist cuff.

க., பட. குக்கு.

குக்கு[4]–தல் kukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. குனிதல், வளைதல்;* to bend. *2. தாழ்தல்;* to become low in position. *3. கெடுதல், அழிதல்;* to get ruined.

க., தெ. குக்கு.

குங்கு–தல் kuṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குன்றுதல்;* to decrease, diminish, sink; to be humbled. "*உன்பொங்கு குங்க*" *(யாழ்ப்.). 2. வணங்குதல்;* to bend salute. *3. குவிதல்;* to close. *4. சுருங்குதல்;* to condense.

ம. குங்ஙுக; க. குக்கு, குங்கு; தெ. குங்கு; து. குக்குனி; துட. க்விச்; கூ. க்ரும்ப, க்ரூவ; குவி. க்ரூஇயலி; படா. குக்கு.

குச்சி–த்தல் kucci-, *4 செ.குன்றாவி.*(v.t.) *அருவருத்தல்;* to loathe, detest. "*குச்சித்த லின்றி நுகர்ந்தாள்*" *(பாரத. திரௌ. 74).*

குச்செறி–தல் kucceṟi-, *2 செ.கு.வி.*(v.i.) *மயிர்சிலிர்த்தல்;* to horripilate.

குஞ்சி[1]–த்தல் kuñji-, *4 செ.குன்றாவி.*(v.t.) *கால் தூக்கி வளைத்தல்;* to upraise and bend, as the leg, to cause to bend. "*கால்குஞ்சித் தாடி னானும்*" *(தேவா. 521. 4).*

குஞ்சி[2]–த்தல் kuñji-, *4 செ.கு.வி.*(v.i.) *காற்படங் குந்தி நிற்றல் (சூடா.);* to stand on tip-toe.

குட்டு–தல் kuṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *கை முட்டியால் தலையில் இடித்தல்;* to cuff, strike with the knuckles on the head or temples. "*அவன் தலையில் குட்டினான்*" *(பிங்.). (வே.க.174).*

ம. குட்டுக; க., தெ. குட்டு; து. குட்டுனி; துட., கோத., குட. குட்; நா., கொலா. குட்க; பர். குடிப்; கோண். கோட்டானா; மா. குட்யெ; பிரா. குட்டிங்க்; படா. குத்து (கை முட்டியால் இடித்தல்).

குட–த்தல் kuḍa-, *2 செ.கு.வி.*(v.i.) *வளைதல்;* to curve, bend.

குடங்கு–தல் kuḍaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *வளைதல் (யாழ். அக.);* to bend.

குடல்தட்டு–தல் kuḍal-taṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *குடலின் பிறழ்வை (குடலேற்றத்தை)த் தட்டி ஒழுங்குப் படுத்துதல்;* to pat the bowels by way of massage.

குடல்பதறு–தல் kuḍal-padaṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *வருத்தம் மிகுதி முதலியவற்றால் வயிறு கலங்குதல்;* to feel as if the bowels would jump out of their place, to feel frightened, to feel troubled from excessive grief.

குடவு–தல் kuḍavu-, *5 செ.கு.வி.*(v.i.) *வளைவாதல் (வின்.);* to be crooked, bent curved (w.).

குடாசு–தல் kuḍāšu-, *5 செ.கு.வி.*(v.i.) *ஏமாற்றுதல்;* to commit fraud.

குடி–த்தல் kuḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. பருகுதல்;* to drink, as from a cup, from the breast. "*கடலைவற்றக் குடித்திடுகின்ற செவ்வேற் கூற்றம்*" *(கந்தபு.தாரக.183). 2. உட்கொள்ளுதல்;* to inhale, absorb, imbibe, as air, tobacco, smoke. *புகைச்சுருட்டுக் குடிக்கிறான் (உ.வ.).*

க. குடி (kuḍi); *ம. குடி* (kuṭi); *தெ. குடுசு* (kuḍušu).

குடிகெடு–தல் kuḍi-keḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *குடும்பம் அடியோடு அழிதல்;* to be utterly ruined, as a family. "*குடிகெடினு நள்ளே னினதடியா ரொடல்லால்*" *(திருவாச. 5:2).*

ம. குடிகெடு.

குடிகெடு–த்தல் kuḍi-keḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஒரு குடும்பத்தில் குழப்பம் செய்தல்;* to ruin a family.

குடிசாய்–தல் kuḍi-šāy-, *8 செ.கு.வி.* (v.i.) *குடியின் அழிவு;* ruin of a family.

குடிபுகு–தல் kuḍi-pugu-, *2 செ.கு.வி.*(v.i.) *1. வேறு வீட்டிற்கு வாழச் செல்லுதல்;* to occupy a new home. *2. புதுக்குடி சேர்தல்;* to immigrate, settle and colnize, seek a fresh refue. "*தாமரை துறந்து குடிபுக்கா ளென*" *(கம்பரா. வரைக். 12). 3. புதுமனை புகுதல்;* to occupy a newly-built house with appropriate ceremonies to do house-warming.

குடிபோ–தல் kuḍi-pō-, *8 செ.கு.வி.*(v.i.) *1. வேறு வீட்டிற்குக் குடிமாறிச் செல்லுதல்;* to remove one self to a new home. *2. புதுமனை புகுதல்;* to occupy a newly-built house with appropriate ceremonies. *3. இருப்பிடத்தை விட்டு வெளியேறுதல்;* to quit, give up, abandon, as a house. "*ஆவி குடிபோன வவ்வடிவும்*" *(சிலப்.20 : வெண்பா.). 4. வலசை போதல்;* to emigrate, flee from home. *5. காற்றாகவேனும் ஆவியாகவேனும் பண்டங் கரைதல்;* to evaporate, escape, as essential oil camphor.

குடியிரு–த்தல் kuḍi-iṟu-, *3 செ.கு.வி.*(v.i.) *1. வாழ்தல்;* to reside, settle down. "*எப்படியினிக் குடியிருப்பது*" *(உபதேசகா. சூராதி. 28). 2. குடிக் கூலிக் கிருத்தல்;* to live in rented quarters.

ம. குடியிருக்குக.

குடியேற்று–தல் kuḍi-yēṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.i.) *குடியேறச் செய்தல்;* to people, populate colonize. "*பொன்னெடு நாட்டையெல்லாம் புதுக்குடி யேற்றிற் றன்றே*" *(கம்பரா.இந்திரசித்.48).*

குடியேறு–தல் kuḍi-y-ēṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தம் நாடுவிட்டு வேற்றுநாடு சென்று வாழ்தல்;* to colonize, settle in a new country. *2. நிலைத்துவிடுதல்;* to secure a sure place or footing, to be firmly rooted. "*சிந்தை குடியேறியிருக்கின்ற மாலொழியும்*" *(ஏகாம். உலா, 168).*

ம. குடியேறுக.

குடிவை–த்தல் kuḍi-vai-, *4 செ.கு.வி.*(v.i.) *1. வீட்டைக் குடிக் கூலிக்கு விடுதல்;* to let a house for rent. *2. குடியை நிலைபெறச் செய்தல்;* to settle or establish a family. "*அமரர் பதியினிய குடிவைத்தற் குற்ற*" *(திருப்பு. 632).*

ம. குடிவய்க்குக.

குடை[1]–தல் kuḍai-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. கிண்டுதல்;* to work through, as bees in gathering honey from flowers. "*குடைந்து வண்டுன் ணுந் துழாய் முடியானை*" *(திவ். திருவாய். 1,7,1). 2. துளைத்தல்;* to scoop, hollow out, to bore with a tool; to perforate, to make holes, as beetles in wood. *வண்டு உத்திரத்தைக் குடைந்துவிட்டது (உ.வ.). 3. கடைதல்;* to churn. "*நெய்குடை தயிரின்*" *(பரிபா. 16:3). 4. குடைந்தாற்போல்;* to worry, harass, trouble. *அவன் என்னைக் குடைகிறான் (உ.வ.). 5. வேண்டாதவற்றில் தலையிடுதல்;* to meddle, interfere. *ஏன் இந்தச் செய்தியிற் குடைந்து கொண்டிருக்கிறாய்? (உ.வ.). 6. துருவுதல்;* to search through and through. *புத்தகமெல்லாம் குடைந்து பார்க்கிறான் (உ.வ.).*

ம.குடயுக; க.கொடபு,கொடவு; து.குட்புனி; கோத. கெட்வ்; துட. க்விட்ய்; குட. கொட, கொடக்; பட. கொடெ.

குடை[2]–தல் kāḍai-, *2 செ.கு.வி.*(v.i.) *1. உட்புகுதல்;* to work one's way, penetrate. "*குடைந்துல கனைத்தையும் நாடும்*" *(கம்பரா. உருக்காட். 23). 2. நீரில் மூழ்குதல்;* to dive, bathe, plunge in water. "*குடைந்து நீராடு மாதர்*" *(கம்பரா. நீர்வி. 12). 3. உளைவு நோவெடுத்தல்;* to pain, as the ear, the leg. *கால் குடைகிறது (உ.வ.).*

குடை[3]–தல் kuḍai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *அராவுதல்;* to file, grate. "*அரங்குடைந்த அயில்*" *(கம்பரா. கும்பகர். 22).*

குண்டடி–த்தல் kuṇḍaḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. கோலி, இரும்புக்குண்டு முதலியவற்றால் விளையாடுதல்;* to play with marbles, small metal ballsh etc., *2. பங்கியடித்தல்;* to take in bhang. *3. தேர்வு முதலியவற்றில் தவறுதல் (வின்.);* to fail, as in an examination. *தேர்வில் அடிக்கடிக் குண்டடிக் கிறான்.*

குணக்கு[1]–தல் kuṇakku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *வளைத்தல்;* to bend.

குணக்கு[2]–தல் kuṇakku-, *5 செ.கு.வி.*(v.i.) *1. பின்னிற்றல் (யாழ்.அக.);* to be backward; to lag behind. *2. சிக்கலாதல்;* to become tangled, as threads.

குணகு–தல் kuṇagu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. வளைதல்;* to become bent or crooked. *2. சோர்தல்;* to sink, faint, fade, droop. *3. மனந் தளர்தல்;* to be dejected. *4. மனந்தடு மாறுதல்;* to feel uneasy, to be vexed.

ம. குணகுக.

குணங்கு–தல் kuṇaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *வளைதல்;* to bend.

குணட்டு–தல் kuṇaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *மயக்கிப் பேசுதல்;* to coax, wheedle speak amorously, as a courtesan.

குணப்படு–தல் kuṇa-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. சீர்ப்படுதல்;* to change for the better, to reform. *2. நோயினின்று நலமடைதல்;* to recover health, as from disease. *3. செழிப்படைதல்;* to improve, grow, thrive, as crops. *4. கழிவிரக்கம் கொள்ளுதல்;* to repent, to become penitent.

குணமா–தல் kuṇam-ā-, *6 செ.கு.வி.*(v.i.) *நலமாதல்;* to become cured, healed restored to health.

குணமாக்கு–தல் kuṇamākku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. நலப்படுத்துதல்;* to cure, heal, restore to health. *2. சீர்திருத்துதல்;* to reform, amend, correct.

குணமாய்ப்பேசு–தல் kuṇamāy-p-pēšu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அறிவோடு பேசுதல்;* talking with reason and sense, talking banely. *2. இசிவு, மயக்கம், வலிப்பு முதலியவற்றால் நினைவு தடுமாறிப் பேசுவதினின்று தெளிந்து இயல்பாய்ப் பேசுதல்;* after recovery from delirium, giddines fits, etc., involving incoherent talks *(சா.அக.)*..

குணமாய்ப்போ–தல் kuṇamāy-p-pō-, *8 செ.கு.வி.*(v.i.) *நோயினின்று தெளிதல்;* to recover from illness. *(சா.அக.).*

குணி–த்தல் kuṇi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.* கணித்தல்; to estimate calculate, compute, reckon. "*அவர்குழுக் குணிக்கின்*" *(கந்தபு. அசுரர்தோ. 25). 2. ஆய்தல் (ஆலோசித்தல்);* to reflect, consider. "*கொணரும்வகை யாவதெனக் குணிக்கும் வேலை*" *(கம்ரா. திருவவ.38). 3. வரையறுத்தல் (திவா.);* to determine, define, limit. *4. பெருக்குதல்;* to multiply.

குணுக்கு–தல் kuṇukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. வளைத்தல்;* to bend. *2. நுணுக்குதல்;* to powder.

குணுகு–தல் kuṇugu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. கொஞ்சுதல்;* to caress, prattle, talk pleasantly. "*குணுகி யிட்டுள பொருள் பறித்து*" *(திருப்பு. 676). 2. வளைதல்;* to bend.

க. குணுகு.

குத்திக்காட்டு–தல் kutti-k-kāṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *ஒருவன் குற்றத்தைச் சுட்டிக் காட்டி அவன் மனத்தைப் புண்படச் செய்தல்;* to wound one's feelings by bluntly pointing out his weakness.

குத்து[1]–தல் kuttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. ஊசி முதலியவற்றால் துளையிடுதல்;* to puncture, pierce, bore, perforate. "*உன்னைக் காதுகுத்த*" *(திவ். பெரியாழ்.2,3,1). 2. ஊசியாற் குத்துதல்;* to stab, wound. *3. தைத்தல்;* to sew. "*பூம்புன னுரையும் புரையக் குத்தி*" *(பெருங். வத்தவ.12:48). 4. கொம்பினால் முட்டுதல்;* to gore. "*வைவாய் மருப்பினான் மாறாது குத்தலின்*" *(கலித்.106:12). 5. முட்டியினாற் குத்துதல், இடித்தல்;* to strike with the fist, cuff, buffet, box. "*குத்துமோதை*" *(கம்பரா. வாலிவ. 43). 6. புள்ளிகுத்துதல்;* to insert punctuation marks, to draw a line of dots. *7. முத்திரை குத்துதல்;* to stamp, impress. *8. உலக்கையால் இடித்தல்;* to pound as in mortar. *9. துப்பாக்கி முதலியன கெட்டித்தல்;* to ram down, as in a gun (W.). *10. பறித்தல்;* to pick off, pluck, as young coconuts. *குரும்பை குத்தினான் (யாழ்ப்.). 11. களைதல் (பிங்.);* to remove. *12. பறவை கொத்துதல்;* to peck, strike with beak, as a stork, crow. *13. தின்னுதல்;* to feed on, pick up, as a bird. "*கானக்கோழி கதிர்குத்த*" *(பொருந. 222). 14. ஊன்றுதல்;* to plant, set, fix in the ground. "*பூந்தலைக் குந்தம் குத்தி*" *(முல்லைப். 41). 15. செங்கல் முதலியவற்றைச் செங்குத்தாக வைத்தல்;* to set on edge, as bricks in arching terracing. *கல்லைக் குத்திக் கட்டு (உவ.). 16. கிண்டுதல்;* to dig, break up, hollow out. "*வையை கொதித்த கண்கரை குத்தி*" *(திருவிளை. விடை. 10). 17. சுடுசொற் சொல்லுதல்;* to make cutting remarks; to use wounding words. *அவனை அடிக்கடி குத்தாதே (உ.வ.). 18. சிறுக வார்த்தல்;* to pour out as a liquid, in small quantities. *(கொ.வ.). 19. வருத்துதல்;* to afflict, injure. *அவன் செய்த பாவம் அவனைக் குத்துகிறது (உ.வ.). 20. தடைசெய்தல்;* to thwart, defeat, as a design, to appose, as a measure or scheme.

ம. குத்துக; க., பட. குத்து; தெ. குத்து, க்ருத்து; து. குத்துனி; கோத., துட. குத்; குட. குத்; கூ. குத; குவி. குத்தினை; பிரா. குத்திங்.

குத்து[2]–தல் kuttu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தலை முதலியன குத்துநோவெடுத்தல்;* to pain, ache, as the head. *2. எதிர்க்கெடுத்தல்;* to puke, vomit, belch up. *உண்ட சோறு நெஞ்சிற் குத்துகிறது (உ.வ.). 3. உறைமோர்*

ஊற்றுதல்; to pour buttermilk for curdling. *பாலில் உறைமோர் குத்திவை.*

குத்து[3]**–தல்** kuttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. துளித் துளியாய் விடுதல்;* pouring in drops as into the ear or eye. *2. எண்ணெய் குத்தல்;* letting oil in drops. *3. கத்தியாற் குத்தல்;* stabing with a knife. *(சா.அக.).*

குதக்கு–தல் kuda-k-ku-, *5 செ.குன்றாவி.*(v.t.) மெல்லுதல்; to turn about edibles in the mouth munch.

குதப்பு–தல் kudappu-, *5 செ.குன்றாவி.*(v.t.) மெல்லுதல்; to turn about food in the mouth, munch.

குதம்பு[1]**–தல்** kudambu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. துணியை நீரில் அலசுதல்;* to wash cloth gently in water, causing splash. *2. பனம்பழத்தின் தோலை அலசுதல்;* to wash the fibre skin or other parts of palmyra fruit in order to get the pulp.

குதம்பு[2]**–தல்** kudambu-, *15 செ.கு.வி.*(v.i.) *1. கொதித்தல்;* to boil up, to bubble up, as boiling water. *2. வெகுளியடைதல்;* to get angry, furious.

குதர்–தல் kudar-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. கோதியெடுத்தல்;* to peck, at, stroke. "சேவல்... மென்பூக்குதர் செம்மலூரன்" *(திருக்கோ. 369). 2. அடியோடு எடுத்தல்;* to lift up, as a stone, to throw up, as clouds on a furrow. "திண்கோட்டின் வண்ணப் புற்றங்குதர்ந்து" *(திருக்கோ. 346). 3. குதர்க்கவாதம் பண்ணுதல் (இனி. நாற். 12);* to argue perversly.

குதல்(லு)–தல் kudal-, *13 செ.குன்றாவி.*(v.t.) *1. குத்தல்;* to prick, pierce. *2. சினத்தல்;* to dig up and scatter.

குதறு[1]**–தல்** kudaṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. சிதறுதல்;* to dig up and scatter, to tear up; to scratch up and scatter, as fowls, to spill out. *2. கிண்டுதல்;* to stir up, loosen, grub up, as earth about plants.

குதறு[2]**–தல்** kudaṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நெறி தவறுதல் (திவ். திருவாய். 10. 1:6. அரும்.);* to deviate from the right course, to go astray, to miss the way. *2. புண் மிகுதல்;* to be blistered, covered with sores. *3. குலைதல்;* to become loose, rough, daranged, dishevelled, as the hair, to be disturbed, inflamed; as the eyes (W.).

குதி[1]**–த்தல்** kudi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. பாய்தல் (திவா.);* to jump, leap, spring, bound. *2. நீர் முதலியன எழும்பிவிழுதல்;* to splash, as water, to spurt out. "மலர் தேன் குதிக்க" *(தஞ்சைவா.67). 3. கூத்தாடுதல்;* to dance with joy, frolic. *4. செருக்குக் கொள்ளுதல்;* to be haughtily, arrogant. *அதிகமாகக் குதிக்கிறான் (உ.வ.).*

குதி[2]**–த்தல்** kudi-, *4 செ.குன்றாவி.*(v.t.) கடந்து விடுதல்; to leap over; overcome, escape from. "கூற்றங் குதித்தலுங் கைகூடும்" *(குறள், 269).*

குதி[3]**–தல்** kudi-, *செ.குன்றாவி.*(v.t.) காலைத் தளைதல்; to bind, as the legs of animals.

குதிர்–தல் kudir-, *4 செ.கு.வி.*(v.i.) தீர்மானப்படுதல்; to be settled, determined, fixed up. *வீட்டின் விலை குதிர்ந்தது (உ.வ.).*

தெ. குடுரு.

குதிரையேறு–தல் kudirai-t-ēṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. குதிரை மேலேறிச் செலுத்துதல்;* to mount a horse. *2. சிறுவர்கள் பச்சைக்குதிரை விளையாடுதல்;* to play leap-frog. *3. பிறரைக் கீழ்ப்படுத்தி அடக்கியாளுதல்;* to ride roughshod, domineer. *அவனைக் குதிரையேறுகிறான் (உ.வ.).*

குதுகலி–த்தல் kudukali-, *4 செ.கு.வி.*(v.i.) *1. களிப்பு உண்டாக்குதல்;* to make joyful. "குதுகலித் தாவியை யாகுலஞ் செய்யும்" *(திவ். நாய்ச். 5:7).*

குதுகுது[1]**–த்தல்** kudu-kudu-, *4 செ.குன்றாவி.*(v.t.) ஆசைப்படுதல்; to desire eagarly. "நாற்றங் குது குதுப்ப" *(பரிபா.20, 13).*

குதுகுது[2]**–த்தல்** kudu-kudu-, *4 செ.கு.வி.*(v.i.) குளிரால் நடுங்குதல்; to shiver from cold.

குதுகுலி–த்தல் kudukuli-, *14 செ.கு.வி.*(v.i.) *1. மிகுகளி கொள்ளுதல் (யாழ்.அக.);* to be rapturous; to be enthusiastic. *2. மகிழ்ச்சி மிகுதியால் பூரித்தல் (யாழ்.அக.);* to swell with joy. "இளங்கொங்கை குதுகுலிப்ப" *(திவ். பெரியாழ். 3, 6, 2).*

குதூகலி–த்தல் kudūkali-, *4 செ.கு.வி.*(v.i.) அகமகிழ்தல்; to rejoice, to delight in. "அருளின் மூழ்கிக் குதூகலித் தூடுதலோடும்" *(கந்தபு. வீரவாகு. 51).*

குதை[1]**–த்தல்** kudai-, *4 செ.கு.வி.*(v.i.) விற்குதையில் நாணைப்பூட்டுதல்; to fasten the bow-string at the notch. "குதைக்கின்றன நிமிர்வெஞ்சிலை" *(கம்பரா. இராவணன்வ. 46).*

குதை[2]**–தல்** kudai-, *3 செ.கு.வி.*(v.i.) செலுத்துதல்; to discharge, propel. "குதைந்தவார் பகழி வேடன்" *(பிரமோத்.17, 12).*

குதை[3]**–தல்** kudai-, *2 செ.கு.வி.*(v.i.) தடுமாறச் செய்தல்; to cause bewilderment, embarrassment. "குதையும் வினையாவி தீர்ந்தேன்" *(திவ். இயற். நான்மு. 81).*

குதை[4]**–தல்** kudai-, *2 செ.குன்றாவி.*(v.t.) துளையிடுதல்; to perforate.

குந்தாடு–தல் kundāḍu-, *5 செ.கு.வி.*(v.i.) நொண்டிக் கொண்டு விளையாடுதல்; to play hopping on one foot.. *(கோவை).*

குந்து[1]**–தல்** kundu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. இரு காலையும் ஊன்றி வைத்து உட்காருதல்;* to sit on the heels with legs folded upright. *2. உட்காருதல்;* to sit, squat.

3. முன்னங்கால்களை மட்டும் ஊன்றி நிற்றல்; to stand on tiptoe. "குந்தியுறித் தயிருண்டவர்" *(பாரத. கிருட். 199). 4. நொண்டி நடத்தல்;* to hop on one leg. "அடியொன்று கடிதோட்டிக் குந்தி வந்தனன்" *(கம்பரா. கும்பக. 348). 5. வளைதல்;* to bend, as a bow. "குந்து வன்னெடுஞ் சிலைமுதற் படைகளும்" *(கம்பரா. பிரமாத். 56).*

ம. குந்திக்குக.

குந்து[2]–தல் kundu-, *5 செ.கு.வி.*(v.i.) *தவறுதல்;* to fail, to miss. "குந்தாவருந் தீமை" *(திவ். திருவாய். 2:6:1).*

குப்புறக்கவிழ்–த்தல் kuppuṟa-k-kaviḻttal, *4 செ.கு.வி.* (v.i.) *தலைகீழாய்க் கவிழ்த்தல்;* turning upside down *(சா.அக.).*

குப்புறவிழு–தல் kuppuṟa-viḻu-, *2 செ.கு.வி.*(v.i.) தலைகவிழ விழுதல்; to trip and fall forward, to fall flat. on the face.

குப்புறு[1]–தல் kuppuṟu-, *20 செ.குன்றாவி.*(v.t.) *கடத்தல்;* to traverse, cross. "குப்புறற் கருமை யாலக் குலவரைச் சாரல் வைகி" *(கம்பரா. வரைக். 35).*

குப்புறு[2]–தல் kuppuṟu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. பாய்ந்து கடத்தல்;* to spring or leap across. "குறுமுனி குடித்த வேலை குப்புறுங் கொள்கைத் தாதல்" *(கம்பரா. கடறா. 15). 2. தலைகவிழ விழுதல்;* to fall headlong. "கதிரவனும்.... குடபாற் கடலிற் குப்புற்றான்". *3. தலைகுனிதல்;* to hang one's face downs. *(செ.அக.).*

Fin. kompastua; **Es.** kumistada; **Q.** kumpay.

குப்பைகிளை–த்தல் kuppai-kiḷai-, *4 செ.கு.வி.*(v.i.) குப்பையைக் கிண்டுதல்; to scratch up a heap of refuse, as a hen. "குப்பை கிளைப்போவாக் கோழிபோல்" *(நாலடி. 341). 2. குற்றம் வெளிப்படுவதற்குத் துருவித் துருவி உசாவுதல்;* to enquire into for exposing unsavoury details.

கும்பி–த்தல் kumbi-, *4 செ.கு.வி.*(v.i.) ஓக முறையில் மூச்சடக்குதல்; to hold or suppress the breath, suspend respiration, as a yōgi. "உட்கும்பித்து வாங்கவே" *(திருமந். 572).*

கும்பிடு–தல் kumbiḍu-, *17 செ.குன்றாவி.*(v.t.) *1.* கைகுவித்து வணங்குதல்; to join hands in worship, to make obeisance with the hands joined and raised. "தலையினாற் கும்பிட்டுக் கூத்துமாடி" *(தேவா. 727, 3). 2. கெஞ்சுதல்;* to beg, solicit, entreat. *(இ.வ.).*

Fin. kumartua; **Mordvin.** koma; **Es.** kummardada; **Hanti.** kumatali; **Mong.** kumri; **Jap.** kubomi.

கும்பு[1]–தல் kumbu-, *5 செ.கு.வி.*(v.i.) சமைத்த உணவு தீய்ந்து போதல்; to become overburnt, charred, smoked, as food when boiled with insufficient water.

கும்பு[2]–தல் kumbu-, *5 செ.கு.வி.*(v.i.) திரள், குழு; crowd, collection, group.

தெ. கும்பு; க. கும்பா.

கும்மலி–த்தல் kummali-, *4 செ.கு.வி.*(v.i.) விளையாடுதல்; to revel, sport, flutter. "குருகினங் கூடியாங்கே கும்மலித் திறகுலர்த்தி" *(தேவா. 511, 8).*

கும்மாளி–த்தல் kummāḷi-, *4 செ.கு.வி.*(v.i.) மனநோயின் விளைவாகக் குதித்தல், கை கொட்டல், தன்னை உயர்வாகப் பேசிக்கொள்ளல்; mild form of mania in which the symptoms are manifested under the form of gaiety or sport, as jumping, clapping hands and indulging in other agreeable hallucinations. *(சா. அக.).*

கும்மியடி–த்தல் kummi-y-aṭi-, *4 செ.கு.வி.*(v.i.) பாடிக் கொண்டு கைகொட்டியாடுதல்; to play the ***kummi*** dance.

கும்மு–தல் kummu-, *5 செ.கு.வி.*(v.i.) கைகூடுதல், உண்டாதல்; to happen, occur. "பண்டுநினைத்த பருவங் கும்முதடி" *(கனம் கிருஷ்ணையர், கீர்த். 4).*

குமட்டு[1]–தல் kumaṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* வாயால் எடுத்தல்; to have vomiting sensation, keck. *2.* நிறையவுண்டு தெவிட்டுதல்; to retch from over-eating. "பொழிந்த மாநிலம் புற்றாக் குமட்டிய புனிற்றா" *(கம்பரா. கார்கா. 47).*

குமட்டு[2]–தல் kumaṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* கக்குதல்; to vomit, eject. "வடவை குமட்டி யெதிரெடுத்து வயங்குஞ் சூலப்படை" *(காசிக. வயிர. 22). 2.* அருவருத்தல்; to loathe, detest; to feel repugnant about.

குமரிரு–த்தல் kumar-iru-, *3 செ.கு.வி.*(v.i.) வீணே கழிதல்; to pass away unused; to be wasted. "ஆத்மகுணங்கள் குமரிருந்துபோமித்தனை" *(ஈடு, 2.8:1).*

குமி[1]–தல் kumi-, *2 செ.கு.வி.*(v.i.) திரளுதல்; to accumulate, to be heaped up, to crowd. *(கொ.வ.).*

குமி[2]–த்தல் kumi-, *4 செ.குன்றாவி.*(v.t.) திரளச் செய்தல்; to accumulate,heap up, to gather.

குமி[3]–த்தல் kumi-, *4 செ.குன்றாவி.*(v.t.) அரிசி முதலியவற்றை அதிகமாகக் குற்றுதல்; to cover-pound, as rice.

குமிட்டி–த்தல் kumiṭṭi-, *4 செ.கு.வி.*(v.i.) குமிழ் போலாதல்; to swell, form as a tumour.

குமிழ்[1]–த்தல் kumiḻ-, *4 செ.கு.வி.*(v.i.) *1.* குமிழியிடுதல்; to grow into a conical shape, to be spherical, globular, to form in to bubble. "செழுங்குருதி கொழித்திழிந்து குமிழித்தெறிய" *(திவ். பெரியாழ். 4:8,7). 2.* மயிர் சிலிர்த்தல்; to stand on end, as hair, to horripilate.

குமிழ்[2]–த்தல் kumiḻ-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.* ஒலிக்கச் செய்தல்; to cause to sound. "அதிர்முக முடைய வலம்புரி குமிழ்த்து" *(திவ். பெரியாழ். 4:7,3).*

2. கொழித்தல் (தைலவ. வைத்திய. 12); to winnow.

குமிழ்–தல் kumiḻ-, *4 செ.கு.வி.*(v.i.) *சித்திரவேலை செதுக்கப்படுதல்;* to be embossed or worked in relief. *மரத்திற் குமிழ்ந்த யானை.*

குமிழி–த்தல் kumiḻi-, *4 செ.கு.வி.*(v.i.) *குமிழி கொள்ளுதல்;* to bubble, to rise in bubbles, in pustules.

குமிறு–தல் kumiṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *ஒலித்தல் (சூடா.);* to resound, roar.

குமுக்கு–தல் kumukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஊமைக் காயம் படக் கையாற் குத்தல்;* to beat with fists, pommel. *2. ஆடை கும்முதல்;* to wash cloth by wetting and gently pressing it with hands. *துணியைச் சற்று குமுக்கு (உ.வ.).*

தெ. குமுகு.

குமுங்கு–தல் kumuṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *மசிதல்;* to mash. "உரலிற் குமுங்க விடித்து" *(தைலவ. தைல. 49). 2. உள்ளாக இறங்குதல்;* to sink, as a building. *கட்டடம் குமுங்கி விட்டது (கொ.வ.).*

குமுறு–தல் kumuṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அதிரொலி செய்தல்;* to resound, to trumpet, as an elephant, to bellow, to rumble, crash, as thunder. "குத்திடக் குமுறிப் பாயும்" *(கம்பரா. வரைக். 34). 2. கலப்போசை யெழுதல்;* to have confused, uproar. "குமுறுமோசை விழவு" *(திவ். திருவாய். 6:5,2). 3. மனத்தினுள்ளேயே வருந்துதல்;* to burst with distress. "கண்கணீர் மல்க நின்று நின்று குமுறுமே" *(திவ். திருவாய். 6:5,1). 4. பீரிடுதல்;* to gush out, as milk from the breast. "வெம்முலை குமுறு பாலுக" *(கம்பரா. பள்ளி. 118). 5. கொதித்தல்;* to effervesce, bubble up, as in boiling.

குமை[1]–தல் kumai-, *4 செ.கு.வி.*(v.i.) *1. குழைய வேதல்;* to be over-boiled, to be boiled soft to a mash, as greens. *சோறு குமையச் சமைத்தாள் (உ.வ.). 2. குழம்புதல்;* to be mixed up. *எல்லாம் ஒன்றாய்க் குமைந்து கிடைக்கின்றன (உ.வ.). 3. வெப்பத்தாற் புழுங்குதல்;* to be hot, sultry. *4. கண்முதலியன இறுகிக்கொள்ளுதல்;* to close together, as the eyelids from heat in the system *(வின்.). 5. சோர்தல்;* to faint, droop, as one in a swoon. *6. அழிதல்;* to be destroyed. *7. வருந்துதல்;* to distressed, worried. "கொசுகு கடியாலுங் குமைந்தோம்" *(தமிழ்நா. 259).*

குமை[2]–த்தல் kumai-, *18 செ.குன்றாவி.*(v.t.) *1. துவைத்தல்;* to tread down, tread out into a mash. "கூற்றைக் குரை கழலா லன்று குமைத்தார் போலும்" *(தேவா. 446). 2. உரலில் வைத்து இடித்தல்;* to beat or pound in a mortar. *3. குழைய வேகச் செய்தல்;* to over-boil, boil soft, reduce to a mash by boiling. *4. வருத்துதல்;* to annoy, afflict, vex. "ஆவி திகைக்க வைவர் குமைக்கும் சிற்றின்பம்" *(திவ். திருவாய். 6:9,9). 5. அழித்தல்;* to destroy. "வெளிற்றறி விரண்டுங் குமைப்ப" *(தணிகைப்பு. விநா. காப்பு. 2).*

குய்[1]–தல் kuy-, *2 செ.கு.வி.*(v.i.) *வேதல், எரிதல்;* to burn, to boil. "குய்ப்புகை கிமழ" *(அக.நா.).*

குய்[2]–தல் kuy-, *2 செ.கு.வி.*(v.i.) *1. துளைத்தல்;* to make hole. *2. குத்துதல்;* to pierce. "குய்ப்புகை கிமழ" *(அக.நா.).*

குய்[3]–தல் kuy-, *செ.கு.வி.*(v.i.) *1. தாளிப்பு;* seasoning with spices. "கமழ்குய் யடிசில்" *(புறநா. 10). 2. தாளித்த கறி;* spicy, seasoned curry. "பொரியுங் குய்யும் வறைகளு நிவந்த வாசம்" *(சீவக. 2971). 3. நறும்புகை (பிங்.);* burnt odours, insense, odorous smoke. *4. சாம்பிராணி (தைலவ. தைல. 94);* frankincense.

குயில்[3](லு)–தல் kuyil-, *8 செ.குன்றாவி.*(v.t.) *1. சொல்லுதல்;* to utter, tell. "பொய் குயிலினுஞ் சோம்பினும்" *(சிவப். பிரபந். நிரஞ். 18). 2. கூவுதல் (சூடா.);* to call, whoop, halloo.

குயில்[2](லு)–தல் kuyil-, *13 செ.கு.வி.*(v.i.) *1. செய்தல்;* to make, execute, shape, construct. *2. நெய்தல்;* to weave. "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" *(தொல். சொல். 74, உரை). 3. பின்னுதல்;* to plait, braid, in twine *(வின்.). 4. துளைத்தல் (பிங்.);* to bore, perforate, tunnel. "குன்று குயின்றன்ன வோங்குநிலை வாயில்" *(நெடுநல். 88). 5. மணி முதலியவை பதித்தல்;* to encase, set, as precious stones. "சுடர்மணியின் பத்திகுயின்றிட்ட பழுப் பேணியில்" *(கந்தபு. வள்ளி. 50).*

குயில்[3](லு)–தல் kuyil-, *15 செ.கு.வி.*(v.i.) *நடைபெறுதல்;* to take place. "தெய்வ நடன மெதிர்குயில" *(தணிகைப்பு. அகத்திய. 83). 2. செறிதல் (திவா.);* to be thick, close, crowded. *3. இசைக்கருவி ஒலித்தல்;* to sound, play. "வீணை குழலொடு குயில" *(சீவக. 1255).*

குயிற்று[1]–தல் kuyiṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *சொல்லுதல்;* to tell, say, utter, to lay down, as rules. "சுமார்த்தத்திற் குயிற்றுபல கருமத்தும்" *(விநாயகபு. 73, 24).*

குயிற்று[2]–தல் kuyiṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. செய்தல்;* to make, construct, form, perform. "அருநடங் குயிற்று மாதி வானவனே" *(பதினொ. பட்டினத். கோயினான். 32). 2. மணி பதித்தல்;* to encase, set, as gems. "மணியொடு வயிரங் குயிற்றிய" *(சிலப். 5:147).*

குரங்கு[1]–தல் kuraṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. வளைதல்;* to bend, incline. "பாடினாள்... இலைப்பொழில் குரங்கின" *(சீவக. 719). 2. தொங்குதல்;* to hang down, dangle. "குரங்குளைப் பரிமா" *(திருவிளை. மெய்க்கா. 16). 3. தங்குதல்;* to repose, rest, lie. "நிகளமூழ்கிக் கோட்டத்துக் குரங்க" *(சீவக. 262). 4. குறைதல்;* to diminish. "குரங்கா வாற்ற லெம்பியோ தேய்ந்தான்" *(கம்பரா. பாசப். 5). 5. இரங்குதல் (சது.);* to frelent, grieve, feel sorry. *6. தாழ்தல்;* to droop, wither. "சடப்பட்டுக் குரங்கி வெந்தது" *(சீவக. 719).*

குரங்கு²–தல் kuraṅgu-, *5 செ.குன்றாவி.(v.t.) வளைத்தல்;* to bend. "தென்னிலங்கை சாரங்கமே குரங்காச் சாதித்தான்" *(மான்விடு. 7).*

குரவையிடு–தல் kuravai-y-iḍu-, *20 செ.கு.வி.(v.i.) நாவாற் குழறி மகிழ்ச்சியொலி செய்தல்;* to utter in chorus a shrill sound by wagging the tongue as done by women on festive and religious occasions. *(இ.வ.).*

குரு¹–த்தல் kuru-, *4 செ.கு.வி.(v.i.) 1. தோன்றுதல்;* to appear. "அதினின்று மொருபுருடன் குருத்தான்" *(விநாயகபு. 72, 4). 2. வேர்க்குரு உண்டாதல்;* to break out, as prickly heat.

குரு²–த்தல் kuru-, *4 செ.கு.வி.(v.i.) வெகுளியடைதல்;* to be indignant, enraged.

குரு³–த்தல் kuru-, *4 செ.கு.வி.(v.i.) நிறம்பெறுதல்;* to glisten. "குருக்குங் கலாமதிக் கூற்றம்" *(சங்கர. அந். 32).*

குருமி–த்தல் kurumi-, *4 செ.கு.வி.(v.i.) பேரொலி செய்தல்;* to make a crash, as a ship dashing against a rock. "குருமித்து மதலை பொங்கி" *(சீவக. 521).*

குரை–த்தல் kurai-, *4 செ.கு.வி.(v.i.) 1. ஆர வாரித்தல்;* to jubilate, shout. "குவவுக் குரையிருக்கை" *(பதிற்றுப். 84: 20). 2. குலைத்தல்;* to bark, as a dog. "ஞாளி குரைதருமே" *(திருக்கோ. 175).*

E. blare, neigh, crow; **A.S.** hnoegan; **Icel.** hneggja, **Scot.** nicher. **Fin.** karjua, kalijua; **Es.** karjuda; **Komi.** gorsini.

குலவு–தல் kulavu-, *9 செ.கு.வி.(v.i.) 1. விளங்குதல்;* to shine, gleam to be conspicuous. "குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்" *(தேவா. 794.7). 2. மகிழ்ச்சி கொள்ளுதல்;* to rejoice. "பாரிடங் குலவிச் செல்ல" *(கந்தபு. தாரக. 18). 3. உலாவுதல்;* to walk, move about. "எமதன்னையை நினைத்தே குலவினனோ" *(சிவரக. விசயை. 14). ஒ.நோ. உலவு. 4. நெருங்கியுறவாடுதல்;* to be on very intimate terms. அவனோடு குலவுகிறான். *5. தங்குதல்;* to lie, remain. "பாற்கடலில் குலவுகின்றதோர் பொருளெலாம்" *(கந்தபு. குமார. 4). 6. வளைதல்;* to bend, curve. "குலவுச்சினைப் பூக்கொய்து" *(புறநா. 11:4). 7. குவிதல்;* to lie heaped, as sand. "குலவு மணல்" *(ஐங்குறு. 153).*

குலாவு¹–தல் kulāvu-, *5 செ.கு.வி.(v.i.) 1. அங்குமிங்கும் நடத்தல்;* to walk or move about, haunt. *2. நட்பாடுதல்;* to be on intimate terms, to be friends. அவனோடு அதிகமாகக் குலாவுகிறான். *3. விளங்குதல்;* to shine, to be conspicious. *4. மகிழ்தல்;* to rejoice, exult, delight. *5. நிலை பெறுதல்;* to settle, rest. "பூந்துகில்... புகைகூடி... குலாய கொள்கைத்தே" *(சீவக. 1007).*

குலாவு²–தல் kulāvu-, *5 செ.குன்றாவி.(v.t.) கொண்டாடுதல் (பிங்.);* to admire, praise, extol.

குலாவு³–தல் kulāvu-, *செ.கு.வி.(v.i.) வளைதல்;* to be bent, curved. "குலாவணங்கு வில்லெயினர் கோன்" *(யாப். வி. 22).*

குலுக்கு–தல் kulukku-, *5 செ.குன்றாவி.(v.t.) 1. அசைத்தல்;* to shake, as a vessel, a palanquin, to shake up and down, to agitate, to shake to-gether in a mass. "நெடுவரை குலுக்கிய குலத்தோளை" *(கம்பரா. ஊர்தேடு. 209). 2. குலுங்கச் செய்து கலத்தல்;* to mix by shaking together, as in a bottle.

குலுங்கு–தல் kuluṅgu-, *8 செ.கு.வி.(v.i.) 1. அசைதல்;* to be shaken, agitated. "கொங்கை குலுங்கநின் றுந்தீபற" *(திருவாச. 14:11);* shudder, quake with fear. *3. நிறைதல்;* to abound, to be full. அந்த மரம் குலுங்கக் காய்த்திருக்கிறது.

குலை¹–தல் kulai-, *1 செ.கு.வி.(v.i.) 1. அவிழ்தல்;* to become loose; to be dishevelled, unravelled. "கொண்டை குலைந்து போயிற்று". *2. கலைதல்;* to disperse, as a crowd, to scatter. "கூட்டம் குலைந்தது". *3. நிலைகெடுதல்;* to be deranged, disordered, upset, thrown into confusion. "கோளி பங்கய மூழ்கக் குலைந்தவால்" *(கம்பரா. வரைக். 621). 4. மனங்குழைதல்;* to lose one's heart become melted, softened. "முளரிமொட்டென்று குலையுங் காமக்குருடர்க்கு" *(பட்டினத். திருப்பா. கஞ்சித்தரு. அடி. 233). 5. நடுங்குதல்;* to trumble, shudder, quiver, shiver. "வேழம் எதிரக் குலைவரால்" *(இரகு. நகர. 56). 6. அழிதல்;* to be annihilated, destroyed, put an end to. "உலகெலாங் குலைந்தன்று" *(கந்தபு. திருநகரப். 11). 7. சினக்குறி காட்டுதல் (பிங்.);* to show signs of anger.

குலை²–த்தல் kulai-, *4 செ.குன்றாவி.(v.t.) 1. அவிழ்த்தல்;* to untie, loosen, dishevel. *2. பிரித்தல்;* to rake down as a scaffolding, to remove, as the decorations of a car after festival. *3. தாறுமாறாக்குதல்;* to derange, disturb. *4. அழித்தல்;* to destroy, ruin, to violate, as chastity. *5. வீரத்தைக் குறைத்துப் பேசல்;* to dishearten, discourage, disconcert. *6. அசைத்தல்;* to shake agitate.

குலை³–த்தல் kulai-, *4 செ.கு.வி.(v.i.) 1. நாய் குலைத்தல்;* to bark, as a dog. *2. குழறிப்பேசுதல்;* to talk inchoerently and confusedly. *(கொ.வ.).*

குலை⁴–த்தல் kulai-, *4 செ.குன்றாவி.(v.t.)* குலையாக ஈனுதல்; to shoot forth in a bunch, as a plantain. "முல்லை குலைத்தனகாண்" *(திணைமாலை. 112).*

குலைதள்ளு–தல் kulai-taḷḷu-, *7 செ.கு.வி. (v.i.)* குலையாக ஈனுதல்; to shoot forth in clustors, bunches, as fruits, flowers, etc *(கொ.வ.).*

குவவு–தல் kuvavu-, *10 செ.கு.வி.(v.i.)* குவிதல் *(சூடா.);* to be piled up. *2. குவித்தல்;* to heap up, gather. "காட்டகத் தமிர்துங் காண்வரக் குவவி" *(சீவக. 2110).*

குவி–த்தல் kuvi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. கும்பலாக்குதல்;* to heap up, to pile up, concially. *2. தொகுத்தல்;* to accumulate, hoard up, as treasure. "*கத்திக் குவித்த பல்புத்தகத்தீர்*" *(அஷ்டப். திருவேங்கடத்-33). 3. கைகூப்புதல்;* to join hands, as in prayer. "*இரு கரங்குவித்து*" *(தாயு. பொருள்வன. 11). 4. கூம்பச் செய்தல்;* to close, as a flower. *கதிரவனின் கதிர்கள் குவளை மலரைக் குவித்தன. 5. சுருக்குதல் (வின்.);* to draw in as the sun its rays in setting. *6. உதடுகளைக் கூட்டுதல்;* to round the lips, as in kissing or in pronouncing 'u' or 'U'. "*துவர் வாயிதழைக் குவித்து விரித்தழுது*" *(திருச்செந். பிள்ளைத். வாராணைப். 5).*

குழகு–தல் kuḻagu-, *6 செ.கு.வி.*(v.i.) *1. கொஞ்சி விளையாடுதல்;* to prattle playfully. "*கிளியோடுங் குழகேலே*" *(திவ். திருவாய். 6,2,5). 2. கவர்தல்;* to coax, wheedle. "*குழகியெங்கள் குழமணன் கொண்டு*" *(திவ். திருவாய்.6,2,6).*

குழப்பு–தல் kuḻappu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. கலக்குதல்;* to mix, stir. "*சேறெலாங் குழப்பி*" *(காஞ்சிப். நாட்டுப். 74). 2. பிறழ்வித்தல்;* to confuse, disturb, derange. "*நடுக்குழப்பிய நா*" *(குற்றா. தல. கவுற்சன. 53). 3. வியப்படையச் செய்தல்;* to bewilder, perplex. "*கடிமனை தொறுங் குழப்பி*" *(திருவாலவா. 13,9). 4. மனத்தைக் கலக்குதல்;* to disconcert, trouble, vex, annoy; to cause doubt, hesitation. 5. *காரியக் கேடாக்குதல்;* to frustrate, as a design, to interrupt, to hinder, to spoil, as a business. *6. குழப்பிப் பேசுதல்;* to prevaricate, shuffle, evade questions.

ம. குழப்புக.

குழம்பு–தல் kuḻambu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. கலங்குதல்;* to become mixed, to be stirred up, mingled, as liquides of different consistency, as powders with liquids. *2. மனங்கலங்குதல்;* to be disconcerted, troubled, confused. *அவன் குழம்பி நிற்கிறான். 3. நிலை குலைதல்;* to be disturbed, agitated, to be boisterous, as the sea.

ம. குழம்புக.

குழற்று–தல் kuḻaṟṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *குழறியொலித்தல்;* to make incoherent or indistrict sounds, as when affected with strong emotion. "*குரவையிற் குழற்றுவாரும்*" *(கம்பரா. ஊர்தேடு.188).*

குழறு–தல் kuḻaṟu-, *15 செ.கு.வி.*(v.i.) *1. பேச்சுத் தெளிவின்றித் தடுமாறுதல்;* to babble, as an infant to talk indistinctly, to gabble. "*வாய் குழறா*" *(திருவாச. 21,10). 2. கூவுதல்;* to cry, as a bird; to crow, as a cock. "*கூகை நன்பகற் குழற*" *(பட்டினப். 268). 3. கலத்தல்;* to mingle, to be mixed up. "*இருடாரகை குழறிற்றென்ன... மலர் மயிர் சொருகி*" *(கோயிற்பு. பதஞ். 14). 4.கேடுதருதல்;* to cause ruin, destruction. "*குழறிய கொடுவினையிலரே*" *(தேவா. 249, 7).*

குழி[1]–தல் kuḻi-, *4 செ.கு.வி.*(v.i.) *உட்குழிவாதல்;* to be hollowed out, as a hole, a pit, acanity; to sink, hollow. "*குழிந்தாழ்ந்த கண்ணவாய்*" *(நாலடி. 49).*

ம. குழியுக; க. குழி; கெ. க்ரொய்யு, க்ரொய்யி.

Fin. kaivā; **Es.** kaeva; **Mari.** koem; **Turk.** kazy; **q.** gaywi.

குழி[2]–த்தல் kuḻi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. குழியாக்குதல்;* to form pits, hollows, cavities, to sink, excavate. "*குழித்து நிற்பது நீர்*" *(நான்மணி. 30). 2. செதுக்குதல்;* to inscribe, engrave. "*குழித்த மோதிரம்*" *(கலித்.84, உரை).*

ம. குழிக்குக; க. குழி; து. குரைபுனி, குரெபினி, கொரெபுனி, கொரைபினி; தெ. க்ரொச்சு, க்ரெச்சு.

குழுமு–தல் kuḻumu-, *7 செ.கு.வி.*(v.i.) *1. கூடுதல்;* to collect in large numbers, as men, animals. "*மாத ரெண்ணிலார் குழுமி*" *(காஞ்சிப்பு. பன்னிரு.134). 2. கலத்தல்;* to gather together, mix. "*கொன் றையும் துளவ மும் குழுமத் தொடுத்த*" *(சிலப்.12, உரைப்பாட்டு மடைக்குப்பின் செய்யுள்.10). 3. கூடி முழங்குதல்;* to roar in company, as tigers. "*கூட்டுறை வயமாப்புலியொடு குழும*" *(மதுரைக். 677).*

ம. குழுமுக.

Fin. kummuta; **Es.** kummuda; **Hanti.** kump; **Hung.** hab; **Jap.** kabi.

குழை[1]–தல் kuḻai-, *4 செ.கு.வி.*(v.i.) *1. இளகு பதமாதல்;* to become soft, mashy 6, pulpy, as well cooked. '*குழையச் சமைத்த பகுப்பு*' *(திவ். பெரியாழ். 3, 1, 3, வ்யா). 2. மனமிளகுதல்;* to melt, become tender as the mind. "*தொண்டரினம் குழையாத் தொழும்*" *(பதினொ. பட்டினத். திருவே. 28). 3. சோறு அளிதல்;* to be overboiled, as rice. *4. நெருங்கி உறவாடுதல்;* to be in close intimacy, to be hand in glove with. *குழைந்து பரிமாறுகிறார்கள். 5. வளைதல்;* to be bent, as a bow. "*திண்சிலை குழைய*" *(சூளா. அரசியற். 319). 6. வாடுதல்;* to fade, languish become spolit, as flowers or twigs. "*மோப்பக்குழையும் அனிச்சம்*" *(குறள். 90). 7. துவளுதல்;* to wave, as a flag, to sway to and fro. "*குழைந்த நுண்ணிடை*" *(கம்பரா. சித்திர. 9). 8. தளர்தல்;* to be tired to be weighed down. "*கோதைசூழ் கொம்பிற் குழைந்து*" *(பு.வெ.12, பெண்பாற். 14). 9. வருந்துதல்;* to be troubled. "*மகளிர் குழைகின்ற குழைவை*" *(கம்பரா. பிரமாத். 31).*

ம. குழயுக; க. கொழெ; தெ. க்ருள்ளு; து. குறையுனி, குரைவுனி, குரிவுனி, குரியுனி; துட. க்வஸ்; கோத. கொள்வ, குத்; குரு. கொச்ச்னா.

Fin. kura; **Es.** kura; **Q.** kurpa.

குழை[2]–த்தல் kuḻai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. குழையச் செய்தல்;* to macerate, mas, reduce to fult, pulp make soft by mixing with water. *சோற்றைக் குழைத்து விட்டாள். 2. மருந்துப் பொடியை தேன் முதலியனவிட்டுக் கலத்தல்;* to mix, as

powder with a liquid. *3. கலக்கப் பண்ணுதல்;* to melt and blend in union, fuse. "உன்னை யென்னள்ளே குழைத்தவெம் மைந்தா" *(திவ். திருவாய. 2,6,9). 4. தழையச் செய்தல்;* to cause sprout or shoot forth. "மழை குடக்கேர்பு குழைத்த சிறுகோல்" *(நற். 140). 5. திரட்டுதல்;* to gather in a lump, as boiled rice. "கருணை யாற் குழைக்கும் கைகள்" *(சீவக. 257). 6. இளகுவித்தல்;* to cause to melt. "அத் தன்மெய் குழைத்தநங்கை" *(கந்தபு. மேரு. 16). 7. வளைத்தல்;* to bend, as a bow. "பொன் வரை குழைத்து" *(கூர்மபு. பிரமவிட். உல). 8. அசைத்தல்;* to wave, as the chowry fan. to wag. as a dog its tail. "குழைக்கின்ற கவரியின்றி" *(கம்பரா. நகர்தீ. 21).*

குளமழி–தல் kuḷam-aḻi-, *3* செ.கு.வி.(v.i.) மீன் பிடிக்கும்படி குளம் நீர் வற்றுதல்; to have the water in a tank considerably reduced to allow easy fishing.

குளறு[1]–தல் kuḷaṟu-, *6* செ.கு.வி.(v.i.) அச்சம் முதலிய வற்றால் மொழி தடுமாறுதல்; to stammer through fear, anger, confussion of mind. *2. நரி முதலியன ஊளையிடுதல்;* to howl, yell, make a hideous noise, as jackels.

ம. குளறுக.

குளறு[2]–தல் kuḷaṟu-, *11* செ.குன்றாவி.(v.t.) *1. தடுமாறிப் பேசுதல்;* to falter to stumble in one's speech. "பயனின் மொழிகள் குளறாமுன்" *(சிவப். பிரபந். வெங்கைக்கலம். 96). 2. கெடுத்தல்;* to spoil. காரியத்தைக் குளறாதே.

குளி[1]–த்தல் kuḷi-, *4* செ.கு.வி.(v.i.) *1. நீராடுதல்;* to bathe. "களிப்பர் குளிப்பர்" *(பரிபா. 6:103). 2. கழுத்துவரை குளித்தல்;* to wash one's body up to the neck. *3. மாதவிலக்குக் குளியல்;* to take purificatory bath after menstruation. அவள் குளித்து நான்கு மாதம் ஆயிற்று *(கொ.வ.). 4. தைத்தல்;* to pierce, as an arrow. "கூர்ங்கணை குளிப்ப" *(பு.வெ.10, சிறப்பிற். 10, கொளூ.). 5. அழுந்துதல்;* to press against. மென்கொங்கை யென் னங்கத் திடைக்குளிப்ப" *(திருக்கோ. 351). 6. வலிய உட்புகுதல்;* to enter the thick of a fight. "கடற்படை குளிப்ப மண்டி" *(புறநா. 6). 7. மறைதல்;* to hide, conceal oneself. "யானறித லஞ்சிக் குளித்து" *(கலித். 98). 8. தோல்வியுறுதல்;* to be defeated. "மீன் குளிக்குங் கற்பின்" *(சீவக. 2141).*

ம. குளி.

குளி[2]–த்தல் kuḷi-, *4* செ.குன்றாவி.(v.t.) முத்துகளை மூழ்கியெடுத்தல்; to dive for pearls. "பணிலம் பலகுளிக்கோ" *(திருக்கோ. 63).*

குளி[3]–த்தல் kuḷi-, செ.கு.வி.(v.i.) நீராடல்; having a bath, which removes lathargy bodily heat, sense of factigue etc. *2. சூதகமாதல்;* menstruating. *(சா.அக.).*

குளிப்பித்தல் kuḷippittal, செ.கு.வி.(v.i.) நீராடச் செய்வித்தல்; causing to bathe. *(சா.அக.).*

குளியாமலிரு–த்தல் kuḷiyāmal-iru-, *2* செ.கு.வி.(v.i.) கருப்பமாயிருத்தல் *(கொ.வ.);* lit., to be without menstrual bath, to be pregnant.

குளிப்பாட்டு[1]–தல் kuḷippāṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) நீராட்டுதல்; to bath or wash. "பொருநைநீர் குளிப்பாட்டி" *(காஞ்சிப்பு.தழுவ.288).*

குளிப்பாட்டு[2]–தல் kuḷippāṭṭu-, *5* செ.குன்றாவி.(v.t.) புகழ்ந்து வயப்படுத்துதல்; to win over, by flattery.

குளிர்[1]–தல் kuḷir-, *2* செ.கு.வி.(v.i.) *1. பனிக்காற்று உறைத்தல்;* to feel cold, chilly, as breeze. குளிர்வாடை. *2. குளிர்ச்சியுறுதல்;* to be cool, refreshing. "சிங்கி குளிர்ந்துங் கொலும்" *(நீதி நெறி. 59). 3. உடம்பு சில்லிடுதல்;* to get numbed, as in death. *4. கண்முதலிய பொறிகளுக்கு இனியதாதல்;* to be pleasant to the sense of touch, sight or hearing. "என்புறக் குளிரு நெஞ்சுருகும்" *(கம்பரா. விபீடண. 21). 5. கருணையால் முகங்கனிதல்;* to be benignant, as the countenance. to be satisfied. இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது. *7. சின்னம்மை முதலியவற்றால் இறத்தல்;* to die, as of an epidemic like small-pox. குழந்தை அம்மை போட்டுக் குளிர்ந்து போயிற்று *(இ.வ.).*

ம. குளிர்; க. குளிர்.

குளிர்[2]–தல் kuḷir-, *2* செ.கு.வி.(v.i.) தங்குதல்; to seat, rest. குளிரு மரப்பலகை" *(சீவக. 1782).*

குளிர்காய்–தல் kuḷir-kāy-, *2* செ.கு.வி.(v.i.) குளிர் வருத்தாதபடி வெப்பம் பிடித்தல்; to bask in the sun, to warm oneself.

குளிர்ப்பித்தல் kuḷir-p-pittal, *4* செ.குன்றாவி.(v.t.) தண்ணீர், நறுமணப் பொருள் முதலியவற்றால் குளிர்ச்சி செய்தல்; refreshing with water, perfumes etc. *2. உடம்பின் சூடு போக்கல்;* allaying the heat in the system. *(சா.அக.).*

குளிர்விடு–தல் kuḷir-viḍu-, *20* செ.கு.வி.(v.i.) அச்சம் நீங்குதல்; to be freed from fear. அவனுக்கு குளிர்விட்டுப் போயிற்று *(உ.வ.).*

குளிரவை–த்தல் kuḷira-vai-, *4* செ.குன்றாவி.(v.t.) விளக்கை அணைத்தல்; to put out, extinguish, as a light. விளக்கைக் குளிரவை *(இ.வ.).*

குளிறு–தல் kuḷiṟu-, *5* செ.கு.வி.(v.i.) *1. ஒலித்தல் (திவா.);* to sound, rattle.

குளுகுளு–த்தல் kuḷukuḷu-, *4* செ.கு.வி.(v.i.) *1. செழித்து வளர்தல்;* to grow luxuriantly. பயிர்கள் குளுகுளுத் திருக்கின்றன. *2. சோகை பற்றுதல்;* to become pale, sallow, wan, bloated, as in jaundice; to become weak through morbid state of the body. *3. அழுகிப்போதல்;* to become rotten, putrid, as fruits.

குற்றஞ்சுமத்து–தல் kuṟṟañ-cumattu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *ஒருவன் மீது குற்றத்தை ஏற்றுதல்;* nate.

குற்றம்பாராட்டு–தல் kuṟṟam-pārāṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *பிறர் குற்றத்தை மிகுதிப்படுத்துதல்;* to exaggerate one's faults, dwell too much upon one's faults, magnify guilt.

குற[1]–த்தல் kuṟa-, *4 செ.குன்றாவி.*(v.t.) *வெளிப்படுத்துதல்;* to emit, give out. "கொந்தக் குழலைக் குறந்த புழுகட்டி" *(திவ். பெரியாழ். 2.5:8).*

குற[2]–த்தல் kuṟa-, *4 செ.குன்றாவி.*(v.t.) *வார்த்தல்;* to pour. "புண்ணிலே புளியைக் கறந்திட்டால் கரிக்குமா போலே" *(திவ். பெரியாழ்.2.9:1, வியா. பக். 451).*

குறண்டு–தல் kuṟaṇḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. வளைதல்;* to be crooked or bent, as horns, fingers, limbs, fruits. *2. வலிப்பு கொள்ளுதல்;* to be convulsed, to have spasms. *3. சுருண்டு கொள்ளுதல்;* to coil up, as a small reptile.

குறாவு–தல் kuṟāvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. வாடுதல்;* to sink, as the spirit by disappointment, hunger, to droop, as plants by drought. *2. ஒடுங்குதல் (யாழ்.அக.);* to shrink, contract, recede. *3. மெலிதல் (யாழ்.அக.);* to become reduced, lean, as a person, animal. *4. புண் ஆறி வடுவாதல்;* to heal, as a sore, cicatrice.

குறி–த்தல் kuṟi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. கருதுதல்;* to design, intend, contemplate, consider, think. "கொலைகுறித்தன்ன மாலை" *(அகநா. 364). 2. ஊழ்கம் செய்தல்;* to meditate. "ஞானியர்தாங் குறியெட்டக் கரத்தார்" *(அட்டப். திருவேங்கடமா. 57). 3. வரையறுத்தல் (பிங்.);* to determine, ascertain. *4. கோடு வரைதல்;* to draw, as a line. *'புழுக்குறித்தது எழுத்தானாற் போல' (ஈடு. 2.4:3). 5. குறித்துக் கொள்ளுதல்;* to note down, to make the first draft in writing, to sketch an outline in painting, to trace. இந்நூலின் அரும்பதங்களைக் குறிக்க. *6. சுட்டுதல்;* to refer to, denote, suggest, specify. *7. பற்றுதல்;* to pertain, relate to, "எதைக் குறித்துப் பேசினாய்?". *8. இலக்கு வைத்தல்;* to aim at, as in shooting. "வெய்யோன் குறித்தெறி பிறங்கல்" *(கந்தபு. கயமுகன்வ. 38). 9. அடைதல்;* to reach, attach oneself to. "குரவன் பதத்தைக் குறித்து" *(சைவச. பொது. 125). 10. பாவித்தல்;* to regard, fancy. "குறித்துச் சிவனெனக் கோபுரத்தை" *(சைவச. பொது.126). 11. சொல்லுதல்;* to narrate briefly, tell. "உற்றதுங் குறித்தான்" *(கம்பரா. அகலிகை. 41). 12. முன்னறி வித்தல்;* to foretell, predict, forebode. தீச்சகுனம் பொல்லாங்கைக் குறிக்கும். *13. ஊதியொலித்தல்;* to blow, as a conch; to sound. "வலம்புரி குறித்து" *(பாரத. பதினேழாம். 12).*

ம., க. குறி; தெ., கு. குறி.

குறிப்பறி–தல் kuṟippari-, *2 செ.கு.வி.* (v.i.) நோக்கமறிதல்; to take the clue, to guess one's intentions. "குறிப்பறிந்து காலங்கருதி" *(குறள்.696).*

குறிபார்–த்தல் kuṟi-pār-, *4 செ.கு.வி.*(v.i.) *1. நிமித்தம் பார்த்தல்;* to observe signs, omens. *2. நன்மை தீமைகளைக் குறிபார்த்துச் சொல்லுதல்;* to tell fortunes. *3. இலக்குப் பார்த்தல்;* to aim at a mark.

குறிகேள்–தல் (குறிகேட்டல்) kuṟi-kēḷ-, *4 செ.கு.வி.*(v.i.) *1. குறிசொல்லுமாறு குறிசொல்பவனை வினாவுதல்;* to consult a fortune-teller, diviner. *2. குறிகாரன் சொல்வதைச் செவிமடுத்தல்;* to hear what the diviner foresays.

குறிசொல்(லு)–தல் kuṟi-šol-, *8 செ.கு.வி.*(v.i.) *ஒருவரது ஆகூழ் முதலியவற்றைப் பற்றிக் குறிபார்த்துக் கூறுதல்;* to tell one's fortune, to divine.

குறிப்பெழுது–தல் kuṟippeḻudu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. கருத்துச் செய்திக்குறிப்பு எழுதுதல்;* to write memoranda, notes, index, etc. *2. பிறப்புக் குறிப்பெழுதுதல்;* to note down the date, hour, etc., of a child's birth. *3. பேரேட்டில் எழுதுவதன் முன்னர் கணக்கைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதுதல்;* to make entries in day book.

குறு[1]–தல் kuṟu-, *8 செ.குன்றாவி.*(v.t.) *1. பறித்தல்;* to pluck. "பூக்குற் றெய்திய புனலணி யூரன்" *(ஐங்குறு. 23). 2. மேலிழுத்து வாங்குதல்;* to pull up. "கயிறுகுறு முகவை" *(பதிற்றுப்.22 :14). 3. ஒழித்தல்;* to abandan, leave off, give up. "இச்சைமற் றாச்சிரயங் குற்றோன்" *(ஞானா. 61, 19). 4. நெல் முதலியன குற்றுதல்;* to pound in a mortar, husk. "வெதிர்நெற் குறுவாம்" *(கலித். 42).*

குறு[2]–த்தல் kuṟu-, *4 செ.கு.வி.*(v.i.) *அளவிற் குறுகுதல்;* to become short; to contract, diminish, shrink.

தெ., க., ம. குறு.

குறுக்கு[1]–தல் kuṟukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. குறையச் செய்தல்;* to shorten, curtail, reduce, contract, lessen, retrench. செலவைக் குறுக்க வேண்டும். *2. சுருக்குதல்;* to abbreviate, abridge, epitomise, abstract. அந்நூலைக் குறுக்கி யெழுதுக. *3. நெருங்கச் செய்தல்;* to cause to draw near, to bring within easy reach. "திருநாவாய் குறுக்கும்வகை யுண்டுகொலோ" *(திவ். திருவாய். 9:8:1).*

ம. குறுக்குக; க. கொரெ; து. குந்தாவுனி; கோத., துட. குர்க்.

குறுக்கு[2]–தல் kuṟukku-, *5 செ.கு.வி.*(v.i.) *அண்மையாதல்;* to be near, close by. *'திருநாவாய் எத்தனையிடம் போகுமென்று எதிரே வருகின்றார் சிலரைக் கேட்டருள குறுக்கும் என்றார்களாய்' (ஈடு, 9.8:1).*

குறுகு[1]–தல் kuṟugu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குள்ளமாதல்;* to grow short, stumpy, dwarfish. "குறுகுகுறுகென விருத்தி" *(கந்தபு. திருக்குற்றாலப். 15). 2. சிறுகுதல்;*

to shrink contract; to be reduced; to decrease, diminish, decline. "உரைகுறுக நிமிர்கீர்த்தி" *(கம்பரா. குலமுறை. 4). 3.* மாத்திரை குறைதல்; (Gram.) to be shortened as a long vowel. "இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே" *(தொல். எழுத்து. 37).*

குறுகு[2]–தல் kuṟugu-, *5* செ.கு.வி.(v.i.) அணுகுதல்; to approach, draw near. "இளங்கோ வேந்தனி ருப்பிடங் குறுகி" *(மணிமே. 18:42).*

குறை[1]–தல் kuṟai-, *2* செ.கு.வி.(v.i.) *1.* சிறுகுதல்; to diminish, decrease, wane, divindle, decline. "மன்னுயிர் கண்முற்று நாடொறுங் குறைந்த வன்றே" *(கந்தபுமேரு. 28). 2.* மதிப்பு, இடம், பொருள், ஏவல் முதலியவற்றால் தாழ்தல்; to be reduced, in value, in estimation, in circumstances, in rank. அவன் பெருமை குறைந்து விட்டது. *3.* பற்றாமற் போதல்; to be wanting, to prove insufficient, to be short, in weight, measure, or number. பொருள் வாங்கக் கையிற் பணம் குறைவாயுள்ளது. *4.* அரைகுறையாதல்; to be inperfect, unfinished, defective, deficient. இதுகுறை வேலை. *5.* விலையேறும்படி பண்டம் அருகுதல்; to be dear, difficult of attainment, scarce. *6.* எழுத்துக் கெடுதல்; (Gram.) to be dropped, elided, as a letter. "ஒருமொழி மூ வழிக் குறைதலு மனைத்தே" *(நன். 156). 7.* வருத்தி உயிரொடுங்குதல்; to droop in affliction. "கணவன் குறையக் குறைவாள்" *(கம்பரா. நகர்நீங். 53). 8.* குறைவுற்று வருந்துதல்; to languish from worries. "நாளுமிகும்பணிசெய்துகுறைந்தடையுநன்னாளில்" *(பெரியபு. திருநாவு. 45). 9.* துணிவு குன்றுதல்; to lose courage. "அரிகுரலோசை யஞ்சி... ஆனை குறையு மனமாகி" *(தேவா. 883:9). 10.* வெட்டப்படுதல்; to be cut off. "கையுறிற் கால்குறையும்" *(நாலடி. 84). 11.* தோல்வியுறுதல்; to suffer, defeat. "எத்தனை போரிடைக் குறைந்தான்" *(கம்பரா.யுத்.மந்திரப்.112). 12.* அழிதல்; to be ruined, destroyed. "அன்னார் குறைவது சரதம்" *(கம்பரா. நிந்தனை, 56).*

Fin. kerita; **Eo.** kere; **Mordvin.** ker; **Hung.** ker; **Mong.** kerei; **Q.** guru.

குறை[2]–த்தல் kuṟai-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* சுருக்குதல்; to lessen, shorten, curtail. செலவைக் குறைத்தான். *2.* தறித்தல்; to cut, fell, hew down. "மாந்தர் குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து மறைக்குமாங் கண்டீர் மரம்" *(வாக்குண். 30). 3.* அறுத்தல்; to reap, as a crop. "கதிர்ச்சாலி குறைக்குநர்" *(காஞ்சிப்பு. இருபத். 60). 4.* அராவுதல்; to file. "இருப்பரங் குறைத்திடும் எஃகவேல்" *(கந்தபு. கடவுள் 12). 5.* முகத்தல்; to draw, as water. 'மேகந்தான் அதனைக் குறைத்து அதன்கட் பெய்யாது விடுமாயின்' *(குறள், 17, உரை).*

குறைசொல்(லு)–தல் kuṟai-šol-, *6* செ.கு.வி.(v.i.) *1.* மனத்திலுள்ள குறையைப் பிறர் அறியக் கூறுதல்; to compalin, state grievances, pray for redress, express, dissatisfaction. *2.* தனக்கு வேண்டுவனவற்றைச் சொல்லிக் கொள்ளுதல்; to represent one's wants. *3.* குற்றஞ்சாட்டுதல்; to charge with fault, censure, criiticise, blame.

குறைதீர்[1]–தல் kuṟai-tīr-, *2* செ.கு.வி.(v.i.) *1.* மனக் குறை நீங்குதல்; to have wants supplied, to be satisfied. "குறைதீர்ந்த கொடையே பகையைப் யுறவாக்கும்" *(காஞ்சிப்பு. புராணவர. 15).*

குறைதீர்[2]–த்தல் kuṟai-tīr-, *4* செ.கு.வி.(v.i.) *1.* வேண்டியவற்றை உதவுதல்; to supply, as one"s wants or needs; to satisfy. *2.* கடமையைச் செய்து முடித்தல்; to fulfil, as an obligation.

குறைப்படு–தல் kuṟai-p-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) மனக் குறையுறுதல்; to be displeased, discontented. "குறைப்பட்டுக் கொண்டிருக்கிறான்" *(பெருங். இலாவாண. 19:7).*

குறைபடு[1]–தல் kuṟai-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) *1.* குறைவாதல்; to be wanting, to diminish, to become scarce. *2.* துணிபடுதல்; to be broken into pieces, to be shivered into fragments. "நீர்கல் குறைபட வெறிந்து" *(பரிபா. 20).*

குறைபடு[2]–த்தல் kuṟai-paḍu-, *4* செ.கு.வி.(v.i.) குறைவுண்டாக்குதல்; to fail in rendering what is due, to cause deficiency.

குறைபடு[3]–த்தல் kuṟai-paḍu-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* முகத்தல்; to draw up, as water by the clouds. "கடல்குறைபடுத்தநீர்" *(பரிபா. 20). 2.* மதிப்புக் குறைவுண்டாக்குதல்; to put one to shame.

குறையறு[1]–தல் kuṟai-y-aṟu-, *2* செ.கு.வி.(v.i.) மனக்குறை நீங்குதல்; to be freed from wants, anxiety etc.

குறையறு[2]–த்தல் kuṟai-y-aṟu-, *4* செ.குன்றாவி.(v.t.) குறைநீங்கக் கொடுத்தல்; to bestow liberally and free one from wants anxiety, etc. 'சோறுந் தண்ணீரும் குறையறுத்துக் கொண் டிருக்குமா போலே' *(ஈடு, 9.3:1).*

குறையிர–த்தல் kuṟai-y-ira-, *3* செ.குன்றாவி.(v.t.) தன் குறைகூறி வேண்டுதல்; to beg, supplicate, petition for one's wants. "மாலைக் குறையிரந்து" *(திவ். இயற். 2:17).*

குன்றி–த்தல் kuṉṟi-, *4* செ.கு.வி.(v.i.) *1.* குன்று போல் குவித்தல், ஒன்றாகக் கூட்டுதல்; to heap up, make a lump of, to hill. *2.* வளர்தல்; to be increased, grow *(சேரா.நா.). 3.* குன்றிமணி வளர்தல்; to be increased, grow. *(சேரா.நா.).*

ம. குன்னிக்குக.

குன்று–தல் kuṉṟu-, *5* செ.கு.வி.(v.i.) *1.* குறைதல்; to decrease, diminish, become reduced. *2.* அழிவடைதல்; to be ruined. "குன்றா முது குன்றுடையான்" *(சிவப். பிரபந். பிக்ஷாட.2). 3.* நிலை கெடுதல்; to fall from high position. "குன்றின் அனையாரும் குன்றுவர்" *(குறள், 965). 4.* எழுத்துக் கெடுதல் *(தொல். எழுத்து. 109):* (Gram.); to be omitted, as a letter. *5.* வாடுதல்; to droop, languish to be

dispirited. அவன் துயரத்தால் மனங் குன்றினான். 6. வளர்ச்சி யறுதல்; to become stunted to be arrested in growth. சிறுகன்றுகளின் முதுகிற் கையை வைத்தாற் குன்றிவிடும் (இ.வ.).

ம. குன்னுக; க., தெ. குந்து; து. குந்துனி; குட. கொறு; கோத. குர்க்; துட. குறக்; துட. குறக்; கூ. கோக்; பட. குக்கு.

குன்னா–த்தல் kuṉṉā-, 6 செ.கு.வி.(v.i.) குளிரால் உடம்பு கூனிப் போதல் (நெடுநல். 9, உரை); to shrink and crouch with cold, to contract limbs and look small.

குனகு–தல் kuṉagu-, 5 செ.கு.வி.(v.i.) கொஞ்சிப் பேசுதல்; to prattle sweetly. "குனகியல ருடனிருந்து" (திருப்பு. 20).

குனி–தல் kuṉi-, 2 செ.கு.வி.(v.i.) 1. வளைதல்; to bend, as a bow. "குனிவளர் சிலை" (சீவக. 486). 2. வணங்குதல் (சூடா.); to bow, make obeisance. 3. தாழ்தல் (சூடா.); to stoop; to descend low. "குனிந்த வூசலிற் கொடிச்சி" (கம்பரா. சித்திர. 24). 4. வீழ்தல்; to fall, as in battle. "குஞ்சரங் குனிய நூறி" (சீவக. 2293). 5. இரங்குதல் (சது.); to pity, commiserate, relent.

ம. குனி; க. குனி; தெ. குங்கு.

குனி[1]–த்தல் kuṉi-, 4 செ.குன்றாவி.(v.t.) வளைத்தல்; to bend, curve. "குனித்த புருவமும்" (தேவா. 11:4).

குனி[2]–த்தல் kuṉi-, 4 செ.கு.வி.(v.i.) 1. ஆடுதல்; to dance. "அன்பரென் பூடுருகக் குனிக்கும் பாம்பலங் காரப்பரன்" (திருக்கோ. 11). 2. குரல் நடுங்குதல்; to quaver, quiver, shake, as the voice in singing.

T

கூகைகுழறு–தல் kūgai-kuḻaṟu-, 5 செ.கு.வி.(v.i.) ஆந்தை அலறுதல்; to hoot, as an owl.

கூசிவிழி–த்தல் kūši-viḻi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. கண் கூச்சத்துடன் நோக்குதல்; to look with dazzled eyes. 2. அருளுடன் பார்த்தல் (வின்.); to look with eyes of grace.

கூசு[1]–தல் kūšu-, 5 செ.கு.வி.(v.i.) 1. நாணுதல்; to be shy, bashful. "அச்சமுங் கொண்டு கூசி" (திருவிளை. திருநாட். 31). 2. உடல் கூச்சங் கொள்ளுதல்; to be ticklish. 3. கண், பல் முதலியன கூசுதல்; to be tender, weak, sensitive, as an eye, a limb; to be set on edge, as a tooth. "காணக்கண் கூசுதே" (தனிப்பா.).

ம. கூசுக.

கூசு[2]–தல் kūšu-, 5 செ.கு.வி.(v.i.) 1. அஞ்சிப் பின்வாங்குதல்; to recoil, shrink back as from fear. "கூசின வல்ல பேச நாணின" (கம்பரா. பால. பூக்கொய். 6). 2. நிலை குலைதல் (பிங்.); to be routed as on army.

கூட்டமை–தல் kūṭṭamai-, 2 செ.கு.வி.(v.i.) பலவகை உறுப்புகளும் சேர்ந்தமைதல்; to be mixed, as the ingredients of sandal paste, to be set in order, as the different parts of a musical instrument. "கூட்டமை வனப்பிற் கோடபதிக் குரல்" (பெருங். வத்தவ. 3:123).

கூட்டாக்கு–தல் kūṭṭākku-, 5 செ.குன்றாவி.(v.t.) பொருட்படுத்துதல் (திருநெல்.); to take into account, to mind.

கூட்டிவிடு–தல் kūṭṭi-viḍu-, 20 செ.குன்றாவி.(v.t.) கூட்டியனுப்புதல்; to send one along with an other.

கூட்டு[1]–தல் kūṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. இணைத்தல்; to unite, join, combine, connect. "திருவடிக்கட் கூட்டினை" (திவ். திருவாய். 4:9,9). 2. கலத்தல்; to compound, mingle, mix, amalgamate. 3. அதிகப்படுத்துதல்; to increase. பேசியதற்குமேல் வட்டி கூட்டித்தர வேண்டும். 4. தொகை கூட்டுதல்; to add, sum up. 5. அவை கூட்டுதல்; to convene, convoke, as an assembly. 6. துடைப்பத்தாற் பெருக்குதல்; to gather up with a broom. 7. முடித்தல்; to finish. "கூறுமாக்கதை கூட்டுமுன்" (பிரமோத். 22-23).

ம. கூட்டுக.

கூட்டு[2]–தல் kūṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) சீழ் முதலியன உண்டாதல் (யாழ்ப்.); to form, as pus.

கூட்டு[3]–தல் kūṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) அருளுரை வழங்குதல்; to pleaching. உஜ்ஜீவிக்க வாராயென்று தம் திருவுள்ளத்தோடே கூட்டுகிறார்" (ஈடு. 1:1,1).

கூடலி–த்தல் kūḍali-, 4 செ.கு.வி.(v.i.) கிளர்ந்து வளைதல்; to over hang, as the eye brows. "குறுபெயர்ப் புருவங் கூடலிப்ப" (திவ். பெரியாழ். 3:6,8).

கூடலிழை–த்தல் kūḍal-iḻai-, 4 செ.கு.வி.(v.i.) கூடற்சுழி வரைதல்; to draw kūḍal on sand. நீடலந் துறையிற் கூடலிழைத்து" (திருக்கோ. 186).

கூடா–தல் kūḍā-, 6 செ.கு.வி.(v.i.) 1. உயிர் நீங்கிய வெற்றுடம்பாதல்; becoming a lifeless body. 2. இறத்தல்; dying. "கூடலான் கூடா யினான்" (சிலப். 20 : 2 வெண்.).

கூடு–தல் kūḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஒன்றுகூடி அன்பு பாராட்டுதல், நட்பாயிருத்தல்; to associate or be friend. "கூடிப்பிரியேல்" (ஆத்திசூடி.). 2. புணர்தல்; to cohabit. "கொம்மைத் துணை மென்முலையண்ணலைக்கூட" (கந்தபு. மகாசத். 17). 3. அடைதல்; to reach, arrive at. "நகரங் கூடினான்" (பிரமோத். 13:64).

கூண்டா–தல் kūṇḍā-, 8 செ.கு.வி.(v.i.) மயிர் சிக்குப்படுதல்; to get matted or interlocked, as the hair.

கூண்டு–தல் kūṇḍu-, 5 செ.கு.வி.(v.i.) 1. கூடுதல்; to accrue, to be added. "கூண்ட வெட்டாதாள்" (அழகிய நம்பியுள. 90). 2. குழுமுதல் (இ.வ.); to assemble.

கூத்தாடு–தல் kūttāḍu-, 5 செ.கு.வி.(v.i.) 1. நடித்தல் (சிலப். 12, ப. 319); to dance, act on the stage. 2. மகிழ்ச்சி மிகுதல்

(வின்.); to be elected with success, etc. *3. செழித் திருத்தல்;* to prosper, thrive. *அவ்வீட்டில் செல்வம் கூத்தாடுகிறது. 4. வலிந்து வேண்டுதல்;* to importune, persistently request. *தனக்கு அது வேண்டுமென்று கூத்தாடுகிறான் (உவ.).*

ம. கூத்தாடுக; க., து. கூதாடு.

கூத்துப்பண்ணு–தல் kūttu-p-paṇṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வேடிக்கை பண்ணுதல்;* to make fun, to do a droll or funny action. *2. குழப்பஞ்செய்தல் (வின்.);* to confound, derange.

கூத்துவிடு–தல் kūttu-viḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. நாடகக் கதை மாந்தரை அவைக்கு அறிவித்தல்; (வின்.);* to introduce the actors in a play. *2. வேடிக்கை செய்தல் (யாழ்ப்.);* to say something odd or droll, to do a funny or humorous thing to amuse an audience. *3. தெருக்கூத்து நடத்துதல்;* to arrange for a street play.

கூதைசெய்தல் kūdai-cey-, *1 செ.குன்றாவி.*(v.t.) *காதை மூளியாக்குதல்;* to mutilate the ear. "*காது செய்வான் கூதை செய்து*" *(திவ். திருவாய். 9:1.9).*

கூப்பிடு[1]–தல் kūppiḍu-, *9 செ.குன்றாவி.*(v.t.) *1. அழைத்தல்;* to call, call by name, summon. *2. வரவழைத்தல்;* to invite.

Fin. kutsua; **Hunti.** kutta; **Lap.** goccot; **Jap.** kuch; **Q.** jotokay.

கூப்பிடு[2]–தல் kūppiḍu-, *19 செ.கு.வி.*(v.i.) *1. அச்சம், துயரம் முதலியவற்றாற் கத்துதல்;* to call out, cry out, halloo, shriek. *2. உதவி வேண்டிக் கரைதல்;* cry for help.

ம. கூப்பிடுக.

கூப்பிடு[3]–தல் kūppiḍu-, *20 செ.குன்றாவி.*(v.t.) *தொழுதற்குக் கைகுவித்தல்;* to join hands in worship. "*கூப்பிட்டேன் சொல்கைதனை*" *(தனிப்பா. II, 98, 251).*

கூம்பு–தல் kūmbu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குவிதல்;* to close, to shut, as a flower. "*செய்ய கமல மலர்கூம்ப*" *(நைடத. சந்திரோ.2). 2. ஒடுங்குதல், சுருங்குதல் (சூடா.);* to contract, shrink. *3. ஊக்கங் குறைதல்;* to lose courage, zeal or enthusiasm. "*வடவர் வாடக் குடவர் கூம்ப*" *(பட்டினப். 276). 4. சேறு (வின்.);* mud. *கூம்பினிற் புதைத்த கல்* (W.).

ம. கூம்புக.

கூர்[1]–தல் kūr-, *16 செ.கு.வி.*(v.i.) *1. மிகுதல்;* to be abundant, excessive. "*பெருவறங் கூர்ந்த கானம்*" *(பெரும்பாண். 23). 2. விருப்பங் கொள்ளுதல்;* to covet hanker after. "*எங்கையர் தோள் கூடினான்பின் பெரிது கூர்ந்து*" *(திணைமாலை.124). 3. வளைதல்;* to bend. "*மெய்கூர்ந்த பனியொடு*" *(கலித். 31:6). 4. அளவு குறைதல், குன்னாத்தல் (நெடுநல். 9 உரை);* to contract with cold.

கூர்[2]–த்தல் kūr-, *12 செ.கு.வி.*(v.i.) *1. மிகுதல்;* to be abundant, excessive. "*கூர்ப்புங் கழிவு முள்ளது சிறக்கும்*" *(தொல். சொல். 314). 2. கூர்மையாதல்;* to be sharp, as the edge or point of an instrument. "*கூர்க்குநன் மூவிலைவேல்*" *(தேவா. 367:8) 3. அறிவு நுட்பமாதல்;* to be keen, acute, penetrating, as the intellect. *4. உவர்த்தல்;* to be saltish, brackish. "*மென்று றைப்புனல் கூர்ப்புறக் கடலேறி*" *(தணிகைப்பு. திருநாட். 164). 5. சினத்தல்;* to be enraged, become furious. "*கூர்த்துநாய் கவ்விக் கொளக்கண்டும்*" *(நாலடி. 70).*

கூல்(லு)–தல் kūl(lu)-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அழிதல்;* to ruin, to destroy. *2. இடிந்து விழுதல்;* to fall down.

க., தெ. கூலு.

கூவு[1]–தல் kūvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. பறவை கூவுதல்;* to crow; as a cock, to scream, as peacocks to cry, as a cuckoo or birds in general. "*கூவின பூங்குயில்*" *(திருவாச.20:3). 2. கதறுதல், ஒலி யெழுப்புதல்;* to call out, whoop, hallow. *3. யானை முதலியன பிளிறுதல்;* to trumpet, as an elephant. "*கூங்கை மதமா*" *(பரிபா. 10:49). 4. ஓலமிடுதல்;* to cry out for help. "*வந்த வீரன் கூவிய சசியை நோக்கி*" *(கந்தபு. மகாகாளர். 6).*

ம. கூகுக; க., பட. கூகு; தெ. கூயு; து. கூகுனி; குட. கூ; கொலா. நா.கூக்; பர். கூய், கூப்; கோண். கூச்சானா; கூ. கூப்க; ம. கூக்ரெ.

கூவு[2]–தல் kūvu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *அழைத்தல்;* to call, summon. "*மழலை முற்றாத விளஞ் சொல்லா லுன்னைக் கூவுகின்றான்*" *(திவ். பெரியாழ். 1:4,5).*

Aust. cooee.

கூழ்–த்தல் kūḻ-, *4 செ.குன்றாவி.*(v.t.) *ஐயுறுதல்;* to doubt, suspect. *அவனிவனென்று கூழன் மின்*" *(திவ். திருவாய். 3:6,9).*

கூள்(ளு)–தல் kūḷ-, *16 செ.கு.வி.*(v.i.) *திரளுதல்;* to crowd together, assemble, muster. "*கூண்டன கரிகள்*" *(இரகு. மீட்சி. 42).*

கூறிடு–தல் kūṟiḍu-, *20 செ.குன்றாவி.* (v.t.) *1. துண்டாக்குதல்;* to cut into pieces or slices, bisect, divide. *2. பங்கிடுதல்;* to distribute in portions. "*மலைந்தார்க்கு மொற்றாய்ந் துரைத்தார்க்கும்..... புலவர்க்கும்.... கூறிட்டார் கொண்ட நிரை*" *(பு.வெ.1,14).*

கூறு[1]–தல் kūṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. சொல்லுதல்;* to speak, say, declare, assert. "*கூறிய முறையின்*" *(தொல். சொல். 70). 2. விலை கூறுதல்;* to cry out the price, as an auctioner. *3. உரத்த குரலில் அறிவித்தல் (வின்.);* to cry aloud, promulgate, proclaim.

Fin. kerota; **Es.** kordus; **Hung.** kerd, keres; **Mong.** gere; **Jap.** kuringoto (repeat).

கூறு[2]–தல் kūṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *கூறு செய்தல்;* to divide. "*இது பண்டாரங் கூறுமாறு கூறிற்று*" *(குறள். 386, மணக்.).*

கூனு–தல் kūṉu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. வளைதல்;* to curve, to

become crooked, to bend down. "கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து" *(பொருந. 242). 2. முதுகு வளைதல்;* to become hunch-backed.

ம. கூனுக; க., கோத., கூட. கூனு; தெ. பட. கூனு; து. கூனு; கூரு.

bf

கெக்கரி[1]–த்தல் kekkari-, *4 செ.கு.வி.* (v.i.) *மிக மிக இனித்தல்;* to taste very sweet.

கெக்கரி[2]–த்தல் kekkari-, *4 செ.கு.வி.* (v.i.) *கொக்கரித்தல்;* to cackle, cluck, as a hen.

கெக்கரி[3]–த்தல் kekkari-, *4 செ.கு.வி.* (v.i.) *சினத்தல்;* to get angry.

கெக்கலி–த்தல் kekkali-, *4 செ.கு.வி.* (v.i.) *குஞ்சுகளைப் பருந்தின் பார்வையினின்றும் காப்பதற்காகத் தாய்க்கோழி ஒலி எழுப்புதல்;* clucking of a hen to protect the chicken from the enemy.

க. கெக்கலிசு; கெ. கெக்கலின்சு; **E.**cackles.

கெக்களி–த்தல் kekkaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெளிதல்;* to bend, writhe; to be twisted, distorted. *2. துருத்துதல்;* to be pushed out, to protrude. *3. தோற்றுப்போதல்;* to be defeated or vanquished.

கெக்கு–தல் kekku-, *5 செ.கு.வி.* (v.i.) *கால்நடைகளை மேய்க்கும்போது ஒலி எழுப்புதல்;* to shout intraining cattle.

க. கெக்கு.

கெஞ்சு–தல் keñju-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. இரந்து குறையுறுதல்;* to beg humbly; to entreat, crave, beseech with suplicating gestures. "கெஞ்சு மாதங்கமுகம் பார்த்திரங்கும்" *(தனிப்பா. 1.339,50). 2. இரக்கமாக வேண்டுதல்;* to implore, to plead. *உங்களைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்கின்றேன், இந்த முறை மட்டும் மன்னித்துவிடுங்கள் (உவ.).*

ம. கெஞ்சுக., கிஞ்சுக; கோத. கென்ச்; கோண். கேன்சானா; பட. கெஞ்சு; மா. க்வெகெ (கேள்).

கெட்டலை–தல் keṭṭalai-, *2 செ.கு.வி.* (v.i.) *நிலை கெட்டுத் திரிதல்;* to go astray, lead the life of a vegabond.

கெட்டழி–தல் keṭṭaḷi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. ஆண், பெண்கள் பரத்தமையால் ஒழுக்கம் கெடுதல்;* to become loose in morals. *2. வீண் செலவினால் நிலைமை கெடுதல்;* to be ruined by extravagant expenditure.

கெட்டி–த்தல் keṭṭi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நிலம் முதலியவற்றை இறுக்கப்படுத்துதல்;* to harden, strengthen, make firm. *2. துமுக்கி(துப்பாக்கி)யில் மருந்திட்டுக் கெட்டிப்படுத்துதல்;* charge or load a fire - arm.

கெட்டிப்படு–தல் keṭṭi-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *இறுகுதல்;* to become solid.

கெட்டிப்படுத்து–தல் keṭṭi-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. திடப்பொருளாக்குதல்;* bring to a solid state.

கெட்டுப்போ–தல் keṭṭu-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to perish; to be ruined. *2. நைந்துபோதல்;* to wear out. *3. பதனழிதல்;* to be spoiled. *4. அழுகிப்போதல்;* to be rotten, to decay. *5. ஒழுக்கங்கெடுதல்;* to become bad, immoral. *6. வறுமையுறுதல்;* to tall on evil days; to be reduced to straitened circumstances. *அந்தக் குடும்பம் கெட்டுப் போயிற்று (உவ.). 7. காணாமற் போதல்;* to be lost, as goods. *(உவ.).*

க. கெட்டுகோகு.

கெடு[1]–தல் keḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to perish, to be destroyed, annihilated. "தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க" *(நாலடி.80). 2. பழுதாதல்;* to decay, rot; to become tarnished, damaged, spoiled, to be marred, blighted, worn out. *3. வறுமையுறுதல்;* to fall on evil days, to be in straitened circumstances. "கெட்டார்க்கு உற்றார் கிடையிலுமில்லை" *(பழ.). 4. ஒழுக்கங் கெடுதல்;* to degenerate, deteriorate, change for the worse morally. *கெட்டுப்போனவள். 5. உருவழிதல்;* to be emaciated, reduced; deformed, disfigured. *அந்தச் சித்திரங் கெட்டுவிட்டது. 6. தோற்றோடுதல்;* to run away defeated. *7. கெடுதல்;* to be elided, dropped. "இறுதி யிகர மெய்யொடுங் கெடுமே" *(தொல். எழுத்து.240).* "பகையாளி குடியை உறவாடி கெடு" *(பழ.). 8. வழிதவறிப்போதல்;* to lose one's way. "கெடுமரக்கலம் கரை சேர்ந்தாற் போல்" *(ஈடு.1:2:3). 9. எரியும் விளக்கு, தீப்போன்றன அணைதல்;* to be extinguished as lamp fire etc., *10. காய்கறி முதலியன அழுகுதல்;* to purify, rot. *11. செயலிழத்தல்;* cease to function, weaken. *12. தீயதாதல்;* to become bad. *13. கொடியதாதல்;* to become visions. *14. நோய் கவலை முதலியன அடியோடு நீங்குதல்;* to be removed, as disease, sorrow.

ம. கெடுக; க., பட. கெடு; தெ. செடு; குட. கெட்; து. கெடகுனி; கோத. கெட்; துட. கொட்; கொலா. கிட்; நா. இட்; பர். சிட்; கோண். கரீநாநா.

Gk. kakoein.

கெடு[2]–த்தல் keḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அழித்தல்;* to destroy, annihilate; to squander, as wealth; to extinguish. "திங்கள் விளங்கொளி கெடுத்து வெய்யவன்..... தோன்றினான்" *(நைடத. இந்திர.1).* "கெடுப்பதும் வாயால், படிப்பதும் வாயால்" *(பழ.). 2. பழுதாக்குதல்;* to damage, spoil, tarnish, blast, injure. "கெடுத்தொழிந்தானை..... புதல்வனை" *(கம்பரா. மந்தரை.76). 3. ஒழுக்கங் கெடுத்தல்;* to corrupt, demoralize, seduce, violate. *4. குற்றமாக்குதல்;* to render nugatory, as religious rites, austerities. *நோன்புகளையெல்லாம் தீச்செயலால் கெடுத்துக் கொண்டான். 5. செயல் தடை செய்தல்;* to frustrate. *என் வேலையைக் கெடுக்காதே.*

"கெடுப்பாரைத்தெய்வம்கெடுக்கும்" *(பழ.).6.நீக்குதல் ;* to remove. "அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென" *(சிலப். உரைபெறு.). 7. ஆற்றல் குறையச்செய்தல்;* to weaken, make inactive. *8. நஞ்சு முதலியவற்றை முறியச் செய்தல்;* to neutralize, to counteract as poison in the system. இந்த வேர் நஞ்சைக் கெடுக்கும். *9. தோற்கச் செய்தல்;* to defeat, overcome. *10. காணப்பெறாது போதல்;* to lose, drop, as an object by negligence. "எற்கெடுத் திரங்கி" *(மணிமே.5:36).*

ம. கெடுக்குக.

Gk. kakoein.

கெடுபடு–தல் keḍu-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) பேரழிவுக்கு உள்ளாதல்; to be caught in danger; to be overtaken by calamity. "கெடுபட்டுப் போவார்..... விரைந்து போதலைக் கருதுவர்" *(பெரும்பாண். 432, உரை).*

கெண்டி–த்தல் keṇḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கடிந்து கூறுதல்;* to reprove, chide. *2. முடிவுகட்டிப் பேசுதல் (வின்.);* to speak with decision, precision. *3. துண்டித்தல் (திவா.);* to chop, mince, slash, cut into pieces. *4. பகிர்தல் (வின்.);* to divide, parcel. *5. பருத்தல்;* to grow fat. ஆள் நன்றாய்க் கெண்டித்திருக்கிறான் *(உவ.).*

கெண்டு¹–தல் keṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.தோண்டுதல்;* to dig. "கவலை கெண்டிய கல்வாய்" *(குறுந். 233). 2. அறுத்துத் தின்னுதல்;* to cut and eat. "மன்றத்து மதவிடை கெண்டி" *(பெரும்பாண். 143). 3. கிண்டுதல்;* to work in, as a bee gathering honey in flowers. "வண்டு கெண்டி மருவும் பொழில்" *(தேவா. 626:10). 4. வருந்துதல்;* to feel sad.

கெண்டு²–தல் keṇḍu-, *5 செ.கு.வி.* (v.t.) வருந்துதல்; to be distressed. "கெண்டிக் கெழுதகைமை யில்லேன் கிடந்தூடு" *(யாப். வி. பக்.351).*

கெணக்கு–தல் keṇakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) நோண்டுதல், எரிச்சல்படுத்துதல்; to irritate, prove by words or deeds.

கெத்து¹–தல் kettu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கீறிப் பிளத்தல்;* to split asunder by driving in and turning the hatchet. *2. நறுக்குதல்;* to chop, mince, cut off. *3. செதுக்குதல்;* to chisel. *4. மீன் முதலியவை அறுத்தல்;* to make an incision as in fish.

க., து., பட., கெத்து; தெ. செக்கு.

கெத்து²–தல் kettu-, *5 செ.கு.வி.* (v.i.) முட்டையிட்ட கோழி அடைகாக்கக் கத்துதல் *(யாழ்ப்.);* to cackle, as a hen which has laid egg and seeks to sit on it for hatching.

கெத்து³–தல் kettu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கிட்டிப்புள்ளை எற்றிவிடுதல்;* to strike the stick in the game of tip - cat. *2. ஏமாற்றுதல்;* to deceive, cheat. *3. பாதத்தின் முன்பகுதியை மட்டும் தரையில் ஊன்றி எம்புதல்;* hop, skip.

கெந்தி–த்தல் kendi-, *4 செ.கு.வி.* (v.i.) தத்துதல்; to hop, skip. "கெந்தியா வுகளுங் கெண்டை" *(திருவிசை. கருவூர். பதி. 3.10).*

தெ., க. கந்து.

கெந்து¹–தல் kendu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தத்துதல்;* to hop, skip. *2. நெளிதல் (யாழ்ப்.);* to crawl or creep, as worms in a sore, to writhe, wriggle. *3. கிட்டிப் புள்ளடித்தல்;* to strike the stick in the game of tip - cat. *4. ஒற்றைக் கால் ஊன்றியும் மறுகால் ஊன்ற முடியாமலும் விந்தி விந்தி நடத்தல்;* walk with one leg pressed and the other leg not capable of pressing. அவன் ஒரு காலில் புண்பட்டதால் கெந்துகிறான்.

தெ., து. கந்து.

கெம்பளி–த்தல் kembaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) மகிழ்வுறுதல் *(யாழ்.அக.)*; to exult, to be merry.

கெம்பீரி–த்தல் kembīri-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வீரங்காட்டுதல் (யாழ்.அக.)*; to display manliness, majesty of spirit. *2. எடுப்பான குரலாற் பேசுகை*; to exult, to speak in a majestic tone.

கெம்பு–தல் kembu-, *5 செ.கு.வி.* (v.i.) கொந்தளித்தல் *(வின்.)*; to rise, as waves; to be violent as the wind; to swell, heave, as the sea (W). *2. அரத்தங்கொதித்தல் (வின்.)*; to rise up, boil, as blood in rage (W). *3. உரத்துப் பேசுதல்*; to speak loud, cry out, clamour. *4. ஆரவாரித்தல் (வின்.)*; to create tumult, to rise with indignation. *5. நெம்புதல்*; to lift.

கெமி–த்தல் kemi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. போதல்*; to go. "அயல் கெமித்து" *(இரகு. தேனுவ. 8). 2. புணர்தல்*; to copulate.

கெமிளி–த்தல் kemiḷi-, *4 செ.கு.வி.* (v.i.) மகிழ்தல் *(கெம்பளித்தல்)*; to enjoy.

கெய்²–தல் kei-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. வினை யாற்றுதல்*; to perform, to do. *2. உருவாக்குதல், உண்டு பண்ணுதல்*; to prepare; to make. *3. வேலை செய்தல், உழுதல்*; to work, to tilt.

க. கெய், கெயி, கெயு, கெய்யு; பட. கீய்.

key, to do. In all the Dravidian dialects kei is hand. In Telugu kēlu is also found. The most common form of this word in Telugu is chey - i or chēyi. The word signifying to do is almost identical., viz., key, chey, etc..... Hungarian kēz (pronounced keis), Finnish kchēsi (root kā- e.g. genitive kā-an),Estainkāsi, Ostiak ket, Lappish kāt, Perimian ki, Lasian kē, Mingrelian che. Quasi - Qumuq (a Turkish dialect) kūya. Turkish kol, Mon - gol ghar, Tungusian gala. The Hungarian has both kar and kēz : but the former is used to signify arm, the later hand - a distinction which seems to prove that those roots, though perhaps ultimately related, have long been independent of one another. The word in the various Scythian languages signifying to do appear to stand in the same relation to the word for hand that they do in the Aryan and Dravidian languages. Comp. The Turkish kyl, to do; Mongol ki, Manchu gai, Mordvin kā. These words resemble the Aryan kar, to do, but still more closely the Dravidian ki, kē, etc. (CG. DEl. 617, 618).

கெர்ச்சி–த்தல் kercci-, *4 செ.கு.வி.* (v.i.) முழங்குதல்; to roar.

மறுவ. உரப்புதல், கருச்சித்தல்.

க. கெய். கெயி, கெயு, கெய்யு; பட. தீய்.

கெல்–தல் kel-, *13 செ.கு.வி.* (v.i.) *புறப்படுதல், போதல்*; to go.

Fin. kulkea (go go, to walk); **Est.** kulgeda; **Hung.** kel; **Mong.** yulyu; **Turk.** gelmek (to come); **J.** kuru; **Q.** chullai.

கெல்லு–தல் kellu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கல்லுதல்*; to dig out as a hole. "*கிணறு கெல்ல*" *(தனிப்பா. 2. 140, 356). 2. வயிற்றை அரித்துவிடுதல் (யாழ்ப்.)*; to irritate or corrode and waste the stomach, as excessive stimulus. *3. கிண்டுதல்*; to stir. *4. தோண்டுதல்*; to dig up; to pluck, uproot. *மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதுபோல் (உ.வ.).*

கெல்லுவி–த்தல் kelluvi-, *பி.வி.* (caus.v.) *தோற்றுவித்தல்*; cause to make. "*மல்லாபுரத்தில் புதிதாகக் கெல்லுவித்த இராமானுசன் கால்வாய்க்கும் திருவிடையாட்டம் ஏரி கால்வாய்க்கும்" (திருப். கல். தொ. 2, கல். 134 - 3).*

கெலி[1]–த்தல் keli-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வெல்லுதல்*; to conquer, overcome.

க., து. கெல்; தெ. கெலுசு.

கெலி[2]–த்தல் keli-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஆசை கொள்ளுதல்*; to desire eagerly, feel a craving for. *2. அச்சங்கொள்ளுதல்*; to be struck with terror; to start with fear.

கெழு–தல் keḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அடர்தல், செறிதல், நெருக்கமாதல்*; to become tense, crowded. *2. இறுக்கமாதல்*; to get tightened.

Fin. kirea (tight, tense); kiristaa (to tighten); Kere. kirei; **Est.** kiristada; Mordvin. kirems; **Q.** Qiruy - firuy.

கெழுமு[1]–தல் keḻumu-, *22 செ.கு.வி.* (v.i.) *1. நிறைதல்*; to become full, plenteous, abundant. "*கெழுமி யெங்கணுமாய்க் கிளரொளிச் சடையனை*" *(வள்ள. சத்தியஞான. பதியியல், 9). 2. முதிர்தல்*; to become rip. "*கெழுமுதல் ஈண்டு முற்றுதலை யுணர்த்திற்று*" *(மலைபடு. 114, உரை). 3. முளைத்தல் (அக.நி.). 4. பாலுணர்ச்சி கொள்ளுதல்*; to be affected with lust. "*கிரிகையை நினைந்துடல் கெழுமி*" *(பாரத. குருகு. 104).*

கெழுமு[2]–தல் keḻumu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பொருந்துதல்*; to attain, join, unite. "*தேரோடத் துகள்கெழுமி*" *(பட்டினப். 47). 2. கிட்டுதல்*; to approach. "*ஒன்னாதார் படைகெழுமி*" *(பு.வெ.3:12, கொளு). 3. கற்றல் (திவா.)*; to learn, practise.

கெழுவு–தல் keḻuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பொருந்துதல்*; to unite, to embrace. "*மங்கையைக் கெழுவின யோகினர்*" *(தேவா. 951:5). 2. நிறைதல்*; to be full. "*கெழுவிய காதலையென்றெமதுள்ளம்*" *(தணிகைப்பு.களவு.530). 3. மயங்குதல் (சூடா.)*; to be confused, deluded *(சூடா.). 4. பற்றுக் கொள்ளுதல் (சூடா.)*; to be attached, as the mind to earthly things *(சூடா.).*

கெற்பி–த்தல் keṟpi-, *4 செ.கு.வி.* (v.i.) *கருவுறல்*; getting pregnant.

nf

கேக்களி–த்தல் kēkkaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *கெக்களி பார்க்க*; see *kekkaḷi.*

கேட்கு–தல் kēṭku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஆராய்தல்*; to scrutinise. *2. கேட்டல்*; to listen. *3. தரச் சொல்லுதல்*; order to give. *4. வினாவல்*; to question; enquire.

கேட்பி–த்தல் kēṭpi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *திருப்பதிக முதலியன விண்ணப்பஞ் செய்தல்;* to recite, as before a person. "*நாவ லூரர்தம் முன்பு நன்மை விளங்கக் கேட்பித்தார்*" *(பெரியபு. கழறிற். 69).*

கேது–தல் kēdu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கதறி யழைத்தல் (பிங்.)*; to cry aloud from pain or grief. "*கெடுவதிம் மனிதர் வாழ்க்கை காண்டொறுங் கேது கின்றேன்*" *(தேவா. 702:1).*

கேந்திரி[1]–த்தல் kēndiri-, *4 செ.கு.வி.* (v.i.) *நிற்றல், வட்ட நடுவில் நிற்றல்*; to stand at the centre of the circle.

கேந்திரி[2]–த்தல் kēndiri-, *4 செ.கு.வி.* (v.i.) *கோள் (கிரகம்) கேந்திரம் பெற்று நிற்றல்*; to be in one of the houses in *kēndiram*, as a *kiragam*. "*பொன்னவன் கேந்திரித்த புனிதலக் கினத்தில்*" *(திருவிளை. உக்கிர. 25).*

கேரு–தல் kēru-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கோழி முட்டையிடக் கத்துதல்*; to cluck as hen about to lay egg. *2. குரல் கம்மிப் பேசுதல்*; to speak in a low voice. *3. தொண்டை கட்டுவதனால் வருந்தி மூச்சுவிடுதல்*; to breathe with effort as from phlegm in the throat. *4. திகைத்தல்*; to be bashful diffident, confused *(சா.அக.).*

தெ. பட. கேரு.

கேலிசெய்–தல் kēli-sei-, *1 செ.குன்றாவி.* (v.t.) *பொருளற்ற தாகச் செய்து சிரிப்புக்கு உள்ளாக்குதல்*; to make a travesty, mockery. *உன் நடத்தை சட்டத்தையே கேலி செய்வதாக இருக்கிறது.*

கேவலப்படு[1]–தல் kēvala-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. இளைத்தல்*; emaciating. *2. மெலிதல்*; becoming thin *(சா. அக.).*

கேவலப்படுத்து[2]–தல் kēvala-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *மதிப்புக் குறையுமாறு செய்தல்*; to disgrace, dishonour.

கேவு–தல் kēvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மூச்சுத் திணறல்*; to breath heavily, to breath with difficulty as in whooping cough. *2. செறுமி அழுதல்*; to cry of a child seeking breath. *3. மூச்சுத் திக்காடல்*; to gasp for breath *(சா.அக.).*

ம. கேவுக.

கேள்¹–தல் (கேட்டல்) kēḷ-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. செவிக்குப் புலனாக்குதல்;* to hear, hearken, listen to. "சொல்லுந போலவுங் கேட்குந போலவும்" *(தொல். பொருள. 513). 2. பாடங் கேட்டல்;* to learn, be instructed in. "ஒரு குறி கேட்போன்" *(நன். பொது. 42). 3. வினாதல்;* to ask, inquire, question, catechise. *4. ஆராய்தல்;* to investigate. "களவுபோனமை எங்ஙனே என்று கேட்டு" (Insc.) *(சோழவ.66). 5. வேண்டுதல்;* to request, solicit, crave. *படிக்கப் புத்தகம் தருமாறு கேட்டான் (உ.வ.). 6. கேள்விப்படுதல்;* to be informed of. "தருதி நீயெனக் கேட்டேன்" *(பாரத. கன்ன. 238). 7. உரிமை கொண்டாடிக் கொடுக்கச் சொல்லுதல்;* to require, demand, claim. *8. தண்டித்தல்;* to avenge, punish. "தீயரைத் தெய்வங் கேட்கும்" *(உ.வ.). 9. நோய் முதலியன நீக்குதல்;* to effect a remedy, cure, as medicine. "செயச்செயவூறுகேளாது..... அரவுகான்ற வேகம் மிக்கிட்ட தன்றே" *(சீவக.127). 10. விலை கேட்டல்;* to bid, offer, inquire the price of. *11. ஏற்றுக் கொள்ளுதல்;* to accept, agree to. "கேட்டார்ப் பிணிக்கு தகையவாய்" *(குறள். 643). 12. பொறுத்தல்;* to tolerate, brook. "கேளா ராயர் குலத்தவ ரிப்பழி" *(திவ். பெரியாழ். 3, 1:8).*

ம. கோள்க்குக; க., குட., கோத., துட. கோள்; து. கேணுனி; பட. கே; கொலா. கெல்.

kēḷ. to hear, comp; **Latin.** aus-cul-to, to hear, to listen; also the grukklu-ō, to hear; Welsh clyw, hearing; **Irish.** clus as, to ear; Lithuanian klau, to hear; Latin clu-o, to be called (C.G.D.F.L. 593).

கேள்²–தல் kēḷ-, *12 செ.கு.வி.* (v.i.) *1. தணிதல்;* to come under the control of; to be cured. *வாதநோய் அந்த மருந்துக்குக் கேட்கும் (உ.வ.). 2. கீழ்ப்படிதல்;* to obey, be submissive, docile. *பொல்லாத மனங் கேளாது (உ.வ.). 3. ஒலி எட்டுதல்;* to be heard, as a call; to reach, as a sound. *குண்டு போட்டால் இங்கே கேட்கும் (உ.வ.). 4. செவிப்புலன் உணர்வைப் பெறுதல்;* to have perception by the ear. *அவனுக்குக் காது கேட்கும். 5. அனுமதி பெறுதல்;* to get permission. "கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி" *(நாலடி. 30).*

Irish. cluas. **Fin.** kerjata; **Est.** kerjata; **Komi.** korui; **Hung.** ker; **Mung.** gori.

கேள்விப்படு–தல் kēḷvi-p-paḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *பிறர் வாய் மூலமாகச் செய்தி தெரிந்து கொள்ளுதல்;* to learn through others, to learn by hearsay.

கேள்வியா–தல் kēḷvi-y-ā-, *6 செ.கு.வி.* (v.i.) *கேள்வியால் தெரியவருதல்;* to be heard reported, to reach the ears, as news.

if

கை¹–தல் kai-, *1 செ.குன்றாவி.* (v.t.) *செய்தல்;* to do; to work, to act. *கைநேர்த்தி (செய்நேர்த்தி).*

மறுவ. கெய், செய்.

கை²–த்தல் kai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கசத்தல்;* to be bitter, astringent, unpleasant. "தேனும்புளித்தறக் கைத்ததுவே" *(கந்தரலங். 6). 2. உப்புக் கரித்தல்;* to be saltish to the taste. *உப்பு மிகுதியானதல் தெளிசாறு கைக்கிறது (உ.வ.).*

ம. கைக்குக; தெ. காரு; கோத. கய்ள்; பட. கய்.

கை³–த்தல் kai-, *4 செ.கு.வி.* (v.i.) நைந்து வருந்துதல்; to be deeply afflicted. "கைத்தன ளுள்ளம்" *(கம்பரா. மாயாசன. 30).*

கை⁴–த்தல் kai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சினத்தல்;* to dislike; to be angry with; to hate. "மருவலரைக் கைக்கும்" *(தஞ்சைவா. 423). 2. அலைத்தல்;* to vex, trouble, harass, torment.

கை⁵–த்தல் kai-, *11 செ.குன்றாவி.* (v.t.) செலுத்துதல்; to produce, as a sound; to propel, shoot, as an arrow. "சிலம்பிரங்கு மின்குரல் கைத்தெடுத்தலின்" *(சீவக. 2683).*

கை⁶–த்தல் kai-, *11 செ.குன்றாவி.* (v.t.) ஒப்பனை செய்தல்; to adorn, decorate. "மடமொழி யோருங் கைஇ மெல்லிதி னொதுங்கி" *(மதுரைக். 419).*

கைக்குதவு–தல் kaikkudavu-, *5 செ.கு.வி.* (v.i.) ஏற்ற பொழுதிற் பொருள் வகையாலோ வினை வகையாலோ உதவி செய்தல்; to be opportunely useful, to be or timely help.

கைக்குவா–தல் (கைக்கு வருதல்) kaikku-vā-, *18 செ.கு.வி.* (v.i.) *1. கையிற் கிட்டுதல்;* to come to hand. *2. மகன் தந்தைக்கு உதவியாய் வருவதுபோல், பயன் உள்ளதாக இருத்தல், உதவி செய்தல்;* to become useful or afford assistance, as a grown up son to his father.

க. கெய்தெபரு.

கைகர–த்தல் kai-kara-, *3 செ.குன்றாவி.* (v.t.) ஒளித்தல்; to hide, conceal. "சான்றவர் கைகரப்ப" *(பழ.242).*

கைகல–த்தல் kai-kala-, *3 செ.கு.வி.* (v.i.) *1. கூடுதல்;* to unite, join. "ஆசையிற் கைகலந்து" *(திருப்பு.296). 2. நெருங்கிப் பொருதல்;* to engage in a hand - to - hand fight. "மதன் படையுங் கைகலக்குந்தானே" *(தனிப்பா. 1, 326, 24).*

கைகவி–த்தல் kai-kavi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கைக் குறியால் அடக்குதல்;* to check as by gesture. "மற்று அவனைக் கைகவித்து" *(பாரத வெண். 37, உரை). 2. புகலிடம் கொடுத்தல்;* to protect. "அஞ்சே லென்று கைகவியாய்" *(திவ். பெரியாழ். 5, 3:7).*

கைகழி–தல் kai-kaḻi-, *3 செ.கு.வி.* (v.i.) எல்லை கடத்தல்; to go beyond, exceed the bounds, overstep the limits to go beyond the hand, etc., "அப்ராப்தமானதிலே கைகழியப் போய்" *(ஈடு.4,6:8).*

க. கெய்கழி.

கைகழுவு–தல் kai-kaḻuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விட்டு விடுதல்;* to relinquish, abandon. *2. பொறுப்பை நீக்கிக்கொள்ளுதல்;* to avoid one's responsibility.

கைகுவி[1]–த்தல் kai-kuvi-, *4 செ.குன்றாவி.* (v.t.) கை கூப்புதல்; to greet with one's palms joined together in front of the chest.

மறுவ. கைகூப்பு; கைமுகிழ்.

கைகுவி[2]–த்தல் kai-kuvi-, *4 செ.கு.வி.* (v.i.) கொம்மை கொட்டுதல் *(யாழ்.அக.);* to clap hands and dance.

கைகோ–த்தல் kai-kō-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தோளோடு தோள் பின்னுதல்;* to take another's arm, to be arm to arm. *2. கைபிணைதல் (சிலப்.5:70, உரை);* to clasp one another's hands, join hands. *3. நட்புச் செய்தல்;* to make friends with. "வஞ்சகக்காரர்கள் கைகோவாமல் நற்குணத்தார் கைகோத்து நான்றிரிவது" *(தாயு. எந்நாட். அன்பர்நெறி 2). 4. சண்டை பிடித்தல் (உவ.);* to start fighting, to come to blows.

கைகோலு[1]–தல் kai-kōlu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முயலுதல்;* to make effort, to attempt. *2. தொடங்குதல் (இ.வ.);* to make a beginning.

கைகோலு[2]–தல் kai-kōlu-, *5 செ.குன்றாவி.* (v.t.) சூளுரைத்தல், உறுதியேற்றல்; to resolve, determine, to swear. "கைகோலிஞாலமளந்து" *(திவ். இயற்.2.47).*

கைசேர்–தல் kai-šēr-, *2 செ.குன்றாவி.* (v.t.) ஒன்றுசேர்தல்; to join (the hand) *(ஒரு) கை சேர்ந்த பின் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.*

க. கெய்சேரு.

கைசோர்–தல் kai-šōr-, *2 செ.கு.வி.* (v.i.) கை தளர்ந்து விழுதல்; to be loosened from the hand, to fell.

க. கெய்சோல்.

கைதேர்–தல் kai-tēr-, *2 செ.குன்றாவி.* (v.t.) திறமையடைதல்; to become an adept.

கைதொழு–தல் kai-toḻu-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. வணங்குதல்;* to adore, worship as with hands joined. "காதலி தன்னொடு கைதொழு தெடுத்து" *(மணிமே.13:20). 2.* கும்பிடுவதற்காகக் கையைத் தலைமேல் உயர்த்துதல்; to lift up the hands above the head, as in adoration or worship. "கைதொழுஉப் பரவி" *(திருமுருகு.252).*

கைநனை–த்தல் kai-naṉai-, *4 செ.கு.வி.* (v.t.) *1. பிறர் வீட்டில் உணவு கொள்ளுதல்;* to partake of food in another's house. *2. சாவு வீட்டில் உண்ணுதல்;* to lane food in a dead person's house. *துக்க வீட்டில் கை நனைக்காமல் போகலாமா? (நெல்லை.).*

கைநீளு–தல் kai-nīḷu-, *16 செ.கு.வி.* (v.i.) *1. கொடுத்தல்;* to give. "கை நீண்ட தயரதன்" *(கம்பரா.). 2. அடித்தல்;* to beat. *இனிக் கண்டபடி கை நீளுதல் கூடாது. 3. திருடுதல்;* to steal. *எல்லா இடங்களிலும் கை நீண்டதால் அவனது பெயர் கெட்டுப்போனது (உவ.).*

கைப்படு[1]–தல் kai-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) கைவயமாதல்; to fall into one's hands. "ஒள்வாட னொன்னார் கைப்பட்டக்கால்" *(நாலடி.129).*

கைப்படு[2]–தல் kai-p-paḍu-, *17 செ.குன்றாவி.* (v.t.) *1. தொடுதல்;* to touch. *2. பார்த்தல்;* find. "புன்செய் கோல் வளையைக் கைப்படுதி" *(சீவக.1600).*

கைப்படு[3]–தல் kai-p-paḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. கைப்பற்றுதல்;* to seize, take hold of, acquire. "கடல்சூழ் வையங் கைப்படுத்தான்" *(சீவக.1058). 2. தெளிதல்;* to find out, discover. "நின்..... மாயப் பரத்தைமை..... கைப்படுத்தேன்" *(கலித்.98).*

கைப்பற்று–தல் kai-p-paṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. திருமணம் செய்தல்;* to marry. *2. கைவயத்தில் ஒடுக்குதல்;* to restrain with hands. *3. வாங்குதல்;* to purchase. *4. உரிமைப்படுத்திக் கொள்;* to annex. *5. கையிற் கொள்ளுதல்;* to apply the hand, or lay hold of, with vehimence or eagerness. "கைப்பற்றிய விற்கொடு" *(கந்தபு. காம.35). 6. கவர்ந்து கொள்ளுதல்;* to seize eagerly or by force.

ம. கைற்றுக; க. கெய்துடுகு; து. கைபட்டு.

Fin. kaapala (to capture); **Est.** taabala, **Hung.** kap. **Mong.** xabuci, **Q.** hapi.

கைப்பிடி–த்தல் kai-p-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உறுதியாகப் பிடித்தல்;* to seize with hand, grasp, firmly. "இம்முறை கைப்பிடித்தல்" *(தணிகைப்பு. அகத். 415). 2. மணம் புரிதல்;* to marry. "கண்ணாலங் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்" *(திவ். நாய்ச். 11:9).*

கைபடி–தல் kai-paḍi-, *4 செ.கு.வி.* (v.i.) தொழிலிற் கை திருந்துதல்; to acquire ease and skill in manual art and craft. "கைபடியத் திருமகளைப் படைத்திவளைப் படைத்தனன்" *(தனிப்பா. 1,147:47).*

கைபதறு–தல் kai-padaṟu-, *8 செ.கு.வி.* (v.i.) பதற்றப்படுதல்; to be in a hurry. "காரிய வசத்தினர்கள் கைபதறல் செய்யார்" *(பிரபோத. 5:24).*

கைபரி–தல் kai-pari-, *4 செ.கு.வி.* (v.i.) ஒழுங்கு குலைதல்; to fall into disorder. "கார்மழை முன்பிற் கைபரிந்து" *(பதிற்றுப்.83:1).*

கைபார்[1]–த்தல் kai-pār-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கைந்நாடி பார்த்தல்;* to feel the pulse of. *2. கைவரை (இரேகை) பார்த்தல்;* to read the line of the palm. *3. உதவி நாடுதல்;* to seek the help of. *ஏழைகள் செல்வரின் கைபார்த்து வாழ வேண்டியிருக்கிறது (உவ.).*

கைபார்²–த்தல் kai-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பழுது பார்த்தல் (யாழ்ப்.);* to make repairs. *2. வணிகச் சரக்குகளைச் சரிபார்த்தல்;* to examine goods, as a trader. *3. பொருள்களைத் தரம் பிரித்தல்;* to divide according to quality or standard.

கைபிசை–தல் kai-pišai-, *4 செ.கு.வி.* (v.i.) *செய்வதறியாது திகைத்தல்;* lit., to wring the hands, to be in a fix, to be in deep affliction.

கைபிடி¹–த்தல் kai-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கைக் கொள்ளுதல்;* to take on hand, entertain, cherish. "கைபிடித்து விடுதற் குரியதோ" *(அரிச்சந். நகர்நீ.123).*

க. கெய்விடி, கெய்பிடி.

கைபிடி²–த்தல் kai-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மணம் செய்தல்;* to marry. *கைபிடித்த நாள் முதலாய் அவளைக் கண் கலங்காமல் காத்து வருகிறேன் (உ.வ.).*

கைபுடை–த்தல் kai-p-puḍai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கை தட்டுதல்;* to strike one's hand on. "காணுநர் கைபுடைத் திரங்க" *(பதிற்றுப்.19).*

கைபோடு–தல் kai-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. கை வைத்தல்;* to put or apply the hand. *2. கை கொடுத்து உறுதி தருதல் (இ.வ.);* to confirm a promise by offering the hand. *3. தொழிலேற்கத் தொடங்குதல்;* to undertake a business. "வேலையில் இன்னுங் கைபோடவில்லை" *(வின்.). 4. பிறரறியாமல் கைகளைத் துணியால் மறைத்துக் கொண்டு கைக்குறிப்பால் விலை பேசுதல் (உ.வ.);* to consult secretly about the price of a thing by making signs with hands under cover. *4. காமவெறியோடு தொடுதல் (இ.வ.);* to commit indecent assult on a woman.

க. கெய்காகு.

கைம்மறி–த்தல் kai-m-maṟi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கையால் தடுத்தல்;* to check or resist with the forearm. *2. கைகவித்து விலக்குதல்;* to wave the open hand as a sign of disapproval. "கைம்மறித்த காந்த ளந்தோ தகாதெனவே" *(சீவக.1227).*

கைம்மிகு–தல் kai-m-migu-, *21 செ.கு.வி.* (v.i.) *1. அன்பு, துன்பம், நோய் போன்றவை அளவு கடத்தல்;* to exceed the limit, to be beyond sufferance, as love sorrow, disease. "காப்புக் கைம்மிகுதல்" *(தொல். பொருள். 214). 2. இனக் கட்டுப்பாட்டிற்கு மாறுபட்டு ஒழுகுதல்;* to violate the caste rules. "கைம்மிக னிதல்" *(தொல். பொருள். 260).*

கைமாற்று¹–தல் kai-māṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஆளை வேலையினின்று முறைமாற்றுதல் (வின்.);* to relieve, as persons in work, by relays. *2. பண்டமாற்றுச் செய்தல்;* to barter, exchange. *3. விற்றல் (இ.வ.);* to sell, dispose of.

கைமாறு²–தல் kai-māṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒருவர் கையினின்றும் மற்றொருவர் கைக்குச் செல்லுதல்;* to change hands, as a thing when sold. *இந்த வீடு எத்தனை கைமாறியிருக்கிறது என்கிறீர்கள். 2. வேலையாள்கள் முறை மாறுதல்;* to be relieved in work, as by relays. *3. ஒழுக்கத்தைக் கைவிடுதல்;* to change one's conduct. "கடிதகன்று கைமாறி" *(கலித்.65). 4. கட்சி மாறுதல்;* to change sides, leave one party and join other.

ம. கைமறியுக, கைமாறுக.

கைமிகு–தல் kai-migu-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அளவு கடத்தல்;* to go beyond. *2. மிகுதியாதல்;* to become exessive. *3. தடுக்க முடியாததாதல்;* to become uncontrollable.

க. கெய்மிகு.

கைமிஞ்சு¹–தல் kai-miñju-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வரம்பு மீறுதல்;* to overstep or transgress the limits, to go beyond bounds. "போனா ளெனைவிட்டுக் கைமிஞ்சியே" *(தனிப்பா. 2.138:351). 2. பிறரோடு சண்டை செய்ய முற்படுதல்;* to be disposed to fight; to be aggressive.

க. கெய்மிஞ்சு.

கைமிஞ்சு²–தல் kai-minju-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நோய் கட்டுப்படாமை;* turning of disease beyond cure. *2. அடித்தல்;* striking. *3. அளவுக்குமேல் சேர்த்தல்;* adding beyond the normal quantity as salt, tamarind or chilli to a sauce *(சா.அக.).*

கையகப்படு¹–தல் kai-y-agappaḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *வயப்படுதல்;* to come under one's control. "மாநிலங் கையகப் படுவது பொய்யா காதே" *(புறநா. 58).*

கையகப்படு²–த்தல் kai-y-agappaḍu-, *20 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒப்புக் கொடுத்தல்; சிக்கப் பண்ணுதல்;* to entangle. *2. பிடித்தல்;* to hold, control. *3. கைக்குட்சேருதல்;* to hold within hands.

கையகப்படுத்து–தல் kai-y-agappaḍuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தன்வயப்படுத்துதல்;* to get possession of, to inveigle, entice. *2. காட்டிக் கொடுத்தல்;* to betray *(செ.அக.). 3. சிக்க வைத்தல்;* to entangle *(கழ.தமி.அக.).*

கையகல்(லு)–தல் kai-y-agal(lū)-, *7 செ.கு.வி.* (v.i.) *விட்டு நீங்குதல்;* to separate from, depart from.

கையடி¹–த்தல் kai-y-aḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. விலைக்கு விற்றல்;* to sell. *என் வண்டியை எப்படியாவது கையடிக்கப் பார்க்கிறேன் (உ.வ.).*

கையடி²–த்தல் kai-y-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கை தட்டிப் பறித்தல், ஏமாற்றுதல்;* to deceive, to cheat. *2. கைபோடு-தல் பார்க்க;* see kai-pōḍu. *3. கைவேலை செய்தல்;* to work with the hand, to do manual labour.

கையடி³–த்தல் kai-y-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *ஒப்புறுதி அளித்தலைக் காட்டும் வகையில் மற்றவரின் உள்ளங்கையில் அடித்தல்;* to manifest approbation by

striking the palm of another's hand, to agree, to assent *(வழ.சொ. அக.).* உறுதி சொல்வார். தலையில் கைவைத்தல், துணிமேல் கைவைத்தல், புத்தகத்தின் மேல் கைவைத்தல், தாங்கள் மதிக்கும் பொருள்மேல் கைவைத்தல் எனப் பல வகையால் சொல்வதுண்டு. "அவ்வாறே கையடித்தலும் வந்ததாம்" என்ற பரிபாடல் வரிசையும் இங்கு ஒப்புநோக்கலாம்.

க. கெய்வொய், கெய்பொய்.

கையமர்–த்தல் kai-y-amar-, *3* செ.கு.வி. (v.i.) அமர்ந்திருக்கக் குறிப்புக் காட்டல்; to give a sign, to remain peaceful hint to sit, by hands.

கையமர்த்து–தல் kai-y-amarttu-, *3* செ.குன்றாவி. (v.t.) *1.* கையாற் குறிப்புக் காட்டி ஒலியடங்கச் செய்தல்; to silence, as an audience, by a show of hand. *2.* கையால் குறிப்புக்காட்டி அவையோரை அமரச் செய்தல்; to be seated. *3.* அடக்கி ஆளுதல்; to keep under proper control, as children. சிறு பிள்ளைகளைக் கையமர்த்திக்கொண்டு போவது எளிதான செயலன்று *(இ.வ.).* *4.* ஒப்பாரியில் அழுகையை நிறுத்தச் செய்தல்; to stop weeping in lamentation. நீண்ட நேரமாக அழுபவளைக் கையமர்த்து *(உ.வ.).*

கையயர்–தல் kai-y-ayar-, *2* செ.கு.வி. (v.i.) *1.* சோர்வடைதல்; to get tired. *2.* நிலைமை தாழ்தல்; to be reduced in circumstances.

கையறி–தல் kai-y-aṟi-, *2* செ.கு.வி. (v.i.) *1.* பழக்கமாதல்; to become trained or adept. *2.* செய்யுமுறைமை அறிதல்; to know how to do things; to be discreet and knowing. "கையறியாப் பேதை" *(குறள்.836).*

மறுவ. கையறல்.

கையறு–தல் kai-y-aṟu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* செயலற்றுப் போதல்; to be laid prostrate, be overcome, as with pity. "காணா வுயிர்க்குங் கையற்றேங்கி" *(மணிமே. 3:89).* *2.* மானமழிதல்; to be broken hearted. "கையற் றின்ன வெய்தலும்" *(ஞானா. 31:22).* *3.* அளவு கடத்தல்; to exceed limits. "காப்பின் கடுமை கையற வரினும்" *(தொல். பொருள். 114).* *4.* மீட்சி அரிதாதல்; to be irremediable, overwhelming. "கையறு துன்பங் காட்டினுங் காட்டும்" *(சிலப். 10:71).* *5.* இறத்தல்; to die. "காதி மலைந்தே கையற்றார்" *(பாரத. பதினாறாம். 2).* *6.* ஒழுக்கம் நீங்குதல்; to become immoral.

கையாலா–தல் kaiyāl-ā-, *6* செ.கு.வி. (v.i.) செய்யும் ஆற்றல் பெறுதல்; to be able to work or accomplish *(செ.அக.).* உன் கையால் ஆகுமா? *(உ.வ.).*

க. கெய்லாகு.

கையாளி–த்தல் kai-y-āḷi-, *4* செ.குன்றாவி. (v.t.) ஒப்படைத்தல்; to hand over, as charge or possession. "கிராமத்தார் வசம் கையாளிக்கையில்" (T.A.S.V : 150).

கையாளு–தல் kai-y-āḷu-, *16* செ.கு.வி. (v.i.) எடுத்துப் பயன்கொள்ளல்; to adopt, use, handle.

கையிடு–தல் kai-y-iḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* கையைத் தோய்த்தல்; to dip one's hands. "நெய்யிலே கையிட வல்லாரார்" *(ஈடு.6,1:5).* *2.* காரியத்திற் புகல்; to undertake, engage in. *3.* ஒரு தொழிலில் வேண்டாது தலையிடுதல்; to meddle, interfere officiously. *4.* நேர்ப்படுதல்; to put in order.

கையிளகு–தல் kai-y-iḷagu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* கைப்பிடிப்பு நெகிழ்தல்; to become slack in handgrip. *2.* தாராள மாதல்; to be liberal, bountiful. *3.* கொடுக்க உடன்படுதல்; to agree to give.

கையுறு[1]–தல் kai-y-uṟu-, *20* செ.கு.வி. (v.i.) கைவயமாகக் கிடைத்தல்; to come to hand, to be received, to attain. "வானகம் கையுறினும்" *(நாலடி. 300).*

கையுறு[2]–தல் kai-y-uṟu-, *20* செ.குன்றாவி. (v.t.) தீண்டுதல்; to approach, have intercourse with. "பூப்பு மகளிர் கையுறாப் பொருட்டே" *(திவா. பண்பு பற்றிய.).*

கையுறு[3]–தல் kai-y-uṟu-, *20* செ.குன்றாவி. (v.t.) *1.* கைக் கொள்ளுதல்; to hold. *2.* பகுத்தல்; to divide. "நீங்கலாக நின்ற பல மரங்களோடும் ஆடுபடுத்தும் பிடிலிகை வாரி அரைக்கால் பொன்னுக்குக் கீழ்ப்பட்ட பொன்னும் இக் கோயில் சிவப் பிராமணர்கள் கையுற்று தாங்கள் அநுபவித்து" *(தெ. கல். தொ. 7, கல்.801).*

கைவா[1]–தல் (கைவருதல்) kai-vā-, *18* செ.கு.வி. (v.i.) *1.* தேர்ச்சி பெறுதல்; to become proficient, expert. "வேத தாற்பரியங் கைவந்திருக்கு மவர்கள்" *(ஈடு.10, 1:2).* *2.* ஒருங்கே நிகழ்தல்; to happen together. "காட்டிய பத்துங் கைவரு மெனினே" *(நம்பியகப். 36).* *3.* கைகூடுதல்; to be succesful, attained. "இந்தப் பாவனை கைவாரா தாகில்" *(சி.சி.8:34, மறைஞா.) (செ.அக.).*

கைவா[2]–தல் (கைவருதல்) kai-vā-, *18* செ.கு.வி. (v.i.) ஒன்றைச் செய்யக் கையெழுதல்; to be disposed to do a thing. அடிக்கக் கைவர வில்லை *(உ.வ.).*

கைவா[3]–தல் (வருதல்) kaivā(varu-), *18* செ.கு.வி. (v.t.) செய்ந்நேர்த்தியாதல்; to be accomplished. பாவாணருக்குச் சொல்லாய்வு கைவந்த கலையாயிற்றே *(உ.வ.).*

கைவிடு[1]–தல் kai-viḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) *1.* பிடி தளர்தல்; to let loose (one's own or another's) hand. *2.* விட்டொழிதல்; to forsake, abandon, desert, as dependents; to shun, eschew, as passions. "பெரியோர் கண்டு கைவிட்ட மயல்" *(நாலடி.43). (செ.அக.).* *3.* தள்ளிப் போடுதல்; to postpone.

ம. கைவிடுக; *க.* கைபிடு. கெய்பிடு; *தெ.* செய்விடுக; *பட.* கைபுடு.

கைவிடு[2]–தல் kai-viḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) கொப்புவிடுதல்; branch out.

கைவிரி–த்தல் kai-viri-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* இரத்தற்

பொருட்டுக் கையை நீட்டுதல்; to stretch out the hands in begging. "கைவிரித் தெவரளித் தாலும் நன்றென வேற்ற வளநிதி" (பிரமோத். 6:54). 2. தன்னால் இயலாமை குறிப்பித்தல்; to indicate one's inability, disappointment (செ.அக.).

க. கெய்யொட்டு.

கைவை¹–த்தல் kai-vai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கற்பழித்தல்; to rape (சா.அக.). 2. ஏற்படுதல்; to happening. 3. தொடுதல்; to feel by touch. 4. அடித்தல்; to beat, bela bour.

கைவை²–த்தல் kai-vai-, 4 செ.கு.வி. (v.i.) 1. கையால் தொட்டுச் செய்தல்; to touch, handle, deal with. 2. உட்புகுதல்; to enter, as on a disquisition. "பகவத் விஷயத்திற் கைவைத்தார்" (ஈடு.6:2, பிர.). 3. திருடுதல் (கொ.வ.); to steal, embezzle. 4. கை வைத்து, குரு தூய்மையாக்குதல்; to consecrate by laying hands on (Chr.).

ம. கைவய்க்குக; க. கெய்யிக்கு; பட. கையிக்கு.

bfh

கொக்கரி¹–த்தல் kokkari-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஆரவாரித்தல்; to shout in triumph, to vaunt. "கொக்கரித் தலகை சுற்ற" (கலிங்.150). 2. கோழி முதலியன கூவுதல்; to cluck, as hen; to cackle, as goose; to chuckle as crow. "எருவை கூடிக் கொக்கரித்திட" (இரகு. மீட்சிப். 47).

கொசுவு–தல் košuvu-, 12 செ.குன்றாவி. (v.t.) ஆடையைக் கொய்து அடுக்கிச் செருகுதல் (கொ.வ.); to plait, gather into folds by using finger, as the end of a cloth when wearing. எப்படிக் கொசுவ வேண்டுமென்று சொல்லித் தாருங்கள் (உ.வ.).

கொஞ்சு–தல் koñju-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மழலை பேசுதல்; to lisp, to prattle, as children. "கொஞ்சிய வுன்சொற் கேட்டு" (உத்தரரா. சம்புவ.21). 2. இன்பமாகப் பேசுதல்; to talk softly or amorously, as young women. 3. செல்லங் கொஞ்சுதல்; to fondle, caress. 4. முத்தமிடுதல் (யாழ்ப்.); to kiss. 5. இனிதாய் ஒலித்தல்; to sound sweetly. "செம்மணி வெயில்வரு சிலம்பு கொஞ்சவே" (பாரத. அருச்சுனன்றவ.148).

ம. கொஞ்சுக; க. கொச்சு; து. கொச்சுனி.

கொட்டு¹–தல் koṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மத்தளங் கொட்டுதல்; to beat, as a drum, a tambourine. "மத்தளங் கொட்ட" (திவ். நாய்ச். 6:6). 2. கம்மியர் சம்மட்டியால் அடித்தல்; striking with hammer as black smiths. "கொட்டுவினைக் கொட்டிலும்" (பெருங். மகத. 4:16). 3. கையால் தட்டுதல்; to clap, strike with the palms. "கொட்டி னான்றோள்" (கம்பரா. சம்புமா.18). 4. பஞ்சரைத்தல்; to card out, as cotton. "கொட்டிய பஞ்சுபோல்" (இராமநா.அயோத்.5).5.நெற்குத்துதல்; to pound as paddy. "கொட்டி வீழுமி குத்தல்" (பிரபுலிங். சித்தரா. 9). 6. அடித்தல்; to strike, beat. 7. தேள், குளவி முதலியன கொட்டுதல்; to sting, as a scorpion, a wasp. "கருங்குளவி கொட்டும்" (அரிச். பு. நகர்நீங். 41). "திருடனைத் தேள் கொட்டினது போல" (பழ.). 8. சொரிதல்; to pour forth, shower down, shed. 9. கூடை, சாக்கு முதலியவற்றினின்றும், பண்டங்களைக் கவிழ்த்தல் ; to cast out or empty the contents of a basket or sack as grain, sand. 10. பொருள்களைக் கலத்தில் ஒருசேர இடுதல்; to throw or cast into a vessel. 11. அப்புதல்; to besmear, as sandal or other fragrant paste. "பூங்கேழ்த் தேய்வை..... இளமுலை கொட்டி" (திருமுருகு. 35). 12. விழுதல்; fall off. 13. குவித்தல்; pile up. 14. இமைத்தல்; bat. கொட்டாது பார்க்கிறான்.

ம. கொட்டுக; க. கொட்டண (உமியைத் தட்டுதல்); தெ. கொட்டு; து. கொடபுணி; கோத. கொட்க; துட. க்விட்க; கோண். கொட்ட; பர். கொட்ட; குரு. கொட்னா; மா. க்வொடெ; குட. கொட்ட.

கொட்டு²–தல் koṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அறைந்து கொள்ளுதல்; to beat, as upon the breast. "கைகளான் முறைமேற் கொட்டி" (கம்பரா. இராவணன்சோக. 44). 2. பல்லிசொல்லுதல்; to chirp, as a lizard. "கொட்டாய் பல்லிக்குட்டி" (திவ். பெரியதி. 10, 10:4). 3. உதிர்தல்; to drop, as leaves; to fall of, as hair. மயிரெல்லாம் கொட்டிப் போயிற்று (இ.வ.).

கொடியேற்று–தல் koḍi-y-ēṟṟu-, 5 செ.கு.வி. (v.i.) திருவிழாத் தொடக்கத்தில் கொடியை உயர்த்துதல்; to hoist a flag in a temple indicating the begining of a periodical festival. "திருக்கொடி யேற்று நான்று" (S.I.I.II, 125).

ம. கொடியேற்றுக.

கொடு–த்தல் koḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஈதல்; to give, grant, supply. "கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க்கு" (குறள்.1005). 2. பெற்றெடுத்தல்; to bring forth. "பார்வதி யேழுலகுங் கொடுத்தாள்" (பிரமோத். 9:61). 3. பங்கிடுதல்; to divide, distribute, as a sum of money. இந்தத் தொகையைப் பத்துப்பேருக்குக் கொடு (இ.வ.). 4. விற்றல்; to sell. "தில்லைமுன்றிற் கொடுக்கோ வளை" (திருக்கோ.63). 5. உடன்படுதல்; to allow, permit. "மலரன்றி மிதிப்பக் கொடான்" (திருக்கோ. 303). 6. சாகக் கொடுத்தல்; to lose by death, as giving to *Yama*. "நீபயந்த கோட்டானைத் தானே கொடு" (தனிப்பா. 1, 35:68). 7. திட்டுதல்; to abuse roundly. நன்றாய்க் கொடுத்தாளா? வேணும், வேணும் (இ.வ.). 8. அடித்தல்; to belabour, thrash. 9. பறிகொடுத்தல்; losing by death. 10. மருந்து கொடுத்தல்; administering or giving internally as medicine. 11. கொடுத்தல்; (in alchemy) nourishing a metal in fusion with cross - powders (சா.அக.).

கொடுக்கு¹–தல் koḍukku-, 18 செ.கு.வி. (v.i.) கொடு-த்தல் பார்க்க; see koḍu-.

கொடுக்கு²–தல் koḍukku-, 5 செ.கு.வி. (v.i.)

நடுக்குதல் (இ.வ.); to cause one to shudder.

கொடுகு[1]–தல் koḍugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. குளிரால் நடுங்குதல் (இ.வ.);* to shrink or shiver with cold. *2. பற்கூசுதல்;* to have the teeth set on edge *(மு.தா.84). பற்கொடுகுதல் அதிகமாயிருக்கிறது (உ.வ.).*

ம. கோடுக

கொடுகு[2]–தல் koḍugu-, *10 செ.கு.வி.* (v.i.) கொடுமையாதல்; to be cruel, ruthless. "கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்" *(தேவா.918:1).*

கொடுத்துவை[1]–த்தல் koḍuttu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நம்பிக்கையாய் ஒருவரிடம் பொருளை வைத்தல்;* to entrust or charge with. *2. எதிர்பாராத வாய்ப்புப் பெறுதல்;* to get unexpected chance. குபேரன் பட்டணம் கொள்ளையானாலும் கொடுத்து வைக்காதவனுக்கு ஏதுமில்லை *(பழ.).*

கொடுத்துவை[2]–த்தல் koḍuttu-vai-, *4 செ.கு.வி.* (v.i.) முற்பயனால் உதவுதல்; to be lucky. உன்னைத் திருமணம் செய்து கொளள் அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

கொண்டடை–தல் koṇḍaḍai-, *2 செ.குன்றாவி.* (v.t.) பகுதி பகுதியாகக் கூரைவேய்தல்; to cover the sloping roof (with ōlās) in part by part *(கட்.தொ.).*

கொண்டாடு–தல் koṇḍaḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கூடிக் குலவுதல்;* to enjoy a person's society. *2. பாராட்டுதல் (இ.வ.);* to praise. "கொண்டாடுதல் புரியாவரு தக்கன்" *(தேவா.908:9). 3. விழா முதலியன கொண்டாடுதல்;* celebrating a festival. *4. பலர் அறியும்படி தெரிவித்தல்;* claim. சொத்துக்கு உரிமை கொண்டாட வந்துவிட்டான் *(உ.வ.).*

ம. கொண்டாடுக; க., தெ., து. கொண்டாடு; துட. கொண்டார்.

கொணக்கு–தல் koṇakku-, *5 செ.கு.வி.* (v.i.) கெடுத்தல்; to spoil. இந்தக் கலியாணத்திலே தேவையில்லாம கொணக்கிட்டாளே *(நெல்லை.).*

கொணகொண–த்தல் koṇa-koṇa-, *4 செ.கு.வி.* (v.i.) மூக்கின் வழியாய்ப் பேசல்; the nasal quality of voice *(சா.அக.).*

கொணங்கு–தல் koṇaṅgu, *5 செ.கு.வி.* (v.i.) சரியில்லாமல் போதல்; to get disordered. இயந்திரம் கொணங்கிப் போச்சு *(நெல்லை.).*

கொத்தரி–த்தல் kottari-, *4 செ.குன்றாவி.* (v.t.) கொத்திடுதல்; to chisel, pick. இதைக் கொத்தரித்து விடு *(உ.வ.).*

கொத்தள–த்தல் kottaḷa-, *2 செ.கு.வி.* (v.i.) கூலியாகத் தவசங் கொடுத்தல்; to pay wages in kind, as to an artisan. "கூலி வேலை செய்தால் கொத்தளக்குமாறு போல" *(சி.சி.2:21. மறைஞா.).*

கொத்து–தல் kottu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நிலத்தைக் கிண்டுதல்;* to grub up, hoe. *2. அலகால் குத்தியெடுத்தல்;* to peck, as a bird. "கழுகு கொத்திடக் களத்திடைக் கவிழ்ந்தனர்" *(காசிக. தக்கன்வேள்வியை. 48). 3. குத்திக் கடித்தல்;* to bite, as a snake. *4. வெட்டுதல்;* to chop, hack, mince. கொல்லிமலைப் பக்கங்களில் பலாக்காய் கொத்துகிறார்கள். *5. எழுத்து முதலியன செதுக்குதல்;* to carve, engrave. *6. பிளத்தல்;* split. விறகு கொத்த ஆள் கிடைக்கவில்லை *(கிரி.) (வே.க.178). 7. அம்மி, உரல் முதலியவற்றில் கொத்துதல், உளியால் கொத்துதல்;* to chisel, to chop.

ம. கொத்துக; க. கொத்து; தெ. குச்சு; குட. கொத்த; துட. க்விந்த்க்; கோத. கொத்ய்.

Bāli. n-getep, nu-get. **ME.** cutten, kutten; **Swed.** kuta, kota; **Ice.** kuta.

கொதி–த்தல் kodi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நீர் முதலியன காய்ந்து பொங்குதல்;* to boil, bubble up from heat, effervesce. "குண்டிகை யிருந்த நீரங்..... கொதித்த தன்றே" *(கம்பரா. வருணனை. 61). 2. சூடுடையதாதல்;* to be heated, as the body, ground, etc. உடம்பு கொதிக்கிறது *(உ.வ.). 3. சினத்தல் (பிங்.);* to be infuriated, enraged, to burn with indignation. *4. வருத்தமுறுதல்;* to be offended; to be distressed; to be moved with pity. அவன் செய்த தீங்கால் என் நெஞ்சு கொதிக்கிறது. *5. ஆசை மிகக் கொள்ளுதல்;* to burn with desire, hanker after. அவன் உன்னைப் பார்க்கக் கொதிக்கிறான் *(இ.வ.). 6. வயிறு நழுக்குதல்;* to have slight diarrhoea.

ம. கொதிக்குக; க., பட. குதி; து. குதி, கொதி.

கொதிப்பி[1]–த்தல் kodippi-, *18 செ.குன்றாவி.* (v.t.) சுடச் செய்தல்; to be boiled.

கொதிப்பி[2]–த்தல் kodippi-, *4 செ.கு.வி.* (v.i.) சிற்றுணா உண்ணுதல்; to take small refreshment.

கொந்து[1]–தல் kondu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொத்துதல்;* to peck, pick, mince. *2. பழம் முதலியவற்றை அலகாற் குதறுதல்;* to injure fruits by pecking, gnawing. *3. அச்சுறுத்தல்;* to threaten, intimidate, terrify. "கொந்தி யிரும்பிற் பிணிப்பர் கயத்தை" *(நான்மணி. 12). 4. குத்துதல்;* to gore, pierce. "கொந்தியயி லலகம்பால்" *பெரியபு. கண்ணப்.145).*

கொந்து[2]–தல் kondu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒற்றைக் காலாற் குதித்தல்;* to hop, as in a game. *2. மிகு தூய்மையும் ஒழுக்கமும் காட்டிக் கொள்ளுதல்;* to pretend to be very orthodox.

கொந்து[3]–தல் kondu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. எரிதல்;* to burn, to be in flames. "கொந்தழல்" *(சீவக. 1499). 2. சினம் மூளுதல் (பிங்.);* to be enraged, furious, to be inflamed with anger. "இந்தனக்

குழுவைக் கொந்தழ லடூஉம்" (ஞானா. 63 : 11).

கொந்து⁴–தல் kondu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மகளிர் ஆட்டத்தில் மேலெறிந்த காய் விழுவதற்குள் தரையிலுள்ள காய்களை எடுத்தல்; to pick up shells, etc., from the floor before a thrown - up shell comes down, as in game played by girls. அவள் புளிய விதையைக் கொந்தி விளையாடுகிறாள் (கொ.வ.). 2. கொடியிலிருக்கும் ஆடையைக் கோல்கொண்டு எடுத்தல்; to remove a cloth from the clothe's line with stick.

கொப்பளி–த்தல் koppaḷi-, 4 செ.குன்றாவி. & செ.கு.வி. (v.t. & v.i.) கொப்புளி-த்தல் பார்க்க; see koppuḷi-. "புறத்திற் கழுவிக்கை கொப்பளிக்க" (சைவச. பொது. 314). குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீர் (பழ.).

கொப்புளி¹–த்தல் koppuḷi-, 4 செ.கு.வி. (v.i.) 1. கொப்புளங் கொள்ளுதல்; to blister. "எடுத்தடி கொப்புளிக்க" (தனிப்பா. 1;146:44). 2. நீர் முதலியவை குமிழியிட்டு வெளிவருதல்; to rise in bubbles, as water. 3. வாய் குமிழ்த்தல்; to puff out the cheeks and blow. "செய்யவாய் கொப்புளிப்ப" (திவ். பெரியாழ்.3, 6:8).

கொப்புளி²–த்தல் koppuḷi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நீர் முதலியவற்றால் வாயை அலசி உமிழ்தல்; to gargle, rinse. 2. நீர் முதலியவற்றை வெளிவிடுதல்; to discharge in jets. "குருதிகொப் புளிக்கும் வேலான்" (சீவக.1889).

கொம்படி–த்தல் kombaḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. கொம்பால் முட்டிப் பொருதல் (யாழ்.அக.); to fight with horns, as oxen, buffaloes, rams, goats etc. 2. மேலாண்மை செலுத்துதல்; to impose one's authority.

கொம்பு¹–தல் kombu-, 5 செ.கு.வி. (v.i.) முயலுதல் (யாழ். அக.); to try.

கொம்பு²–தல் kombu-, 5 செ.கு.வி. (v.i.) சினத்தல்; to get angry. "ஈசன்மேற் கொம்பி" (பஞ்ச. திருமுக. 107).

கொமட்டு–தல் komaṭṭu-, 6 செ.கு.வி. (n.) ஓங்கரித்தல்; to vomit.

கொய்–தல் koy-, 1 செ.குன்றாவி. (v.t.) 1. பறித்தல்; to pluck, cull, as flowers. "பனிமலர் கொய்தும் பாவை புனைந்தும்" (பெருங்க. இலாவாண. 19:161). 2. அறுத்தல்; to cut, reap. "சிறுதினை கொய்ய" (மதுரைக். 271). 3. கத்தரித்தல்; to shear, crop, as hair; to trim, as plants, to snip off. "கொய்தார் மன்னவன்" (பு.வெ.3:3. கொளூ.). 4. தெரிந்தெடுத்தல்; to choose, select. "பொருந்துவதொன் றெமக்குக் கொய்துரை" (கோயிற்பு.பதஞ்.54). 5. சீலை கொய்தல்; to plait, gather into folds, as ends of a cloth. "கோடிப் பூந்துகில் கொய்து" (பெருங். இலாவாண. 5:165). 6. சிலிர்த்தல்; to bristle, as manes of a horse. "கொய்சுவற் புரவி" (மலைபடு. 572). 7. கவர்ந்து கொள்ளுதல் (ஈடு.1, 4:7); to take away.

கொல்¹(லு)–தல் kol(l)u-, 3 செ.கு.வி. (v.i.) 1. அலட்டல்; to tease, importune, annoy, perplex. 2. அழித்தல்; to destroy, exterminate, annihilate (இரு.நூ.).

கொல்²(லு)–தல் kol(lu)-, 8 செ.குன்றாவி. (v.t.) 1. உயிரைப் பறித்தல்; to kill, slay, murder. "கொன்றன்ன வின்னா செயினும்" (குறள்.109). 2. அழித்தல்; to destroy, ruin. "கொன்றான்காண் புரமூன்றும்" (திருவாச.12:16). 3. பாழாக்குதல்; to fell, cut down. "மரங்கொஃ றச்சர்" (சிலப். 5:29). 4. கதிரறுத்தல்; to reap, as the heads of grain. "நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்து" (தொல். பொருள். 76, உரை). 5. துன்பப்படுத்துதல்; to afflict, tease. "நின்னலங் காட்டி யெம்மைக்கொன் றாயென" (சீவக. 642). 6. இதளியம் (பாதரசம்) முதலியவற்றின் நச்சுத் தன்மையைக் கெடுத்தல்; to neutralize metallic properties by oxidation. 7. அலட்டல்; to tease.

> ம. கொல்லுக; க. கொல்லு. கொலு, கொல்; தெ., குட., பட. கொல்லு. கோத. கொல்; து. க்வல்ய்; து. கொலெ (கொலை) பிரா. கில்லிங்க் (அடித்தல்).
>
> **Fin.** kallita (to hammer steel); **Kare.** kallita; **Mordvin.** kalgodo **Q.** killai. **Dāhri.** kāti-ise; **Magar.** gnāp; **Manipuri.** hato-o; **Angami Naga.** Du-khiawe; **Nāmsāng naga.** Ri-kvāto. **Ar.** katala; **Georgian.** wklav(kl); **Jap.** korosū, koroshi.

கொலை¹–தல் kolai-, 4 செ.கு.வி. (v.i.) குலைதல்; to be distrubed, shatter.

கொலை²–த்தல் kolai-, 4 செ.கு.வி. (v.i.) குலைத்தல்; to bark as of dog.

கொழி¹–த்தல் koḻi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தெள்ளுதல்; to sift in a winnowing fan. "குற்றபாகு கொழிப்பவர் கோள்" (கம்பரா. நாட்டுப் 29). 2. ஒதுக்குதல்; to waft ashore, as fine sand by the waves. 3. வாருதல்; to carry or wash away, as a river or flood. "கிரியுள வெல்லாங் கொழித்து வந்துற வணைதரும் பாலி" (கந்தபு. ஆற்றுப். 23). 4. பொழிதல்; to emit, as rays; to send forth, as showers. "கொடிய வெண்டிங்கள் கொழிக்கு நினது கதிர்" (நைடத. சந்திரோ. 6) (செ.அக.).

> ம. கொழிக்குக; க., பட. கொச்சு; தெ. கொடு; கோத.கொத்; துட.க்விச்; கோண்.கொச்சானா; கூ. கடோக்ல; குவி. கொச்சாலி; கொலா. கொன்சிவ்.

கொழி²–த்தல் koḻi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. குற்றங் கூறுதல்; to criticise, expose faults. "வையங் கொழிக்கும் பழிக்கு" (சீவக. 1149). 2. ஆராய்தல்; to test, closely examine details of evidence, facts, etc. கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரை (பழ.130). 3. பாராட்டிச் சொல்லுதல்; to proclaim, publish. அவன் தன் பெருமையைக் கொழித்துக் கொண்டி ருக்கிறான் (கொ.வ.).

கொழி³–த்தல் koḻi-, 4 செ.கு.வி. (v.i.) 1. எதிரொலித்தல் (பிங்.); to sound, resound. 2. மேலே கிளம்புதல்; to come to the surface to rise up. "கடற்றினன் பொன்கொழிப்ப" (மதுரைக். 274). 3. செழிப்புறுதல்; to be on the increase

flourish. "செல்வங் கொழிக்கிறது" *(செ.அக.).*

Fin. kerata (togather. accumulate) **Kare.** kerea; **Komi.** kural; **Est.** korjata; **Mong.** xurija. **Q.** juriy.

கொழு–த்தல் koḻu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. செழித்தல்;* to prosper, flourish to be rich or fertile, as soil. "குடிகொழுத்தக் கண்ணும்" *(நாலடி. 96). 2. உடற்கொழுப்பு மிகுதல்;* to grow fat to be plump. "சிறுமியரெலாங் கொழுத்தே" *(தனிப்பா.). 3. குழம்பாயிருத்தல்;* to be of thick consistency, as sandal paste. சந்தனத்தைக் கொழுக்கப் பூசு. *4. திமிர் கொள்ளுதல் (உ.வ.);* to be saucy, impertinent, insolent. *5. மண் கொழித்தல், மதர்த்தல் (உ.வ.);* to become too rich, to be productive, as land *(செ.அக.).*

ம. கொழுக்குக; க. கொர்வு, கொப்பு; தெ. க்ரொச்சு, கொவ்வு; து. கொம்மை (கொழுப்பு); கோண். கொர்வின்ச்; கூய். க்ரோக; குவி. கொர்வ்; நா. கொலா, கொரு; கோத. க்வள்ப்; பிரா. கும்பேன்.

Fin. kuu (fat); **Mari.** koja; **Hung.** haj; **Jap.** koyasu (to enrich, fatten).

கொழுகொழு–த்தல் koḻukoḻu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மிகுந்த சதைப்பற்றுடன் இருத்தல்;* to be chubby. குழந்தை கொழுகொழுவென்று இருக்கிறது *(உ.வ.). 2. செல்வச்செழிப்பு மிகுதல்;* to become rich, prosperous.

கொழுந்து–தல் koḻundu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.ஒளிர்தல்;* to be kindled as fire. *2. காய்ச்சப்படுதல் (இ.வ.);* to be heated. "எரியழற் கொழுந்தும் வேலுய்த் திட்டென" *(இரகு. யாகப். 27). 3. வெயிலிற் கருகுதல்;* to be burnt as by the sun.

கொழுவு–தல் koḻuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) தொங்க விடுதல்; to hang. "குடையைத் தோளில் கொழுவிக் கொண்டு புறப்பட்டான்" *(கிரி.).*

கொள்(ளு)–தல் koḷ(ḷu)-, *10 செ.குன்றாவி.* (v.t.) *1. கையில் எடுத்துக்கொள்ளுதல் (இ.வ.);* to seize. "கொண்ட வாளொடும்" *(சீவக. 430). 2. பெறுதல் (இ.வ.);* to receive as a gift. "நல்லா றெனினுங் கொளறீது" *(குறள். 222). 3. விலைக்கு வாங்குதல் (இ.வ.);* to buy. "கோதையினுங் கொள்வார்" *(நைடத. நகரப். 18). அறப்படித்தவன் அங்காடி போனால் விற்கவும் மாட்டான், கொள்ளவும் மாட்டான் (பழ.). 4. உரிமையாகக் கொள்ளுதல் (இ.வ.);* to acquire. "விடலையைக் காண வோடி..... வீதி கொண்டார்" *(சீவக. 457). 5. திருமணம் செய்தல் (இ.வ.);* to marry. "தாங்கொண்ட மனையாளை" *(நாலடி.3). 6. கவர்தல் (இ.வ.);* carry off. "மனையாளை மாற்றார் கொள" *(நாலடி.3). 7. தன்னுட் கொள்ளுதல் (இ.வ.);* to contain. "சிதரரிக் கண்கொண்ட நீர்" *(நாலடி. 394). 8. முகத்தல் (இ.வ.);* to draw in. "குணகடல் கொண்டு குடகடன் முற்றி" *(மதுரைக். 238). 9. கற்றுக் கொள்ளுதல் (இ.வ.);* to learn. "கொள்ளுநர் கொள்ள" *(கல்லா. 11:21). 10. கருதுதல் (இ.வ.);* to consider. "யார்க்குங்கொடுத்தியெனக் கொள்கின்றிலம்" *(இலக். வி. 650, உரை). 11. நன்கு மதித்தல் (இ.வ.);* esteem. "கொளப்பட்டே மென்றெண்ணி" *(குறள்.699). 12. கொண்டாடுதல் (இ.வ.);* to celebrate. "தண்பதங் கொள்ளுந் தலை நாட் போல" *(சிலப். 6:160). 13. ஒப்பளித்தல் (இ.வ.);* approve. "உய்ஞ்சன னிருத்தலு முலகங் கொள்ளுமோ" *(கம்பரா. உருக்கா. 17). 14. மேற் கொள்ளுதல் (இ.வ.);* observe. "குடிப்பிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார்" *(நாலடி. 143). 15. மனம் பொறுத்தல் (தொல். பொருள். 147, உரை, ப.658);* endure. *16. ஒத்தல்;* resemble *(இ.வ.).* "வண்டினம் யாழ்கொண்ட கொளை" *(பரிபா.11:125). 17. பொருந்துதல் (இ.வ.);* befit. "கொள்ளாத கொள்ளா துலகு" *(குறள்.470). 18. உடலிற் காயம்படுதல்;* hurt. கல்லுக் காலிற் கொண்டது.

ம. கொள்ளுக; க. கொள், கொளு, கொள்ளு; தெ. கொனு; து. கொணுனி; கோத. கொள்; துட. க்விஸ்; குட. கொள்ளு; நா. கொச; கொய்; கூ. கொட; குவி. கொர்ச்சினை; கொலா. கொச்ல; பட. கொண்ணு.

E. get; Mod. geten; **ON.** get; **OE.** gietan; **L.** hendere; **Alb.** gеṅ; **Weld.** gannu.

கொள்ளைபோ–தல் koḷḷai-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. பொருள் முதலியன பலவாறாக அழிபடுதல்;* to be wasted in all ways, as wealth. "கொள்ளை போகின்ற செல்வம்" *(கம்பரா. மாரீச, 77). 2. களவு போதல்;* to be plundered.

கொள்ளையடி–த்தல் koḷḷai-y-aḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) சூறையாடுதல்; to plunder, to rob.

ம. கொள்ளையடிக்குக.

கொளுத்து[1]–தல் koḷuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொளச்செய்தல்;* to cause to hold. "பூ நாற்றத்த வாகிய புகையைக் கொளுத்தி அமைத்த ஊனையும்" *(புறநா. 14, உரை). 2. விளக்குதல்;* to explain. "விதியோர் கொளுத்திய வீரிய முடையது" *(பெருங். உஞ்சைக். 38:294). 3. அறிவுறுத்துதல்;* to teach. "சேணெறி செல்லக் கோணெறி கொளுத்தி" *(பெருங். உஞ்சைக். 58:70). 4. வீணை முதலியன மீட்டுதல்;* to play as on a lute. "நரம்பினாய கருவியைக் கொளுத்து மாக்கள்" *(சூடா. 2:39). 5. நாடக முதலியவற்றை நடப்பித்தல்;* to cause to enact, as a dram. "கூடிய நெறியின கொளுத்துங் காலை" *(சிலப். 3:17). 6. கண்டித்தல்;* to reprove sharply. நான் அவனை நன்றாய்க் கொளுத்திவிட்டேன். *7. சண்டை மூட்டுதல் (வின்.);* to instigate quarrel. *8. தூற்றுதல்;* to slander.

கொளுத்து[2]–தல் koḷuttu-, *5 செ.கு.வி.* (v.t.) *1. வெயில் கடுமையாகக் காய்தல்;* to scorch as the sun. *2. வியக்கும்படி காரியம் புரிதல்;* to accomplish a task admirably.

கொளுத்து³–தல் koḷuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *எரித்தல்;* to set fire. *ஊர் முழுவதும் கொளுத்தி விட்டார்கள் (உ.வ.).*

ம. கொளுத்துக; க. கொளிசு, கொள்ளிசு; குட. கொளித்.

Fin. keksia (to detect, findout); **Mong.** kagzi (to begin to flame, to blaze up).

கொளுந்து–தல் koḷundu-, *5 செ.கு.வி.* (v.i.) *தீப்பற்றுதல்;* to burn, as fire. "*தீக்கொளுந் தினவுந் தெரிகின்றிலர்*" *(கம்பரா. இலங்கையெரி. 5).* "*கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்*" *(திருமந். 591).*

கொளுவு¹–தல் koḷuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொள்ளச் செய்தல்;* to cause to hold. "*மலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ*" *(புறநா. 55:1). 2. தீமூட்டுதல்;* to kindle, as fire. "*தீக் கொளுவும் விடங்க*" *(திருவாச. 6:19). 3. பூட்டுதல்;* to clasp, hook on, lock. "*அறிவென்னுந் தாள் கொளுவி*" *(திவ். இயற். 3:12). 4. தூண்டிவிடுதல்;* to urge on, as a dog. "*கதநாய் கொளுவுவென்*" *(கலித். 144:20). 5. அகப்படுத்துதல் (வின்);* to entangle. *6. கூட்டுச் சேர்த்தல் (யாழ்ப்.);* to take into partnership. *7. செருப்பு முதலியன அணிதல்;* wearing sandals etc.

கொளுவு²–தல் koḷuvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வேலையில் அமர்த்துதல் (வின்);* to be engaged as in an employment. *2. மனத்திற் பதித்தல் (வின்.);* to make an impression as on the mind. *3. சிக்குதல் (வின்.);* to be ensnared. *4. நுண்ணுத்தி (தந்திரஞ்) செய்தல் (வின்.);* to contrive manage by artifice or scheming. *5. குடல் தூக்கிக் கொள்ளுதல் (யாழ்ப்.);* to have cramp as in the bowels; to have a stitch, as in the sides.

கொறி–த்தல் koṟi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பல்லாலும் அலகாலும் தவசத்தைப் பிரித்துத் தின்னுதல்;* to nip off the busks of grains. "*தினைகள் கொறிப்பமுன் றூவி*" *(காஞ்சிப்பு. இருபத். 95). 2. சிறிது சிறிதாகப் பொறுக்கி உண்ணுதல் (இ.வ.);* to graze, to pick up food here and there, as cattle, to eat scantily. "*உடுத்திரள் பொரியிற் கொறிப்ப*" *(கல்லா. முருகன்துதி.). 3. விட்டுவிட்டு ஒலித்தல் (யாழ்ப்.);* to make a ticking or clucking sound. *4. அலப்புதல் (யாழ்ப்.);* to chatter.

தெ. கொருகு; க. கொறுகு; ம. கொறி.

கொறிக்கு–தல் koṟikku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பல்லாற்கோதுதல்;* gnawing.

கொன்னி–த்தல் koṉṉi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நாத்திரும்பா திருத்தல்;* have an impediment in one's speech. *2. திக்குதல்;* to stammer.

கொன்னு¹–தல் koṉṉu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. திக்கிப் பேசுதல்;* to stammer; stutter. *2. குழறுதல்;* to babble. "*ஒன்னார்கள் வாய்கொன்ன*" *(தனிப்பா. 1.386:38).*

கொன்னு²–தல் koṉṉu-, *5 செ.கு.வி.* (v.i.) *பெருமையுறுதல் (தணிகைப்பு. நாட்.140);* to become famous.

nfh

கோ–த்தல் kō-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மணி முதலியவற்றினூடு நூலைப்புகுத்தி இணைத்தல்;* to string, as beads, flowers, ōlā leaves; to file; to insert; to thread, as a needle. "*கோத்தணிந்த வெற்பு மணி*" *(பெரியபு.மானக்கஞ்.22). இறைச்சி தின்றாலும் எலும்பைக் கோத்துக் கழுத்தில் அணிகிறதா (பழ.). 2. ஒழுங்குபடுத்துதல்;* to compose, compile, arrange, reduce to order; to systematise. "*பார்த்தவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது*" *(தாயு. கருணாகர. 4). 3. முறையாகக் கூறுதல்;* to narrate in order. "*பூமியாண் முறையுங் கோத்தார்*" *(பாரத. சம்பவ. 113). 4. தொகுத்துரைத்தல்;* to enumerate, recount. "*கோமின் றுழாய்முடி யாதியஞ் சோதி குணங்களே*" *(திவ். திருவாய். 4, 1:7). 5. நுணுக்கமாகக் கதை முதலியன புனைதல் ;* to invent, as a story, in a clever and fitting manner. *6. உடுத்துதல்;* to put on, to wear. "*கோத்தகல் லாடையும்*" *(தேவா. 509:2). 7. கை பிணைத்தல்;* to clasp, join, interlock, as the hands. "*குரவை யாய்ச்சியரோடு கோத்ததும்*" *(திவ். திருவாய். 6, 4:1). 8. ஒன்று சேர்த்தல்;* to unite, merge. "*அன்பரைக் கோத்தற விழுங்கிக் கொண்டு*" *(தாயு. பொருள்வ. 3). 9. கவிந்து கொள்ளுதல்;* to envelop, cover. "*வல்லிருள் கோத்தது கருங்கடல் கொள்ளை கொண்டென*" *(கம்பரா. இலங்கை கேள்வி. 3). 10. எதிர்த்தல்;* to oppose, resist. "*கனலி கோப்பக் காரிருளுடைந்த தேபோல்*" *(சீவக. 1290).*

கோட்டடி–த்தல் kōṭṭaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *தேர்வில் தோல்வியடைதல் (இ.வ.);* to fail in an examination. *பத்தாம் வகுப்பில் இரண்டுமுறை கோட்டடித்து விட்டான்.*

கோட்டி–த்தல் kōṭṭi-, *4 செ.கு.வி.* (v.i.) *ஆரவாரித்தல்;* to sound, clamour, roar.

கோட்டு–தல் kōṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வளைத்தல்;* to bend, cause to stoop. "*நனைமுகங் கோட்டி நின்றாள்*" *(சீவக. 1568). 2. வளைத்து முறித்தல் (திவா.);* to break. *3. சித்திரம் முதலியன எழுதுதல்;* to draw picture. "*தன்னாம மேருவினுங் கோட்டி னானே*" *(பாரத. சிறப்புப். 19). 4. கட்டுதல்;* to build. "*ஒரு மண்டபங் கோட்டினேன்*" *(பாரத. வாரணா. 123).*

ம. கோட்டுக.

கோட்படு¹–தல் kōṭpaḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பிடிக்கப்படுதல்;* to be captured. "*புலிதானே புறத்ததாகக் குட்டி கோட்படா தென்ன*" *(கம்பரா. சூர்ப்ப. 102). 2. அறியப்படுதல்;* to be realised. "*ஞானத்தாலுங் கோட்படாப் பதமே*" *(கம்பரா. அனுமப். 36).*

3. வலிமை கொள்ளுதல்; become powerful. "*பனிமதக் குவடு கோட்பட் டெழுந்துறப் பாய்ந்த வாற்றால்*" *(இரகு. திக்குவி. 225).*

கோட்படு[2]–த்தல் kōṭpaḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *கோளாறடையச் செய்தல்;* to cause derangement or disorder in the system *(சா.அக.).*

கோட்புகு–தல் kōṭ-pugu-, *21 செ.கு.வி.* (v.i.) *மரம் முதலியன பயன் கொள்ளும் பருவத்ததாதல்;* to mature, as trees. "*கோட்புகாத கன்னிக்கமுகு*" *(சீவக. 169, உரை).*

கோடி–த்தல் kōḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அணி செய்தல் (அலங்கரித்தல்);* to adorn, decorate. "*கோடித் தன்ன கோடுசால் வையம்*" *(பெருங். இலாவாண. 8:185). 2. அமைத்தல்;* to make. "*கடிமண்டபமுன் கோடிப்ப*" *(காஞ்சிப்பு.திருமண.4). 3.மனக்கோட்டை கட்டுதல்;* to imagine, picture in mind. "*கண்ணாலங் கோடித்தது*" *(திவ். நாய்ச். 10:9). 4. வேண்டுதல் (யாழ்.அக.);* to beseech, supplicate. *5. ஒலித்தல்;* to sound.

கோடிடு–தல் kōḍiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *அடிக்கோடிடுதல்;* to underline.

கோடு–தல் kōḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வளைதல்;* to bend, to be crooked. "*செங்கோல் கோடியோ*" *(மணிமே. 28:188). 2. நெறிதவறுதல்;* to go astray deviate. "*கோடாருங் கோடிக் கடுவினைய ராகியார்ச் சார்ந்து*" *(நாலடி. 124). 3. நடுநிலைமை தவறுதல்;* to be partial, biased. "*கோடாமை சான்றோர்க் கணி*" *(குறள்.118). 4. வெறுப்புறுதல் (வின்.);* to be displeased, aversion. *5. கோணுதல்;* to bend, curve. "*கற்பிளார்கோடும் வாயினரீவார்க் கரும் பழுதுரைப்பவர்*" *(தணிகைப்பு. அகத். 346). 6. சூழ்தல்;* to cover, all round. *7. வட்டமாதல்;* to get round. *8. எரிதல்;* to burn. *9. குறாவுதல்;* to mean, to be sad. *10. கொள்ளுதல்;* to secure. "*தலை யிழைத்துக் கோடுமுன்*" *(தணிகைப்பு. வீராட். 39).*

கோணு–தல் kōṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வளைதல் (பிங்.);* to be bent, curved. *2. கோணலாயிருத்தல்;* to be awry, crooked, oblique. *3. நெறி பிறழ்தல்;* to deviate, swerve from the proper course. *4. முகங்கோணுதல், மாறுபடுதல் (சூடா.);* to be perverse, to be changed as circumstances. *5. வெறுப்புக் கொள்ளுதல்;* to have dislike or aversion. "*கோணாதே குலவி நுழைந்தனையே*" *(அருட்பா. 6. திருவடிப் புகழ்ச்.1:4). 6. சாய்தல்;* to in cline.

ம. கோணுக.

கோத்திழை–த்தல் kōttiḻai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பாய், கூடை முதலியவற்றைப் பழுதுபார்த்தல்;* to patch up a hole or rent, as in a mat, a basket.

கோத்துக்கொடு–த்தல் kōttu-k-koḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பிறருக்கு ஊசியில் நூலைக் கோத்துக் கொடுத்தல்;* to thread a needle and pass it to another. *2. இருவர்க்குள் பகையுண்டாகும்படி ஒருவர் கூற்றை மற்றவர்க்கு மாறுபடுத்திக் கூறுதல் (வின்.);* to tell tales and create enmity between two persons.

கோத்துவாங்கு[1]–தல் kōttu-vāṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஆடைக்கரையை வேறு வண்ண நூலில் தனியாக நெய்தல்;* to weave the borders of a cloth with threads of a different colour.

கோத்துவாங்கு[2]–தல் kōttu-vāṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஒருவர் மறைக்க எண்ணும் தரவலை அவரறியாமலேயே அவரிடம் கேட்டுப் பெறுவது;* to prob out the information without the knowledge of the concerned person. *என்னிடம் மறைத்த செய்தியை எப்படியோ கோத்து வாங்கிவிட்டேன் (உ.வ.).*

கோத்துவிடு–தல் kōttu-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. துன்பத்துக்கு உள்ளாக்குதல்;* to bring into difficulties. *2. பகை மூட்டுதல் (வின்.);* to show discord, create enmity.

கோதாட்டு[1]–தல் kōdāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தீவினை முதலிய குற்றங்களைப் போக்குதல்;* to cleanse or purify from sin or dirt. "*நந்தம்மைக் கோதாட்டி*" *(திருவாச. 7:17). 2. சீராட்டுதல்;* to caress, tend with care. "*குருவி பறவாமற் கோதாட்டி*" *(பட்டினத். திருப்பா. 17:8).*

கோது–தல் kōdu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அலகால் இறகைக் குடைந்து நேராக்குதல்;* to peck and adjust with the beak, as feathers. "*மயில்கோது கயிலாயம்*" *(தேவா. 1157:6). 2. மயிர்ச்சிக்கெடுத்தல்;* to disentangle, as the hair, with the fingers. "*கோதிச் சிக்கின்றி முடிக்கின்ற..... குழலி*" *(பெருந்தொ. 1323). 3. சிறிது சிறிதாக உண்ணுதல்;* to pick, as food in eating; to take in small quantities, as birds, sickly or dainty children, bashful persons. *குழந்தை சோற்றைக் கோதுகிறது. 4. வெளிச் சிதறுதல்;* to scatter, spill. "*கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தை*" *(நாலடி.47). 5. ஓலையை வாருதல்;* to tear in strips, as tender leaves. *6. தோண்டுதல் (யாழ்ப்.);* to hollow, excavate, scoop out.

ம. கோது.

கோதுவி–த்தல் kōduvi-, *1 பி.வி.* (v.cau.) *நீக்குவித்தல்;* to remove root out, exterminate. "*வினையாயின கோதுவித்தாய் நீறெழு*" *(தேவா. 1139:2).*

கோரி–த்தல் kōri-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கடுமையாதல்;* to become violent, to hement; to rage. "*கோரித் தொன்பது வாயிலும்..... கொளுத்த*" *(திருவிளை. குண்மோ. 16).*

கோரு–தல் kōru-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வேண்டிக் கொள்ளுதல்;* to request, solicit. *2. விரும்புதல்;* to wish, desire. *3. நினைத்தல்;* to think.

தெ., து. கோரு; க., ம. கோறு.

கோலியடி–த்தல் kōli-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.)

கோலியுருண்டையால் விளையாடுதல்; to play marbles.

கோலு¹–தல் kōlu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பாத்தி முதலியன வகுத்தல்;* to make, form, as beds in a garden. *2. வளைத்தல்;* to enclose, envelop, encompass; to stretch round. "நெடுங்காழ்க் கண்டங் கோலி" *(முல்லைப். 44). 3. திரட்டி வைத்தல்;* to gather. "கோலாப் பிரசமன்னாட்கு" *(திருக்கோ. 110). 4. நீர் முதலியவற்றை முகந்து அள்ளுதல்;* to bale, draw up, as with an ōla bucket; to gather with a sweep of arm. "கோலித் தண்ணீர் குடிக்கப்பட்ட..... குடை" *(கலித். 23, உரை). 5. விரித்தல்;* to spread out. "கணமயிறொக்கெண்ணுழையாத் தழைகோலிநின் றாலும்" *(திருக்கோ. 347). 6. தொடங்குதல்;* to commence. "பரஸ்வரூபத்தை நிரூபிக்கக் கோலி" *(ஈடு.அவ.ஜீ.). 7. உண்டாக்குதல்;* to construct, compass, effect. *8. கலந்தாய்தல் (ஆலோசித்தல்);* to consider, deliberate. "முற்கோலிப் பாண்டு புத்திரர்க் கோறும்" *(பாரத. நச்சுப். 3). 9. ஒன்றுதல் (தியானித்தல்);* to ponder, meditate. "மாலைக் கோலித் திரியும்" *(அஷ்டப். திருவேங். மா.3).*

ம. கோருக.

கோலு²–தல் kōlu-, *9 செ.கு.வி.* (v.i.) இணைதல்; to join together.

Fin.koinia, koinata (tocopulaate); ēst.koinaba, koinida.

கோழைதீர்–தல் kōḻai-tīr-, *4 செ.கு.வி.* (v.i.) மனவலிமை பெறுதல்; to overcome bashfullness.

கோழைபடு–தல் kōḻai-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) கீழ்மையடைதல்; to dwindle, decrease. "மேழிச் செல்வங் கோழைபடாது" *(கொ.வே.).*

கோள்முடி–த்தல் kōḷ-muḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. புறந்தூற்றுதல்;* to tell tales. *2. கோட்சொல்லி இருவருக்குள் கலகம் விளைவித்தல்;* to create mischief by slanderous reports.

கோள்மூட்டு–தல் kōḷ-mūṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) கோள்முடி-த்தல் பார்க்க; see kōḷ-muḍi-.

கோறைபடு–தல் kōṛai-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பழுதாதல்;* to be injured, as clothes, fruits. *2. சிராய்த்த காயமுண்டாதல்;* to have a scratch, as on the body.

கோறையா–தல் kōṛai-y-ā-, *8 செ.கு.வி.* (v.i.) *1. பழுதுபடுதல்;* to be injured or spoiled. *2. குழியாதல் (யாழ்ப்.);* to become hollow.

bfs

கௌடிபாய்–தல் kauḍi-pāi-, *13 செ.கு.வி.* (v.i.) ஒருவகை விளையாட்டு; a kind of play.

கௌவு–தல் kauvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வாயால் பிடித்தல்;* to seize with mouth, grasp with eagerness. "கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும்" *(நாலடி. 70). 2. கவர்தல்;* to absorb, engross. "அகங் கௌவிய களிப்பெய்தி" *(திருவிளை. யானை. 24).*

r

சக்களி¹–தல் šakkaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) தட்டையாதல் *(யாழ்ப்.);* to become oblate, flattened, compressed.

ம., க. சக்கழி.

சக்களி²–தல் šakkaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) சளிதல் *(யாழ்.அக.);* to be fermented; to grow stale.

சக்கையாய்ப்பிழி–தல் šakkai-y-āy-p-piḻi-, *2 செ.குன்றாவி.* (v.t.) கடுமையாக வேலை வாங்குதல்; to extract hard work from, overwork, as reducing one to skeleton *(செ.அக.).*

சக்கையெடு–த்தல் šakkai-y-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) கதிரைப் பிணையிட்டுக் கூலங்கள் நீங்கிய பின் சக்கையை யெடுத்தல்; to remove straws after removing grains.

சகாரி–த்தல் šagāri-, *11 செ.குன்றாவி.* (v.t.) ஏசுதல் *(நாஞ்.);* to abuse, revile.

ம. சகாரம்

சங்கறு–த்தல் šaṅgaṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) சங்குகளை அறுத்து வளையல் முதலியன செய்தல்; to cut conch, to make bracelets and other ornaments from conch.

சங்கி– த்தல் šaṅgi-, *11 செ.குன்றாவி.* (v.t.) பெருமைப் படுத்துதல்; to honour, respect, regard. "சவையில் வந்திங்குளோரைச் சங்கியாதகன்ற தூதை" *(பிரபோத. 25, 37).*

சங்கு¹–தல் šaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) துணிவு அழிதல் *(வின்.);* to be dispirited, lose courage. Skt. šaṅkā.

சங்கு²–தல் šaṅgu-, *4 செ.கு.வி.* (v.i.) குதித்தல், தாண்டுதல்; to jump *(கருநா.).*

க. சங்கு

சங்கூது¹–தல் šaṅgūdu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கோயில் முதலியவற்றில் சங்கை ஊதுதல்;* to blow a conch, as at a marriage house, a temple, etc. *2. வேலைக்களத்துக்கு ஆட்களை அழைக்க பொறியால் ஒலியெழுப்புதல்;* to sound a mill - whistle. *3. சாவை அறிவிக்கச் சங்கொலி எழுப்புதல்;* to blow conch as in death *(செ.அக.).*

சங்கூது²–தல் šaṅgūdu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒரு செயலை இடையிலேயே முடித்து விடுதல்;* to end abruptly, as a work. அவன் தன் படிப்புக்கு ஆறாம் வகுப்போடு சங்கூதிவிட்டான். *2. ஒருவரது வாணாள் முடிவுக்கு வருதல்;* to come an end, as of one's life. தன் மகள் திருமணத்திற்கு முன்பே சங்கூதிவிட்டாள் *(உ.வ.).*

சச்சரைப்படு–தல் šaccarai-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) சண்டை பிடித்தல்; to engage fight.

சச்சாயிரு–த்தல் šaccā-y-iru-, *3 செ.கு.வி.* (v.i.) *1. நெருக்கமாயிருத்தல் (கொ.வ.);* to be crowded. *2. குழப்பமாயிருத்தல்;* to be in confusion *(செ.அக.).*

சட்டந்தை–த்தல் šaṭṭan-tai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. படம் முதலியவற்றிற்குச் சட்டஞ் சேர்த்தல்;* to frame, nail on a frame. *2. வரிச்சலடித்தல்;* to put on reapers for tiles *(செ.அக.).*

சட்டம்போடு–தல் šaṭṭam-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *ஆணை இடுதல்;* to command *(செ.அக.).*

ம. சட்டம் பெட்டுக.

சட்டமழி–த்தல் šaṭṭam-aḻi-, *4* செ.கு.வி. (v.i.) *ஆணை மீறுதல் (இ.வ.);* to transgress or violate, as a law.

ம. சட்டமழி

சட்டி–த்தல் šaṭṭi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சட்டி போலாக்குதல், அகன்றதாக்குதல்;* to be pot like, to be flat or blunt. *2. அழித்தல்;* to destroy ruin. "*மாவுருவைச் சட்டித்தருளுந் தணிகையிலென் றாயே*" *(அருட்பா. 5, காணாப். 6) 3. கொல்லுதல் (வின்.);* to kill.

ம. சட்டிக்குக

சட்டிசுரண்டு–தல் šaṭṭi-šuraṇḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *இழிதொழில் செய்தல்;* to do any menial service used in contempt. "*உனக்கென்ன வரும் சட்டி சுரண்ட வருந் தையலே*" *(விறலிவிடு.).*

சட்டு–தல் šaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தட்டுதல்;* to strike, to beat.

க. சச்சு, செச்சு

சட்டைபண்ணு–தல் šaṭṭai-paṇṇu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *மதிப்புக் கொடுத்தல், அக்கறை காட்டுதல்;* to care for, regard.

சடங்குகழி–த்தல் šaḍaṅgu-kaḻi-, *4* செ.கு.வி. (v.i.) *பெண்ணின் முதற்பூப்பிற்கான சடங்கினைச் செய்தல் (உ.வ.);* to celebrate the pubescence of a girl with the prescribed ceremonies.

சடாய்[1]–த்தல் šaḍāy-, *4* செ.கு.வி. (v.i.) *செழித்தல் (வின்.);* to grow thick, bushy, leafy.

க. சடாயுத, சடாயித, சடாய்த (மிகுதியாதல்)

சடாய்[2]–த்தல் šaḍāy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. துமுக்கி (துப்பாக்கி) கெட்டித்தல்;* to load, as a gun. *2. அதட்டுதல்;* to rebuke, to chide.

சடாய்[3]–த்தல் šaḍāy-, *4 செ.கு.வி.* (v.i.) *பெருமிதமாய் பேசுதல்;* to talk tall, to boast.

சடை[1]–தல் šaḍāi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. சோர்வடைதல் (இ.வ.);* to become weary, disheartened, dispirited. *2. உள்ளடங்குதல் (வின்.);* to be shut in. *3. பயிர் முதலியன நறுங்கிப் போதல், வளர்ச்சி தடைபட்டுப் போதல்;* to be stunted in growth, as trees, plants.

ம. சடையுக

சடை[2]–தல் šaḍāi-, *2* செ.குன்றாவி. (v.t.) *1. ஆணி முதலியன தறைதல் (வின்.);* to flatten, as the head or point of a nail by repeated blows; to clinch, river. *2. தடுத்தல் (யாழ்ப்.);* to stop the progress, to interrupt, arrest, check, prevent, hinder.

சடை[3]–த்தல் šaḍāi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அடர்ந்து கிளைத்தல் (யாழ்.அக.);* to grow densely and luxuriantly. *2. பெரியதாதல்;* to grow big.

சடைபின்னு–தல் šaḍai-piṉṉu-, *5* செ.கு.வி. (v.i.) *தலைமயிரைப் பிரிவுகளாக்கி அவை ஒன்றுடன் ஒன்று பிணைந்து நிற்குமாறு பின்னுதல்;* to plait the hair.

க. தடெயெணெ

சடைவாறு–தல் šaḍai-vāṟu-, *5* செ.கு.வி. (v.i.) *இளைப்பாறுதல் (நெல்லை);* to have rest or relief.

சண்டு–தல் šaṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அளவுக்கு அதிகமாக உண்ணுதல்;* to eat to excess, to be gluttonous.

சண்டைபிடி–த்தல் šaṇḍai-piḍi, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஒருவருக்கொருவர் கடிந்து பேசிக்கொள்ளுதல்;* exchanging harsh words against one another.

சண்டைபோடு–தல் šaṇḍai-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *போராடுதல்;* to pick quarrel, fight.

சண்ணி–த்தல் šaṇṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பூசுதல்;* to smear, as with sacred ashes. "*வெண்ணீறு சண்ணித்த மேனி*" *(தேவா.697.1). 2. சார்ந்திருத்தல்;* to dwell in, inhabit. "*ஆமாத்தூர் சண்ணிப் பானை*" *(தேவா.1020, 8).*

சண்ணு[1]–தல் šaṇṇu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தாக்குதல்;* to attack. "*தட்டாரப் பைய லரிகர புத்ரனைச் சண்ணினானே*" *(தனிப்பா. 1, 223, 13). 2. நீக்குதல்;* to remove, cure. "*கீழாநெல்லி..... காமாலைகளைச் சண்ணும்*" *(பதார்த்த. 300). 3. அளவுக்கு அதிகமாக உண்ணுதல்;* to eat to excess, to be gluttonous. *சண்ணியிழுத்தான். 4. செய்து முடித்தல்;* to accomplish, execute, effect, used sarcastically. *அவர் சண்ணுகிறதைப் பார்ப்போம் (உ.வ.).*

சண்ணு–தல் šaṇṇu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *புணர்தல்;* to copulate.

சணாய்–த்தல் šaṇāi-, *4* செ.கு.வி. (v.i.) *காமங்கொள்ளுதல்;* to be inflammed with passion or lust.

சணை–த்தல் šaṇai-, *4* செ.கு.வி. (v.i.) *கொழுத்தல் (யாழ்ப்.);* to grow luxuriant, as trees; to become stout, as persons.

சதாவு–தல் šadāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *பழுதாதல்;* to be shattered or broken; to be rotten; to be decayed. "*அனைத்துருஞ் சதாவியிட*" *(பாரத. பன்னிரண்டாம். 23).*

சதிர்–த்தல் šadir-, *11 செ.கு.வி.* (v.i.) *வலிமை பெறுதல்;* to gain strength or power. "*அன்பனா யடியேன் சதிர்த்தேன்*" *(திவ். கண்ணிநுண். 5).*

ம. சதிர்

சதுரி–த்தல் šaduri-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சதுரமாக வடித்தல், நாற்கோணமாக்குதல்;* to cut or make a square figure. *2. மரம் முதலியவற்றை நான்கு பட்டையாகச் செதுக்குதல்;* to size wood, etc., square - wise. *3. கட்டடத்தின் அமைப்பெல்லையை நிலத்தில் வரையறுத்துக் குறித்தல்;* to fix boundary lines on the ground for the erection of a new building. *4. எண்ணைக் குழியாக்குதல் (வர்க்கமாக்குதல்);* to square a number.

சதுரித்திரு–த்தல் šadurittiru-, *3 செ.கு.வி.* (v.i.) *விழிப்பா யிருத்தல் (நாஞ்சில்.);* to be cautious.

சந்தனமிடு–தல் šandaṉam-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *அரைத்த சந்தனக் குழம்பைப் பூசுதல்;* to apply sandal paste.

ம. சந்தனமிடுக

சந்தி–த்தல் šandi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. இணைத்தல்;* to join, conjoin. "*சந்தித்த கோவணத்தர்*" *(தேவா. 16, 9). 2. எதிர்தல்;* to meet. "*சந்தித்திடற் கெளிதோ விந்தவாழ்வு*" *(திருக்கருவை. கலித். 75). 3. கண்டு கொள்ளுதல்;* to visit, have an interview with. "*மயில் வாகனனைச் சந்திக்கிலேன்*" *(கந்தரலங்.60). 4. எய்தல் (சங்.அக.);* to shoot an arrow.

சந்திக்கிழு–த்தல் šandi-k-kiḻu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மானக்கேடு உண்டாக்கும் நோக்கத்தோடு ஒருவரின் குறைகளைப் பலரும் அறியச்செய்தல்;* to expose to public (lit.), ridicule, drag somebody through the mud. "*அவனிடம் ஒழுங்காக நடந்து கொள். இல்லையேல் சந்திக்கிழுத்து மானத்தை வாங்கி விடுவான்*".

சந்திபண்ணு–தல் šandi-paṇṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *காலை, உச்சி, மாலை ஆகிய வேளைகளில் வணங்குதல் (சிலப். 13:43, அரும்.);* to perform morning, noon, evening prayers.

சந்துசெய்–தல் šandu-šey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. பொருத்துதல்;* to join one with another. *2. பிணங்கிய இருவரைச் சேர்த்து வைத்தல்;* to mediate.

சந்தைகூட்டு–தல் šandai-kūṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *பெருங்கூட்டம் கூடிப் பேராரவாரஞ் செய்தல்;* lit. to attract a large gathering, to create a hubbub. *சந்தை கூட்டி மானத்தை வாங்காதே.*

சந்தைகூடு–தல் šandai-kūḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *பொருள்களை விற்க ஓரிடத்தில் கூடுதல்;* to assemble in a particular place to sell goods. *அறிவன் (புதன்) தோறும் மாட்டுச் சந்தை கூடுகிறது (உ.வ.).*

ம. சந்தகெட்டுக; க. சந்தெகட்டு, சந்தெகூடு

சப்பணங்கட்டு–தல் šappaṇaṅ-gaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *சப்பணங்கூட்டு-தல் பார்க்க;* see šappaṇaṅ-gūṭṭu-.

சப்பணங்கூட்டு–தல் šappaṇaṅ-gūṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *அட்டணைக்காலிடுதல்;* to sit cross - legged.

சப்பளி[1]–தல் šappaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *சப்பையாதல், தட்டையாதல்;* to flatten, to be crushed, pressed out of form; to be jammed. "*சப்பளிந்த முகம்*" *(உ.வ.).*

க. சப்பழி, சாபளி/தட்டையாது

சப்பளி[2]–த்தல் šappaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அடியிற் சப்பையாக உட்கார்தல்;* to sit flat and cross - legged. *2. தட்டையாக்குதல்;* to flatten, to make oblate.

சப்பளித்திரு–த்தல் šappaḷittiru-, *3 செ.கு.வி.* (v.i.) *கால்மடக்கி உட்காருதல் (இ.வ.);* to sit flat and coss - legged.

சப்பாணிகொட்டு–தல் šappaṇi-koṭṭū-, *5 செ.கு.வி.* (v.i.) *கை சேர்த்துக் கொட்டுதல்;* to clap hands, as infants in play. "*மதுரையில் வளர்ந்த கொடி சப்பாணி கொட்டி யருளே*" *(மீனாட். பிள்ளைத். சப்பாணி - 1).*

க. சப்பளெயிக்கு, சப்பளிக்கு, சப்பாளெயாக்கு, தப்பணெகுட்டு, தப்பளகுட்டு, தப்பளிக்கு; து. சப்பளிபு, சப்பானெதட்டு; பட. சப்படெ குட்டு.

சப்பு[1]–தல் šappu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. உண்ணும் போது நாக்கினால் அல்லது உதடுகளால் 'சப்' என்று ஒலி உண்டாக்குதல்;* to make sound 'sap' either with tongue or lips while eating. *2. புகையிலை மெல்லுதல்;* to masticate, chew, as betel or tobacco. *3. குதப்புதல்;* to mumble in eating; to munch. *4. சுவைத்து ஒன்றன் சாற்றை உறிஞ்சிக் குடித்தல்;* to sip, suck.

ம. சப்புக; க. சப்பரிசு, சப்படிசு, சப்பளிசு, தப்படிசு; தெ. சப்பரிஞ்சு, சப்பு; து. சப்பரிபுனி; கோத. சப்; துட. செப்; குட. சப்பெ, சபெ; நா. சவ்ல்; பர். சவ்ல், சல்; மா. சொப்ப; படா. சப்பு; Pāli.cappeti;E.sup.

சப்பு[2]–தல் šappu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அதுங்குதல்;* to be bent, pressed in, to become flat. *ஏனம் (பாத்திரம்) சப்பிவிட்டது. 2. சுருங்குதல்;* to be reduced; to subside. "*வீக்கம் சப்பிவிட்டது*" *(உ.வ.).*

U. capṭā.

சப்புக்கொட்டு–தல் šappu-k-koṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. இனிப்புச் சுவை மிக்க தின்பண்டங்களைச் சுவைக்கும்போது நாக்கினால் ஒலி எழுப்பிச் சுவையின் அருமையை வெளிப்படுத்துதல்;* to relish a dish or an item of food by making a click. *தாத்தாவைப் பார், இனிப்பை எத்தனை அளவு சுவைத்துச் சப்புக்*

கொட்டிக் கொண்டு சாப்பிடுகின்றார்! 2. மீண்டும் நுகர ஆசைப்படுதல்; to nurture a desire where it is unbecoming. "*கிழவர் இளமைக்குச் சப்புக் கொட்டுகிறார் போலிருக்கிறது!*" *(உவ.).*

சப்பைக்கட்டுக்கட்டு–தல் *šappai-k-kaṭṭu-k-kaṭṭu-, 5* செ.கு.வி. (v.i.) *குற்றங்குறைகளைத் தாங்கிப் பேசுதல்;* to defend and support a person, especially when his actions or words are open to criticism.

சப்பையா–தல் *šappaiyā- 6* செ.கு.வி. (v.i.) *1. தட்டையாதல்;* to become flattened. *2. சுவையற்றுப் போதல்;* to become insipid or tasteless. *3. வலுகுறைதல்;* to become weak.

க. சப்பலர், சப்பலரு; து. ஆபுனி

சம்படி–த்தல் *šambaḍi- 4* செ.கு.வி. (v.i.) *பயிர் செய்யுங்காலத்து இரண்டாமுறை உழுதல்;* to plough field a second time during the season of cultivation.

சம்பு[1]–தல் *šambu- 5* செ.கு.வி. (v.i.) *கூம்புதல்;* to lose zeal or enthusiasm. "*மனஞ் சம்பித் திரியாமல்*" *(தஞ்சை.சர. ii, 119).*

சம்பு[2]–தல் *šambu- 5* செ.கு.வி. (v.i.) *விலை குறைதல்;* to fall in price.

சமட்டு–தல் *šamaṭṭu- 5* செ.குன்றாவி. (v.t.) *1. காலால் துவைத்தல் (இ.வ.);* to tread, trample. *2. அடித்தல்;* to strike.

ம. சவிட்டு; **E.** smite (to strike) **AS.** smiten; **Du.** smijten.

சமப்படுத்து–தல் *šama-p-paḍuttu- 5* செ.குன்றாவி. (v.t.) *1. மேடு பள்ளத்தை நீக்கி மட்டமாக்கு;* to make level. *தோட்டத்தைச் சமப்படுத்த வேண்டும். 2. ஒழுங்கு படுத்து;* to put in order. *மழைக்கு முன் ஆற்றுக்காலைச் சமப்படுத்த வேண்டும். 3. தக்கதாக்கு, நல்லதாக்கு;* to make proper or nice.

க. சமகொளிசு; பட. சமமாடு

சமமாகு–தல் *šamamāgu- 6* செ.கு.வி. (v.i.) *ஒரேயளவின தாகுதல்;* to become equal.

க. சமவெழ், சமபெழ்.

சமர்–தல் *šamar- 11* செ.கு.வி. (v.i.) *பொருதல்;* to fight, make war. "*சமர்க்க வல்லாயேல்*" *(விநாயகபு. 74, 249).*

சமர்த்தி–த்தல் *šamartti- 4* செ.குன்றாவி. (v.t.) *பொருந்துமாறு காட்டுதல்;* to justify and establish, as a theory.

சமழ்[1]–தல் *šamaḻ- 4* செ.கு.வி. (v.i.) *வருந்துதல்;* to be distressed. *தையலாய் சமழாதுரையென்றதே (சீவக. 1000).*

சமழ்[2]–த்தல் *šamaḻ- 11* செ.குன்றாவி. (v.t.) *1. வருந்துதல்;* to grieve, to be in distress. "*அம்மையிற் செய்தன விம்மை வந்து சந்தித்த பின்னைச் சமழ்ப்ப தென்னே*" *(தேவா. 1200, 4). 2. நாணுதல் (திவா.);* to be ashamed. "*முடித்தனனென்று சமழ்த்தன னோக்கி*" *(பெருங். மகத. 27, 186). 3. தாழ்தல்;* to get worsted; to suffer in comparison. "*மலர் நிறஞ் சமழ்க்கு மன்றே*" *(கம்பரா. நாடவி. 65).*

சமன்படுத்து–தல் *šamaṉ-paḍuttu- 5* செ.கு.வி. (v.i.) *1. நிரவுதல், மேடுபள்ளம் அற்றதாக்குதல்;* to equalize. *2. பண்படுத்துதல்;* to make right.

சமானி–த்தல் *šamāṉi- 4* செ.குன்றாவி. (v.t.) *ஒப்பிட்டுக் கூறுதல்;* to compare, to liken; to treat a like.

சமுதாய்–த்தல் *šamudāy- 4* செ.குன்றாவி. (v.t.) *1. சமாளித்தல் (இவ.);* to manage with economy. *2. சமாதானப்படுத்துதல் (யாழ்ப்.);* to reconcile.

சமை[1]–தல் *šamai- 4* செ.கு.வி. (v.i.) *1. அமைதல்;* to be made, constructed, formed. *2. அணியமாதல்;* to get ready, to prepare. "*வனஞ் செல்வதற்கே சமைந்தார் கடம்மை*" *(கம்பரா. நகர்நீ. 143). 3. பொருத்தமாதல்;* to be suitable. "*என்றிவை சமையச் சொன்னான்*" *(கம்பரா. அங்கத. 8).*

சமை[2]–தல் *šamai-, 4* செ.குன்றாவி. (v.t.) *தொடங்குதல்;* to commence. "*உரை செயச் சமைந்தான்*" *(கம்பரா. யுத்த. மந்திரப். 118).*

சமை[3]–தல் *šamai-, 2* செ.கு.வி. (v.i.) *1. நிரம்புதல்;* to mature. "*மலர்ந்து சமைந்த தில்லைகாண்*" *(திருவிருத். 68, வியா. 357). 2. பூப்பு அடைதல்;* to attain puberty, as a girl. "*மகள் சமையவில்லை*" *(தனிப்பா. 1, 389, 44). 3. புழுங்குதல்;* to be sultry, hot and close. *இந்தக் கூட்டத்திற் சமைந்து விடுகிறது. 4. அழிதல்;* to be consumed, destroyed. "*ஐவர் தலைவருஞ் சமைந்தார்*" *(கம்பரா. பஞ்சசே. 67).*

சமை[4]–தல் *šamai-, 4* செ.குன்றாவி. (v.t.) *முடித்தல்;* to finish. "*திருமாலையைப் பாடிச் சமைந்து*" *(ஈடு.69:3).*

சமை[5]–தல் *šamai-, 2* செ.கு.வி. (v.i.) *திடீரென்று ஏற்படும் அதிர்ச்சி, வியப்பு முதலியவற்றால் செயலற்ற நிலைக்கு உள்ளாதல்;* to be dazed when one is shocked or taken a back. *தலைவர் நேர்ச்சியில் (விபத்தில்) இறந்துவிட்டார் என்று கேட்டதும் கல்லாய்ச் சமைந்து போனேன்.*

சமை[6]–த்தல் *šamai-, 4* செ.குன்றாவி. (v.t.) *1. படைத்தல்;* to create. "*ஊர்வவெல்லாஞ் சமைக்குவென்*" *(கம்பரா. மிதிலை. 117). 2. செய்தல்;* to do, perform. "*சமைப்பது கொலையலாற்றக்க தியாவதோ*" *(கம்பரா.விபீடண. 41). 3. அணியமாக்குதல்;* to get ready, prepare. "*நிலத்தைச் சமைத்துக் கொண்டீரேல்*" *(கலிங். 547).*

சரக்குப்பண்ணு–தல் *šarakku-p-paṇṇu-, 5* செ.குன்றாவி. (v.t.) *வெயிலிற் காயவைத்தல் (யாழ்ப்.);* to dry in the sun.

சரடுவிடு–தல் *šaraḍu-viḍu-, 20* செ.கு.வி. (v.i.) *1. பிறர் வாயிலாகத் தன் கருத்தை வெளியிடுதல்;* to give out one's idea through an intermediary. *2. மறைமுகமாகப் பேசிப் பிறர் கருத்தை அறியமுயலுதல்;* to sound a person's

views indirectly.

சராளி–த்தல் šarāḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *கழிச்சல் ஏற்படுதல்;* to have loose motion.

சரி[1]–தல் šari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நழுவுதல்;* to slip away, slide down. *சரிந்த துகில் (திருவிசை. கரு. 5, 10). 2. கீழே விழுதல்;* to roll down, tumble down, stumble and fall down from a height. "*சரிந்த பூவுள*" *(கம்பரா. அயோத். மந்திரப். 56). 3. குலைதல்;* to be upset. "*சாடிய வேள்வி சரிந்திட*" *(திருவாச. 14,5). 4. பின்னிடுதல்;* to give way, yield; to be defeated as an army. "*நேர் சரிந்தான் கொடிக்கோழி கொண்டான்*" *(திவ். திருவாய். 7, 4, 8). 5. சாதல்;* to die. *6. சாய்தல்;* to lean, incline, to all to one side, decline as a heavenly body. *7. சரிவாயிருத்தல் (இ.வ.);* to be aslant, to slope. *8. கூட்டமாய்ச் செல்லுதல்;* to flock to a place, to go in crowd. *அங்கே மக்கள் சரிகிறார்கள் (செ.அக.).*

ம. சரியுக, சலிக்க (வளைத்தல்); க. சரி, சலி, சருகு; சலிகு; தெ. சரகு, சருகு; து. சரகு; கோ. சர்வ்; கொலா. சரக்; மா. சர்கெ; பட. தாரு

சரி[2]–த்தல் šari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சரிந்து விழச் செய்தல்;* to cause to slip or roll, topple, to pour down. *2. வெட்டித் தள்ளுதல்;* to cut off, as the head. "*தலையைச் சரித்து*" *(ஈடு. 1, 6, 7). 3. ஒரு பக்கஞ் சாயச்செய்தல்;* to slant, incline.

ம. சரிப்பிக்க.

சரி[3]–த்தல் šari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. செல்லுதல்;* to move about. "*பரிதொறுஞ் சரித்தான்*" *(கம்பரா. சம்புமா. 33). 2. வாழ்தல்;* to live, dwell. "*காடுகளிற் சரித்தும்*" *(சி.சி. 10, 5).*

சரி[4]–த்தல் šari-, *2 செ.குன்றாவி.* (v.t.) *மேற் கொண்டொழுகுதல் (சங்.அக.);* to practise.

சரி[5]–த்தல் šari-, *4 செ.கு.வி.* (v.i.) *உணவு செரித்தல்;* to digest, to be digested.

சரி[6]–த்தல் šari-, *4 செ.கு.வி.* (v.i.) *அசைதல்;* to move.

சரிக்கட்டு[1]–தல் šari-k-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒப்பிடுதல் (வின்.);* to compare, show the comparative merits. *2. ஒப்பச்செய்தல்;* to rectify, correct, redress. *அவரைச் சரிக்கட்டிவிட்டால் வெற்றி நமக்குத்தான். 3. இணக்குதல்;* to placate, persuade, reconcile. *ஆசிரியரைச் சரிக்கட்டப் பெருமுயற்சி தேவைப் பட்டது. 4. கடனைத் தீர்த்தல் (வின்.);* to pay discharge. *நெல்லை விற்றுத்தான் வங்கிக் கடனைச் சரிக்கட்ட வேண்டும். 5. ஈடுசெய்தல் (வின்.);* to adjust, indemnify, reimburse. *சென்ற ஆண்டு இழப்பை இதைக் கொண்டு சரிக்கட்ட முடியாது. 6. முடிவு படுத்துதல்;* to finish, settle. *இயக்குநரால்தான் அலுவலகச் சிக்கலைச் சரிக்கட்ட முடியும். 7. கொல்லுதல்;* to compass one's death, kill. *கட்சிப் பேரணி என்ற பெயரில் நால்வரைச் சரிக்கட்டி விட்டனர்.*

சரிக்கட்டு[2]–தல் šari-k-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பழிவாங்குதல் (வின்.);* to take revenge, make reprisals. *2. இணக்கமாகச் செய்தல்;* to act agreealy. "*எவர்க்குஞ் சரிக்கட்டவோ வெண்ணி*" *(இராமநா. ஆரணி. 11). 3. சரிநிகர்த் தன்மையாதல்;* to make equal, to make one's equal. *4. உண்மையாதல்;* to prove. "*என்சொல் லப்பபோதல்லோ சரிக்கட்டும்*" *(கவிகுஞ்5).*

சரிப்படு–தல் šari-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. ஏற்றதாதல்;* to be agreeable or satisfactory. *தாங்கள் அழைக்கும் நாளில் பொழிவுக்கு வர எனக்குச் சரிப்படும். 2. மனமொத்தல்;* to suit, agree. *அவனுக்கும் எனக்கும் சரிப்படாது. 3. நேராதல்;* to be right, proper; to come upto the mark or standard. *4. ஒப்பாதல்;* to be similar. *5. முடிவுபடுதல்;* to be finished, settled. *செயலெல்லாம் சரிப்பட்டது.*

சரிப்படுத்து–தல் šari-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *சரிக்கட்டு-தல் பார்க்க;* see šari-k-kaṭṭu-*(செ.அக.).*

சரிப்பி–த்தல் šari-p-pi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நடப்பித்தல்;* to conduct ceremonies. "*சாத்திரப் படி தப்பாமற் சரிப்பித்து*" *(உத்தரரா. அசுவ.).*

சரிபார்[1]–த்தல் šari-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஒத்துப்பார்த்தல் (வின்.);* to compare, check, as a copy with its original. *இவையனைத்தும் சரிபார்த்த மெய்ப்பு.*

சரிபார்[2]–த்தல் šari-pār-, *4 செ.கு.வி.* & *4 செ.குன்றாவி* (v.i. & v.t.) *கேடு சூழ்தல் (இ.வ.);* to plot one's ruin.

சரிபோ–தல் šari-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. ஒத்தல்;* to resemble. "*தன்பெருஞ் குணப் பொறையினால்..... நிலமகட் சரிபோவான்*" *(உபதேசகா. சிவபுராண.11). 2. நேர் நடத்தல்;* to progress, as a game. *3. அமைதியாதல் (யாழ்ப்.);* to become reconciled, as contending parties. *4. மனப்படி நடத்தல்;* to have one's own way. *தனக்குச் சரிபோனபடி செலவழிக்கிறான் (வின்.).*

சரியாக்கு–தல் šari-y-ākku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒழுங்குபடுத்துதல்;* to make equal. *2. முரண்பாடு போன்றவற்றைத் தீர்த்து வைத்தல்;* to resolve the difference of opinion etc., *3. உரியதாக்குதல்;* to put in a proper state, to make proper.

க. சரிகொளிசு.

சரியிடு–தல் šari-y-iḍu-, *8 செ.குன்றாவி.* (v.t.) *படி முதலியவற்றை மூலத்தோடு ஒப்பிடுதல்;* to compare, as a copy with its original *(செ.அக.).*

க. சரியிடு.

சரிவா–தல் (சரிவருதல்) šari-v-ā-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நேர் வருதல்;* to prove right or correct, as a mathematical problem,

a prediction, an experiment. *கணக்கு சரிவந்து விட்டதா? 2. சமமாதல்;* to be a like equal. *அவன் எனக்குச் சரிவந்தவன் (இவ). 3. ஒத்துவருதல்;* to agree, tally. *4. தீர்தல் (வின்.);* to be finished, fulfilled.

சருக்கு–தல் šarukku-, *5* செ.கு.வி. (v.i.) *சறுக்கு;* to slip *(செ. அக.).*

ம. சர்கு; க., தெ. சரகு; பட. சாரு.

சருகரி–த்தல் šarugari-, *4* செ.கு.வி. (v.i.) பயனைத் துய்க்க இயலாமல் உழைத்தல்; to toil hard without enjoying the resultant advantage. "*மூத்தாள் சருகரிக்க இளையாள் மகிழ்கிறாள்*" *(பழ.).*

சருகா–தல் šarugā-, *6* செ.கு.வி. (v.i.) உடல் முதலியன வற்றி மெலிதல் *(சருகுபோல் ஆதல்);* to be dried, emaciated, as body.

சருவு–தல் šaruvu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* பழகுதல்; to become familiar. "*என்னுள்ளே சருவியெனை யிந்நாளும் வாட்டுமிடர்*" *(திருப்போ. சந்நிதி. மாலை. 80). 2.*கொஞ்சிக்குலாவுதல்; to caress amorously. "*அங்கவரோடு சருவியும்*" *(திருப்பு. 6). 3.* தொல்லை தருதல்; to do mishief. *4.* போராடுதல்; to quarrel, wrangle. "*சருவிய சமயிகள்*" *(திருப்பு. 928).*

சல்லரி¹–தல் šallari-, *4* செ.குன்றாவி. (v.t.) துண்டு துண்டாக நறுக்குதல் *(யாழ்ப்.);* to hack, cut into pieces.

சல்லு¹–தல் šallu-, *5* செ.கு.வி. (v.i.) நீர் தெளித்தல் *(வின்.);* to sprinkle water.

ம. சல்லுக. க. சல்லிசு; தெ. சல்லின்சு.

சல்லு²–தல் šallu-, *5* செ.குன்றாவி. (v.t.) சல்லடையாற் சலித்தல் *(வின்.);* to sift.

தெ. சல்லிஞ்சு.

சலம்பு–தல் šalambu-, *5* செ.கு.வி. (v.i.) ஓயாமற் பேசுதல் *(இ.வ.);* to chatter, talk incessantly *(செ.அக.).*

சலம்வை–த்தல் šalam-vai-, *4* செ.கு.வி. (v.i.) சீழ்கோத்தல் (M.L.); to suppurate.

சலாத்து–தல் šalāttu-, *5* செ.குன்றாவி. (v.t.) குலுக்குதல் *(இ.வ.)*; to shake, as liquid in a vessel.

சலாம்பு–தல் šalāmbu-, *5* செ.கு.வி. (v.i.) மண்ணை வெட்டிப் புரட்டுதல் *(இ.வ.)*; to turn the sod, as with a plough.

சலி¹–த்தல் šali-, *4* செ.கு.வி. (v.i.) *1.* அசைதல்; to shake, to move. "*நிலையினிற் சலியா நிலைமையானும்*" *(கல்லா.11). 2.* மனக்கலக்கமடைதல்; to be trouble in mind, distressed. "*சலிக்கு மன்னையும்*" *(திருவிளை. விருத்த. 9). 3.* சோர்தல்; to be weary, tired, to become exhausted. "*மூவர்க்குஞ் சலியாத வுரனும்*" *(உபதேசகா. சூராதி. 71). 4.* அருவருப்புக் காட்டுதல்; to show or express disgust.

ம. சலிக்குக.

சலி²–த்தல் šali-, *4* செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to hate, to be disgusted with. "*ஒரே வேலையைச் செய்ததனால் சலித்துப் போயிருக்கிறான்*" *(உ.வ.).*

ம. சலிக்குக.

சலி³–த்தல் šali-, *4* செ.கு.வி. (v.i.) சினங் கொள்ளுதல்; to get angry. "*சாபம்போற் சாருஞ் சலித்து*" *(ஏலாதி, 60).*

சலி⁴–த்தல் šali-, *4* செ.குன்றாவி. (v.t.) சல்லடையாற் சலித்தல்; to shift, to seperate the longer from smaller bodies with the hand, with a sieve or riddle. "*மணலைச் சலிப்பதற்குப் பெரிய சல்லடை வேண்டும்*" *(உ.வ.).*

க. சலுசு; பட. சலிசு, சல்சு.

சலி⁵–த்தல் šali-, *4* செ.கு.வி. (v.i.) ஒலித்தல் *(வின்.)*; to sound.

சலுகைகாட்டு–தல் šalugai-kaṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* பெருமையாய் இருத்தல் *(வின்.)*; to carry oneself proudly, on account of office, wealth etc. *2.* அதிகாரம் கொள்ளுதல்; to be dictatorial over bearing.

சலுப்பு–தல் šaluppu-, *5* செ.கு.வி. (v.i.) உளறுதல் *(இ.வ.)*; to prattle.

சவ்வாயிரு–த்தல் šavvāy-iru-, *5* செ.கு.வி. (v.i.) பிசின் போலாதல் *(வின்.)*; to be viscid, viscous.

சவ்வெடு–த்தல் šav-v-eḍu-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* தோலுரித்தல்; to peel off, as the skin from beans, gristly parts from meat. *2.* செருக்கு முதலியவற்றை அடக்குதல் *(வின்.)*; to humble one's pride, nullify one's influence.

சவக்களி–த்தல் šavakkaḷi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* சுவையற்றுப்போதல் *(இ.வ.)*; to be insipid, spoiled. *2.* கெட்ட சுவையுடையதாயிருத்தல் *(வின்.)*; to taste unpleasantly *(செ.அக.).*

சவங்கு–தல் šavaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* மனந் தளர்தல்; to become dispirited, disheartened. *2.* மானமழுங்கிப் போதல்; to be callous to criticism or ridicule; to be lost to shame. *3.* உடல் மெலிதல்; to become lean, emaciated. *4.* வீக்கம் வற்றுதல் *(இ.வ.)*; to shrink, subside, as a boil. *5.* மயங்கி வீழ்தல், மூர்ச்சைபோதல் *(வின்.)*; to faint, droop. languish.

சவட்டு¹–தல் šavaṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) வளைவாக்குதல்; to bend, twist. *அவன் காலைச் சவட்டி நடக்கிறான் (வின்.).*

சவட்டு²–தல் šavaṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* மெல்லுதல்; to chew, masticate. "*பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டி*" *(பெரும்பாண். 217). 2.* விழுங்குதல் *(யாழ்ப்.)*; to swallow down. *3.* வெல்லுதல் *(யாழ்ப்.)*; to get the better of.

சவட்டு[3]–தல் šavaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மிதித்தல்;* to tread upon, trample. "தோகைச் செந்நெல் சவட்டி" *(பெருங். மகத. 2, 18). 2. காலால் மிதித்துச் சேறு குழைத்தல்;* to mix clay etc., by treading. *3. கதிர்களைப் பாதத்தால் மிதித்துத் தவசங்களைப் பிரித்தல்;* to tread out grains. *4. அழித்தல்;* to destroy ruin as a town. "மூதூர் தன்னையுஞ் சவட்டி" *(சீவக. 1734). 5. கொல்லுதல் (பிங்.);* to kill. *6. மொத்துதல், அடித்தல்;* to beat, to strike.

ம. சவிட்டுக; கட. சவட்.

சவர்–த்தல் šavar-, *4 செ.கு.வி.* (v.i.) *உவர்த்தல்;* to be brackish, as a mineral salt.

சவள்(ளு)–தல் šavaḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. வளைதல்;* to bend. *2. துவளுதல்;* to be supple, flexible, as the arms of a fencer.

ம. சவளுக, சவிளுக.

சவி[2]–த்தல் šavi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வழிபாடு செய்தல்;* to pray. "என் சவிப்பார் மனிசரே" *(திவ். திருவாய். 3, 5, 5).*

சவு–த்தல் šavu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. விலை நயத்தல் (வின்.);* to fall in price : to become cheap. *2. விலைப் படாமலிருத்தல் (வின்.);* to be unsaleable, to have no demand. *3. அலுத்துப்போதல் (யாழ்.அக.);* to become tired. *4. மெலிதல் (யாழ்.அக.);* to become weak, emaciated. *5. விளைவு குன்றிப்போதல் (இ.வ.);* to fail, as a crop. *6. சுவையற்றுப்போதல்;* to fall flat as a song. "பாட்டுச் சவுத்துப் போயிற்று" *(வின்.). 7. முறுமுறுப்பு அற்றுப் போதல்;* to lose crispness. "முறுக்கு சவுத்துப் போயிற்று" *(இ.வ.).*

சவுதரி–த்தல் šavudari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பாதுகாத்தல், காப்பாற்றுதல்;* to support, maintain.

சவை–த்தல் šavai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மெல்லுதல்;* to chew, munch. *2. குழந்தை தாய்ப்பாலைச் சப்புதல் (இ.வ.);* to suck mother's milk.

ம. சவய்க்குக; தெ. சப்பு; குட. சவெ; நா. சவச்; பர். சவல்; மா. சொப்யெ.

சழங்கு–தல் šaḻaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சோர்தல்;* to languish; to be enfeebled. "உடல் சழங்க லுற்றது" *(காஞ்சிப்பு. தழுவக். 93). 2. நெகிழ்தல்;* to be loose - fitting, to hang loose, as one's garment. "சழங்க லுடையார்ந் தழகு கொள்ள" *(பெரியபு. தடுத்தாட். 31). 3. தொங்கி யசைதல்;* to dangle. "வெண்ணரை முடித்தது விழுந்திடை சழங்க" *(பெரியபு. தடுத்தாட். 29).*

சழி–தல் šaḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. சப்பளிதல்;* to be pressed out of form, crushed down on one side; to be squeezed and distorted. *2. தளர்தல்;* to become crumpled, wrinkled. "தேகஞ் சழிந்துவிட்டது" *(உ.வ.). 3. நெருங்கிக் கிடத்தல்;* to lie thick and close. "திங்கட்டொல்லரா நல்லிதழி சழிந்த சென்னி" *(தேவா. 980. 6). 4. ஊழற்சதை வைத்தல்;* to grow flabby.

ம. சழயுக; க. சடில் (நெகிழ்தல்)

சழுங்கு–தல் šaḻuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *மழுங்குதல் (வின்.);* to become blunt.

சள்ளு[1]–தல் šaḷḷu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. இளகுதல் (வின்.);* to slacken, abate. *2. எருவாய்க் காற்றுப் பிரிதல்* (R); to break wind. *3. சிக்குதல்* (R); to be entangled, involved.

ம. சள்ளுக; க. சல்லு (உரம் முதலியவற்றைப் பரப்பு); தெ. சொள்ள, சள்ளு.

சள்ளு[2]–தல் šaḷḷu-, *5 செ.கு.வி.* (v.i.) *துளை விழுதல்;* to form hole.

சள்ளுப்படு–தல் šaḷḷu-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *தொல்லைக்குள்ளாதல் (இ.வ.);* to undergo troubles, difficulties.

சளப்பு–தல் šaḷappu-, *5 செ.கு.வி.* (v.i.) *அலப்புதல் (கொ.வ.);* to babble, prate.

சளு–த்தல் šaḷu-, *4 செ.கு.வி.* (v.i.) *சேறாதல்;* to become muddy.

ம. சளியுக

சறாம்பு–தல் šaṟāmbu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பேணாதிருத்தல்;* to neglect. "சறாம்பி யிருக்கையாய் உடம்பைப் பேணாதிருக்கை யென்னுதல்" *(ஈடு. 4:8:4).*

சறுக்கு–தல் šaṟukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வழுக்குதல்;* to slip or slide. "ஆனைக்கும் அடிசறுக்கும்" *(உ.வ.). 2. வழுவுதல் (வின்.);* to go astray. *3. செயல் நழுவுதல்;* to slip out of hand, as an affair. *4. உராய்ந்து செல்லுதல் (வின்.);* to skim, graze.

ம. சறுக்கு; க. தரகு; தெ., பட.; தாரு

சறுகு–தல் saṟugu-, *5 செ.கு.வி.*(v.i.) *நழுவுதல்;* to slip, slide, to fail. "காரியஞ் சறுகிப் போயிற்று" *(இ.வ.).*

சன்னம்வை[1]–த்தல் šaṉṉam-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *வெள்ளை வைத்தல் (இ.வ.);* to plaster nicely, as a wall.

சன்னம்வை[2]–த்தல் šaṉṉam-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சிறிய மணிகளைப் பதித்தல்;* to inset fine gems as in ornaments. *2. அழகாய்ப் பேசுதல்;* to talk nicely and neatly. *3. பேச்சில் சூழ்ச்சிகளைக் காட்டுதல்;* to be cunning in speech. *அவன் சன்னம் வைத்துப் பேசுகிறான் (இ.வ.).*

rh

சா[2]–தல் šā-, *19 செ.கு.வி.* (v.i.) *ஒன்றிற்காக வருத்திக் கொள்ளுதல்; ஒருவருக்காகத் துன்பப்படுதல்;* to torture oneself something; suffer for someone. *பணம், பணம் என்று ஏன் சாகிறாய்!*

சா[2]–தல் šā-, *19 செ.கு.வி.* (v.i.) *1. இறத்தல்;* to die, to

decease, to depart from life, to cease to live, to expire. "சாதலி னின்னாத தில்லை" (குறள்.230). 2. பயிர் முதலியன கெட்டுப்போதல்; to be spoiled or blighted, as crops. "பயிர் தண்ணீரில்லாமற் சாகிறது" (உவ.). 3. சோர்தல்; to be exhausted. கைகால் செத்துப் போயின. 4. ஒன்றிற்காகப் பெருவிருப்பம் கொண்டிருத்தல்; to do, have great desire. பணத்திற்காகச் சாகின்ற அவன் ஒழுங்காக உண்ணவும் மாட்டான். 5. உடலுறுப்பு செயலிழத்தல்; to lose, or decay as of limbs. இரண்டு நாள் காய்ச்சலில் நாக்குச் செத்துவிட்டது.

மறுவ. உயிர் நீத்தல், மடிதல்.

ம. சாகுக. சாவுக; க. சாய், சாயு; தெ. சச்சு, சா, சாவ்; து. சைபுனி; பட. சாயி; குட. சாள், சாவ்; பர். சய்; கட. சய். சய்; கோண்., மால. சைஆன; பிரா. ககி, சைஆன, சாய், சவெ; குவி. கைய்; Ice. deyja; Dan. do; Scot. dee; **E.** die, starve; **O.E.** steorfan.

சாக்கா–த்தல் šā-k-kā-, *4* செ.கு.வி. (v.i.) இறப்போர்க்கு அருகிருந்து உதவுதல் (யாழ்ப்.); to wait on a dying person, affording necessary help.

சாக்கு–தல் šākku-, *5* செ.குன்றாவி. (v.t.) வளர்த்தல், வளர்த்து உருவாக்குதல்; to bring up, to foster, to rear, to nurse, to keep, to protect, to preserve (கருநா.).

க., தெ., பட. சாகு

சாகடி–த்தல் šāgaḍi-, *4* செ.கு.வி. (v.i.) கொல்லுதல், உயிரைப் போக்குதல்; to kill, render lifeless. "பணத்துக்காக அவனைச் சாகடித்தான்" (உவ.).

ம. சாடிப்பு (தூக்குத் தண்டனை).

சாகு–தல் šāgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* செல்லுதல்; to go, to move forward, to proceed. *2.* தொடர்தல், முன்னேறுதல்; to proceed or advance (கருநா.).

க., தெ. சாகு

சாட்டிக்கழி–த்தல் šāṭṭi-k-kaḻi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* போக்குச் சொல்லிக் கழித்தல்; to shift off responsibility. *2.* சிறிது கொடுத்தல் (வின்.); to give sparingly, distribute scantily.

சாட்டு–தல் šāṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* பொறுப்பை அல்லது கடமையைப் பிறனிடம் சார்த்துதல்; to transfer as a debt; to assign. *2.* ஒருவர் மீது குற்றஞ் சுமத்துதல் (வின்.); to accuse, charge with. *3.* தலைக்கீடாகக் கொள்ளுதல்; to allege as a pretext. கோயிலைச் சாட்டி வயிறு வளர்க்கிறான் (வின்.).

தெ. சாடு

சாடி¹–த்தல் šāḍi-, *4* செ.கு.வி. (v.i.) கோள் சொல்லுதல் (வின்.); to slander.

க. சாடிசு; தெ. சாடிஞ்சு; து. சாடி.

சாடி²–த்தல் šāḍi-, *2* செ.குன்றாவி. (v.t.) *1.* கண்டித்தல் (இ.வ.); to chide, rebuke. *2.* நொறுக்குதல் (வின்.); to crush.

சாடி³–த்தல் šāḍi-, *4* செ.கு.வி. (v.i.) இரு பக்கமும் அசைதல் (யாழ்ப்.); to totter, rock from side to side.

சாடு¹–தல் šāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* அடித்தல்; to beat. "சாடிக்கொன்றனன் சிலவரை" (கம்பரா. கிங்கிர. 36). *2.* மோதுதல்; to fall upon. "கமுகின் குலைசாடி" (திருக்கோ. 100). *3.* துகைத்தல்; to trample. "விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடி" (கலித். 101). *4.* குத்திக் கிழித்தல்; to tear open, gore. "அதனிறஞ் சாடி முரண்மூர்ந்த" (கலித். 52). *5.* வடுச்செய்தல்; to scratch. "கூருகிர் சாடிய மார்பும்" (கலித். 91). *6.* ஒடித்தல்; to lop off, break, as branches. "குங்குமத் தடஞ்சினை சாடி" (நைடத. நாட்.4). *7.* கொல்லுதல் ; to kill, destroy. "சாடியது சிறிசிலவர் தம்மை" (கந்தபு தகரேறு.14). *8.* கடிதல் (வின்.); to abuse, reprove.

ம. சாடு (குதித்தல்); க. சாடிசு (எறிதல்); து. சாண்டுனி (ஈட்டியை அசைத்தல்); குரு. சாட்காரை (குதித்தல்).

சாடு²–தல் šāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* அசைதல்; to shake. *2.* ஒரு கட்சிக்குச் சார்பாயிருத்தல்; to favour a party, as in a civil suit. *3.* சாய்ந்து நிற்றல்; to lean, overhang, as a tree.

ம. சாடுக; க. சாடிசு; து. சாண்டுனி.

சாடு³–தல் šāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) கை, கால் எறிதல்; to stretch out, as the arms or legs from lassitude.

சாடு⁴–தல் šāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* குறைகூறிக் கடுமையாகத் தாக்குதல்; to critisize vehemently, attack verbally. தமிழுக்கு எதிராகப் பேசுவோரைப் பாவாணர் சாடினார். *2.* தாவுதல், எகிறுதல்; to leap, jump over. "திருடன் மேல் சாடி விழுந்தார்".

சாடு⁵–தல் šāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) (கண்ணில் பீளை அதிக அளவில்) திரளுதல்; to collect dirt in the eyes. "கண் வலியால் பீளை சாடிக் கண்ணைத் திறக்க முடியவில்லை".

சாடைபண்ணு–தல் šāḍai-paṇṇu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* சைகை காட்டுதல்; to make gestures. *2.* இரக்கம் (தயை) காட்டுதல் (வின்.); to be lenient.

சாண்டு¹–தல் šāṇḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) குற்றுதல்; to pound (சேரநா.).

ம. சாண்டுக; க. சாடிசு; தெ. சாடின்சு; து. சாண்டுனி.

சாணிதட்டு–தல் šāṇi-taṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *சாணியை வறட்டிக்காகத் தட்டுதல்;* to beat cow-dung into cakes for fuel.

சாணைபிடி–த்தல் šāṇai-piḍi-, *4 செ.கு.வி.* & *செ.குன்றாவி* (v.i. & v.t.) *ஆய்தத்தைக் கூர்மைப்படுத்துதல் (திவ்.திருப்பா. 1, அரும். 32);* to grind, whet, sharpen, as a weapon.

க. சாணெபிடி.

சாத்து¹–தல் šāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஒருவர் பெயர் நிலைத்துநிற்கும் நோக்கோடு அவர் நினைவாக ஒன்றினைச் செய்தல்;* to do a good thing in memory of an other person. "*குன்றனூரனைச் சாத்தி இவர் மகன் ஸ்ரீராசிங்கப் பேரையனான அரைசயன் இகழாநிலை கண்ணனூர்க் குளத்துக்குக் கட்டின குமிழி*" *(ஆவணம் 1991:15-1).*

சாத்து²–தல் šāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அணிதல்;* to put on, adorn used in reference to idols, great persons, etc. "*முளைவெண்டிங்களென்னச் சாத்தி*" *(சிலப்.12:26). 2. பூணுதல்;* to wear, as the caste-mark. "*தன்றிரு நாமத்தைத் தானுஞ் சாத்தியே*" *(கம்பரா. கடிமண. 49). 3. பூசுதல் (பிங்.);* to daub, smear, anoint. "*சாத்தியருளச் சந்தன முக்கசும்*" *(S.I.I.iii,187). 4. நூலைப் படித்து முடித்தல்;* to finish reading a sacred book. *5. அடித்தல்;* beat, thrash. "*அவனை இரண்டு சாத்துச் சாத்தினான்*" *(கொ.வ.). 6. பெயர்த்து நடுதல் (வின்.);* to translant. *தென்னம்பிள்ளை சாத்துதல்.*

சாத்து³–தல் šāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஒன்றின் மேல் சாய்ந்த நிலையில் இருக்கச் செய்தல்;* rest something at a slant. "*குடையை மூலையில் சாத்தி வை*".

சாத்து⁴–தல் šāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அடைத்தல்;* to close, as a door, to shut. "*போர்க் கதவஞ் சாத்தி*" *(திவ். இயற்.1, 4).*

சாந்துகுழை–த்தல் šāndu-kuḻai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பொட்டிடுதற்குச் சாந்து குழைத்தல்;* to soften black pigment with water for use as *tilakam. 2. சுண்ணாம்பு முதலியன குழைத்தல்;* to pound and temper mortar, etc.

ம. சாந்துகுழய்க்குக.

சாந்துபூசு–தல் šāndu-pūšu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சந்தனம் முதலியவை பூசுதல் (வின்.);* to smear the body with sandal or other unguents. *2. சுண்ணாம்பு பூசுதல்;* to plaster a wall.

ம. சாந்துபூசுக.

சாப்பிடு–தல் šāppidu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *கவர்தல்;* to consume, misappropriate. *ஊர்ப் பணத்தைச் சாப்பிடக் கூடாது.*

ம. சாப்பிடுக.

சாப்பு¹–தல் šāppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அடித்தல்;* to strike. "*கேவரகைத் தண்டெடுத்துக் கேப்பை யென்று சாப்பினேன்*" *(நெல்விடு. 416).*

சாம்பற்பூ–த்தல் šāmbaṟ-pū-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெருப்பில் நீறுபூத்தல்;* to be covered with ashes, as live embers. *2. காய், இலை முதலியவற்றில் சாம்பல் நிறம் படிதல்;* to have ash-like appearance, as fruits, leaves, etc. *3. சாம்பல்போல் உடல் வெளுத்தல்;* to grow ashy, as one's body.

சாம்பு¹–தல் šāmbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வாடுதல்;* to wither, droop. "*நெய்தற் பூச்சாம்பும் புத்தாங்கண்*" *(பட்டின. 12). 2. கெடுதல்;* to perish, pine away. *3. குவிதல் (திவா.);* to close up, as flowers. *4. ஒடுங்குதல் (பிங்.);* to decline. *5. உணர்வழிதல்;* to lose consciousness. "*சாதல் காப்பவரு மெனற்வத்திற் சாம்பினார்*" *(கம்பரா. உருக்காட். 21). 6. ஒளி மழுங்குதல்;* to grow dim, as the eyes. "*மன்னரெல்லாந் தளர்ந்து கண் சாம்பினாரே*" *(சீவக. 811). 7. எரிதல்;* to burn.

ம. சாம்புக.

சாம்பு²–தல் šāmbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. இழுத்தல் (வின்.);* to pull in by jerks; to haul to draw in, to pump. *2. அறைதல் (யாழ்ப்.);* to give a blow.

சாய்¹–தல் šāy-, *2 செ.கு.வி.* (v.i.) *1. கவிழ்தல்;* to incline, hand down. "*நாணடச் சாய்ந்த நலங்கிள ரெருத்தின்*" *(பொருந. 31). 2. வானில் கோள் முதலியவை சாய்தல்;* to decline, as a heavenly body. *3. வளைதல்;* to bend, turn down, as the ear. "*சாய் செவிக்குருளை*" *(சிறுபாண். 130). 4. படுத்தல்;* to recline, lie down. "*திருக்கையிலே சாயுமித்தனை*" *(ஈடு.27:5). 5. திரண்டு செல்லுதல்;* to march, in crowds. "*திருவிழாவுக்கு மக்கள் திரள் சாய்கிறார்கள்*" *(உ.வ.). 6. முறிதல்;* to give way, break. "*சாய்ந்த வல்லுருமு போய்*" *(கம்பரா. நாகபாச. 99). 7. தோற்றோடுதல்;* to be routed; to flee. "*வந்தவர் சாய்ந்த வாறும்*" *(பாரத. நீரைமீட்சி. 137). 8. நடுநிலை திறம்புதல்;* to be partial, biased. *9. ஒதுங்குதல் (வின்.);* to decline from a direct course to deviate. *10. சார்தல்;* to lean. *தூணின் மேல் சாய்ந்தான். 11. நடந்தேறுதல்;* to happen, succeed. *அந்தக் காரியஞ் சாய்ந்தது.*

ம. சாயுக; து. சாவுனி; வ. சய்; சீ, கூடிய்.

சாய்²–தல் šāy-, *2 செ.கு.வி.* (v.i.) *1. தளர்தல்;* to be fatigued, to grow weary. "*கள்ளொற்றிக் கண் சாய்பவர்*" *(குறள். 927). 2. வருந்துதல்;* to be troubled. "*சாய்குவ ளல்லளோ*" *(கலித். 79:10). 3. மெலிதல்;* to grow thin, emaciated. "*சாயினள் வருந்தியாளிடும்பை*" *(கலித்.121). 4. வற்றுதல்;* to get dried up, as a channel. "*கான்யாற்றுக் கடும்புனல் சாஅய்*" *(அகநா.25). 5. அழிதல்;* to be ruined, to perish. "*மறஞ்சாய*" *(பு.வெ.2, 1, கொளூ.).*

சாய்³–த்தல் šāy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சாயச் செய்தல்;* to cause to incline, bend or stoop. "*உண்டுறையுடைந்த பூப்புனல் சாய்ப்ப*" *(கலித்.78). 2. ஒரு பக்கமாக*

ஓட்டுதல் (வின்.); to turn in a new direction, to drive. 3. கரைக்குச் செலுத்துதல் (வின்.); to steer shoreward, as a vessel. 4. மனஞ்சாயப் பண்ணுதல் (வின்.); to prejudice. 5. கெடுத்தல்; to destroy, mar or spoil. "மல்லரை மறஞ்சாய்த்த" (கலித்.134). 6. தோல்வியுறச் செய்தல்; to discomfit, defeat. "சூதும் பங்கய முகையுஞ் சாய்த்துப் பணைத் தெழுந்து" (பெரியபு. தடுத்தாட். 21). 7. முறித்தல்; to break off. "குருந்தஞ் சாய்த்ததூஉம்" (திரிகடு. காப்பு.1). 8. மெய்ப்படுத்துதல்; to establish. "தன்பாற் றவறுண்டெனக் கௌசிகன் சாய்க்கின்" (அரிச்.பு.இந்திர.42). 9. முற்றுவித்தல்; to finish, bring to a successful issue. 10. மிகுதியாகக் கொடுத்தல்; to give in abundance. "தாய் பெண்ணுக்கு எல்லாவற்றையுஞ் சாய்த்தாள்" (உ.வ.).

ம. சாய்க்குக; து. சாசுனி.

சாய்த்துப்பார்–த்தல் šāyttu-p-pār-, 4 செ.குன்றாவி. (v.t.) கண்ணைக் கோணலாக வைத்துக் கொண்டு (வக்கிரித்துப்) பார்த்தல்; to look as quint.

சாய்ந்தாடு–தல் šāyndāḍu-, 5 செ.கு.வி. (v.i.) நிலத்தில் நின்றுகொண்டு அல்லது இருக்கையில் இருந்து கொண்டு பக்கவாட்டில் அல்லது முன்னும் பின்னும் அசைதல்; to swing or swerve sideways without shifting position. "சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு" (குழந்தைப் பாட்டு).

ம. சாஞ்ஞாடுக, சாஞ்சாடுக.

சாயம்வெளு–த்தல் šāyam-veḷu-, 4 செ.கு.வி. (v.i.) பொய் மறைந்து உண்மை வெளிப்படுதல்; to come to light; get - exposed. அவன் சாயம் வெளுத்துப் போச்சு, இனி யாரையும் ஏமாற்ற முடியாது.

சாயல்காட்டு–தல் šāyal-kāṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நடித்தல்; to imitate, represent, personate. 2. முன்குறியாகக் காட்டுதல் (உ.வ.); to foreshadow.

சார்[1]–தல் šār-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. சென்றடைதல்; to reach, approach. "சாரா வேதங்கள்" (திவ். திருவாய். 10.5:8). 2. புகலடைதல்; to depend upon, take shelter in. 3. அடுத்தல்; to be near to. கடல் சார்ந்து மின்னீர் பிறக்கும்; (நாலடி.245). 4. கலத்தல் to unite. "நல்லெழில் மார்பனைச் சார்ந்து" (கலித்142).5.உறவு கொள்ளுதல் (கொ.வ.).; to be related to. 6. ஒத்தல்; to resemble, equal. 7. சாய்தல் (வின்.); to lean upon, recline against. 8. பொருந்தியிருத்தல்; to be associated or connected with. "நலமாட்சி நல்லாரைச் சார்ந்து" (நாலடி.175).

ம. சாருக; க. சார்; தெ. சாரு; து. சார்தி; கோத. சார்ய்; துட. சோர்ய்; பட. சேரு.

சார்த்து[1]–தல் šārttu, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சாரச் செய்தல்; to cause to lean, to support. 2. இணைத்தல்; to join, unite, connect (செ.அக.).

ம. சார்த்து; க. சார்; தெ. சாது; து. சார்ணி; பட. சேத்து.

சார்பறு–த்தல் šārpaṟu, 5 செ.கு.வி. (v.i.) 1. துறத்தல் (சூடா.); to renounce the world. 2. பிறப்பறுத்தல்; to be freed from births. "இறைவற் பேணிச் சார்பறுத் துய்தி யென்று" (சீவக. 1221).

சாரமாக்கு–தல் šāram-ākku-, 5 செ.குன்றாவி. (v.t.) பொருட்படுத்துதல்; to give importance, mind. அவன் செய்ததைச் சாரமாக்காதே (நாஞ்.).

சாரமிறக்கு–தல் šāram-iṟakku-, 5 செ.கு.வி. (v.i.) 1. கட்டடச் சாரத்தைப் பிரித்தல் (வின்.); to take down a scaffoldings.

சாரல்கட்டு–தல் šāral-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) மழை பெய்தற்கு ஏற்றபடி கருமேகம் நிறைந்திருத்தல்; to be dense with water - vapour as clouds on hill - site (Tinn.).

சாரி–த்தல் šāri-, 4 செ.குன்றாவி. (v.t.) கீழ் வீழ்த்தல்; to prostrate, fell down. "நெடுமரத்தாற் சாரித்தலைத் துருட்டும்" (கம்பரா. அதிகாயன்.161).

சால்(லு)[1]–தல் šāl(lu)-, 13 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to be abundant, full, extensive. "ஈடுசால் பேர்" (சீவக.59). 2. மாட்சிபெறுதல்; to excel in moral worth; to great, noble. 3. பொருந்துதல்; to be suitable, fiting. "இந்திரனே சாலுங் கரி" (குறள்.25). 4. முற்றுதல்; to be finished, exhausted. "தாமத்தாரின ரெண்ணினுஞ் சால்வரோ" (கம்பரா. பிணிவீட்டு. 97). 5. போதியதாதல்; to be all that is required, to be sufficient.

ம. சாலு; க., து. சாலு; தெ. சாலு; கோத. சலு; துட. சௌலு.

சால்(லு)[2]–தல் šāl(lu)-, 5 செ.கு.வி. (v.i.) சாய்தல்; to decline.

சாலடி–த்தல் šālaḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) சால்பட உழுதல்; to make furrows in ploughing.

சாவி–த்தல் šāvi-, 4 செ.குன்றாவி. (v.t.) திட்டுதல்; to curse, revile. "வீணாகச் சாவிக்கிறான்" (இவ.).

சாவெடு–த்தல் šāveḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) இறந்த உடலை நன்காட்டிற்குக் கொண்டு செல்லுதல்; to take the dead body to funeral ground.

ம. சாவெடுக்குக; பட. சாவெத்து.

சாளு–தல் šālu-, 5 செ.கு.வி. (v.i.) வளைதல்; to bend. (பே. மொ.வ.145).

சாற்று[1]–தல் šāṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. விளம்பரப் படுத்துதல்; to publish, announce. "அடிசேர்ந்து சாற்றுமின்" (பரிபா.8, 79). 2. விரித்துச் சொல்லுதல்; to explain in detail. கலந்தார்க் குயலுண்மை சாற்றுவேன் மன் (குறள்.1212). 3. சொல்லுதல் (தி.வா.); to speak, mention. 4. புகழ்தல்; to praise. "சாற்றரிய வாயிரக்கால் மண்டபம்" (ஏகாம். உலா. காப்பு.). 5. அடித்தல்; to beat, as a drum. "பேரி..... திரிந்து சாற்றினான்" (கம்பரா. மந்தரை.25). 6. நிறைத்தல்; to fill with water, as tank.

"குளங்கொளச் சாற்றி" (மதுரைக்.246).7. அமைத்தல்; to form. "விற்படைசாற்றி" (சீவக.1951).

ம. சாற்றுக; க. சாறு; தெ. சாடு; து. சாரியுனி; கோத. சார்; பட. சாறு.

சாறயர்–தல் šāṟayar-, 3 செ.கு.வி. (v.i.) விழாக் கொண்டாடுதல்; to celebrate a festival. "சாறயர்ந் திறைவற் பேணி" (சீவக.1221).

சாறு[1]–தல் šāṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நழுவுதல்; to slip off. "கலையுஞ் சாறின" (கம்பரா. உண்டாட்டு.63). 2. வழுக்குதல்; to slip down, as from a tree. "சாறிவிழுந்தான்" (வின்.). 3. சரிதல் (வின்.); to slant, incline as a post; to deviate. 4. வடிதல்; to flow, issue. "இரு விழிகள் பீளை சாறிட" (திருப்பு.790).

ம. சாருக; க. சாறு; தெ. சாறு; பட. சாரு

சாறு[2]–தல் šāṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. களத்தில் தவசம் (தானியம்) பெருக்குதல் (யாழ்ப்.); to sweep the threshing floor and gather scattered grain. 2. நிலத்தைக் கொத்துதல்; to hoe superficially, harrow.

சாறுபிழி–தல் šāṟu-piḻi, 2 செ.கு.வி. (v.i.) 1. சாறெடுத்தல்; to express juice. 2. வேலை மிகுதி முதலியவற்றால் வருத்துதல்; to squeeze oppress as by over working a person. 3. நன்றாய் அடித்தல் (வின்.); to give one a good drubbing.

சான்றளி–த்தல் šāṉṟaḷi-, 4 செ.குன்றாவி. (v.t.) விளத்தம் உண்மையானது என்று அல்லது அவற்றின் படி உண்மையானது என்று கையொப்பமும் முத்திரையும் இட்டு உறுதியளித்தல்; to certify (a fact) attest (a copy). "விண்ணப்பத்துடன் சான்றளிக்கப் பட்ட மதிப்பெண் பட்டியலையும் இணைத்து அனுப்புக" (உ.வ.).

á

சிக்கு–தல் šikku-, 5.செ.கு.வி.(v.i.)1.சிக்குப்படுதல்;to become entangled,complicated. 2.இறுகுதல்; to be tightened,as a knot."புயஞ்சிக்கயாத்தபின்"(பாரத.வாரணா5) 3. ஒன்றனுள் அகப்படுதல்; to be caught ensnared." பொதிந்துசிக்க...மறையாக்கப்பின்" (சீவக. 1890) 4.கிடைத்தல்;to be obtaned."தரிப்பிடந்தான்..... தெருவாச் சிக்கினதும்" (தனிப்பா.1,323,18)

ம.,சிக்குக; க.சிக்கு, சிகு, சிர்கு, சிலிகு, சிலுகு;

தெ., கோத. சிக்கு; து.சிக்குனி, திக்குனி;பட.,

குவி. சிக்கு; துட. திக்க; கூ. செக்ப; கொண்.

சிர்கானா; கொலா. சிக்க் (தொங்குதல்); பர்.

சிர்ங்க்

சிங்கு–தல் šiṅgu-, 5.செ.கு.வி.(v.i.)1.குன்றுதல்;to diminish,wane,decrease."சிங்காவண்புகழ்ச் சிங்கப்புரத்து" (சிலப்.பதி.47). 2. இளைத்தல் (பிங்); to faint,fail,droop. 3.அழித்தல்; to decay, perish."சிங்காமைத் தங்கள் கவசமாய்"(கம்பரா. சரபங்க.26).4.கழிந்து போதல்;to elapse,pass away,as time."சிங்குமாற் காலம்" (கம்பரா மருந்து, 63).

ம.சிங்கு (பதர்); து.சிங்கு

சிடுசிடு–த்தல் šiḍu-šiḍu-,4.செ.கு.வி.(v.i.)சினக்குறிப்புக் காட்டுதல்; to knit the brow in anger,scowl, frown."சிடுசிடுத்த ராட்சதர் தன்மை" (இராமநா. உயுத்.16)

சிண்டு–தல் šiṇḍu-, செ.கு.வி(v.i)சருவுதல்; to touch with mischievous intention.

சிணாட்டு–தல் šiṇāṭṭu-, 5 செ.குன்றா.வி. (v.t) நோய் திரும்பவும் வருதல்; to relapse,as a disease.நீங்கின நோய் இவனைச் சிணாட்டிக் கொண்டிருக்கிறது (இ.வ.)

சிணுக்கு[1]–தல் šiṇukku-, செ.குன்றா.வி.(v.t.) 1. சிக்குப் படுத்துதல்; to complicate,entangle.2 உடன்பாடன்மை யையுணர்த்த முகத்தைக் கோட்டுதல்; to show facial signs of disapproval or protest .3.பிள்ளையைத் திருடுதல்;to kidnap

ம. சிணுக்குக

சிணுக்கு[2]–தல் šiṇukku-, 5 செ.குன்றா.வி.(v.t) 1.சீண்டுதல்; to be mischievous 2.சிறிது சிறிதாகத் தருதல்; to yield in small quantities.

தெ. சிநுகு

சிணுக்கு[3]–தல் šiṇukku-, 5 செ.கு.வி.(v.i)1.விட்டுவிட்டு வருதல்; to linger, relapse, as intermittent fever. 2. துளித்தல் (வின்); to ooze, issue in drops; to drizzle

சிணுங்கு–தல் šiṇuṅgu -, 5செ.கு.வி. (v.i.) 1. மூக்காலழுதல்; to whine, whimper. "ஏங்கியிருந்து சிணுங்கி விளையாடும்" (திவ். பெரியதி. 10 5:1) 2. விட்டு விட்டு மழை தூறுதல்(இவ.); to drizze, intermittingly. 3. கொஞ்சுதல் (சங்.அக.); to caress,fondle.

ம. சிணுக்குக, சிணுங்ஙுக; க. சினுகு

(முணுமுணுத்தல்); தெ. சனுகு

சித்திரி[1]–த்தல் šittiri-, 4 செ.கு.வி.(v.i) 1. சித்திர மெழுதுதல்; to paint,make fancy work.2. வண்ணித்துப் (அழகாகப்) பேசுதல் (வின்.); to paint in words,use rhetorical tricks in speech. 3.கற்பனை செய்தல்; to fashion, invent, as arguments; to fabricate."வஞ்சனை தெரிந்து சித்திரிப்பார்" (பெரியபு. திருநாவுக். 82) 4. ஒப்பனை செய்தல்; to beautify."திகழொளி தோன்றச் சித்திரித் தியற்றிய" (பெருங். வத்தவ. 17:76).

சிதகு–தல் šidagu-, *5 செ.குன்றாவி.* (v.t) *1.உருவுதல்.* (பிங்.); to strip off,rub or draw gently.*2.எழுதியதையழித்தல் (வின்);* to erase, strike off.

சிதம்பு–தல் šidambu-, *5 செ.கு.வி.*(v.i.)*1.பதனழிதல்;* to be spoilt by too much moisture; to become rotten. *2. நீரீல் நெடுநேரம் கிடத்தலால் கைகால்கள் வெளுத்தல்;* to be whitened, as the hands or feed by being dipped in water for a long time. 'கை சிதம்பிப் போயிற்று *(உ.வ). 3.நீர்ச்சாவியாதல்;* to be damaged or injured by excess of water,as crops,vegetation.

சிதர்¹– தல் šidar-, *2 செ.குன்றாவி.*(v.t.)*1.சிதறுதல்;* to scatter,strew.*2.பரக்கச்சொல்லுதல்;* to dilate upon, narrate, expount in detail. "*சிந்தாமணியின் சரிதஞ் சிதர்ந்தேன்"(சீவக.3144).3.காலாற்கிளைத்தல்;* to scratch, as a fowl." *சிதர்கால் வாரணம்" (நற்.*389

சிதர்²– தல் šidar-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1.பரத்தல்;* to spread over, to be diffused."*ஓடரி சிதரிய வொள்ளரி மழைக்கண்" (பெருங்.இலாவாண. 16:16). 2. சிதறி வீழ்தல்;* to breb scattered, strewn " *ஆரஞ் சிதர்ந்து போகச் சிந்துவார்" (சீவக.1106). 3. நைதல்;* to be worn out, as cloth. "*சிதரின சீரை "(பெரும்பாண்.468, உரை).*

க. சிதறுக; க. கெதர், சதறு, செகறு; தெ. செதறு; துு. சதருனி; கோத. கித்

சிதர்³– த்தல் šidar-, *4செ.குன்றாவி.*(v.t.) *1.பிரித்தல்;* to separate,split. "*சொற்சிதர் மருங்கின்" (தொல்.எழுத்து. 132). 2. வெட்டுதல்;* to cut hack. "*வாளினாற் சிதர்த்தல் வேண்டும்" (விநாயகபு. 1:18). 3. சிந்துதல் சூடா.);* to shed, scatter.

சிதறு¹– தல் šidaṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. இறைத்தல்;* to fall in different places,disperse scatter, as grain."*செந்நூல் யாத்து வெண்பொரி சிதிறி (திருமுருகு.231). 2 சிறிய* பொருள்களாய்த் தெரித்தல்; to be strewn in small particles, to spill, pour, shed. *தரையில் சிந்திய இதளியம்(பாதரசம்) சிதறியோடியது. 3.* சிறுதுண்டுகளாக உடைந்து போதல்; to be broken into pieces, to explode.*4. மிகுதியாகக் கொடுத்தல்;* to give liberally,bountifully. " *மாசித றிருக்கை" (பதிற்றுப்.*76).

ம. சிதறுக; க. கெதர், சதறு, செதறு;

தெ. செதறு; துு. சதறுணி; கோத. கித்

(தெளித்தல்);துட. கித்

சிதறு²–தல் šidaṟu-, *5 செ.குன்றாவி.*(v.i.)*1.கலைதல்;* to be shed, strewn, scattered, as a flock; to be disperse, as company.*2.அழிதல்;* to be squandered, wasted. *3. பயன்படாது போதல்;* to prove fruitless, become unqprofitable."*பதறாத காரியஞ் சிதறாது"(பழ). 4. களைதல்;* removing.

க. கெதறு

சிதை¹–தல் šidai-, *2 செ.கு.வி.*(v.i.) *1. தன்மை கெடுதல்;* to be injured, spoiled; to deteriorate,decay."*கூம்புவிடு பன்மலர்சிதைய"(அகநா.36). 2. சிதறுதல்;* to be scattered, dispersed. *ஆண்பொருநை வெண்மணல் சிதைய" (புறநா.36:5). 3. அறுபடுதல்;* to be sundered,broken, cut to pieces."*கவசம் பூம்பொறி சிதைய" (புறநா.13:2). 4.சினத்தல்;* to be angry." *நீ யுண்டக்காற் சிதையாரோ வுன்னோடு" (திவ்.நாய்ச்.7:9). 5.சொற்சிதைந்து வழங்குதல்;* to become corrupt, degenerate by lapse of time,as words."*சிதைந்தன வரினும்" (தொல். சொல்.402). 6. பொய்யாதல்;* to prove untrue:"*அவனுரையுஞ் சிதைந்ததால்" கம்பரா. ஊர்தேடு. 232). 7. வரம்பழிதல்;* to exceed limit or propriety. "*பேதை யுரைப்பிற் சிதைந்துரைக்கும்" (நாலடி. 71). 8. குலைதல் (வின்);* to disperse, scatter,as an army.*4.இசை முதலியன கெடுதல் (வின்.);* to become out of tune,as music; to go wrong,as rhythm.

ம. சிதயுக, சிதெயுக; க. சிதகு, சிதுகு; தெ.

சிதுகு

சிதை²– த்தல் šidai-, *4செ.குன்றாவி.*(v.t.) *1.கெடுதல்;* to injure,waste."*பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கும்"(கலித்.75:31).2.குலைத்தல்;*to disperse.scatter." *சிறந்த நண்பரைக் கொன்றுதன் சேனையைச் சிதைக்க"(கம்பரா.பிரமாத்திர. 187). 3. அழித்தல் ;* to destroy,ruin,demolish,kill."*தீவளி சென்று சிதைத்தாங்கு"(நாலடி.179). 4. சிரைத்தல்(யாழ்ப்.);* to shave,shear.5.*களைதல்(பிங்.);* to pluck out,uproot. 6. *தேய்த்தல்(பிங்.);* to rub.7.*ஒலித்தல்(திவா.);* to sound.8.*நசுங்குதல்;* crushing as plants.

ம. சிதய்க்குக.

சிந்தி¹–த்தல் šindi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.நினைத்தல்;* to think of, consider"*மறுமையைச் சிந்தியார் சிற்றறிவினார்" (நாலடி., 329). 2. மனனம் பண்ணுதல்;* to reflect,ponder. "*பொது வியல்பு.... கேட்டல் சிந்தித்த லென்னும் இருதிறத்தா னுணரப்படும்" (சி.போ.சிற். பாயி.பக். 4) 3. ஓகம் செய்தல்;* to meditate. "*எம்பெருமானென் சொல்லிச் சிந்திக்கேனே" (திருவாச.*5:25). *4. கேட்ட பாடத்தை மீண்டும் நினைத்தல்;* to revise lessons. *5. விரும்புதல்;* to desire. "*நம்மிறுதி சிந்தியாதவர் யார்" (கம்பரா யுத்த.மந்திரப்.* 106).

சிந்தி²–த்தல் šindi-, *4.செ.குன்றாவி.*(v.t.) *கவலைப்படுதல்;* to be concerned,sorrowfull."*கழிந்ததைக் குறித்துச் சிந்திக்கலாகாது"(உ.வ).*

சிந்து¹–தல் šindu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சிதறுபடுதல்;* to be strewn,spilled.*2.சொட்டுச் சொட்டாக ஒழுகுதல்;* to trickle,stream. *கண்ணீர் சிந்தியது.3.அழிதல்;* to be destroyed. "*இடர்தொடரா வினையான சிந்தும்" (தேவா.37:1).*

தெ. சிந்து; ம. சிந்துக.

சிந்து[2]–தல் šindu-,*5* செ.குன்றாவி. (v.t.) *1.*சிதறுதல்; to scatter or strew."தூயபொன் சிந்தி" *(திருவாச.9:3). 2.* நீக்குதல்; to remove."மருக்கஞ் சிந்தினார்" *(கம்பரா. மருந்து. 105). 3.*தெளித்தல்; to spill,sprinkle,shed. *4.*செலவழித்தல்;to spend, waste."சிந்து நெறிகளகலாமல் *(விநாயகபு. 2:66). 5.*பரப்புதல்; to cast on all sides,expand. "கண் சென்றுலாய்ப் பிறழச்சிந்தி.....ஆடும்" *(சீவக. 2287). 6.*மூக்கைச் சிந்துதல்; to blow the nose. *7.*அழித்தல்; to destroy." புர மூன்றும்... மூரல் கொடு சிந்தி"*(காஞ்சிப்பு. இருபத். 131). 8.*களைதல் *(பிங்.);* to pluck up, root out. *9.* பயனிலவாகச் செய்தல்; to render futile."பண்டு தானுடை வரங்கள் சிந்துவன்"*(கம்பரா. ஒற்றுக். 64). 10.*வெட்டுதல்; to cut off. "வாளாற் செறுநல் தங்களுடல் சிந்துவர்" *(கந்தபு.இரண்டா. நாட் சூர.உயுத் 341).*

தெ. சீது, க. சிந்து

சிம்பு[1]–தல் šimbu-,*5* செ.கு.வி.(v.i) *1.*துள்ளுதல்; to frisk about. *மாடு சிம்புகிறது. 2.*சினக்குறி காட்டுதல்; to be restive,to show signs of anger."*தாராரைச் சிம்பித் துரத்துவார்"(விறலிவிடு. 315).*

சிம்பு[2]–தல் šimbu-, *5* செ.குன்றா.வி. (v.i) *1.*சுண்டியிழுத்தல் *(உ.வ);* to pull hard."உன்னாலான மட்டுஞ் சிம்பிப்பார்" *(கொ.வ.). 2.*ஒன்றுகூட்டுதல்; to gather together. "விளக்கு மாற்றை நன்றாயச் சிம்பிக்கொள்" *(இ.வ.). 3.* நன்றாய்த் தேய்த்தல்; to rub well. " இவ்விடத்தை நன்றாயச் சிம்பு" *(இ.வ.).*

சிம்புளி–த்தல் šimbuḷi-, *4* செ.கு.வி.(v.i)*1.*கண்களை மூடிக்கொள்ளுதல்; to close or shut eyes, as in joy, terror, etc. "சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து" *(தேவா. 195,1). 2.* கண்ணிமை கொட்டுதல்; to flutter the eyelids.

ம. சிம்முக, சிம்புக, சீம்முக; க. சிமுடு;

தெ. சிமுடு

சிம்மா–த்தல் šimmā-,*6* செ.கு.வி.(v.i) இறுமாத்தல்; to be elated with pride.

சிம்மு–தல் šimmu-,*5* செ.குன்றாவி.(v.t)கொப்புளங் குத்தி விடுதல் *(இ.வ.);* to open a blister.

தெ. சிம்மு

சிமாளி–த்தல் šimāḷi-,*4* செ.குன்றாவி.(v.i) மிக மகிழ்தல் *(யாழ்அக).* to rejoice greatly.

சிமிட்டு[1]–தல்šimiṭṭu-,*5*செ.குன்றாவி.(v.t) *1.* கண்ணிமைத்தல்;to blink,wink. இருகண்ணுஞ் சிமிட்டாமுன்" *(இராமநா.உயுத் 107). 2.* சாடை தோன்றக் கண்சிமிட்டுதல்; to make a signal wink the eyes; to wink."சிமிட்டிக் கண்களினால்" *(திருப்பு.553). 3.* நுண்ணுத்தி (தந்திரஞ்) செய்து ஏமாற்றுதல் (வின்); to deceive artfully, impose, upon by stratagem.

ம. சிமிட்டுக; க. சிமிடு, சிவடு, சிவிடு;

து. சிமுடு

சிமிழ்[1]–த்தல் šimiḻ-, *4* செ.குன்றாவி.(v.t) *1.*கட்டுதல்*(பிங்.);* to tie, bind."பாசப்பிணிப்பினாற் சிமிழ்ப் புண்டு" *(பிரபோத 5:5). 2.*அகப்படுத்தல்; to entrap,catch. "வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று" *(குறள். 274).*

[இமிழ் →சிமிழ்-]

சிமிழ்[2]–த்தல் šimiḻ-,*4*செ.குன்றாவி.(v.t) *1.*கண்கொட்டுதல் *(பிங்);* to wink, blink.

மறுவ. சிமிட்டுதல்

சிர–த்தல் šira-,செ.குன்றாவி.(v.t.)*1.*தேய்த்தல்;to crush, grind.*2.*அழித்தல்*(வின்);*to destroy.

சிரற்று[1]–தல் širaṟṟu-,*5* செ.கு.வி.(v.i.)உரக்க வொலித்தல்; to shout,call loudly."சிரற்றின பார்ப்பினின்.... வெய்துயிர்த் தரற்றின" *(கம்பரா. கும்பக. 268)*

சிரற்று[2]–தல் širaṟṟu-,*5* செ.கு.வி.(v.t.)சினத்தல்; to be angry with."சிறுபாகராகச் சிரற்றாது"*(கலித். 97.29).*

தெ. சிரசிர

சிரறு–தல் širaṟu-,*5* செ.கு.வி.(v.t.)*1.*மாறுபடுதல்; to sulk, disagree."சிரறுபு சீறச் சிவந்த நின் மார்பு"*(கலித்.88,13). 2.*சிதறுதல்;to scatter."சிரறு சிலவூறிய நீர்வாய்ப் பத்தல்"*(பதிற்றுப். 22, உரை).*

சிராய்–தல் širāy-,*4* செ.கு.வி.(v.i.) *1.*உராய்ந்து ஊறுபடுதல்; to get scratched, as in the skin.

சிரி[1]–த்தல் širi-,*4* செ.கு.வி.(v.i.) *1.*ஒலியொழுப்பியோ முகக்குறிப்பின் மூலமோ பல் தெரிய உதடுகளை விரிப்பதன் மூலமோ மகிழ்ச்சி, ஏளனம் முதலியவற்றை வெளிப்படுத்துதல்; to laugh. "சிரித்தது செங்கட் சீயம்"*(கம்பரா.இரணியன்.127). 2.*கனைத்தல்; to neigh as a horse. "வாசி சிரித்திட" *(கம்பரா.சம்புமா. 8) 3.*மலர்தல்; to blossom. "சிரித்த பங்கய மொத்த செங்கண்" *(கம்பரா. கைகேசி.50).*

சிரி[2]–த்தல்širi-, *4*செ.குன்றாவி.(v.t.) ஏளனம் செய்தல்; to ridicule. "சகம்பேயென்று தம்மைச் சிரிப்ப" *(திருவாச.4:68).*

சிரை–த்தல்širai-,*4*செ.குன்றாவி.(v.t.)1.மயிர்கழித்தல்; to shave."காம்பறத் தலை சிரைத்து"*(திவ்.திருமாலை.38) 2.*செதுக்குதல்; to cut with a sickle."புற்சிரைத்தல் செய்யமாட்டீகளோ"ஈடு.3,9, 6),

ம. சிரய்க்குக; க.கெரெ, கிரி; தெ. கொருகுட;

து. கெரெபுனி; பட . கெரெ; கொலா. க்வர்க்;

மா.க்வெரெ

சில்லிடு–தல் šil-l-iḍu-, *20* செ.கு.வி.(v.t.).1.குளிர்ந்து போதல்; to become chill. 2.ஒலித்தல் to buzz,as bees. 3.அச்சங் கொண்டு நடுங்குதல் *(வின்.);* to thrill with a sudden sensation of fear. 4.சினம் நீர்க்கோப்பு முதலியவற்றால் முகஞ்சிவத்தல்; to blush,to be flushed with rage,to be red in the face form cold,from weeping.

ம.சில்லிடுக

சிலம்பு[1]**–தல்** šilambu-, *4* செ.கு.வி.(v.i.) *1.* ஒலித்தல்; to sound, make a tinkling noise."சீரார் ஞெகிழஞ் சிலம்ப" *(கலித்.90). 2.* எதிரொலித்தல்; to echo,resound."வளநகர் சிலம்பப் பாடி" *(அகநா.22).*

ம. சிலம்புக.

சிலமி–த்தல் šilami-, *4* செ.குன்றாவி.(v.t.)*1.*சிலம்பம் பண்ணுதல்*(யாழ்.அக);* to fence with the quarter- staff. *2.*அச்சுறுத்தல்; threaten.

சிலாப்பு–தல் šilāppu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* கழப்புதல் வீண்பொழுது போக்குதல் *(யாழ்ப்);* to idle away one's time.*2.* நடித்தல்; to profess,pretend.

சிலாவு[1]**–தல்** šilāvu-, *5* செ.கு.வி.(v.i.)சுழலுதல்*(வின்.);*to whirl,revolve.

சிலாவு[2]**–தல்** šilāvu-, *5* செ.கு.வி.(v.i.)வட்டமாய் வார்த்தல்*(இ.வ);* to pour circularly.

சிலிர்[1]**–த்தல்** šilir-, *4* செ.கு.வி.(v.i.)*1.*தளிர்த்தல்*(திவா.);*to sprout,shoot 2.உடல் புல்லரித்தல்;to get the goose-skin,from intense emotion.

E: shiver

சிலிர்[1]**–த்தல்** šilir-, *4* செ.குன்றாவி.(v.t.) மயிர் கூச்செறிதல்;to bristle,as the hair on the body."மெய்ம்மயிர் சிலிர்த்த தன்றோ" *(கம்பரா.மிதலை.98).*

சிலு[1]**–த்தல்** šilu-, *4* செ.கு.வி.(v.i.)*1.*பதமாதல்; to be properly boiled,as rice."செவ்வித் தினையரிசியால் ஆக்கின சிலுத்த சோற்றை"*(பெருபாண்.168,உரை).2.* சோறு பதனிழிதல்*(தஞ்சை.);* to be spolied,as cooked rice.*3.*சோறளிதல்*(யாழ்ப்.);* to overboil,as rice.*4.*கனிதல் *(யாழ்ப்.);* to ripen as fruits.*5.*சினத்தல்*(இ.வ.);* to get angry *6.*விள்ளுதல்*(இ.வ.);* to open split. *7.* குலுங்கக் காய்த்தல்*(வின்.);* to bear fruit in abundance,as a tree.

சிலு[2]**–த்தல்** šilu-, *4* செ.கு.வி.(v.t.)*1.*சிறிது சிறிதாய்ச் சொரிதல் *(வின்.);* to pour in small quantities,as grain in drops,as fluid.

சிலுக்கு–தல் šilukku-, *5* செ.கு.வி.(v.i.) *1.*பகட்டுதல்; to make a display."செய்யுள் பலகற்றுச் சிலுக்கி யிறுமாந்து"*(பஞ்ச. திருமுருக 884)*

சிலுசிலு–த்தல் šilu-šilu-, *4* செ.கு.வி.(v.i.)*1.*ஒலித்தல் *(யாழ்ப்);* to sound,as in frying. *2.*பட படவென்று பேசுதல்; to rattle away, talk without restraint. "சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பர்" *(நீதிவெண்.35).3.* சினத்தல் *(இ.வ.);* to get angry. *4.*சுறீரென்று ஒலித்தல் *(வின்.);* to make a hissing noise,as water in contact with burning wick *5.*தூறுதல்*(வின்.);* to rain gently. drizzle.*6.*சுரக்குளிர் வருதல்; to feel chill. *7.* குளிர்ந்திருத்தல்; to be cool. *8.* மயிர்க்கூச்செறிதல்; bristling*(சா.அக.).*

சிலுப்பு–தல் šiluppu-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.*மயிர் நெறிக்கச் செய்தல்*(வின்.);* to bristle,erect the hair,raise the quills,as a porcupine,to dishevel.*2.*சுழற்றுதல்; to whirl round. "ஒரு செண்டு சிலுப்பி" *(திவ். பெரியதி. 10:8:2). 3.* அசைத்தல்; to shake as one's head in disdain or displeasure. "ஏன் தலையைச் சிலுப்புகிறாய்? *4.* தயிர்கடைதல் *(உ.வ.);*to churn *5.*கலக்குதல்*(வின்.);* to stir, agitate.

சிலும்பு[1]**–தல்** šilumbu-, *5* செ.கு.வி.(v.i.) *1.*மயிர் முதலியன சிலிர்த்தல்; to stand on end,as man's hair,porcupine's quill,etc.,"உன்னரு மயிர் சிலம்ப"*(திருவாலவா. 27:39). 2.*கட்டை முதலியவற்றில் தும்பு முதலியன வெளிப்பட்டு நிற்றல்; to have an uneven surface by the rise of splinters, fibres etc.'கட்டை சிலும்பியிருக்கிறது' *(உ.வ.). 3.*பெருகி வருதல்; to flow out,gush out."மார்பங் குருதி சிலும்பிட"*(உபதேசகா. அயமுகி. 71). 4.*ஒலித்தல் *(சூடா.);* to sound. *5.*கலங்குதல்*(வின்.);* to be agitated,excited; to be shaken. *6.*அசைதல்; to move restively.'மாடு சிலும்புகிறது' *(உ.வ.).*

சிலை[1]**–த்தல்** šilai-, *4* செ.கு.வி.(v.i.)*1.*ஒலித்தல்; to sound, resound."காவலர் கொடுங்கோடு சிலைப்ப" *(பெருங். உஞ்சைக். 58:25). 2.* முழங்குதல்'; to roar,bellow."ஆமா நல்லேறுசிலைப்ப" *(திருமுரு.315). 3.* யாழொலித்தல் *(திவா.);* to twang, as musical instrument. *4.*கொட்டுதல்; to beat,as a drum."வலி துரந்து சிலைக்கும்..... துடி"*(புறநா.170). 5.*சினங்கொள்ளுதல்; to be angry. "செற்றங் கொண்டாடிச் சிலைத் தெழுந்தார்" *(பு.வெ. 3:7).*

சிலை[2]**–த்தல்** šilai-, *4* செ.கு.வி.(v.i.)*1.* பின்வாங்குதல்; to retreat." செருச்சிலையா மன்னர்"*(பு.வெ.1:16).*

சிவ–த்தல் šiva-, *3* செ.கு.வி.(v.i.) *1.*செந்நிறமாதல்; to redden, blush to be red."காமர் நெடுங்கண் கைம்மீச் சிவப்ப"*(பெருங். இலாவாண.14,63). 2.*சினத்தல்; to become angry."தேற்றாய் சிவந்தனை காண்பாய்நீ தீ தின்மை"*(கலித். 91).*

சிவணு[1]**–தல்** šivaṇu-, *11* செ.கு.வி. (v.i.) *1.*நட்புக் கொள்ளுதல்; to make friends."தன்னோடு சிவணிய வேனோர்"*(தொல் .பொருள். 27). 2* பொருந்துதல்; to go with."பல்லோ ரறியுஞ் சொல்லோடு சிவணி" *(தொல். சொல். 2.). 3.*அளவளாவுதல் *(பிங்.);* to hold intimate intercourse,to show intimacy.

சிவணு[2]**–தல்** šivaṇu-, *10* செ.குன்றாவி.(v.t.) *1.*அணுகுதல் *(திவா.);* to approach. *2.* ஒத்தல்;to resemble. "நெடுவரையெவையு மொரு வழித்திரண்டன சிவண" *(கம்பரா. நிந்தனை.1). 3.* பெறுதல்;to receive. "தனங்கிடைக்குமேற் சிவணுறாதவர் யாரே" *(தணிகைப்பு. திருநா. 16.)*

சிவிறு–தல் šiviṟu,*5* செ.கு.வி. (v.i.) *1.பரத்தல்;* to spread as water."ஊடுறு கமலக் கண்ணீர் திசைதொறுஞ் சிவிறியோட்"*(கம்பரா.மீட்சி. 348).*

சிழகு–தல் šiḻagu-,*7* செ.கு.வி. (v.i.) *1. விம்முதல்;* to choke with sobbing."சிழகிச் சிழகி யழுதால்"*(ஈடு.3.2:7).*

சிளை–த்தல் šiḷai-,*4* செ.கு.வி. (v.i.) சோர்தல்; to be weary,become tired.'அவனைப் போலே பிரிவுக்குச் சிளையாதபடி'*(ஈடு,9.5:3).*

சிற்று–தல் šiṟṟu-,*5* செ.கு.வி. (v.i.)*1. மனத்துயரடைதல்;* to be troubled in mind perplexed."மாநிலத் தெவ்வுயிர்க்குஞ் சிற்ற வேண்டா"*(திவ். திருவாய்.9.1:7).*

சிற–த்தல் šiṟa-,*3* செ.கு.வி. (v.i.)*1.*மேன்மை யுடையதாதல்; to be eminent,illustrious."சிறந்த நான்மறை முனிவர்" *(புறநா.6:19). 2. மேற்படுதல்;* to surpass,excel."தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"*(திருவாச.1,61). 3. அளவிற்கதிகமாகக் கனத்தல்;* to be unbearable heavy. "சிறியோன் பெரினது சிறந்தன்று மன்னே"*(புறநா. 75:5). 4. மிகுதல்;* to be abundant."பெரும் பெயல் சிறத்தலின்"*(மதுரைக். 244). 5.*இன்றியமையா திருத்தல்; to be indispensable."கற்பார்க்குச் சிறந்தது செவி"*(தொல்.சொல்.76,* சேனா.*). 6.*மங்கலமாதல்; to be auspicious,lucky. *7.*அன்பாதல்; to be dear. "சிறந்தானென் றேவற்பாற் றன்று" *(குறள், 515). 8.*மகிழ்தல்; to rejoice."உளஞ்சிறந்து புகலுவான்"*(கந்தபு. யுத்தகாண்.* ஏமகூ. *31). 9.அழகாதல் (வின்.);* to be graceful. *10.* நனிநாகரிகமாதல்; to be elegant.*11.*பிறங்கொளி வாய்ந்ததாதல்; to be splendid.

ம. சிறக்குக

சிறகடி–த்தல் šiṟagaḍi-,*4* செ.கு.வி.(v.i.) பறத்தற் பொருட்டுச் சிறகடித்தல் *(பு.வெ. 9:19, உரை);* to flap the wings as birds commencing flight.

சிறங்கி¹–த்தல் šiṟaṅgi-,*4* செ.குன்றாவி. (v.t.) மதியா திருத்தல்,இகழ்ச்சி செய்தல்; to despise.

சிறங்கி²–த்தல் šiṟaṅgi-,*4* செ.குன்றாவி. (v.t.) சிறங்கையால் அளத்தல் *(யாழ்ப்.);* to measure in the hollow of the hand

சிறாங்கி–த்தல் šiṟāṅgi-,*4*செ.குன்றாவி.(v.t.) *1.*உள்ளங்கை அளவாக்குதல்; to reduce to the size of the hollow of one's palm."கண்களைச் சிறாங்கித்துப் பருகலா யிருந்தபடி" *(திருவிருத் .11, வியா,81). 2.*தன்வய மாக்குதல்; to get into one's power or control."அவனைச் சிறாங்கிக்கும் ஸம்சிலேஷ தசையில்"*(ஸ்ரீவசன, 25). 3.* இரத்தல்; to beg " தன்னைச் சிறாங்கித்து இருக்கிற நம்மை அறிகிறதில்லை" *(ஈடு.6:10,அவ). 4.* கெஞ்சுதல்;to beg,entreat.

சிறாம்பி–த்தல் šiṟāmbi-,*4*செ.குன்றாவி.(v.t.) ஒருசேரத் திரட்டுதல்; to gather up in a mass."சிறாம்பித் தனுபவிக்கலாயிருக்கை"*(ஈடு, 69: 2,ஜீ).*

சிறாம்பு¹–தல் šiṟāmbu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* குறுகுதல்; to shrink, look small. "சிறாம்பி இரப்பாளனாய் நின்ற நிலை" *(ஈடு, 2. 6: 1). 2.* இளைத்தல்; to grow lean,become emaciated. "இத்தலையைப் பிரிந்து வந்த சிறாம்புத லெல்லாம்" *(ஈடு, 6. 1:11).*

சிறாம்பு²–தல் šiṟāmbu-,*5* செ.கு.வி.(v.i.) உராய்தல்*(வின்);*to graze, as a ball when passing.

சிறாம்பு³–தல் šiṟāmbu-,*4*செ.குன்றாவி.(v.t.) பிறாண்டுதல் *(வின்);* to scratch with a splinter or thorn.

சிறு³–த்தல் šiṟu-,*4* செ.குன்றாவி.(v.t.) 1. முட்டுகட்டை யிடுதல்; to hinder. 2.தடுத்தல் *(நாஞ்);* to resist.

சிறுக்கு–தல் šiṟkku-, *4* செ.குன்றாவி. (v.t.) 1. சிறுகச் செய்தல் *(தைலவ. தைல.1.);* to reduce in size or quantity,lesson. 2.சினத்தல் *(யாழ். அக);* to be angry with.

சிறுகு¹–தல் šiṟugu-,*7* செ.குவி. (v.i.) 1. சிறிதாதல்; to be small, short. 2. வளர்ச்சிகுறைதல்; stunted in growth. 3. சுருங்குதல்; to shirink, diminish. "சீறிற் சிறுகுந் திரு" *(குறள், 568). 4. நிலைதாழ்தல்;* to be impoverished, to sink low.

ம. செறுகுக

சி று ப் பி – த் த ல் šiṟuppi-, செ.குன்றாவி.(v.t.) *1.*சிறுகப்பண்ணுதல், குறைத்தல்; to reduce,diminish. *2.* மதிப்புக்குறைவு காட்டுதல் *(யாழ்.அக.);* to show scant courtesy to,to treat disrespectfully.

சிறை¹–தல் šiṟai-,*2* செ.கு.வி.(v.i.)நிறங்கெடுதல்; to turn pale,lose colour."பொருமுரண் சீறச் சிறைந்து"*(கலித்.91).*

ம. சிறயுக

சிறை²–த்தல் šiṟai-,*4* செ.குன்றாவி.(v.t.) சுழல விழித்தல்; to see rolling one's eyes."சிதரரி மழைக்கணுஞ் சிறைக்கும்"*(நீலகேசி,72).*

சின¹–த்தல் šiṉa-, *3* செ.குன்றாவி.(v.t.) வெகுண்டு கடிதல்; சீற்றமுறுதல்; to be enraged, to be very angry.

ம. சினக்குக; க. கினிம்பு; தெ. கினுக; து. கெணகு

சின²–த்தல் šiṉa-,*3* செ.கு.வி.(v.i.) புண் முதலியன வீங்கிச் சிவத்தல் *(இ.வ.);* to become red with inflammation,as tumour.

சினவு–தல் šiṉavu-,*5* செ.குன்றாவி.(v.i.) *1.* சினத்தல் வெகுளுதல்; கடிதல்; to be angry,indignant. "நீங்கிச் சினவு வாய்மற்று*(கலித். 116.) 2.*வெஞ்சினத்தால் வீறுகொண்டெழுதல்; to rise in anger or fury. "இருளுமுண்டோ ஞாயிறு சினவின்"*(புறநா.90). 3.* பொருதல்*(ஆ.நி.);* to fight,wage war.

ம. சினியுக; க. கினிசு; தெ. கினியு. துட .சினிம்

சினை[1]–த்தல் šiṉai-,*4* செ.கு.வி.(v.i.) *1. தோன்றுதல்;* to form *2. எழுதல்;உருவாகி வளர்தல்;* to arise;come into being. "*தும்மல் சினைப்பது போன்று*"*(குறள், 1203). 3. பூ அரும்புதல்(திவ்.இயற். திருவிருத். 68,வியா);* to bud. *4. தழைத்தல்;* to branch out an all sides."*எங்குமொக்கச் சினைத்துக் கொண்டு*"*(ஈடு, 8:1:3). 5. சிரங்கு புடைத்தல்(வின்.);* to rise in pimples,as prickly heat. *6. பருத்தல்(யாழ்ப்.);* to grow stout or fat,as a person used in contempt. *7.கருக்கொள்ளுதல்(வின்.);* to be impregnated as animals.

ம. சினய்க்குக சனய்க்குக

சினைப்படு–தல் šiṉai-p-paḍu-,*18* செ.குன்றாவி. (v.t.) *மாவினம் கருக்கொள்ளுதல்;* to impregnote. *(சா..அக.).*

Ó

சீ–த்தல் šī-,*4* செ.குன்றாவி.(v.t.) *1.கீறிக் கிளறுதல்;*to scratch,as fowls; to tear up earth,as pigs*;* to scrape. *2.துடைத்தல்;* to sweep off,brush away,wipe off. "*மென்பூஞ் செம்மலொடு நன்கலஞ் சீப்ப*" *(மதுரைக்.685). 3. போக்குதல்;* to expel,remove,root out. "*இருள் சீக்குஞ் சுடரேபோல் "(கலித்.100:24). 4.தூயதாக்குதல்(சூடா.);* to cleanse, purify. *5.கூர்மையாகச் சீவுதல்;* to sharpen. "*கணிச்சிப்போற் கோடு சீஇ*" *(கலித். 101:8).*

ம. சீ; க. சீ

சீண்டு–தல் šīṇḍu-,*5* செ.குன்றாவி. (v.t.) *1. தீண்டி யுணர்த்துதல்;* to tap,touch gently,as in drawing one's attention *2. தொந்தரவு செய்தல்;* to tease,vex.

ம. சீண்டுக

சீந்து[1]–தல் šīndu-,*5* செ.குன்றாவி. (v.t.) *சினத்தல்;* to be angry with. "*சீந்தா நின்ற தீமுக வேலான்*" *(சீவக. 1055).*

சீந்து[2]–தல் šīndu-,*5* செ.கு.வி.(v.i.) *1. சீறுதல்;* to hiss as a serpent. "*பைத்துச் சீந்திய வரவம்*"*(வாயுசங். கிரியாபூ. 40).*

சீந்து[3]–தல் šīndu-,*5* செ.குன்றாவி.(v.t.) *சிந்துதல்;* to cast,scatter. 2.*மூக்குச் சிந்துதல் (வின்.)* to blow,as the nose.

ம. சீற்துக, சீற்றுக; க.சீன், சீந்து, சீந்த்; தெ. சீந்து, சீது; து. சீந்த்ருனி, இம்புனி; கோண். ஈசானா; கூ. சரீந்து; குவி. சிந்தலி, பர். சிந்த், தீத்; கட. சீந்த்; குரு. சீர்னா; மா. இன்செ; பட. சீன்சு.

சீந்து[4]–தல் šīndu-,*5* செ.குன்றாவி. (v.t.) *மதித்தல்;* to have,regard for,respect. *யார் உன்னைச் சீந்துவார்கள் (சென்னை). 2.விரும்புதல் (யாழ்.அக.);* to desire.

சீந்து[5]–தல் šīndu-,*5* செ.குன்றாவி. (v.t.) *தீண்டுதல்;* to touch "*அக்குமணியைக் கொடுத்தாலார் சீந்துவார்கள்*" *(பஞ்ச. திருமுக. 1998).*

சீப்பு–தல் šīppu-,*5* செ.குன்றாவி. (v.t.) *சப்புதல் (உ.வ.);* to suck.

தெ. க. சீபு

சீய்[2]–த்தல் šīy-,*4* செ.கு.வி. (v.i.) உரைசுதல் *(யாழ்.அக.);* to rub.

சீய்[1]–த்தல் šīy-,*4* செ.குன்றாவி. (v.t.) *1. பெருக்குதல்;* to sweep. "*கடைத்தலை சீய்க்கப் பெற்றால்*" *(திவ். திருவாய். 10. 2:7. 2.வெட்டுதல்;* to cut down cut with adze. "*பாவக்காட்டைச் சீய்த்து (திவ். பெரியாழ் 5, 4, 7, வியா). 3.போக்குதல்;* to destroy,reomve.

சீர்[1]–த்தல் šīr-,*4* செ.கு.வி. (v.i.) *சினத்தல்;* to be angry. "*சுந்தரி பொறாளாய்ச் சீர்த்திடலும்*" *(கந்தபு. தெய்வயா. 34).*

சீர்[2]–த்தல் šīr-,*4* செ.கு.வி. (v.i.) *1. சிறத்தல்;* to be excellent,to be superior. "*பொருள் மற்றெனக்குமோர் பொருடன்னிற் சீர்க்கத் தருமேல்*" *(திவ். திருவாய். 8. 7 :6). 2. காலம் வாய்த்தல்;* to be suitable, fitting,as an opportunity. "*குத்தொக்க சீர்த்த விடத்து*" *(குறள் ,490). 3. ஒசை நயம்படநிற்றல்;* to fall into rhythmic movement." *சொற்சீர்த் திறுதல்*" *(தொல் பொருள். 324, உரை)*

ம. சீர்க்குக

சீர்[3]–த்தல் šīr-,*4* செ.கு.வி. (v.i.) *நிகழ்தல், நேரிடுதல்;* to happen,occur. "*புலந்தலைப் பெய்தலறிவுடன் சீர்க்குமன்றே*" *(நீலகேசி., 509).*

சீர்குலை–தல் šīr-kulai-,*4* செ.கு.வி.(v.i.) *1.ஒழுங்கு முறைகேடு;* to be in disorder,to be deranged. *2. ஒழுக்கங்கெடுதல்;* to loes one's character,chastity,as a woman. *3. நிலை கெடுதல்;* to be ruined in circumstances.

சீரழி–த்தல் šīr-aḻi-,*4* செ.குன்றாவி.(v.t.) *1. ஒழுங்கு குலைத்தல்;* to cause, disorder; to disarrange. *2. கற்பழித்தல்;* to ravish,as a woman. *3. நிலைகெடுத்தல் (வின்.);* to ruin

சீரி–த்தல் šīri-,*4* செ.கு.வி.(v.i.) *1.சிறப்புறுதல்;* to be magnificent. "*சீரித்த வேலவன் யாரையென்று*" *(தணிகைப்பு. களவு. 494).*

சீலங்கா–த்தல் šīlaṅ-gā-, *4* செ.கு.வி. (v.i.) *1. நோன்பு முதலியவற்றை மேற்கொள்ளுதல் (சிலப்.14:11, உரை);* to observe austerities.

சீலி–த்தல் šīli-,*4* செ.குன்றாவி.(v.t.) *1.நல்லொழுக்கத்தில் நிறுத்துதல்;* to lead one in the path of virtue. "*சீலிக்கு முறுதியாலே தேடருநட்புமாகும்*"*(ஞானவா.தாமவி. 15). 2 பழகுதல் (யாழ்ப்.);* to practise. accustom oneself to. "*உலக்கல் சீலிக்கப்பட்ட தோளினை யுடையான்*" *(*

பு.வெ.11, ஆண்பாற். 2, உரை).

சீவு–தல் šīvu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. செதுக்கிக் கழித்தல்;* to pare off,shave or scrape off."*புலவு சீவாப் புதுப்போர்வை" (காசிக. பிரமன்வே 8). 2. மரம் இழைத்தல்;* to smooth or polish by planing. *3. தலைவாருதல்;* to comb or brush the hair. "*சீவிய கூந்தல் (இராமநா. பாலகா. 19). 4. பெருகுதல்;* to sweep clean,as floor. "*களஞ்சீவித் தயாராயிருக்கிறது" (இ.வ.). 5. பல் முதலியவை துலக்குதல்;* to clean,as teeth "*பற்சீவுங் கோல்" (சூடா. 7:62).*

ம. சீவுக; க. சிவ்வு; தெ. சிவ்வு; பட .சீவு.

சீழ்கு–தல் šīḻgu-, *7* செ.கு.வி. (v.i.) *விம்முதல்;* to fetch, heave a sob. "*சீழ்கிச் சீழ்கி யழுதால்" (ஈடு, 3.2. : 7).*

சீறு[1]**- தல்** šīṟu-, *5.* செ.கு.வி. (v.i.) *1.பாம்பு முதலியன சீற்றத்துடன் வெகுளுதல்;* to hiss, as a serpent. *2. குதிரை முதலியன மூச்செறிதல் (வின்);* to snort,as a horse; to sniff. *3.மிகுசினங்கொள்ளுதல்;* to be infurated,to swell with rage. *4. தீ முதலியன முழங்கியெரிதல்;* to roar and blaze forth,as a flame.

சீறு[2]**- தல்** šīṟu-, *5.* செ.குன்றாவி. (v.t.) *1. சினத்தல்;* to get angry with. "*சீறுபேரழைத்தனவுஞ் சீறியருளாதே" (திவ். திருப்பா. 28). 2 அழித்தல்;* to destroy. "*எயில்கண் மூன்றுஞ் சீறு மெந்தைபிரான் (தேவா. 45,2).*

சீறு[3]**- தல்** šīṟu-, *5.* செ.கு.வி. (v.i.) *ஆந்தைபோல் கத்துதல்;* to hoot like an owl."*ஆந்தை சீறல் அறியும் பலன்" (கவுளிசா. 16).*

R

சுக்கு[1]**-தல்** šukku-, *5.* செ.குன்றாவி. (v.t.) *புணர்தல்;கூடுதல்;* to copulate. 2.*செய்தல்;* to perform,execute (*சா.அக.).*

தெ. சொக்கு

சுக்கு[2]**- தல்** šukku-, *5.* செ.கு.வி. (v.i.) *உலர்தல், செய்தல்;* to get dry.2. உணக்குதல்; to cause to dry,to dry in the sun.

சுட்கு- தல் šuṭ-ku-, *5.* செ.கு.வி. (v.i.)1.*வறளுதல்;* to grow dry. 2.*மெலிதல்;* to get reduced as emaciated.

சுட்டு- தல் šuṭṭu-, *5.* செ.குன்றாவி. (v.t.) *1. குறிப்பிடுதல்;* to point out;indicate. "*துன்னுநர் சுட்டவும் " (பரிபா. 19 ,54). 2. நோக்கமாகக் குறிக்கோளாய்க் கொள்ளுதல்;* to have in view, aim at,desire. *3. நினைத்தல் உன்னுதல்;* to think, consider." *சுட்டினும் பனிக்கும்" மலைபடு. 398). 4. நன்குமதித்தல்;* to honour."*இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (திமுருகு. 178).*

ம. சுட்டு; க. தெ., சுட்டு

சுடர்- தல் šuḍar-, *2.* செ.கு.வி. (v.1.) *1. ஒளிவிடுதல்;* to give light; to burn brightly; to shine, as a heavenly body; to sparkle as a gem; to gleam. "*சுடச்சுடரும் பொன்போல்" (குறள், 267)*

சுடு[2]**- தல்** šuḍu-, *8.* செ.குன்றாவி. (v.t.) *1. காயச்செய்தல்;* to warm,heat. "*சுடச்சுடரும் பொன்போல்" (குறள், 267). 2. எரித்தல்;* to burn up *3. பணியாரம் முதலியன சுட்டுச் செய்தல்;* to roast,toast, bake, fry, cook in steam. "*பிட்டுச் சுட்டுக் கொடுத்தனள்" (திருவாலவா. 30, 20). 4. காளவாயில் வேகவைத்தல்;* to burn,as bricks in kiln. "*மழை வருமுன் செங்கல்லைச் சுட்டுவிட வேண்டும்" (உ.வ.). 5. மருந்து நீற்றுதல்;* to calcine, as medicine. *6. சூடிடுதல்;* to cauterise, brand. *7. வெடிசுடுதல்;* to fire, as gun,fireworks. *8. வருத்துதல், துன்புறுத்துதல்;* to mortify,as the flesh; to injure as one's feelings. "*துன்பஞ் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு" (குறள், 267). 9. காயப்படுத்துதல்;* to inflict pain. *10. கெடுத்தல், அழித்தல்;* to destroy, ruin. "*குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பின்" (குறள், 1019). 11. நெருப்பில் வாட்டுதல்;* to roast. "*சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" (மூதுரை, 4).*

ம. சுடுக; க., பட. சுடு; தெ. சுடியு, சுட; து.

சுடுபுனி, சுட்பினி, துடுபுனி; கோண். சுர்ரானா; குவி. குதலி; கொலா. சுட், சுடு; குரு. குக்னா; மா. குடெ

சுண்டு[1]**- தல்** šuṇḍu-, *5.* செ.கு.வி.(v.i.) *1. நீர் முதலியவை வற்றுதல்;* to dry up, to be evaporated by heat *2. குன்றிப்போதல்;* to look small."*அச்செய்தியைக் கேட்டதும் அவள் முகம் சுண்டிப் போயிற்று" (உவ).*

சுண்டு[2]**- தல்** šuṇḍu-, *5.*செ.குன்றாவி.(v.t.) *1.வேகவைத்தல்;* to boil, stew, simmer *(செ.அ.க.). "அவள் கீரையைச் சுண்டினாள்" (உ.வ.).*

சுண்டு[3]**- தல்** šuṇḍu-, *5.*செ.வி.(v.i.) *1. நோவுண்டாகும்படி நரம்புமுதலியன இழுத்தல்;* to be tight,as a string, to contract, as a muscle in cramp *2.வயிறுஇசித்தல் (வின்.;* to pinch internally, gripe.

சுண்டு[4]**- தல்** šuṇḍu-, *5.*செ..வி.(v.i.) *1. விரலால் காசு முதலியவற்றைத் தெறித்தல்;* to shoot with the thumb or a finger,as marble;to filp up a coin for testing its ring; to tap with; the thumb or finger; coconut. *2. நாண் முதலியவற்றை இழுத்துத் தெறித்தல்;* to jerk, as reins; to snap,as a ball with a bow or a carpenters like on a plant. *3.இழுமம் (ரப்பர்) முதலியவற்றை இழுத்துவிடுதல்;* to draw out on elastic body and let it recoil with a jerk.

சுண்ணாம்படி–த்தல் šuṇṇāmbaḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) *வெள்ளையடித்தல்;* to white wash (*செ.அக).*

சுணக்கு–தல் šuṇakku-, *5* செ.குன்றாவி. (v.t.) *காலந் தாழ்த்துதல்;* to delay."*வேலையைச் சுணக்காதே" (நெல்லை).*

சுணங்கு¹–தல் šuṇaṅgu-,*5* செ.கு.வி. (v.i.) *1. வினையிற் சோர்தல்;* to be fatigued; jaded; to be emaciated. *2. காலந்தாழ்த்தல்;* to delay; loiter, linger. "இந்த இளவயதில் இப்படிச் சுணங்குதல் சரியா?" *(உ.வ.). 3. தடைப்படுதல்;* to hindered, interrupted. *4.* பொந்திகை யடையாதிருத்தல்; to be dissatisfied. "அவன் தன் திருமண முயற்சியில் சுணங்கிக் கொண்டிருக்கிறான்" *(உ.வ.). 5. கெஞ்சுதல் (வின்.);* to cringe,persist in requesting. *6.* இன்ப விளையாட்டுப் புரிதல் *(இ.வ.);* to dally, make amorous advances. *7.*சினங்கொள்ளுதல் *;* to get angry. *8.* ஊடுதல்; to feign displeasure, as a wife for her husband.

ம. சுணங்ஙுக்; க. சுணுகு; தெ. சுடுகு, சுணுகு

E .slack; **AS.**sleak; **Su.**slak; **Ice.** Slakr-

சுணை–த்தல் šuṇai-,*4* செ.கு.வி. (v.i.) *1. தினவெடுத்தல்;* to itch severely. *2 நமைச்சல்;* to tingle, as tongue after eating something pungent. *3. அரிப்பெடுத்தல்;* to be inflamed, as from the touch of a micro thorn plant,nettle. *4. அரித்தல்;* to inflammed,as from the hairs of a caterpillar.

ம. சுணய்க்குக

Mhr.šuṇašuṇa

சும்பு–தல் šumbu-,*5* செ.கு.வி. (v.i.) வாடிச்சுருங்குதல்; to wither *(சா.அ.க).*

சும்புளி–த்தல் šumbuḷi-,*4* செ.கு.வி. (v.i.) பேரொளி முதலியவற்றால் கண்கூசுதல்; to be dazed,dazzled,as the eyes. " சுமந்தநாகமுங் கண் சும்புளித்தவே" *(கம்பரா. மிதிலை.132).*

ம. சிம்பு

சும¹–த்தல் šuma-,*3* செ.கு.வி. (v.i.) *1. சுமையாதல்;* to become heavy as accumulated debt, interest; to be burdened. "இன்றைய உணவால் வயிறு சுமந்து விட்டது *(உ.வ.). 2.* சார்தல்; to devolve on, press upon. "அவனது ஈட்டமும் இழப்பும் என்போ்ற் சுமந்தன" *(உ.வ.). 3. மிகுதல்;* to increase, swell. "பழிபாவங்கள் சுமந்தன" *(உ.வ.).* "சுமந்தலையும் சும்மாடாய்த் திரிகிறது" *(பழ.).*

சும²–த்தல் šuma-,*3* செ.குன்றாவி. (v.t.) *1. தாங்குதல்;* to bear, ton support; to catty a burden, as a beast , to bear in the womb "பவழம் புனைந்த பருதி சுமப்ப" *(கலித். 80.). 2. மேற்கொள்ளுதல்;* to take upon oneself. "முயற்றி சுமந்தெழுந்து" *(திவ். இயற். பெரியதிருவந். 1). 3. பணிதல்;* to submit to humble. "செறுநரைக் காணிற் சுரக்க" *(குறள், 488).* "சுமந்தவன் தலையிலே சும்மாடு பத்து" *(பழ.). 4.*சூல் கொள்ளுதல் *;* to pregnant.

ம. சும; தெ. போசு

சுமத்து–தல் šummattu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. சுமை* யேற்றுதல்; to burden, to load. "சோற்றைச் சுமத்தி நீ பந்தித்து வைக்க" *(தாயு. பெரியநாயகி. 1.). 2. கடன்* முதலியன பொறுக்க வைத்தல்; to impose,as a debt, obligation; to make one liable. *3. குற்றம்* முதலியன ஏற்றுதல்; to impute, as fault.

ம. சுமத்து.

சுமர்–தல் šumar-, *3* செ.கு.வி. (v.i.) கனமாகுதல்; to become heavy. "சாமான் சுமருகிறது" *(உ.வ.).*

சுர¹–த்தல் šura-, *3* செ.கு.வி. (v.i.) *1.* ஊறுதல்; to spring forth to stream out. "ஆழியா னவனை நோக்கி யருள் சுரந்து" *(கம்பரா. விபீடண. 142). 2. உடலில் நீர் முதலியன* பெருகி வீங்குதல் *(இ.வ.);* to swell morbidly with secretion. *3. நிறைதல், பெருகுதல்;* to increase by steady accumulation, as wealth. "விருப்பஞ் சுரந்த சிலந்தி முடிசூட்டும் பெருமான்" *(திருவானை. உலா, 60).*

ம. சுரத்து; க. ஒசர்

சுர²–த்தல் šura-, *3* செ.குன்றாவி. (v.t.) *1.* பால் முதலியன சுரத்தல்; to secrete as milk. "கன்றைக் கண்டதும் பசுவிற்குப் பால் சுரந்தது" *(உ.வ.).2.* இடைவிடாது சொரிதல்; to pour forth continuously. "மேனின்றுதான் சுரத்தலான்" *(சிலப்1,9,உரை). 3.* மிக அதிகமாகக் கொடுத்தல்; to give abundantly. "நெடுந்தேர் களிறொடு சுரக்கும்... முசுண்டை" *(அகநா.249).*

சுரண்டு–தல் šuraṇḍu-, *3* செ.குன்றாவி. (v.t.) *1.*உகிர் *(நகம்)* முதலியவற்றால் பிறாண்டுதல் *(வின்.);* to scratch, scrape with finger's-nail. *2. உகிர் அல்லது விரல்* நுனியால் உடம்பைத்தீண்டிக் குறிப்பித்தல் *(வின்.);* to scratch a person with the tip of the finger to draw his attention. *3. தூண்டிவிடுதல் (வின்.);* to instigate. *4.* சண்டைக் கிழுத்தல் *(வின்.);* to pick up a quarrel. *5.* செலவாற் கரைத்தல்; to drain away one's property. "அவன் தன் சொத்தை யெல்லாம் சுரண்டி விட்டான்". *6.* கவர்தல்; to mis-appropriate by slow degree. "என் பொருளை யெல்லாம் சுரண்டி விட்டான்".

ம. சுரண்டுக; க. கெரண்டுக, கெரெ; தெ. கீறு; து. கெரெபுனி; கோத. கெக்ர்வ்; துட. கெர்வ்; பர். கிர், கிர்வ், கிர்ப்; குரு. கெர்ச்; மா.க்வெர்செ; பிரா. கர்கிங்.

சுரி¹–தல் šuri-, *2* செ.கு.வி. (v.i.) *1.*சுழிதல்; to be spiral,as conch "வெள்ளைச் சுரி சங்கொடாழியேந்தி" *(திவ். திருவாய் . 7. 3 : 1). 2.* மடிப்பு விழுதல்; to wrinkle. *3.* கடை குழலுதல்; curl. "சுரியிரும் பித்தை" *(பொருந. 160).*

சுரி²–த்தல் šuri-, *2* செ.கு.வி. (v.i.) *1. சுழிதல் (சங்.* அக.); to wind spirally. *2. திரைதல் (யாழ்.அக.);* to wrinkle. *3.* சுருளுதல்; to curl. *4.* வளைவாய்க் கிடத்தல்; to line in a circle. "சுரிக்கு மண்டலந் தூங்குநீர்" *(கம்பரா.தேரேறு.*

30). 5. மனஞ்சுழலுதல்; to be perturbed. "சுரிச்சிராது நெஞ்சே யொன்று சொல்லக் கேள்" (தேவா. 369:3).

சுரி[3]–த்தல் šuri-, *4* செ.கு.வி. (v.i.) *1. வற்றுதல்;* to get dried. "நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்" (கம்பரா. இரணிய.137). *2. சுருங்குதல்;* to shrink. *3. சேறாதல் (யாழ்ப்.);* to muddy,miry. *4. சேற்றிற்புதைதல்(யாழ்ப்.);* to sink as foot in mire.

சுரி[4]–த்தல் šuri-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. உள்ளொடுக்குதல்;* to draw in. "ஆமை தலைபுடை சுரிப்ப" (கம்பரா நாட்டுப். 18.). *2. முகஞ்சுளித்தல்;* to frown. "சுரித்த மூஞ்சி" (வின்.). *3. ஓலை முதலியவற்றில் துளையிடுதல் (யாழ்ப்.);* to bore as in *an olai or book leaf.*

சுருக்கு[1]–தல் šurukku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. குறைத்தல்;* to curtail, reduce. "முன்னிக்கடலைச் சுருக்கி" (திருவாச. 7:16). *2. உள்ளிழுத்தல்;* to compres, to contract, to draw in,as the tortoise its head. *3. ஆடை முதலியன சுருக்குதல்;* to pucker,tuck in. *4. வலை, பை முதலியன சுருக்குதல்;* to draw tight,as noose,net,string of a purse. "கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்" (கலித். 106). *5. குடை முதலியவற்றை யொடுக்குதல்;* to close, as umbrella to fold. *6. கட்டுதல்;* to tie,as an old book, to make up into a bundle. " நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கி" (புறநா.64). *7. திரண்ட கருத்து வரைதல்;* to epitomise,summarise. *8. ஓலை முதலியன அணிதல்;* to wear,as ear-ring "செம்பொனோலை சேடுபடச் சுருக்கி" (பெருங். மகத. 22: 225). *9. முலாம் பூசுதல்;* to gild. "இத்தேவர் பிரபையிற் சிடற்களிற் சுருக்கின பொன்" தெ.க.தோ. 2, 419).

க. சுர்க்கு, ம. சுருக்கு

சுருக்கு[2]–தல் šurukku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. சுருங்கச் செய்தல்;* causing anything to shrink. *2. வற்றச் செய்தல்;* causing to be reduced as decoction. *3. உருகிய மாழைக்கு மூலிகைச்சாற்றை விடுதல்;* administering juice to drugs to metals infusion.

ம. சுருக்குக; க. சுர்கு, சுக்க; தெ. சுருக்கு; து. சிர்க்காவுனி; கோத. சுர்க்; துட. தூட்; பர். சுர்க்கிப்

சுருங்கு–தல் šuruṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. ஒடுங்குதல்;* to shrink; to wrinkle. "வாளரப் பார்த்திறை பைத்துச் சுருங்க" (திருவாச. 6 :42). *2 சிறுகுதல்;* to lessen,dwindle. "சுருங்கு மருங்குல்" (திருக்கோ. 115). *3. சுருக்கமாதல்;* to be epitomised, summarised. *4. ஆடை முதலியன சுருக்கங்கொள்ளுதல்;* to be puckered, creased. *5. உள்ளடங்குதல்;* to close as flower,umbrella; to be furled, drawn in,as the limbs of tortoise. *6. ஒழுக்கம் முதலியவற்றினின்று தவறுதல்;* to fail,as in duty. "சொல்லின பரிசிற் சுருங்கலன்" (பதினொ. திருக்கண்ணப்ப. திருமறம். வரி, 52).

ம. சுருங்குக; க. சுர்கு; தெ. சுருண்கு; து. சுருண்டினி, சுருட்டனி; கோத. சுர்க்; துட . தூட்; கொலா. சுக்; பர். சுர்க்; பட. சுருங்கு

சுருட்டு–தல் šuruṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. சுருளச் செய்தல்;* to roll up, coil, curl. "பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்" (குருபரம்.19, ஆறா.). *2. கவர்தல், திருடுதல்;* to take away, steal. 'என் பொருட்களைச் சுருட்டப் பார்க்கிறான்'.

ம. சுருட்டு; க. சுருடு, சுருண்டு; தெ. தொரல்சு

சுருள்[1](ளு)–தல் šuruḷ(ḷu)-, *16* செ.கு.வி. (v.i.) *1. சுருளாதல்;* to become coiled; to roll; to curl, as hair "நீண்டு குழன்று... கடை சுருண்டு" (கம்பரா. உருக்காட்டு. 57). *2. சுருங்குதல்;* to shrivel,shrink,as leaf. *3. சோர்தல்;* to droop,as from heat,hunger. *4. துன்பத்திற்குள்ளாதல்;* to be reduced to severe straits.

[சுள் → (சுரு)→சுருள் (மு.தா 247)]

சுலவு–தல் šulavu-, *5* செ.குன்றாவி. (v.i.) *1. சுழலுதல்;* move round to revolve, hover about. "சுலவுற்றெதிர் போகிய தூவியனம்" (நைடத.அன்னத். 45).

சுவற்று–தல் šuvaṟru-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. வற்றச் செய்தல்;* to dry up, absorb, cause to subside. "துயர்க்கடல் சுவற்றினை" (கந்தபு. அக்கினி. 229) *2. முற்றும் அழித்தல்;* to extirpate destroy utterly. "வீரஞ் சுவற்றிய பின்" (காஞ்சிப்பு. வீரரா. 28).

சுவறு–தல் šuvaṟu-, *5* செ.கு.வி. (v.i.) *1. வற்றுதல்;* to dry up,evaporate. "கடல் சுவறின தோற்றம்" (கம்பரா. முதற்போர்.191) . *2. உறிஞ்சப்படுதல்;* to be imbibed absorbed. "வறண்ட நிலத்தில் நீர் சுவறிவிடும்" (உ.வ.).

சுவை[1]–த்தல் šuvai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. சுவையறிதல்;* to taste. *2. உண்ணுதல்;* to eat,chew,suck. "சுவைத்தொறமூஉந்தன் மகத்துமுக நோக்கி" (புறநா. 164). *3. முத்தமிடுதல்;* to kiss. "புல்லுதல் சுவைத்திடல்" (கந்தபு. இந்திரபுரி. 38). *4. புணர்ச்சியின்பம் நுகர்தல் (சங். அக.);* to experience, enjoy.

ம. சுவய்க்குக; க. சவி; தெ. சவிகொனு; து. சம்பி, சவி; கோத. சய்வ்; நா. சவத்; கொலா. சவ்வி (இனிப்பு)

சுவை[2]–த்தல் šuvai-, *4* செ.கு.வி. (v.i.) *1. சுவையாதல்;* to be palatable,agreeable, pleasing. "இக்கருமம் என்றனுக்குச் சுவைப்பதிலை" (திருக்காளத். பு.ஞானயோ.1).

சுழல்[1](லு)–தல் šuḻal(lu)-, *13* செ.கு.வி. (v.i.) *1. உருளுதல்;* to whirl,spin,rotate,roll,turn on an axis,as wheel." தேர்க்காலாழியிற் சுழன்றவை" (பெருங். வத்தவ. 12: 205). *2. வட்டமாகச் சுற்றுதல்;* to revolve in an orbit. "சுழன்றிலங்கு வெங்கதிரோன்" (திவ். பெரியதி. 9, 4:6). *3. சுற்றித் திரிதல்;* to roam, wander. "குழலின்படி சுழலும்" (கம்பரா. கங்கைப். 3). *4. அலைவுபடுதல்;* to be tossed about, driven

to and fro"காற்றால் கப்பல் சுழல்கின்றது" (உ.வ). 5. மனங்கலங்குதல்; to be agitated, troubled, distressed in mind. "சுழலுஞ் சுராசுர்க ளஞ்ச" (திவ்.இயற். 1, 48). 6. சோர்தல்; to droop,faint,languish. "அவன் பசியினாற் சுழன்று போனான்" (உ.வ.).7. பொறிமயங்குதல்; to be dizzy to swim, as eyes. "கண்ணுஞ் சுழன்று பீளையோடு" (திவ். பெரியதி. 7.4:1).

ம. சுழலுக; தெ. சுடியு

சுழற்று–தல் šuḻaṟṟu-,5 செ.கு.வி. (v.i.) 1. சுழலச்செய்தல்; to whil, spin, swing round, turn;to roll."நமுசியை வானிற் சுழற்றிய மின்னுமுடியன்" (திவ். பெரியாழ். 1,8,8). 2.சுற்றியாட்டுதல்; to brandish, flowish, wave. "சிலம்பக் கழியைச் சுழற்றுகின்றான்" (உ.வ.). 3. கிறுகிறுக்கச் செய்தல்; to cause dizziness, make giddy. "பித்தம் தலையைச் சுழற்றுகின்றது" (உ.வ.).

ம. சுழற்று

சுழி¹–தல் šuḻi-, 4 செ.கு.வி. (v.i.) 1. சுழிபோல் வளைவாதல்; to become curved, curled, involved, to form eddies,as on the surface of water."சுழியுங் குஞ்சிமிசை" (கம்பரா. எழுச்சி. 34). 2.வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகஞ் சுருங்குதல்; to be contracted, screwed up as one's face in disgust. "தழலுமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகஞ்சுழிய"(தேவா.1148,7).3.கவடமாதல்; to be cunning, guileful."சுழியப் பேசினான் (யாழ்ப்.).4.மனங்கலங்குதல்; to be distracted, agitated. "வரிவிழிகொண்டு சுழிய வெறிந்து" (பட்டினத்.திருப்பா.உடற். 3).5. இறத்தல்; to die. "அவன் சுழிந்து விட்டான்" (உ.வ.).

ம. சுழி; தெ. சுடியு; க. சுளி

சுழி²–த்தல் šuḻi-, 4 செ.கு.வி. (v.i.) 1. சுழற்காற்றுப் போல் சுழலுதல்; to whirl, as whirlwind. "சண்டமாருதஞ் சுழித்தடித்தா அர்த்து"(திருவாச.4:55). 2. நீர்ச் சுழியுண்டாதல்; to form whirl pools eddies."சுழித்துநீர் வருதுறை யாற்றை" (கம்பரா.குகப். 63). 3 . உடற் சுழியுண்டாதல்; to form curls; to have curls; to have curl-marks, as on the head or body. 4. கண்குழிதல் (வின்.); to be sunk,as eyes by age. 5. வேறிடத்தின்றி யொருங்கே திரண்டுநிற்றல்; to be gathered in one place,concentrated. "சுழித்து நின்றறாத கற்பிற் சுநந்தை" (சீவக. 2551). 6. அடிபடாமல் ஒதுங்குதல்; to shrink, recoil, as from blows."அவனடிக்குச் சுழித்துக் கொண்டான்" (உ.வ.).. 7. தவறிப்போதல்; to fail,as rain in drought,as candidate in examination. "இவ்வாண்டு மழை சுழித்து விட்டது" (உ.வ.).

ம. சுழிக்குக; க. சுழிடு, சுளி; தெ. சுடியு

சுழி³–த்தல் šuḻi-,4 செ.குன்றாவி. (v.t.) 1.சுழி உண்டாக்குதல்; to curl, incurve, curve,"சுழித்த செம்பொனின் றொளை புரை யுந்தி" (கம்பரா.சித்திர.21). 2.அலையச்செய்தல்; to cause to roam."வெங்கா னென்கான்முளையைச் சுழிக்கும் வினையால்" (கம்பரா. நகர். நீங்கு. 49). 3. தேர்வில் தேறாதபடிச் செய்தல்; to plough cause to fail in examination."ஆசிரியர் மாணவனை இந்த ஆண்டுத் தேர்வில் சுழித்துவிட்டார்". 4. செலவினங்களைக் குறைத்தல்; to curail,as expenses. "உள்ளதற்கேற்பச் செலவைச் சுழிக்க வேண்டும்" . 5. மறைத்தல்; to conceal, deposit, to hide."பணத்தை எங்கேயோ சுழித்து விட்டான்" (உ.வ.).6. சினத்தல்; to be angry "எமை யெமர்கள் சுழியாரோ" (தேவா.1148,7).

சுழியப்பேசு–தல் šuḻiya-p-pēšu-,5 செ.குன்றாவி. (v.t.) வருந்தச்சொல்லுதல் (யாழ்ப்.); to speak wounding words (செ.அ.).

சுள்ளிடு–தல் šuḷḷiḍu-, 20 செ.கு.வி. (v.i) 1. உறைத்தல்; being pungent to taste. 2. வலித்தல்; paining. 3. மனம் வருந்துதல்; being troubled in mind, to be stung to the quick.

சுளி¹–தல் šuḷi-,2 செ.கு.வி. (v.i.) 1. சினத்தல்; to be angry. "கழை காண்டலுஞ் சுளியுங் களியானை" (திருக்கோ. 111).

சுளி²–த்தல் šuḷi -,2 செ.குன்றாவி. (v.t.) 1. சினத்தல்; to be angry with. "சுளிமுகக் களிறனான்" (சீவக. 298). 2. காலால் துகைத்தல்; to tread or trample upon in fury. "கொலை வேழம்... நிழலையுந்தான் சுளிக்கும்"(பு.வெ.12, வென்றிப். 8). 3.வெறுத்தல் (சைவச.மாணாக். 33); to dislike,detest.

சுற்று¹–தல் šuṟṟu-,5 செ.கு.வி. (v.i.) 1. சுழன்று செல்லுதல்; to revolve, circulate,turn around,spin whirl."சக்கரம் சுற்றுகிறது". 2. சுற்றிப் போதல்; to take a circuitous or indirect course, meander, wind about."அவன் நேர்வழியிற் போகாமற் சுற்றிப்போகின்றான்". 3. அலைதல்; to move here and there,roam, wanter about."அவன் சும்மா சுற்றுகிறான்" 4. வளைந்தமைதல்; to be coiled, to lie encircling."காலிற் சுற்றிய நாகமென்ன" (கம்பரா.நீர்விளை.11). கிறுகிறுத்தல்; to be giddy, dizzy."பித்தத்தினால் தலை சுற்றுகிறது". 6.மனங் கலங்குதல்'; to be perplexed with difficulties.

ம. சுற்றுக; க. சுற்று; தெ. சுட்டு; து. சுத்துளி; கோத. சுச்; துட. தூத்; குட. சுதித்; கொலா. சுட்; நா. சுட்டி; பர். சுத்த; கட. சுடட்; குவி. சுத்தலி; பட. சுத்து

சுற்று²–தல் šuṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சுற்றி வருதல்; to go round,to circle."போகா தெறும்பு புறஞ்சுற்றும்" (நாலடி.337).2.தழுவுதல்;to entwine, embrace." கொடிகள் ஒன்றையொன்று சுற்றிக்கிடக்கின்றன". 3. விடாது பற்றுதல்; to follow unceasingly."அவன் அவனைச் சுற்றிக் கொண்டே இருக்கிறான்". 4. சூழ்ந்திருத்தல்; to encompass, surround."தோகை மாதர்கள் மைந்தரிற் றோன்றினர் சுற்ற" (கம்பரா. பிணிவீ.45). 5. வளையச் சூடுதல்; to wear around."குடர் நெடுமாலை சுற்றி" (திருவாச. 6:30). 6. உடுத்துதல் (திவா.); to tie around the waist, invest,gird." கூறையரைச் சுற்றி வாழினும்" (நாலடி, 281). 7. வளையக்கட்டுதல்; to coil up, as rope."சுற்றுஞ் சடைக் கற்றைச் சிற்றம்பலவர்" (திருக்கோ. 134). 8. சுருட்டுதல்; to roll up,as mat."பாயைச் சுற்றுக". 9. சுழற்றுதல்; to wave, whirl,brandish."சிலம்பஞ்

சுற்றுகிறான்". 10. கம்பி கட்டுதல்; to string, fasten with fine wire, as coral beads,pearls." பவழ மாலையைச் சுற்றிக் கொண்டு வா". 11. கவர்தல்; to grasp, appropriate, steal. "அவனுடைய பொருளை யெல்லாம் சுற்றிக் கொண்டான்" (தெ.க.தொ.2, 194). 12. வஞ்சித்தல்; to circumvent, accomplish by trickery.

சுரண்டு–தல் šuṟaṇdu-, 5 செ.குன்றாவி. (v.t.) சுரண்டியெடுத்தல்; removing by scraping as in wound (சா. அக.).

ம. சுரண்டு; க. கெரண்டு

சுனை–தல் šuṉai-, 4 செ.கு.வி. (v.i.) 1. குழைதல் (பிங்.); to be soft and pulpy to be mashed. 2. வாடுதல்; to fade, droop.

N

சூட்டு[1]–தல் šūṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அணிவித்தல்; to adorn,as with garlands,chain-ornaments,etc."பாதமலர் சூடுகின்றிலை,சூட்டுகின்றதுமிலை" (திருவாச. 5:31). 2. ஒருவரை பாமாலையாற்புனைதல்; to honour, as with a poem. 3. மணிமுடி புனைவித்தல்; to crown,as with diadem."தொன்னெடு முடி சூட்டுகின்றான்" (கம்பரா.அயோத். மந்திரப். 90). மன்னன் தன் மகனுக்கு மணிமுடி சூட்டினான்" (உவ.). 4. பட்டம் முதலியன கொடுத்தல்; to confer,as title."பாவாணருக்குப் பாவலரேறு " மொழி ஞாயிறு" என்று பட்டஞ் சூட்டினார் . 5. பரப்புதல்; to spread over,as an army. "நிலவரை சூட்டிய நீணெடுந் தானை" (புறநா.228:6). 6. ஆணை முதலியன செலுத்துதல்; to extend, as one's sway. "நீரக விருக்கை யாழிசூட்டிய... முன்னோர் போல" (புறநா. 99:3). 7. சுமத்துதல் (யாழ்ப்.); to attribute. 8. இயலாத ஒன்றை மேற்கொள்ளும்படி தூண்டிவிடுதல் (இக்.வ.); to encourage one in undertaking a task beyond his means, yoke a person to a difficult task.

சூடு[1]–தல் šūḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அணிதல்; to wear, especially on the head."கோட்டுப் பூச் சூடினுங் காயும்" (குறள், 1313). 2. பெயர் முதலியன சூட்டிக் கொள்ளுதல்; to be invested, as with a title. தமிழர்கள் தம் பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூடுதலே தகவாகும்.

சூடு[2]–தல் šūḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பரவுதல்; to spread. 2. வளைந்துபோதல்; to become bent.warped. "வண்டிப் பாதை சூடியிருக்கிறது" (நாஞ்.) 3. கவிதல் ; to surround, envelope."வானஞ் சூடி மலர்தலை யுலகத்துள்ளும்" (பெரும்பாண்.409)4.உண்ணுதல்; to eat."பிரசாதத்தைச் சூடி... "(ஈடு, 2. 7. 5.).

சும்பு[1]–தல் šūmbu-, 5 செ.கு.வி. (v.i.) மெலிந்து வாடுதல்; to wither,as hand to be blighted,as fruit; to be shrunk as countenance by sorrow."மல்லாரும் புயமென்றேன் சும்பற் றோளை" (தனிப்பா. 1, 274, 16). 2.சவைத்தல் (இ.வ.); to suck, fondle with lips.

சும்பு[2]–தல் šūmbu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கை, கால் முதலிய உறுப்புகள் குச்சியாகமெலிதல்; limb becoming thin as a stick."அவளது வலது கால் சும்பி யிருக்கிறது" (உவ.). 2. (முகத்தைக் குறிக்கும்போது) சிறிதாதல், குறுகுதல்; shrunken face."செய்தித்தாளில் தேர்வில் அவன் தோல்வியுற்றான் என்று கண்டதும் அவன் முகம் சும்பிவிட்டது" (உவ.).

சூர்[1]–தல் šūr-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தனிமைப் படுத்துதல், பொறுக்குதல்; to pick, separate. 2. வகிர்தல், பிளத்தல்; to bore, to pierce, scoope out."பழம் நல்லதா என்று சூர்ந்து பார்" (இ.வ.).

ம. சூருக

சூர்[2]–த்தல் šūr-, 4 செ.குன்றாவி. (v.t.) அச்சுறுத்தல்; to frighten. "சூர்த்துக் கடை சிவந்த சுடுநோக்கு" (சிலப். 5 :84).

சூர்[3]–த்தல் šūr-, 4 செ.கு.வி. (v.i.) 1. கொடுமை செய்தல் (திருமுரு. 48, உரை) ; to be cruel. 2. சுழலுதல்; to revolve, whirl round."சூர்த்த நோக்கு" (அக.நி.).

சூர்[4]–த்தல் šūr-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கவர்தல் (யாழ்ப்.); to get by unfair means, as property.

சூல்[1](லு)–தல் šūl-, 3 செ.கு.வி. (v.i.) 1. கருக்கொள்ளுதல்; to become pregnant." சூலாமை சூலிற் படுந்துன்பம்" (சிறுபஞ். 75).

சூல்[2](லு)–தல் šūl-, 8 செ.குன்றாவி. (v.t.) 1.தோண்டுதல்; to scoop, dig out, pierce. "நுங்கு சூன்றிட்டன்ன கண்ணீர்மை" (நாலடி. 44). 2. அறுத்தல்; to cut off.

சூழ்[1]–தல் šūḻ-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. சுற்றுதல்; to wind,warp round. "பூப்பால் வெண்டுகில் சூழ்ப்ப" (பரிபா.10 :80). 2. சுற்றிமொய்த்தல்; to surround,hover about. "சூழ்த்து மதுகர முரலும்" (திருவாச. 5 :16).

சூழ்[1]–த்தல் šūḻ-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சுற்றியிருத்தல்; to encompass, surround, envelope. "அறை கடல் சூழ்வையும்" (நாலடி, 230). 2. சுற்றி வருதல்; to go round, as in temple from left to right, hover about, flow around. "சூழ்கதிர் வான் விளக்கும்" (பு.வெ.9:16). 3. ஆராய்தல்; to consult,to deliberate. "நின்னோடு சூழ்வ றோழி" (கலித். 54). 4. கருதுதல்; to intend, to think over. 5.தீயசூழ்ச்சிக்குத் திட்டமிடல் ;to conspire. "கொடியவன் கடிய சூழ்ந்தான்" (சீவக. 261). 6. தேர்ந்தெடுத்தல்; to select. "சூழ் புரவித்தேர் " (பு.வெ. 9 16). 7. அறிதல் (சங்.அ.க.); to know. 8. பண்ணுதல்; to construct, to create. "பாவை சூழ்ந்தும் (பட்டினப். 102). 9. எழுதுதல்; to draw. "தொய்யில்சூ ழிளமுலை" (கலித். 125).10. தாக்குதல் (யாழ்ப்.); to encounter.

ம.சூழுக; க.சொழல்; தெ.சுடியு;து.சுயிபுனி, சுலிபினி; துட. துட்ய; கூ. டொட்க; குவி. தூர்லிகியாலி

சூழ்த்து–த்தல் *šūḻttu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *சூழச்செய்தல்;* to cause to surround, to involve. "*உனைப்பாடாதவர்களைப் பல்வினைக்கே சூழ்த்துதி*" *(திருநூற். 20).*

சூழ்போ–தல் *šūḻ-pō-, 5 செ.குன்றாவி.* (v.t.) *1. சுற்றிப்போதல்;* to go round. "*சுடுமண்ணேற்றி யரங்கு சூழ்போகி*" *(மணிமே. 18 : 33.). 2.வலம் வருதல்;* to go round from left to right as in temple."*தோகையோர் பங்கன்றாளி லுவகையின் வணங்கி சூழ்போந்து*" *(கூர்மபு. தக்கன்வேள் .18). 3. வளைத்தல் (திவா.);* to surround, hover about. "*சுணங்குந் திதலையுஞ் சூழ்போந்து*" *(ஆதியுலா. 177). 4. சுற்றிக் கிடத்தல்;* to lie around. *5. ஆராய்தல்;* to deliberate. "*மன்னு நரகன் றன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து*" *(திவ். பெரியாழ். 4.3:3).*

சூள்–தல் *šūḷ-, 5 செ.கு.வி.* (v.i.) *1. ஆணையிடுதல்;* to take an oath *2. வஞ்சினங்கூறுதல்;* to vow."*சூட்கின்ற வீரம்*" *(கம்பரா. நிகும்ப. 82).*

சூளுறு–தல் *šūḷuṟu-, 20 செ.கு.வி.* (v.i.) *1. ஆணையிடுதல்;* to swear, to take oath. *2. வஞ்சினம் கூறுதல்;* to take a vow."*உண்ணா நோன்பி தன்னொடுஞ் சூளுற்று*" *(மணிமே. 3:102).*

க. சூருளிசு

சூறு–தல் *šūṟu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *சூழ்தல்;* to surround, encompass."*சூறிய விமையோர்*" *(பாரத.காண்டவ. 31).*

சூறையாடு[1]–தல் *šūṟai-y-aḍu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொள்ளையடித்தல்;* to plunder, pillage." *அறிவினைச் சூறையாட*" *(கம்பரா. நகர்நீ. 200.).*

சூறையாடு[2]–தல் *šūṟai-y-aḍu-, 5 செ.கு.வி.* (v.i.) *1. தலை சுற்றல்;* to be dizzy from disease, from hunger. *(செ.அ.க.)*

சூறைவிடு–தல் *šūṟaiviḍu-, 18 செ.குன்றாவி.* (v.t.) *1.கொள்ளையிடச்செய்தல்;* to permit plunder. *2. பொருள்களைப் பிறர்க்கு வாரிவிடுதல்;* to give one's things to be appropriated.promiscuousiy.

தெ. சூரவிடுச்சு; க. சூறெவிடு.

சூனைப்பற்று–தல் *šūṉai -p- paṟṟu 5 செ.கு.வி* (v.i.) *1. வயிறு வீக்கமடைதல்;* to swell as of the abdomen *(சா.அக.).*

சூனைவிழு–தல் *šūṉai -viḻu-, 2 செ.கு.வி* (v.i.) *1. சொத்தை விழுதல்;* to be rotten at the core as teeth.

br

செ–த்தல் *še-, 4 செ.குன்றாவி.* (v.t.) பொருந்துதல், ஒத்தல், கருதுதல்; to intend; to purpose; to design. "*வெப்புடை யாடூஉச் செத்தனென்*" *(பதிற்றுப். 86).*

செகு–த்தல் *šegu-, 4 செ.குன்றாவி.* (v.t.) *1. கொல்லுதல்;* to destory, kill. *2. வெல்லுதல்;* conquer. "*பொருப்பெலாம் வானகஞ் செகுக்குமே*" *(சீவக. 1903).*

செங்காரி–த்தல் *šeṅ-gāri-, 4 செ.கு.வி.* (v.i.) *1. சினம், வெயில் கடுமை இவற்றால் முகஞ்சிவந்து காட்டுதல்;* to flush or redden, as face due to anger or exposure to scorching heat. *2. பருவ மழையின்றி பயிர்கள் கதிர் வாங்காது செந்நிறமாதல்;* to redden without forming ears, as paddy, crop for want of seasonal rains.

செடி–த்தல் *šeḍi-, 4 செ.கு.வி.* (v.i.) *கொடி தழைகள் அடர்தல் (யாழ்ப்.);* to grow bushy, shoot out, as sprays, foliage.

ம. செடிக்குக.

செண்ணு–தல் *šeṇṇu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *அழகு படுத்துதல் (அகநா. 59, உரை);* decorate, dress up.

செது–த்தல் *šedu-, 4 செ.கு.வி.* (v.i.) *1. ஒளி முதலியன மழுங்குதல்;* to get blunt; to lose lustre. "*செதுக்கணார*" *(புறநா. 261:9). 2. வற்றியொடுங்குதல் (புறநா.261:9, உரை);* to shrink. *3. சோர்தல்;* to be weak. "*செதுகாற் குரம்பை*" *(அகநா. 63).*

செதுக்கு–தல் *šedukku-, 5 செ.கு.வி.* (v.i.) *1. புல் முதலியன செதுக்குதல்;* to cut off a surface, as in cutting grass; to pare, shave off. *2. மரம் முதலியன செதுக்குதல்;* to plane, how with an adze, chisel. "*கட்டையைச் செதுக்கிக் கத்திக்குப் பிடி போட்டான்*".

ம. செதுக்கு; க., பட. கெத்து; தெ. செக்கு.

செதும்பு–தல் *šedumbu-, 5 செ.கு.வி.* (v.i.) *ஈரம் உறைத்தல்;* to become dam and moist as from excessive sinkling of water; to be soaked. *செதும்ப நீர்தெளி (இ.வ.).*

செந்தலி–த்தல் *šen-dali-, 4 செ.கு.வி.* (v.i.) *1. செழிப்பாதல் (திவ். திருவாய். 6. 8:4 பன்னீ.);* to be rich, fertile, as soil. *2. செவ்வியுறுதல்;* to be fresh and attractive. "*நம்முகம் பண்டுபோலே செந்தலித்திருக்க நாம் காண்பதெப் போதோ?*" *(திவ். திருநெடுந். 12, வியா. பக். 107).*

செந்தளி–த்தல் *šendaḷi-, 4 செ.கு.வி.* (v.i.) *செந்தலி - பார்க்க;* see šen-dali-.

செந்தூரி–த்தல் *šendūri-, 4 செ.கு.வி.* (v.i.) *சிந்தூரமாக்குதல் (யாழ்.அக.);* to calcine.

செப்படி–த்தல் *šeppaḍi-, 4 செ.கு.வி.* (v.i.) *செப்படி வித்தை செய்தல்;* to practise sleight of hand. "*செப்படிப்பவரி னின்று சிரித்தனன்*" *(பாரத. புட்ப. 106).*

செப்பனிடு–தல் *šeppaṉiḍu-, 18 செ.குன்றாவி.* (v.t.) *1. பழுதுபார்த்தல், சீர்திருத்துதல்;* to repair, correct.

"சாலைகளைச் செப்பனிடக் கேட்டுள்ளோம்". *2.* சமப்படுத்துதல்; to level, make even. *3.* மெருகிடுதல்; to polish.

செப்பு[1]–தல் šeppu-, *5* செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, speak, declare, tell. "செய்ததும் வாயாளோ செப்பு" *(பரிபா. 6:67).* .

ம. செப்புக; *தெ.* செப்பு; *குரு.* கெப்னா.

செம்பளி–த்தல் šembaḷi-, *4* செ.குன்றாவி. (v.t.) அச்சம் முதலிய காரணம் பற்றிக் கண்ணை இடுக்கிக் கொள்ளுதல்; to close the eyes, as in terror. "அஞ்சிக் கண்ணைச் செம்பளித்தவாறே" *(ஈடு. 5.5:3).*

செம்பூறு–தல் šembūṟu-, *5* செ.கு.வி. (v.i.) களிம்பு உண்டாதல்; to form verdigris, as on copper.

செம்மா[1]–தல் šemmā-, *6* செ.கு.வி. (v.i.) செம்மையாதல்; to be right, to become proper. "என் கண்ணன் கள்வ மெனக்குச் செம்மாய் நிற்கும்" *(திவ். திருவாய். 9.6:6).*

ம. செம்மாக்குக *(அழகாக்குதல், நேராக்குதல்)*

செம்மா[2]–த்தல் šemmā-, *6* செ.கு.வி. (v.i.) *1.* இறுமாத்தல்; to be elated with pride, to be haughtly, to assume superiority. "மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்" *(குறள்.1074). 2.* மிகக் களித்தல்; to be over - joyed, intoxicated with joy. "மதுவுண்டு செம்மருந் தண்கரும்பு" *(பெரியபு. ஆனாய. 20). 3.* வீறுபெறுதல்; to be majestic in manner or bearing. "அண்ணல் செம்மாந் திருந்தானே" *(சீவக. 2358).*

செம்மு[1]–தல் šemmu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* மூடுதல்; to shut, close, as door. "திண்கதவஞ் செம்மி" *(திவ். இயற். 3:12). 2.* தூர்த்தல்; to close up, fill up. "தூளி..... யானை மதத்தொளை செம்மிற் றன்றே" *(கம்பரா. எழுச். 52). 3.* மருந்துப் பண்டங்களைப் புடமிடும் பொழுது சீலை மண்கட்டுதல் *(வின்.)*; to apply lute to a cloth covering a medicinal substance, before heating. *4.* பையை நிறைத்து அதன் வாயைத் தைத்தல் *(வின்.)*; to stuff and fill, as pillow or bag, and sew up the end. *5.* புண்ணைக் கீறிவிடுதல்; to open, as a sore. *6.* புடைத்தல் *(இ.வ.)*; to beat soundly, thrash. *7.* கிட்டித்தல்; to consolidate. தோண்டிய குழிக்குள் தூணை நிறுத்திச் சுற்றிலும் சல்லி மண் முதலியன இட்டுச் செம்மினார்கள்.

செம்மு[2]–தல் šemmu-, *5* செ.கு.வி. (v.i.) *1.*கலங்குதல்; to be disturbed, agitated. *2.* கண் கலங்கி வீங்குதல் *(வின்.)*; to be swollen and bleared, as the eyes. *3.* வயிறு பொருமுதல் *(வின்.)*; to be hard, as belly through indigestion. *4.* நிறமுதலியன பரவுதல் *(வின்.)*; to spread, as colour.

செமி–த்தல் šemi-, *4* செ.குன்றாவி. (v.t.) செரித்தல்; to digest. "நஞ்சையுண்டு செமிப்பீரையா" *(திருக்குற். ஊடற். 19. செந். 25, 392).*

செய்–தல் šey-, *1* செ.குன்றாவி. (v.t.) *1.* இயற்றுதல்; to do; perform, make, create, accomplish. "செயப்படு பொருளைச் செய்தது போல" *(தொல். சொல். 248).* செய்வதைத் திருந்தச் செய். *2.* உண்டாக்குதல்; to cause, effect. "செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காமம்" *(கலித். 140). 3.* பொருளீட்டுதல்; to acquire. "ஈதற்குச் செய்க பொருளை" *(திரிகடு. 90). 4.* ஒத்தல்; to resemble. "வேனிரை செய்த கண்ணி" *(சீவக. 2490).*

ம. செய்யுக; *க.* கெய், கெய்; *தெ.* சேயு; *து.* கைபினி; *கோத.* கெய்; *துட.* கிய்; *பிரா.* கன்னிங்க்; *குட.* கெய்; *கோண்.* கீபானா; *கூ.* கிவ. கிய; *குவி.* சீனை; *நா.* அக்; *கொலா.* கக்; *கட.*கெய்; *பட.* கீய்.

செயலறு–தல் šeyal-aṟu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* வலியழிதல் *(சூடா.)*; to be powerless, to be laid prostrate; to be helpless. *2.* ஒழுக்கங்கெடுதல் *(உ.வ.)*; to swerve or go astray from the path of virtue. *3.* அழகழிதல் *(இ.வ.)*; to lose beauty, to be in disorder.

செயலிழ–த்தல் šeyal-iḻa, *3* செ.கு.வி. (v.i.) செயற்படும் திறனை இழத்தல்; become impaired. பக்கவாதையால் ஒரு கையும் காலும் செயலிழந்து விட்டன.

செயற்படு–தல் šeyaṟ-paḍu, *20* செ.கு.வி. (v.i.) செயல் நிகழ்த்தி இயங்குதல்; function; operate; work. நாளை அலுவலகம் வழக்கம்போல் செயற்படும்.

செயிர்–த்தல் šeyir-, *4* செ.கு.வி. (v.i.) *1.* சிவத்தல்; to show sign of red. *2.* குற்றஞ்செய்தல்; to commit an offence. "செயிர்தீதெழு தெவ்வர்" *(பொருந. 120).*

செரி–த்தல் šeri-, *4* செ.கு.வி. (v.i.) *1.* குடலினால் உறிஞ்சப்படுவதற்குஏந்தாகஉணவில்உள்ளசத்துகள் வயிற்றுத்தசைகளினால்அரைக்கப்பட்டுக்கூழாதல்; to be digested. "புவனஞ் செரிக்கு மென்றே" *(அஷ்டப். திருவரங். ம. 98).* தின்ற சோறு செரிக்கவாவது வேலை செய்ய வேண்டும். *2.* நிலையாகப் பெறுதல்; to be permanently acquired. கோயில் சொத்து உனக்குச் செரிக்காது.

செருக்கு[1]–தல் šerukku-, *5* செ.கு.வி. (v.i.) *1.* இறுமாப்புக் கொள்ளுதல்; to be proud, vain, self - conceited. "மீளி மொய்ம்பின், மிகுவலி செருக்கி" *(பொருந. 140). 2.* பெருமித முறுதல்; to be elated with self pride. "செருக்கியே தவங்கள் செய்வீர்" *(இராமநா. ஆரணிய. 4). 3.* மதர்த்தல்; to be gay, lively. "செருக்கிய நெடுங்கண் சேப்ப" *(சீவக. 2657). 4.* களித்தல்; to exult. "கடாஅஞ் செருக்கிக் கால்கிளர்ந்து" *(மணிமே. 19:22). 5.* மயங்குதல்; to be infatuated. "மொய்வளஞ் செருக்கி" *(பதிற்றுப். 49:8).*

ம. செருக்குக; *க.* செர்கு, செக்கு; *தெ.* செருவு; *து.* சுச்சுனி; *கோண்.* சோடீநானா; *கூ.* சோம்ப; *நா.* சோன்; *கொலா.* சொந்க்; *பர்.* சோங்க; *கட.*

சிக்த்; மா. க்வெரெ; குரு. கெர்னா.

செருக்கு[2]–தல் šerukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.மிகுத்தல்;* to increase, nurse, cherish, as anger. "செங்குட்டுவன் சினஞ் செருக்கி" *(சிலப். 29), உரைப்பாட்டு). 2. நன்கு நுகர்தல்;* to enjoy to the full. "நன்னிலப் பகுதியிற் பெருவளஞ் செருக்கி" *(உபதேசகா. சிவபுராண. 50).*

செருக்கு[3]–தல் šerukku-, *5 செ.கு.வி.* (v.i.) பாக்கு முதலியன தொண்டையில் அடைத்துக் கொள்ளுதல்; to be choked, as by a bone or a piece of areca - nut.

செருகு[1]–தல் šerugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) ஒரு பிடிப்பில் நிற்கும்படி ஒன்றை நுழைத்தல் அல்லது திணித்தல்; to insert, to slide into. "திருகிச் செருகுங் குழன்மடவீர்" *(கலிங். 30). பேனாவைப் பையில் செருகினான்.*

செருகு[2]–தல் šerugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பசி, மயக்கம், வலி முதலியவற்றால் கண் சொருகுதல்;* to roll sideways, as eyeballs. "கண்கள் செருகின வன்றே" *(கம்பரா. நாகபாச. 287). பசியால் கண் செருகி வீழ்ந்தான். 2. செருமானமாகாத தின்பண்டம் வயிற்றிற் சிக்கிக் கொள்ளுதல்;* to get held up in stomach, as indigestible matter. *3. வயிற்றில் திருகுவலியுண்டாதல்;* to have colic pains.

செருமு–தல் šerumu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நிரம்புதல்;* to be full, replete. "கருனை வாசமும்..... அகிற் புகை வாசமுஞ் செருமி" *(சீவக. 130). 2. நெருக்கமாயிருத்தல்;* to be close and crowded. பயிர் செருமிப் போனதினால் கதிர்க்குலை வாய்க்கவில்லை *(நாஞ்). 3. பதிதல்;* to sink; to pierce through. "மருமங்களினும் புயங்களினுஞ்... செருமும்படி வெங்கணை மாரி சிந்தி" *(பாரத. மூன்றாம். 12). 4. இருமுதல், கனைத்தல்;* to hem, cough. "செந்தேனே மெல்லச் செருமுவேன்" *(விறலிவிடு. 293). கிழவர் செருமிவிட்டுச் சளியைத் துப்பினார். 5. விக்குதல்;* to get choked. "தருப்பணஞ் செருமித் தன்னுயிர் வைத்தனன்" *(பெருங். இலாவாண. 9:239).*

செல்[1](லு)–தல் šel-, *13 செ.கு.வி.* (v.i.) *1. போதல்;* to go, flow, pass, to traverse, as the eye, mind. "சென்ற தேஎத்து" *(தொல். பொருள். 146). 2. நிகழ்தல்;* to occur. "செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்" *(திருவாச. 1:30). 3.. வீழ்தல்;* to fall, as on the ground. "படியிற் செல்லும்படி" *(கம்பரா. நிகும்பலை. 23). 4. ஆதல்;* to become, form. "புண்செல்வன வல்லால்" *(கம்பரா. நிகும்பலை. 107). 5. பரவுதல்;* to spread, as fame. "உரைசெல முரசுவெளவி" *(புறநா. 26:7). 6. பயனுறுதல்;* to be effective; to have influence. "செல்வர்வாய்ச் சொற்செல்லும்" *(நாலடி. 115). 7. நிலைத்திருத்தல்;* to last, endure, exist. "செல்லாதவ் விலங்கை வேந்தர்க் கரசென" *(கம்பரா. இந்திரசித். 56). 8. செலாவணியாதல்;* to pass, as coin. "சந்தையினிற் செல்லாப் பணஞ் செல்லுமோ" *(தனிப்பா.). 9. வேண்டியதாதல்;* to be required; to cost. இந்தக் காரியத்தை முடிக்க ஆயிர ரூபா செல்லும் *(உ.வ.). 10. பொருந்துதல்;* to be suitable; to be acceptable. உலகம்..... தோற்றுவா னொருவனை உடைத்தாதல் செல்லாது *(சி.போ.சிற்.1:2, பக். 17). 11. விரும்பி யேற்றுக் கொள்ளப்படுதல்;* to be acceptable to the system. நோயாளிக்கு உணவு செல்லவில்லை. *12. அடைதற் குரியதாதல்;* to be due, as money; to appertain to, as a right. இந்தப் பணம் எனக்குச் செல்ல வேண்டியது. *13. கழிதல்;* to pass away, lapse, expire, as time. "சென்றன சென்றன வாழ்நாள்" *(நாலடி. 4).14. தணிதல்;* to disappear, diminish, as anger. "செலியரத்தை நின் வெகுளி" *(புறநா. 6:23).15. கெடுதல்;* to perish, to be ruined. "செல்லா நல்லிசை" *(மலைபடு. 388).16. இறத்தல்;* to die. "செல்லுநாளைந்து புலனு மயர்ந்த பின்னர்" *(உபதேசகா. சிவநா. 3).*

ம. செல்லுக; க. சல், செல்; தெ. செல், செல்லு; து. சல்லுனி; கோண். கன்தாரை, சொனானா; கூ. சல்பா; நாச; கொலா. செர்; பர். செல், செல்; கட. செல்.

செல்(லு)[2]–தல் šel-, *8 செ.குன்றாவி.* (v.t.) *1. கிட்டுதல்;* to approach. "செல்வரைச் சென்றிர வாதார்" *(நாலடி. 296). 2. அடைதல்;* to become, trun into, attain. "கலங்கலைச் சென்றவன்றும்" *(திருக்கோ. 24).*

செலவழி–தல் šelavaḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. பணம், பொருள், நேரம் முதலியன செலவாய்ப் போதல் (உ.வ.);* to be spent, used up, consumed. *2. சாதல் (இ.வ.);* to die. அவன் செலவழிந்து விட்டான்.

ம. செலவழியுக.

செலவிடு–தல் šelaviḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. கூலி கொடுத்தல், பொருள் வாங்குதல் போன்ற வற்றிற்காகப் பணத்தை வழங்குதல்;* to spend. *2. பணம் போன்றே நேரம் முதலியவற்றையும் செலவிடுதல்;* to spend time like money etc. ஆய்விற்காக அவன் தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவிட்டான் *(உ.வ.). 3. பொருளையழித்தல்;* to squander, waste.

ம. செலவிடுக.

செலவிடு[2]–தல் šelaviḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) அனுப்புதல்; to send, send forth. "சிந்தை மகிழ்வுற வுரைத்து மணநேர்ந்து செலவிட்டார்" *(பெரியபு. மானக்கஞ். 17). கலைப் பொருட்களின் நேர்த்தியில் அவர் தம் சிந்தையைச் செலவிட்டார் (உ.வ.).*

செலுத்து–தல் šeluttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. செல்லச் செய்தல்;* to cause to go or proceed, despatch, circulate, deliver. "மாதலியைச் செலுத்தி" *(கம்பரா. இராவணன் வதை. 203). 2. எய்தல்;* to discharge, as a missile. அம்பைச் செலுத்தினான். *3. ஓட்டுதல்;* to drive, impel, push forward, propel. "ஓராழி கொண்டு செலுத்துதேர்" *(பாரத. பதினாறாம். 40). 4. ஆணை நடத்துதல்;* to execute, as orders; to administer, as justice. "தனியரசு செலுத்து

நாள்" (உபதேசகா. விபூதி. 104). 5. நடத்துதல்; to perform, observe, as charity, to fulfil, as a promise, vow. "இத்தன்மம் முட்டாமை செலுத்துவோ மானோம்" (தெ.க.தொ.3, 95). 6. இறுத்தல்; to pay, as tribute, debt. வரி செலுத்தியாயிற்று. 7. போகவிடுதல், திருப்பி விடுதல்; to direct; turn. பந்தை அவர் இடப்பக்கமாகச் செலுத்திய முறை சிறப்பாக இருந்தது. 8. ஏற்றுதல், உட்செலுத்துதல்; to transfuse; give, infect. நோயாளிக்கு உடனடியாக அரத்தம் செலுத்த வேண்டும். 9. காட்டுதல், மேற்கொள்ளுதல்; to show, exercise. அவர் மீது அன்பு செலுத்த ஆளில்லை.

ம. செலுத்துக.

செவ–த்தல் ševa-, 3 செ.கு.வி. (v.i.) செந்நிறமாதல்; redden, to be red.

செவிட்டு¹–தல் ševiṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) கொல்லுதல் (பிங்.); to crush, destroy, kill.

மறுவ. கோறல், சாகடித்தல்.

செவிட்டு²–தல் ševiṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) கூர்ந்து நோக்குதற்குக் கண் முதலியவற்றை ஒரு பக்கமாகச் சாய்த்தல்; to incline to one side, as one's eyes in examining closely. "விசயனென்பான் வெங்கணை செவிட்டி நோக்கி" (சீவக. 2191).

மறுவ. தலை சாய்த்தல், சிறக்கணித்துக் கேட்டல்.

செழி¹–தல் šeḻi-, 2 செ.கு.வி. (v.i.) வளர்தல்; to grow; to increase. "செழிகின்ற தீப்புகு விட்டிலின்" (திருவாச. 6:5).

செழி²–த்தல் šeḻi-, 4 செ.கு.வி. (v.i.) 1. தழைத்தல்; to thrive, flourish, grow well, as vegetation. மழைக்குப் பின் செடி நன்கு செழித்து வளர்ந்துள்ளது. 2. சிறப்புற்ற நிலையில் இருத்தல்; to prosper, as a kingdom family, country. "அடியேனுஞ் செழிக்க" (திருப்பு. 218). 3. வளமிகுதல்; to be fertile. செழித்த சீமை. 4. அளவுக்கு மிஞ்சியிருத்தல் (இவ.); to be superabundant.

ம. செழிக்க.

செழி³–த்தல் šeḻi-, 4 செ.கு.வி. (v.i.) முகமலர்ச்சி யுறுதல்; to be cheerful, as countenance. செழித்தமுகமுள்ளவன்.

செழு–த்தல் šeḻu-, 4 செ.கு.வி. (v.i.) 1. மிகுதல்; to become abundant. 2. வளர்தல்; to grow. 3. செழித்தல்; to be fertile.

செற்று¹–தல் šeṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கொல்லுதல் (பிங். MSS); to kill. 2. அழித்தல்; to destroy. 3. செதுக்குதல் (ஈடு. 9. 9:1); to cut, chisel. 4. பதித்தல்; to set, as a jewel. "மணி செற்றுபு குயிற்றி" (கம்பரா. கையடை. 5).

ம. செற்றுக; து. கெர்பினி; பர். கெத். (வேட்டையாடுதல்); மா. கெர்மெ.

செற்று²–தல் šeṟṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to gather in crowds. "பெருங் களிறுகள் செற்றிவந்து சேர்ந்தன" (சீவக. 277, உரை). 2. அழுந்துதல்; to sink deep. "உரத்தினுகிர் செற்றும் வகை குத்தி" (கம்பரா. மகுட. 8).

செறி¹–தல் šeṟi-, 2 செ.கு.வி. (v.i.) 1. நெருங்குதல்; to be thick, as foliage, hair; to be dense, crowded. "செறிந்த மணிமுடி" (திவ். பெரியாழ். 3. 10:1). 2. திண்ணிதாதல்; to be hard and strong. "மாப்படை சிந்தின தெறித்துகச் செறிந்த தோளினான்" (கம்பரா. கரன். 41). 3. இறுகலாய் இருத்தல்; to be tight, close fitting, as bangles. "செறிவளை நெகிழ்த்தோன்" (ஐங்குறு. 199). 4. அடங்குதல்; to be controlled. "செறியாப் பரத்தை யிவன்றந்தை" (கலித். 84). 5. எல்லை கடவாதிருத்தல்; to keep within bounds. "செறிகடலே" (திருக்கோ. 179). 6. மறைதல்; to hide, disappear. "அன்னம்..... நளிமலர்ச் செறியவும்" (சிலப். 2:55-6). 7. மிகுதல்; to increase. "செயிர்சினஞ் செறிந்து" (கலித். 102). 8. கலத்தல் (வின்.); to mix. 9. திரளுதல்; to accumulate. 10. பொருந்துதல்; to be joined, accompanied. "மகளிரொடு செறியத் தாஅய்க் குழலகவ" (பட்டினப். 155).

செறி²–தல் šeṟi-, 2 செ.குன்றாவி. (v.t.) புணர்தல்; to cohabit with. "செறிதொறுஞ் சேயிழை மாட்டு" (குறள். 1110).

செறி³–த்தல் šeṟi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்த்தல்; to unite. 2. அடைத்தல்; to shut, close, block up. "தாழ்செறி கடுங்காப்பில்" (கலித். 48). 3. அடக்குதல்; to hold in reserve, as one's opinion. "செப்பல் வன்மையிற் செறித்தியான் கடவலின்" (குறிஞ்சிப். 12). 4. திணித்தல்; to stuff. "வாய்செறித் திட்ட மாக் கடிப்பிதுவே" (கல்லா. 6). 5. அடைவித்தல்; to cause to obtain. "சிவமந்திரமே சித்தி செறிக்கும்" (சிவரக. காயத்திரி. 14). 6. இறுக்குதல்; to tighten. "நிறைத்தாய் செறித்து" (நீதிநெறி. 99). 7. திரட்டுதல்; to hoard up, store up. 8. நெரித்தல் (வின்.); to press, crush. 9. கொல்லுதல் (பிங்.); to kill. 10. பதித்தல்; to set, imprint.

செறி⁴–த்தல் šeṟi-, 4 செ.கு.வி. (v.i.) 1. மூழ்குதல் (திவா.); to immerse, dive, plunge into water. 2. மூடுதல்; to close, shut, as eyes. "கண்ணையும் செறித்து" (திவ். திருப்பல். 3, வியா, பக். 40).

செறு¹–தல் šeṟu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அடக்குதல்; to control, as the senses. "ஆறுஞ் செற்றதில் வீற்றிருந்தானும்" (தேவா. 84:9). 2. தடுத்தல்; to hinder, prevent. "வரையா வாயிற் செறாஅது" (மதுரைக். 748). 3. சினத்தல்; to be angry with. "அரசர் செறின் வவ்வார்" (நாலடி. 134). 4. வெறுத்தல்; to hate, dislike, detest. "செற்றாரெனக் கைவிட லுண்டோ" (குறள். 1245). 5. வருத்துதல்; to cause pain, torment. "செலினந்திச் செறிற்சாம்பும்" (கலித். 78). 6. வெல்லுதல்; to overcome. "இருநால் வினையுஞ் செற்றவற்கு" (திருநூற். 46).

7. அழித்தல்; to kill, destroy. "*புரங்கள் மூன்றுந் தீயெழச் செறுவர் போலும்*" *(தேவா. 476:3).*

செறு²–தல் šeṟu-, *4* செ.கு.வி. (v.i.) வேறுபடுதல்; to change as one's mind. "*அன்பிற் செறப்பட்டா ரில்லம் புகாமை*" *(அசாரக். 80).*

செறு³–த்தல் šeṟu-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. அடக்குதல்;* to suppress. *2. தடுத்தல்;* to prevent. "*நாயேனைப் பொருட்படுத்துச் செறுத்தாய்*" *(தேவா. 31, 3). 3. செறிதல், உள்ளடங்கச் செய்தல்;* to comprise, contain as ideas. "*செறுத்த செய்யுள்*" *(புறநா. 53:11). 4. தூர்த்தல்;* to fill up. "*கடலைச்செறாஅ அய்வாழிய நெஞ்சு*" *(குறள். 1200). 5. வெறுத்தல் (திவா.);* to detest. *6. வெல்லுதல்;* to overcome. "*பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும்*" *(பரிபா. 9:73). 7. கொல்லுதல் (பிங்.);* to kill. "*செறுத்தறுத் துழக்கி*" *(கலித். 104). 8. நெருக்குதல் (வின்.);* to narrow. *9. சினத்தல்;* to be angry.

ம. செறுக்குக; க. கிர்; தெ. செற (சிறை); து. செறெ (சிறை); கோண். கெக்தான; கொலா. செறு (ஏரி); பர். கெத்ப்; கோத. செர் (தடுத்தல்) துட. செர் (சிறை).

செறுமு–தல் šeṟumu-, *5* செ.கு.வி. (v.i.) கனைத்தல், உறுமுதல்; to hem, grunt. "*செறுமுமந்தச் சன்னை யறிந்து*" *(விறலிவிடு. 759). 2. தேம்பியழுதல்;* to sob agitatedly.

nr

சே¹–த்தல் šē-, *4* செ.கு.வி. (v.i.) *1. தங்குதல்;* to dwell, abide. "*வம்பலர் சேக்குங் கந்துடைப் பொதியில்*" *(பட்டினப். 249). 2. கிடத்தல்;* to lie, remain. "*கோழி சேக்குங் கூடுடைப் புதவின்*" *(பெரும்பாண். 52). 3. உறங்குதல்;* to sleep. "*பொய்கை நாரை போரிற் சேக்கும்*" *(புறநா. 209).*

ம. சேகுக; க. கே; கூ. கேக; கொலா. கெப்; மா. கிதெ.

E. stay; **OE.** stag; **OF.** ester, stare; **E.** sommy - sleep; **L.** sommus.

சே²–த்தல் šē-, *4* செ.குன்றாவி. (v.t.) எய்துதல்; to obtain. "*கனவிற் றொட்டது..... கனவிற் சேஎப்ப*" *(பரிபா. 8:103-4).*

சே³–த்தல் šē-, *4* செ.கு.வி. (v.i.) *1. சிவப்பாதல்;* to redden. "*அவன் வேலிற் சேந்து*" *(கலித். 57). 2. முகம் சிவந்து சினத்தல்;* to get angry. "*நித்திலமேந்திச் சேந்த போல்*" *(சீவக. 329).*

சேக்கரி–த்தல் šēkkari-, *4* செ.கு.வி. (v.i.) கொக்கரித்தல் *(யாழ்.அக.);* to cackle, as a hen after laying eggs.

சேட்படு–தல் šēṭ-paḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) எதிர்ப்படுதல்; to meet, approach. "*சிறுமி தந்தையுஞ் செல்வனை..... சேட்பட்டனரோ*" *(சீவக. 1458).*

சேட்படு–தல் šēṭ-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1. தொலைவாதல் (தூரத்தாதல்);* to be at a distance; to be aloof. "*செவ்வியில ளென்றல் சேட்பட நிறுத்தல்*" *(திருக்கோ. 90, அவ.). 2. நெடுங் காலத்ததாதல்;* to take a long time. "*சென்று சேட்பட்ட தென் னெஞ்சு*" *(கலித். 143).*

சேட்படுத்து–தல் šēṭ-paḍuttu-, *5* செ.குன்றாவி. (v.t.) விரைய வரைந்து கோடல் கருதிக் களவுக் கூட்டத்திலுளவாம் இடையூறுகளை எடுத்து மொழிந்து அக்கூட்டத்திற் கியையாது தோழி மறுத்துக்கூறித் தலைவனை அகற்றுதல்; to put off a lover telling him of the insurmountable difficulties in the way of his clandestine meetings and urging him to expedite the marriage. "*இவை யெல்லாங் கூறிச் சேட்படுத்தப் பெறும் என்பது*" *(திருக்கோ. 97, உரை).*

சேந்து–தல் šēndu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. கயிறு முதலியவற்றை இழுத்தல் (வின்.);* to draw, as a rope running over a pulley. *2. கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்தல்;* draw water from a well. *அவள் கிணற்றிலிருந்து தண்ணீரைச் சேந்தினாள் (உ.வ.).*

க. சேது; தெ. சேது.

சேப்பு–தல் šēppu-, *5* செ.கு.வி. (v.i.) தங்குதல்; to abide, remain. "*அணங்குடைத் தடக்கையர் தோட்டி சேப்பி*" *(பதிற்றுப். 62).*

E. stay; **OE.** stadg; **OF.** estayer.

சேமாறு–தல் šē-māṟu-, *5* செ.குன்றாவி. (v.t.) எருதுக்கு விதையடித்தல் *(இலக்.வி. 45, உரை);* to geld a bull.

சேமி–த்தல் šēmi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* போற்றி வைத்தல்; to keep secure, preserve in safety. "*தனதானியங்கள் சேமித்தல்*" *(விதான. பஞ்சாங்க. 19). 2. புதைத்து வைத்தல் (சூடா.);* to hide underground, bury. *3. நிறைத்தல்;* save money, water, etc., store blood, etc., for emergency. *ஏரிகளை ஆழப்படுத்தி அதிகத்தண்ணீரைச்சேமித்து வைக்கலாம். 4. எரிபொருள் முதலானவற்றைக் குறைந்த அளவில் பயன்படுத்திச் சிக்கனப்படுத்துதல்;* conserve energy, fuel, etc., *எரிபொருளைச் சேமிக்கும் நுட்பத்தைத் தொழிற்சாலைகள் மேற்கொள்ள வேண்டும்.*

சேர்¹–தல் šēr-, *2* செ.கு.வி. (v.i.) *1.* ஒன்று கூடுதல்; to become united, incorporated; to join together. "*செம்பொன் செய்சுருளுந் தெய்வக் குழைகளுஞ் சேர்ந்து மின்ன*" *(கம்பரா. பூக்கொய். 5). நீ என்னோடு சேர்ந்தால் உனக்கும் நன்மை, எனக்கும் நன்மை. 2. கலத்தல்;* to become mixed, blended. *நீரும் பாலுஞ் சேரும். 3. தொடர்புடையதாதல்;* to have connection, as

with a society or an institution. *4. நட்பாதல்;* to be in close friendship or union. அவனொடு சேர்ந்து கொண்டான். *5. இயைதல்;* to fit, suit; to be adopted to, as the tenon to the mortise. *6. உரித்தாதல்;* to be incidental, co-existent; to appertain, as a quality. இந்த நிலம் அவனைச் சேர்ந்தது *(உ.வ.). 7. சேர்த்தல்;* to be collected to become aggregated. நெய்க்கு வேண்டிய வெண்ணெய் சேர்ந்து விட்டது *(உ.வ.). 8. திரளுதல்;* to be well - rounded plump. "மால்வரை யொழுகிய வாழை..... என..... சேர்ந்து" *(சிறுபாண். 20, உரை). 9. செறிதல்;* to be full, replete. "அருள் சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை" *(குறள். 243). 10. கிடத்தல்;* to lie down. "மீக்கோ ளுடற் கொடுத்துச் சேர்தல் வழி" *(ஆசாரக். 31). 11. உளதாதல்;* to exist; co-exist. "தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு" *(குறள். 731). 12. செல்லுதல்;* to go, advance. "எண் சேர்ந்த நெஞ்சத்து" *(குறள். 910).*

ம. சேருக; க., குட. சேர்; தெ., பட. சேரு; து. சேருனி; கோத. சேர், சேட், சேத்; துட. சோர், சோத்; கோண். சேராணா; கூ. செர்னஆட; குவி. மகரினெ; நா. செத; கொலா. செர்(போ).

சேர்[2]–தல் šēr-, *2* செ.குன்றாவி. (v.t.) *1.* கூடுதல்; to join, associate with. "தீயினஞ் சேரக்கெடும்" *(நாலடி. 179). 2. பொருந்துதல்;* to be in contact with. "மழகளிறு கந்துசேர்பு" *(புறநா. 22:9). 3. புணர்தல்;* to copulate. "அல்லில் வந்ததுண்டு சேர்ந்ததில்லை" *(தனிப்பா. 1, 151:58). 4. அடுத்தல்;* to belong to; to be attached; dependent on, connected with. மன்னரைச் சேர்ந்தொழுகல். *5. பெறுதல்;* to obtain, acquire. "உறுதிசேர்ந் திவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின்" *(நாலடி. 40). 6. சென்றடைதல்;* to reach, gain, arrive at. "நும்மரண் சேர்மின்" *(புறநா. 9:5). 7. இடை விடாது நினைத்தல் (தியானித்தல்);* to unite in meditation. மாணடி சேர்ந்தார். *(குறுந். 3). 8. ஒப்பாதல்;* to resemble, equal correspond with. "கனஞ்சேர் குழலி" *(மருதூ. 25).*

சேர்[3]–தல் šēr-, *2* செ.குன்றாவி. (v.t.) வெட்டுதல்; to cut. "வாழ்மரஞ் சேர்ந்தவை" *(நீலகேசி. 389).*

சேர்[4]–த்தல் šēr-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* இயைத்தல்; to join. கம்பியின் இரு முனைகளையும் சேர். *2.* தொடுத்தல் *(வின்.);* to append, piece together. பூக்களை நார்கொண்டு சேர்த்தாள். *3.* கலத்தல்; to admix, incorporate, amalgamate. பாலொடு நீரைச் சேர்த்தான். *4.* புணரச்செய்தல்; to cause sexual union. பசுவைத் தொழுவிற்குச் சேர்க்கக் கொண்டுபோனான் *(நாஞ்.). 5.* கூட்டிக்கொள்ளுதல்; to admit to one's company or party, receive into friendship or service, bring under protection or shelter. வழிப் பயணத்துக்குத் துணையாக அவனையும் சேர்த்துக் கொள். *6.* கட்டுதல் *(வின்.);* to tie, fasten, as with a rope or chain; to secure by fastening. எல்லாவற்றையும் சேர்த்து முடிச்சுப்போடு *(உ.வ.). 7.* கட்டடம் கட்டுதல் *(வின்.);* to build, construct, make. *8.* இடைச் செருகுதல்; to add, interpolate, insert. இல்லாததைச் சேர்த்துப் பேசுகிறான். *9.* திரட்டுதல்; to collect, gather, muster, assemble. அறப்போருக்குத் தொண்டர்களைச் சேர். *10.* ஈட்டுதல்; to aggregate; to add sum to sum, to amass, as wealth; to increase as riches. பாடுபட்டுச் சேர்த்த காசு. *11.* தனதாக்குதல்; to appropriate, make one's own; annex. பகைவனாட்டைச் சேர்த்துக் கொண்டான். *12.* அடைவித்தல்; to restore. அதை உரியவனிடம் சேர்த்து விட்டான்.

சேர்ப்பி–த்தல் šēr-p-pi-, *4* செ.குன்றாவி. (v.t.) ஒப்படைத்தல்; hand - over, entrust. பணத்தை யாரிடம் சேர்ப்பித்தாய்?

சேறாடு[1]–தல் šēṟāḍu-, *4* செ.கு.வி. (v.i.) வயலில் விதைத்தற்குத் தொளி கலக்குதல் *(யாழ்ப்.);* to make a field slushy for sowing paddy.

சேறாடு[2]–தல் šēṟāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) துவைத்துக் குழைத்தல்; to mash, reduce to pulp, as mangled bodies on the field of battle.

brh

சொக்கிடு–தல் šokkiḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) மயக்கப்பொடி தூவுதல்; to sprinkle magic powder for inducing stupor. "சொக்கிடுந் தொழில் வல்ல துரிசனும்" *(சிவதரு. பாவ. 69).*

தெ. சொக்கிடு.

சொக்கு[1]–தல் šokku-, *5* செ.கு.வி. (v.i.) *1.* அழகு, திறமை முதலியவற்றால் தன்வயம் இழத்தல்; மயங்குதல்; to become languid, sleepy; to be stupefied. அவளின் அழகிலும் ஒப்பனையிலும் சொக்கிநின்றான். *2.* மனம் பிறர்வயமாதல்; to be enchanted, fascinated, captivated, subjected to the will of another. *3.* பிறரை மயங்குமாறு ஒழுகுதல் *(இ.வ.);* to behave in a captivating manner. *4.* தூக்கத்தால் கண்கள் செருகுதல்; to be heavy with sleep. எனக்குத் தூக்கம் சொக்குகிறது.

க. சொக்கு (sokku); தெ. சொக்கு.

சொக்கு[2]–தல் šokku-, *5* செ.கு.வி. (v.i.) குழிவு அல்லது வளைவு விழுதல்; to be pressed in, bent in, as the surface of a wall, the edge of a mat, a basket.

சொட்டு[1]–தல் šoṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) துளித்தல்; to fall in drops, drizzle. "தேன் சொட்டச் சொட்டநின் றட்டுந் திருக்கொன்றை" *(தேவா. 586.1).* வியர்வை சொட்ட ஓடி வந்தான்.

ம. சொட்டுக; க. தொட்டு, தடக்கனெ, தொடக்கனெ; தெ. தொட்ட; து. தடகு; கோத. சொட்; துட. ச்விட்; பட. சொட்டு.

சொட்டு[2]–தல் šoṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* கொத்துதல்; to peck as a corw. *2.* சூழ்ச்சியால் கவர்தல்; to snatch away, misappropriate secretly and slowly. *3.* ஏமாற்றுதல்; to cheat, circumvent.

ம. சொட்டுக.

சொட்டு³–தல் šoṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. குட்டுதல் (உ.வ.)* ; to strike with knuckles. *2. பால் கறத்தற்கு ஆட்டு மடியைத் தட்டுதல் (வின்.);* to tap gently the udder of a goat for inducting free flow of milk. *3. அடித்தல் (இ.வ.);* to beat, hit.

ம. சொட்டுக; தெ. சொட்டு.

சொடக்கு–தல் šoḍakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நெட்டி வாங்குதல்;* to crack as the joints, knuckles. *2. கைநொடித்தல்;* to snap, as the fingers. *3. பேன் நசுக்குதல்;* to crack, as lice.

சொடி–தல் šoḍi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வெயிலில் வாடுதல் (இ.வ.);* to be burnt by the sun, as crops; to be blighted. *மழையின்றி கடலைக்கொடி சொடிந்து போயிற்று. 2. குழைதல்;* to shrink, as the abdomen for want of food. *வயிறு சொடிய (வின்.).*

க. சடு.

சொடி²–த்தல் šoḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. குறைவாய் விற்றல் (யாழ்ப்.);* to sell dear. *2. வற்றுதல்;* to grow dry.

சொடுக்கு–தல் šoḍukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சாட்டை முதலியவற்றைச் சுண்டியிழுத்தல்;* give a sharp, snapping, sound. *சாட்டையைச் சொடிக்கியதும் மாடு வேகமாக ஓடியது. 2. சொடக்குப் போடுதல்;* snap. *கை சொடிக்கும் நேரத்தில் எல்லாம் முடிந்துவிட்டது.*

சொரி¹–தல் šori-, *2 செ.கு.வி.* (v.i.) *1. மழை முதலியன தொகுதியாக விழுதல்;* to flow down, rain, spill. *"அலர்மழை சொரிந்த" (கம்பரா. வேள்வி. 56). 2. மிகுதல்;* to bear in plenty; to be abundant, profuse, copious. *3. உதிர்தல் (யாழ்ப்.)* to drop off, as dry scales in small - pox; to be scattered, as rice from the husk. *பூச்சொரிந்து வரவேற்றனர்.*

ம. சொரியுக; க. சுரி; தெ. தொரகு, தொருகு, தொறகு; து. தொரியுனி; கோத. சோர்; குட. தோர்; கூ. ககார; பர். சோர்; கட. சோர்ப்; குரு. சுர்கானா; மா. சுர்கெ, சுர்க்ரெ; சோரு.

சொரி²–தல் šori-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. பொழிதல்;* to scatter pour forth, effuse, emit, shoot, as arrows, shed, as leaves fruits. *"வானவர்பூ மழை சொரிந்தார்" (பெரியபு. மநுநீதி. 45). 2. கொட்டுதல்;* to empty, pour out, as corn from sack; to dump, as sand from cart. *"காரியெட் சொரிந்தார்" (கம்பரா. பிரமாத். 165). 3. மிகக் கொடுத்தல்;* to give a way in plenty. *"துகில் வர்க்க மெல்லாம்..... சொரிந்தா ரன்றே" (சிவரக. சுகமுனி. 5).*

சொரி³–தல் šori-, *2 செ.கு.வி.* (v.i.) *சுழலுதல் (சூடா.);* to whirl, revolve.

சொரிமி–த்தல் šorimi-, *4 செ.கு.வி.* (v.i.) *இணங்குதல் (நாஞ்.);* to agree, to be cordial.

சொருகு¹–தல் šorugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சிக்கிக் கொள்ளுதல்;* to be entangled, become connected inadvertently. *2. குடலிற் சிக்குதல்;* to gripe in the bowels. *3. கருவிழி மறைதல்;* to disappear, as the pupil of the eye in fainting etc. *தூக்கத்தால் அவனுடைய கண் சொருகுகின்றது. 4. தங்குதல்;* to repose. *"துரியங்கண் மூன்றுஞ் சொருகிடனாகி" (திருமந். 1893).*

சொருகு²–தல் šorugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நுழைத்தல்;* to put in, insert, tuck in. *"சொருகு கொந்தளக மொருகை மேலலைய" (கலிங். 46). 2. தூக்கம் நோய் முதலியவை கண் விழிகளை ஒரு பக்கமாக ஒதுக்கி மறையச் செய்தல்;* to turn the pupil of the eye till it disappears, as in sleep, giddiness. *தூக்கம் கண்ணைச் சொருகுகிறது.*

ம. சொருகுக; க. சொருகு.

சொல்¹(லு)–தல் šol(lu)-, *8 செ.குன்றாவி.* (v.t.) *1. பேசுதல்;* to say, speak, tell, mention, utter, express. *"சொல்லுதல் யார்க்கும் மெளிய வரியவாஞ் சொல்லியவண்ணஞ்செயல்" (குறள்.664). 2. திருப்பிக் கூறுதல்;* to recite, repeat, relate, quote. *"சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளை". 3. கட்டளையிடுதல்;* to dictate, command. *மூத்தோர் சொல்லியதை மீறாதே. 4. அறிவுரைக் கூறுதல்;* to advise. *5. அறிவித்தல்;* to inform. *"யாருக்கென் சொல்லுகே னன்னை மீர்காள்" (திவ். திருவாய். 9. 9:7). 6. புகழ்தல்;* to praise. *"தோளையே சொல்லுகேனோ" (கம்பரா. மாரீச. 73).*

ம. சொல்லுக; க. சொல், சொல்லு; தெ. சொல்; இரு. சொல்லு; எர. சொன்னு.

சொல்²(லு)–தல் šol(lu)-, *8 செ.குன்றாவி.* (v.t.) *களைதல்;* to remove, alleviate, put away. *"புறவி னல்லல் சொல்லிய..... துலாஅம் புக்கோன்" (புறநா. 39).*

சொல்லிக்காட்டு–தல் šolli-k-kāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பாடம் ஒப்பித்தல்;* to repeat a lesson. *2. விளக்கியறிவித்தல் (வின்.);* to describe, explain, define. *3. குத்திக்காட்டுதல்;* to remind one of one's faults; to call to mind one's misdeeds or defects. *குற்றத்தைச் சொல்லிக் காட்டினான்.*

சொல்லிக்கொடு¹–த்தல் šolli-k-koḍu-, *4 செ.குன்றாவி.* (v.i.) *1. படிப்பித்தல்;* to teach, explain. *2. அறிவித்தல்;* to inform, make known.

சொல்லிக்கொடு²–த்தல் šolli-k-koḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. அறிவுரை கூறுதல்;* to advise. *2. தூண்டிவிடுதல்;* to instigate.

சொல்லிக்கொள்ளு¹–தல் šolli-k-koḷ(ḷu)-, *16 செ.கு.வி.*(v.i.) *1. விடைபெறுதல்;* to take leave. *2. ஒருவனுக்காகப் பிறனிடந் தாங்கிப் பேசுதல்;* to recomment; to speak on one's

behalf. *பணத்திற்காக நான் அவனுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.*

சொல்லிக்கொள்ளு[2]–தல் *šolli-k-koḷ(ḷu)-, 10 செ.குன்றாவி.* (v.t.) *1. முறையிடுதல்;* to complain, make known. *நடுவரிடம் தன் குறையைச் சொல்லிக் கொண்டான். 2. தனக்குட் பேசுதல்;* to speak to oneself. *அவர் எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார். 3. பாடங்கேட்டல்;* to learn from a teacher. *மாணாக்கன் பாடத்தைச் சொல்லிக் கொண்டு வரப் போயிருக்கிறான். 4. விடை பெறுதல்;* take leave. *மனைவியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.*

சொல்லிற–த்தல் *šol-l-iṟa-, 3 செ.கு.வி.* (v.i.) *வாக்கினைக் கடந்து நிற்றல்;* to transcend description. "*சொல்லிறந் தார்வ நெஞ்சந் தலைத்தலை சிறப்ப*" *(அகநா. 396).*

சொலி[1]–த்தல் *šoli-, 4 செ.குன்றாவி.* (v.t.) *1. உரித்தல்;* to strip off, peel off. "*பாம்பு சொலித்தன்ன வறுவை*" *(சிறுபாண். 236). 2. பெயர்த்தல், போர்த்தல்;* to tear. "*திங்க ளுகிரிற் சொலிப்பது போல*" *(சீவக. 350). 3. தோண்டுதல்;* to dig off. *4. பிளத்தல்;* to split.

சொலி[2]–த்தல் *šoli-, 4 செ.கு.வி.* (v.i.) *1. ஒளிர்தல்;* to shine, be radiant. "*மானமென் றுரைப்ப தெழுந்துமேற் சொலித்து வருவது போன்றும்*" *(பிரபோத. 11:1). 2. எரிதல்;* to burn, blaze up, as fire or anger. "*நாப்ப ணழல் சொலிப்பதாக வுன்னி*" *(பிரபோத. 44:15).*

சொற்கா–த்தல் *šoṟ-kā-, 4 செ.கு.வி.* (v.i.) *1. சொன்ன சொல்லை நிறைவேற்றுதல்;* to keep one's word. *2. அடக்கிப்பேசுதல்;* to speak with due caution. *3. புகழைப் போற்றுதல்;* to guard one's reputation. "*சொற்காத்துச் சோர்விலாள் பெண்*" *(குறள், 56).*

சொற்படு–தல் *šoṟ-paḍu-, 20 செ.கு.வி.* (v.i.) *மிகுதல்;* to yield in plenty, increase; to succeed. "*தவசம் சொற் பட்டிருக்கிறது*" *(வின்.).*

சொற்படுத்து–தல் *šoṟ-paḍuttu-, 5 செ.கு.வி.* (v.i.) *இசைக்கு ஏற்பச் சொல்லமைத்தல்;* to compose to a particular tune. "*உருவுக்குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் அறிந்து*" *(சிலப். 3, 150, உரை).*

சொறி[1]–தல் *šoṟi-, 2 செ.குன்றாவி.* (v.t.) *1. தினவு நீங்க நகத்தால் வறண்டுதல்;* to scratch in order to allay itching. "*ஓங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியும்*" *(சிறுபாண். 80). பேன் அரிப்புத் தாங்காமல் தலையைச் சொறிகிறான். 2. கெஞ்சிக் கேட்டல்;* to crave, solicit meanly. *அவனைச் சொறிந்து கொண்டிருக்கிறான்.*

ம. சொறியுக; க. துறி, சூரு; தெ. துரத; து. கெரெபுனி, தொச்சி; பர். கிர்ப். சொத்; கோண். சோக்தானா, சொகன; ப. துரிசு, துருசு.

சொறி[2]–தல் *šoṟi-, 2 செ.கு.வி.* (v.i.) *தினவுண்டாதல் (வின்.);* to itch, tingle.

nrh

சோகா–த்தல் *šogā-, 4 செ.கு.வி.* (v.i.) *துன்புறுதல்;* to grive, suffer. "*சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு*" *(குறள். 127).*

சோங்கு–தல் *šōṅgu-, 5 செ.கு.வி.* (v.i.) *சரிவாதல் (நாஞ்.);* to incline; to be oblique.

சோப்பு[1]–தல் *šōppu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *சோர்வுறச் செய்தல் (யாழ்ப்.);* to cause to droop or languish.

க. சோப்பிசு; தெ. சோபு.

சோப்பு[2]–தல் *šōppu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *அடித்தல் (வின்.);* to beat, flog, give a drubbing.

சோம்பு–தல் *šōmbu-, 5 செ.கு.வி.* (v.i.) *1. வினைமடிந் திருத்தல்;* to be idle, indolent, slothful. "*சோம்பி யிருந்ததக் குரங்கு மென்றார்*" *(கம்பரா. சுந்தரபஞ்சசே. 67). 2. அறிவு மந்தமாதல் (வின்.);* to be lethargic, apathetic, dull. *3. மனவுறுதி குறைதல்;* to be cast down, dejected, dispirited. "*சூல மன்னதோர் வாளியாற் சோம்பினன் சாம்பன்*" *(கம்பரா. யுத்த. முதற்போர். 199). 4. வாடுதல் (வின்.);* to droop, fade, as persons, plants. *5. கெடுதல்;* to be spoiled, marred. "*அரிவையர் கற்புச் சோம்பி*" *(கலிங். 247). 6. பின்வாங்குதல்;* to stirint. *ஒரு காசுக்குச் சோம்புகிறான்.*

வ. ஸ்வப் = தூங்கு, கனவு காண்.

L. somnus; **Slav.** supati; **Lith.** sapnus; **AS.** swef; **GK.** hupnos (sleep).

சோமாறு[1]–தல் *šōmāṟu-, 5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒரு ஏனத்திலிருப்பதை மற்றொன்றிற் பகிர்ந்து வைத்தல் (இ.வ);* to transfer part of the contents of one vessel to another. *2. திருடுதல் (யாழ்ப்.);* to steal, pilfer; to exchange stealthily. *3. பிறர் உடை நகை முதலியவற்றை இரவல் வாங்கி மனம்போன போக்கில் பயன்படுத்துதல் (யாழ்ப்.);* to use indiseriminately, as another's utensils, jewels, cloths etc. *4. ஒரே ஏனத்தைப் (பாத்திரத்தைப்) பல வேலைகளுக்கும் பயன்படுத்துதல் (யாழ்ப்.);* to use the same, utensil for various purpose. *5. ஒருத்தியைப் பலர் புணர்தல் (யாழ்ப.);* to cohabit with a woman in common with others. *6. பண்டமாற்றுதல் (யாழ்ப்.);* to exchange goods and articles.

சோமாறு[2]–தல் *šōmāṟu-, 5 செ.கு.வி.* (v.i.) *1. சோம்புதல்;* to be lazy. *2. பின்வாங்குதல்;* to draw back, shrink, backsdilde. *அவன் வேலையைச் செய்யச் சோமாறுகிறான்.*

க. சோமாரி.

சோர்[1]–தல் šōr-, *2 செ.கு.வி.* (v.i.) *1. உடல் அல்லது மனம் மேற்கொண்டு செயல்பட ஆற்றலற்று தளர்தல்;* to languish, droop; to be prostrate or relaxed, as the limbs in sleep; to be wearly, exhausted. "*கடியு மிடந்தேற்றாள் சோர்ந்தனள் கை*" *(கலித். 92:50). கவலையால் சோர்ந்து விட்டான். 2. மனந்தளர்தல்;* to be dejected, dispirited, depressed in spirits. *3. மயக்கமாதல்;* to faint, swoon. "*அரசன் சோர்ந்தான்*" *(கம்பரா. தைலமாட்டு. 59).*

க. சோர் (துளை); தெ. சோலு.

சோர்[2]–தல் šōr-, *2 செ.கு.வி.* (v.i.) *1. நழுவுதல்;* to slip off slip down, as clothes. "*துகிலிறையே சோர்ந்தவாறும்*" *(திருவாச. 5:57). 2. கண்ணீர் முதலியன வடிதல்;* to trickle down, as tears, blood, milk. "*அயறு சோருமிருஞ் சென்னிய*" *(புறந.ா. 22:7). 3. விழுதல் (வின்.);* to fall drop; to be dropped. *4. கசிதல்;* to exude, to ooze out. "*மலஞ்சோரு மொன்பது வாயில்*" *(திருவாச. 1:54). 5. கழலுதல்;* to become loose, as rings; to grow slacek, as a grip. "*பைந்தொடி சோரும்*" *(குறள். 1234).*

ம. சோருக; க. சோரு, சோரு; தெ. தொறகு, தொறுகு; து. சோருனி, தோருனி; கோத. சொர்; குட. தொர்; கோண். தோரானா; பர். சோர்; கட. சோர்; குரு. சுர்க்கை; மா. சுர்கெ; பட. சோரு.

சோர்[3]–தல் šōr-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வாடுதல்;* to fade, wither. "*எரியிதழ் சோர்ந்துக*" *(கலித். 78). 2. மெலிதல்;* to be emaciated, grow thin. "*காம்பேர் தோளி கண்டு சோர்ந்தன்று*" *(பு.வெ. 11, பெண்பாற். 1, கொளூ.). 3. தள்ளாடுதல்;* to totter. "*கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்*" *(நாலடி. 13). 4. தடுமாறுதல்;* to falter, as words; to be confused. *5. துன்பப்படுதல் (இ.வ.);* to be stricken with grief. *6. இறத்தல்;* to die. "*பாலகன்றான் சோர*" *(சிலப். 9:6).*

சோர்[4]–தல் šōr-, *2 செ.குன்றாவி.* (v.t.) விட்டொழிதல்; to give up, abandon. "*சூதரைச் சோர்த லினிது*" *(இனி. நாற். 24).*

சோர்[5]–தல் šōr-, *2 செ.கு.வி.* (v.i.) *உடம்பில் எண்ணெய் முதலியன இறங்குதல்;* to be absorbed in the system, as oil. "*எண்ணெய் சோரத் தேய்க்கிறான்*" *(வின்.).*

சோர்[7]–த்தல் šōr-, ... (v.i.) *திருடுதல்;* to steal, to embezzle.

சோல்(லு)–தல் šōl-, *7 செ.குன்றாவி.* (v.t.) *1. கவர்ந்து கொள்ளுதல்;* to plunder, seize. "*நல்கிற்றை யெல்லாஞ் சோல்வான் புகுந்து*" *(திவ். இயற். திருவிருத். 35). 2. மீட்டுக் கொள்ளுதல்;* to redeem, as a mortgage. "*ஒற்றியெல்லாம் சோன்று கொண்டாய்*" *(தேவா. 1040.9).*

P

ஞரல்(லு)–தல் ñaral-, *5 செ.கு.வி.* (v.i.) *முழங்குதல்;* to sound, make noise. "*புணரி வளைஞரல*" *(பதிற்றுப். 30:6).*

ம. ஞரங்ஙுக; க. நாகு, நரல், நெரளு; தெ. நாக; து. நரகுனி, நர்குனி, நரலுனி, நெர்லுனி, நர்லுனி; குட. நெரக்; குரு. நர்யானா; மா. நிரெ; பட. நரகு.

Ph

ஞா[1]–த்தல் ñā-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கட்டுதல் (யாழ்.அக.);* to tie, fasten.

ஞா[2]–த்தல் ñā-, *4 செ.கு.வி.* (v.i.) *பொருந்துதல்;* to stick, adhere. "*மண் ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே*" *(தொல். எழுத்து. 146, உரை).*

ஞால்(லு)–தல் ñāl-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தொங்குதல்;* to hang. "*ஞான்றன வயிரமாலை*" *(சீவக. 140). 2. பொழுது சாய்தல்;* to decline, descend, as the sun. "*பட்ட மாரி ஞான்ற ஞாயிற்று*" *(புறநா. 82:2).*

ம. ஞாலுக; க. நேல்; தெ. வாலு, வோலு; து. நேலுனி, நெல்புனி; குட. நேர், நேத்; கோத. நேத்; பட. நேனு.

ஞாற்று–தல் ñāṟṟu-, *6 செ.குன்றாவி.* (v.t.) *தொங்கவிடுதல்;* to hang up, suspend. "*பூஞாற்றினார்*" *(தொல். எழுத்து. 145, உரை).*

ம. ஞாற்றுக.

ஞாறு–தல் ñāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மணம் வீசுதல்;* to smell, emit an odour. "*விரை ஞாற வருதென்றல்*" *(சூளா. இரத். 54). 2. தோன்றுதல்;* "*கண்ணிழல் ஞாறிய காமர் பள்ளியுள்*" *(பெருங். இலாவாண. 11:15).*

Á

ஞிமிர்[1]–தல் ñimir-, *2 செ.கு.வி.* (v.i.) *நிமிர்தல் (சங்.அக.);* to be erect.

ஞிமிர்[2]–தல் ñimir-, *8 செ.கு.வி.* (v.i.) *வண்டு முதலியன ஒலித்தல் (சங்.அக.);* to sound, buzz, hum, as bees.

bP

ஞெகிழ்–தல் ñigiḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *1. கழலுதல்;* to become loose, slip off, as bangles. "*ஞெகிழ்தொடி யிளையவர்*" *(கலித். 73:8). 2. தளர்தல் (வின்.);* to languish, faint. *3. மனமிளகுதல் (தொல். பொருள். 72, உரை);* to be tender hearted. *4. மலர்தல்;* to blossom. "*ஞெகிழிதழ்க் கோடலும்*" *(கலித். 101). 5. உருகுதல்;* to melt, as wax. "*தீயுறு மெழுகின் ஞெகிழ்வனர்*" *(ஐங்குறு. 32). 6. மெலிதல்;* to become thin, emaciated. "*தோண் ஞெகிழ்பு*" *(கலித். 146:6). 7. சோம்புதல் (பிங்.);* to be lazy.

ம. ஞெகிழுக; மா. நெத்த்கெ.

ஞெமர்–தல் ñemar-, *2 செ.கு.வி.* (v.i.) *1. பரத்தல்;* to spread, extend. "*நீர்ஞெமர வந்தீண்டி*" *(பதிற்றுப். 72:9).*

2. நிறைதல்; to be full. "இலம்படு புலவ ரேற்றகை ஞெமர" *(பரிபா. 10:126).*

ஞெமல்(லு)–தல் ñemal-, *13* செ.கு.வி. (v.i.) *1. திரிதல்;* to wander, roam about. "அலர் ஞெமன் மகன்றில்" *(பரிபா. 8:44).*

ஞெமி–தல் ñemi-, *2* செ.கு.வி. (v.i.) நெரிதல்; to break, to give way, as under a weight. "தேம்பலிடை ஞெமிய" *(திருக்கோ.165).*

ஞெமிடு–தல் ñemiḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) கசக்குதல்; to crush, press out with the hands; to rub. "அங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்" *(நற்.22).*

ஞெமிர்[1]–தல் ñemir-, *2* செ.கு.வி. (v.i.) *1. பரத்தல்;* to spread, extend. "தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து" *(நெடுநல். 90). 2. தங்குதல்;* to rest, stay. "திருஞெமி ரகலத்து" *(சிலப். 28:157). 3. முற்றுதல் (அக.நி.);* to be mature, ripe. *4. ஒடிதல்;* to break, snap off. *5. நெரிதல்;* to be crushed, compressed; to be pressed out, as pulp. "மார்புறு முயக்கிடை ஞெமிர்ந்த சோர்குழை" *(நற்.20).*

ஞெமிர்[2]–த்தல் ñemir-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. ஒடித்தல் (திவா.);* to snap, break off. *2. நெரித்தல்;* to press with the hands. "சிறுமந்தி..... தந்தையை..... விரலான் ஞெமிர்த் திட்டு" *(நாலடி. 237).*

ஞெமுக்கு–தல் ñemukku-, *5* செ.குன்றாவி. (v.t.) நெருக்கி வருத்துதல்; to press hard. "ஒண்டொடி ஞெமுக்கா தீமோ" *(அகநா. 60).*

ஞெமுங்கு–தல் ñemuṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. அழுந்துதல்;* to yield, to pressure, to be pressed in, squeezed as ripe fruit. "வளைந்துவர விளமுலை ஞெமுங்க" *(அகநா. 58). 2. செறிதல் (திவா.);* to be compact, in close contact.

ம. நமுங்க.

ஞெரி[1]–தல் ñeri-, *2* செ.கு.வி. (v.i.) முறிதல் *(சங்.அக.);* to break, snap off, to be crushed.

ம. ஞெரியுக.

ஞெரி[2]–த்தல் ñeri-, *4* செ.குன்றாவி. (v.t.) நெறித்தல்; to be crushed.

ஞெலி[1]–தல் ñeli-, *2* செ.குன்றாவி. (v.t.) *1. தீக்கடைதல்;* to rub one stick on another for producing fire by friction. "ஞெலிதீ விளக்கத்து" *(புறநா. 247:2). 2. குடைதல் (அக.நி.);* to make hollow.

ஞெலி[2]–தல் ñeli-, *2* செ.கு.வி. (v.i.) உரசுதல்; to rub, grate, as bamboos. "ஞெலிகழை" *(ஐங்குறு. 307).*

ஞெள்(ளு)–தல் ñel(ḷu)-, *15* செ.கு.வி. (v.i.) *1. பள்ளமாதல் (வின்.);* to become hollow. *2. ஒலித்தல் (வின்.);* to sound. *3. உடன்படுதல் (அக.நி.);* to agree, yield, consent.

ஞெளி–தல் ñeḷi-, *2* செ.கு.வி. (v.i.) பிணங்குதல்; non accepting other's desire be at variance.

ஞெளிர்–தல் ñeḷir-, *2* செ.கு.வி. (v.i.) எடுத்தலோசையுடன் ஒலித்தல் *(பிங்.);* to sound in a high pitch.

bPh

ஞொள்கு–தல் ñoḷgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. மெலிதல் (திவா.);* to languish, become weak, faint, be worn out. *2. குறைவுபடுதல்;* to diminish. "புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி" *(அகநா. 31). 3. சோம்புதல் (திவா.);* to be lazy, dull. *4. அஞ்சுதல் (திவா.);* to fear, to be timid, agitated. *5. அலைதல் (பிங்.);* to wander. *6. குலைதல் (பிங்.);* to be disarranged, thrown into confusion.

j

தக்கு[1]–தல் takku-, *5* செ.கு.வி.(v.i.) ஏற்றதாதல்; to be fit, suitable, becoming. *(செ.அக.).*

க., தெ. தகு.

தக்கு[2]–தல் takku-, *5* செ.கு.வி.(v.i.) *1. நிலைபெறுதல்;* to come permanent, to be lasting, as a possession or acquisition; to be retained. "அளைந்தா லிவளாவி தக்கும்" *(தனிப்பா. i, 353, 78). 2. பயன்படுதல் (வின்.);* to be profitable. *3. பிறந்த குழவி நிலைத்தல்;* survive of the new born baby.

ம. தக்குக; க. தக்கு; தெ. தக்கு.

தக்கு[3]–தல் takku-, *5* செ.கு.வி.(v.i.) வயப்படுதல் *(யாழ்.அக.);* to yield; to be submissive.

க., தெ. தக்கு.

தகப்படு–தல் taga-p-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) மேன்மை தங்குதல்; to be eminent, distinguished."தகப்படுஞ் சரா சனத் தனஞ்சயன்" *(பாரத. வாரணா; 80).*

தகர்[1]–தல் tagar-, *4* செ.கு.வி.(v.i.) *1. நொறுங்குதல்;* to be broken to pieces, as skull-bone, earthen vessels. "தலைபத்துந் தகரவுன்றி" *(தேவா. 777:10). 2. உடைதல்;* to be shattered, demolished. வெடிகுண்டு வீச்சினால் வீடுகள் தகர்ந்தன. குமுகாயம் மாறும்போது பலமதிப்பீடுகள் தகர்ந்துபோகின்றன. *(உ.வ.).* என்னுடைய நம்பிக்கையெல்லாம் பேச்சு வார்த்தைகளுக்குப் பின் தகர்ந்துவிட்டது. *3.நெரிதல் (வின்.);* to be crushed, bruised. *4. சிதறுதல் (வின்.);* to be scattered, as the ranks of an army. *5. அழிதல் (வின்.);* to be breached, as a dam, a bank. *6. சாய்ந்து விழுதல்;* to be uprooted. "சந்தனங்கடகர்ந்தன தாள்பட" *(கம்பரா. பொழிலிறு. 26).*

ம. தகருக.

தகர்[2]–த்தல் tagar-, *4* செ.குன்றாவி.(v.t.) *1. நொறுக்குதல்;* to break to pieces. வரலாற்றுப் புகழ்மிக்க கவின்கலைக் கூடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்க்கச் சதி *(இக்.வ.).* "ஞாயிற்றின் பல்லனைத்துந் தகர்த்தார்" *(தேவா. 576:2). 2. புடைத்தல்;* to strike, dash to the ground.

"முன்றகர்த்தெல்லா விமையோரையும்" (திருக்கோ. 92). 3. குட்டுதல் (திவா.); to cuff, strike with the knuckles, as on the head. 4. நெரித்தல் (வின்.); to bruise, fracture, as a bone. 5. சிதறடித்தல்; to break the ranks of an army, defeat, rout. "தாருகன் பண்டு தேவரைத் தகர்த்தது" (கம்பரா. இராவணன்வதை. 105). 6. அழித்தல்; to ruin, destroy. "நீண்ட வசுர ருயிரெல்லாந் தகர்த்து" (திவ். திருவாய். 8.10:6). 7. பரு முதலிய கட்டிகளைத் திறத்தல் (வின்.); to break open a blister, a boil. 8. முறியடித்தல்; to break the record.

தகர்[3]–த்தல் tagar-, 4 செ.கு.வி.(v.i.) மெச்சும்படி ஆற்றல் காட்டுதல் (இ.வ.); to show off one's ability.

ம. தகர்க்க.

தகு[1]–தல் tagu-, 5 செ.கு.வி.(v.i.) 1. ஏற்றதாதல்; to be fit, appropriate, suitable, proper, worthy, adequate, proportionat. "கற்றபி னிற்க வதற்குத் தக" (குறள், 391). 2. மேம்படுதல்; to be excellent. "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" (குறள், 54). 3. தொடங்குதல்; to begin, get ready. "புல்லாள் புலத்தக்கனள்" (குறள், 1316). 4. கிட்டுதல்; to be obtained. "துன்புறி னல்லது சுகந்ததாது" (திருவானைக்.நாட்டு. 115). 5. தகுதியாதல்; to be deserved. இந்தப் பெருமை அவனுக்குத் தகாது. (இச்.வ.).

க.,தெ. தகு; ம. தகு.

தகு[2]–தல் tagu-, 5 செ.குன்றாவி.(v.t.) பொருந்துதல்; ஒத்திருத்தல்; to resemble. "புண்டரிகந் தகுபத யுகளம்" (கோயிற்பு. பதஞ்சலி. 40).

தகை[1]–தல் tagai-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. தடுத்தல்; to stop, resist, check, deter. "தருதல் தகையாதான் மற்று" (கலித். 929). 2. ஆணையிட்டுத் தடுத்தல் (வின்.); to obstruct or forbid by oath. 3. பிடித்தல்; to seize take hold of. "தடக்கையால் வளைக் கரந் தகைந்தான்" (பாரத. அருச்சுனன் றீர்.. 70). 4. அடக்குதல்; to overpower, subdue. "ஆழிதகைந்த தனுத்தொழிலான்" (கம்பரா. அதிகாய. 62). 5. உள்ளடக்குதல்; to shut in, enclose, include. "தண்கேணித் தகைமுற்றத்து" (பட்டினப். 51). 6. பிணைத்தல் (இ.வ.); to bind, fasten, yoke. 7. ஒத்தல் (தொல்.பொருள். 287); to resemble.

க. தகெ.

தகை[2]–தல் tagai-, 4 செ.கு.வி.(v.i.) தளர்தல் (யாழ்.); to falter, faint, be weary.

மறுவ. திகைதல்.

தகை[3]–த்தல் tagai-, 4 செ.குன்றாவி.(v.t.) 1.தடுத்தல்; to check, resist, stop, deter. "நின்னைத் தகைத்தனென்" (கலித். 108 : 20). 2. கட்டுதல்; to bind, fasten. "நுண் கோற்றகைத்த தெண்கண் மாக்கிணை" (புறநா. 70:3). 3. சுற்றுதல்; to wind round, coil. "தகைத் தார்" (புறநா. 69). 4. வாட்டுதல் (யாழ்.அக.); to tease, tire out. 5. அரிதல்; to mince. "மயிரிற் றகைத்து வறுத்தெரித் திடிப்பினும்" (ஞானா. 31:10).

தகை[4]–த்தல் tagai-, 4 செ.கு.வி.(v.i.) அழகுபெற்றிருத்தல்; to be beautiful, lovely. "பிடவுமுகை தகைய" (ஐங்குறு. 461).

தகை[5]–த்தல் tagai-, 4 செ.கு.வி.(v.i.) 1.நெருங்கப் பெறுதல்; to be crowded. "சனத்தினாற் றகைத்திடம் பெறாது" (சீவக. 825). 2. களைத்தல் (யாழ்.அக.); to be fatigued, wearied.

தங்கு–தல் taṅgu-, 5 செ.கு.வி.(v.i.) 1. வைகுதல்; to stay, sojourn, abide, remain. "பண்புடை வேந்தன் கவிகைக் கீழ்த் தங்கு முலகு" (குறள். 389). 2. நிலைபெறுதல்; to be stable, to be firmly established, to be retained in the mind. "தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே" (குறள், 613). 3. உளதாதல்; to exist. "தானந்தவமிரண்டுந் தங்கா வியனுலகம்" (குறள், 19). 4. அடங்குதல்; to be under control; to be obedient. "பண்புடை யாளன் றகைமைக்கட் டங்கிற் றுலகு" (குறள், 874). 5. தணிதல்; to be diminished, abated, quenched, as thirst. "தங்காவேட்கை தனையவள் தணித்த தூஉம்" (மணிமே. 18:96). 6. காலந்தாழ்த்துதல் (பொருந. 177:உரை); to halt; to wait; to delay. 7. தடைப் படுதல் (வின்.); to cease to flow, as the menses; to be obstructed, as water; to be stopped; to be fixed, as substance between the teeth; to adhere. 8. இருப்பா யிருத்தல் (வின்.); to be reserved or kept back; to remain due. 9. அடியிற் படிதல்; to settle at the bottom, as sediment. 10. சார்ந்திருத்தல் (வின்.); to rely, depend; to be dependent. "சொலை முனிந்து பொய்ம்மயக்கஞ் சூதின்கண் தங்கல்" (திரிகடு. 39).

க. தங்கு; ம. தங்ஙக.

தட்கு[1]–தல் taṭku-, 5 செ.கு.வி.(v.i.) தங்குதல்; to remain; to abide. "அஞ்சுவரத் தட்கு மணங்குடைத்துப்பின்" (மதுரைக். 140).

தட்கு[2]–தல் taṭku-, 5 செ.குன்றாவி.(v.t.) கட்டுதல்; to bind, enchain. "ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே" (புறநா. 193:4).

தட்டிக்கழி[1]–த்தல் taṭṭi-k-kaḻi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. விலக்குதல்; to repel, get rid of. ஒட்டிக் கொண்டு போனாலுந் தட்டிக்கழிக்கிறான். 2. ஒருவனுக்கு வரவேண்டிய தொகையிலிருந்து அவனாற் செல்ல வேண்டிய (கொடுக்க வேண்டிய) தொகையைக் கழித்துக் கணக்கு முடித்தல் (இ.வ.); to give credit for a sum claimed.

தட்டிக்கழி[2]–த்தல் taṭṭi-k-kaḻi-, 4 செ.கு.வி.(v.i.) சாக்குப் போக்குச் சொல்லுதல் (இ.வ.); to give lame excuses.

தட்டிக்கொடு–த்தல் taṭṭi-k-koḍu-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. அமைதி பண்ணுதல் (இ.வ.); to quiet, lull by gently tapping. 2. ஊக்கப் படுத்துதல் (இ.வ.); to

cheer, encourage, urge on, as by patting. முதலாளி தொழிலாளர்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கவேண்டும் (உ.வ.). 3. தூண்டுதல்; to incite. 4. ஒருவர் மீது தட்டிக் குறிப்புக்காட்டுதல் (வின்.); to indicate or betray a person by tapping him.

ம. தட்டிக்கொடுக்க.

தட்டிப்பறி–த்தல் taṭṭi-p-paṟi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1.அடித்துப் பிடுங்குதல்; to rob by force. அவன் கைப்பொருளைத் தட்டிப் பறித்துக் கொண்டு துரத்திவிட்டார்கள். 2. வலக்காரமாய்ப் பறித்தல்; to get by stratagem. 3. கவர்ந்து செல்லுதல்; to snatch away. குழந்தையின் கையில் இருந்த முறுக்கைக் காக்கை தட்டிப் பறித்துப் பறந்தது (உ.வ.).

தட்டிப்போ–தல் taṭṭi-p-pō-, 8 செ.கு.வி.(v.i.) நிறைவேறாமல் தள்ளிப்போதல்; to fall through; miscarry. வீடு கிடைக்கும் என்றிருந்த கட்டத்தில், ஏதோ கரணியத்தால் தட்டிப்போய் விட்டது (இ.வ.). ஒவ்வொரு முறையும் வேலை கிடைப்பது போலிருந்து, தட்டிப்போகிறது (உ.வ.).

தட்டிப்போடு–தல் taṭṭi-p-pōḍu-, 19 செ.குன்றாவி.(v.t.) 1.கவிழச்செய்தல்; to strike and spill, overturn. தட்டிப்போட்ட வறட்டியைப் புரட்டிப் போடக் காரணவரில்லை (பழ.). 2. வெல்லுதல் (வின்.); to overcome, as in a game. 3. மறுத்தல்; to disregard, reject. நான் சொன்னதைத் தட்டிப்போட்டான் (இ.வ.).

தட்டு[1]–தல் taṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கதவு முதலியவற்றைப் புடைத்தல்; to knock at, rap at; to tap, pat. புரையேறிவிட்டால் தலையில் தட்டுவார்கள் (உ.வ.). 'நன்றாக வரைந்திருக்கிறாய்' என்று கூறி மாணவனின் முதுகில் ஆசிரியர் தட்டினார் (உ.வ.). 2. மோதுதல்; to strike against, dash against, run around, as a vessel. மரக்கலம் தரைதட்டிப் போயிற்று (உ.வ.). தேங்காயைத் தட்டிப்பார்த்து வாங்கு (இக்.வ.). கதவை இருமுறை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். (உ.வ.). 3. கிட்டுதல் (சூடா.); to approach, come in contact with. 4. கொட்டுதல்; to strike or beat, as drum, tambourine. "கிணை வள்ளியோன் முன்கடை தட்டி" (பு.வெ.9:58). காவலர் தட்டிய தட்டில் அவன் உண்மையைச் சொல்லிவிட்டான் (இ.வ.). 5. உட்செல்லுமாறு அடித்தல்; to drive in by hammering. "தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா வுளி" (நாலடி., 355). 6. அடித்து வீழ்த்துதல்; to beat down from trees, as fruits, leaves; to thresh out, as grain, pulse, ground-nuts. மரத்திலிருந்து புளிதட்ட ஆள் வேண்டும் (உ.வ.). 7. தட்டித் தூசி போக்குதல்; to dust, as bed. படுக்கையைத் தட்டிப்போடு. 8. நொறுக்குதல் (வின்.); to crush by beating, as palmyra fruit. 9. உடைத்தல் (தைலவ. தைல.); to beat and break, as nut-shells. 10. தட்டை யாக்குதல்; to hammer out, flatten, as malleable metal. ஆணியைத் தட்டி நேராக்கிக் கொடு (உ.வ.). 11. பரம்படித்தவயலைச் சீராக்குதல் (நாஞ்.); to level up a harrowed field. 12. அடித்துக் கூர்மையாக்குதல்; to sharpen by beating, as with hammer. கொழுத் தட்டுதல் (உ.வ.). 13. களிமண்ணைக் கையால் தட்டி உருவாக்குதல்; to mould with the hands by tapping, as clay. 14. சாணிமுட்டை முதலியன செய்தல்; to beat into flat cakes, as dough, cattle-dung, etc. 15. நீரெற்றுதல் (யாழ்ப்.); to throw out water with the foot or hand or basket. 16. கொட்டி விடுதல்; to empty, pour out, as a sack of grain. 17. கவர்தல்; to steal, pilfer, swindle; get by stratagem. "தட்டிக்கொண்டு போனான்" (இராமநா. ஆரணி : 24). 18. தள்ளுதல்; to overturn, trip up. தன் வலிமையால் எதிரியைத் தட்டிவிட்டான் (உ.வ.). 19. இடித்து விடுதல்; to batter, demolish. சுவரைத் தட்டிவிடு. 20. அகற்றுதல் (வின்.); to get - dismissed, as a servant. 21. முறியடித்தல் (வின்.); to out-beat, to vanquish. 22. தடுத்தல்; to obstruct, hinder, ward off. "தகையினாற் காறட்டி வீழ்க்கும்" (கலித். 97, 17). 23. மறுத்தல்; to oppose, contradict, disobey, reject, refuse. "தட்டாது முன்னந்தருந் தெய்வம்" (குலோத். கோ. 37). 24. புரட்டுதல் (வின்.); to equivocate, palliate. 25. குலையச் செய்தல்; to frustrate, thwart. என் முயற்சியை யெல்லாந் தட்டிவிட்டான். 26.பின் வாங்கச் செய்தல்; to dissuade. உதவி செய்வதாகச் சொன்னவனைத் தட்டிவிட்டான் (உ.வ.).

மறுவ. பட்டுதல்.

தட்டு[2]–தல் taṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. தப்புதல்; to elude, escape. இந்தப் பொருள் தோன்றாமல் தட்டிவிட்டது (உ.வ.). 2. பொருள்படாதிருத்தல்; to be unintelligible. இந்தத் தொடர் தட்டுகிறது (உ.வ.). 3. குறைவுபடுதல்; to be scanty; to be scarce, as rain, cash. இவ்வாண்டு விளைவு தட்டிவிட்டது (உ.வ.). 4. மேலேபடுதல்; to fall upon, as the rays of the sun. வெயில் தட்டாதபடி (ஈடு.). 5. தோன்றுதல்; to appear, to exist; to arise, as a doubt. 6. நினைவு எழுப்புதல்; to suggest a thought. மறந்திருக்கையில் தட்டிக் காட்டினான். 7. தடை படுதல்; to be at fault; to fail; halt, as the hand in playing on an instrument, writing, performing an operation, as the tongue in reading or speaking. 8. தளைதட்டுதல்; to hobble; to be halting, as verse.

ம. தட்டுக; தெ., க., பட. தட்டு; கோத. தட்; துட. தொட்; து. தட்டு, தட்டாவுனி; மா. தட்சை; குரு. தட்னா.

தடக்கு[1]–தல் taḍakku-, 5 செ.கு.வி.(v.i.) தடைப்படுதல் (வின்.); to be obstructed, impeded, detained.

தடக்கு[2]–தல் taḍakku-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. தடை பண்ணுதல் (யாழ்.அக.); to obstruct, hinder, detain. 2. இடறுதல் (யாழ்ப்.); to trip up.

தடங்கு–தல் taḍaṅgu-, 5 செ.கு.வி.(v.i.) தடை; obstacle, hindrance, impediment. (செ.அக.).

தடவா–தல் (தடவருதல்) taḍāvā-, *15 செ.குன்றாவி.*(v.t.) *1. தடவுதல்;* to stroke, to blow gently over. "மந்தமாருதம்..... தடவந்து வலிசெய்வது" *(திவ். பெரியதி. 8:5:1). 2. பூசுதல்;* to rub, besmear. "நீறு தடவந் திடப மேறி" *(தேவா.774:1). 3. தேடுதல்;* to seek. "பழ மறையுந் தடவர" *(அழகர்கலம். 15). 4. யாழ் முதலியன வாசித்தல் (வின்.);* to play, as on a lute.

தடவு[1]–தல் taḍavu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. வருடுதல் (திவா.);* to sroke. "தன் நெஞ்சந் தாமே தடவாரோ தானவர்கள்" *(கம்பரா. மாயாசன.க.80). 2. பூசுதல்;* to anoint, as with liniment; to smear, spread on, plaster. "தலைக்குத் தேங்கா யெண்ணெய் தடவிக்கொண்டான்" *(உ.வ.).* 'பசைதடவிப் படத்தை ஒட்டினான்' *(இக்.வ.). 3. தகட்டுப்பணிகாரஞ் செய்தல் (யாழ்ப்.);* to make into thin pancakes. *4. இருட்டில் கை கால் முதலியவற்றால், துழாவுதல்;* to grope, feel one's way with hands or feet, as in the dark. "காலினாற் றடவிச் சென்று" *(பெரியபு. இளையான்குடி.18). 5. தேடுதல்;* to seek. "பிலந்தடவி" *(கம்பரா. நட்புக்கோ. 53). 6. குறைத்தளத்தல்;* to measure closely or stintingly. *7. யாழ் முதலியன வாசித்தல்;* to play, as on a lute. *8. திருடுதல்;* to steal. *9. உரிமையல்லாதவளைப் புணர்தல்;* to have illicit intercourse with a woman.

ம். தடவுக; க. தடவு, தொடே, தடகு; தெ. தடவு, தடமு; கோத. தட்வத்; துட. தொட்பொர்; குட. தவ்ட்; பட. தடவு.

தடவு[2]–தல் taḍavu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அசைதல்;* to sway to and fro, as a drunken man."களிப்பட்டானிலையே போற் றடவுபு" *(கலித். 101). 2. தடுமாறுதல்;* to be halting; to hesitate. தடவிப் படிக்கிறான் *(உ.வ.). 3. முட்டுப் பாடாயிருத்தல்;* to be scarce.

ம். தடவுக; தெ. தடவு.

தடாவு–தல் taḍāvu-, *5 செ.கு.வி.*(v.i.) வளைதல்; to bend, curve. "தடாவிய வம்பும்" *(திவ். இயற். திருவிருத். 6).*

தடி–தல் taḍi-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1.* வெட்டுதல்; to hew down, cut down, cut off. "வாளோச்சிமிகத் தடிந்தாள்" *(பு.வெ.5:8). 2. அழித்தல்;* to kill, destroy. மன்குலத்தொடு தடிந்து" *(பாரத. இராசசூய. 43). 3. குறைத்தல்;* to reduce, diminish. "தடிந்தெழிலி தானல்காதாகி விடின்" *(குறள், 17).*

தடிசாத்து–தல் taḍi-šāttu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* கையெழுத்துக் குறியிடுதல் *(இ.வ.);* to affix signature - mark. *2. தடியால் அடித்தல்;* to beat with staff.

தடிபோடு–தல் taḍi-pōḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. நிலமளத்தல் (வின்.);* to measure ground, as in the game of tipcat. *2. தேரை, மரக்கட்டையால் நெம்பிக் கிளப்புதல் (இ.வ.);* to apply the leverbeam to the wheels in starting a temple car. *3.* வருந்தி முயன்று, ஒருவனை வேலையில் மூட்டுதல்; to set a person to work, with great difficulty. *4. இடையூறு செய்தல் (இ.வ.);* to raise objections; to put obstacles in the way.

தடிவை–த்தல் taḍi-vai-, *4 செ.கு.வி.*(v.i.) தென்னை வளர்ப்பில் முதலாவதாகக் குழியிலிருந்து மரம் தோன்றுதல் *(நாஞ்.);* to form stem, as coconut palm, in cultivation.

தடு[1]–த்தல் taḍu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. தடை செய்தல் (பிங்.);* to hinder, stop, obstruct; to forbid, prohibit, to resist. "இயங்கறத் தடுமின்" *(கம்பரா. முதற்போர். 3).* 'அரசர்கட்குள்ளே எழும் போர்களைப் புலவர்கள் தடுப்பது வழக்கம்' *(உ.வ). 2. அடைத்தல்;* to dam, block up. *3. வேறுபிரித்தல்;* to partition off. அந்த அறையைத் தடுத்திருக்கிறான் *(உ.வ.). 4. நிறுத்தி வைத்தல்;* to detain. *5. அடக்குதல்;* to curb, check, restrain, control. "தடுக்கலாகலாத் துயரம்" *(கம்பரா. பள்ளியடை. 133). 6. விலக்குதல்;* to ward off, avert. "சாபத்தை நக்கனே கொலாந் தடுக்கவல்லான்" *(கந்தபு. சந்திர. 49). 7. எதிர்த்தல்;* to oppose. *8. மறுத்தல்;* to contradict, rebut, repel. *9. பயனறச் செய்தல் (வின்.);* to baffle, frustrate. *10. எண்ணம் மாறச் செய்தல்;* to dissuade.

ம். தடுக்குக; க. தடவு, தடசு; தெ. தடயு; து. தடெபினி, தடெபுனி; கோத., துட. தட்வ; குட., பட. தடெ; குரு. டண்ட்னா.

தடு[2]–தல் taḍu-, *4 செ.கு.வி.*(v.i.) இசைதல் *(யாழ்.அக.);* to be agreeable.

தடுக்கு–தல் taḍukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) இடறுதல்; to obstruct, impede, hit against, trip up. *(செ.அக.).*

தடுமாறு–தல் taḍumāṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. ஒழுங்கற் றிருத்தல்;* to be deranged. *2. நெறியின்றிக் கலந்து கிடத்தல்;* to be thrown in a jumble. "எல்லா மிடைதடுமாறு நீரால்" *(கம்பரா. ஆற்றுப். 17). 3. சறுக்குதல், வழுக்குதல்;* to slip. *4. தள்ளாடுதல்;* to totter, stagger, be unsteady. "இடை தடுமாற வேகி" *(கம்பரா. ஊர்தேடு. 184). 5. சுண்டியெறிதல்;* to be tossed about. *6. துன்பத்திற்குள்ளாதல்;* to be troubled. "வினைக்கடலிற் றடுமாறு முயிர்க்கு" *(தேவா. 974: 7). 7. தாறுமாறாக்குதல், மலைப்பூட்டுதல், உள்ளங் குழம்புதல்;* to be confused. *8. மனங் கலங்குதல்;* to be puzzled. "எண்ணந்தான் தடுமாறி" *(திருவாச. 5:25). 9. சிக்கலாக்குதல், கிக்கவைத்தல், பின்னிக் கொள்ளுதல்;* to be perplexed. *10. கெடுத்தல், குலைத்தல்;* to be disconcerted. *11. ஐயங்கொள்ளுதல், தயங்குதல் (வின்.);* to hesitate, to doubt; to be in suspense. *12. தவறுதல் (வின்.);* to be mistaken, to be inconsistent, to err.

தடை[1]–தல் taḍai-, *4 செ.குன்றாவி.*(v.t.) தடுத்தல்; to hinder, stop. "எண்வழி தடைந்து" *(கல்லா. 31:1).*

க. தடெ.

தடை[2]–த்தல் taḍai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *இடையூறு செய்தல்;* to hindrance. "*மழைவந் தெழுநாள் பெய்து மாத்தடைப்ப*" *(திவ். பெரியாழ். 3. 5:2).*

தடையறு–த்தல் taḍai-y-aṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மந்திரத் தடை நீக்குதல்;* to remove magic spells by counter charms. *2. இடையூறு விலக்குதல்;* to obviate or remove difficulties.

தண்டி[1]–த்தல் taṇḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.ஒறுத்தல்;* to chastise, scourge, punish. "*நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்*" *(திருவாச.12:4). 2. வெட்டுதல் (வின்.);* to cut off, sever, mutilate, hack. "*தாறத் தண்டித்த தண்டி*" *(சிவரக. பாயி. 7). 3. கட்டளையிடுதல்;* to order, direct. *அவனை அவ்விதஞ் செய்யத் தண்டித்தேன் (இ.வ.).*

தண்டி[2]–த்தல் taṇḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வருந்தி முயலுதல்;* to take pains, try hard. "*இதிலே நன்றாய்த் தண்டிக்கிறான்*" *(யாழ்ப்.).*

தண்டி[3]–த்தல் taṇḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *பருத்தல்;* to become fat, plump, to swell in size. *ஆள் தண்டித்துவிட்டான் (உ.வ.) (செ.அக.).*

தண்டிகொள்(ளு)–தல் taṇḍi-koḷ(ḷu)-, *16 செ.குன்றாவி.* (v.t.) *தண்டு[1]-தல் பார்க்க;* see taṇḍu[1]. *நாலு வேலிக்கும் உள்பட்ட மனையால் மாதம்தொறும் இருநாழி அரிசி தண்டிக் கொள்ளக் கடவதாகவும் தண்டும் இடத்து இதுக்குத் தாழ்வு கொன்னாருண்டாகில் (S.I.I.iv.399/1986).*

தண்டு[1]–தல் taṇḍu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. சேர்த்தல், திரட்டுதல்;* to collect, levy, gather, recover, as debts, rents, taxes etc., "*தண்ட நிச்சயித்த காசில்*" *(S.I.I.iii. 211). 2.வருத்துதல்;* to insist, trouble. "*பருகெனத் தண்டி*" *(பொருந. 104). 3. இணைத்தல்;* to join, attach. "*வாசுகியைத் தண்டி யமரர் கடைந்த கடல்*" *(தேவா. 387 : 10). 4. நீங்குதல்;* to leave, abandon. "*கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்*" *(முது. காஞ். 10, 3).*

தண்டு[2]–தல் taṇḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. தணிதல்;* to decrease, diminish. "*தண்டுத லின்றி யொன்றி*" *(கம்பரா. மிதிலை. 8). 2. கெடுதல்;* to perish. "*தண்டாக் காதல்*" *(பு.வெ.9.45:கொளு). 3. தடைப்படுதல்;* to be hindered. "*தண்டாதி யாருந் தாம்வேண்டிய*" *(ஞான. 15:6). 4. விலகுதல்;* to be in seclusion, to separate. "*எவனொருவன் தண்டித் தனிப்பகை கோள்*" *(நாலடி. 324). 5. தொடுதல்;* to come in contact. "*நாக்கிலே தண்டாமல் மருந்தைச் சாப்பிட்டான்*" *(வின்.). 6. மனமமைதல்;* to be satisfied. "*கண்டு தண்டாக் கட்கின்பத்து*" *(மதுரைக். 16). 7. விருப்பங் கொள்ளுதல்;* to be eager, keenly desirous. "*தண்டித் தண்டிற் றாஅய்ச் செல்வாரும்*" *(பரிபா. 10:100). 8. சினமூண்டெழுதல்;* to rise in fury. "*செங்கண் மழவிடையிற் றண்டி*" *(பு.வெ.3;1).*

ம.தண்டுக; தெ.தண்டு; து.தண்டியுனி; கோத.தண்ட்; துட. தொட்; பட. தண்டு.

தண்ணா–த்தல் taṇṇā-, *4 செ.கு.வி.*(v.i.) *தாழ்த்தல்;* to delay. "*தண்ணாவா தடியேனைப் பணிகண்டாய்*" *(திவ். திருவாய். 49:1).*

தண்ணீரா–தல் taṇṇīr-ā-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நீர் வடிவாய்ப்போதல்;* to become watery, diluted. *2. நெட்டுருவாதல்;* to be committed to memory. *பாடம் தண்ணீராயிருக்கிறது (இ.வ.).*

தண்ணீராக்கு–தல் taṇṇīr-ākku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.ஒருவனை இரக்கங்கொள்ளும்படி செய்தல்;* to make one pity. *2. மாழைகளை நீர்மவடிவிலாக்குதல்;* to melt, dissolve, as metals. *3. பால் முதலியவற்றில் நீர் கலத்தல்;* to dilute, as milk. *4. நெட்டுருப் பண்ணுதல்;* to get by heart. *பாடத்தைத் தண்ணீராக்கி விட்டான் (உ.வ.). 5. கரையச் செய்தல்;* to dissolve as sugar. *(சா.அக.).*

தண[1]–த்தல் taṇa-, *3 செ.கு.வி.*(v.i.) *1.நீங்குதல்;* to depart, go away. "*தங்குதீமல நாளுந் தணந்திடும்*" *(பிரமோத்.10:38). 2. போதல்;* to go; to pass.

தண[2]–த்தல் taṇa-, *3 செ.குன்றாவி.*(v.t.) *1. நீக்குதல்;* to put away, remove. "*மெலிவைத் தணப்பான்*" *(தணிகைப்பு. கள. 340). 2. பிரிதல்;* to leave, separate from. "*தணந்தமை சாலவறிவிப்ப போலும்*" *(குறள், 1233).*

தணி[1]–தல் taṇi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. ஆறுதல்;* to be allyaed, mitigated, alleviated, softened, appeased, pacified, soothed. *'சினந் தணிந்தீகென' (கலித். 16). 2. குறைதல்;* to be reduced. "*தணியாத் துன்பந் தலைத்தலை மேல்வர*" *(மணிமே. 2:5). 3.வற்றுதல்;* to grow dry. "*தணிவருங் கயத்துப் பூத்த*" *(சீவக.1582). 4. விளக்கு முதலியன அவிதல் (இ.வ.);* to die out, expire, as flame. *5. வேலை முதலியவற்றினின்றும் நீங்குதல்;* to be free, as from work. *'தணியும் பொழுதின்றி நீரணங்காடுதிர்*" *(திவ். திருவாய். 4:6:6). 6. காலந் தாழ்த்துகை, தவக்கம்;* to delay, slacken. "*தணியா தொல்லை தான்வந்தருளி*" *(திருவாச. 32:8). 7. தாழ்தல்;* to yield, submit oneself. *அவன் இவனுக்குத் தணியான். 8. ஒன்றோடொன்று இசைதல் (வின்.);* to be adapted, as the angle of a hoe to the half, as the coulter to the plough. *9. நிறைதல்;* to abound; to be profuse. "*தணிபொன் சொரியும்*" *(தஞ்சைவா. 25). 10. பொந்திகையடைதல்;* to be satisfied, fulfilled, as a desire. "*தணியா வேட்கை தணித்தற் கரிதாய்*" *(மணிமே. 25:121). 11. பருத்தல்;* to increase in size, grow fat. *இந்த மருந்தால் உடம்பு தணியும் (உ.வ.).*

தெ. தணியு; க. தணி; ம. தணியுக.

தணி[2]–த்தல் taṇi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.ஆற்றுதல்;* to relieve, appease, satisfy, heal. "*நெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென*" *(மலைபடு. 303). 2. குறைத்தல்;* to cause to

diminish, to moderate. *3. தாழ்த்துதல்;* to lower in height, set lower, strike, as a flag. *4. புதைத்தல் (சூடா.);* to bury. *5. அவித்தல்;* to extinguish, quench, as fire. *6. தீர்த்தல்;* to remove, cure. "நோய்முதனாடி யது தணிக்கும் வாய்நாடி" *(குறள், 948). 7. தண்டித்தல்;* to punish. "தணித்தலு மளித்தலுந் தடிந்தோன்" *(ஞானா. 48:20).*

தணி[3]–த்தல் taṇi-, *2 செ.கு.வி.*(v.i.) பொறுத்தல்; to bear. "மின்னு... துன்னுவாட்டந் தணித்தலின்" *(சீவக. 867).*

தணிந்திரு–த்தல் taṇindiru-, *4 செ.கு.வி.*(v.i.) சதை பிடித்தல்; to pick up flesh.

தத்தளி–த்தல் tattaḷi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. எதிர்பாராத நேர்ச்சியில் (விபத்து) அகப்பட்டுத் திகைத்தல்;* to struggle for life, to gasp for breath, as a drowning person; to be at one's wit's end; to be greatly agitated. "ஒன்னார்கள் முறையிடத் தத்தளிக்கப் பொரும்" *(தனிப்பா. 1 : 355). 2. பஞ்சம் முதலியவற்றால் வருந்துதல் (இ.வ.);* to be in great straits, as persons in times of drought, famine or epidemic. *அடைமழை பெய்ததால் மக்கள் வீடுகளை இழந்து தத்தளிக்கின்றனர் (உ.வ.). 3. மனங்கலங்குதல்;* to be agitated in mind. *4. மூச்சுசத் திணறல்;* to gasp for breath, to struggle for life. *நீரில் தத்தளித்து மூழ்க இருந்தவரை மீனவர்கள் காப்பாற்றினர் (உ.வ.). புயலில் சிக்கிக் கப்பல் தத்தளித்தது (உ.வ.).*

தெ. தத்தரில்லுபடு; க. தத்தளிசு.

தத்து–தல் tattu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குதித்தல்;* to leap, jump, skip, hop. "தத்தாவுறு தடந்தேரினைத் தொடர்ந்தான்" *(கம்பரா. நிகும்பலை : 121). 2. தாவிச்செல்லுதல்;* to go by leaps and jumps; to move by jerks and starts, as cockroaches. "தத்திப்புக வரும் பொங்குளைப் புள்ளியன் மாவும்" *(பரிபா. 10:14). 3. தாவியேறுதல்;* to jump over. "ஏற்றுப்பிண ரெருத்திற் றத்துபு" *(கலித். 103:34). 4. அடியால் அளத்தல்;* to measure, as in pacing. "ஞாலந் தத்தும் பாதனை" *(திருவிருத். 79). 5. ததும்புதல்;* to be agitated; to heave, shake, as water in a jar. "தத்து நீர்க்கடல்" *(கம்பரா. படைத்தலைவ. 54). 6. பரவுதல்;* to spread. "தத்தரி நெடுங்கண்" *(மணிமே. 2:7). 7. ஒளி முதலியன வீசுதல்;* to be emitted, as lusture. "தத்தொளி மணிமுடி" *(சீவக:144).*

ம. தத்துக.

தத்துறு[1]–தல் tatṯuṟu-, *2 செ.கு.வி.*(v.i.) *1. தத்தி வருதல்;* to spring or leap forward, as a water-fall."தத்துற்று நன்பொன் மணிநிறங் கிளர" *(திருமுரு. 305). 2. வருத்தப் படுதல்;* to be disturbed in mind; to suffer, as from difficulties. "தத்துற லொழிநீ" *(கம்பரா. மிதிலைக். 125). 3. நேர்தல்;* to happen, befall. "நண்ணா நாளவை தத்துறு மாகில்" *(திவ். பெரியாழ். 5. 1:6).*

தத்துறு[2]–தல் tatṯuṟu-, *18 செ.குன்றாவி.*(v.t.) கிட்டுதல்; to approach, meet. "சொல்லா யானுன்னைத் தத்துறு மாறே" *(திவ். பெரியதி.5.1:7).*

தத்தெடு–த்தல் tatteṭu-, *4 செ.குன்றாவி.*(v.t.) மகவுக் கொடை பெறுதல் *(கொ.வ.);* to adopt.

ததர்[1]–தல் tadar-, *4 செ.கு.வி.*(v.i.) நெரிதல்; to be crushed. "ஊணுடை மல்லர் ததர்ந்த வொலி" *(திவ். திருவாய். 7.4:5).*

ததர்[2]–த்தல் tadar-, *4 செ.குன்றாவி.*(v.t.) வருத்துதல்; to vex, annoy, trouble. "என்னைத் ததர்த்தாதே நீயுங் குயிலே" *(திவ்.நாய்ச்.5,10).*

ததும்பு–தல் tadumbu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மிகுதல்;* to increase. "போர்ததும்பு மரவம்போல" *(பரிபா. 18:44). 2. நிறைதல்;* to fill, become full. "நீர்மணி தெளித்தனையது ததும்பி" *(சீவக. 1566). 3. நிரம்பி வழிதல்;* to overflow, to heave with fulness."நீர் ததும்புவன சுனை" *(பரிபா. 18:32). 4. மன நிரம்புதல்;* to be satisfied. "குறும்பிற் றதும்ப வைகி" *(புறநா. 177:7). 5. அசைதல்;* to wave, as a flag; to wobble, swing to and fro, as breasts."கொங்கைக ளதும்பிட நடந்தார்" *(கம்பரா. மாரீ. 42). 6. முழங்குதல்;* to resound, roar. "முழவிற் றதும்பின" *(சீவக. 1560).*

ததை[1]–தல் tadai-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நெருங்குதல் (திவா.);* to be thickset, crowded, densely packed. "ததையிலை வாழை" *(ஐங்குறு. 460). 2. சிதைதல்;* to be shattered, made fruitless. "சமந் ததைந்தவேல்" *(பதிற்றுப். 70:3).*

ததை[2]–த்தல் tadai-, *4 செ.கு.வி.*(v.i.) நிறைதல்; to be full abundant. "தண்டார் ததைக்கின்ற தண்ணந்துழாய்" *(திவ். இயற். திருவிருத். 340).*

தந்துரை–த்தல் tandurai-, *4 செ.கு.வி.*(v.i.) மூலத்திற் கூறப்படாத சொற்பொருள் முதலியவற்றை, வருவித்துரைத்தல்; to supply the ellipses and bring out the implications of a text, as in commentary.

தப்பி–த்தல் tappi-, *4 செ.கு.வி.*(v.i.) குற்ற முதலிய வற்றினின்று விலகுதல்; to escape, get free.

தெ. தப்பிஞ்சுகொணு; ம. தப்புக.

தப்பு[1]–தல் tappu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தவறுதல்;* to err, mistake, blunder, fail. "தப்பாமே தாளடைந்தார்" *(திருவாச. 8:11). 2. பயன்படாது போதல்;* to be unserviceable, fruitless or valueless. "மருந்தாகித் தப்பா மரத்தற்றால்" *(குறள், 217). 3. பிறழ்தல்;* to go wrong, as a tune, a recitation, a calculation. *பாடந் தப்பி விட்டது. 4. விட்டுப்போதல்;* to be omitted. "முற்றும் பற்றித் தப்புதலின்றிக் கொன்று" *(கம்பரா. இரணிய.142). 5. பேரிடரினின்று காப்பாக நீங்குதல்;* to escape injury; to be saved, rescued, preserved. *ஓடம் கவிழ்ந்தபோது அவனொருவனே நீந்தித் தப்பினான். 6. காணாமற் போதல்;* to be lost. *7. இறத்தல்;* to die. "சாவதுறுதியான் றப்பிய பின்றை" *(பெருங்.உஞ்சைக்.36, 65). 8. தடவுதல்;* to grope, feel about.

ம. தப்புக; தெ. தப்பு; க. தப்பு, தப்பிசு; து. தப்புனி.

தப்பு²–தல் tappu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. பிழை செய்தல்;* to offend, commit, offence against. "*பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்*" *(புறநா. 34). 2. அழித்தல்;* to kill, destroy."*அரவுந்தப்பா*" *(பெரும்பாண். 42). 3. அடித்தல்;* to strike. *அவனைத் தேவையின்றித் தப்புகிறான் (உ.வ.). 4. துணி துவைத்தல்;* to beat on a stone, as in washing clothes."*நாமதனைத் தப்பினா னம்மையது தப்பாதோ*" *(பெருந்தொ. 1576). 5. அப்பம் முதலியன தட்டுதல் (யாழ்ப்.);* to beat into cakes, as flour, mud. *6. கையால் தட்டுதல்;* to pat, clap. *7. தடவிப் பார்த்தல் (இ.வ.);* to feel about and search. *8. அப்புதல் (யாழ்ப்.);* to smear, as sandal paste; to put on and rub, as cooling ingredients. *9. விட்டு விலகுதல் (பெருந்தொ. 1576);* to escape, slip away from. *எதிர்பாராத நேர்ச்சியில், தலை தப்பினார் (உ.வ.). 10. செய்யத் தவறுதல்;* to fail to do. "*தப்புதி யறத்தை யேழாய்*" *(கம்பரா. நிந்தனை. 54). 11. தண்டுதல் (பிங்.);* to collect, as money.

தெ., க. தப்பு; து. தப்புனி; ம. தப்புக; **U.** *தப்னா.*

தபி–த்தல் tabi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. காய்தல்;* to be hot, as the sun. *சூரியன் தபிக்கிறான் (உ.வ.). 2. வருந்துதல்;* to be distressed. "*தண்ட மோதத் தபித்து*" *(சேதுபு. சேதுசரு. 27).*

தபு¹–தல் tabu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. கெடுதல் (சூடா.);* to perish, come to an end. "*புரைதபு நாளொடு*" *(கம்பரா. மந்தரை. 86). 2. இறத்தல்;* to die. "*தாய்தபுநிலை*" *(பு.வெ.10, சிறப்பிற் பொதுவி. 5: கொளு).*

க. தவு.

தபு²–த்தல் tapu-, *4 செ.கு.வி.*(v.i.) கெடுத்தல்; to destroy. "*உள்ளமழியய வுக்குநர் மிடறபுத்து*" *(பதிற்றுப்.13:18).*

தபுத்து–தல் tabuttu-, *4 செ.குன்றாவி.*(v.t.) ஈரம் புலர்த்துதல்; to warm. "*முழுக்கியுந் தபுத்தியும்*" *(கல்லா. 53:16).*

தம்பி–த்தல் tambi-, *4 செ.குன்றாவி.*(v.t.) மந்திர ஆற்றல் முதலியவற்றால் தடுத்தல்; to stop, check, suspend, restrain, counteract, by magical incantations. "*உச்சுவாச நிச்சுவாசமாகிய வாயு இரண்டனையுந் தம்பித்து*" *(சி.சி.8:21:சுப்பிர.).*

தம்பு–தல் tambu-, *5 செ.குன்றாவி.*(v.t.) கிட்டுதல் *(யாழ். அக.);* to approach.

தம்மடக்கு–தல் tam-m-aḍakku-, *5 செ.கு.வி.*(v.i.) மூச்சடக்குதல்; to hold one's breath. *(செ.அக.).*

தம்மிடு–தல் tammiḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. நிறுத்தப்படுதல்;* to be stopped, impeded, interrupted. *2. தணிதல்;* to be abated, reduced, lessened.

தம–த்தல் tama-, *4 செ.கு.வி.*(v.i.) *1. தணிதல்;* to be abated, appeased, dulled, as appetite.. *பசி தமத்துப் போயிற்று (உ.வ.). 2. விலை மலிதல்;* to become cheap. *தவசம் தமத்தது (உ.வ.). 3. நிரம்புதல்;* to be filled up. *உண்டு வயிறு தமத்தது (உ.வ.). (செ.அக.).*

தமர்ப்படு–தல் tamar-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. இணங்குதல்;* to agree. *2. விரும்புதல்;* to desire; to like.

தமரி–த்தல் tamari-, *4 செ.கு.வி.*(v.i.) ஒலித்தல்; to sound. "*சங்கமன்பர் வந்தாரென்று.... தமரித்து*" *(குலோத். கோ. 320).*

தமரிடு–தல் tamariḍu-, *18 செ.குன்றாவி.*(v.t.) துளையிடுதல்; to drill. "*தமரிடு கருவியாம்*" *(திருவிளை. மாணிக்க. 61).*

தமி¹–த்தல் tami-, *4 செ.கு.வி.*(v.i.) தனியாதல்; to be alone, lonely. "*நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே*" *(புறநா. 184:3).*

தமி²–த்தல் tami-, *4 செ.குன்றாவி.*(v.t.) தண்டித்தல்; to punish."*என் குற்றத்தைப் பார்த்துத் தமிக்க நினைத் தாராகில்*" *(ஈடு. 1. 4 : 7).*

தயங்கு–தல் tayaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. திகைத்தல்;* to be perplexed, agitated in mind, confused; to hesitate, waver. "*தயங்கியே மயங்கி வீழ்வாள்*" *(அரிச். பு. மயான. 17). 2. வாடுதல்;* to droop; to lose heart. "*தாமிடர்ப் பட்டுத் தளிர்போற் றயங்கினும்*" *(திருமந். 544). 3. அசைதல்;* to sway, move to and fro. '*தயங்கிய களிற்றின்மேல்*" *(கலித். 31 : 10). 4. காலந் தாழ்த்துதல்;* to delay. *ஒரு முடிவு எடுத்தபின் தயங்குவது என்பது அவரிடம் கிடையாது (உ.வ.). 5. நடுங்குதல்;* to tremble.

தரப்படுத்து–தல் tara-p-paḍuttu-, *5 செ.கு.வி.*(v.i.) ஒரே சீராக்குதல்; standardize.

தரி¹–த்தல் tari-, *4 செ.கு.வி.*(v.i.) *1. நிலை பெற்று நிற்றல்;* to stop, stand still, rest. "*தரியாதே ஓடாநின்றது*" *(பு.வெ. 11, ஆண்பாற். 7, உரை). 2. இருப்புக் கொள்ளுதல்;* to abide. "*வணிகன் கண்ட வண்தரித்து*" *(கடம்ப. பு. இலீலா. 53). 3. ஊன்றிநிற்றல்;* to stand firm; to be firm. *வேர்தரித்திருக்கிறது.*

தரி²–த்தல் tari-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. அணிதல்;* to invest, put on, as dress, flowers, etc. *ஆபரணந் தரித்தாள் (உ.வ.). 2. தாங்குதல்;* to keep, support, carry. "*உமையோர் பாகந் தரித்தானை*" *(தேவா. 442:2). 3. பொறுத்தல்;* to bear patiently, endure. "*தார்க்குவளை கண்டு தரியா விவண் முகத்துக் கார்க்குவளை*" *(பு.வெ.12, பெண்பாற். 11). 4. அடக்கிக் கொள்ளுதல்;* to control. "*மருதரைத் தரியா தேத்துவார்*" *(தேவா. 447:4). 5. மறவாது உள்ளத்துக் கொள்ளுதல்;* to remember, bear in mind. "*கல்விகளையும் அவற்றின்*

பொருட் கேள்விகளையுங் கற்றுந் தரித்தும்" (சிலப். 9:30: உரை). 6. தாம்பூலம் போடுதல்; to chew, as betel. தாம்பூலந் தரிக்கவேண்டும் (உ.வ.). 7. சூலுண்டாகிப் பிறத்தல்; to be conceived and born.

தருக்கு[1]–தல் tarukku-, 5 செ.கு.வி.(v.i.) 1. செருக்குக் கொளல்; to be proud, vain, arrogant. "தன்னை வியந்து தருக்கலும்" (திரிகடு. 38). 2. களித்தல் (பிங்.); to be elated, intoxicated; to exult."அவஞ்செய்து தருக்கினேனே" (தேவா. 698:9). 3. ஊக்கமிகுத்தல்; to be zealous, enthusiastic."வெம்போர்த் தருக்கினார் மைந்தர்" (சீவக. 1679).

தருக்கு[2]–தல் tarukku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பெருகச் செய்தல்; to enhance, enlarge. "தன்னாடு மவளொடுத் தருக்கிய புணர்த்து" (தொல். பொருள். 50). 2. இடித்தல்; to pound. "தண்மருப்பால் வெண்பிண்டி சேரத் தருக்கி மதுக்கலந்து" (பதினொ.திருவீங்கோய். 40). 3. வருத்துதல்; to injure, torment. "மேலால் தருக்கு மிடம்பாட்டி னொடும்" (திவ். இயற். பெரியதிருவந். 22). 4. உடைத்துவிடுதல்; to break, pierce. "மரக்கல மியங்கவேண்டி... தருக்கிய விடத்து" (கம்பரா. மீட்சிப். 171). 5. மேற்கொள்ளுதல்; to take to, have resort to."கவறுங் கழகமுங் கையுந் தருக்கி" (குறள், 935).

தருகு–தல் tarugu-, 5 செ.கு.வி.(v.i.) 1. தங்குதல்; to stay. 2. நிலைத்தல்; to continue. (செ.அக.).

தருவி–த்தல் taruvi-, 4 செ.கு.வி.(v.i.) வருவித்தல்; to cause to bring. (செ.அக.).

க. தரிசு.

தரை–தல் tarai-, 4 செ.குன்றாவி.(v.t.) சம்மட்டியால் அடித்தல் (யாழ்ப்.); to rivet with a hammer.

தரைப்படு–தல் tarai-p-paḍu-, 20 செ.கு.வி.(v.i.) 1. கீழே வீழ்தல்; to prostrate, to fall on the ground. "தரைப் படுமளவிற் றத்தா நமரெனத் தடுத்து வீழ்ந்தார்" (பெரியபு. மெய்ப்பொரு.16). "இவ்வுக்கியோடே தரைப்பட்டு" (ஈடு, 7,4:10). 2. அழுந்துதல்; to be immersed. "அழுந்தி - தரைப்பட்டு" (திவ். பெரியாழ். 5:3:7, வியா.).

தரைப்படுத்து–தல் tarai-p-paḍuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) தோற்கச் செய்தல்; to make one fall flat on the ground; to defeat."கசதுரங்க பலத்தையுந் தரைப்படுத்தி" (பாரதவெண். 785).

தரையிடு–தல் tarai-y-iḍu-, 18 செ.குன்றாவி.(v.t.) அடித்த ஆணியின் இருபுறத்தையும் மடக்குதல் (இ.வ.); to rivet a nail at both ends after fixing it.

தரையிறங்கு–தல் tarai-y-iṟaṅgu-, 5 செ.கு.வி.(v.i.) வானூர்தி ஓடுதளத்தில் இறங்குதல்; to land touch-down. (of planes)."வானூர்தி தரையிறங்க இன்னும் சில மணித்துளிகளே உள்ளன. (உ.வ.).

தல்லு–தல் tallu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. இடித்து நசுக்குதல்; to beat, crush. "இஞ்சியைத் தல்லிப் பிழிந்து சாறெடுத் தான்" (நாஞ்.). 2. புணர்தல்; to copulate.

தலை–தல் talai-, 2 செ.கு.வி.(v.i.) 1. மேன்மையாதல்; to be exalted; to be superior."தலைஇய நற்கருமஞ் செய்யுங்கால்" (ஆசாரக். 93). 2. கூடுதல்; to join, mix. "வளித்தலைஇய தீயும்" (புறநா. 2:4). 3. மழைபெய்தல்; to rain. "எழிலி தலையாதாயினும்" (பதிற்றுப். 20, 25). 4. மிகக் கொடுத்தல்; to give away liberally. "கலந்தலைஇய" (புறநா. 361). 5. பரத்தல்; to spread. "மலிர்புனல் தலைத்தலைஇ" (பரிபா. 6:3).

தலைக்கட்டு[1]–தல் talai-k-kaṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. நிறை வேறுதல்; to succeed, to be accomplished."இது ரசணமாய்த் தலைக்கட்டின வித்தனை" (ஈடு. 4, 2:1). 2. இறப்பு நிகழ்ச்சியின் இறுதியில் தலைப்பாகை கட்டுதல் (வின்.); to perform the ceremony of putting on the turban at the end of the period of mourning.

தலைக்கட்டு[2]–தல் talai-k-kaṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. நிறை வேற்றுதல்; to accomplish, complete, finish. 2. ஆதரவாய் நடத்துதல்; to treat kindly. தன்னை யடுத்தவர்களைத் தலைக் கட்ட வேணும் (நெல்லை). 3. காப்பாற்றுதல்; to protect. தருமம் தலைக்கட்டும் (உ.வ.). 4. ஒப்புவித்தல்; to entrust. இதை அவனிடம் தலைக்கட்ட வேண்டும் (இ.வ).

தலைகாட்டு–தல் talai-kāṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. சிறிது நேரம் வந்து தங்கியிருத்தல்; to attend for a short time, give attendance. திருமண வரங்கு வந்து தலை காட்டி விட்டுச் சென்றார் (உ.வ.). 2. பலருமறிய வெளி வருதல்; to appear in public. அந்த அவமானத்தால் தலை காட்டக் கூடவில்லை (உ.வ.). 3. நன்னிலைமைக்கு வரத் தொடங்குதல் (இ.வ.); to rise to prominence.

மறுவ. தலை தூக்குதல்.

தலைக்கூடு–தல் talai-k-kūḍu-, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒன்று சேர்தல்; to assemble, join, come into association. "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்" (குறள், 394). 2. நிறைவேறுதல்; to be accomplished, to succeed. காரியந் தலைக்கூடும் (உ.வ.).

தலைக்கேறு–தல் talai-k-kēṟu-, 5 செ.கு.வி.(v.i.) அளவிற் கதிகமாகுதல்; முதிர்தல்; to grow in intensity. அவனுக்கு செருக்கு தலைக்கேறி யிருக்கிறது (உ.வ.).

தலைக்கொள்(ளு)–தல் talai-k-koḷ(ḷu)-, 7 செ.குன்றாவி.(v.t.) 1. வெல்லுதல்; to overcome. 2. மேற்கொள்ளுதல்; to undertake. "வேந்தன் போர்தலைக் கொண்ட பிற்றை ஞான்று" (தொல். பொருள். 63). 3. கிட்டுதல்; to approach, go near."கொள்ளைகொ ளாயந் தலைக் கொண்டார்" (பு.வெ.2:7). 4. கைப்பற்றுதல்; to capture, take possession of."தலைக் கொண்ட நிரை

பெயர்த்தன்று" (பு.வெ.2,1,கொளு). 5. தொடங்குதல்; to commence. "சாறு தலைக்கொண்டென" (புறநா. 82). 6. கெடுத்தல்; to destroy. "ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்" (புறநா. 15, 14).

தலைகுனி–தல் talai-kuṉi-, 2 செ.குன்றாவி.(v.t.) 1.தலை வணங்குதல்; to bow one's head in respect.

தலைசாய்[1]–தல் talai-šāy-, 1 செ.கு.வி.(v.i.) 1. நாணுதல்; to bow one's head, as in shame, modesty, etc.,"ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்" (இலக். வி. 738, உரை, பக். 751). 2. இறத்தல் (இ.வ.); to die. 3. உறங்குதல்; to sleep.

தலைசாய்[2]–த்தல் talai-šay-, 4 செ.கு.வி.(v.i.) 1. வணங்குதல்; to bow one's head in reverence."முனி திருக்கழலில்.... தலைசாய்த்து" (பாரத.நாடுகரந்.18). 2. கீழேபடுத்தல்; to lie down in rest. தலைசாய்க்க நேரமில்லை (உ.வ.).

தலைசீவு–தல் talai-šīvu-, 5 செ.கு.வி.(v.i.) 1. தலைமுடி வாருதல்; to comb the hair. 2. தலையைத் துண்டித்துக் கொலைசெய்தல்; to murder by cutting the head. தன் மனைவியின் நடத்தையில் ஐயங்கொண்ட கணவன், அவள் தலையைச் சீவிக் கையில் எடுத்து சென்று காவல் நிலையத்தில் கொடுவாளுடன் சரணடைந் தான். (உ.வ.).

மறுவ. தலைவாங்குதல்.

தலைதப்பு–தல் talai-tappu-, 5 செ.கு.வி.(v.i.) உயிர் பிழைத்தல்; to escape death. "தாசிவீடு வந்தவர்கள் தலைதப்பிப் போகிறதோ" (கோவ. க. 42). இந்த வழக்கில் அவன் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் (உ.வ.).

மறுவ. உயிர்தப்புதல்.

தலைநிமிர்–தல் talai-nimir-, 2 செ.கு.வி.(v.i.) 1. தலையை உயர்த்துதல்; to carry one's head erect, as in pride. 2. நிலைமேம்படுதல்; to improve in circumstances. தன் பிள்ளை முதல் மதிப்பெண் பெற்றதால், தந்தை தலை நிமிர்ந்து நடக்கிறான் (இ.வ.).

தலைநிமிர்த்து–தல் talai-nimirttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தலையை உயர்த்துதல்; to raise one's head. ஒரு குடும்பத்தில் பெண் தலை குனிந்து நடந்தால், ஆண் தலைநிமிர்ந்து நடப்பார் என்பது ஆணாதிக்கக் குமுகாயமொழி (உ.வ.). 2. நிலையை முன்னேற்றுதல்; to improve one's circumstances. 3. உரிய பருவம் வரும் வரை வளர்த்தல்; to bring up a person, till he reaches manhood. 4. நிலைபெறச் செய்தல்; to establish one in business.

தலைநீங்கு–தல் talai-nīṅgu-, 5 செ.கு.வி.(v.i.) விட்டொழி தல்; to abondon, renounce. "அரசு தலைநீங்கிய வரு மறை யந்தணன்" (மணிமே. 11:84).

தலைநீட்டு–தல் talai-nīṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. சிறிதுநேரம் வந்து கலந்துகொள்ளுதல்; to attend for a short time. நேற்று நடந்த ஈமச் சடங்கில், அவர் வந்து தலையை நீட்டிவிட்டுச் சென்று விட்டார் (உ.வ.).

தலைப்படு[1]–தல் talai-p-paḍu-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. ஒன்று கூடுதல்; to unite, be in communion with. "சிவனைத் தலைப்பட்டுச் சென்றொடுங்கும் ஊழியி" (திருக்கோ. 25, உரை) "தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே" (தேவா.திருத்தாண்டகம்). 2. எதிர்ப்படுதல்; to meet, cross. "ஓர் வேட்டுவன் றலைப்பட்டானே" (சீவக. d.1230). 3. மேற்கொள்ளு-தல்; to undertake, enter upon. "ஏவல் தலைப்பட விரும்பும்" (சேதுபு. துரா. 2). 4. பெறுதல்; to obtain, attain. "சிலரதன் செவ்வி தலைப்படுவார்" (குறள், 1289).

தலைப்படு[2]–தல் talai-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. முன்னேறுதல்; to advance; to improve in circumstances. 2. தலைமையாதல்; to be noble, exalted. "தலைப்படு சால்பினுக்குந் தளரேன்" (திருக்கோ. 25). 3. புகுதல்; to enter, as a character on the stage. "கூரிய பல்வினை யுடையாள் தலைப்பட்டாள்" (பு.வெ.10, பொதுவி. 5, உரை). 4. வழிப்படுதல்; to follow. "தம்மிற் றலைப் பட்டார் பாலே தலைப்பட்டு" (திருக களிற்றுப். 2). 5. தொடங்குதல்; to commence. "அந்தக் காரியத்தைச் செய்யத் தலைப்பட்டான்" (உ.வ.).

தெ. தலபடு.

தலைப்படுத்து–தல் talai-p-paḍuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூட்டுதல்; to cause to gain, reach. "ஏதுமில்லாவிடந் தலைப்படுத்தினள்" (சிலப். 16:16).

தலைப்பிரி–தல் talai-p-piri-, 2 செ.கு.வி.(v.i.) 1. நீங்குதல்; to seperate, depart, deviate. "பண்பிற்றலைப் பிரியாதார்" (குறள், 810).

தலையா–தல் talai-y-ā-, 6 செ.கு.வி.(v.i.) மேன்மையாதல்; to become prominent. "தமருட் டலையாதல்" (பு.வெ.3,6).

தலையிடு–தல் talai-y-iḍu-, 20 செ.கு.வி.(v.i.) 1. நுழைதல்; to engage, venture, enter."தலையிட்டு வாதுமுயல் சாக்கியர்" (அரிசமய. பாயி.). 2. தேவையில்லாமல், பிறர் செயலில் புகுதல்; to meddle, interfere in other's affairs.

தலையெடு–த்தல் talai-y-eḍu-, 4 செ.கு.வி.(v.i.) 1. தலை நிமிர்தல்; to stand with head erect, as in pride. "தேவரெதிர் தலையெடுத்து விழியாமைச் சமைப்பதே" (கம்பரா. சூர்ப்பன. 101). 2. புகழ் பெறுதல்; to become eminent, celebrated, distinguished. "வானவர் தலையெடுத்திலர்" (கம்பரா. கும்பக. 338). 3. பெருகுதல்; to flourish, become prosporous. "மனுநெறி தலையெடுக்கவே" (கலிங். 251). 4. தோன்றுதல்; to sprout, come into being. செடி தலையெடுக்கிற போதே (உ.வ.). 5. இழந்த நிலையைத் திரும்பவடைதல்; to recover, as a lost position.

"வானவர்கோன் றலையெடுக்க" *(கம்பரா. இந்திரசி. 63).*

தலைவணங்கு[1]–தல் talai-vaṇaṅgu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *உரிய முறையில் மதித்து வணங்குதல்;* to do homage; to bow the head. *தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்பிற்கு நாங்கள் தலை வணங்குகிறோம் (இக்.வ.).*

தலைவணங்கு[2]–தல் talai-vaṇaṅgu-, *7 செ.கு.வி.*(v.i.) *பயிரின் தலை வளைதல்;* to incline, bend down, as grain in the field. *நெல்மணி முற்றித் தலை வணங்குதல் அறிவு சான்ற பெரியோர்தம் பணிவையொத்து இருந்தது (உ.வ.).*

தவ்வு[1]–தல் tavvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குறைதல் (அக.நி.);* to lessen, decrease, shrink. *2. குவிதல்;* to close the petals, as a flower."*தவ்வா திரவும் பொலிதாமரையின்" (கம்பரா. சரபங். 2). 3. கெடுதல்; அழிதல், உருக் குலைதல்;* to perish, decay, waste away. *4. தவறுதல்;* to fail. "*எறிந்த வீச்சுத் தவ்விட_" (கம்பரா. அதிகாயன். 213).*

தவ்வு[2]–தல் tavvu-, *செ.கு.வி.*(v.i.) *1. தாவுதல்;* to leap, jump, spring. "*தவ்வுபுனல்" (திருவாலவா. 30:32). 2. மெல்ல மிதித்தல்;* to tread gently. "*தவ்விக் கொண்டெடுத்த வெல்லாம்" (இரகு. ஆற்று. 19). 3. தன்முனைப்பாதல்;* to boast; to be arrogant. *அதிகமாகத் தவ்வாதே (உ.வ.).*

க. தவு.

தவர்–தல் tavar-, *4 செ.குன்றாவி.*(v.t.) *துளைத்தல்;* to bore a hole."*வண் குறிஞ்சியிசை தவருமாலோ"(திவ். திருவாய். 9. 9:1).*

தவல்(லு)–தல் taval(lu)-, *3 செ.கு.வி.*(v.i.) *நீங்குதல்;* to leave, depart. "*அழுங்க றவலா வுள்ள மொடு" (மணிமே. 4:119).*

தவழ்–தல் tavaḻ-, *2 செ.கு.வி.*(v.i.) *1.ஊர்தல், நகர்தல்;* to creep, crawl, as infants, lizards, snakes. "*தங்கள் பாடியில் வளர்ந்துமா மருதிடைத் தவழ்ந்த.... கருணையங்கடலே" (பாரத. கிருட்டிணன். 91). குழந்தை மெல்லத் தவழ்ந்து வந்த தந்தையின் கால்களைக் கட்டிக் கொண்டது. (உ.வ.). 2. தத்துதல்;* to leap and flow, as waves. "*ஓதங் கரைதவழ்நீர் வேலியுலகினுள்" (பு.வெ.8:9). 3. பரத்தல்;* to extend, traverse, spread on all sides. '*உடன்று நோக்கும்வா யெரிதவழ" (புறநா. 38:5).*

க. தெவள்.

தவறவிடு–தல் tavaṟa-viḍu-, *18 செ.குன்றாவி.*(v.t.) *1. விடும்படி நேர்தல்;* to miss. *இந்தப் பேருந்தைத் தவறவிட்டால், அலுவலகத்திற்கு உரிய நேரத்திற்குப் போகமுடியாது? (உ.வ.). 2. தொலைத்தல்;* to lose. *பொன் வளையலைத் தவறவிட்டு வந்து நிற்கிறாயே?*

தவறிப்பேசு–தல் tavaṟi-p-pēšu-, *5 செ.கு.வி.*(v.i.) *பிழைபடக் கூறுதல்;* to slip of the tongue.

தவறிப்போ–தல் tavari-p-pō-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. இறத்தல்;* to pass away. *அவருடைய தந்தை தவறிப் போய், ஆறு ஆண்டுகள் ஆகிறது (உ.வ.). 2. காணாமற் போதல்;* to be lost. *திருவிழாவில் குழந்தை தவறிப் போய்விட்டது (உ.வ.).*

தவறு[1]–தல் tavaṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தப்பி விழுதல்;* to slip, miss, fall, tumble over, trip, lose one's hold. "*உள்ளத்தன்பு தவறிலான் பொருட்டு" (திருவிளை. மெய்க்கா. 36). 2. வாய்க்காமற் போதல்;* to fail, miscarry, prove abortive. *3. வெற்றிவாய்ப் பிழத்தல்;* to be unsuccessful. *4. குற்றப்படுதல்;* to fail in duty; to fall from moral rectitude; to transgress, sin. *5. காணாமற் போதல்;* to stray, lose the way; to be lost. *6. பிழையாதல்;* to err, mistake, blunder. *கணக்குப் போடுவதில் தவறினான் (உ.வ.). 7. சாதல்;* to die. *8. குறைதல்;* to fall short.

தவறு[2]–தல் tavaṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *தாண்டுதல் (பிங்.);* to pass over, go beyond.

தவாளி[1]–த்தல் tavāḷi-, *4 செ.கு.வி.*(v.i.) *கால்வாய் முதலியன தோண்டுதல் (யாழ்ப்.);* to make flutings or grooves, as in carpentry; to dig a channel.

தவாளி[2]–த்தல் tavāḷi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *தாக்குப் பிடிக்கவியலாது தத்தளித்தல் (புதுவை.);* to be unable to manage.

தவி–த்தல் tavi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. இல்லாமை பற்றி வருந்துதல்;* to be distressed, to pant for."*தாகத்தாற் றடுமாறித் தவித்தேநின்று" சிவரக. பசாசு. 34). 2. நீர் வேட்கையுண்டாதல்;* to be feel thirst. *தண்ணீர் தவிக்கிறது (உ.வ.). 3. இளைத்தல் (யாழ்.அக.);* to be wearied; to languish.

*த. தவி → **Skt.** தப்.*

தவிர்[1]–தல் tavir-, *4 செ.கு.வி.*(v.i.) *1. விலகுதல் (பிங்.);* to abstain, refrain. *2. இல்லாமற்போதல்;* to cease, become extinct. *அவன் வேலை தவிர்ந்தது (உ.வ.). 3. தங்கி வருதல்;* to stay, abide. "*இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை" (தொல். பொருள். 194). 4. தணிதல்;* to subside, abate. *அவன் சினந் தணிந்தது (உ.வ.).*

தவிர்[2]–தல் tavir-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. நீக்குதல் (பிங்.);* to shun, avoid, omit, renounce. *2. பிரிதல் (பிங்.);* to leave, separate from, forsake. *3. ஒழிதல்;* to give up, cease from. "*தவிரா வீகை" (புறநா. 3:5).*

தவிர்[3]–த்தல் tavir-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. நீக்குதல்;* to put away, remove, dispel, chase away, expel, exclude. "*அச்சந் தவிர்த்த சேவகன்" (திருவாச. 3:98). 2. தடுத்தல்;* to check, hinder, interrupt, prevent, frustrate.'*தாயர் தெருவிற் றவிர்ப்ப" (கலித். 84, 15). 3. அடக்குதல்;* to control, restrain. "*தம்பகைப் புலன்களைத் தவிர்க்கும்" (கம்பரா. நகர. 6). 4. நிறுத்தி விடுதல்;* to discontinue.

தவு–தல் tavu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. குன்றுதல்;* to shrink; to be reduced; to be ruined. "*எஞ்ஞான்றுந் தவாஅப் பிறப் பீனும் வித்து*" *(குறள், 361). 2. சாதல்;* to die.

க. தவு.

தழங்கு–தல் taḻaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *முழங்குதல்;* to sound, roar, resound. "*தழுங்குகுரன் முரசமொடு*" *(அகநா. 24).*

தழல்(லு)–தல் taḻal(lu)-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அழலுதல்;* to glow, to be very hot; to burn."*தழன்றெரி குண்டம்*" *(திருவிளை. நாக. 6). 2. ஒளி விடுதல்;* to shine. "*தழலுந் தாமரையானொடு*" *(தேவா. 1215:27).*

தழிச்சு–தல் taḻiccu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தழுவுதல்;* to embrace, include. *2. புகுதல்;* to penetrate, as an arrow."*பொரு கணை தழிச்சிய புண்ணூர் மார்பின்*" *(தொல். பொருள். 63, உரை).*

தழுக்கு–தல் taḻukku-, *5 செ.கு.வி.*(v.i.) *செழிப்புறுதல்;* to flourish, prosper. "*தழுக்கிய நாளிற் றருமமுஞ் செய்யீர்*" *(திருமந். 254).*

மறுவ. தழைத்தல்.

ம. தழுக்குக.

தழுதழு–த்தல் taḻu-taḻu-, *4 செ.கு.வி.*(v.i.) *நாக்குழறுதல்;* to falter or stammer frrom ecstatic joy, love or other emotion. "*தழுதழுத்த வசனத்தன்*" *(ஞானவா. கசன். 19). குழந்தை இறந்ததைக் கூறவந்த தாயின் குரல் தழுதழுத்தது (உ.வ.).*

தழும்பிடு–தல் taḻumbiḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *புண்ணாறி வடுவாதல்;* to leave a scar, as a sore when healed.

மறுவ. தழும்பு படு-தல்.

தழும்பு–தல் taḻumbu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.தழும்புண்டாதல்;* to be scarred, bruised, marked."*தழும்பு மென்னா*" *(உபதேசகா. சிறப்புப். 6). 2. பழகியிருத்தல்;* to become practised, addicted. "*களவிற்றழும்பிய கள்வனுடைய கையகத்தாயின்*" *(சிலப். 16:152:உரை).*

ம. தழம்பிக்குக.

தழுவு–தல் taḻuvu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. அணைத்தல்;* to clasp, embrace, hug, entwine. "*மகன்மெய் யாக்கையை மார்புறத் தழீஇ*" *(மணிமே. 6:139).2. மேற் கொள்ளுதல்;* to adopt, as an opinion, course of life; to keep, observe, as a commad. "*பணிமுறை தழுவுந் தன்மையார்*" *(கம்பரா. ஊர்தே. 50). 3. அணைத்தா தரித்தல்;* to treat kindly. "*குடிதழீஇ*" *(குறள், 544). 4. நட்பாக்குதல்;* to make friendship. "*உலகந் தழீஇய தொட்பம்*" *(குறள், 425). 5. சூழ்தல்;* to surround. "*தண்பணை தழீஇய*" *(பெரும் பாண். 242). 6. உள்ளடக்குதல்;* to compress; to contain; to keep within oneself. "*அணங்குசா லுயர்நிலை தரீஇ*" *(திருமுரு. 289). 7. பூசுதல்;* to besmear rub on. "*சாந்தங் கொண்டு நலமலிய வாகந் தழீஇ*" *(பதினொ. திருக்கைலா.15). 8. பொருந்துதல்;* to mix with, join. "*தமிழ்தழிய சாயலவர்*" *(சீவக. 2026). 9. புணர்தல்;* to copulate.

ம. தழுகுக; க. தழ்கெய்சு, தக்கெய்சு; து. தர்கொணுனி; துட. தெர்க்விள்; குட. தமப்; கோத. தப்; பட. தப்பு.

தழை¹–தல் taḻai-, *4 செ.கு.வி.*(v.i.) *1. தளிர்த்தல்;* to sprout, shoot forth. *2. செழித்தல்;* to thrive, grow luxuriant, as plants. "*தழைந்த சந்தனச் சோலை*" *(கம்பரா. சித்திர. 9). 3. தாழ்தல்;* to hang down; to bow down."*தழைந்த காதும்*" *(சேதுபு. கடவுள்வாழ்.8).*

ம. தலெக்க; தெ. தளிர்சு.

தழை²–த்தல் taḻai-, *4 செ.கு.வி.*(v.i.) *1. செழித்தல்;* to flourish, thrive, grow luxuriantly, as plants. *2. பூரித்தல்;* to over-flow with joy."*நோக்கித் தழைத்து*" *(திருவாச. 27:7). 3. மிகுதல்;* to be abundant, as a flood; to multiply. "*மைத்தழையா நின்ற மாமிடற் றம்பலவன் கழற்கே*" *(திருக்கோ. 102). 4. வளர்தல்;* to grow, prosper, as a family, people, state. "*மெய்தழை கற்பை*" *(திருவிளை. வளைய. 15). நட்பு தழைக்க விட்டுக் கொடுக்க வேண்டும் (இக்.வ.).*

ம. தழப்க்குக; தெ. தளிர்சு.

தழை³–த்தல் taḻai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *சீட்டாட்டத்தில் எண்ணிக்கையிற் சேராத சீட்டுகளை, இறக்குதல்;* to put down cards other than honours in a game of cards.

தழைவுகொடு–த்தல் taḻaivu-koḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *உடம்பு பருமனாதல்;* to become plump, as the body.

தள்–தல் (தட்டல்) taḷ-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. தடுத்தல்;* to kinder, obstruct, stop."*புள்ளிடை தட்ப*" *(புறநா. 124). 2. நீர் முதலியவற்றைத் தளைத்தல்;* to confine, as water in a tank; to dam up."*தட்டோரம்ம விவட் டட்டோரே தள்ளாதோரி வட்டள்ளா தோரே*" *(புறநா. 18).*

க. தள்.

தள்ளாடு–தல் taḷ-ḷ-āḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தளர்ச்சியாய் நடத்தல்;* to move with faltering steps, as an aged person. "*தாளிணை தளர்ந்து தள்ளாட*" *(பாரத. கிருட்டிண. 238). 2. தடுமாறுதல்;* to stagger, reel, as a drunkard. *3. ஆடுதல்;* to rock, as a ship, vacillate, sway, as a tree in a storm. "*உலகுலையத் தள்ளாடிய வடமேருவின்*" *(கம்பரா. முதற்போ. 177). 4. மன மலைதல்;* to waver, fluctuat, as the mind. "*சிந்தையுந் தள்ளாடி*" *(சிவரக. அபுத்திபூர். 12).*

ம. தள்ளாட்டம்; பட. தள்ளாடு.

தள்ளிப்போ–தல் taḷḷi-p-pō-, *8 செ.கு.வி.*(v.i.) *பின்னால் போதல்; காலந்தாழ்த்தல்;* to get put off; delayed *அவள்*

திருமணம் ஏனோ தள்ளிப் போய்க்கொண்டே யிருக்கிறது. (உ.வ.).

தள்ளிப்போடு–தல் taḷḷi-p-poḍu-, *19* செ.கு.வி.(v.i.) குறிப்பிட்ட காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் காலந் தாழ்த்துதல்; to postpone things to be done immediately. விரைந்து முடிவு எடு, தள்ளிப் போட்டுக் கொண்டே போகாதே. (இக்.வ.).

ம. தள்ளியிடுக.

தள்ளிவிடு[1]–தல் taḷḷi-viḍu-, *18* செ.குன்றாவி.(v.t.) *1.*பொறுப்பு முதலியவற்றை விலக்குதல் (புதுவை.); to evade, as responsibility. தான் பார்க்கவேண்டிய கோப்புகளை, அடுத்தவருக்குத் தள்ளிவிடுதல் நன்றன்று (உ.வ.). *2.* உரியவிலை வாராவிடினும், குறைந்தவிலை கேட்பாருக்குப் பொருள்களை விற்றுவிடுதல்; to sell to lower price and push the products out. ஆண்டு முடிவையொட்டிப் பொருள்களை வந்த விலைக்குத் தள்ளிவிட்டார்கள் (உ.வ.).

ம. தள்ளிவிடுக.

தள்ளிவிடு[2]–தல் taḷḷi-viḍu-, *18* செ.குன்றாவி.(v.t.) விலக்கி விடுதல்; to reject, dismiss.

தள்ளிவை–த்தல் taḷḷi-vai-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* தள்ளிப் போடுதல்; to postpone. கடும் தண்ணீர் பஞ்சம் காரணமாக பள்ளித் தேர்வுகளை தள்ளி வைத்து விட்டனர். (இக்.வ.). *2.* இடம்விட்டு வைத்தல்; to remove a little further off, shift. பொத்தகத்தைத் தள்ளிவை (உ.வ.). *3.* நாளொற்றி வைத்தல்; to adjourn, as a case. விசாரணை நாளைத் தள்ளிவைத் திருக்கிறார்கள் (உ.வ.). *4.* ஒழுக்கக்கேடு முதலிய வற்றால் சாதிக் கூட்டங்களுக்குப் புறம்பாக்குதல்; to caste off, exclude from society, excommunicate. ஒழுக்கக் கேட்டால் அவளைத் தள்ளிவைத்தார்கள் (உ.வ.). *5.* வேலையிலிருந்து விலக்கிவைத்தல்; to suspend from office. வேலையிலிருந்து விலக்கி வைத்தார்கள் (உ.வ.). *6.* விலக்கிவிடுதல் (இ.வ.); to abandon, as a wife.

தள்ளு[1]–தல் taḷḷu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* விலகுதல்; to be removed. "உறுநோய்கள் தள்ளிப்போக" (தேவா.). *2.* தவறுதல்; to be lost, to fail. "கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை" (குறள், 290). *3.* குன்றுதல்; to shrink, diminish. "தள்ளா விளையுளும்" (குறள், 731). *4.* மறப்பாற் சோர்தல்; to be unconscious; to be forgetfull."தள்ளியும் வாயிற் பொய்கூறார்" (நாலடி, 157). *5.* தடுமாறுதல்; to stagger, reel, stumble. "தள்ளித் தளர்நடையிட்டு" (திவ். பெரியாழ். 2:10:6). *6.*வலியுடைத்தாதல்; to be able; to be capable of. அவன் அது செய்யத் தள்ளவில்லை (உ.வ.). *7.* வெளியேறுதல்; to emerge, come out, protrude. வாயில் நுரை தள்ளுகிறது (உ.வ.).

தள்ளு[2]–தல் taḷḷu-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.*முன் செல்லுமாறு தாக்குதல்; to push, force forward, shove away. *2.* புறம் பாக்குதல்; to expel, to cast off, excommunicate. சாதியினின்று தள்ளப்பட்டான் (உ.வ.). *3.*கைவிடுதல்; to forsake, abandon, relinquish, renounce. "சுவாமி என்னைத் தள்ளாதிரும்" (வின்.). *4.*ஏற்றுக் கொள்ளா திருத்தல்; to reject, disapprove. "தள்ளியுரை செய்யா முன்னர்" (திருவாலவா. 57, 22). *5.*விலக்குதல்; to refute, confute. சொன்ன காரணங்களில் ஏராளமானவற்றைத் தள்ளி விட்டான் (உ.வ.). *6.* பாராமுகமா யிரத்தல் ஒதுக்குதல்; to neglect. "தள்ளாத கேண்மை" (தணிகைப்பு. களவு. 499). *7.* வழக்கைத் தள்ளுபடி செய்தல், முடிவு செய்தல்; to dismiss, as a suit. *8.* முறை மன்றம் வழக்கை ஏற்க மறுத்தல்; to refuse to admit, as a plaint. *9.* வரி முதலியன தள்ளுபடி செய்தல்; to discharge from obligation, exempt, remit. *10.* கழித்தல்; to deduct, subtract. வட்டித் தொகையைத் தள்ளிப்பார் (உ.வ.). *11.* அமுக்குதல்; to press down. "மென்பூத் தள்ளத் தம்மிடைகணோவ" (கம்பரா. உலாவி. 4). *12.* வெட்டுதல்; to sever, cut off. "என் தலையைத் தள்ளத்தகும்" (பதினொ. திருத்தொண். 14). *13.* கொல்லுதல்; to kill. "சம்பரப்பேர்த் தானவனைத் தள்ளி" (கம்பரா. கிளை. 63). *14.* மறத்தல்; to forget. "தள்ளியுஞ் செல்பவோ... அருளின் மறவ ரதர்" (திணைமாலை. 84). *15.* புத்தகவிதழ் திருப்புதல்; to turn over, turn back, as the leaves of a book. *16.* காலங் கழித்தல்; to pass, as one's days. காலந் தள்ளுகிறான் (உ.வ.). *17.* தோணி செலுத்துதல் (யாழ்ப்.); to launch, row, sail, as a vessel. *18.* தூண்டுதல்; to incite, stimulate. "காண்டு மென் றறிவுதள்ளி" (கம்பரா. சம்பா. 54).

ம. தள்ளுக; க., பட. தள், தள்ளு; தெ. தலகு, தல்கு, தலுகு; து. தல்லுணி, தள்ளுனி; கோத. தள்; துட. தொள்.

தள்ளுபடிசெய்–தல் taḷḷubaḍi-šey-, *1* செ.குன்றாவி.(v.t.) *1.*புறந்தள்ளல் (நிராகரித்தல்); to reject. தன்னைப் பணி நீக்கம் செய்ததை எதிர்த்து அந்த அதிகாரி கொடுத்த வழக்கு உயர்நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப் பட்டது (இக்.கா.). *2.* நீக்கஞ்செய்தல் (விலக்குதல்); to write off.

தள்ளுறு–தல் taḷḷuṟu-, *20* செ.கு.வி.(v.i.) *1.*தள்ளப்படுதல்; to be rejected, removed. *2.* வருந்துதல்; to be in distress. "உள்ளந் தள்ளுற லொழிந்து" (கம்பரா. மாயாசீ. 34).

ம. தள்ளுரம்.

தளம்பு–தல் taḷambu-, *5* செ.கு.வி.(v.i.) *1.* ததும்புதல்; to wabble, flap, fluctuate, as water in a moving vessel. *2.* இருபுறமும் மாறிச் சாய்ந்தாடுதல் (யாழ்ப்.); to be unsteady, as a floating pot; to sway, as a spinning top; to totter, stagger with the weight of a load; to shake, as the top of a car when drawn: to move, as drops of water on a leaf; to be shaky, as a load. *3.* மனமலைதல்;

to fluctuate, waver, hesitate, vacillate. "தளம்பு நெஞ்சுடைய" *(திருவாலவா. 38:49).* *4. பழக்கமுறுதல் (நான்மணி. 12, உரை);* to get accustomed. *5. முட்டுப்படுதல் (வின்.);* to be in straits for a livelihood.

தளர்–தல் taḷar-, *17 செ.கு.வி.*(v.i.) *1. சோர்தல்;* to droop, faint, grow weary, enfeebled, infirm or decrepit. "தளர்ந்தே னெம்பிரா னென்னைத் தாங்கிக் கொள்ளே" *(திருவாச. 6,1).* *2. நெகிழ்தல்;* to grow slack, become relaxed, as a tie or grasp. *3. உடற்கட்டுக் குலைதல்;* to become flappy from age. இரண்டு மாதமாகப் படுத்தப்படுக்கையாய்க் கிடந்ததில் மிகவும் தளர்ந்து போனார் *(இக்.வ.).* "தாழாத் தளராத் தலைநடுங்கா" *(நாலடி.14).* *4. மனங்கலங்குதல்;* to suffer in mind, to be troubled at heart. to lose one's presence of mind. இந்த முறையும் தேர்வில் தேறவில்லை என்றதும் தளர்ந்து போனான் *(இக்.வ.).* *5. உயிரொடுங்குதல்;* to lose one's vitality. "தகைபாடவலாய் தளர்கோ தளர்கோ" *(சீவக. 1379).* *6. இறத்தல்;* to die. *7. நுடங்குதல்;* to be flexible, tender. "தண்டாக் காதற் றளரிய றலைவன்" *(பு.வெ.9,45, கொளு).* *8. சோம்புதல் (வின்.);* to be remiss, to be indifferent in duty, to grow careless, to degenerate. *9. தவறுதல்;* to go astray. "நெறியிற் றளர்வார் தமநெஞ் சுருகி" *(சீவக. 1190).*

ம. தளருக; க. தளர்; தெ. தலநம; து. தளம்பன், தளமள; காத. தளர்; குட. தளெ; மா. தள் க்வரொ.

தளர்த்து–தல் taḷarttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) நெகிழ்த்துதல்; to loosen. *(செ.அக.).*

ம. தளர்த்துக.

தளி[1]–த்தல் taḷi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. பூசுதல்;* to smear, as sandal. "ஆரியாக வஞ்சாந்தந் தளித்தபின்" *(சீவக.129).* *2. தெளித்தல் (நாஞ்.);* to sprinkle.

க. தளி; ம. தளிக்குக; க. தளி, தளிடு; து. தலிபுனி; கோத. தெய்ள்; குட. தளி; கோண். தெக்கானா; குரு. தென்னா.

தளி[2]–தல் taḷi-, *4 செ.குன்றாவி.*(v.t.) தெளிதல்; to comprehend clearly. "ஆதிப்பிரானைத் தளிந்த வர்க்கல்லது தாங்க வொண்ணாதே" *(திருமந். 527).*

தளிகைபோடு–தல் taḷigai-pōḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. கடவுளுக்குப் படைத்தல் பொருட்டு, சோறு முதலியவற்றைக் கொணர்ந்து வைத்தல்;* to take boiled rice, etc., for offering to idols. *2. கடவுட்குச் சோறு முதலியவற்றைப் படைத்தல்;* to offer boiled rice to idols.

தளிர்–த்தல் taḷir-, *4 செ.கு.வி.*(v.i.) *1. துளிர்த்தல் (சூடா.);* to shoot forth, to sprout. *2. தழைத்தல்;* to put forth leaves. மாரியால் வற்றிநின்ற சந்தனந் தளிர்த்ததே போல்" *(சீவக. 545).* *3. செழித்தல்;* to flourish, prosper. *4. மகிழ்தல்;* to rejoice. தையலாள்வரக் கண்டனனா மெனத் தளிர்ப்பான்" *(கம்பரா. தானைகாண். 28).*

தளுக்கு[1]–தல் taḷukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. பூசுதல்;* to smear, rub in. "சாந்து கொண்டு தளுக்கு நிலத்திடை" *(விநாயகபு. 39, 14).* *2. துலக்குதல் (வின்.);* to scour, polish, as furniture; to smooth, as an earthen floor.

தெ. தளுகு.

தளுக்கு[2]–தல் taḷukku-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சொலித்தல், மிளிர்தல்;* to be bright, to glitter. *2. ஒளிர்தல்;* to shine.

தெ. தளுகு.

தளும்பு[1]–தல் taḷumbu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. கலம் அசைவதால் நீர் சிறிதுதுள்ளுதல்;* to wabble, flap, fluctuate, as water in a moving vessel. நிறைகுட நீர்தளும்பலில் *(பழ.).* *2. பழக்கமுறுதல் (நான்மணி.12, உரை);* to get accustomed. *4. முட்டுப்படுதல் (வின்.);* to be strive for a livelihood. *5. இருபுறமும் மாறிச் சாய்ந்தாடுதல் (யாழ்ப்.);* to be unsteady, as a floating pot, to sway as a spinning top.

தளும்பு[2]–தல் taḷumbu-, *5 செ.கு.வி.*(v.i.) உள்ளம் கலங்குதல்; to be perturbed, to be distressed. "அநுகூல சனமானது தளும்பிற்று என்கிறான்" *(திவ்.பெரியாழ்.3:7:5, வ்யா. பக். 713).*

தளை[1]–தல் taḷai-, *4 செ.குன்றாவி.*(v.t.) பிணித்தல்; to fasten, bind, chain. "மோகமெனும் பாசத்தான் மிகத்தளைந்து" *(குற்றா. தல. தருமசாமி. 74).* *2. தடுத்தல்;* to prevent.

தளை[2]–த்தல் taḷai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. கட்டுதல்;* to tie, bind, fasten, entangle. *'தளைக்கின்ற மாயக்குடும்பப் பெருந்துயர்' (அருட்பா, i, திருவருள். 315).* *2. அடக்குதல் (யாழ்ப்.);* to confine, restrain, limit.

தளை[3]–த்தல் taḷai-, *4 செ.கு.வி.*(v.i.) கொதித்தல்; to boil, bubble. சாதந் தளைக்கிறது *(இ.வ.).*

தளைதள்–தல் (தளைதட்டல்) taḷai-taḷ-, *5 செ.கு.வி.*(v.i.) வேறு தளை விரவியதனால், எடுத்துக்கொண்ட செய்யுளின் தளை மாறுபடுதல்; to fail or be defective in the taḷai connection of a verse."வேற்றுத்தளை தட்டுக் குறள் வெண்பாவிற் சிதைந்து" *(யாப். செய். 6, உரை).*

தளைபடு–தல் taḷai-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. சிறையாதல் (பிங்.);* to be imprisoned, taken captive. *2. கட்டுப்படுதல்;* to be bound, confined, restrained.

தற்கா[1]–த்தல் taṟ-kā-, *4 செ.கு.வி.*(v.i.) தன்னைத் தான் காத்தல்; to take care of oneself, protect oneself. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணி" *(குறள், 56).*

தற்கா[2]–த்தல் taṟ-kā-, *4 செ.குன்றாவி.*(v.t.) பாதுகாத்தல்; to preserve, protect. "நீயென்னைத் தற்காத்தருள்" *(இராமநா. உயுத். 14).*

தற்காலி–த்தல் tarkāli-, *4 செ.கு.வி.* (v.i.) அவ்வப்பொழுது புடம் வைத்தல்; to calcine as much quantity of medicine as urgently required for the time being.

தற்கி–த்தல் taṟki-, *4 செ.குன்றாவி.*(v.t.) *தருக்கம் செய்தல் (வின்.);* to logic, to dispute. *(செ.அக.).*

தற்பி–த்தல் taṟpi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *நீத்தார் நிகழ்வு;* to offer water to the manes.

தறி[1]–த்தல் taṟi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. துணித்தல் வெட்டுதல்;* to lop, chop off, cut off, cut down "கையைத் தறித்தான்" *(திருவாச 14:7) 2 கட்டவிழ்த்தல்;* to untie, unfasten "பூட்டினைத் தறித்துவிட்டு" *(விநாயகபு 51,17) 3 கெடுத்தல்;* to frustrate, ruin *காரியத்தை முளை யிலே தறிக்க வேண்டும்.4. பிரித்தல்;* to separate. "இருவரையும் தறித்துவிட வேண்டும்"*5.கூலம் புடைத்தல் (யாழ்ப்.);* to sift by a winnowing fan.

ம. தறிக்க; க. தறி.

தறி[2]–தல் taṟi-, *4 செ.கு.வி.*(v.i.) *அறுபடுதல்;* to be cut off, broken. "வாலுங் காலுந் தறிந்து" *(இராமநா. உயுத். 27).*

தறிபோடு–தல் taṟi-pōḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *நெசவுத்தறியில் நெய்ய ஏற்பாடு செய்தல் (வின்.);* to arrange to weave cloth in a loom.

தறு–தல் taṟu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. இறுக உடுத்துதல்;* to wear tightly, as a cloth."தெய்வ மடிதற்றுத் தான்முந் துறும்" *(குறள், 1023). 2. கட்டுதல்;* to fasten. "தற்றுறு பூமுடி தாழ" *(கந்தபு. நகர்பு. 68).*

ம. தறுக.

தறுகு–தல் taṟugu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தடைப்படுதல்;* to be hindered, checked."அப்பாற்றறுகி" *(பணவிடு. 242). 2. தவறுதல் (வின்.);* to be frustrated; to fail. *3. திக்கிப் பேசுதல்;* to stammer in speaking. *அவன் தறுகித் தறுகிப் பேசுகிறான்". 4. காலந் தாழ்த்துதல்;* to linger, loiter. "தறுகி நின்றா னென்மேற் றயவால்" *(விறலிவிடு.).*

தறுவு–தல் taṟuvu-, *5 செ.கு.வி.*(v.i.) *குறைதல் (யாழ்.அக.);* to diminish.

தறை[1]–தல் tarai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. ஆணியை அடித்து இறுக்குதல் (யாழ்ப்.);* to beat down flat; to hammer, as the head of a nail or the end of a bolt after fixing on the nut; to rivet. *2. ஆணியால் தைத்தல் (இ.வ.);* to fasten two beams or rafters together by hammering in spikes. *3. குற்றப் படுத்துதல் (யாழ்ப்.);* to make an accusation, commonly false.

தறை[2]–தல் taṟai-, *4 செ.கு.வி.*(v.i.) *தட்டையாதல்;* to become flat; to be flattened. "தீரத் தறைந்த தலையும்" *(கலித். 65).*

தன்னு–தல் taṉṉu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. சிறிது சிறிதாக எடுத்தல் (வின்.);* to take little by little, as from a heap; to unload a vessel a little at a time. *2. தோணியை மெல்லத் தள்ளுதல் (வின்.);* to move a vessel by degrees. *3.பொருந்துதல்;* to approach. "நம்பனையே தன்ன வலஞ்செய்து கொளும்" *(பதினொ. விநா. திரு. 3).*

தனகு–தல் taṉagu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சரசஞ் செய்தல் (வின்.);* to dally, take improper liberties. *2. உள்ளங் களித்தல்;* to be jolly, mirthful, merry."தனகிய மனைவியும்" *(திருப்பு.166). 3. சண்டை செய்தல் (வின்.); ஊடல்;* to pick a quarrel, to be out of humour. *(செ.அக.).*

தனி–த்தல் taṉi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. ஒன்றியாதல் (வின்.);* to be alone, single, solitary. *கூட்டத்திலிருந்து தனித்துப்போய்விட்டான் (உ.வ.). நாட்டில் கல்வியறிவு வளரவில்லை யென்றால் நாம் முன்னேற்றப்பாதையில் தனித்து விட நேரிடும் (இக்.வ.). 2. தனிமையாதல்;* to be separate, detached from company. "தனித்தே யொழிய" *(கலித். 114). 3. நிகரற் றிருத்தல்;* to have no equal or match. *4. உதவியற்றிருத்தல் (வின்.);* to be deserted, forsaken, helpless, as by the departure or death of friends.

தனிப்படு–தல் taṉi-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *பிரிந்து ஒன்றியாதல்;* to be solitary, lonely; to be alone without company. "இவனந்தோ தனிப்பட்டான்" *(கம்பரா.கும்பகருண. 324).*

தனிமைப்படு–தல் taṉimai-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *ஒதுக்கப்படுதல்;* to be isolated. *வன்முறையை மேற்கொண்டதால், அந்தக்கட்சி தனிமைப்பட்டு விட்டது (இக்.வ.).*

தனிமைப்படுத்து–தல் taṉimai-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *பிரித்து ஒதுக்குதல்;* to isolate. *பிரிவினைச் சக்தி களைத் தனிமைப்படுத்த, அரசியல் நடவடிக் கையே சிறந்தது (இக்.வ.). மக்களிட மிருந்தோ அல்லது ஒரு குழுவிலிருந்தோ, ஒருவரை எவ்விதச் செயலும் செய்யவொட்டாது தனிமைப் படுத்தி வைத்தல்.*

jh

தா–தல் tā-, *13 செ.குன்றாவி.*(v.t.) *1. ஒப்போனுக்குக் கொடுத்தல் (தொல்.சொல்.446);* to give, as to equals. *2. ஈந்தருளுதல்;* to grant, bestow. *3. அறிவுறுத்துதல்;* to instruct. "நாதனாரருள் பெறு நந்தி தந்திட" *(கந்தபு. அவையடக். 8). 4. பரிமாறுதல்;* to serve. "இன்சோறு தருநர்" *(மதுரைக். 535). 5. அடைவித்தல்;* to cause to get. "பொருபடை தரூஉங் கொற்றமும்" *(புறநா.35:25). 6. படைத்தல்;* to create, form, construct. "தரும தேவதை.... தருதலாற் றருமதீர்த்தம்" *(சேதுபு. சக்கர. 14). 7. மகப் பெறுதல்;* to beget, generate, procreate. "புயங்கமெலாஞ் சுதையென்னு மாது தந்தாள்" *(கம்பரா. சடாயுகாண். 28). 8. நூல் முதலியன இயற்றுதல்;* to produce, compose. "சடையன் வெண் ணெய் நல்லூர் வயிற் றந்ததே" *(கம்பரா. சிறப்புப்.11). 9. உணர்த்துதல்;* to denote; express. "இறந்த காலந் தருந் தொழிலிடைநிலை" *(நன். 142).*

10. சம்பாதித்தல், பொருள் தேடுதல்; to acquire, gather. "தாளினாற் றந்த விழுநிதியும்" *(திரிகடு. 47). 11. கைப் பற்றுதல்;* to capture."ஆரெயில் பலதந்து" *(புறநா. 6:14). 12. அழைத்தல்;* to call, summon. "மற்றவட் டருக வீங்கென" *(சிலப். வழக்குரை. 45). 13. மரம் முதலியன பயன்கொடுத்தல் (வின்.);* to yield, bring forth, as trees. *16. ஒரு துணைவினை;* an auxiliary added to verbs. "வண்டாய்த் திரிதருங் காலத்து" *(நாலடி. 284).*

ம. தா, தருக, தரிக; க. தா, தர், தார்; தெ. தெச்சு (கொண்டு வருதல்); து. தர்பாபுனி, தர்புடுன்னி; பட. தா; கோத. தார்; குரு. தனனெ; துட. தோர்; குட. தர், தா; இரு. தர்கெ; கோண். தததானா; கூ. தப, தா; குவி. தாசலி, தனை; கொலா. கொ-த, கொ-தர்; பிரா. கதரின்; க. தினிங்க்; **Gk.** dictomi; **L.** do.

தாக்கு[1]–தல் tākku-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மோதுதல்;* to come in contact, collide, strike against, as a vessel on a rock. *கப்பல் பாறையில் தாக்கியது. 2. உறைத்தல்;* to affect, as one's interest or health. *நோய் உடலிலே தாக்கியது. 3. கடுமை யாதல்;* to be severe, harsh, as in reproof. *4. பழி வாங்குதல்;* to take revenge. *பழைய சினமெல்லாம் வைத்துத் தாக்கினான்' (வின்.). 5. தலையிட்டுக் கொள்ளுதல் (வின்.);* to interfere. *6. பலித்தல் (வின்.);* to involve, as consequences. *7. பெருகுதல்;* to increase. "அருளானந்தந் தாக்கவும்" *(தாயு. ஆக்குவை. 1). 8. சுமையாதல்;* to fall heavily, as charges, expenses; to press heavily, as a burden, as responsibility. *9. அதைத்தல் (வின்.);* to react, rebound. *10. நெளித்துப்போதல் (வின்.);* to hobble, limp.

தாக்கு[2]–தல் tākku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. எதிர்த்தல்;* to attack, assault. "ஒருத்தலோ டாய்பொறி யுழுவை தாக்கிய" *(கலித். 46). கத்தி அரிவாளோடு வந்த கும்பல் அவரைச் சூழ்ந்து தாக்கியது (இக்.வ.). 2. அடித்தல்;* to strike, beat, dash. *3. வெட்டுதல்;* to cut, cut off. "அருஞ்சமம் ததையத் தாக்கி" *(புறநா. 126). 4. முட்டுதல்;* to butt. *மாடு கொம்பால் தாக்கிற்று (உ.வ.). 5. பாய்ந்து மோதுதல்;* to pounce or dart upon, attack, charge."பொருதகர் தாக்கற்குப் பேருந்த கைத்து" *(குறள், 486). எதிரிப் படையினர் குண்டுவீசி எல்லைப் பகுதியைத் தாக்கினர் (இக்.வ.). 6. தீண்டுதல்;* to touch, strike, come in contact with, as heat; to burst on the sight, as lightning; to beat against; to penetrate, as a sting. "மருந்து தன்னைத் தாக்குதன் முன்னே" *(கம்பரா. வேலேற்று: 42). கிணற்றில் விழுந்தவர் நச்சுக் காற்றால் மயக்கமுற்றார் (இக்.வ.) நெற்பயிரைச் சுருட்டை நோய் தாக்கியது (இக்.வ.). 7. பற்றியிருத்தல்;* to rest upon, depend on, lean against. *8. சரிக்கட்டுதல்;* to adjust or settle, as accounts; to increase the profits of an article; to make up for losses. *9. பெருக்குதல்;* (arith.) to multiply. "வட்டத்தரை கொண்டு விட்டத் தரை தாக்கின் சட்டெனத் தோன்றுங் குமிழி" *(கணக்.).* "நின்றதோ ரேழிற் றாக்கி நேர்பட வெட்டுக்கீந்தால்" *(சோதிட விடுகவி : சங்.அக.). 10. குடித்தல்;* to consume, drink. *கள்ளை நிறையத் தாக்கி விட்டான் (உ.வ.).*

ம. தாக்குக; க. தாகு, தாங்கு; தெ. தாகு; து. தாகுனி; பிரா. தக்; பட. தாக்கு.

தாக்குப்பிடி–த்தல் tākku-p-piḍi-, *18 செ.குன்றாவி.*(v.t.) *1. தாங்கி நிலைத்தல்;* to withstand. *பனிச்சரிவில் மாட்டிக்கொண்டவர்கள் கையில் உணவுப்பொருள் இருந்ததால், பத்துமணி நேரம் தாக்குப்பிடித்தனர். 2. நிலைமைக்குத் தக்கவாறு ஈடுகொடுத்தல்;* to brave. *எதிர் அணியின் மின்னல் வேகத் தாக்குதலை, நம் அணியினர் தாக்குப்பிடித்து விளையாடினர். 3. பெருந்துன்பத்திற்கிடையில் விடாப்பிடியாக எடுத்துக்கொண்ட வேலையை முடித்தல்;* to succeed. in one's aim with inadequate means. *தந்தையார் மறைந்தபோதும் விடாப்பிடியாகக் குறைபட்ட வீட்டைக் கட்டி முடித்தார் (உ.வ.).*

தாங்கு[1]–தல் tāṅgu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. உதவுதல், சார்தல், பற்றுதல்;* to uphold, bear up, support. "எம்பிரா னென்னைத் தாங்கிக் கொள்ளே" *(திருவாச. 6:1). 2. புரத்தல்;* to protect, guard. "தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது" *(பெரும்பாண். 18). 3. இளைப் பாற்றுதல்;* to give shelter, rest. "நீவிரிற் றாங்கு மாணிழல்" *(கலித். 20). 4. பொறுத்துக்கொள்ளுதல்;* to endure. *தந்தை மறைவைத் தாங்கமுடியவில்லை (உ.வ.). 5. சுமத்தல்;* to bear. "அகழ்வாரைத் தாங்கு நிலம் போல" *(குறள், 151). 6. ஏற்றுக்கொள்ளுதல்;* to receive. "அடி... கைசென்று தாங்குங் கடிது" *(நன்னெறி, 31). 7. அணிதல்;* to assume, wear, as crown... "தமால மாலையு மாய்ந்து, தாங்கினார்" *(சீவக. 2681). 8. மனத்திற் கொள்ளுதல்;* to learn, understand, to bear in mind. "பலகலைகள் தாங்கினார்" *(தேவா. 518:7). 9. அன்பாய் நடத்துதல்;* to care for, treat tenderly, show great kindness. *தாங்கத் தாங்கத் தலையிலேறு கிறான் (உ.வ.). 10. சிறப்புச் செய்தல்;* to esteem, respect. *அவன் பெரியோரைத் தாங்கி நடத்துகிறான் (உ.வ.). 11. அழுத்துதல் (வின்.);* to press heavily. *12. உடைய தாதல்;* to maintain, possess, as a disposition. "இவனுக்காகத் தாங்கிய வனப்பும்" *(பெரியபு. காரைக்கா. 49). 13. பொறுத்தல், இசைவளித்தல் (வின்.);* to tolerate, suffer, permit. *14. பயிற்சி மேற் கொள்ளுதல்;* to practise. "தாங்கா நல்லறம்" *(மணிமே. 28:126). 15. காலந்தாழ்த்துதல்;* to delay. "தாங்காது... புல்லி" *(அகநா. 66:13). 16. நிறுத்துதல்;* to stop. "வலவன் தாங்கவும் நில்லாது கழிந்த தேர்" *(குறுந். 311). 17. தடுத்தல்;* to hinder, prevent, resist, ward off. "வருதார் தாங்கி யமர்மிகல் யாவது" *(புறநா. 62). 18. பிடித்துக் கொள்ளுதல்;* to hold, catch. "சரிந்தபூந் துகில்க டாங்கார்" *(கம்பரா. உலாவி. 2). 19. எதிர்த்தல்;* to oppose, attack. "பெரும்பகை தாங்கு மாற்றலானும்" *(தொல். பொருள். 76). 20. தள்ளுதல்;* to row, ploe, as

boat. அவன் தோணியைத் தாங்குகிறான் (இக்.வ.). 21. தட்டுதல் (வின்.); to hit against, strike, graze, as a boil. 22. குதிரை முதலியவற்றின் வேகத்தை அடக்கிச் செலுத்துதல்; to drive with restraint, as horses. "களிறு பரந்தியலக் கடுமா தாங்க" (பதிற்றுப். 49). 23. கெஞ்சுதல்; to solicit, cringe. எவ்வளவோ தாங்கியும் அவன் கேட்கவில்லை (உ.வ.).

ம. தாங்ஙுக; க. தாங்கு; தெ. தாளு; து. தாங்குனி; குட. தாங்க; கோத. தாங்க்; துட. தொக்; பட. தாங்கு; பிரா. தோனிங்க்.

தாங்கு²–தல் tāṅgu-, 5 செ.கு.வி.(v.i.) 1. சுமையாதல்; to be heavy. வண்டி ஒரு பக்கந் தாங்குகிறது (உ.வ.). 2. நொண்டுதல்; to limp, hobble. தாங்கித் தாங்கி நடக்கிறான் (உ.வ.). 3. பேச்சுத் தடைபடுதல்; to halt in speaking. அவன் தாங்கித் தாங்கிப் பேசுகிறான். 4. போதியதாதல்; to suffice. எவ்வளவு பேர் வந்தாலும் இடந் தாங்கும். 5. மாறுபடுதல்; to be opposed, controverted. "தாங்கருங் கேள்வியவர்" (ஆசாரக். 51). 6. கூடியதாதல்; to be possible; to afford, as an expense, அவனுக்குச் சாப்பாடு கொடுத்துத் தாங்காது. 7. வருந்துதல்; to be distressed. "தனிக்குழவி யெனக் கலங்கித் தாங்கித் தேடி" (திருவிளை. விருத்தகுமார. 29). 8. அணைத்தல்; to hug. 9. காத்தல்; to wait.

க. தாங்கு; ம. தாங்ஙு.

தாட்டு¹–தல் tāṭṭu-, 5 செ.கு.வி.(v.i.) 1. காலங் கடத்துதல்; to cause delay. 'பணங்கொடுக்காமல் தாட்டுகிறான்' (இ.வ.). 2. நீக்குதல் (வின்.); to remove. 3. மறுத்தல் (வின்.); to confute.

தாட்டு²–தல் tāṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) வீழ்த்துதல் (வின்.); to throw down.

தாடி–த்தல் tāḍi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. அடித்தல்; to beat. 2. கொட்டுதல்; to beat a drum. "தாடித் தெழுந்த தமருக வோசை" (திருமந். 2317).

தாண்டு¹–தல் tāṇḍu-, 5 செ.கு.வி.(v.i.) 1. குதித்தாடுதல் (பிங்.); to dance, skip, jump. 2. செருக்கடைதல் (இ.வ.); to be arrogant. 3. மிதமிஞ்சிப் பேசுதல் (இ.வ.); to transgress limits in talking.

க. தாண்டு; ம. தாண்டுக.

தாண்டு²–தல் tāṇḍu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கடத்தல் (பிங்.); to leap across, jump over, cross, step over. தாய் எட்டடி தாண்டினால் குட்டி பதினாறடி தாண்டும் (பழ.). 2. செலுத்துதல் (பிங்.); to drive. 3. மேற்படுதல்; to surpass, outdo, excel. "தேர்வில் எல்லாரையும் தாண்டிவிட்டான்" (உ.வ.).

ம. தாண்டுக; க. தாடு, தாண்டு, தாண்டு; தெ. தாடு; து. தாண்டுனி; கொலா. தாட்; கோத. தாட்; துட. தோட்; பட. தாண்டு.

தாணி¹–த்தல் tāṇi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பதித்தல்; to fasten, affix, enchase, as gem. "அரக்கும் உட்படத் தாணித்த சிவப்புச் சிலையும்" (S.I.I.I.ii, 206). 2. மண் முதலிய வற்றைக் கெட்டிப்படுத்துதல் (வின்.); to ram down, make firm, as earth round a tree; to hammer down. 3. துப்பாக்கி கெட்டித்தல் (வின்.); to load, as a gun. 4. உறுதிப் படுத்துதல் (யாழ்.அக.); to confirm, strengthen. 5. விரைவிற் கடைதல் (வின்.); to ply hard, as in churning.

தாணி²–த்தல் tāṇi-, 4 செ.கு.வி.(v.i.) 1. திறமையாய் பொய்குற்றமேற்றுதல் (வின்.); to impute crime falsely and skilfully. 2. இழையோட்டுதல் (நெல்லை.); to baste, tack.

தாத்து–தல் tāttu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கொழித்தல் (யாழ்ப்.); to winnow. 2. இழிந்ததை உயர்ந்ததற்கு மாற்றுதல்; to shift off bad articles for good. 'அவன் தாத்திப் போட்டான்' (யாழ்ப்.). 3. செலவழித்தல் (தஞ்சை.); spend. 4. ஒளித்து வைத்தல் (யாழ்ப்.); to conceal, as stolen bullocks.

தாபரி¹–த்தல் tābari-, 4 செ.கு.வி.(v.i.) நிலைபெற்றிருத்தல்; to lodge, abide obtain shelter. "உன்றன்வீடு தாபரித்த வன்பர்" (திருப்பு. 731).

தாபரி²–த்தல் tābari-, 4 செ.குன்றாவி.(v.t.) பாதுகாத்தல் (யாழ்.அக.); to protect, shelter, maintain.

தாரணி–த்தல் tāraṇi-, 4 செ.குன்றாவி.(v.t.) அணிதல்; to bear. "வானநீரினாற் றாரணித் தங்கொரு மலையிற் றாங்கினான்" (கம்பரா. அயோமுகி. 93).

தாரமாக்கு–தல் tāram-ākku-, 5 செ.கு.வி. (v.i.) வெள்ளியாக்குதல்; to convert into silver. (சா.அக.).

தாராட்டு–தல் tārāṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) தாலாட்டு; to lull or sooth a child. 'பச்சைத் தேரை தாராட்டும் பண்ணை' (கம்பரா. நாட்டு. 13).

ம. தாராட்டுக.

தாரி–த்தல் tāri-, 4 செ.கு.வி.(v.i.) பொறுத்தல்; to bear, endure. "மற்றது தாரித்திருத்த றகுதி" (நாலடி, 72). 2. உடைத் தாதல்; to possess. "தாரித் திட்டதன் றறுகண்மைக் குணங்களின்" (சூளா. சீயவதை. 150).

தாரைவார்–த்தல் tārai-vār-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. நீர் வார்த்துத் தத்தம் பண்ணுதல்; to mak gifts by pouring water on the right hand of the donee. "தாரைவா ரெனக் கௌசிகன் சாற்றிட" (அரிச். பு. சூழ்வி:79). 2. தொலைத்து விடுதல்; to lose, as property. அவன் தன் சொத்துக்களைத் தாரை வார்த்து விட்டான்.

தாலாட்டு–தல் tālāṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) குழந்தை களைத் தொட்டிலிலிட்டு உறங்கச் செய்யப் பாட்டுப் பாடுதல்; to rock a child in a cradle with lullabies.

"அஞ்சனவண்ணனை யாய்ச்சி தாலாட்டிய செஞ்சொல்" *(திவ். பெரியாழ். 1:3:10).*

ம. தாலாட்டுக.

தாலிகட்டு–தல் tāli-kaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) மணம் புரிதல்; to marry, as tying tāli. "தாலிகட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்துமட்டும்" *(தனிப்பா. 195: 10).*

தாலியறு¹–த்தல் tāli-y-aṟu-, *4 செ.கு.வி.*(v.i.) கைம் பெண்ணாதல் *(விதவையாதல்);* to become a widow, as having the tāli taken off.

தாலியறு²–த்தல் tāli-y-aṟu-, *4 செ.குன்றாவி.*(v.t.) துன்பத்துக் குள்ளாதல்; to harass, cause trouble. அவனைத் தாலி யறுத்துவிட்டான் *(உ.வ.).*

தாலிவற்று–தல் tāli-vaṟṟu-, *5 செ.கு.வி.*(v.i.) கைம் பெண்ணாகுகை *(இ.வ.);* to become widow, as making the tāli disappear, a euphemism. *(செ.அக.).*

தாலிவாங்கு–தல் tāli-vāṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) கணவனிறந்த பின் மனைவியின் தாலியை நீக்குதல்; to remove the tāli of a woman on the death of her husband.

தாலுறுத்து–தல் tāluṟuttu-, *15 செ.கு.வி.*(v.i.) தாலாட்டுதல்; to sing lullaby. "ஆந்தையுங் கூகையு மணிதா லுறுத்த" *(கல்லா. 87 : 21).*

தாவரி¹–த்தல் tāvari-, *4 செ.கு.வி.*(v.i.) தங்குதல்; to lodge, abide, obtain, shelter.

தாவரி²–த்தல் tāvari-, *4 செ.குன்றாவி.*(v.t.) பாதுகாத்தல்; to protect, shelter, maintain, preserve. *(செ.அக.).*

தாவி–த்தல் tāvi-, *4 செ.குன்றாவி.*(v.t.) நிலை நிறுத்தல்; to establish."சிவத்திடைத் தாவிக்கு மந்திரந் தாமறி யாரே" *(திருமந். 1842).*

தாவிப்பேசு–தல் tāvi-p-pēšu-, *5 செ.கு.வி.*(v.i.) சினம் முதலிய வற்றால் தடுமாற்றத்துடன் பேசுதல் *(வின்.);* to speak in an incoherent manner, as in wrath.

தாவு¹–தல் tāvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* குதித்தல்; to jump up, leap, to skip over."கலைதாய வுயர்சிமையத்து" *(மதுரைக். 332). 2.* பரத்தல்; to spread. "மலர்தாய பொழினண்ணி" *(கலித். 35). 3.* தழைத்தல்; to be luxuriant. "தாயதோன்றி" *(பரிபா. 11, 21). 4.* பறத்தல்; to fly. "விண்ணிற் மேற்றாவும் புள்ளும்" *(பெரியபு. திருநா: 305). 5.* சாய்தல் *(வின்.);* to move towards. *6.* ஊடு செல்லுதல்; to radiate, as heat. 'சூடு தாவுகிறது'. *7.* செருக்குதல்; to be proud, haughty. அவன் மிகவும் தாவுகிறான் *(உ.வ.).*

தாவு²–தல் tāvu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.* தாண்டுதல்; to leap over, cross. "கடல்தாவு படலம்" *(கம்பரா.). 2.* பாய்ந்து எதிர்த்தல் *(வின்.);* to spring upon, attack, prey upon. *3.* கடத்தல்; to pace out a distance. "உலகளந்தான் றாஅயது" *(குறள், 610).*

தாவு³–தல் tāvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.* கெடுதல்; to perish, decay, usually used in negative forms. "தாவாத வின்பம்" *(சீவக. கடவுள். 1). 2.* ஒழிதல்; to be removed; to disappear. "இருவகைத் தாவா துறுப்பிற் றங்க" *(ஞான.7:5).*

த. தாவு; **Skt.** dhāv. *(வ.மொ.வ.176) (இ.வே.).*

தாழ்¹–தல் tāḻ-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* கீழே தாழ்தல்; to fall low; to be lowered, as a balance. "வலிதன்றே தாமுந் துலைக்கு" *(நீதிநெறி. 17). 2.* கூரை தணிந்திருத்தல்; to be low, as a roof. *3.*மேலிருந்து விழுதல்; to flow down, descend. "பொங்கருவி தாழும் புனல்வரை" *(நாலடி, 231). 4.* சாய்தல்; to decline, as the sun. வெயில் தாழ வா. *5.* அமிழ்தல்; to sink in water. இன்னலங் கடலுட் டாழ்ந்து" *(உபதேசகா. சிவத்துரோ. 106). 6.* நிலை கெடுதல்; to sink in circumstances, in repute, to diminish in splendour or power, to decrease, decay, degenerate, deteriorate. "அந்தரத் தகிலகோடி தாழாம னிலைநிற்க வில்லையோ" *(தாயு. பரிபூரண. 9). 7.* மனங் குலைதல்; to despond; to be dejected. "தாழ்ந்த மனத்தனைத் தெளிவித்து" *(பிரமோத். 13, 61). 8.* காலம் தாழ்த்தல்; to delay, to be behindhand, indolent."தாழாது போவா மெனவுரைப்பின்" *(நாலடி, 342). 9.*தோற்றல்; to prove inferior, to fail in comparison, competition or battle. அவன் போரில் பகைவனுக்குத் தாழ்ந்து விட்டான் *(உ.வ.). 10.* தங்குதல்; to stay, rest, stop, halt. "மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார்" *(சிலப். 17); படர்க்கை). 11.* நீண்டு தொங்குதல்; to hang down, to be suspended, as the arms, as locks of hair. "தாழ்ந்த கைகளும்" *(கம்பரா. மிதிலை. 56). 12.* பதிதல் *(வின்.);* to be inlaid, as gold; to set in, as colours; to abide in, as lustre in a gem. *13.* ஆழ்ந்திருத்தல்; to be deep. "தாழ்வடுப்புண்" *(பு.வெ.10, சிறப்பிற். 11). 14.* ஈடுபடுதல்; to be engrossed in an object or pursuit."இராப்பக னைந்திவ டாழ்கின்றதே" *(பதினொ. பொன்வண். 38). 15.* தழைத்தல்; to sprout. "பொதும்பர் தானாறத் தாழ்ந்தவிடம்" *(திணைமாலை. 29). 16.* வளைதல்; to bend, droop, to be bowed down."தாழ்குர லேனல்" *(பு.வெ:12: பெண்பாற்:16). 17.* மெல்லோசையாதல்; to become low or subdued, as a sound. "தாழ் தீங்குழலும்" *(மணிமே. 2:21). 18.* அழிதல்; to be ruined. "தாழுங் காலத்துந் தாழ்வில" *(கம்பரா. மராமர: 1).*

க. தாழ்; ம. தாழுக; தெ. தாழு.

தாழ்²–தல் tāḻ-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1.* வணங்குதல் *(பிங்.);* to bow, to worship. *2.* விரும்புதல்; to desire, to be eager for. "தண்டாமரை யவ டாழுந் தகையன" *(சீவக. 523).*

தாழ்³–த்தல் tāḻ-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1.* தாழச் செய்தல்; to bow down, let down, to deepen, depress."நின்றலை யைத்தாழ்த் திருகை கூப்பு" *(திவ். இயற். பெரியதிருவந். 84). 2.*

தாழ்மைப் படுத்துதல்; to degrade. "இன்றி வட்டாழ்த்து" (பெருங். வந்தவ. 5:45).

தாழ்[4]–த்தல் tāḻ-, *4 செ.கு.வி.*(v.i.) *1. காலந் தாழ்தல்;* to wait, stay, delay. "தாழ்த்திடாமல் மின்னிடை வெந்தீத் தம்மின்" (சேதுபு. சங்கர. 71). *2. மந்தமாயிருத்தல் (சூடா.);* to be slow, dull.

தாழ்கோ–த்தல் tāḻ-kō-, *4 செ.கு.வி.*(v.i.) தாழிடுதல்; to bolt a door. "ஒளித்தறை தாழ்கோத் துள்ளகத் திரீஇ" (மணிமே. 4:88).

தாழ்த்து–தல் tāḻttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. தாழச் செய்தல்;* to bring low, lower, let down, deepen. *2. குறைத்தல்;* to reduce, deminish. "விலையைத் தாழ்த்தி விற்கிறான்" (யாழ்.அக.). *3. கீழ்ப்படுத்துதல்;* to keep under control, compel obedience. "அவனை ஏறவிடாது தாழ்த்தி வைத்துக் கொள்'. *4. மானக்கேடு செய்தல்;* to degrade, disgrace. *5. காலத்தாழ்வு செய்தல்;* to delay, waste time. *6. தங்கச்செய்தல்;* to make a person or object stay. "வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால் தாழ்த்துவதும்" (திருவாச. 5:16). *7. விதைத்தல் (யாழ்ப்.);* to implant, plant, as seeds. *8. புதைத்தல் (வின்.);* to set, to burry, inter, sink. *9. நீரில் அமிழ்த்துதல் (வின்.);* to immerse, submerge. *(செ.அக.).*

ம. தாழ்த்துக.

தாழநில்–தல் (தாழநிற்றல்) tāḻa-nil-, *14 செ.கு.வி.*(v.i.) தணிந்து கொள்ளுதல்; to condescend. "சர்வாதிகன் தானே தாழநிற்குமன்று நிவாரக ரில்லை" (ஈடு. 1:3: ப்ர.).

தாழம்படு–தல் tāḻam-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) ஓசை தாழ்ந்து வருதல்; to be subdued in tone; to be lowered, as the pitch. "தாழம்பட்ட ஓசை யல்லாதனவும்" (தொல். பொருள். 444, உரை).

தாழிடு–தல் tāḻ-iḍu-, *18 செ.கு.வி.*(v.i.) தாழ்ப்பாள் மூலமாக அடைத்தல்; to latch. அறைக்குள் வேகமாகப் போய்த் தாழிட்டுக் கொண்டாள். (உ.வ.).

தாளி–த்தல் tāḷi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. கடுகு உளுத்தம் பருப்பு முதலியவற்றை நெய்யில் வறுத்துக் குழம்பு முதலியவற்றிற்கு நறுமண முண்டாக இடுதல்;* to season and flavour curry, etc., with spices fried in ghee or oil. "பட்ட நறையாற் றாளித்து" (பெரியபு. சிறுத். 66). *2. மருந்தைச் சுவைப்படுத்துதல் (வின்.);* to flavour medicine, as with ghee, oil. *3. கண்டித்தல்;* to scold soundly. அவனை நன்றாய்த் தாளித்து விட்டான். *4. சுண்ணாம்பு குழைத்தல் (இ.வ.);* to macerate lime. *5. புனைந்துரைத்தல் (உ.வ.);* to exaggerate.

க. தாலிசு; தெ. தாலிஞ்சு.

தாளு[1]–தல் tāḷu-, *5 செ.குன்றாவி.*(v.t.) பொறுத்தல்; to bear, suffer, tolerate. இந்தத் தொல்லையால் அவர் மனந் தாளவில்லை (உ.வ.).

தெ., க. தாளு; து. தாளுனி.

தாளு[2]–தல் tāḷu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. விலை பெறுதல்;* to be worth. இது அந்த விலை தாளுமா? (இ.வ.). *2. இயலுதல்;* to be possible, practicable. தாளும் தாளாது என்று சொல்.

தாற்று–தல் tāṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. கொழித்தல் (இ.வ.);* to sift, winnow in a particular manner and separate large particles from small. *2. தரித்தல் (யாழ்.அக.);* to bear.

தானா–தல் tāṉā-, *6 செ.கு.வி.*(v.i.) *1. உரிமை யுள்ளவனாதல் (சுதந்திரனாதல்);* to become self-dependent, independent, as the deity. *2. ஒற்றுமையாதல் (பிங்.);* to become assimilated, united.

â

திக்கரி–த்தல் tikkari-, *4 செ.குன்றாவி.* (v.t.) தவிர்த் தொதுக்குதல் *(நிராகரித்தல்);* to shun, to treat with contempt. "சினத்துப் பொற்பொருப்பை...திக்கரித்து" (திருப்பு.427).

திக்கு[1]–தல் tikku-, *5 செ.கு.வி.* (v.i.) *1.*சொற்கள் தடைபடத் தெற்றிப் பேசுதல்; to stutter, stammer, **2.** சொல் குழறுதல்; to err or hesitate as in recitation reading etc. "என்மானுரை உரைக்கத்திக்கும்" (தனிப்பா. 396, 46).

திக்குமுக்காடு–தல் tikku-mukkāḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மூச்சுவிட முடியாமல் முட்டுப்படுதல்;* to be chocked, stiffed, smothered, strangled. "தீப்பிடித்துக் கொண்ட வீட்டில் சிக்கியவருக்கு மூச்சுத் திக்கமுக்காடியது". *2. மகிழ்ச்சியில் ஏற்படும் திளைப்பு;* happiness.

திகழ்[1]–தல் tikaḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *1. விளங்குதல்;* to shine as diamonds, to glitter as stars; to be brilliant. "மீன்றிகழ் விசும்பின்" (புறநா.25). *2. சிறப்புமிகுதல்;* to be eminent; to excel. "மொய் திகழ் வேலோன்" (பு.வெ.6, 25, கொள).

திகழ்[2]–தல் tikaḻ, *2 செ.குன்றாவி.* (v.t.) உள்ளடக்கிக் கொள்ளுதல்; to contain, hold. "ஒண்குழை திகழு மொளி கெழு திருமுகம்" (மதுரைக்.448).

திகழ்த்து–தல் tikaḻttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* தெளிவாக விளக்குதல்; to explain clearly, make clear. "பொருளை பொரு சொல்லாற் றிகழ்த்துதற்கு" (சிவப். பிரபஞ். சிவஞான. தாலாட்டு.63). *2. விளக்கங்காட்டுதல்;* to slow clearly. "விரிந்த படமோவியங்கள் பல நிகழ்த்தி" (வேதா.சூ.61). *3. அழகுறுத்துதல்;* to beautify, adorn.

திகில்படு–தல் tikil-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) பேரச்சங் கொள்ளுதல்; to start with sudden fear; to be struck with fear.

திகை[1]–த்தல் tikai- *4 செ.கு.வி.* (v.i.) *1. மயங்குதல்;* to be taken aback, confused, perplexed be wildered. "இருளிற் றிகைத்த கரி" (தேவா.1156,5). *2. நிலை மறத்தல்; அசத்தல்(பிரமித்தல்)*

(கொ.வ.); to be astonished, amazed. *3. அடங்குதல்;* to subside. "தென்காறிகைப்ப வடகால் வளர" *(கல்லா.93,7). 4. சோர்தல்;* to be exhausted. "வேலை செய்து மிகவும் திகைத்து விட்டான்".

திகை[2]–தல் tikai- *4 செ.கு.வி.* (v.i.) *1. முடிவுறுதல்;* to complete, to come to an end. "மாதந் திகைந்த சூலி" *(நெல்லை). 2. தீர்மானமாதல்;* to be settle. அதன் விலை இன்னும் திகையவில்லை *(உ.வ.).*

திசைதப்பு–தல் tišai-tappu-, *5 செ.கு.வி.* (v.i.) வழி தவறுதல்; to miss the road, lose one's way, as a vessel.

திட்கு–தல் tiṭgu-, *5 செ.கு.வி.* (v.i.) மனங்குலைதல் *(பிங்.);* to get troubled in mind. "திட்காதே விண்ணப்பஞ் செய்" *(பதினொ. கைலை. பா.77).*

திட்டம்பண்ணு–தல் tiṭṭam-paṇṇu-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. அணியம் செய்தல்;* to arrange, settle. *2. ஏற்படுத்துதல் (நியமித்தல்);* to establish. appoint. *3. மதிப்பிடுதல்;* to form an estimate of. *4. சரிப்படுத்துதல்;* to mend, adjust, correct. *5. ஆணையிடுதல்;* to command, commission. *6. செலவிடுதல்;* to dispose of.

திட்டம்பார்–த்தல் tiṭṭam-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. முயலுதல் (வின்.);* to try. *2. கருதுதல் (வின்.);* to guess, estimate, conjecture. *3. அன்று விற்ற தொகை யையும் கணக்கையும் சரிபார்த்தல் (இ.வ.);* to verify the sale account of the date.

திட்டமிடு–தல் tiṭṭam-iḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) முன்னேற்பாடு செய்தல்; consider and arrange before hand.

திட்டி–த்தல் tiṭṭi-, *4 செ.குன்றாவி.* (v.t.) கற்பித்துக் கூறுதல்; to create, fabricate. *திட்டித்துப் போடுவாயோ? (வின்.).*

திட்டு[2]–தல் tiṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.i.) *1. பழித்தல்;* to abuse, revile. *2. இகழ்தல் (யாழ்ப்.);* to curse, utter imprecations.

க., ம. திட்டு

திட்டையிடு–தல் tiṭṭai-idu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பல்லீறு தடித்தல்;* to swell, as the gums in the teething. *2. புண்ணில் தசை வளர்தல் (யாழ்.அக.);* to become closed, as a wound.

திடப்படுத்து–தல் tiḍa-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.i.) *1. வலுப்படுத்துதல்;* to invigorate, strengthen. *2. உறுதிப்படுத்துதல்;* to rectify, sanction, corroborate. *(செ. அக.).*

திடரிடு–தல் tiḍariḍu-, *20 செ.கு.வி.* (v.i.) மேடாதல்; pile; heap.

திடுக்கிடு–தல் tiḍukkiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.அச்ச முறுதல்;* to be startled, alarmed, frightened. "திடுக்கிட வுற்றணுகி" *(அரிச்.பு.வேட்டஞ்.69). 2.நடுக்கமுறுதல்;* to be shocked, to shudder, to start with fear or surprise; to start in sleep from nervous or muscular affection.

திடுதிடு–த்தல் tiḍu-tiḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. இடைவிடாது ஒலித்தல்;* to make a reiterated noise, as by nasty stelps, to rumbe, as a carriage; to thump constantly. *2. நெஞ்சு துடித்தல் (யாழ்ப்.);* to beat, throb palpitate, as the heart through fear.

திண்டாடு–தல் tiṇḍāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அலைக்கழிதல்;* to wander about restlessly. *2.மனங்கலங்கித் தடுமாறுதல்;* to suffer trouble, mental agony. "சிலர் பயமுந்தத் திண்டாடித் திசையறியா மறுகினர்" *(கம்பரா. சுட்.சு.39).*

திண்படு–தல் tiṇ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) வலிபெறுதல் *(யாழ்.அக.);* to be strengthned.

திண்பொறு–த்தல் tiṇ-poṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சுமை தாங்குதல் (யாழ்.அக.);* to be able to bear a burden. *2. தாக்குப் பொறுத்தல்;* suffering the attack as of diseases. *3. வலி பொறுத்தல் (சகித்தல்);* to endure pain.

திணர்[1]–தல் tiṇar-, *5 செ.கு.வி.* (v.i.) சோர்தல்; to get exhausted. "உணர்ந்தவ ருணர்ச்சியா னுழைந்தே திணர்ந்தனராகி" *(அருட்பா.4, பதிநிச். பக்.751-2).*

திணர்[2]–தல் tiṇar-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கனமாகப் படிந்திருத்தல்;* to form a thick layer. "திணர்த்த வண்டல் கண்மேல்" *(திவ். திருவாய்.6, 1, 5). 2. நெருக்கமாதல்;* to be crowded, dense, close. "வண்டு திணர்த்த வயல்" *(திவ். திருப்பள்ளி. தனியன்).*

திணறு–தல் tiṇaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) மூச்சுத் தடுமாறுதல்; to be choked, stifled, suffocated.

திணி[1]–தல் tiṇi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. செறிதல்;* to be crowded, dense, close. "மண்டிணிந்த நிலனும்" *(புறநா.2). 2. இறுகுதல்;* to become solid, compact, firm.

திணி[2]–த்தல் tiṇi-, *2 செ.கு.வி.* (v.i.) *1.செறிய உட்புகுத்துதல்;* to cram, stuff. "பூமிபாரங்க ளுண்ணுஞ் சோற்றினை வாங்கிப் புல்லைத் திணிமினே" *(திவ்.பெரியாழ்.4, 4, 5). 2. பதித்தல்;* to enchase, set. "பொன்றிணி மணிமானப் பொலிவன பல" *(கம்பரா. வனம்பு.3). 3. நெருக்கி வருத்துதல் (இ.வ.);* to nagat, worry persistently. *4. இடைச் சேர்த்தல்;* to insert. *5. அதிகமாக உண்பித்தல்;* giving excess of food. *6. அடைத்தல்;* plugging. *7. துறத்தல்;* thristing, stuffing in.

திணுங்கு–தல் tiṇuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. செறிதல்;* to become close, thich, dense, crowded. "திணுங்கின விருள்" *(திவ். திருவாய்.2, 1, 7, பன்னீ). 2. உறைதல்;* to congeal solidity. "நெய் திணுங்கினாற்போல" *(திவ். திருமாலை 2, வ்யா. பக்.15).*

தித்தி–த்தல் titti-, *4 செ.கு.வி.* (n.) இனித்தல்; onom to be sweet, savoury delicious, pleasing. "திருப்பவளச் செய்வாய் தான் தித்தித் திருக்குமோ" *(திவ். நாச்.7, 1).*

தித்து–தல் tittu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. திருத்துதல்;*

to correct, rectify a mistake. "தெள்ளமிர்த மூட்டி யுரைதித்தி வளர்த்தெடுத் தோர்" *(கூளப்ப. 8). 2.* எழுத்துக் கற்க வரிவடிவின்மேற் பல முறை யெழுதிப் பழகுதல் *(இவ.);* to practise hand writting by tracing over a written copy.

T. K. diddu

திதை–தல் tidai-, *4* செ.கு.வி. (v.i.) பரவுதல்; to spread. "திதையுந் தாது தேனுஞ் ஞிமிறும்" *(தேவா.395,5).*

திப்பிதை–த்தல் tippi-dai-, *4* செ.குன்றாவி. (v.i.) திரும்பித் தையலிடுதல் *(இ.வ.);* to stich back.

திமிசடி–த்தல் timisaḍi-, *4* செ.கு.வி. (v.i.) இளகிய தரையைத் திமிசுக்கட்டையால் கெட்டிப் படுத்துதல்; to ram, beat-loose earth to solidity.

திமிர்¹–தல் timir-, *2* செ.குன்றாவி. (v.i.) *1.* பூசுதல்; to smear, as sandal paste. "சாந்தந்திவோர்" *(மணி.19, 86). 2.* தடவுதல்; to rub. "ஈர்ங்கை விற்புறந் திமிரி" *(புறநா.258). 3.* அப்புதல்; to apply to, as a flower to the skin. "பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே" *(ஐங்குறு.347). 4.* வாரியிறைத்தல்; to throw or scatter, as on one'sbody. "கையிடை வைத்தது மெய்யிடைத் திமிரும்" *(நற்.360).* செ.கு.வி. (v.i.)*; 1.* ஒலித்தல் *(சூடா.);* to sound, resound. *2.* வளர்தல் *(வின்.);* to grow, increase, become more intense (M.timiruka). *3.* நடுக்கமடைதல்; to tremble, shake. "நிலைதளாந் துடலந் திமிர்ந்து வேர் வரும்பி" *(திருவிளை.நாக.19)*

திமிர்²–த்தல் timir-, *2* செ.கு.வி. (v.i.) *1.* தடவுதல்; to rub, besmear. "வறுவலுக்கு மிளகாய்ப் பொடி திமிர்த்து வைக்க வேண்டும்". *2.* தீர்மானித்தல்; to determine. "அணைத்தபோதை பர்சத்தாலே திமிர்த்துச் சொல்லுகிறார்" *(ஈடு.2.6.2). 3.* அடித்தல்; to beat. "கூழையங் குறுநரி யுடையோர் திமிர்ப்ப" *(கல்லா.69,19). 4.* குலுக்குதல்; to shake. திமிர்த்தி வைத்தான். *5.* அருவருத்தல்; to loathe, as food.

திமிர்³–த்தல் timir-, *4* செ.குன்றாவி. (v.i.) *1.* கால் முதலியன மரத்தல்; to be numbed, as a limb; to be paralysed. *2.* கொழுத்துத்தடித்தல்; to grow stout from obesity. *3.* பித்துப்பிடித்தல்; to be stupefied, dumb-founded.

திமிர்ப்பிடி–த்தல் timir-pidi-, *4* செ.குவி. (v.i.) *1.* மரத்தல்; to become numb. *2.* கொழுத்தல்; to become corpulent, as the body. *3.* செருக்குறுதல்; to become haughty.

திமிர்விடு–தல் timir-viḍu-, *20* செ.கு.வி. (v.i.) சோம்பல் முறித்தல்; to stretch and yawn from sleepiness.

திமிராயிரு–த்தல் timirāy-iru-, *4* செ.குவி. (v.i.) உணர்ச்சி யற்று இருத்தல்; being deprived of feeling or affected with palsy.

திமிரெடு–த்தல் timireḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* திமிர்வளி கொள்ளல்; being affected by palsy. *2.* உணர்ச்சியறல்; becoming insensible and motionless. *(சா.அக.).*

திமிலிடு–தல் timil-iḍu-, *20* செ.கு.வி. (v.i.) மிக ஒலித்தல் *(யாழ்ப்.);* to make a great noise; to clamour, roar.

திமிறிடு–தல் timriḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* தேய்த்தல்; rubbing. *2.* பறித்தல்; plucking. *3.* வளர்த்தல்; growing.

திமிறியடி–த்தல் timiṟi-y-aḍi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* ஒருவன் பிடிப்பினின்றும் விடுவித்துக் கொள்ளுதல்; to wrench oneself from another's grip. *2.* எதிர்த்துப்பேசுதல்; to contradict or oppose with vehemence. *3.* குளிர்காற்றால் நடுக்க மிகுதல்; to be violent as the quaking due to ague.

திமிறு–தல் timiṟu-, *5* செ.குன்றாவி. (v.i.) *1.* வலிந்து தன்னைப் பிறரிடமிருந்து விடுவித்தல்; to wriggle out of another's grip. *2.* நீண்டு வளருதல்; to grow tall and big. "ஆள் இப்போது திமிறிப் போய்விட்டான்". *3.* மா முதலியன சிந்துதல் *(யாழ்ப்.);* to be scattered, spilled, as flour in pounding.

திமை–த்தல் timai-, *4* செ.குன்றாவி. (v.t.) கிளப்புதல் *(சது.);* to raise up, lift, as stones.

தியக்கு–தல் tiyakku-, *8* செ.குன்றாவி. (v.t.) மயங்கச் செய்தல்; to cause confusion, to confound. "சிறியனேனை நீர்தியக்குத லழகோ" *(அருட்பா.2, நாடகவின்.10).*

தியங்கு–தல் tiyaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* சோர்தல்; to faint, droop, languish. *2.* மனக்கலக்கமுறுதல்; to be dejected, pensive, sad. "அசுரேசர் வாசல்கள் சென்று நின்று தியங்கியே" *(சிவரக. தேவியுடன்-11). 3.* அறிவு மயங்குதல்; to be confounded, deluded.

திரக்கு¹–தல் tirakku-, *5* செ.கு.வி. (v.i.) சுருங்குதல்; to be crumpled; to shrived, wrinkle. "திரங்குவிரற் கழுதுக்கு" *(பதினொ. பொன்வண்.75).*

திரக்கு²–தல் tirakku-, *5* செ.குன்றாவி. (v.t.) தேடுதல்; to search; to enquire. "ஊரெங்கும் திரக்கியும் கள்ளப்பயல் அகப்படவில்லை" *(நாஞ்.)*

ம. திரக்குக.

திரங்கு–தல் tiraṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* வற்றிச் சுருங்குதல்; to be wrinkled, crumpled. "தெங்கின் மடல்போற் றிரங்கி" *(மணி.20, 53). 2.* உலர்தல்; to dry up, as dead leaves. "திரங்கு மரனாரிற் பொலியச் சூடி" *(மலைபடு. 431). 3.* சுருளுதல்; to be folded in, as the fingers of a closed hand; to be curled up, as the hair. "திரங்கு செஞ்சடை கட்டிய செய்வினைக்கு" *(கம்பரா. காட்சி.25). 4.* தளர்தல்; to faint, droop. "மடமா னம்பிணை மறியொடு திரங்கு" *(ஐங்குறு.326).*

திரட்டு–தல் tiraṭṭu-, *5* செ.குன்றாவி. (v.i.) *1.* உருண்டை யாக்குதல்; a make round lumps, or balls, as of boiled rice, towork into round masses as pills; to make round or conical, as a turner with

lathe. "விளங்காய் திரட்டினா ரில்லை" *(நாலடி.103).* (*M.*tiraṭṭuka) *2.* ஒன்று கூட்டுதல்; to collect, as taxes; to bring together, muster, gather as men, troops. "படை திரட்டினார்கள்". *3.* கலத்தல்; to mix. "திருமுலைப் பாலினோடு ஞானமுந் திரட்டி" *(திருவிளை. பாண்டியன்.புரந்.20). 4.* குவித்தல்; to heap up, as grain; to amass, as wealth. *5.* தொகுத்தல்; to compile from various authors, incorporate, embody. *6.* சுருக்குதல்; to state succinctly. *7.* கட்டுதல்; to construct, as dikes in rice fields. "வரம்பு திரட்டுகிறார்கள்" *(இ.வ.).*

திரள்¹(ளு)–தல் tiraḷ-, *5* செ.கு.வி. (v.i.) *1.* உருண்டையாதல்; to become round, globular. "திங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி" *(நாலடி.199). 2.* மிகக்கூடுதல்; to assemble, congregate, to collect in large numbers. "சனம் திரளுகிறது". *3.* மிகுதல்; to accumulate, to abound. "அவலு மிசையு நீர்த்திரள் பீண்டி" *(மதுரை.240). 4.* இறுகுதல்; to become dense; to grow thick. "பால் திரண்டு விட்டது". *5.* வீங்குதல்; to form, as a tumour, a pustule; to swell up, bulge out. "புண்கட்டி திரண்டிருக் கிறது" *(வின்.). 6.* பருத்தல் *(வின்)*; to mature, as fruits; to grow to full size, as beasts, tubers.

ம. திரளுக

திரள்²(ளு)–தல் tiraḷ-, *5* செ.கு.வி. (v.i.) பெண் பருவமெய்தல்; to arrive at puberty.

ம. திரளுக

திரி¹–தல் tiri-, *2* செ.கு.வி. (v.i.) *1.* அலைதல்; to walk about, wander. "வண்டாய்த் திரிதருங் காலத்து" *(நாலடி.284). 2.* சுழலுதல்; to turn, whirl. "வலந்திரியாப் பொங்கி" *(பு.வெ.9:12). 3.* திருகுறுதல்; to be twisted, convolved. "திரிந்து மறிந்துவீழ் தாடி" *(கலித்.15). 4.* சலித்தல்; to move. "நாராசத் திரிவிற் கொள்ளத்தருவது காந்தம்" *(மணிமே. 27, 55; 6). 5.* போதல்; to proceed. *(பிங்.). 6.* வேறுபடுதல்; to change; vary. "நாஅல் வேத நெறிதிரியினும்" *(புறநா.2). 7.* எழுத்து மாறுதல்; to be substituted, as a letter by another. "தோன்ற றிரிதல் கெடுதல்" *(நன்.154). 8.* கெடுதல் *(திவா.)*; to perish. *9.* பால் தன்மை கெடுதல்; to change in quality, to become sour. *10.* மயங்குதல்; to be confused. "திரிந்தயர்ந்தகன் றோடி" *(பரிபா.3; 54).*

திரி²–தல் tiri-, *2* செ.குன்றாவி. (v.t.) கைவிடுதல்; to leave, to abandon. "இனந்திரி யேறுபோல" *(சீவக.2720).*

திரி³–த்தல் tiri-, *2* செ.குன்றாவி. (v.t.) *1.* அலையச் செய்தல்; to cause to wander. "கொடிப்புள் திரித்தால்" *(திவ். பெரியதி 1, 10;2). 2.* சுழற்றுதல்; to turn, whirl. "எஃகு வலந்திரிப்ப" *(திருமுரு. 111). 3.* முறுக்குதல்; twise. *4.* திரும்பச் செய்தல்; to cause to return. "சென்று சென்றழியுமாவி திரிக்குமால்" *(கம்பரா. மாயாசனக. 23). 5.* வேறுபடுத்துதல்; to change, alter, vary. "அறிவு திரித்து" *(மணிமே. 23; 39). 6.* மாவரைத்தல்; to grind as flour. *7.* பலதிறப்படுத்துதல்; to diversity. *8.* மொழி பெயர்த்தல்; to translate. *9.* சேதித்தல்; to break, cut, smash. "அவனுருவு திரித்திட்டோன்" *(பரிபா.5:35). 10.* எழுத்துகளை ஒற்றுமைப்பட அமைத்தல்; to repeat words and syllables in different meaning.

திரித்தல் tirittal-, *4* செ.குன்றாவி. (v.t.) துணியைக் கயிறுபோல் உருட்டல்; rolling up a piece of cloth - linen in the shape of a wick.

திரியிடு–தல் tiri-y-iḍu-, *20* செ.கு.வி. (v.i.) காது வளர்க்கத் துணித் திரி இட்டு வைத்தல்; to insert a roll of cloth in the perforation of the ear to enlarge it. "திரிபாட்டுச் சொல்லுகேன் மெய்யே" *(திவ். பெரியாழ். 2, 3, 8).*

திரியேற்று–தல் tiri-yēṟṟu-, *8* செ.கு.வி. (v.i.) *1.* புண் முதலியவற்றிற் காரச்சீலையிடுதல்; to introduce a set on into an issue or abscess. *2.* திரியிடு பார்க்க; see tiriyiḍu.

திருக்கிடு–தல் tiru-k-kiḍu-, *8* செ.குன்றாவி. (v.t.) நீள முறுக்கிடுதல்; to twist, as a long rope. "இருடிருக் கிட்டு" *(சீவக.164).*

திருக்கு–தல் tirukku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* முறுக்குதல்; to twist. *2.* ஒருவனைத் தூண்டி விடுதல்; to set on, screw up.

திருகு¹–தல் tirugu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* முறுக்குதல்; to twist, turn, wring. "யாக்கையைத் திசைமுகன் படைசென்று திருக" *(கம்பரா. பாசப். 58). 2.* பின்னுதல்; to braid, as hair. "திருகுகுழ லுமைநங்கை" *(தேவா.657, 3). 3.* பறித்தல் *(வின்.)*; to pluck, snatch, wrest away.

தெ. திருகு; *க.* திருகு

திருகு²–தல் tirugu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* முறுகுதல்; to be intense, severe. "பரிதி சினந்திருகிய கடுந்திறல் வேனில்" *(பெரும்பாண். 3). 2.* மாறுபடுதல்; to be crooked. "திருகு சிந்தையைத் தீர்த்து" *(தேவா. 338, 2).*

திருட்டுப்போ–தல் tiruṭṭu-p-pō-, *8* செ.கு.வி. (v.i.) களவுபோதல்; to be stolen. "வீட்டுக்கு வெளியில் இருந்த மிதிவண்டி திருட்டுப் போயிருக்கிறது".

திருடு–தல் tiruḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) களவாடுதல்; to steal, rob, pilfer. "பணத்தைத் திருடும்போது கையும் களவுமாகப் பிடிபட்டான்" *(செ.அக.).*

திருத்து–தல் tiruttu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* பேச்சு, எழுத்து ஆகியவற்றில் உள்ள தவறுகளை நீக்கிச் சரி செய்தல், செவ்வி தாக்குதல்; to correct, rectify, reform. "கொடிது கடிந்து கோறிருத்தி" *(புறநா.17). 2.* சீர்ப்படுத்துதல் *(வின்)*; to mend, repair, refit. *3.* மேன்மைப் படுத்துதல்; to improve, elevate. "துளங்குடி திருத்திய..... வென்றியும்" *(பதிற்றுப்.37:7). 4.* செம்மையாகச் செய்தல்; perform excellently. "மூவர்காரியமும் திருத்தும்" *(திவ். பெரியாழ்.4. 4:1). 5.* செம்மைபெற அணிதல்;

to deck oneself properly in; to dress sprucely. "பட்டாடை சாத்திப் பணிமேகலை திருத்தி" *(பிரபோத 27:19). 6. நன்கமைத்தல்;* to arrange properly. "பரிசு விளங்கப் பரிகலமுந் திருத்தி" *(பெரியபு.சிறுத்தொண்.73). வயல் பண்படுத்துதல்;* to prepare and make a land suitable for cultivation. "பூமிவெளி காணத்திருத்தி" *(தாயு. ஆனந்தமான.6). 8. மெருகிடுதல் (வின்.);* to scour and polish. *9. ஆடைதுவைத்தல்;* to clean clothes. *10. மேற்பார்த்தல்;* to supervise. "கிராமகாரியந் திருத்தும் பெருமக்கள்" (S.I.I.iii.21). *11. இலை காய் முதலியன நறுக்குதல்;* to prepare vegetables, plantain leaves, etc. by cutting them to size. *12. அழைத்தல்;* to call, summon. "திருத்தாய் செம்போத்தே" *(திவ். பெரியதி. 10:10:1). 13. உறவாக்குதல்;* to make friends, effect reconciliation. "ஒன்னார் தந்நிலை திருத்திய காதலர்" *(பு.வெ.10, முல்லைப். 3, கொளூ.).*

திருந்து–தல் tirundu-, *5. செ.கு.வி.* (v.i.) *1. செவ்விதாதல்;* to be correct, perfect. "திருந்து வேதமும்" *(திவ். திருவாய். 6.5.8). 2. சீர்ப்படுதல்;* to be amended, improved, reformed, as a person, to be settled, as hand-writing, to be trained, as the tongue of a child. அவன் இப்போது திருந்திவிட்டான். *3. புதிதாக்கப்படுதல் (வின்.);* to be repaired, renovated. *4. பண்படுத்தப்படுதல் (உ.வ.);* to be improved, as land, soil, situation. *5. பயிற்சி மிகுதல் (வின்.);* to be disciplined, as the mind; to be educated, cultivated, experienced, proficient. *6. தொழில் முற்றுதல்;* to be finished artistically. "திருந்தெயிற் குடபால்" *(மணிமே. 6:22). 7. அழகு பெறுதல்;* to be beautiful elegant. "திருந்து சேவடி பணிந்தனன்" *(தணிகைப்பு. சீபரி.451). 8. மேன்மையாதல்;* to be worthy, honourable. "திருந்திய தியாதது செய்து தீர்தும்" *(கம்பரா. சம்பாதி.5).*

க. திந்து

திருப்பணி–த்தல் tiru-p-paṇi-, *4 செ.கு.வி.* (v.i.) *யானையை நிற்கப் பண்ணுதல் (யாழ்.அக.);* to make an elephant stand.

திருப்பு–தல் tiruppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. திரும்பச் செய்தல்;* to cause to return to send back. அக்கூட்டத்தைத் திருப்பினான். *2. இருக்கும் அல்லது செல்லும் திசையிலிருந்து மாற்றுதல்;* to turn, deflect, cause to turn in a different direction. கயவர் குணமட்டுந் திருப்பவசமோ *(குமரே.சத.39). 3. முறுக்குதல்;* to twist, wring, distort, as a limb. அவன் கையைத் திருப்பினான். *4. மொழி பெயர்த்தல்;* to translate, render into another language. திருக்குறளைப் பல மொழிகளில் திருப்பியிருக்கிறார்கள். *5. பாடத்தை மறுமுறை ஓதுதல் அல்லது ஓதுவித்தல்;* to revise, as a lesson. இரண்டாம் முறையாகப் பாடத்தைத் திருப்புகிறார். *6. கவிழ்த்தல்;* to turn upside down, invert. *7. மணிப்பொறிக்குத் திருகு கொடுத்தல்;* to wind up a clock or watch. கடிகாரத்தைத் திருப்பினான் *(இ.வ.). 8. மீட்டல்;* to redeem, as a mortgage. ஒற்றியைத் திருப்பினான். *9. திருப்பிக் கொடுத்தல்;* to give back, return, restore. சரக்கைத் திருப்பிவிட்டான். *10. விதிர்த்தல்;* to shake, revolve. "திருப்புறு சூலத்தினோன்" *(திருக்கோ.315). 11. நோய் முதலியன தணித்தல்;* to cure a disease; to avert a calamity by magic. "கொடிய பல விட நோய்களியாவு..... கொடுத்துத் திருப்பி விடலாம்" *(குமரே.சத.39). 12. செய்வினையைத் திரும்பச் செலுத்துதல்;* to sent back an evil spirit against one who sent it, by counter magic. *13. ஏட்டின் பக்கத்தைத் தள்ளுதல்;* to turn over; as the leaves of a book. "ஆடை திருத்தி நின்றாள் அவன் ஆயிரம் ஏடு திருப்புகின்றான்" *(பாரதிதாசன்).*

திருப்பூட்டு–தல் tiru-p-pūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.i.) *1. மணமகள் கழுத்தில் தாலி கட்டுதல்;* to tie the tāli round the neck of a bride. நுஞ்சுற்றத்தார் முன்னம் நீ திருப்பூட்டியது *(தஞ்சைவா. 359, உரை).*

திரும்பு–தல் tirumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. புறப்பட்ட இடத்திற்கோ பழைய நிலைக்கோ வருதல் அல்லது மீளுதல்;* to turn, turn back, return. *2. மாறுதல்;* to be changed as the mind. *3. விலகுதல்;* to be averted, as an evil; to abate as a disease. *4. கதிரவன் சாய்தல்;* to decline as the Sun. *5. வளைதல்;* to turn, as an angle; to bend as a road or river; to be refracted, as light.

க. திருகு; ம. திரும்புக

திருமு[1]–தல் tirumu-, *5 செ.கு.வி.* (v.i.) *திரும்புதல்;* to turn, return, go back. "ஓடித் திருமி" *(கம்பரா. மாரீச. 136).*

திருமு[2]–தல் tirumu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நன்றாகத் தேய்த்தல்;* to rub hard. "விளக்கைச் சாம்பலால் திருமு" *(நாஞ்.).*

திருமெழுகு–தல் tiru-meḻugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கோயிலிடத்தைச் சாணத்தால் மெழுகித் தூய்மை செய்தல்;* to cleanse the temple-floor. *(செ.அக.).*

திருவாய்மலர்–தல் tiru-vāy-malar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *மதிப்பு மிக்கவர், பெரியோர் பேசுதல்;* to utter, declare, speak, used in reference to great person. *(செ.அக.).*

திருவுளம்பற்று–தல் tiru-v-uḷam-paṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஏற்றுக் கொள்ளுதல்;* to accept graciously. *2. கேட்க மனங்கொள்ளுதல் (சீவக. 430, உரை);* to be pleased to hear. *3. உட்கருத்துக் கொள்ளுதல்;* to consider to tent. *4. பணிந்து சொல்லுதல் (ர);* to be pleased to speak; as a deity, to speak. *(செ.அக.).*

திருவுளம்வை–த்தல் tiru-v-uḷam-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அருளுதல்;* to bestow, vouchsafe, grace, as a deity or guru. *2. விருப்பங்கொள்ளுதல்;* to conceive desire, said of a great person. *(செ.அக.).*

திருவேள்–தல் (திருவேட்டல்) tiruvēḷ-, *16 செ.கு.வி.* (v.i.) *திருமணம் புரிதல்;* to marry. "தென்னவர் கோன் மகனாரைத் திருவேட்டு" *(பெரியபு. சேரமான்.92).*

திரை[1]–தல் tirai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அகவை (வயது) முதிர்வால் தோல் திரங்குதல்;* to become wrinkled, as skin

by age. "தோறிரை செம்முக வெங்க ணோக்கின்" *(சீவக.431). 2. சுருங்குதல்;* to be wrinkled, creased, as cloth, as a flag in the wind. *ஆடை திரைந்து விட்டது. 3. அலை எழுதல்;* to roll as waves; to heave up, as the sea; to break in ripples. *4. மிதந்தாடுதல்;* to float in water, as a vessel. "கார்த்தரங்கம் திரை தோணி" *(திருக்கோ.187). 5. திரிதல்;* to coagulate, form into clots, as milk. *பால் திரைந்துவிட்டது. 6. திரளுதல்;* to be drifted by the wind into heaps as seaweed; to gather, bees round a flower. "சில்லம் போதின்மேற்றிரைந் தேறுலாம்" *(சீவக. 413). 7. ஆடைநூல் இழை விலகுதல்;* to be threadbare. *8. மெதுவாதல் (வின்.);* to become smooth, as an earthen vessel turned by a potter.

திரை[2]–த்தல் tirai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அலையெழுதல்;* to roll or rise as waves. "திரைத்தெழுந்து..... வீழ்வ தேய்க்கு மறிகடலே" *(கம்பரா. கடல்காண்.9).*

திரை[3]–த்தல் tirai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. சுருங்குதல்;* to gather up, contract, close, as the mouth of a suck. *2. தன்னுளடக்குதல்;* to cover, contain. "நிலந்திரைக்குங் கடற்றானை" *(புறநா.97). 3. ஆடை கொய்தல்;* to plait the ends of a cloth, as in dressing. "கலிங்கந் தாண்மேற் திரைத் துடுத்து" *(சூளா. கல்யா. 16). 4. ஒதுக்குதல்;* to tuck up, as one's cloth; to cause to gather, as moss or scum on the water. "நீரிற் சீலையைத் திரைத்துக் கொண்டான்". *5. அணைத்தல்;* to hug, strain. "மாயக் குழவி யெடுத்து மடித்திரைத்து" *(சிலப்.9,27).*

திரை[4]–த்தல் tirai-, *11 செ.கு.வி.* (v.i.) *படுத்தல்;* to lie, as in bed. "திரைப்ப மெல்லணை செய்வ விழுத்தலம்" *(நீலகேசி.251).*

திவள்(ளு)[1]–தல் tival-, *2 செ.கு.வி.* (v.i.) *1. துவளுதல்;* to stagger, bend, as when unable to support a weight; to be supple or yielding. "திவளவன்னங்க டிருநன்ட காட்டுவ" *(கம்பரா. பம்பை. 18). 2. வாடுதல்;* to fade, wither. "அனங்க னெய்யக் குழைந்ததார் திவண்ட தன்றே" *(சீவக.2062). 3. கிடந்தசைதல்;* to move, as on the ground; to swing. "குண்டலமும்..... மணித்தொத்து நிலந்திவள" *(சீவக.3022). 4. விளங்குதல்;* to shine. "திவளும் வெண் மதிப்போல்" *(திவ்.பெரியதி.2, 7, 1). 5. நீர்நிலை முதலியவற்றிலே திளைத்தல்;* to sport, as in water. "தன்மதந் திவண்ட வண்டு" *(சீவக.2313).*

திவள்(ளு)[2]–தல் tival-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தொடுதல் (பிங்.);* to touch. *2. தீண்டி இன்புறுத்தல்;* to gladden by touch. "திவண்டன..... பூந்தழையே" *(திருக்கோ. 200, உரை).*

திவறு–தல் tivaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *சாதல் (சூடா.);* to die.

திளை[1]–த்தல் tiḷai-, *11 செ.கு.வி.* (v.i.) *1. நெருங்குதல் (சூடா.);* to be close, crowded. "பன்மயிர் திளைத்திடில்" *(காசிக. மகளிர்.8). 2. நிறைதல் (சூடா.);* to be full; to abound, as water in a river. *3. அசைதல்;* to swing to and fro; to move. "தாமம் புறந்திளைப்ப" *(பு.வெ.1, 21). 4. விளையாடுதல்;* to play, disport. "எகினந் துணையொடு திளைக்கும்" *(அகநா.34, 13). 5. முழுகுதல்;* to dive, to sort in water. "திளைக்குந் தீர்த்த மறாத" *(தேவா.533,2). 6. இடைவிடாதொழுகுதல்;* to flow, fall unceasingly. "தேனு மமிழ்துந் திளைத்தாங்கு" *(சீவக.519). 7. தொழிலில் இடைவிடாது பயிலுதல்;* to practise constantly. "மட்டு வாக்கலிற்றிளைத் தவர்" *(சீவக.50). 8. மகிழ்தல்;* to rejoice. "மடந்தையர் சிந்தை திளைப்பன வாகாதே" *(திருவாச.49, 8). 9. பொருதல்;* to fight. "ஈரெண்மர் திளைத்து வீழ்ந்தார்" *(சீவக. 3076).*

திளை[2]–த்தல் tiḷai-, *8 செ.குன்றாவி.* (v.t.) *துய்த்தல்;* to experience, enjoy, copulate with. "கன்னி நாரையைத் திளைத்தலின்" *(சீவக.50).*

திளை[3]–த்தல் tilai-, *8 செ.குன்றாவி.* (v.t.) *கொதிக்கக் காய்ச்சுதல் (நாஞ்.);* to boil.

திளை[4]–த்தல் tiḷai-, *8 செ.குன்றாவி.* (v.t.) *துளைத்தல் (சூடா.);* perforate, bore.

திற[1]–த்தல் tiṟa-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. கதவு முதலியவற்றின் காப்பு நீக்குதல்;* to open, as a door, one's eyes. "துயில்கூர் நயனக் கடை திறவா மடவீர் கடைதிறமின்" *(கலிங்.29). 2. வழி முதலியவற்றின் அடைப்பு நீக்குதல்;* to lay open; to make an opening, evenue or passage, as in a wall. "பாதையைத் திறந்துவிட்டார்கள்". *3. வெளிப்படுத்துதல்;* to divulge, disclose, unveil, reveal, as a searet. "அவன் குட்டைத் திறந்து விட்டான்". *4. தாள், பூட்டு முதலியவற்றைத் திறத்தல்;* to unlock, unbar, unbolt. *5. துளைத்தல்;* to make a breach; to bore. "இளநீரின் கண்ணைத் திறந்தான்". *6. பிளத்தல்;* to cut open. "திறந்தன புண்களெல்லாம்" *(கம்பரா.மாயாசனக.56). 7. நூல் முதலியவற்றை விரித்தல்;* to open as a book.

திற[2]–த்தல் tiṟa-, *2 செ.கு.வி.* (v.i.) *பிளவுபடுதல்;* to split open; to form a gap passage or breach. "தடியடியால் தலை திறந்தது" *(செ.அக.).*

திறக்கு–தல் tirakku-, *5 செ.கு.வி.* (v.i.) *மீதுறல் (யாழ்.அக.);* to be increased.

திறந்துபேசு–தல் tiṟantu-pēcu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *மனத்தை விட்டுச் சொல்லுதல்;* to speak, frankly or openly. *(செ.அக.)*

திறப்படு[1]–தல் tiṟa-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *கூறுபடுதல்;* to be formed into divisions; to be arrayed; to be classified. "வந்தடை பிணிசெய் காலாட் டிறப்படப் பண்ணி" *(சீவக.3075).*

திறப்படு[2]–தல் tiṟa-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *சீர்படுதல்;* to improve, as soil, health, strength, knowledge; to be prosperous. "வாழ்க்கை திறம்பட" *(ஞானா. பாயி.5, 10).*

திறப்பி–த்தல் tiṟappi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *உறுதிப்படுதல்;*

to make firm, harder, consolidate. *(செ.அக.).*

திறபடு–தல் tiṟa-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. திறக்கப்படுதல்;* to be opened. *2. வெளியாதல்;* to be disclosed, revealed.

திறம்பு¹–தல் tiṟambu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மாறுபடுதல்;* to change; to be over-turned; to be sub-verted. "நியாயமே திறம்பினும்" *(கம்பரா. மந்தரை.66). 2. நரம்பு முதலியன பிறழ்தல்;* to be sprain.

திறம்பு²–தல் tiṟambu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தவறுதல்;* to swerve from, from deviate.

திறவறி–தல் tiṟa-v-aṟi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வழி வகையறிதல்;* to know ways and means. *2. மந்தணத்தை வெளியிடுந் தகுதியறிதல்;* to know how to disclose secret things. *3. பட்டறிவெய்தல்;* to be experienced.

தின்(னு)–தல் tiṉ-, *13 செ.குன்றாவி.* (v.t.) *1. உண்ணுதல்;* to eat, feed. "இரும்பே ரொக்கலொடு தின்மென" *(புறநா.150). 2. மெல்லுதல்;* to chew. "உண்ணுஞ் சோறும் பருகுநீருந் தின்னும் வெற்றிலையும்" *(திவ். திருவாய்.6, 7). 3. கடித்தல்;* to bite, gnash, as one's teeth. "தின்ற வாயை விழிவழித் தீயுக" *(கம்பரா. ஒற்றுக்.45). 4. அரித்தல்;* to eat away as white ants to consume, corrode. மரத்தைக் கறையான் தின்றுவிட்டது. *5. வருத்துதல்;* to afflict, distress. "பிணிதன்னைத் தின்னுங்காள்" *(திரிகடு.88). 6. அழித்தல்;* to destroy, ruin. *7. அராவுதல்;* to file. "அரந்தின்ற கூர்வேல்" *(கம்பரா. சம்புமா.6). 8. வெட்டுதல்;* to cut. "கோணந் தின்ற வடுவாழ் முகத்த" *(மதுரைக்.597). 9. அரித்தல்;* to cause irritating sensation, as in the skin. "தின்றுவிடுஞ் சொறிந்தாற் போல" *(திவ். திருவாய்.4, 8, 9, பன்னீ.). 10. பெறுதல்;* to undergo, receive. "கானகம் போய்க்குமை தின்பார்கள்" *(திவ். திருவாய்.4, 112).*

Ô

தீ¹–தல் tī-, *4 செ.கு.வி.* (v.i.) *1. எரிந்து போதல்;* to be burnt. *2. பயிர் முதலியன கருகுதல்;* to be withered or blighted, as growing crops in times of drought. *3. சோறு முதலியன காந்துதல்;* to be charred or burnt, as food in cooking. *4. சீற்றங்கொள்ளுதல்;* to be hot with anger; to be inflammed. *5. அழிதல்;* to perish; to be ruined. "வினையாவுந் தீவதுசெய்யும்" *(இரகு அயனுதய. 32).*

க. சீ.

தீ²–தல் tī-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. காந்த வைத்தல்;* to allow food to be charred in cooking; to burn. *2. காயச் செய்தல்;* to dry up water, as the sun; to cause tumours to be absorbed in the body by means of external application; to boil and dry fish so that it may keep. *3. பயிர் முதலியன கருகச் செய்தல்;* to cause to wither, an growing crops. *4. சுடுதல்;* to scar, cauterise.

தீக்கடை–தல் tī-k-kaḍal-, *2 செ.கு.வி.* (v.i.) *கடைந்து நெருப்பு உண்டாக்குவது;* to produce fire by fire drill. "தீக்கடைந்து வைத்தேன்" *(பெரியபு. விண்ணம்.415).*

தீக்காய்–தல் tī-k-kāy-, *2 செ.கு.வி.* (v.i.) *குளிர் காய்தல்;* to warm oneself at the fire. "அகலா தணுகாது தீக்காய்வார் போல்க" *(குறள்.691).*

தீக்கி–த்தல் tīkki-, *11 செ.கு.வி.* (v.i.) *சூளுரைத்தல் (வின்.);* to take a vow. "பின்னதன் வழியே யொழுகினர் தீக்கித்து" *(திருக்காளதபு.29-23).*

தீக்கு–தல் tīkku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தீயும்படி செய்தல்;* scorching. *(சா.அக.)*

தீக்குளி–த்தல் tī-k-kuḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *உடம்பில் தீயிட்டுக் கொள்ளுதல்;* to plunge into flames, as in an ordeal. இந்தி ஒழிக, தமிழ்வாழ்கவென்று முழக்கமிட்டுக் கொண்டே அரங்கநாதன் தீக்குளித்தார் *(உ.வ.).*

தீட்டா–தல் tīṭṭā-, *6 செ.கு.வி.* (v.i.) *1. தூய்மையின்மை அடைதல்;* to be defiled, polluted. *2. மாத விடாயாதல்;* to be in one's periods, as a woman. *(செ.அக.).*

தீட்டிப்பார்–த்தல் tīṭṭi-p-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கல்வி முதலியவற்றை ஆய்வு செய்தல்;* to test, as one's learning by question *(செ.அக.).*

தீட்டு¹–தல் tīṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கூராக்குதல்;* to whet, as a weapon; to sharpen or rub lenies on a board. "தீட்டு மிலைவலி வேலண்ணலே" *(வெங்கைக்கோ.232). 2. துலக்குதல்;* to purify, polish. *3. அரிசி குத்தித் தூய்மை செய்தல்;* to remove bran and polish, as rice by pounding. *4. பூசுதல்;* to rub; smear, anoint. "தீட்டினார் நறுஞ் சாந்தமும்" *(சூளா. தூது.41). 5. கோதுதல்;* to smooth, as the hair. "கூந்த றீட்டி" *(புறநா.62). 6. எழுதுதல் (பிங்.);* to write inscribe. "தொண்டையுந் தீட்டி" *(திருக்கோ.79). 7. சித்திரித்தல்;* to paint, draw pictures. "உருவமெய்த் தோன்றத் துட்டிரும் பலகையிற் றிருத்தி" *(பெருங். உஞ்சைக்.33, 112). 8. சொல்லுதல்;* to express. "தெவ்வ ரம்பனைய சொல் தீட்டினான்" *(கம்பரா. நகர்நீங். 1677). 9. அடித்தல்;* to belabour, thrash. அவனை நன்றாய்த் தீட்டினான் *(செ.அக.).*

தீட்டு²–தல் tīṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *சாத்துதல்;* to wear. "எழின்முடி தீட்டினானே" *(சீவக.2641).*

தீண்டு–தல் tīṇḍu-, *5 செ.கு.வி.* (v.t.) *தொடுதல்;* to touch, feel, come in contact with. "எங்கோலந் தீண்ட லினி" *(பு.வெ.9, 50). 2. தீட்டுப்படுத்துதல்;* to pollute by contact; to defile, contaminate by touching. *3. பாம்பு முதலியன அடித்தல்;* to infuse poison, envenom, as a snake by biting. *4. பற்றுதல்;* to catch, seize, hold of. "தீப்பிணி தீண்ட லரிது" *(குறள்.227). 5. அடித்தல்;* to beat. "கொம்பன் வீயுகத் தீண்டி" *(அகநா.21).*

தீப்படு–தல் tī-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. நெருப்புப் பற்றுதல்;* to catch fire. *2. இறத்தல்;* to die, a term used in reference

to kings. *தீப்பட்டுப்போன மாமன்னர்!*

தெ. தீப்படுக

தீப்பற்று–தல் tī-p-paṟṟu-, *6 செ.கு.வி.* (v.i.) *நெருப்புப் பற்றுதல்;* to catch fire, as a house. *வீடு தீப்பற்றியது.*

தீப்பற–த்தல் tī-p-paṟa-, *2 செ.கு.வி.* (v.i.) *1. பரபரப்பாய் நடத்தல்;* to proses in full vigour. *2. கடுமையாதல்;* to be oppressive as the rule of a martinet.

தீப்போடு–தல் tīppōdu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *நெருப்பிற் சுடுதல்;* to burn.

தீமடு–த்தல் tī-maḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெருப்பு மூட்டுதல்;* to kindle fire. "*கொலைஞ ருலையேற்றித் தீ மடுப்ப*" *(நாலடி.331). 2. நெருப்பிலிடுதல்;* to throw into the fire.

தீமூட்டு–தல் tī-mūṭṭu-, *செ.கு.வி.* (v.i.) *1. தீயுண்டாக்குதல்;* to kindle fire. *2 கலகமூட்டுதல்;* to stir up a quarrel.

தீய்–தல் tīy-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தீ பார்க்க;* see ti. *2. பயனற்றுப் போதல்; மின்கலம் தீய்ந்து விட்டது.*

தீயல்வழி–த்தல் tīyal-vaḻi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வறுமை அல்லது கஞ்சத்தால் சட்டி சுரண்டிக் காந்தலுணவைத் தின்னுதல்;* to scrape off and eat the burnt part of that which adheres to the pot, either from meanness or poverty*(வின்.).*

தீர்–தல் tīr-, *4 செ.குவி.* (v.i.) *1. உள்ளதொழிதல்;* to end, expire. *2. முற்றுப் பெறுதல்;* to be completed. *3. நீங்குதல்;* to leave, to separate. "*திருவினைத் தீராமை யார்க்குங் கயிறு*" *(குறள்.482). 4. போதல்;* to go. *5. இல்லையாதல் (பிங்.);* to be absent. "*பாய்ந்தூதிப் படர் தீர்ந்து*" *(கலித்.66). 6. அழிதல்;* to die. "*சென்று தீர்வன வெனைப் பல கோடியுஞ் சிந்தி*" *(கம்பரா.முதற்போர். 238). 7. கழிதல்;* to pass, to be spent. "*சில தினங்க ளீர்ந்துழி*" *(கம்பரா. திருவவ.43). 8. செலவாய்ப் போதல்;* to be exhausted. "*கைப்பணமெல்லாம் தீர்ந்தது*". *9. உரிமையாதல்;* to belong absolutely. "*திருமகட்கே தீர்ந்தவாறென் கொல்*" *(திவ். இயற். 1, 42). 10. நிச்சயித்தல்;* to determined, decided. "*தீர்ந்த வடியவர் தம்மை*" *(திவ். திருவாய். 3,5,11). 11. தீர்மானமாதல்;* to be settled. "*வழக்குத் தீர்ந்துவிட்டது*". *12. பட்டறிவு;* experience. "*தீர்ந்த கணக்கன்*". *13. நீளமாதல்;* extended. *(சூடா.). 14. முதிர்தல்;* to become ripe. *தீர்[2]-தல்* tīr-, செ.குன்றா.வி (v.t.) *1. விடுதல்;* to leave. "*தீர்தலுந் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்*" *(தொல். சொல். 318). 2. சாணை யிடுதல்;* to polish, clean. *(வின்.). 3. வகுத்தல்;* to divide. "*மூன்று பேருக்கு ஒன்றைத் தீரு*". *4. விள்ளுதல்;* to solve. *5. வரிபோடுதல்;* as tax, to assess. *6. சாயமிடுதல்;* to dye, imbue with colour. *7. துணைவினை;* an auxiliary verb. "*தாமரைக் கண்கட் கற்றுத் தீர்ந்தும்*" *(திவ். தி ருவாய்.7, 3, 3).*

தீர்[3]–த்தல் tīr-, *11 செ.குன்றாவி.* (v.i.) *1. விடுதல்;* to leave, quit. "*தீர்தலுந் தீர்த்தலும்விடற் பொருட் டாகும்*" *(தொல். சொல். 318). 2. முடித்தல்;* to finish, complete. "*அவன் விசையந் தீர்த்தானென வுவந்தாடினர்*" *(கம்பரா. முதற்போர்.178). 3. அழித்தல்;* to distroy. "*ஒரு பகலே தீர்ப்பான் படை தொடுப்போன்*" *(கம்பரா. நீடும். 149). 4. கொல்லுதல்;* to kill. *5. நன்றாகப் புடைத்தல்;* to beat severely. *6. போக்குதல்;* to remove, cure. "*கருங்கா லொட்டகத் தல்குபசி தீர்க்கும்*" *(அகநா.245). 7. கடன் முதலியன ஒழித்தல்;* to clear off, pay off, as debt. *8. ஒருவன்தான் திருமணஞ் செய்து கொண்டவளை விலக்கி விடுதல்;* to divorce. *9. வழக்கு முதலியன தீர்மானித்தல்;* to settle, decide, as dispute.

தீர்மானி–த்தல் tīrmāṉi-, *4 செ.குன்றாவி.* (v.i.) *1. உறுதி செய்தல்;* to determine. *2. முடித்தல்;* finish, settle. *3. தாளந்தீர்த்தல்;* to bring a tālam performance to a close.

தீர்வையிடு–தல் tīrvai-y-iḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. தீர்மானித்தல்;* to settle, decide. "*தீராக் கருவழக்கைத் தீர்வையிட்டு*" *(தாயு.வைங்கிளி.29). 2. முடிவுசெய்தல்;* to end.

தீர்வையெடு–த்தல் tīrvai-y-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வரி வாங்குதல்;* to levy or collect duty. *2. தீர்ப்பு நகலெடுத்தல்;* to obtain copy of a decree from court.

தீவிழித்தல் tī-viḻi-, *4 செ.கு.வி.* (n.) *கோபத்துடன் பார்த்தல்;* to look with fire-red eyes, as in anger. "*தீவிழத்து மேற்சென்ற வேழம்*" *(சீவக.783).*

தீவேள்–தல் (தீவேட்டல்) tī-vēl-, *6 செ.கு.வி.* (n.) *1. வேள்வி செய்தல்;* to perform vēdic sacrifice. "*செந்தீவேட்டு..... புரிகடை புலர்த்துவோனே*" *(புறநா.251). 2. மணம் புரிதல்;* to marry. "*பெண்டிருவை யுலகறியத் தீவேட்டான்*" *(திருவாச.12, 13).*

தீற்றிப்போடு–தல் tīṟṟi-p-pōḍu-, *20 செ.கு.வி.* (n.) *கமுக்கமாக அறிவுரை செய்தல்;* to give advice in secret.

J

து–த்தல் tu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உண்ணுதல்;* to eat, used generally in negative forms. "*துவ்வளவா*" *(நன்.157, உரை).*

துக–த்தல் tuka-, *4 செ.கு.வி.* (v.i.) *கசத்தல் (இல.அக.);* to be bitter.

துகின்முடி–த்தல் tugiṉ-muḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *தலைப்பாகை கட்டுதல்;* to tie a turban on the head. "*துகின் முடித்துப் போர்த்த..... பெருமூதாளர்*" *(முல்லைப்.53).*

துகு[1]–தல் tugu-, *5 செ.கு.வி.* (v.i.) *தொகுதியாதல்;* to be gathered in a mass, as the hair. "*சலந்துக்க சென்னிச் சடையான் கண்டாய்*" *(தேவா.844, 3).*

துகு[2]–த்தல் tugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தொகுதியாக்குதல்;*

to bring together, gather in a mass, as hair. "அவிழ்ந்த புரிசடை துகுக்கும்" (திருவிசை. கருவூ.7, 3).

துகை[1]–த்தல் tugai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. மிதித்துழக்குதல்; to tread down, trample on, bruise or destroy by treading. "துன்றுகடி காவினை யடிக்கொடு துகைத்தான்" (கம்பரா.பொழிலிறுத்.8). 2. இடித்தல்; to pound in a mortar; to mash. 3. வருத்துதல்; to vex. "துன்பத்தாற் றுகைக்கப் பட்டார் துகைத்தவத் துன்பந் தாங்கி" (சீவக.1392).

துகை[2]–த்தல் tugai, 4 செ.கு.வி. (v.i.) உலவுதல்; to roam about; to walk. "வாமனா றுகைக்கும் திருவாயில்" (மருதூரந்.12).

துஞ்சரி–த்தல் tuñjari-, 4 செ.கு.வி. (v.i.) கண்விழித்தல்; to wake up. "வஞ்சிக் கொம்பரிற் றுஞ்சரித் துளரி யொளிமயிர்கலாபம் பரப்பி" (பெருங். உஞ்சைக்.40, 118).

துஞ்சு[1]–தல் tuñju-, 5 செ.கு.வி.(v.i.) 1. தூங்குதல்; to sleep, slumber, doze. "நெருப்பினுட் டுஞ்சலு மாகும்" (குறள்.1049). 2. தொழிலின்றியிருத்தல்; to rest without work. "உலகு தொழிலுலந்து நாஞ்சி றுஞ்சி" (அகநா.14:1). 3. சோம்புதல்; sluggish. "நீ துஞ்சாய் மாறே" (புறநா.22, 38). 4. சோர்தல்; to droop. "பயிர் துஞ்சிப் போயிற்று". 5. இறத்தல்; to die. "நிலமிசைத் துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப் பட்டாரல்லால்" (நாலடி.21). 6. வலியழிதல்; to perish. "துஞ்சும் பிணியாயின தானே" (தேவா.494:4). 7. குறைதல்; decrease. "பெருமலை துஞ்சாது வளஞ்சுரக் கெனவே" (சிலப். குன்றக்குரவை.). 8. தங்குதல்; stay. "புலிதுஞ்சு வியன்புலத் தற்றே" (புறநா.54). 9. நிலைபெறுதல்; to settle permanently, endure. " துஞ்சு நீணீதியது" (சூளா.நாட்.1). 10. தொங்குதல்; to hang. "துஞ்சுகுழல்" (பு.வெ.9, 35, உரை).

ம. துஞ்சுக

துஞ்சு[2]–தல் tuñju-, 5 செ.கு.வி. (v.i.) நெய் முதலியன கட்டியாக உறைதல்; to become solidified, as ghee. "துஞ்சிய நெய்யும் காய்ந்த பாலும்" (திவ். பெரியாழ். 2, 1, 6, வ்யா, பக்.228).

துட்கு–தல் tuṭku-, 5 செ.கு.வி. (v.i.) அச்சங்கொள்ளுதல்; to be alarmed, struck with fear or dismay. "கடற்றுட்கப் பொரும்வேலர்" (திருப்பு.423).

துடக்கு[1]–தல் tuḍakku-, 5 செ.குன்றாவி. (v.i.) 1. கட்டுதல்; to tie, bind. "நெடுங்கொடி யருவி யாம்ப லகலடை துடக்கி" (அகநா.96). 2. அகப் படுத்துதல்; toentangle, inveigle. "தூண்டிலா விட்டுத் துடக்கி" (கலித்.85). 3. தொடர்ப் படுத்துதல்; to bring together. "குடரோடு துடக்கி முடக்கியிட" (தேவா.945:1).

க. தொட

துடக்கு[2]–தல் tuḍakku-, 5 செ.குன்றாவி.(v.i.) தொடங்குதல் (யாழ்.அக.); to begin.

க. தொடகு

துடங்கு–தல் tuḍaṅgu-, 5 செ.குன்றாவி. (v.i.) தொடங்கு; to begin.

ம. துடங்ஙுக.

துடி[1]–த்தல் tuḍi-, 4 செ.கு.வி.(v.i.) 1. படபடவெனச் சலித்தல்; to quiver, tremble. "வாய்திறந் தம்பவளந் துடிப்பப் பாடுமின்" (திருவாச.9, 11). 2. மனம் பதைத்தல்; to be in a great flurry or agitation. "துணுக்கத்தாற் துடிக்கின் றாரும்" (கம்பரா. நீர் விளையாட்டு.11). 3. பரபரத்தல்; to be eager. "அவன் அங்கே போகத் துடிக்கிறான்". 4. பசி முதலியவற்றால் மிக வருந்துதல்; to sufferacutely, as from the gnawings of hunger. "பசியால் துடிக்கிறான்". 5. துடுக்காதல்; to be rude, roguish. 6. மின்னுதல்; to shine, glitter.

துடி துடி[2]–த்தல் tuḍi-tuḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. மனம் பதைபதைத்தல்; to be in a great flurry. 2. கடுகடுத்தல்; to fret and fume. "எதிருறத் துடிதுடித் தெரிவிழித் துணை சிவத்து" (9 பிரபோத.26, 21).

துடும்பு–தல் tuḍumpu-, 5 செ.கு.வி. (v.i.) 1. ததும்புதல்; to have and flow, as sea-water. "துடும்பல் வேலை துளங்கிய திலையால்" (கம்பரா.சேதுபந்தன்.59). 2. கூடுதல்; to combine, come to gether. "வன்னியு மந்தமுந் துடும்பல் செய் சடை" (தேவா.277, 6).

துடை–த்தல் tuḍai-t-tai-, 4 செ.குன்றா.வி. (n.) 1. தடவி நீக்குதல்; to wipe. "வான் றுடைக்கும் வகைய போல" (புறநா.38). 2. பெருக்கித்தள்ளுதல்; to sweep, brush. "தூளி..... ஆர்ப்பது துடைப்பது போன்ற" (கம்பரா. கும்பகருணன்.101). 3. துவட்டுதல்; to dry by wiping, as wet hair. தலையை ஈரம் போகத் துடை. 4. ஒப்பமிடுதல்; to polish. "நன் பொன் மணியுறீஇப் பேணித் துடைத்தன்ன" (கலித்.117). 5. தீற்றுதல்; to rub, apply. "சோரியை வாரியைத் துடைத்தார்" (கம்பரா. அதிகாயன்.238). 6. நீக்குதல்; to remove, dispel, to expexl dismiss. "தண்கேளிர் துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (குறள்.615). 7. அழித்தல்; to ruin, destroy. "படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி" (திருவாச.4, 100). 8. கொல்லுதல்; to hill. "துடைத்த காலன்றனை" (ஞானவா. சுக்கி, 18). 9. கைவிடுதல்; to relinguish, desert. 10. காலியாக்குதல்; to exhaust.

தெ. துருட்சு; க. தொடெ; ம. துடெக்க.

துண்டி[1]–த்தல் tuṇḍi-, 11 செ.குன்றாவி. (v.t.) 1.வெட்டுதல்; to cut, server. "இருபதமு மழுவாற் றுண்டித்து" (சேதுபு. கடவு. 12). 2. கிழித்தல் (வின்.); to tear up. 3. பிரித்தல்; to divide, separate. "அவனை அக்கூட்டத்தினின்று துண்டித்து விட்டார்". 4. சுருக்கிப் பேசுதல்; to cut short one's words, speak in few words. "அவன் துண்டித்துப் பேசுகிறான்" (வின்.). 5. மறுத்தல் (வின்.); to dispute, disprove. 6. கண்டித்தல்; to rebuke sharly.

துண்டி[2]–த்தல் tuṇḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1.வெட்டுண்ணுதல்;

to be cut off, detached, broken. *2. கடித்தபுண் வீங்குதல்;* to swell, as the skin from a bite. *3. கண்டிப்பாதல்;* to be strict. "துண்டித்துக் கேட்டான்".

துண்டுவிழு–தல் tuṇḍu-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வேண்டிய அளவுக்கு மேல் மிச்சப்பகுதி அமைதல்;* to have a piece left over after a material has been cut into pieces or required length, as a cloth. "வேட்டி துண்டு விழுந்தது". *2. வேண்டிய அளவுக்குக் குறைபடுதல்;* to be deficient. "கொடுக்கவேண்டிய பணத்துக்கு பத்துரூபா துண்டு விழுகிறது". *3. இழப்பாதல்;* to end in loss, as trade.

துணதுணை–த்தல் tuṇa-tuṇa-, *11 செ.கு.வி.* (v.i.) இடைவிடாது பேசித் தொந்தரவு செய்தல்; to worry with ceaseless talk. *(கொ.வ.).*

துணர்³–த்தல் tuṇar-, *11 செ.கு.வி.* (v.i.) கொத்துடையதாதல்; to cluster, as flowers. "துணர்த்த பூந்தொடையலான்" *(கம்பரா. வேள்வி.53).*

துணி¹–தல் tuṇi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வெட்டுண்ணுதல்;* to be sundered, cut, severed. "இருடுணிந் தன்ன குவவுமயிர்க் குருளை" *(அகநா.201). 2. நீங்குதல்;* to be removed. "இன்றே துணிந்ததென் வினைத் தொடர்பு" *(கம்பரா.கையடை.5). 3. கிழிதல்;* to be torn. "ஆடையுந் துணிந்த கீரையாக்கியே" *(திருவாத. பு. மண்சும. 29). 4. தெளிவாதல்;* to become clear. "துணி நீர் மெல்லவல்" *(மதுரைக்.283). 5. துணிவு கொள்ளல்;* to dare, venture. "அவன் இப்போது துணிந்து பேசுகிறான்".

துணி²–தல் tuṇi-, *2 செ.குன்றாவி.* (v.tr.) *1. உறுதி செய்தல்;* to resolve, determine, ascertain; to conclude. "அருஞ்சுரந் துணிந்து பிறளாயினள்" *(அகநா.35). 2. தொடங்குதல்;* to commence. "எண்ணித் துணிக கருமம்" *(குறள்.467).*

துணி–த்தல் tuṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) வெட்டுதல்; to cut, sever, cut off. "இலங்கைக் கோன் சிரமுங் கரமுந் துணித்து" *(திவ். பெரியதி. 8, 6, 5).*

துணிகரி–த்தல் tuṇikari-, *11 செ.கு.வி.* (v.i.) துணிவு கொள்ளல்; to be bold, daring, intrepid, to dare.

துணிசெய்–தல் tuṇi-cey-, *1 செ.கு.வி.* (v.tr.) வெட்டுதல்; to cut to pieces. "பிரமன் சிரமுந் துணிசெய்து" *(தேவா.103, 4).*

துணுக்கிடு–தல் tuṇu-k-kiḍu-, *9 செ.குன்றாவி.* (v.t.) திடுக்கிடுதல்; to be started. *(செ.அக.).*

துணுக்குறு–தல் tuṇu-k-kuṟu-, *14 செ.கு.வி.* (v.i.) அச்சமுறுதல்; to be startled, sturck with fear, shocked. "யாவருந் துணுக்குற் றேங்க" *(கம்பரா. கும்ப.கருண.58).*

துணுக்கெறி¹–தல் tuṇu-k-keṟi-, *2 செ.கு.வி.* (v.i.) அச்சத்தால் துள்ளுதல்; to start with fear, as infants.

துணுக்கெறி²–தல் tuṇu-k-keṟi-, *2 செ.கு.வி.* (v.i.) குளிர்ச்சி மிகுதியால் சளி, தடித்து வெளிவரல்; discharge of soild phlegm due to excess of mucus in the system.

துணுங்கு–தல் tuṇuṅgu-, *5 செ.குன்றாவி & கு.வி.* (v.t.) & (v.i.) வெருவுதல் *(யாழ்.அக.);* to fear.

துணை¹–தல் tuṇai-, *4 செ.குன்றாவி.* (v.t.) ஒத்தல்; to resemble, to be like. "நெய் பூசிய தொழின்மையே துணையும்" *(காஞ்சிப்பு. திருக்கண்.19).*

துணை²–த்தல் tuṇai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. மாலை முதலியன கட்டுதல்;* to string, or a garland. "தண்ணறுங் கழுநீர் துணைப்ப" *(மதுரைக் 551). 2. ஒத்தல் (தொல்பொ.286, உரை);* to resemble.

துணைபோ–தல் tuṇai-pō-, *8 செ.கு.வி.* (v.i.) ஒப்பாதல்; to be similar or equal; to match. "அவனுக்கு இவன் துணைபோனவன்".

துணையிரு–த்தல் tuṇai-y-iru-, *3 செ.குன்றாவி.* (v.t.) பருவமுற்றாள், மகப்பேறெய்தினாள். மணப்பெண் இவர்கட்குப் பேய் முதலியவற்றால் கேடு வராதபடி உதவியாயிருத்தல் *(வின்.);* to keep company with a girl who has attained the age of puberty or with a woman in childbirth or with the bride, protecting them from demon-attack.

துத்துப்போடு–தல் tuttu-p-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) கிணறு முதலியவற்றை மணல் முதலியவற்றால் மேவி விடுதல் *(வின்.);* to fill up, close.

துதை¹–தல் tutai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. செறிதல்;* to be crowded, thick, close, intense. "தோடமை முழவின் றுதைகுரலாக" *(அகநா.82). 2. மிகுதல்;* to abount; to be copious, intese. *3. படிதல்;* to be steeped. "வெண்ணீறு துதைந்தெழு..... வயிரத் தொப்பனே" *(திருவாச.296).*

துதை²–த்தல் tutai-, *11 செ.குன்றாவி.* (v.t.) நெருக்குதல் *(யாழ். அக.);* to press together.

துப்பலிடு–தல் tuppal-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) ஆணையிடுதல் *(யாழ்.அக.);* to swear.

துப்பறவடி–த்தல் tuppaṟa-v-aḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) நன்றாகப் புடைத்தல்; to give a good thrashing beat soundly.

துப்பறி–தல் tuppaṟi-, *2 செ.குன்றாவி.* (v.t.) உளவறிதல்; to spy out, detect.

துப்பு–தல் tuppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) உமிழ்தல்; to spit. "அந்த வார்த்தையைத் துப்பென்ற நிந்தையால்" *(இராமநா. ஆரணி.8)*

ம. துப்புக

துப்பேறு–தல் tuppēṟu, *5 செ.கு.வி.* (v.i.) துருவேறுதல்; to become rusty. "தண்ணீர் பட்டாலோ ரோல்டு கோல்டு துப்பேறிப் போகும்" *(மதி.க.111).*

தும்பியூது–தல் tumbi-y-ūdu-, *செ.கு.வி.* (v.i.) *1. வண்டுபோல ஒலித்தல்;* to puzz, make a humming noise. *2. ஓசையோடு வலிந்து மூச்சு வாங்குதல்;* to breath with a shrill sound,

as one senseles from a fall or blow. *3. எச்சில் வழலை நீர் முதலியவற்றை ஊதிக்குமிழியுண்டாக்குதல்;* to blow bubbles from the mouth, as with spittle, soapy water etc.

தும்புதட்டு–தல் tumbu-taṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *நையப் புடைத்தல்;* to thrash.

தும்புபிடுங்கு–தல் tumbu-piḍuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *பிறர் குற்றத்தை எடுத்துக் கூறுதல் (வின்.);* to accuse, taunt, nag.

தும்புபோடு–தல் tumbu-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. கயிறு திரித்தல்;* to make a tether. *2. துருவியறிதல்;* to probe, spy out.

தும்மு¹–தல் tummu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சளி முதலியவற்றால் மூச்சுக்காற்றுத் தடைப்பட்டு வாய் மூக்கு வழிகளால் ஒலியுடன் வெளியேறுதல்;* to sneeze. "ஊடி யிருந்தேமாத் தும்மினார்" *(குறள்.1312). 2. மூச்சு விடுதல்;* to breath.

தெ. தும்முட; ம. தும்புக.

தும்மு²–தல் tummu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *விடுதல்;* to emit, letgo, leave.

துமிதல்¹ tumi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வெட்டுண்ணுதல்;* to be cut off severed. "அரவினருந்தலை துமிய" *(புறநா.211). 2. அழிதல்;* to perish, to be crushed. "பைம்பயிர் துமிய" *(அகநா.254).*

துமிதல்² tumi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *விலக்குதல்;* to remove. "சுதைச் சிலம்பிமேல் விழவூதித் துமிந்தனன்" *(பெரியபு. திருநீலநக்.13).*

துமி³–தல் tumi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *உமிழ்தல்;* to spit. "மிச்சிலைத் துமிந்து" *(காஞ்சிப். கழுவாய்.63).*

துமி⁴–த்தல் tumi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வெட்டுதல்;* to cut off. "கொடுங்காற் புன்னைக் கோடு துமித் தியற்றிய" *(பெரும்பாண்.266). 2. அறுத்தல் (திவா.);* to saw. "வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த" *(அகநா.24). 3. விலக்குதல்;* to keep off, obstruct. "தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டும்" *(கலித்.116,5).*

துமி⁵–த்தல் tumi-, *5 செ.கு.வி.* (v.i.) *துளித்தல் (வின்.);* to drizzle, sprinkle.

துய்–த்தல் tuy-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. புலன்களால் நுகர்தல்;* to enjoy by means of the senses. "பொடுப்பதூஉத் துய்ப்பதூஉ மில்லார்க்கு" *(குறள்.1005). 2. நுகர்தல்;* to experience, suffer, as the fruits of actions. "தொல்வினைப் பயன்றுய்ப்ப" *(கலித்.118). 3. உண்ணுதல்;* to eat, feed. "புதுப்பூத் துய்த்த வாய்" *(அகநா.15). 4. நூல் நூற்றல்;* to spin out.

துயக்குதல் tuyyakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தளரச் செய்தல் (வின்.);* to slacken, relax. *2. கட்டுதல்;* to tie, fasten. "துயக்கு மவ்வினையின் கழிவும்" *(தணிகைப்பு. நந்தியும்.110).*

துயங்கு–தல் tuyaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *சோர்தல்;* to be exausted, to faint. "இரணியன் துயங்கி நின்றான்" *(வரத. பாகவத. நாரசிங்க.28).*

துயர்¹–தல் tuyar-, *2 செ.கு.வி.* (v.i.) *வருந்துதல்;* to grieve, sorrow. "ஆனாது துயரு மென்கண்" *(அகநா.195).*

துயர்²–தல் tuyar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *தொடர்தல்;* to follow, pursue.

துயல்(லு)¹–தல் tuyal-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்;* to sway, wave. "மணிமயில்..... துயல்கழை நெடுங்கோட்டு" *(சிறுபாண்.263). 2. தொங்குதல்;* to hang. "துயன் முலைப் பேழ்வாய்ப் பேய்" *(பு.வெ.4, 18, கொளூ). 3. பறத்தல்;* to fly. "மென் சிறுபறவை கண்டந் தொக்குறு சுழனாக் கெண்டை கொண்டுவிண் டுயலா தன்றே" *(உபதேசகா. பஞ்சாக்.57).*

துயில்(லு)²–தல் tuyil-, *5 செ.கு.வி.* (v.i.) *1. உறங்குதல்;* to sleep. "வரியரவி னணைத் துயின்று" *(திவ். பெரியதி.8, 3, 2). 2. தங்குதல் சீவக.1504, உரை).;* stay. *3. இறத்தல்;* to die. *4. மறைதல்;* to set, as the sun. "ஒண்சுடர் துயின்றதா லென்னும்" *(திவ். பெரியதி.2, 7:4).*

துயிலார்–தல் tuyilār-, *2 செ.கு.வி.* (v.i.) *உறங்குதல்;* to sleep. "துயிலாரா தாங்கண்..... முற்றிய வெந்நோய்" *(கலித்.146).*

துயிலுணர்–தல் tuyil-uṇar-, *2 செ.கு.வி.* (v.i.) *உறக்கம் நீங்குதல்;* to awake, rise from sleep. "துயிலுணர்ந் திருந்தசோம சுந்தரக் கருணைவெள்ளம்" *(திருவிளை.நரிபரி.17).*

துயிலெடு–த்தல் tuyil-edu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தூக்கத்தினின்று எழுப்புதல்;* to awake up, arouse.

துயிலெழு–தல் tuyil-eḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *தூக்கம் கலைந்து எழுதல்;* to awake from sleep. "சுப்பிரதீப மெழுந்தெனத் துயிலெழுந்தான்" *(இரகு. அயனெழுச்.139).*

துயிற்று–தல் tuyiṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உறங்கச் செய்தல்;* to put to sleep. "மன்னுயிரெல்லாந் துயிற்றி" *(குறள்.1168). 2. தங்கப் பண்ணுதல்;* to cause to stay, to retain. "துயிற் றியபல் கேள்வியினர்" *(சீவக.2164).*

துயின்மடி–தல் tuyiṉ-maḍi-, *2 செ.கு.வி.* (v.i.) *உறங்குதல்;* to fall a sleep. "கங்கு துயின்மடிந் தன்ன தூங்கிரு ளிறும்பின்" *(புறநா.126:7).*

துர¹–த்தல் tura-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஓட்டிச் செலுத்துதல்;* to drive, as an elephant. "தோட்டியான் முன்பு துரந்து" *9புறநா.14-4). 2. எய்தல்;* to shoot, as an arrow, to propel. "சுடுசரந் துரக்கும்" *9கல்லா.4). 3. போக்குதல்;* to disperse, scatter. *4. தூண்டுதல்;* to direct, urge, encourage. "அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமுந் துரக்க நல்லரு டுரந்தனள்" *(கம்பரா. மந்தரை. 78). 5. அடித்தல்;* to beat. "மகடூஉப் பகடுபுறந் துரப்ப" *(பெரும்பாண்.58). 6. முடுக்கி உட்செலுத்துதல்;* to drive

in, hammer down, as a nail. "துரப்பமை யாணி" *(பொருந.10). 7. துளைத்தல்;* to tunnel, bore.

துர²–த்தல் tura-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முயலுதல்;* to be active, to make efforts. "அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்ப" *(கலித்.18). 2. போதல்;* to go. *3. வீசுதல்;* to blow, rage, as a tempest. "வளிதுரந்தக் கண்ணும்". *4. எரிதல்;* to burn, as fire. "அங்கியு மவனெதிர் துரந்தான்" *(கந்தபு. மார்க்கண.135).*

துரத்து–தல் turattu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வெருட்டி யோட்டுதல்;* to drive away. *2. அப்புறப்படுத்துதல்;* to remove, reject. "அகத்தைவிடத் துரத்தி னார்கள்" *(திருவிளை. விருத்த. 31). 3. திருடன் முதலியோரைப் பிடிக்கப் பின்தொடர்தல்;* to pursue, as a thief. *4. வண்டிமாடு முதலியவற்றைத் தூண்டி விரைந் தோடச் செய்தல்;* to drive, cause to move fast, as bullocks. *வண்டி மாட்டைத் துரத்து (உ.வ.).*

துரப்புதல் turappu-, *5 செ.குன்றாவி.* (v.t.) தேடுதல்; to seek. "எனதொரு வாய்க்கு நால்வாய்க்கு மிரையெங்கே துரப்புவேனே" *(தனிப்பா.1, 183,3).*

துரி–தல் turi-, *4 செ.குன்ற ாவி.* (v.t.) தேடுதல்; to search after. "துரிய வல்லார்க்குத் துரிசில்லை" *(திருமந்.2454).*

துருத்து¹–தல் turuttu-, *5 செ.கு.வி.* (v.i.) வெளித் தோன்றுதல்; to bulge, protrude.

துருத்து²–தல் turuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) வெளித் தள்ளுதல்; to thrust out. "வயிறு துருத்திக் கொண்டிருக்கிறது".

துருதுரு–த்தல் turututu-, *11 செ.கு.வி.* (v.i.) *1. அமைதியின்றி இருத்தல்;* to be fidgetty, restless; to make idle motions or gestures. "அவன் மிகவும் துருதுருத்தவன்". *2. துடித்தல்;* to quiver, as the lips or tongue through desire to speak. *3. பரபரப்பு;* to be in great haste.

துருந்து–தல் turuntu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. துளை பெரிதாக்குதல்;* to enlarge, as a hole or cavity. *2. ஆராய்தல்;* to explore, examine. *(செ.அக.).*

துருப்பிடி¹–த்தல் turu-p-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) இரும்பிற் கறை பற்றுதல்; to rust, gater rust. "துருப்பிடியிருப்புத் துண்டுபோல்" *(அருட்பா. அவாவறுப்பு, 11)* - துருப்பிடி²-த்தல் turu-p-piḍi-, *5 செ.குன்றாவி.* (v.t.) குற்ற வடையாளம் கண்டுபிடித்தல்; to detect, trace, search. *(செ.அக.).*

துருவங்கட்டு–தல் turuvaṅgaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* கணக்கு நெறிமுறை உண்டாக்குதல்; a rule for any mathematical calculation. *2.* உதவி தேடுதல்; to devise means or expedients.

துருவு–தல் turuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.*தேடுதல்; to seek, enquire into, search out, trace, pursue. "கீழ்நீர் குளித்தானைத் தீத்துரீஇ யற்று" *(குறள்.929). 2. தொளைத்தல்;* to bore, drill, perforate. *3. தேங்காய் முதலியன கடைந்து சீவுதல்;* to scrape, as the pulp of a cocount. *4. கடைதல் (பிங்.);* to churn. *5. துன்புறுத்துதல்;* to harass.

தெ. துருமு; க. துருவு

துலக்கு–தல் tulakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மெருகிடுதல்;* to polish, burnish. *2. ஒளிரச் செய்தல்;* to cause, to shine, to illumine, enlighten. *3. தூய்மை பண்ணுதல்;* to clean, cleans. "கண்ணாடியை அடிக்கடி துலக்கினாற் பழுதன்றே" *(கைவல். சந்த.48). 4.* வெளிப்படை யாக்குதல்; to explain; to clear up a thing; to expose, reveal. *கமுக்கத்தைத் துலக்கிச் சொன்னான். 5. தீட்டுதல்;* to whet, sharpen. "துலக்காத ஆயுதம் துருப்பிடிக்கும்" *(பழ.).*

தெ. தொலகு

துலங்கு¹–தல் tulaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒளிரச் செய்தல் (சூடா.);* to shine, glitter, to be bright. *2. ஒப்ப மிடப்படுதல்;* to be polished, burnished, furbished. *3. தெரியவருதல்;* to be illustrious, conspicuous. *4.* தெளிவாதல்; to be clear, perspicuous. "கலங்கிய வமுதம்" *(கல்லாட.5). 5. சிறத்தல்* (W.); to be excellent, splendid.

தெ. துலக்கின்சு; க. தொலகு

துலங்கு²–தல் tulaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* தொங்கியசைதல்; to hang, swing. *2. கலங்குதல்;* to be agitated, disturbed.

துலங்கு³–தல் tulaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) நிலைகெடுதல்; to be uprooted. "துலங்கலில் போகமூட்டி" *(தணிகைப்பு. நாட்டு.ப.2).*

துலுக்கு¹–தல் tulukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* குலுக்குதல்; to make affected gestures, as in walking. "சிக்கங் கரங் சேர்த்து வாளா துலுக்குகின்றீர்" *(பதினொ. ஆளு. திருவந்.66). 2.* செருக்கி நடத்தல் (W); to affect a proud gait, carry oneself proudly.

துலுக்கு²–தல் tulukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) அசைத்தல்; to shake toss.

துலுங்கு–தல் tuluṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) அசைதல்; to shake, toss. "இரண்டு பாடுந் துலுங்காப் புடைபெயரா" *(திவ். பெரியாழ். 3, 6, 9).*

துலைப்படு–த்தல் tulai-p-paḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) அகலவகற்றுதல்; to sent a way. "தலைப்படுவேன் றுலைப்படுப்பான் தருக்கேன்மினே" *(தேவா.718,4).*

துலையேறு–தல் tulai-y-ēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) துலைத் தட்டுக் கொடைச் சடங்கில் துலைத் தட்டிலேறுதல்; to mount the scale-pan to perform *tulai-t-taṭṭu-cadaṅgu.* "இரவியை யரவு தீண்டிற் பொற்றுலை யேறல் னன்காம்" *(கூர்மபு. தானமுரை.20).*

துவ்வு[1]–தல் tuvvu-, *5 செ.கு.வி.* (v.i.) *நுகர்தல் (திவா.);* to eat, enjoy. "*துவ்வாநறவின் சாயினத்தானே*" *(பதிற்றுப்.60, 12).*

துவ்வு[2]–தல் tuvvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வலியுறுதல்;* to be strong. "*ஆன்ற துணையிலன் றான்றுவ்வான்*" *(குறள்.862). 2. பற்றுக்கோடு;* support.

துவக்கு[1]–தல் tuvakku-, *5 செ.குன்றாவி.* (Sv.tr.) தொடங்குதல்; to begin, enter upon, commence.

துவக்கு[2]–தல் tuvakku-, *5 செ.குன்றாவி.* (v.i.) *1. கட்டுதல்;* to tie, binds. "*பிறவியாற் றுவக்குணா வீடு 200*" *(கம்பரா. பிரமாத்திர.184). 2. ஈர்த்தல்;* to engross the senses or affections; to fascinate; to bring under one's influence. "*நடையழகாலே அவரைத் துவக்கி*" *(ஈடு.1, 4, 3).*

துவக்கு[3]–தல் tuvakku-, *5 செ.கு.வி.* (v.i.) *கட்டுண்ணுதல்;* to be tied, entanged. "*வள்ளியங் கொடியொட்டுத் துவக்கிப் பன்னிருகண் விழித்து*" *(கல்லா.82, 10).*

துவசங்கட்டு–தல் tuvaṅ-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வெற்றி முதலியன குறிப்பதற்குக் கொடியேற்றுதல்;* to hoist, a flag, erect a banner, as a challenge or as a sign of victory. *2. முயன்று நிற்றல்;* to set about a thing with the utmost zeal and energy, especially in a bad cause.

துவட்டு–தல் tuvaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நீரைத் துடைத்தல்;* to wipe off, moisture, as after bathing. *2. கறி முதலியன துவட்டுதல்;* to boil or stew with a little water, as curry, meat, etc., *3. கறிப்பண்டங்களைத் தொட்டுக் கொள்ளுதல்;* to taste in small quantities, as pickles for giving relish to food. "*துவட்டிக் கொண்டு சாப்பிட்டு விடலாம்*" *(வின்.). 4. கசக்குதல்;* to crush, press hard; to over work.

துவர்[1]–தல் tuvar-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வகிர்தல்;* to divide, part as the hair in the middle. *2. புலர்த்துதல்;* to dry, wipe off moisture. "*கூந்தல் பிழிவனந் துவரி*" *(குறிஞ்சிப்.60). 3. பூசுதல்;* to smear.

துவர்[2]–தல் tuvar-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உலர்தல்;* to become dry. "*கண்ணும் வாயுந் துவர்ந்து*" *(திவ்.திருவாய்.8:5,2). 2. தெளிதல்;* to be clear, distinct. *3. பிரிதல் (யாழ்.அக.);* to be part, divided. *4. முதிர்தல் (இலக்.அக.);* to be mature. *5. முழுதுமாதல்;* to be complete, whole. "*துப்புரவில்லார் துவரத் துறவாமை*" *(குறள்.1050).*

துவர்[3]–தல் tuvar-, *4 செ.கு.வி.* (v.i.) *ஆடுதல் (அக.நி.);* to be flexible.

துவர்[4]–த்தல் tuvar-, *11 செ.கு.வி.* (v.i.) *துவர்ப்பாதல்;* to be astringent.

துவர்[5]–த்தல் tuvar-, *11 செ.கு.வி.* (v.i.) *சிவத்தல்;* to be red. "*துவர்த்த செவ்வாய்*" *(கம்பரா. நீர்விளை.13).*

துவர்[6]–த்தல் tuvar-, *11 செ.குன்றாவி.* (v.t.) *பூசுதல் (வின்.);* to smear.

துவர்த்து–தல் tuvarttu-, *5 செ.குன்றாவி.* (v.t) *ஈரந்துவட்டுதல்;* to wipe of moisture.

ம. துவர்த்துக.

துவர்ப்பிடி–த்தல் tuvar-p-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தடுத்திடுமாறு ஆடையைப் பிடித்தல்;* to hold one by one's cloth and obstruct. "*பற்றலர்தம்மை..... துவர்ப்பிறத்து..... தடுத்துவா*" *(திருவாலவா.41,10).*

துவரி–த்தல் tuvari-, *11 செ.குன்றாவி.* (v.t.) செந்நிறமூட்டுதல்; to die with salmon colour. "*துவரித்த வுடையவர்க்கும்*" *(திவ். பெரியதி. 5, 6, 8).*

துவல்[1](லு)–தல் tuval-, *3 செ.கு.வி.* (v.i.) *துளித்தல்;* to drip, as water; to sprinkle; to drizzle *(வின்.).*

துவல்[2](லு)–தல் tuval-, *3 செ.கு.வி.* (v.i.) *நிறைதல் (வின்.);* to be full, thick.

துவல்[3](லு)–தல் tuval-, *3 செ.கு.வி.* (v.i.) *சாதல் (வின்.);* to die.

துவல்[4](லு)–தல் tuval-, *3 செ.கு.வி.* (v.i.) *விரைதல் (வின்.);* to be quick, rapid, to move with celerity.

துவள்[1](ளு)–தல் tuvaḷ(ḷu)-, *2 செ.கு.வி.* (v.i.) *1. ஒசிதல்;* to be flexible, supple, as a tender tree. "*பொலிவில் துவள*" *(கம்பரா. பூக்கொள்.11). 2. தெளிதல் (சங்அக.);* to bend, shrink, twist warp, as boards in the sun. *3. வாடுதல்;* to fade, wither, as plants under scorching sun. "*கண்ணார் தழையுந் துவளத் தருவனவோ*" *(திருக்கோ.112). 4. கசங்குதல்;* to become rumpled, as a new cloth. "*புதிய ஆடைய துவண்டு விட்டது*". *5. துடித்தல்;* to quiver, tremble. "*பெருநீரறச் சிறுமீன் றுவண்டாங்கு*" *9திருவாச.6, 26). 6. வருந்துதல்;* to be distressed. " *சோறு கூறை யின்றியே துவண்டு*" *(தேவா.119). 7. ஒழிதல்;* to disappear. "*வெஞ்சுருஞ் சென்ற தெல்லாம்..... பூவணை மேலணையாமுன் றுவளுற்றதே*" *(திருக்கோ.351). 8. அடர்தல்;* to be dense, close. "*தாழை துவளும் தரங்கநீர்ச் சேர்ப்பிற்றே*" *(திணைமாலை.59). 9. இறுகுதல்;* to be thick in consistancy, as milk. "*பாலைத் துவளக் காய்ச்சினான்*". *10. ஒட்டுதல்;* to be sticky, to adhere, as oil. *11. புணர்தல்;* to unite sexually. "*துடியிடையார் கணவரொடு துவளும் போது*" *(அருணா. பு. திருக்கண். 14). 12. மெல்லிதா யிருத்தல் (சங்.அக.);* to be thin.

துவள்[2](ளு)–தல் tuvaḷ(ḷu)-, *5 செ.குன்றாவி.* (v.t.) தொடுதல் *(பிங்.);* to touch.

துவற்று[1]–தல் tuvaṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *தூவுதல்;* to scatter drops, sprinkle. "*தூஉ பின்ன துவலை துவற்றிலின்*" *(மலைபடு.363).*

துவற்று[2]–தல் tuvaṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.i.) கெடுத்தல்; to destroy, ruin. "*வல்வினை துவற்றன்மேலென*" *(தணிகைப்பு. வீராட்.4).*

துவன்று[1]–தல் tuvaṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நிறைதல்;* to fillup.

"இளையரும் முதியருங் கிளையுடன் றுவன்றி" (பெரும்பாண்.268). 2. நெருங்குதல்; to be thick, close, crowded. "வானம் வெளியறத் துவன்றி" (கம்பரா. நாகபா. 97). 3. கூடிநிற்றல்; to be in company; to join. "ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி" (தொல்.பொ.192). 4. குவிதல்; to be heaped up. "அகன்கட் பாறைத் துவன்றி" (மலைபடு.276). "துவன்று நிறைவாகும்" (தொல்.815).

துவன்று[2]–தல் tuvaṉṟu-, 5 செ.கு.வி. (v.i.) சாதல் (பிங்.); to die.

துவனி–த்தல் tuvaṉi-, 11 செ.கு.வி. (v.i.) முழங்குதல்; to sound, resound. "துவனித்தவர் வெம்படை தூவுதலும்" (பாரத. நிவாத. 70).

துவை[1]–த்தல் tuvai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. மிதித் துழக்குதல்; to tread down. "ஆம்பலங் குப்பையை..... வாயைக டுவைப்ப" (கல்லா.52). 2. இடித்தல்; to beat, as moist or green things as clay in a mortar; to mash, pound. 3. ஆடை துவைத்தல்; to beat, as clothes in washing. 4. குற்றுதல்; to husk. "நெல்லைத் துவைக்கிறாள்". 5. கடைதல்; to chum. "கருங்கடற்றுவையத் தோன்றி" (கம்பரா. கடிம.81). 6. சேர்த்துவைத்தல்; to gather, together. "தன்னுயிர்க்கென றெண்ணித் துவைத்த பொருளொடு" (ஆசாரக்.96). துவைத்துத் தோற்மேற்போட்டுக் கொண்டான் (பழ.)

துவை[2]–தல் tuvai-, 4 செ.கு.வி. (v.i.) மிதித்துழக்கப்படுதல்; to be trodden. "நெற்கதிர் இன்னும் துவைய வேண்டும்".

துவை[3]–தல் tuvai-, 4 செ.கு.வி. (v.i.) 1. தோய்தல்; to be dipped, as a cloth in dye. 2. கஞ்சியிடுதல் (வின்.); to be moistened with starch. 3. உறைதல் (வின்.); to be curdled, as milk; to be clotted as blood. 4. படைக்கருவி துவைச்சலிடுதல்; to be tempered, as steel.

துவை[4]–த்தல் tuvai-, 11 செ.குன்றாவி. (v.i.) 1. தோய்த்தல் (வின்.); to dip in, soak. 2. உறையச் செய்தல் (வின்.); to curdle, as milk by rennet. 3. படைக் கருவிகள் துவைச்சலிடுதல்; to temper, as steel.

துழவு–தல் tuḻavu-, 5 செ.குன்றாவி. (v.t.) சூழவருதல்; to pass through review in mind, cat about one. "மாதிரந் துழவுங் கவலை நெஞ்சத்து" (புறநா.174).

துழவைதொடு–த்தல் tuḻavai-toḍu-, 20 செ.கு.வி. (v.i.) தெப்பஞ் செலுத்துதல்; to paddle a raft or boat.

[துழவை + தொடு-.]

துழாவு[1]–தல் tuḻavu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கையாலளைதல்; to stir with the hand. 2. கிளறுதல்; to stir with the ladle; to turn over, as paddy spread in the sun. 3. தடவுதல்; to feel, grope, search for with the hands out stretched. "துழாநெடுஞ் சூழிருளென்று" (திவ். இயற். திரு. விருத்.36). 4. நாடுதல்; to cast a searching look into, seek. "வானு நிலனுந் திரையுந் துழாவும்" (கலித். 145, 43). 5. ஆராய்தல்; to investigate, examine closely. 6. தண்டு வலித்தல்; to paddle or row a boat. "துளிபடத் துழாவு திண்கோற் றுடும்பு" (கம்பரா. குகப். 60). 7. வெட்டுதல்; to cut.

துழாவு[2]–தல் tuḻāvu-, 5 செ.கு.வி. (v.i.) 1. தடுமாறுதல்; to be disturbed in mind; to be perplexed. "எண்ணந் துழாவுமிடத்து" (திவ். இயற். திருவிருத்.28). 2. அளவளாவுதல் (பிங்.); to talk endearingly.

துழை–தல் tuḻāi-, 4 செ.குன்றாவி. (v.t.) துடுப்பால் துழாவிச் செல்லுதல் (நாஞ்.); to propel by oars.

துள்ளு–தல் tuḷḷu-, 5 செ.கு.வி. (v.i.) 1. குதித்தல்; to leap, frisk, spring up, jump up; to be restive. "துள்ளித் தூண் முட்டுமாங் கீழ்" (நாலடி.64). "துள்ளாதே துள்ளாதே ஆட்டுக்குட்டி, என் கையில் இருக்கிறது சூரிக்கத்தி" (பழ?). 2. தாவிச்செல்லுதல்; to trip along in a frolicsane manner. "துள்ளு மான்மறி போந்திய செங்கையின்" (தேவா.93, 5). 3. செருக்குதல்; to be haughty, arrogant. "துள்ளுகின்றார் கூட்ட முறேல்" (அருட்பா.1, நெஞ்சறி.635). 4. கவலையற்று வாணாள் கழித்தல்; to lead a happy-go-lucky life. 5. பதைத்தல்; to tremble, quiver. "துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து" (கலித்.4). 6. மிகுதல்; to be abundant. "அனையது கேட்டலோடு மறிஞர்கள் மகிழ்ச்சி துள்ள" (திருவானைக்.நைமி.28).

துளக்கு[1]–தல் tuḷakku-, 5 செ.குன்றாவி. (v.i.) 1. அசைத்தல்; to move, shake, nod. "திருமுடி துளக்கி நோக்கி" (சீவக. 1881). 2. வணங்குதல்; to bow. "முனைவற்றொழுது முடிதுளக்கி" (சீவக.2357).

துளக்கு[2]–தல் tuḷakku-, 5 செ.குன்றாவி. (v.i.) விளக்குதல் (யாழ்.அக.); to polish.

ம. துளக்கு

துளங்கு[1]–தல் tuḷaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1.அசைதல்; to move, to say from side to side, as an elephant, to shake. "துளங்கிமில் நல்லேற்றினம்" (கலித்.106). 2. வருந்துதல்; to be perturbed. "துளங்கா தாங்கவ ளுற்றதை யுரைத்தலும்" (மணி.22,8). 3. நிலை கலங்குதல்; to be uprooted. "கடிமரந் துளங்கிய காவும்" (புறநா.23). 4. தளர்தல்; to droop. "சுடுகணை மருத லோடுந் துளங்கினான்" (கம்பரா. முதற்போ.132). 5. ஒலித்தல்; to sound. "சிறு சதங்கை துளங்க வார்த்தார்" (பிரபுலிங். மாயை. பூசை.45).

துளங்கு[2]–தல் tuḷaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) ஒளிர்தல்; to shine, to be bright, luminous, to radiate. "துளங்கு மிளம்பிறை யாளன்" (தேவா.88, 10).

துளர்[1]–தல் tuḷar-, 4 செ.குன்றா.வி. (v.t.) நில முதலியவற்றைக் கொத்துதல்; to hoe. "கணவன் புனந்துளர்ந்து வித்தி" (குறுந்.214).

துளர்²–தல் tuḷar-, *4 செ.கு.வி.* (v.i.) மணம் முதலியன வீசுதல்; to spread, as fragrance. "துளருஞ் சந்தனச் சோலைக ளுடலாம்..... குளிர் நாற்றமே" *(சூளா. இரத.5).*

துளி¹–த்தல் tuḷi-, *11 செ.கு.வி.* (v.i.) *1.* சொட்டுதல்; to drip, fall in drops, as rain, as tears, as honey; to trickle down. "மதுவுந் துளிக்குஞ் சோலை" *(தேவா.395,4). 2.* மழை பெய்தல்; to rain. "மங்கு லற்கமொடு பொங்குடி துளிப்ப" *(அகநா.235).*

துளி²–த்தல் tuḷi-, *11 செ.குன்றா.வி.* (v.t.) துளியாய்த் தெளித்தல்; to sprinkle, let fall in drops.

துளிர்–த்தல் tuḷir-, *11 செ.கு.வி.* (v.i.) *1.* தளிர்த்தல்; to bud, sprout, shoot, put forth leaves. *2.* செழித்தல்; to prosper thrive.

தெ. தளிர்சு; க. தெளிர்; ம. துளிர்க்க

துளுப்பிடு–தல் tuḷuppiḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) கலக்குதல்; to stir up. "குன்றிற் சுருங்கட றுளுப்பிட் டாங்கு" *(சீவக. 1112) (செ.அக.).*

துளும்பு¹–தல் tuḷumpu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* அசைதல்; to shake, to be agitated. "வம்பிற் றுளும்புமுலை வாணெடுங்கண் மடவார்" *(சீவக.186). 2.* ததும்புதல்; to brim over, overflow; to fill, as tears in the eyes. "துளும்பு கண்ணிருண் மூழ்கி" *(திருவிளை. மாணிக்க துதி). 3.* துள்ளுதல் *(சூடா.);* frisk. *4.* திமிறுதல் *(சூடா.);* to struggle and qrench oneself away. *5.* விளங்குதல்; to sparkle, glitter, shine. "உவாக்கண்மீ..... தேவரிற் றுளிம்பினார்" *(சூளா. தூது. 73). 6.* இளகுதல்; to melt. *7.* மேலெழுதல்; to rise up; to come to the surface. "நீர் துளும்ப" *(சீவக.1674). 8.* வருந்துதல்; to be troubled. "உயர் சந்தனத் தொழுதிக் குன்றந் தளும்பச் சென்று" *(சீவக. 3063). 9.* மிகுதல்; to abound. "துளும்பு மேன்மையிற் பொலிந்தது தொண்டைநன் னாடு" *(காஞ்சிப்பு. நாட்டுப்.35).*

துளும்பு²–தல் tuḷumpu-, *5 செ.கு.வி.* (v.i.) ஒளிர்தல்; to shine, to irradiate. "மருளிநின்று துளும்புவே" *(தக்கயாகப். 254).*

துளை¹–தல் tuḷai-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* நீரில் விளையாடுதல்; to dispart in water; to dive. "ஆனந்த வெள்ளத் துறையிலே படிந்து மூழ்கித் துளைந்து" *(தாயு. வர்பனேன்.2). 2.* அழுந்திக் கிடத்தல்; to be immersed. "குடும்பக் கூத்துட் டுளைந்து" *(தாயு. சொல்லற்.7).*

துளை²–த்தல் tuḷai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1.* துளையிடுதல்; to make hole, bore, drill, punch. *2.* ஊடுருவுதல்; to pierce, as with an arrow. *3.* வருத்துதல்; to torment, tease. "எப்பொழுதுமாக அவனைத் துளைக்கிறான்". *4.* செயற்பாடு உசாவுதல்; to demand particulars details. செலவுக் கணக்கு அவனைத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

துற்று¹–தல் tuṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* உண்ணுதல்; to eat. "கொடுவா யிரும்பின் கோளிரை துற்றி" *(அகநா.36). 2.* கவ்வுதல்; to seize with mouth. "இகலன்வாய்த் துற்றிய தோற்றம்" *(களவழி.28). 3.* குற்றுதல் *(பிங்);* to pound. *4.* நெருங்குதல்; to come near, advance closely, lie close. "காளை சீறிற் றுற்றிவ னுளனோ வென்பார்" *(சீவக. 1110). 5.* மேற்கொண்டு நடத்தல்; undertake. "அரிது துற்றனையாற் பெறும்" *(அகநா.10).*

க. துத்து; தெ. துத்த

துற¹–த்தல் tuṟa-, *5 செ.கு.வி.* (n.) *1.* பற்றற்றுத் துறவு பூணுதல்; to renounce wordly pleasures; to become an ascetic. "நல்லறிவாளர் குழவியரிடத்தே துறந்தார்" *(நாலடி.11). 2.* கைவிடுதல்; to leave, relinguish, forsake, quit, abandon, desert, reject, discard. "தாவறத் துறந்தாரை" *(கலித்.118).* "தம்மைத் துறக்குந் துணிவிலாதார்" *(நாலடி.75).*

துற²–த்தல் tuṟa-, *2 குன்றாவி.* & *5 செ.கு.வி.* (tr. intr.) நீங்குதல் *(சூடா.);* to neglect, dispense with, oimit, avoid. "புலவுப்பலி துறந்த கலவுக்குழி கடுமுடை" *(அகநா.3).* துறக்கத் துறக்க ஆனந்தம் துறந்தபின்பு பேரின்பம் *(பழ.).*

துறட்டிபோடு–தல் tuṟaṭṭi-p-pōḍu-, *19 செ.குன்றாவி* (v.t.) *1.* மந்தணச் செயலறிதல்; to draw out secrets by quetioning to fish out. *2.* தன்வயப்படுத்த முயலுதல்; to contrive to bring under one's control.

துறு–த்தல் tuṟu-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1.* திணித்தல்; to cram as food into the mouth. "வாயிலே சீரையைத் துறத்து" *(ஈடு.9, 9, 1). 2.* அமுக்குதல்; to stuff, press or corwd into a bag or box. *3.* அமைத்தல்; to place, set up. "விளக்கும் துறத்தனர்" *(வீநாயகபு.3, 13) (செ.அக.).*

ம. துறு; க. துறுகு; தெ. துறுகு

துறுமு¹–தல் tuṟumu-, *5 செ.கு.வி.* (v.i.) நெருங்குதல்; to be close, corwded. "நறுமலர் துறுமி" *(பெருங்.இலா வாண.15, 6).*

துறுமு²–தல் tuṟumu-, *5 செ.குன்றாவி.* (v.t.) திரட்டுதல் *(வின்.);* to make round.

துறைகாட்டு–தல் tuṟai-k-kāṭṭu-, *4 செ.கு.வி.* (v.i.) வழி காட்டுதல்; to lead the way put one in the way.

துறைபெய்–தல் tuṟai-pey-, *1 செ.குன்றாவி.* (v.t.) நீராடுவித்தல் *(யாழ்.அக.);* to path a person.

துறைபோ–தல் tuṟai-pō-, *8 செ.குன்றாவி.* (v.t.) *1.* ஒரு *(கல்வி)* துறையில் முழுத் தேர்ச்சி பெறுதல்; to get knowledge in a specific field. *2.* எடுத்த கருமத்தில் வெற்றி; to get finished in an attempted affiar.

துறைமாறு–தல் tuṟai-māṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* வழிதவறுதல்; to mistake the proper course. *2.* முன்பயின்றதனைவிட்டு வேறுதொழிலிற்புகுதல்; to change an occupation or employment.

துன்புறுத்து–தல் tuṉbuṟuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) வருத்துதல்; to cause suffering to afflict.

துன்மி–த்தல் tuṉmi-, *11 செ.கு.வி.* (v.i.) வருந்துதல் *(யாழ்.*

அக.); to suffer.

துன்று–தல் tuṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நெருங்குதல்;* to be close, thick, crowded together. "*துன்றுகரு நறுஞ்குஞ்சி*" *(கம்பரா. குகப்.28). 2. கிட்டுதல்;* to get near, approximate. *3. பொருத்துதல்;* to get attached; to lie. "*கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந் துன்றிய சென்னியர்*" *(திருவாசக.17:10).*

துன்னம்பெய்–தல் tuṉṉam-pey-, *1 செ.கு.வி.* (v.i.) *தைத்தலைக் கொள்ளுதல்;* to be stitched, sewed. "*துன்னம் செய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடி*" *(திருவாச.12:2).*

துன்னு¹–தல் tuṉṉu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பொருந்துதல்;* to be fitted, joined, attached. *2. செறிதல் (திவா.);* to be thick, crowded, to press close. "*துன்னிக் குழை கொண்டு தாழ்ந்த குளிர்மரமெல்லாம்*" *(நாலடி.167).*

துன்னு²–தல் tuṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அணுகுதல் (திவா.);* to approach, approximate, adhere to. "*யாவருந் துன்னல் போகிய துணிவினோன்*" *(புறநா.23). 2. மேவுதல்;* to ioin, to under take. "*இன்னா..... துன்னாமை வேண்டும் பிறன்கட் செயல்*" *(குறள்.316). 3. செய்தல்;* to do. "*எனைத் தொன்றுந் துன்னற்க தீவினைப்பால்*" *(குறள்.209). 4. அடைதல்;* to gain, reach, attain. "*துன்னருஞ்சீர்*" *(நாலடி.226). 5. உசாவுதல்;* to consider, take counsel. "*தொடைவிடைதன்னி*" *(பு.வெ.8:19, உரை).*

துன்னு³–தல் tuṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.i.) *தைத்தல்;* to sew, stitch. "*நீயிங்குடுத்திய கந்தையைத் துன்னுவா ரிலையே பரஞ்சோதியே*" *(அருட்பா.1, காட்சிப் பெரு.4).*

துன்னு⁴–தல் tuṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உழுதல் (செந்.4, 213);* to plough.

துனி–த்தல் tuṉi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வெறுத்தல்;* to loath, abhor. "*துனித்துநீர் துளங்கல் வேண்டா*" *(சீவக.745). 2. கலாய்த்தல்;* to be angry at, displeased with. "*முனியார் துனியார்*" *(ஆசாரக்.70). 3. நெடிது புலத்தல்;* to be sulky, as in a love-qurrel. "*நாணின்றி வரினெல்லா துனிப்பேன்யான்*" *(கலித்.67:16).*

துனை–தல் tuṉai-, *2 செ.கு.வி.* (v.i.) *விரைதல்;* to hasten. "*கோதைக்குத் துனைந்து சென்றுரைப்ப*" *(சிலப்.8:114).*

ö

தூக்கங்கொள்(ளு)–தல் tūkkaṅgoḷ(ḷ)u-, *13 செ.கு.வி.* (v.i.) *தூங்குதல்;* to sleep, to get sleep.

தூக்கம்விடு–தல் tūkkam-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. தூக்கம் தெளிதல்;* to wake from sleep. *2. ஒப்பனைத் தொங்கல் கட்டுதல் (வின்.);* to put up hanging or festoons; to make ornamental hanging-work in metal, in masonry, in carving etc.

தூக்கிக்கொடு–த்தல் tūkki-k-koḍu-, *4.செ.கு.வி.* (v.i.) *கேள்வி கேட்காமல், தயக்கம் இல்லாமல் கேட்டதை உடனடியாகத் தருதல்;* gift away; give on a platter. "*யாரென்றுகூடப் பார்க்காமல் தூக்கிக் கொடுத்துவிட்டான்*".

தூக்கிநிறுத்து–தல் tūkki-niṟuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *வணிகம், அரசியல், குடும்பம் முதலியவற்றில் சரிவு நிலையைத் தடுத்து ஒரு நிலைக்குக் கொண்டு வருதல்;* bolster, baleout. "*நடந்து முடிந்த இடைத் தேர்தல் வெற்றிதான் ஆட்சியைத் தூக்கி நிறுத்தியது*". "*தூக்கி நிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறேன்*" *(பழ.).*

தூக்கிப்பிடி¹–த்தல் tūkki-p-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.i.) *1. எடுத்து நிறுத்துதல் (வின்.);* to uphold, set erect, as a person. *2. நுணுகிக் குற்றங்காணுதல் (வின்.);* to hunt out trival faults.

தூக்கிப்பிடி²–த்தல் tūkki-p-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *கஞ்சத்தனமாயிருத்தல் (உ.வ.);* to be niggardly.

தூக்கிப்பிடி³–த்தல் tūkki-p-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.i.) *1. இழுத்துப்பிடித்தல்;* stretching as nerves in spasmotic contraction. *2. எழுப்பிப் பிடித்துக் கொள்ளுதல்;* lifting and holding up as a sickman.

தூக்கிப்போடு–தல் tūkki-p-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. திடுக்கிடுமாறு செய்தல்;* to startle, upset; to alarm. "*அந்தச் செய்தியைக் கேட்டதும் அது என்னைத் தூக்கிப் போட்டது*". *2. வெளியில் எடுத்து விடுதல்;* to take out, extract. "*நீரில் விழுந்த அவனைத் தூக்கிப் போட்டான்*". *3. தூக்கு (மரண) தண்டனையாகத் தூக்கிலிட்டு விடுதல்;* to execute by hanging. *4. கோட்சொல்லிச் சண்டை மூட்டுதல்;* to set person by the ears.

தூக்கியடி–த்தல் tūkki-y-aḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தான் மேம்பட்டுப் பிறனைப் பின்வாங்கச் செய்தல்;* to get the better of, excel. *அவன் எந்த நிலையிலும் இவரைத் தூக்கியடிக்கிறான். 2. மற்போரில் அசட்டையாக (அலட்சியமாக) தோல்வியுறச் செய்தல்;* to over throw with case in wrestling.

தூக்கியெறி–தல் tūkki-y-eṟi-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. விலக்குதல்;* to refuse to accept. *மக்கள் கிளர்ந்தெழுந்து ஆட்சியைத் தூக்கி யெறிந்தனர். 2. தூக்கியடி-. பார்க்க;* see tūkki-y-aḍi-. *3. அசட்டை பண்ணுதல்;* to disregard, treat with insolvence or impertinence.

தூக்கில்போடு–தல் tūkkil-pōḍu-, *19 செ.கு.வி.* (v.i.) *தூக்கு(சுருக்கு)க் கயிற்றைக் கழுத்திலிறுக்கி இறக்கச் செய்தல்;* hang to death. *குற்றவாளியின் உயிர் பிரியும் வரை தூக்கில் போடத் தீர்ப்பாயிற்று.*

தூக்கிலிடு–தல் tūkki-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. மேலுயர்த்துதல்;* to lift up; to clevate. *2. உதவிபுரிந்து காத்தல்;* to save from danger or ruin, help in emergency.

3. தூண்டிவிடுதல்; to stir up, instigate. *4. தூக்கிலிட பார்க்க;* see tūkkil-iḍu-.

தூக்கிவாரிப்போடு–தல் tūkki-vāri-p-pōḍu-, *20* செ.கு.வி. (v.i.) *ஒரு நிகழ்வின் அல்லது செய்தியின் எதிர்பாராத கடுமையான தன்மையால் அதிர்ச்சி அடைதல்;* be startled. *நண்பர் திடீரென்று இறந்ததும் தூக்கி வாரிப்போட்டது.*

தூக்கு–தல் tūkku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. உயர்த்துதல்;* to lift, lift up, raise, take up, hold up; to hoist, as a flag. "*மூட்டுறு கவரி தூக்கி யன்ன*" *(அகநா.156). 2. நிறுத்துதல்;* to weigh, balance. "*செம்பொன் தூக்கி*" *(திருவிளை. மாணிக்க.84). 3. ஆராய்ச்சி செய்தல்;* to consider, reflect, investigate. "*துணைவலியுந் தூக்கிச் செயல்*" *(குறள்.471). 4. ஒப்பு நோக்குதல்;* to compare. "*அமரரோ டசுரர் போரைத் தூக்கினர் முனிவர்*" *(கம்பரா. நாகபாச.52). 5. மனத்திற் கொள்ளுதல்;* to have in view; to expect. "*சிறியதோர் பயனைத் தூக்கித் தீயவர் செய்யுஞ் சூழ்ச்சி*" *(கந்தபு. கயமுகனுற்.64). 6. தொங்க விடுதல்;* to hang suspend. "*மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி*" *(அகநா.141). 7. கை கொடுத்துதவுதல்;* to lift up, as one from a pit; to lend a helping hand. *8. நங்கூரம் வலித்தல்;* to weigh anchor. *9 அசைத்தல்;* to shake, agitate, cause motion. "*வாடை தூக்க வணங்கிய தாழை*" *(கலித்.128). 10. தாங்கும் வலியிலதாகச் செய்தல்;* to take by storm; to over power, as a strong sweet smell. *வாசனை ஊரைத் தூக்குகிறது (உ.வ.). 11. ஒற்றறுத்தல் (பு.வெ.7);* to set to time-measure.

தூகு–தல் tūgu-, *5* செ.குன்றாவி. (v.t.) *திருவலகிடுதல்;* to sweep. "*கோமானின் றிருக்கோ றூகேன் மெழுகேன்*" *(திருவாச.5:14).*

தூங்கு–தல் tūṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. தொங்குதல்;* to hang. "*காமமு நாணு முயிர்காவாத் தூங்கும்*" *(குறள்.1163). 2. ஊஞ்சலாடுதல்;* to swing. "*வீழுசல் தூங்கப் பெறின்*" *(கலித்.131). 3. அசைதல்;* to sway from side to side, as an elephant. "*தூங்கு கையா னேங்கு நடைய*" *9புறநா.22). 4. கூத்தாடுதல்;* to dance. "*அறற்குழற் பாணி தூங்கியவரொடு*" *(சிறுபாண்.162). 5. இடையறாது விழுதல்;* to pour, rain. "*வீழ்பனி தூங்க*" *(திருக்கோ.320). 6. ஒலித்தல்;* to sound. "*தண்ணுமை தழுவித் தூங்க*" *(கம்பரா.மிதிலை.9). 7. துயிலுதல்;* to sleep, slumber. "*சொரிந்த சோரிதன் வாய்வரத் தூங்குவான்*" *(கம்பரா. கும்ப. 62). தூங்கினவன் கடாக்குட்டி, விழித் திருந்தவன் ஊட்டுக் குட்டி (பழ.). 8. அசைவு தோன்றாது சுற்றுதல்;* to spin, as a top. *பம்பரம் தூங்குகின்றது. 9. சாதல்;* to die. "*நாடுங்காற் றூங்குபவர்*" *(திரிகடு.19). 10. வாடுதல்;* to droop, as a plant. "*துக்கத்துட் டூங்கி*" *(நாலடி.121). 11. மந்தமாதல்;* to be sluggish. "*சொன்ன செல்லையி னூங்குமத் தூங்கிய மன்னன் வந்திலன்*" *(கம்பரா. கிட்கி.1). 12. காலத்தாழ்வாதல்;* to delay. "*தூங்குக தூங்கிச் செயற்பால்*" *(குறள்.672). 13. நிலையாகத் தங்குதல்;* to tarry, remain. "*கடப்பாட்டாளனுடைய பொருள்போலத் தூங்குதற்குரிய தன்று*" *(குறுந்.143). 14. செறிதல்;* to be crowded, dense. *15. மிகுதல்;* to abound. "*களி மகிழ் தூங்கி*" *(காசிக. சத்.18). 16. மெத்தென நடத்தல்;* to walk slowly. *17. அழுந்துதல்;* to rest profoundly.

தூசறு–த்தல் tūšaṟu-, *5* செ.குன்றாவி. (v.t.) *அடியோடு அழித்தல் (சங்.அக.);* to exterminate.

தூண்டிக்காட்டு–தல் tūṇḍi-k-kāṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. விளக்கம் தருதல்;* to explain. *2. பிறன் செய்த குற்றத்தை அவனிடம் குத்திக் காட்டுதல்;* to bring home one's faults; to upbraid.

தூண்டிக்கொடு–த்தல் tūṇḍi-k-koḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. நினைவூட்டுதல்;* to remind. *2. குறிப்பாக அறிவித்தல்;* to hint, give the cue. *3. கோட் சொல்லுதல் (வின்.);* to slander. *4. குற்றத்தை வெளியிடுதல் (வின்.);* to expose one's crime.

தூண்டிப்பிடி–த்தல் tūṇḍi-p-piḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) *சிறுகுற்றத்தைப் பெரிதாக்குதல் (வின்.);* to hold up or magnify little faults.

தூண்டில்போடு–தல் tūṇḍil-pōḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1. தூண்டிலிடுதல்;* to angle. *2. உளவறிதல்;* to sound gently. *3. தன் வயப்படுத்துதல்;* to entice, allure.

தூண்டிவிடு–தல் tūṇḍi-viḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) *1. விளக்கைத் தூண்டுதல்;* to trim a lamp. *2. தூண்டிக்கொடு-. பார்க்க;* seetūṇḍi-k-koḍu-.

தூண்டு–தல் tūṇḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. விளக்குத் தூண்டுதல்;* to trim, as burning lamp. "*தூண்டு சுடரனைய சோதி கண்டாய்*" *(தேவா.843). 2. கிளப்பிவிடுதல்;* to excite, stir up. *3. செலுத்துதல்;* to spur, goad. "*கடகரி புரவி தூண்டு மாலாழி யந்தேர்*" *(கம்பரா. கும்ப.316). 4. அனுப்புதல்;* to send. "*சேனை முற்று மவன் றுணையாகத் தூண்டி*" *(பிரமோத்.7:58). 5. ஏவுதல்;* to command. *6. நினைப்பூட்டுதல்;* to remind. *7. குறுதல்;* to pound, as with a pestle. *8. தள்ளுதல்;* to push, force forward.

தூணி–த்தல் tūṇi-, *4* செ.கு.வி. (v.i.) *பருத்தல்;* to grow stout, big.

தூதாடு–தல் tūdāḍu-, *5* செ.கு.வி. (v.i.) *தூதாகப் போதல்;* to act as a messenger. "*நாடிநின் றூதாடித் துறைச் செல்லாள்*" *(கலித்.72).*

தூப்பஞ்செய்–தல் tūppā-ñ-sey-, *1* செ.கு.வி. (v.i.) *தூய்மை செய்தல்;* to clean. "*கண்டவர் காட்சியைத் தூப்பஞ் செய்துடன்*" *(மேருமந்.1271).*

தூர்'(ரு)–தல் tūr-, *2* செ.கு.வி. (v.i.) *1. நிரம்புதல்;* to be filled up. "*இருடூர்பு புலம்பூர*" *(கலித்.120). 2. அடைபடுதல்;* to be closed. "*தூர்ந்த துரப்பமை யாணி*" *(பொருந.10). 3. அழிதல்;* to be extinguished, to perish. "*தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே*" *(நான்மணி.76). 4. மறைதல்;* to disappear. "*வள்ளி நடந்த வழி தூர்ந்திடாது*"

(வெங்கைக்கோ.345). 5. நெருங்குதல்; to come to close quarters. "இருவரும் ஒதுங்கியுந் தூர்ந்தும் பொருதலின்" *(தொல். பொருள். 68, உரை, பக்.219).*

தூர்[2]–த்தல் tūr-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. அடைத்தல்;* to fill up, close up, as a well. "கடறூர்த்தன் மலையகழ்தல்" *(சீவக.2165). 2. மறைத்தல்;* to hide, cover. "விண்ணவர் விசும்பு தூர்த்தான்" *(கம்பரா. கைகேயி.74). 3. உட்செலுத்துதல்;* to insert. "பழுக்கும் பழத்தைத் தூர்த்து" *(தைலவ. தைல.134). 4. மிகப் பொழிதல்;* to pour fourth in showers as arrows. "தூர்க்கின்ற மலர்மாரி தொடரப்போய்" *(கம்பரா. இராவணன் வதை.199).*

தூர்[3]–த்தல் tūr-, *4* செ.குன்றாவி. (v.t.) பெருக்கித் தூய்மை செய்தல்; to sweep. "சினக ராலயந் தூர்ப்பது திருமெழுக்கிடுதல்" *(உபதேசகா. சிவபுண்ணிய.50).*

ம. தூல்குக

தூர்கட்டு–தல் tūr-kaṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) *1. மரஞ்செடி முதலியன அடி பருத்தெழுதல்;* to grow with a big stump, as a young tree. *2. கொத்தாய் முளைத் தெழுதல்;* to grow in clusters. நெற்பயிர் தூற்கட்டி யெழுந்தது.

தூர்வாரு–தல் tūr-vāru-, *5* செ.கு.வி. (v.i.) கிணற்று வண்டல்களை வாரி எடுத்தல்; to clean out, as a well.

தூர்வைசெய்–தல் tūrvai-šey-, *1* செ.குன்றாவி. (v.t.) நிலத்தைக் கொத்தித்திருத்துதல்; to digup, earth, to plough. "வேரற வகழ்ந்து போக்கித் தூர்வை செய்து" *(பதினொ. திருவிடைமும். 10).*

தூரு–தல் tūru, *5* செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல் *(நாஞ்.);* to go to stool.

ம. தூருக.

தூவு–தல் tūvu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. தெளித்தல்;* to sprinkle, strew. "நன்னீர் தூய்" *(திவ். திருவாய்.1.6:1). 2. இறைத்தல்;* to scatter, spread out, as grain for fowls. *3. மிகச் சொரிதல்;* to shower forth, as arrows. "வெங்கணை தூவி" *(சீவக.453). 4. அளக்கும்போது இலேசாகமேற் பெய்தல்;* to put loosely in a measure, as flour while measuring. தூவியளக்கிறான். *5. பூத்தூவி வழிவடுதல்;* to strew or offer flowers in worship. "தீபமொடு தூபமலர் தூவி" *(தேவா.542, 3). 6. ஒழிதல்;* to rest, cease. "கைதூவே னென்னும் பெருமையின்" *(குறள்.1021) (சீவக.2917, உரை).*

தூவு[2]–தல் tūvu-, *5* செ.கு.வி. (v.i.) *1. மழை பெய்தல் (வின்.);* to rain.

தூள்கிளப்பு–தல் tūḷ-kiḷappu-, *5* செ.கு.வி. (v.i.) திறமை முதலியவை சிறப்பாக வெளிப்படுகிற வகையில் ஒன்றைச் செய்தல் அல்லது நிகழ்த்துதல்; to extremely well."மட்டைப் பந்தாட்டத்தில் அவர் தூள் கிளப்பிவிட்டார்".

தூள்படு–தல் tūḷ-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1. முனைப்பாக செயற்படுதல்;* to be expedited with great eclat. செயல் தூள்படுகிறது. *2. அமளியுடன் நிகழ்தல்;* to be in a commotion. குழந்தையைக் காணாமல் வீடு தூள்பட்டது.

தூள்படுத்து[1]–தல் tūḷ-paḍuttu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. தூளாக்குதல்;* to pulverise, reduce to powder. *2. முற்றும் அழித்தல்;* to destroy utterly. "எனதுமிடி தூள்படுத்தி" *(திருப்பு.1042).*

தூள்படுத்து[2]–தல் tūḷ-paḍuttu-, *5* செ.கு.வி. (v.i.) புரளி *(அட்டகாசம்)* பண்ணுதல்; to make a show of great strength or ability.

தூள்பற–த்தல் tūḷ-paṛa-, *3* செ.கு.வி.(v.i.) பலரும் அறியும்படி அதிகாரம் வெளிப்படுதல் அல்லது பணம் செலவழித்தல்; to be loudly displayed. வீட்டில் மூத்த மருமகள் அதிகாரம் தூள் பறக்கிறது.

தூளா–தல் tūḷā-, *6* செ.கு.வி. (v.i.) *1. தானே பொடியாதல்;* falling into pieces. *2. அரைப்பதினால் பொடியாதல்;* becoming reduced to poder by grinding or pounding. *(சா.அக.).*

தூளாக்கு–தல் tūḷākku-, *5* செ.கு.வி. (v.i.) பொடி செய்தல்; pulverising, reducing to dust.

தூளி[1]–த்தல் tūḷi-, *4* செ.கு.வி. (v.i.) பருத்தல் *(வின்.);* to grow shout, bulky.

தூளி[2]–த்தல் tūḷi-, *4* செ.குன்றாவி. (v.t.) திருநீற்றை உடல்முழுவதும் பூசுதல் *(சங்.அக.);* to besmear one's body with the dry sacred ashes.

தூற்றிக்கொள்(ளு)–தல் tūṟṟi-k-koḷ-, *16* செ.குன்றாவி. (v.t.) தெரிந்து கொள்ளுதல்; to sift and select. "தூற்றிக் கொளப் பட்டார்" *(சீவக.2164).*

தூற்று–தல் tūṟṟu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. சிதறுதல்;* to scatter, disperse, spread or strew. "தென்ற றூற்றுங் குறுந்திவலை" *(கம்பரா. கடல்காண்.5). 2. தூசி போமாறு நெல்லைத் தூவுதல்;* to winnow. "கால்வரத் தூற்றி..... உயர்ந்திட்ட நெற்றிரளின்" *(சேதுபு. திருநாட்.74). 3. புழுதி முதலிய இறைத்தல்;* to throw up, as dust in the air. "புழுதியைத் தூற்றாதே". *4. பரப்புதல்;* to spread. "அரும்பொதி வாசஞ் சிறுகாற் செல்வன் மறுகிற் றூற்ற" *(சிலப்.4:18). 5. பலருமறியப் பழிகூறுதல்;* to publish abroad evil reports; to defame, slander. "துன்னியார் குற்றமுந் தூற்று மியல்பினார்" *(குறள்.188). 6. அறிவித்தல்;* to make known. "வாரமு நாளுந் தூற்றி" *(கம்பரா. திருமுடி. 25). 7. வீண்செலவு செய்தல்;* to squander, lavish, waste.

தூறாக்கு–தல் tūṟākku-, *5* செ.குன்றாவி. (v.t.) பழித்தல் *(வின்.);* to defame, cast aspersion on one's character.

தூறாய்ப்போ¹–தல் tūṟāy-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *செய்தி பரவுதல் (வின்.);* to be rumoured abroad.

தூறாய்ப்போ²–தல் tūṟāy-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *தலைமயிர் எண்ணெய்ப் பசையற்றுப் போதல் (இ.வ.);* to be come free from any trace of oil, as hair.

தூறு¹–தல் tūṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மழைத்துளி விழுதல்;* to drizzle. *2. செய்தி பரத்தல்;* to spread as news. *3. கிளைத்தல் (வின்.);* to sprout forth, branch forth, become bushy. *4. சடை பற்றுதல்;* to become shaggy and rough.

தூறு²–தல் tūṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பழித்தல் (இ.வ.);* to traduce, slander.

bj

தெக்கு–தல் tekku-, *5 செ. குன்றாவி* (v.t.) *1. கொள்ளுதல்;* to receive, take. "*தெக்குநீர்த் திரைகள் மோதும்*" *(தேவா.839, 2). 2. கொழித்தல்;* to winnow. *தெக்கிய மாவைத் தின்னலாம் (உ.வ.).*

ம. தெக்குக; க. தெகெ, தெகு; தெ. திடியு, திடுசு; து. தெகுனி; கொலா. திப்; நா. திவ்வ

தெகிழ்–தல் tegiḻ-, *3 செ.கு.வி.* (v.i.) *1. விளங்குதல்;*to be manifest; to shine. "*தெகிழ்ந்த மாதவத் தேசினான்*" *(விநாயகபு.59:29). 2. வாய்விடுதல்;* to blossom, open, as the mouth. "*தேங்கயத் தணிமலர் தெகிழ்ந்த நாற்றமும்*" *(சீவக. 1440). 3. நிறைதல் (திவா.);* to be full. "*துணர் தெகிழ்ந்துக்க நனையுள்*" *(மாறனலங். 261, உதா. 651).*

தெகுட்டு–தல் teguṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *தெவிட்டுதல்;* to cloy, glut. "*மாளாமையாலுந் தெகுட்டா மையாலும்*" *(ஈடு.6, 7).*

தெகுள்–தல்(தெகுடல்) tekuḷ-, *12 செ.கு.வி.* (v.i.) *1. நிறைதல் (பிங்.);* to be full. *2. பெருகுதல்;* to increase, overflow.

தெசி–த்தல் teši-, *4 செ. குன்றாவி.* (v.t.) *கைவிடுதல்;* to abandon. "*சிகை நூறெசித்துச் செபங்கள் பண்ணி*" *(பாடு.71, சந்நியாசம், 1).*

தெட்டு¹–தல் teṭṭu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. வஞ்சித்தல்;* to deceive, cheat, defraud, swindle. "*தெட்டிப் பொருள் பறித்த பாவம்*" *(பணவிடு. 340). 2. பறித்தல்;* snatch.

தெட்டு²–தல் teṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *நிறைதல்;* to be sufficient.

தெட்டுண்(ணு)–தல் teṭṭuṇ-, *13 செ.குன்றாவி.* (v.t.) *கவர்ந்துண்ணப்படுதல்;* to be snatched and devoured. "*தெட்டுண்டபோன் முழுத் திங்களென் றேக்கறும்..... செம்பாம்பு*" *(குமர. பிர. முத்துக். பிள்ளை.54).*

தெண்டனிடு–தல் teṇḍaṉ-iḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *தண்டனிடுதல்;* to do homage by prostration. "*அடியேன் றெண்டனிட்ட விண்ணப்பம்*" *(தனிப்பா. i, 401, 19).*

ம. தெண்டனிடுக.

தெண்டி¹–த்தல் teṇḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒறுத்தல்;* to chastise, punish. "*தெலுங்கப்ப நாரணன்றெண்டிக்க*" *(தனிப்பா. i, 83, 165). 2. வற்புறுத்துதல்;* to insist, press.

ம. தெண்டிக்குக.

தெண்டி²–த்தல் teṇḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வருந்தி முயலுதல்;* to make efforts, take pains.

தெண்டு¹–தல் teṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கிளப்புதல்;* to raise up; to move with a lever. *2. மிண்டுதல் (யாழ்.அக.);* to attack, assail.

தெண்டு²–தல் teṇḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *நரம்பு வலித்தல் (யாழ்.அக.);* to affect the joints, limbs, as cramp.

தெண்டு³–தல் teṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *இரத்தல் (இ.வ.);* to beg.

ம. தெண்டுக

தெத்து²–தல் tettu-, *5 செ.கு.வி.* (v.i.) *திக்குதல்;* to stammer *(சா.அக.).*

தெந்தனமடி–த்தல் tendaṉam-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வீணே திரிதல்;* to loaf, loiter about. *2. வேலையை உழப்புதல் (இவ.);* to shirk work.

தெய்வமாடு–தல் teyvam-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *தெய்வத் தன்மையுறுதல் (கொ.வ.);* to be possessed or inspired by a spirit.

தெய்வமுறு–தல் teyvam-uṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. தெய்வ உணர்வு மேலிடல்;* to become possessed by a spirit. "*சாலினி தெய்வமுற்று*" *(சிலப்.12:8). 2. தெய்வத் தன்மையுறுதல் (சிலப்.19:26 அரும்.);* to gain godhood.

தெரி¹–தல் teri-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தோன்றுதல்;* to be seen, to become evident. "*அந்த விண்மீன் கண்ணுக்கு நன்கு தெரிகின்றது*". *2. விளக்கமாதல்;* to be understood, intelligible, clear. "*தன்னா னிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்*" *(கம்பரா. நகர்நீ.37). 3. காணும் ஆற்றலைப் பெற்றிருத்தல்;* to possess the power of sight. "*அவனுக்குக் கண் தெரிகின்றது*". *4. மனமறிதல்;* to be conscious, as of one's guilt. "*தெரிந்து செய்த பாவம்*".

ம. தெரியுக; க. திளி; தெ. தெலியு; து. தெரியுனி;குட. திரி; கோத. தெய்ர்; துட. திர்ய; கூ. திரி.

தெரி²–தல் teri-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. ஆராய்தல்;* to investigate, test, ascertain, enquire. "*திறந் தெரிந்து தேறப்படும்*" *(குறள்.501). 2. அறிதல்;* to know, understand. "*எல்லாந்தெரியக் கேட்குநர் யார்?*"

(பரிபா.12, 38). 3. தெரிந்தெடுத்தல்; to select, choose. "*புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே*" *(கலித்.7). 4. கேட்டு அறிதல்;* to learn through listening. "*தெரிதல் நினைதலெண்ணலாகத் திருமாலுக்கு*" *(திவ். திருவாய்.6, 9, 11). 5. அரித்தெடுத்தல் (திவா.);* to sift *(செ.அக.).*

தெரி³–தல் teri-, *4 செ.கு.வி.* (v.i.) *ஆராய்ந்து வரையறை செய்தல்; எல்லை தெரித்தல்;* to determine the border. "*எல்லை தெரித்த பிடி சூழ்ந்த பிடாகை நடந்து கல்லும், கள்ளியும் நாட்டி*" *(பெரிய வெய்டன் செப்பேடுகள்).*

தெரி⁴–த்தல் teri-, *4 செ.குன்றாவி* (v.t.) *1. வெளிப் படுத்துதல்;* to make evident, bring to view. "*தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே*" *(கம்பரா. சிறப்.6). 2. சொல்லுதல் (திவா.);* to tell, declare, inform. *3. குறிப்பிட்டு விளக்குதல்;* to explain specifically. "*தெரிந்து மொழி கிளவி*" *(தொல். சொல். 56). 4. எழுதுதல் (பிங்.);* to write, inscribe. *5. கொழித்தல் (யாழ்.அக.);* to sift. *6. தெரிந்தெடுத்தல்;* to choose, select. "*தெரித்த கணையாற் றிரிபுர மூன்றுஞ் செந்தீயின் மூழ்கவே*" *(தேவா. 10.7). 7. பங்கிடுதல் (யாழ்.அக.);* to partition, divide. *8. காலங்கழித்தல்;* to pass, as a certain period of time.

தெரி⁵–த்தல் teri-, *4 செ.கு.வி.* (v.i.) *மாறுபடுதல் (யாழ்.அக.);* to be perverse.

தெரி⁶–த்தல் teri-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அகலல்;* to get rid of as diseases *(சா.அக.).*

தெரிபடு–தல் teri-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. தெரிந் தெடுக்கப்படுதல்;* to be selected. *2. தோன்றுதல்;* to appear.

தெரியத்தெரி–தல் teriya-t-teri-, *2 செ.குன்றாவி.* (v.t.) *தெளிவாயறிதல்;* to understand clearly. "*தெரியத் தெரியுந் தெரிவிலாதாரை*" *(நாலடி.247).*

தெரியப்படுத்து–தல் teriya-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அறிவித்தல்;* to explain, to submit, to make known, or reveal. "*அவன் தன் முதலாளியிடத்தில் தெரியப்படுத்தினான்*".

தெரியவுணர்–தல் teriya-v-uṇar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *தெளியவறிதல்;* to understand clearly. "*தேறித் தெரியவுணர்நீ*" *(பரிபா.6, 92).*

தெரிவி–த்தல் terivi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அறிவித்தல்;* to explain, point out, show, teach. *2. வெளிப்படுத்துதல்;* to bring to light, manifest, reveal, display.

தெரிவிடு–தல் teriviḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. தெரிந் தெடுத்தல்;* to choose, select, cull. *2. ஆராய்தல்;* to examine.

தெருட்டு–தல் teruṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அறிவுறுத்துதல்;* to inform, make known. "*தலைமகள் உடன் போகியவழித் தெருட்டு வார்க்குச் செவிலித்தாய் சொல்லியது*" *(ஐங்குறு.380, உரை). 2. மனம் தெளியச் செய்தல்;* to convince, persuade, enlighten the mind. *3. ஊடல் தீர்த்தல்;* to pacify, make up a love-quarrel. "*தெருட்டவுந் தெருளா தூடலொடு துயில்வோர்*" *(மணிமே.7:52). 4. வற்புறுத்துதல்;* to confirm, assure. *5. இசை பார்க்க யாழ் நரம்பை அழுந்தத் தீண்டித் திருகிவிடுதல்;* to rub and test the tone of a lute string. "*திருந்து நரம்பை யுறத்தொட்டுத் திருகிவிட றெருட்டல்*" *(கூர்மபு. கண்.140).*

தெருமரு–தல் teru-maru-, *12 செ.கு.வி.* (v.i.) *மனஞ் சுழலுதல்;* to be unnoerved, to sink under distress, to be confused in mind. "*வளைமுன் கை பற்றி நலியத் தெருமந்திட்டு*" *(கலித்.51).*

தெருவாக்கு–தல் teruvākku-, *8 செ.குன்றாவி.* (v.t.) *வீணாக்குதல்;* to make it useless. "*எல்லாத்தையும் தெருவாக்கிட்டான்*" *(நெல்லை).*

தெருவில்விடு–தல் teruvil-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *ஏதிலியாய் விடுதல்; களைகணின்றி விடுதல்;* abandon, helpless.

தெருள்¹(ளு)–தல் teruḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. உணர்வுறுதல்;* to know, to gain true knowledge. "*தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் அருளாதான் செய்யும் அறம்*" *(குறள்.249). 2. தெளிதல்;* to perceive, ascertain, understand clearly. "*தெருண்ட வறிவினர்*" *(நாலடி.301). 3. பூப்பெய்துதல்;* to arrive at puberty as a girl. *4. புகழடைதல்;* to be renowned. *5. விளங்குதல்;* to be clear lucid. "*வளமலை நாடனைத் தெருள..... நீ யொன்று பாடித்தை*" *(கலித்.43).*

தெல்லடி¹–த்தல் tel-l-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *தெல் விளையாடுதல்;* to play at the game of ***tel.***

தெல்லடி²–த்தல் tel-l-aḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வஞ்சனை செய்தல்;* the practice fraud. "*தெல்லடித்துப் புலவரெனத் திரியலாமே*" *(தமிழ்நா.230).*

தெல்லுக்கட்டு–தல் tellu-k-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. இழுபறிப்படுதல்;* to be pushed this way and that, to be distracted. *2. பாத்தி கட்டுதல்;* to put up ridges, as in a field.

தெவ்வு–தல் tevvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொள்ளுதல் (பிங்.);* to get, take, obtain. "*நீர் தெவ்வுநிரைத் தொழுவர்*" *9மதுரைக்.89). 2. கவர்தல்;* to seize, grasp, steal. "*கடவுளரைத் தெவ்வினீரேற் பொருந்தவவர் தமைக் கொடுமின்*" *(விநாயகபு. 80, 131). 3. நிறைத்தல்;* to fill. "*பாடற்பயத்தாற் கிளர்செவி தெவி*" *(பரிபா. 11, 69). 4. மன்றாடிக் கேட்டல்;* to beg hard, importune. "*அந்தச் செயலுக்குத் தெவ்வுகிறான்*" *(தஞ்சை).*

தெவிட்டு¹–தல் teviṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தேக்கிடுதல்;* to be sated or satiated fully. *தெவிட்டாக்கனி பிள்ளை, தெவிட்டாப் பருகம் தண்ணீர் (பழ.).*

தெவிட்டு²–தல் teviṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தேக்கிடுதல்;* to be sated, glutted as the stomach, to be cloyed.

"தெவிட்டி விடுகிறேனோ" (ஈடு. 2, 6, 5). 2. அசையிடுதல்; to chew the cud. "வன்கலை தெவிட்டும்" (புறநா.161). 3. உமிழ்தல்; to spit. 4. நினைத்தல்; to think. 5. வாயாலெடுத்தல் (வாந்தித்தல்); to vomit, loathe. 6. திரளுதல்; to gather in a crowd. "மான்கண மரமுதற் றெவிட்ட" (குறிஞ்சிப்.217). 7. தங்குதல் (திவா.); to abide, stay, remain. 8. ஒலித்தல்; to make noise. "வரிநுணல் சுறங்கத் தேரை தெவிட்ட" (ஐங்குறு. 468). 9. நிறைதல் (சூடா.); to become full. "செஞ்சுடர் வெள்ளந் திசை தெவிட்ட" (திருவாச.3, 77).

க. தேகட்டு

தெவுள்(ளு)–தல் tevuḷ(ḷu)-, 2 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல் (அக.நி.); to become full filled. 2. திரளுதல்; to overflow, increase.

தெழி[1]–த்தல் teḻi-, 4 செ.குன்றாவி. (v.t.) மிதித்து உழக்குதல்; to thresh. "நெற்போர் தெழிக்கும் பகட்டிளங் காளை" (நன். 101, உரை).

தெழி[2]–த்தல் teḻi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அதட்டுதல்; to drive or control by shouting; to bluster, utter threats. "பகடு தெழி தெள்விளி" (அகநா.17). 2. முழக்குதல்; to sound forth, cause to sound, as a drum. "செங்கண்மா றெழிக்கப் பட்ட வலம்புரி" (சீவக. 811). 3. அடக்குதல்; to subdue, suppress. "பஞ்சேந்தியக் குஞ்சரமுந் தெழித்தேன்" (பதினொ. பொன்வண். 23). 4. பிரித்தல்; to separate. "ஓய்யெனத் தெழித்தாங்கு" (சிலப். 15:48, உரை). 5. வருந்துதல்; to trouble, distress. "உலகு தெழித்துழலு மரக்கர் கோமான்" (தேவா.133, 8).

தெழி[3]–த்தல் teḻi-, 4 செ.கு.வி. (v.i.) ஒலித்தல்; to sound, resound, roar. "தெழிக்கும் புறங் காட்டிடை" (தேவா.462, 4).

தெள்–தல் (தெட்டல்) teḷ-, 9 செ.கு.வி. (v.i) தெளிதல்; to become clear, clear - minded.

தெள்கு–தல் teḷgu-, 5 செ.கு.வி. (v.i) 1. தெளிவாதல் (யாழ்ப்.); to become clear. 2. தேங்குதல்; to be over crowded, overfull. "திரைநீர்த் தெள்கி" (திவ். பெரியதி.3, 47).

தெள்ளத்தெளி–தல் teḷḷa-t-teḷi-, 3 செ.கு.வி. (v.i.) நன்றாய்த் தெளிதல்; to be free completely from obscurity.

தெள்ளிப்போடு–தல் teḷḷi-p-pōḍu-, 19 செ.குன்றாவி. (v.t.) 1. கொழித்துப் போடுதல்; to separate large from small pieces as with a fan. 2. மருந்துப் பொடியைச் சன்னத் தூளாகவே பிரித்துப் போடல்; to separate the fine powdered portion of medicine from the crushed portion (சா.அக.)

பட. தெள்ளு.

தெள்ளு[1]–தல் teḷḷu-, 5 செ.கு.வி. (v.i.) 1. தெளிவாதல்; to be clear, lucid, pure, refined as language; to shine clearly; to gleam. "தெள்ளுங் கழலுக்கே" (திருவாச. 10, 19). 2. அறிவு முதிர்தல்; to be mature in knowledge or experience.

தெள்ளு[2]–தல் teḷḷu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஆராய்தல்; to examine, sift. "தெள்ளியறிந்த விடத்து மறியாராம்" (நாலடி.380). 2. கொழித்தல்; to sift, as grain. "எள்ளைத் தெள்ளி உண்" 3. புடைத்தல்; to sift gently in a winnowing fan. இடித்த சோளத்தைத் தெள்ளிக் கொடு. 4. அலைக்கொழித்தல்; to waft, as the sea; to cast upon the shore. "கரி மருப்புத் தெள்ளி நறவந் திசை திசை பாயும்" (திருக்கோ.128).

தெளி[1]–தல் teḷi-, 3 செ.கு.வி. (v.i.) 1. கசடு நீக்கித் தெளிவுறுதல்; to clear from a sediment. 2. நோயினின்று குணமடைதல்; to recover from illness. 3. மூர்ச்சை தெளிதல்; to regain consciousness. 4. ஒன்றையே சிந்தித்தல்; to ponder, ruminate on only one thing. 5. துளைத்தல்; to pierce, perforate. 6. தானே அறிதல்; to know or experience one self.

ம. தெளியுக; க. திளி; தெ.தெலி; து.தெலியுனி

தெளி[2]–தல் teḷi-, 3 செ.கு.வி. (v.i.) 1. தெளிவாதல்; to become clear, limpid, transparent, as water by the settling of sediment. 2. அமைதியுறுதல்; to become serene, as the mind. "தெளியா நோக்க முள்ளினை" (அகநா.33). 3. ஒளிர்தல்; to be bright, as the countenance. 4. வெண்மையாதல்; to become white, as clothes by washing. 5. ஒழிதல்; to clear away, disappear, as famine, as an epidemic. "வற்கடந் தெளிந்தது". 6. ஐயம் நீங்குதல்; to clear up, as doubt; to become evident, obvious, as the meaning of a passage. பேராசிரியரின் விளக்கம் கேட்டபின் தெளிந்தது. 7. முடிவுக்கு வருதல்; to come to a conclusion. 8. குணப்படுத்துதல்; to be cured, as disease. "நோய் தெளிந்துவிட்டது". 9. செழித்தல்; to grow stout, fat, sleek, as persons or animals; to thrive, as vegetation. "ஆள் இப்போது தெளிந்திருக்கிறான்". 10. மேல்வரும்படி காணுதல்; to turn out, as clear profit; to accrue, as gain; to be clear gain after allowing for all expenses.

தெளி[3]–தல் teḷi-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. ஆராய்தல்; to consider, investigate. 2. அறிதல்; to know, understand, perceive, experience. "பிரியலேந் தெளிமே" (குறுந். 273). 3. நம்புதல்; to trust, confide in. "தெளியாதான் கூரையுட் பல்காலுஞ் சேறலும்" (திரிகடு. 11). 4. துளைத்தல் (வின்.); to pierce, perforate.

தெளி[4]–த்தல் teḷi-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. துப்புர வாக்குதல்; to clear, free, as from turbid or feculent matter; to clarify, refine, clean. 2. தெளிவித்தல்; to make known, affirm clearly, cause to believe. "தெளித்த சொற்றேறியார்க் குண்டோ தவறு" (குறள்.1154). 3. ஊடலுணர்த்துதல்; to pacify, make up. as a love-quarrel. "பரிந்தோட் குறுகி யிரத்தலுந் தெளித்தலும்" (தொல். பொருள். 41). 4. வெளிப்படுத்துதல்; to make, manifest, reveal. 5. உறுதிசெய்தல் (யாழ்ப்.அக.); to determine. 6. தூவுதல்; to strew scatter, sprinkle, as water. "நறுவிரை தெளித்த நாறிணர்மாலை" (அகநா.126). 7. விதைத்தல்; to sow, as seed. 8. கொழித்தல் (வின்.); to cast up in sifting, as sand,

as pearls. 9. புடைத்தல் *(வின்.);* to winnow, separate large from small particles by a fan. 10. சாறுவடித்தல்; to extract the essence. "திருக்கொண் மாங்கனி தெளித்த தேறலின்" *(சீவக. 2402).* 11. உருக்கியோட வைத்தல்; to melt, as in refinning gold. "தெளித்த செம்பொற் சுண்ணம்" *(சீவக. 1956).* 12. நீக்குதல்; to dispel, as fear, sorrow, delirium.

தெளி[5]–த்தல் teḷi-, *3 செ.கு.வி.* (v.t.) சூளுறுதல்; to take an oath. "தீதிலேமென்று தெளிப்பவும்" *(கலித்.81, 33).*

தெளிந்துகொடு–த்தல் teḷindu-koḍu-, *4 செ.கு.வி* (v.i.) சூளுரைத்தலால் ஐயம் நீக்குதல்; to remove doubt, as by an oath.

தெளிந்துவருதல் teḷindu-varu-, *3 செ.கு.வி.* (v.i.) *1.* நோய் குணமடைதல்; to progress from illness showing improvment. *2.* நீர் தெளிவாகுதல்; to become clear as water. *3.* மயக்கந்தெளிதல்; to recover gradually from giddiness *(சா.அக).*

தெளியக்கடை–தல் teḷiya-k-kaḍai-, *2 செ.குன்றாவி.* (v.t.) சிக்கனமாயிருத்தல்; to thrift.

தெளியக்காண்–த(ட)ல் teḷiya-k-kāṇ-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1.* விளக்கமாய்ப் பார்த்தல்; to see distinctly and clearly. *2.* ஐயமற அறிதல்; to know or understand without any doubt. *3.* முற்றுமுணர்தல்; to have complete knowledge of a thing. *4.* அறிவு தெளிவானதால் காணும் காட்சி; to have divine vision through intellectual advancement *(சா.அக.).*

தெளிவி–த்தல் teḷivi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* அறிவித்தல்; to announce. *2.* தெரியப் பண்ணுதல்; to make one to understand. *3.* விளக்குதல்; to explain.

தெளிர்[1]–தல் teḷir-, *2 செ.கு.வி.* (v.i.) ஒளி பெறுதல்; to shine, sparkle. "வண்ணந் தெளிர" *(பரிபா.10, 55).*

தெளிர்[2]–த்தல் teḷir-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* ஒலித்தல்; to sound, articulate. "இலங்குவளை தெளிர்ப்ப வலவ னாட்டி" *(ஐங்குறு.197). 2.* செழித்தல்; to be fertile. "வறந்த ஞாலந் தெளிர்ப்ப வீசி" *(ஐங்குறு.452). 3.* மகிழ்ச்சியுறுதல்; to be happy. "சேயிழை தெளிர்ப்பக் கவைஇ" *(அகநா.51).*

தெளிவாக்கு–தல் teḷivākku-, *5 செ.குன்றாவி.* (v.t.) தூயதாக்குதல்; to purify from feculant matter, to clarify, to make clear.

தெற்று[1]–தல் teṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* இடறுதல்; to stumble. "தெற்றுகாலின ரோடினர்" *(உபதேசகா. சிவவிரத.139). 2.* தடைப்படுதல்; to be obstructed, hindered. "இல்வாழ்க்கை யென்னு மியல்புடை வான்சகடஞ் செல்லாது தெற்றிற்று நின்று" *(அறநெறி.158, பக்.39) (யாழ்ப்.அக.). 3.* மாறுபடுதல் *(சூடா.);* to be perverse, obstinate. *4.* பிழை செய்தல்; to mistake, commit a fault, do wrong. "தெற்றினார் புரங்கள் செற்றார்" *(பெரியபு. திருநீலகண்ட. 3). 5.* முறுக்கிக் கொள்ளுதல்; to become intertwined. "தெற்றுகொடி முல்லையொடு" *(தேவா. 622,6). 6.* இகலுதல்; to quarrel. "சுமவாது மருட்டி யெங்குந் தெற்றிய விவனையோ முன் றெரிப்ப தின்று" *(திருவாலவா. 30, 23). 7.* வாய் கொன்னுதல்; to stammer in speaking, stutter. *8.* செறிதல்; to throng, to be dense, crowded. "கற்றவர் தெற்றிவர" *(திவ். பெரியாழ்.1, 5, 8).*

ம. தெற்றுக; *க.* தெத்து; *தெ.* தொற்றுபடு.

தெற்று[2]–தல் teṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* மோதுதல்; to beat, strike. "தெற்று வெண்டிரைச் சரையு" *(உபதேசகா. சிவநாம. 135). 2.* அலைத்தல்; to distrub, shake. "தேரரக்கன் மால்வரையைத் தெற்றியெடுக்க" *(தேவா. 46, 8). 3.* தடுத்தல்; to obstruct, hinder. "பிணப் பெருங் குன்றந் தெற்றி" *(கம்பரா. சம்புமாலி. 19). 4.* மாற்றுதல்; to change. "இது சந்திரன் தொழிலைத் தெற்றினமையால் தெற்றுருவகம்" *(வீரசோ. அலங். 18, உரை). 5.* பல்லைக் கடித்தல்; to gnash, grind, as the teeth. "தெற்றின ரெயிறுகள்" *(கம்பரா. கரன். 104). 6.* பின்னுதல்; to braid, plait entwine, weave. "குடம்பை நூறெற்றி" *(கல்லா. கணபதிதுதி). 7.* தொடுத்தல்; to bring up, tie together. "ஆய்பூந் தட்டத் தகத்தோடு தெற்றிய தாமம்" *(பெருங் வத்தவ.7, 26). 8.* இறுக்குதல் *(யாழ். அக.);* to tighten.

தெற்றென்(னு)–தல் teṟṟeṉ(ṉu)-, *5 செ.குன்றாவி.* (v.t.) தெளிதல்; to discern, conclude. "தெற்றென்க மன்னவன்கண்" *(குறள்.581).*

தெறி[1]–த்தல் teṟi-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* தாக்கப்பட்டு வெளிப்படுதல்; to strike and fly off. "மன்னவன் வாய்முதற் றெறித்தது மணியே" *(சிலப்.20:72). 2.* பிதுங்குதல்; to start, as eyes. "கண் தெறித்துப் போகிறது". *3.* பொறி அல்லது துளியாய்ச் சிதறுதல்; to be sprinkled, as drops or particles of water; to splash up, as spray; to fly off, as sparks. "கண்பனி நெகிழ்நூன் முத்தின் முகிழ்முலைத் தெறிப்ப" *(அகநா.289). 4.* முறிதல்; to break. *5.* அறுதல்; to burst asunder, snap in twain, as a rope. *6.* குலைதல்; to be scattered, as an army. "மாப்படை தெறித்துச் சிந்த" *(கம்பரா. மூலபல.134). 7.* துள்ளுதல்; to spring, leap, hop, as a stag. "தாவுபு தெறிக்கு மான்மேல்" *(புறநா.259). 8.* பிளத்தல்; to split. "தெறித்தன செறிசுடர்க் கவசம்" *(கம்பரா. கிங்கர. 32). 9.* முற்றுதல்; to be complete, full. "தெறிப்ப விளைந்த தீங்கந்தாரம்" *(புறநா. 258). 10.* வேறுபடுதல்; to be broken off, as friendship, to be disunited. *11.* நீங்குதல்; to be removed, cured, as a disease. "பிணி தெறித்துப் போயிற்று" *(வின்.). 12.* தவறுதல்; to fail, end unsuccessfully. "செயல் தெறித்துப் போயிற்று". *13.* குறும்பு பண்ணுதல்; to be mischievous. "அவன் மிகவும் தெறித்தவன்". *14.* செருக்குத் திமிராயிருத்தல்; to be proud. *15.* நரம்பு துடித்து நோவுண்டாதல்; to give the throbbing pain.

தெறி[2]–த்தல் teṟi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* விரலாற் சுண்டுதல்; to shoot with the finger and thumb.

2. விரலால் உந்துதல்; to twang, as a bow - string with the finger and thumb; to thrum, as the strings of a lute."*சிலையை நாண் டெறித்தான்" (கம்பரா. தேரேறு. 29). 3. உடைத்தல்;* to break, cut. "*பூட்டைத் தெறித்தான்*".

தெறி³–த்தல் teṟi-, *4* செ.கு.வி. (v.i.) *1. தெறிக்குதல்;* to break suddenly or to snap off. *2. விண் என வலித்தல்;* to throb pain as of boils. *3. கண் தெறிக்குதல்;* to grow blind by dazzling. *4. எட்ட விழல்;* to spirt as drops of particles of water *(சா.அக.).*

தெறிக்கடி–த்தல் teṟi-k-kaḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. சிதறவடித்தல்;* to scatter, disperse. *2. எதிரி அடங்கும்படி பேசுதல்;* to confound, puzzle, as in controversy *(செ.அக.).*

தெறிக்கப்பேசு–தல் teṟikka-p-pēšu-, *5* செ.குன்றாவி. (v.t.) *பொறுமையின்றி கடுத்துப் பேசுதல் (கொ.வ.);* to speak, rashly and inconsiderately. *(செ.அக.).*

தெறிபடு–தல் teṟi-paḍu, *20* செ.கு.வி. (v.i.) *1. சிதறுண்ணுதல்;* to be scattered, as cattle. *2. அலைந்துலைதல்;* to be tossed about, as a vessel at sea. *3. தோற்றோடுதல்;* to be discomfited, routed, as an army. *4. கலங்குதல்;* to be puzzled, confounded. *5. திக்கறுதல் (வின்.);* to be desolate, forsaken. *6. தவறுதல்;* to fail, come to naught. "*செயல் தெறிபட்டது*".

தெறு¹–தல் teṟu-, *6* செ.குன்றாவி. (v.t.) *1. சுடுதல்;* to burn, scorch. "*நீங்கிற் றெறூஉம்*" *(குறள்.1104). 2. தண்டஞ்செய்தல்;* to punish. "*கொடியோர்த் தெறுதலும்*" *(புறநா.29). 3. அழித்தல்;* to destroy. "*பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்*" *(கலித்.11). 4. கொல்லுதல் (பிங்.);* to kill. "*முள்ளி னெய்தெற விழுக்கிய*" *(மலைபடு. 301). 5. வருத்துதல்;* to trouble, plague. "*செம்முக மாத்தெறு கட்டழிய*" *(திருக்கோ.313). 6. நெரித்தல் (தி.வா.);* to crush,bruise. *7. காய்ச்சுதல்;* to boil down. "*கரும்பினைத் தெற்ற கட்டியின்*" *(காசிக. இல்ல.3). 8. சினத்தல்;* to be angry at or with. "*தெறலருங் கடுந்துப்பின்*" *(மதுரைக்.32). 9. கொட்டுதல்;* to sting, as a wasp. "*கடிதாகத் தெறுதலை யுடைய மிக்க குளவியினம்*" *(பதிற்றுப். 71, உரை). 10. மிகுத்தல் (பிங்.);* to increase.

தெறு²–தல் teṟu-, *6* செ.கு.வி. (v.i.) *1. தங்குதல்;* to tarry. *2. நீங்குதல்;* to leave, forsake. "*பொய்ம்மை தெறுவது*" *(திருநூற்.13).*

தெறு³–த்தல் teṟu-, *11* செ.குன்றாவி. (v.t.) *1. நெறித்தல் (பிங்.);* to crush, bruise. *2. குவித்தல்;* to heap. "*விருந்தின் மன்ன ரருங்கலந் தெறுப்ப*" *(அகநா.54).*

ம. தெறுக்குக (சுருட்டுதல், பின்னுதல்)

தென்று–தல் teṉṟu-, *5* செ.கு.வி. (v.i.) *1. சிதறுதல்;* to be scattered, split to pieces. "*ஆயிரந்தோளுந் திருச்சக்கர மதனாற் றென்றித் திசை திசைவீழ*" *(திவ். பெரியாழ். 5, 3, 9). 2. இனம்பிரிதல்;* to stray away, as from a group. "*தென்றியிருளிற் றிகைத்த கரி*" *(தேவா.1156, 5).*

ம. தென்னுக.

தென்னிப்பார்–தல் teṉṉi-p-pār-, *4* செ.குன்றாவி. (v.t.) *வலையின் அப்போதைய நிலையை எண்ணிப் பார்த்தல் (மீனவ.);* to watch the prevailing condition of a net.

nj

தேக்கிடு–தல் tēkkiḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1. உணவின் மிகுதியால் அதில் வெறுப்பு நிலையடைதல்;* to be satiated, as a person with rich food. *2. ஏப்பமிடுதல்;* to belch, eructate. "*நெருப்புத் தின்று தேக்கிடுகின்றது*" *(கம்பரா. இலங்கையெரி. 46). 3. நீர் முதலியன உள் நிரம்பி வெளிவருதல்;* to brim over. "*அமுத மயிர்க்கா றோறுந் தேக்கிடச் செய்தனன்*" *(திருவாச.3, 171).*

தேக்கு¹–தல் tēkku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. நீர் முதலியவற்றை ஓரிடந் தேங்கக் கட்டுதல்;* to stop the flow, as of water; to dam up. "*செவ்வழி நீரொடுங் குருதி தேக்கினான்*" *(கம்பரா. கும்பகருண. 99). 2. நிரம்பப் பருகுதல்;* to drink to the full. "*நிறைமத்த மதுவைத் தேக்கி*" *(கம்பரா. அதிகாய. 215). 3. தடை பண்ணுதல் (சங்.அக.);* to obstruct.

தேக்கு²–தல் tēkku-, *5* செ.கு.வி. (v.i.) *1. நிறைதல்;* to be full, copious, abundant, replete. "*தேக்கிய தேனுடன்*" *(கல்லா. 1). 2. ஏப்பம் விடுதல்;* to belch. "*ஆலமுண் டமுதேமிகத் தேக்குவர்*" *(தேவா. 529, 3). 3. தெவிட்டுதல்;* to be sated, glutted, cloyed, satiated. "*நாய்கழு கொருநாள் கூடியுண்டு தேக்கு விருந்தா முடலை*" *(தாயு. எந்நாட். யாக்கை.3).*

தேக்கெறி–தல் tēkkeṟi-, *2* செ.குன்றாவி. (v.t.) *நிரம்பவுண்ணுதல்;* to eat to the full. "*செயற்றலைநின் றுழப்பவர்க டேக்கெறிவர்*" *(தணிகைப்பு. நாட். 130).*

தேங்கு¹–தல் tēṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. நிறைதல்;* to fill, become full, rise to the brim. "*மதுவது தேங்கு கும்பம்*" *(திருப்பு. 501). 2. தங்குதல்;* to stay, stagnate. "*தேங்கு கங்கைத் திருமுடிச் செங்கணான்*" *(கம்பரா. காட்சி. 21). 3. மிகுதல் (வின்.);* to be crowded, abundant, copious.

தேங்கு²–தல் tēṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1. மனங்கலங்குதல் (பிங்.);* to be puzzled; to be in trepidation. "*நீர்... தேங்க வேண்டாவிறே*" *(ஈடு. 9, 7, 9). 2. கால நீட்டித்தல்;* to delay, tarry. "*தேங்காதிருவோ நேரிறைஞ்ச*" *(பெரியபு. திருநா. 267). 3. கெடுதல்;* to perish; to be ruined. "*தேங்காத மள்ளர்*" *(சீவக.16).*

தேங்கு³–தல் tēṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *அஞ்சுதல்;* to be afraid. "*நாம் இத்தைச் செய்யும்படியென் என்று தேங்குதல் அல்பமுமுடைய வனல்லன்*" *(திவ். பெரியாழ். 2, 9, 3, வியா. பக்.45).*

தேடிவை–த்தல் tēḍi-vai-, *4* செ.குன்றாவி. (v.t.) *பொருள் சேர்த்து வைத்தல்;* to earn and lay up.

தேடு[1]–தல் tēḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. துருவி நாடுதல்;* to seek, search for, enquire after. "தேடினே னாடிக்கண்டேன்" *(தேவா. 1189, 3). தேடித் தின்றவர் தெய்வத்தோ டொத்தவர் (பழ.). 2. ஈட்டுதல்;* to acquire, earn, procure. "பாடுபட்டுத் தேடி" *(நல்வழி.22). தேடிய மூலிகை காலில் தட்டினாற்போல (பழ.). 3. பேணல்;* to take care of, cherish, foster, provide for. *அவனை ஒருவருந் தேடுவாரில்லை (உ.வ.). தேடுவார் அற்றபிணம் தெருவோடு (பழ.).*

ம. தேடுக; குட. தெட்; துட. தொட்க்.

தேடு[2]–தல் tēḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *முயலல்;* to seek, try, as to do a thing. "கோயிலுக்கு எழுந்தருளத் தேட" *(குருபரம். 511). தேடிப் புதைத்துத் தெருவில் இருக்கிறதா? (பழ.).*

தேம்பிப்போ–தல்tēmbi-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *உலர்ந்து போதல்;* become dry.

தேம்பியழு–தல்tēmbi-aḻu-, *1 செ.கு.வி.* (v.i.) *விம்மியழுல்;* to sob violently *(சா.அக.).*

தேம்பு–தல் tēmbu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வாடுதல்;* to fade; wither, droop; to be tired; to faint. "கொழும்பதிய குடிதேம்பிச் செழுங்கேளிர் நிழல்சேர" *(மதுரைக். 167). 2. மெலிதல்;* to grow thin; to be emaciated. "ஆனாச் சிறுமைய ளிவளுந் தேம்பும்" *(குறிஞ்சிப். 26). 3. விம்மியழுதல்;* to sob violently. "விழிநீர் மல்கவே நின்று தேம்பு மன்னே" *(வெங்கைக்கோ. 329). 4. வருந்துதல்;* to be in trouble; to suffer. "அவாவினாற் றேம்புவார்" *(கலித். 97). 5. அழிதல்;* to perish. "ஊடியார் நலந்தேம்ப" *(கலித். 68). 6. ஆண்டழிக்க உரியதாதல்;* to be fit for enjoyment. "தேம்பூண் சுவைத்து" *(திவ். இயற். பெரியதிருவ. 14).*

ம. தேம்புக

தேய்[1]–தல் tēy-, *2 செ.கு.வி.* (v.i.) *1. உரைசுதல்;* to wear away by friction; to be rubbed. *2. குறைதல்;* to lessen, decrease, wane, as the moon; to waste away, as the oil in a burning lamp; to become exhausted. "தொடர்புந் தேயுமே நின்வயி னானே" *(குறுந்.42). தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் போகாது (பழ.). 3. மெலிதல்;* to be emaciated; to grow thin, as a child. "சிவனேநின்று தேய்கின்றேன்" *(திருவாச. 32, 8). 4. வலிகுன்றுதல்;* to become weakened. "அரம்பொருத பொன்போலத் தேயுமே" *(குறள். 888). 5. கழிதல்;* to lapse, pass, wear away, as time. *6. அழிதல்;* to be effaced, erased, obliterated by rubbing; to be destroyed. "தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்" *(கலித். 103). 7. சாதல்;* to die. "எம்பியோ தேய்ந்தான்" *(கம்பரா. பாசப்.5).*

ம. தேயுது; க. தேய்; தெ. தேயு; து. தேயுனி; பட. தேயி; குட., கோத. தேய்.

தேய்[2]–த்தல் tēy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உரைசச் செய்தல்;* to rub, rub away, waste by rubbing. "மாநாகங் கொண்டாற் கொப்புளாம் விரலிற் றேய்த்தால்" *(சீவக. 1288). 2. குறைத்தல்;* to reduce. "அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" *(குறள்.555). 3. அழித்தல்;* to kill, destroy. "செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை" *(திருமுருகு. 5). 4. துலக்குதல்;* to scour, scrub, polish by rubbing, as a wall, as a vessel; to clean, as teeth. *பாத்திரத்தைத் தேய்த்து வைத்தாள் (உ.வ.). காலையில் படுக்கையினின்று எழுந்தவுடனும் இரவில் படுக்கச் செல்லும் முன்பும் பல் தேய்த்தல் நலம். 5. துடைத்தல்;* to efface, erase, obliterate by rubbing. *எழுத்தைத் தேய்த்து விட்டான். 6. செதுக்குதல்;* to pare, shave, cut, as a gem. "மணியிற் றேய்த்த வள்ளமும்" *(கம்பரா. வரைக். 40). 7. எண்ணெய் முதலிய அழுந்தப் பூசுதல்;* to rub in, as oil, ointment or liniment. *காரிக்கிழமை தோறும் எண்ணெய்த் தேய்த்துக் குளிப்பது அவர் வழக்கம்.*

ம. தேய்க்குக.

தேய்த்துவிடு–தல் tēyttu-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. அழுக்கைத் தேய்த்து நீக்குதல்;* to rub the dust. *2. உப்பைத் தளம் வைத்து வாரும் முறையில் முதலில் படிந்த உப்பை அளத்தோடு தேய்த்துவிடுதல்;* to rub the salt, which in deposited first in the salt pan when scoop the salt from the floor. *(மீனவ.).*

தேர்[1]–தல் tēr, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. ஆராய்தல்;* to examine, investigate inquire into. "தேர்ந்து செய்வஃதே முறை" *(குறள்.541). 2. அறிதல்;* to understand, know. "தேர்ந்தனன் முருகன் வாய்மை" *(கந்தபு. மூவாயிர. 81). 3. சிந்தித்தல்;* to consider, deliberate, ponder well. *4. தெரிந்தெடுத்தல்;* to elect. *5. தேடுதல்;* to seek. "சிறுவெண் காக்கை நீத்து நீரிருங்கழி யிரைதேர்ந்துண்டு" *(ஐங்குறு.162). 6. உறுதி செய்தல்;* to ascertain, form a conclusion. "பேதை பாகனே பரமெனத் தேர்ந்துணர் பெரிய" *(திருவிளை. புராணவா.8). 7. கொள்ளுதல் (பிங்.);* to acquire, obtain. *8. ஐயுறுதல் (குறள்.144, உரை);* to doubt, question.

தேர்[2]–தல் tēr-, *2 செ.கு.வி.* (v.i.) *பயிற்சியடைதல்;* to be well versed, proficient in. *நூல்களிற் றேர்ந்த புலமை.*

ம. தேருக

தேர்[3]–த்தல் tēr-, *11 செ.கு.வி.* (v.i.) *கலத்தல்;* to mingle, combine. "குழம்பும்..... சுண்ணமும் விரையுந் தேர்த்தரோ..... அளறுபட்டது" *(சூளா. சுயம். 130).*

தேரைகுடி–த்தல் tērai-kuḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *தேங்காயின் உள்ளீடு கெடுதல் (யாழ்ப்.);* to be blighted and eaten up, as coconuts.

தேரைபோ–தல் tērai-po-, *8 செ.கு.வி.* (v.i.) *தேங்காயை உள்ளீடற்றதாக்கும் நோய் பற்றுதல்;* to be blighted and eaten up, as coconut. "தேரைபோயிற்று என்றாற் போல்வதொரு நோய் என்க" *(சீவக. 1024, உரை).*

தேலு–தல்tēlu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தப்புதல்;* to get rid of; to

escape danger as a ship. *2. தேறு-தல் பார்க்க;* see tēṟu-. *ஆள் தேலுதலரிது.*

தெ. தேலு.

தேள்கொட்டு–தல் tēḷ-koṭṭu-, *15 செ.குன்றாவி.* (v.t.) *தேள் கடித்தல்;* the stinging of a scorpion. *(சா.அக.).*

[தேள் + கொட்டு-.]

தேற்று–தல் tēṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தெளிவித்தல்;* to make clear, convince, assure, relieve from doubt. "*தையால் தேறெனத் தேற்றி*" *(கலித். 144). 2. தெளிந்தறிதல்;* to know, understand. "*இரத்தலும் ஈதலே போலும் காத்தல் கனவிலுந் தேற்றாதார் மாட்டு*" *(குறள்.1054). 3. சூளுறுதல்;* to swear, take an oath. "*தேரோடுந் தேற்றிய பாகன்*" *(கலித். 71). 4. தேற்றாவிதையால் நீர்தெளியச் செய்தல்;* to clear, clarify, as with tēṟṟā-ṅ-koṭṭai. "*தேற்றுவித்தாற் புனல் தேற்றுநர்போல்*" *(அஷ்டப். அழகர் கலம். 85). 5. தூய்மை செய்தல்;* to refine. *6. ஆற்றுதல்;* to comfort, console. *7. வலு வுண்டாக்குதல்;* to communicate strength; to nourish, cherish, invigorate. *8. துணிவேற்றுதல் (இ.வ.);* to encourage, hearten. *9. குணமாக்குதல்;* to cure, give relief.

ம. தேற்றுக

தேறு[1]**–தல்** tēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தெளிதல்;* to be accepted as true. "*ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன் மூவர் சொற்றொக்கதேறப்படும்*" *(குறள்.589).2.நீர் தெளிதல்;* to be clarified, made clear, as water. "*தேறுநீர் சடைக்கரந்து*" *(கலித். கடவுள் வாழ்.). 3. மயக்கந் தெளிதல்;* to be strengthened; to be recover from swooning, from intoxication or from drooping. *4. முதிர்தல்;* to be thorough, accomplished, mature, as the mind, to reach perfection. "*தேறின அறிவு*" *(வின்.). 5. செழித்தல்;* to thrive, improve, flourish, as vegetation. "*தேறின பயிர்*" *(வின்.). 6. ஆறுதல்;* to be comforted, console, solaced, soothe. *7. துணிவு கொள்ளுதல்;* to cheerup, take courage. *8. தேர்ச்சியடைதல்;* to be successful in examination. *தேர்வில் தேறினான். 9. சொல் நிறை வேறுதல், பலித்தல்;* to prove, to result, as profit; to turn out. *அந்த வணிகத்தில் இவ்வளவு வரும்படி தேறும்.10. சோறு முதலியன விறைத்தல் (வின்.);* to become stiff, hard, as boiled rice, fruits. *11. தங்குதல் (வின்.);* to stay, abide.

ம.தேறுக; க.தேட, தேடெ; தெ.தேறு; து.தேரு; கோத. தேர்.

தேறு[2]**–தல்** tēṟu-, *5 செ.குன்றாவி.* (v.i.) *1. நம்புதல்;* to trust, confide in, believe. "*தேற்றாது செய்வார்களைத் தேறுதல் செவ்வி தன்றால்*" *(கம்பரா. வாலிவ. 33). 2. துணிதல்;* to decide. "*தேறுவ தரிது*" *(கம்பரா. மாயாசீதை. 89). 3. கூடுதல்;* to unite with, arrive at. "*தேறினும் தேறாவிடினும் அழிவின்கட் டேறான் பகாஅன் விடல்*" *(குறள்.876).*

தெ. தேறு.

தேனி–த்தல் tēṉi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. இனித்தல்;* to be sweet. *2. மகிழ்தல்;* to be happy. "*கேசவன்பேரிட்டு நீங்க டேனித்திருமினோ*" *(திவ். பெரியாழ். 4.6:1).*

தேனிழை–த்தல் tēṉi-iḻai-, *4 செ.கு.வி.* (v.i.) தேன்கூடு கட்டுதல்; to construct a bee-hive. "*தேனிழைத்த கோடுயர் நெடுவரை*" *(அகநா.18).*

தேனூறு–தல் tēṉūṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *இனிமையாதல்;* to be honey sweet."*என்னுள்ளந் தேனூறி யெப் பொழுதுந் தித்திக்குமே*" *(திவ். பெரிதி. 7:4:5).*

ij

தை[1]**–த்தல்** tai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தையலிடுதல் (சூடா.);* to sew, stitch. *2. ஆணி முதலியன அடித்தல்;* to nail, fasten beams with nails, spikes or pegs; to pin. "*படத்திற்கு ஆணி தைத்தாயிற்றா?*". *3. இலை முதலியன குத்தி யிணைத்தல்;* to plait or stitch, as leaves into plate. *4. பொருத்துதல்;* to join. "*பலகை தைத்து*" *(பாரத. கிருட்டிண. 102). 5. முள் முதலியன ஊடுருவுதல்;* to pierce penetrate, prick, as a thorn, an arrow. "*மேனி தைத்த வேள்சரங்கள்*" *(கம்பரா. உலாவியல். 15). 6. மாலை தொடுத்தல்;* to tie, weave, as a wreath. "*தொடலை தைஇய மடவரன் மகளே*" *(ஐங்குறு.361). 7. கோத்தல்;* to string, as beads. "*அவிரிழை முத்தந் தைஇய மின்னுமிழ் பிலங்க*" *(பதிற்றுப். 39, 15). 8. ஒப்பனை செய்தல்;* to adorn, decorate. *தைஇய மகளிர் (கலித். 27:19). 9. உருவாக்குதல்;* to make, create. "*வல்லவன் தைஇய பாவைகொல்*" *(கலித். 56). 10. பதித்தல்;* to set, engrave. "*திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇ*" *(கலித். 80:4). 11. இடுதல்;* to place, put, as a mark on the forehead. "*திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்*" *(திருமுருகு. 24). 12. உடுத்துதல்;* to wear, put on. "*ஏர்தழை தைஇ*" *(கலித்.125:12).13. சித்திரித்தல்;* to paint. "*அணிவரி தைஇயும்*" *(கலித்.76:2). 14. சூழ்தல்;* to surround, cover, encircle. "*சீர்மிகு முத்தந் தைஇய நார்முடி*" *(பதிற்றுப்.39:16). 15. வலை பின்னுதல் (வின்.);* to make a net. *16. அடைத்தல் (யாழ்.அக.);* to close, shut.

தை[2]**–த்தல்** tai-, *11 செ.கு.வி.* (v.i.) *1. உள்நுழைதல்;* to enter, dart. "*அவ்வழித் தைத்தது பூதம்*" *(கம்பரா. திருவவ. 88). 2. மனத்திலுறைத்தல்;* to pierce the mind; to rankle; to cause pain. "*அவன் சொன்ன சொல் என் மனத்திற்றைத்தது*".

தைவா–தல் (தைவருதல்) taivā-, *6 செ.கு.வி.* (v.i.) *1. வருடுதல்;* to shampoo. "*சீறடி கல்லா விளையர் மெல்லத் தைவர*" *(சிறுபாண். 33). 2. தொட்டுச் சீர்ப்படுத்தல்;* to touch, adjust. "*ஊழுணி தைவரல் (தொல். பொருள். 262). 3. தடவி வருதல்*"; to spread, extend, pervade. "*விசும்பு தைவரு வளியும்*" *(புறநா. 2). 4. மாசு நீக்குதல்;*

to wipe off, clean by dusting. "தைவரு நவமணிச் சயிலம்" (பாரத. வாரணா. 4). 5. குரலோசை ஏற்றுதல் (சீவக.65, உரை); to harmonise with the key-note.

bjh

தொக்கிநில்–தல் tokkinil-, *14 செ.கு.வி.* (v.i.) *(பேச்சில்; எழுத்தில் அல்லது முகக்குறியில் நேரடியாக வெளிப்படுத்தப்படாத கேள்வி, பொருள், உணர்வு போன்றவை) மறைந்து நிற்றல்;* to implicit. *யார் நீ? என்ற வினா கதவைத் திறந்தவரின் முகத்தில் தொக்கி நின்றது. எங்குப் போயிருந்தாய்? என்ற அவருடைய வினாவில் சினம் தொக்கி நின்றது.*

தொக்குநில்–தல் (தொக்குநிற்றல்) tokku-nil-, *14 செ.கு.வி.* (v.i.) *வெளிப்படாது நிற்றல் (குறள். 141, உரை).;* to be understood, as a particle *(செ.அக.).*

தொகம்பார்–த்தல் togam-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மதிப்பிடுதல் (வின்.);* to estimate, value, as the produce of a field.

தொகு[1]–தல் togu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கூடுதல்;* to assemble, collect, accumulate. "பலர் தொகுபுரைக்கும்" *(மணிமே. 2:35). 2. ஒன்றாதல்;* to form, as a whole or lump; to aggregate. *3. அடுக்கி வருதல்;* to appear repeatedly. "உம்மை தொக்கவெனாவென் கிளவியும்" *(தொல். சொல். 291). 4. மொத்தமாதல்;* to be summed up, totaled to aggregate. *5. நெருங்குதல் (யாழ். அக.);* to be compact, crowded. *6. மறைதல்;* to be elided, as a particle in the combination of words. "மெய்யுருபு தொகாஅ விறுதியான" *(தொல். சொல். 105). 7. சுருங்குதல்;* to be contracted. "தொகுபீலி கோலின" *(கம்பரா. வனம்பு. 4). 8. ஒடுங்குதல்;* to merge. "அசுத்த தத்துவங்க டொகும் முதலில்" *(கோயிற்பு. இரணியவன்ம. 2). 9. குட்டையாதல்;* to be shortened. "தொகுசரணந் தண்பார் தாங்க" *(கோயிற்பு. நடராச. 29). 10. வீணாதல்;* to be of no avail; to fail of its purpose. "தொடர் நீப்பிற் றொகுமிவ ணலம்" *(கலித். 286).*

ம. தொகுக

தொகு[2]–தல் togu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஒத்தல்;* to conform, agree. "உடன் மூவர் சொற்றொக்க" *(குறள்.589). 2. உள்ளடங்குதல்;* to be included. "தோன்றன் மலர்மணம் போற்றொக்கு" *(சி. போ. 7, 3).*

தொகு[3]–த்தல் togu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. திரட்டிக் கூட்டுதல்;* to cause to assemble; to bring together, to gather. "புத்தகமே சாலத் தொகுத்தும்" *(நாலடி.318). 2. எண் கூட்டுதல்;* to sum up; to total, to add. "இரண்டொடுந் தொகைஇ" *(தொல். சொல். 112). 3. சொல்லின் முதலிடை இறுதியில் எழுத்துகளை நீக்குதல்;* to omit, elide, as a letter or letters in the beginning, middle or end of a word. "தொகுக்கும்வழித் தொகுத்தலும்" *(தொல். சொல். 403). 4. ஈட்டுதல் (யாழ்.அக.);* to earn. *5. செய்தல்;* to do, make. "விருந்து துனைந்து தொகுத்தனள்" *(காஞ்சிப்பு. திருநகரேற். 26). 6. சுருக்குதல்;* to abridge, summarise. "தொகுத்துக் கூறல்" *(தொல்.பொருள் 666).*

ம. தொகுக

தொகு[4]–த்தல் togu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மதிப்பிடுதல் (யாழ்.அக.);* to estimate, value.

தொகைகட்டு[1]–தல் togai-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மொத்தமிடுதல்;* to sum up; to make out the total; to cast up. *2. கணக்கு முடிவு செய்து பணம் கொடுத்தல்;* to deliver up; to make over, as money; to pay, as into the treasury; to make a final payment (W).

தொகைகட்டு[2]–தல் togai-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *முடித்தல்* (w)*;* to finish, conclude, bring to an end.

தொகைகாட்டு–தல் togai-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கணக்கு ஒப்புவித்தல்;* to give a written account. *2. கணக்கை மிகுதியாகக் காட்டுதல் ;* to make a sum appear large, to magnify.

தொகைதை–த்தல் togai-tai-, *4 செ.கு.வி.* (v.i.) *கணக்கு முடித்தல் (இ.வ.);* to cast up; to close an account.

தொகையிறக்கு–தல் togai-y-iṟakku-, *6 செ.குன்றாவி.* (v.t.) *சிறிது சிறிதாகக் கொடுத்துக் கடனைக் குறைத்தல்;* to lessen one's liability gradually, as by paying in instalments.

தொகையேற்று–தல் togai-y-ēṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சிறுகச் சிறுகக் கொடுத்துக் கடனேற்றுதல்;* to increase the debt by frequently lending small sums. *2. எண் கூட்டுதல்;* to add up figures. *3. கணக்குப் பதிதல்;* to post up accounts.

தொங்கிப்போ–தல் toṅgi-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. வைத்ததுக் காணாமற் போதல்;* to be lodged and lost, as a thing thrown. *2. பொருளிழத்தல்;* to be in another's possession, to be mis-appropriated, as a deposit. *3. வழியிற் களைத்துத் தங்கல்;* to tarry in the road from fatigue. *4. சாதல்;* to die. *5. ஓடிப்போதல்;* to run away.

தொங்கு–தல் toṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நாலுதல்;* to hang, to be suspended, to hang down. வறுமை தாளாது தொங்கிவிட்டான் *(உ.வ.). 2. நிலைத்து நிற்றல்;* to continue remain long in possession, as another's property; to be permanent. "தொங்காது போலேயிருந்தது" *(ஈடு. 2, 3, 2). 3. இருத்தல்;* to stay, abide. "ஆசைப் பட்டார் பக்கல்..... தொங்கானாயிற்று" *(ஈடு. 7, 7, 4). 4. அண்டிக்கிடத்தல்;* to be dependent, service. "தொங்கிநீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்கு..... பணிசெய்" *(தேவா. 393, 6).* அவனிடந் தொங்கிக் கொண்டிருக்கிறான். தொங்குவது குட்டிச் சுவர், கனாக் காண்பது மச்சு மாளிகை *(பழ.). 5. துணிவாதல் (ஈடு. 7, 55, 11);* to be effective, strong. *6. உண்டது வயிற்றில் தங்குதல்;* to stay in the

bowels, as anything eaten. "நாய்க் குடலுக்கு நறுநெய் தொங்காதாப் போல" (ஈடு.). 7. கிடைத்தல்; to be obtained, to come into possession. "கால்பாதி தொங்காதோ வென்று சுழல்வாரும்" (பணவிடு. 290). 8. குதித்தல்; to leap, to skip, as a child; to gallop. "குதிரை தொங்கிப் பாய்கிறது" (வின்.) 9. சாதல் (யாழ்ப்.); to die. 10. முடிவு பெறாது தாமதித்திருத்தல் (கொ.வ.); to be in suspense. தமிழ்வழிக் கல்வி பற்றிய வழக்கு உச்சமுறைமன்றத்தில் தொங்கலாயுள்ளது. 11. உதவி யற்றிருத்தல்; to be helpless. "ஆள் தொங்குகிறான்" (உ.வ.).

ம. தொங்ஙுக; க., தெ., பட. தொங்கு; குட. துங்க்; கோத. தொங்க்; துட. தங்க்.

தொட்டிலிடு–தல் toṭṭil-iḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) முதன்முறையாகக் குழந்தையைத் தொட்டிலில் ஏற்றுவித்தல்; to cradle for the first time, as a child.

தொட்டுக்காட்டு–தல் toṭṭu-k-kāṭṭu-, 5 செ.குன்றாவி (v.t.) ஒன்றைச் செய்து காட்டுதல்; to lead the way, show practically how a thing must be done. "தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வாராது" (பழ.).

தொட்டுக்கொள்(ளு)–தல் toṭṭu-k-koḷ-, 7 செ.குன்றாவி. (v.t.) 1. எட்டிப் பிடித்தல்; to touch; to catch. "தொட்டுக் கொள் தொட்டுக்கொள் என்ன வேண்டும் படி" (ஈடு.1,1,1). 2. உணவுக்குத் துணையாக ஊறுகாய் முதலியவற்றைச் சிறிது உட்கொள்ளுதல்; to take small bites, as at pickles. தொட்டுக் கொள்ள ஊறுகாய் வேண்டும் (உ.வ.).

தொடக்கு[1]–தல் toḍakku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுதல்; to tie. "நினைத் துன்பத்தாற் றொடக்கினேன்" (சீவக.579). 2. அகப்படுத்துதல்; to catch hold of ensnare. "விளை பொருள் மங்கையர் முகத்தினும்..... சொல்லினுந் தொடக்கும்" (கல்லா. 62, 28). 3. அணிதல்; to wear, put on. "பாதுகை திருவடி தொடங்கி" (விநாயகபு. 80, 278). 4. பொருத்துதல்; to make to agree.

க. தொடகு; தெ. தொடகு

தொடக்கு[2]–தல் toḍakku-, 5 செ.குன்றாவி. (v.t.) சிக்கிக் கொள்ளுதல்; to get entangled, obstructed. "சங்கந் துங்க விலைக்கதலிப் புதன் மீது தொடக்கி" (பெரியபு. ஆனாய. 4).

தொடக்கு[3]–தல் toḍakku-, 5 செ.குன்றாவி. (v.t.) தொடங்குதல்; to begin.

தொடக்குபடு–தல் toḍakku-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. தீட்டு படல்; being unclean through menses. 2. சாவு, பிள்ளைப்பேறு முதலியவற்றால் ஏற்படும் தீட்டு; ceremonial uncleanliness through death, child birth etc., (சா. அக.).

தொடங்கிவை–த்தல் toḍaṅgi-vai-, 8 செ.குன்றாவி. (v.t.) முதல் கட்டப் பணியை நடைபெறச் செய்தல்; to inaugurate. திட்டப் பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

தொடங்கு–தல் toḍaṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தோற்றுவித்தல்; ஆரம்பித்தல்; to begin, commence, originate. "அலர் தொடங்கின்றாலூரே" (ஐங்குறு.75). 2. முயலுதல்; to undertake, enter upon, engage in. 3. ஒத்தல்; to resemble. "இருவர் நூற்கு மொருசிறை தொடங்கி" (நன்.8).

ம. தொடங்ஙுக; துடங்ஙுக; க. தொடங்கு; தெ. தெடகு. தொட்டு; து. தொடங்குனி; கூ. தோண்ட; மா. தெட்கெ

தொடர்[1]–தல் toḍar-, 3 செ.கு.வி. (v.i.) 1. இடையறாது வருதல்; to follow uninterruptedly; to continue in unbroken succession. "தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி" (பதிற்றுப். 27, 2). 2. பிணைந்து நிற்றல்; to be linked. "தாடொறுந் தொடர்ந்த தழங்குபொற் கழலின்" (கம்பரா. நிந்தனை. 6). 3. அமைதல்; to form. "வாரண வுரித்தொகுதி நீவி தொடர" (கம்பரா. விராதன். 14). 4. மிகுதல்; to increase. "தம்முட்பகை தொடர்ந்து" (பரிபா.7,72). 5. நெருங்குதல்; to be close-knit. "வரைமலை யெல்லா நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துந் தொடர்ந்தும்" (பரிபா.19, 82).

க. தொடர்.

தொடர்[2]–தல் toḍar-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. பின்பற்றுதல்; to follow after, cling to, pursue. "அவரை..... அரக்கியர் தொடர்குவர்" (கம்பரா. ஊர்தேடு. 22). 2. ஊக்கத்தோடு மேற்கொள்ளுதல் (வின்.); to insist upon, persist in with energy, persevere in. 3. பயிற்சி செய்தல்; to practise, pursue, as study. "வடகலை தொடர்வார்" (கோயிற்பு. திருவிழா. 32). 4. தேடுதல்; to seek out, find out, trace. "மறையிலீறுமுன் றொடரொணாத நீ" (திருவாச. 5, 95). 5. வழக்குக்கிழுத்தல்; to prosecute, sue. அந்தக் கடனுக்கு உன்னைத் தொடரப் போகிறேன் (யாழ்.அக.). 6. கட்டுதல் (திவா.); to connect, tie, bind. "சிறுமணி தொடர்ந்து" ((நற்.220). 7. பற்றுதல்; to seize. "யானுன்னைத் தானை தொடரவும்" (பு.வெ. 12, பெண்பாற். 18). 8. பெறுதல்; to get, obtain. "சாந்தினணி தொடர்ந்து" (பு.வெ12, பெண்பாற். 11). 9. வினவுதல்; question, enquire. "தோடவிழ் தார் யானுந் தொடர" (பு. வெ. 11, பெண்பாற். 10). 10. தாக்குதல் (வின்.); to assail, attack. 11. நெருங்குதல்; to be near or close to. 12. தொங்கவிடுதல்; to hang. "மாலை தொடரி" (அகநா. 86).

தொடரிடு–தல் toḍar-iḍu-, 20 செ.குன்றாவி. (v.t.) இடைவிடாது செய்தல்; to work at continuously. "பாவிநான்

தொடரிட்ட தொழில் களெல்லாம்" (தாயு. மலைவளர். 4).

தொடு[1]–தல் toḍu-, *17 செ.குன்றாவி.* (v.t.) *1. தீண்டுதல்;* to touch, come in contact with feel or perceive by the touch. "தொடிற்சுடினல்லது" (குறள்.1159). *2. பிடித்தல்;* to handle, take hold of, use. "தொட்ட மூவிலைச் சூலந் துளக்குவார்" (கந்தபு. வீரபத். 38). *3. பொருந்துதல்;* to be connected, united with or joined to. *4. அணிதல்;* to put on, as a ring, clothes. "சுறாவே றெழுதிய மோதிரந் தொட்டாள்" (கலித்.84, 23). *5. தோண்டுதல்;* to dig, scoop out, excavate. "குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்" (புறநா. 6). குளம்தொட்டு வளம் பெருக்கி (உவ.). *6. துளைத்தல்;* to pierce through. "உழலை மரத்தைப்போற் றொட்டன வேறு" (கலித். 106). *7. தொடங்குதல்;* to begin. "அன்று தொட் டனங்கனே யாயினான்" (கம்பரா. தாடக. 1). *8. செலுத்துதல்;* to discharge, as an arrow or other missile. "கடுங்கணைக டம்மைத் தொட்டனன்" (கந்தபு. சூரபன்மன்வ. 191). *9. உண்ணுதல் (சூடா.);* to eat. *10. நினைத்தல்;* to think. "நின்பெருமுலை மூழ்க வென்னுளத் தினிற் றொடாமுன்" (கல்லா. 52, 5). *11. இசைக் கருவி இசைத்தல்;* to play, as a musical instrument; to beat, as a drum. "கலித்த வியவ ரியந்தொட் டன்ன" (மதுரைக். 304). *12. கட்டுதல்;* to fasten, insert. "கிண்கிணி களைந்தகா லொண்கழ றொட்டு" (புறநா. 77). *13. அடித்தல்;* to strike, beat. "ததிமுகாதிகளை நான் தொட்டுத் தருகிறேன்" (ஈடு. 3, 5, பிர.). *14. பிழிதல்;* to strain, squeeze out as juice. "நறவுந் தொடுமின்" (புறநா. 262). *15. ஆணையிடுதல்;* to swear upon. "தொட்டு விடுத்தே னவனை" (சீவக. 1876). *16. எடுத்தல்;* to take up, lift. "பதுமுகன் சிலை தொட்டானே" (சீவக. 1862). *17. வெளுத்தல்;* to wash, as clothes. "இவற்றைத் தொட்டபடி" (ஈடு. 10, 5, 6). *18. மகளிரொடு கூடுதல் (இ.வ.);* to have intercourse. *19. செருப்பணிதல்;* to wear, as shoes. "பாதஞ் சேரத்தொடு நீடுசெருப்பு" (பெரியபு. கண்ணப்ப.62).

தொடு[2]–தல் toḍu-, *செ.கு.வி.* (v.i.) *உண்டாதல்;* to occur, happen, come into being. "பழிபாவமுந் தொடுமே" (விநாயகபு. 77, 35).

தொடு[3]–த்தல் toḍu-, *17 செ.குன்றாவி.* (v.i.) *1. இயைத்தல்;* to connect, join. *2. விடாது புரிதல்;* to frame one after another or weave, as an argument. "மாறுபடு தர்க்கந் தொடுக்க வறிவார்" (தாயு. ஆனந்தமான. 3). *3. கட்டுதல்;* to bind, fasten, enchain, tie, continue, as a series. "சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்" (முல்லைப். 12). *4. பூட்டுதல்;* to set, fix, as the arrow in a bow. "தொடுத்தாங்க வம்பு" (சீவக. 2320). *5. எய்தல்;* to discharge, shoot, as an arrow or other missile. "கணை தொடுக்குங் கொடியோன் போல்" (கலித். 120). *6. பூ முதலியன இணைத்தல்;* to link together, to string, as beads. "மலராய்ந்து பூத்தொடுப்பாள்" (நாலடி. 393). *7. சேர்த்து வைத்தல்;* to store, preserve. "காந்தட் டொடுத்த தேன் சோர" (கலித். 40). *8. வளைத்தல்;* to surround, hem in, besiege. "தொடுத்துங் கொள்ளா தமையலென்" (புறநா. 164). *9. வளைத்துக் கைக் கொள்ளுதல்;* to seize by surrounding. "தமதெனத் தொடுக்குவராயின்" (புறநா. 135). *10. தொடங்குதல்;* to commence. "மற்றிவற்றை நோற்பான் றொடுக்குறின்" (உபதேசகா. சிவவிரத. 410). *11. உண்டாக்குதல்;* to create. "சங்கற்ப மொன்றிற் றொடுக்குந் தொடுத்தழிக்கும்" (தாயு. எங்குநிறை. 4). *12. மேற்கொள்ளுதல்;* to undertake. "தொடுத்த கருமம் வழுவாது" (காசிக. கணபதி.1). *13. பாப் புனைதல்;* to make compose, as verses, poem. "ஆசறு கவி தொடுத்த" (சீகாளத்பு. நக்கீ.131). *14. அழுத்தமின்றி மேலெழ வைத்தல் (வின்.);* to join slightly, as beads or threads : to work superficially : to put on negligently, as a garment or an ornament. *15. அணிதல்;* to wear, as clothes. "குஞ்சியினாள் கதிர் நெற்றொடுத்து" (கம்பரா. கங்கை. 32). *16. உரிமை யின்றிப் புணர்தல்;* to carry on a licentious intrigue. *17. கதை கட்டுதல் (உ.வ.);* to fabricate concoct a false story. *18. வழக்குத் தொடர்தல்;* to pursue in law; to sue. "பெண்டீர் தொடுத்தாண் டவைப்போர் புகலும்" (திரிகடு. 71). *19. சொற் கூட்டுதல் (அக.நி.);* to frame or build, as sentences. *20. வசை பெருக்குதல்;* to shower abuses. *21. வகுத்தல்;* to classify.

தொடு[4]–த்தல் toḍu-, *செ.கு.வி.* (v.i.) *1. வகுக்கப்படுதல் (திருக்கோ. 267);* to be apportioned. *2. நெருங்கியிருத்தல்;* to be close - packed, dense. "தொடுத்த மாதவிப் பந்தரின்" (கம்பரா. சித்திர. 23). *3. அறிமுகமாதல் (இ.வ.);* t o become known.

தொண்டையிடு–தல் toṇḍai-y-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *கூவுதல் (இ.வ.);* to bawl.

தொண்டைவிடு–தல் toṇḍai-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. தெளிவாய்க் குறிப்பிடுதல்;* to let out the voice, as in singing; to utter clearly and loudly. *2. பெருங்குரலிடுதல்;* to bawl, howl. "தொண்டை விடுவன வண்டம் வெடிபட" (திருவாலவா.29, 3).

தொண்ணா–த்தல் toṇṇā-, *6 செ.கு.வி.* (v.i.) *கெஞ்சி நிற்றல் (நெல்லை);* to cringe. அவனிடம் போய் தொண்ணாந்து நிற்பதே.

தொண்தொண–த்தல் toṇa-toṇa-, *4 செ.கு.வி.* (v.i.) *வெறுப்புண்டாம்படி அலப்பிப் பேசுதல் (இ.வ.);* to vex with ceaseless talk. தொணதொணக்காமல் கொஞ்சநேரம் சும்மா யிரு (உ.வ.).

தொத்திப்பிடி–த்தல் totti-p-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒட்டிக் கொள்ளுதல்;* to cling to. *2. சார்பாகப் பற்றுதல்;* to cleave to for support. *3. அடைக்கலம் புகுதல்;* to take refuge with one; to seek one's friendship obsequiously. *4. கூட்டி விடுதல்;* to bring, fetch, as a woman to her paramour.

தொத்தியேறு–தல் totti-y-ēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கை கால்களாற் பற்றியேறுதல்;* to climb by clinging, as a horse. *2. தன் மேம்பாடு காட்டுதல் (வின்.);* to assume authority or dominance, as climbing on others.

தொத்து¹–தல் tottu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தொத்தியேறு-தல் பார்க்க;* see *totti-y-ēṟu-*. "நரருமினித் தொத்துவர்" *(திருவாலவா. 29, 1). 2. ஒட்டுதல்;* to cling, adhere. "உடுமீன் தொத்தப் பொலி கனகக்கிரி வெயில் சுற்றிய தொத்தான்" *(கம்பரா. பிரமாத். 117). 3. தொங்குதல்;* to hand. "செச்சைக் கண்டத் தொத்தூன் போல" *(ஞான. பாயிர. 5, 12). 4. கூடுதல்;* to be obtained. "சத்திபதிப்பிற் சம்பிர தாயந் தொத்துவ தென்பது" *(ஞான. 62, 9). 5. படர்தல்;* to climb up, spread, as the vine.

தொத்து²–தல் tottu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பற்றுதல்;* to hold, grasp, as a stick. "கோற்றொத்து கூனனும்" *(பதினொ. திருத்தொண். 48). 2. தொடர்தல்;* to follow, pursue. "விருத்திரனைக் கொல்லத் தொத்திய பாவம்" *(உத்தரரா. அசுவமே. 8). 3. நோயொட்டுதல்;* to catch, as a disease; to infect.

தொந்தமிடு–தல் tonda-miḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. சேர்க்கையினால் சரக்குகளை உறவாக்கல்;* to set up chemical combination by addition of drugs or agents *(சா.அக.).*

தொந்தமுறு–தல் tondam-uṟu-, *20 செ.கு.வி.*(v.i.) ஒன்று படுதல்; to unite. "தொந்தமுறச் சேர்குடிநீர்" *(தைலவ. தைல. 135).*

தொந்தரி–த்தல் tondari-, *4 செ.குன்றாவி.* (v.i.) வருத்துதல்; to trouble, vex, annoy. *ஏன் சும்மா வந்து தொந்தரிக் கிறாய்? (உ.வ.).*

தொந்தி¹–த்தல் tondi-, *4 செ.கு.வி.* (v.i.) *ஊதை, பித்தம், கோழை, சளி நோய்கள் ஒன்றோடொன்று முரணுதல்;* to be in conflict, as the different humours of the body with one another, to be complicated as a disease. *2. பற்றுதல் (யாழ். அக.);* to adhere, clave, to be united, familiar with. *3. தாறுமாறாதல்;* to become disorderly, to be spoiled.

தொந்தி²–த்தல் tondi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கலத்தல்;* to compound, as medicines, mix. *சரி கூட்டி தொந்தித்து (பணவிடு. பக்.22). 2. தொடர்தல்;* to be perpetuated, to to continue, as the fruit of *karma.*

தொய்¹–தல் toy-, *1 செ.கு.வி.* (v.i.) *1. இளைத்தல்;* to languish, pine, grow weak. *2. சோர்தல்;* to be weary, fatigued; to fail in energy; to droop, faint, flag. "தொய்யுமான் போலத் துவக்குண்டேன்" *(விறலிவிடு. 407).* இத்தனை பேருக்கிடையில் நமக்கு எங்கே வேலை கிடைக்கப் போகிறது என்ற நினைப்பில் மனம் தொய்ந்தாள். *3. துவளுதல்;* to become slack, to be loose, supple, yielding. "தொய்யு மரவணைக்குள்" *(திருப்பு. 1173).* நிறையத் துணிகள் தொங்குவதால் கொடி தொய்யத் தொடங்கிவிட்டது. *4. வளைதல்;* to bend through weakness or want of support. *கட்டடம் தொய்கிறது. 5. வயிறு முதலியன வாடுதல் (வின்.);* to sink in, as the belly through hunger or disease. *உணவின்றி வயிறு தொய்கிறது. 6. கெடுதல்;* to perish; to be ruined. "தொய்யா வெறுக்கை கொடு" *(பெரும்பாண். 434). 7. பயன் குறைதல்;* to be past the prime, as trees; to be reduced in fruitlessness. *8. மூச்சுத் திணறுதல் (வின்.);* to breathe short and hard, as while suffering from asthma. *9. வினை செய்தல்;* to labour, do work. "தொய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்" *(புறநா. 214).*

தொய்²–தல் toy-, *1 செ.குன்றாவி.* (v.t.) *உழுதல்;* to plough. "தொய்யாது வித்திய துளர்படு துடவை" *(மலைபடு. 122).*

தொலி–த்தல் toli-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உரித்தல்;* to stip off, as rind, bark; to flay. "தொலி எடு". *2. உமி அல்லது தோடு போக உரித்தல் (இ.வ.);* to husk, hull, pound. *3. புடைத்தல்;* to beat severely. "அவனைத் தொலித்து விட்டார்கள்".

தொலை¹–தல் tolai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to become extinct, perish, die. "தொலையாக் கற்ப" *(பதிற்றுப். 43, 31). 2. முடிதல்;* to be exhausted, terminated, expended, expiated, liquidated. *3. வழி முதலியன கழிதல்;* to end, as a way or distance; to expire, as time. "தொலையாத கானங் கடந்த வந்நாள்" *(அஷ்டப். திருவரங்கக். 16). 4. முற்றுதல்;* to be over, finished. "எடுத்த வினை எப்போது தொலையும்?". *5. சோர்தல்;* to be weary. "நாத்தொலைவில்லா யாயினும்" *(மணிமே. 24:99). 6. தோற்றல்;* to be defeated, outrivalled; to fail in comparison. "ஒருவனை யொருவ னடுதலுந் தொலைதலும்" *(புறநா.76). 7. வருந்துதல்;* to suffer. "சுடுதொழிலரக்கராற் றொலைந்து" *(கம்பரா. திருவவ.). 8. காணாமற் போதல்;* to be lost. "பொத்தகந் தொலைந்தது". *9. நீங்குதல்;* to leave; to depart for good. "என்னைவிட்டுத் தொலைந்தான்".

தொலை²–த்தல் tolai-, *4 செ.குன்றாவி.* (v.i.) *1. அழித்தல்;* to destroy, kill, exterminate, as in battle. "விலங்கலன்ன போர்முதற் றொலைஇ" *(மலைபடு. 461). 2. கழித்தல்;* to spend, pass, as time. "துதித்து முழுநாட் டொலைப்போ ருளத்தான்" *(சிலப். பிரபந். வெங்கையுலா. 285). 3. நீக்குதல்;* to remove, wipe off. *4. முற்றுப் பெறச் செய்தல் (வின்.);* to bring to an end, settle. *5. முடித்தல்;* to finish. "தங்கடன் முறை தொலைத்து" *(உபதேசகா. சிவவிரத. 311). 6. சிதைத்தல்;* to spoil. *7. கெட்டுபோக்குதல்;* to lose. *அரும்பாடுபட்டுச் சேர்த்த நற்பெயரை இச்சிறு செயலால் தொலைத்தான். 8. தோற்பித்தல்;* to discomfit surpass, rout. "ஏறுமலை தொலைத்தார்க்கு" *(திருக்கோ. 113).*

தொலைச்சு–தல் tolaiccu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கொல்லுதல்;* to kill, destroy. "*முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை*" *(மலைபடு. 176). 2. முடித்தல்;* to exhaust. "*வெட்கட் டொலைச்சியு மமையார்*" *(புறநா. 29). 3. செலுத்துதல்;* to pay, discharge as a debt. "*நாளாதந்து நறவு நொடை தொலைச்சி*" *(பெரும்பாண். 141).*

தொலைந்துபோ–தல் tolaindu-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. இறத்தல்;* to die. *2. காணாமற்போதல்;* to loss. "*பள்ளிக்குச் சென்றவன் வீடு திரும்பாமல் எங்கோ தொலைந்து போய்விட்டான்*".

தொழி¹–தல் toḻi-, *3 செ.கு.வி.* (v.i.) *சிதறுதல்;* to be split, scattered. "*தொழிந்துமட்டொழுக*" *(சீவக. 2673).*

தொழி²–த்தல் toḻi-, *11 செ.கு.வி.* (v.i.) *1. சினத்தல்;* to be angry, enraged. "*சிங்கம்போற் றொழித் தார்த்து*" *(சீவக. 2306). 2. ஒலித்தல்;* to sound, tinkle. "*தொழித்த..... கலனுஞ் சிந்தி*" *(சீவக. 2969).*

தொழிலெடு¹–த்தல் toḻil-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பணியேற்றல்;* to obtain office, enter upon an occupation. *2. குறும்பு காட்டத் தொடங்குதல்;* to begin doing mischeif. *பணியிற் சேர்ந்து ஆறு திங்கள் ஆவதற்குள் அவன் தொழிலெடுத்து விட்டான்.*

தொழிலெடு²–த்தல் toḻil-eḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பணியினின்று விலக்குதல்* (J.); to dismiss one from office.

தொழு–தல் toḻu-, *1 செ.குன்றாவி.* (v.t.) *வணங்குதல்;* to worship, adore, pay homage to. "*தொழுதகை யுள்ளும் படையொடுங்கும்*" *(குறள். 828).*

க. துளில்; ம. துழுக

தொழுதகு–தல் toḻutagu-, *3 செ.கு.வி.* (v.i.) *1. நன்கு மதித்தல்;* to esteem, admire. "*தொண்டையுங் கனியுமுத்துந் தொழுதக வணிந்து*" *(சீவக. 2076). 2. விரும்புதல்;* to love, desire. "*களிற்றொடாடித் தொழுதகக் கழிப்பர்*" *(சீவக. 2807).*

தொழுதுகொண்டிரு–த்தல் toḻutu-koṇḍiru-, *3 செ.கு.வி.* (v.i.) *கலந்துபோதல்;* to get inextricably, mixed up. "*கஞ்சியுஞ் சோறுந் தொழுது ணகொண்டிருக்கிறது*".

தொள்(ளு)¹–தல் toḷ-, *8 செ.குன்றாவி.* (v.t.) *துளைத்தல்;* to perforate, bore with an instrument. "*செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின்*" *(பெரும்பாண். 129).*

தொள்(ளு)²–தல் toḷ-, *8 செ.கு.வி.* (v.i.) *நெகிழ்தல் (வின்.);* to become weak, infirm.

தொள்ளாடு–தல் toḷḷāḍu-, *6 செ.கு.வி.* (v.i.) *1. வலி தளர்தல் (வின்.);* to become weak. *2. தள்ளணணணணணணs* from over-ripeness, from moisture; to be thin, as pap. *3. உளறுதல்;* to babble, rattle away. "*அவன் தொள தொளக் கிறான்*". *4. மன உறுதியற்று இருத்தல்;* to wavers, to be undecided.

தொளியடி–த்தல் toḷi-y-aḍi-, *4 செ.கு.வி.* & *செ.குன்றாவி* (v.i. & v.t.) *வயலிற் சேறு கலக்குதல்;* to plough a flooded field.

மறுவ. சேடையோட்டுதல்.

தொளுக்கு–தல் toḷukku-, *8 செ.குன்றாவி.*(v.t.)*1. தொடுத்தல்;* to tie loosely. *2. தளரக் கட்டுதல்;* to wear or attach loosely, as clothes.

தொளை–த்தல் toḷai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. துளையிடுதல்;* to perforate, bore. "*மணித் தோளையுந் தொளைத்தான்*" *(கம்பரா. நிகும்பலை. 123). 2. தொந்தரவு செய்தல் (இ.வ.);* to tease. *3. செய்தி தெரிதற் பொருட்டு ஆழம் பார்த்தல் (இ.வ.);* to probe.

தொற்று¹–தல் toṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தொடுத்தல்;* to attach, tack. "*அதன் கழுத்திலே காக்கைப் பொன்னைத் தொற்றி*" *(ஈடு. 3, 1, 10). 2. ஒட்டித்தொடர்தல்;* to affect, as a contagious disease. *தொற்றுநோய்.*

தொற்று²–தல் toṟṟu-, *7 செ.கு.வி.* (v.i.) *1. படர்தல்;* to spread, as a vine. "*புரைதீர் தவந்தொற்று கொள்கொம் பெனுந் தெய்வமுனி*" *(உபதேசகா. சிவபுண்ணிய. 93). 2. கைகால்களால் பற்றியேறுதல்;* to climb.

தொற்று³–தல் toṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.)*பற்றியிருத்தல்;* to be connected with. "*இங்குக் கழிக்கிற அகங்காரம் சென்ம (ஸுக்ஷ) சரீரம் விடுமளவும் இவனைத் தொற்றிக் கிடக்கும்*" *(ரஹஸ்ய. 959).*

தொனி–த்தல் toṉi-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒலித்தல்;* to sound, to twang, to emit vocal or instrumental sound. "*கோவியர் மழலை தொனித்த குழலிசைத் தோய்*" *(அழகர்கல. 1). 2. குறிப்புப் பொருள் தோன்றுதல்;* to suggest itself, as a meaning.

njh

தோண்டு–தல் tōṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அகழ்தல்;* to dig, hollow, excavate. *2. குடைதல்;* to scoop out, bore. *3. முகத்தல்;* to draw or fetch water from a well. "*நெடுங் கிணற்று வல்லூற்றுவரி தோண்டி*" *(பெரும்பாண். 98). 4. செய்தியை உசாவியறிதல்;* to drawout details. *ஏன் அச்செய்தியைத் தோண்டுகிறாய்? 5. பண்ட மிறக்குதல்;* to unload, as a ship. "*மிசைப்பரந் தோண்டாது புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்*" *(புறநா. 30).*

ம. தோண்டுக; க., தெ. தோடு; து. தோடுணி; குட., கோத. தோட்; துட. த்விட்

தோதலி–த்தல் tōdali-, *4 செ.கு.வி.* (v.i.) *முரணுதல்;* to be perverse. "*மெத்த மொத்தத் தோதலித்துப் பேசுஞ் சுணைகெட்ட மூளி*" *(பஞ்ச. திருமுக. 1509).*

தோய்¹–தல் tōy-, *3 செ.கு.வி.* (v.i.) *1. முழுகுதல்;* to bathe,

commonly in cold water. "மங்கையர் தோய்தலால்" *(கம்பரா. நீர்விளை. 19). 2. நனைதல்;* to become wet, soaked. "தோயுங் கதழ் குருதி" *(பு.வெ. 4:16). 3. நிலத்துப் படிதல் (வின்.);* to trial, as a long garment. *4. உறைதல்;* to be curdled, as milk; to be thickened, clotted, coagulated, as blood. "தோயும் வெண்டயிர்" *(கம்பரா. நாட்டுப். 28). 5. செறிதல்;* to be dense, crowded. "தோய்ந்த விசும் பென்னுந் தொன்னாட்டகம்" *(சீவக. 290). 6. அகப்பட்டுக் கொள்ளுதல்;* to commit oneself in speaking, used in the negative. அவன் தோயாமல் பேசுகிறான்.

ம.தோயுக; க.தோய், துய், தொய்யு, தொய், தோ; தெ.தோகு, தோகு; து.தொய்புனி, தொயிபுனி, தோயிபுனி; கோத.தோய்; துட.த்வியி.

தோய்²–தல் tōy-, *2* செ.குன்றாவி. (v.t.) *1.* பொருந்துதல்; to come in contact with, reach, touch. "தாடோய் தடக்கை" *(புறநா.14). 2. அணைதல்;* to unite, embrace, copulate. "நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர்" *(குறள்.917). 3. முகத்தல்;* take in, as water. "கருங்கலந் தோய்விலாக் காமல் பூந்துறை" *(சீவக.97). 4. கலத்தல்;* to mix, blend, mingle, associate with, keep company. "தோய்ந்தும் பொருளனைத்துந் தோயாது" *(கம்பரா. சரபங்.27). 5. நட்டல்;* to be in frindship with. "தோய்ந்தாருட் டோய்ந்தா ரெனப்படுதல்" *(திரிகடு.81). 6. கிட்டுதல்;* to approach. "விண்டோய மிளை கடந்து" *(பு.வெ.6:16). 7. ஒத்தல்;* to resemble. "விசும்புதோ யுள்ளமொடு" *(மலைபடு. 558). 8. துவைச்சலிடுதல்;* to temper by dipping in water, as heated metal. *(சா.அக.).*

க. தோ.

தோய்³–த்தல் tōy-, *2* செ.குன்றாவி. (v.t.) *1. நனைத்தல்;* to dip, soak. *2. துவைச்சலிடுதல்;* to temper, as iron. "இரும்பைக் கருமகக் கம்மியன் றோய்த்த தண்புடல்" *(கம்பரா. பம்பைப். 37). 3. உறையச் செய்தல்;* to thicken, curdle. "தோய்த்த தண்டர்" *(திவ். பெருமாள். 2, 4). 4. சாயமேற்றுதல்;* to dye, tinge, stain, imbue. *5. ஆடை துவைத்தல்;* to wash, cleanse. துணி தோய்க்கிறான்.

ம. தோய்க்குக

தோய்ந்துபோ–தல் tōyndu-pō-, *8* செ.கு.வி. (v.i.) உறைந்து போகுதல்; to coagulate *(சா.அக.).*

தோய்ந்தூட்டு–தல் tōyndūṭṭu-, *12* செ.குன்றாவி. (v.t.) தண்ணீர் அல்லது எண்ணெயில் சுவறும்படி அடிக்கடி நனைத்தல்; to dip frequently in water juice or oil *(சா. அக.).*

தோய்வுறு–த்தல் tōyvuṟu-, *4* செ.குன்றாவி. (v.t.) முழுமையான, ஒரே சீரான ஊடுபரவல் ஏற்படும் வரை எஃகை ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் வைத்திருத்தல்; to soake iron in a particular heat.

தோயக்கல–த்தல் tōya-k-kala-, *3* செ.குன்றாவி. (v.t.) நனையும்படி ஊற்றிக் கலத்தல்; to mix after fully wetting *(சா.அக.).*

தோயப்பண்ணு–தல் tōya-p-aṇṇu-, *12* செ.குன்றாவி. (v.t.) நீரில் மூழ்கும்படி செய்தல்; to immerse.

தோல்¹–தல் (தோற்றல்) tōl-, *13* செ.கு.வி. (v.i.) *1.* தோல்வியுறுதல்; to be defeated, discomfited, vanquished, as in battle, game, dispute etc., "தோற்பதறியார்" *(நாலடி. 313). 2. ஒப்பிற்றாழ்தல்;* to fail in comparison. "பரவலருங் கொடைக்கு..... நெடும்பண்பு தோற்ற..... கற்பகமும்" *(கம்பரா. சடாயுகாண்.21). 3. இணங்குதல்;* to yield, flinch, give way voluntarily.

தோல்²–தல் (தோற்றல்) tōl-, *12* செ.குன்றாவி. (v.t.) இழத்தல்; to lose. "தோற்றொமடநெஞ்ச மெம் பெருமான் நாரணற்கு" *(திவ். திருவாய். 2.1:7).*

ம. தோல்க்குக; க. சோல், சோலு; து. தோல்புளி, சோபுளி, தோலுனி; குட., கோத.சோல்; துட.த்வில்; பட. சோலு.

தோல்புரை–தல் tōlpurai-, *3* செ.குன்றாவி. (v.t.) தோலால் தைத்தல்; to sew or fasten with thongs *(செ.அக.)*

தோல்போலாகு–தல் tōlpōl-āgu-, *5* செ.கு.வி. (v.i.) இளைத்தல்; to emaciate *(சா.அக.).*

தோல்மூடு–தல் tōl-mūḍu-, *5* செ.கு.வி. (v.i.) பக்கு கட்டுதல்; to form a coat of skin over a scor or healing as scab *(சா.அக.).*

தோலுரி–த்தல் tōluri-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* மேற்றோலைப் போக்கல்; to peel off, as skin of fruits. *2.* உடம்பின் தோலையுரித்தல்; to flay as skin of dody, escoriating. *3.* தோல் போக்கல்; to husk, as grains or pulse, to decoritcate. *4.* சட்டை கழற்றல்; to cast away the outer skin as snakes do. *(சா.அக.).*

தோள்(ளு)–தல் tōḷ(ḷu)-, *10* செ.குன்றாவி. (v.t.) *1.* துளைத்தல்; to perforate bore through. "கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியாற் றோட்கப்படாத செவி" *(குறள்.418). 2.* தோண்டுதல்; to dig out, scoop."தோணீர்க் கடலுள்" *(சீவக. 2097).* "தெவ்வேந்த ருடறோட்ட நெடு வேலாய்..... கடறோட்டா ரெனின்" *(கம்பரா. குலமுறை.8). 3.* நீக்குதல்; to remove. "கடிதோட்ட களவகத்தே" *(திருக்கோ.8).*

க. தோடு

தோள் கொட்டு–தல் tōḷ-koṭṭ-, *5* செ.கு.வி. (v.i.) வீரத்தின் அடையாளமாய்த் தோளைத் தட்டுதல்; to clap one's shoulders, as in difiance. "தடுத்தானைத் தான்முனிந்து தன்றோள் கொட்டி" *(தேவா.689, 10).*

தோள்கொடு–த்தல் tōḷ-koḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சுமையைத் தாங்குதல்;* to take on one's shoulders, the as the pole of a palanquin. "*தாங்க முடியவில்லை, கொஞ்சம் தோள் கொடு*" *(உவ.). 2. உதவி செய்தல்;* to offer help in an emergency. *(செ.அக.).*

தோள்சேர்–தல் tōḷ-šēr-, *3 செ.குன்றாவி.* (v.t.) *தழுவுதல்;* to embrace *(செ.அக.).*

தோள்தட்டு–தல் tōḷ-taṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒருவரை ஊக்கப்படுத்துவதற்காகத் தோளில் தட்டிக் கொடுத்தல்;* to pat one, on shoulder, to encourage.

தோள்மாற்று–தல் tōḷ-māṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சுமையை ஒரு தோளின்று மற்றொரு தோளுக்கு மாற்றுதல்;* to change one shoulder to another, as a load. *2. பிறன் சுமையைத் தான் தூக்கி உதவிபுரிதல்;* to relieve another in bearing a load *(செ.அக.).*

தோள்மாறு–தல் tōḷ-māṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *மனம் வேறுபடுதல்;* to change one's mind, as changing shoulders. "*கிட்டினவாறே நீரே அதிலே தோற்மாறு கிறீர்*" *(திவ். திருமாலை.2, வியா.18).*

தோளு–தல் tōḷu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *துளைத்தல்;* to perforate.

தோற்கடி–த்தல் tōṟ-kaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தோல்வியுறச் செய்தல்;* to defeat *(செ.அக.).*

தோற்றமா–தல் tōṟṟam-ā-, *6 செ.கு.வி.* (v.i.) *1. காணப்படுதல்;* to come into existence. *2. அரங்கில் நாடதமாந்தர் தோன்றல்;* to appear on the stage *(செ.அக.).*

தோற்று[1]–தல் tōṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) தோன்று-தல் பார்க்க; see tōṉṟu-. "*நீற்றோடு தோற்றவல்லோன் போற்றி*" *(திருவாச. 3, 108).*

தோற்று[2]–தல் tōṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தோன்றச் செய்தல்;* to cause to appear; to show; to produce. *2. பிறப்பித்தல் (பிங்.);* to create *(செ.அக.).*

தோன்று[1]–தல் tōṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கட்புலனாதல்;* to be visible. "*துறை திறம்பாமற் காக்கத் தோன்றினான் வந்து தோன்ற*" *(கம்பரா. வாலிவதை. 74). 2. அறியப்படுதல்;* to come to mind. *3. உண்டாதல்;* to appear, seem, spiring up, come into existence. "*பெருஞ் செல்வந் தோன்றியக் கால்*" *(நாலடி.2). 4. பிறத்தல்;* to be born. "*தோன்றிற் புகழொடு தோன்றுக*" *(குறள்.236). 5. நிலைகொள்ளுதல்;* to exist. "*புணரிய னிலையிடை யுணரத் தோன்றா*" *(தொல். எழுத்து. 482). 6. வருதல்;* to come, turn up. "*நிறுதர் தோன்றியுள ரென்றால்*" *(கம்பரா. அகத்திய. 52). 7. சாரியை முதலியன சொற்களிடையே வருதல்;* to be inserted, as *cariyai*. "*வற்றென் சாரியை முற்றத் தொன்றும்*" *(தொல். எழுத்து. 189) (நன்).*

ம. தோன்னுக; க., கோத. தோர்; தெ. தோசு; து. தோசுனி, சோ சுனி; பட. தோரு; துட. த்வீன், த்வீற்; பர். தோந்த்; கட. தோன்ட்; மா. துண்ட், தொண்ட்.

தோன்று[2]–தல் tōṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) விளங்குதல்; to be clear, explicit. "*மதுரகவி தோன்றக் காட்டுந் தொல் வழியே நல்வழி*" *(ரஹஸ்ய. 26).*

ந

நக்கரி–த்தல் nakkari-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நகர்ந்து செல்லுதல்;* to move along in a sitting posture, as a lame or sick person. *2. தவழ்தல்;* to creep with difficulty, as a weak child, a wounded reptile. *3. படுகிடையாதல்;* to be bedridden. *4. படுக்கையிற் புரண்டு கிடத்தல்;* to roll in bed.

நக்கரை–தல் nakkarai- *2 செ.கு.வி.* (v.i.) *மிகக்கரைதல்;* to stout loudly.

நக்கு[1]–தல் nakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நாவினாற் தடவுதல், அல்லது துழாவுதல்;* to lick, lap. "*ஆமாபோ னக்கி*" *(நாலடி.377.). பரிவுடன் ஆ (பசு) தன் கன்றை நக்கியது (இக்.வ.). நாய் நீரை நக்கிக் குடிக்கும் (இக்.வ.). நக்குகிறபோது நாவு எழும்புமா (பழ.). நக்குகிற நாய்க்குச் செக்கும் தெரியாது, சிவலிங்கமும் தெரியாது (பழ.). 2. தீண்டுதல்;* to touch. "*நகைமணி மார்பநக்கி... சுடுகரம் பரந்தவன்றே*" *(சீவக. 799.). 3. அழித்தல்;* to consume. "*உலகை நக்குங் கேடறு நிலைமைக் காலன்*" *(ஞானவா. சுக்கிரன்.33.). 4. சுடுதல்;* to burn. "*நனந்தலைப் பேரூ ரேரியு நக்க*" *(புறநா.57.).*

தெ. நகு; க. நக்கு; து. நக்குனி.

கோண். நாகானா; குவி. நாகலி; கூய். நாக, நாகி; கொண்டா. நாக், கோட நாகானா.

நக்கு[2]–தல் nakku-, *5 செ.கு.வி.* (v.i.) வறுமைப்படுதல்; to be destitute. *அவன் கஞ்சிக்கு இல்லாமல் நக்குகிறான் (இ.வ.). நக்கத் தவிடுமில்லை. குடிக்க நீருமில்லை (பழ.). நாய்நக்கத் தண்ணியில்லை, நடந்து போகப் பாதையுமில்லை (பழ.).*

க. நக்கு, நெக்கு; தெ. நாகு; ம. நக்குக; து. நக்குனி; கோத. நக்கி, நக்; துட. நொக்; கோத. நக்கி (nakki); து. நக்குனி; து. நக்குனி; கொலா. நக்; நாய்கி. நாக் (nāk.); பாலி. நேக் (nēk); கத்யா. நாக் (nāk); கோண். நாகானா; குவி. நாகலி; கூய். நாக, நாகி; கொண்டா. நாக்; கோடா. நாகானா.

நகங்கறு–த்தல் nagaṅkaṟu-, *4 செ.குன்றா.வி.* (v.t.)

1. இறப்பினுக்கு அறிகுறியாக, விரல்களிலுள்ள நகங்கள் கறுத்துக் காணப்படல்; nail's turning dark which is considered as a symptom of death. *2. ஒரு சாக்குறி;* a symbol of death.

நகச்சொல்(லு)–தல் naga-c-col(lu)-, *8 செ.குன்றாவி.* (v.t.) *கூடி மகிழுமாறு இனிய சொற்களைக் கூறுதல்;* to utter pleasant words. "*பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி நட்பாடல் தேற்றா தவர்*" *(குறள்.187).*

நகட்டு–தல் nagaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. இடம் விட்டுப் பெயரச்செய்தல்;* to push away, shove. *2. காலந் தாழ்த்துதல்;* to delay, procrastinate. *அவன் கருமத்தைச் செய்யாமல் நகட்டுகிறான் (உ.வ.). 3. நன்றாய் புடைத்தல்;* to thrash. *4. அரைத்தல்;* to pound, grind. *5. ஆவலுடன் உண்டுவிடுதல்;* to eat up with avidity.

நகர்–தல் nagar, *2 செ.கு.வி.* (v.i.) *1. ஊர்தல்;* to creep, as a reptile. *2. தவழ்தல்;* to crawl or move along in a lying or sitting posture, as an infant. *3. மறைவாய்ப் போதல்;* to steal away, skulk.

நகர்த்து–தல் nagarttu- *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விரும்பியேற்றுச் சிறிது தள்ளுதல்;* to push with difficulty, shove a long. *2. சிறுகச் சிறுகக் களவாடுதல்;* to pilfer, steal little by little. *3. காலம் கடத்துதல்;* to delay. *வேலையை நகர்த்துகிறான் (உ.வ.). 4. நன்றாகப் புடைத்தல்;* to thrash, give a good drubbing. *5. செவ்வையாகச் செய்தல்;* to do well.

நகழ்¹–தல் nagaḻ- *4 செ.கு.வி.* (v.i.) *கடும்வலியால் துன்பப்படுதல்;* to suffer acute pain. "*நகழமால் வரைக் கீழிட் டரக்கர் கோனை*" *(தேவா.175 : 10).*

நகழ்²–தல் nagaḻ- *4 செ.கு.வி.* (v.i.) *நகர்ந்து செல்லுதல்;* to creep, crawl along. "*நகழ்வனசில*" *(கம்பரா. அதிகா. 136).*

நகள்¹(ளு)–தல் nagal(lu)- *2 செ.கு.வி.* (v.i.) *நகர்ந்து செல்லுதல்;* to creep, crawl along.

நகள்²(ளு)–தல் nagal(lu)- *2 செ.கு.வி.*(v.i.) *1.நசுக்குண்ணுதல்;* to be crushed.

நகு¹–தல் nagu- *4 செ.கு.வி.* (v.i.) *1. சிரித்தல்;* to laugh, smile. "*நகுதற் பொருட்டன்று நட்டல்*" *(குறள்.784). 2. மகிழ்தல்;* to rejoice. "*மெய்வேல் பறியா நகும்*" *(குறள்.774). 3. மலர்தல்;* to bloom, as a flower. "*நக்க கண்போ னெய்தல்*" *(ஐங்குறு.151). 4. கட்டவிழ்தல்;* to open or expand. "*நக்கலர் துழாய் நாறிணர்க் கண்ணியை*" *(பரிபா.4 58). 5. ஒளிர்தல்;* to shine, glitter. "*பொன்னக்கன்ன சடை*" *(தேவா.644:1).6.புள்ளி சைத்தல்;* to hoot, as an owl; to sing, as a bird. "*நற்பகலுங் கூகை நகும்*" *(பு. வெ. 3, 4)*

க. *நகு* (g); **தெ.** *நவ்வு*; *நகவு.*

நகு²–தல் nagu- *4 செ.குன்றாவி.* (v.t.) *1. இழிவாகக் கருதுதல்;* to despise. "*ஈகென்பவனை நகுவானும்*" *(திரிகடு:74). 2. தாழ்த்துதல்;* to surpass, overcome, defeat. "*மானக்க நோக்கின் மடவார்*" *(சீவக.1866).*

நகை–த்தல் nagai- *4 செ.குன்றாவி.* (v.t.) *சிரித்தல்;* to laugh at. "*ஊர் நகைத்துட்க*" *(கல்லா.88, 1).*

ம. *நகெக்க.*

நகையாடு–தல் nagai-y-āḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சிரித்தல்;* to smile, laugh. *2. எள்ளல், நக்கல்;* to jeer, rail at, to joke. "*நகையாடிக் கூறிக் கைப்பற்றிய வழி*" *(ஐங்குறு.79, உரை).*

நங்கு–தல் naṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நக்கல் செய்தல்;* to deride. *நங்குதல் செய்வதையே அவன் வேலையாகக் கொண்டுள்ளான் (உ.வ.). 2. நையாண்டி செய்தல்;* to mock at. "*நங்கவொழியினும்*" *(பழமலை.50), (இலக். அக.).*

தெ. *நங்கு.*

நங்குகாட்டு–தல் naṅgu-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *நக்கல் செய்தல்;* to mimic, deride.

நச்சரி–த்தல் naccari-, *4 செ.கு.வி.* (v.i.) *ஒருவரிடம் ஒன்றை வேண்டி, எரிச்சலைத் தரும் வகையில் தொடர்ந்து கேட்டல் அல்லது வற்புறுத்துதல்;* pester. *பணம் கேட்டு நச்சரிக்கின்றான் (உ.வ.).*

நச்சு¹–தல் naccu-, *5 செ.குன்றா.வி.* (v.t.) *விரும்புதல்;* to desire, long for, like, love. "*ஒருவரா னச்சப்படாஅ தவன்*" *(குறள்.1004).* "*ஞாலமே கரியாக நானுனை நச்சி நச்சிட வந்திடும்*" *(திருவாச.30:19).*

தெ., க. *நச்சு, நர்சு;* **கோத.** *நச்.*

நச்சு²–தல் naccu-, *5 செ.கு.வி.* (v.i.) *அலப்புதல்;* to babble, prate. *எப்போதும் நச்சிக் கொண்டிருக்கிறான் (உ.வ.).*

தெ. *நசுகு;* **க.** *நக்த.*

நச்சு³–தல் naccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. துன்பம் செய்தல்; தொல்லைப் படுத்துதல்;* to tease. *2. எரிச்சலூட்டுதல்;* to vex. *3. கவலையூட்டுதல்;* to trouble. *எப்போதும் என்னை நச்சாதே (உ.வ.).*

தெ. *நட்ச்சு.*

நசி¹–தல் naši-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to be destroyed. *2. நசுங்குதல்;* to be crushed, bruised, mashed, crumpled. *3. திரைதல்;* to be frayed, as a worn cloth. *நசிந்த புடைவை' (வின்). 4. குறைவு காணுதல் (வின்);* to be palliated, extenuated. *5. அடக்கிப் பேசப்படுதல் (வின்.);* to be kept back, spoken indistinctly or with hesitation. *6. நிலைமை சுருங்குதல்;* to be reduced in circumstances.

த. நசி → **Skt.** nas.

நசி²–தல் naši-, *2 செ.கு.வி.* (v.i.) *ஓர் இனம் அல்லது குடும்பம், கலை முதலியவை எண்ணிக்கையில் குறைந்து, வளர்ச்சியில் பின்தங்கி, செல்வாக்கு*

அல்லது மதிப்பை இழந்து நலிவடைதல்; to become extinct, to decline. "திமிங்கல இனம் எண்ணெய்க்காகப் பெருமளவில் கொல்லப்படுவதால், நசிந்து வருகிறது" (உ.வ.); "கண்ணெதிரில் நண்பரின் குடும்பம் நசிந்து போவதைப் பார்க்க மிகவும் துன்பமாக இருக்கிறது". நசிந்து வரும் ஓயிலாட்டம், கரகாட்டம் முதலான நாட்டுப்புறக் கலைகளை அரசும், மக்களும் ஊக்குவிக்க வேண்டும் (உ.வ.).

த. நசி → **Skt.** nas.

நசி[3]–தல் naši-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அழித்தல்;* to be destroyed, annihilated, consumed. "நசியாஉலகிற் பாவமு நசிக்கும்" *(காஞ்சிப்பு மணிக.61). 2. குறைதல்;* to become reduced, diwindle, decline, as a family. 'அந்தக் குடும்பம் நசித்துக்கொண்டு வருகிறது'. அரிதாகக் காணப்படும் இந்தப் பறவையினம் நசிந்து வருகிறது (இக்.வ.). சில கலைஞர்களேணும் இல்லாவிட்டால், பொம்மலாட்டக்கலை என்றே நசித்திருக்கும் (உ.வ.). *3. சாதல்;* to become extinct, die. "நசித்தவரை எழும்பியருள்" *(அருட்பா. vi, அருள்விளக்க.4).*

நசி[4]–த்தல் naši-, *4 செ.குன்றா.வி.* (v.t.) *1. அரைத்தல்;* to crush, bruise, mash, crumple. *2. அழித்தல்;* to demolish, destroy, consume. *3. கசக்குதல் (யாழ்ப்);* to squeeze, press. *4. அடக்கிப்பேசுதல்;* to suppress, conceal, keep back, speak with hesitation. 5. *எளிதாக்குதல் (யாழ்ப்.);* to make light of treat as of small account.

ம. நசிக்க.

நசிந்துகொடு–த்தல் našindu-koḍu-, *4 செ.கு..வி.* (v.i.) *1. பழுத்து மெதுவாயிருத்தல்;* to yield, as a boil or fruit to the touch. *2. இணங்குதல்;* to yield to one, concede.

நசிவுகாண்(ணு)–தல் našivukāṇṇu-, *12 செ.கு..வி.* (v.i.) *1. நைந்து சேதப்படுதல்;* to become injured or bruised, as ripe fruit. *2. மனம் வேறுபடுதல்;* to turn shy or discordant, as friends. *3. நிலையற்றிருத்தல்;* to be insecure, as in one's office.

நசுக்கிப்பிழி–தல் našukki-p-piḻi-, *2 செ.கு..வி.* (v.i.) பசுமையான மூலிகைகளை இடித்துச் சாறு பிழிதல்; to squeeze out juice by bruise the green herbaceous leaves. "நாயுருவி இலையை நசுக்கிப் பிழிந்து கருக்கு நீரிட்டுக்(கசாயம்) குடித்தால் மலக்கட்டு அகலும்".

நசுக்கு–தல் našukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அழுத்தித் தேய்த்தல், நசுங்கச் செய்தல் (இ.வ.);* to squeeze; press with the hand, crush, squash, crumple, as paper. "கதவைச் சாத்தும்போது என்விரலை நசுக்கிவிட்டான்". "சுருட்டுத் துண்டைக் கீழே போட்டுக் காலால் நசுக்கினான்" (இக்.வ.). "ஏன் இப்படி என்னை நசுக்கிறீர்கள்? சிறிது தள்ளி நிற்கக்கூடாதா?" *(உ.வ.). 2. குழப்பிப் பேசுதல்;* to keep back, as a matter, to tell indistinctly, to evade. "அவன் நசுக்கிச் சொல்கிறான". *3. தடுத்தல் (வின்.);* to object, rebut, try to defeat. *4. வலிமையால் கீழே தள்ளுதல்;* to knock down. "சண்டையில் அவனை நசுக்கிவிட்டான்" *(இ.வ.). 5. அடித்தல் (இ.வ.);* to beat, thrash. "எனக்குச் சினம் வந்தால் உன்னை நசுக்கிவிடுவேன்" *(இக்.வ.). 6. கீழ்ப்படுத்துதல்;* to reduce, as haughtiness of a person, to subdue, to ruin, as a family. *7. போராட்டம் உரிமை* போன்றவற்றை ஒடுக்குதல்; to squash revolt, freedom etc. "தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை நசுக்க, மேலாளர் வன்முறையைக் கையாண்டார்" *(இ.வ.).* "கொடுங்கோலரசு மக்களின் விடுதலை வேட்கையை நசுக்குகிறது" *(இக்.வ.).*

க. நசிகு.

நசுங்கு–தல் našuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நசுக்கப்படுதல், உருக்குலைதல்;* to be mashed, to get crushed, bruised. ஓடும் பேருந்திலிருந்து விழுந்தவர், சக்கரத்தில் சிக்கி, நசுங்கிச் செத்தார் (இ.வ.). "கீழேவிழுந்த அரத்திப்பழம் ஒரு பக்கத்தில் நசுங்கிவிட்டது". விரல் நசுங்கிவிடப் போகிறது, கதவைப் பார்த்துச் சார்த்து (இக்.வ.). *2. கசங்குதல்;* to be crumpled, folded, bent, as a cloth. *3. பிதுங்குதல்;* to be squeezed, pressed, crowded. *4. கருமம் கெடுதல்;* to be suppressed, dropped, as an affair. *5. நழுவி விடுதல்;* to fall through, become hushed, die away, as a rumour. *6. நிலைகுலைதல்;* to be reduced as in circumstances.

நசுநசு–த்தல் našu-našu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தடுமாறுதல்;* to waver, to be undecided in speech or action. *2. விடாது தூறிக்கோண்டிருத்தல்;* to be continually drizzling. "நசுநசுத்த மழை" *(வின்.). 3. ஈரமாயிருத்தல்;* to be damp, as a floor. *4. தொடக்குழைதல்;* to be yielding to the touch. *5. கையிறுக்கமாயிருத்தல்;* to be illiberal. "நசுநசுத்த குணம்" *(வின்.). 6. தொல்லை (தொந்தரவு) செய்தல் (இ.வ.);* to tease, trouble.

க. நசெநசெ.

நசை–தல் našai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. அன்பு செய்தல்;* to love. "நசைஇயார் நல்கா ரெனினும்" *(குறள்.1199). 2. விரும்புதல்;* to desire. "எஞ்சா மண்ணசைஇ" *(மணிமே.19, 119).*

நஞ்சுறு–தல் nañjuṟu-, *20 செ.கு.வி.* (v.i.) மனமுருகுதல்; to melt; as heart through love. "நஞ்சுற்ற காம நன்நாகரிகந் துய்த்தவாறும்" *(சீவக.11).*

மறுவ. நெஞ்சுருகல்.

நஞ்சூட்டு–தல் nañjūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. படைக் கருவி முதலியவற்றுக்கு நச்சுத்தன்மை ஏற்றுதல்;* to imbue with poison, as a weapon. *2. நஞ்சு கலந்து கொடுத்தல்;* to administer poison. "நஞ்சுட்டு மெனவுரைப்ப" *(பெரியபு. திருநாவுக். 103).*

நஞ்செடு–த்தல் nañjeḍu-, *5 செ.கு.வி.* (v.i.) நஞ்சு முறித்தல்;

to neutralize the effects of poison.

நஞ்சொழி–த்தல் nañjōḻi-, *4 செ.கு.வி.* (v.i.) நஞ்சை நீக்குதல்; removing poison from the body.

நஞ்சொளி–த்தல் nañjōḷi-, *4 செ.குன்றாவி.* (v.t.) நஞ்சுக்கொடி வெளிப்படாதிருத்தல்; the non appearance of the after birth subsequent to child birth concealment of after birth in the womb.

நட்டுவிழு–தல் naṭṭu-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) செருக்குறுதல்; to be haughty. "ஏன் வீணாக நட்டு விழுகிறாய்" *(உ.வ.).*

நட்டுவை–த்தல் naṭṭu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* மரக்கன்று முதலியவற்றை நடுதல்; to plant, as saplings. *2.* குடும்பம் முதலியவற்றை நிலைநிறுத்துதல் *(வின்)*; to establish, as a family.

நட–த்தல் naḍa-, *3 செ.கு.வி.* (v.i.) *1.* நிற்கும் இடத்தைவிட்டு நீளுதல்போற் காலடி வைத்துச் செல்லுதல்; to walk, go, pass, proceed. "காளையன்னாளை நடக்கவும் வல்லையோ" *(நாலடி.398.).* தவழ்ந்து விளையாடிய குழந்தை இப்போதுதான் நடக்கத் தொடங்கியிருக்கிறது *(உ.வ.). 2.* ஒழுகுதல்; to behave. "பையன் ஆசிரியரிடம் எப்படி நடக்கிறான்" *(உ.வ.).* "வேலைக்காரன் வீட்டுத் தலைவனிடம் பணிவாய் நடந்துகொள்ள வேண்டும்". *3.* பரவுதல்; to spread. "குரையழனடப்ப" *(பு.வெ1:8). 4.* காலத்தில் நிகழ்தல்; ஏற்படுதல்; to happen, occur, ensue, take place as performance, occurrence or event. "நடந்து நடந்து விட்டது வருந்திப் பயன்இல்லை" *(உ.வ.). 5.* நிகழ்ந்து வருதல்; to rage, as war, to be rife, as disease, to prevail as influence, to be in progress, as a performance. "தாளிகை எழுத்தாளர் அதிகாரம்தான் இன்று மிகுதியாக நடக்கிறது" *(உ.வ.). 6.* நிறைவேறுதல்; to be fulfilled, to be effective. "உன் சூளுரை *(சபதம்)* நடக்க வில்லை" *(உ.வ.). 7.* நிகராதல் *(உ.வ.)*; to be reckoned as equal, to go along with. "மனை வாழ்க்கை போற்றுடைத்தே னல்லறத்தாரோடு நடக்கலாம்" *(சிறுபஞ்.100). 8.* குடும்பம், ஆட்சி, அலுவலகம் முதலியவை இயங்குதல்; to function, run. மூத்த மகனின் சம்பளத்தில் தான் குடும்பம் நடக்கிறது *(உ.வ.).* வணிகம் நன்றாக நடக்கிறது *(உ.வ.). 9.* நாடகம் நிகழ்த்தப்படுதல்; திரைப்படம் காட்டப்படுதல்; to run of film. இந்தத் திரை அரங்கில் என்ன படம் நடக்கிறது *(உ.வ.). 10.* குறிப்பிட்ட வயது உடையதாக இருத்தல்; to run of age. என் பேரனுக்கு ஒன்று முடிந்து இரண்டு நடக்கிறது *(உ.வ.).*

க. நாட; *தெ.* நடுச்சு; *ம.* நடக்கு; *து.* நட்புணி

நடத்து–தல் naḍattu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* நடக்கச் செய்தல்; to cause to go or walk, as a child. *2.* அழைத்துப் போதல்; to take a person in one's company to lead. *3.* கடமையாற்றுதல்; to carry on, transact, manage perform execute, administor, treat. *4.* செலுத்துதல்; to drive, as an animal a vehicle. *5.* கற்பித்தல்; to teach, as a lesson. "ஆசிரியர் பாடம் நடத்துகிறார்" *(உ.வ.). 6.* அரைத்தல்; to grind. "அம்மியில் நடத்திப் பொடியாக்கு" *(உ.வ.). 7.* தாக்குதல்; to make a baton charge. காவலர் தடியடி நடத்திக் கூட்டத்தைக் கலைத்தனர் *(உ.வ.). 8.* விழா நடத்துதல்; to organise a function. இலக்கியமன்ற விழாவினைக் கல்லூரியில் மாணவர் முன்னின்று நடத்தி முடித்தனர் *(இக்.வ.). 9.* ஒருவரை உரிய முறையில் நடத்துதல் *(கவனித்தல்)*; to treat well. நீ அவரை நடத்திய முறை சரியில்லை *(உ.வ.).*

க. நடசு; *க.* நடத்துக.

நடந்துகொள்(ளு)தல் naḍandu-kol-(lu)-, *16 செ.கு.வி.* (v.i.) மேலோரிடத்து ஒழுகுதல்; to behave, as towards a superior.

நடந்துவரு–தல் naḍandu-varu-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* நிகழ்தல்; to be in vogue. *2.* காலால் இடம் பெயர்தல்; to move by walk.

நடந்துவிடு–தல் naḍandu-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.* செயல் முடிந்துபோதல்; to be accomplished or completed. *2.* ஓடிப்போதல்; to run a way. "அன்னநடை மின்னுமறியாமல் முன்னே நடந்துவிட்டான்" *(தெய்வக். விறலிவிடு.102).*

நடந்தேறு–தல் naḍandēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) நிறை வேறுதல்; to be completed perfected, successful.

நடமாடு[1]–தல் naḍam-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* நோய் நீங்கி உலாவுதல்; to go about; move about; as after sickness. "பக்கவாத *(ஊதை)* நோய் வந்ததால் அவரால் நடமாட முடியவில்லை" *(உ.வ.).* "கொடிய விலங்குகள் நடமாடும் மலைப் பாதையில் மனிதர் நடமாட முடியாது". *2.* மீளாத்துயர், வருத்தம் முதலியவற்றுள் அடைப்பட்டிருந்து வெளிவருதல்; to rise, come out, as from depressed circumstances. *3.* தீய விலங்குகள், ஊர்வன நோய், தீயஆவி முதலானவை உலவுதல்; to haunt or frequent, as evil spirits; to infest as beasts or reptiles. "ஆவிகள் இரவில் நடமாடுகின்றன" *(உ.வ.). 4.* தீயவர் திரிதல்; to walk about thieves to walk about evil person. "திருடர் இரவில் திரிகின்றனர்". *5.* புழங்குதல்; to circulate, as coin as a report. "இன்று கள்ளப்பணம் நடமாடுகிறது". *6.* நோய் முதலியன பரவியிருத்தல்; to prevail, as epidemics.

தெ. நடயாடு.

நடமாடு[2]–தல் naḍam-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) கூத்தாடுதல்; to dance. "வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர" *(தேவா.278:1).*"எல்லோரும் இன்புற்றிருக்க நட மாடுகின்றீர்" *(திருவருட்பா.).*

நடலமடி–த்தல் naḍalam-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) பாசாங்கு செய்தல் *(இ.வ.)*; to pretend.

மறுவ. கூத்தடித்தல்

நடவு–தல் naḍavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. செலுத்துதல்;* to cause to go, drive lead on, conduct, discharge. "*கணையினை நடவி*" *(விநாயகபு.80. 704). 2. கருமம், நடத்துதல் (வின்.);* to manage administer, direct, trans - act, perform.

தெ., க., நடுபு. து. நடபாவுணி.

நடவுசெய்¹–தல் naḍavu-šey-, *1செ.குன்றாவி.* (v.t.) *அரசாளுத (நான்மணி.95.2);* to rule, govern.

நடவுசெய்²–தல் naḍavu-šey-, *1 செ.கு.வி.* (v.t.) *நாற்று நடுதல்;* to transplant seedlings. *நடவு செய்தலில் இடைவெளி இருந்தால்தான், நடவுப் பயிர் செழிக்கும் (இ.வ.).*

மறுவ. நடவுபோடு.

நடவுபோடு–தல் naḍavu-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *நாற்று நடுதல்;* to transplant seedlings. "*அடியுரம் போட்டு நடவுபோடுதலே, நல்ல விளைச்சலுக்கு அறிகுறி*" *(மது.வழ.).*

நடாத்து–தல் naḍāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நடத்துதல்;* to cause to walk.

நடி–த்தல் naḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கூத்தாடுதல்;* to dance, to act on the stage. "*நடிக்குமயி லென்னவரு நவ்விவிழியாரும்*" *(கம்பரா. வரைக்காட்சி.15.). 2. கோலங்கொள்ளுதல்;* to assume manifestations or forms, as a deity. "*நடித்ததெதிர் நடந்ததன்றே*" *(இரகு. ஆற்று.20). 3. பாசாங்கு செய்தல்;* to make pretence, affect importance. "*நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து*" *(திருவாச.41:3.).*

*த. நடி →***Skt.** *naṭa.*

நடு¹–தல் naḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. ஊன்றுதல்;* to set up, as a pillar. "*நடவந்த வுழவரிது நடவொணாவகை பரலாய்த் தென்று*" *(தேவா.133:8.). 2. வைத்தல்;* to place. "*திருவடி யென்றலைமே னட்டமையால்*" *(திருவாச. 40,8).3. நிலைநிறுத்துதல்;* to establish as fame. "*மண்ணின் மேல் வான் புகழ் நட்டானும்*" *(திரிகடு.16.).*

க., நடு; தெ. நாடு; ம. நடுக; து. நடபினி.

நடு²–த்தல் naḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *நடுங்குதல்;* to tremble. "*நடுத்திருக்கும்*" *(சங்கர. அந்தாதி.20.).*

நடுக்கட்டு–தல் naḍu-k-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உடைமையைப் பொதுக் கட்டுதல் (யாழ்ப்.);* to sequestrate property.

நடுக்கு¹–தல் naḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நடுங்குதல்;* to shiver, tremble. "*வயது முதிர்ச்சியினால் தாத்தாவின் உடல் நடுங்குகிறது*" *(உ.வ.).*

நடுக்கு²–தல் naḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நடுங்கச் செய்தல்;* to shake, cause to quiver. "*குளிர் உடலை நடுக்குகின்றது*" *(உ.வ.) . 2. மயக்கங் கொடுத்தல் (வின்.);* to cause dizziness or sickness, as betel, tobacco.

நடுக்குறு–த்தல் naḍukkuṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நடுங்கச் செய்தல்;* to cause to tramble. "*நெஞ்சு நடுக்குறூஉ நெய்த லோசையும்*" *(மணிமே.6:71.).*

க. நடுகிசு.

நடுக்கெடு–த்தல் naḍukkeḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நடுக்கம் காணல்;* to be attacked with shivering or trembling as from cold.

நடுக்கேள்–தல் naḍu-k-kēḷ-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. வழக்கு உசாவுதல்;* to hear arguments of litigants in a suit. *2. நேர்மையான முடிவு சொல்ல வேண்டுதல்;* to refer a case; for decision.

நடுங்கு–தல் naḍuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அசைதல்;* to shake, shiver, quiver. "*வாயிற் கடைமணி நடுநா நடுங்க*" *(சிலப்.20:53.). 2. அஞ்சுதல்;* to tremble through fear, to be agitated. "*ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி*" *(பெரும்பாண்.118.). 3. நாத்தடுமாறுதல்;* to stutter, falter waver. "*நடுங்கா நாவி னுறைமூ தாளன்*" *(மணிமே.12:3.). 4. மனங்குலைதல்;* to lose heart. "*நகையமராயம் நடுங்க நடுங்கான்*" *(பு.வெ.4, 15.). 5. அதிர்தல்;* to quake, as the earth. *6. பதறுதல்;* to be anxious, apprehensive. *7. கொண்டாடுதற்குரியாகத் தலையசைத்தல்;* to nod one's head as a sign of appreciation. "*சீறியாழ் நயம்புரிந் துறையுநர் நடுங்கப் பண்ணி*" *(புறநா.145.). 8. ஒப்பாதல்;* to be similar. "*படங்கெழு நாக நடுங்குமல்குல்*"*(தொல்.பொருள்.286. உரை.).*

க., நடுகு; தெ. நடுகு; ம. நடுங்ஙுக; து. நடுகுணி.

நடுச்செய்–தல் naḍu-c-cey-, *1 செ.கு.வி.* (v.i.) *1. நயன்மை வழங்குதல்;* to render justice, to decide justify. "*திரமதா நடுச்செய்யுஞ் செங்கோலினான்*" *(குற்றா.தல. மந்தமா.96). 2. அமைதிப்படுத்தல்;* to compromise.

நடுச்சொல்(லு)–தல் naḍu-c-col-(lu), *8 செ.குன்றாவி.* (v.t.) *1. முடிவு செய்தல் (இ.வ.);* to decide a case. *2. சந்து செய்தல்;* to mediate. *3. நயன்மை வழங்குதல் (யாழ்.அக.);* to render justice. *4. சான்று கூறுதல் (பழ.148. உரை.);* to bear witness.

நடுநடுங்கு–தல் naḍu-naḍuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பயத்தால் உடல் மிகப்பதறுதல்;* to tremble greatly through, fear, quake with fear."*நடமுயலும் பொழுதஞ்சி நடுநடுங்கி நானயர*" *(கோயிற்பு. பதஞ்.38.). 2. குரல் இசைக்கேடாக அதிர்தல்;* to quiver as the voice in vocal music. "*மிடறு நடுநடுங்கி*" *(சீவக.735.).*

நடுநடு–த்தல் naḍu-naḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *நடுங்குதல்;* to tremble. "*நாமவற் கண்ணாணடு நடுப்ப வாராளோ*" *(திணைமாலை.25).*

நடுநில்–தல்(நடுநிற்றல்) naḍu-nil-, *14 செ.கு.வி.* (v.i.) *(விளையாட்டுக்கள்) நடுவராயிருத்தல் (அகநா.25, உரை.)*; to act as umpire.

நடுநிலைப்பற்று–தல் naḍunilai-p-paṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *உலகியலுக்கும் ஆன்மவியலுக்கும் இடைப்பட்ட நிலை;* to holding a middle position between material and spritual.

நடுப்பார்–த்தல் naḍu-p-pār-, *4 செ.கு.வி.* (v.i.) *அறமன்ற ஆணைப்படி ஒருவழக்கின் நடுவராகச்செயல்படுதல்;* to act as a commissioner or arbitrator by order of a court.

நடுப்பேசு–தல் naḍu-p-pēšu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒரு வருடைய வழக்கை எடுத்துப் பேசுதல்;* to plead for, to advocate a cause.

நடுப்போக்கு–தல் naḍu-p-pōkku-, *5 செ.கு.வி.* (v.i.) *நயன்மை வழங்குதல் (யாழ்.அக.)*; to make a just decision.

நடுவறு–த்தல் naḍu-v-aṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வழக்குத் தீர்த்தல் (வின்.)*; to judge as an umpire, to decide. *2. வழக்கின் இருசாரார்களையும் கேட்டுத் தேர்தல்*; to hear the contentions of both parties to a suit.

நடுவெழுது–தல் naḍu-v-eḻudu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஆவண மெழுதுதல்*; to engrouss a document.

நடைப்பயில்–தல் naḍai-payil-, *7 செ.குன்றாவி.* (v.t.) *மெதுவாக அல்லது நளினமாக நடத்தல்*; to walk gracefully or daintily. *அன்னம் போல் அவள் நடைபயின்றாள் (உவ.).நடனமகளிர், அழகுமயில் போல அசைந்தாடி நடை பயில்வர் (இ.வ.).*

நடைப்போடு–தல் naḍai-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *வெற்றியுடன் சிறப்பாக முன்னேறுதல்;* to take good strides to progress tirumphantly. *நாடு நல்வாழ்வை நோக்கி நடைப்போடுகிறது (உ.வ.).*

நடைபரி–தல் naḍai-pari-, *2 செ.கு.வி.* (v.i.) *வேகமாக நடத்தல் (யாழ்.அக.)*; to walk fast.

நடைபழகு–தல் naḍai-paḻagu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நடக்கக் கற்றல்;* to learn to walk as a child. *குழந்தைகள் நடைபழகுதற்கு, நடைவண்டி ஏற்புடைத்தென்பது, எல்லாரும் அறிந்தது (உ.வ.). 2. மிக மெதுவாக நடத்தல்;* to walk too slowly, as just learning to walk used ironically.

நடைமுறைப்படுத்து–தல்naḍai-muṟai-p-paḍuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஆட்சி, திட்டம், சட்டம் போன்றவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருதல் அல்லது செயல்படுத்துதல்;* to put into practice, to bring into force, to implement. "*பல வளர்ச்சித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப் படாமல் இருக்கின்றன*". *(உ.வ.).*

நடையறி–தல் naḍai-y-aṟi-, *2 செ.கு.வி.* (v.i.) *ஊர் வழக்கங்களையறிதல் (வின்);* to understand the customs, as of a locality.

நடையாடு–தல் naḍai-y-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. திரிதல்;* to roam, to travel, to traverse. "*நடையாடாத தேசமாகையாலே*" *(திவ். திருமாலை.19.வ்யா). 2.பரவுதல்;* to spread, as fame. "*ராமகுணங்கள் நடையாடு மிடத்திலே*" *(ஈடு.7, 5, 2).*

மறுவ. நடமாடு.

நடையைக்கட்டு–தல் naḍaiyai-k-kaṭṭu-, *15 செ.கு.வி.* (v.i.) *இருக்கும் இடத்தைவிட்டு நீங்குதல், அல்லது புறப்படுதல்;* to buzz off, clear off. "*வந்த வேலை முடிந்துவிட்டால், நடையைக் கட்டு*" *(பழ.).*

நண்ணு[1]–தல் naṇṇu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கிட்டுதல்;* to draw near, approach, reach. "*நம்பனையுந் தேவனென்று நண்ணுமது*" *(திருவாச. 12:17). 2. பொருந்துதல்;* to be attached to united with, to adhere. *3. செய்தல்;* to do, make. "*நண்ணுமின்கணல்லறமே*" *(சிலப்.16, ஈற்று வெண்பா.).*

நண்ணு[2]–தல் naṇṇu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *இருத்தல் (யாழ். அக.);* to reside, live.

நணுகு–தல் naṇugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அண்மித்தல்;* to approach, draw nigh, arrive at. "*நானணுகு மம்பொன்குலாத் தில்லை*" *(திருவாச.40:6). 2. ஒன்றிக்கலத்தல்;* to become attached to or united with. "*நம்பு மென் சிந்தை நணுகும் வண்ணம்*" *(திருவாச.40:6.).*

நணுங்கு–தல் naṇuṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.); *5 செ.கு.வி.* (v.i.) *நணுகு-தல் பார்க்க;* see naṇugu-."*சுரும்பினங்கள் ..... நரம்பென வெங்கு நணுங்க*" *(ஏகாம். உலா.276.).*

நத்து–தல் nattu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *விரும்புதல்;* to desire, long for, hanker after love."*நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை*" *(தமிழ்நா.74.).*

தெ., ம., நத்த, நத்து.

நது–த்தல் nadu-, *4 செ.குன்றா.வி.* (v.t.) *1. அவித்தல் (திவா.);* to extinguish, quench. "*நாற்கடலு மேவினு நதுப்பறிய வூழிக்காற் கனலி னோதை*" *(கந்தபு. சதமுகன்வ.4). 2. மறைத்தல் (வின்.);* to eclipse, as rays; *3. கெடுத்தல் (யாழ். அக.);* to destroy.

நந்து[1]–தல் nandu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கெடுதல் (சூடா.);* to become spoiled, to perish, decay, waste. "*நாகரிய நலத்தை நந்தாத் தேனை*" *(திருவாச.9:1.5). 2. சாதல்;* to die. "*திருமைந்த னந்தறீர்ந்தது மாயுளைப் பெற்றதும்*" *(பிரமோத்.21, 61). 3. அவிதல்;* to be extinguished, put out, as a lamp. "*நந்தாவிளக்குச் சுடர் நன்மணி*" *(சீவக.3144.). 4. மறைதல்;* to set, disappear. "*இடையுறு திருவென விந்துநந்தினான்*" *(கம்பரா. உண்டாட்.67.).*

5. வசைபாடுதல், பழிதூற்றுதல் (யாழ்ப்.); to be insulted, abused.

க. நந்து.

நந்து[2]–தல் nandu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வளர்தல்;* to increase, grow, wax. "*பெரியவர் கேண்மை பிறைபோல... நந்தும்*" *(நாலடி.125.). 2. தழைத்தல்;* to be luxuriant, fertile. "*கான நந்திய செந்நிலப் பெருவழி*" *(முல்லை.97). 3. விளங்குதல்;* to prosper, flourish. "*நால்வேறு நனந்தலை யோராங்கு நந்த*" *(பதிற்றுப்.69,16). 4. செருக்குதல்;* to be proud, glow with pride or splendour. "*யான் செலினந்திச் செறிற்சாம்புமிவள்*" *(கலித்.78).*

நந்து[3]–தல் nandu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தூண்டுதல் (இ.வ.);* to stir.trim. *விளக்கை நந்து (உ.வ.).*

நப்பிரி–தல் nappiri-, *4 செ.கு.வி.* (v.i.) *நம்மைப் பிரிதல்;* to leave us, in separate from us. "*நப்பிரிந்துறைந்தோர்*" *(ஐங்குறு.227.).*

நப்புணர்–தல் na-p-puṇar-, *4 செ.கு.வி.* (v.i.) *நம்மைச் சேர்தல்;* to join us, unite with us. "*தேற்றங்செய்து நப்புணர்ந்து*" *(ஐங்குறு.23).*

நம்பிக்கைபண்ணு–தல் nambikkai-paṇṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. உறுதிசெய்தல் (வின்.);* to assure, give confidential assurance. *2. ஆணையிடுதல் (வின்.);* to swear.

நம்பு–தல் nambu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விரும்புதல்;* to long for, desire intensely. "*நின்னிசை நம்பி*" *(புறநா.136). 2. நம்பிக்கை வைத்தல்;* to trust, confide in, relay on, believe, have faith in. "*நாதனே யருளிச்செய்த வார்த்தையை நம்பிவந்தேன்*" *(திருவாலவா:28:17.). 3. எதிர்பார்த்தல்;* to hope, expect. *அவர் வேலை கிடைக்குமென்று நம்பியிருக்கிறான் (உ.வ.). 4. ஒப்புதலளித்தல்;* to accept. "*வினைக ணலியாமை நம்பு நம்பீ*" *(திவ்.பெரியதி, 6:3:9).*

க., து., நம்பு. தெ., நம்மு ம. நம்புக.

நமட்டு–தல் namaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மறைத்தல்;* to whisper. *2. ஏமாற்றுதல்;* to cheat.

நமடுகடி–த்தல் namaḍu-kaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *குழந்தைகள் உதட்டைக் கடித்தல்;* to bite the lips, as children.

நமத்துப்போ–தல் namattu-p-pō-, *6 செ.குன்றாவி.* (v.t.) *ஈரமேறுதல்;* to become damp, moist. *அப்பளம் நமத்துப் போயிற்று (உ.வ.).*

நமலு–தல் namalu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *வணங்குதல்;* to reverence, worship, bow, prostrate. "*வானவர் வானவர் கோனொடு நமன்றெழுந் திருவேங்கடம்*" *(திவ். திருவாய்.3:3:7).*

நமிட்டு–தல் namiṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கிள்ளுதல்;* to pinch.

நமு[1]–த்தல் namu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தொல்லை தருதல்;* to trouble, tease, vex. "*என்னை நமுக்கிறான்*" *(இ.வ.).*

நமு[2]–த்தல் namu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஈரமேருதல்;* to become damp, moist.

தெ. நெம்மு.

நமுகு–தல் namugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *குழைதல்;* to yield under pressure. "*இணைமுலை நமுக நுண்ணிடை நுடங்கத் துனியிருங்கலவி செய்து*" *(திவ்.திருவாய். 9:9:3.).*

நமுட்டு[1]–தல் namuṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *தினவுண்டாதல்;* to itch.

நமுட்டு[2]–தல் namuṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நெருடுதல்; நிமிண்டுதல்;* to pinch.

மறுவ. கிள்ளுதல்.

நமை[1]–தல் namai-, *4 செ.கு.வி.* (v.t.) *தினவெடுத்தல்;* to itch. *கம்பளிப்பூச்சி மேலே பட்டதால் உடம்பு நமைக்கிறது (இக்.வ). "நமைந்தெமரிடத்து நண்ணார்" (உத்தரரா. அசுவமே.23).*

தெ. நவ

நமை[2]–த்தல் namai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வருத்துதல்;* to vex, trouble. "*நமைப்புறு பிறவிநோய்*" *(சூளா.முத்.1, 32). 2. சூட்டுதல்;* to put on wear. "*குஞ்சி நமைத்த பூந்தாமம்*" *(சீவக.2839). 3. தினவெடுத்தல்;* to itch.

நமை[3]–த்தல் namai, *4 செ.குன்றாவி.* (v.t.) *கட்டளை யிடுதல்;* to command. "*பொறிபுலன் களைந்தும் நமையால்*" *(திவ். இயற்.1:32).*

நய[1]–த்தல் naya-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. விரும்புதல்;* to desire greatly, long for. "*பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று*" *(குறள்.150). 2. இன்புகழ்ச்சி கூறுதல், பாராட்டுதல்;* to compliment, appreciate. "*நல்லறிவுடை யோர் நயப்பது வேண்டியும்*" *(பத்துப்பாட்டு, நச். உரைச்சிறப்.). 3. மதித்தல்; உயர்வாகக் கருதுதல்;* to respect, esteem. *4. மகிழ்ச்சியூட்டுதல்; திருவுள்ளங் கொள்ளுதல்;* to please. *5. தட்டிக் கொடுத்தல்;* to coax. *6. கெஞ்சுதல்;* to be seech implore. "*அவன் எவ்வளவோ நயந்து கேட்டான்*" *(உ.வ.).7. அன்பு செய்தல் (சூடா.);* to love, show, affection for. *8. பின் செல்லுதல் (யாழ். அக.).;* to act upon, to follow.

நய[2]–த்தல் naya-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மகிழ்தல்;* to be glad, to rejoice. "*வல்லைமன்ற நீ நயந்தளித்த*" *(புறநா.59). 2. இனிமையுறுதல்;* to be sweet, pleasing. "*நஞ்சினங் கொடிய நாட்ட மமுதினு நயந்து நோக்கி*" *(கம்பரா.*

பூக்கொய்.7). 3. இணங்கிப் போதல்; to be congenial, to be agreeable. "யாரிடத்தும் அவன் நயந்து போவான்;". 4. பயன்படுதல் (யாழ். அக.); to be advantageous, profitable, useful. 5. மலிதல்; to be cheap. இந்த ஆண்டு (கூலம்) நயத்தது (இ.வ.); 6. மேம்படுதல்; to excel, surpass, improve. "அதற்கிது நயத்திருக்கிறது" (உ.வ.).

நயத்தகு–தல் naya-t-tagu-, 2 செ.கு.வி. (v.i.) 1. விரும்பத் தகுதல்; to be pleasing, lovable. "நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" (குறள்.580). 2. நன்மையாதல்; to be good in quality. "நயத்தக மண்ணி" (பு.வெ.10:10).

நயந்தட்டு–தல் nayan-taṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) இமைதரத் தொடங்குதல்; to begin to interest. புத்தகம் இப்போது தான் நயந்தட்டுகிறது (இ.வ.).

நயந்துசொல்(லு)–தல் nayandu-šollu-, 8 செ.குன்றாவி. (v.t.) 1. பயன்படச் சொல்லுதல்; to speak effectively. 2. பாராட்டுதல்; to praise. 3. வேண்டிக்கொள்ளுதல்; to persuade politely. நயந்து சொன்னால் நாடெல்லாம் கேட்கும் (உ.வ.).

நயப்பி–த்தல் nayappi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. விரும்பும்படி செய்தல்; to induce to love or desire. "தலைமகனை நயப்பித்துக் கொள்கையில்" (ஐங்குறு.88, உரை). 2. அறிவுறுத்தி இணங்க வைத்தல் (வின்); to persuade, win another's consent, secure compliance or approval. 3. ஏற்கச் செய்தல்; to approve. 4. மலிவாக்குதல் (வின்.); to render cheap, cheapen. 5. பயன்படுத்துதல் (வின்.); to improve, benefit.

நயம்பண்ணு–தல் nayam-paṇṇu-, 5 செ.கு.வி. (v.i.) 1. உதவி செய்தல் (அனுகூலம் செய்தல்) (வின்.); to do a favour.

நயம்பாடு¹–தல் nayam-pāḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. இனிமையாய்ப் பாடுதல் (வின்.); to sing sweetly. 2. முகமன் கூறுதல் (இ.வ.); to flatter.

நயம்பேசு–தல் nayam-pēšu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மகிழப் பேசுதல் (வின்.); to speak pleasantly, courteously. 2. இனிமையாய் ஒலித்தல்; to sound sweetly, as a lute string.

நயவரு¹–தல் naya-varu-, 5 செ.குன்றாவி. (v.t.) விரும்புதல்; to like, appreciate, desire, ardently. "தன்மலைபாட நயவந்து கேட்டருளி" (கலித்.40:31).

நயவரு²–தல் naya-varu-, 18 செ.கு.வி. (v.i.) நன்மையுண்டாதல்; to be beneficial. "நயம்வரும் பள்ளிமே னல்கி" (பு.வெ.11. பெண்பாற்.9).

நயிச்சியஞ்செய்–தல் nayicciyañ-šey-, 1 செ.குன்றாவி. (v.t.) தன்வயப்படுத்துதல் (இ.வ.); to win over to one's side.

நரகலி–த்தல் naragali-, 4 செ.கு.வி. (v.i.) 1. அழுக்குடைத்தாதல் (யாழ்.அக.); to lie defiled with excrement, as a puking child or sick person. 2. அருவருத்தல்; to loathe, abhor.

நரங்கடி–த்தல் naraṅgaḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) அழித்தல் (யாழ்.அக.); to destroy.

நரங்கு–த்தல் naraṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மெலிதல்; to emaciate. 2. வளர்ச்சிக் குறைதல்; to diminish.

நரம்பிழு–த்தல் narambiḻu-, 4 செ.கு.வி. (v.i.) வீணைக்கு நரம்பிட்டுக் கட்டுதல்; to tie string to vīṇai.

நரம்பிளை–த்தல் narambiḷai-, 4 செ.கு.வி. (v.i.) நரம்பு ஆற்றல் இழத்தல்; to prostrate the nerves.

நரம்புகுத்து–தல் narambu-k-kuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) நரம்பிலுண்டாகும் வலி; to nerves pain.

நரம்புவாங்கு–தல் narambu-vāngu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. இலை முதலியவற்றின் நரம்பை நீக்குதல்; to strip the fibres, as from leaves from fruits. 2. துன்புறுத்துதல்; to put one in great straits. 3. குதிகாலின் நரம்பை வெட்டுதல்; to cut the tendons of the heels.

நரம்பெடு¹–த்தல் narambeḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கடுமையாக வேலை புரியச் செய்தல்; to exact work, grind. 2. ஆற்றலைக் கெடுத்தல்; to reduce one's strength or pride. அவன் உன்னை நரம்பெடுத்து விடுவான் (உ.வ.).

நரம்பெடு²–த்தல் narambeḍu-, 4 செ.கு.வி. (v.i.) உடம்பு மிக மெலிந்து போதல்; to become emaciated or thin. உடம்பு நரம்பெடுத்தது (உ.வ.).

நரல்–லுதல் naral-, 5 செ.கு.வி. (v.i.) 1. ஒலித்தல்; to sound, make noise, creak, roar. "ஆடுகழை நரலும் சேட்சிமை" (புறநா.120). 2. கத்துதல்; to low as cows, to caw, as crows to hum as many voices, to cry. "வெண்குருகு நரலவீசும் நுண் பஃறுவலைய" (அகநா.14). 3. பேசுதல்; to speak, to tell.

க. நரல்.

நரற்று–தல் narar̤ru-, 5 செ.கு.வி. (v.i.) ஒலித்தல் (யாழ்.அக.); to produce sound.

நராங்கு–தல் narāngu-, 5 செ.குன்றாவி. (v.t.) வளர்ச்சி குன்றிப்போதல் (யாழ்ப்.); to be stunted in growth.

நருக்கு¹–தல் narukku-, 5 செ.கு.வி. (v.i.) 1. நொறுக்குதல்; to mash, crush or grind to pieces. "நகத்தினாலுயர் நகங்களை நருக்குமாபோல" (பாரத. நிரை. 17). 2. கொல்லுதல்; to kill. "நட்பகத்திலா வரக்கரை நருக்கி" (கம்பரா. மீட்சி.184). 3. துண்டாக்குதல்; to cut in pieces, mince, as vegetables. "ஈயத்தை நருக்கி வெள்ளியதாக வுருக்குவோம்" (அட்டப். திருவரங்கக்.42).

தெ. நருகு, ம. நருக்கு கறு.

நருக்கு²–தல் narukku-, 5 செ.கு.வி. (v.i.) குட்டுதல்; to thump,

hit with the knuckle. *அவன் தலையில் நருக்கினான் (உ.வ.).*

நருங்கு–தல் naruṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நொறுங்குதல்;* to be mashed, crushed to pieces. *2. தேய்கடையாதல் (யாழ். அக.);* to be deficient in growth, to decay, to grow lean, as a child; to fail, as a business, a harvest.

நருநரு–த்தல் naru-naru-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெறு நெறுத்தல் (வின்.);* to feel grit, is the mouth along with food. *2. மிகக் குறைவாதல்;* to be slight or mild as fever. *நருநருத்த காய்ச்சல் (யாழ்.).*

நருமு–தல் narumu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பல்லை நறநறவென்று கடித்தல்;* gnashing the teeth togehter with force.

நரை–த்தல் narai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மயிர் வெளுத்தல்;* to become grey haired; to grow grey, as hair. "*மயிர் நரைப்ப முந்தைப் பழவினையாய்த் தின்னு மிரை மூன்றும்" (திரிகடு.67). 2. பயிர் வெளிறுதல்;* to fade, as standing crops from draught. *3. நிறம் வெளுத்தல் (வின்.);* to be pale in colour.

க. நரெ. தெ., நரையு. ம., நரெக்க.

நல்கு[1]–தல் nalgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொடுத்தல்;* to bestow, grant, give. "*இல்லோர் புன்கண் டீர நல்கும்" (பதிற்றுப்.86, 6). 2. விரும்புதல்;* to desire, like. "*நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்" (மணிமே.12:56). 3. தலையளி செய்தல்;* to show deep love. "*பரிந்தவர் நல்கார்" (குறள்.1248). 4. படைத்தல்;* to create. "*நல்கித் தான் காத்திருக்கும் பொழிலேழும்" (திவ். திருவாய். 1:4:5). 5. வளர்த்தல்;* to train, bring up, as a child. "*நங்கைமீர் நீருமோர் பெண்பெற்று நல்கினீர்" (திவ். திருவாய். 4:2:9).*

நல்கு[2]–தல் nalgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. காலந் தாழ்த்துதல்;* to delay. "*நாணத்தாற் சிறிது போழ்து நல்கின னிருந்த" (கம்பரா. மூலபல.50). 2. பயன்படுதல்;* to be useful. "*அயற்றேவர் நல்கார் விடினும்" (திருநூற்.89). 3. உவத்தல்;* to rejoice. "*நல்கினும் நல்கானாயினும்..... தித்தன் காண்க" (புறநா.80). 4. அருள் செய்தல்;* to show favour, to bestow grace. "*பார்த்தனுக்கன்று நல்கிப் பாசுபதத்தை யீந்தாய்" (தேவா.1029:8). "நம்பா இனித்தான் நல்காயே" (தேவாரம்).*

ம., நல்குக.

நல்கூர்–தல் nalgūr-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வறுமைப் படுதல்;* to be poor, indigent. "*நல்கூர்ந்த மக்கட்கு" (நாலடி.242). 2. கைவிடப்படுதல், துணையின்மையால் கைவிடப் படுகை;* to destitute. *3. களைப்படைதல்;* to be wearied. "*நடவை வருத்தமொடு நல்கூர் மேனியள்" (மணிமே.13:72).4. துன்புறுதல்;* to suffer. "*மாலைநீ யாயின் மணந்தா ரவராயின் ஞாலமோ நல்கூர்ந்தது வாழிமாலை" (சிலப்.7:50).*

நல்லதுசொல்(லு)[1]–தல் nalladu-šol(lu)-, *13 செ.கு.வி.* (v.i.) *1. அறிவு கூறுதல்;* to give kindly advice. *2. அன்புடன் பேசுதல் (வின்.);* to speak kindly.

நல்லதுசொல்(லு)[2]–தல் nalladu-šol(lu)-, *8 செ.குன்றாவி.* (v.t.) *வழியனுப்புதல் (வின்.);* to bid farewell.

நல்லதுபண்ணு–தல் nalladu-paṇṇu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *இணக்குதல் (வின்.);* to reconcile.

நல்லேர்கட்டு–தல் nallēr-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நல்ல நாளில் பருவத்திற்குரிய உழவைத் தொடங்குதல்;* to commencement of seasonal ploughing at an anspicious hour.

நல–த்தல் nala-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நலமாதல்;* to result in good, to take a tarourable turn. "*நலக்க வடியோமை யாண்டுகொண்டு" (திருவாச.9.6): 3 செ.குன்றாவி.* (v.t.) *2. விரும்புதல்;* to wish, desire. "*விலங்குசாக நலந்ததனுருவங்கொண்ட தென்கோலோ" (திரு வாலவா. 59:2).*

நலக்கு–தல் nalakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கசங்கச் செய்தல்;* to crumple as cloth or paper. *2. அழுக்காக்குதல்;* to soil slighty, sully, tarnish.

க. நலுகிசு.

நலங்கனி–தல் nalaṅkaṉi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. அன்பு முற்றுதல்;* to over-flow with love. "*நலங்கனிந்துருகி நின்றாள்" (சீவ.2060). 2. அழகு முற்றுதல்;* to mellow with ripe beauty.

நலங்கு–தல் nalaṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நொந்து போதல்;* to qrow faint, wilt. "*உயிர் வருந்த நலங்கி வந்ததும்" (அரிச் பு.வெட்டஞ்.40). 2. வருந்துதல்;* to suffer, pain. "*விஞ்ச நலங்கியதும்" (திருவாய்.4). 3. கசங்குதல் (இ.வ.);* to lose stiffness, become crumpled. *4. நுடங்குதல்;* to bend, as a now. "*மலைமாவி னலங்க லுளைத்தவர்" (மருதூரந்.100).*

தெ., க., நலகு.

நலங்குலை[1]–த்தல் nalaṅgulai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கெடுத்தல்;* to defile or pollute. *2. கற்பழித்தல்;* to bring to a surrender of chastity sedyce.

நலங்குலை[2]–த்தல் nalaṅ-gulai-, *2 செ.கு.வி.* (v.i.) *கற்பழிதல்;* to carnal knowledge of a woman forcibly and against her will; to seduction; to rape.

நலஞ்சாற்று–தல் nalañ-šāṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அரசனாணையை வெளியிடுதல்;* to proclaim, as a royal command. "*பெரும்பயண மெழுக வென்று நலஞ்சாற்ற" (பெரியபு.சேரமான் பெ.46).*

நலஞ்சுடு–தல் nalañ-šūḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *காளை, எருது ஆகியவற்றிற்குக் கடுப்புச் சூடிடுதல்*

(வின்.); to geld a bull and cauterize the wound.

நலந்தட்டு–தல் nalan-daṭṭū-, *5 செ.குன்றாவி.* (v.t.) *விதையடித்தல் (வின்.);* to castrate by crushing the testicles, geld, emasculate.

மறுவ. காயடித்தல், விதைவாங்குதல்.

நலி[1]–தல்nali-, *2 செ.கு.வி.* (v.i.) *1. மெலிதல்;* to waste, pine away. *தொடர்ந்து நோய் வாய்ப்பட்டதால் உடம்பு நலியத் தொடங்கியது (இ.வ.). 2. அழிதல்;* to perish. "*நண்ணா வசுரர் நலியவே*" *(திவ். திருவாய். 10:7:4). 3. சரிதல் (வின்.);* to slide, to roll; to fall down. *4.பலுக்கலில்(உச்சாரணத்தில்) ஓசை நடுநிலையாதல்;* to be pronounced in a middle tone. "*நலிதலுழைப்பின்*" *(நன்.88). 5. வருந்துதல்;* to suffer, to be in distress. "*தேடி நலிந்தே கண்ணாற் காணாத காரணனை*" *(சிவரக, நந்திகண.1). 6. தோற்றல் (வின்.);* to yield before a foe; to fail. *7. நல்லநிலைமை வீழ்ச்சி அடைந்து தாழ்வடைதல்;* to decline in progress, prosperity, etc. *தந்தை இறந்த பிறகு அந்தக் குடும்பம் நலிந்த நிலையிலிருந்து இப்பொழுதுதான் தலையெடுத்துத் தழைக்கிறது (உ.வ.).*

நலி[2]–தல்nali-, *2 செ.குன்றாவி.* (v.t.) *நெருக்கி வருத்துதல்;* to afflict, distress. "*நடுங்கஞர் நலிய*" *(பு.வெ.12, பெண்பாற். 15. கொளூ.).*

தெ. நலி.

நலி[3]–த்தல்nali-, *4 செ.குன்றாவி.* (v.t.) *துன்புறுத்துதல் (யாழ்.அக.);* to afflict, cause distress.

நலுங்கு[1]–தல்naluṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உடல் வருத்துதல்;* to strain oneself. *உடல் நலுங்காது வேலை செய்ய முடியுமா? உடை நலுங்காமல் வேலை செய்பவருக்குத்தான் ஊதியம் மிகுதி (உ.வ.).*

[நலி + நலிங்க + நலுங்கு-.]

நலுங்கு[2]–தல்naluṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நெகிழ்தல்;* to slip off. "*கலைகள் அவிழ்ந்தவிழந்து நலுங்க*" *(கனம் கிருட்டிணையர்.107). 2. மெலிதல்;* to becorne lean. "*உடல் நலுங்க உள்ளமும் நலுங்கும்*" *(இ.வ.). 3. நலிவுறுதல்;* to be distressed. "*வயிற்றிலிருந்த காலம் நலுங்காமல் நோக்கினவள்*" *(திவ்.பெரியாழ்.3:2:8, வ்யா, பக்.552).*

நவி[1]–த்தல்navi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அவித்தல்;* baking.

நவி[2]–த்தல்navi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அழித்தல்;* to extinguish.

நவிலு–தல்navilu-, *7 செ.குன்றாவி.* (v.t.) *நாவினால் ஒலித்துப் பயிலுதல்;* to make a sound with help of tongue in practice. "*நாவில்தோறும் நூல் நலம் பயக்கும்*" *(பே.வ.).*

நவிழ்–த்தல்naviḻ-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அவித்தல் (ச.து.);* to extinguish. "*குழிகட்பேய் சூழுநோக்கிச் சுடலை நவிழ்த்து*" *(பதினொ. காரை. மூத்த.2).*

நவிற்று–தல்naviṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சொல்லுதல் (யாழ்.அக.);* to say, speak, utter. *2. ஆராய்தல்;* to investigate. "*எண்ணவிற்றுஞ் சிறப்பினை*" *(பரிபா. 3:80). 3. அதிகாரத் தோடுரைத்தல் (சது.);* to declare with authority.

நவு–தல்navu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெகிழ்தல் (யாழ்ப்.);* to be come soft; to be soddened by boiling; to be weary, as the limbs by labour. *2. மக்கிப்போதல்;* to rot, decay as clothes, books, wood.

நவை–த்தல்navai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கொல்லுதல்;* to kill. "*சூர்நவை முருகன் சுற்றத்தன்ன*" *(புறநா.23).*

நழுக்கு[1]–தல்naḻukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வருந்துதல்;* to torture, distress. "*நழுக்கு கோர நரகி லழுத்தினார்*" *(குற்றா. தல. கவுற்சன. 66). 2. அரிசியை ஒன்றி ரண்டாகக் குத்துதல் (யாழ்ப்.);* to pound coarsely, as paddy. *3. மழுங்கச்செய்தல் (யாழ்ப்.);* to blunt, level. *4. கீறுதல் (யாழ்ப்.);* to make a shallow furrow, dent or impression. *5. தந்திரமாய் விட்டு விலகுதல்;* to evade, to slip away.

நழுக்கு[2]–தல்naḻukku-, *5 செ.கு.வி.* (v.t.) *சிறிது சிறிதாக மலம் போதல்;* to pass in stools, little by little. *என் குழந்தைக்கு மலம் நழுக்கிப் போகுது (இ.வ.).*

நழுங்கு–தல்naḻuṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மழுங்குதல் (யாழ்ப்.);* to become blunted, as a point; to be dull. *2. கிறப்பெறுதல்;* to be loughed with shallow furrows to be written or engraven with a faint impression. *3. வழுவுதல்;* to slip.

நழுநழு–த்தல்naḻu-naḻu-, *4 செ.கு.வி.* (v.i.) *பிடிகொடாது பேசுதல்;* to speak evasively to shuffle. *பேசுவதைத் தெளிவாய்ப் பேசு, நழுநழுத்தலாகப் பேசாதே (உ.வ.).*

நழுப்பு–தல்naḻuppu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மயங்கச் செய்தல்;* to fascinate. "*நன்கொடு மனமது மறுகிட நழுப்பு நஞ்சென சிறுமிகள்*" *(திருப்பு.5). 2. வேலை செய்ய மறுகுதல்;* to shrink from, shirk, as one's duty.

நழுவு–தல்naḻuvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வழுவுதல்;* to slip, as a garment. *2. தந்திரமாய் நீங்குதல்;* to steal or skulk away, escape. " *என்னல மேகொண்டு நழுவினர்காண்*" *(அருட்பா. iii. இன்.5). 3. பிடி கொடாது பேசுதல்;* to evade, shift, shuffle, give an indirect answer.

நள்(ளு)–தல் (நட்டல்)naḷ(ḷu)-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சேர்தல், அடைதல்;* to approach, join, associate with. "*உயர்ந்தோர் தமை நள்ளி*" *(திருவானைக்.கோச்செங். 25). 2. நட்புக்கொள்ளுதல்;* to contract friendship, befried. "*உறினட்டறினொரூஉ மொப்பிலார் கேண்மை*" *(குறள்.812). 3. விரும்புதல்;* to like accept. "*நள்ளா திந்த நானிலம்*" *(கம்பரா. கைகேசி.26). 4. செறிதல்;* to dense. "*நள்ளிருள் யாமத்து*" *(சிலப்.15:105).*

நளி–தல் naḷi-, *2 செ.கு.வி.* (v.t.) *1. செறிதல்;* to be close together, clowded. "*நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்*" *(மலைபடு.197). 2. பரத்தல்;* to be vast in extent. "*நளிந்த கடலுட் டிமிறிரை போல்*" *(களவழி.18). 3. ஒத்தல் (தொல். பொருள். 291);* to resemble.

நளிர்–தல் naḷir-, *4 செ.கு.வி.* (v.i.) *1. குளிர்தல்;* to be cool. "*நளிர்ந்தசீல னயாசலன்*" *(திவ். பெரியாழ். 4:4:8). 2. நடுங்குதல்;* to shake, tremble.

நளிர்வி–த்தல் naḷirvi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நடுங்கச் செய்தல்;* to cause to tremble. "*நவையை நளிர்விப்பான் றன்னை*" *(திவ். இயற். பெரியதிருவந். 43).*

நளுக்கு–தல் naḷukku-, *5 செ.கு.வி.* (v.i.) *நடுக்குதல்;* to shake, tremble. "*காலைமுதல் உடம்பு நளுக்கிக் கொண்டே யிருக்கிறது*" *(நாஞ்.).*

நற்றரி–த்தல் naṟṟari-, *4 செ.கு.வி.* (v.i.) *நன்றாக நிலைத்தல்;* to be well established, to settle firmly. "*பெரிய திருவடி கழுத்திலே நற்றரிக்கவிருத்தல்*" *(திவ். திருமாலை.10, வ்யா. பக்.47).*

நறுக்கு–தல் naṟukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வெட்டுதல்;* to cut off. "*கைக்கத்திரிகையிட்டு நறுக்கின தலையாட்டத்தினையுடைய பரிகள்*" *(பு.வெ.3, 10, உரை). 2. துண்டித்தல்;* to mince, chop. *கன்னலிடு மாலையினறுக்கிடுதி (காசிக. சிவகன்மா. இயமன் 42). 3. நொறுக்குதல்;* to smash.

க. நரக்கு; தெ., நருக்கு; ம., நறுக்குக.

நறுங்கு–தல் naṟuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *வளர்ச்சி குறைதல்;* to be stunted. *அவன் நறுங்கிப் போய்விட்டான்.*

க., நலுகு.

நறும்பு–தல் naṟumbu-, *5 செ.குன்றாவி.& செ.கு.வி.* (v.i.) *1. பல்லைக் கடித்தல் (யாழ்ப்.);* to grind the teeth, gnash. *2. பல்லால் கடித்தல்;* to bruise, crush between the teeth.

தெ., நறுமு.

நறுமு¹–தல் naṟumu-, *5 செ.கு.வி.* (v.t.) *பல்லைக் கடித்தல் (யாழ்ப்.);* to grinds the teeth, gnash.

நறுமு²–தல் naṟumu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பல்லாற் கடித்தல்;* to bruise, crush between the teeth.

நறுமுறு–த்தல் naṟu-muṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. முறுமுறுத்தல்;* to grumble, mutter, *murmur. 2. உறுமுதல் (வின்.);* to grwol, as cats, dogs. *3. பொறாமை கொள்ளுதல்;* to envy. "*நறுமுறு தேவர் கணங்களெல்லாம்*" *(திருவாச.9:5).*

நன்மையா–தல் naṉmaiyā-, *6 செ.கு.வி.* (v.i.) *பூப்பெய்துதல் (பெண் பருவமடைதல்);* to attain puberty, become marriageable, as a girl.

மறுவ. சமைதல்.

நன்றாயிரு–த்தல் naṉṟāy-iru-, *20 செ.கு.வி.* (v.i.) *1. நல்ல நிலைமையிலிருத்தல்;* to be good, beautiful. *2. செழுமையாக நலவாழ்வுடனிருத்தல்;* to prosper, flourish, farewell to be in health.

நன்றிகெடு–தல் naṉṟi-keḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *செய்ந்நன்றி மறத்தல் (வின்.);* to be ungrateful.

நன்றிசொல்(லு)–தல் naṉṟi-šol(ḷu)-, *13 செ.கு.வி.* (v.i.) *செய்ந்நன்றி யறிவித்தல் (வின்.);* to acknowledge benefits, thank.

நன்றியறி–தல் naṉṟi-y-aṟi-, *2 செ.கு.வி.* (v.i.) *செய்ந்நன்றி நினைத்தல் (வின்.);* to be grateful, thankful.

நன்னு–தல் naṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பல்லாற் கடித்தல் (யாழ்ப்.);* to nibble, as rats or squirrels, to bite or nibble off anything, as nails.

நனை¹–தல் naṉai-, *4 செ.கு.வி.* (v.i.) *ஈரமாதல்;* to become wet, to be moistened, soaked. "*நனைகவுள் யானையால் யானை யாத்தற்று*" *(குறள்.678). முழுதும் நனைந்த வனுக்கு முக்காடு தேவையா? (பழ.). வீட்டுக்கு வரும்போது மழையில் நனைந்து விட்டேன் (இக்.வ.).*

நனை²–தல் naṉai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அரும்புதல்;* to bud. "*பிடவ மலரத் தளவு நனைய*" *(ஐங்குறு.499). 2. தோன்றுதல்;* to appear. "*மகிழ்நனை மறுகின் மதுரையும்*" *(சிறுபாண்.67).*

நனை³–த்தல் naṉai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஈரமாக்குதல் (வின்.);* to wet, moisten, soak.

eh

நாக்கறு–த்தல் nā-k-kaṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கத்தியால் நாக்கினைத் துண்டித்தல்;* to excise of the tongue - Glossotomy.

நாக்குத்தட்டு–தல் nākku-t-taṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நாக்கினால் ஒலி உண்டாக்குகை;* to make a sharp sound with the tongue when tasting.

நாக்குத்தப்பு–தல் nākku-t-tappu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பேச்சுறுதி தவறுதல்;* to fail in a promise. "*அவன் நாக்குத் தப்பினான்*". "*நாக்குத்தப்புதல் அவருக்குக் கைவந்தகலை*" *(உ.வ.). 2. பொய் சொல்லுதல் ;* to speak falsely. *நாக்குத் தப்புதலை அரசியல் தலைவர்கள் பிழைப்பாகக் கொண்டுள்ளனர் (உ.வ).*

நாக்குத்தீட்டு[1]–தல் nākku-t-tiṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *உணவை மிகுதியாக விரும்புதல்;* to hanker after food.

நாக்குத்தீட்டு[2]–தல் nākku-t-tiṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *புகழ்தல் (யாழ்ப்.);* to praise one-selft.

நாக்குநீட்டு–தல் nākku-niṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அளவு கடந்து பேசுதல்;* to wag one's tongue. *2. ஆள் இருவர் தம் உரையாடலில், தொடர்பில்லாத மூன்றாமவர் கருத்துக் கூறுதல்;* third person's unwarranted opinions. *3. பெரியோர் அல்லது ஆசிரியர் உரையில் குறுக்கிடுதல்;* to intervene in scholars or teachers speech.

நாக்குநீள்(ளு)–தல் nākku-nil(lu)-, *5 செ.கு.வி.* (v.i.) *1. விருப்பமிகுதல்;* to be greedy, to have unbounded desires. "நாக்கு நீள்வன் ஞானமில்லை" *(திவ். திருவாய். 4.6:7). 2. கடுமையாய்ப் பேசுதல்;* to be reckless in speech, to have a long tongue. *3. அளவு கடந்து பேசுதல்;* to talk endlessly. *4. வரம்பு மீறுதல்;* to speak in an impertinent.

நாக்குப்புரள்(ளு)–தல் nākku-p-pural(lu)-, *16 செ.கு.வி.* (v.i.) *சொல்தவறுதல்;* to fail in one's word. "அவன் நாக்குப் புரளுகிறான்" *(உ.வ.).*

நாக்குவளை–த்தல் nākku-vaḷai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பழித்தல்;* to blame, despise. "நாக்கு வளைக்கும் படியான செயலைச் செய்யலாகாது" *(இ.வ.).*

நாக்குவாங்கு–தல் nākku-vāngu-, *5 செ.கு.வி.* (v.t.) *1. நாக்கை உள்ளிழுத்தல்;* to draw in the tongue. *2. களைத்துப் போதல்;* to be completely exhausted, sorely tried. *வேலை என்னை நாக்கு வாங்குகிறது (உ.வ.).*

நாக்குழறு–தல் nā-k-kuḻaru-, *5 செ.கு.வி.* (v.i.) *நாத்தழுதழுத்தல்;* to falter or stammer, as in the ecstatic joy or other emotion. "வேந்தர்... நாக்குழறிப் பாடினர் புகழ்ந்து" *(பாரத. இராச.150).*

நாக்கூசு–தல் nā-k-kūšu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. விருப்பத்திற்கு ஒவ்வாத சுவையால் நாக்கில் வெறுப்புணர்ச்சி ஏற்படுதல்;* to feel irritant sensation due to unsuitable taste. *மாங்காயின் அளவிற்கு அதிகமான புளிப்புச் சுவையால், நாக்கூசுகிறது (இக்.வ.). 2. விரும்பாத வற்றைச் சொல்லத் தவிர்த்தல்;* to feel bad taste as of telling unwanted or abusive language. "அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை நாடி இனிய சொலின்" *(குறள்.96). கற்றோர் அவையில் நாக்கூசும்படி இழிந்த சொற்களை, அவர் பேசினார் (உ.வ.).*

நாக்கெடு[1]–த்தல் nākkeḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நாக்கை நீக்குதல்;* to remove of the tongue. *2. நாக்கு வழித்தல் பார்க்க;* see nākku-vaḻi.

நாக்கெடு[2]–த்தல் nākkeḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஒருவரைத் தவறாகப் புரிந்துகொண்டு பேச வாயெடுத்தல்;* to attempt to speak with wrong understanding as of others.

நாக்கேணி செய்–தல் nākkēṇi-šey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. பரிந்துரை செய்தல்;* to recommend. *2. தகவுரை கூறுதல்;* to elabrate one's qualitles.

நாக்கைப்பிடுங்கு–தல் nākkai-p-piḍuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *இறத்தல்;* to die.

நாக்கொட்டு[1]–தல் nākkoṭṭudal-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நாவறளுகை;* the state of tongue being dry and cleaving to the palate, as from thirst. "தாய்முலையை அகலில் நாக்கொட்டுமா போல" *(ஈடு.1:3:9). 2. குலவையொலி எழுப்புதல்;* to utter shrill sounds chorusly made by women.

நாக்கொட்டு[2]–தல் nā-k-koṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நாவினால் பல்வகையொலிகளை இசைததும்ப ஒலித்துக் காட்டுதல்;* to mimicry.

நாக்கொட்டு[3]–தல் nākkoṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உணவின் சுவை மிகுதியால், நாவினைத் தட்டுதல்;* to sound with the tongue from excessive taste.

மறுவ. சப்புக்கொட்டுதல்.

நாக்கோடு–தல் nā-k-kōḍu-, *12 செ.கு.வி.* (v.i.) *ஒருபாற் சார்ந்து பேசுதல்;* to speak impartiality. "நாக்கோடாமை சான்றோர்க்கு அழகு" *(உ.வ.).* "கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக் கோடாமை கோடிபெறும்" *(ஔவை - பாடல்).*

நாகரீகம்பண்ணு–தல் nāgarigam-paṇṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பண்பட்ட பழக்கத்துடன் நடத்தல்;* to behave politely. *2. ஆடம்பரமாயிருத்தல்;* to be foppish.

நாகரீகம்விடு–த்தல் nāgarigam-viḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *பண்பட்ட நிலையில் பேசுதல் (யாழ்.அக.);* to speak politely.

நாகா[1]–த்தல் nākā-, *4 செ.கு.வி.* (v.i.) *பேச்சில் விழிப்பாயிருத்தல்;* to speak vigilantly. "யாகாவா ராயினும் நாகாக்க" *(குறள்.127). மேடைப் பேச்சாளருக்கு நாகாத்தல் இன்றியமையாதது (உ.வ.).*

நாகா[2]–த்தல் nākā-, *4 செ.கு.வி.* (v.i.) *உண்ணும்போது கட்டுப்பாட்டுடன் இருத்தல்;* to kee pon dietary. *சாப்பாட்டில் நா காத்தால், உடம்பு கட்டழகுடன் மிளிரும்.*

நாங்கு–தல் nāṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *மனவுறுதி தளர்தல்;* to shrink in spirit, become nerveless. "தாங்கி நாங்கிப் போக" *(யாழ்ப்).*

நாசமாய்ப்போதல் nāšamāy-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *வாழ்க்கையில் உருப்படாமல் அழிந்துபோதல்;* to go to rack and ruin. "குடித்துக்குடித்து நாசமாய்ப் போய்விட்டான் (இ.வ.). நல்லவர்கள் நாசமாய்ப்போ என்று பிறரை ஏசமாட்டார்கள் (உ.வ.). நீ நாசமாய்ப்போ!.

நாசி–த்தல்nāši-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to perish, to be destroyed. *2. ஒடுங்குதல்;* to be reduced to primitive elements.

நாட்கடத்து–தல்nāṭ-kaḍattu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நாள் கழித்தல் (யாழ்.அக.);* to pass away time. *2. நாள் ஒற்றி வைத்தல் (இ.வ.);* to put off from day to day.

நாட்குறி–த்தல்nāṭ-kuṟi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஏற்றநாளை யேற்படுத்துதல் (வின்.);* to appoint a suitable day. *2. நற்செயல்களுக்கு உரிய நாளைத் தேர்ந்தெடுத்தல்;* to select on auspicious day for good events.

நாட்கொள்(ளு)–தல்nāṭ-koḷ(lu)-, *13 செ.கு.வி.* (v.i.) *1. நன்னாளில் தொழில் தொடங்குதல்;* to enter on a work or business on an auspicious day. "*பின்பு செய்யும் மொய்யமருக்கு முதலே நாட்கொண்டு*" *(சீவக.415, உரை). 2. அரச சின்னங்களைப் பரத்தானம் அல்லது புறவீடு விடுதல்;* to send forward the royal equipage on an auspicious day preparatory to a king's journey. "*மன்னவன் குடைநாட் கொண்டன்று*" *(பு.வெ.3,3).*

நாட்செய்[1]–தல்nāṭ-cey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *நல்ல வேளையில் பணியினைத் தொடங்குதல்;* to enter on a work or business on an auspicious day. "*மொய்யமா நாட்செய்து*" *(சீவக.448).*

நாட்செய்[2]–தல்nāṭ-cey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *விளையாட்டு நிகழ்வில் ஒளிமிக்க விளக்குகளையிட்டு இருள கற்றுதல்;* to use flood lights during matches held in the night, (day - night matches).

நாட்செல்(லு)–தல்nāṭ-cel(lu)-, *13 செ.கு.வி.* (v.i.) *1. நெடுங்காலம் நிற்றல்;* to be long standing, as a chronic disease. *2. அகவை முதிர்தல்;* to become old, advanced in years.

நாட்டு–தல்nāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நடுதல்;* to set up, fix, plant, place in the ground, as a pole, to erect; to insert. "*கற்பக நாட்டி*" *(திருவாச.9:3). 2. நிலைநிறுத்துதல்;* to establish, as laws, customs, rules, fame, reputation; to lay down, as a theory, an opinion. "*சிலப்பதிகார மென்னும் பெயரானாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்*" *(சிலப்.பதி.60). தமிழே ஞாலமுதன்மொழி என்று நாட்டுதல் பணியில் தமதுவாணாளைச் செலவிட்டவர் மொழி ஞாயிறு (இ.வ.). 3. வாழவைத்தல்;* to establish one in life. "*அவனை நன்னிலையில் நாட்டினான்*" *(இ.வ.). 4. படைத்தல்;* to create. "*மண்ணாட்டுநர் காக்குநர் வீட்டுநர் வந்த போதும்*" *(கம்பரா.நகர்நீ.122). 5. எழுதுதல் (ஈ.டு.4:5:2).* ; to write inscribe as placing a style upon a plam leaf.

க., தெ. நாடு; ம. நாட்டுக.

நாட்டுடைமையாக்கு–தல்nāṭṭuḍaimai-ākku, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அரசுடைமை ஆக்குதல்;* to nationalize. *2. நாட்டிலுள்ள மக்களுக்கு உடைமையாகும் வண்ணம் பல்வகை அறிஞர் நூல்களுக்கு நல்கை (மானியம்) தருதல்;* to nationalize literary sources to extend fiscal help to scholars.

நாட்பட்டிரு–த்தல்nāṭ-paṭṭiru-, *3 செ.கு.வி.* (v.i.)நெடுங் காலமிருத்தல்; to stay for a long time. "*நாட் பட்டிருந் தின்ப மெய்தலுற்று*" *(தேவா.29:3).*

நாட்படு–தல்nāṭ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. நெடுங்காலந் தங்குதல்;* to be long - standing as a chronic disease. "*நாட்பட்ட வேலை*" *(உ.வ.). 2. பழமையாதல்;* to become old, stale. "*நாட்பட்ட மரம்*" *(இ.வ.). நாட்பட்ட வீடு (உ.வ.). 3. தற்காலப் பயன்பாட்டிற்குத் தகுதியற்றதாதல்;* to become out of date. *இச்செயல் நாட்பட்டது (இ.வ.).*

நாட்பார்[1]–த்தல்nāṭ-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *திருமண முதலிய மங்கல நிகழ்வுகட்கு நன்னாள் குறித்தல்;* to fix an auspicious day, as for a marriage.

நாட்பார்[2]–த்தல்nāṭ-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நாட் காட்டியில் நல்ல நிகழ்விற்குத் தக்க நாள் பார்த்தல்;* looking for an auspicious day in a calander.

நாடகமடி–த்தல்nāḍagam-aḍi-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பாசாங்கு செய்தல் (யாழ்.அக.);* to play the hypocrite. *2. புறத்தே மாற்றுருக்காட்டுதல்;* to make an outward show. *3. வீணே, பகட்டாரவாரங் காட்டுதல்;* to be showy, ostentatious. *4. சினம் முதலியவற்றால், பிறருக்கு எரிச்சலூட்டும்படி, வெறுப்புடன் நடத்தல் (வின்.);* to be arrogant or affected, as a woman in displeasure.

நாடகமாடு–தல்nāḍagam-aḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கூத்து நடித்தல்;* to act or play on the stage, to dance. "*கழுதொடு காட்டிடை நாடக மாடி*" *(திருவாச.5.7). 2. நாடகமடித்தல் பார்க்க;* see naḍagam-aḍi-.

நாடடிப்படு–த்தல்nāḍaḍi-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *நாட்டைவென்று கீழ்ப்படுத்தல் (யாழ்.அக.);* to subjugate a country.

நாடியழுந்து–தல்nāḍi-y-aḻundu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நாடியனது நடை குறைதல்;* to come down the function or rate of pulse. "*நாடியழுந்தியதால் அவர், அதிக நாள் தாங்கமாட்டார்*" *(இ.வ.).*

நாடியெழும்பு–தல்nāḍi-eḻumbu-, *5 செ.கு.வி.* (v.i.) *துடிப்பு கிளம்புதல்;* to rise of the pulse.

நாடியைத்தாங்கு–தல்nāḍi-yai-t-tāṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *இரத்தல் (இ.வ.);* to entreat, beg.

நாடு[1]–தல்nāḍu, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தேடுதல்;* to seek, enquire after. "*தனக்குத் தாய் நாடியே சென்றாள்*" *(நாலடி.15). 2. விரும்பித்தேடுதல்;* to seek. *கட்சிக்காரர் தேர்தல் காலத்தில் மட்டும் மக்களை நாடுகின்றனர் (இக்.வ.). பழுத்த மரத்தை நாடிப் பறவைகள் வருதல்*

இயல்பே (இக்.வ.). உங்களிடம் ஒரு உதவி நாடி வந்திருக்கிறேன் (இக்.வ.). 3. தொடர்தல்; to pursue. 4. ஆராய்தல்; to examine. "நாடாது நட்டலிற் கேடில்லை" (குறள்.791). 5. துருவித்தேடுதல்; to investigate. 6. விரும்புதல்; to desire earnestly. "நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்" (பதிற்றுப்.86:7). அமைதியை நாடி ஊர்ஊராகத் திரிந்தார் (இ.வ.). "பணத்தை நாடாதவர் யார்". 7. தெரிதல்; to know understand. "முன்னவ னிதனை நாடி" (கந்தபு. ததீசியு.32). 8. ஒத்தல்; to resemble. "வேயொடு நாடிய தோள்" (தொல். பொருள்.286 உரை). 9. அளத்தல்; to measure. "நாடற்கரிய சீர் ஞானசம்பந்தன்" (தேவா.518:11). "நாடற்கரிய நலத்தை நந்தாத் தேனைப் பழச்சுவை ஆயினானை" (திருவாச.).10. கிட்டுதல்; to reach, approach. இங்கே நாடவொட்ட வில்லை (உவ.).11. நினைத்தல்; to think consider. "நன்மார்க்க ஞானத்தை நாடி" (சி.சி.8.22). 12. மோப்பம் பிடித்தல் (வின்.); to scent, as dogs.

ம. நாடுக; து., நாடுனி.

நாடு[2]–தல் nāḍu, 5 செ.கு.வி. (v.i.) பயன் கருதிச் செல்லுதல்; to approach. சிக்கல் அல்லது நிலத்தகராறு போன்றவற்றைப் போக்க அறமன்றங்களை நாடுவதால் பணச் செலவுதான் மிஞ்சும் (உ.வ.).

நாடு[3]–தல் nāḍu, 5 செ.கு.வி. (v.i.) அளவுபடுதல்; to be measured. "நண்பென்னு நாடாச் சிறப்பு" (குறள்.74).

ம. நாடுக; து., நாடுனி.

நாடுகடத்து–தல் nāḍu-kaḍattiu-, 5 செ.குன்றாவி. (v.t.) நாட்டிற்கு இரண்டகம் செய்தல், கழுக்கச் செய்திகளை வெளியிட்டுக் காட்டிக் கொடுத்தல் போன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களுக்காக, ஒருவரை நாட்டைவிட்டு வெளியேற்றுதல்; to exile to banish.

நாடுநீங்கு–தல் nāḍu-nīṅgu-, 5 செ.கு.வி. (v.i.) அரசன் இறத்தல் (நாஞ்.); to die, said of a king.

நாடுபாவு–தல் nāḍu-pāvu-, 5 செ.குன்றாவி. (v.t.) பகைவர் நாட்டில் படையுடன் நுழைதல்; to invade. "முத்தரைசர் நாடுபாவஇய தஞ்சிற்றப்படிகள் பொன்மாந்தனார்" (செங்கம் நடுகற்கள் - கி.பி.7. பல்லவர்காலம்).

நாடுபிடி–த்தல் nāḍu-piḍi, 4 செ.கு.வி. (v.i.) 1. தேசத்தை வென்று கைக்கொள்ளுதல்; to seize, capture a country. 2. குத்தகையெடுத்தல்; to take a lease. "நாடு பிடித்தார்க்கு ஒழுகைக் காட்டி" (திவ். திருமாலை. 3 வ்யா.22).

நாணிக்கொள்ளு–தல் nāṇi-k-koḷḷu, 16 செ.கு.வி. (v.i.) நான்று (கழுத்தில் சுருக்கிட்டுக்) கொள்ளுதல்; to hand oneself. "நாணிக்கொள்ளப் பஞ்சமோ கயிறு" (இராமநா உயத்.72).

நாணு[1]–தல் nāṇu-, 5 செ.கு.வி. (v.i.) வெட்கப்படுதல்; to be shy, to feel bashful, to be embarrassed, as a woman. "அஞ்ஞான்று கண்டேம் போ னாணுதுமால்" (நாலடி.385). 2. மனங்குன்றுதல்; to be abashed, to shrink back, as from a forbidding sight; to feel repugnance or dislike. "தகவுடையார் தாமேயு நாணித் தலைச் செல்வார்" (நாலடி.241). 3. அச்சமின்றித் துணிவு காட்டுதல் (வின்.).; to acquiesce or yield through regard. 4. ஒன்றற்கு அடங்குதல் (வின்.). ; to shrink from the touch, as some plants, to yield, as disease to medicine, to be subdued, as snakes in proximity to certain roots. 5. அஞ்சுதல்; to fear. "தன்கட் பழிநாணுவாளை" (குறள்.794). 6. குவிதல்; to close, as flowers. "பங்கயம் போல்னாணி" (தஞ்சைவா.210). 7. பிணங்குதல் (யாழ்ப்.); to be affected unfavourably, as some trees or plants by nearness to the tamarind, to be uncongenial to each other, as the red and white lotus.

க., நாண்சு.

நாணுவரையிற–த்தல் nāṇu-varai-y-iṟa-, 4 செ.கு.வி. (v.i.) பத்துத் துண்பத்துள் நாணம் நீங்குதலாகிய தொல்லை (தொல்.பொருள்.100); transgreesing the bounds of proprinety and modesty, as a heroine in love, one of ten avattal.

நாணெறி–தல் nāṇ-eṟi-, 2 செ.குன்றாவி. (v.t.) நாணைத் தெறித்து ஒலியெழுப்புதல்; to twang the bowstring. "நாணெறிந்து முறைமுறை தொடர்ந்து" (கம்பரா. நாகபாச.61).

நாணேற்று–தல் nāṇ-ēṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) வில்லை வளைத்து நாணைச் செருகுதல்; to bend a bow and fasten its string.

நாத்தாங்கிப்பேசு–தல் nā-t-tāṅgi-p-pēšu-, 5 செ.கு.வி. (v.i.) 1. திக்கிப் பேசுதல்; to falter in speech, stammer. 2. எண்ணிப்பேசுதல்; to speak thoughtfully.

நாந்து–தல் nāndu-, 5 செ.கு.வி. (v.i.) நனைதல் (யாழ்.அக.); to become wet.

க. நாந்து.

நாநீட்டு–தல் nā-nīṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) பேசுதல்; to speak, tell, as wagging one's tongue. "அவையறிந்து நாநீட்டுதல் ஆன்றோர்க்கு அழகாகும்" (இக்.வ.). "ஓதியி னொதுங்கி..... நாநீட்டும்" (மணிமே.5:108). கண்ட இடத்தில் கண்டபடி நாநீட்டினால், மிஞ்சுவது பகையே ஆகும். (இக்.வ.). நாநீட்டுதல் எனும் பண்பினைத் தக்க இடம் அறிந்து மேற்கொள்ள வேண்டும். 2. ஏசுதல்; to rebuke.

நாப்புக்காட்டு–தல் nāppu-k-kāṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அழகு காட்டுதல்; to imitate in derision, to mimic. 2. வஞ்சித்தல், ஏய்த்தல் (வின்.); to deceive.

நாப்பொடி–தல்nā-p-poḍi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *நாவுலர்தல் (யாழ்.அக.);* to dry up of the tongue.

நாம்பு–தல்nāmbu-, *5 செ.கு.வி.* (v.i.) *இளைத்தல் (வின்.);* to become meagre, thin or emaciated.

க. நாம்பு.

நாமஞ்சாத்து–தல்nāmañ-sāttu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஏமாற்றுதல் (பே.வ.);* to deceive. *2. திருமண் பூசுதல்;* to wear tridental mark.

நாமடிக்கொள்ளு–தல்nā-maḍi-k-koḷḷu-, *7 செ.குன்றாவி.* (v.t.) *நாவை மடித்தல்;* to touble the tongue. "*நாமடிக் கொண்ட உதட்டையும்*" *(ஈடு.4,87).*

நாமம்போடு–தல் nāmam-pōḍu-, *20 செ.குன்றாவி.* (v.t.) *கொடுத்ததற்குரியதைத் தராமல் ஏமாற்றுதல்;* to cheat. "*வேலை வாங்கித் தருவதாகச் சொல்லிப் பணம் பெற்றுக்கொண்டு, எல்லோருக்கும் நாமம் போட்டு விட்டான் (இ.வ.).*

நாயகம்பண்ணு–தல்nāyagam-paṇṇu-, *5 செ.கு.வி.* (v.i.) *தலைமைத் தன்மை செலுத்துதல் (யாழ்.அக.);* to rule, exercise sovereigntly, to impose authority.

நால்(லு)–தல்nāl(lu)-, *16 செ.கு.வி.* (v.i.) *தொங்குதல்;* to hang, swing; to be suspended, hung up. "*நான்ற முலைத்தலை நஞ்சுண்டு*" *(திவ்.இயற்.1,18). 2. கழுத்திற் சுருக்கிட்டுக் கொள்ளுதல்;* to hang oneself. "*நான்றியான் சாவ லென்றே*" *(சீவக.2513).*

நாவடக்கு–தல்nāvaḍakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உணவின் சுவையை நாக்கு அடக்கி வைத்தல்;* to suppress the sense of taste. *2. நா எழாமல் பண்ணுதல்;* to render one incapable of move the tongue through sorcery.

நாவழி–த்தல்nā-vaḻi-, *செ.குன்றாவி.* (v.t.) *நாக்கின் அழுக்கினைச் சுறண்டுதல்;* to clean the torgue by scraple.

நாவுழற்று–தல்nā-v-uḻaṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பொறாமைப்பட்டுப் பேசுதல் (நாஞ்.);* to give expressions to one's jealousy.

நாவூறுபடு–த்தல்nāvūṟu-paḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நாவாற் சுடுதல்;* to blight of the tongue.

நாள்கேள்–தல் (நாள்கேட்டல்) nāḷ-kēl-, *11 செ.குன்றாவி.* (v.t.) *நன்னாள் குறிக்கும்படி கேட்டல்;* to consult an astrologer or priest for fixing an auspicious day.

நாள்தள்ளு–தல்nāḷ-taḷḷu-, *5 செ.கு.வி.* (v.i.) *காலங்கழித்தல்;* to manage to pass one's days. *வாங்கிய பணத்தைத் திருப்பித் தராமல் நாள் தள்ளுவது நல்ல பழக்க மில்லை (இ.வ.).*

நாள்விடு–தல் nāḷ-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *வாழ்க்கை நடத்துதல் (யாழ்.அக.);* to spend one's life time.

நாள்வை–த்தல் nāḷ-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *மணநாள் உறுதி செய்தல்;* to fix an auspicious day, as for a marriage.

நாளாயபோ–தல்nāḷāya-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *ஒவ்வொரு நாளும் செல்லுதல்;* to go daily. "*நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே ஆளாய அன்பு செய்வோம் மடநெஞ்சே*" *(தேவா.1).*

நாளிடு–தல்nāḷi-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *நன்னாள் குறித்தல்;* to fix or appoint an auspicious day, as for a marriage. "*நாளை வதுவை மணமென்று நாளிட்டு*" *(திவ்.வாய்ச்.6:2).*

நாளுல–த்தல்nāḷ-ula-, *4 செ.கு.வி.* (v.i.) *இறத்தல்;* to end one's days, die. "*தேனுக னாசமாகி நாளுலப்ப*" *(திவ். திருச்சந்.80).*

நாளேரடி–த்தல்nāḷ-ēr-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *நல்ல நாளில் உழத்தொடங்குதல் (இ.வ.);* to begin ploughing on an auspicious day.

மறுவ: நல்லேர் அடித்தல், பொன்னேர் பூட்டுதல்.

நாளோட்டு–தல்nāḷ-ōṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. காலங்கழித்தல்;* to pass one's days. *2. காலத்தாழ்வு செய்தல்;* to delay, procrastinate.

நாற்றங்கேள்–தல் nāṟṟaṅ-kēḷ-, *11 செ.குன்றாவி.* (v.t.) *மணமறிதல்;* to smell. "*நாற்றங் கேட்டலுந் தின்ன நயப்பதோர் கூற்று*" *(கம்பரா. தாடகை.63).*

நாற்றம்வீசு–தல்nāṟṟam-vīšu-, *5 செ.கு.வி.* (v.i.) *தீயநாற்ற மடித்தல்;* to emit a bad smell, as a carcass.

நாற்று–தல்nāṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தொங்க விடுதல்;* to hang, suspend. "*முத்துத் தாம முறையொடு நாற்றுமின்*" *(மணிமே.1:49). 2. தூக்குப் போடுதல் (வின்.);* to hang a person.

நாற்றுப்பறி–த்தல் nāṟṟu-p-paṟi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நாற்றங்காலிலிருந்து நெல் நாற்றுகளைப் பெயர்த்து எடுத்தல்;* to transplant as of paddy nursery.

நாற்றுப்பாவு–தல் nāṟṟu-p-pāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வித்தூன்றுதல் அல்லது விதை விதைத்தல்;* to sow seeds. *2. இளஞ்செடி பதியம் வைத்தல்;* to transplant seedlings.

நாற்றுவிடு–தல் nāṟṟu-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *நாற்று உண்டாக்க விதை விதைத்தல்;* to glow seedlings.

நாறடி–த்தல்nāṟaḍi-, *4 செ.கு.வி.* (v.t.) *தரக்குறைவாக நடந்து மதிப்பின்மையை உருவாக்குதல்;* to talk or behave in an extremely brazen manner.

நாறு[1]–தல்nāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மணத்தல்;* to emit a sweet smell, to give forth perfume. "*நாறுபூம்பொழி னாரையூர்*

(தேவா.215:1). 2. கெட்ட நாற்றம் வீசுதல்"; to stink. "அழுகிய முட்டையைக் குளிர்பெட்டியில் வைத்ததால், காய்கறி யெல்லாம் நாறுகிறது" "நாறாதெடுத்தடவி யெரியூடே" *(திருப்பு.904). 3. தோன்றுதல்;* to appear, arise. "திருநாறு விளக்கத்து" *(பதிற்றுப்.52,13). 4. பிறத்தல்;* to come into being to be born. "தேர்பத்தினன் மகவென நாறி" *(கல்லா.94:25). 5. முளைத்தல்;* to sprout, shoot forth. "நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா" *(இன்.நாற்.20).*

நாறு²–தல்nāṟu-, *5* செ.குன்றாவி. (v.t.) *முகர்தல்;* smell. "உற்று நாறியுங் கண்டு முணர்ந்து" *(சீவக.885).*

நான்றுகொள்ளு–தல் nāṉṟu-koḷḷu-, *16* செ.கு.வி. (v.i.) கயிற்றைக் கழுத்திலிட்டுக் கொண்டு, தானாக உயிரை மாய்த்துக் கொள்ளுதல்; to hang oneself. "நான்றியான் சாவலன்றே" *(சீவ.2513).*

Ã

நிகர்¹–த்தல் nigar-, *4* செ.குன்றாவி. (v.t.) *நிகர்²- பார்க்க;* see nigar-. "மஞ்சை நிகருந் த்யாக வள்ளலே" *(விறலிவிடு. 902).*

நிகர்²–த்தல் nigar-, *4* செ.குன்றாவி. (v.t.) ஒத்தல்; to be similar, alike. "கண்ணொடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை" **(தொல். பொருள். 290).**

நிகர்³–த்தல் nigar-, *4* செ.கு.வி. (v.i.) *1. மாறுபடுதல்;* to rival; "தன்னொடு நிகரா வென்னொடு நிகரி" *(ஐங்குறு.67). 2. விளங்குதல்;* to shine; to be visible. "தஞ்சேணிகர் காவின்" *(திருக்கோ.183).*

நிகர்த்து–தல் nigarttu, *5* செ.குன்றாவி. (v.t.) நன்றாகப் புடைத்தல்; to tharsh, give a good drubbing.

நிகரிடுதல் nigaridu-, *17* செ.குன்றாவி. (v.t.) ஒப்பிடுதல்; to compare. "தன்னொடு நிகரா என்னொடு நிகரிப் பெருநளம் தருக்கம் என்ப விரிமலர்த்" *(ஐங்குறு.67).*

நிகழ்¹–தல் nigaḻ-, *4* செ.கு.வி. (v.i.) *1. நேருதல்;* to happen, occur. "தொண்டனார் கங்கு நிகழ்ந்தன" *(பெரியபு. திருநா. 380). 2. நடந்துவருதல்;* to be current, passing, as time. "நிகழுங் காலத்துச் செய்யு மென்னுங் கிளவியொடு" *(தொல். சொல். 229). 3. செல்லுதல்;* to enter, pass. "செயிர்க்க ணிகழாது" *(பு.வெ.8,17). 4. தங்குதல்;* to abide, continue. "தொன்மை மேன்மையி னிகழ் பெருந் தொண்டை நன்னாடு" *(பெரியபு. திருக்குறிப்பு. 2). 5. நிறைவேறுதல்;* to be performed, transacted, carried on.

நிகழ்²–தல் nigaḻ-, *4* செ.கு.வி. (v.i.) *1. விளங்குதல்;* to shine. "வளனற நிகழ்ந்து வாழுநர் பலர்பட" *(பதிற்றுப்.49, 15, உரை). 2. ஒளி செய்தல்;* to emit light, to be respiendent.

நிகழ்த்து¹–தல் nigaḻttu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. அருஞ் செயல் புரிதல்;* to create a record. அகரமுதலித் துறையில் அருஞ்செயல் நிகழ்த்தியோர் பலர் *(உ.வ.). 2. வித்தை ஏற்படுத்துதல்;* to work a miracle. இறைவன் நிகழ்த்தியதாகக் கூறப்படும் வித்தைகளின் தொகுப்பே திருவிளையாடற் புராணமெனும் தொன்ம நூலாகும் *(உ.வ.). 3. நாடகம், நாட்டியம் முதலியவற்றை நடித்து, நடத்துதல்;* to perform. நாடகம் என்பது நிகழ்த்திக் காட்டப் படுவதுதான் *(உ.வ.).* தெருக்கூத்தைச் சிறப்பாக நிகழ்த்திக் காட்டினார்கள். *(உ.வ.). 4. உரை வழங்குதல்;* to deliver a speech etc. குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துவார். *(உ.வ.). 5.* சொற்பொழிவாற்றுதல், கலந்துரையாடல்; to conduct a discussion. மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கில் தேவநேயப் பாவாணர் நிகழ்த்திய உரையை நூலாக வெளியிட்டுள்ளனர். *(உ.வ.).*

நிகழ்த்து²–தல் nigaḻttu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. நடப்பித்தல்;* to effect, perform, transact, set on foot, bring to pass. "ஐந்தொழி னிகழ்த்தலாகும்" *(திருவாத. பு. திருவெம்.6). 2.* சொல்லுதல்; to speak, say, mention, narrate, declare. "முதல்வன் வன்மை யாவரே நிகழ்த்தற்பாலர்" *(கந்தபு. சூரப. வதை. 74).*

நிச்சயி–த்தல் niccayi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. மெய்ப்பொருள் (வின்.);* to ascertain, confirm. *2. உறுதி செய்தல்;* to resolve, determine, decide. "அறிஞர் நிச்சயித்தனர்" *(கந்தபு. சூரனமைச். 137).*

நிச்சி–த்தல் nicci-, *4* செ.குன்றாவி. (v.t.) *நிச்சயி-, பார்க்க;* see niccayi-. "நிச்சித்திருந் தேனென் னெஞ்சஞ் கழியாமை" *(திவ். திருவாய். 10, 4, 5).*

நிண்ணயி–த்தல் niṇṇayi-, *4* செ.குன்றாவி. (v.t.) முடிவு படுத்துதல் *(உ.வ.);* to determine, resolve.

நிண¹–த்தல் niṇa-, *4* செ.கு.வி. (v.i.) கொழுத்தல்; to grow fat.

நிண²–த்தல் niṇa-, *3* செ.குன்றாவி. (v.t.) *1. கட்டுதல்;* to tie up, fasten. "கட்டினிணக்கு மிழிசினன்" *(புறநா.82). 2. முடைதல் (சூடா.);* to braid.

நிணர்¹–தல் niṇar-, *2* செ.கு.வி. (v.i.) கட்டுதல்; to tie, fasten. "பட்டு நிணர்கட்டில்" *(சீவக. 2030).*

நிணர்²–தல் niṇar-, *2* செ.கு.வி. (v.i.) செறிதல்; to crowd, gather thick. "எங்கணு நிணர்ந்த பூங்குளிர் நிழல்" *(திருவானைக். நாட்.109).*

நிம்பு–தல் nimbu-, *5* செ.குன்றாவி. (v.t.) நெம்புதல்; to lift with a lever.

நிமி–தல் nimi-, *4 செ.கு.வி.* (v.i.) *வாய் நெளிதல்;* to twitch, as the lips of a child in crying. "*நிமியும் வாயொடு கண்கணீர் மல்க*" *(திவ். திருவாய்.6, 5, 2).*

நிமிட்டு–தல் nimiṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கிள்ளுதல் (வின்.);* to pinch, as in punishment. *2. நெருடித் தூண்டுதல்;* to trim, as a wick. *3. கசக்குதல் (வின்.);* to rub or crush between the hands, as grain.

நிமிடு–தல் nimiḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நெருங்குதல்;* to feel between fingers. "*துகிலின் வெண்கிழித் துய்க்கடை நிமிடி*" *(பெருங். உஞ்சை. 33, 92).*

நிமிண்டு[1]–தல் nimiṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கசக்குதல்;* to crush, squeeze between the hands, as grain. "*கொல்லைக்கம்பை நிமிண்டியு மூதியுந் தின்ன வல்லோர்*" *(தனிப்பா.i, 142, 38). 2. கிள்ளுதல்;* to pinch, nip off, with the fingers. *3. பிறர் அறியாமல் சிறிது சிறிதாகக் கவர்தல் (யாழ்ப்.);* to pilfer little by little.

நிமிண்டு[2]–தல் nimiṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கட்டை விரலுக்கும் சுட்டுவிரலுக்கும் இடையே பிடித்து அழுத்தி முன்பின் அசைத்தல்;* to pinch, to trim as a wick, etc. *குழந்தையின் கன்னத்தை நிமிண்டக் கை குறுகுறுத்தது (உ.வ.). விளக்குத் திரியை நிமிண்டினாள். (உ.வ.).*

நிமிர்[1](ரு)–தல் nimir(ru)-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உயர்தல் (சூடா.);* to become erect; to be straightened; to stand upright; to raise or hold the head erect. *2. நீளுதல்;* to be out-stretched, as the arm. "*திரையெனு நிமிர்கையால்*" *(கம்பரா. கங்கை. 62). 3. வளர்தல்;* to grow tall, as a youth to increase in height to shoot up. "*ஓங்கி யழலாய் நிமிர்ந்தாய் போற்றி*" *(தேவா. 1160, 5). 4. ஏறுதல்;* to exceed the limit, as a foot in verse. "*அம்மை தானே அடிநிமிர் பின்றே*" *(தொல். பொருள். 547). 5. பரத்தல்;* to extend, expand, spread out. "*உரைகுறுக நிமிர் கீர்த்தி*" *(கம்பரா. குலமுறை. 4). 6. நுடங்குதல்;* to bend, shake. "*மின்னு நிமிர்ந் தனையராகி*" *(மதுரைக். 679). 7. நடத்தல்;* to walk, proceed. "*கடற்றானை யொன்னார் நடுங்க வுலாய்நிமிரின்*" *(பு.வெ.7, 5). 8. ஓடுதல் (சூடா.);* to run. *9. மிகைத்தல்;* to be excessive. "*நிமிர்பரிய மாதாங்கவும்*" *(புறநா.14). 10. தொலைவாதல்;* to be far, distant. "*நணுகவு நிமிரவு நடக்கு ஞானத் தருணர்வினின்*" *(கம்பரா. கடிமண.60). 11. பொன் போல் உயர்ந்ததாதல்;* to be of superior quality, as gold. "*நிமிர்பொன் சொரியும் வரையே*" *(சீவ. 1376). 12. நெருங்குதல் (வின்);* to be close, thick, crowded. *13. உறுதியாதல்;* to be bold, firm decided. *செயற்றிறத்தில் நிமிர்ந்து நிற்கிறான் (வின்.).14. இறுமாத்தல் (வின்.);* to be proud, affected, arrogant. *15. முயலுதல்;* to be active, make an effort. *இசைச் சொலளவைக் கென்னா நிமிராது (மணிமே. 11:81). 16. கோள் முறைமாறி (வக்கிரித்து) திரும்புதல் (வின்.);* to return from retrograde motion-, as a planet.

க. நிமிர்.

நிமிர்[2]–தல் nimir-, *4 செ.கு.வி.*(v.i.) *இடையிடுதல்;*to interpose."*நிறைந்து முறழ்ந்து நிமிர்ந்துந் தொடர்ந்தும்*"*(பரிபா. 19:82).*

நிமிர்த்திவிடு–தல் nimirtti-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. நிமிரச் செய்தல்;* to straighten. *2. நன்றாய்ப் புடைத்தல் (வின்.);* to give a good drubbing.

நிமிர்த்து[1]–தல் nimirttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நேர்நிற்கச் செய்தல்;* to straighten up, set upright, as a pot. *நீர்க்குடத்தை நிமிர்த்து (உ.வ.). 2. வளைவு நீக்குதல்;* to unfold, uncoil. "*மண்மூடு தோட்டின் முடங்க னிமிர்த்து*" *(கம்பரா. பள்ளி. 6). 3. சீர்படுத்துதல் (வின்.);* to improve, as one's circumstances. *உன்னை வளர்த்து நிமிர்த்தினவன் நானல்லவோ? (உ.வ.). 4. நன்றாய்ப் புடைத்தல்;* to thrash, beat severely. *அவனை நன்றாய் நிமிர்த்தி வெளியே அனுப்பு (உ.வ.).*

க. நிமிர்க.

நிமிர்த்து[2]–தல் nimirttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. இருக்கும் நிலையிலிருந்து உயர்த்துதல்;* raise. *குனிந்து எழுதிக் கொண்டிருந்தவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான் (உ.வ.). கூனிக் குறுகாமல் நெஞ்சை நிமிர்த்தி நில். (உ.வ.). 2. நேராக்குதல்;* straighten. *கம்பியை நிமிர்த்திப் போய்க் கையைக் கிழித்துக் கொண்டாயா (உ.வ.). தவலையை நிமிர்த்தி வைக்கக் கூடாதா? (உ.வ.).*

நிமை–த்தல் nimai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *இமைத்தல்;* to wink. "*புருவநிமிரவிரு கண வாள் நிமைக்க*" *(திருப்பு. 497).*

நிரப்பிவிடு–தல் nirappi-viḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. நிறைவு செய்தல்;* to complete, fulfil. *2. சூலடையச் செய்தல்;* to impregnate. (Loc.) *3. நிறைகுடித்தடியில் நெற்பரப்புதல் (வின்.);* to strew paddy round a niṟaikuḍam.

நிரப்பு–தல் nirappu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நிறைத்தல்;* to fill, replenish; to cause to abound. "*அல்லன் மாக்கட் கில்லது நிரப்புனர்*" *(மணிமே. 23, 133, பி.ம்.). நீர் வந்தால் தொட்டியை நிரப்பு. (உ.வ.). மண்ணைக் கொட்டிப் போட்டுப் பள்ளத்தை நிரப்பு (உ.வ.). 2. நிறைத்தல்;* to load a gun etc. *துமுக்கியில் குண்டுகளைப் போட்டு நிரப்பி வை (உ.வ.). 3. நிறைவு செய்தல்;* to complete; to perform satisfactorily. "*வேள்வி நிரப்பி*" *(கம்பரா. பிராட்டிகளங். 20). இந்த விண்ணப்பத்தை நிரப்பிக்கொடுங்கள் (உ.வ.) வினாத்தாளில் கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களைக் கொண்டு நிரப்புக. (உ.வ.). 4.அமர்த்துதல்;* to fill a vocancy, post. *அகர முதலித் துறையில் வெறுமையாயுள்ள இடங்களைத் தக்கவர்களைக் கொண்டு நிரப்பினால் பணி விரைவாய் நிறைவுறும் (உ.வ.). 5. பொந்திகையாக்குதல் (யாழ்.அக.);* to satisfy. *6. விடையளித்தல்;* to tell, reply, respond, answer. "*உயிர் நீக்கினரியாரது நிரப்புவீர்*" *(கம்பரா. சம்பாதி. 29). 5.*

பரப்புதல்; to spread.

நிரம்பு[1]–தல் nirambu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நிறைதல்; to become full, complete, replete. "பருவ நிரம்பாமே" (திவ். பெருயாழ். 1, 2, 17). 2. மிகுதல்; to abound, be abundant, copious. "நெற்பொதி நிரம்பின" (கம்பரா. கார்கால. 74). 3. முடிவுறுதல்; to be over; to end, terminate. "நெறிமயக்குற்ற நிரம்பா நீடத்தஞ் சிறுநனி நீதுஞ்சி யேற்பினு மஞ்சும்" (கலித். 12). 4. பூப்படைதல்; to attain puperty as a girl. அவள் நிரம்பின பெண் (யாழ்ப்.). 5. முதிர்தல் (வின்.); to mature, as grain.

க. நெர.

நிரம்பு[2]–தல் nirambu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முழுமையாதல், நிறைதல்; to be filled with, become full. குளத்தில் நீர் நிரம்பியிருக்கிறது. (உ.வ.). பை நிரம்பக் காய்கறிகள் வாங்கி வந்தார் (உ.வ.). 2. முழுமையடைதல்; finish or complete (certain years in one's age). இன்றோடு குழந்தைக்கு மூன்று அகவை நிரம்புகிறது. (உ.வ.). அவளுக்கு இன்னும் பதினெட்டு அகவை நிரம்ப வில்லை. (உ.வ.). 3. அதிக அளவில் இடம் பெறுதல்; to be full (of). பிறமொழிச் சொற்கள் நிரம்பி யிருக்கும் கதை.(உ.வ.).

நிரல்(லு)–தல் niral(lu)-, 11 செ.கு.வி. (v.i.) ஒழுங்குபடுதல்; to be placed in a row, arranged in order. "நேரின மணியை நிரலவைத் தாற் போல" (தொல். பொருள். 482, உரை). "நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த கொடும்பட நெடுமதிற் கொடித்தேர் வீதியுள் குறியவு நெடியவுங் குன்று கண்டன்ன" (சிலப். 27:151).

நிரவு[1]–தல் niravu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சமனாக்குதல்; to level, fill up, as a hole or well. "உழாஅ நுண்டொளி விரவிய வினைஞர்" (பெரும்பாண்.211). அந்தப் பள்ளத்தை நிரவு. (உ.வ.). 2. குறை தீர்த்தல் (வின்.); to make up a deficiency. அவரின் அருளினால்என் துன்பமெல்லாம்நிரவிப்போயிற்று. (உ.வ.). 3. பொதுப்படையான மதிப்பீடு பார்த்தல்; to average. எல்லோருக்கும் நிரவிக் கொடு (உ.வ.). 4. சரிபடுத்துதல்; to equalise, as threads for weaving; to adjust. இழைகளை நிரவி நெய்தால் துணி நயமாயிருக்கும். (உ.வ.). வருவாயைக் கருத்திற் கொண்டு நிரவி செலவிடு (உ.வ.). 5. அழித்தல்; to demolish, as a fort; to level down. "அடங்கார் புரமூன்றும் நிரவ வல்லார்" (தேவா. 77, 2). தேவநேயப் பாவாணர் தம் ஆய்வாற்றலால் மொழிநூலின் மூடக் கருத்துகளனைத்தையும் நிரவிவிட்டார் (உ.வ.).

நிரவு[2]–தல் niravu-, 7 செ.கு.வி. (v.i.) 1. சமனாதல்; to be filled, become level, full, covered, as a well, a furrow or a sore. பெரு வெள்ளத்தினால் வயல் நிரவி விட்டது. (உ.வ.). பயன்பாடற்ற பாழுங்கிணறு எப்போது நிரவுமோ. (உ.வ.). 2. தீர்தல்; to be liquidated, as a dept. இவ்வாண்டு வேளாண்மையில் கிடைத்த வருவாயினால் என் எண்ணலாக் கடனும் நிரவியது. 3. பரவுதல்; to spread, expand. "பார் முழுதும் நிரவிக் கிடந்து" (தேவா.152:9). 4. வரிசையாயிருத்தல்; to lie in rows. "நிரவிய தேரின் மேன்மேல்" (கம்பரா. முதற்போர். 151).

நிராங்கு–தல் nirāṅgu-, 9 செ.கு.வி. (v.i.) நரங்குதல் (யாழ்ப்.); to be thin, stunded, as a person, a beast, vegetable.

நிருங்கு–தல் niruṅgu-, 9 செ.கு.வி. (v.i.) 1. நொறுங்குதல்; to be mashedï crushed to pieces. 2. தேய்கடையாதல்; to be deficient in growth; to decay; to grow lean, as a child; to fail, as a business, a harvest.

நிரை[1]–தல் nirai-, 4 செ.கு.வி. (v.i.) 1. வரிசையாதல்; to be in a row; to form a column. 2. முறைப்படுதல்; to be regular, orderly. 3. திரளாதல்; to crowd, swarm. "நிரைவிரி சடைமுடி" (தேவா. 994.9).

நிரை[2]–தல் nirai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நிரப்புதல் (யாழ்ப்.); to make full, crowd fill up by adding thing to thing. "வயிறு நிரைந்த மட்டும் உண்டேன்" (உ.வ.). 2. ஒழுங்காக்குதல்; to place in row. 3. ஓலை முதலியவற்றை வரிசையாக வைத்து மறைத்தல்; to hide or cover as with plaited leaves. தோட்டம் மூன்று புறமும் நிரைந்திருக்கிறது (உ.வ.). 4. முடைதல்; to plait. வீடுவேயக் கிடுகு நிரைகிறார்கள் (உ.வ.).

நிரை[3]–தல் nirai-, 4 செ.கு.வி. (v.i.) 1. திரளுதல்; to swarm, crowd together. "மேகக் குழாமென நிரைத்த வேழம்" (சீவக. 1859). 2. அவை கூட்டுதல்; to form an assembly. "மறுநிலை மைந்தனை நிரைத்துக் கிளைகொள் வழக்குய்த்தலும்" (கல்லா. 43.21). 3. தொடர்ந்து வருதல்; to follow in succession. "நிரைத்த தீவினை நீங்க" (சீவக.1603).

நிரை[4]–த்தல் nirai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒழுங்காய் நிறுத்துதல்; to arrange in order, classify. "முட்ட நித்தில நிரைத்த பந்தரில்" (பாரத. கிருட்டிண. 103). 2. நிரப்புதல்; to crowd, cluster. "நிரைதிமில் வேட்டுவர்" (மதுரைக். 116). 3. பரப்புதல்; to spread, over. "நெடுங்கழைக் குறுந்துணி நிறுவி மேனிரைத்து" (கம்பரா. சித்திர. 46). 4. கோத்தல்; to string together. "நிணநிரை வேலார்" (பு.வெ1,9). 5. நிறைவேற்றுதல்; to fulfil, accomplish, perform. 6. தனித்தனியாகச் சொல்லுதல் (வின்.); to enumerate, say, declare. 7. ஒலித்தல் (வின்.); to sound.

நில்–தல் (நிற்றல்) nil-, 3 செ.கு.வி. (v.i.) 1. கால்கள் ஊன்ற உடம்பு முழுவதும் நெடிதாக நிமிர்ந்திருத்தல்; to stand. "நின்றானிருந்தான் கிடந்தான்றன் கேளலறச் சென்றான்" (நாலடி.29). 2. உறுதியாயிருத்தல்; to be steadfast; to persevere, persist in a course of conduct. "வீடுபெற நில்" (ஆத்திசூடி.). 3. மேற்செல்லாதிருத்தல்; to stop, halt, tarry. "நில்லடா, சிறிது நில்லடா" (கம்ரா. நாகபாச.73). 4. இடங்கொண்டிருந்தல்; to stay, abide,

continue. "குற்றியலிகர நிற்றல் வேண்டும்" (தொல். எழுத்து. 34). 5. ஒழிதல்; to cease, to be discontinued, stopped or suspended. வேலை நின்று விட்டது (உ.வ.). 6. அடங்கியமைதல்; to be subdued. "சாயவென் கிளவிபோற் செவ்வழி யாழிசைநிற்ப" (கலித். 143.38). 7. எஞ்சியிருத்தல்; to remain to be left, as matter in a boil, as disease in the system; to be due, as a debt. "நின்றதிற் பதினையாண்டு" (திவ். திருமாலை.3). 8. காலந் தாழ்த்துதல்; to wait, delay. "அரசன் அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும்" (பழ.). 9. ஒழுக்கத்தில் உறுதியாயிருத்தல்; to persist in a course of conduct. 10. நிலைத்திருத்தல்; to be permanent. "என் வளத்தில் மாறிலாய் நிற்க" (பெரியபு. கண்ணப்ப.185). 11. நீடித்தல்; to lengthen time, distance etc.

ம. நில்க்க; க. நில்லு, நில்; து. நில்புன், நிலிபுனி கொலா., நா. இல்; கோண். நித்தானா; கூ. நிசல; மால. இலை.

நிலமறி–தல் nilam-aṟi-, 2 செ.கு.வி. (v.i.) சூதாட்டத்தில் வெற்றியடைவிக்கும் இடன் அறிதல் (வின்.); to know the lucky side in gambling.

நிலமெடு–த்தல் nilam-eḍu-, 4 செ.கு.வி. (v.i.) வீடு கட்டுதற்கோ, கோயிலமைப்பதற்கோ, கிணறு தோன்றுதற்கோ அன்றி பிறவற்றிற்கோ உரிய இடத்தைக் கணியம் மூலம் கணித்தறிந்து தேர்வு செய்தல் (வின்.); to select by astrological calculations an auspicious site for a house, temple or well.

நிலவு[1]–தல் nilavu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நிலைத்திருத்தல்; to be permanent, fixed. "யாரு நிலவார் நிலமிசை மேல்" (நாலடி.22). 2. நின்று சிறத்தல்; to stay. "இறுதியு மிடையு மெல்லா வுருபும் நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வரையார்" (தொல். சொல். 103). 3. வழங்குதல்; to exist, to be in use, in vogue or in circulation, as a word; to be extant, in force of practice, as a religion. "நிலவு மரபினை யுடையது" (வின்.). 4. ஒளிவிடுதல்; to emit rays; to shine. 5. பரவுதல் (வின்.); to spread, extend, pervade.

நிலவு[2]–தல் nilavu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அறியக்கூடிய வகையில் காணப்படுதல்; to be (in existence) prevail. பருவ மழை பெய்யாமல் நாட்டில் வற்கடம் நிலவுகிறது. (உ.வ.). சட்டசபையில் இன்று ஒரு மணி நேரம் குழப்பம் நிலவியது. (உ.வ.). தேர்தல் நடத்துவது பற்றி நாட்டில் முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன (உ.வ.). 2. அமைதல், ஏற்படுதல்; to be established or formed. எல்லா நாட்டிலும் மக்களாட்சி நிலவ வேண்டும். (உ.வ.). நாட்டில் அமைதி நிலவ வேண்டுமென அனைத்து மதத்தினரும் கடற்கரையில் கூடி மன்றாட்டு செய்தனர். (உ.வ.).

நிலவுபார்–த்தல் nilavu-pār-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. மூன்றாம் பிறை பார்த்தல்; to see the crescent moon, appearing on the third day after new moon. 2. சில நோன்பு நாட்களில் பகலில் பட்டினியிருந்து இரவில் உணவு கொள்ளுமுன் நிலவைப் பார்த்தல்; to see the moon after a day long not taking anything, taking supper after seeing the moon.

நிலாவு–தல் nilāvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஒன்றித்தல் (தியானித்தல்); to meditate upon. "நானிலாவியிருப்ப னென்னாதனை" (தேவா.4.5). 2. ஒப்பாதல்; to resemble. "மானிலாவிய நோக்கியர்" (திருவிசை.5.4).

நிலை[1]–தல் nilai-, 4 செ.கு.வி. (v.i.) 1. நீண்ட காலத்திற்கு நீடித்து அமைதல்; stay for long; last. இந்த ஆட்சி நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. (உ.வ.). முறையற்ற வகையில் சேர்த்த பணம் நிலைக்காது. (உ.வ.). ஒரு வேலையிலும் அவன் நிலைக்க மாட்டான் (உ.வ.). 2. (பார்வை) ஓர் இடத்திலேயே பதிதல்; (of eyes) get fixed on smoothing or someone; பாதி திறந்திருந்த கண்கள் அருகில் நின்ற மகனின் மேல் நிலைத்தன. (உ.வ.). 3. (பெயர் சொல் முதலியவை) உறுதிப்பட்டு வழங்குதல்; gain currency. தேவநேயருக்கு இயற்பெயர் மறைந்து பாவாணர் என்னும் பட்டப்பெயரே நிலைத்துவிட்டது (உ.வ.). 4. (குழந்தையைக் குறிப்பிடும் போது) உயிரோடு தங்குதல்; (of one's children) be left alive. ஐந்து குழந்தையில் ஒன்றும் நிலைக்கவில்லை; இந்த குழந்தையாவது நிலைத்ததே (உ.வ.).

நிலை[2]–தல் nilai-, 4 செ.கு.வி. (v.i.) நிலைத்து நிற்றல்; to remain permanent; to stay. "உம்மை நிலையு மிறுதியான" (தொல். எழுத்து. 189).

நிலை[3]–த்தல் nilai-, 4 செ.கு.வி. (v.i.) 1. நிலை நிற்றல்; to obtain a footing; to be settled, lasting. 2. காலந்தாழ்த்துதல் (வின்.); to delay, stay too long in a place. 3. ஆளளவுக்கு நீர் இருத்தல்; to be just deep enough to allow a man to stand, as a river. தண்ணீர் ஆளுக்கு நிலைக்கும். (உ.வ.).

நிலைக்குத்து[1]–தல் nilai-k-kuttu-, 5 செ.கு.வி. (v.i.) இறக்குந்தறுவாயில் விழிமுதலியன அசைவின்றி நிற்றல்; to be fixed or regid, as the eye at the dying stage.

நிலைக்குத்து[2]–தல் nilai-k-kuttu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அசையாது நிற்றல்; to stand firmly. 2. குடியேறுதல்; to immigrate. 3. பயிர்கள் நிலைத்துப் போதல்; to withstand as a crop, after its blighted stage.

நிலைகுலை[1]–தல் nilai-kulai-, 2 செ.கு.வி. (v.i.) 1. நிலைமை தவறுதல்; to be ruined in circumstances. 2. நெறி வழுவுதல்; to swerve from the path of virtue. 3. தயங்குதல்; to be discouraged; to lose self-command; to be disconcerted, perplexed. 4. நிலைமை தளர்தல்; to lose hold; to be unstrung. வச்சிரமுட்டிதன் னிலைகுலைந்து விழுதலின் (கம்பரா. முதற்போர். 55). 5. சிதறுண்ணுதல்; to be routed, as an army.

நிலைகுலை²–தல் nilai-kulai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. கட்டுப் பாட்டுடன் இருக்கும் சமநிலையை இழத்தல்;* lose balance, upset. *சாலையின் குறுக்கே குழந்தை ஓடிவந்ததைக் கண்டு வண்டியைச் சட்டென நிறுத்தியதில் நிலைகுலைந்து போனான். (உ.வ.). அம்மாவின் இறப்புச் செய்தியைக்கேட்ட ஆல்துரை நிலைகுலைந்தார் (உ.வ.).2. சீர் கெடுதல், சீர் குலைதல்;* get disrupted. *அளவுக்கு அதிகமாக இறக்குமதி செய்வதால் உள்நாட்டுப் பொருளியல் பெரிதும் நிலைகுலைகிறது. (உ.வ.).*

நிலைகுலை³–த்தல் nilai-kulai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நிலைமையழித்தல்;* to ruin. *2. கற்பழித்தல்;* to seduce, ravish. *3. ஒழுக்கங் கெடுத்தல்;* to cause to swerve from the path of virtue or to neglect religious observances. *4. சிதறவடித்தல்;* to rout, as an army. *5. தயங்கச் செய்தல்;* to intimidate, disconcert.

நிலைகொள்(ளு)¹–தல் nilai-koḷ(lu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. உறுதியாதல்;* to be permanent; to remain firm. *2. தன்னிலையடைதல்;* to come into its natural state, as a diseased mind. *3. நிற்குமளவு ஆழமாதல்;* to be just deep enough to allow one to stand in.

நிலைகொள்(ளு)²–தல் nilai-koḷ(lu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. ஓரிடத்தில் நிலையாக இருத்தல், தங்குதல்;* come to stay, settle down. *செயற்கைக்கோள் இன்னும் ஒருவாரத்தில் தனக்குரிய சரியான சுற்றுப் பாதையில் நிலைகொள்ளும் (உ.வ.). 2. (பெரும்பாலும் எதிர் மறையில்) அமைதியாக இருத்தல்; ஒன்றில் கவனம் செலுத்துதல்;* to be peaceful or undisturbed. *இரவு வெகுநேரமாகியும் அலுவலகம் சென்ற கணவன் வராததால் அவள் நிலைகொள்ளாமல் தவித்தாள் (உ.வ.). தான் ஏமாற்றப்பட்டு விட்டதை அறிந்து பிறகு கண்ணனுக்கு நிலைகொள்ளவில்லை (உ.வ.).*

க. நிலிகொளா.

நிலைகோலு–தல் nilai-kōlu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அணி வகுத்தல்;* to array, as force. *2. இடஞ்தேடுதல்;* to seek shelter.

நிலைநாட்டு–தல் nilai-nāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நிலைகொள்ளும்படி செய்தல், நிலைக்கச் செய்தல், நிறுவுதல்;* enforce (peace, law and order; establish rights, facts etc.). *கலவரம் நடக்கும் பகுதியில் அமைதியை நிலைநாட்ட பட்டாளம் அனுப்பப்பட்டுள்ளது (உ.வ.). இது அறத்தை நிலைநாட்ட நடக்கும் போராட்டம் (உ.வ.). அவர் தன் கட்டுரையில் பாவாணரின் கருத்துகளைத் திறம்பட நிலைநாட்டி யுள்ளார் (உ.வ.).*

நிலைநில்–தல் (நிலைநிற்றல்) nilai-nil-, *14 செ.கு.வி.* (v.i.) *1. கொள்கை முதலியவற்றில் உறுதியாய் நிற்றல்;* to stand firm, as in one'e principles; to maintain consistency.

நிலைநிறுத்து–தல் nilai-niṟuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நிலைநாட்டு;* to set up, establish. "*கீர்த்தி நிலைநிறுத்திக் கொண்டோம்*" *(தனிப்பா. 1. 216.2). 2. முடிவாய் எண்பித்தல்;* to prove conclusively.

நிலைபிடி¹–த்தல் nilai-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தொழில் முதலியனபெற்று நிலையாயிருத்தல்;* to settledown, as by seeing an office or residence for oneself. *2. குறிக்கோளெய்துதல்;* to reach the goal.

நிலைபிடி²–த்தல் nilai-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வளம் பிடித்தல்;* to get productiveness.

நிலைபெறு¹–தல் nilai-peṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. நிலையாய்த் தங்குதல்;* to stay firmly. "*வேற்றுமையுருபு நிலைபெறு வழியும்*" *(தொல். எழுத்து. 132). 2. துன்பமற்ற நிலையையடைதல்;* to gain a resting place; to secure peace. "*நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா*" *(தேவா. 727.3). 3. நீடித்தல் (வின்.);* to endure. *4. ஒன்று நிற்கக் கூடியவளவு ஆழ முடைத்தாதல்;* to be fathomable. "*கழைநிலை பெறாஅக் குட்டத் தாயினும்*" *(பதிற்றுப்.86.9).*

நிலைபெறு²–த்தல் nilai-peṟu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *காத்தல் (சூடா.);* to maintain, protect. "*உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலைபெறுத்தலும்*" *(கம்பரா. சிறப்.1).*

நிலைமாறு–தல் nilai-māṟu-, *9 செ.கு.வி.* (v.i.) *1. இடம் முதலியவற்றினின்றும் மாறுதல்;* to change in place, principles or circumstances. *2. சொல்லில் எழுத்துகள் இடம் பிறழ்தல் (வின்.);* to be transposed as letters in words, as *சதை* for *தசை*.

நிலையழி¹–தல் nilai-y-aḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. நிலைகுலை-, பார்க்க;* see nilai-kulai. "*நிலையழிந்த சிந்தையராய்*" *(பெரியபு. அப்பூதி.13).*

நிலையழி²–தல் nilai-y-aḻi-, *2 செ.கு.வி.* (v.i.) தோற்றல்; to defeat.

நிலையாறு–தல் nilai-y-āṟṟal-, *5 செ.கு.வி.* (v.i.)அமைதி யுறுதல்; to be pacifiēd. "*வானவருநின்று நிலை யாறினார்கள்*" *(கம்பரா. மூலபல.155).*

நிலையிடு–தல் nilai-y-iḍu-, *17 செ.குன்றாவி.* (v.t.) *அளந்தறிதல்;* to determine, measure. "*நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்*" *(கம்பரா. அயோத்தி. மந்திரப்.60(.*

நிவ¹–த்தல் niva-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உயர்தல்;* to rise; to be elevated; to become high. "*மாக்கட னிவந்த தொழுதருஞ் செஞ்ஞாயிற்றுக் கவினை*" *(புறநா.4). 2. வளர்தல்;* to grow. "*ஊர்க்கால் நிவந்த பொதும்பருள்*" *(கலித்.56). 3. படர்தல்;* to spread. "*பைங்கறி நிவந்த பலவி னீழல்*" *(சிறுபாண்.43). 4. மேலாதல்;* to be exalted, distinguished.

"நிலமகள் கணவன் வேந்தர் குழாத்திடை நிவந் திருந்தான்" (சீவக.2566). 5. மேல்வழிதல்; to swell, overflow inundate. "நிவந்தது நீத்தம்" (பரி.பா.12:34). 6. தோன்றுதல்; to appear, occur, arise. "உண்ணிவந்த கருத்து முணர்ந்தனன்" (கம்பரா. நகர்நீங்கு.229).

க. நெகபு.

நிவ்[2]–த்தல் niva-, 4 செ.கு.வி. (v.i.) ஓடுதல்; to run. "புள்ளுறவு வொசிந்த பூமயங் கள்ளற் கழிச்சுரம் நிவக்கும் இருஞ்சிறை இவுளி" (நற்.63).

நிவ்[3]–த்தல் niva-, 12 செ.குன்றாவி. (v.t.) நீரின்மேலே வருதல்; to come upon water. "இருஞ்சேற்றீரளை அலவள் நிவப்ப வழங்குநர் இன்மையிற் பாடான்றன்றே" (அகநா.350).

நிவறு–தல் nivaṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பொடியாதல் (அக.நி.); to be powdered. 2. மொய்த்தல் (சது.); to swarm, gather thick.

நிழத்து[1]–தல் niḻattu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முன்னுள்ள நிலையினின்றும் நுணுகுதல் (தொல். சொல். 330); to ware, decrease; to be reduced. "நிலவரையல்ல னிழத்த" (பரிபா.10.3).

நிழத்து[2]–தல் niḻattu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தின்றழித்தல்; to reduce, as by eating. "வாய்மடுத் திரும்புன நிழத்தலின்" (குறிஞ்சிப்.157). 2. இல்லையாக்குதல்; to cause to disappear; to lose; to be deprived of. "அருவி மாமழை நிழத்தவும்" (பொருந.235).

நிழல்–தல் (நிழற்றல்) niḻai-, 3 செ.கு.வி. (v.i.) 1. சாயை வீழ்த்தல்; to cost shadow; to shadow. "வண்டுந் தேன்களும் நிழன்றுபாட" (சீவக. 1270). 2. காப்பா யமைதல்; to give shelter. "ஏரோர்க்கு நிழன்ற கோலினை" (சிறுபாண்.233). 3. ஒளி செய்தல்; to shine. "நெய்த்தலை கருங்குழ னிழன்று" (சீவக.1101). 4. படிவடிவிடுதல் (பிரதிபலித்தல்) (வின்.); to be reflected, as an image.

நிழலாடு[1]–தல் niḻai-āḍu-, 5 செ.கு.வி. (v.i.) தெளிவின்றித் தோன்றுதல்; to appear vaguely; to be overshadowed by something. வற்கடத்தால் மக்கள் படப்போகும் துன்பம் என் கண்முன் நிழலாடியது. (உவ.). சோகம் நிழலாடும் முகம் கண்டேன் (உவ.).

நிழலாடு[2]–தல் niḻai-āḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. எதிரொளித்தல் (பிரதிபலித்தல்); to be reflected. 2. படிவடிவம் (பிரதிபிம்பம்) தோன்றுமாறித்தல்; to be reflective, as a surface. சுவர் நிழலாடுகிறது (உவ.). 3. நிழல் மட்டும் தெரியும்படி பார்வை குன்றுதல்; to be dim in sight, as eyes. கண் நிழலாடுகிறது (உவ.).

நிழலிடு–தல் niḻal-iḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. நிழலைக் கொடுத்தல்; to cast a shadow; to shade. 2. எதிரொளித்தல் (பிரதிபலித்தல்) (வின்.); to be reflected. 3. ஒளிவிடுதல்; to throw light or lustre. "நிழலிடு குண்டலம்" (கம்பரா. மிதிலைக்.43)..

நிழற்று[1]–தல் niḻaṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) ஒளிவிடுதல்; to shed radiance. "பசும்பொ னவிரிழை பைய நிழற்ற" (ஐங்குறு.74).

நிழற்று[2]–தல் niḻaṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிழற்செய்தல்; to shade. "கொல்களிற்று மீமிசைக் கொடி விசும்ப நிழற்றும்" (புறநா.9). 2. காத்தளித்தல் (வின்.); to protect, defend. 3. மணி முதலியன அடித்தல்; to ring as bells. "நெடுநா வொண் மணி நிழற்றிய நடுநாள்" (முல்லைப். 50).

நிழற்று[3]–தல் niḻaṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) அடங்குதல் (முல்லை.50, உரை); to be still, calrm.

நிழறு–தல் niḻaṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) ஒளிவிடுதல்; to shine. "திண்சக்கர நிழறு தொல்படையாய்" (திவ். திருவாய்.6.2.5).

நிற்பாட்டு–தல் niṟpāṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிறுத்துதல்; to leave, as an employment; to stop, as a carriage. இறங்க வேண்டிய நிறுத்தம் வந்துவிட்டது வண்டியை நிற்பாட்டு (உ.வ.). 2. காலந் தாழ்த்துதல்; to delay, procrastinate. 3. நேராக நடுதல் (சென்னை); to setup, erect, as posts.

நிற–த்தல் niṟa-, 11 செ.கு.வி. (v.i.) 1. நிறம் பிடித்தல்; to take on colour as fruits or leaves to be tinged as flowers. "நிறத்தகாய்". 2. நிறம் முற்றுதல்; to deeper in colour. 3. புதுப்பொலிபோடு இருத்தல்; to be distinguished, brilliants to be bright and fresh in appearance. "சத்துவ குணப் பிறப்பினர் புவிமேனிறத்து வாழ்வது" (ஞானவா. திதி.1). 4. பயனளித்தல்; to have effect. நான் செய்ததொன்றும் நிறக்கவில்லை (உ.வ.).

நிறங்கொடு[1]–த்தல் niṟaṅ-koḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நிறமூட்டுதல்; to tinge, give colour. 2. நிறமுடைத் தாதல்; to be coloured, have a colour. 3. மேனியாதல்; to be sleek, smooth, plump, as a person in health.

நிறங்கொடு[2]–த்தல் niṟaṅ-koḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) ஒளிரச் செய்தல்; to give lustre, brilliance, as to an occasion.

நிறம்பூசு–தல் niṟam-pūšu-, 5 செ.கு.வி. (v.i.) வண்ணம் பூசுதல்; to apply colour கோயிற் கோபுரத்திற்கு நிறம் பூசும்பணி தொடங்கிய பிறகு குடுமுழக்கு நடத்த நாள் குறித்தல் நலம் (உ.வ.).

நிறம்போடு–தல் niṟam-pōḍū-, 19 செ.குன்றாவி. (v.t.) நிறங் கொடுத்தல்; to tinge, give colour.

நிறு–த்தல் niṟu-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. தூக்குதல்; to weight, poise, balance. 2. தீர்மானித்தல்; to decide, determine. "நாள்வரை நிறுத்து" (கலித்.31:23). 3. படைத்தல், அமைத்தல்; to create, construct. "காமர்சாலை தனி நிறுமின்" (சீவக.306). 4. வைத்தல்; to put, set, place.

"நிறுத்த முறையானே" (நன்.109, மயிலை). 5. துலைதூக்கி எடை பார்த்தல்; to weight by using a balance.

நிறுத்திச்சொல்(லு)–தல் niṟutti-c-col(lu)-, 8 செ.குன்றாவி. (v.t.) வேகமின்றித் தெளிவாய்ச் சொல்லுதல்; to pronounce slowly and distinctly with proper pauses.

நிறுத்திப்பிடி[1]–த்தல் niṟutti-p-piḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கண்டிப்பாதல் (வின்.); to be rigid, strict, sharp. 2. நிலை நிற்றல் (யாழ்.அக.); to stand firm, persist.

நிறுத்திப்பிடி[2]–த்தல் niṟutti-p-piḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சிறு குற்றங்களைக் கவனித்தல்; to go minutely, as into ones little faults. 2. தூக்கிப் பிடித்தல் (யாழ்.அக.); to hold aloft.

நிறுத்தியெழுது–தல் niṟutti-y-eḻudu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செவ்வையாயிருக்கும் படி மெதுவாய் எழுதுதல்; to write legibly and slowly. 2. இடம் விட்டெழுதுதல் (வின்.); to leave proper speces in writing. 3. எழுத்துகள் சாய்வின்றி நிமிர்ந்து நிற்கும்படி எழுதுதல் (வின்.); to write an upright hand.

நிறுத்திவிடு–தல் niṟutti-viḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒன்றை நிலையாக நிறுத்தி விடுதல்; to stop constantly.

நிறுத்திவை–த்தல் niṟutti-vai-, 4 செ.குன்றாவி. (v.t.) தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு செயலை இடைக்காலமாக நிறுத்துதல்; to stop temprorily the continuious process.

நிறுத்து[1]–தல் niṟuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிமிர நிற்கச் செய்தல்; to setup, raise erect, plant. "வெயில் வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை" (அகநா.37). 2. நிலை நாட்டுதல்; to fix on a firm basis; to set up, establish in life. நீதானா என் குடும்பத்தை நிறுத்தியவன்? (உ.வ.). 3. முடிவுசெய்தல்; to determine, resolve. 4. மனத்தை ஒரு நிலையில் இருத்துதல்; to concentrate, as the mind. 5. பணியமர்த்தல்; to appoint, place in office. 6. பேணுதல் (வின்.); to maintain, support. 7. சீர்திருத்துதல் (வின்.); to restore to better circumstances; to re-establish; to reform. 8. தழுவிக் கொள்ளுதல் (இறை, களவி.12); to keep one on friendly terms. 9. ஒப்புவித்தல் (வின்.); to place under ones charge. 10. மேற்செல்லாதிருக்கச் செய்தல்; to stop as a person; to arrest progress. 11. தள்ளி வைத்தல் (வின்.); to put off; defer, postpone. 12. படிக்கும்போதும் பாடும்போதும் உரியவிடங்களில் நிறுத்துதல் (வின்.); to make proper pauses, as in reading or singing. 13. விலக்குதல்; to dismiss, suspend. 14. செய்யா தொழிதல்; to put an end to. மது குடிப்பதை எப்போதோ நிறுத்தி விட்டான் (உ.வ.). 15. அவித்தல்; to put out, extinguish, as a lamp. "விளக்கமெய்யிற் காற்றினா னிறுத்தி" (உபதேசகா. சிவத்துரோ. 492).

க. நிரிக. ம. நிறுத்துக.

நிறுத்து[2]–தல் niṟuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) (பொருளைத் துலையில் வைத்து) எடையைக் கணக்கிடுதல், எடை போடுதல்; to weight. பழைய நகையை நிறுத்திப் பார்த்தபோது தேய்மானத்தால் எடை குறைந் திருப்பது தெரிய வந்தது (உ.வ.).

நிறுத்து[3]–தல் niṟuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. (ஒரு நோக்கத்திற்காக) நிற்கச் செய்தல்; to stop (a vehicle etc.). போக்குவரத்துக் காவலர் கையைக் காட்டியதும் வண்டியை நிறுத்தி விட்டார் (உ.வ.). மாடு குறுக்கே வருகிறது, வண்டியை நிறுத்து (உ.வ.). 2. (பேச்சை) மேற்கொண்டு நிகழாதபடி செய்தல்; to stop (in activity.). பேச்சை நிறுத்து (உ.வ.). குழந்தை அழுவதை நிறுத்தி விட்டுச் சிரித்தது (உ.வ.). போராட்டத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டது (உ.வ.). 3. (மின் விசிறி, மின் விளக்கு போன்றவற்றின்) செயல்பாட்டை நிற்கச் செயல்; to stop (the functioning of something); to switch off. இருக்கையை விட்டுச் செல்லும்போதும் தேவை யில்லாதபோதும் விளக்கையும் விசிறியையும் நிறுத்திவிட்டுச் செல்வதே பண்புடைய செயல். (உ.வ). 4. (வண்டியை, படை முதலியவற்றை அல்லது வீரர் முதலியோரை ஓரிடத்தில்) இருக்கவிடுதல்; to park (a vehicle); station (an army, a sentty). மிதிவண்டியை ஓரமாக நிறுத்து. (உ.வ.). எல்லைப் பகுதியில் பட்டாளத்தை நிறுத்தி வைத்துள்ளனர். (உ.வ.). தேர்தலின்போது எல்லா வாக்குச் சாவடிகளிலும் காவலர்கள் நிறுத்தப் படுவார்கள் (உ.வ.). 5. (ஒருவரைக்) காத்திருக்கச் செய்தல்; to make (some one) wait (so as to join him or her later). அம்மாவைக் கடை முன்னால் நிறுத்திவிட்டு வந்துள்ளேன் விரைந்து திரும்ப வேண்டும் (உ.வ.). 6. (மற்றொருவர் முன் ஒருவரைக்) காணும்படி வைத்தல்; to produce (someone before someone). கொலையாளியைக் கண்டுபிடித்து என் முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டுமெனக் கட்டளையிட்டார். (உ.வ.). அவருடைய பாடல் இயற்கையழகை நம் முன் நிறுத்துகிறது (உ.வ.). 7. (மனத்தை ஒன்றில்) நிலைக்கச் செய்தல்; to focus (mind on something). மனத்தை அலைபாய விடாமல் நிறுத்த ஊழ்கம் உதவுகிறது (உ.வ.). 8. (தேர்தலில்) போட்டியிட வைத்தல்; to putup (a candidate in an election) to field. "எங்கள் கட்சி எல்லாத் தொகுதிகளிலும் வேட்பாளரை நிறுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்தார்" (உ.வ.).

நிறுத்துக்கட்டு–தல் niṟuttu-k-kaṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) அளவிடுதல் (யாழ்.அக.); to make an estimate; to determine; to fathom.

நிறுத்துப்பார்[1]–த்தல் niṟuttu-p-pār-, 4 செ.குன்றாவி. (v.t.) எடையளவை ஆய்ந்து பார்த்தல்; to weight, examine the weight of. அந்தக் கடையில் வாங்கிய நகையை நிறுத்துப் பார்த்த பிறகுதான் எடை குறைவா யிருப்பது

தெரியவந்தது (உ.வ.).

நிறுத்துப்பார்[2]–த்தல் niṟuttu-p-pār-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கருதிப் பார்த்தல்; to cosider. இருதரப்பையும் நிறுத்துப் பார்த்துத் தீர்ப்புச் சொல் (உ.வ.). 2. ஆய்ந்து ஆராய்தல்; to deliberate. நன்றாக நிறுத்துப் பார்த்துத் தீர்வு செய்.(உ.வ.).3.தீர எண்ணிப்பார்த்தல்; to ponder. எதையும் நிறுத்திப் பார்த்த பின்பே முடிவுக்கு வரவேண்டும் (உ.வ.). 4. ஒப்பிடுதல்; to compare. அவரை இவரோடு நிறுத்துப் பார்த்தல் நன்றன்று (உ.வ.).

நிறுவு–தல் niṟuvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. (மாதிகை, தாளிகை, அமைப்பு போன்றவற்றை முதன் முதலாக) தொடங்குதல், ஏற்படுத்துதல்; to found, to start, to constitute. தென்மொழி மாதிகையை நிறுவியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார். (உ.வ.). பாவாணர் பெயரில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓர் அறக்கட்டளையை நிறுவப் பலரும் கொடை யளித்தனர். (உ.வ.). இந்த உசாவற்குழு எதற்காக நிறுவப்பட்டதோ அதிலிருந்து திசைமாறிச் செல்கிறது (உ.வ.). 2. (கட்டடம், வரவேற்பு வளைவு முதலியவற்றை ஓரிடத்தில்) உருவாக்குதல், எழுப்புதல்; to be erect, to set up. பாவாணர் பிறந்த ஊரில் பாவாணர் கோட்டத்தை நிறுவிட தமிழக அரசு நிதி ஒதுக்கிடவுள்ளது (உ.வ.). முதல்வரின் வருகையை ஒட்டிச் சாலையில் பல ஒப்பனை வளைவுகள் நிறுவப்பட்டுள்ளன (உ.வ.). 3. (எந்திரம், பொறி, சிலை முதலியவற்றைக் கொண்டுவந்து ஓரிடத்தில்) பொருத்துதல், அமைத்தல்; to install (a statue, machinery etc.). மொழிப் போராளிகளின் சிலை நிறுவப்படும் (உ.வ.). தொழிற்சாலை ஆட்சிக்குழு நச்சு நீக்கும் கருவியை நிறுவ ஒப்புக் கொண்டுள்ளது (உ.வ.). 4. (ஒரு கருத்தைத் தக்க சான்றுகளுடன்) நிலை நாட்டுதல், வலியுறுத்தல்; establish (a fact one'e argument etc.). பல்லவர் காலத்தில் தமிழகத்தில் கலைகள் சிறந்திருந்தன என்பதை நிறுவுக (உ.வ.). அவர் தன் கருத்தைப் பிறர் மறுக்க முடியாதபடி நிறுவுவதில் வல்லவர் (உ.வ.).

நிறை[1]–தல் niṟai-, 2. செ.கு.வி. (v.i.) 1. நிரம்புதல்; to becomes full, to be replete. "நிறையின்ன முதை" (திருவாச.27:4). 2. மிகுதல்; to abound; to be copious, plenteous, profuse. 3. எங்கும் நிறைந்திருத்தல்; to be every where; to pervade. 4. பொந்திகையாதல்; to be satisfied, contended. "நிறைந்த மனத்து மாதரும்" (திருவாலவா. 38.5). 5. அமைதியாதல்; to be silent. நிறைந்திருங்கள் (வின்.).

க. நிரி; ம. நிறியக.

நிறை[2]–தல் niṟai-, 2. செ.கு.வி. (v.i.) 1. நிரம்புதல்; to be or become full. மழை பெய்ததால் ஏரி குளங்கள் நிறைந்தன. (உ.வ.). வயிறு நிறைந்துவிட்டது. (உ.வ.). 2.(குறிப்பிட்ட அகவை) முடிதல்; to complete (years of life). இந்த ஆண்டுடன் என் மகளுக்குப் பத்து அகவை நிறைகிறது. (உ.வ.).

நிறை[3]–தல் niṟai-, 2. செ.கு.வி. (v.i.) 1. நிறைவடைதல்; முழுமையாதல் (சூ.நி.க.8:15); to complete. 2. பெருகுதல்; fill. "நிறைதலொடு குறைதலாய" (சிவரக.1, கணபதிவுந்.19).

நிறை[4]–த்தல் niṟai-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. நிரம்பச் செய்தல்; to fill, make full; to supply abundantly. "குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும் நெட்டெழுத் திம்பர் ஒத்த குற்றெழுத்தே" (தொல். எழுத்து. 41). 2. பரவச் செய்தல் (வின்.); to diffuse, cause to pervade, suffuse. 3. திணித்தல் (வின்.); to stuff, cram.

ம. நிறுக்க.

நிறையழி–தல் niṟai-y-aḻi-, 4 செ.கு.வி. (v.i.) 1. கற்பழிதல்; to lose chastity. 2. ஒழுக்கங்கெடுதல்; to degenerate in character. 3. யானை மதம் பிடித்தல்; to rut, as an elephant. "நிறையழி கொல்யானை" (கலித்.56).

நிறைவேற்று[1]–தல் niṟaivēṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றச்செய்தல்; to fulfil, complete. 2. நடத்துதல்; to perform, execute, effect. கட்டளையை நிறை வேற்றினான் (உ.வ.).

நிறைவேற்று[2]–தல் niṟaivēṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முடிவு பெறும்படி அல்லது பயன் கிடைக்கும்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்; செயற்படுத்துதல்; to carry out, to fulfil, to implement. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏராளமாகச் செலவாகும். (உ.வ.). வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டு மென்பதில் ஆளுங்கட்சி ஆர்வமாக உள்ளது. (உ.வ.). தங்களது கோரிக்கைகளை ஆட்சிக்குழு நிறைவேற்றும்வரைப் போராடுவதெனத் தொழிற்சங்கம் முடிவெடுத்தது. (உ.வ.). 2. (கடமையை, வேலையைச்) செய்தல், நிகழ்த்துதல்; to perform (ones duty). அரசு அலுவலர் தம் பணியை நிறைவேற்றவிடாமல் தடுப்பது சட்டப்படிக் குற்றமாகும் (உ.வ.).

நிறைவேறு[1]–தல் niṟaivēṟu, 5 செ.கு.வி. (v.i.) 1. முற்றுதல்; to be fulfilled, accomplished, completed. 2. நன்னிலை அல்லது நற்பேறடைதல்; to attain heavenly bliss. அவன் நற்செயலால் முன்னோர் நிறைவேறிப் போனார்கள் (உ.வ.).

தெ. நெறவேறு.

நிறைவேறு[2]–தல் niṟaivēṟu, 5 செ.கு.வி. (v.i.) 1.(மேற் கொண்ட நடவடிக்கையால்) முடிவு அல்லது பயன் கிடைத்தல்; to be completed, to get fulfilled. இந்தத் திட்டங்கள் நிறைவேற மூன்றாண்டுக் காலம் ஆகும். (உ.வ.). உன்னுடைய ஆசைகள் நிறைவேறும் காலம் வந்துவிட்டது.(உ.வ.). 2. (கடமை) செய்யப்பட்டு முடிதல்; (of duty) to be done. என் கடமை நிறைவேறியது; இனி என் பொறுப்பும் விட்டது. (உ.வ.). 3. (தீர்மானம், சட்டமுன்வடிவு முதலியவை) பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதல் பெறுதல்; (of a bill, amendment) to be passed.

நின்றுபிடி–த்தல் niṉṟu-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *தாக்குப் பிடித்தல் (யாழ்ப்.);* to with stand. *கட்டடம் எந்தப் புயலுக்கும் நின்றுபிடிக்கும். (உ.வ.). இந்தத் துணி இரண்டு வெள்ளைக்கு நின்று பிடிக்காது, வெளுத்து விடும் (உ.வ.).*

நினை[1]–த்தல் niṉai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கருதுதல்;* to think. "*விளியுமென் இன்னுயிர் வேறெல்லாம் என்பார் அளியின்மை ஆற்ற நினைந்து*" *(குறள்.1209). 2. (ஆலோசித்தல்) கலத்தல்;* to consider, reflect, ponder. "*வினை வேறு படாஅப் பலபொரு ளொருசொன் னினையுங் காலைக் கிளந்தாங்கியலும்*" *(தொல். சொல். 55). 3. நினைவிற் கொணர்தல்;* to remember. *4. ஒன்றித்திருத்தல் (தியானத்தல்);* to medidate. "*நிறுத்திய வம்மன நிலைதிரி யாமற், குறித்த பொருளொடு கொளுத்துவது நினைவே*" *(சிலப். 14:11, உரை). 5. அறிதல்;* to know, understand. "*நீதிகள் சொல்லியு நினைய கிற்கிலார்*" *(தேவா.52.10). 6. நோக்கமாகக் கொள்ளுதல்;* to intend, design, have in view. *7. போலச் செய்தல் (பாவித்தல்);* to imagine, fancy.

க. நெனே.

நினை[2]–த்தல் niṉai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நினை[1]- பார்க்க;* see niṉai-. "*என்கொலோ நினைப்பதே*" *(திருவாச.5,75). 2. தீர்மானித்தல்; திகைத்தல் (வின்.);* to resolve determine.

ம. நினையுகே. க. நீனாக.

நினைப்பூட்டு–தல் niṉaippūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நினைவுபடுத்துல்;* to put in mind. *மாலையில் முதல்வரைச் சந்திக்க வேண்டுமென்பதைச் செயலருக்கு நினைப்பூட்டினார் (உ.வ.). 2. அறிவுறுத்துதல்;* to suggest, indicate. *குறித்த காலத்தில் அகரமுதலி வெளிவருதல் கட்டாயமென்பதை இயக்குநர் நினைப்பூட்டினார். (உ.வ.).*

நினைவற்றுப்போ–தல் niṉaivaṟṟu-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *மறந்துபோதல்;* to forget.

நினைவிற்கொள்ளு–தல் niṉaviṟ-koḷḷū-, *10 செ.குன்றாவி.* (v.t.) *1. திட்டமிடல்;* to plan. *2. எண்ணத்தில் இருத்துதல்;* to keep in the mind.

நினைவுகூர்–தல் niṉaivu-kūr-, *2 செ.குன்றாவி.* (v.t.) *நினைவுக்குக் கொண்டு வருதல்;* to remember, recollect, to bring ones mind. *தலைவர் தன் இளமைக் காலத்தை நினைவு கூர்ந்தார் (உ.வ.). இது உங்கள் வாழ்க்கையில் என்றும் நினைவு கூரத்தக்க செய்தி (உ.வ.).*

நினைவுபடுத்து–தல் niṉaivu-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நினைவுக்குக் கொண்டு வருதல்;* to recollect. *ஏதம் நடந்தபோது என்ன நிகழ்ந்தது என்பதை என்னால் நினைவுபடுத்த முடியவில்லை. (உ.வ.). 2. (ஒன்றை மறந்து விடாமல்) நினைக்கச் செய்தல்;* to remind. *நாளை திருமணத்திற்குச் செல்ல வேண்டுமென அமைச்சருக்கு அவர் உதவியாளர் நினைவு படுத்தினார். (உ.வ.).*

நினைவுவை–த்தல் niṉaivu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மனம் வைத்தல்;* to fix the mind on, concentrate the throughs. *2. நினைதல் (வின்.);* to think. *3. நன்றியின் பொருட்டேனும் அன்பினாலேனும் நினைவு வைத்தல்;* to remember with gratitude or affection. *4. இச்சித்தல்;* to hanker after, desire.

Ú

நீ[1]–த்தல் nī-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. பிரிதல்;* to separate from. "*நல்லசொல்லி மணந்தினி நீயே னென்ற தெவன்கொல் லன்னாய்*" *(ஐங்குறு.22). 2. துறத்தல்;* to renounce, as the world. "*ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு*" *(குறள்.21). 3. தள்ளுதல் (வின்.);* to put away, reject. *4. இழித்தல்;* to put to disgrace. "*பிள்ளையேயாயினு நீத்துரையார்*" *(ஆசாரக்.69). 5. வெறுத்தல்;* to despise, loathe. "*ஊரேது வல்லதே தென்றா னீத்து*" *(திருவால.13.13). 6. விடுதல்;* to abandon, leave. "*மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்*" *(குறள். 969).*

நீ[2]–த்தல் nī-, *4 செ.கு.வி.* (v.i.) *நீங்குதல்;* to be removed. "*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா*" *(குறள். 969).*

நீக்கல்போடு–தல் nīkkal-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *தொண்டைப் பயிரைக் காற்றோட்டம் ஏற்பட நீக்கிவிடுதல்;* to make a gap in the crop field for free circulation of air.

நீக்கு–தல் nīkku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒழித்தல்;* to remove, exclude, put aside, dismiss. "*இளைப்பினை யியக்கம் நீக்கி*" *(திவ். திருக்குறுந்.18). 2. (ஒருவரைப் பதவியிலிருந்து) வெளியேற்றுதல், (ஒருவரின் பெயரைப் பட்டியல் போன்றவற்றிலிருந்து) எடுத்தல்;* remove, dismis (a person from his post) / strike off (one's name). *அவரைப் பதவியிலிருந்து நீக்க ஆணை வந்துள்ளது.* "*வாக்காளர் பட்டியலிலிருந்து என் பெயரை நீக்கி இருக்கிறார்கள்*" *(உ.வ.). 3. விடுவித்தல்;* to extricate, liberate, exempt. "*இப்புழுக்கூடு நீக்கெனை*" *(திருவாச. 5,100). 4. கழித்தல்;* to deduct. *வட்டியை நீக்கிக் கொடுத்தான் (உ.வ.). 5. ஒதுக்குதல்;* to turn, draw aside, as a curtain. *திரையை நீக்கிப் பார்த்தான் (உ.வ.). 6. அழித்தல் (அக.நி.);* to kill, despatch, destroy. *7. அகலவைத்தல்;* to spread out, as the legs, fingers. *விரலை நீக்கு (உ.வ.). 8. திறத்தல்;* to open, force apart. *கதவை நீக்கிக் கொண்டு போ (உ.வ.). 9. பிரித்தல்;* to separate. *அவர் நட்பை நீக்கிவிட்டான் (உ.வ.). 10. கைவிடுதல்;* to give up, abandon. "*மான வருங்கல நீக்கி*" *(நாலடி.40). 11. மாற்றுதல்;* to change. *அவனெண்ணத்தை நீக்கி விட்டான் (உ.வ.).*

12. விதித்திருக்கும் தடையை மாற்றிக்கொள்ளுதல்; வேண்டாம் என விடுதல்; lift (sanctions, prohibition etc.,) *பொருளியல் தடைகளை நீக்கினால் போதுமா. (உ.வ.).*

தெ.,க. நீகு. ம. நீக்குக.

நீங்கு[1]–தல் nīṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பிரிதல்;* to leave, go, depart, separate from. "*நீங்கிற் றெறூஉம்*" *(குறள்.1104). 2. ஒழித்தல்;* to give up, abandon. "*பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்*" *(சிலப்.30:186). 3. கடத்தல்;* to pass over. "*நீங்கி னானந்த நெடுநதி*" *(கம்பரா. வனம்புகு.36).*

தெ.,க. நீகு. ம. நீன்னுக.

நீங்கு[2]–தல் nīṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. (பசி, நோய் முதலியவை) இல்லாமற் போதல், தீர்தல்;* (of hunger illness etc.,) to cease end. *வயிறு முட்ட நீர் குடித்த பிறகே பசி நீங்கியது போன்றிருந்தது. (உ.வ.). 2. (ஒருவரை விட்டு) அகலுதல், ஒன்றிலிருந்து விலகுதல்;* to leave, depart (from). *மக்கள் வேலை தேடிச் சொந்த ஊர் நீங்கி நகரத்திற் குவியத் தொடங்கி விட்டனர் (உ.வ.). நெஞ்சிலிருந்து நீங்கா நினைவுகள் (உ.வ.).*

நீங்கு[3]–தல் nīṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மாறுதல் (வின்.);* to turn away; to be warded off. *2. விடுதலையாதல் (வின்.);* to be liberated, released. *3. தள்ளுண்ணுதல்;* to be dismissed, discharged. *4. ஒழிதல் (வின்.);* to be excepted excluded. *5. நடத்தல் (சூடா.);* to go, proceed. *6. நீந்துதல் (யாழ்ப்.);* to swim. *7. பிளவுபடுதல் (யாழ்ப்.);* to form, as a gap, crevice, chasm. *8. விரிந்தகலுதல் (வின்.);* to be spread out, as fingers, legs. *9. சிதறுதல் (வின்.);* to be dispelled, scattered.

நீச்சடி[1]–த்தல் nīccaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *நீந்துதல்;* to swim.

நீச்சடி[2]–த்தல் nīccaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கால் நடைகளைக் குளிப்பாட்டுதல்;* to wash as cattle.

நீச்சடி[3]–த்தல் nīccaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *மீன் நாற்றம் போன்று நாற்றமடித்தல் (இ.வ.);* to smell as fish.

நீஞ்சு–தல் nīñju-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அருஞ்செயல்களை முடிக்கப் பெருமுயற்சியெடுத்தல்;* to be activity engaged, as in a stupendous work. *வேலையில் நீஞ்சிச் கொண்டிருக்கிறான். (உ.வ.). 2. மிகுதியாகக் குடித்தல் (வின்.);* to drink to excess, especially toddy. *கள்மிடாயில் நீஞ்சக் கூடியவன் (உ.வ.).*

நீட்டாய்ப்போ–தல் nīṭṭāi-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *நேராய்ப் போதல் (சென்னை.);* to go straight.

நீட்டி[1]–த்தல் nīṭṭi-, *8 செ.குன்றாவி.* (v.t.) *1. நீளச் செய்தல்;* to lengthen. *மடங்கியிருக்கும் இருப்புக் கம்பியை நீட்டிக்க வேண்டும். (உ.வ.). 2. நீட்டிப்பேசு-, பார்க்க;* see nīṭṭi-p-pēšu. *பேச்சை நீட்டிக்கிறான். (உ.வ.). 3. காலந்தாழ்த்துதல்;* to delay. "*தீம்பால் பெருகு மளரெல்லா நீட்டித்த காரணமென்*" *(கலித்.83). 4. முடித்தல் (அக.தி.);* to finish, complete. *5.நெடும் பொழுது செல்லல் (1, 2, வழக்.);* to elongate.

நீட்டி[2]–த்தல் nīṭṭi-, **5** *செ.கு.வி.* (v.i.) நெடுங்காலம் நிலைத்தல்; to be prolonged; to endure long. "*இவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின்*" *(நாலடி.40).*

நீட்டித்திரு–த்தல் nīṭṭi-t-iru-, *3 செ.கு.வி.* (v.i.) நீளுதல்; to lengthen. "*கேட்டனை யாயினித் தோட்டார் குழலியொடு நீட்டித்திராது நீபோ கென்றே*" *(சிலப்.15:199).*

நீட்டிநட[1]–த்தல் nīṭṭi-naḍa-, *3 செ.கு.வி.* (v.i.) மெல்ல நடத்தல்; to walk slowly.

நீட்டிநட[2]–த்தல் nīṭṭi-naḍa-, *3 செ.கு.வி.* (v.i.) எட்டி நடத்தல்; to take long strides.

நீட்டிப்படு–த்தல் nīṭṭi-p-paḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உடம்பைப் படுக்கையில் கிடத்துதல்;* to lie the body on the bed. *பணிச்சுமையிலேற்பட்ட களைப்பினைப் போக்க நேற்று நீட்டுப்படுத்து விட்டேன். (உ.வ.). 2. செயல் செய்யாது முடங்கிப் போதல்;* to strike, refuse to work until a grievance is remedied. *என் கோரிக்கை நிறைவேறும் வரை நீட்டிப்படித்துவிடப் போகிறேன். (உ.வ.).*

நீட்டிப்பேசு–தல் nīṭṭi-p-pēšu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விளக்கிக் சொல்லுதல்;* to speak at great length, in great detail. "*நீட்டிப் பேசுதலை நினைக்கவும் பயந்த னெந்தாய்*" *(அருட்பா, பிள்ளைப் பெரு.63). 2. சொற்களை நீட்டிப் பலுக்கிப் பேசுதல்;* to drawl out.

நீட்டிப்போடு–தல் nīṭṭi-p-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. நடக்கும்போது காலை எட்டி வைத்தல்;* to take a big stride in walking. *இந்த வேகத்தில் நடந்தால் ஊரடையு முன் பொழுது அடைந்துவிடும்; நடையைச் சற்று நீட்டிப்போடு. (உ.வ.). 2. கால(ம்) நீட்டித்தல்;* to put off. *இந்த வழக்கிற்குத் தீர்ப்பு சொல்வதைக் கொஞ்சம் நீட்டிப் போடு; அதற்குள் அவர்கள் இணக்கமாகப் போகக் கூடும் (உ.வ.). 3. உட்கார்ந்த நிலையில் காலை நீட்டி மடக்காமல் நீளமாய் வைத்துக் கொள்ளுதல்;* to sit by. *காலை நீட்டிப் போட்டுக்கொண்டு பாட்டியைப்போல் அமர்ந்துள்ளாயே. (உ.வ.). 4. பயிர்த் தொழிலில் வேலையாளுக்குரிய பகிர்வை அகலமாய்ப் போடுதல்;* to extended in agriculture cooly's shares. *எனக்கு மட்டும் மனையை நீட்டிப் போடுவது முறையா. (உ.வ.).*

நீட்டியள[1]–த்தல் nīṭṭi-y-aḷa-, *3 செ.குன்றாவி.* (v.t.) எஞ்சாது அளத்தல், குறைவற அளத்தல்; to measure accuratly. *கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டியளப்பதோர் கோல் (குறள்.796).*

நீட்டியள[2]–த்தல் nīṭṭi-y-aḷa-, *3 செ.கு.வி.* (v.i.)

துணி, இடம் போன்றவற்றை அளக்கும்போது ஏமாற்றாய் அளத்தல்; as measuring the cloth place to cheating. நான்கு முழத்துணியை ஐந்து முழத்துணியாய் நீட்டியளத்து விட்டான். (உ.வ.). நிலத்தை அளக்கும் போது கோலை நீட்டியளந்து என்னுடைய இடத்தையும் சேர்த்துக் கொண்டான் (உ.வ.).

நீட்டு[1]–தல் nīṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நீளச் செய்தல்; to lengthen, reach forth, extent, to stretch out. 2. முடக்காமல் நேர் நிறுத்துதல்; to straighten. கையை நீட்டினான். 3. திருப்படையல் முதலியன படைத்தல்; to offer, as oblations. "தளிகை நீட்டினதெல்லாம்" (திருவிருத்.33, பக்.204). 4. கொடுத்தல்; to give. "பாடிய புலவர்க்குப் பரிசினீட்டின்று" (பு.வெ.316. கொளூ.). 5. செருகுதல்; to insert, drive into. "குருதிவாள்..... புண்ணுநீட்டி" (சீவக.2293). 6. நீளப்பேசுதல்; to speak at length or too much. 7. இசை முதலியவற்றில் கால நீட்டித்தல்; to prolong, as a note. 8. கால நீட்டித்தல்; to delay, procrastinate, retard, defer.

நீட்டு[2]–தல் nīṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முன்நோக்கிக் காட்டுதல்; to brandish, draw (something); put forth. கத்தியை நீட்டி அச்சுறுத்தினான். (உ.வ.). அவர் கேட்டதும் பணத்தை நீட்டுவதா? (உ.வ.). 2. (கால அளவில்) தொடர்ந்து நிகழ்த்துதல், (எண்ணிக்கை அளவில்) மிகுதியாதல்; to prolong, extend. பேச்சை நீட்டாதே. (உ.வ.). பெயர்ப் பட்டியலை இதற்கு மேல் நீட்ட வேண்டாம். (உ.வ.). 3. (பேச்சில், பாட்டில்) சொற்களை இழுத்துப் பலுக்குதல்; (while speaking) to drow out, drawl out, lengthen. அந்த ஊர்க்காரர்கள் எப்பொழுதும் நீட்டி நீட்டித்தான் பேசுவார்கள். (உ.வ.).

நீடி[1]–த்தல் nīḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. நீளுதல்; to lengthen time, distance. வாணாள் நீடிக்க வழியுண்டு. (உ.வ.). 2. நிலைநிற்றல் (வின்.); to endure, last, to be permanent. அவர் ஐந்தாண்டு காலம் பதவியில் நீடித்ததே அருஞ்செயல்தான். (உ.வ.).

நீடி[2]–த்தல் nīḍi-, 4 செ.கு.வி. (v.i.) (கால அளவில்) தொடர்தல்; முடிவுக்கு வருவது தள்ளிப் போதல்; (of time) to last, extend. பேச்சு மேலும் அரை மணி நேரம் நீடித்தது (உ.வ.) இரு நாடுகளின் நீடித்த நட்பின் அடையாளம் இந்த ஒப்பந்தம் (உ.வ.). சட்டத்தை மேலும் ஓராண்டிற்கு நீடித்து ஆணையிட்டார். (உ.வ.).

நீடித்திருத்தல் nīḍittiru-, 3 செ.கு.வி. (v.i.) நெடுங்காலத்திற் கிருத்தல்; to be for a long time.

நீடு[1]–தல் nīḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நீளுதல்; to grow long; to be lengthened; to be extended through space or time. "அளபிறந்து யிர்த்தலும் ஒற்றிசை நீடலும் உளவென மொழிப" (தொல். எழுத்து. 33). 2. பரத்தல்; to spread; to extend. "நீடாழி யுலகத்து" (பாரத. சிறப்புப். 1). 3. பெருகுதல்; to abound; to be copious. நீடிய செல்வம் (வின்.). 4. செழித்தல் (யாழ்.அக.); to thrive, grow well. 5. மேம்படுதல்; to rise high. "நிலைமை நீடுத றலைமையோ வன்றே" (ஞானா. பாயி.3). 6. நிலைத்தல்; to last long; to endure; to be permanent. "அளி நீடளகம்" (திருக்கோ. 122). 7. இருத்தல் (வின்.); to exist, subsist. 8. காலம் நீட்டித்தல்; to delay. "நீடன்மின், வாரு மென்பவர் சொற்போன்றனவே" (பரிபா.14:9). 9. கெடுதல்; to become decayed. "நீடாப் பனைவிளைவு நாமெண்ண" (திணைமாலை.5).

தெ. நெகது., க. நீடு., ம. நீடுக.,

நீடு[2]–தல் nīḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தாண்டுதல் (திவா.); to pass over; to leap over. 2. பொழுது கடத்துதல்; to delay. "நீடலை முடியுதென்றான்" (யசோதர.2:35).

நீடு[3]–தல் nīḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) தேடுதல் (அக.நி.); to seek, search.

நீணு–தல் nīṇu-, 5 செ.கு.வி. (v.i.) நெடுந்தொலைவு செல்லுதல்; to go a long distance. "மாலொடு தண்டா மரையானு நீணுதல் செய்தொழிய நிமிர்ந்தான்" (தேவா. 62.9).

நீத்திடு–தல் nīṭṭiḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. பெருக்கிடுதல் (சீவக. 1382, உரை); to overflow, flood. 2. மிகுத்திடுதல்; to become excessive. "இகவாவிட ரென்வயி னீத்திட" (சீவக.1382).

நீந்து[1]–தல் nīndu-, 5 செ.கு.வி. (v.i.) 1. கைகால் களாலடித்து நீரில் மிதந்து செல்லுதல்; toswiminwater. "நீந்துபுனல்" (திவா.5:68). 2. பெருகுதல்; to over flow. "நெடும் பெருங்க ணீந்தின நீர்" (பு.வெ.12. பெண்பாற்.8).

நீந்து[2]–தல் nīndu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கடத்தல்; to swim across, cross over, escape from. "பிறவிப் பெருங் கடனீந்துவர்" (குறள்.10). 2. வெல்லுதல்; togetover, overcome. "கலங்கருவிய வரைநீந்தி" (மதுரைக்.57). 3. கழித்தல்; torelinquish, giveup. "மணப்பருங் காமந் தணப்ப நீந்தி" (அகநா.50).

நீர்[1]–த்தல் nīr-, 11 செ.கு.வி. (v.i.) (நீர்மத்தின்) அடர்த்தியைக் குறைத்தல்; (மோர் போன்றவற்றில்) நீர் கலந்து நீர்த்தன்மை உடையதாக்குதல்; to dilute (a liquid) make thin (by adding water). நீர்த்த மோராக இருந்தாலும் குடிப்பதற்குச் சுவையாய் இருக்கிறது. (உ.வ.). மேலும் மேலும் திருத்தங்கள் செய்ததால் கருத்து நீர்த்துப் போய்விட்டது. (உ.வ.). தலைவர்களின் கடைபிடி இன்மையால் கொள்கை நீர்த்துப் போய்விட்டது. (உ.வ.). 2. (சுண்ணாம்பில்) நீர் சேர்த்துக் குழைத்தல்; slake(lime).

நீர்[2]–த்தல் nīr-, 4 செ.கு.வி. (v.i.) 1. நீராதல்; to become thin or watery, as liquied food in cooking. 2. ஈரமாதல்; tobewet, moist. "நீர்க்கின்ற செஞ்சடை" (திருமந்.2121).

நீர்க்கட்டு¹–தல் nīr-k-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *புண் சீழ் பிடித்தல் (வின்.);* to form pus.

நீர்க்கட்டு²–தல் nīr-k-kaṭṭu-, *பெ.* (n.) *1. சிறுநீர் தடைப் பட்டிருக்கும் நோய் (வின்.);* retention or stoppage of urine, stricture or urethra. *2. நீராலுண்டாம் உடல் வீக்கம் (வின்.);* dropsy. *3. நீர்க்கோவை (இ.வ.);* tonsilitis. *4. நீர்நோய் வகை (இ.வ.);* inflammation of a synovial membrance, synovitis.

நீர்கட்டு¹–தல் nīr-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *வயல் முதலிய வற்றில் நீர் பாய்ச்சுதல்;* to irrigate a field, garden bed etc., *மேல் வயலுக்கு நிர் கட்டினாயா? (உ.வ.).*

நீர்கட்டு²–தல் nīr-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *நீர்க் கொப்புளங் கொள்ளுதல்;* to form pus; to blister.

நீர்கழி–த்தல் nīr-kaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *சிறுநீர் கழித்தல்;* to urinate.

நீர்காட்டு¹–தல் nīr-kāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கால் நடைகளை நீர்குடிக்க வைத்தல்;* to water as beasts.

நீர்காட்டு²–தல் nīr-kāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. குடிக்கவொட்டாது நீரைக் காட்டுவதை மட்டும் செய்து ஏமாற்றுதல் (வின்.);* to deceive over reach, as showing water without allowing one to drink. *2. அலைக்கழித்தல்;* to tantalize, harass.

நீர்த்துப்போ–தல் nīrttu-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *நீரின் தன்மையடைதல் (உ.வ.);* to beome watery, thin, as honey from fermentation.

நீர்தெளி–த்தல் nīr-teḷi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தூய்மை செய்தற்காக நீர் தெளித்தல்;* to sprinkle water for purification.

நீர்தெளித்துவிடு–தல் nīr-teḷittu-viḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஒருவனைத் தன்போக்கிற் செல்லும்படி விடுதல்;* to leave one to oneself.

நீர்ப்படு–த்தல் nīr-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *முழுக் காட்டுதல்;* to bathe. "*தென்றமிழ் நாடாளும் வேந்தர்..... நங்கை தன்னை நீர்ப்படுத்தி வெஞ்சினந்தரு வெம்மை நீங்கி*" *(சிலம்பு. 26:9-15, உரை).*

நீர்பாய்ச்சு–தல் nīr-paiccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *வயலுக்கு நீரைப் பாய்ச்சுதல்;* to irrigate to the fields. *நீர்ப் பற்றாக்குறையினால் கீழ்மடையிலுள்ள நெற் பயிருக்குப் போதுமான நீர் பாய்ச்ச இயலவில்லை. (உ.வ.).*

நீர்மாறு–தல் nīr-māṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நீரை மாற்றிப் பாய்ச்சுதல்;* to lead water, as from one field to another; from one channel to another.

நீர்வடி¹–த்தல் nīr-vaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. ஊறிய அரிசி போன்றவற்றிலிருந்து நீரை வடித்தல்;* to drain the water from soaked rice etc., *2. வயலில் பாய்ந்த மிகுதியான நீரை வெளியேற்றுதல்;* to drain the excess water from the field.

நீர்வடி²–த்தல் nīr-vaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கண்ணீர் முதலியன வடிதல்;* to drain the water from eyes. *2. புண் முதலியவற்றிலிருந்து சீழ் வெளியேறுதல்;* to drain the water from wound. *3. கஞ்சி போன்ற நீர்மம் வடிதல்;* to drain the soaked rice water.

நீர்வார்¹–த்தல் nīr-vār-, *4 செ.கு.வி.* (v.i.) *தாரை வார்த்துக் கொடுத்தல்;* to make a gift by pouring water on the right hand of the donee. "*திரு நெடுமாலோன்..... பெறுநீர் வார்ப்ப மும்முலை யொருத்தியை மணந்து*" *(கல்லா.30.13).*

நீர்வார்²–த்தல் nīr-vār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வழிச் செல்வோர் முதலாயினோர்க்கு விடாய்த் தீர்க்க நீர்விடுதல்;* to give water for drinking as to travellers. *2. நோய் நீங்கினோர் முதலாயினோரை நீராட்டி விடுதல்;* to give bath, as to a convalescent.

நீர்வார்³–தல் nīr-vār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தொடர்பற நீக்கிவிடுதல்;* to wash ones hands of, give up, as a person.

நீர்விட்டுப்போ–தல் nīr-vittu-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) *1. நீர்த்துப்போ-, (வின்.) பார்க்க;* see nīrttu-p-pō-. *2. பதனழிந்து சுவை கெடுதல் (யாழ்.அக.);* to become tasteless or spoiled, as boiled rice. *3. மிகுதியாக வியர்த்தல் (இ.வ.);* to perspire profusely, as in fever.

நீரட்டு–தல் nīr-aṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *தாரை வார்த்தல்;* to pour water in making a gift. "*இவனைக் கண்டுவைத்துக் கடுக நீரட்டிக் கொடாதே*" *(திவ். இயற். திருவிருத். 21, 140).*

நீரா–தல் nīr-ā-, *6 செ.கு.வி.* (v.i.) *1. நீர் மயமாய்ப் போதல்;* to become watery, diluted. *2. நெட்டு ருவாதல்;* to be committed to memory.

நீராக்கு–தல் nīr-ākku-, *9 செ.கு.வி.* (v.i.) *1. ஒருவனை இரக்கங்கொள்ளும்படி செய்தல்;* to make one pity. *2. மாழை முதலியவற்றை நீர்மமாக்குதல்;* to melt the metal into liquied state. *3. பால் முதலியவற்றிற்கு நீர் கலத்தல்;* to dilute, as milk. *4. நெட்டுருப் பண்ணுதல்;* to get by heart.

நீராட்டு–தல் nīr-āṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *முழுக்காட்டுதல்;* to bathe, as an idol. "*நீராட்டி யாட்டுபொற் கண்ணந் திமிர்ந்தள்ளி*" *(குமர.மீனாட்.பிள்ளைத்.செங்கீரை.1).*

நீராடு¹–தல் nīr-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *எண்ணெய்க் குளியல்;* oil bath. "*சனிநீராடு*".

நீராடு²–தல் nīr-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *குளித்தல்;* to bathe (in a river, sea, etc.,) *கடலில் நீராடுவது சிறார்களுக்கு மிகுந்த இன்பம் தரும். (உ.வ.).*

நீரிறை–த்தல் nīr-iṟai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வேளாண் பயிருக்கு நீர் பாய்ச்சுதல்;* to irrigate for crops.

நீவ்[1]–தல் nīvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கையாலே தடவுதல், பூசுதல்;* to stroke daub. "*சாரல் ஆரம் வண்டுபட நீவி*" *(நற்.259).*

நீவ்[2]–தல் nīvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கைவிடுதல்;* to cease, discontinue. "*ஒலிநீவி யினநாரை முக்கோல் கொளந்தணர் முதுமொழி நினைவார்போல் எக்கர்மேல் இறைகொள்ள*" *(கலித்.126). 2. கடத்தல்;* to pass beyond, transgress. "*எந்தை யருங்கடி நீவி*" *(குறிஞ்சிப்.20). 3. அழித்தல் (அக.நி.);* to destroy. *4. அறுத்தல்;* to break asunder, as a chain. "*பின்னிய தொடர் நீவி*" *(கலித்.15).*

நீவ்[3]–தல் nīvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தடவிக் கொடுத்தல்;* to stroke, rub gently, handly softly. "*தன்னைப் புறம்பழித்து நீவ*" *(கலித்.51). 2. கோதுதல்;* to smooth by passing the fingers over. "*பொம்ம லோதி நீவி யோனே*" *(குறுந்.379). 3. துடைத்தல்;* to wipe off. "*ஒண்ணுத னீவுவர் காதலர்*" *(கலித்.4). 4. பரப்புதல்;* to spread. "*நீவிநித்திலம் பரத்திய ருணக்குவ*" *(பெரியபு. திருக்குறிப்.6). 5. பூசுதல்;* to daub, smear. "*நறுஞ்சாந்து நீவிய கேழ்கிள ரகலத்து*" *(மதுரைக்.493).*

நீவ்[4]–தல் nīvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தூண்டுதல்;* to propel; to raise, as the wick of a lamp.

நீவ்[5]–தல் nīvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *(தாள், துணி போன்றவற்றைச் சுருக்கம் போகும்படி விரலால்) அழுத்தி இழுத்தல்;* smooth out (the surface of a page), to press (the pleats of a saree). *புத்தகத்தின் பக்கத்தை நீவி விட்டுக்கொண்டே படிப்பது சிலரின் பழக்கம். (உ.வ.). சேலையின் கொய்சகத்தைப் பலமுறை நீவி விட்டுக் கொண்டாள் (உ.வ.).*

நீள்(ளு)–தல் nīḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. பெருமையாதல்;* to be great. "*நீள்கழற் கன்பு செய்வாம்*" *(கந்தபு. கடவுள்வா.2). 2. ஓடுதல் (திவா.);* to run.

நீளி[1]–த்தல் nīḷi-, *11 செ.கு.வி.* (v.i.) *1. நீளுதல் (வின்.);* to be lengthened, extended. *2. நெடுங்காலமிருத்தல்;* to be long as time or life; to be prolonged; to last long endure. *3. சுணங்குதல்;* to be protracted, delayed.

க. நீள்.

நீற்று–தல் nīṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நீறச் செய்தல்;* to slake, as lime. *2. பொடியாக்குதல் (வின்.);* to reduce to ashes or powder. *3. கனிமங்களைப் பற்பமாக்குதல்;* to calcine, as metals; to calcinate.

ம. நீற்றுக.

நீறடி–த்தல் nīṟaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *சுண்ணாம்பு நீற்றில் தோய்த்த கயிற்றினால் கோடு போடுதல் (யாழ்.அக.);* to draw ornament figures on floor with a rope soaked in lime - water.

நீறாகு–தல் nīṟāgu-, *7 செ.கு.வி.* (v.i.) *சாம்பலாய்ப் போதல்;* to be burnt to ashes. "*அசுரர்களை நீறாகும் படியாக நிருமித்துப் படைதொட்ட மாறாளன்*" *(திவ். திருவாய்.4, 8,1).*

நீறாடு[1]–தல் nīṟāḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பொடியாக்குதல் (வின்.);* to reduce to ashes, bring to ruin.

நீறாடு[2]–தல் nīṟāḍu-, *7 செ.கு.வி.* (v.i.) *1. திரு நீறணிதல்;* to be smear one self with sacred ashes. *2. புழுதி படிதல்;* to be covered with dust.

நீறு–தல் nīṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சுண்ணமாதல்;* to become slaked, as lime. *2. சூரணமாதல்;* to be turned to ashes or calcined, as metals or stones. *3. அழிதல்;* to perish, to be ruined.

ம. நீறுக.

E

நுக்கு[1]–தல் nukku-, *5 செ.குன்றா.வி.* (v.t.) *1.பொடியாக்குதல்;* to break in pieces, grind to powder, crush. **2.** *புடைத்தல்;* to thrash, beat soundly. *அவனை நுக்கிவிட்டான்.*

தெ., க. நுக்கு; ம. நொக்குக.,

நுக்கு[2]–தல் nukku-, *5 செ.கு.வி.* (v.i.) *மிகுதியாய்ப் பெய்தல்;* to pour heavily. *மழை நுக்குகிறது.*

ம. நொக்குக; க., தெ. நுக்கு.

நுகர்[1]–தல் nugar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. துன்பப் படுதல்;* suffering. 2. *விழுங்குதல்;* swallowing. *(சா.அக.).*

நுகர்[2]–தல் nugar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. துய்த்தல்;* to enjoy; to experience, as the fruits of actions."*அஞ்சலோம்பு நின் னணிநல நுகர்கென*" *(குறிஞ்சிப் 181). ஐம்புலன்களால் நுகரும் இன்பம்.* "*இனிமை நுகர்ந்த மடந்தையும்*" *(கோயிற்பு. பதஞ்சலி.42).* "*வித்தக நறுந்தார் விருப்பொடு பொருந்தி நுகர்தற் கமைந்த புகர்தீர் பொம்மற்*" *(பெருங். இலாவாண. 17:110, 111). 2. உண்ணுதல்;* to eat, drink. "*அடிசில் பிறர் நுகர்க*" *(பு. வெ.10, முல்லைப்.8).* "*அம்பிகையோடு நுகர்ந்து களித்தனன்*" *(சிவரக. தேவிமேரு. கயிலை. 10). 3. செய்தல்;* to do perform. "*நுங்கள் வினைதீர வழிபாடு நுகரா வெழுமினே*" *(தேவா. 1060, 4).*

நுகர்[3]–த்தல் nugar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. தின்னச் செய்தல்;* causing one to eat. *2. தின்னுதல்;* eating. *(சா.அக.).*

நுகை[1]–தல் nugai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தளர்தல்;* to become lax, loose, as a garment. *நுகைந்த கட்டு. 2. இளகுதல்;* to become soft, as the earth from rain.

நுகை[2]–த்தல் nugai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தளரச் செய்தல்*

(யாழ்ப்.); to relax, loosen, slacken, mitigate. *2.* இளகச் செய்தல்; to soften.

நுங்கு[1]–தல் nuṅgu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* விழுங்குதல்; to swallow, devour. *2.* வயிறாரப் பருகுதல்; to drink in large draughts. "நூறுநூறு குடங்களு நுங்கினான்" *(கம்பரா. கும்ப. 60).* "இந்தநஞ் சேர்கானகத்தை நுங்குமெரி போல்" *(பிரமோத். காண்.13:20).* 3. கைக்கொள்ளுதல்; to take possession of capture. "பகைவர் முனுங்கி" *(பு.வெ.4:15).* 4. உட்கொள்ளுதல்; to include, suck. "மகரவாய் நுங்கிய சிகழிகை" *(கலித்.54).*

து. நிங்குநி, நிங்குடுநி, திங்குநி, திங்குடுநி; *க.* நுங்கு; *குரு.* நுநுக்நா; *மா.*நுந்கெ;*பிரா.* நுகுசிங் *(nugushing).*

நுங்கு[2]–தல் nuṅgu-, *5* செ.கு.வி. (v.i.) கெடுதல்; to perish; to be destroyed. "வினை கணுங்கிடாவே" *(சி.சி.8:35).*

நுடக்கு–தல் nuḍakku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* கழுவுதல்; to wash. "வள்ள நுடக்கிய வார்ந்துகு சின்னீர்" *(பெரும்பாண். 339).* 2. துவட்டுதல் *(சூடா.);* to wipe off moisture. *3.* மாய்த்தல்; to destroy. "பொங்குபிசிர் நுடக்கிய செஞ்சுடர் நிகழ்வின்" *(பதிற்றுப்.72:14).* 4. கரைத்தல்; to dissolve. "நூழி லாட்டி நுடக்கிக் குடித்து" *(சீவக.762).* 5. மடக்குதல்; to bend, fold.

நுடங்கு[1]–தல் nuḍaṅgu, *5* செ.கு.வி. (v.i.) *1.* அசைதல்; to shake, wave, to be tremulous."பல்கொடி நுடங்குமுன்பிற் செறுநர் செல்சமந் தொலைத்த வினைநவில் யானை" *(பதிற்றுப்.82:3),* "நுடங்குகொடி மருங்கி னுணுகிய நுசுப்பின் மடந்தை மகளிர் குடைந்தா டரவமும்" *(பெருங். உஞ்சைக். 1:80, 81).* 2. துவளுதல்; to be flexible, pliable. "மின்னேர் நுடங்கிடை" *(திருவாச. 11:19).* 3. தள்ளாடுதல்; to totter, tremble. "நக்கான்முக நோக்கி நடுங்கி நுடங்கி" *(பெரியபு. தடுத்.39).* 4. ஆடுதல்; to dance. "மாறிரியச் சீறி நுடங்குவான்" *(பு.வெ.2:9).* 5. வளைதல்; to be bent. "நுடங்குநுத லிளவே ரிடங்கெட வணிய" *(ஞானா.36:4).* 6. நுட்பமாதல் *(வின்.);* to be fine, thin, at tenuated. *7.* அடங்குதல்; to be contained. "நூறு யோசனை அகலமு மாழமு நுடங்க" *(கம்பரா. அகலிகை.38).* 8. ஈடுபடுதல்; to be fascinated. "நுடங்கு கேள்வி மிசையென்கோ" *(திவ். திருவாய். 3.4:6).*

நுடங்கு[2]–தல் nuḍaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) மெலிதல்; to be feeble, thin or weak. "நொந்தவரே முதலாக நுடங்கி யனன்னியராய்" *(ரஹஸ்ய.390).*

நுணங்கு[1]–தல் nuṇaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* அசைதல்; to shake, move. "நுதலூரும் பசப்பாயின் நுணங்கிறை யளியென்னோ" *(கலித்.28:15).* 2. மெல்லியதாதல்; to be thin, minute, attenuated. "நுண்ணறல்போல நுணங்கிய பைங்கூந்தல்" *(ஐந்.ஐம்.27).* 3. நுட்பமாதல்; to be subtle, fine, refined. "நுணங்கிய கேள்வியர் ரல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது" *(குறள்.419).* 4. வளைதல்; to be bent. 5. துவளுதல்; to be pliable, flexible. "நுணங்கு நுண்கொடி மின்னார்" *(தொல்.சொல்.374.உரை.).* 6. செறிதல்; to be dense, close, crowded. "நுணங்கரில்" *(பு.வெ.4:7).*

நுணங்கு[2]–தல்nuṇaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) வாடுதல் *(யாழ். அக.);* to drop, fade, wither.

நுணாசு–தல்nuṇāšu-, *5* செ.குன்றாவி. (v.t.) நுணாவு-தல் பார்க்க; see nuṇāvu-.

நுணாவு–தல்nuṇāvu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* தடவித் தெரிதல்; to rub and feel with the fingers. *2.* நுனி நாவால் தடவியுணர்தல்; to feel with the tip of the tongue, as the gums or palate.

க. நொணெ.

நுணி[1]–தல்nuṇi-, *2* செ.கு.வி. (v.i.) தேய்தல் *(அக.நி.);* to waste away; to be thinned down.

நுணி[2]–த்தல்nuṇi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* கூர்மையாக்குதல் *(வின்.);* to sharpen to a point. *2.* பொடியாக்குதல் *(வின்.);* to powder. *3.* நுணுகி ஆராய்தல்; to examine carefully. "தெய்வ நுணித்தறங் குணித்த மேலோர்" *(கம்பரா. மந்திரப்.8).*

நுணுக்கு–தல் nuṇukku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* நுண்மை யாக்குதல்; to make very small, as beads. *2.* பொடிசெய்தல்; to powder, pulverise. "மாத்திரையை நுணுக்கிக்கொடு". *3.* அரைத்தல்; to pound, grind. "மிளகை நுணுக்கிக் கொடு". "நுண்மணல் விராய் நுணுக்குநர்" *(திருவானைக். திருநீற்.14).* 4. சிதைத்தல்; to shatter to pieces. "வெகுளி நுணுக்கும் விறலும் மகளிர்கட்கு ஒத்த ஒழுக்க முடைமையும்" *(திருகடு.40).* 5. சிறிதாயெழுதுதல்; to write a small hand. அஞ்சல் அட்டையில் குறளை நுணுக்கி எழுதினார். இப்படி நுணுகி எழுதினால் எப்படிப் படிப்பது. 6. கையைக் குலுக்குதல், கஞ்சத்தனம் (உலோபம்) செய்தல்; to be niggardly, to stint. அவன் மிகவும் கையை நுணுக்குகிறான். 7. யாழில் இன்னிசையெழுப்புதல்; to produce soft notes from the yāḻ. "அதுதன்னை வீணையிலே ஏறிட்டு நுணுக்கினாள்" *(திவ். திருநெடுந்.15:122).* 8. கூர்மையாக்குதல் *(இலக்.அக.);* to sharpen to a point, as a stick. *9.* அறிவை(புத்தியை)க் கூர்மையாக்குதல்; to sharpen the wits. "ஐய னேயறி யும்மென வந்தனம் பொய்ய தன்றிப் புலமை நுணுக்கி" *(சீவக.886).10.* நுண்ணிதாக வேலை செய்தல்; to execute minutely or finely, as a work.

நுணுகு–தல்nuṇugu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* நுட்பமாதல்; to be slender, delicate, as a woman's waist; to be minute. "நுணுகிய நுசுப்பினார்" *(சீவக.263).* 2. மெலிதல்; to become thin. "பூப்போ லுண்கண் பசந்த தோணுணுகி" *(புறநா.96).* 3. கூர்மையாதல்; to be sharp, keen, acute as one's intellect. நுணுகிய அறிவு.

நுணுங்கு¹–தல் nuṇuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நுணுகு-தல் (உ.வ.) பார்க்க;* see nuṇugu-. *2. பொடியாதல்;* to be powdered, pulverised.

நுணுங்கு²–தல் nuṇuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மெல்லப் பாடுதல்;* to sing softly as a tune. "*அழகை யுடைத்தான பண்ணை நுணுங்கி*" *(திவ். திருநெடுந். 22:204).*

நுணை–த்தல் nuṇai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *நுனி நாவால் தடவியுணர்தல்;* to feel with the tip of the tongue, as the gums or palate.

ம. நுண; க. நொணெ.

நுதம்பு–தல் nudambu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நனைந்திளகுதல்;* to become soft or moist, as soap in water, to be mashy. *2. ஈரமாதல்;* to become damp, as furniture, in wet weather.

நுதல்(லு)–தல் nudal-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கருதுதல்;* to denote; to mean, intend. "*பல்லவை நுதலிய வகர விறுபெயர்*" *(தொல். எழுத்து. 174). 2. கூறுதல்;* to speak, tell. "*நூற்குள் நுதலிய பொருளல்லனவற்றை அதற்குத் தந்துரைத்தலின் தந்துரை*" *(நன்.1, சங்கர.). 3. தோற்றுவித்தல்;* to bring into being, create. "*தேவுபல நுதலி*" *(திவ். இயற். திருவாசி. 4).*

நுதி–த்தல் nuḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அடைசுதல்;* to cover with, as a garment lining. "*நுதிமயிர்த் துகிற்குப் பாயம் புகுக என நூக்கினானே*" *(சீவக. 819).*

நுது–த்தல் nudu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அவித்தல்;* to put out, quench, extinguish. "*நெய்யாலெரி நுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்காம நுதுப் பேமெனல்*" *(குறள்.1148). 2. அழித்தல்;* to destroy. "*வரதன் நம்படையை நுதுக்கம்*" *(தணிகைப்பு. சீபரி. 162). 3. நீக்குதல்;* to remove. "*இன்ன னுதுக்குந் தண்கவிகை வள்ளல்*" *(விநாயகபு.46:4).*

க. நொந்து

நுந்து–தல் nundu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தள்ளுதல், முன் தள்ளுதல்;* to prople, thrust forth, cast away. "*பரந்து பொன் னிரத்து நுந்தி*" *(திவ். திருச்சந்.51). 2. தூண்டுதல்;* to trim, stir up. "*நுந்தாத வொண் சுடரே*" *(தேவா.811, 5).*

க. நொந்து; வ. நுத் (d)

நுரை–த்தல் nurai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நீர் முதலியன கொப்புளங் கொள்ளுதல் (வின்.);* to froth, foam, effervesce. *நுரை உண்டாதல். மாட்டின் வாய் நுரை தள்ளுகிறது. பூட்டை அவிழ்த்து விடு. வெண்ணெய், நுரை அடங்கியதும் இறக்கி விடு. 2. நுரை வரும்படிச் செய்தல்;* to work up a lather. *சோப்பை நுரைத்து முகத்தில் பூசு.*

நுரைத்தெழு–தல் nurai-t-teḻu-, *12 செ.கு.வி.* (v.i.) *பொங்குதல்;* effervescence. *(சா.அக.). சர்க்கரைப் பாகு நுரைத் தெழுகிறது, பார்த்து இறக்கு.*

நுரைதள்ளு–தல் nurai-taḷḷu-, *5 செ.கு.வி.* (v.i.) *நுரையை வாயிலிருந்து வெளியிடுதல்;* to foam at the mouth.

நுழுது–தல் nuvaṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தலை மயிரைச் சுருட்டி நுழைத்து முடித்தல்;* to tie, as a coil of hair. "*மயிர் நுழுதி மருங்கு யர்ந்த தேசுடைய சீகழிகையில்*" *(பெரியபு. ஆனாய. 15).*

க. நுலிசு; தெ. நுலுமு.

நுழுந்து¹–தல் nuḻundu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தலை மயிரைச் சுருட்டி நுழைத்து முடித்தல்;* to tie, as a coil of hair. "*திருக்குழலைக் குலைத்து நுழுந்த*" *(ஈடு.10.11.). 2. நுழைத்தல், செருகல் (வின்.);* to insert, stick in, tuck in. *3. மறைத்து வைத்தல், எளிதில் அறியக் கூடாத இடத்தில் நுழைத்து வைத்தல்;* to keep in a place not easily found out. *4. கவர்தல்;* to carry away by stealth.

நுழுந்து²–தல் nuḻundu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பதுங்குதல் (யாழ்ப்.);* to skulk slink or sneak away. *2. மறைதல், நழுவுதல் (யாழ்ப்.);* to slip out of sight, as one among many. *3. நகர்தல் (யாழ்ப்.);* to crawl, creep, as reptiles.

நுழுவு–தல் nuḻuvu-, *5 செ.கு.வி.* (v.i.) *நகர்தல் (யாழ்ப்.);* to creep along, as reptiles.

நுழை¹–தல் nuḻai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. இடுக்கமான இடைவழியுட்செல்லுதல்;* to creep through a narrow passage; to penetrate. "*மலர்ப்பொழி னுழைந்து*" *(சிலப்.10:35). திருடன் பலகணி வழியாய் வீட்டிற்குள் நுழைந்து விட்டான் (உ.வ.). ஊசிக்காதில் ஒட்டகம் நுழையுமா? பூனையைக் கண்டதும் எலி வளையில் நுழைந்து கொண்டது. 2. நுண்ணிதாக விளங்குதல்;* to be impressed in one's mind. *அது அவன் அறிவில் நுழைய வில்லை. 3. வலக்காரமாக அல்லது சுமுக்கமாக ஒரு வேலையில் சேர்தல்;* to get into, take up, as an office. *அவன் அந்தப் பணியில் நுழைந்து விட்டான். அவன் மெல்ல மெல்ல அரசு வேலையில் நுழைந்து விட்டான். இந்தக் காலத்தில் பெண்கள் நுழையாத துறையே இல்லை. 4. இடைச் செருகப் படுதல்;* to be interpolated. *சிந்தாமணியில் கந்தியார் பாட்டு நுழைந்தது. உங்கள் பையன் பெயரை எப்படியாவது தேர்வுப் பட்டியலில் சேர்த்து விடுகிறேன். தொல்காப்பியத்துள் ளும் ஆரியக் கருத்துகள் நுழைந்து விட்டன. (உ.வ.).*

ம. நுழுக; க. நொளெ; கொலா. நொலாந்க்; குட. நுக்க்; குரு. நுற்நா; து. நுரும்கே; மா. நுடே; தெ. நுசுலு.

நுழை²–தல் nuḻai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. கடத்தல் (சிலப்.10:35, உரை.);* to pass. *2. மட்டுக்கட்டுதல் (யாழ். அக.);* to stint, limit down or lessen the due measure or quantity. *3.*

சாடை சொல்லுதல் (யாழ்.அக.); to make innuendoes.

ம. நுழுக; க. நொளெ;

நுழை[3]–தல் nuḻai-, 2 செ.கு.வி. (v.i.) 1. நுண்மையாதல்; to be minute, fine. "நுழை நூற் கலிங்கம்" (மலைபடு.561). 2. கூரிதாதல்; to be keen acute. "நுழைந்த நோக்கிற் கண்ணுள் வினைஞரும்" (மதுரைக்.517). "ஓடுதேர் நுண்நுகம் நுழைத்த மாவே" (நற்.58:11). "வேற்றிழை நுழைத்த வேர்நனை சிதாஅர்" (புறநா. 69:3). "சலாகை நுழைந்த மணித்துளை அகவையின்" (மணிமே. 12:66). "தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை நுழைநுதி நெடுவேற் குறும்படை மழவர்" (35:3, 4).

நுழை[4]–த்தல் nuḻai, 4 செ.குன்றாவி. (v.t.) புகுத்துதல்; to put, insert; interpolate. கால்சட்டைப் பைக்குள் இரண்டு கைகளையும் நுழைத்துக் கொண்டு நின்றான். ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைத்தாலும் தீயவழிச் செல்வரைத் துறக்கத்தில் நுழைக்க முடியாது. (விவிலியம்).

நுள்ளு–தல் nuḷḷu-, 5 செ.குன்றாவி. (v.t.) கூரிய உகிராற் கிள்ளுதல் (உ.வ.); to pinch, nip.

ம.நுள்ளுக; கோத. நுள்ளி; தெ. நுல் (லு).

நுளம்பு–தல் nuḷambu-, 5 செ.கு.வி. (v.i.) அசட்டை செய்தல்; to treat with contempt.

நுளுப்பு–தல் nuḷuppu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கழப்புதல் (வின்.); to neglect or shirk, as work.

நுறுக்கு–தல் nuṟukku-, 5 செ.குன்றாவி. (v.t.) பொடியாக்குதல்; to crush, pulverise, reduce to power. "வெற்பினங்களை நுறுக்கின" (கம்பரா. பிரமாத். 108).

க. நுறுகு; தெ. நுருமு.

நுறுங்கு–தல் nuṟuṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பொடியாதல்; to be powdered. 2. சிதைதல்; to be bruised, squeezed. "நுறுங்கிய யாக்கையோடு" (விநாயகபு. 80:442).

நுனி[1]–த்தல் nuṉi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கூராக்குதல்; to sharpen to a point, whet. 2. கூர்ந்து நோக்குதல் அல்லது ஆராய்தல்; to examine carefully, to took intently. "நாடகக் காப்பிய நன்னூ னுனிப் போர்" (மணிமே. 19:80).

நுனி[2]–த்தல் nuṉi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஆராய்ந்து கூறுதல்; to state after a full consideration. "நூற் பொருளுணர்ந்தோர் நுனித்தனரா" (மணிமே. 19:38). "கதிர்வினை நுனித்த நின் கணியெனைக் கூறி" (பெருங். உஞ்சைக். 36:210). 2. கருதுதல்; to intent. "நோக்கருஞ் சாலை போக நுனித்து" (இரகு. குறைக.67).

ü

நூக்கு–தல் nūkku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முன் தள்ளுதல்; to shove, push, thrust aside. "நூக்கிப் புறத்திரு போகென்னு மின்னாச் சொல்" (நாலடி.326). தள்ளுவதை நூக்குதல் என்பது வடவார்க் காட்டு வழக்கு. 2. ஊசலாட்டுதல்; to swing. "நடலைந் நடுவின் மகளிர் நூக்கப் பரிந்தகாசு" (சீவக.922). 3. அசைத்தல்; to shake. "ஞாழற் படுசினை தோழியர் நூக்க" (பெருங். உஞ்சைக். 40:37). 4. தூண்டுதல்; to impel, incite. "நூறுவா யெனமாதலி நூக்கினான்" (கம்பரா. இராவணன் வதை.174). 5. எறிதல்; to throw, discharge, as a weapon. "கைப்படையை நூக்கி" (தொல். பொருள். 72, உரை.பி.ம்.). 6. முறித்தல்; to break, cut down. "ஊழாரத் தோய்கரை நூக்கிப் புனறந்த" (பரிபா.9:27). 7. நீக்குதல்; to remove, redress. "நோவெலா மிவணூக்க வருளினான் மேவி" (பிரபுலிங். முத்தாயி.7). 8. கழுவாய் (பரிகாரம்) செய்தல்; to treat, as a patient. "புண் களுற்றார்க் கிதுமருந்தென்ன நல்லார் இழுது சேர் கவளம் வைத்துப் பதுமுகன் பாவை மார்பின் நெய்க்கிழி பயிலச் சேர்த்தி நுதிமயிர்த் துகில் குப்பாயம் புகுக என நூக்கினானே" (சீவக.819). 9. சாத்துதல்; to shut, close, as a door. "வன்னிலைக் கதவ நூக்கி" (திருவிளை. அங்கம். 8).

க. தெ. நூகு; து. நூகுநி; குட., கொலா. நுக்.

நூங்கு–தல் nūṅgu-, 5 செ.கு.வி. (v.i.) மிகுதல் (வின்.); to be great, intense or abundant, to exceed.

நூர்[1]–தல் nūr-, 2 செ.கு.வி. (v.i.) 1. அவிதல்; to go out; to be extinguished, as a lamp, to become extinct, as a family. தீ நூர்ந்து போனது. 2. ஆறுதல்; to be appeased or suppressed, as hunger, anger. 3. பதனழிதல்; to be spoiled; to begin to rot; to grow too soft.

நூர்[2]–த்தல் nūr-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அவித்தல்; to put out, quench. விளக்கை நூர்த்துப் போடு. 2. ஆற்றுதல்; to appease or suppress, as hunger, anger.

நூல்[1]–தல் nūl-, 14 செ.கு.வி. (v.i.) சூழ்ச்சி செய்தல்; to make a plot. "நூற்றுவரை யன்றுமங்க நூற்ற" (திவ். திருவாய். 7. 3:10).

நூல்[2]–தல் (நூற்றல்) nūl-, 9 செ.குன்றாவி. (v.t.) நூலிழை யுண்டாக்குதல்; to spin.

நூல்[3]–தல் (நூற்றல்) nūl-, 9 செ.குன்றாவி. (v.t.) செய்யுளி யற்றுதல்; to compose, as a poem. "நொய்ய சொன் னூற்கலுற்றேன்" (கம்பரா. சிறப்.5).

நூலிழ–த்தல் nūl-iḻa-, 3 செ.கு.வி. (v.i.) கைம்பெண்ணாதல் (விதவையாதல்); to become a widow as losing the wedding string. "நூற்றுவர்தம் பெண்டிரு மெய்தி நூலிழப்ப" (திவ். பெரியதிரு.2.3:6).

நூலிழை–த்தல் nūl-iḻai-, 4 செ.கு.வி. (v.i.) 1. கதிரிலுள்ள நூலையெடுத்துச் சுற்றுதல் (வின்.); to reel yarn; to

disentangle yarn from the skein and wind it on the reel; to unwind yarn. "நீல முண்ட நூலிழை வண்ணம்" (பெருங். இலாவாண 9:88). 2. நூல்நூற்றல் (யாழ்.அக.); to spin thread.

நூவு–தல் nūvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நீரை முன் இரைத்துப் பாய்ச்சுதல்; to irrigate, water. "இடாக் கொண்டு நூவி" (திருமந்.2878). 2. திரியைத் தூண்டுதல்; raise or draw out the wick so that it may burn bright.

நூறு–தல் nūṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அழித்தல்; to destroy, kill. "பழம்பகை தவ நூறுவா யென" (சீவக.324). "நுந்தநுந்த முறைமுறை நூறினான்" (கம்பரா. நாகபாச. 113). 2. அறைதல், அறைந்து கொள்ளுதல்; to strike, beat, as one's breast. "முலைபொலி யாக முருப்ப நூறி" (புறநா.25). 3. துணித்தல், வெட்டுதல்; to cut down butcher. "யானை அருஞ்சமந் ததைய நூறி" (புறநா.93). 4. நெரித்தல்; to crush. "கரும்பினைக் கண்டகர நூறி" (நாலடி.156). 5. தூளாக்குதல், பொடியாக்குதல்; to pulverise, reduce to powder. "அரண்பல நூறி" (அகநா.69). 6. இடித்தல் (பு.வெ.6:26.உரை.); to demolish. 7. வளைந்து கொள்ளுதல்; to surround. "நதிவெள்ள நூறுகென" (தக்கயாகப்.652). 8. துரத்துதல்; to drive-out, expel. "காரிரு ளிரிய நூறி" (ஞானா.67).

தெ. நூறு; ம. நூறு, நூறுக; க. நூறு; குட. நூரி; து. நுரியுநி; கோத.நுச்; துட.நூச்; கொலா. நொர்ப்; பர்.நூகொல்; கோண்.நோராநா; குவி.நுய்யிலி; பிரா. நுசிங்.

be

நெக்கு¹–தல் nekku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிளப்புதல்; to raise a thing by a lever. பாறையைக் கம்பியால் நெக்கித் தள்ளினான். 2. துரத்தியடித்தல்; to chase away in battle. காவலர்கள் கூட்டத்தை தடியால் நெக்கினார்கள்.

நெக்கு²–தல் nekku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூட்டம் நெருக்குதல் (உ.வ.); to press, push. தொடர்வண்டி பயணச்சீட்டுக்கு மக்கள் கூட்டம் நெக்கியது. 2. ஏனத்தில் உள்ள நீரை முழுவதுமாக அலசிக் (கோலிக்) கொட்டுதல்; to throw water out of a vessel with spoon, etc.

நெக்கு³–தல் nekku-, 5 செ.கு.வி. (v.i.) தள்ளல், நெருக்குதல்; pressing. (சா.அக.) விழா மேடையில் இருந்து அவரை நெக்கித் தள்ளிவிட்டனர்.

நெக்குருகு–தல் nekkurugu-, 5 செ.கு.வி. (v.i.) அன்பால் நெஞ்சம் இளகுதல்; to melt, as the heart in love. "நெஞ்ச நெக்குருகும்" (திருக்கோ. 192). கடவுள் வணக்கப் பாடலை நெக்குருகப் பாடினார். பாடலைக் கேட்டு நெஞ்சம் நெக்குருகி நின்றார்.

நெகிழ்¹–தல் negiḻ-, 2 செ.கு.வி. (v.i.) 1. பிணைப்புத் தளர்தல்; to become loose. "கவவுக்கைந் நெகிழ்ந்தமை போற்றி" (அகநா.26). "நெகிழ்ந்து சோர் பூந்துகி னோக்கி நோக்கியே" (சீவக. 1004). வேட்டி நெகிழ்ந்து விடாதிருக்க வார்ப்பட்டையைக் கட்டிக் கொண்டார். கட்டு நெகிழ்ந்திருந்ததால் மாடு ஓடிவிட்டது. 2. நழுவுதல்; to slip off, as a garment. "எல்வளை நெகிழ்போ டும்மே" (ஐங்குறு.20). திருகாணி கழன்று காதிலிருந்து காதணி நெகிழ்ந்து கீழே, விழுந்துவிட்டது. "கோடீர்இலங்குவளை நெகிழ நாடொறும்" (குறுந்.11). 3. நிலைகுலைதல்; to be injured, ruined. "நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ" (கலித்.17). 4. பூ மலர்தல்; to expand, blossom. "காவியுங் குவளையு நெகிழ்ந்து" (சூளா.நாட்.5). 5. குழைதல் (சூடா.); to become soft and mashy, as overboiled rice; to lack cohesion, as earth wet by rain. 6. இளகுதல்; to melt. "சேவடி நோக்கி விரும்பியுண் ணெகிழ" (கூர்மபு. பிரமவிஷ்ணு.16). 7. மனமிரங்குதல் (வின்.); to relent, as the heart in pity. அவரின் கெஞ்சலில் நெகிழ்ந்து உதவி செய்ய வந்தார். எனக்கு யாருமில்லை என்று கூறும்போதே குரல் நெகிழ்ந்துவிட்டது. 8. மெலிதல்; to grow lean and weak. "மென்றோ ணெகிழ விடல்" (கலி.86). "வேய்மருள் பணைத்தோ ணெகிழச் சேய்நாட்டு" (அகநா.1:8). "நீர்வார் கண்ணொடு நெகிழ்தோ ளேனே" (அகநா.82:18). 9. வெட்டுதல் முதலியவற்றிற்கு ஏற்றதாதல் (வின்.); to give way, yield, as to the axe in cutting. 10. கண்ணீர் முதலியன பொசிதல் (வின்.); to exude, flow out, as tears from the eyes as milk from the breast. 11. பொடியாதல் (வின்.); to be reduced to powder.

நெகிழ்²–தல் negiḻ-, 2 செ.குன்றாவி. (v.t.) நீங்குதல் (வின்.); to forsake.

நெகிழ்³–த்தல் negiḻ-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. தளர்த்துதல்; to make loose, to relax. "செறிவளை நெகிழ்ந்தோன்" (ஐங்குறு.199). 2. மலர்த்துதல்; to cause to expand or open, as a blossom. 3. பிரித்தல்; to separate, detach. "மும்மலங்க ளென்னும் வல்லிய மாமனை கிழ்த்து" (மருதூரந்.91). 4. நசுக்குதல் (வின்.); to crush, bruise. 5. எய்தல்; to discharge as an arrow. "தொடை நெகிழ்த்தலில்" (கம்பரா. கும்பகர்ணன். 215).

நெகிழ்த்து–தல் negiḻttu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அவிழ்த்தல்; untie, unbind. 2. உருக்கல்; to melt. 3. நீக்கல்; to removal. 4. நசுக்கல்; crush, bruise. 5. பிரித்தல்; detach. 6. மலர்த்தல்; to cause to expand or open as a blossom. 7. ஆடை அணிந்திருப்பதில் அல்லது பிடிப்பில் உள்ள இறுக்கத்தை தளர்த்துதல்; lossen a knot, etc. இடுப்பு வார்ப்பட்டையை நெகிழ்த்திவிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

நெகிழு–தல் negiḻu-, 5 செ.கு.வி. (v.i.) நெகிழ்-தல் பார்க்க; see negiḻ-.

நெகு–தல் negu-, 6 செ.கு.வி. (v.i.) 1. கழலுதல்; to slip off. "எனவளை நெகவிருந்தேனை" (திவ்.பெரியதி.8.5:9). 2. மனமிரங்குதல்; to relent, as the heart. 3. காதலால் உருகுதல்; to melt. "என்பு நெகப் பிரிந்தோள்" (தொல். பொருள். 114)."நெகுமன்பில்லை" (திருவாச. திருச்சதக. 60). 4.

கரைதல்; to become soft, relaxed, loosened, soaked and ready to break. 5. பொடியாதல் (வின்.); to be ground well, macerated. 6. கெடுதல்; to be ruined, scattered, broken. "மாறு படமலைந் தாய்ப் படை நெக்கது" (சீவக.426). 7. வருந்துதல்; to suffer, to be distressed. "இனிச்செயல் யாவதென வுள நெக்கார்" (காஞ்சிப்பு. கயிலா.30).

கோத. நெக்; தெ. நெவ்வ

நெஞ்சடை–த்தல் neñjaḍai-, 4 செ.கு.வி. (v.i.) 1. மூச்சுத் திணறுதல்; to suffocate. 2. தொண்டை அடைத்தல்; obstruction of throat as bronchitis. அந்தச் செய்தியைக் கேட்டதும் அவனுக்கு நெஞ்சடைப்பது போலாயிற்று.

நெட்டு¹–தல் neṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தள்ளுதல் (உ.வ.); to thrust, push. கம்பால் ஒரு நெட்டு நெட்டு. 2. ஒன்றில் தாக்குதல் (வின்.); to strike, as a stone or ball. 3. மிக வுண்ணுதல் (வின்.); to eat or drink to excess, used in contempt. சாப்பாட்டை ஒரு நெட்டு நெட்டினான்.

தெ. நெட்டு

நெடி–த்தல் neḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. பொழுது நீட்டித்தல்; to make delay. "நெடியா தளிமின்" (சிலப்.16:21). 2. காலந்தாழ்த்தல்; to delay in time.

நெடு–த்தல் neḍu-, 4 செ.கு.வி. (v.i.) 1. காலம், பொழுது முதலியன நீளுதல்; tobelong,astime. 2. மழை முதலியன விடாது தொடர்தல்; to continue, as rain. மழை நெடுநேரம் பெய்தது. 3. நெட்டையாதல்; tobecome tall. நெடுக்க வளர்ந்து விட்டான்.

நெடுகு–தல் neḍugu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நீளுதல்; to extend, to belengthened, togrowtall, highorlong. "உம்பர் பொதிர்த்திட நெடுகு மூக்க மானும்" (தணிகைப்பு. நாட்.116). 2. காலத் தாழ்வாதல்; tobeprotracted, delayed. 3. காணாமற் போதல் (யாழ்ப்.); torunaway, todisappear, asthingslentor lost. 4. சாதல் (யாழ்ப்.); todie. 5. ஓங்கி வளர்தல்; growinhigh. 6. நீடித்தல்; lengthentime, distance, etc.

நெண்டு¹–தல் neṇḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. எதிர்க்களித்தல் (யாழ்ப்.); to rise upon the stomach, keck. 2. நொண்டுதல்; to limp. "நெண்டிக்கொண்டே" (தேவா. 743.8).

நெண்டு²–தல் neṇḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) தோண்டுதல் (நாமதீப.737); to dig.

நெம்பு–தல் nembu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கழி அல்லது கருவியை ஒரு பொருளின் அடியிற் செலுத்தி மேலே உயரும்படி கிளப்புதல்; to lift with a leaver. பாறையின் அடியிற் கம்பியைச் செலுத்தி ஒரே நெம்பில் கல்லைப் பெயர்த்து விட்டான். 2. உடைத்துத் திறத்தல்; to force open. தாழ்ப்பாளை ஒரு நெம்பில் உடைத்து விட்டான்.

நெய்¹–தல் ney-, 1 செ.குன்றாவி. (v.t.) 1. துணி, பாய் முதலியவற்றை உருவாக்குவதற்காகத் தறியில் நீளவாட்டில் நூலையோ, கோரையையோ செலுத்திக் குறுக்குவாட்டில் கோத்துப் பின்னுதல், நூலை ஆடையாகச் செய்தல்; to weave, as clothes. "நெய்யு நுண்ணூல்" (சீவக.3019). நெய்து கொண்டிருக்கும் பொழுது நெய்கிறதை விட்டு நினைத்துக் கொண்டானாம் கைக்கோளன் (பழ.) நெய்கிறவனுக்கு ஏன் குரங்குக் குட்டி? (பழ.). 2. தொடுத்தல்; to string, to link together. "நெய்தவை தூக்க" (பரிபா.19:80).

ம. நெய்க; தெ. நேயு; க. நேய், நேயி, நெய்யு; கோத. நெச் (nec); துட, நிச் (nic); குட. நெய் (ney); து. நெயுநி; கூ. நெப; குவி. நெநை (nen'nai); குரு. எஸ்நா (essnā); மா. எசெ (ese = to plait).

நெய்²–த்தல் ney-, 4 செ.கு.வி. (v.i.) 1. பளபளத்தல்; to be glossy, polished. "நீண்டு குழன்று நெய்த்திருண்டு" (கம்பரா. உருக்காட்டு.57). 2. ஒட்டும் நீர்ப்பொருளாக உருகும் கொழுப்பு வைத்தல், கொழுத்தல்; to be fleshy, fat, plump. "நெய்த்த மீன்" (வின்.). 3. ஒட்டும் பசைத்தன்மை யுடையதாயிருத்தல் (வின்.); to become greasy, unctuous or sticky. 4. ஒட்டுதல்; to stick, to affix.

நெரடு¹–தல் neraḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) நெருடு-தல் பார்க்க; see neruḍu-.

நெரடு²–தல் neraḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. கடினமாதல்; to be rough, hard. தரை நெரடுது. 2. தட்டுப்படுதல்; to be halting. அந்தப் பாட்டில் இரண்டிடங்கள் நெரடு கின்றன. நாவில் ஏதோ நெரடுது.

நெரி¹–தல் neri-, 2 செ.கு.வி. (v.i.) 1. நெருங்கியுரசி நொறுங்குதல்; to be crushed, broken, smashed, to crack. "தலை பத்து நெரியக் காலாற் றொட்டானை" (தேவா.17,7). 2. நிலை கெடுதல் (சூடா.); to be routed. 3. நெருங்குதல்; to be crowded together. "நெரிமுகைக் காந்தள்" (பரிபா.14:13). 4. வளைதல்; to arch, curve, bend. "புருவம் நெரிந்தேற" (திவ். பெரியாழ்.3.6:2). 5. நசுங்குதல்; to crack. "செழும் பரம்பு தோறும் படிந்து நெரிந்தவே" (அரிச்ச. நாட்டுச்.34).

ம. நெரியுக

நெரி²–த்தல் neri-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நொறுக்குதல்; to break to pieces. 2. நசுக்குதல்; to crush, press, squeeze. "கழை நெரித்து வீழ்த்த சாறு" (சேதுபு. திருநாட்.78). "வளைக்கரநெரித்து" (திருவிளை. விருத்த.34). பொதுக்கூட்ட நெரிசலில் சிக்கிக் காலை இழந்து விட்டான். 3. கையால் கூலம் (தவச) முதலியவற்றை நிமிண்டுதல் (வின்.); to rub or crush with the hand, as ears of grain. கம்பங் கதிரைக் கையால் நெரித்துத் தின்றான். "கம்பங் கதிரைக் கண்டாலும் கைநிக்காது அம்மான் மகளைக் கண்டாலும் வாய் நிக்காது" (பழ.). 4. துன்பம் முதலியவற்றால் மகளிர் கைவிரல்களை

அழுத்திச் சேர்த்தல்; to break the knuckles, as women in distress. "கையைக் கையினெரிக்கும்" (கம்பரா. நகர்நீங்கு.11). 5. கை விரல்களைச் சுடக்குதல்; to crack, as the fingers. கால் விரல்களைக் கொஞ்சம் நெரித்து விடு. 6. நிலை கெடச் செய்தல் (திவா.); to rout. 7. திறமையாய் நடத்துதல் (வின்.); to acquit oneself creditably. 8. நெருங்குதல்; to approach. "எரிப்பூம் பழன நெரித்து" (புறநா.249). 9. குவித்தல் (இ.வ.); to crowd together. 10. இறுக்கி அழுத்துதல்; strangle throtile. நான் தான் அவர் விரலை நெரித்து ஒடித்தேன்.

நெருக்கு[1]–தல் nerukku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. செறியச் செய்தல்; to put close, to set thick. நெருக்கி யம்முடி நின்றிசை வானவர் (தேவா.927,5). 2. சுருக்குதல்; to circumscribe, contract. 3. ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளுதல்; to press hard, exert pressure upon. மரமுமலையும்... சென்று நெருக்கலால் (கம்பரா. முதற்போர்.10) கூட்ட மில்லா விட்டாலும் நெருக்கித் தள்ளுகின்றனர். 4. நசுக்குதல் (தேவா.1117, 9); to squeeze, bruise, mash. 5. வருந்துதல் (பு.வெ.11, பெண்பாற்.8, உரை); to oppress, persecute, distress. 6. வருத்திக் கேட்டல்; to urge, importune, solicit earnestly, as a creditor. கடன் கொடுத்தவர்கள் நெருக்குகின்றனர். 7. அமுக்குதல்; to choke, smother, throttle. 8. கட்டாயப் படுத்துதல் (பலவந்தம் பண்ணுதல்); to compel, force, coerce. 9. தாக்குதல் (வின்.); to attack, assail, assault.

நெருக்கு[2]–தல் nerukku-, 5 செ.கு.வி. (v.i.) 1. விடாப் பிடியாயிருத்தல்; to be frequent persevere. 2. உரத்தல்; to rage, prevail, as famine; to be severe, as epidemics; to be abundant, as rain.

நெருக்கு[3]–தல் nerukku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. ஆலை, செக்கு முதலியவற்றிலிட்டு ஆட்டுதல்; to press, as in a mill, to crush. "நல்ல கரும்பு நெருக்கிச் சாறுதிரட்டி வட்டாகச் செய்த அக்காரமும்" (திவ். பெரியாழ்.2.9:7), வியா. பக்.468). 2. குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்யும்படி வலியுறுத்துதல்; வற்புறுத்துதல்; pressurize. வாங்கிய கடனைத் திருப்பித் தரும்படி நெருக்குகின்றனர். உடனே வேலையை முடிக்கச் சொல்லி நெருக்கினார்கள்.

நெருங்கு[1]–தல் neruṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அண்மையாதல்; to be near, approximate. பேருந்து நெருங்கிவந்துவிட்டது,மாட்டுவண்டியை ஒதுக்கி ஓட்டு. 2. செறிதல்; to be close together, to crowd. "நெருங்கு மடியார்களு நீயுநின்று" (திருவாச. 21:7). 3. நெருங்கிய வுறவாதல்; to be close, as relationship, connection. நெருங்கின சுற்றத்தான். 4. ஒடுக்கமாதல்; to be confined, narrow, as a road or doorway. 5. நசுங்குதல் (வின்.); to be pressed, compressed, squeezed. 6. தொடர்தல்; to be frequent. என்னிடம் நெருங்கி வருபவன். 7. முனைப் பாதல் (திவா.); to be vehement, to previl, as disease famine, wild beasts robbers. 8. நிகழ்ச்சி அல்லது ஒன்றைச் செய்வதற்குரிய நேரம் விரைந்து வருதல், விரைவாதல்; to be urgent. கடமை (காரியம்) நெருங்குகிறது.விளக்கணி விழா (தீபாவளி) நெருங்கி விட்டது. 9. மீதூர்தல் (திவா.); to increase; to grow excessive; to be overwhelming.

நெருங்கு[2]–தல் neruṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கிட்டுதல், அணுகுதல்; to approach; to go near. "பொய்கைகளை நெருங்க" (புறநா.249, உரை). 2. இடித்துக் கூறுதல்; to rebuke. "கிழவனை நெருங்கி யிழைத்து" (தொல். பொருள். 150). 3. சினத்தல்; to be angry with. "மகப்பழித்து நெருங்கலும்" (தொல். பொருள்.147). 4. உறவில், கொள்கையில் வேற்றுமை குறைந்து ஒற்றுமைப்படுதல்; come closer in understanding etc. எதிரும் புதிருமாக இருந்த நண்பர்கள் நெருங்கி வருகின்றனர். எதிரும் புதிருமாக இருந்த கட்சிகள் தேர்தல் நேரத்தில் உறவுகொள்ள நெருங்கி வருகின்றன.

நெருடு–தல் neruḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. நிமிண்டுதல்; to roll in the hand; to rub gently with the fingers. "ஒருகை யாலொரு முலைமுக நெருடா" (திவ். பெருமாள்.7:7). முள்ளை நெருடிக் கொண்டே இருக்காதே குத்தி விடும். 2. நிமிண்டி இழை பொருத்துதல்; to roll two broken ends of yarn between the fingers and join them. "இழைநக்கி நூனெருடு மேழை அறிவேனோ" (தமிழ்நா.19). 3. திரித்தல்; to twist. "அருமைப் பழைய மொழியைத் திருடி நெருடிக் கவிபாடி" (திருப்பு. 265). நூலைக் கொஞ்சம் நெருடிக் கொடு. 4. கை, கால் ஆகியவற்றால் தடவுதல் (வின்.); to feel with the hand. மாட்டின் முதுகை நெருடிக் கொண்டிராதே. 5. ஏய்த்தல் (வஞ்சித்தல்) (யாழ்ப்.); to deceive, cheat. 6. ஒன்றின் மீது சிறிய பொருள் அல்லது சமபரப்பு அழுத்தி உராசுதல்; have an uneasy sensation. காலில் முள் நெருடுகிறது. உள்ளங்கையில் ஏதோ நெருடுகிறது; பிடுங்க வேண்டும். 7. ஒத்துக் கொள்ளாத தயக்கம் ஏற்படும் வகையில் சிறிது வேறுபடுதல்; feel uneasy because something is uneven. கட்டுரையின் நான்காம் பத்தி கொஞ்சம் நெருடுகிறது.

நெலி–தல் neli-, 2 செ.கு.வி. (v.i.) கடைதல்; to churn.

மறுவ. ஞெலிதல்.

நெளி[1]–தல் neḷi-, 2 செ.கு.வி. (v.i.) 1. புழு, பாம்பு முதலியவை வளைந்து நகர்தல்; to crawl. நெளிந்து நெளிந்து பாம்பு சென்றது. கத்திரிக்காயில் புழு நெளிந்தது. 2. சுருளுதல்; to bend, roll in. "நெளிதிரைக் கடலுலகெலாம்" (சீகாளத்.பு.நக்கீ.43). அவனுக்கு நெளி மயிர். 3. குழிதல்; to be hollow. "நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத் தட்டோர்" (புறநா.18). 4. வெட்கத்தால் நேராக நிற்காமல் உடல் வளைதல்; to wriggle, writhe. "சேட னெளிதரப் பெயர்வர்" (கந்தபு. கயமுகனுற். 46). உடலை நெளித்து நெளித்து நடக்கின்றான்.

விடை சொல்லத் தெரியாமல் நெளிகிறான். அவன் பொறுமை யிழந்து நெளிகிறான். 5. வருந்துதல்; to suffer. "பொய்யாச் செந்நா நெளிய வேத்திப் பாடுப" (புறநா. 168). 6. குலைதல்; to be put into confusion, to be routed. "அனைய படைநெறிய" (கம்பரா. மூலபல.159). 7. அதுங்குதல்; to be dented, bent out of shape, as vessels. 8. மிகுதியாதல்; to swarm, abound, as children. அவனுக்குக் குழந்தைகள் மிகுதியாக நெளிந்து கொண்டிருக்கின்றன. 9. ஏனம் முதலியவை அடிபட்டுப் பள்ளமாதல்; get dented, buckle. குடம் கீழே விழுந்து நெளிந்து விட்டது. 10. புரளுதல்; to roll over, to tumble over. "நெளிய ராக்குருளை" (திருவிளை. இந்திரன் பழிதீ. 73).

நெளி[2]–த்தல் neḷi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. வளைத்தல்; to cause to bend, to be inclined, to be crumpled; to twist. உடம்பை எத்தனை நெளி நெளிக்கிறான். 2. கோணுதல்; to wriggle or distort the body in walking, commonly in affectation. சாலை நெளிந்து செல்லுகிறது. உடலை நெளித்து நெளித்து ஆடிய பாம்பு நடனம் அருமை. 3. அசைத்தல்; to shake. "தண்டொன்று..... நெளிப்பது" (கம்பரா. பிரமாத்.113). 4. வேலையைக் குழப்புதல்; to shirk work. 5. ஏனம் முதலியவற்றில் நெளிவு ஏற்படுத்துதல்; cause a dent. குடத்தின் வாய்ப் பகுதியைத் தட்டி நெளித்து விட்டாள்.

நெளி[3]–த்தல் neḷi-, 4 செ.குன்றாவி. (v.t.) செருக்குறுதல் (வின்.); to make affected gestures in pride or contempt, to be insolent.

நெளிர்–தல் neḷir-, 2 செ.கு.வி. (v.i.) ஓசையிடுதல் (பிங்.); to make noise.

நெற்று[1]–தல் neṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மோதுதல்; to thrust, dash. என்னைச் சுவரில் நெற்றினான். 2. இலக்கில் தட்டுதல் (வின்.); to strike a mark, as with balls. 3. இடறுதல்; to stumble.

தெ. நெட்டு; கோண். நத்தாநா; குட. நேட்ட. (nēṭṭ).

நெற்று[2]–தல் neṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) பெறுதல் (பாண்டி.); to attain as an end.

நெற்று[3]–தல் neṟṟu-, 5 செ.கு.வி. (v.i.) முதிர்தல்; to mature, ripen.

நெறி[1]–தல் neṟi-, 2 செ.கு.வி. (v.i.) மயிர் குழற்சியாதல்; to be wavy, curly, as the hair of a person. "நெறிந்தகருங் குழல்மடவாய்" (திவ். பெரியாழ். 3.10:1).

நெறி[2]–த்தல் neṟi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. புறவித ழொடித்தல்; to strip a flower of its calyx. "மலர் வாங்கி நெறித்து" (கலித்.76). 2. சினத்தால் நெற்றியைச் சுருக்கிப் புருவத்தை வளைத்தல்; to contract, as the brow in anger. "நெறித்த நெற்றியர்" (கம்பரா. கரன்வதை.43). புருவத்தை நெறித்து என்னைப் பார்த்தான். 3. நிமிர்த்துதல்; to prick up, as the ears. காதை நெறித்தான். 4. கையாற் பிடித்து விடுதல் (கலித்.32); to press firmly with the hand. 5. இரண்டு கைவிரல்களையும் கோத்துச் சொடுக்கு ஓசை கேட்க வைத்தல்; to crack the fingers. "நீ நாசமாய்ப்போ" என்று கைவிரல்களை நெறித்து வசவு (சாபம்) சொன்னான்.

து. நெசிபுநி

நெறி[3]–த்தல் neṟi-, 4 செ.கு.வி. (v.i.) 1. முறுக்காயிருத்தல் (இ.வ.); to be stiff. 2. மயிர்சுருளல், மயிர் குழலுதல்; to curl in ringlets, as hair. "நெறித்திட்ட மென்கூழை" (திவ். பெரியதி.10.6:8). "நெறிசுரிபூங்குழல்" (யா.கா.செய்.3). 3. நெளித்தல்; to cause to bend.

நெறி[4]–த்தல் neṟi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. நோக்குதல் (நீலகேசி, 53, உரை); to look.

நெறிப்படு–தல் neṟi-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. ஒழுங்கு படுதல்; to be put in order; to be kept within bounds. "நெறிப்படச் சுவலசைஇ" (கலித்.9). "மற்றவர் குறிப்பிற் கண்டிசின் யானே நெறிப்பட வேலும் இலங்கிலை துடைப்ப" (நற்.177). "நெறிபடு கூழைக் கார்முதிர்பு இருந்த வெறி கமழ் கொண்ட நாற்றமுஞ் சிறிய" (நற்.368). "கைவள் ளோரி கானந் தீண்டி எறிவளி கமழும் நெறிபடு கூந்தல்" (குறுந்.199:4). "நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு வளை தலைமாத்த தாழ்கரும் பாசவர்" (பதிற்.67:15). நெறிப்பட பொருள்களை வைக்க வேண்டும். 2. நல்லொழுக் கத்தில் நிலைபெறுதல்; to be established in a good moral or religious course. 3. ஒன்றன் வழிப்படுதல்; to follow one's lead. யாற்றுப் பெருக்கின் நெறிப்பட்ட புணை. 4. உள்ளடங்குதல்; to come under one's power or control.

நெறிப்படுத்து–தல் neṟi-p-paḍuttu-, 5 செ.கு.வி. (v.i.) வழிமுறைக்கு உட்படுத்துதல்; operate in a particular way.

நெறிபடு–தல் neṟi-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) நெருங்குதல்; to be close together. "எறிவளி கமழு நெறிபடு கூந்தல்" (குறுந்.199). "நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு" (பதிற்றுப்.67:15). "நெறிபடு கூழைக் கார்முதிர்பு இருந்த" (நற்.368).

ne

நேசி–த்தல் nēši-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அன்புவைத்தல், விரும்புதல்; to love. "நேசிக்குஞ் சிந்தை" (தாயு. உடல்பொய்.32). "நேசித்தரு நூன் முறை" (சேதுபு. சங்கர.84) அனைத்து உயிர்களையும் நேசிக்க வேண்டும். அம்பிகாபதி அமராவதியை உயிருக் குயிராய் நேசித்தான். 2. காதலித்தல்; to love of the opposite sex. 3. ஆர்வங்கொள்ளுதல்; to affect. "நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்" (தாயு. பரிபூர).

நேடு–தல் nēḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தேடுதல்; to seek, look out for. "கொண்டவனிருப்ப மற்றோர்.....

வேலினானை நெடிய நெடுங்கணாளும்" (சீவக. 252). "நெறிமணனேடினர் செல்லச் சொல் லேற்று" (பரிபா. 20:43). "சினகரமொருவிப் போகுவான் வழி கணேடினேன்" (பிரமோத்.4:11). 2. பொருளீட்டுதல் (நாஞ்.); to earn. 3. விரும்புதல் (யாழ்.அக.); to desire, wish. 4. எண்ணுதல்; to consider, think, lay to heart. "சூரபன் மனிளவறன் முடிவுநேடி" (கந்தபு. அசுரேந். 65). 5. இலக்காகக் கொள்ளுதல் (வின்.); to aim at, pursue.

ம. நேடுக; க. நிட்டிசு; குட. நேட்.

நேம்பு–தல் nēmbu-, 5 செ.குன்றாவி. (v.t.) கொழித்தல் (வின்.); to winnow.

தெ. நேமு; ம. நேம்புக; கோண். ஏமாநா; கூய். ஏம்ப; குரு. நாபநா.

நேர்[1]–தல் nēr-, 2 செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்; to be fit or appropriate. "நேரத் தோன்று மெழுத்தின் சாரியை" (தொல். எழுத்து. 134). 2. நிரம்புதல்; to be complete. "நேரத் தோன்றும் பலரறி சொல்லே" (தொல். சொல். 7). 3. இவ்வாறு செய்யவேண்டும் என்ற நோக்கமில்லாமல் நிகழ்தல்; to happen, occur, transpire. இது காலத்தால் நேர்ந்தது. கோவில் திருவிழாவில் கலவரம் ஏற்படாமல் இருக்க வலுத்த காவல் போடப்பட்டுள்ளது. அழைப்பிதழ் அச்சிடுவதில் ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டது. 4. எதிர்ப்படுதல்; to appear, come to view. "பொழிலோவொன்று நேர்ந்ததுவே" (வெங்கைக்கோ. 321). 5. இளைத்துப் போதல்; to grow thin, lean; to be emaciated. உடம்பு நேர்ந்துபோய் விட்டது. 6. மென்மையாதல்; to be soft; to yield to the touch. "ஐந்து நேர்ந்தே" (காசிக. சிவ. அக். 18).

குட. நேர் (to come to view).

நேர்[2]–தல் nēr-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்தல்; to meet. "வேந்தன்றனை நேர்ந்து காண்பானா" (இரகு. தசரதன். 21). 2. நெருங்குதல்; to approach, come near to. "வெங்கரி..... வீரவாகுத் தலைவனை நேர்ந்து சொல்லும்" (கந்தபு. தருமகோப. 71). 3. தீண்டுதல்; to seize, take hold of. "குழலித்திங்கட் கோணேர்ந்தாங்கு" (பெரும்பாண். 384). 4. பெறுதல்; to obtain. "நிலையிலா நீர்மை யாக்க நேர்ந்துழி" (சேதுபு. திருநாட். 21). 5. கொடுத்தல்; to grant, bestow. "கரவாளை நேர்ந்தானிடம் போலும்" (தேவா. 111, 8). 6. உடன்படுதல்; to agree, consent. "அழும்பில் வேளுரைப்ப நிறையருந்தானை வேந்தனு நேர்ந்து" (சிலப். 25:178). "நெருப்பிலா விடத்துப் புகையிலை யெனனேர" (மணிமே. 29:102), "மகிழ்வுனாங்கவை நேரா" (கூர்ம. அரியய.8). 7. ஒத்தல்; to resemble, equal. "கைவலிளையர் நேர்கை நிரப்ப" (பதிற்றுப். 48:8). "நெல்லினேரே வெண்கலுப்பென" (அகநா.140:7). "கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற் கலக்குண்டு" (திருவாச. 5:27). 8. உறுதிசெய்தல்; to resolve, vow, take vow. "நற்றார்கலவே மென நேர்ந்தும்" (பு.வெ.12, பெண்பாற்.7). 9. அமர்த்துதல் (நியமித்தல்); to appoint, designate, appropriate, assign. 10. தண்டனைக்கு உட்படுத்துதல் (வின்.); to consign, doom. 11. வேண்டுதல் (அக.நி.); to entreat, pray. 12. சொல்லுதல் (அகநி.); to say; to speak. "சீர்ச்சடகோபன் நேர்தலாயிரத்து" (திவ். திருவாய்.1.8:11).13. கடவுளிடம் வேண்டுதலுக்காக வைத்தல்; பொருத்தனை பண்ணுதல்; to appropriate, as an offering to God; to consecrate, dedicate. "தடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன்" (திவ். நாய்ச். 9:6). "செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளை" (கலித். 101:27). பழனிக்குக் காவடி எடுக்க நேர்ந்து கொண்டான் (உ.வ.). 14. எதிர்த்தல்; to oppose, resist, encounter, attack. "அமர்கோள் நேரிகந்து ஆர்எயில் கடக்கும் பெரும்பல் யானைக்குட்டுவன்"(பதிற்றுப். 29:13, 14). "தானையை நேர்ந்து கொன்று" (கம்பரா. மூலபல. 57).15. அறுத்தல்; to cut off, sever. "ஓராதான் பொன்முடி யொன்பதோ டொன்றையும் நேரா" (திவ். பெரியாழ். 3.9:10).

க. நேர்; ம. நேருக; கோத. நெர் (opposite). நேர் (to come to view); து. நெரியுநி, நெரெவுநி (to assemble); தெ. நேர்சு (to learn).

நேர்[3]–த்தல் nēr-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒத்தல்; to resemble, equal. "திண்ணறி வாளரை நேர்ப்பார் யார்" (நாலடி.27). "கைவலிளையர் நேர்கை நிரப்ப" (பதிற்றுப்.48:8). "நிறைமதி வாண்முகத்து நேர்கயற் கண் செய்த" (சிலப்.7:8). "பொன்னே ரனையாய் புகுந்தது கேளாய்" (மணிமே. 2:16). 2. எதிர்த்தல்; to oppose, attack. "நேர்த் தின்னா மற்றவர் செய்தக்கால்" (நாலடி.67).

நேர்படு[1]–தல் nēr-paḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) 1. சந்தித்தல் (வின்.); to meet; to be in conjunction with, as planets. 2. நன்கு கற்றல், பயிலுதல்; to learn well. "இவை பத்தும் நேர்பட்டார்" (திவ். திருவாய். 8.9:11). 3. உடன்படல்; to agree, assent. 4. கிடைத்தல்; to be obtained. "இல்லார்க்குக் கிழியீடு நேர்பட்டாலென" (திருவிளை. விருத்த.14).

நேர்படு[2]–தல் nēr-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. நிகழ்தல் (சம்பவித்தல்); to occur. 2. ஏற்புடையதாதல்; to be appropriate, worthy. 3. வாய்த்தல்; to fall in one's way. "கீழ்ச்செய்தவத்தாற் கிழியீடு நேர்பட்டு" (திருவாச. 40.9.). 4. காணப்படுதல்; to appear. "நேர்பட்ட நிரை மூவுலகுக்கும்" (திவ்.திருவாய்.8.9:11). 5. எதிர்ப்படுதல்; to come in front, meet. "வஞ்சி நேர்பட்ட காலையில்" (தனிப்பா.1,146:46). 6. நட்பாதல் (வின்.); to be in harmony or on good terms. 7. ஒழுங்குபடுதல்; to be in order. "ஒன்றொ டொன்று நேர்படாம லோடு நாய்கள்" (பெரியபு. கண்ணப்.69).

நேர்வா–தல் (நேர்வருதல்) nēr-vā-, 18 செ.குன்றாவி. (v.t.) &

15 செ.குன்றாவி. (v.t.) *1.ஒத்துவருதல்;* to resemble. "*கலிநீர் தில்லைவானவ னேர்வருமே*" *(திருக்கோ.85).*

நேரிடு–தல் nēr-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பொருந்துதல்;* to be fit or appropriate. *2. எதிர்ப்படுதல்;* to appear, come to view. "*நீண்ட மதகரிமுன் னேரிட்டு*" *(கொண்டல்விடு.374). 3. கைகூடுதல் (வின்.);* to succeed, prove successful, come to hand.

நேரொ–த்தல் nēr-o-, *4 செ.கு.வி.* (v.i.) *1. இணையா யிருத்தல்;* to be a match, to be similar. *2. மாறுபாடின்றியிருத்தல்;* to be unchanging. "*நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி*" *(நாலடி.202). 3. மிகப்பொருந்தியிருத்தல்;* to be exactly suited, as a wife to her husband. "*அவனுக்கு நேரொவ்வாதிருக்கிறனோ ஒத்திருக்கிறேனோ*" *(குருபரம்.31, ஆறா.).*

ie

நை[1]–தல் nai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. நசுங்குதல்;* to be crushed, bruised. *2. தளர்தல்;* to droop, languish, faint. "*இடைநைவது கண்டு*" *(திருக்கோ.134). 3. வாடுதல் (வின்.);* to fade. *4. மனம் வருந்துதல்;* to be wounded in one's feelings; to be distressed. "*நைந்து சாமவர்க்கே*" *(திருநூற்.43). 5. இரங்குதல்;* to feel pity. "*நீ நல்காமையி னைவரச் சாஅய்*" *(புறநா.146). 6. சுருங்குதல்;* to a dwindle, decrease. "*நையாத வாயுளுஞ் செல்வமும்*" *(அருட்பா.5 பொது.2). நண்பன் குடும்பம் வறுமையில் மிகவும் நைந்துவிட்டது. 7. தனக்கே உரிய மாத்திரை அளவில் குறைதல்;* to be shortened in quantity, as a vowel. "*வன்மைமே லுகர முறுவது நையும்*" *(வீரசோ. சந்தி.2). 8. நிலைகெடுதல்;* to be injured, spoiled, over-ripe, as fruits; to be frayed, worn out, as cloth. *மாம்பழம் பழுத்து நைந்து போச்சு. 9. கெடுதல் (வின்.);* to waste away, perish. *10. இற்றுப்போய் நூல்நூலாகப் பிரிதல்;* to frayed; became threadbare. *அவர் உடல் நைந்த பழைய துணிபோல் கிடந்தது. 11. துன்பம்;* sadness. *12. தன்வயப்படாமை (அவசமாதல்);* to forget oneself; to lose command of oneself. "*அரிவை நைய*" *(சீவக.492).*

நை[2]–த்தல் nai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நசுக்குதல்;* to crush. *2. அழித்தல்;* to destroy. "*வேலே குறும்படைத்த வரண்கடந்தவர் நறுங்கள்ளி னாடுநைத்தலின்*" *(புறநா.97). 3. எரித்தல்;* to burn. "*ஒள்ளெரி நைப்ப வுடம்பு மாய்ந்தது*" *(புறநா.240).*

நைவா–தல் (நைவருதல்) nai-vā-, *18 செ.கு.வி.* (v.i.) *1. வருந்துதல்;* to be distressed. "*நைவாரா வாயமக டோள்*" *(கலித்.103:66). 2. இரங்குதல்;* to pity; to be merciful. "*நல்காமையினைவரச் சாஅய்*" *(புறநா.146).*

நொ–தல் no-, *17 செ.கு.வி.* (v.i.) & *16 செ.குன்றாவி.* (v.t.) *துன்புறுதல்;* to suffer. "*நொக்கொற்றா*" *(தொல். எழுத்து.72, உரை).* "*நொப்போவெள வுரிஞ்*" *(நன்.137).*

நொக்கு–தல் nokku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உண்ணுவதால் குறையச் செய்தல்;* to reduce by eating, as the quantity of grain. "*பன்றி தினைப் புனத்தை நொக்குகையினாலே*" *(மலைபடு. 103, உரை). 2. அடித்தல்;* to beat. "*சுக்குமாந்தடி கொண்டு நொக்கி விடுவான்*" *(நந்த. கீர்த்.). 3. மிகுதியாகத் திட்டுதல் (இ.வ.);* to abuse violently.

நொங்கு[1]–தல் noṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *விழுங்குதல்;* to swallow. "*திங்களிரு நொங்க*" *(தேவா. 1157, 3).*

ம. நொங்ஙு

நொங்கு[2]–தல் noṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *மெலிதல்;* to become weak and emaciated. "*அங்கமு நொங்குதே*" *(கணம் கிருஷ்ணையர்.1:2).*

நொசி[1]–தல் noši-, *2 செ.கு.வி.* (v.i.) *1. நுண்மையாதல்;* to be thin, slender, minute, as unable to bear a weight. "*நொசி மருங்குல்*" *(தொல். சொல். 368, இளம்பூ.). 2. செயற்கு அருமையாதல்;* to be difficult of observance, as a vow. "*நோற்றுணல் வாழ்க்கை நொசிதவத்தீர்*" *(சிலப். 16:223). 3. வருந்துதல் (சங்.அக.);* to be in pain; to suffer. *4. வளைதல்;* to bend; to be slanting. "*நொசிந்த நோக்கினன்*" *(சீவக.2010).*

நொசி[2]–தல் noši-, *2 செ.கு.வி.* (v.i.) *1. நைதல்;* to be frayed, worn out, as cloth. "*நொசிந்த துகில்*" *(தொல். சொல்.330, உரை.). 2. குறைவுறுதல்;* to be insufficient, deficient. "*நொசிவிலாத பூசனை*" *(விநாயகபு.36:37).*

நொசி[3]–த்தல் noši-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வருந்துதல்;* to distress, afflict. "*நொசித்த வெம்முலை*" *(சீவக.654).*

நொட்டு–தல் noṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஏமாற்றுதல்;* to cheat. *2. புணர்தல்;* to cohabit with.

நொடி[1]–த்தல் noḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உறுப்பை ஆட்டுதல், சைகைக் காட்டுதல்;* to gesticulate, use action, in speaking. *இறால் நொடிக்கிறது போல நொடிக்கிறான் (வின்.). 2. பால் முதலியன சுரத்தல்;* to collect, as milk in the udder of a cow. *பால் இன்னும் நொடிக்கவில்லை (யாழ்ப்.). 3. வணிகத்தில் இழப்படைதல் (நட்டமடைதல்);* to break down completely, as a concern. *வணிகம் நொடித்துப் போயிற்று.4.சக்கரம் முதலியன கட்டுக் குலைதல்;* to break, snap, as a wheel. *விழிப்பாயிரு! சக்கரம் நொடிக்கும் (வின்.). 5. நடக்கும் போது கால் சிறிது வளைதல்;* to bend slightly, as the legs in walking. *கால் நொடித்துக் கொண்டது. 6. ஒடித்தல்;* to break. *குச்சியை நொடிக்கிற மாதிரி விரலை நொடித்து விடுவேன். 7. சாய்த்தல்;* to tilt. *வலக்கைப் பக்கம் கொஞ்சம் நொடி. 8. ஒப்புதல் இல்லை என்பதைத் தெரிவிக்க தலையை ஒரு பக்கமாகத் திருப்பித் தோள்பட்டையில் இடித்தல்;* to turn one's head and hit the chin on the shoulder as a

gesture of disapproval. கேட்டதற்குப் பதில் சொல்லாமல் கழுத்தை நொடித்து விட்டுப் போய்விட்டான். 9. செல்வநிலை தாழ்ந்து வறுமையடைதல்; to impoverish. 10. பொடியாகுதல்; to broken to pieces. 11. நிலை கெடுதல்; to destroy, to ravish.

ம. நொடிக்க; க., து. நுடி; தெ. நொடி.

நொடி²–த்தல் noḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சொல்லுதல் (திவா.); to say, tell, speak, declare. சும்மா நொடிக்காதே! கொஞ்சம் வாயை மூடு. 2. சைகையால் அழைத்தல்; to call by signs. "நெஞ்சைத் தன்பக்கலிலே நொடித்துக் கொண்டு" (ஈடு.5.3:7). 3. மனத்தாங்கல் உண்டாம்படிக் கோள் சொல்லுதல் (வின்.); to insinuate so as to stir up ill-will. 4. பழித்தல்; to make unfavourable allusions; to use sarcasm. "தாயுந்தமரு நொடிக்கின்றார்" (அருட்பா.3, ஆற்றாக்காத.11). 5. கட்டை விரலையும் நடு விரலையும் சேர்த்துச் சொடக்குதல்; to snap, as with the thumb and the middle finger. "நொடிப்பதோ ரளவில்" (திவ். திருமாலை,43). 6. அழித்தல் (பிங்.); to destroy, annihilate, reduce to primitive elements or atoms. "நோக்காது நோக்கி நொடித்தன்றே" (சி.போ.1:4).

ம. நொடிக்க; க., து. நுடி; தெ. நொடி.

நொடி³–தல் noḍi-, 2 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, tell, speak, declare. "சென்றது நொடியவும் விடாஅன்" (மலைபடு.545).

ம. நொடிக்க; க., து. நுடி; தெ. நொடி.

நொடி⁴–தல் noḍi-, 2 செ.கு.வி. (v.i.) 1. ஓடிதல் (நெல்லை.); to break. பந்தல் கால் நொடிந்து கீழே விழுந்து விட்டது. 2. மனம்தளர்தல்; to be broken. அப்பாவை இழந்தபின் அவன் மிகவும் நொடிந்து விட்டான். 3. பொடி யாகுதல்; to broken to pieces.

நொடு–த்தல் noḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. விலை சொல்லி விற்றல்; to sell. "மீனொடுத்து நெற்குவை இ" (புறநா.343). "பசுமீன் நொடுத்த வெண்ணெல் மாத்தயிர் மிதி" (அகநா.340:15). 2. சொல்லுதல்; to tell.

நொண்டு–தல் noṇḍu-, 5 செ.கு.வி. (v.i.) முகத்தல்; drawing water. "குடங்கை யினொண்டு கொள்ளவுங் கூடும்" (சிலப்.10:85). "இரும்பிணர்த் தடக்கை நீட்டி நீர்நொண்டு" (நற்.186:2).

நொதி–த்தல் nodi-, 4 செ.கு.வி. (v.i.) 1. புளித்த மாவு முதலியன பொங்குதல் (வின்.); to ferment, effervesce, turn sour, as liquid-food; to bubble up slowly, as water over a gentle fire. 2. சீழ் பிடித்தல் (வின்.); to fester, suppurate. 3. ஈரமாதல் (இ.வ.); to be damp. 4. நீர் முதலியவற்றில் ஊறிப் போதல் (வின்.); to be soaked; to be macerated. 5. நுரைத்தல் (வின்.); to foam, froth, spume, sparkle as spirituous liquors.

நொது–த்தல் nodu-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அழிதல் (திவா.); to put out, quench, extinguish. 2. தளர்தல்; to relax, to be soft. "நொதிப்பில் வன்சிறை புகுத்துமின்" (தணிகைப்பு. வீராட்.44).

நொந்து¹–தல் nondu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அழிதல்; to perish. "நூறு கோடி பிரமர் கணொந்தினார்" (தேவா.1218, 3). 2. பதனழிதல்; to become spoilt. 3. வருந்துதல்; to suffer; to afflict. 4. வறுமை; penury.

க. நொந்து.

நொந்து²–தல் nondu-, 5 செ.குன்றாவி. (v.t.) தூண்டுதல்; to trim. "நொந்தாத செந்தீ" (பதினோ. காரை. திருவிரட். 13).

நொந்துபோ–தல் nondu-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. நிலை கெடுதல் (வின்.); to be impoverished to be reduced in circumstances. 2. பதனழிதல்; to become spoild. "காற்றில்லாமல் நொந்துபோன பழ வகைகளை" (மதி. கள.2, 49).

நொப்பு–தல் noppu-, 5 செ.குன்றாவி. (v.t.) தடுத்தல் (M.M.); to hinder.

நொம்பு–தல் nombu-, 5 செ.குன்றாவி. (v.t.) நோம்பு - பார்க்க; see nōmbu-.

நொருக்கு–தல் norukku-, 5 செ.குன்றாவி. (v.t.) நொறுக்கு - பார்க்க; see noṟukku-.

நொருங்கு–தல் noruṅgu-, 5 செ.கு.வி. (v.i.) நொறுங்கு-தல் பார்க்க; see noṟuṅgu-.

நொவ்வு–தல் novvu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மெலிதல்; to become thin, slender, emaciated. "நொவ்விடை மடந்தை" (கம்பரா. காட்சி. 54). 2. நோதல் (யாழ்ப்.); to ache, pain. 3. துன்புறுதல்; to afflict, to pester. 4. வருந்துதல்; to suffer.

நொள்¹(ளு)–தல் noḷ-, 10 செ.குன்றாவி. (v.t.) மொள்ளுதல், முகத்தல்; to bale out, as water, to measure out, as grain. "குடங்கையில் நொண்டு கொள்ளவுங் கூடும்" (சிலப்.10:85).

தெ. நொல்லு (to level, collect); பர். ஒல்க் (olc); கூய். நெல்ப; குரு. நொல்ல்நா (nollnā); மா. லொலெ.

நொள்²(ளு)–தல் noḷ-, 10 செ.குன்றாவி. (v.t.) விழுங்குதல் (திவா.); to swallow, devour.

ம. நுண; க. நொண; தெ. நொல்லு; குரு. நுல்க்நா.

நொள்கு¹–தல் noḷku-, 5 செ.குன்றாவி. (v.t.) நொள்¹ (யாழ். அக.) பார்க்க; see noḷ-1.

நொள்கு²–தல் noḷku-, 5 செ.கு.வி. (v.i.) 1. சுருங்குதல்; to contract, as thread. "நூல் நொள்கிற்று" (நன்.454, மயிலை). 2. இளைத்தல் (யாழ்.அக.); to languish, become tired.

நொறுக்கு–தல் noṟukku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சிறு

சிறுபகுதிகள் ஆகுமாறு உடைத்தல்; பொடியாக்குதல்; to break, crack, crush, smash to pieces. செங்கல்லை நொறுக்கிக் கொடு. 2. அரத்தக்காயம் பண்ணுதல்; to bruise. 3. நையப்புடைத்தல்; to beat soundly. "வீரரை நொறுக்கி" (திருப்பு.574). சண்டையில் எதிரியை நொறுக்கிவிட்டான். 4. மிகுதியாய் உண்ணுதல்; to eat in large quantities. பந்தியில் ஒரு நொறுக்கு நொறுக்கிவிட்டான் (உ.வ.).

க. நுர்கு (g).

நொறுங்கு–தல் noṟuṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. உடைந்து சிறுசிறு பகுதியாதல்; பொடியாதல்; to be broken, crushed, smashed to pieces. கற்கள் பட்டதினால் கண்ணாடிகள் நொறுங்கின. நொறுங்கத் தின்றார்க்கு நூறு வயது (பழ.). மனம் நொறுங்குண்டது. மனம் நொறுங்குதல் போல் வருந்துதல். (உ.வ.). 2. பின்னிரங்குதல்; to be broken down in spirit, to become contrite. நொறுங்குண்ட மனம் (வின்.).

நோ[1]–தல் nō-, 17 செ.கு.வி. (v.i.) 1. நோவுண்டாதல்; to feel pain ache, suffer, smart. கால் நொந்தது. 2. வருந்துதல்; to be grieved, distressed in mind; to feal. "ஊரன்மீ தீப்பறக்க நொந்தேனும் யானே" (நாலடி.389). "நோதல் எவன்மற்று நொந்தார் என்று அஃது அறியும் காதலர் இல்லா வழி" (குறள்.1308). 3. துன்பத்தைச் சொல்லுதல்; to complain. "நோவற்க நொந்த தறியார்க்கு" (குறள்.877). 4. சமைத்த வுண்டி பதனழிதல்; to be injured, bruished, as a plant, fruit; to be spoiled, as boiled rice. "நொந்தன்னம்" (பதார்த்த1459). சோறு நொந்துபோய்விட்டது.(உ.வ.). 5. வறுமைப்படுதல்; to be impoverished; to grow poor. நொந்த குடி. 6. துன்பப்படுதல்; to suffer. 7. மெலிதல்; to lean. 8. நொய்ய தாகுதல்; to light. 9. தளர்தல்; to loose.

ம. நோ(க); க. நோ; தெ. நொச்சு, நொகுலு; கோத. நொவு; துட. நு; து. நோபுனி; கொலா. ஒய் (wound); நா(ச). ஒய் (to be painfuful); பர். நொவ்; கட. நொய் (to be painful); கோண். நொய்யாநா; கூ. நோவ; குவி. நோகி; குரு. நுஞ்ச்நா; மா. நுந்சே.

நோ[2]–தல் nō-, 15 செ.குன்றாவி. (v.t.) வெறுத்தல்; to hate. "ஏதிலரை நோவதெவன்" (நீதிநெறி.25).

நோக்கு[1]–தல் nōkku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கூர்ந்து பார்த்தல்; to see, look at, behold, view. "நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல்" (குறள்.1082). "நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா" (தொல். சொல். வேற்று.11). எத்திசையில் நோக்கினும் பச்சைப் பசேலென்ற வயலைக் காணமுடிகிறது. அவள் தலை நிமிர்ந்து என்னை நோக்கினாள். "யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்" (குறள்.1094). 2. சிறப்பாய்க் கருதுதல்; to consider, reflect. "அறனோக்கி யாற்றுங்கொல் வையம்" (குறள்.189). "ஒன்று நோக்கலருன் வலியோங்கறனின்று நோக்கி நிறுத்து நினைப்பினர்" (கம்பரா. கரன்.5). 3. கவனித்தல்; to regard, pay attention to. "நச்சாமை நோக்காமை நன்று" (ஏலாதி.12). கட்டுரை ஆசிரியரின் மொழிநடையை நோக்கும் போது என்ன தோன்றுகிறது? 4. கவனித்துத் திருத்துதல்; to arrange, put in order. "புனையிழை நோக்கியும்" (கலித்.76). 5. காத்தல்; to keep product, save. "நோக்காது நோக்கி" (சி.போ.1:4, வெண்.பக்.79). 6. கவனித்துச் செய்தல்; to do, perform. "இவற்றை மும்மைசேர் யாண்டு நோக்கு" (திருவாலவா.34:15). 7. ஒத்தல்; to resemble. "இந்துநோக்கிய நுதலியை" (கம்பரா. சூர்ப்ப.96). 8. ஒப்பிட்டுப் பார்த்தல்; to compare. அவனை நோக்க இவன் நல்லவன். 9. படித்தல்; to read. "இறைவன் கொண்டாங்கது நோக்குமே" (சீவக.2586). 10. விரும்புதல் (யாழ்.அக.); to desire. 11. அணுகுதல்; approach. எந்தச் செய்தியையும் பொறுமையாக நோக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அறிவியல் அடிப்படையில் இப்பாடலை நோக்குவோம்.

ம. நோக்குக; க. நோடு, இ. தேக்.

நோக்கு[2]–தல் nōkku, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கண் காணித்தல்; to supervise. "இம்மடம் நோக்கும் திருமேனிக்கு" (தெ.க.தொ.4, 17). 2. நுழைந்து பார்த்தல்; to peep in or into, to put the head in and look. 3. நுட்பமாய்ப் பார்த்தல்; to see minute. 4. அகக்கண்ணால் பார்த்தல்; to see inner eyes.

நோகு–தல் nōku-, 5 செ.கு.வி. (v.i.) வருந்துதல், மனம் புண்படுதல்; get hurt of feelings, distressed in mind. அவன் மனம் நோகும்படி நடந்து கொள்ளாதே. உன் பண்பற்ற பேச்சும் செயலும் அவரை நோகச்செய்து விட்டது.

நோங்கு–தல் nōṅgu-, 5 செ.கு.வி. (v.i.) வீட்டுத்திசை நோக்கி விருப்பொடு பார்த்தல்; to desire look.

நோடு–தல் nōḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. ஆராய்ந்து பார்த்தல்; to research. 2. கவனித்தல்; to take care of.

நோண்டு–தல் nōṇḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. விரல், குச்சி போன்றவற்றால் கிளறுதல் (பிங்.); to stir, dig up, grub up, root out. புண்ணை நோண்டாதே? நிலத்தை நோண்டிக் கொண்டிருக்கிறான். 2. முகத்தல் (திவா.); to bale out, scoop out. 3. குடைந்தெடுத்தல்; to pick off, as a scab of an ulcer; to pick out, as wax from the ear. காதை நோண்டாதே. 4. துருவிவினவுதல் (வின்.); to enquire minutely, endeavour to draw out by repeated questions, pump one. "நோண்டி நோண்டிக் கேட்கிறான்" (வின்.). 5. சிறுகத் திருடுதல் (வின்.); to pilfer. 6. பயிரைக் கிள்ளுதல் (யாழ்ப்.); to pluck, as cars of grain. 7. ஒரு தொழிலைச் சிறிது சிறிதாகச் செய்தல்; to do a thing little by little. ஏன் நோண்டிக் கொண்டிருக்கிறாய் (வின்.). 8. தேவையற்ற ஒன்றைச் செய்தல்; to rummage about. எதையாவது நோண்டிக் கொண்டிருப்பதே தொழிலாப் போச்சு. 9. தோண்டு தல்; to dig. கண்ணை நோண்டி விடுவேன். கிழங்கை நோண்டி யெடுத்து

விட்டான் (உ.வ.).

ம. நோண்டுக; து. நோடட்ருநி.

நோம்பு–தல் nōmbu-, 5 செ.குன்றாவி. (v.t.) கொழித்துப் பிரித்தல்; to separate by winnowing, as stones from rice.

நோய்–த்தல் nōy-, 4 செ.கு.வி. (v.i.) 1. பிணியால் வருந்துதல்; to be or become sickly or diseased. 2. நோயால் மெலிதல்; to be broken in constitution; to be debilitated. 3. மரம், பயிர் வாடுதல்; to wither, as trees, crops. 4. நிலம் சாரமற்றுப்போதல்; to become poor or worn out, as lands.

நோயறு–தல்nōy-y-aṟu-, 18 செ.குன்றாவி. (v.t.) நோய் நீங்குதல்; to cure a disease. "நோயற்ற வாழ்வே வாழ்வு; குறையற்ற செல்வமே செல்வம்" (பழ.). நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் (பழ.).

நோல்[1]–தல் (நோற்றல்)nōl-, 10 செ.குன்றாவி. (v.t.) 1. பொறுத்தல்; to endure, suffer patiently, as hunger. "உண்ணாது நோற்பார் பெரியர்" (குறள்.160). 2. மேற்கொள்ளல்; to practise. மறவாமே நோற்பதொன் றுண்டு (குமர. பிர. நீதிநெறி.20). 3. வலிமை; strength. "நோக்கியெ திருறநின்ற நோலாரும்படை வியந்தே" (அருணகிரிபு. அருந்தவ. 125).

நோல்[2]–தல் nōl-, 17 செ.கு.வி. (v.i.) 1. தவஞ்செய்தல்; to do penance, practice, austerities. "நோற்றோ ருறைவது" (மணிமே.17:65). 2. நோன்பை மேற்கொள்ளுதல்; to observe a religious fast. பாவை நோன்பு நோற்றாள்.

தெ. நேட்சு; க. நோன்; ம. நோல்க.

நோன்[1]–தல் (நோன்றல்)nōṉ-, 7 செ.குன்றாவி. (v.t.) 1. பொறுத்தல்; to endure, bear. "பழையன் பட்டெனக் கண்டது நோனானாகி" (அகநா.44). அவன் மகன் சிறுதீமையைத் தாங்காத நோனாவாக இருக்கிறான். 2. தள்ளுதல் (திவா.); to reject. 3. நிலைநிறுத்துதல் (பிங்.); to establish. 4. துறத்தல்; to renounce, as secular things.

க. நோன்

நோன்[2]–தல்nōṉ-, 13 செ.கு.வி. (v.i.) தவஞ்செய்தல்; to practise austerities.

நோன்பிரு–த்தல் nōṉbiru-, 3 செ.கு.வி. (v.i.) உணவு உட்கொள்ளாதிருத்தல்; to observe ceremonial fasting.

g

பக்கமிடு–தல் pakkam-iḍu-, 20 செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல்; to ease. (இ.வ.).

பக்கித்தல் pakki-, 11 செ.குன்றாவி. (v.t.) உண்ணுதல் (திவா.); to eat.

பக்கிசை[1]–த்தல் pakkiśai-, 4 செ.கு.வி. (v.i.) ஒலி விட்டி சைத்தல்; to sound, break in, as in a hiatus.

பக்கிசை[2]–த்தல் pakkiśai-, 4 செ.குன்றாவி. (v.t.) வேறு படுத்திக் கூறுதல்; to differentiate. "அதுவும் இதுவு மெனப் பக்கிசைத் தோதப்பட்ட" (சி.போ. சிற். 12, 4, பக். 24).

பக்கிடு[1]–தல் pakkiḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. வெடித்தல்; to part, crack, give way, split. 2. வடுப்படுதல்; to form a scab. 3. திடுக்கிடுதல்; to throb, as the heart through fear.

பக்கிடு[2]–தல் pakkiḍu-, 20 செ.கு.வி. (v.i.) ஆறிவரும் புண்களின் மேல் வடுவுண்டாதல்; to part, crack, give way, split.

பக்கு[1]–தல் pakku-, 5 செ.கு.வி. (v.i.) பகுத்தல்; to break, to divide.

பக்கு[2]–தல் pakku-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. பக்குவம் செய்தல், பாகம்படச் செய்தல் (பாங்கு பட செய்தல்; to do perfeetly. 2. சமைத்தல்; to cook.

பக்குவிடு–தல் pakku-viḍu-, 7 செ.கு.வி. (v.i.) 1. பிளத்தல்; to be split, cracked as the ground. "தோணி கரவென்னும் பார்தாக்கப் பக்கு விடும்" (குறள்.1066). 2. தோலறுதல் (வின்.); to break, as the skin from a blow of a rattan.

பகட்டு[1]–தல் pagaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. போலி வெளிச்சம் காட்டுதல் (கொ.வ.); to shine with a false glitter, as plated articles. 2. தற்புகழ்ச்சி செய்தல்; to brag. 3. பொலிவு பெறுதல்; to be beautiful; to be attractive. "பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை" (கம்பரா. கார். 110). 4. போலிப் பெருமை காட்டுதல்; to make a vain show; to be foppish. 5. வெறுப்படைதல்; to loathe.

பகட்டு[2]–தல் pagaṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மயக்குதல்; to charm, fascinate, allure, wheedle. "படர்சடை களவைகாட்டி வெருட்டிப் பகட்ட" (தேவா. 676, 2). 2. கண் மயங்கப் பண்ணுதல்; to make drowsy. "தூக்கம் பகட்டுகிறது". 3. வஞ்சித்தல்; to deceive, circumvent, misrepresent, as in selling goods. "பிறரைப் பகட்டுகை யன்றிக்கே" (ஈடு. 5,1,1). 4. அதட்டுதல் (வின்.); to menace, bully, hector, threaten in order to effect an object.

பகடி–த்தல் pagaḍi-, 5 செ.கு.வி. (v.i.) 1. அருவருத்தல்; nauseating. 2. கண் மயங்கப்பண்ணல்; to cause drowsiness, dizziness. (சா.அக.).

பகர்[1]–தல் pagar-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. சொல்லுதல்; to tell, utter, declare, say, announce, pronounce, publish. "மற்றைய ராவார் பகர்வர்" (நாலடி. 256). 2. விற்றல்; to hawk, sell. "பூவும், புகையும் மேவிய விரையும் பகர்வனர்" (சிலப். 5, 14). "பண் அமை சிலம்பு பகர்தல் வேண்டி" (சிலப். 18). "என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற் கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி" (சிலப். 20 - 61). 3. கொடுத்தல்; to give. "வேழம் வெண்பூப் பகரும் தண்டுறை யூரன்" (ஐங்குறு. 13). 4. உணர்த்துதல்;

indicate. "பகர்குழல் பாண்டி லியம்ப" *(பரிபா. 14, 42).*

பகர்²–தல் pagar-, *4 செ.குன்றாவி.* (v.t.) ஒளிவிடுதல்; to emit lustre. "பக்கங் கருஞ்சிறுப் பாறை மீதே யருவிகள் பகர்ந்தனைய" *(திவ். பெரியாழ். 1, 7, 8).*

பகர்³–தல் pagar-, *4 செ.கு.வி.* (v.i.) பெயர்தல் *(நாஞ்.);* to shift, move.

ம. பகருக.

பகர்த்து–தல் pagarttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) பெயர்ந்து எழுதுதல் *(நாஞ்.);* to transcribe, copy.

ம. பகர்த்துக.

பகிர்¹–தல் pagir-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* பங்கிடுதல்; to divide into shares, distribute, parcel out, apportion. "பொற்புமிக்க மாயன் பகிரு மமிர்தந்தனை" *(கந்தபு. மகாசாத். 20).* "இந்த வேலையை நாம் மூவரும் பகிர்ந்து கொண்டால் விரைவாய் முடித்துவிடலாம்". "இருப்பது ஒரு காணி, அதை எத்தனை போருக்குப் பகிர்வது?". *2.* பிளத்தல்; to break, split.

பகிர்²–தல் pagir-, *2 செ.கு.வி.* (v.i.) பிரிதல்; to separate. "பரதனு மிளவலு மொருநொடி பகிராது" *(கம்பரா. திருவவ. 131).*

பகு¹–தல் pagu-, *6 செ.கு.வி.* (v.i.) பிளவுபடுதல்; to be spilit, divided. "சக்கரவாளச் சிலை பக" *(திருப்பு. 841). 2.* பிரிவு படுதல்; to be at variance disunited; to separate. "பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்" *(குறள். 187).*

பகு²–தல் pagu-, *4 செ.குன்றாவி.* (v.t.) பாகமாய்ப் பிரித்தல்; to divide. "பகுந்துனக்கு வைத்த கோலறைக்கு" *(திருவாலவா. 30, 30).*

ம. பகுக., தெ. பகுலு.

பகு³–தல் pagu-, *4 செ.கு.வி.* (v.i.) வணிகர் எண்குணத் தொன்றாகிய பங்கிடல்; to divide. "செழுங்கோள் வாழை யகவிலைப் பகுப்பும்" *(புறநா. 168).*

பகு⁴–த்தல் pagu-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1.* பங்கிடுதல்; to distribute, apportion, allot. "பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல்" *(குறள். 322). 2.* வகைப்படுத்துதல் *(வின்.);* to classify. *3.* வகுத்துத் தெளிவாய்க் கூறுதல் *(வின்.);* to explain analytically. "இந்த எண்ணை மேலும் பகுக்க முடியாது". *4.* கொடுத்தல் *(பிங்.);* to give. *5.* வெட்டுதல் *(பிங்.);* to divide, cut into piees. *6.* பிடுங்குதல்; to root out, tear off. "பாதவ மொன்று பகுத்தான்" *(கம்பரா. இலங்கையெரி. 55). 7.* கோது நீக்குதல்; to remove impurities. "பண்ணுறு சுளைகள் கையாற் பகுத்துணக் கொடுத்ததன்றே" *(சீவக. 2724).*

ம. பகுக்க. தெ. பகுலுட்சு.

பகுத்தறி–தல் paguttaṟi-, *2 செ.குன்றாவி.* (v.t.) கரணிய, காரியங்களை மனத்தில் கொண்டு செய்திகளை வகைப்படுத்தி உணர்தல்; to distinguish, discriminate, reason analytically. "உயிரினங்களில் மனிதனுக்கு மட்டுமே பகுத்தறியும் ஆற்றல் உண்டு"

பகை–த்தல் pagai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1.* மாறுபாடு கொள்ளுதல்; to hate, oppose. "பகைத்திட்டார் புரங்கண் மூன்றும்" *(தேவா. 642 1). 2.* அடித்தல் *(அக.நி.);* to beat, strole. *3.* சார்தல் *(அக.நி.);* to depend.

க. பகெ.

பங்கி–த்தல் paṅgi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1.* வெட்டுதல்; to mutilate; to cut off. "அங்கத் தெவையுமழியச் சிலரைப் பங்கித் தடைவார்" *(சிவதரு. சுவர்க்க நரக. 78). 2.* பகுத்தல்; to partition, divide. *3.* பங்கிடுதல்; to opportion.

பங்கிடு–தல் paṅgiḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* பகுத்துக் கொடுத்தல் *(கொ.வ.);* to divide, parcel out, distribute, apportion, allot. *2.* ஏற்படுத்துதல் *(வின்.);* to destine.

பச–த்தல் pasa-, *1 செ.கு.வி.* (v.i.) *1.* பசுமையாதல்; to be green. "மாலுமோர் பாலோங்கிய வண்ணம் போன்று மொளிநிறம் பசந்து தோன்ற" *(திருவிளை. யானையெய். 27). 2.* காமத்தால் மேனி பசலை நிறமாதல்; to turn sallow or pale, as the skin through love - sickness. "உங்களங்கம் பித்தியைப்போற் பசப்பதுரை செய்யுமே" *(புகலூரந்தாதி, நங்களங்கம் என்ற முதுற்குறிப்புப் பாடலிலறிக.). 3.* காமநோய் முதலியவற்றால் ஒளி மங்குதல்; to lose lustre, complexion or colour through love sickness. "பூப்போலுண்கண் பசந்து" *(புறநா. 96). 4.* மங்கிப் போதல் *(வின்.);* to become dim, as twilight. *5.* பொன்னிறங் கொள்ளுதல்; to become goldent, as the sky in the evening. "திசைமுகம் பசந்து" *(சிலப். 4, 5). 6.* காமமேலுட்டினால் உடம்பின் நிறம் வேறுபட்டுப் பொன்னிறப் புள்ளியுண்டாதல்; change of complextion by appearance of yellow dots or patches in the body said to due to excess of sexual passion or lonely sickness. "நறுநுதல் பசத்தல் அஞ்சிச்சிறுமை உறுவோ செய்பறியலரே" *(நற். 1 - 8).* "பல்லிதழ் உண்கண் பசத்தல் மற்றெவளோ" *(ஐங். 170 - 4).* "ஏர்திகழ் ஒண்ணுதல் பசத்தல் ஓரார் கொல் நம் காதலரே" *(ஐங். 224 - 4).* "நன்னுதல் பசத்தலாவது துண்ணி" *(ஐங். 234 - 2).* "முயங்கி கைகளை ஊக்கப் பசந்தது பைந்தொடிப் போதை நுதல்" *(குறள். 1238).* "நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும் எழுநாளேம் மேனி பசந்து" *(குறள். 1278).*

பசப்பு¹–தல் pasappu-, *5 செ.குன்றாவி.* (v.t.) இன்முகங் காட்டி ஏய்த்தல்; to deceive, allure, fascinate, gain the affection. "தந்திரமாய் மாதைப் பசப்பவென்று" *(விறலிவிடு.).*

பசப்பு²–தல் pasappu-, *5 செ.குன்றாவி.* (v.i.) அலப்புதல் *(வின்.);* to chatter, talk too much.

பசபச–த்தல் pasapasa-, *11 செ.கு.வி.* (v.i.) *1.* தினவெடுத்தல் *(வின்);* to itch. *2.* முறுமுறுத்தல்; to chatter; to grumble in a

suppressed tone.

பசனமா–தல் pasanmal-, *6 செ.கு.வி.* (v.i.) *செரிமானமாதல்;* being digested.

பசி–த்தல் paši-, *11 செ.கு.வி.* (v.i.) *பசிகொள்ளுதல்;* to be hungry. "பசிப்புயி ரறியாப் பான்மைத்து" *(மணிமே. 14, 58).* "பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ" *(நாலடி. 320 - 2).* "பண்ணழிந்து ஆர்தலின் நன்று பசித்தல்" *(நான்மணி. 15 - 3).* "நாணில் வாழ்க்கை பசித்தலில் துவ்வாது" *(முதுமொழி. 33 - 1).*

க. பசி, ம. பயிக்க.

பசு–த்தல் pašu-, *11 செ.கு.வி.* (v.i.) *பசுமையாதல்;* to be green. "பசுத்து மரகதம் போலே யிருக்கிற மடக்கிளியே" *(திவ். பெருமாள். தனியன். 3).*

பசை[1]–தல் pašai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அன்பு கொள்ளுதல்;* to be kind, affectionate. "பசைந்த சிந்தை" *(கம்ரா. கிளைகண்டு. 114).* "பசைதல் பரியாதார் மேல்" *(நாலடி.). 2. நட்புக் கொள்ளுதல்;* to become acquainted. "இயல்பிலாதார்கட் பசைந்த துணையும்" *(நாலடி. 187). 3. செறிதல்;* to be dense. "பசை நிழலாலினை" *(காஞ்சிப்பு. பன்னிரு. 275). 4. இளகுதல் (வின்.);* to become glutinous, viscows or tempered, as clay *(வின்.). 5. தாராளமாதல் (வின்.);* to be liberal, benevolent *(வின்.).*

பசை[2]–தல் pašai-, *செ.குன்றாவி.* (v.t.) *1. ஒட்ட வைத்தல்;* to stick together, unite, fill cracks in iron, by beating. *2. ஒன்று சேர்த்தல்;* to gather, get ready, as necessary materials. "அரவமும் வெற்புங் கடலும் பசைந்தங்கமுது படுப்ப" *(திவ். இயற். 3, 64). 3. பதமாக்குதல்;* to temper, as hot iron. "இரும்பைப் பசையும் மட்டை" *(வின்.).*

பசை[3]–தல் pašai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பிசைதல் என்பதன் மறுவடிவம்;* corr. off *pisai-.*

பசை[4]–த்தல் pašai-, *11 செ.கு.வி.* (v.i.) *மை முதலியன நன்றாய்ப் பதிதல்;* to make a deep impression as ink or paint.

பஞ்சரி[1]–த்தல் pañjari-, *11 செ.குன்றாவி.* (v.t.) *தொந்தரவு படுத்துதல்;* to press, importune. "பஞ்சரித்து நின்னைப் பலகாலிரந்த தெலாம்" *(தாயு. பராபர. 83).*

பஞ்சரி[2]–த்தல் pañjari-, *செ.கு.வி.* (v.i.) *1. கொஞ்சிப் பேசுதல் (யாழ்.அக.);* to lisp; to indulge in amorous talk. "பஞ்சரித்துத்தா பணமேயென" *(திருப்பு. 574). 2. விரிவாய்ப் பேசுதல் (யாழ்.அக.);* to talk at length.

பஞ்சரை–த்தல் pañcarai-, *1 செ.கு.வி.* (v.i.) *பஞ்சின் கொட்டையெடுத்தல்;* to gin cotton.

பஞ்சலி–த்தல் pañcali-, *11 செ.கு.வி.* (v.i.) *மனந்தடு மாறுதல்;* to be upset mentally. "மதுமயக் கத்தாற் பஞ்சலித்து" *(சிலப். 10, 13, உரை).*

பஞ்சு–தல் pañju, *15 செ.கு.வி.* (v.i.) *பஞ்சைத் தனத்தைக் காட்டுதல்;* to exhibit one's poverty. "பஞ்சிப் பாழ்த்த நம்மிடி சொலி" *(உத்தரரா. அசுவமே. 124).*

பஞ்சுசூர்–தல் pañju-cūr-, *1 செ.கு.வி.* (v.i.) *பருத்தியைக் கையாற் பன்னுதல் (வின்.);* to tousle cotton with the fingers for separating the seeds.

பஞ்சுபடு–தல் pañju-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.)*எளிமையாதல்;* to become light or useless; to bevalueless. "பஞ்சுபடு சொல்லனிவன்" *(தாயு. தேசோ. 5).*

பட்டங்கட்டு–தல் paṭṭaṇ-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பட்டப்பெயர் சூட்டுதல்;* to confer a title "நன்னெறிப் பட்டங்கட்டி நல்கினான் பரிவட்டங்கள்" *(திருவாலவா.39,27). 2. அரசு முதலிய பதவியளித்தல்;* to invest with office, dignity, authority; to install, crown. "இராவணை வென்று... அவன்றம்பிக்குப் பட்டங் கட்டிய ராமா" *(தனிப்பா.1,391,48). 3. திருமணத்தில் மணமக்கள் நெற்றியிற் பொற்பட்டம் கட்டுதல்;* to fasten a gold band on the foreheads of the bridal pair in a marriage. *4. மறவர் சாதியில் இறந்தோனது பிணத்தை எடுப்பதற்கு முன் அவனுடைய முதன்மைப் பிறங்கடையும், அப்பிறங்கடையின் மனைவியும் தவசங்களோடு கலந்த இரண்டு சாணவுண்டையை வீட்டின் சுவரில் ஒட்டியும், பிறகு எட்டாம்நாள் அதனை நீரிற்கரைத்துந் தாமே இறந்தோன் சொத்துக்கு உரிமையுடையவரென்று தெரிவிக்குஞ் சடங்கு செய்தல்;* to perform the ceremony of indicating the succession to the estate of a deceased person among Maravas, wherein, before the corpse is removed, the chief heir and his wife take two balls of cowdung mixed with various kinds of grain and stick them on to the wall of their house and throw them in water on the eighth day after death. *5. எரியூட்டுமுன் பிணத்தைச் சுற்றி வருதல்;* to perform the ceremony of going round the deceased during cremation.

பட்டந்தரி–த்தல் paṭṭa-tāri-, *4 செ.கு.வி.* (v.i.) *1. முடி சூடுதல்;* to be crowned, as a prince. *2. சிறப்புப் பெயர் சூடுதல்;* to assume a title or dignity.

பட்டு–தல் paṭṭu-, *10 செ.கு.வி.* (v.i.) *அடித்தல், தட்டுதல்;* to beat.

பட்டைதீர்–தல் paṭṭai-tīr-, *2 செ.கு.வி.* (v.i.) *1. சுண்ணம் முதலியவற்றால் பட்டையடிக்கப்படுதல்;* to be coated with stripes of red and white colour, as a temple-wall. *2. கெம்பு முதலியவற்றை வெட்டிப் பட்டை யாக்குதல்;* to give sides in cutting or - polishing a gem, timber, etc., "இந்த மணிகள் பட்டை தீர்ந்தன".

படர்[1]–தல் paḍar-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஓடுதல்;* to run. "அன்னை யலறிப் படர்தர" *(கலித். 51). 2. கிளைத்தோடுதல்;* to spread, as a creeper; to ramify, branch out in different directions. "கொடி படருகிறது". *3. பரவுதல்;* to overspread, as spots or eruptions on the skin; to spread as light, fire, rumour epidemic. "ஊழித்தீப்

படர்ந்து" *(கல்லா. கண்). 4.* பெருகுதல்; to be diffused as air, knowledge; to pervade, as perfume. "*பட*ரொளிப் பரப்பே" *(திருவாச. 22, 8). 5. அகலுதல்;* to expand; to be wide, as chest, face. "*படர்ந்த மார்பு*". *6.* வருந்துதல்; to suffer; to be distressed. "*துணை படர்ந்* துள்ளி" *(அகநா. 38).*

படர்²–தல் paḍar-, *2* செ.குன்றாவி. (v.t.) *1.* விட்டு நீங்குதல்; to leave, abandan. "*தூ*யார் படர்பின்னா" *(சிறுபஞ். 14). 2.* அடைதல்; to reach, arrive at. "சேவடி படருஞ் செம்மலுள்ள மொடு" *(திருமுரு. 62). 3.* நினைத்தல்; to think of, consider. "*திரை*யற் படர்குவிராயின்" *(பெரும்பாண். 35). 4.* பாடுதல்; to sing, dwell on. "நீத்தான்றிறங்கள் படர்ந்து" *(கலித். 131).*

படி¹–தல் paḍi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* அடியிற்றங்குதல்; to settle, as dust or sediment. "*தூ*சி படிந்திருக்கிறது". *2.* பாலேடு முதலியன உண்டாய்ப் பரவுதல்; to gather, as cream. "பாலில் ஏடு படிந்திருக்கிறது". *3.* தங்குதல்; to rest, as clouds upon a mountain; to alight; to roost, as birds. "பறவை படிவன வீழ" *(நெடுநல். 10). 4.* வயமாதல்; to be subjegated; to be trained, disciplined or tamed. "அடியாத மாடு படியாது" *(பழ.). 5.* கையெழுத்துத் திருந்தி யமைதல்; to become orderly, settled, as handwriting. *6.* கீழ்ப்படிதல்; to obey. "பெரியோருக்கு படிந்து நட". *7.* குளித்தல்; to bathe, to sink in water; to be immersed. *8.* கண் மூடுதல்; to close, as eyes. "படிகிலாவிழி" *(அரிச். பு.விவா. 88).* "தடங்கடலிற் படிவாம்" *(திருவாசக. 38, 9). 9.* அமுங்குதல்; to become compressed, flattened, as olas, leaves, leather. "பாரம் வைத்தால் தைத்த இலை படியும்". *10.* தணிதல்; to subside, as water. "வெள்ளம் படிந்தது". *11.* கலத்தல் *(வின்.);* to be joined, united. *12.* வணக்கக் குறியாகக் கீழே விழுதல்; to fall prostrate. "சிரந்தலத்துறப் படிந்து" *(உபதேசகா. சிவத்து. 344).*

ம. படியுக; *து.* படிபுனி.

படி²–தல் paḍi-, *3* செ.குன்றாவி. (v.t.) நுகர்தல்; to enjoy, experience. "பலர்படி செல்வம் படியேம்" *(பு.வெ. 9, 47).*

படி³–தல் paḍi-, *2* செ.கு.வி. (v.i.) *1.* அமைதல்; be agreeable or suitable. *2.* இறங்குதல்; came down. *3.* கலத்தல் *(பிங்.);* get united. *4.* குழித்தல்; make a hollow. *5.* திருந்துதல்; be reformed. "இசை படியும்படி பாடிலர்" *(கோயிற்பு. பதஞ்சலி. 45). 6.* பழகுதல்; get accuinted with. "பாழியங்குடுமிப் பொலங்கிரி குழைத்துப் படிந்த பின்" *(கூர்மபு. கடவுள் வாழ். 9) (த. சொ. அக.).*

படி⁴–தல் paḍi-, *4* செ.கு.வி. (v.i.) பொருந்துதல்; to be fit or suited. "வளை கைக்குப் படிந்திருக்கிறது".

படி⁵–த்தல் paḍi-, *11* செ.குன்றாவி. (v.t.) *1.* எழுதப் பட்டிப்பதைச் சொற்களாக்கிப் பலுக்குதல்; chant. *2.* கற்றல்; to learn, study, repeat in order, commit to memory. *3.* சொல்லுதல்; to say, tell. "படித்தனன் வாலி மைந்தன்" *(கம்பரா. திருவடி. 25). 4.* வணங்கிப் போற்றுதல்; to praise. "நின் பாதம் படித்தோர்க்கும்" *(தனிப்பா. 1, 47, 91). 5.* பழகுதல் *(வின்.);* to practice, habituate oneself to.

ம. படிக்க.

து. படிபுனி.

படிப்பி–த்தல் paḍippi-, *11* செ.குன்றாவி. (v.t.) *1.* கற்பித்தல்; to teach. *2.* பழக்குதல்; to train.

படியள¹–த்தல் paḍi-y-aḷa-, *3* செ.கு.வி. (v.i.) உயிர் வாழ்வதற்குரியனவற்றை அளித்தல்; to suply articles of food for maintenance. "பல்லுயிருக் கெல்லாம் படியளக்கும் வேலவரே" *(கதிரைமலைப் பேரின்பக் காதல். 13).*

படியள²–த்தல் paḍi-y-aḷa-, *3* செ.கு.வி. (v.i.) *1.* உயிர் வாழ்வதற்குப் படி கொடுத்தல்; to measure out grain on account of wages; to make or pay allowances for one's maintenance. "நமக்குப் படியளப்போர் நாரியோர் பாகர்" *(தனிப்பா. 121,5).*

படு¹–தல் paḍu-, *6* செ.கு.வி. (v.i.) *1.* உண்டாதல்; to come into existence. "ஈதலிசைபட வாழ்தல்" *(குறள். 231). 2.* தோன்றுதல்; to appear. "படுசுட ரெஃகம் பறித்து" *(பு. வெ. 7, 16). 3.* தோன்றுதல்; to rise, as a heavenly body. "படுபறியலனே பல்கதிர்ச் செல்வன்" *(புறநா. 34). 4.* நிகழ்தல்; to occur, happen. *5.* மனத்திற்றோற்றுதல்; to strike one, occur to mind. "அப்பொருள் எனக்குப்பட்டது". *6.* பூத்தல் *(யாழ்.அக.);* to blossom. *7.* ஒன்றன் மீது ஒன்று உறுதல்; to hit or strike against; to touch. "சுடுகணை படுதலோடும்" *(கம்பரா. இந்திரசித்துவதை. 44). 8.* மொய்த்தல்; to swarm, as bees. "வண்டுபட மலர்ந்த" *(புறநா. 24). 9.* அகப்படுதல்; to be caught, as fishes, birds or other game to be entrapped, as rats. "பத்தி வலையில் படுவோன் காண்க" *(திருவா. 3, 42). 10.* புகுதல்; to enter. "நாடுபடுசெலவினர்" *(புறநா. 240). 11.* பெய்தல்; to rain. "படுமழை யாடும் வரையகம்" *(கலித். 103, 20). 12.* பெரிதாதல் *(அகநா. 11, உரை);* to be big. *13.* மேன்மையடைதல்; to become great, distinguished. "ஆசார மெப்பெற்றியானும் படும்" *(ஆசாரக். 97). 14.* அழிதல்; to perish. "படாஅச்செலீயர் நின்பகைவர் மீனே" *(புறநா. 24). 15.* மறைதல்; to set, as a heavenly body. "சுடர்நோக்கி மலர்ந்தாங்கே படிற் சாம்பு மலர்" *(கலித். 78). 16.* சாதல்; to die. "காதலிநீபட்டதூஉம்" *(சிலப். 29, அடித்தொழியரற்று). 17.* புண் காய்தல்; to be healed or cured as an eruption or boil. "புண் பட்டுப்போய்விட்டது". *18.* வாடுதல்; to fade, wither, as trees. *19.* சாய்தல்; to incline, leanover. "படாஅ முலைமேற்றுகில்" *(குறள். 1087). 20.* துன்பமடைதல்; to suffer. "படுவேன் படுவதெல்லாம்" *(திருவாச. 50, 4). 21.* தொங்குதல்; to hang. "படுமணி" *(திருமுரு. 80). 22.* ஒலித்தல்; to sound. "படுகண் முரசம்" *(பதிற்றுப்.*

49, 14). 23. பாய்தல்; to exude, as must from an elephant. "தேம்படு கவுள யானை" *(முல்லைப்.31). 24. புதைக்கப்படுதல்;* to be buried, as treasure. "படுபொருள் வவ்விய பார்ப்பான்" *(சிலப். 23,102).*

தெ. க. படு.ம.படு. தோட. போர். குட. பாட். து. படெயுனி. கொலா. பாட்ட். பார்ஜி. பாட்.

படு²–தல் paḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. உடன்படுதல்;* to agree to; to be connected with. "பலரறி மணமவர் படுகுவரெனவே" *(சிலப். 24, பாட்டுமடை. 3). 2. ஒத்தல்;* to resemble. "மலைபட வரிந்து" *(சீவக. 56). 3. பொறுத்தல் (யாழ்.அக.);* to put up with, endure. *4. முட்டுதல் (யாழ்.அக.);* to dash against. *5. பெரிதாதல்;* becoming large.

படு³–த்தல் paḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. செய்தல்;* to do, make, effect. "நகர்வளம் படுத்தான்" *(திருவிளை. திருநகரங். 45). 2. அகப்படுத்தல்;* to catch, ensnare, entrap. "என்னிதிற் படுத்த வேந்தல்" *(சீவக. 713). 3. மட்டமாக்குதல்;* to level. *4. நிலைபெறச் செய்தல்;* to make stable, permanent, establish. "பகைவரைப் பாத்திப் படுப்பதோ ராறு" *(குறள். 465). 5. சேர்ப்பித்தல்;* to entrust to one's care. "பார்ப்பார்ப் படுக்க" *(புறநா. 113). 6. வளர்த்தல்;* to cause to growe to raise up. "வாரி பெருக்கி வளம்படுத்து" *(குறள். 572). 7. உடம்பிற் பூசுதல்;* to smear, daub. "சாந்தம் படுப்பவர்க் கல்லதை" *(கலித். 9). 8. பரப்புதல்;* to spread out, as bedding. "கல்லிடைப் படுத்த புல்லின்" *(கம்பரா. குகப். 39). 9. தளவரிசை செய்தல்;* to pave, as floor; to lay horizontally. "எண்டிசையு மேற்பப் படுத்து" *(சீவக. 592). 10. துன்புறுத்துதல்;* to tease, worry. "புக்ககத்தில் அந்தப் பெண்ணை மிகவும் படுத்துகிறார்கள்". *11. அழித்தல்;* to kill, destroy. "எதிர்ந்தோர் தம்மைப் படுத்தலும்" *(கம்பரா. மூலபல. 56). 12. ஒழித்தல்;* to forsake, leave, put an end to. "காப்படுப்பின்" *(சிறுபஞ். 40). 13. வீழச் செய்தல்;* to cast down, fell. "எறிந்து களம்படுத்த வேந்தவாள் வலத்தர்" *(புறநா. 19). 14. போரடித்தல் (வின்.);* to thresh, as grain. *15. எழுத்துக்களின் பலுக்கத்தைத் தாழ்த்துக் கூறுதல்;* (gram.) to pronounce in a low pitch. "படுத்துக்கூற" *(தொல். எழுத். 76, உரை). 16. பறையறைதல்;* to beat, as a drum. "துடிபடுத்து" *(பு. வெ. 1, 3).*

படுத்து–தல் paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. துன்பஞ் செய்தல்;* to cause to suffer; to put to trouble; to put under pressure. "தாம் என்னை இத்தனைபோது படுத்தின சிறுமையாலே" *(திவ். திருநெடுந். 21, பக்.க 188). 2. அடையச் செய்தல்;* to cause to get. *3. உண்டாகுதல்;* to effect, bring into existence.

படை–த்தல் paḍai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உண்டாக்குதல்;* to create, form, produce. "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" *(திருவாச. 7, 12). 2. பரிமாறுதல்;* to serve or distribute, as food to guests. *3. தெய்வங்களுக்குப் படைத்தல்;* to offer, as boiled rice, to gods or manes. "கடவுட்கு அமுது படைக்க வேண்டும்". *4. பொருளீட்டுதல்;* to acquire, secure. "பொருள் படைப்பான் கற்ற திண்ணனவே" *(திவ். இயற். திருவிருத். 8). 5. பெற்றிருத்தல்;* to get, obtain. "உடம்பு முயிரும் படைத்திசி னோரே" *(புறநா.18). 6. கலத்தல்;* to mix. "அமுதில் படைக்கச் சர்க்கரை" *(தெ.கல். தொ.3,1888). 7. அடித்தல்;* to thrash.

க. படெ.

படையறு¹–தல் paḍai-y-aṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *கீழ்ப்பட்டு அடங்குதல் (ஈடு.1, 9, 9, ஜீ);* to become subordinate or submissive.

படையறு²–தல் paḍai-y-aṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *வலிமை யிழத்தல்;* to become powerless. "விரோதித்த இந்திரியங்களும் உன் பக்கலிலே படையற்றன" *(ஈடு. 2, 7, 9).*

படையறு³–த்தல் paḍai-y-aṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கீழறுத்தல் (பிங்.);* to behave treacherously, as an army. "வினைத்தலையில் படையறுக்குமா போலே" *(ஈடு.7, 3, 4). 2. கவர்தல்;* to captivate. "அவனைப் படையறுத்துக் கொள்ளுகிறேன் என்றாயிற்று" *(ஈடு. 9, 1, 5).*

பண்செய்–தல் paṇ-šey-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பண்படுத்துதல் (சங்.அக.);* to prepare, as the ground; to make fit for cultivation. *2. ஒப்பனை செய்தல்;* to decorate. "பெரிய திருவடியைப் பண்செய்து" *(ஈடு. 6, 2, ப்ர).*

பண்ணு–தல் paṇṇu-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. செய்தல்;* to make, effect, produce, accomplish. "உம்பர்க் கிடந்துண்ணப் பண்ணப்படும்" *(நாலடி. 37). 2. அணியப்படுத்துதல்;* to fit out, make suitable. "பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்" *(புறநா. 12). 3. ஒப்பனை செய்தல்;* to adorn. "பட்டமொ டிலங்கப் பண்ணி" *(சூளா. கல்யா. 14). 4. இசைவாசித்தல்;* to sing in an instrument, as a tune. "மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்" *(மலைபடு. 534). 5. இசையமைத்தல்;* to tune musical instruments. "பண்ணல் பரிவட்டணை யாராய்தல்" *(சீவக. 652, உரை). 6. சமைத்தல்;* to cook. "பாலுமிதவையும் பண்ணாது பெறுகுவீர்" *(மலைபடு. 417).* "பண்ணப் பண்ணப் பலவிதம் ஆகும்" *(பழ.).* "பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்" *(பழ.).*

க. பண்ணு.

பண்ணுறு–த்தல் paṇṇuṟu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. நுகத்திற் பூட்டுதல்;* to yoke. "ஏற்றினஞ் சிலம்பப் பண்ணுறீஇ" *(சீவக. 44). 2. ஊர்திகளை அணியப் படுத்துதல்;* to furnish with trappings, as an elephant. "அண்ணல் யானை பண்ணுறுத்தேறி" *(பெருங். உஞ்சைக். 37, 45).*

3. ஒப்பனை செய்தல்; to decorate.

பண்படு–தல் paṇpaḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. சீர்திருந்துதல்;* to become refined or reformed. "*பண்பட்ட செந்தமிழ்*" *(தனிப்பா. 1, 171, 23).* "*இசையால் மனம் பண்படும்*" *(உ.வ.). 2. நிலம் முதலியன செப்பமாதல்;* to be suitable for tillage, as land. "*காடாகக் கிடக்கும் நிலம் பண்பட நாளாகும்*" *(உ.வ.). 3. அமைதல் (வின்.);* to be obedient, submissive. *4. உதவுதல் (வின்.);* to help, save.

பண்படுத்து–தல் paṇ-paḍudu-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. சீர்திருத்துதல்;* to refine; to temper; to season. "*இலக்கியம் மக்களைப் பண்படுத்தும்*" *(உ.வ.). 2. நிலம் முதலியவற்றைச் செம்மைப்படுத்துதல்;* to prepare or make suitable for fillage as land.

பணி[1]–தல் paṇi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தாழ்தல்;* to be low in height, as a house, a roof or a branch; to be short; as a person or post; to be lowered. "*பணியிய ரத்தைநின் குடையே*" *(புறநா. 6). 2. பெருமித மின்றி யடங்குதல்;* to be humble; to be submissive, as in speech. "*எல்லார்க்கும் நன்றாம் பணிதல்*" *(குறள். 125). 3. இறங்குதல் (வின்.);* to decline, as a heavenly body; to descend lower, as a bird. *4. பரத்தல் (சீவக. 2531, உரை);* to spread. *5. தாழ்ச்சியாதல்;* to become inferior. *6. குறைதல் (யாழ்ப்.);* to fall, as prices, wages. *7. எளிமையாதல் (யாழ்ப்.);* to be reduced in circumstances.

ம. பணியுக.

பணி[2]–தல் paṇi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. வணங்குதல்;* to bow to, make obeisance to. "*உடையான் கழல் பணிந்திலை*" *(திருவாச. 5, 35). 2. உண்ணுதல் (யாழ்ப்.);* to eat. "*பூதம் பணிகிறது போலப் பணிகிறான்*".

பணி[3]–த்தல் paṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தாழ்த்துதல்;* to lower or lead down, degrade, humbled. "*வேந்தன் வேற்றவர்ப் பணிப்ப*" *(பு.வெ.4, 9, கொளூ.). 2. குறைத்தல் (வின்.);* to reduce, as price. *3. மிதித்தல்;* to set foot on, tread. "*நந்து மாமையும் பணித்து*" *(சீவக. 2109).*

பணி[4]–த்தல் paṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அருளிச் செய்தல்;* to say, speak, declare, used of a superior. "*வாய்திறந்தொன்று பணித்த துண்டு*" *(திவ். பெரியதி. 2, 8, 9). 2. ஆணையிடுதல்;* to order, command, direct. "*வீயா விழுச்சீர் வேந்தன் பணித்ததூஉம்*" *(மணிமே. 20, 10). 3. கொடுத்தல்;* to give, bestow. "*திருவிரனெகிழ்ந்து வாள்பணித்தான்*" *(தேவா. 658, 8).*

ம. பணிக்க.

பணி[5]–த்தல் paṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *அதிகாரம், கட்டளை போன்றவற்றுக்குக் கட்டுப்படுதல்; அடங்கிக் கீழ்ப்படிதல்;* submit (one self to authority, order etc). "*அப்பா சீற்றமாகப் பேசினால், நீ பணிந்து போகக் கூடாதா?*", "*உன் மிரட்டலுக்கு நான் பணிய மாட்டேன்*".

பணியாற்று–தல் paṇi-y-āṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வேலை பார்த்தல்;* work (in an office). "*என் தங்கை வைப்பகத்தில் பணியாற்றுகிறாள்*". *2. தொண்டு செய்தல்; பொது நலனுக்காகப் பாடுபடுதல்;* serve. "*நான் தேர்தலில் தோல்வி அடைந்தாலும் மக்களுக்குத் தொண்டாற்றுவேன்*".

பணை–த்தல் paṇai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பருத்தல்;* to be thick, large; to extend; to ramify; to grow thick or close, as branches. "*பணைத்த வெம்முலை*" *(கம்பரா. எழுச்சி. 33). 2. செழித்தல் (நாலடி. 251);* to thrive, flourish. *3. பிழைத்தல்;* to miss, fail, err. "*பணைத்த பகழி*" *(நற்.165).*

பத்து–தல் pattu-, *செ.குன்றாவி.* (v.t.) *1. ஆடு, மாடு முதலியவற்றை ஓர் இடத்திலிருந்து போகும்படி ஓட்டுதல்; விரட்டுதல்;* chaseaway (stray cattle). "*பயிரை மேய்ந்த மாட்டைப் பத்தினான்*". *2. போ, வா என்னும் வினையோடு (கால் நடைகளை) கூட்டிப்போதல்; கூட்டி வருதல்;* take or lead the cattle to some place. "*மாட்டைச் சந்தைக்குப் பத்திக் கொண்டுபோக வேண்டும்*".

பத–த்தல் pata-, *21 செ.கு.வி.* (v.i.) *ஈரமாதல்;* to become moist, soft, marshy. "*அப்பளம் பதத்துப் போயிற்று*" *(புதுகைவ.).*

பதப்படு–தல் pata-p-padu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பக்குவப் படுதல்;* to be seasoned. *2. பழுத்தல்;* to ripen.

பதப்படுத்து–தல் pata-p-paḍuttu, *17 செ.குன்றாவி.* (v.t.) *1. பயன்படும்படிச் செய்தல்;* to make a thing fit for use. *2. இணக்குதல்;* to reconcile. *(கொ.வ.).*

பதம்பார்–த்தல் patam-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சுவையறிதல்;* to try the taste or consistency of boiling rice; to try a fruit by feeling, smelling. (w.). *2. ஒரு செயலைத் தொடங்குமுன் ஆராய்ந்து பார்த்தல்;* to exercise great caution before entering on a business. *3. விதையிட நிலத்தின் பக்குவம் அறிதல்;* to examine the moistness of land in order to ascertain its fitness for sowing (w.). *4. ஆய்வு செய்தல்;* to test. *(கொ.வ.).*

பதர்–த்தல் patar-, *4 செ.கு.வி.* (v.i.) *பதராய்ப் போதல்;* to become useless. "*ஒருகால் பதர்த்த திறே*" *(ஈடு. 2, 8, 5).*

பதறு–தல் padaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கலங்குதல்;* to be fluried, confused. agitated. "*பதறிக் குலை குலைய*" *(நீதிநெறி. 90). 2. முன்பின் திட்டமின்றிப் பரபரப்புக் கொள்ளுதல்;* to be impatient, over hasty; to hurry. "*அருத்தியிற் பதறிவந்தோம்*" *(அரிச். பு. சூழ்வினை. 22).* "*பதறிய காரியம் சிதறும்*" *(பழ.).*

பதனிடு–தல் pataṉ-iḍu, *4 செ.குன்றாவி.* (v.t.) *தோல் முதலியவற்றை மெதுவாக்குதல்;* to tan; to temper, season, soften, mollify (w).

பதி[1]–தல் pati-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. பதிவேட்டில்*

எழுதுதல்; to register, enter in writing. (கொ.வ.). 2. மணி முதலியன இழைத்தல்; to fix, insert, ingraft, inlay, as a gem. 3. பாவுதல்; to pave, as floor. "தளத்துக்குக் கல்பதியப் போகிறார்கள்". 4. பெயர்ப் பட்டியில் சேர்த்தல்; to take on the roll.

பதி[2]–த்தல் pati-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. அழுத்துதல்; to imprint, impress, stamp, engrave, as in mind, to plunge. "பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி" (திருவாச. 11, 12). 2. மணி முதலியன இழைத்தல்; to infix, insert, ingraft, inlay, as gems, to enchase. 3. குழியாக்குதல் (வின்.); to excavate, sink. 4. தாழ்த்துதல்; to lower height, price, etc., to set lower, insert deeper. 5. பதியம் போடுதல்; to plant a shoot, runner or creeper (இ.வ.). 6. எழுதுதல்; to enter in a register (கொ.வ.). 7. அதிகாரங் கொடுத்தல்; to invest with power, authority or prerogative (w).

பதுக்கு–தல் padukku-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. ஒளித்தல்; to hide, secrete, conseal. 2. (பொருள், பணம் முதலியவற்றை அதிக அளவில்) சட்டத்துக்கு புறம்பாக மறைத்து வைத்தல்; hoard. "கிடங்கில் பதுக்கி வைத்திருந்த நூறு மூட்டை நெல்லைக் காவல் துறையினர் கைப்பற்றினர்". "சிலர் வெளிநாட்டு வைப்பகங்களில் பணத்தைப் பதுக்கியுள்ளது தெரியவந்தது".

பதுங்கு–தல் paduṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. ஒளித்தல்; to hide, conceal oneself. "அரண்புக்குப் பதுங்கினானை" (கம்பரா. அங்கத. 31). 2. பதிவிருத்தல்; to lie in ambush, crouch. "பதுங்கிலும் பாய்புலி" (திருமந். 2914). 3. மறைத்தல்; to disappear. "பருதியை முகின்மறைப்பப் பாயொளி பதுங்கினாற் போல்" (சி.சி. 2, 83). 4. பின்னிற்றல்; to fawn, cinge (w).

க. ஹதுகு; ம. பதுங்ஙக, பதியுக.

து. பதெயுனி, பட்டுணி.

பதுப்பி–த்தல் paduppi-, 7 செ.குன்றாவி. (v.t.) மறைத்தல்; to hide. "பண்டைக் கோலத்தைப் பதுப்பித்திடும் பட்டாங் குரையாய்" (வள்ளி. கதை. ms).

பதை–த்தல் padai-, 11 செ.கு.வி. (v.i.) 1. துடித்தல்; to throb, as in sympathy; to flutter, quiver, beat, as the heart through fear, pain or grief. "பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை" (திருவாச. 5,31).2.வருந்துதல்; to be in agony, as a creature in fire; to suffer intensely. 3. நடுங்குதல்; to shake. "அடிபதைத் தரற்றிய வரக்கி" (கம்பரா. சூரிப்ப. 97). 4. பதற்றப்படுதல்; to be anxious. "பறந்து போதுங்கொ லென்று பதைக்கின்றார்" (கம்பரா. பள்ளி. 15). 5. செருக்கடைதல் (இ.வ.); to be conceited.

க. பதெ.

பந்தி–த்தல் pandi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கட்டுதல்; to tie, bind, fasten, connect, confine. "பந்தித்த சடையின் மேலே" (தேவா. 305, 8). 2. கூடுதல்; to join, combine. "பந்தியாப் பழுப்பு நாறின்" (சீவக. 1287). 3. ஆதனைக் கட்டுக் குள்ளாக்குதல்; to keep the soul in bondage. "பந்தித்து நின்ற பழவினை" (தேவா. 292, 1).

பப்பு[1]–தல் pappu-, 4 செ.கு.வி. (v.i.) பரவித்திரிதல்; to roam about. "சேரன் குலத்தனாம் பப்பிப்போய படைஞன்" (தியாக. லீலை. 14, 7).

பப்பு[2]–தல் pappu-, 5 செ.குன்றாவி. (v.t.) உண்ணுதல்; to eat. "பாராணமாய்த் தான்றானே பப்பினான்" (பஞ்ச. திருமுக. 2016). 2. கொடுத்தல்; to give.

பம்பு[1]–தல் pambu-, 5 செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to be close, thick, crowded. "பம்பி மேகம் பரந்தது" (கம்பரா. ஆற்று. 3). 2. நிறைதல்; to be full. "பம்புமுத முண்ணாத தென்னை யென்ன" (பெரியபு. திருமுறை. 4). 3. பரவுதல் (பிங்); to spread, over spread, as vegetation, water, darkness. "இராமப் பேர் பம்ப" (கம்பரா. தனி. 4). 4. எழுதல் (சூடா.); to rise, ascend. 5. ஒலித்தல்; to sound. "எதிர் பம்புஞ் சீயமதென" (இரகு. திக்கு. 102).

பம்பு[2]–தல் pambu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பரவுதல்; spreading. 2. பரந்த வடிவு; broad figure (சா.அக.).

பம்மு[1]–தல் pammu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முகில் முதலியன மூட்டம் போடுதல்; to lower, as clouds. 2. மறைதல்; to lurk, skulk. "காவலரைக் கண்டதும் திருடன் பம்மி விட்டான்". 3. செறிதல்; to be close, thick, crowded. 4. ஒலித்தல்; to sound. "பம்பை பம்பின்" (கம்பரா. கைகே. 60).

பம்மு[2]–தல் pammu-, 5 செ.குன்றாவி. (v.t.) நூலோட்டுதல்; to baste, pin a seam to be sewed. "பம்மித் தைக்கிறது" (வின்.).

பய[1]–த்தல் paya-, 12 செ.கு.வி. (v.i.) 1. விளைதல்; to yield, produce, put forth fruit. "பயவாக் களரனையர்" (குறள். 406). 2. உண்டாதல் (திவா.); to come into existence; to be made. 3. பயன்தருதல்; to take place; to be productive of good or evil. "நல்வினை பயந்த தென்னா" (கம்பரா. கார்முக. 36). 4. கிடைத்தல் (சூடா.); to be obtained.

பய[2]–த்தல் paya-, 12 செ.குன்றாவி. (v.t.) 1. படைத்தல்; to produce, create. "தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்தழிக்கும்" (திருவாச. 5, 30). 2. பெறுதல் (திவா.); to beget generate, give birth to. "பராவரும் புதல்வரைப் பயக்க" (கம்பரா. மந்தரை. 47). 3. கொடுத்தல்; to give. "இன்னருள் பயந்து" (தேவா. 775, 4). 4. பூத்தல்; to bloosm. "தாமரை பயந்த வொண்கேழ் நூற்றித ழலரின்" (புறநா. 27). 5. இயற்றுதல்; to compose. "சிங்கடி தந்தை பயந்த..... தமிழ்" (தேவா. 201, 12).

பய[3]–த்தல் paya-, 12 செ.கு.வி. (v.i.) நிறம் வேறுபடுதல்; to change in hue or complexion, as the skin through love - sickness; to turn sallow through affliction. "மாமையொளி பயவாமை" (திவ். இயற். திருவிருத். 50).

பய[4]–த்தல் paya-, 12 செ.கு.வி. (v.i.) அச்சமுறுதல்; to be afraid

of alarmed at, used only in the past tense. "பயந்தழுதனணிற்ப" (பெருங். வத்தவ. 13, 47).

பயன்படு–தல் payaṉ-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) நன்மை விளைவிப்பதாக அல்லது உதவியாக இருத்தல்; be useful; be of help. "மின்சாரம் எத்தனையோ வகையில் நமக்குப் பயன்படுகிறது", "குமுகாயத்துக்குப் பயன்படும் வகையில் இந்த அமைப்பு இயங்கும்".

பயிர்[1]–தல் payir-, 4 செ.கு.வி. (v.i.) விலங்கு முதலியன ஒன்று ஒன்றனைக் குறியிட்டு அழைத்தல்; to call, cry, as beasts, birds or insects. "கடுவன்..... மந்தியைக் கையிடூ உப் பயிரும்" (புறநா. 158).

பயிர்[2]–தல் payir-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. அழைத்தல்; to summon, call. "நாட்டிறை பயிருங் காலை முரசம்" (சிலப். 26, 52). 2. இசைத்தல்; to sound, as instruments. "பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்" (மணிமே. 7, 46).

பயிர்[3]–த்தல் payir-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. அருவருத்தல்; to show aversion to or disgustat. 2. மனங் கொள்ளா திருத்தல் (சீவக.1624.); to be sulky or ill - humoured about.

பயில்[1]–தல் payil-, 2 செ.கு.வி. (v.i.) கல்வி, கலை முதலியவை கற்றல்; பள்ளியில் படித்தல்; learn (a subject/ an art, etc); study (in a school, etc.). "இவர் என்னிடம் இசை பயின்றவர்", "தட்டச்சுப் பயின்று வருகிறேன்".

ம. பயிலுக.

பயில்[2]–தல் payil-, 2 செ.கு.வி. (v.i.) 1. தேர்ச்சியடைதல்; to become trained, accustomed. 2. பழகுதல்; to gain acquaintance, move as friends. "பயிறொறும் பண்பு டையார் தொடர்பு" (குறள். 783). 3. நிகழ்தல்; to occur, take place. 4. நெருங்குதல்; to be close, thick, crowded. "பயிலிதழ் மலர்" (கலித். 103). 5. பொருந்துதல்; to join, unite. 6. ஒழுகுதல்; to behave, conduct oneself. 7. நடமாடுதல்; to roam about. "நந்தி நந்தினி பயிலுகின்ற பேரொலி" (தணிகைப்பு. அகத். 103). 8. தங்குதல்; to stay, abide, reside, to haunt. "புலவர் பயிலுந் திருப்பனையூர்" (தேவா. 635, 6).

ம. பயிலுக.

பயில்[3]–தல் payil-, 14 செ.குன்றாவி. (v.t.) 1. கற்றல் (திவா.); to practise, learn by practise. "படைக்கலம் யாவும்..... மாதவன் வயிற்பயில் வரதன்" (பாரத. வாரணா. 29). 2. சொல்லுதல்; to speak, utter, tell, talk.

ம. பயிலுக.

பயில்[4]–தல் (பயிறல்) payil-, 3 செ.கு.வி. (v.i.) ஒலித்தல் (பிங்.); to utter indistinct sounds as birds; to sound. "பொழில் குயில் பயிறரும புரம்" (தேவா. 535, 1).

பயில்[5]–தல் payil-, 5 செ.குன்றாவி. (v.t.) அழைத்தல்; to call. "பேடையைப் பயிலுங் குயில்" (கம்பரா. வனம்புகு. 45).

பயிற்று–தல் payiṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பழக்குதல்; to train, habituate accustom. "சிறந்தது பயிற்றல்" (தொல். பொ. 192). 2. கற்பித்தல்; to teach, instruct. "அற்றை நாளாதியாக வவர்களும் பயிற்றுகின்றார்" (சீவக. 1647). 3. பலகாற் கூறுதல்; to repeat many times. "கரப்பி லுள்ளமொடு வேண்டு மொழி பயிற்றி" (புறநா. 34). 4. சொல்லுதல்; to speak, utter, tell. "தீண்டியுங் கண்டும் பயிற்றியும்" (பு.வெ. 9, 11). 5. செய்தல்; to do, perform. "வழிபாடு பயிற்றினான்" (திருவானைக். தீர்த்த. 34). 6. கொளுவுதல்; to cause to hold. "பயிற்றிய தெனநிறம் பரந்த" (தணிகைப்பு. நாட்டுப். 53).

பர–த்தல் para-, 10 செ.கு.வி. (v.i.) 1. பரவுதல்; to spread, extend; to be diffiused, as water, air, odour, epidemic, clouds or light. "பனிமலை முதல் குமரி முனை வரை பரந்திருக்கும் துணைக்கண்டம்", "ஆனிற் பரக்கும் யானைய முன்பிற்கானக நாடனை" (புறநா. 5). 2. தட்டை யாதல்; to be flattened, as by hammering; to be broad, as a place surface. "நாநுனிபரந்து" (தொல். எழுத். 93). 3. அலமருதல்; to be bewildered, perplexed. "பரந்து கெடுக உலகியற்றி யான்" (குறள். 1062).

தெ. பரட்சு, க. பரெ, ம. பரக்க, து. பரதுனி.

பரசு[1]–தல் paraśu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. போற்றுதல்; to praise, extol. "செந்நாவலர் பரசும்புகழ்த் திருப் பெருந்துறை" (திருவாச. 34, 1). 2. மெல்லென ஒதுக்கி யெடுத்தல்; to sift gently. 3. மெல்லெனத் தேய்த்தல்; nāñ to rub gently.

க. பரசு.

பரசு[2]–தல் paraśu-, 10 செ.கு.வி. (v.i.) போற்றி வழிபடல்; extol. "சண்டேசன்றாள் பிரசமலரிறைத் திறைஞ் சிப்பரசு வாமே" (சேதுபு. கடவுள்வா. 12).

பரத்து[1]–தல் parattu-, 5 செ.குன்றாவி. (v.t.) விரித்தல்; to spread. "சர்க்கரை யாற் பாத்திரப்பரத்தி" (தேவையுலா. 203).

க. பரடு. ம. பரத்துக.

பரத்து[2]–தல் parattu-, 5 செ.கு.வி. (v.i.) நிரப்புதல்; பரப்புதல்; spread (sth over a place). "ஈரமாக இருக்கும் வைக்கோலை உதறிப் பரத்திக் காயப் போடு".

பரப்பு–தல் parappu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. பரவச் செய்தல்; to spread, as grain, to layout, as goods, to diffuse, as odour. "நிதிபரப்பி" (திருவாச. 8, 3). 2. செய்தி முதலியன பரப்புதல்; to disseminate, as news; to propagate, as opinions. 3. விரித்தல்; to distend; to expand, as wings. "காலைப் பரப்பி நின்றான்". 4. ஒழுங்கின்றி வைத்தல்; to place confusedly, as books on a table. எல்லாம் பரப்பிக் கிடக்கின்றன. 5. நிலை பெறுத்தல்; to establish. "நான்மறையோர் புகழ்பரப்பியும்"

(பட்டினப். 202). 6. பெருகக் கொடுத்தல்; to give lavishly. "பெத்த முத்தியும் பரப்பு பெண்ணரசி" (விநாயகபு. 2, 7).

தெ. க. பரபு.

பரபர–த்தல் parapara-, 3 செ.கு.வி. (v.i.) 1. விரைவுபடுதல்; to be in a hurry. "பஞ்சாக்கரத்தைப் பரபரப்பா வெண்ணாத பாவம்" (அருணகிரியந்.) 2. தன் வயமழிதல்; to lose self control. " மேனி பரபரத்துளங் களித்து" (பிரபோத.18,53.). 3. சுறுசுறுப்பாதல்; to be active, energetic, diligent. 4. தினவெடுத்தல்; to feel a tingling or itching sensation.

பரம்பு–தல் parambu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பரவுதல்; to spread, an water, bad news, epidemics; to extend; to expand; to become diffused, as air, rays; to prevade; to over spred, as clouds, darkness. 2. தட்டையாக விரிதல்; to be spread out or become flattened by mashine or hammering. 3. நிறைதல்; to occupy, overrun, as an army.

பரவு¹–தல் paravu-, 9 செ.குன்றாவி. (v.t.) 1. பரப்புதல்; to lay open to view, as goods in a declare (w). 2. புகழ்தல்; to praise, extol. "பரவு நல்லொழுக்கின் படி பூண்டது" (கம்பரா. ஆற்றுப்.12). 3. போற்றுதல்; to worship, revere, adore. "பரவல் பழிச்சுதல்" (பரபா.10,116). "கைதொழுது இரந்து வேண்டிப்பரவி மீண்டு" (திருவிளை. மெய்க்கா. 21). 4. பாடுதல்; to sing. "யாழிற் பரவுமின்" (கல்லா. 10). 5. சொல்லுதல்; to declare. "பரவருமணிகள் விளங்கிய" (திருவாத. திருப்பெருந். 3).

க. கரகு.

பரவு²–தல் paravu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நீர்மம், காற்று முதலியவை சுற்றிலும் செல்லுதல்; (of liquid, gas, etc). spread. "சட்டையில் பட்ட மை பரவிப் பெரிய கரையாகி விட்டது", "ஒரு குடிசையில் பற்றிய தீ மற்ற குடிசைகளுக்கும் பரவியது". 2. வெளிச்சம், இருள் ஆகியவை படர்தல்; (of darkness) spread; cover. "வீடு முழுவதும் இருள் பரவியிருந்தது". 3. (நோய் பலரையும்) பற்றுதல்; ஊறுபடுத்தல்; (of disease) be contagious; be infectious. "இது எளிதில் பரவக் கூடிய தொற்றநோய்". 4. பல இடங்களில் பரந்திருத்தல்; be extended. "இந்த அரசரின் ஆட்சி வட இந்தியா முழுவதும் பரவி இருந்தது".

பராவு–தல் parāvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. புகழ்தல்; to praise. "தற்பராய் நின்று" (பு.வெ.10,15,உரை.). 2. வணங்குதல் (திவ்.நாய்ச்.9,6.); to worship. 3. வணங்கி வாழ்த்துதல் "பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள்" (தொல்.உரி.84.).

பரி¹–தல் pari-, 4 செ.கு.வி. (v.i.) 1. பற்றுவைத்தல்; to covet. "பண்டம் பகர்வான் பரியான்" (பு.வெ.12, ஒழிபு. 2). 2. காதல் கொள்ளுதல்; to be affectionate. "பாண பரிந்துரைக்க வேண்டுமோ" (ஐந். ஐம். 23). 3. இரங்குதல்; to sympathise. "பாழாய்ப் பரிய விளிவதுகொல்" (பு.வெ. 3, 8). 4. சார்பாகப் பேசுதல்; to plead, intercede. "நீ அவனுக்காகப் பரிய வேண்டாம்". 5. வருந்துதல்; to be troubled, distressed; to suffer. "பழவினைப் பயனீ பரியல்" (மணிமே. 12, 50). 6. பிரிதல்; to part, separate (w). 7. அறுதல்; to be sundered. "பரிந்தமாலை" (சீவக. 1349). 8. முறிதல்; to break off. "வெண்குடை கால்பரிந் துலறவும்" (புறநா. 229). 9. அழிதல்; to be destroyed; to perish. "பழவினை பரியுமன்றே" (சிவக. 1429). 10. ஓடுதல்; to run. "மாவே..... பரிதலின்" (புறநா. 97). 11. வெளிப்படுதல்; to go out; to escape. "பரிச்சின்ன ஞானம் பரிய" (சிவப்பிர. சிவஞா. நெஞ்சு. 81).

பரி²–தல் pari-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. அஞ்சுதல்; to fear. "வடுப்பரியு நாணுடையான்" (குறள். 502). 2. வருந்திக் காத்தல்; to guard with difficulty. "பரியினு மாகாவாம் பாலல்ல" (குறள். 376). 3. பகுத்தறிதல்; to discern, discriminate. "பரிந்துணராப் பைத லுழப்ப தெவன்" (குறள். 1172). 4. அறிதல்; to know. "பவர்முல்லை தோன்றி பரியாம லீன்ற" (பு.வெ. 12, இருபாற். 7). 5. அறுத்தல்; to cut asunder. "கருங்கோட் டெருமை கயிறுபரிந்து" (ஐங்குறு. 95). 6. அழித்தல்; to destroy. "என்பரியு மேதிலான் றுப்பு" (குறள். 802). 7. நீங்குதல்; to be free from, as sin. "பவம் பரிந்தவர்க ளொத்தார்" (சூளா. இரத. 85). 8. கடத்தல்; to pass beyond, crossover. "காமந் தலைபரிந்து" (பு.வெ.12, இருபாற்.8). 9. உதிர்த்தல்; to shake down. "தெங்கினொண்பழம் பரீஇ" (சீவக. 68). 10. வாங்கிக் கொள்ளுதல்; to get, take. "இளங்கமு கெருத்திற் காய் பருஇ" (சீவக.1616.). 11. மேற்கொள்ளுதல்; conduct something. "பசைதல் பரியாதாம் மேல்" (நாலடி. 60). 12. விரும்புதல்; to want, wish. "நிலையா எனவுணர்ந்தார் என்றும் பரிவதிலர்" (நாலடி. 182).

பரி³–த்தல் pari-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. அறுத்தல் (அக.நி.); to cut asunder. 2. சூழ்தல்; to surround, spread over. "குருதி பரிப்ப" (அகநா. 31).

பரி⁴–த்தல் pari-, 4 செ.கு.வி. (v.i.) ஓடுதல்; to run proceed. "மகளிரஞ்சி யீர்ஞெண்டு கடலிற் பரிக்கும்" (குறுந். 401).

க. பரி.

பரி⁵–த்தல் pari-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. சுமத்தல்; to bear, carry, custain. "பளகரெல்லா மனைப்பாரம் பரித்தனர்" (திருநூற். 16). 2. ஆள்வினைபுரிதல்; to carry on, conduct, manage. "மண்டமர்ப் பரிக்கு மதனுடைய நோன்றாள்" (புறநா. 75). 3. பாதுகாத்தல்; to guard, protect. "சிட்டறைப் பரிக்கும் தேவதேவை" (குற்றா. தல. தக்கன் வேள்விச். 128). 4. பொறுக்கி யெடுத்தல்; to pick up. "குடவோலை பரித்தல்" (கல்.). 5. அணிதல் (யாழ்.அக.); to wear.

பரிதவி¹–த்தல் paridavi-, *11 செ.கு.வி.* (v.i.) *1. துன்புறுதல்;* to grieve, sorrow. "*சீரழிந்து நெஞ்சந் தியங்கிப் பரிதவித்தான்*" *(பிரபோத. 30, 25). 2. வருந்துதல்;* to suffer. *3. இரங்குதல்;* to pity, sympathise. "*பாலனென்று பரிதவிப்பார்*" *(சேதுபு. அக்கி. 37).*

பரிதவி²–த்தல் paridavi-, *11 செ.கு.வி.* (v.i.) *இரங்கத் தக்க நிலையில் வருந்தித் தவித்தல்;* suffer; be in astate of distress. "*கணவனை இழந்து பரிதவிக்கும் இளம் பெண்*", "*தண்ணீர்த் தட்டுப்பாட்டால் மக்கள் பரிதவிக்கிறார்கள்*".

பரிமாறு¹–தல் parimāṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மாற்றிக் கொள்ளுதல்;* to give and take, exchange, interchange. *2. உணவு படைத்தல்;* to distribute, serve, as food to guests. "*செவிவாயா லிசைத்தருந்தப் பரிமாறி*" *(குற்றா. தல. முதனூல். 7). 3. நுகர்தல்;* to enjoy. "*ராசபுத்திரன்..... நினைத்தபடிக்குப் பரிமாறாலாமிறே*" *(ஈடு. 1, 2, 7). 4. பணிமாறுதல்;* to render service by fanning, blowing an instrument, etc. "*துணைக்கவரி பரிமாற*" *(ஞானவா. லீலை. 22). 5. கையாளுதல்;* to use, as utensil; to handle, as furniture. "*பரிமாறுகிற உடைமை*". *6. உட்கொள்ளுதல்;* to partake of, as food or drink. *7. புணர்தல் (யாழ்ப்.);* to copulate with.

பரிமாறு²–தல் parimāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நடமாடுதல்; (யாழ்ப்.)* to go frequently; to resort, as men or animals. *2. பரவுதல்; (வின்.);* to prevail, as epidemic. *3. பரவுதல்;* to move about. "*சிறு விரல்கள் தடவிப் பரிமாற*" *(திவ். பெரியாழ். 3, 6, 8). 4. செலாவணியாதல்;* to circulate, as money (w). *5. ஒழுகுதல் (இ.வ.);* to conduct oneself. *6. உலாவுதல் (வின்.);* to walk about, as a convalescent person.

பரிமாறு³–தல் parimāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒருவர் மற்றவருக்கு இலையில் அல்லது தட்டில் உணவை உண்பதற்கு உரிய முறையில் வைத்தல்; உணவு படைத்தல்;* serve (food). "*கணவனுக்கு குழந்தை களுக்கும் பரிமாறி விட்டுத் தானும் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தாள்*", "*திருமண வீட்டுப் பந்தியில் பரிமாற ஐந்து பேராவது வேண்டும்*". *2. கொடுத்துப் பெறுதல்; பரிமாற்றம் செய்தல்;* exchange. "*இரு நாடுகளும் தத்தம் வயத்தில் உள்ள போர்ச் சிறையாளிகளை (கைதிகளை)ப் பரிமாறிக்கொள்ள உடன்பட்டன*", "*இருநாட்டுத் தலைவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்*".

பரு¹–த்தல் paru-, *11 செ.கு.வி.* (v.i.) *பெருத்தல்;* to become large, bulky, plump to swell. "*பருத்த தோளு முடியும் பொடிபட*" *(தேவா. 498, 11).*

பரு²–த்தல் paru-, *11 செ.கு.வி.* (v.i.) *1. சதைப்பற்று மிகுதல்; பெருத்தல்;* grow fat. "*முன்பு பார்த்ததைவிட இப்போது பருத்திருந்தார்*", "*இப்படிப் பருத்து விட்டாயே! என்று அதிசயப்பட்டார்*". *2. (தடி முதலியவை) கற்றளவில் பெரிதாக இருத்தல்;* be thick and round. "*கைத்தடி மேல்பகுதி பருத்தும் கீழ்ப்பகுதி சிறுத்தும் இருந்தது*".

பரு³–த்தல் paru-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அதிகரித்தல்;* to increase. *2. தடித்தல்;* to grow large. "*பாவனை மனைத்தாலே பருத்தெழுமை - நமதாகும்*" *(ஞாநவா - ஞாநவிந். 8).*

பருக்கு¹–தல் parukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பெருக்குதல் (பரராச,யாழ்.231);* to increase.

பருக்கு²–தல் parukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பருகச் செய்தல்;* to cause to drink. "*நீர்தான் கொணர்ந்து.... பருக்கி யிளைப்பை நீக்கீரே*" *(திவ். நாய்ச் 13, 4).*

பருகு–தல் parugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. குடித்தல்;* to drink. "*பருகுவார் போலினும்*" *(குறள். 811). 2. உண்ணுதல்;* to eat, devour. "*நிறையைப் பருகாப் பகல்கரந்தபையுள் கூர்மாலை*" *(பு.வெ.12,பெண்பாற். 9). 3. நுகர்தல்;* to enjoy. "*பருகுவன் பைதனோ யெல்லாங் கெட*" *(குறள். 1266).*

பருங்கு–தல் paruṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பறித்தல்;* to pluck, as fruit; to tear off. "*இருங்கனி பருங்கி மிகவுண்ட மந்தி*" *(தேவா. 1096, 3). 2.கொல்லுதல்;* to kill. "*களிறீர்க்கின்றவனைப் பருங்கி*" *(திவ். பெரியாழ். 1, 2, 7).*

பருமி¹–த்தல் parumi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒப்பனை செய்தல்;* to decorate, as an elephant. "*முத்தம் பரிமித்திடைதேய்த்து*" *(கூர்மபு. அந்த காசு. 53).* "*பல்கதிராரமும் பூணும் பருமித்து*" *(சீவக. 2113). 2. பண்ணுறுத்தல்;* to furnish with trappings, as an elephant. "*பருமித்த களிற்றினாலும்*" *(சிந்தா. காந்தரு. 20).*

பருமி²–த்தல் parumi-, *11 செ.கு.வி.* (v.i.) *1. எக்களிப்புட னிருத்தல் (வின்.);* to be in high spirits; to exult. *2. படைக்கலம் பயிலுதல் (சூடா.);* to practise the use of weapons.

பருவா¹–தல் paru-va, *13 செ.கு.வி.* (v.i.) *வருந்துதல்;* to suffer; to be afflicted. "*இமைப் பிற் பருவரார்*" *(குறள். 1126).*

பருவா²–தல் paru-va, *15 செ.குன்றாவி.* (v.t.) *1. துன்புறுத்தல்;* to tease, torment. *2. அருவருத்தல் (சது.);* to abhor, detest.

பருவு–தல் paruvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அரித்தல்;* to sweep or gather together. "*பருவிக் குறவர் புனத்திற் குவித்த பருமாமணி*" *(தேவா. 1027, 5).*

பல்கு–தல் palgu-, *செ.கு.வி.* (v.i.) *1. பலவாதல்;* to increase, as in number or quantity. "*ஞாயிறு பல்கிய மாயமொடு*" *(பதிற்றுப். 62, 6). 2. மிகுதல்;* to multiply enhance, intensify. "*பல்கிய விருப்பினான்*"

(பிரமோத். பஞ்சா. 21).

பல்லாடு¹–தல் pal-lāḍu, செ.கு.வி. (v.i.) கெஞ்சுதல் *(இ.வ.);* to cringe.

பல்லாடு²–தல் pal-lāḍu, *10* செ.குன்றாவி. (v.i.) மெல்லுகை; chewing, nibbing. "பல்லாடப் பசி தீரும்" *(பழ.).*

பலுக்கு¹–தல் palukku-, *8* செ.குன்றாவி. (v.t.) தெளித்தல் *(இ.வ.);* to sprinkle.

பலுக்கு²–தல் palukku-, செ.கு.வி. (v.i.) *1.* தெளிய ஒலித்தல் உச்சரித்தல்; to be pronounced clearly. *2.* அவன் பேசும்போது எழுத்துகள் பலுக்கப்படுகின்றன". *2.* தற்புகழ்ச்சியாகப் பேசுதல்; to boast. 'என்னடி மெத்தப் பலுக்கிறாய்' *(மதுரகவி.94). 3.* பேசுதல்; to speak. "கண்பலுக்க" *(தேவா.262,7).*

தெ. பலுகு

பவர்–தல் pavar-, *3* செ.கு.வி. (v.i.) நெருங்கியிருத்தல்; to crowd, to be dense. "கடியமுலை நல்லார் பவரும் வடுகூர்" *(தேவா. 1007, 4).*

பவி–த்தல் pavi-, *4* செ.கு.வி. (v.i.) உண்டாதல்; to be realised happen. "யாவும் பவிக்கும் நின்னிடத்தே" *(திருக்காளத். 4, காளன். 52).*

பழக்கு–தல் paḻakku-, *8* செ.குன்றாவி. (v.t.) *1.* பழகச் செய்தல்; to train, domesticate. *2.* பழக்கம் ஏற்படும்படி செய்தல்; make a habit of (sth.); habituate (oneself to sth.). "குழந்தையை எப்போதும் தூக்கிக் கொண்டுபோய் பழக்கிவிட்டு, இப்போது நடக்கச் சொன்னால், அழுகிறான்", "காலையில் எழுந்ததும் தேநீர் கொடுத்துப் பழக்காதே".

க. பழக்கிசு.

பழகு–தல் paḻagu-, செ.கு.வி. (v.i.) *1.* பயிலுதல்; to practise, to become inbitiated; to be used; to be habituated. "பழகு நான் மறையின் பொருளாய்" *(திவ். நாய்ச். 4, 10). 2.* உறவு கொள்ளுதல்; to become acquainted, to be familiar. *3.* பதப்படுதல் *(வின்.);* to become fitted, tempered, wholesome, as a utensil or tool. *4.* சாதுவாதல்; to become broken or trained, as an animal; to be tamed, as a savage (w). *5.* இணக்கமாதல்; to agree, as a house, village, etc. "ஊர் உடம்புக்குப் பழகி விட்டது". *6.* ஊடாடுதல் *(வின்.);* to be customary, familiar. *7.* நாட்படுதல் *(இ.வ.);* to be old. "பழகப்பழகப் பாலும் புளிக்கும்" *(பழ.).*

பழி–த்தல் paḻi-, *11* செ.குன்றாவி. (v.t.) *1.* இகழ்தல்; to blame, censure, ridicule, revile. "உலகம் பழித்தது" *(குறள். 290). 2.* புறங்கூறுதல்; to slander, caluminate. "இப்படி யொரு செயலைச் செய்து விட்டு வந்து நிற்கும் உன்னைப் பழிக்காமல் பாராட்டவா செய்வார்கள்".

பழு–த்தல் paḻu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* பழமாதல்; to ripen, grow ripe, as fruits, grain. "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றால்" *(குறள். 216). 2.* முதிர்தல்; to grow mature, arrive at perfection as in knowledge, science, piety. "மற்பழுத்தகன்ற மார்பத்து" *(சீவக. 435). 3.* மூப்படைதல்; to become old. "பழுத்த ஆள்" *(இ.வ.). 4.* பக்குவமாதல்; to become fit, as for salvation (w). *5.* கைவருதல்; to be trained to become experienced. "செந்நாச் சொற்பழுத்தவர்க்கும்" *(சீவக. 435). 6.* பருமுதலிய முற்றுதல்; to suppurate, come to head, as a boil. "சிரங்கு பழுத்துவிட்டது". *7.* மனங்கனிதல்; to melt, as heart. "பழுத்த மனத்தடியா" *(திருவாச. 24, 4). 8.* நிறம் மாறுதல்; to change colour by age, as ivory, horn, grain; to become pale or yellowish, as the body by disease; to be discoloured as the teeth (w). *9.* வெற்றியடைதல்; to become successful. "மேற்கண்ட வேலை பழுத்தது". *10.* செழித்தல்; to prosper. "பல்கிய கிளைஞரும் பழுக்க வாழுநர்" *(பிரமோத். 6, 47). 11.* மிகுதல்; to abound. "தொளிபழுத்த தண்பணை" *(காசிக். துருவ. 11). 12.* காரம் முதலியன கொடாமையால் (மகப்பெற்ற) புனிற்றீன்ற வயிறு பெருத்தல்; to become flably and weak, as the abdomen of a woman after - child - bith for want of stimulants. *13.* பழுப்பு நிறமாதல்; to take a fine brilliant colour, as gold, ret - hot iron. "பழுக்கச் சுட்ட பொன்". *14.* குழைதல்; to become flexible, plaint. "விற்பழுத்து" *(சீவக. 435). 15.* செலவழிதல் (மரபு வழக்கு); blow money on something. "மருத்துவரிடம் சென்று வந்ததில் ஆயிரம் உரூபாய் பழுத்துவிட்டது" *(உ.வ.).*

க. பண்.

பழுநு–தல் paḻunu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* கனிதல்; to grow ripe, become mellow. *2.* முதிர்தல்; to mature. "வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப் பூவும்" *(மதுரைக். 475). 3.* முற்றுப் பெறுதல்; to be full or perfect. "வளம் பழுநி" *(மலைபடு. 578).*

பள்கு–தல் paḽgu-, *5* செ.கு.வி. (v.i.) பதுங்குதல்; to cower, crouch. "பள்கி நோக்குபு பயிர்த்து நடந்தான்" *(சூளா. சுயம். 31).*

பற்றவை–த்தல் paṟṟa-vai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* மாழை களைப் பொருத்துதல் *(வழக்.);* to solder, weld together. *2.* நெருப்பு மூட்டுதல்; to kindle, as fire. *;3.* பகை விளைத்தல்; to make enemies; to sow discord.

க. பட்டிசு.

பற்று¹–தல் paṟṟ-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* பிடித்தல்; to grasp, seize catch, hold. "பற்றுமினென்றவர்" *(திருவாச. 3, 145). 2.* ஏற்றுக் கொள்ளுதல்; to receive, accept, embrace. "பற்றுதலன்றி யுண்டோ புகல்" *(கம்பரா. விபீடண. 108). 3.* மனத்துக் கொள்ளுதல்; to embrace, adhere to. "பற்றுக பற்றற்றான் பற்றினை" *(குறள். 350). 4.* தொடுதல்; to touch. "கீழ்பாற் பருவரைப் பற்றாமுன்மை" *(கம்பரா. தைலமாட்டு. 54). 5.* உணர்தல்; to apprehend, comprahend. "பற்றிய நூலில்லார்" *(ஏலாதி. 36). 6.* ஓட்டுதல்; to drive, as sheep bullocks. "ஆடு மாடுகளைப் பற்றிக் கொண்டு வா!".

க. பட்டு. ம. பற்றுக.

பற்று²–தல் paṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நிறம் பிடித்தல்;* to hold, as colour. *2. தீ முதலியன மூளுதல்;* to be kindled, as fire anger, desire, to be ignited. "ஒரு குடிசையில் பற்றிய தீ காற்றினால் அருகிலிருந்த குடிசைக்களுக்கும் பரவ ஆரம் பித்தது", "காடு பற்றி எரிந்தது". *3.* பயனுறுதல்; to have effect, as drugs. *4.*தகுதியாதல்; too be fitting, qualified. "பற்றாப்பணியும் பணியாக்கி" *(திருவானைக். கெசார. 57). 5. ஒட்டுதல்;* to stick. "பரிபவ முதுகிற் பற்றப் பொறித்தபோது" *(கம்பரா. கும்பகருண. 17). 6. பொருந்துதல்;* to become joined to or welded together as metals soldered. *7. போதியதாதல்;* to be sufficient. "உண்டையா மெனவும் பற்றா" *(கம்பரா. அதிகாயன். 217). 8. உறைத்தல்;* to smart, to red pungent, as pepper in the eyes. *9. உண்டாதல்;* to form, as rust flower, etc.

பற்று³–தல் paṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நோய் முதலியவை ஒருவரை தொற்றுதல்;* (of disease, etc.) catch; infect (with). "உன்னைப் பற்றியிருக்கிற கண் நோய் மற்றவர்களையும் பற்றக் கூடிய வாய்ப்பு இருக்கிறது", "நல்ல பழக்கங்களைவிடத் தீய பழக்கங்கள் நம்மை உடனே பற்றிக்கொள்வது ஏன்?". *2. (ஏனங்கள் முதலியவற்றில்) படிதல்; ஒட்டுதல்;* stick (to the bottom of a vessel). "பானையில் பற்றி யிருந்த சோற்றுப் பருக்கைகளைச் சுரண்டி கழுவினாள்". *3. (ஒருவரிடமிருந்து பணம், பொருள் முதலியவற்றைக்) கட்டாயப்படுத்திப் பறித்தல்;* sponge (sth, off). "என்னிடமிருந்து பற்ற வேண்டியதை யெல்லாம் பற்றிக் கொண்டான்".

பற்று⁴–தல் paṟṟ-, *5 செ.கு.வி.* (v.i.) *பொறுத்தல்;* to hold one self in patience; to wait. "சோறு சமையப் பற்றாமல்" *(ஈடு. 1, 3, 1).*

பற¹–த்தல் paṟa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. பறவை, பஞ்சு முதலியன வானத்திற் செல்லுதல்;* to fly, hover, flutter or float in the air, as light bodies. "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே" *(குறள். 338). 2. வேகமாய்ச் செல்லுதல்;* to move with celerity or great velocity; to hasten. "குரைகழன் மைந்தனைக் கொண்டு பறந்தான்" *(சீவக. 521). 3. விரைதல்;* to be in a hurry, to be overhasty. "நானேன் பறப்பேன் நராதிபனே" *(தனிப்பா. 1, 290. 7). 4. அமைதியற்று வருந்துதல்;* to be greatly agitated. "அழுதழுது பறக்கின்றானே" *(இராமநா. உயுத். 98). 5. சிதறியொழிதல்;* to be scattered, dispersed, to disappear. "அவன் பணமெல்லாம் பறந்து விட்டது".

க. பறு, ம. பறக்க.

பற²–த்தல் paṟa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. வானவெளியில் வேகமாகச் செல்லுதல்;* fly. "ஒலியின் வேகத்தில் பறக்கும் வானூர்திகளும் உண்டு", "அடிபட்ட பறவை பறக்க முடியாமல் கீழே விழுந்தது", "வால் சரியாக இல்லாததால் பட்டம் பறக்கவில்லை". *2. வானூர் தியில் செல்கை;* fly; travel by plane. "தொழில் தொடர்பாக வெளி நாட்டுக்கு பறந்து சென்றார்". *3. மேலே கிளம்பிக் காற்றில் அலைதல்;* (of dust, etc.) fly; give off. "புழுதி பறக்க வந்து நின்றது ஊர்தி", "பொறி பறக்கும் வெயில்", "ஆவி பறக்கும் குளம்பி". *4. வேகத்துடன் செல்லுதல் அல்லது செயல்படுதல்; மிகவும் விரைவுகொள்ளுதல்;* rush; speed; fly, hurry. "வெவ்வேறு திசைகளிலும் ஊர்திகள் பறக்க மிகுந்த இரைச்சலுடன் இருந்தது சாலை", "தொடர் வண்டி வருவதற்கு ஒரு மணி ரேம் இருக்கும் போதே பறக்கத் தொடங்கி விட்டார்".

பறம்பு–தல் paṟambu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அடித்தல்;* to beat thrash.

பறி¹–தல் paṟi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஓடிப்போதல்;* to slip out run away, as a horse; to flow out quickly, as water. "பண்டை வினைகள் பறிய நின்ற" *(தேவா. 395. 2). 2. நிலைபெயர்தல்;* to be displaced suddenly; to be capsized; to give way; to be titted; to be uprooted. *(க. பறி.). 3. வெளிப்படுதல்;* to escape, as breath in sighing as air from a bottle; to fly off, as steam, as heat from the system. "மூச்சுப் பறிகிறது". *4. எய்யப்படுதல்;* to be discharged as an arrow. *5. ஒலியுடன் வெளிப்படுதல்;* to explode; to be voided, as wind from the stomach, or bowels. "வாயு பறிகிறது". *6. முன் செல்லுதல்;* to move forward as the sight in reading, the feet in walking. *7. கட்டவிழ்தல்;* to be loosened, as bonds. "பந்தம் பறியப் பரிமேற்கொண்டான்" *(திருவாச. 8, 3). 8. இல்லாமற்போதல்;* to be lost, as property, office or influence. *9. தொலைவு நிலையாதல்;* to be at a distanceï to get to a distance. "பறியப்பார்".

பறி²–தல் paṟi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஒட்டிப்போதல்;* to sink in, as the belly by starvation. *2. திரட்டப்படுதல்;* to be gathered, collected as tribute, debt. "கடன் பறிய வில்லை". *3. அறுதல்;* to be cut off, torn apart, as roots. "விசின காற்றின் வேர் பறிந்த வெற்பினும்" *(கம்பரா. வாலிவ. 10). (க. பறி). 4. உண்டாதல்;* to sprout, shoot up. "கதிர் பறியவில்லை". *5. தணிதல்;* to subside, fall down, as temparature. "சூடு பறிந்தது". *6. தீர்மானப் படாதிருத்தல்;* to remain unsettled. "நெல் விலை பறியவில்லை".

பறி³–தல் paṟi-, *2 செ.குன்றாவி.* (v.t.) *தப்பிப்போதல்;* to escape from. "பாகரைப் பறிந்தோடி" *(கம்பரா. கும்பகருணன். 320).*

பறி⁴–தல் paṟi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஒழுகுதல்;* leak, fall by drops. "செம்புனல் பறிந்த" *(திருவிளை. தண்டி. 29). 2. போதல்;* go away. "எதிர்ப்பர் பின் பறிவர் நேர் போயெழுந்து வானேறு போல - வதிர்ப்பர்" *(திருவிளை. அங்க. 19).*

பறி⁵–த்தல் paṟi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. செடியிலிருந்து இலை முதலியவற்றை வலிய நீக்குதல்;* to pluck, crop, pick off with a twist. "அடகு பறித்துக் கொண் டட்டு" *(நாலடி. 289). 2. பிடுங்குதல்;* to weed, eradicate, to pull out, as an arrow. "மெய்வேல் பறியா நகும்" *(குறள். 774). 3. வலிதிற் கவர்தல்;* to take by force, to usurp, grasp, extort,

rub, plunder, confiscate. "வில்லினைப் பறித்தான்" *(கம்பரா. அதிகாயன். 168).* 4. தோண்டுதல்; to dig, excavate. "அவன் பறித்த குடியில் அவனே விழுவான்". 5. பாரம் இறக்குதல்; to unload. "பாரத்தையும் பறியாமல்" *(புறநா. 30, 11, உரை).* 6. அழித்தல்; to destroy. "எண்ணிலா வெள்ள மெஞ்சப் பறித்தபோது" *(கம்பரா. கும்பகருணன். 17).* 7. நீக்குதல்; to abandom to dismiss. "பரியா வடியாற் பறியான்" *(ஏலாதி. 47).*

பறி[6]–த்தல் paṟi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *(இலங்.)* ஊர்தியிலிருந்து பொருள்களை இறக்குதல்; unload. "வண்டிக்காரன் விறகைத் தெருவில் பறித்து விட்டுப் போய்விட்டான்".

பறை[1]–தல் paṟai-, *4 செ.குன்றாவி.* (v.t.) 1. சொல்லுதல்; to speak; say. "ஏதம்பறைந் தல்லசெய்து" *(திவ். திருவாய். 4, 6, 8).*

பறை[2]–தல் paṟai-, *3 செ.கு.வி.* (v.i.) 1. அழிதல்; to vanish; disappear. "பரவுவாரவர் பாவம் பறையுமே" *(தேவா. 1213, 11).* 2. தேய்தல்; to be wasted, worn out or impaired. "நெடுஞ்சுவர் பறைந்த கொட்டில்" *(பெரும்பாண். 189).* "பார்வையைத்த பறைந்தாள் விளவின்" *(பெரும்பா. 95).*

பறை[3]–த்தல் paṟai-, *11 செ.குன்றாவி.* (v.t.) 1. சொல்லுதல்; to say, speak. "பொய்ப்பசி பறைத்திளைய கள்வன்" *(தணிகைப்பு. களவு. 135).* 2. நீக்குதல்; to remove, destroy. "பாவம் பறைக்குற்றால் பறைக்கலாமே" *(சிவக.1434).*

பறையறை[1]–தல் paṟai-y-aṟai-, *3 செ.குன்றாவி.* (v.i.) செய்தி தெரிவிக்குமாறு பறையடித்தல்; to publish by beat of drum. "பறையறைந் தல்லது செல்லற்க வென்னா" *(கலித். 56).*

பறையறை[2]–தல் paṟai-y-aṟai-, *3 செ.கு.வி.* (v.i.) நெஞ்சடித்தல்; to throb; as heart, from fear. "இருவர்மா மனமும் பறையறைந் தயர்வுடனடுங்க" *(பாரத. இராசசூ. 24).*

பன்னு[1]–தல் paṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. பஞ்செஃகுதல்; to touse with the fingers, as cotton. "பன்னலம் பஞ்சிக்குன்றம்" *(சிவக. 2274).* 2. ஆராய்ந்து செய்தல்; to do anything with consideration or skill. "நீயனைய பொன்னே பன்னுகோலம்" *(திருக்கோ. 122).* 3. புகழ்தல்; to praise. "என்னாவினாற் பன்ன வெம்பிரான் வருக" *(திருவாச. 5, 99).* 4. பேசுதல்; to speak say, talk, declare. "பன்னியிரக்கும்" *(கம்பரா. கைகே. 41).* 5. படித்தல்; to read. "ஓலை வாங்கிப் பன்னுவனோ" *(பிரமோத். 13).* 6. நின்று நின்று பேசுதல் அல்லது படித்தல்; to speak, talk or read haltingly, as a learner. 7. பாடுதல்; to sing. "பல்கீதமும் பன்னினார்" *(தேவா. 408, 3).* 8. நரம்புக் கருவி குயிற்றுதல்; to play on stringed instruments. "யாழ்கொடுபன்னிநின்று பாடுவார்" *(பாகவத. 1, கண்ண. 24).* 9. பின்னுதல்; to weave. 10. கொய்தல்; to cut, reap. 11. அரிவாளைக் கூராக்குதல்; to sharper, as sickle.

பன்னு[2]–தல் paṉṉu-, *15 செ.கு.வி.* (v.i.) நெருங்குதல் *(சூடா.);* to be close, thick, crowded.

பனி[1]–த்தல் paṉi-, *11 செ.கு.வி.* (v.i.) 1. பனிகொள்ளுதல்; to be bedewed. "முழுமெயும் பனித்து" *(சிலப். 4, 6).* 2. துளித்தல்; to flow out; to be shed, poured up. "உவகைநீர் பனிக்குமுன்னே" *(பாரத. சம்பவ. 79).* 3. குளிர்தல்; to become cool. "வையகம் பனிப்ப" *(நெடுநல். 1).* 4. குளிரால் நடுங்குதல்; to shiver with cold. "மயில்பனிக்கு மென்றருளிப் படாஅமீத்த" *(புறநா. 145).* 5. நடுங்குதல்; to tremble; to be agitated; to quake. "உள்ளுநர் பனிக்கும் பாழாயினவே" *(பதிற்றுப்.13,19).*

பனி[2]–த்தல் paṉi-, *11 செ.கு.வி.* (v.i.) 1. விடாமழை பெய்தல் *(பிங்.);* to rain incessantly, constantly. 2. அஞ்சுதல்; to be in fear. 3. வருந்துதல்; to suffer, to be in pain. 4. ததும்புதல்; to spring forth, as tears, to swell. "பனித்துப் பனிவாருங் கண்ணவா" *(பரிபா. 6, 85).*

பனி[3]–த்தல் paṉi-, *4 செ.குன்றாவி.* (v.t.) 1. நடுங்கச் செய்தல்; to cause to tremble. "தெவ்வர் சுட்டினும் பனிக் குஞ்சுரம்" *(மலைபடு. 398).* 2. வருந்து; to cause to suffer. 3. அடித்தல்; to beat, as drum. "தொண்டகங் கோறலை பனிப்ப" *(கல்லா. 13).*

பனுவு–தல் paṉuvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) சொல்லுதல்; to say, utter. "பனுவுமா பனுவி" *(தேவா. 818, 6).*

gh

பா[1]–தல் pā-, *4 செ.குன்றாவி.* (v.t.) பகுத்தல்; to divide, distribute.

பா[2]–த்தல் pā-, *4 செ.குன்றாவி.* (v.t.) பகுத்தல்; to divide, distribute. "பாத்துண்பதுமிலர்" *(திருநூற். 89).*

பாகி–த்தல் pāgi-, *11 செ.குன்றாவி.* (v.t.) பங்கிடுதல்; to divide, apportion.

பாகிடு[1]–தல் pāgiḍu-, *12 செ.குன்றாவி.* (v.t.) பங்கிடுதல்; to divide, apportion.

பாகிடு[2]–தல் pāgiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) இரப்போர்க்கு ஈதல்; to give alms. "பாகிடுவான் சென்றேனை" *(தேவா. 54, 4).*

பாடு[1]–தல் pāḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. பண்ணிசைத்தல்; to sing, to chant. "மறம்பாடிய பாடினியும்மே" *(புறநா. 11).* 2. வண்டு முதலியன இசைத்தல்; to warble, as birds; to hum, as bees or beetles. "வண்டுபல விசைபாட" *(திவ். பெரியதி. 3, 9, 3).* 3. பாப்புனைதல்; to make verses, compose poems. "பாடினார் பல்புகழைப் பல்புலவர்" *(பு.வெ. 8, 1).* 4. பாட்டு ஒப்பித்தல்; to recite verses from a book. 5. பாராட்டுதல்; to speak endearingly. "தங்கள் காதலினாற் றகைபாடினார்" *(சீவக. 1337).* 6. போற்றுதல்; to praise. "பாடுகம் வம்மினோ பரிசின்

மாக்கள்" (புறநா. 32). 7. கூறுதல்; to declare, proclaim. "அறம் பாடிற்றே" (புறநா. 34). 8. வைதல்; to abuse. 9. பாடியோட்டத்திற் பாடுதல் (யாழ்ப்.); to sing in the game of pāṭi-y-ōṭṭam.

க. ஹாடு.

பாடுபடு–தல் pāṭupaṭu-, 20 செ.கு.வி. (v.i.) 1. மிக உழைத்தல்; to take pains, labour hard. 2. வருத்தப்படுதல்; to suffer or endure hardship.

பாடுபடுத்து–தல் pāṭupaṭuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. துன்பப்படுத்துதல் (உ.வ.); to torture, cause pain. 2. கடினவேலை வாங்குதல்; to set to hard labour, keep at hard work.

பாணி[1]–த்தல் pāṇi-, 11 செ.கு.வி. (v.i.) 1. சுணக்கப்படுதல்; to wait. "பாணியே மென்றார்" (கலித். 102). 2.பின் வாங்குதல்; to withdraw, back slide. "சமரிற் பாணியான்" (கந்தபு. மூவாயிரம். 59).

பாணி[2]–த்தல் pāṇi-, 3 செ.குன்றாவி. (v.t.) 1. பாவித்தல்; to consider, think, imagine conceive. "மனத்திலே பாணிக்கிறான்" (வின்.). 2. தாமதித்தல்; to delay. "பாணிநீ நின்சூள்" (பரிபா. 8, 56). 3. மதிப்பிடுதல்; to conjecture, estimate, form an opinion, value. "கையாலே பாணித்துச் சொன்னான்" (வின்.). 4. நிறைவேற்றுதல்; to achieve, manage to complete. "காரியத்தை யெப்படியோ பாணித்து விட்டான்".

பாதி–த்தல் pādi-, செ.குன்றாவி. (v.t.) இரண்டு சம பங்குகளாகப் பிரித்தல் (யாழ்.அக.); to halve, divide in halves.

பாதிடு[1]–தல் pādiḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) பங்கிடுதல்; to apportion, divide. "கைப்பொருள் கண்டோர் யார்க்கும் பாதிடு முரவோர்போல்" (கோயிற்பு. பதஞ். 82).

பாதிடு[2]–தல் pādiḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) பாதுகாத்தல் (வின்.); to protect, presserve.

பாதிடு[3]–தல் pādiḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) நெருக்குதல் (வின்.); to narrow, press.

பாதுகா[1]–த்தல் pādu-kā-, 4 செ.கு.வி. (v.i.) 1. தீங்கு, அழிவு, சிதைவு முதலியவை நேராமல் காப்பாற்றுதல்; காத்தல்; protect."எந்தச் சூழ்நிலையிலும் நாட்டைப் பாதுகாக்க இராணுவம் அணியமாக இருக்க வேண்டும்", "இவை தாத்தா பாதுகாத்த பொருள்கள்". 2. குடும்பம் முதலியவற்றை அல்லது கலைகளைப் பேணுதல்; பராமரித்தல்; provide for (a family); support; preserve (arts). "நாட்டுப்புறக் கலைகள் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன".

பாதுகா[2]–த்தல் pādu-kā-, 15 செ.குன்றாவி. (v.t.) 1. காப்பாற்றுதல்; to protect, defend, guard. "பைதலாவ தென்று பாதுகாத் திரங்கு" (திருவாச. 5, 77). 2. வாராமற்றடுத்தல்; to ward off, avert. "அதனைப் பாதுகாத்துக்கடிதற்பொருட்டு" (குறள்.11,அதி.முக.). 3. பராமரித்தல் (வின்.); to take care of cherish, foster.

பாந்து[1]–தல் pāndu-, 9 செ.கு.வி. (v.i.) பதுங்குதல் (சூடா.); to skulk, hide. "ஆந்தை பாந்தியிருப்ப" (கலிங்.127, புதுப்.).

பாந்து[2]–தல் pāndu-, 5 செ.குன்றாவி. (v.t.) பிறாண்டுதல்; to scratch, as with nails. "பூனை என்னைப் பாந்தி விட்டது" (நாஞ்.).

பாய்[1]–தல் pāy-, 4 செ.கு.வி. (v.i.) 1. தாவுதல்; to spring, leap, bound, gallop, prance. "தண்கடற் யுறிரைமிசைப் பாயுந்து" (புறநா. 24). 2. நீர் முதலியன வேகமாய்ச் செல்லுதல்; to flow, issue or gush out, as waterfall. 3. மேனின்று குதித்தல்; to jump dowm, as from a hill. "வரைபாய்த னன்று" (நாலடி. 369). 4. நீருள் மூழ்குதல்; to plunge, dive, as into water. "பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடு" (திருவாச.7,13).5.எதிர் செல்லுதல்; to move towards, as the needle attracted by a loadstone. 6. பரவுதல் (தொல். சொல். 361); to spread, as water, darkness; to radiate, as light; to extend. 7. விரைந்து படிதல்; to settle or faster on, as the light, the mind, the imagination. "மனம் அங்கே பாய்ந்தது". 8. தாக்குதல்; to attack, spring at, pounce on. பாய்கிற சேனை. 9. விரைந்தோடுதல் (வின்.); to run, dart, fly, flit across. 10. துரிதப்படுதல்; to hurry. 11. அகங்கரித்தல்; to be proud, arrogant. 12. மடிப்பு விரித்தல்; to unflod, as a cloth. "பாய்ந்தாய்ந்த தானை" (கலித். 96). 13. கூத்தாடுதல்; to dance. "பேய்த்தொகை பாய்தர" (திருக்கோ. 389). 14. ஓடிப்போதல் (வின்.); to flee, abscond.

பாய்[2]–தல் pāy-, 3 செ.குன்றாவி. (v.t.) 1. சினத்தோடு தாக்கிப்பேசுதல்; to abuse to accost roughly. "ஏன் அவனைப் பாய்கிறாய்?" (வின்.). 2. குத்துதல்; to pierce, penetrate to plunge into. "வெல்களிறு பாயக் கலங்கி யுதிரா மதிலு முளகொல்" (பு.வெ. 6, 4). 3. வெட்டுதல்; to cut. "வடிநவில் நவியம் பாய்தலின்" (புறநா. 23). 4. முட்டுதல்; to rush against, butt. "பாய்கிற மாடு", "நெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து" (முல்லை. 68).

பாய்[3]–தல் pāy-, 4 செ.கு.வி. (v.i.) 1. குறிப்பிட்ட திசையில் வேகத்துடன் தாவுதல்; தரையிலிருந்து கிளம்பி ஓர் இலக்கு நோக்கி விரைந்து விழுதல்; spring, leap, bounce (at sth.) "புலி பதுங்கிப் பாய்ந்தது" என்பது பழமொழி, "கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து செல்லக் கூடிய ஏவுகணை". 2. (நீர் முதலிய திரவம் அல்லது மின்சாரம், ஒளி போன்றவை) ஒன்றின் ஊடாக வேகத்துடன் செல்லுதல்; (of water; etc. or electricity, light, etc) flow; rush. "ஆற்றில் நீர் சலசலத்துப் பாய்ந்தது". 3.(கத்தி, ஈட்டி போன்றவை) வேகத்துடன் ஒரு பரப்பில் படுதல் அல்லது பட்டு உட்செல்லுதல்; (of knife, etc.) pierce; (of builet etc.,). "கூட்டத்தைக் கலைக்கக் காவலர் சுட்டத்தில் குண்டு பாய்ந்து இருவர் இறந்தனர்?".

4. ஊடுருவி இறங்குதல்; seep into; percolate; go in. "ஈரம் பாயாதகளிமண்" *(உரு.வ.).* "கருணை பாய்ந்த உள்ளம்". *5. குற்றத்துக்குப் பொறுப்பாக்குதல்;* bounce on (s.o); jump down someone's throat. "பொறுமை இழந்த பயணிகள் பேருந்து நடத்துநர் மீது பாய்ந்தனர்".

பாய்ச்சு–தல் pāyccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நீரை வெளிச்செலுத்துதல்;* to lead or conduct water; to irrigate. "அன்புநீர் பாய்ச்சி யறக்கதிர் ஈன்றதோர் பைங்கூழ்" *(அறநெறி. 5). 2. தள்ளுதல்;* to push over, upset, throw down. "இலங்கையைக் கீழுறப் பாய்ச்சி" *(கம்பரா. நிந்த. 63). 3. குத்துதல் (வின்.);* to thurst, plunge into. *4. உட்செலுத்துதல்;* to infuse, inject, introduce, as poison; to put in; to cause to enter. "தூணிலே பாய்ச்சினார்கள்" *(ஈடு. 2, 8, 9).*

ம. பாய்க்குக.

பாயடி–த்தல் pāyaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) பாய் மரத்தில் பாயை மேலேற்றுதல் *(முகவை. மீனவ.);* to hoist sail in the mast.

பார்–த்தல் pār-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. கண்ணால் நோக்குதல்;* to see, look at view, notice, observe. "பாராக்குறழா" *(கலித். 65). 2. ஆராய்தல்;* to examine, inspect, search into, scrutinise. "படுபயனும் பார்த்துச் செயல்" *(குறள். 676). 3. அறிதல்;* to know. "காலம்பார்த்து உள்வேர்ப்பர் ஒள்ளியவர்" *(குறள். 487). 4. எதிர்பார்த்தல்;* to look for expect. "வருவிருந்து பார்த்திருப்பான்" *(குறள். 86). 5. விரும்புதல்;* to desire, long for. "புதுமைப் பார்ப்பார்" *(கம்பரா. பூக்கொய். 9). 6. தேடுதல்;* to search for, seek. "ஆட்பார்த் துழலும் அருளில் கூற்று" *(நாலடி. 20). 7. வணங்குதல் (சூடா.);* to worship. *8. மதித்தல்;* to estimate, value. "அவன் வயிரம் பார்ப்பதில் கெட்டிக்காரன்" *(கொ.வ.). 9. கவனித்தல்;* to heed, pay attention to. *10. மேற்பார்த்தல்;* to look after, take care of, manage, superintend. "பண்ணை பார்க்கிறான்". *11. பார்வையிடுதல்;* to perusde, look through, revise. "இந்த ஆவணத்தை பாருங்கள்". *12. மருந்து முதலியன கொடுத்தல்;* to treat, administer medicine. "யார் மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கிறார்? ". *13. மந்திரித்தல்;* to charm a way by incantations exorcise. "இந்த நஞ்சுக்கடிக்கு மாந்திரிகன் பார்க்கவேணும்". *14. கருதுதல்;* to intend, design, attempt, purpose, aim at. *15. கடைக் கணித்தல்;* to look at with compassion. "பார்த்தொருகாலென்கவலை தீராயோ" *(தாயு. பராபர. 663).*

பாராட்டு–தல் pārāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. புகழ்தல்;* to applaud, commend, eulogise. "பண்பு பாராட்டு முலகு" *(குறள். 994),* "பரமனுக்கன்பரான வடியர் பாராட்டு வாரென்று" *(சிவரக. பாயிர. 20). 2. அன்பு செய்தல்;* to caress, fondle, to entertain. "புதுவது பன்னாளும் பாராட்ட" *(கலித். 24). 3. பெருமித முரைத்தல்;* to boast, make a parade of; to magnify, exaggerate. "பாசம்போய் நின்றவர்போற் பாராட்டி" *(தாயு. பராபர. 41).* "மைந்தரைத் தாங்கித்தாயார் மகிழ்ந்து பாராட்டு மோசை" *(அருணகிரிபு. திருநாட். 10). 4. கொண்டாடுதல்;* to celebrate. "பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல் " *(குறள். 524). 5. பலகாலுஞ் சொல்லுதல்;* to repeat, say over and over. "பயனில்சொல் பாராட்டு வானை" *(குறள். 196). 6. விரித்துரைத்தல் (வின்.);* to expatiate; to dwell on. *7. மனத்தில் வைத்தல்;* to mind; to be affected by; to take to heart. "துன்பத்தைப் பாராட்டாதே".

பாரி[1]–த்தல் pāri-, *11 செ.கு.வி.* (v.i.) *1. பரவுதல்;* to spread, expand, to around. "இவணலம் பாரித்திட்ட விந்நகர்" *(சீவக. 706). 2. பருத்தல் (கொ.வ.);* to be bulky, huge. "பாரிக்குமார முலை யுமையாட்கும்" *(மறைசையந்.). 3. மிகுதியாதல்;* to increase. "தாரிப்பின்றிப் பசிதலைக் கொள்வது பாரித்து" *(பெரியபு. இளையான். 9). 4. தோன்றுதல்;* to arise, appear, come into being. "பகல் செய்மண்டிலம் பாரித்தாங்கு" *(பெரும்பாண். 442). 5. ஆயத்தப்படுதல்;* to prepare. "பாயிய வெழுந்த வேங்கை பாரிக்குமளவில்" *(சூளா. துற. 19).*

பாரி[2]–த்தல் pāri-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. வளர்த்தல்;* to foster. "பண்பின்மை பாரிக்கும் நோய்" *(குறள். 851). 2. தோன்றச் செய்தல்;* to cause to appear. *3. அமைத்துக் கொடுத்தல்;* to cause to be obtained. "பரமபதம் பாகவத ரனைவருக்கும் பாரித்தானால்" *(அரிசமய. பத்திசா. 98). 4. உண்டாக்குதல் (வின்.);* to make, form, Construct, Create, Constitute. *5. நிறைத்தல்;* to fillup, complete. *6. அணிதல்;* to wear as ornaments. "கைவளை பாரித்தார்" *(இராமநா. பால. 21). 7. போற்றி வணங்குதல்;* to worship with flowers. "தடமல ரெட்டினாற் பாரித்தேத்த" *(தேவா. 961. 9). 8. வளைத்தல்;* to bend, as a bow. "சிலை பாரித்தானே" *(சீவக. 2286). 9. உறுதிமொழி யெடுத்தல்;* taking pledge. "பாரித்துத் தானென்னை முற்றப் பருகினான்" *(திவ். திருவாய். 4). 10. விரும்புதல்;* to desire. *11. காட்டுதல்;* to show, manifest. "முழுநஞ்சு நுதல்விழியும் பாரித்தான்" *(கோயிற்பு. பதஞ்ச. 34). 12. பரப்புதல்;* to diffuse. "பலகதிர்கள் பாரித்த பைம்பொன் முடியான்" *(திவ். இயற். 2, 44). 13. பரக்கக் கூறுதல்;* to dwell at length. "பயனில பாரித்துரைக்கு முரை" *(குறள். 193). 14. வெளிப்படுத்தல்;* to reveal, to express. "தம்பதி யென்றுரை பாரித்தான்" *(கோயிற்பு. திருவிழா. 2).*

பாரி[3]–த்தல் pāri-, *11 செ.குன்றாவி.* (v.i.) *1. சுமையாதல்;* to be heavy. *2. நோயினாற் கனமாதல்;* to fed heavy. "தலை பாரித்துக்கொண்டிருக்கிறது". *3. இன்றியமையாதது ஆதல்;* to become momentous.

பாரி[4]–த்தல் pāri-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. சுமத்துதல்;* to lay the burden on, ascribe, impute. "குற்றம் பாரிக்கின்றான்". *2. காத்தல்;* to guard, protect. "இரவிகுலம் பாரிக்கத்தகுவன்" *(கலிங். 224).* "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே" *(திருவாச. சிவபு. 64).*

பாரி[5]–த்தல் pāri-, *11 செ.குன்றாவி.* (v.t.) *ஒத்தல்;* to resemble."*காந்தனாம் பாந்தளைப் பாரித்தலர்ந் தனவே*" *(திருக்கோ. 324, உரை).*

பால்மாறு–தல் pāl-māṟu-, *9 செ.கு.வி.* (v.i.) *1. பால்வற்றிப் போதல்;* to become dry of milk. *2. தாய்ப்பாலுண்ணாது பிறவுணவு கொள்ளுதல்;* to be weaned.

பாவாற்று–தல் pā-v-āṟṟu, *5 செ.குன்றாவி.* (v.i.) *நெசவுப் பாவைத் தறிக்கு அணியம் செய்தல்;* to make the warp ready for the loom.

பாவு[1]–தல் pāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பரவுதல்;* to extend. "*மைப்பாவிய கண்ணியர் " (திருவாச. 24.6). 2. நிறைதல்;* to be diffused. *3. படர்தல்;* to spread, as creepers on the ground; to ramify as family connections. *4. ஊன்றுதல்;* to touch, skim along the ground. "*கால் நிலத்துப் பாவாமையால்*" *(சிலப். 23, 190, அரும்.).*

பாவு[2]–தல் pāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தளவரிசை யிடுதல்;* to lay in order; to pave; ceil with boards. *2. பரப்புதல் (யாழ்.அக.);* to spread. *3. நாற்றுக்கு நெருக்கி விதைத்தல்;* to seed closely for transplantins. *4. நாற்று நடுதல்;* to transplant. *5. தாண்டுதல்;* to leap or jump over.

பாவு[3]–தல் pāvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. (கல், பலகை போன்றவற்றைத் தளத்தில் வரிசையாக) பரப்புதல்;* pave (the floor with slabs, etc.). *2. (தரையில் காலை) பதித்தல்;* plant (foot on the ground); touch (the ground). "*காலைத் தரையில் பாவாமல் நடக்க முடியாது* ". *3. விதைகளைப் பரந்து விழச் செய்தல்;* sow seeds by scattering. "*நாற்றங்காலில் அடியுரம் இட்டபிறகு விதை பாவினார்கள்*".

பாழ்–த்தல் pāḻ-, *11 செ.கு.வி.* (v.i.) *1. அழிவடைதல்;* to go to ruin, to be laid waste. *2. பயனறுதல்;* to become useless. "*பாழ்த்த பிறப்பு*" *(திருவாச. 5,16). 3. சீர்குன்றுதல்;* to be accursed, as a place or a house. "*பாழ்த்த பாவிக்குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கும்*" *(கம்பரா. குகப். 70).*

பாழ்படு–தல் pāḻ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. கேடுறுதல்;* to be ruined or desolated; to become waste. "*வாழ்க்கை பருவந்து பாழ்படுத லின்று*" *(குறள்.83.). 2. ஒளி மங்குதல்;* to lose lustre. "*கண்பாழ்பட்டு*" *(நாலடி.,306.).*

பாழாக்கு[1]–தல் pāḻ-ākku-, *7 செ.கு.வி.* (v.t.) *1. (பணத்தை) பயனற்ற வழியில் செலவழித்தல்; வீணாக்குதல்;* waste; fritter (money, etc. away.). "*சொத்தையெல்லாம் குடித்தே பாழாக்குகிறான்*". *2. (நன்றின்) நல்ல தன்மையை இழக்கச்செய்தல்; கெடுத்தல்;* cause damage to; destroy; spoil. "*தோல் தொழிற்சாலைக் கழிவுகளால்விளைநிலங்கள் பாழாக்கப்படுகின்றன*".

பாழாக்கு[2]–தல் pāḻ-ākku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பயனற்ற தாகச் செய்தல்;* to spoil, mar, waste, destroy. "*என்னறிவை யெல்லாம் பாழாக்கி யெனைப் பாழாக்கும்*" *(தாயு.கற்புறு.5).*

பாற்று–தல் pāṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நீக்குதல்;* to remove. "*பகலோன் கெடுமெனப் பாற்றுவனபோல*" *(பெருங். உஞ்சைக். 38, 15). 2. அழித்தல்;* to ruin. "*பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்*" *(தேவா. 946, 3).*

பாறு[1]–தல் pāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to be destroyed, ruined. "*பழம்வினைகள் பாறும் வண்ணம்*" *(திருவாச. 51 - 1). 2. சிதறுதல்;* to be scattered. "*ஆலிவானிற் காலொடு பாறி* " *(அகநா. 9). 3. நிலைகெட்டோடுதல் (பிங்.);* to run, flee. "*அனுமன் பாறினன் *" *(கம்பரா. கும்பக. 182). 4. கிழிபடுதல்;* to be torn into pieces. "*பாறிய சிதாரேன்*" *(புறநா. 150). 5. அடிபறிதல் (யாழ்.அக.);* to give way; to be uprooted. *6. ஒழுங்கற்றுப் பரந்து கிடத்தல்;* to be in disorder; to be dishevelled. "*செம்முக மந்தி..... பாறுமயிர் திருத்தும்*" *(நற். 151). 7. பொருதல் (யாழ்.அக.);* to fight.

பாறு[2]–தல் pāṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *நீங்குதல்;* to leave. "*பயிலுறு பாவங்கள் பாறப் பெற்றுளாய்*" *(சிவரக. சிவனடியார். 23).*

பாறு[3]–தல் pāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஓடுதல்;* to run. "*பதுமுகனைக் கொடுபோகம் பத்துமுகன் போற் பாறுதலும்*" *(சேதுபு. வேதாள. 14).*

ã

பிக்கு–தல் pikku-, *8 செ.குன்றாவி.* (v.t.) *சிறு துண்டு களாக்குதல் (சேரநா.);* to break in to pieces.

ம. பிக்குக; தெ. பிகுலு, பிவுலு; கூ. பிஞ்ச.

பிகி–தல் pigi-, *4 செ.கு.வி.* (v.i.) *இறுகுதல்;* to be hard knit. "*சரீரம் பிகிந்திருக்கும்*" *(பைஷஜ. 235).*

க., பட. பிகி; தெ. பிகின்சு; து. பிகியுனி.

பிகு–த்தல் pigu-, *4 செ.கு.வி.* (v.i.) *ஊதை நோயின் இறுக்கத்தினால் உடம்பில் மாற்றம் ஏற்படுதல்;* to feel tightness of the limbs of the body due to rheumatism.

பிகுபண்ணு–தல் pigu-paṇṇu-, *12 செ.குன்றாவி.* (v.t.) *தன்னையருமைப்படுத்திக் கொள்ளுதல் (கொ.வ.);* to make oneself too dear.

ம. பிகயுக.

பிங்களி[1]–த்தல் piṅgaḷi-, *14 செ.குன்றாவி.* (v.t.) *அருவருத்தல் (யாழ்.அக.);* to loathe.

பிங்களி[2]–த்தல் piṅgaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *பின் வாங்குதல்;*

to retreat.

பிங்கு–தல் piṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பின்னால் செல்லுதல், அகலுதல், விலகுதல்;* to go back, to retreat, to go way. *2. தோல்வியுறுதல்;* to fail, to be backing *(கருநா.).*

க. பிங்கு, பிஞ்சு; பட. கிங்கு (அழுந்துதல்)

பிச்சையெடு–த்தல் piccai-y-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) இரந்து பெறுதல்; to beg. *'குழந்தைகளையும் பிச்சையெடுக்க பயன்படுத்தும் கூட்டம் நாட்டில் இருக்கிறது'.*

க. பிக்கெ பேடு; பட. பிச்செ எத்து.

பிசக்கு–தல் pišakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.அழுக் காக்குதல் (யாழ்ப்.);* to soil. *2. கசக்குதல்;* to press between the fingers, squeeze, crush. "*பிசக்கி மோந்த தித்தினை யொழிய*" *(திவ். திருநெடுந். 21, வ்யா. 163).*

க.பிசுகு, பிசுங்கு, கிதுகு, கிசகு, கிசிகு, கிசுகு; தெ. பிதுகு, பிசுகு; பட. பிசுகு.

பிசகு[1]–தல் pišagu-, *5 செ.கு.வி.* (v.i) *1. தவறுதல்;* to fail, err, blunder. "*கணை பிசகாத படி தொடுக்கிறேன்*" *(இராமநா. கிஷ்கிந். 5). 2. உறுப்புப் பிறழ்தல்;* to be dislocated as a joint; to sprain. "*மூட்டையை வண்டியில் ஏற்றியபோது தோள்பட்டை பிசகிவிட்டது* " *(உ.வ). 3. வழுக்கி விழுதல் (வின்.);* to make a false step, trip. *4. தடைப்படுதல் (வின்.);* to be hindered.

கோத. பெச்க் (தவறு); கொலா. பெக் (தவறு).

பிசகு[2]–தல் pišagu-, *5 செ.கு.வி.* (v.i) *(பாட்டில்)* ஓசை ஒழுங்கு விலகி மாற்றம் அடைதல்; to miss a note or beat.

பிசங்கு–தல் pišaṅgu-, *9 செ.குன்றாவி.* (v.t) அழுக்காதல் *(யாழ்ப்.);* to become dirty; to be soiled.

பிசறு–தல் pišaṟu-, *5 செ.குன்றாவி.* (v.t) கலத்தல்; to mingle, mix with the hand.

பிசிர்–தல் pišir-, *3 செ.கு.வி.* (v.i) சிதறுதல்; to drizzle, sprinkle, as rain. "*அவ்வில் பிசிர*" *(பதிற்றுப். 50,6).*

ம. பிதர் (மழை); து. பிசுனி (ஒழுகுதல்).

பிசிர்தட்டு–தல் pišir-taṭṭu-, *5 செ.கு.வி.* (v.i) *1. அடிப்படை (பண்ணோடு) இசையோடு இணையாமல், வாய்ப் பாட்டு அல்லது இசைக் கருவியிலே படும் ஏற்ற இறக்கம்;* discordant note. *பாடகரின் குரலில் பிசிர் தட்டியது. 2. மாழை அல்லது மர வேலைப் பாட்டில் போதிய மென்மை வராதபோது காணப்படும் சிறு சொரசொரப்பு அல்லது சிறாம்பு;* frayed end, rough end.

பிசுகு[1]–தல் pišugu-, *5 செ.கு.வி.* (v.t) தடுமாறுதல்; to sway from side to side, as a must elephant. "*மத்தகஜம்போலே பிசுகிப் பிற்காலித்து வருகிறபடி*" *(திவ். திருமாலை. 37, வ்யா. 121).*

பிசுகு[2]–தல் pišugu-, *5 செ.கு.வி.* (v.t) பண்டம் வாங்கிய பின் மேலும் கொஞ்சம் கொடுக்கும்படி கேட்டல் *(இக்.வ.);* to ask for gratuitous extra on a purchase. *2. இவறன்மையாயிருத்தல் (உலோபஞ் செய்தல்);* to be niggardly. *'அவன் தம்பிடிக்குப் பிசுகுகிறான்'.*

பிசுபிசு–த்தல் pišupišu-, *11 செ.கு.வி.* (v.i.) *1. பசைத் தன்மையாதல் (வின்.);* to be moist, sticky; to be glutinous, viscous adhesive or oily. *2. மழை தூறிக் கொண்டிருத்தல் (இ.வ.);* to drizzle, sprinde.

தெ. பிசபிசலாடு, பிசுனு (பசை); து. பிசிபிசி (சகதி), பிசிபிசி (பசைத் தன்மை); பட. பிசிபிசி (அழுகற்குறிப்பு).

பிசுபிசு[2]–த்தல் pišu-pišu-, *4 செ.கு.வி.* (v.i.) போராட்டம், கதவடைப்பு முதலியன எதிர்பார்த்த விளைவினை ஏற்படுத்தாமல் போதல்; to fizzle out. *'போராட்டம் பிசுபிசுத்தது'.*

பிசை–தல் pišai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மா முதலிய வற்றைச் சிறிதாக நீர்விட்டுக் கையால் நன்றாகத் துழாவுதல்;* to work with the thumb and fingers in mixing, to knead. "*கல்லைப் பிசைந்து கனியாக்கி*" *(திருவாச. 8, 5). 'களிமண்ணால் இன்னும் சிறிது நீர் ஊற்றிப் பிசை' (உ.வ.). 'பருப்புச் சோறு பிசைந்து குழந்தைக்கு ஊட்டினாள்' (உ.வ.). 2. கையாற் பிசைதல்;* to squeeze or mash between the palms; to crush and separate as kernels of grain from the ear. *'தினையைப் பிசைந்து கூலத்தைப் பிரி' (உ.வ.). 3. கசக்குதல்;* to rub, as the eyes. "*கண் பிசைந் தொருசே யின்னுங் கலுழினும்*" *(பிரபுலிங். கைலாச.). 'கண்ணோய் சமயத்தில் கண்ணைப் பிசையாதே' (உ.வ.). 4. தேய்த்தல்;* to rub or apply on the skin, as soap. "*இழைதுகள் பிசைவார்*" *(பரிபா. 10, 91). 5. உரசுதல்;* to strike against one another, as two bamboo branches moving in the wind. "*ஒலிகழை பிசைந்த*" *(அகநா. 39).*

க., தெ. பிசுகு; து. பிசுகுனி, பீசுனி; பர். பீச்; கட. பிசுகோல்ப்; கோண். பிசுகானா; குரு, பிக்கானா; கோத. பிச்க்; பட. பிசகு, பிசுகு.

பிஞ்சிற்பழு–த்தல் piñjiṟpaḻu-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* இளமையிலேயே முதிர்வடைதல்; to become prematurely mature or old. *2.* இளமையில் அறிவு பெருகுதல்; to be precocious.

பிட்கு–தல் piṭku-, *5 செ.கு.வி.* (v.i.) கத்துதல்; to make noise. "*ஓரி கதித்தெங்கும் பிட்க*" *(பதினொ. திருவால. மூத்த. 3).*

பிட்டுக்காட்டு–தல் piṭṭu-k-kāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* கூறுபடுத்தி விளக்கிச் சொல்லுதல்; to explain analytically. *2.* மறை வெளிப்படுத்துதல்; to reveal, disclose.

பிட்டுக்கொடு–த்தல் piṭṭu-k-koḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) பிரித்துக்கொடுத்தல்; to divide and distribute. *'இட்டிலியைப் பிட்டுக் குழந்தைக்குக் கொடுத்தாள்' (உ.வ.).*

பிட்டுவை–த்தல் piṭṭu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மறைக்கப்பட்டதை வெளிப்படையாக அல்லது விளக்கமாகச் சொல்லுதல்;* to expose. *'முதலாளி செய்யும் அட்டூழியங்களைத் தொழிற்கழகத் தலைவர் மேடையில் பிட்டு வைத்தார்'.*

பிடி[1]–த்தல் piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கைப்பற்றுதல்;* to catch, grasp, seize, clutch. "*அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின் றேனை*" *(திருவாச. 5, 27). 2. வயப்படுத்துதல்;* to secure. "*அவனைப் பிடித்தால் இக்காரியம் கைகூடும்*". *3. அகப்படுத்துதல்;* to capture, ensnare, entrap, catch. *4. கட்டுதல் (வின்.);* to tie fasten. *5. புகலடைதல்;* to take refuge in, depend on, cling to. "*உன்னை நான் பிடித்தேன் கொள்*" *(திவ். திருவாய். 2, 6, 1). 6. அடைதல்;* to obtain, take possession. "*பெருகிய செல்வநீ பிடி*" *(கம்பரா. கிளைகண். 23). 7. உட்கொள்ளுதல்;* to contain, hold. "*அந்தப் பெட்டி இவ்வளவையும் பிடிக்கும்*". *8. மேற்கொள்ளுதல்;* to assume, as a form. "*விசுவரூபம் பிடித்தானே*" *(இராமநா. சுந்தர. 19). 9. தாங்குதல்;* to bear, carry, suport. "*முட்டுக்கட்டை சுவரைப் பிடித்துக் கொண்டிருக்கிறது*". *10. நிறுத்திக் கொள்ளுதல்;* to keep back, deduct, detain with hold. "*வட்டியைப் பிடித்துக் கொள்*". *11. நிழற்படமெடுத்தல்;* to take a photograph. *12. மெய்ப்பாடு (அபிநயம்) முதலியன செய்து காட்டுதல்;* to expound, as by gesture, song, etc., *13. பற்றிக்கொள்ளுதல்;* to take on, as a colour. "*சாயம் பிடிக்கவில்லை*". *14. தெரிதல்;* to grasp, understand, comprehend. "*ஆசிரியர் கற்பித்ததை மாணவர் பிடித்துக் கொள்வதில்லை*". *15. விலைக்கு மொத்தமாகக் கொள்ளுதல்;* to buy, purchase wholesale, as at a market. "*சந்தையில் தவசம் (தானியம்) பிடித்து வந்தான்*" *(இ.வ.). 16. பொருத்துதல் (வின்.);* to join in a continued row or series, to nail on; to line with; to face agarment. *17. உறுதியாகக் கொள்ளுதல்;* to hold fast, adhere to. "*பெருமானுரை பிடித்தேம்*" *(கம்பரா. நிகும். 143). 18. குறிக்கொள்ளுதல்;* to undertake. "*பிடித்தது முடிக்க வல்ல விச்சையர்*" *(பிரபோத. 24, 52). 19. விதை வாங்குதல்;* to geld. "*விதை பிடித்த மாடு*". *20. அழுத்தித் தடவுதல்;* to massageï rub. "*சற்று உடம்பைப் பிடி*". *21. பிடித்துக் கொள் பார்க்க;* see piḍi-t-tu-k-koḷ. *22. மூடிய கையளவு கொள்ளுதல்;* to make a handful. "*பிடித்தெருவும் வேண்டாது*" *(குறள். 1037).*

பிடி[2]–த்தல் piḍi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. ஒட்டிக் கொள்ளுதல்;* to stick, adhere, cling. *2. விரும்புதல்;* to be agreeable, attractive pleasing to the senses or mind. "*எனக்கு அவனைப் பிடிக்கவில்லை*". *3. ஏற்றதாதல்;* to be suitable, adapted, conformable. "*அந்த ஊர் உடம்புக்குப் பிடிக்கவில்லை* ". *4. செலவாதல்;* to be required for expense. "*அந்த நகைக்கு நூறு ரூபா பிடிக்கும்*". *5. நிகழ்தல்;* to take place, occur. "*மழை பிடிக்கும்*". *6. அடங்குதல்;* to find room, go in. *கூடையில் எத்தனை பழம் பிடிக்கும்.*

பிடி[3]–த்தல் piḍi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. கையால் இறுக்கித் திரட்டுதல் அல்லது திரளை யாக்குதல்;* to make ball with the hand. "*பொரிவிளங்காய் பிடிக்க வேண்டும்*". *2. கையால் இறுக்கித் திரட்டிப் படிமையமைத்தல்;* to make immage by pressing things with the hand. "*பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது*". *(பழ.). 3. கையால் இறுக்கித் திரட்டுதல் போல் ஒன்றை இறுகப் பற்றுதல்;* to hold, as of umbrella. "*குடை பிடித்தான்*". *4. ஒன்று இன்னொன்றைப் பற்றுதல்;* to catch, as of a cat a rat. "*பூனை எலியைப் பிடிக்கும்*". *5. கோணியைப் பிடித்து வாங்குதல்;* to buy, purchase thing to a gunny bag. "*திருநெல்வேலிக்கு அரிசி பிடிக்கப் போயிருக் கிறார்கள்*". *6. விலைக்கு மொத்தமாகக் கொள்ளுதல்;* to buy, purchase whole sale, as at market. "*சந்தையில் தவசம் பிடித்து வந்தான்*" *(இ.வ.). 7. கயிற்றைப் பிடித்து வாங்குதல்;* to get animal by holding a rope which tied with it, as of cattle, dogs, etc., "*காங்கேயத்திலிருந்து ஒரு சோடி மாடு பிடித்து வந்திருக்கிறான்*". *8. கலத்தில் நீர் கொள்ளுதல்;* to fetch water in a vessel. "*குழாயில் நீர் பிடித்து வா*". *9. கழங்கு விளையாடுதல்;* to play with molucca - beans in a girls game. "*தட்டாங்கல் பிடித்து விளையாடுகிறார்கள். ஒற்றையா இரட்டையா பிடிக்கலாமா?*". *10. பொருந்துதல் (வின்.);* to join in a continued row or series, to nail on, to line with, to face a garment. "*நாற்காலிக் காலுக்கு வாங்கு பிடிக்க வேண்டும்*". *11. சுளுக்கு விழுதல்;* to contract, as a nerve or muscle by rheumatism or cramp. "*காலில் நரம்பு பிடித்துக் கொண்டிருக்கிறது*". *12. இறுக்கமாயிருத்தல்;* to tight, as a dress. *சட்டை முதுகிற் பிடிக்கிறது.*

பிடி[4]–த்தல் piḍi-, *7 செ.குன்றாவி.* (v.t.) *மனத்திற்கிசைந்த தாதல்;* to agreeable to mind.

பிடிகொடு–த்தல் piḍi-koḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தான் பிடிபடும்படி நிற்றல் (வின்.);* to allow oneself to be caught. *2. பேச்சு முதலியவற்றில் அகப்படுதல்;* to commit oneself, as in speaking.

பிடித்தம்செய்–தல் piḍittam-šey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *ஒன்றிற்கு ஏற்படுத்தப்பட்ட விலையில் குறிப்பிட்ட காரணங்களுக்காகச் சிறிய தொகையைக் கழித்தல்;* to deduct effected in a sum at the time or payment. "*இந்த முறை தரமான அரிசியாக இல்லாததால் மூட்டை ஒன்றுக்குப் பத்து ரூபா பிடித்தம் செய்கிறார்கள்*".

பிடித்தாட்டு–தல் piḍittāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஒன்றின் மேல் அதிகாரம் செலுத்துதல்;* to obsess. "*அப்பழக்கம் அவனைப் பிடித்தாட்டிக் கொண்டிருக் கிறது*" *(உ.வ.).*

பிடித்துக்கொள்(ளு)–தல் piḍittu-k-koḷ(ḷu)-, *10 செ.குன்றாவி.* (v.t.) *சுளுக்குதல் (கொ.வ.);* to contract, as a nerve or muscle by rheumatism or cramp.

பிடிபடு[1]–தல் piḍi-paḍu-, *20 செ.குன்றாவி.* (v.t.)

1. பிடிக்கப்படுதல்; to be caught, taken, seized. *2. புலப்படுதல்;* to be grasped, understood, comprehended. "நான் சொன்னது அவனுக்குப் பிடிபடவில்லை". *3. அடைதல்;* to attain, get. "மருவினோர் குணம் பிடிபடல் வையகத் தியல்பே" *(காஞ்சிப்பு. நகரப். 74). 4.* இணங்குதல்; to suit, to be suitable, to agree with.

பிடிபடு[2]–தல் piḍi-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) அளவுக்கு அடங்குதல், கட்டுப்படுதல்; to be within bounds. "தேர்வில் வெற்றி பெற்றுவிட்டோம் என்ற செய்தி கிடைத்ததும், அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை" *(உ.வ.).*

பிடிபோடு–தல் piḍi-pōḍu-, *20* செ.கு.வி. (v.i.) கைப்பிடி பொருத்துதல்; to fix up handle. "பட்டறைக்குப் போய் இந்த அறிவாளுக்குப் பிடிபோட்டுக் கொண்டு வரவேண்டும்" *(உ.வ.).*

து. புடிகுத்துணி.

பிடிவிடு–தல் piḍi-viḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* கைப்பிடிப்பு விடுதல்; to let go one's hold or grasp. *2.* பற்று நீங்குதல்; to give up attachement of one's religious opinion or faith.

பிடு–தல் piḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) இரண்டாக அல்லது துண்டு துண்டாகப் பிளத்தல்; to break into two or many pieces.

பிடுங்கித்தின்னு–தல் piḍungi-t-tiṉṉu-, *14* செ.குன்றாவி. (v.t.) *1.* கொத்தித் தின்னுதல்; to peck at. *2.* பறித்து உண்ணுதல்; to live by extortion. *3.* வருந்துதல்; to vex, annoy.

பிடுங்கு[1]–தல் piḍuṅgu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* பறித்தல்; to pull out, pull off, pluck up, extract. "மலை பிடுங்கினர்" *(கம்பரா. அகலி. 23). 2.* கவர்தல் *(அபகரித்தல்);* to extort, wrest. *3.* தடையை உடைத்துக் கொண்டு விரைந்து செல்லுதல்; to break through any obstruction and rush through with force, as a flood. "ஆறு பிடுங்கிக் கொண்டு போகிறது". *4.* கொத்துதல்; to bite, peck, strike. *5.* கொட்டுதல்; to sting. *6.* வருத்துதல்; to vex, annoy. "ஏன் என்னைப் பிடுங்குகிறாய்?".

ம. பிடுங்குக.

பிடுங்கு[2]–தல் piḍuṅgu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* மிகுதியாதல்; to be rife. "நோய் பிடுங்குகிறது". *2.* தொந்தரவு கொடுத்தல்; to give trouble. "கொசு பிடுங்குகிறது".

பிண்டமாக்கு–தல் piṇḍam-ākku-, *5* செ.குன்றாவி. (v.t.) ஒன்றாகச் சேர்த்தல்; to gather together.

க. பிண்டங்கெய்.

பிண்டி[1]–த்தல் piṇḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* திரளை யாக்குதல்; to make into a ball. "பிண்டித்து வைத்த உண்டியை" *(தொல். பெ. 63, உரை). 2.* தொகுத்தல்; to sum up.

து. பிண்டிகட்டுனி (சிப்பம்கட்டு).

பிண்டி[2]–த்தல் piṇḍi-, *4* செ.கு.வி. (v.i.) திரளுதல்; to gather into shape. "பிண்டித்துப் பெருகிற் றென்பார்" *(சீவக.1276).*

பிணக்கு–தல் piṇakku-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* கட்டுதல் *(வின்.);* to fasten. *2.* பின்னச் செய்தல்; to intertwine. "தார்தார் பிணக்குவார்" *(பரிபா.9,45).*

பிணங்கு–தல் piṇaṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* மாறுபடுதல்; to be at variance. "பிணங்கோ மெவரொடும்" *(திருநூற். 66). 2.* ஊடுதல்; to be in the sulks. *3.* செறிதல்; to be close, dense. "பிணங்கு நேரைம்பால்" *(சிலப். 7, 13). 4.* பின்னுதல்; to be linked together, intertwined. "பிணங்கு நூன்மார்பன்" *(மணிமே. 6, 151).*

பிணி–த்தல் piṇi-, *11* செ.குன்றாவி. (v.t.) *1.* சேர்த்துக் கட்டுதல்; to tie, fasten with ropes, fetter, link."பெரு வெளிற் பிணிமார்" *(மலைபடு.326). 2.* வசப்படுத்துதல்; to win over, keep one spell-bound. "கேட்டார்ப் பிணிக் குந் தகையவாய்" *(குற்,643).*

பிணிநீங்கு–தல் piṇi-nīṅgu-, *7* செ.கு.வி. (v.i.) நோயகலுதல்; to get cure as from disease.

பிணிமிதி–த்தல் piṇi-midi-, *4* செ.கு.வி. (v.i.) நெசவுப் பாவை மிதித்தல் *(வின்.);* to tread the loom, a weaver's technical word.

பிணியுண்டா–தல் piṇi-y-uṇḍā-, *6* செ.கு.வி. (v.i.) நோய் ஏற்படுதல்; to get disease.

பிணியுறு–தல் piṇi-y-uṟu-, *20* செ.கு.வி. (v.i.) நோயால் அழுந்துதல்; to get sick.

பிணை[1]–தல் piṇai-, *3* செ.கு.வி. (v.i.) *1.* சேர்தல், ஒன்று படுதல், இணைதல்; to entwine, conjoin, unite. "கழுநீர் பிணைந் தன்னவாகி" *(சீவக. 491). 2.* செறிதல், நெருக்கமாதல்; to be crowded, together. *3.* புணர்தல்; to copulate. "மங்கையர் தம்மொடும் பிணைந்து" *(திருவாச. 41, 6).*

பிணை[2]–த்தல் piṇai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* இணைத்தல்; to join together, link, unite, couple, as rafters. "மின் பிணைத்தாலன கடையும்" *(பதினொ. பட்டின. திருவேக. 35). 2.* கட்டுதல், இணைத்துக் கட்டுதல்; to tie, bind, fasten. *3.* கைகோத்தல்; to clasp each other's hands, as in dancing. "தழூஉப் பிணைபூஉ" *(மதுரைக். 614).*

பிணைப்படு–தல் piṇai-p-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) பிணைபோ-தல் பார்க்க; see piṇaipō-.

பிணைபோ–தல் piṇai-pō-, *8* செ.கு.வி. (v.i.) பொறுப் பேற்றுக் கொள்ளுதல் *(வின்.);* to give securitiy, to go bail.

பிணையடி–த்தல் piṇai-y-aḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) சூட்டடிற்காக எருதுகளைப் பிணைத்தோட்டுதல்; to yoke oxen in a row and drive them for threshing corn.

பித்தமேறு–தல் pittam-ēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பித்தம் மிகுதியாதல்;* to be bilious. *2. மிகு சினம் கொள்ளுதல்;* to be enraged. *அவன் பித்தமேறிப் பேசுகிறான் (உ.வ.).*

க. பித்தவேறு; து. பித்தஏறுனி, பித்தகெதருனி.

பித்துப்பிடி–த்தல் pittu-p-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கிறுக்குப் பிடித்தல் (பைத்தியமாதல்);* to become mad, crazy.

பிதற்று–தல் pidaṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அறிவின்றிக் குழறுதல்;* to chatter, babble, prate. "*இவை பிதற்றுங் கல்லாப் புன்மாக்கள்*" *(நாலடி.45). 2. இசிவு நோய் அவதியால் விடாது பேசுதல்;* to rave, as delirious person. "*ஓர்நாண் முற்றும் பிதற்றி னானே*"*(சீவக.1082).*

பிதிர்[1]–தல் pidir-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உதிர்தல்;* to be separated into small particles; to fall to powder. "*பிதிர்ந்து போயின பிறங்கல்க ளேழும்*" *(கந்தபு. யுத்தகாண். முதனாட். 50). 2. சிதறுதல்;* to become scattered. "*பிதிர்ந்தெழுந்தார்த்த பொடிக் குழீகுகி*" *(கம்பரா. பிரமாத். 100). 3. கிழிதல் (வின்.);* to be torn. "*சீலை பிதிர்ந்து போயிற்று*". *4. பரத்தல்;* to spread. "*பிதிரொளித் தவிசின்*" *(தணிகைப்பு. வீராட். 78). 5. மனங்கலங்குதல்;* to be bewildered. "*பிதிரு மனமிலேன்*" *(திவ். இயற். நான் மு. 84).*

பிதிர்[2]–த்தல் pidir-, *11 செ.கு.வி.* (v.i.) *1. உதிர்த்தல்;* to scatter, spread.

பிதுக்கு–தல் pidukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பிதுங்கச் செய்தல்;* to press out, squeege out, as pus or pulp, to express. "*பீட்பிதுக்கி*" *(நாலடி. 20). 2. உப்பும்படி செய்தல் (வின்.);* to blow up, as a bladder, to puff out, as the cheeks.

க. கிதுக்கு; தெ. பிதுகு; பட. பிசுக்கு.

பிதுங்கு–தல் piduṇgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. அமுக்குதலால் உள்ளீடு வெளிக் கிளம்புதல்;* to protrude, bulge, shoot out, gush out, to be expressed. "*கதிர் முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி*" *(தேவா. 56, 10). 2. சுவரிற் செங்கல் வெளி நீண்டிருத்தல்;* to jut out beyond the plumb - line, as bricks in a wall. *3. ஒலித்தல் (வின்.);* to sound.

பிந்து–தல் pindu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பின்னால் செல்லுதல், பின்னாதல்;* to go behind, to be behind, to fall in the rear. *2. கீழாழல்;* to go down, as in a class, to happen subsequently. *3. பிறப்பு, தோற்றம் ஆகியவற்றில் காலத்தால் பிந்தியதாதல்;* to be subsequent in time, birth or origin. *4. தாழ்தல்;* to be inferior in rank, etc., *5. விரைவு குறைதல்;* to be backward, tardy, slow to loiter, delay, lag, to lose time, as a clock or watch. *பிந்து காவினர் (கம்பரா. கிங்கர. 55).*

பிய்[1]–தல் piy-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கிழிதல்;* to be tattered, torn off, torn into bits as leaf or cake. *2. பிரிந்து போதல்;* to be drawn apart, loosened, parted, separated. *3. பஞ்சு முதலியன பன்னப்படுதல் (வின்.);* to be carded, as cotton. *4. ஊடறுதல் (யாழ்ப்.);* to be torn open, as hedge. *5. சிதைவுறுதல்;* to be put to rout, as an army.

பிய்[2]–த்தல் piy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கிழித்தல் (வின்.);* to rip, tear, pluck off, rend. *2. வேறாகுமாறு பிரித்தல்;* to separate into parts. *3. பஞ்சு முதலியன பன்னுதல்;* to card or pick cotton. *4. இலை முதலியவற்றைச் சிதைத்தல்;* to break in pieces, as thin cakes or wafers; to tear into small bits, as paper or leaves. *5. பிடுங்குதல்;* to pluck, break or pinch off, pull out. "*பேயு நாயும் வருடலம் பிய்த்துத் தின்ன*" *(உத்தரா. திருவோல.24). 6. ஊடறுத்தல் (யாழ்ப்.);* to break through a hedge. *7. வருத்துதல்;* to disturb, trouble.

பிரற்று–தல் piraṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *உரத்து ஒலியெழுப்புதல்;* to utter in aloud and emphatic tone. "*பிரற்றி யேங்கினர் சிலர்*" *(அரி. சமய. பரகா. 38).*

பிரி[1]–தல் piri-, *3 செ.கு.வி.* (v.i.) *1. கட்டவிழ்தல்;* to become disjoined or parted, unfastended. *2. பகுக்கப் படுதல்;* to be split, as words into parts. "*பிரிப்பப் பிரியா*" *(தொல். சொல். 410). 3. தொடர்பறுதல்;* to dissociate. "*கருத்தடிப்படையில் பிரிந்தோர் பலர் உண்டு*" *(உ.வ.). 4. வேறுபடுதல்;* to vary, as pāl; to disagree, as person. "*உயர்திணை மருங்கிற் பால் பிரிந்திசைக்கும்*" *(தொல். சொல். 4). 5. முறுக்கவிழ்தல்;* to be untwisted, as a rope, to be ripped or loosened as a seam or texture. *6. வகைப்படுதல்;* to be classified, analysed. "*இரு திணைப் பிரிந்த வைம்பாற் கிளவிக்கும்*" *(தொல். சொல். 10). 7. தண்டுதல் (வசூலித்தல்) (கொ.வ.);* to collect as a sum of money. "*அவனிடமிருந்து ஒன்றும் பிரியாது*".

ம. பிரியுக; க. பிரி.

பிரி[2]–தல் piri-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. விட்டுவிலகுதல்;* to part, separate, diverge to quit, depart. "*உவப்பத் தலைக் கூடியுள்ளப் பிரிதல்*" *(குறள். 394). 2. நினைத்தல்;* to think of, contemplate. "*யாண்டும் பிரியாது*" *(ஆசாரக். 21).*

ம. பிரிக்க; கோத. பிர்ய்.

பிரி[3]–த்தல் piri-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. பிரியச் செய்தல்;* to separate, dis-unite, sever. "*பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்*" *(குறள். 187). 2. வகுத்தல்;* (math.) to divide. *3. பகுத்தல்;* to split, as words into parts. "*பிரிப்பப் பிரியா*" *(தொல். சொல். 410). 4. முறுக்கவிழ்த்தல்;* to untwise, unite, disentangle. *5. புதிர் முதலியவற்றை விடுத்தல்;* to solve, unravel, as a riddle. "*இந்தப் பிதிரைப் பிரிக்கவேண்டும்*". *6. கட்டவிழ்த்தல்;* to pull to pieces, dismantle, as the thatch of a roof. *7. பங்கிடுதல்;* to distribute, portion out.

ம. பிரியுக; க. பிரி, கிரி; கோத. பிர்ச்.

பிரித்துக்கொடு–த்தல் pirittu-k-koḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கூறுகளாக்கிக் கொடுத்தல்;* to partition. "*பாகத்தைப் பிரித்துக் கொடுவென அவன் கேட்டான்*" *(உ.வ.).*

பிரித்துணர்–தல் pirittuṇar-, *3 செ.குன்றாவி.* (v.t.) *வேறுபாடு கண்டறிதல், வேறுபடுத்தியுணர்தல்;* to discriminate. "*உணர்வாளர்களையும் போலியர்களையும் முதலில் பிரித்துணர வேண்டும்*" *(உ.வ.).*

பிரித்துவை–த்தல் pirittu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தனித்தனியாக்கி வைத்தல்;* to separate into portions. "*சண்டையிடும் மாடுகளைப் பிரித்து வைக்க வேண்டும்*" *(உ.வ.).*

க. பிரிதிடு, கிரிதிடு.

பிரித்தெடு–த்தல் pirittẹ̄du-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சாறு முதலியவற்றைப் பிழிந்தெடுத்தல்;* to obtain juice etc. *2. தேர்ந்தெடுத்தல்;* to select by separate things. "*சுவையான பழங்களை முதலில் பிரித்தெடுக்க வேண்டும்*" *(உ.வ.).*

பிரிந்துபோ–தல் pirinidupō-, *8 செ.கு.வி.* (v.i.) *சேர்ந்திருக்கும் நிலையிலிருந்து அல்லது உறவு கொண்டிருக்கும் நிலையிலிருந்து விலகுதல்;* to be separate to go away (in different directions), to disperse. "*நண்பர்களைப் பிரிந்து போனதால் ஏற்பட்ட தொல்லை மிகுதி*" *(உ.வ.).*

பிரிவாற்று–தல் pirivāṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.i.) *தலைவன் பிரிவினைத் தாங்கியிருத்தல்;* to bear patiently the separation of lovers.

பிரைகுத்து–தல் pirai-kuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *உறைமோர் ஊற்றுதல்;* to curdle milk.

பில்கு–தல் pilgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சிறுதுவலை வீசுதல்;* to drip, as dew. "*நெடுங்கண் பில்கி*" *(சீவக. 1256). 2. பொசிதல்;* to exude, as honey from flowers. "*பில்குதேனுடை நறுமலர்*" *(தேவா. 556, 1). 3. கொப்பளித்தல்;* to gargle, spit. *4. வழிதல்;* to flow. "*கணங்களுடற்குருதி பில்கியோட*" *(கவர்பு. அந்தகா. 32).*

பில–த்தல் pila-, *11 செ.கு.வி.* (v.i.) *வலத்தல் (பலத்தல்);* to strengthen, justify confirm. "*உமக்கது பிலப்பதன்றே*" *(உபதேசகா. சிவத்துரோ. 98).*

பிலிற்று–தல் piliṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தூவுதல் (பிங்.);* to drizzle, drop, sprinkle. "*நன்னீர் பிலிற்றும் வாய்க் குளிர் கொள் சாந்தாற்றி*" *(சீவக.1673). 2. வெளிவிடுதல்;* to let out, as milk from the udder, to spill. "*செருத்த நீம்பால் பிலிற்ற*" *(அகநா. 14). 3. கொப்பளித்தல் (வின்.);* to gargle.

பிலுக்கு–தல் pilukku-, *5 செ.கு.வி.* (v.i.) *பகட்டுதல்;* to dress ostentationly; and show oneself off to act the dandy strat. "*பிலுக்குஞ் சம்பளநாதர்*" *(திருப்பு. 22).*

தெ. பெல்லின்சு.

பிழி[1]–தல் piḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சொரிதல்;* to shed, pour, as rain. "*நெடுங்கார் கிடந்து படும்புனல் பிழியும்*" *(கல்லா. 19, 23). 2. கையால் இறுக்கிச் சாறு வெளியேறச் செய்தல்;* to squeeze, express, press out with the hands. "*பிழிந்து கொள் வனைய பெண்மைப் பெய்வளைத் தோளி*" *(சீவக. 1496).*

ம. பிழியுக; க. பிழி, பிளி, கிளி, கிழி.

தெ.பிடுசு; து.பிண்டுனி (திருகுதல், முறுக்குதல்), பிண்டுனி (ஈரமான ஆடையைப் பிழிதல், பழம் முதலியவற்றின் சாற்றைப் பிழிதல்; கோத. இண்ட் (ஆடையைப் பிழிதல்); குட. புண்ட்; கொலா. பீண்ட், பிண்ட்; நா. பீண்ட் (பால் கறத்தல்); கட. பீச் (பால் கறத்தல்); கூய். பிரிப; குவி. பீசலி (பால் கறத்தல்) பிரா. பிரிஞ்சிங்; பட. இண்டு (ஆடையைப் பிழிதல்).

பிழி[2]–தல் piḻi-, *3 செ.கு.வி.* (v.i.) *வடிதல் (வின்.);* to drip, as oil from hair; to exude, as juice from fruits.

ம. பிழியுக; க. பிழி; தெ. பிடுட்சு.

பிழை[1]–த்தல் piḻai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. குற்றஞ் செய்தல்;* to do wrong. "*அன்பிழைத்த மனத்தரசர்க்குநீ யென் பிழைத்தனை*" *(கம்பரா. நகர்நீ. 13). 2. நடக்காது போதல்;* to fail. "*பிழையா விளையுணா டாயிற்று*" *(சிலப். 30, 1 95). 4. தவறிப் போதல்;* to be missing, as a child; to be lost, as an article. "*பிழைத்த பிடியைக் காணாது*" *(தேவா. 1026. 4). 5. உய்தல்;* to be emancipated from sins and births; to obtains salvation. "*உறைதலிந்தத் தரணி யெல்லாங்கண்டு பிழைத்திடத்தான்*" *(சிவரக. சிவதன்மா. 30). 6. துன்பத்தினின்று தப்புதல்;* to escape, as from an evil or a danger. "*பிழைத்தொரீஇக் கூற்றங் குதித்துய்ந்தார்*" *(நாலடி. 6). 7. உயிர் வாழ்தல்;* to live, to survive. "*நின்பின்னே தொடர்ந்தேன் பிழையேன்*" *(பிரபோத. 30, 19). 8. வாழ்க்கை நடத்துதல்;* to get on in, life, subsist. "*எத்தனை நாள் இப்படிக் கடன் வாங்கி பிழைக்க முடியும்*" *(உ.வ.).*

ம. பிழெக்க.

பிழை[2]–த்தல் piḻai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. நீங்குதல்;* to stop, cease. "*பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ*" *(கம்பரா. நாட். 10). 2. இலக்குத் தவறுதல்;* to miss, as an arrow. "*யானை பிழைத்த வேல்*" *(குறள். 772).*

பிழை[3]–த்தல் piḻai-, *4 செ.கு.வி.* (v.i.) *நோயினின்று விடுபடுதல்;* to recover from disease.

பிழைசெய்–தல் piḻai-šey-, *1 செ.கு.வி.* (v.i.) *தவறு செய்தல்;* to do mistake.

பிழைப்பி–த்தல் piḻaippi, *4 செ.குன்றாவி.* (v.t.) *உயிர் பிழைக்கச் செய்தல்;* to restore life.

ம. பிழெப்பிக்க.

பிழைபடு–தல் piḻaipaḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *தவறு செய்தல்;* to do mistake.

பிழைபார்–த்தல் piḻai-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தவறு களைத் திருத்துதல் (கொ.வா.);* to correct errors.

பிள்(ளு)[1]–தல் piḷ(ḷu)-, *6 செ.கு.வி.* (v.i.) *1. பிளவுண்டாதல்;*

to burst, open; to be rent or cut. *2. துண்டுபடுதல்;* to be broken to pieces. "*அப்பளம் பிண்டுபோயிற்று*". *3. மனம் வேறுபடுதல்;* to be at variance; to disagree. "*இருவர்க்கும் பிட்டுக் கொண்டது*".

பிள்(ளு)[2]–தல் piḷ(ḷu)-, *6 செ.கு.வி.* (v.i.) *1. விள்ளுதல், பிளவுறுதல்;* to cleave asunder, divide. "*அன்னை யடரும் பிட்டுப் பிட்டுண்டாய்*" *(குமர. பிர. மதுரைக் கலம். 1). 2. நொறுக்குதல்;* to crush. "*முடியொரு பஃதவையுடனே பிட்டன்*" *(தேவா. 883, 8).*

பிள்ளைப்பேறுபார்–த்தல் piḷḷai-p-pēṟu-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மகப்பேறு பார்த்தல்;* to attend to delivery.

பிள்ளைபெறு–தல் piḷḷai-peṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *குழந்தை பெறுதல்;* to deliver child. "*பிள்ளைப் பெறுவதற்காக மருமகள் தாய்வீடு செல்ல தேவை இல்லை என்கின்றனர் இக்கால மாமியார்கள்*" *(உ.வ.).*

பிள்ளையாண்டிரு–த்தல் piḷḷai-y-āṇḍiru-, *3 செ.கு.வி.* (v.i.) *கருவுற்றிருத்தல்;* to be pregnant.

பிள்ளைவளர்–த்தல் piḷḷaivaḷar-, *4 செ.கு.வி.* (v.i.) *குழந்தை களை வளர்த்தல்;* to rear children. "*பிள்ளை வளர்த்தலில் பெண்களின் பங்கு மேலானது*" *(உ.வ.).*

பிள[1]–த்தல் piḷa-, *4 செ.கு.வி.* (v.i.) *1. போழப்படுதல்;* to be split, cleaved, rent, cracked. "*வேய்பிளந்துக்க வெண்டரளம்*" *(கம்பரா. தாடகை. 8). 2. பிரிவுபடுதல்;* to be disunited. *3. வெடிபடுதல் (வின்.);* to be blasted, blown up. *4. ஊடுருவப்படுதல் (வின்.);* to be pierced penetrated. *5. மனமுடைதல் (வின்.);* to be broken, as heart. "*நேற்றைய நேர்ச்சி (விபத்து) மனத்தைப் பிளந்தது*" *(உ.வ.). 6. திறந்திருத்தல்;* to be open, as jaws or a wound; to gape."*வாய் பிளந்துக்க*" *(கம்பரா. தாடகை. 8).*

பிள[2]–த்தல் piḷa-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. போழ்தல்;* to split, cleave, rent, rive, to tear open. "*மலைகீழ்து பிளந்த சிங்கம்*" *(திவ். திருவாய். 7, 4, 6). 2. வெடிக்கச் செய்தல்;* to blast, as rocks; to blow up. *3. கட்டுக்குலைத்தல்;* to part asunder; to break through, as an army. *4. ஊடுருவுதல்;* to pierce, penetrate, as a weapon. "*ஓண்டழல் விண்பிளந் தோங்கி*" *(திருவாச. 18, 8). 5. போக்குதல் (வின்.);* to dissipate, disperse, as darkness or ignorance. *6. பாகுபடுத்துதல்;* to dissect analyse. "*யாதும் பிளந்தறியும் பேராற்றலான்*" *(சிறுபஞ். 58). 7. வெல்லுதல்;* to overcome, as in a controversy. "*அவனைப் பேச்சிலே பிளந்து விட்டான்*".

பிள[3]–த்தல் piḷa-, *3 செ.கு.வி.* (v.i.) *எலும்பில் வெடிப்புக் காணுதல்;* to fracture.

பிளந்துகட்டு–தல் piḷandukaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *(பாராட்டும் வகையில்) அருமையாக அல்லது சிறப்பாகச் செய்தல்;* to do extremely well. "*சின்னப் பையன் ஆங்கிலத்தில் பிளந்து கட்டிவிட்டான்*" *(உ.வ.).*

பிளவுபடு–தல் piḷavupaḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *பிளவுறு-தல் பார்க்க;* see piḷavuṟu-. "*ஒன்றாக இருந்த நண்பர்கள் இப்பொழுது பிளவுபட்டு போயினர்*" *(உ.வ.).*

பிளவுறு–தல் piḷavuṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *இரண்டாதல்;* to be split. "*விடுதலைக்காகப் போராடிய கட்சிகளும் பிளவுற்றுபோயின*" *(உ.வ.).*

பிளிர்–த்தல் piḷir-, *11 செ.குன்றாவி.* (v.t.) *கொப்புளித்தல் (சூடா.);* to gargle.

பிளிற்று[1]–தல் piḷiṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஆரவாரித்தல்;* to make a roaring noise. "*கயக்களியூரிற் பிளிற்றுவிடும்*" *(நான்மணி. 36). 2. வெகுளுதல்;* to fret with anger. "*பிச்சை புக்குண்பான் பிளிற்றாமை முன்னினிதே*" *(இனி. நாள். 40).*

பிளிற்று[2]–தல் piḷiṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கக்குதல்;* to spit out, vomit. "*பிளிற்றினும்ப ரொழிந்தெயிறானஞ் செய்யுங்கோள்*" *(சீவக. 1286).*

பிளிறு[1]–தல் piḷiṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *முழங்குதல்;* to trumpet; to roar, as an elephant. "*பிளிறுவார் முரசின்*" *(சீவக. 200).*

பிளிறு[2]–தல் piḷiṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கிண்டுதல்;* to turn up, hoe up, as the soil.

பிற்படு–தல் piṟ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பின்னதாதல்;* to be behind in time or place. "*பிற்படக்கிளவார்*" *(தொல். சொல். 286). 2. பிந்துதல்;* to slacken, delay, as in one's speed, speech, etc.

பிற–த்தல் piṟa-, *4 செ.கு.வி.* (v.i.) *1. தோன்றுதல், பிறத்தல்;* to be born as children. "*ஆன்ற குடிப்பிறத்தல்*" *(குறள். 681). 2. உருவாதல் (தொல். சொல். 115.);* to be produced, as sound, to be expressed, as oil from seeds, to be derived from, as a word from root. ஒரு வேர்ச் சொல்லினின்று நூற்றுக் கணக்கான சொற்கள் பிறக்கின்றன. "*ஊழலுக்கு விடிவுகாலம் எப்பொழுது பிறக்குமோ தெரியாது*" *(உ.வ.).*

ம. பிறக்க; தெ. பெட்டு; து. பெத்பினி, பெத்துனி; கோத. பெர்; கொலா. பெட்; நா. பெட்ட.

பிறக்கணி–த்தல் piṟakkaṇi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *புறக்கணி-த்தல் (வின்.) பார்க்க;* see puṟakkaṇi-.

பிறக்கிடு–தல் piṟakkiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பின்வாங்குதல்;* to retreat. "*அடிபிறக் கிட்டோனையும் பெண் பெயரோனையும்*" *(தொல். பொ. 65, உரை.). 2. பின்னிகழ்தல்;* to occur subsequently.

பிறக்கு–தல் piṟakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அடுக்குதல்;* to heap, pile up. ""*சூடு கோடாகப் பிறக்கி*" *(பொருந. 243.).*

பிறகிடு[1]–தல் piragiḍu-, *17 செ.குன்றாவி.* (v.t.) *பின்புறமாக அணிதல்;* to wear, as an ornament, so as to hang at the back. "*பீலித் தழையைப் பிணைத்துப் பிறகிட்டு*" *(திவ். பெரியாழ்.*

2, 6, 1.).

பிறகிடு²–தல் piṟagiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. தோற்றல்;* to flee; to be defeated. "*சமரிற் பிறகிடு முதியரு மபயரும்*" *(குமர. பிர. மீனாட். பிள். 38.). 2. கழிதல்;* to be past, time or event. "*பிற்கிட்ட மாதம்*". *3. பின் வாங்குதல்;* to back slide. "*பிறகிடல் நின் பெருந்தகையோ*" *(மனோன். v. iii, கொச்சகக் கலி).*

பிறங்கு–தல் piṟaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. விளங்குதல்;* to shine, glitter, glisten. "*பிறங்கொளி சேர் விண்ணாகி*" *(திருவாச. 7, 18). 2. உயர்தல்;* to be high, lofty, elevated. "*பிறங்குநிலை மாடத்து*" *(புறநா. 69). 3. சிறத்தல்;* to be great, exalted, dignified. "*பெருமை பிறங்கிற் றுலகு*" *(குறள். 23). 4. மிகுதல்;* to grow full, complete, abundant. "*பிறங்குநீர்ச் சேர்ப்பினும்*" *(புறநா. 49). 5. பெருகுதல்;* to overflow, inundate. "*மாய்ப்பதோர் வெள்ளம் போலும்.... பிறங்கி வந்து*" *(கலித். 146). 6. செறிதல்;* to be densely crowded, close together. "*பிணம் பிறங்கப் பெயர்த் திட்டன்று*" *(பு.வெ1, 10). 7. பெருத்தல்;* to grow large in size. "*மேதியன்ன கல் பிறங்கியவின்*" *(மலைபடு. 111). 8. நிலைமாறுதல்;* to change, move. "*மேல் பிறங்காப் பாண்டிலா*" *(சீவக. 175). 9. ஒலித்தல் (சங்.அக.);* to sound.

பிறப்பி¹–த்தல் piṟappi-, *18 செ.குன்றாவி.* (v.t.) *கருப்பையினின்று குழந்தையை வெளிப்படுத்தல்;* to cause to be born, to get the foetus out the womb.

பிறப்பி²–த்தல் piṟappi-, *18 செ.குன்றாவி.* (v.t.) *நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் ஆணை வெளியிடுதல்;* to issue an order, to promulgate an ordinance. "*கலவரப்பகுதியில் கண்டவுடன் சுடும்படி காவல்துறை ஆணை பிறப்பித்துள்ளது*" *(உ.வ.).*

பிறழ்–தல் piṟaḻ-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மாறுதல்;* to vary, change in form, aspect, colour or quality. "*சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா*" *(நாலடி. 110). 2. முறைகெடுதல்;* to be irregular, misplaced, out of order. "*களிற்றுகிர்ப் பிறழ்பற்பேய்கள்*" *(சீவக. 804). 3. வாக்கு மாறுதல் (கொ.வ.);* to break one's word. *4. மாறுபட்டுக் கிடத்தல்;* to lie in disorder. "*மயிலெருத்துறழணிமணி நிலத்துப் பிறழ*" *(கலித். 103). 5. துள்ளுதல்;* to flop, leap, as, fish. "*வயலாரல் பிறழ்நவும்*" *(பதிற்றுப். 13.1). 6. புடைபெயர்தல்;* to move. "*மாணெழி லுண்கண் பிறழுங் கயலாக*" *(கலித். 98). 7. பெயர்தல் (அக.நி.);* to be dislodged, dislocated. *8. விளங்குதல்;* to shine, glitter, to twinkle. "*ஒளி பிறழு நெடுஞ்சடை*" *(கல்லா. 54, 11). 9. முரிதல்;* to break, as waves into foam. "*திரை பிறழிய விரும் பௌவத்து*" *(பொருந.178). 10. திகைத்தல்;* to be perplexed. "*பிறங்க விடையிடைப் புக்குப் பிறழ்ந்து*" *(பரிபா. 19, 59). 11. நடுங்குதல் (சூடா.);* to tremble; to be tremulous. *12. இறந்துபடுதல்;* to die. "*பிணிபுநீ விடல்சூழிற் பிறழ்தரு மிவளென*" *(கலித். 3).*

பிறாண்டு¹–தல் piṟāṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உகிர் (நகம்) முதலியவற்றால் கீறுதல்;* to scratch, as with nails. "*பூனை வாலை இழுக்காதே அது பிறாண்டிவிடும்*" *(உ.வ.).*

பின்செல்(லு)–தல் piṉ-šel(lu)-, *7 செ.குன்றாவி.* (v.t.) *1. பின்தொடர்தல்;* to follow obsequiously. "*தொழுதுண்டு பின்செல்பவர்*" *(குறள். 1033). 2. இணங்கி யொழுகுதல்;* to conform to. *3. வழிபடுதல்;* to obey, submit. *4. கெஞ்சுதல் (வின்.);* to entreat, supplicate cringe.

பின்தங்கு–தல் piṉtaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. (கல்வி, பொருளியல் போன்றவற்றில்) நிறைவானது என்று கருதத்தகுந்த நிலையை எட்ட முடியாமலிருத்தல்;* to lag behind. "*பொருளியலில் பின்தங்கிய மாவட்டங்களுக்குத் தனிக்கவனம் செலுத்த வேண்டும்*" *(உ.வ.). 2. (விளையாட்டில் ஓர் அணி) தோல்வி காணும் நிலையில் இருத்தல்;* to trail as in sports. "*இடைவேளை வரை 2 - 3 என்ற கணக்கில் பின்தங்கியிருந்த அணி பிறகு வெற்றிபெற்று விட்டது*" *(உ.வ.).*

து. பிரபூருனி.

பின்பற்று–தல் piṉ-paṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பின் செல்லுதல்;* to follow. "*எமக்கிடு மெக்கிடும் எனப் பின்பற்றியே*" *(திருவிளை. வளையல். 28). 2. அன்பு வைத்தல்;* to set one's heart on, love. "*அன்பற்றவரைப் பின்பற்றுவாருளரோ*" *(வெங்கைக்கோ. 216). 3. போல செய்தல்;* to imitate, emulate. *4. இணங்குதல்;* to conform to.

பின்வாங்கு–தல் piṉ-vāṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பின் போதல்;* to recede, draw - back. "*அஞ்சிப் பின்வாங்குமடி*" *(நாலடி. 396). 2. தோல்வி யடைதல்;* to retreat, as in battle; to give way as in a contest. "*இரண்டு நாள் சண்டைக்குப் பின் பகைப்படை பின்வாங்கியது*" *(உ.வ.). 3. ஒப்பந்தத் தினின்று நெகிழ்தல்;* to with draw backslide, as from a bargain or an engagement. "*பணியைச் செய்வதாக முன்னர் ஒப்புக்கொண்டனர். ஆனால் இப்பொழுது பின்வாங்குகின்றனர்*" *(உ.வ.). 4. நெறி தவறுதல் (கிறித்);* to cease to live as a christian.

பின்று–தல் piṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பின்னிடுதல்;* to retreat, fall behind. *ஆற்றல் போகிப் பின்றினன் (கந்தபு. சிங்கமு. 175). 2. கீழ்ப்பட்டிருத்தல் (வின்.);* to fall below, in rank or quality. *3. மீளுதல்;* to turn back. "*பெரும்படை தான்வரிற் பின்றி நீங்கிற் பழி*" *(சீவக. 1827). 4. தொலைவாதல்;* to be far removed. "*மனையான வற்றுக் கறப்பின்றி*" *(திருநூற். 81). 5. ஒழுக்கம் முதலியவற்றிற் பிறழ்தல்;* to go astray. "*செலவுதான் பின்றாது பேணும் புகழான்பின்*" *(திணைமாலை. 87). 6. மாறுபடுதல்;* to change, to revert. "*பின்று மென்றாலு நம்பாற் புகழன்றிப் பிறிதுண்டாமோ*" *(கம்பரா. விபீடண. 106).*

பின்னடை–தல் piṉṉaḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *பின் தங்குதல்;* to lag behind. "*தமிழ்ச் சுவையை அறிந்தபின் தமிழ்ப் படிப்பதில் பின்னடைதல் இருக்காது*" *(உ.வ.).*

பின்னாட்டு–தல் piṉṉāṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *வழி நடத்தல்;* to follow in the wake. "*ஈஸ்வரத வாபி மானம் பின்னாட்டாத படி யிரக்கை*" *(திவ். பெரியதி. 11, 4, வ்யா. பக். 35).*

பின்னிடு–தல் piṉ-ṉ-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பின் செல்லுதல்;* to retire, fall back. *2. பின்புறமாதல்;* to get behind. *3. தோற்றல் (பிங்.);* to yield; to be defeated, as in a contest. *4. தாக்கித் திரும்புதல் (வின்.);* to recoil, rebound. *5. காலத் தாழ்வாதல்;* to be late. *6. பின்வாங்குதல்;* to retreat, resile from, withdraw.

பின்னிடை–தல் piṉ-ṉ-iḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *பின்னிடுதல்;* to flinch, fall back, retreat, yield.

பின்னில்[1]–தல் piṉṉil-, *14 செ.கு.வி.* (v.i.) *1. பிறகிடுதல்;* to stand back; to be reluctant. *2. இணங்குதல்;* to yield, submit. "*பின்னின்று தாயிரப்பக் கேளான்*" *(திவ். இயற். 2. 79). 3. இரந்து நிற்றல்;* to beg humbly for a favour. *4. பின்செல்லுதல்;* to wait on, follow. "*பின்னின் றேவல் செய்கின்றேன்*" *(திருவாச. 21, 2).*

பின்னில்[2]–தல் piṉṉil-, *14 செ.குன்றாவி.* (v.t.) *மறுத்தல் (யாழ். அக.);* to refuse.

பின்னு–தல் piṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கூந்தல், ஓலை முதலியவற்றை மிடைந்திணைத்தல்;* to plait, braid, lace, knit, weave, entwine, inter - weave. "*பின்னிவிட்ட பிடித் தடக்கை*" *(சீவக. 1658). சிறு கூடை பின்னுவதற்கு கூலியா? (உ.வ.). 2. பிணித்தல்;* to bind, hold fast. "*பின்னிய தொடர்நீவி*" *(கலித். 15, 18). 3. தழுவுதல்;* to embrace. "*பின்னிய காதலர்*" *(கலித். 32, 15). 4. கூறுதல் (சங். அக.);* to say, tell. *5. அடித்தல்;* to beat. "*நேற்று முதலாளி அத்திரட்டுப்பயலைப் பின்னிவிட்டார்*" *(உ.வ.). 6. (களைப்பு, தூக்கக் கலக்கம், குடி மயக்கம் போன்றவற்றால் கால்கள்) ஒன்றோடு ஒன்று மோதி இடறுதல்;* to falter, as feet. "*குடிகாரன் கால் பின்னி விழுந்தான்*" *(உ.வ.).*

பின்னோக்கு–தல் piṉṉōkku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வருவதை யெதிர்பார்த்தல்;* to have an eye on the consequences. "*சொல்லற்க முன்னின்று பின்னோக்காச் சொல்*" *(குறள். 184). 2. பின்புறம் பார்த்தல்;* to look back. *3. பின் வாங்குதல்;* to retreat, back side.

பினாத்து–தல் piṉāttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நோய் நிலையில் உளறுதல்;* to talk incoherently, as a patient in delirium.

Õ

பீச்சு[1]–தல் pīccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.நீர்மப் பொருளைக் கருவி மூலம் வேகமாக வெளியேற்றுதல்;* to squirt. *2. பால் கறத்தல்;* to milk, as a cow.

தெ. பீச்சுக.

பீச்சு[2]–தல் pīccu-, *5 செ.கு.வி.* (v.i.) *கழிச்சல் (பேதி) ஆதல்;* to purge, to have loose motions.

பீடி–த்தல் pīḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *துன்புறுத்துதல்;* to give pain, afflict, annoy, exert evil influence.

பீத்து–தல் pīṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *பீற்று-தல் (கொ.வ.) பார்க்க;* see pīṟṟu-.

பீந்து–தல் pīndu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கொடுத்தல் (அகநி.);* to give.

பீயாக்கு–தல் pī-y-ākku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அழிவுண் டாக்குதல் (இ.வ.);* to damage.

பீர்பூ–த்தல் pīrpū-, *4 செ.கு.வி.* (v.i.) *காமநோயால் பீர்க்கம்பூப்போல உடல் பசத்தல்;* to grow pale through love - sickness, resembling in colour the sponge - gourd flower. "*பெய் வளை..... நன்னலம் பீர்பூப்ப*" *(பு.வெ.12, இருபாள். 18).*

பீலிபோடு–தல் pīli-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *பந்தய முறியிடுதல் (யாழ்ப்.);* to cast lots.

பீழ்–தல் pīḻ-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பிடுங்குதல்;* to uproot. "*பெருமரம் பீழ்ந்து கொண்டெற்றி*" *(தேவா. 185, 9).*

பீழி–த்தல் pīḻi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *வருத்துதல்;* to afflict, forment, give pain to. "*அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை*" *(குறள். 843).*

பீற்று–தல் pīṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *வீண் பெருமை பேசுதல் (கொ.வ.);* to swagger, boast, hector.

பீறு[1]–தல் pīru-, *5 செ.கு.வி.* (v.i.) *கிழிதல் (பிங்.);* to be torn. "*பீறிற்றா மண்ட மென்பதோ ராகுலம்*" *(கம்பரா. தேரேறு. 33).*

ம. பீறு.

பீறு[2]–தல் pīṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கிழித்தல்;* to tear, rip, slit. "*அல்குற் பூந்துகிற் கலாயம் பீறி*" *(கம்பரா. ஊர்தே. 189). 2. கீறுதல்;* to scratch. *உகிர்(நகங்)களாற் பீறினான். 3. பிளத்தல்;* to split.

ò

புகட்டு–தல் pugattu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உட்புகுத்துதல் (யாழ்.அக.);* to insert, introduce. *2. ஊட்டுதல்;* to infust, instil; to feed; to pour down the throat, as milk. "*அல்லம தேவன் சரிதத் தீம்பால்..... புகட்டினானால்*" *(பிரபுலிங். துதி. 11).* "*குழந்தைக்குச் சங்கில் பால் புகட்டு*" *(உ.வ.). 3. அறிவுறுத்துதல்;* to impress on the mind, teach, instruct. "*செவி திறந்து புகட்ட*" *(திருவிளை. விடையிலச். 4).*

புகடு–தல் pugadu-, *6 செ.குன்றாவி.* (v.t.) *வீசியெறிதல்;* to throw. "*மரனொடு வெற்பினம் புகடவுற்ற பொறுத்தன*" *(கம்பரா. நாகபாச. 146).*

புகர்–தல் pugar-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. பாராட்டுதல்;* to praise. *2. புகழ்தல்;* to extol. *3. கைதட்டிப் பாராட்டுதல்;* to applaud.

ம. புகர், புகர்ச; க. பொகர்; தெ. பொகடு, பொவடு; து. புகருணி, புகழுணி, பொருநி, பொகழுணி; கூய். போங்க; மால. பொகல.

புகல்[1](லு)–தல் pugal(lu)-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. சொல்லுதல்;* to say, declare, state. "*புகைநிறக் கண்ணனும் புகன்று* " *(கம்பரா. யுத். மந்திரப். 45). 2. விரும்புதல்;* to desire. "*செருப்புகன் றெடுத்த*" *(திருமுரு. 67). 3. தெரிதல்;* to learn. "*மாயை புகன்றுளாய் கொலோ*" *(கந்திபு. கயமுகன்வ. 8).*

ம. புகலுக.

புகல்[2]–தல் pugal-, *14 செ.கு.வி.* (v.i.) *1. ஒலித்தல்;* to sound. "*புகன்ற தீங்குழல்*" *(சீவக. 940). 2. மகிழ்தல்;* to rejoice. "*முகம்புகல் முறைமையின்*" *(தொல். பொருள். 152).*

புகழ்–தல் pugaḻ-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. ஏத்துதல், துதித்தல்;* to praise, extol. "*புகழு நல்லொருவ னென்கோ*" *(திவ். திருவாய். 3, 4, 1). 2. பாராட்டுதல்;* to applaud. "*வாழுமூர் தற்புகழும்*" *(நாலடி. 383).*

மறுவ. சீர்த்தி, ஒளி, மீக்கூற்று.

புகழ்ந்துரை–த்தல் pugaḻndurai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பாராட்டுதல், மெச்சுதல்;* to praise, to be mouth, to eulogize.

புகற்று–தல் pugaṟṟu-, *6 செ.குன்றாவி.* (v.t.) *விரும்பச் செய்தல்;* to cause to desire. "*உள்ளு மாந்தரை யுள்ளம் புகற்றுமே*" *(சீவக. 870).*

புகு[1]–தல் pugu-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. அடைதல்;* to reach, attain, enter. "*உயர்ந்தவுலகம் புகும்*" *(குறள். 346). வீட்டிற்குள் புகுமுன் பாதத்தைக் கழுவிட வேண்டும் (உ.வ.). 2. தொடங்குதல்;* to make a beginning, commence. "*நக்குபு புக்கென*" *(கம்பரா. சிறப். 4).*

ம. புகுக, பூகுக; க. புகு, பொகு, குகு, கொகு, ஒகு; து. பொக்குனி; பட. குகு; கோத. உக்; துட. புக்.

புகு[2]–தல் pugu-, *3 செ.கு.வி.* (v.i.) *1. செல்லுதல்;* to go proceed. *2. தொடங்குதல்;* to begin. "*கடனீராடுவான்... புகும்*" *(திவ். இயற். 3, 69). 3. தாழ்நிலையடைதல் (வின்.);* to come to a mean or abject condition. *4. வாழ்நாளடைதல்;* to enter upon, as a particular age or stage of life. "*பிராய நூறு மனதர்தாம் புகுவ ரேனும்*" *(திவ். திருமாலை, 3). 5. ஏறுதல்;* to mount upon, ride. "*புகவரும் பொங்குளைப் புள்ளியன் மாவும்*" *(பரிபா. 10, 14). 6. நிகழ்தல்;* to happen, come to pass. *7. உட்படுதல்;* to undergo. "*சிறைதளை சங்கிலி புகிலும்*" (S.I.I.iii, 28). *8. அகப்படுதல்;* to caught. "*சூறைபுகுவன பாறையே* " *(தக்கயாகப். 64).*

புகு[3]–த்தல் pugu-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. போகவிடுதல்;* to cause to enter. "*வாயில் புகுப்பினும்*" *(தொல். பொருள். 149). 2. உட்செலுத்துதல்;* to insert, put in.

ம. புகுக்க, புக்கிக்க, பூகிக்க: து. பொக்காவுனி, பொக்பாவுனி.

புகுத்து–தல் puguttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *புகு[3]-த்தல் பார்க்க;* see pugu[3]-.

புகுது–தல் pugudu-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. புகுதல், உட்செல்லுதல், நுழைதல்;* to enter."*பொய்யிலங் கெனைப் புகுதலிட்டு*" *(திருவாச. 5, 92). 2. நிகழ்தல்;* to happen, come to pass. "*வேறொன்றும் புகுதாவிட்ட*" *(பெரியபு. எறிபத்த. 38).*

புகுந்துபார்–த்தல் pugundu-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஆழ்ந்து நோக்குதல்;* to look into a thing carefully, scrutinise, examine closely.

புகுந்துவிளையாடு–தல் pugundu-viḷai-y-āḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *தடை ஏதுமில்லாமல் நன்றாகச் செயற்படுதல்;* to give free rein to (one's proficiency is strength), to make a show of one's capability. *வினாத் தாள் எளிமையாக இருந்ததால் மாணவர்கள் புகுந்து விளையாடி விட்டார்கள் (உ.வ.).*

புகுர்–தல் pugur-, *3 செ.குன்றாவி.* (v.t.) *புகுதல்;* to enter.

புகுரு–தல் puguru-, *4 செ.குன்றாவி.* (v.t.) *புகுர்-தல் (இ.வ.) பார்க்க;* see pugur-.

புகை[1]–தல் pugai-, *3 செ.கு.வி.* (v.i.) *1. புகையெழுதல்;* to smoke. "*தீப்போற் புகைந்தெரிய*" *(திருவாச. 6, 36). 2. ஆவியெழுதல் (கொ.வ.);* to emit vapour or steam. *3. செய்தி வெளிப்படத் தொடங்குதல்;* to begin to be spoken of or made public; to come out. *4. வருந்துதல்;* to burn, as the heart; to be chagrined; to grieve. "*புண்வேற் புடையிற்புகைந்தாள்*" *(சீவக. 13). 5. சினங்கொள்ளுதல் (சூடா.);* to fume with anger; to be furious. *6. பயிர் முதலியன தீய்தல் (யாழ்ப்.);* to be blighted, as crops; to wither, as plants. *7. குடி முதலியன அழிதல்;* to be ruined as a family. *8. மாறுபடுதல்;* to become unfavourable. "*கரியவன் புகையினும்*" *(சிலப். 10, 102). 9. தொண்டை முதலியன கரகரத்தல்;* to be irritated, as the throat. "*தொண்டை புகைகிறது*".

ம. புகயுக; க. பொகெ, புகு, பொகு, கொகு; தெ. பொகையு, பொவடி, பொகசு, பொகுசு; புகெயுனி; பட. கொகெ.

புகை[2]–த்தல் pugai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. புகையச் செய்தல்;* to cause to smoke, to emit smoke. "*நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇ*" *(புறநா. 281). 2. புகையை உட்புகுத்தி உயிரிகளை (பிராணிகளை)க் கிளப்பி அகப்படுத்தியழித்தல் (திவ். இயற். நான்மு. 3 வ்யா);* to entrap and destroy, as by letting smoke into rat - holes. *3. கெடுத்தல்;* to ruin.

ம. புகைக்க; க. கொகெ.

புகை[3]–த்தல் pugai-, *4 செ.கு.வி.* (v.i.) *சினக்குறிப்புக் காட்டுதல் (சது.);* to fume with anger; to be inflamed with rage.

ம. புகயுக.

புகை[4]–த்தல் pugai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *புகையிலை முதலியவற்றின் புகையை உட்கொள்ளுதல்;* to smoke, as tobacco or other drugs.

புகைபிடி[1]–த்தல் pugaipiḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *புகையால் கரையேறுதல்;* to get black due to smoke, as of wall.

மறுவ. கரிபிடித்தல்.

புகைபிடி[2]–த்தல் pugaipiḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *புகைத்தல்;* to smoke cigars. *புகை பிடித்தலால் நன்மை யேதும் இல்லை (உ.வ.).*

க.கொகெசேது; து.புகெஒய்புனி.புகெபுட்புனி.

புகைபிடி[3]–த்தல் pugaipiḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *நச்சுத் தன்மையினைப் போக்க, மருந்துப் புகையின் முன்னின்று வேவு பிடித்தல்;* to exposure to the fumes of disinfection.

புகைபோடு–தல் pugai-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.)-, *20 செ.கு.வி.* (v.i.) *1. புகை எழுப்புதல்;* to create smoke. *"கொசுவை விரட்ட வேப்பிலை புகையோடு" (உ.வ.). 2. சுறாலைப்புகை போடுதல்;* to burn incense. *3.காயைப் பழுக்கவைக்க வைக்கோல் முதலியவற்றை எரித்துப் புகை யெழுப்புதல்;* to smoke hay stock etc. for fruits to quicken the process of ripening. *இந்தப் பழம் தானாகப் பழுத்ததா? இல்லை புகை போட்டுப் பழக்க வைத்ததா?*

க., பட. கொகெ காகு; து. பகெஒய்புனி.

புகையடி–த்தல் pugai-y-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *சோறு புகை சூழ்ந்து நாறுதல்;* to smell smoke as badly boiled rice. *"சோறு புகையடிக்கிறது".*

புகையூட்டு–தல் pugai-y-ūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.கூந்தல் முதலியவற்றுக்கு நறுமணப் புகையூட்டுதல்;* to perfume the hair with incense. *2.நோவுற்ற உடற்பகுதியில் மருந்துப் புகையேற்றி மருத்துவம் செய்தல் (வின்.);* to tincture, or medicate with smoke.

புகையூது–தல் pugai-y-ūdu-, *9 செ.கு.வி.* (v.i.) *1. காய்களைப் புகையினாற் பழுக்கச் செய்தல் (இ.வ.);* to quicken the ripening of fruits by fumigation. *2. பளபளப்பேற்றுதல், பொன் பூசுதல் (முலாம் பூசுதல்) (வின்.);* to gild, to line with gold.

மறுவ. புகைமூட்டம் போடுதல்.

புசி–த்தல் puši-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உட்கொள்ளுதல்;* to eat, reed on. *"நின்மாலியந் தீர்த்தம் புசியாதிருந்து மிலோம்" (சிவரக.தேவர்முறை.12). 2. வினைப்பயன் முதலியன கொண்டொழுகுதல் (அனுபவித்தல்);* to experience, as the fruits of past actions.

புட்டவி–த்தல் puṭṭavi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *ஆவியில் வேகவைத்தல்;* to cook in steam.

புடம்போடு–தல் puḍam-pōḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. தங்கம் போன்ற மாழை (உலோகம்)களை நெருப்பில் உருக்கித் தூய்மைப்படுத்துதல்;* to purify by melting (esp. gold), to refine metal. *"பழைய பொன்னைப் புடம்போட்ட பின்னர் நகை செய்வார்கள்" (உ.வ.). 2. மூலிகை போன்றவற்றை நெருப்பிலிட்டு எரித்து நீறா(பஸ்பம்)க்குதல்;* to calcine. *3. மிக வருத்துதல் (கொ.வ.);* to subject to extreme torture.

புடமிடு–தல் puḍam-iḍu-, *19 செ.குன்றாவி.* (v.t.) *1. பொன் முதலியவற்றைத் தூய்மைப்படுத்துதல்;* to refine metals. *"அதகமிகப் புடமிட்டு" (காசிக. ஓங்காரவி, சி. 6). 2. வெய்யிலில் வைத்தல் முதலிய வழிவகைகளாற் பக்குவப்படுத்துதல்;* to calcinate to preserve by burying under the earth, etc. *3. எரித்தல் (கொ.வ.);* to cremate.

புடவி–த்தல் puḍavi-, *4 செ.கு.வி.* (v.i.) *வீங்குதல்;* to be swollen, as from a blow.

புடி–த்தல் puḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *பொய் சொல்லுதல்;* to lie. *"பொய் புடிக்கிறான்" (சேலம் வழக்கு).*

புடை[1]–த்தல் puḍai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அரிசி முதலியவற்றைத் தவிடு தூசி முதலியன போம்படி முறத்திலிட்டுத் தட்டுதல்;* to winnow, sift. *"அரிசி புடைக்க ஆள் வேண்டும்" (உ.வ.). 2. அடித்தல்;* to beat, strike; to thresh, as grain. *"களப்படப் புடைத்தான்" (கம்பரா. சம்புமா. 24). 3. குத்துதல் (சூடா.);* to pierce; to thrash. *4. கொட்டுதல்;* to beat, as a drum; to tap, as on a tambourine. *"கணைவிடு புடையூஉ" (குறிஞ்சிப். 160). 5. சிறகடித்தல் (வின்.);* to flap, as the wings. *6. நூல் முதலியன எற்றுதல்;* to snap, as a carpenter's string. *"நூல் புடைத்தாற் போற் கடந்த" (சீவக. 1044). 7. துவைத்தல்;* to wash, as by beating. *"கந்தை புடைத்திட வெற்றுங் கற்பாறை" (பெரியபு. திருக்குறிப்பு. 125). 8. குட்டுதல்;* to cuff with the knuckle. *"சென்னியுறப் புடைத்தவர் பால்" (பிரமோத். 2, 59). 9. உடைத்தல்;* to break. *"புங்கவனிடுவளை புடைத்து" (திருவிளை. வளையர். 27). 10. நீந்துதல் (யாழ்.அக.);* to swim.

புடை[2]–த்தல் puḍai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வீங்குதல்;* to swell, dilate, rise, puff up, as from a blow. *"உடல் புடைப்ப வடித்து" (திருவாலவா. 34, 4). 2. பருத்தல்;* to be enlarged. *"மெச்சவே பருத்தல் முத்தமார் தனத்தி" (திருப்பு. 1176). 3. முன்பிதுக்கியிருத்தல், துரத்திக் கொண்டிருத்தல்;* to protrude. *"புடைப்புச் சிற்பம் வேலைப்பாடுடையது" (உ.வ.). 4. வெளிப்படுதல் (வின்.);* to come to light; to be exposed, divulged, talked of. *5. ஆரவாரித்தல்;* to utter a loud noise; to roar, rattle.

"திண்டேர் புடைத்த மறுகெல்லாம்" (கலித். 98). 6. அலைத்துப் பெருகுதல்; to flow in profusion, as blood. "குருதி தோள் புடைப்ப" (பு.வெ. 4, 16). 7. தட்டுதல்; to pat oneself, as on the shoulder.

து. புட்கெ, பொட்டெ; குட. புடூ; கோண். போரானா; நா. பொர்.

புடைகொள்(ளு)–தல் puḍai-koḷ(lu)-, 7 செ.கு.வி. (v.i.) புரையோடுதல்; to form a running sore. "கட்டி புடைகொண்டிருக்கின்றது" (இ.வ.).

புடைப்படு[1]–தல் puḍai-p-paḍu, 19 செ.குன்றாவி. (v.t.) அணுகுதல்; to approach; to be near. "என்னாரமுதைப் புடைபட்டிருப்ப தென்று கொல்லோ" (திருவாச. 27, 1).

புடைப்படு[2]–தல் puḍai-p-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. இடம்படுதல்; to be roomy, spacious. "மலைகளைப் புடைபடத் துளைத்து" (ஈடு,10,6,6). 2. மிகுதியாதல்; to be excessive."அரசனும் புடை படக் கவன்று" (இறை.1,பக்.7). 3. திரண்டு பருத்தல்; to swell in size; to become round. "முதிர்ச்சியாற் புடைபடுதல்" (குறள், 1274,உரை).

புடைபெயர்[1]–தல் puḍai-peyar-, 3 செ.கு.வி. (v.i.) 1. நிலை மாறுதல்; to change in condition or position, to become topsy-turvy or overturned. "நிலம்புடைப் பெயர்வ தாயினும்" (புறநா. 34). 2. வெளியேறுதல்; to go beyond; to trangress limits. "புடைபெயர் கடலென" (கம்பரா. எழுச்சி. 10). 3. அசைதல்; to move, change place. "நாப்புடை பெயராது" (மணிமே. 23,16). 4. தொழிற் படுதல்; to do an action. 5. எழுந்திருத்தல்; to rise up, get up. "கனவொடும் புடைபெயர்ந்து" (தக்கயாகப். 240).

புண்ணாக்கு–தல் puṇ-ṇ-ākku-, 15 செ.குன்றாவி. (v.t.) 1. புண் உண்டாக்குதல்; to do or cause to ulcer, make wound. 2. பிறர் மனத்தை நோகச் செய்தல்; to hurt, wound one's feelings. "பிறருடைய உணர்வுகளைப் புண்ணாக்குமாறு பேசக்கூடாது" (உ.வ.).

க. புண் படிசு; தெ. புண்டுசேயு.

புண்ணுறுத்து–தல் puṇ-ṇ-uṟuttu-, 8 செ.குன்றாவி. (v.t.) வருத்துதல்; to give pain. "நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ" (தொல். பொருள். 147).

புண்படு–தல் puṇ-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. காயமடைதல்; to become wounded. 2. வருந்துதல்; to be sorely grieved. "பெரியோர் மனம் புண்படும்படி பேசக் கூடாது" (உ.வ.).

க. புண்படெ.

புணர்[1]–தல் puṇar-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. பொருந்துதல் (திவா.); to join, unite. 2. கலவி செய்தல்; to cohabit, copulate. "மன்னியவளைப் புணரப் புக்கு" (திவ். பெருமாள். 6, 9). 3. அளவளாவுதல் (பிங்.); to associate with, keep company with. "ஊதியமில்லார்ப் புணர்தல்" (நாலடி. 233). 4. மேற்கொள்ளுதல்; to undertake. "பொருவகை புரிந்தவர் புணர்ந்த நீதியும்" (பெருங். வத்தவ. 6, 9).

மறுவ. துவள்தல், நொட்டுதல், பொலிதல், பிணைதல், புல்லுதல்.

ம. புணருக.

புணர்[2]–தல் puṇar-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஏற்புடையதாதல்; to suit, fit. "குரல் புணர்சீர்" (புறநா. 11). 2. விளங்குதல்; to appeal to the mind; to be understood. 3. எழுத்து முதலியன சந்தித்தல்; (gram.) to combine, coalesce, as letters or words in *sandi*. "மொழி புணரியலயே" (தொல். எழுத்து. 108). 4. உடலிற்படுதல்; to touch. "மென்முலை மேற்பனிமாருதம் புணர" (கம்பரா. சூர்ப்பண. 47). 5. கூடியதாதல்; to be possible. "புணரின் வெகுளாமை நன்று" (குறள். 308).

புணர்[3]–த்தல் puṇar-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. சேர்த்தல்; to combine, connect, unite. "நின்கழற்கணே புணர்ப்பதாக" (திருவாச. 5, 71). 2. எழுத்து முதலியன சந்திக்கும்படி செய்தல்; (gram.) to combine letters or words, in *sandi*. "பெயரோடு பெயரைப் புணர்க் குங்காலும்" (தொல். எழுத்து. 108). 3. நிகழ்த்துதல்; to do, make bring about. "தூமமென் குழலியர் புணர்த்த சூழ்ச்சியால்" (கம்பரா. திருவவ. 48). 4. பாகுபடுத்தல்; to analyse, choose, resolve. "நாவினாற் பூவை புணர்த்துப் பேசும்" (பு.வெ.12, வென்றிப். 12). 5. கூட்டிச் சொல்லுதல்; to speak connectedly. "தருக்கிய புணர்த்து" (தொல். பொருள். 50). 6. கட்டுதல்; to fasten, tie. "புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி" (பெரும்பாண். 218). 7. படைத்தல் (சிருட்டித்தல்); to create. "புணர்க்கு மயனாம்" (திவ். திருவாய். 2, 8, 3). 8. சிற்றிலக்கிய (பிரபந்த)மாகச் செய்தல்; to compose, as a *pirapandam*. "நாயகன் பேர் வைத்துப் புணர்ந்த புணர்ப்பு" (ஈடு. 5, 9, 3).

புணி–த்தல் puṇi-, 4 செ.குன்றாவி. (v.t.) சேர்த்துக் கட்டுதல்; to make bundle, to tie.

புணை–த்தல் puṇai-, 11 செ.குன்றாவி. (v.t.) கட்டுதல்; to unite, tie.

புதுக்கணி–த்தல் pudu-k-kaṇi-, 4 செ.கு.வி. (v.i.) அழகு பெறுதல்; to receive new beauty, have new attraction. "புதுக்கணித்த சிறகையுடைய சேவல்" (ஈடு.).

புதுக்கு–தல் pudukku-, 8 செ.குன்றாவி. (v.t.) 1. புதுப்பித்தல்; to renovate, make new. "ஒளிபெறப்புதுக்கி" (பெருங். வத்தவ. 4, 2). 2. அழகுபடுத்துதல்; to adorn. "உலகமெல்லாம் புதுக்குவானமைந்தேம்" (உபதேசகா. சிவபுண். 365). 3. மெருகேற்றுதல்; to polish, to make shines. "விளக்கைப்புளி போட்டுப் புதுக்கு"

(உ.வ.).

ம. புதுக்குக.

புதுப்பி–த்தல் puduppi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. பழுதுபார்த்தல்;* to renovate repair. *2. காலத்திற்கு ஏற்ப மாற்றியமைத்தல்;* to make new, remodel, refit, modernise. "வேலை வாய்ப்பு அட்டையைப் புதுப்பித்து விட்டாயா?" *(உ.வ.).*

புதுமொழி–தல் pudu-moḻi-, *3 செ.கு.வி.* (v.i.) *புதிய செய்தி கூறுதல்;* to announce fresh news."தூதர் புது மொழிந்துறக் கேட்டனை" *(உபதேசகா. சிவத்துரோ. 171).*

புதை¹–தல் pudai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மண்ணுகுள் மறைதல், ஏதாவது ஒரு பொருளாய் மறைக்கப்படுதல்;* to be buried, as treasure, to be covered, concealed. "அங்கண்மால் விசும்பு புதைய" *(மதுரைக். 384). 2. அமிழ்தல்;* to sink in, as a wheel, to enter, penetrate, as in arrow. "நெடுஞ்சுனை புதையப் புகுந்தெடுத் தளித்தும்" *(கல்லா. 13). 3. உள்ளடங்கியிருத்தல்;* to lie hidden, as a meaning. "இப்பாட்டுபுதைபொருளுள்ளது".

புதை²–த்தல் pudai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. அடக்கம் பண்ணுதல்;* to bury, to inter. "பிணத்தைப் புதைப்பதும் தமிழர் வழக்கம்" *(உ.வ.). 2. ஒளித்து வைத்தல்;* to hide, as treasure, to conceal. "தேமாங்கனியை..... அறையிற் புதைத்து" *(திருமந். 202). 3. வாய் செவி முதலியவற்றைப் பொத்துதல்;* to close, cover, as the mouth, ear. "சிந்துரப்பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து" *(கம்பரா.கைகேசி.சூழ்.104).4.போர்த்துதல் (வின்.);* to clothe, to cover. "புதையிரும்படா அம்போக நீக்கி" *(சிலப். 5, 4). 5. மறைத்துப் பேசுதல் (வின்.);* to speak in parables, to write obscurely. *6. மணிக்கற்கள் (இரத்தினம்) பதித்தல்;* to inlay, encase, as jewels. *7. வலிமையைக் குறைத்தல்;* to weaken, reduce, diminish. "புதைத்திலன் மிதத்திலன்" *(இரகு. முடிசூட். 117). 8. அமிழ்த்துதல் (யாழ்.அக.);* to cause to sink., to lower.

க. பொதிசு; தெ. பொதுகு; து. புதெக்க.

புய்¹–தல் puy-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பறிக்கப்படுதல்;* to be pulled out, torn off, wrested. "புய்ந்து கால்போகில் புலான் முகந்த வெண்குடை" *(களவழி. 39). 2.மறைதல்;* to disappear. "கோலப்பகற்களி கறான்றுகற் புய்ய" *(திவ். இயற். திருவிருத். 40).*

புய்²–த்தல் puy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பறித்தல்;* to extract, pull out, uproot. "புய்த்தெறி கரும்பின் விடுகழை" *(புறநா. 28). 2. பயத்தல்;* to produce, yield.

தெ.புச்சு; நா.புச்; பர்.புச்ச; கட.புச்கிர்; கோண். புச்கானா; குரு. புதுக்னா; மா. புசெ.

புய¹–த்தல் puya-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. புய்²-த்தல் 1* பார்க்க; see puy² 1. "மெய்வதி வேல்புயந்து மேல்வரும்" *(விநாயகபு. 37, 60). 2. வெளியேறுதல் (ஈடு. 9, 5, 10);* to depart, separate.

புய²–த்தல் puya-, *4 செ.குன்றாவி.* (v.t.) *பெயர்த்தல்;* to pluck, pull out. "நவைகண்டு வாட்கண் புயக்கவொரு மைந்தனைப் போவித்தார்" *(கச்சி. வண்டுவிடு. 293).*

புயலடி–த்தல் puyal-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *சூறாவளி காற்றடித்தல்;* to form cyclone.

புர–த்தல் pura-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. காத்தல், பேணி வளர்த்தல்;* to keep, preserve, protect, cherish, tend, govern. "வளங்கெழு சிறப்பி னுலகம் புரைஇ" *(பதிற்று ப். 50, 4). 2. மிகுதியாகக் கொடுத்தல் (பிங்.);* to give bountifully, bestow. *3. வணங்குதல் (பிங்.);* to reverence. *4. உதவுதல்;* to bestow favour. "மகோதராதிகள் புரக்க" *(தக்கயாகப். 138).*

க. பொரெ; தெ. ப்ரோசு; கோண். பொர்பனா; கொலா. புராய்; பர். பொரிப்.

AS. beorgen; Ger. bergew.

புரட்சிசெய்–தல் puraṭci-šey-, *4 செ.கு.வி.* (v.i.) *இருக்கும் நிலையை குறுகிய காலத்தில் மாற்றுவதற்குப் பணி புரிதல்;* to revolutionize.

புரட்டியடி–த்தல் puraṭṭi-y-aḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மாறாட்டமாய்ப் பேசுதல் (வின்.);* to prevaricate. *2. உண்மையை மறுத்தல்;* to deny a fact, to lie boldly.

புரட்டு¹–தல் puraṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உருட்டுதல்;* to turn a thing over, to roll. "முடையுடைக் கருந்தலை புரட்டு முன்றாளுகிருடையடிய" *(பட்டினப். 230). 2. செய்து முடித்தல்;* to accomplish, used in contempt. *3. கீழ்மேலாகத் திருப்புதல்;* to turn up, as the soil in ploughing. *4. கறி முதலியவற்றைக் கிண்டி வதக்குதல் (இ.வ.);* to fry, as gevetable *curry*. *5. குமட்டுதல்;* to nauseate, retch. வயிற்றைப் புரட்டுகிறது. *6. ஏய்த்தல் (வின்.);* to deceive, to falsify. *7. மாறுபடுத்துதல் (கொ.வ.);* to pervert, distort. *8. தேய்த்தல் (வின்.);* to smear, rub on the head, as oil. *9. அழுக்காக்குதல் (வின்.);* to stain, foul with dirt. *10. மறுத்துரைத்தல் (வின்.);* to deny, refute.

ம. புரட்டுக, பிரட்டுக; பட. பெரட்டு.

புரட்டு²–தல் puraṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பொத்தக விதழ்கள் முதலியவற்றைத் திருப்புதல் (கொ.வ.);* to turn over, as the leaves of a book.

புரம்பாய்வை–த்தல் purampāy-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மறைவாக வைத்தல்;* to keep aside.

புரள்(ளு)–தல் puraḷ(ḷu)-, *2 செ.கு.வி.* (v.i.) *1. உருளுதல்;* to roll over, to tumble over, to be upset. "அடித்துப் புரண்டு விழுந்தான். கழுதை புரண்ட களமாய் போய் விட்டது". *2. கழிதல்;* to slip off. "புல்லார் புரவி விடல்" *(குறள். 755). 3. அலைமறிதல்;* to roll, as waver.

"புரணெடுந்திரைகளம்" (கம்பரா. விபீடண. 27). 4. நிரம்பி வழிதல், கரை கடந்தோடுதல்; to full to the brim, to overflow. "ஆறுகரைபுரண்டு போகிறது". 5. அழுக்காதல் (வின்.); to become besmeared, soiled or dirty. 6. நீரிற்கலத்தல் (வின்.); to be soaked, drenched. 7. மாறுபாடடைதல்; to deranged, to be changed, as times, seasons customs or laws; to be overturened, as a state. 8. சொற்பிறழ்தல்; to go back upon one's word. 9. மறுப்புத் தெரிவிக்கப்படுதல் (வின்.); to be refuted or confuted. 10. சுற்றுதல் (வின்.); to revolve. 11. பணம் விரைந்து தொகுதல் அல்லது கைமாறுதல்; to abound. "அந்த ஊரில் பணம் புரள்கிறது". 12. மாறிமாறி வருதல்; to come alternately. "வெயில்களும் நிலாக்களும் புரள" (கம்பரா. பிரமா. 99). 13. சாதல்; to die. "கழுத்திலே புண்ணாகிப் புழுத்துப் புரண்டான்" (குரம்பரம். 105, ஆறா.).

ம. புரளுக. பிரளுக; க. பொரள், புருள்; தெ. பொரலு; து. புரெலுனி, புரெயுனி, பொளரலுனி, பொரெடுனி; கோத. பொர்ண், பொண்; பட. பெரணு.

புரளிபண்ணு–தல் puraḷi-paṇṇu-, 15 செ.கு.வி. (v.i.) குறும்பு செய்தல் (வின்.); to be waggish, mischievous.

புரி¹–தல் puri-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. விரும்புதல்; to desire. "புகுமுகம் புரிதல்" (தொல். பொ. 261). 2. ஊழ்கம் செய்தல் (தியானித்தல்); to meditate upon. "இறைவன்..... புகழ் புரிந்தார்" (குறள். 5). 3. செய்தல்; to do, make. "தினைத் துணையு நன்றி புரிகல்லா" (நாலடி. 323). 4. படைத்தல்; to create. "எவ்வுலகும் புரிவானை" (சிலப். பிரபஞ். வெங்கைக்க. 65). 5. ஈனுதல்; to bring forth, produce. "பொன்போறார் கொன்றை புரிந்தன" (திணைமாலை. 109). 6. கொடுத்தல்; to give. "பெருநிதி வேட்டன வேட்டன புரிந்தான்" (உபதேசகா. சிவவிரத. 257). 7. பட்டறிதல் (அனுபவித்தல்); to experience, suffer. "புண்டரிகை போலுமிவ ளின்னல் புரிகின்றாள்" (கம்பரா. சூளா. 1). 8. உற்றுப் பார்த்தல்; to gaze at, watch intently. "பயத்தாலே புரிந்து பார்க்கிறபோது" (திவ். திருநெடுந். 21. வ்யா. பக். 174). 9. உசாவுதல் (விசாரணை செய்தல்); to investigate, examine. "அறம் புரிந்தன்ன செங்கோனாட்டத்து" (புறநா. 35). 10. சொல்லுதல்; to say, tell. "அந்தணாளர் புரியு மருமுறை" (தேவா. 968, 5). 11. நடத்துதல்; to exercise, perform. "அரசு புரிந்தான்". 12. மேற் கொள்ளுதல்; to accept. "போக்குவரவு புரிய" (சி.போ. 2).

தெ. புர, புரலாடு.

புரி²–தல் puri-, 2 செ.கு.வி. (v.i.) 1. முறுக்குக் கொள்ளுதல்; to be twisted, to curl. "சுகிர்புரி நரம்பின்" (மலைபடு. 23). 2. திரும்புதல்; to turn. "மற்றையருகே புரியல்" (திவ். இயற். திருவிருத். 42, வ்யா. பக். 247). 3. மிகுதல்; to abound. "வனப்புப் புரிந்த தகையினான்" (பரிபா. 7, 51). 4. அசைதல்; to shake. "தார்புரிந்தன்ன" (பதிற்றுப். 66, 13).

ம. புரியுக.

E.spire; **L.**spira; **GK.** speria.

புரி³–தல் puri-, 4 செ.கு.வி. (v.i.) 1. விளங்குதல்; to shine, to be manifest. "சோதிபுரிந்திடுமதுவே" (சி.சி. 2, 82). 2. பொருள் விளங்குதல்; to be understood. நன்கு புரிகின்றது.

புரி⁴–த்தல் puri-, 11 செ.குன்றாவி. (v.t.) விரும்பச் செய்தல்; to cause to desire. "புரித்த தெங்கிள நீரும்" (சீவக. 2402).

புரி⁵–த்தல் puri-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. நிறைத்தல்; to fill up. "நன்மணிபுரித்தன" (சீவக. 1203). 2. பதித்தல்; to enchase, inlay. "முத்தம்வாய் புரித்தன" (சீவக. 150).

புரிந்துகொள்ளு–தல் purindukoḷ(ḷu)-, 10 செ.குன்றாவி. (v.t.) 1. செய்தியைப் பொருள் தெளிவோடு உள்வாங்குதல்; to understand. "அவர் சொன்னதை நான் புரிந்து கொண்டேன்" (உ.வ.). 2. நிலைமையையுணர்தல்; to realize, comprehend. "அவர் என் நிலைமையைப் புரிந்து கொண்டார்".

புரிப்பி–த்தல் purippi-, 11 செ.குன்றாவி. (v.t.) வளைந்து திரும்பச் செய்தல்; to cause to bend. "சந்ததம் திருத்தச் செம்பதம் புரிப்பித்து" (திருவாலவா. கடவுள். 2).

புரிவலி–த்தல் puri-vali-, 4 செ.கு.வி. (v.i.) கட்டுதல்; to tie, fasten. "முத்தாற் புரிவலித்து" (திருவாலவா. 32, 20).

புரிவிடு–தல் puri-viḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) கயிறு திரிக்கப் புரியை முறுக்குதல் (வின்.); to twist for making cord.

புரை¹–தல் purai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. ஒத்தல்; to resemble. "வேய்புரை பெழியி..... பணைத் தோள்" (பதிற்றுப். 65, 8). 2. தைத்தல்; to sew coarsely with a fibre or thread, to stitch. "தம்முடைய வஸ்திரத்தைப் புரையா நின்றாராய்" (ஈடு. 4, 10, 7). 3. மறைத்தல் (வின்.); to take means to hide, as a fault, to conceal.

புரை²–தல் purai-, 2 செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்; to be becoming or proper, to be appropriate. "புறத்தோ ராங்கட் புரைவ தென்ப" (தொல். பொ. 176). 2. நேர்தல்; to happen, occur. "புணர்ந்தோரிடை முலையல்கல் புரைவது" (பரிபா. 6, 55). 3. மூச்சுத் திணறுதல் (இ.வ.); to be suffocated.

க. புருள்.

புரை³–த்தல் purai-, 11 செ.குன்றாவி. (v.t.) பெருமையாதல்; to be great. "பொழிற்பூம் புகலி" (தேவா. 73, 11).

புரை⁴–த்தல் purai-, 11 செ.கு.வி. (v.i.) 1. குற்றப்படுதல்; to be defective. 2. தப்புதல்; to escape. "உணரவல்லார்க்குப் புரைத்தெங்கும் போகான்" (திருமந். 1774). 3. ஒரு வாய்ப் பாட்டிற்கு (தானத்தே) இசை நழுவுதல்

(திவாலவா. 57, 26); (mus.) to slip into one note when trying another. *4. மறைவு வெளிப்படுதல் (வின்.);* to come out, as a secret.

தெ. பொரபடு, பொரபோவு.

புரையேறு–தல் purai-y-ēṟu-, *6 செ.கு.வி.* (v.i.) உணவுப் பொருள் தனக்குரிய வழியிற் செல்லாது மூச்சுக் குழலிற் சென்று அடைத்துக் கொள்ளுதல்; to be suffocated by food passing into the wind pipe. "சாப்பிடும்போது பேசாதே, புரையேறிவிடும்" *(உ.வ.).*

புரையோடு–தல் purai-y-ōḍu-, *5 செ.கு.வி.* (v.i.) புண்ணில் உட்டுளையுண்டாதல்; to become fistulous as an ulcer.

புல்கு–தல் pulgu-, *6 செ.கு.வி.* (v.i.) *1.* அணைதல்; to embrace. "அன்னந் தன்னினம் பெடையொடும் புல்கி" *(தேவா. 584. 9). 2.* புணர்தல்; to copulate. *3.* நண்பினராய் மருவுதல் *(யாழ்ப்.);* to be attached, as friends.

ம. புல்கு, புல்லுக.

புல்லரி–த்தல் pul-l-ari-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* மயிர்க் கூச்செறிதல்; to make the flesh creep; to horripilate. *2.* மாடு முதலியன உணவு விருப்பமின்றிப் புல்லைத் துழாவுதல்; to show aversion towards fodder, as cattle. "மாடு தீவனந் தின்னாது புல்லரிக்கும்" *(மாட்டுவா. 88).*

மறுவ. மயிர்க்கூச்செறிதல்.

தெ. புல்லரி.

புல்லார்–தல் pul-l-ār-, *3* செ.கு.வி. (v.i.) *(புல்லைத் தின்னுதல்)* தோல்வியுறுதல்; (lit.) to eat grass to submit, surrender. "பகைவர் புல்லார்க" *(ஐங்குறு. 4).*

புல்லு[1]–தல் pullu-, *6 செ.குன்றாவி.* (v.t.) *1.* தழுவுதல்; to embrace. "என்னாகம்..... புல்வி" *(பு.வெ. 9, 49). 2.* புணர்தல்; to copulate. "தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்" *(குறள். 1303). 3.* பொருந்துதல்; to agree, suit. "அல்லா வாயினும் புல்லுவவுளவே" *(தொல். பொ. 221). 4.* வரவேற்றல்; to receive warmly. "புல்லா வகம் புகுமின்..... என்பவர் மாட்டு" *(நாலடி. 303). 5.* ஒத்திருத்தல்; to resemble equal. "புத்தே ளுலகிற் பொன்மரம் புல்ல" *(தொல். பொ. 289, உரை). 6.* ஒட்டுதல் *(வின்.);* to cling to; to join.

புல்லு[2]–தல் pullu-, *6 செ.கு.வி.* (v.i.) நட்புச் செய்தல்; to contract friendship. "ஒல்லா ரிடவாயிற் புல்லிய பாங்கினும் " *(தொல். பொ. 76, உரை).*

புல்லுமேய்[1]–தல் pullu-mēy-, *3* செ.கு.வி. (v.i.) புல்லாற் கூரை போடுதல் *(வின்.);* to thatch.

புல்லுமேய்[2]–தல் pullu-mēy-, *3 செ.கு.வி.* (v.i.) புல்லுத் தின்னுதல்; to graze.

புல்லுமேய்[3]–த்தல் pullu-mēy-, *4 செ.குன்றாவி.* (v.t.) ஆடு மாடுகளைப் புல்லுத் தின்னச் செய்தல்; to graze.

புல்லுறு–த்தல் pulluṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) நிகழ்த்துதல்; to cause to occur, to perform. "மேலைநாள் புல்லுறுத்த தியாவும்" *(கம்பரா. சடாயுகாண். 43).*

புல[1]–த்தல் pula-, *4* செ.கு.வி. (v.i.) *1.* மனம் வேறுபடுதல்; to pout, sulk; to be displeased. "புலத்தலு மூடலு மாகியவிடத்து" *(தொல். பொ. 157). 2.* துன்புறுதல்; to suffer pain. "போகும் புழையுட் புலந்து" *(ஏலாதி. 11).*

புல[2]–த்தல் pula-, *4 செ.குன்றாவி.* (v.t.) வெறுத்தல்; to dislike. "பலபுலந்து" *(பொருந. 175).*

புல[3]–த்தல் pula-, *4 செ.குன்றாவி.* (v.t.) அறிவுறுத்துதல்; to make known; to instruct. "புலக்க வேண்டுறுமக் காதை" *(உபதேசகா. சிவத்துரோ. 264).*

புலங்கொள்(ளு)–தல் pulaṅ-koḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1.* விளங்குதல் *(வின்.);* to be clearly understood. *2.* வெளிச்சமாதல்; to be visible; to be bright.

புலப்படு–தல் pula-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.* தெரிதல்; to be perceived, understood. *2.* வெளிப்படுதல்; to become clear or conspicuous.

புலப்படுத்து–தல் pula-p-paḍuttu-, *12 செ.குன்றாவி.* (v.t.) தெரிவித்தல்; to make clear or intelligible; to cause to be understood.

புலம்பு[1]–தல் pulambu-, *7 செ.கு.வி.* (v.i.) *1.* ஒலித்தல்; to sound. "கழலார் சிலம்பு புலம்ப" *(தேவா. 607, 7). 2.* பிதற்றுதல் *(கொ.வ.);* to speak foolishly or incoherently. *3.* அழுதல்; to utter lamentations, to wail, cry out. "தயரதன் தான் புலம்பியவப் புலம்பல்" *(திவ். பெருமாள். 9, 11). 4.* தனித்தல்; to be solitary, lonely. "கொடுவாயிரும்பின் மடிதலை புலம்ப" *(பெரும்பாண். 286). 5.* வருந்துதல்; to grieve. "அகம் புலம்புகின்றேன் "*(கம்பரா. இந்திரசித். 61). 6.* வாடுதல்; to fade. "இவணலம் புலம்ப" *(ஐங்குறு. 57).*

புலம்பு[2]–தல் pulambu-, *6 செ.குன்றாவி.* (v.t.) *1.* வெறுத்தல்; to despise, abhor. "புலம்பலர் பொறுப்பரன்றே" *(சீவக. 2088). 2.* அடிக்கடி கூறுதல்; to utter repeatedly. "வீரட்டம் புலம்பேனாகிலேன்" *(தேவா. 999, 12).*

புலர்[1]–தல் pular-, *11 செ.கு.வி.* (v.i.) *1.* வாடுதல்; to fade, wither. *2.* உலர்தல்; to grow dry; to become patched, as the tongue. "புகையுஞ் சாந்தும் புலராது சிறந்து" *(சிலப். 5, 197). 3.* தளர்தல்; to faint; to become weak. "இமையோர்களும் புலர்ந்தார்" *(கம்பரா. நிகும். 116). 4.* குறைதல்; to decrease. "கதம் புலர்ந்த சிந்தை" *(கம்பரா. மூலபல. 79). 5.* விலகுதல்; to leave, depart. "ஆயம் புலர்க" *(பு.வெ. 4, 22). 6.* முற்றுதல்; to mature, as grain. "வரகினிருங் குரல் புலர" *(மதுரைக். 272).*

புலர்[2]–தல் pular-, *11 செ.கு.வி.* (v.i.) *1.* விடிதல்; to dawn, as the day. புலர் விடியல் *(பு. வெ. 9, 47). 2.* தெளிதல்; to clear up. "நல்லா னெஞ்சமும் புலர்ந்ததன்றே" *(சீவக.1397).*

ம. புலருக; குட. பொல; மால. புல்புல்ரெ.

புலர்[3]–த்தல் pular-, *3 செ.குன்றாவி.* (v.t.) பூசுதல்; to besmear.

புலர்த்து–தல் pularttu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* உலர்த்துதல்; to deprive of moisture; to cause to dry. "துகில்கொடு குஞ்சி யீரம் புலர்த்தி". *2.* வாட்டுதல்; to cause to fade or wither. *3.* பூசுதல் *(பிங்.);* to besmear, daub.

புலவு[1]–தல் pulavu-, *12 செ.கு.வி.* (v.i.) புலால் நாற்றமடித்தல்; to smell raw flesh. "புலவுவாய் பாண" *(பெரும்பாண். 22).*

புலவு[2]–தல் pulavu-, *12 செ.குன்றாவி.* (v.t.) வெறுத்தல்; to dislike, abhor "புலவுதி மாதோ நீயே" *(புறநா. 219).*

புலனறி–தல் pulaṉ-aṟi-, *3 செ.குன்றாவி.* (v.t.) துப்பறிதல் *(சென்னை.);* to spy out.

புலனாகு–தல் pulaṉāgu-, *7 செ.கு.வி.* (v.i.) *1.* பார்வையில் படுதல், தெரிதல்; to be visible. *2.* தெளிவாதல்; to become clear, be evident. "கொடுமை இழைக்கப் பட்டது என்பது உசாவலில் (விசாரணையில்) புலனாகியது". *(உ.வ.).*

புலனெறி–தல் pulaṉeṟi-, *3 செ.குன்றாவி.* (v.t.) ஐம்புலனை வெல்லுதல்; to subdue or overcome the senses. "புலனெறிந்த மெய்ப்போத மாதவன்" *(பாகவத.1, பரிட்சித்துச்.16).*

புலாவு–தல் pulāvu-, *6 செ.கு.வி.* (v.i.) விடிதல்; to dawn. *(திவ். இயற். திருவிருத். 75. வ்யா.).*

புலுட்டு–தல் puluṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* தோசை (ரொட்டி) முதலியன கருகுதல்; to roast, parch, fry lightly. *2.* சுடுதல்; to burn, as one's finger; to scald.

புலுண்டு–தல் puluṇdu-, *15 செ.கு.வி.* (v.i.) கருகுதல்; to be roasted, fried or parched lightly; to be spoiled in boiling by absorption of water.

புலையாடு–தல் pulai-y-āḍu-, *7 செ.கு.வி.* (v.i.) இழிவாக நடத்தல் *(வின்.);* to lead a vicious life.

புழங்கு–தல் puḻaṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* கையாளுதல்; to practice, exercise, put to use. "விதர்ப்ப தேயத்திற் புழங்கலுறும் பொருண் முழுதும் பொலிந்து" *(விநாயகபு. 55, 4). 2.* பழகுதல் *(இ.வ.);* to be conversant or acquainted to abide or associate with.

புழு–த்தல் puḻu-, *11 செ.கு.வி.* (v.i.) 1. புழுப்பிறத்தல்; to breed worms. "அவரைக்காய் புழுத்துப் போயிற்று". *2.* சூலுருதல் *(கருத்தரித்தல்);* to become pregnant. "அருள் வயிற்றில் ஒரு புழுவாவது புழுக்கவில்லையே". *3.* மிகுதல்; to be superabundant as, fruits. "இந்த ஆண்டு பலாக்காயாய்ப் புழுத்துப் போயிற்று" *(இ.வ.). 4.* வெறுப்புடன் பேசுதல் *(வின்.);* to abuse. *5.* பயனற்றதாதல் *(கொ.வ.);* to be useless or worthless, as a worm eaten thing.

ம. புழுக்க; க. புழி; தெ. ப்ருச்சு; து. புர்குனி; புர்ங்குனி; குரு. பொச்னா; பட. கூத்து.

புழுக்கு[1]–தல் puḻukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. அவிழ்த்தல்; to boil before husking as paddy. *2.* தீய்த்தல் *(வின்.);* to scorch, as the sun.

புழுக்கு[2]–தல் puḻukku-, *6 செ.குன்றாவி.* (v.t.) அரிசி பாதி வேகும்படி அவித்தல்; to boil partially, parboil.

ம. புழுக்குக.

புழுங்கு[1]–தல் puḻuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) 1. ஆவியெழ வேகுதல்; to be steamed; to be slightly boiled or steamed; to be parboiled. *2.* சிறுக வேகுதல் *(வின்.);* to boil gently or stew, as rice after the water is poured off. *3.* வெப்பத்தாற் புழுக்கமாதல்; to be sultry, as the weather. "தொடுநீர்ப் பரவை முகம் புழுங்கத் தோன்றும் பரிதி" *(குமர. பிர. முத்துக். பிள். 22). 4.* சினத்தால் வெம்புதல்; to be hot with anger. *5.* வேர்த்தல் *(இ.வ.);* to perspire. *6.* பொறாமைப்படுதல்; to be envious, to feel heart - burning. *7.* வாடுதல்; to wither, fade. "புழுங்கு கோதை பொற்பின்றிறம்" *(சீவக. 2504). 8.* வருந்துதல்; to be troubled. "வெய்துயிர்க்கும் விழுங்கும் புழுங்கு மால் " *(கம்பரா. நகர்நீங்கு. 11).*

ம. புழுங்ஙுக, புழுக்குக; க. புழுகு; து. புர்குனி; குட. புக்கி.

புழுங்கு[2]–தல் puḻuṅgu-, *11 செ.குன்றாவி.* (v.t.) சினத்தல்; to be angry, indignant. "முக்கணன் புதல்வனை வேறெனப் புழுங்கி" *(தணிகைப்பு. சீபரி. 260).*

புழை–த்தல் puḻai-, *4 செ.குன்றாவி.* (v.t.) துளையிடுதல்; to bore, riddle. "அனங்கன் வாளி புழைத்த தம் புணர் மென கொங்கை" *(கம்பரா. கைகேசி. 85).*

புள்ளடி–த்தல் puḷ-ḷ-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) கிட்டிப்புள் ஆடுதல்; to play the game of tip - cat.

புள்ளியிடு–தல் puḷḷi-y-iḍu-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1.* கணக்கிற் குறித்துக் கொள்ளுதல்; to enter in an account. "புள்ளியிட்ட கணக்கு மாற்றி" *(மதுரைப். பதிற். 47). 2.* பொருள் விளங்கும்படி சொற்றொடரியத் தில் *(வாக்கியங்களிற்)* குறியிடுதல்; to punctuate.

புள்ளுரை–த்தல் puḷḷurai-, *4 செ.கு.வி.* (v.i.) புள்ளொலி கொண்டு நிமித்தங்கூறுதல்; to predict from omen - birds. "முந்து புள்ளுரைத்த முதுமகன்" *(பெருங். உஞ்சைக். 56, 234).*

புள்ளோப்பு–தல் puḷ-ḷ-ōppu-, *6 செ.கு.வி.* (v.i.) பறவையை ஓட்டுதல்; to drive away birds as from a corn field. "கொழுமீனுணங்கல் புள்ளோப்பும்" *(ஐந். ஐம். 47).*

மறுவ. கவறோட்டுதல்.

புளி–த்தல் puḷi-, *11 செ.கு.வி.* (v.i.) *1.* புளிப்பேறுதல்; to turn sour; to ferment; to be leavened. "அமுது புளித்தாங்கு" *(சீவக. 2015). 2.* கன்றுதல்; to become sore. "கன்னம்

புளிக்க அறைந்தான்" (உ.வ.). 3. தன்மை திரிதல்; to change in taste or quality. 4. வெறுத்துப்போதல்; to be disgusting, as from surfeit. 5. கைக்கெட்டாதென்ற காரணத்தால் விடப்படுதல்; to be given up as being beyond one's reach. 6. வேலைக்கு உதவுமாறு களிப்பாக இருத்தல்; to become soft and pasty, as lime. "சுண்ணாம்பு புளித்திருக்கிறது". 7. செறிதல் (அக.நி.); to be thick, close, crowded or dense.

ம. புளிக்க; தெ. புலியு; து. புலிபுலி, புலியுனி.

புளிக்கரை–த்தல் puḷi-k-karai-, 4 செ.குன்றாவி. (v.t.) கலக்கப் படச்செய்தல் (இ.வ.); to make one anxious. தேர்வுக்குச் செல்லும் மாணவன் வயிற்றில் புளிக் கரைத்தாற் போல் காணப்படுகிறான் (உ.வ.).

புளித்துப்போ–தல் puḷittu-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. மா முதலியன புளிப்பேறுதல்; to turn sour; to ferment. "தோசை மாவு புளித்துப்போய் விட்டது" (உ.வ.). 2. எதிர்பார்த்தது கிட்டாமற் போதல் (இ.வ.); to be disappointed. 3. அருவருத்துப் போதல் (இ.வ.); to be disgusted, as from surfeit. "கேட்டுக்கேட்டுப்புளித்துப்போன பாட்டை மீண்டும் போடாதே" (உ.வ.). "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" (பழ.).

புளுகு–தல் puḷugu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முழுப் பொய் சொல்லுதல்; to tell bare - faced lies, obvious lie, bare, faced falsehood. 2. கற்பித்தல்; to concoct.

கோத. புள்க் (பெருமிதம் கொள்ளல்).

புளை–தல் puḷai-, 4 செ.கு.வி. (v.i.) அழகுபடுத்தப் படுதல்; to be equipped accoutred, adorned. "புளைந்த பாய்பரி" (கம்பரா. கரன். 76).

புற்கவ்வு–தல் puṟ-kavvu-, 15 செ.கு.வி. (v.i.) தோல்வியை யொத்துக்கொள்ளுதல்; to accept defeat. "போக்ய தைக்குத் தோற்றுப் புற்கவ்விச் சொல்லு கிறார்" (ஈடு. 5, 8, 1).

புறக்கணி–த்தல் puṟa-k-kaṇi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. மதியாதிருத்தல்; to disregard, slight, neglect. "உருகா மனத்தார்களைப் புறக்கணித் திடும்" (தேவா. 612, 2). 2. ஏளனமாகக் கருதுதல்; to disdain, treat with contempt. "புறக் கணித்திடப் பட்டீர்க்கும்" (சீவக. 2376).

புறக்கிடு–தல் puṟakkiḍu-, 20 செ.கு.வி. (v.i.) புறங்காட்டி யோடுதல்; to flee, take to flight, showing one's back to enemy. "வெருவொடு புறக்கிடுவது" (பாரத. அணி. 28).

புறக்கொடு–த்தல் puṟa-k-koḍu-, 4 செ.கு.வி. (v.i.) தோற்றோடுதல்; to turn back and flee after defeat. "புறக்கொடுத்திறத்தி" (புறநா. 8).

புறகிடு–தல் puṟakiḍu-, 20 செ.கு.வி. (v.i.) புறக்கிடு-தல் பார்க்க; see puṟa-k-kiḍu-. "ஆயினும் புறகிட" (சிவதரு. சனன. 55).

புறங்கா–த்தல் puṟaṅkā-, 4 செ.குன்றாவி. (v.t.) காத்தல்; to guard, protect, save. "வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" (தொல். பொ. 422).

புறங்காட்டு–தல் puṟaṅ-kāṭṭu-, 15 செ.கு.வி. (v.i.) 1. அவமதிப்புண்டாகப் பின்புறந் திரும்புதல்; to turn one's back in contempt. 2. தோற்றோடுதல்; to show one's back, in defeat. "தாட்புறக்குப் போந்த கமடம் புறங்காட்ட" (சிவப். பிர. வெங்கையு. 206). 3. வெளிக்குக் காட்டுதல்; to have the outward appearance of, to pretend. "தாழ்ந்தவராய்ப் புறங்காட்டி யகத்திலே வஞ்சம் வைத்து" (அருட்பா.vi, பிள்ளைப்பெரு.106).

ம. புறம்காட்டுக.

புறங்கூறு–தல் puṟaṅ-kūṟṟu-, 7 செ.கு.வி. (v.i.) 1. காணா விடத்துப் பிறர்மேல் அலர் தூற்றுதல்; to backbite, slander. "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின்" (குறள்.183). 2. மந்தணத்தை வெளிப் படுத்தல் (வின்.); to expose secrets.

புறங்கைநக்கு–தல் puṟaṅkai-nakku-, 15 செ.கு.வி. (v.i.) (கையின் மேற்புறத்தை நக்குதல்) போகூழ் மிகுதல்; (lit.) to lick the back of one's hand. to be poor.

மறுவ. கோ;ளசொல்லுதல்.

புறஞ்செய்[1]–தல் puṟaṅcey-, 1 செ.குன்றாவி. (v.t.) 1. உடம்பை அழகு செய்தல்; to adorn the body. "புறஞ்செய;ச சிதைதல்" (தொல். பொ. 266). 2. காப்பாற்றுதல்; to protect, cherish, maintain. "வைகலுமில்புறஞ் செய்தலின் " (திரிகடு. 64).

புறஞ்செய்[2]–தல் puṟaṅcey-, 1 செ.குன்றாவி. (v.t.) வெளியேற்றுதல்; to extern, to expel. "இந்நாடு மண்ணகத்தே வாழாது புறஞ்செய்தும்" (பாரதி. தேசீய. 47).

புறண்டு–தல் puṟaṇḍu-, 5 செ.குன்றாவி. (v.t.) பிறாண்டு; to scratch.

புறத்திடு–தல் puṟattiḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) வெளிவிடுதல் (குறள். 590, உரை); to divulge.

புறத்திரு–த்தல் puṟattiṟu-, 3 செ.கு.வி. (v.i.) வெளியே காத்திருத்தல்; to wait outside. "புறத்திரு போகென்னு மின்னாச் சொல்" (நாலடி. 326).

புறத்திறு–த்தல் puṟattiṟu-, 3 செ.குன்றாவி. (v.t.)முற்று கையிடுதல்; to besiege. "போக்கற வளைஇப் புறத்திறுத்தன்று" (பு.வெ.1, 7).

புறந்தள்ளு–தல் puṟantaḷḷu-, 12 செ.குன்றாவி. (v.t.) விலக்குதல், நீக்குதல், சேர்த்துக் கொள்ளாமல் ஒதுக்கி வைத்தல்; to exclude.

புறந்தா[1]–தல் (புறந்தருதல்) puṟantā-, 15 செ.குன்றாவி. (v.t.) 1. காத்தல்; to protect, take care of. "குடி புறந்தருகுவை யாயின்" (புறநா. 35). 2. கைவிடுதல்; to forsake. "பிழைப்பிலா புறந் தந்தானும்" (சீவக. 252).

3. போற்றுதல்; to extol, praise. "*அடி புறந்தருவர் நின்னிடங்கா தோரே*" *(புறநா. 35).*

புறந்தா²–தல் (புறந்தருதல்) puṟantā-, *18 செ.கு.வி.* (v.t.) *1. தோற்றுப் போதல்;* to turn one's back in retreat, to be defeated. *2. நிறம் உண்டாதல்;* to become shiny. "*பொடியழற் புறந்தந்த.... கிண்கிணி*" *(கலித். 85).*

புறப்படு–தல் puṟa-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. செலவு மேற்கொள்ளுதல்;* to set forth, proceed, start on a journey. "*பாயிரப் பதிகமோதிப் புறப்பட்டார்*" *(திருவாலவா. 37, 11). 2. புறம்பே செல்லுதல்;* to go out. "*புறப்படாத பருவத்தே போனாய்*" *(அகநா. 7, உரை). 3. புறத்தில் தோன்றுதல்;* to start or jut out, protrude, as a stone in a wall. *4. புண் முதலியன உண்டாதல் (வின்.);* to break out, as eruptions. *5. பொசிதல் (வின்.);* to ooze out, issue, exude.

ம. புறப்பெடுக; க. கொரவடு, கொரபடு.

புறப்படுத்து–தல் puṟa-p-paḍuttu-, *3 செ.குன்றாவி.* (v.t.) *வெளிப்படுத்துதல்;* to divulge, reveal, publish. "*புறப்படுத்தானாகு முறை*" *(குறள். 590).*

புறம்பாக்கு–தல் puṟambākku-, *12 செ.குன்றாவி.* (v.t.) *1. நீக்குதல்;* to exclude. *2. குலத்தி (சாதியி)னின்றும் நீக்குதல் (வின்.);* to excommunicate.

மறுவ. தள்ளிவைத்தல்.

புறம்பேசு–தல் puṟam-pēšu-, *7 செ.கு.வி.* (v.i.) *(ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றிக்) குற்றங்குறை சொல்லுதல், புறங்கூறுதல் (திவ். பெரியாழ். 2 , 4, 5, வ்யா. பக். 319);* to back bite. "*அவர் என்னைப் பற்றிப் புறம் பேசித்திரிகிறார்*" *(உவ.).*

புறம்பொசி–தல் puṟam-poši-, *3 செ.கு.வி.* (v.i.) *1. வெளியிற் கசிதல்;* to ooze. *2. வெளிப்படுதல்;* to emerge. "*உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே*" *(குருபரம். தனிப்.).*

புறம்போ–தல் puṟam-pō-, *9 செ.கு.வி.* (v.i.) *விட்டு நீங்குதல்;* to quit, leave off. "*அறிவு புறம்போய*" *(கல்லா. கண. துதி.).*

புறமாறு¹–தல் puṟa-māṟu-, *11 செ.கு.வி.* (v.i.) *1. இடம் மாறுதல்;* to migrate, change place. "*கொங்குண வண்டிற் பெயர்ந்து புறமாறி*" *(ஐங்குறு. 226). 2. வலிமையிழத்தல்;* to lose vigour or strength. "*இரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறி*" *(கலித்.120, 5).*

புறமாறு²–தல் puṟamāṟu-, *11 செ.குன்றாவி.* (v.t.) *கைவிடுதல்;* to abandon, desert. "*அருள் புறமாறிய*" *(கலித். 15).*

புறமுதுகிடு–தல் puṟamudugiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *புறமுதுகுகாட்டு-தல் பார்க்க;* see puṟamudugukāṭṭu-.

புறமுதுகுகாட்டு–தல் puṟamudugu-kāṭṭu-, *15 செ.கு.வி.* (v.i.) *(போரில் எதிர்த்து நிற்காமல் கோழைத்தனமாகத்) திரும்பிச் செல்லுதல், பின்வாங்குதல்;* to back track (from battle). "*போர்க்களத்தில் செத்துமடிவோம்; புறமுதுகுகாட்ட மாட்டோம் என்பதுதான் மறவர்களின் சூளுரை*" *(உவ.).*

புறனழி–த்தல் puṟaṉ-aḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *புறங்கூறுதல்;* to defame, slander. "*புறனழீஇப் பொய்த்து நகை*" *(குறள். 182).*

புறாண்டு–தல் puṟāṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பிறாண்டு;* to scratch.

புன்கூர்–தல் puṉ-kūr-, *3 செ.கு.வி.* (v.i.) *வருந்துதல்;* to be distresed. "*வேட்கை மிகுதியான் வெய்துண்டு புன்கூர்ந்தார் போலவும்*" *(தொல். பொ. 102, உரை).*

புன்முறுவல் செய்–தல் puṉ-muṟuval-šey-, *1 செ.கு.வி.* (v.i.) *நகைமுகங் காட்டுதல்;* to smile.

புனை–தல் puṉai-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. சூடுதல்;* to dress, put on, as clothes, garlands, jewels. "*பூமாலை புனைந்தேத்தி*" *(தேவா. 727, 3). 2. அழகு படுத்துதல்;* to adorn, decorate. "*புனை தேர் பண்ணவும்*" *(புறநா. 12). 3. அணியமாக்குதல் (சித்தஞ்செய்தல்);* to make ready. *4. ஓவியமெழுதுதல்;* to paint. "*புனையா ஓவியங் கடுப்ப*" *(நெடுநல். 147). 5. முடைதல்;* to plait, as an ōla basket. "*போழிற் புனைந்த வரிப்புட்டில்*" *(கலித். 117). 6. கட்டுதல்;* to string, bind. "*ஆய்பூ வடும்பின்அலர் கொண்டு..... கோதை புனைந்த வழி*" *(கலித். 144). 7. சூடுதல்;* to wear. "*அவன் கண்ணி நீ புனைந் தாயாயின்*" *(கலித். 116). 8. ஒழுங்காக அமைத்தல்;* to put in order. "*படைபண்ணிப் புனையும்*" *(கலித். 17). 9. சிறப்பித்துக் கூறுதல்;* to use laudatory language, praise. "*புனையினும் புல்லென்னு நட்பு*" *(குறள். 790). 10. கற்பித்தல்;* to exaggerate. "*புனைந்துபேசி*" *(தேவா.1224, 3). 11. செய்யுளமைத்தல்;* to compose, a poetry. "*நாவிற் புனைந்த நன்கவிதை*" *(பரிபா. 6, 8). 12. செய்தல்;* to make form. "*வரிமணற் புனைபாவைக்கு*" *(புறநா. 11).*

ம. புனயுக.

ó

பூ¹–த்தல் pū-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மலர்தல்;* to blossom, bloom. "*பூத்த மாஅத்து*" *(ஐங்குறு.10). 2. பொலிவு பெறுதல்;* to flourish, to be prosperous. "*மீன் பூத்தன்ன தோன்றலர்*" *(திருமுரு. 169). 3. மாதவிலக்காதல் (இருதுவாதல்);* to menstruate. "*பூத்த காலைப் புனையிழை மனைவியை*" *(நம்பியகப். 91). 4. நெடுநேரம் நோக்குதலாற் கண்ணொளி மழுங்குதல் ;* to become blurred in vision, as by long wistful look. *5. பூஞ்சாளம்பிடித்தல் (இ.வ.);* to become mouldy. *6. பயனின்றிப் போதல்;* to become useless. "*எதிர்பார்த்த கருமம் (காரியம்) பூத்தப் போயிற்று*".

7. நெருப்பு சாம்பலாகி நெருப்பை மறைத்தவாறு பூசியிருத்தல்; to coat or form layer, as of ash around fire.

ம. பூ, பூக்க; க. பூ, புவ்வு, கூ, குவ்வு; தெ. பூசு, பூய்; துட. பூவ்; கோத., பர். பூப்; கோண். புய்யின; கொண். பூ; கூய். பூப்; குரு. புய்த்ன, புய்த்னா; மால; புத்தெ; பட. கூ.

பூ²–த்தல் pū-, *4 செ.கு.வி.* (v.i.) *தோன்றுதல்;* to appear. "*பூத்திழி மதமலை*" *(கம்பரா. கும்பகா. 315).*

பூ³–த்தல் pū-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மலர் முதலியவற்றைத் தோற்றுவித்தல்;* to produce, as flower. "*செய்ய தாமரைகள் எல்லாந்த தெரிவையர் முகங்கள் பூத்த*" *(கம்பரா. நீர்விளை. 3). 2. படைத்தல்;* to create. "*ஞாலமெல்லாம் பூத்தோனே*" *(பாரத.கிருட்டிண.12).3.பெற்றெடுத்தல்;* to give birth to. "*ஒரு திருவைப் பூத்தனள்*" *(பிரமோத். 8, 18).*

ம. பூக்குக.

பூக்கட்டு–தல் pū-k-kaṭṭu-, *15 செ.கு.வி.* (v.i.) *மலர் மாலை தொடுத்தல்;* to make garlands of flowers.

க. பூகட்டு, கூகட்டு, கூவுகட்டு; து. பூகட்டுணி.

பூச்சூடு–தல் pū-c-cūḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *பூவை அணிந்து கொள்ளுதல்;* to adorn hair etc. with flower. "*காலையில் பூச்சூடுதல் மகளிர்க்கு மகிழ்ச்சி தரும்*". *(உ.வ.).*

பூசலிசை–த்தல் pūšal-išai-, *4 செ.கு.வி.* (v.i.) *கலகச் சொல்லால் சண்டை மூட்டுதல் (தொல். பொ. 313, உரை);* to stir up a quarrel with angry words.

பூசலிடு–தல் pūšal-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. முறையிடுதல்;* to complain loudly. "*காலந்தோறும் யானிருந்து கைதலை பூசலிட்டால்* " *(திவ். திருவாய். 4, 7, 1). 2. பேரொலிபடக் கதறுதல்;* to cry loudly. "*அன்பாற் புரண்டரும் பூசலிட்டாள்*" *(கம்பரா. மாயாச. 32). 3. கூட்டுதல்;* to join, unite. *(ஈடு. 5, 1, 7).*

பூசறு–த்தல் pūšaṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வாய் முதலியன கழுவுந் தொழிலை முடித்தல்;* to finish the work of washing or cleaning the mouth, etc., "*பொடியு நீருங்காட்டிடக் கொண்டு வாய்ப்பப் பூசறுத்து*" *(சீவக. 1302).*

பூசி–த்தல் pūši-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. பூசை செய்தல்;* to perform acts of ceremonial worship. "*பூசித்தும் போக்கினேன் போது*" *(திவ். இயற். நான்மு. 63). 2. மதிப்பு காட்டுதல்;* to treat courteously, reverence. *3. கொண்டாடுதல்;* to caress, fondle. "*புதல்வா வெம்மைப் பூசிப்பதே*" *(திருக்கோ. 396).*

பூசிக்கொள்(ளு)–தல் pūši-k-koḷ(ḷu)-, *10 செ.குன்றாவி.* (v.t.) *தடவிக் கொள்ளுதல்;* to smear, to anoint. "*தலையில் எண்ணெய் பூசிக்கொள்*" *(உ.வ.).*

க. பூசிகொள்.

பூசிமெழுகு–தல் pūši-meḻagu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *குற்றம் நடந்ததாக ஒப்புக்கொள்ளாமல் வேறு ஏதேனும் கூறி மறைத்தல் (கொ.வ.);* to slur over a fault, crime or defect, gloss over. "*உண்மையை நேரடியாகப் பேசு, பூசிமெழுகாதே*" *(உ.வ.).*

பூசு¹–தல் pūšu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தடவுதல்;* to besmear, anoint, rub, daub, spread on, plaster. "*நீறுபூசி நிமிர்சடை மேற்பிறை*" *(தேவா. 627). 2. மெழுகுதல்;* to scrub the floor with cowdung dissolved in water. "*புனலொ விரவியே பூசினல்லது*" *(புரலிங். இட்டலிங். 37). 3. கழுவுதல்;* to clean. "*பூசிக் கொளினு மிரும்பின்கண் மாசொட்டும்*" *(நான்மணிக்.99). 4.நீரால் அலம்புதல்;* to wash, as with water. *நீருண்டார்* "*நீரான்வாய் பூசப*" *(நான்மணிக். 35).*

மறுவ. தரைமெழுகல்.

ம. பூசுக; க. பூசு; கூசு; தெ. பூயு; து. புசுனி; பட. கூச.

பூசு²–தல் pūšu-, *10 செ.கு.வி.* (v.i.) *இயைதல்;* to gather together. "*ஆயிரமுரு மொன்றாகப் பூசின்*" *(கம்பரா. நிரும். 91).*

பூசு³–தல் pūšu-, *12 செ.குன்றாவி.* (v.t.) *ஒப்பனை செய்தல் (வின்.);* to adorn, decorate.

பூசுறு–தல் pūšuṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *ஒப்பனை செய்தல் (வின்.);* to a dorn. "*பூசுறு பருதியிற் பொலிந்து தோன்றினான்*" *(சீவக. 953).*

பூசைசெய்–தல் pūšai-šey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. வணக்கம் செலுத்துதல்;* to reverence, honour. *2. பூசனை செய்தல்;* to worship. "*திங்கள்தோறும் பூசைசெய்வது அவரது வழக்கம்*".

க. பூசிசு; பட. பூசிய மாடு.

பூசைபண்ணு–தல் pūšai-paṇṇu-, *15 செ.கு.வி.* (v.i.) *1. வணங்குதல்;* to perform worship. "*சிலர் காலையில் தவறாது பூசை பண்ணுவர்*" *(உ.வ.). 2. உணவு உட்கொள்ளல்;* to take food.

பூசைபோடு–தல் pūšai-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. காவு (பலி) கொடுத்தல்;* to offer *pali* to village deities. *2. வலுவாக அடித்தல்;* to flog soundly.

பூட்டழி–த்தல் pūṭṭaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கட்டுக் குலைத்தல்;* to scatter, disperse, as an army. "*பூலந்தை வான்புகப் பூட்டழிந்த..... வேந்தன்*" *(இறை. 17, உரை. பக். 100).*

பூட்டறு–தல் pūṭṭaṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. கட்டுக் குலைதல்;* to get disjointed or loose - jointed, as the various parts of the body. *2. நுகத்தினின்றும் விடுபடுதல்;* to get unyoked.

பூட்டு–தல் pūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மாட்டுதல்;* to lock, fasten, hook, to fix, as an arrow in the bow. "*பொருசிலை மேற் சரம் பூட்டான்*" *(ஏரெழு. 17). 2. இணைத்தல்;*

to unite. "என்பாற் பூட்டு நண்பு பூண்டான்" *(பாரத. வாரணா. 37). 3.* வைத்தல்; to place, put. "ஒல்லையி லரி வாட் பூட்டி" *(பெரியபு. அரிவாட். 16). 4.* எருது முதலியவற்றைப் பிணைத்தல்; to attach, as horses or bullocks to a carriage; to yoke, harness. "களிறு பலபூட்டி" *(பதிற்றுப். 44, 16). 5.* தொழுவிலடித்தல் *(வின்.)*; to put in the stocks. *6.* விலங்கு மாட்டுதல் *(வின்.)*; to manacle, shackle, fetter. *7.* பொறுப்பேற்றுதல்; to entrust, give incharge. "தாதை பூட்டிய செல்வம்" *(கம்பரா. வாலிவ. 81). 8.* அணிதல்; to put on, as rings, jewels, garlands. "பைந்தார் பூட்டி" *(பதிற்றுப். 42, 10). 9.* இறுகக் கட்டுதல்; to lock, grip, as ones arms or legs, in wrestling. "பூட்டியகையன்" *(கம்பரா. குகப். 34). 10.* பொருத்திக் கூறுதல் *(வின்.)*; to bring into order or sequence, as different parts of a discourse. *11.* அகப்படுத்துதல் *(வின்.)*; to entrap, inveigle, secure in an engagement by artifice. *12.* நாணேற்றுதல்; to fasten, as the sting to a bow. "பூட்டுசிலை" *(சீவக. 1788). 13.* இறுக்குதல் *(வின்.)*; to tighten. *14.* வழக்குத் தொடுத்தல்; to start, as a case; to file, as a suit. "கொடுமை சால் வழக்குப் பூட்டி வென்றவர்" *(திருவிளை. மாமானா. 14).*

ம. பூட்டுக; *க.* பூடு; *தெ.* புனு; *பட.* பூட்டு.

பூட்டுவிலகு–தல் pūṭṭu-vilagu-, *15* செ.கு.வி. (v.i.) உடற் பொருத்துவாய் விலகிப் போதல்; to be dislocated as joints.

பூடு–தல் pūḍu-, *5* செ.கு.வி. (v.i.) இணைதல் *(கருநா.)*; to join.

க. பூடு, ஊடு, பூண், கூடு.

பூண்[1](ணு)–தல் pūṇ-(ṇu)-, *12* செ.குன்றாவி. (v.t.) *1.* அணிதல்; to put on, wear."பூண்பதுவும் பொங்கரவம்" *(திருவாச். 12, 1). 2.* விலங்கு முதலியன அணிதல்; to be fettered with, shackled with, yoked with. "புனை பூணும்" *(குறள். 836). 3.* சூழ்ந்து கொள்ளுதல்; to surround. "யாருமச் செங்கணானைப் பூண்டனர்" *(கம்பரா. இராவணன்கள. 19). 4.* மேற்கொள்ளுதல்; to undertake, as a business, to assume duty. "போர்த் தொழில் வேட்கை பூண்டு" *(கம்பரா. படைத்தலை. 1). 5.* உடைத்தாதல்; to become possessed of, as knowledge, love. "அன்புபூண்டனை" *(கம்பரா. விபீட. ணடை. 2).*

ம. பூணுக; *க.* பூண், பூடு; *தெ.* பூனு, பூனுசு, பூசு; *து.* புணெபுனி, புணெபினி, புணெவுனி.

பூண்[2](ணு)–தல் pūṇ(ṇu)-, *10* செ.கு.வி. (v.i.) *1.* சிக்கிக் கொள்ளுதல்; to become entangled as a lock of hair; to be caught as birds in a snare. *2.* நுகத்தில் கட்டப்படுதல் *(வின்.)*; to be yoked. "பூண்டன புரவியோ" *(கம்பரா. இராவணன். 38). 3.* நெருங்கி யிறுகுதல்; to come close together, to become inseparable. "அவனுக்குப் பல்பூண்டு விட்டது".

பூணி1–த்தல் pūṇi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* தோற்றுவித்தல்; to cause to apear to bring into existance. "விசும்பிற் புத்தப் புது மதியம் பூணித்தான்" *(மாறனலங். 224, 531). 2.* குறிப்பிடுதல் *(வின்.)*; to allude to, refer to.

பூணி[2]–த்தல் pūṇi-, *5* செ.கு.வி. (v.i.) பூட்கை பண்ணுதல்; to make a vow. "என்னோடே பூணித்து" *(ஈடு. 10, 8, 5).*

பூத்துப்போ–தல் pūttu-p-pō-, *8* செ.கு.வி. (v.i.) *1.* நெருப்பில் நீறுபடர்தல்; to gather ashes, as coals. "பூத்துப்போன நெருப்பு". *2.* கண் பார்வை மங்குதல்; to be lack - lustrous, as eye sight. "கண் பூத்துப் போயிற்று".

து. பூபரப்புனி *(கண்பொறை உருவாதல்).*

பூத்தொடு–த்தல் pū-t-toḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* பூமாலை கட்டுதல்; to string flowers into a garland. *2.*பண்டங் களை நெருக்கமின்றி வைத்துப் பெரிதாகக் கட்டுதல்; to put up things very loosly so as to make an appearance of bulkiness. *3.* கதை கட்டுதல் *(வின்.)*; to fabricate, make a false story.

பூப்படர்–தல் pūppaḍar-, *3* செ.கு.வி. (v.i.)கண்ணில் பூ படர்தல்; to spread as in cataract of the eye.

மறுவ. புரைவிழுதல்.

பூப்படை–தல் pūppaḍi-, *2* செ.கு.வி. (v.i.) பருவமெய்துதல்; to attain puberty.

பூப்பூ–த்தல் pū-p-pū-, *4* செ.கு.வி. (v.i.) மலர்தல்; to flower, bloom, blossom.

து. பூஅரலுனி, பூபூபினி, பூபூபுனி.

பூமுடி–தல் pūmuḍi-, *2* செ.கு.வி. (v.i.) பூச்சூடிக் கொள்ளு தல்; to wear flowers.

து. பூமுடிபுனி.

பூர்(ரு)–தல் pūr-, *3* செ.கு.வி. (v.i.) புகுருதல்; to enter.

பூரி[1]–த்தல் pūri-, *4* செ.கு.வி. (v.i.) *1.* நிறைதல்; to be full. "பூரிப்பதுள்ளே சிவம்" *(ஔவை. கு. திருவருள். 4, 9). 2.* குறைவற நிரம்புதல்; to become perfect. *3.* களித்தல்; to rejoice; to be satisfied. "பூரித்தென் னெஞ்சே புரி" *(திவ் இயற். 3, 44). 4.* பருத்தல்; to be plump, or full formed; to swell. "பூரித்த முறையிலே" *(தாயு. மலைவளர். 2).* "நெடும்புயம் பூரித்து" *(பாரத. காண்டவ. 28). 5.* பொலிதல்; to thrive, as vegetation. *6.* மிகுதல் *(பிங்.)*; to abound. *7.* பூரகஞ் செய்தல்; (yoga) to take in air at a long breath. "ரேசிப்பது போலப் பூரித்து நிற்கில்" *(ஔவை. கு..... வீட்டு நெறி. 5, 6).*

பூரி[2]–த்தல் pūri-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* நிறைத்தல்; to fill. "வண்ணநீர் பூரித்த வட்டெறிய" *(பரிபா. 12, 68). 2.* பொதிந்துள்ள கருத்தை வெளியிட உரிய சொற்களைச் சேர்த்தல்; to complete the sense by adding the words omitted."அக்கண்ணழகிலே ஈடுபடுகிறார் என்று பூரிப்பது" *(திருவிருத். 63, 342, அரும்). 3.* படைத்தல்; to create. "பரமன் பூரிக்க" *(தக்கயாகப். 694).*

பூலி–த்தல் pūli-, *4* செ.கு.வி. (v.i.) உடம்பு பூரித்தல்; to swell.

"பூலித்தகங்குழைந்து பொன்னு சவாடாமோ" (திருவாச. 16, 8).

பூவி–த்தல் pūvi-, 11 செ.கு.வி. (v.i.) புகுவித்தல்; to cause to enter. "போய்ப்போ ஒய் வெந்நரற் பூவியேல்" (திவ். இயற். பெரிய திருவந். 40).

பூவுதிர்–தல் pū-v-udir-, 4 செ.கு.வி. (v.i.) பூக்கழிதல்; to deflorate, to shed flower.

பூவெடு–த்தல் pū-v-eḍu-, 4 செ.கு.வி. (v.i.) 1. கோயிற் பூசைக்கு மலரெடுத்தல்; to gather flowers for a temple. 2. கண்ணில் விழுந்த பூசை நீக்குதல்; to remove cataract from the eye.

bg

பெட்டிபோடு¹–தல் peṭṭi-pōḍu-, 20 செ.கு.வி.(v.i.) ஒத்திசை, இசைத்தல் (இக்.வ.); to play on the harmoniam. "பெட்டி போடுகிற பையன் இன்னும் வரவில்லையா?" (உ.வ.).

பெட்டிபோடு²–தல் peṭṭi-pōḍu-, 20 செ.கு.வி.(v.i.) சூடேறிய மாழைப்பெட்டியால் துணியின் சுருக்கம் நீங்கத் தேய்த்து மடித்து வைத்தல்; ironing.

பெய்¹–தல் pey-, 1 செ.கு.வி.(v.i.) 1. மேனின்று பொழிதல்; to rain, fall, as dew or hail. "பெய்யெனப் பெய்யு மழை". குறள்.55).

பெய்²–தல் pey-, 1 செ.குன்றாவி.(v.t.) 1. பொழிதல்; to pour down, poun into. 'பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்' (புறநா.115). 2. கலமுதலியவற்றில் இடுதல்; to put, place, lay, put into serve up, as food in a dish. 'உலைப்பெய் தடுவது போலுந்துயர்' (நாலடி.14). 3. எறிந்து போகவிடுதல்; to throw out, throw aside. 'பார்த்துழிப் பெய்யிலென்' (நாலடி. 26). 4. இடைச் செருகுதல்; to insert, interpolate as in a text. 5. கொடுத்தல்; to give, confer. 'உயிர்க்கு... வீடுபேறாக்கம் பெய்தானை' (தேவா. 975, 7). 6. அமைத்தல்; to make; to settle, appoint. 'பிரான் பெய்த காவு கண்டீர்... மூவுலகே'. (திவ். திருவாய். 6,3,5). 7. பரப்புதல்; to spread. 'தருமணல் தாழப்பெய்து' (கலித். 114). 8. புகவிடுதல்; to discharge. 'கருந்தலை யடுக்கலி னணைகள்.... பெருங்கடலிடைப் பெய்து'. (கம்பரா.கும்ப.248). 9. எழுதுதல்; to writedraw. 'பெய்கரும் பீர்க்கவும் வல்லன்' (கலித். 143). 10. அணிதல்; to put on, as harness; to wear, as jewells, cloths, flowers. 'மைந்தர் தண்டார் மகளிர் பெய்யவும்' (பரிபா. 20, 21). 11. பயன்படுத்தல்; to bring into play; to use. 'பெய்திறனெல்லாம் பெய்து பேசினேன்' (கம்பரா. கும்ப. 169). 12. கட்டுதல்; to tie, faster. 'புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி' (பெரும். பாண். 218). 13. சிறுநீர் முதலியன ஒழுக விடுதல் (கொ.வ.); to discharge, as urine; to shed, as tears. 14. தூவுதல்; to strew, scatter, as flowers. 15. பங்கிடுதல்; to distribute. 16. செறித்தல்; to crowd, being close together. 'பெய்ம்மணி யேயதேர்' (கம்பரா. நாக பாச.128).

ம. பெய்யுக.

பெயர்¹–தல் peyar-, 2 செ.கு.வி.(v.i.) 1. போதல் (திவா.); to move, leave, stir, rise, depart. 'திசை யெங்கணும் பெயர்ந்தான்' (கம்பரா. நிகும்பலை. 101). 2. பிறழ்தல்; to turn about, shift, veer. 'நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்' (புறநா. 3). 3. மீளுதல்; to return, come back. 'சூழ்ந்த நிரை பெயரல்' (பு.வெ.1,10). 4. மாறுதல்; to vary, change. 'ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து' (திருவாச. 3, 134). 5. சிதைவுறுதல்; to fall into ruins. 'கட்டடம் பெயர்ந்து போயிற்று'. 6. இணைப்பு நெகிழ்தல்; to grow loose; to be detached. 'தளம் பெயர்ந்து விட்டது'. 7. கூத்தாடுதல் (பிங்.); to dance. 8. சலித்தல்; to shake. 'பெயரும்.... பிதற்றும்' (கம்பரா. சூர்ப்ப. 98). 9. அசையிடுதல்; to chew the cud. 'விளையா விளங்கணாற மெல்குபு பெயரா' (சிறுபாண். 45). 10. இடம் விட்டு மாறுதல் (வின்.); to be displaced, dislocated. 11. பிரிதல்; to be separated; to stand aside. நிலம் பெயர்ந்துறைதல் (தொல். தோ. பொ. 169). 12. கிளர்தல்; to be agitated. 'ஓதநீரிற் பெயர்பு பொங்க' (புறநா. 22). 13. தேய்தல்; to be rupped (w.). 14. பணம் நடமாடுதல்; to pass from hand to hand., as currency. 'அந்த ஊர் எப்பொழுதும் பணம் பெயரக்கூடியது'. 15. தண்டப்படுதல் (வசூலாதல்); to be collected, as money or debt. 'ஆயிர உரூபா பெயர்ந்தது'.

பெயர்²–த்தல் peyar-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. போக்குதல்; to remove, displace, dislodge, dislocate, unseat. 'உடைமை மயலாகும் மற்றும் பெயர்த்து' (குறள், 344). 2. நிலை மாறச் செய்தல்; to dispel; to shake from its basis. 'சூறை மாருதத் தெறியது வளியிற் கொட்கப் பெயர்க்கும் குழகன்' (திருவாச. 3, 12). 3. அப்புறப்படுத்துதல்; to drive away, as foes; to remove from one place to another, as cattle. 'தென்னவற் பெயரிய.... தொன்முதுகடவுள்' (மதுரைக். 40). 4. திருப்பிப் போடுதல் (யாழ். அக.); to turn over, as a cake. 5. பிடுங்குதல்; to uproot, as a plant; to force open, as a door. 6. கெடுத்தல்; to blow up; to blast; to ruin. 'பிணம் பிறங்கப் பெயர்த்திட்டன்று' (பு.வெ.1,10). 7. ஒடுக்கிக் கொள்ளுதல்; to absorb, gather into one's self. 'பல்லுருவம் பெயர்த்துநீ' (கலித். கடவுள்.). 8. பிரித்தல்; to separate. 'நாணடப் ரெயர்த்தனமக்குமாங் கொல்லாது' (கலித். 47). 9. மீட்டுதல்; to redeem, save, recover. 'நல்வளைத் தோளியைப் பெயர்க்கும் விச்சையின்' (பெருங். வத்தவ.6,40). 10. தண்டுதல் (வசூலித்தல்); to collect. 'நூறு உருவா பெயர்த்தேன்'. 11. செலுத்துதல்; to lead, push, drive. 'இனிய சொல்லி யின்னாங்குப் பெயர்ப்பது' (கலித். 14). 12. விடுத்தல்; to discharge. 'வெஞ்சரம்... இராகவன் சிலை நின்று பெயர்த்தான்' (கம்பரா. முதற். 228).

பெயர்பொறி–த்தல் peyar-poṟi-, 4 செ.குன்றாவி.(v.t.) புகழை நிலைநிறுத்துதல்; to be distinguished. 'பெயர் பொறிக்கும் பேராண்மையில்லாக் கடை' (நாலடி. 199).

பெயரிடு–தல் peyar-iḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *பெயர் சூட்டுதல்;* to give a name; to perform the rite of naming a child. "பெயரிடுதல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டியதில்லை".

பெரு–த்தல் peru-, *4 செ.கு.வி.*(v.i.) *1. பருத்தல்;* to grow thick, large, stout. *2. மிகுதல்;* to become numerous. "கரடியாதி பெருத்த" *(விநாயகபு.).*

ம. பெருகுக; தெ. பெருகு.

பெருக்கு–தல் perukku-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. விரியச் செய்தல்;* to cause to increase or abound; to make greater. "வாரி பெருக்கி" *(குறள், 512). 2. நீர் நிரப்புதல்;* to fill, to cause to swell and overflow. "வாய்க்காலால் ஏரியைப் பெருக்க வேண்டும்" *(உ.வ.). 3. மோர் முதலியவற்றை நீர் கலந்து பெருகச் செய்தல்;* to dilute with water, as buttermilk. "நீர் சுருக்கி மோர் பெருக்கி" *(பதார்த்த. 1498). 4. குப்பை கூட்டுதல்;* to sweep. *5. ஓர் எண்ணை மற்றோர் எண்ணாற் கூட்டி மடங்கு அதிகப் படுத்துதல் (கணக்.);* to multiply.

தெ. பெருக; க. பெர்சிசு; ம. பெருக்குக.

பெருக்கெடு–த்தல் perukkeḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *வெள்ளம் அதிகமாதல்;* to flood, as a river; to ebb, a tide.

பெருகு–தல் perugu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அளவு மிகுதல்;* to increase in numbers, multiply, spread to abound. *2. நிறைதல் (சூடா.);* to become full; to be perfected. *3. நீர் மிகுந்தெழுதல்;* to rise, swell, to over flow, as water. "பெருகு மதவேழம்" *(திவ். இயற். 2,75). 4. மேம் படுதல்;* to be increased, augmented or enlarged, to grow great, prosper. "பண்பிலார் கேண்மை பெருகலிற் குன்ற லினிது" *(குறள், 811). 5. முதிர்தல்;* to come to maturity, as embryo. "பெருகுசூலிளம்பிடிக்கு" *(கம்பரா. சித்திர. 10). 6. வளர்தல்;* to grow. "தளிபெருகுந் தண்சினைய" *(பரிபா. 8, 91). 7. ஆக்கந்தருதல் (வின்.);* to bring prosperity. *8. தாலி அற்று வீழ்தல் (கொ.வ.);* to snap. as the thread of the marriage badge, used euphemistically. *9. கேடுறுதல் (தொல். சொல். 17, உரை) (திருக்கோ. 218. உரை);* to be injured, ruined, used euphemistically. *10. விளக்கணைதல்; (நேமி. சொல். 10. உரை);* to be put out or extinguished, used euphemistically.

க. பெர்சு.

பெருவு–தல் peruvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தூக்கத்தில் அச்சத்தாற் பிதற்றுதல் (வின்.);* to talk in sleep.

பெள்¹–தல் (பெட்டல்) peḷ-, *6 செ.குன்றாவி.*(v.t.) *1. விரும்புதல்;* to desire. *'பிரித்தலும் பெட்டலும்' (தொல். பொ.147). 2. காதலித்தல்;* to love. *'பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை' (குறள். 141). 3. நினைத்தல்;* to intend. *'பெட்டவை செய்யார்' (இனி. நாற். 23).*

பெள்²–தல் (பெட்டல்) peḷ-, *15 செ.கு.வி.*(v.i.) *மிகுதல்;* to be immoderate. *'வெண்டிங்கள் பெட்ப நகுகின்றது' (சீவக. 1662).*

பெள்³–தல் (பெட்டல்) peḷ-, *5 செ.குன்றாவி.*(v.t.) *காப் பாற்றுதல்;* to protect. *'பெட்டல் என்பது புறந்தருதல்' (தொல். சொல். 332, இளம்பூ).*

பெறு¹–தல் peṟu-, *17 செ.குன்றாவி.*(v.t.) *1. அடைதல்;* to get, obtain, secure, possess. "கையுறப் பெற்றக்கால்" *(நாலடி, 5). 2. பேறுயிர்த்தல்* to bring forth, bear, as children. *'பெற்றாளொருபிள்ளையென் மனையாட்டி' (தனிப்பா. i, 235, 1). 3. பிறப்பித்தல்;* to be get, generate. *'தான் பெற்ற புதல்வன்' (நாலடி. 197). 4. அறிதல்;* to know. *'எல்லா யாம் பெற்றேம்' (பரிபா. 8, 83).*

பெறு²–தல் peṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *விலைத்தகுதியுடைய தாதல்;* to be worth; to be worthy of; to fetch a price. *'அப்பண்டம் அவ்வளவு பெறுமா?'.*

பெறுத்து–தல் peṟuttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. அடை வித்தல்;* to cause to obtain. *'நிலைபெறுத்தலும் நீக்கலும்' (கம்பரா. பாயி.1). 2. உண்ணுதல்;* to eat. *'அவற்றைப் பெறுத்திப் போந்தான்' (திவ். பெரியாழ். 2,9,9).*

ng

பேகணி–த்தல் pēgaṇi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. குழப்பமுறுதல்;* to be distressed. "இழக்கப்புகா நின்றா யென்று பேகணியா நின்றேன்" *(ஈடு. 9, 4, 3). 2. நிறம் வேறுபடுதல்;* to change colour; to become pallid. *'பேகணித்துப்பிற்காலித்துப் போகக்கவ்வ அக்கினி' (திவ். பெரியதி. 2,4,2, வ்யா.).*

பேச்சழி–தல் pēccaḻi-, *2 செ.கு.வி.*(v.i.) *சொன்ன சொல் தவறுதல் (யாழ்.அக.);* to fail to keep one's word.

பேச்சுக்கொடு–த்தல் pēccu-k-koḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மந்தண மறியச் சொல்லாடுதல் (வின்.);* to speak with one in order to obtain secrets to sound (w.). *2. பேச்சு நீடித்தல் (யாழ்.அக.);* to prolong one's talk. *3. பொழுது போக்காகச் சொல்லாடுதல் (இ.வ.);* to keep oneself engaged by talking with.

பேச்சுத்தட்டு–தல் pēccu-t-taṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சொல் தடுமாறுதல்;* to stammer, stutter; to hesitate. *2. சொன்னசொல் தவறுதல்;* to break one's word. *3. பிறர் கூற்றை மறுத்தல்;* to go against the expressed wishes of a person.

பேச்சுத்தடுமாறு–தல் pēccu-t-taḍumāṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சொல் குழறுதல்;*to be confused, puzzeled or disconcerted in speaking (w.). *2. உறுதிமொழி தவறுதல் (இ.வ.);* to break one's word.

பேசு¹–தல் pēśu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சொல்லாடுதல்;* to talk,

speak. 2. வஞ்சினமுடித்தல்; to fulfil a vow. 'வாளினாற் பேசலல்லால்' (சீவக. 259). 3. வீணை நரம்பு முதலியன இசைத்தல்; to sound, as a lute string. 'கையாழ் (பிடில்) நரம்பு (தந்தி) நன்றாகப் பேசவில்லை'. 4. நாடி முதலியன துடித்தல்; to feat, as the pulse.'கையில் பித்தநாடி பேசவில்லை'. 5. உரக்கப்பேசுதல்; to make noise, to roar. 'தரங்கநீர் பேசிலும்' (திவ். பெரியதி. 8,2,7).

பேசு²–தல் pēšu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. சொல்லுதல்; to tell, say. 'வாயினாற் பேசறேற்றேன்' (சீவக. 257). 2. பலமுறை சொல்லுதல்; to repeat manytimes. 'ஈன்றுழாய் மாயனையே பேசியே' (திவ். இயற். பெரியதி.38). 3. போற்றுதல்; to praise. 'பேசாத நாளெல்லாம் பிறவாநாளே' (தேவா. 12, 1). 4.செயலைப்பேசிமுடிவு செய்தல்; to deal, bargain negotiate verbally, as a business. 5. வைதல்; to abuse, vilify.

பேணு–தல் pēṇu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. போற்றுதல்; to treat tenderly, to cherish."தந்தை தாய்ப்பேன்" (ஆத்திசூடி). 2. போற்றிக்காத்தல்; to protect. "பேணித் தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்" (புறநா. 9). 3. மதித்தல்; to regard, esteem, value. "குன்று... தெய்வம் பேணித்திசை தொழுதனிர் சென்மின்" (பரிபா.15, 48) (திவா). 4. விரும்புதல்; desire. 'பேணான்வெகுளி' குறள். 526). 5. ஒப்புரவு; to treat courteously. 'பிறர் தன்னைப் பேணுங்கானாணலும்' (திரிகடு. 6). 6. வழிபடுதல்; to worship. 'அமரர்ப் பேணியும்' (பட்டினப். 200). 7. பொருட் படுத்துதல்; to care for, mind. "துவலைத் தண்டுளி பேணார்" (நெடுநல். 34). 8. கழுவாய் செய்தல்; to attend carefully, talk particular car of. 'பாணியுந்துரக்கு நடையும் பெயராமை பேணி' (பு.வெ.12, ஒழிபு. 19). 9. ஒப்பனை செய்தல்; to adorn. 'பேணி நிறுத் தாரணி' (கலித். 104). 10. கருதுதல் (திவா.); to purpose, intend. 11. குறித்தல் (சூடா.); to mark out. 12. உட்கொள்ளுதல்; to take in, swallow. "விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி" (சிறுபாண். 244). 13. அறிதல்; to know . 'பேணாதொருத்தி பேதுற' (பரிபா. 7, 67). 14. ஒத்தல்; to resemble. 'பெருநறாப் பேணியவே கூர்நறா வார்ந்தவள் கண்' (பரிபா.7, 63).

பேதறு–த்தல் pēdaṟu-, 20 செ.குன்றாவி.(v.t.) கலக்க மொழித்தல்; to clear doubt. 'மாருதி வந்துன்னைப் பேதறுத்து' (கம்பரா. மீட்சி. 166).

பேதுறு–த்தல் pēduṟu-, 17 செ.குன்றாவி.(v.t.) வருத்துதல்; to cause distress. 'உயிரைப் பேதுறுத்து' (சீவக. 2766).

பேந்து–தல் pēndu-, 2 செ.கு.வி.(v.i.) மருளுதல்; to be bewildered. 'பேந்திப் பேந்தி விழிக்கிறான்'.

பேயாட்டு–தல் pēy-āṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1.குறி சொல்லுதற்கு மருளேதறச் செய்தல் (வின்.); to cause a person to be possessed for making him utter oracles. 2. பேயோட்டு (இ.வ.) பார்க்க; see pēyōṭṭu.

பேயோடு–தல் pēy-ōḍu-, 2 செ.கு.வி.(v.i.) பேய்பிடித்தாடுதல் (வின்.); to whirl the head through demoniac possession.

பேயோட்டு–தல் pēy-ōṭṭu-, 5 செ.குன்றாவி.(v.t.) பேயை மந்திரத்தால் வெளியேற்றுதல்; to exorcise.

பேர்¹–தல் pēr-, 2 செ.கு.வி.(v.i.) 1. சிதைதல்; to become loose, to be detached. கட்டடம் பேர்ந்து போயிற்று. 2.பிரிதல்; to seperate. "உமையோடென்றும் பேரானை" (தேவா. 872, 5). 3. போதல்; to depart, go away. "பேர்ந்தும் பெயர்ந்தும்" (திவ். திருவாய். 5, 3, 3). 4. அழிதல்; to be annihilated. "பேர்கின்ற தாகும் பிறப்பு" (அறநெறி. 169). 5. பிறழ்தல்; to flop, as a fish. "கெண்டைக் குலம்..... பேர்கின்றவே" (திருவிருத். 11). 6. அசைதல்; to move. "பேருங் கற்றைக் கவரி (கம்பரா. முதற். 98). 7. குறைதல்; to lesser, diminish."பேராச் சிறப்பின்" (தொல். பொ.102). 8. பின்வாங்குதல்; to draw back, retreat, as a warrior. "பொருநகர் தாக்கற்குப் பேருந்த கைத்து" (குறள், 486). 9. முறைபிறழ்தல்; to go out of order. "வினையைப் பேராம லூட்டும் பிரான்" (சி.போ.2,2). 10. நிலைமாறுதல்; to change. பேதிப்பன. "நீயவை பேர்கிலையால்" (கம்பரா. இரணிய. 110).

பேர்²–த்தல் pēr-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. இடம்விட்டு நீக்குதல்; to change, remove."என்றவனைப் பேர்த் திங்ஙன் மீட்டுத் தருவாய்" (சிலப். 9, 38). 2. அழித்தல்; to destroy, annihilate.3. புரட்டுதல்; to turn over. "வன்கழுகு பேர்த்திட்டுக் கொத்தும்" (நாலடி, 48). 4. முறித்தல்; to break."பேர்த்தனை மாசகடம் பிள்ளையாய்" (திவ். இயற், 2, 10). 5. மாற்றுதல்; to alter, distort.

பேர்கொடு–த்தல் pēr-koḍu-, 4 செ.கு.வி.(v.i.) 1. புகழ்தருதல் (கொ.வ.); to give a good name, to bring credit. 2. குறிப்புப் பெயரிடுதல் (கொ.வ.); to nick name. (colleq.). 3. ஒரு குறிக்கோளுக்காகச் சூளேற்றி (ஞானஸ்நானம் செய்து) பெயரிடுதல்; to baptise, as giving a name to a child.

பேர்சொல்(லு)–தல் pērsol(lu)-, 5 செ.குன்றாவி. (v.t.) ஒருவரது புகழைத் தாங்கி நிறுத்துதல்; to hold one's fame.

பேரெடு¹–த்தல் pēr-eḍu-, 4 செ.கு.வி. (v.i.) புகழ்பெறுதல்; to become famous.

பேரெடு²–த்தல் pēr-eḍu-, 4 செ.குன்றாவி.(v.t.) பட்டியலி லிருந்து பெயரை நீக்கி விடுதல்; to strike off the roll.

பேர்வை–த்தல் pēr-vai-, 4 செ.குன்றாவி.(v.t.) 1.பெயரிடுதல்; to charister, to name. 2. குறிப்புப் பெயரிடுதல்; to nick name.

ig

பையா–த்தல் paiyā-, 4 செ.கு.வி.(v.i.) 1. வருந்துதல்; to be distressed, to suffer pain. 'அரவம் வைகிக்கேட்டுப் பையாந்திசினே' (நற். 144). 2. அச்சந் தோற்றுதல்; to show signs of fear. 'பையாக்க விழிக்கத் தொடங்கினான்' (ஈடு, 5, 10, 3).

bgh

பொ[1]–த்தல் po-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. துளைத்தல்;* to perforate, puncture, make a hole or opening. "பொத்த நூற்கல்லும்" *(நாலடி. 376).*

பொ[2]–த்தல் po-, *5 செ.கு.வி.*(v.i.) *கொப்புளித்தல்;* to be blistered. "தீப்பட்டுக் கை பொத்தது" *(உ.வ.).*

பொக்கு–தல் pokku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *கொப்புளங் கொள்ளுதல்;* to be blistered. *'உடம்பெல்லாம் பொக்கிவிட்டது'.*

பொங்கு–தல் poṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. காய்ந்து கொதித்தல்;* to boil up, bubble up by heat. *2. கொந் தளித்தல்;* to foam and rage, as the sea. *'பொங்குநீர் ஞாலம்' (நாலடி, 72). 3. மிகுதல் (பிங்.);* to increase. *'மகிழ்ச்சி பொங்கி' (காசிக. கயிலே. 23). 4. பருத்தல்;* to expand swell, as with joy. *'வன் கொங்கை பொங்க' (திருவாச. 9, 8). 5. மேற்கிளர்தல்;* to shoot up. *'நெய்ம்மலி யாவுதி பொங்க' (புறநா. 15). 6. ஊக்கம் கொள்ளுதல்;* to be elated, spirited. *'போர்த்தொழில் வேட்கை பூண்டு பொங்கினார்' (கம்பரா. படைத். 1). 7. வைகுதல்;* to burst in anger. *'பொங்கி மறத்திடை மான மேற்கொண்டு' (பு.வெ.5,6). 8. செருக்குதல்;* to be haughty. *'பொங்குதலின்றிப் புரையோர் நாணிப்பண்' (தொல்.பொ.426). 9. நுரைத்தெழுதல்;* to ferment, effer - vesce. *'தோசைமா கள்ளு முதலியன பொங்கும்'. 10. விளங்குதல்;* to be bright, attractive.*'பொங்கு வெண்ணுலு பொடியணி மார்பிற் பொலிவித்து' (தேவா. 676, 2). 11. மயிர் சிலிர்த்தல்;* to stand on end, as hair or mane. *'எரிமயிர் பொங்க' (திவ். திருப்பா. 23). 12. வீங்குதல்;* to be swollen, as a boil or sore. *'பதைத்தடி பொங்கு நங்காய்' (திருக்கோ. 228). 13. விரைதல்;* to be swift, rapid. *'பொங்குநடை ... விடையாமவரூர்தி' (தேவா. 535, 2). 14. துள்ளுதல்;* to jump, leap. *'ஏழையிரும்புகர் பொங்க' (கலித். 107). 15. கண் சூடுகொள்ளுதல்;* to be inflamed, as eyes. *16. உயர்தல் (பிங்.);* to rise, grow high. *17. செழித்தல்;* to a bound, flourish; to be fruitful. *18. ஒலித்தல்;* to sound, roar, to cook. *'பொங்கின சிலம்புகள்' (கம்பரா. உண்டாட். 63).*

தெ., க. பொங்கு; ம. பொங்குக.

பொச்சா–த்தல் poccā-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. மறத்தல்;* to forget. *'புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க' (குறள், 719). 2. இகழ்தல்;* to deride, ridicule. *'கொடையளிக்கட் பொச்சாவார்' (ஆசாரக். 67).*

பொசி[1]–தல் poši-, *2 செ.கு.வி.*(v.i.) *1. கசிதல்;* to coze out, percolate. *'நெல்லுக் கிறைத்த நீர்... புல்லுக்கு மாங்கே பொசியுமாம்' (மூதுரை. 10). 2. வடிதல் (வின்.);* to flow freely, as tears, milk, stream. *(ய.). 3. செய்தி வெளியாதல் (பாரத. அருச்சுனன்றவ. 40);* to leak out, as a report or secret. *4. மனமுருகுதல் (வின்.);* to melt, be softened, as the heart in benevolence.

பொசி[2]–த்தல் poši-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. உட்கொள்ளுதல்;* to eat, feed on. *'நின்மாலியாந் தீர்த்தம் புசியாதிருந்து மிலோம்" (சிவரக. தேவர்முறை.12). 2. வினைப்பயன் எதிர்கொள்ளுதல்;* to experience, as the fruits of past actions.

பொசுக்கு[1]–தல் pošukku-, *செ.குன்றாவி.*(v.t.) *1. சாம்பலாக எரித்தல்;* to burn to ashes. *2. வெதுப்புதல்;* to scorch, burn, as the sun. *3. தீயில் வாட்டுதல்;* to single, toast. *4. துன்பப்படுத்துதல்;* to persecute, afflict.

பொசுக்கு[2]–தல் pošukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) மலக்காற்று விடுதல் *(வின்.);* to break wind.

பொசுங்கு[1]–தல் pošuṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. எரிக்கப் படுதல்;* to burn, to be consumed, as hair, paper. *2. காய்தல்;* to be scorched slightly, as grain. *3. வாட்டப் படுதல் (வின்.);* to be signed, toasted. *4. அழிவுறுதல்;* to be ruined. *'அந்தக் குடும்பம் பொசுங்கிவிட்டது'.*

பொசுங்கு[2]–தல் pošuṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) இணங்குதல்; to be united, to agree. *'இருவருக்கும் பொசுங்காது'.*

பொட்டி–த்தல் poṭṭi-, *4 செ.கு.வி.*(v.i.) திறத்தல்; to open. *'கடிதக்கட்டைப் பொட்டித்துப் பார்த்தான்'.*

பொடி[1]–தல் poḍi-, *2 செ.கு.வி.*(v.i.) *1. தூளாதல்;* to be broken to pieces, as rice, to become pulverised. *'சிரம்பொடிந்து சிந்தவே' (கம்பரா. மூலபல. 93). 2. தீய்தல்;* to be blighted, as grain. *'பொறாதார் தங்கண் பொடிவதெவன்' (கலித். 105). 3. ஒளி மழுங்குதல்;* to lose brightness. *'கண்ணெலாம் பொடிந்தலற' (தேவா. 805. 8). 4. கெடுதல் (வின்.);* to perish; to be destroyed (w.). *5. சினங்கொள்ளுதல்;* to be angry. *'தன் கைகால் தப்புச் செய்ததென்று பொடிய விரகுண்டோ' (திவ். திருப்பா. 28. உரை, பக். 244).*

பொடி[2]–த்தல் poḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. கண்டித்தல்;* to rebuke, check. *'பொடிகிற தாய்மாரைக் குறித்து' (ஈடு. 7, 3, 4). 2. வெறுத்தல்;* to despise, dislike. *'பொடிந்த நின் செவ்வி காட்டென' (பூறநா. 160).*

பொடி[3]–த்தல் poḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. துகளாக்குதல்;* to pulverises reduce to dust or powder.*'எழுமலை பொடித்த... வள்ளிதுணைக் கேள்வன் (கல்லா. 1). 2. கெடுத்தல்;* to spoil, destroy. *'அது கண்பொடித்த நாள்' (கம்பரா. காட்சி. 28). 3. தோற்றுவித்தல்;* to produce.

பொடி[4]–த்தல் poḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. அரும்புதல்;* to spring up, shoot, rise. *'முலைபொடியா' (திருக்கோ. 104). 2. தோன்றுதல்;* to appear. *'ஊன்றலைப் பொடித்தாங் கனைய செஞ்சூட்டின்' (சீவக. 2106). 3. விளங்குதல்;* to shine. *'இரவி கோடி... பொடித்து' (சூடா. 5, 1). 4. வியரும்புதல்;* to bedew; to ooze out, as perspiration. *'புள்ளிவியர் பொடிப்ப' (பதினொ. திருவிடைம. 16).*

5. மயிர் சிலிர்த்தல்; to horripillate.'பொடித்தன வுரோம ராசியே' *(கம்பரா. உண்டாட்டு. 36). 6.* பொடியாதல்; to be pulverised. *'பூழையோடே பொடித்து' (கம்பரா. எதிர்கோ. 10).*

பொடிப்போடு–தல் poḍi-p-pōḍu-, *20* செ.கு.வி.(v.i.) *1.* மூக்குள் புகையிலைத் தூளிடுதல்; to take snuff. *2.* மாயப் பொடியிடுதல்; to cast magical powders on one.

பொடிபடு–தல் poḍi-paḍu-, *20* செ.கு.வி.(v.i.) உடைபடுதல்; to be broken, crushed. *'கரை பொடிபடப் புடைத்ததை யன்றே' (அரிச்பு. மீட்சி. 14).*

பொடியா–தல் poḍi-y-ā-, *6* செ.கு.வி.(v.i.) அழிதல்; to perish. *'பொய்யும் பொடியாகா தென்செய்கேன்' (திருவாச. 47, 1).*

பொண்டு–தல் poṇḍu-, *5* செ.கு.வி.(v.i.) கெட்டுப்போதல் *(யாழ்ப்.);* to grow bad deteriorate.

பொத்து¹–தல் pottu-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.* புதைத்தல் *(பிங்.);* to bury. *'மண்ணிடைக் கடிது பொத்துதல்' (கம்பரா. விராதன்வதை. 43). 2.* வாய், கண், காது முதலியவற்றை மூடுதல்; to cover, close as the mouth, eyes or ears with the fingers or otherwise. *'தன் செவித் தொளையிருகைகளாற் பொத்தி' (கம்பரா. இரணிய. 22). 3.* விரல் மடக்கி உள்ளங்கையை மூடுதல் *(இ.வ.);* to close the fingers together. *4.* தைத்து மூட்டுதல்; to mend, patch, botch as baskets an bags. *5.* தைத்தல்; to stitch. *'இலையைப் பொத்திப்போடு' 6.* மறைத்தல்; to hide, conceal. *'செம்பால்... கிளர்படி பொத்தின' (கம்பரா. கரன்வதை. 100). 7.* அடித்தல்; to beat. *'அவனை நன்றாய்ப் பொத்திவிட்டார்கள்'. 8.*தீ மூட்டுதல்; to light, as a fire. *'கனையெரி பொத்தி' (மணிமே. 2, 42). 9.* மாலை கட்டுதல்; to tie, string together, as a wreath. *'மறுகண்ணியும் பொத்தி' (ஈடு. 1, 3, 1). 10.* கற்பனை செய்தல்; to invent, imagine. இல்லாத தெய்வம் பொத்தித்தம் *'மயிர் பறிக்குஞ்சமணர்' (தேவா. 65, 8, 7).*

பொத்து²–தல் pottu-, *4* செ.கு.வி.(v.i.) *1.* கலத்தல்; to mix. *'நெஞ்சம் பொத்தி" (பு.வெ.11, ஆண்பால். 4). 2.* நிறைதல்; to be filled. *'வான்மேற் பொத்தினகுழு' (கம்பரா. கரன்வதை. 100).*

க., ம. பொத்து.

பொதி¹–தல் podi-, *2* செ.கு.வி.(v.i.) *1.* நிறைதல்; to be full, as in leaning. *'மிகக்ககனம் பொதிந்த நூல்" (நாலடி., 341).*

பொதி²–தல் podi-, *2* செ.கு.வி.(v.i.) சேமித்தல்; to store up, treasure up. *'பொன்போற் பொதிந்து' (குறள், 155). 2.* உள்ளடக்குதல்; to contain, hold. *'செழுந்தேனும் பொதிந்து' (திருக்கோ. 46). 3.* மறைத்தல்; to hide, conceal, cover up. *'தூண்டிலினுட் பொதிந்த தேரையும்' (திரிகடு. 24). 4.* பிணித்தல்; to tie up, as a bundle (w.). *5.* கடைப்பிடித்தல்; to maintain follow, act upto. *'யானி கழ்த்து நீதியைப் பொதிவதுன்கடன்' (விநாயகபு. 4, 1).*

பொதிர்¹–தல் podir-, *2* செ.கு.வி.(v.i.) *1.* வீங்குதல்; to swell. *'புனைதார் பொரநொந்து பொதிர்ந்த வென' (சீவக. 1380). 2.* மிகுதல் *(வின்.);* to increase, abount (w.). *3.* நடுங்குதல்; to tremble. *'சிரம்பொதிர்ந் தமர ரஞ்ச' (கம்பரா. பிரமாத். 13). 4.* அஞ்சுதல் *(திவா.);* to be afraid.

பொதிர்²–த்தல் podir-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* குத்துதல்; to pierce. *'கழை பொதிர்ப்பத் தேன் சொரிந்துங (சீவக. 2778). 2.* முரித்தல்; to break, break off. *'கவண்கலான் வார்பணை பொதிர்த்தும்' (தணிகைப்பு. நாட்டுப். 41).*

பொதிர்³–த்தல் podir-, *4* செ.கு.வி.(v.i.) பருத்தல்; to swell, increase in size, became large. *'பொதிர்த்த முலையிடை' (பரிபா. 21, 25).*

பொது¹–தல் podu-, *2* செ.கு.வி.(v.i.) துளைபடுதல்; to be perforated. *'மரம் பொதச்சரந்துரந்து' (திவ். திருச்சந். 73).*

பொது²–த்தல் podu-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* துளைத்தல்; to bore. *'புட்கள் பொதுத்த புலால் வெண்டலை' (பதினொ. மூத்த. 3). 2.* முள் முதலியன பாய்தல்; to pierce, prick. *'கப்பணம் கால்களைப் பொதுக்கும்படி' (மதுரைக். 598, உரை).*

பொதுக்கு¹–தல் podukku-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.* விலக்குதல்; to omit, leave out. *2.* மறைதல்; to conceal. *'விழிவேல் பாய்ந்து பொதுக்கிடம் விடாதென்னாகம் புகுந்து' (இரகு. கடிமண. 49). 3.* கவர்தல்; to embezzle.

பொதுக்கு²–தல் podukku-, *5* செ.குன்றாவி.(v.t.) புகையிற் பழுக்க வைத்தல்; to riper fruits by funigation. *'வாழைக் காய்களைக் கனியாகுமாறு இலை முதலியன இட்டுப் பொதுக்குகிறார்கள்' (இ.வ.).*

பொதுளு–தல் poduḷu-, *5* செ.கு.வி.(v.i.) *1.* நெருங்குதல் *(சூடா.);* to be thick, close or crowded.'சிகையனல் பொதுளியல்' *(கம்பரா. இந்திரசித்து. 20). 2.* நிறைதல்; to be possessed of, filled. *'ஞானங் குணங்கல்வி நூல் பொதுளி' (அரிசமய. பரகால. 7). 3.* தழைத்தல்; to be luxuriant; to prosper thrive.*'இருள்படப் பொதுளிய' (திருமுரு. 10).*

தெ. பொத; *க.* பொதெ.

பொய்¹–தல் poy-, *1* செ.கு.வி.(v.i.) *1.* பிடுங்கப்படுதல்; to be pulled out, torn off. *'பொய்த குத்தின... புண்' (கம்பரா. கிங்கர. 50). 2.* துளைக்கப்படுதல்; to be hollowed. *'பொய்தகடொன்று பொருந்தி' (கம்பரா. பஞ்ச. 49).*

பொய்²–தல் poy-, *1* செ.குன்றாவி.(v.t.) வீழ்த்துதல்; to fell, throw down. *'அவை பார் சோரப் பொய்தான்' (கம்பரா. அட்ச. 33).*

பொய்³–த்தல் poy-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* தவறுதல்; to fail, as a prediction or omen; to deceive hope, as clouds. *'விண்ணின்று பொய்ப்பின்' (குறள், 13). 2.* தம் செயலினின்று

பின்வாங்குதல்; to prove false. "பொய்த்தோர் வில்லிகள் போவாராம்" (கம்பரா. சூளா. 41). 3. கெடுதல்; to go to ruin. 'பொருளென்னும் பொய்யா விளக்கம்' (குறள், 753).

பொய்⁴–த்தல் poy-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பொய்யாகப் பேசுதல்; to lie, utter false-hood to make false pretences. 'தன்னெஞ் சறிவது பொய்யற்க' (குறள், 293). 2. வஞ்சித்தல்; to deceive, cheat.'நின்றோடிப் பொய்த்தல்' (நாலடி. 111).

பொரி¹–தல் pori-, 2 செ.கு.வி.(v.i.) 1. பொரியாதல்; to be parched, baked. 'செந்தீ யினிடைப் பொரிந்து தெறித்த பொரிபோல' (பிரபுலிங். பிரபுதே. 54). 2. வறுபடுதல் (வின்.); to be roasted, fried, as grain. 3. தீய்தல்; to be blackened by fire, singed, scorched or burnt by the sun. 'பொரிந்தன கலவைகள்' (கம்பரா. மிதிலைக் காட். 50). 4. விரைவாகப் பேசுதல் (கொ.வ.); to speak fluently. 5. அலப்புதல் (வின்.); to blab. 6. உப்பு முதலியன தரையிற்பூத்தல் (வின்.); to form, as a thin stratum or layer of salt. 7. படிதல்; togather, as a coat of dust on the body.. 8. மெல்லென ஒலித்தல் (வின்.); to crack, pop, make slight, reports, as musketry. 9. வாணப்பொரி மிகுந்து சொரிதல்; to throw out sparks, as Roman candle or a whirling firebrand. 'பொரிந்தோடின... கருங் கோளரிக் கிளையான் விடு சரமே' (கம்பரா. நிகும்பலைய. 112). 10. பொருக்குவெடித்தல் (யாழ். அக.); to be dried up and shrivelled as the skin.

க. புரி.

பொரி²–த்தல் pori-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. பொரியச் செய்தல்; to fry. 'நெய்யுறப் பொரித்த' (புறநா. 397). 2. வறுத்தல்; to parch, toast, as grain. 3. கிழங்கு கடுதல் (வின்.); to bake after roasting on live coals, as yams. 4. அடைகாத்துக் குஞ்சையுண்டாக்குதல்; to hatch, as birds. 5. போக்குதல்; to disperse, remove. 'அல்லைப் பொரிக்கு மதிக்குடை நிழற்ற' (தணிகைப்பு. வள்ளி. 122). 6. தீய்த்தல்; to burn, scorch, as the sun. 'வெயில் பொரிக்கிறது'. 7. புளியில்லாமல் சமைத்தல்; to cook without tamarind.'பொரித்தகுழம்பு'. 8. குறைந்த விலைக்கு விற்றல் (யாழ்.அக.); to sell at a low price.

பொரு¹–தல் poru-, 1 செ.கு.வி.(v.i.) 1. போர் செய்தல்; to fight, contend in warfare, engage in battle. 'ஈரைம் பதின்மரும் பொருது களத்தொழிய' (புறநா. 2). 2. சூதாடுதல்; to play games of chance.'போது போகுமாறிருந்து பொருதும்' (பாரத. சூது. 169). 3. மாறுபடுதல்; to compete, viewith, strive against. 'கண்பொர விளங்கு..... குடை' (புறநா. 35). 4. வீசுதல்; to blow, as the wind. 'குரூஉப்புகை பிசிரக் கால்பொர' (பதிற்றுப். 15, 6).

பொரு²–தல் poru-, 1 செ.குன்றாவி.(v.t.) 1. தடவுதல்; to play, as a lute. 'வீணைபொரு தொழிலும்' (சீவக. 1795). 2. கடைதல்; to churn. 'ஒற்றைக்கிரி மத்தைப் பொருது' (திருப்பு.1). 3. ஒப்பாதல்; to resemble. 'மலையெத்தனை அத்தனை... பொருகிற்பன' (கம்பரா. அதிகா. 150). 4. தாக்குதல்; to come in collision with, dash against, as waves. 'பொருபுனறரூஉம்' (சிறுபாண். 118). 5. முட்டுதல்; to reach, extend. 'விண்பொரு புகழ்' (புறநா. 11). 6. பொருந்துதல்; tojoin, unite, combine. 'பொய்பொரு முடங்குகை' (சிலப். 15, 50). 7. பெருக்குதல்; (math.) to multiply. 'அவற்றைப் பொருளாதியாறினானும் பொர' (நன். 269, மயிலை.).

க. போர்.

பொருட்படுத்து–தல் poruṭ-paḍuttu-, 6 செ.குன்றாவி.(v.t.) மதித்தல்; to esteem, make important. 'நாள்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த' (திருவாச. 10, 20).

பொருத்து–தல் poruttu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. பொருந்தச் செய்தல்; to fit, adapt. 'சந்துகள் புல்லறப் பொருத்துவ தொன்று' (கம்பரா. மருத்துமலை. 90). 2. உடன் படுத்துதல்; to induce consent. 'பொருடரும்படி யின்று பொருத்தி' (அரிச். பு.வஞ்ச. 8). 3. கூட்டுதல்; to cause to agree, to reconcile. 'பிரிந்தார்ப் பொருத்தலும் வல்ல தமைச்சு' (குறள், 633). 4. வேலைக்கமர்த்துதல் (வின்.); to engage for labour. 5. அமையச் செய்தல் (வின்.); to brig over, as to a party or an opinion. 6. இரு பொருள்களை இசைத்தல் (பிங்.); to join together, knit, unite. 7. விளக்கேற்றுதல்; to kindle. 8. போர் மூட்டுதல்; to stir up, as to a fight. 'வாரணம் பொருத்து வாரும்' (கம்பரா. நாட்டுப். 16).

பொருது¹–தல் porudu-, 5 செ.கு.வி.(v.i.) 1. ஒன்றுதல் (யாழ். அக.); to be joined, combined, united with. 2. போர் செய்தல்; to fight, contend.

பொருது²–தல் porudu-, 5 செ.குன்றாவி.(v.t.) இணைத்தல் (சங்.அக.); to join together, unite.

பொருந்(நு)–தல் porun(nu)-, 5 செ.கு.வி.(v.i.) 1. பொருந்துதல் (நன்.137); to be suitable. 2. உடன்படுதல் (வின்.); to agree consent.

பொருந்திக்கொடு–தல் porundi-k-koḍu-, 4 செ.குன்றாவி.(v.t.) ஒப்பந்தத்தின் மேல் வேலையிடுதல் (வின்.); to give a work on contract.

பொருந்து¹–தல் porundu-, 5 செ.கு.வி.(v.i.) 1. மனம் இசைவாதல்; to agree, consent. 'கொணர் குவா யெனப் பொருந்தினன்' (கம்பரா. மருத்து. 85.). 2. தகுதியாதல்; to be suitable, proper. 3. அமைதல்; to abide. 'அறநெறி பொருந்த' (கம்பரா. விபீடண. 43). 4. உடன்படுதல்; to make a contract, an agreement. 5. நெருங்குதல்; to come into close. 'பொருந்தவந் துற்ற போரில்' (கம்பரா. கும்பகருண. 13). 6. நிகழ்வித்தல்;

to occur happen. 'புண்ணியம் பொருந்திற்று' (கம்பரா. கும்பகருண.131). 7. நிறைவேறுதல்; to e constituted, made. 'பூதமைந்தினும் பொருந்திய வுருவினாற் புரளான்' (கம்பரா. இரணிய. 18.).

க. பொருது.

பொருந்து²–தல் porundu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. கலத்தல்; to combine with. 'பண்பொருந்த விசைபாடும்' (தேவா. 268, 5). 2. அடைதல்; to reach. 'வந்தடி பொருந்தி முந்தை நிற்பின்' (புறநா. 10). 3. அளவளாவுதல்; to associate cordially. 'மணிமேகலை... பொருந்தின ளென்னும் பான்மைக் கட்டுரை' (மணிமே. 23, 46).

பொருமு–தல் porumu-, 5 செ.கு.வி.(v.i.) 1. துன்புறுதல்; to be distressed. 'பூசலுண்டாமெனப் பொருமா' (கம்பரா. காட்சி. 18). 2. விம்மியழுதல்; to choke with crying, sob. 'போர்வலான் றடுப்பவும் பொருமி விம்மினான்' (கம்பரா. தைலமாட்டு. 41.). 3. உப்புதல்; to be bloated, as the body from wind or disease. 4. பூரித்தல்; to be puffed up, as from elation. 'பேருவகை மீக்கொண்டு பொருமினான்' (உபதேசகா. விபூதி. 100.). 5. ஈரித்துப் பருத்தல்; to swell, to become soaked, as tile, new pot or sponge. 6. பொறாமைப்படுதல்; to be jealous, envious.

பொருவு¹–தல் poruvu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. ஒத்தல்; to equal, compare. 'உன்னைப் பொருவு முனிவோர்' (கந்தபு. திருக்கல். 55). 2. உராய்தல்; to rub. 'விற்கொணான் பொருவுதோள்' (கம்பரா. நிந்தனை. 52).

பொருவு²–தல் poruvu-, 5 செ.கு.வி.(v.i.) நேர்தல்; to happen. 'போன்றன வினய தன்மை பொருவியது' (கம்பரா. இரணிய. 152).

பொலி¹–தல் poli-, 2 செ.கு.வி.(v.i.) 1. செழித்தல்; to flourish, prosper, thrive. 'பொலியு மால்வரை' (தேவா. 236, 8). 2.பெருகுதல் (வின்.); to be enlarged; to appear grand, as from dress; to swell in size, as rice in boiling; to grow full. 3.மிகுதல்; to abound, increase. 'கழுநீர் பொலிந்த கண்ணகன் பொய்கை' (மதுரைக். 171.). 4. விளங்குதல்; to bloom, as the countenance; to shine. 'மார்பில்... பொலிந்த சாந்தமொடு' (பதிற்றுப். 88, 30). 5. சிறத்தல்; to be high, great or celebrated. 'பொலிந்த வருந்தவத்தோற்கே' (புறநா. 1). 6. மங்கலமாதல்; to be auspicious or fortunate. 'பொலிக பொலிக பொலிக' (திவ். திருவாய். 5, 2, 1) (யாழ்ப்.). 7. நீடுவாழ்; to live long and prosperously, used as a benediction. 'வழிவழி சிறந்து பொலிமின்' (தொல். பொ. 422). 8. நிகழ்தல்; to occur. 'பொலிந்த தாமினிது போரென லொடும்' (கம்பரா. தானை காண். 2).

பொலி²–தல் poli-, 2 செ.குன்றாவி.(v.t.) புணர்தல்; to cover, as bull or ram; to capulate. 'பொலிகாளை'.

பொலுகு–தல் polugu-, 5 செ.கு.வி.(v.i.) 1. அதிகப்படுதல்; to increase, enlarge, as a sore; to spread, as an eruption. 2. நீரொழுகுதல் (சங்.அக.); to flow, drip, as water.

தெ. பொலசு.

பொழி¹–தல் poḻi-, 2 செ.குன்றாவி.(v.t.) 1. பெய்தல்; to pour forth, shower, as rain. 'கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்' (புறநா. 203). 2. மிகச் செலுத்துதல்; to discharge in abundance. 'இளங் கோளரி பொழிந்தான்' (கம்பரா. நிகும்பலை. 118). 3. தாராளமாய்க் கொடுத்தல் (கடா.); to give liberally. 4. தட்டுத் தடங்கலின்றிப் பேசுதல்; to pour forth a torrent of eloquence. 'அவன் அவையில் நின்று பொழிகிறான்'.

பொழி²–தல் poḻi-, 2 செ.கு.வி.(v.i.) 1. நிறைந்தொழுகுதல்; to flow, overflow. 'புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்து' (மணிமே.14, 49). 2. நிறைதல்; to abound, as wealth. 'பொழிமணித் தண்டூண்' (பெருங். உஞ்சைக். 47, 110). 3. தங்குதல்; to settle, rest, as a cloud on a mountain. 'தளிமழை பொழியுந் தன்பரங் குன்றில்' (மதுரைக். 263).

பொள்ளு¹–தல் poḷḷu-, 6 செ.குன்றாவி.(v.t.) 1. துளைத்தல்; to bore make a hole. 2. பொளிதல் (வின்.); to hew, chisel.

பொள்ளு²–தல் poḷḷu-, 15 செ.கு.வி.(v.i.) 1. கொப்புளம் உண்டாதல்; to blister, to sell. 'எண்ணெய்ச்சுடர், விழுந்து கை பொள்ளி விட்டது'. 2. கிழிதல் (வின்.); to be rent or torn.

பொளி¹–தல் poḷi-, 2 செ.குன்றாவி.(v.t.) 1. உளியாற் கொத்துதல்; to chisel, pick.'கல்பொளிந்தன்ன' (மதுரைக். 482). 2. பிளத்தல்; to split, as a stone. 'பொளிந்து திண்சிலை' (விநாயகபு.22, 43). 3. இடித்தல்; to beat so as to break; to dig. 'கற்றரையைப் பொளிந்துபண்ணின கிடங்கினையுடைய' (மதுரைக். 730, உரை). 4. துளைசெய்தல் (வின்.); to make holes, to open, puncture, as a blister.

பொளி²–தல் poḷi-, 2 செ.கு.வி.(v.i.) 1. ஓட்டையாதல்; to be perforated punctured. 'கண்டவிடமெங்கும் பொளிந்து' (ஈடு, 4, 1, 1.). 2. பள்ளாமதல் (இ.வ.); to become dented.

பொளி³–த்தல் poḷi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. துளைசெய்தல்; to bore, perforate, puncture. 'மாடத்தாங்கட் சாளரம் பொளித்த கால்போகுபெருவழி' (மணிமே. 4, 52). 2. கிழித்தல்; to tear into strips, as fibre. 'களிறு... ஆச்சா வைப் பிளந்து அந்நாரைப் பொளித்து' (தொல். பொ. 231, உரை).

பொற்பி–த்தல் poṟpi-, 4 செ.குன்றாவி.(v.t.) ஒப்பனை செய்தல்; to beautify, adorn. 'சுருளோதி சிகழிகையாகப் பொற்பித்தார்' (பிரமோத். 9, 19).

பொறி¹–தல் poṟi-, 2 செ.கு.வி.(v.i.) 1. பறிதல் (யாழ்ப்.); to snap, spring, as a trap, etc. 2 தீச்சுடர் சிதறுதல்; to throw

out sparks. *'பொறிந்தெழு கண்ணினன்' (கம்பரா. கும்ப. 254). 3. சறுக்குதல் (யாழ்.அக.);* to slip, slide, as the foot. *4. சரிதல் (வின்.);* to be sloping or aslant. *5. விழப்புகுதல் (வின்.);* to be ready to fall on one, as an occusation. *6. கலைதல் (வின்.);* to fail.

பொறி²–த்தல் poṟi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. முத்திரையிடுதல்;* to impress, stamp.*'கெண்டையொடு பொறித்த குடுமியவாக' (புறநா. 58). 2. எழுதுதல் (பிங்.);* to write. *'தொய்யில் பொறித்த வனமுலை' (கலித். 93). 3. சித்திரித்தல்;* to sketch, paint. *'பொறித்த வாழையின் கனியினை' (பிரபுலிங். வசவண். 19). 4. தெறித்தல்;* to bespatter. "மூலைத்தடஞ் சேதகம் பொறிப்ப" *(சீவக. 46). 5. கலைத்தல் (வின்.);* frustrate.

பொறு¹–த்தல் poṟu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. சுமத்தல்;* to bear, sustain. *'இசையிலா யாக்கை பொறுத்த நிலம்' (குறள், 239). 2. தாங்குதல்;* to bear with. *'ஆலத்து... நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்கு' (புறநா. 58). 3. அணிதல்;* to put on, wear. *'அம்மணி பொறித்திரென் றறைந்தான்' (உபதேசகா. உருத்திராக். 44). 4. இளக்காரம் கொடுத்தல் (வின்.);* to indulge, allow. *5. மன்னித்தல்;* to excuse, forgive. *'தம்மை யிகழ்ந்தமைதாம் பொறுப்ப தன்றி' (நாலடி, 58). 6. ஏற்றமை;* to endure, suffer. *'பொறுக்கிலேனுடல் போக்கிடங் காணேன்' (திருவாச. 23, 6). 7. பொறுப்பேற்றல்;* to take responsibility. *8. தள்ளிப்போடுதல்;* postpone. *9. உவமையாகப் பெறுதல்;* to be similar. "உலம் பொறுக்கலாத தோளாய்" *(சீவக. 402).*

பொறு²–த்தல் poṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அடக்கமாய் இருத்தல்;* to be patient. *2. பேச்சு முதலியவற்றின் இடையே நின்று கொள்ளுதல்;* to stop, wait, as in speaking or in eating; to desist. *3. விலை கொள்ளுதல்;* to coast, as an article; to be spent or expended on. *4. தோணிதட்டிப் போதல்;* to run aground, as a vessel; to strand. *5. மாட்டிக் கொள்ளுதல்;* to become fixed, jammed, wedged in. *6. பொறுப்பாதல் (வின்.);* responsibility.

பொறுக்கு–தல் poṟukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) அங்கும் இங்கும் சிதறிய பொருளைத் தெரிந்தெடுத்தல்; to pick up here and there, glean; to pick out from mass, select.

பொறுப்பி–த்தல் poṟuppi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. சுமத்துதல்;* to cause to rest on. *2. முட்டுக் கொடுத்தல்;* to prop; to sustain. *3. பொறுக்குமாறு செய்தல்;* to cause to bear. *'திருவடியைப் பொறுப்பிக்குமவர் தன் சொல்வழி வருமவரைப் பொறுப்பிக்கச் சொல்லவேண்டாவிறே' (அட்டாதச. முமுட்சுப்.). 4. பாதுகாத்தல் (இ.வ.);* to maintain.

பொன்று–தல் poṉṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அழிதல்;* to perish, to be ruined. *'புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில்' (குறள், 233). 2. இறத்தல்;* to die. *'மடமாக்கள் பொன்றிலென் பொன்றாக்காலென்" (நாலடி, 323). 3. தவறுதல்;* to fail. *'பொன்றலில் பகழிக்கு' (கம்பரா. வருண. 77). 4. பார்வை முதலியன குறைதல்;* to be reduced; to become wearied or dim, as the eyes by great exertion.

பொன்றொடு–தல் poṉṟoḍu-, *4 செ.குன்றாவி.*(v.t.) பொன்னைத் தொட்டுச் சூளுறுதல்; to adjure, take oath, touching a piece of gold.*'பொன் றொட்டேம் யாதுமும்மைப் போகொட்டோம்' (சீவக. 2945).*

ngh

போ–தல் pō-, *8 செ.கு.வி.*(v.i.) *1. செல்லுதல்;* to go, proceed; to go away, depart. *'மாமலர் கொய்ய.. யானும் போவல்' (மணிமே. 3, 83). 2. அடைதல் (வின்.);* to reach a destination (w.). *3. உரியதாதல் (வின்.);* to belong. *4. பிறத்தல்;* to be born. *'வணிகர் மரபிற் போந்தோன்' (உபதேசகா. சிவபுண். 153). 5. நீண்டு செல்லுதல்;* to lie, pass through, as a path. *'தென்கரைக்கு நடுவாகப் போயின இடை கழி'* (T.A.S.i, 189). *6. தகுதியாதல்;* to be proper, admissible passable. *'அப்படிச் செய்யப் போகாது' (வின்.). 7. நெடுமையாதல் (தொல். சொல். 317);* to become long; to be stretched out. *8. நேர்மை யாதல்;* to become straight. *'வார்தல் போகல்.... நேர்பு நெடுமையும் செய்யும் பொருள்' (தொல். சொல், 317). 9. பரத்தல்;* to extend, spread. *'விசும்பினு ஞாலத்தகத் தும் வளியே யெதிர்போம் பல்கதிர் ஞாயிற்றொளி' (கலித். 144, 40.). 10. நிரம்புதல்;* to be full. *'நலந்துறை போய நங்கை' (சீவக. 2132). 11. மேற்படுதல்;* to exceed transcend. *'ஆயிர மல்ல போன' (கம்பரா. மாயாசனக. 14). 12. ஓங்குதல்;* to shoot up; to be tall. *'கள்ளிபோகிய களரியம் பறந்தலை' (புறநா. 237). 13. நன்கு பயிலுதல்;* to become expert in. *'முத்தமிழ்த் துறையின் முறை போகிய வுத்தமக் கவி' (கம்பரா. சிறப்புப். 9). 14. கூடியதாதல்;* to undergo, experience, to go through the process of. *'மூச்சுவிடப் போகவில்லை'. 15. பிரிதல்;* to separate. *'புலம்பப் போகாது' (பரிபா. 11, 118). 16. ஒழிதல்;* to cease. *'மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப' (புறநா. 10). 17. நீங்குதல்;* to leave, abandon. *'நூல்போன சங்கிலி' (பதினொ. திருத். திருவந். 69). 18. கழிதல்;* to go by, pass over; to lapse.*'போய காலங்கள்' (திவ். திருவாய். 2, 6, 10). 19. மறைதல்;* to vanish, disappear. *'ஒளியவன்... தேரும் போயிற்று' (திவ். பெரியதி. 8, 6, 6). 20. காணாமற் போதல்;* to be missing; to be lost. *'போன பொருள் திரும்பாது'. 21. மாறுதல் (வின்.);* to change, as from one state to another (w.). *22. கழிக்கப்படுதல்;* to be subtracted. *'ஆறிலே இரண்டு போக'. 23. வகுக்கப்படுதல்;* to be divided. *'நூறில் பன்னிரண்டு எட்டுத்தரம் போகும்'. 24. சாதல்;* to perish, due. *'தந்தையார், போயினார் தாயரும் போயினார் தாமும் போவார்' (தேவா. 692, 2). 25. முடிவாதல்;* to be conclusive. *'இன்பமாவதே போந்த நெறி என்றிருந்தேன்' (தாயு. சின்மயானந்த. 5). 26. ஒலியடங்குதல்;* to be hushed. *'முரசெலாம் போன'*

(கம்பரா. முதற்போ. 232). 27. புணர்தல்; to cohabit. 'அவளோடு போனான்'-

போக்கடி–த்தல் pōkkaḍi-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* இழத்தல்; to lose. 'கான் மாரீசன் என்றவரையும் போக்கடித்தேன்' *(இராமநா. உயுத். 44). 2. வீணாக்குதல் (வின்.);* to waste (w.). *3. விலக்குதல் (வின்.);* to dispel, disperse, banish, chase away. *4. போகச் செய்தல் (வின்.);* to cause to go.

போக்கறு[1]–தல் pōkkaṟu-, *2* செ.கு.வி.(v.i.) *1.* குற்றம் நீங்குதல்; to be faultless."போக்கறுபனுவல்" *(தொல். பாயி). 2.* கதியறுதல்; to lose one's means of livelihood. 'போக்கற்றுச் செயல்மாண்டு நின்ற நிலை' *(ஈடு. 6, 10, 10).*

போக்கறு[2]–தல் pōkkaṟu-, *2* செ.குன்றாவி.(v.t.) முட்டின்றிச் செய்தல்; to make no depault.கோயில் தேவைசாரம் சந்திராதித்தவரை போக்கறுப்பலனாகச்சிலாலேசை பன்னிக்கொடுத்தோம் (S.I.I.iv.102). கடமை தட்டுப் போக்கறுக்கபோணுமென்று மகாசபை யோம் சம்மதித்து (S.I.I.viii. 165).

போக்காட்டு–தல் pōkkāṭṭu-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.* அனுப்பி விடுதல்; to send away. *2.* வேற்றிடம் போகுமாறு சாக்குச் சொல்லி விடுத்தல்; to send to another place or to a third person, excusing oneself.

போக்கு[1]–தல் pōkku-, *5* செ.குன்றாவி.(v.t.) *1.* போகச் செய்தல்; to sent, to cause to go. "பிள்ளையைப் போக்கினேன்" *(திவ். பெரியாழ். 3,2,1). 2.* செய்தல்; to discharge, pay, render. "வனத்துழாய்க் கணவர்க்கும் வணக்கம் போக்கினாள்" *(கம்பரா. மீட்சிப். 84). 3.* செய்து முடித்தல்; to complete, finish. "புரிய வேண்டுவ யாவையும் விதிமுறை போக்கி" *(உபதேசகா. சிவவிரத. 319). 4.* கொடுத்தல்; to give. 'கலன்களும் தூசும் போக்கினான்' *(கம்பரா. எழுச். 6). 5.* உணர்த்துதல்; inform, make known. 'கரிபோக்கினாள்' *(சீவக. 889). 6.* உட்புகுத்துதல் *(வின்.);* to insert. *7.* கட்டுதல்; to bind. "எக்கழுத்து நாணாற் கரும்பி னணை மென்றோள் போக்கிச் சிறை பிடித்தாள்". *(பரிபா. 7, 56). 8.* மெலிவுறச் செய்தல்; to make lean. "ஆக்கையைப் போக்கப் பெற்று" *(திருவாச. 6, 10). 9.* இல்லாமற் செய்தல்; to clear remove. 'அழுக்கைப் போக்கினான்' *10.* கழித்தல்; to pass or spend, as time. 'அவுத்தமே வாழ்நாளைப் போக்குவார்' *(நாலடி. 327). 11.* அழித்தல்; to ruin, destroy, kill."ஆக்குதலளித்தல் போக்குதல்" *(சிவப். பிர. இஷ்ட நெடுங்கழி. 7).*

போக்கு[2]–தல் pōkku-, *5* செ.குன்றாவி.(v.t.) கற்பித்தல்; to teach. 'ஆசார்யன் போக்கின வையேயாகிலும் சத்யந்நி தியிலே சொல்லக் கடவதல்ல' *(திவ். திருநெடுந். 13. வ்யா.).*

போகடு[1]–தல் pōgaḍu-, *4* செ.குன்றாவி.(v.t.) *1.* கழித்து விடுதல்; to set aside, cast away.'போகட்ட உடம் மையும்' *(சீவக.951,உரை). 2.*போகவிடுதல்; to let go.' போகெனப் போகடாய்' *(சீவக. 1365.).*

போகடு[2]–தல் pōgaḍu-, *2* செ.கு.வி.(v.i.) *1.* விலகுதல்; to leave, escape. 'பொல்லாதது போகடும்' *(தேவா. 376, 4).*

போகுயர்–தல் pōguyar-, *2* செ.கு.வி.(v.i.) *1.*வளர்தல்; to grow, increase.'போகுயர் நீள்கழை' *(சீவக. 1422). 2.* உயர்தல்; to be high, to rise upward.'போகுயர் மதிய மேறி' *(சீவக. 705).*

போட்டுக் கொடு–த்தல் pōṭṭu-k-koḍu-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* கூடச் சேர்த்தளித்தல் *(இ.வ.);* to add, supplement. *2.* பிறனுக்காகச் செய்தல்; to be for another, as a sum. *3.* அடித்தல் *(வின்.);* to slap, cuff. *4.* கோள்மூட்டுதல்; to tell tales.'எழுத்தரை ஏவலன் தலைமையாசிரி யரிடம் போட்டுக் கொடுத்தான்'.

போடு[1]–தல் pōḍu-, *19*செ.குன்றாவி.(v.t.) *1.* எறிதல்; to cast down, throw a short. distance, to cast away.'பூத்த கடுக்கையைச் சிறிதும் போடா' *(இரசு. ஆற்று. 19). 2.* இடுதல்; to put, set in a position, lay.'புல்லாயினு மொருபச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி' *(தாயு. பாயப்புலி. 31). 3.* தாழ் முதலியன இடுதல்; to fasten, as a bott. 'கதவு போட்டாயிற்றா?' *(இரகு. இலவண. 40). 5.* ஈனுதல்; to bring forth, as animals, to put forth, yield, as fruit-tree. 'வாழை குலை போட்டது'. *6.* அச்சிட்டு வெளிப்படுத்துதல்; to bring out, to publish. 'புத்தகம் போட்டான்'. *7.* கணக்குச் செய்தல்; to work, as a sum. *8.* வரைதல்; to draw, as a figure. *9.* பரிமாறுதல்; to serve, to stamp. 'செருப்பா லொருவன் போடானோ' *(தனிப்பா. 1, 41, 80). 10.* அடித்தல்; to strike, to stamp. *11.* விதைத்தல்; to sow, plant. *12.* பயன் படுத்தல்; to use, as tobacco. 'புகையிலை போடு கிறவன்'. *13.* கள் முதலியன குடித்தல்; to drink, as toddy. "அந்தத் தடியன் போட்டுக்கொண்டு வந்து வம்பு வளர்க்கிறான்". *14.* விடுத்தல்; to lose, to drop. 'வீரமுங் களத்தே போடு' *(கம்பரா. கும்பக. 1). 15.* பண முதலியன கட்டுதல்; to pay, invest. 'பணம் போட்டு வாங்கினான்' *16.* பிரித்து இடுதல்; to cast, as lots, to allot.

போடு[2]–தல் pōḍu-, *20* செ.கு.வி.(v.i.) *1.*உண்டாதல்; to become, form. (w.). *2.* ஒரு துணை வினை; an auxilliary verb. 'அவன் செய்து போட்டான்'.

போத்தா[1]–தல் (போத்தருதல்) pōttā-, *15* செ.குன்றாவி.(v.t.) *1.* போய்க் கொண்டுவருதல்; to go and bring, to get, fetch. 'பரதவர் போத்தந்த பன்மீன்' *(தொல்.பொ.114, உரை). 2.* உரிய சொல்லை வருவித்துரைத்தல்; to fill up, as an ellipsis in a sentence. *3.* கொடுத்தனுப்புதல்; to send by messenger. "அமரர்கள் போத்தந்தார்" *(திவ்.பெரியாழ். 1,3,4). 4.* புறப்படவிடுதல்; to send out, to permit to go out. 'உன்னை.... போத்தந்த நுமர்' *(கலித். 58, 10).*

போத்தா[2]–தல் pōttā-, *6* செ.கு.வி. (v.i.) *1.* போதலைச் செய்தல்; to go, proceed. 'நல்வாயிற் போத்தந்த

பொழுதினான்' (கலித். 84, 5). 2. வெளிவருதல்; to get out, come out. 'போத்தந்து தாயர் தெருவிற் றவிர்ப்ப' (கலித். 84, 14).

போதா[1]–தல் (போதருதல்) pōdā-, 6 செ.கு.வி.(v.i.) 1. செல்லுதல்; to go, pass. 'புறங்கடை போதரவிட்ட நுமரும்' (கலித். 56).2.திரும்புதல்; to return. 'போதரும் போ தச்சம்' (நாலடி., 83). 3. வருதல்; to come. 'போதர் கண்டாயிங்கே போதர்கண்டாய்' (திவ். பெரியாழ். 2, 9, 6). 4. பெறப்படுதல்; to be inferred. 'ஆண்டிருந்து துய்ப்பரென்பது போதரும்' (திருக்கோ. 1, உரை).

போதா[2]–தல் pōdā-, 15 செ.குன்றாவி.(v.t.) 1. கொண்டு போதல் (பிங்.); to carry away. 2. கொண்டு வருதல் (வின்.); to bring (w.). 3. எதிர்கொண்டு போதல் (சூடா.); to welcome, receive with courtesy.

போது[1]–தல் pōdu-, 10 செ.கு.வி.(v.i.) 1. போதியதாதல்; to be adequate, to suffice."உலகமெலா முரல் போதா தென்றே" (திருவாச. 9, 6). 2. மதிக்கப்படுதல் (வின்.); to be respectable. 3. தகுதியாதல்; to be competent, fit, suitable.

போது[2]–தல் pōdu-, 10 செ.கு.வி.(v.i.) 1. செல்லுதல்; to go, pass. 'போது நான் வினைக்கேடன்' (திருவாச. 5, 22). 2. ஒழுகுதல்; to conduct oneself, behave. 'அறனை அறிந்து போதுதல்... சான்ற வர்க்கெல்லாம் முறைமை' (கலித். 139, 2, உரை).

போர்–த்தல் pōr-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. அணிதல்; to wear, put on. "ஆரம்போர் திருமார்பை" (கம்பரா. இராவணன்வதை. 240). 2. மூடுதல்; to cloak, to hide. 'பெற்றம் புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று' (குறள், 273). 3. சூழ்தல்; to surround. "விண்ணோ ரெங்கோன் புடையிற் போர்த்தார்" (கந்தபு. சிங்கமு. 457).

போரடி[1]–த்தல் pōr-aḍi-, 4 செ.குன்றாவி.(v.t.) தலையடிக் கதிர்ப்போரினின்றும் தவசத்தை அடித்தெடுத்தல்; to thresh or beat out grain from straw.

போரடி[2]–த்தல் pōr-aḍi-, 4 செ.கு.வி.(v.i.) தருக்கமிடுதல் (வின்.); to wrangle over.

போரு[1]–தல் pōru-, 9 செ.கு.வி.(v.i.) 1. செல்லுதல்; to go on, proceed, to continue. "நீர் ஆதரித்துக்கொண்டு போரும்" (குருபரம்.170). 2. மீண்டு வருதல்; to return. 3. எட்டுதல்; to reach. "போரவிடாயெங்கள் பட்டை" (திவ். நாய்ச். 3,7). 4. பொருள் பெறப்படுதல்; to be understood, as a meaning. 'பிரத்தியகர்த்தவிசயமாயும் போருகையாலே' (ஈடு.1,1,2).

போரு[2]–தல் pōru-, 9 செ.கு.வி.(v.i.) 1. போதியதாதல்; to be enough, sufficient. "சிறு மானிடவரென்று எண்ணு கைக்குக் கூடப் பாற்றம் போராதபடியான நாம்" (திவ். திருநெடுந். 21, வ்யா. பக். 198).

போல்(லு)–தல் pōl(lu)-, 7 செ.குன்றாவி.(v.t.) 1. ஒத்தல்; to resemble, to be like. 'மக்களே போல்வர் கயவர்' (குறள், 1071). 2. இணையொத்தல்; to equal, match.

போவி–த்தல் pōvi-, 4 செ.குன்றாவி.(v.t.) போக்குதல்; to cause to go, to lead."போலிப்பம் பாழினுடம்பை" (நல்வழி.19).

போழ்[1]–தல் pōḻ-, 2 செ.கு.வி.(v.i.) 1. பிளவுபடுதல்; to be cleft, split. 2. பிரிவுபடுதல்; to be disunited (w.).

போழ்[2]–தல் pōḻ-, 2 செ.குன்றாவி.(v.t.) 1. பிளத்தல்; to split, cleave open.கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரனறுப்ப (பதிற்றுப். 19,2). 2. ஊடுருவிச் செல்லுதல்; to pass through, cross over. "கடற்குட்டம்போழ்வர் கலவர்" (நான்மணி.18). 3. அழித்தல்; to dispel, to destroy. 'நீடிருள் போழு நிலைமைத்து' (சீவக. 2118).

போற்று–தல் pōṟṟu-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. வழிபடுதல் (பிங்.); to praise, applaud. "போற்று மடியா ருண்ணின்று நகுவேன்" (திருவாச. 5, 60). 2. வணங்குதல் (பிங்.); to worship. 3. பாதுகாத்தல்; to protect, keep with great care. "போற்றினரியவை போற்றல்" (குறள், 693). 4. வளர்த்தல்; to nourish (w.). 5. தீயவை தடுத்துக்காத்தல்; to guard against. "புறஞ்சொற் போற்றுமின்" (சிலப். 30, 188). 6. கடைப்பிடித்தல்; to adhere, hold fast to. "புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்". 7. விருந் தோம்பல்; to entertain, to treat. with regard. 'எம்மைப் போற்றவே' (கம்பரா. அரசியல். 40). 8. விரும்புதல்; to desire. 'போற்றிக் கேண்மதி' (பொருந. 60). 9. கருதுதல்; to consider. "பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்" (குறள், 537). 10. மனத்துக் கொள்ளுதல்; to understand, to pay attention to. 'கொண்டானர் நிரை போற்றெனக் கூறினான்' (சீவக. 430). 11. கூட்டுதல் (பிங்.); to gather together.

k

மக்கடி–த்தல் makkaḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) உருவழித்தல் (வின்.); to deform, disfigure.

மக்களி[1]–த்தல் makkaḷi-, 4 செ.கு.வி.(v.i.) 1. குணமடைந்த நோய் திரும்புதல் (சென்னை); to return, relapse, as disease. 2. உடற் சந்து பிசகுதல்; to be dislocated, as the joints.

மக்களி[2]–த்தல் makkaḷi-, 18 செ.குன்றாவி. (v.t.) மாற்றுதல்; to modify, revoke, supersede, retract.

மக்கு–தல் makku-, 5 செ.கு.வி.(v.i.) 1. அழிதல் (வின்.); to die, perish. 2. மந்தமாதல்; to become dull. "மக்கிய ஞானத் தீயால்" (கைவல்.தத்.90). 3. கெடுதல்; to decay, as fruits. 4.அழுக்கேறுதல் (வின்.); to moulder. 5. ஈரத்தாற் கெட்டுப் போதல்; to be spoiled, as by dampness. 6. கருத்துப்போதல்; to become dark or black. "வெள்ளி மக்கி விட்டது" (உ.வ.).

மகிடி–த்தல் magiḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மக்களித்தல் (வின்.);* to be sprained, dislocated. *2. தலைகீழாக விழுதல் (இ.வ.), குப்புறக் கவிழ்தல்;* to be over turned, to lie down in back.

மகிழ்[1]–தல் magiḻ-, *4 செ.கு.வி.*(v.i.) *1. அகங்களித்தல்;* to joy, rejoice, exult. "*காணின் மகிழ்ந்துள்ளம்*" *(குறள், 1057). 2. உணர்வழிய உவகையெய்துதல்;* to forget oneself out of joy. "*உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில்காமத்திற் குண்டு*" *(குறள், 1281). 3. குமிழி யிடுதல்;* to bubble up in boiling. '*சோறு மகிழ்ந்து வருகிறது*' *(உ.வ.).*

மகிழ்[2]–தல் magiḻ-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. விரும்புதல்;* to wish, desire. "*மங்கலவணியிற் பிறிதணி மகிழாள்*" *(சிலப்.4: 50). 2. உண்ணுதல்;* to take in drink. "*தேறன் மகிழ்ந்து*" *(புறநா.129).*

மங்கு–தல் maṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குறைதல்;* to grow less, to diminish. "*தாக மங்குதலின்மையால்*" *(விநாயகபு.80, 94). 2. ஒளி மங்குதல்;* to become dim, as light or eye-sight. *3. நிறங்குன்றுதல்;* to grow pale, to loose lustre. *4. பெருமை குறைதல்;* to be obscured, as splendour, glory, fame, to fade, as beauty, to decline in prosperity, as a religion, to be reduced in circumstance, power or authority. *5. வாட்டமுறுதல்;* to be deprived of freshness, as the countenance, power or authority. *6. கெடுதல்;* to decay, to be ruined. "*தீவினைத் தெவ்வெனும் பேர் மங்க*" *(திருநூற்.19). 7. சாதல்;* to die, perish. "*மங்கியு முற்பவித்து முழல் வல்லிடரில்*" *(திருப்போ. சந்.மட்டுவிருத்.7).*

மசக்கு–தல் mašakku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. மயங்கச் செய்தல்;* to charm, bewitch. "*லீலை யிலேயுற முறை மசக்கவம்*" *(திருப்பு.338). 2. குழப்புதல்;* to confuse, perplex. *3. ஆடையைக் கஞ்சிப் பற்று நீங்கும்படி கசக்குதல்;* to crumple, as a cloth to get out the stiffening.

மசகு–தல் mašagu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. சுணங்கி நிற்றல்;* to linger, loiter, to hang about designedly. *2. மனந்தடுமாறுதல்;* to hesitate, to be in suspence, to be undecided or undetermined.

மசங்கு–தல் mašaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மயங்குதல் (திவா.567, 10);* to become confused, to be doubtful. *2. ஒளி குறைதல்;* to become dull, to lose lustre. '*மேனியில் வன்னமு மசங் காதோ*' *(இராமநா. அயோத். 11). 3. கசங்குதல் (வின்.);* to be crumpled, to grow soft by use.

மசமச–த்தல் maša-maša-, *4 செ.கு.வி.*(v.i.) *1.தின வெடுத்தல்(இ.வ.);* to itch. *2. செயலை முடிக்க காலந் தாழ்த்தல்;* to be slow and indecisive. *3. தெளிவற்று கலங்கலான பார்வை;* uncleared sight.

மசி[1]–தல் maši-, *2 செ.கு.வி.*(v.i.) *1. நெரநெர வென்றிராமல் வழுவழுப்பாயிருத்தல்;* to be mashed, worked about with a ladle, reduced to pulp. *2. வளைந்து கொடுத்தல், விட்டுக்கொடுத்தல்;* to yield, to be placable. "*அவன் இலகுவிலே மசியமாட்டான்*" *(உ.வ.).*

மசி[2]–த்தல் maši-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.கடைந்து அல்லது பிசைந்து குழையச் செய்தல்;* to mash, as food, to reduce to a thin pulpy consistence, as greens, fruits. *2. மைக் கட்டியை அல்லது களிம்பை நீரிற் குழைத்து எழுதுமை யுருவாக்குதல்;* to prepare by mixing, as ink. "*மசித்து மையை விள்ள வெழுதி*" *(பதினொ. திருவாலங். மூத்.2).*

மஞ்சளி–த்தல் mañcaḷi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மஞ்சணிற மாதல்;* to turn-yellow. "*கண்கள் மஞ்சளித்து*" *(அசுவசா. 88).*

மட்கடி–த்தல் maṭkaḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) கெடுமாறு செய்தல்; to damage, to destroy, to lose by negligence.

மட்கு–தல் maṭku-, *5 செ.கு.வி.*(v.i.) *1. ஒளி மங்குதல்;* to be dim, duskey, to be deprived of lustre, glory or brilliance. "*நாகத்தின் வஞ்சவாயின் மதியென மட்குவான்*" *(கம்பரா. அயோமு.12). 2. வலுகுன்றுதல்;* to lose strength, to become defficient. "*தரியலர் முனைமட்க*" *(பாரத. மீட்சி.176). 3. மயங்குதல்;* to be bewildered. "*மட்கிய சிந்தை*" *(கம்பரா. தைல.5). 4. அழுக்கடைதல் (கொச்சை.);* to become mouldy; to be foul or dirty. *5. அழிதல்;* to be destroyed. "*மதத்தர் மட்கினர்*" *(பிரபோத.30, 58).*

மட்டம்பார்–த்தல் maṭṭam-pār-, *4 செ.கு.வி.*(v.i.) பாதை சுவர் முதலியவற்றின் ஒழுங்கை நோட்டம் பார்த்தல்; to examine the level or straightness, as of a road or wall etc.

மட்டம்போடு–தல் maṭṭam-pōḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மதிப்பிடுதல்;* to estimate. *2. பள்ளிக்கோ. பணிக்கோ போகாமல் இருத்தல்;* t

மட்டறி[1]–தல் maṭṭaṟi-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. மதிப்பிடுதல்;* to guess, make a rough estimate. *2. பழகியறிதல்;* to bear in mind so as to recognise or identify, to know well. *3. ஒப்பிடுதல்;* to liken, compare with.

மட்டறி[2]–தல் maṭṭaṟi-, *2 செ.கு.வி.*(v.i.)*1. அளவேற் படுத்துதல்;* to fix a limit, to stint. *2. குறிப்பறிதல்;* to understand indications.

மட்டி[1]–த்தல் maṭṭi-, *4 செ.கு.வி.*(v.i.) மண்டலித்தல்; to be or become circular, to form into circles or ringlets, to coil.

மட்டி[2]–த்தல் maṭṭi-, *4 செ.குன்றாவி.*(v.t.) வட்டமாகுதல்; to make circular. "*திரடோள்கண் மட்டித்தாட*" *(தேவா.12, 3).*

மட்டி[3]–த்தல் maṭṭi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. அழித்தல்;* to destroy. "*மணிகொள் குட்டிம மட்டித்து*" *(கம்பரா. பொழிலிறுத்.24). 2. முறித்தல்;* to break. "*மாங்கனிப் பணை மட்டித்து*" *(கம்பரா. பொழிலிறுத்.25). 3. பூசுதல்;* to put on, clap on, daub, as sandal paste.

"குளிர்சாந்த மட்டித்து" (திவ்.நாய்ச்.6, 10). 4. மெழுகுதல்; to cleanse, as the floor. "மணிநிலஞ் சந்தனங் கொண்டு மட்டியா" (மேருமந்.629). 5. பிசைதல்; to mix and knead."சுண்ணமொடு மட்டித்துக் கலந்த குங்குமக் கொழுஞ் சேறு" (பெருங். உஞ்சைக்.40, 222-3). 6. உறுதி செய்தல்; to ascertain, discover determine.

மடக்கிடு–தல் maḍakkiḍu-, 18 செ.குன்றாவி. (v.i.) 1.மேற் செல்லாது தடுத்து வைத்தல்; to check, to keep within certain limits."மடக்கிடன் மனமொடு" (பெருங். உஞ்சைக். 34, 50). 2. வாய்மடுத்தல் (ஈடு.2, 3, 9); to swallow at a single draught.

மடக்கு[1]–தல் maḍakku-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. மடித்தல்; to bend, as the arms, knees, to draw in, fold, shut, as knife, to double, to deflect. "வால்விசைத் தெடுத்து வன்றாண் மடக்கி" (கம்பரா. கடறாவு.17). 2. திருப்புதல்; to turn about, as a horse, carriage or vessel, to turn back. "தடுத்திடை மடக்குதன் மானும்" (காஞ்சிப்பு. நகர.6). 3. மாறிமாறிச் செய்தல்; to repeat. 4. வென்று கீழ்ப்படுத்துதல்; to subdue, as in war, conquer, to surpass. 5. வாயடக்குதல்; to stop by argument or sophistry; to confute, to over power. 6. கால்நடை முதலியவற்றை ஒருசேர அடக்கி வைத்தல்; to compress; to restrain;to keep together, as cattle in a row. "இந்த வயலுக்கு ஒருநாள் மாட்டுக்கடை மடக்க வேண்டும்" (உ.வ.). 7. பண்டம் முதலியவற்றைத் தன் வசப்படுத்துதல்; to engage, as a servent, to secure for oneself, as an article or cargo, preventing others from obtaining it. 8. தடுத்தல்; to stop or hinder, as proceedings, to quash. 9. அழித்தல்; to destroy; to kill. "மடக்கு வாயுயிரை யென்னா" (கம்பரா. கும்பக.188). 10. பணிவாக்குதல்; to tame, humble. 11. உடற்கட்டுக் குலைதல்; to break the constitution as disease. 12. மருந்து முதலியவற்றின் கடுமை முதலியவற்றை முறித்தல்; to counteract, as force; to reduce, as the power of a medicine, the action of a poison; to check, as a fire from spreading. 13. தவச அரியறுத்தல்; to reap, as sheaves of corn. 14. உடுத்துதல்; to wear around the waist, as a garment. "மடக்கினார் புலியின் றோலை" (தேவா.955, 1). 15. ஒதுக்கிக் கட்டுதல்; to parcel out and enclose, as a piece of land.

மடக்கு[2]–தல் maḍakku-, 5 செ.கு.வி.(v.i.) திரும்பத் திரும்ப வருதல்; to recur, as letters or words. "ஓரெழுத்து மடக்கலும்" (தண்டி.95).

மடங்கடி–த்தல் maḍaṅgaḍi-, 4 செ.குன்றாவி.(v.t.) 1.தோற்கச் செய்தல்; to subdue, suppress, restrain, repulse; to check, as in war or in argument; to put rout; to chase. 2. திரும்பச் செய்யும்படி பண்ணுதல் (இ.வ.); to compel, as a person, to re-do a thing.

மடங்கு–தல் maḍaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. வளைதல் (பிங்.); to become bent, as the arm or leg. "படையோன் முடங்கி மடங்கி" (கலித். 94, 9). 2. முடங்குதல்; to be shut, closed, folded, as a knife or table. 3. கோணுதல்; to be inflected, deflected, refracted, bent out of place. 4. வளைந்து செல்லுதல்; to bend, turn, as a road, or river. 5. மீளுதல்; to turn about. 6. சொல் முதலியன திரும்ப வருதல்; to be repeated. "என்று மடங்கக் கூறல் வேண்டாவாம்" (தொல். பொருள்.255, உரை). 7. திருகுதல்; to be twisted, distorted, as a limb. 8. குறைதல்; to be diminished. "மடங்கா விளையுள் வயலூர்" (சிலப்.23:119). 9. சுருங்குதல்; shrink."மூப்புக் காலத்து உடலின் தோல் மடங்கும்" (உ.வ.). 10. ஒடுங்குதல்; to be absorbed. (திருக்கோ. 75, உரை). 11. நெளிதல்; to be battered. 12. கீழ்ப்படுதல்; to submit, yield, surrender. "காரொலி மடங்க..... களத்தினார்த்த பேரொலி" (கம்பரா. நாகபாச.291). 13. தாழ்தல்; to be humbled, tamed, reduced, as pride, to be broken down, as the constitution. "இகழ்பாடுவோ ரெருத்த மடங்க" (புறநா.40, பாடபேதம்). 14. செய லறுதல்; to be indolent, inactive. "உழவினார் கைம்மடங்கின்" (குறள், 1034). 15. சூடடங்குதல்; to be decreased in force, as the wind or heat, to yield, as a disease or poison to medicines or *mantras*. 16. நிறுத்தப் பெறுதல்; to be stopped, hindered, to be quashed, as proceedings. "மண்டமரின்றொடு மடங்கும்" (கம்பரா.கும்ப.267). 17. தடுக்கப்படுதல்; to be turned off, diverted, thrown back, as weapons. 18. வாயடங்குதல்; to be silenced by argument, by sophistry, by authority, to be checked, confuted, refuted. 19. சொத்துரிமையாளர் இறந்தபின் சொத்து முதலியன ஒருவன்பால் அடைந்து விடுதல் (கொச்சை.); to be lodged with one's as property on the death of the owner.

மடலவிழ்–தல் maḍalaviḻ-, 2 செ.கு.வி.(v.i.) இதழ்விரிதல்; to burst, as flower-sheath.

மடலி–த்தல் maḍali-, 4 செ.கு.வி.(v.i.) மடங்கித் திரும்புதல் (யாழ்.அக.); to return by bend.

மடலூர்–தல் maḍalūr-, 2 செ.கு.வி.(v.i.) தான் காதலித்த தலைவியை அடைதல் வேண்டிப் பனைமடலாலான குதிரையைத் தலைவன் ஏறி ஊர்தல்; to ride a horse of palmyra stems, as a disappointed lover to win his love. "மடலூர்தல் யாமத்து முள்ளுவேன்" (குறள், 1136).

மடி[1]–தல் maḍi-, 2 செ.கு.வி.(v.i.) 1. மடங்குதல்; to be bent, folded, turned down, lapped in. "வள்ளுகிர் மடிய" (கம்பரா.கும்ப.182). 2. நுனி மழுங்குதல்; to be turned, as an edge or a point. "வயிரவாளை..... வாய்மடிய வீழ்த்த" (வாயுசங்.யாவுஞ்.3). 3. தலை சாய்தல்; to droop, as the head of one asleep or as sheafs of grain in a field. 4. வீழ்தல்; to fall on. "மடி மடிந்து மாண்ட வுஞற்றி லவர்க்கு" (குறள், 604). 5. வாடுதல் (இ.வ.); to wither, as leaves. 6. சுருளுதல்; to roll, as waves. "மடிதிரை தந்திட்ட..... முத்தம்" (நாலடி, 224). 7. முயற்சியறுதல்; to be indolent, inactive. "மடியாவினைஞர்" (பெரும்பாண். 254). 8. தூங்குதல்; to sleep. "மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்குல்" (கலித்.65). 9. சுருங்குதல்; to shrink, contract. "வீங்கு சுரை மடிய" (அகநா.54.). 10. ஊக்கங் குறைதல்; to be dispirited. "உவவு மடிந்துண் டாடியும்" (பட்டினப்.93). 11. அழிதல்; to perish; to be destroyed. "குடிமடிந்து குற்றம் பெருகும்" (குறள், 604). 12. சாதல்; to die. "வல்லது மடிதலே யென்னின் மாறுதிர்"

(கம்பரா. அதிகார.6.).13. தானியங் கேடுறுதல்; to become mouldy, as rice."*மடிந்துபோன அரிசி*" *(உ.வ.).14. திரண்டு செல்லுதல்;* to rush in together as a crowd. "*மக்கள் திருவிழாக் காண மடிகிறார்கள்*" *(உ.வ.).15. கொப்புள முடைதல்;* to break, to be broken as a blister.

மடி²–த்தல் maḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. மடக்குதல்;* to fold, as the arms, to fold up, as cloth, as paper, to double up, shut up, as a folding knife. *2. வளைதல்;* to bend, turn down, turn in curl. *3. பேச்சில் மடங்க வடித்தல்;* to baffle in speech, confound by artifice, as in an argument. *4. அழித்தல்;* to kill, destroy. "*மரனெலா மடிப்ப*" *(கம்பரா.தாடகை.35). 5. உழக்குதல்;* to tramble down, to throw into confusion.

மடிபிசை–தல் maḍi-pišai-, *2 செ.குன்றாவி.*(v.t.) *பால் சுரக்கும்படியாகப் பசுவின் மடியைத் தடவுதல்;* to chafe the udder of a cow in milking.

மடியிறக்கு–தல் maḍi-y-iṟakku-, *5 செ.கு.வி.*(v.i.) *ஈனுவதற்கு முன் பசுவின் மடி பருத்தல் (வின்.);* to have udder distended, as a cow before calving.

மடு¹–த்தல் maḍu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. உண்ணுதல்;* to take food or drink. "*மடுத்தவனஞ்சமுதா*" *(தேவா.238, 3). 2. நிறைத்தல் (வின்.);* to fill, penetrate, suffuse, as adour. *3. சேர்த்தல்;* to unite, join."*பிணக்குவை கொண்டோ டிக்.... கடல் கங்கை மடுத்திடை தூராதே*" *(கம்பரா. குகப்.21). 4. அடக்கிக் கொள்ளுதல்;* to hold, contain. "*மடுத்து மாமலை யேந்தலுற்றான்*" *(தேவா.823). 5. ஊட்டுதல்;* to cause to eat or drink;to feed. "*ஓண்டொடி மகளிர் மடுப்ப*" *(புறநா.56). 6. தீ மூட்டுதல்;* to kindle. "*கொலைஞ ருலை யேற்றித் தீ மடுப்ப*" *(நாலடி, 331). 7. அமிழ்த்துதல்;* to immerse, cause to sink. "*ஞானவாரி மடுத்து*" *(சி.சி.8, 16). 8. குத்துதல்;* to gore, pierce, thrust. "*கூர்நுதி மடுத்தத னிறஞ் சாடி*" *(கலித்.52, 3). 9. மோசம் பண்ணுதல்;* to inveigle, to entrap, to act treacherously.'*அவனை மடுத்து விட்டான்*' *(இ.வ.).10. விழுங்குதல்;* to devour."*வரவர வாய்மடுத்து*" *(நீதிநெறி, 64). 11. மயக்குதல் (யாழ்ப்.);* to charm. *12. செலுத்துதல்;* to cause; to go or enter. "*மதியொடு பாம்பு மடுப்பென்*" *(கலித்.144, 21).*

மடு²–த்தல் maḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *இடையூறு எதிர்ப் படுதல்;* to meet with obstacle."*மடுத்த வாயெல்லாம் பகடன்னான்*" *(குறள், 624).*

மடுத்தடி–த்தல் maḍu-t-taḍi-, *18 செ.குன்றாவி.*(v.t.) *மடங்கு கடித்தல், ஏற்காமல் தள்ளுதல்;* to frustrate an object.

மடுவிடு¹–தல் maḍu-viḍu-, *20 செ.கு.வி.*(v.i.)*ஆற்றில் மடு வுண்டாதல்;* to make a deep place in a river or channel.

மடுவிடு²–தல் maḍu-viḍu-, *18 செ.குன்றாவி.*(v.t.)*கன்றைத் தாய்ப்பால் குடிக்க விடுதல்;* to feed calf in cow's udder.

மண்கட்டு–தல் maṇ-kaṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. புற்றுக் கட்டுதல்;* to throw up earth, as white ants. *2. மாழைகளை உருக்குதற்காகக் கருக்கட்டுதல்;* to make moulds of earth for casting metals.

மண்குழை–த்தல் maṇ-kuḻai-, *4 செ.கு.வி.*(v.i.) *சுவர் முதலியன கட்டுதற்கு உதவுமாறு மண்ணைக் குழைத்துச் சாந்தாக்குதல்;* to mix water with clay or mud to form a semi-liquid mass as in building a wall.

மண்குளி–த்தல் maṇ-kuḻi-, *4 செ.கு.வி.*(v.i.) *புழுதியாகுதல்;* to roll in the dust, to take a sand-bath, as a beast or bird.

மண்டலி¹–த்தல் maṇḍali-, *20 செ.கு.வி.*(v.i.) *1. காலை வளைத்து வட்டமாக்குதல்;* to bend the legs in a low-like form. *2. இறுதிப் பாட்டின் அல்லது இறுதி அடியின் இறுதி எழுத்து, அசை, சீர் என்பனவற்றுள் ஏதேனும் ஒன்று முதற்பாட்டின் அல்லது முதல் அடியின் முதல் எழுத்து, அசை, சீர் என்பனவற்றுள் ஒன்றாய் வருமாறு இசைத்தல்;* to compose a poem so that the last letter, syllable or foot of its last line or stanza is the same as the first letter, syllable or foot of its first line or stanza.

மண்டலி²–த்தல் maṇḍali-, *20 செ.குன்றாவி.*(v.t.) *வளைத்தல்;* to surround.

மண்டிக்கிட–த்தல் maṇḍi-k-kiḍa-, *3 செ.கு.வி.*(v.i.) *அடர்ந்து வளர்ந்திருத்தல், நிறைந்திருத்தல்;* growing wild in the fields. "*புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு*" *(பாரதியார்).*

மண்டிபோடு–தல் maṇḍi-pōḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *முழங்கால் முட்டிமேல் நிற்றல்;* to stand with leg or legs bent, as in player or in archery. "*வீட்டுப்பாடம் செய்யாததால், வகுப்பில் மண்டி போட்டான்*" *(உ.வ.).*

மண்டியிடு–தல் maṇḍi-y-iḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *முழந்தாளில் நிற்றல்;* to stand on the knees, as for prayer. "*இறைவன் முன் மண்டியிட்டார்*" *(உ.வ.).*

மண்டு¹–தல் maṇḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1.நெருங்குதல்;* to be close together, crowded, pressed. "*விரிசடை மண்டி யலைந்திட*" *(கோயிற்பு. பதஞ்சலி.40). 2. விரைந்து செல்லுதல்;* to move swiftly. "*கடற்படை குறிப்ப மண்டி*" *(புறநா.6). 3. திரளுதல்;* to collect together, to around, to come in flocks, throngs; to press, rush. "*கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி*" *(திருவாச. 2,135). 4. கடுமையாதல்;* to grow vehement, to wax fierce. "*மண்டமர்*" *(பு.வெ.1, 1). 5. ஒளியுமிழ்தல்;* to glow, to blaze. "*மண்டு மெரியுள்*" *(பு.வெ.1, 1). 6. அதிகமாதல்;* to increase, to become excessive."*மண்டிய கடும்பசி தனக்கு*" *(தாயு. ஆனந்தமான.4). 7. ஈடுபடுதல்;* to be fascinated, charmed, engrossed."*முற்பட வடிவிலே மண்டுகிறாள்*" *(ஈடு.5, 3, 1).*

மண்டு²–தல் maṇḍu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. செலுத்துதல்;* to thrust in. "*நுதிமுக மழுங்க மண்.... மதிலபாயு நின் களிறு*" *(புறநா. 31). 2. நெருக்கித் தாக்குதல்;* to press upon, close in, to attack. "*அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்*" *(புறநா.62). 3. நிரம்ப உண்ணுதல்;* to eat and drink greedily. "*இரை மண்டி*" *(தேவா.72, 8). 4. சேர இணைத்தல்;* to insert and fasten. "*கால்மண் டெஃகம்*" *(மலைபடு.129). 5. மூண்டு பொருதல்;* to oppose, resist, fight against with vehemence. "*ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்*" *(தொல். பொருள். 72). 6. கவர்தல் (வின்.);* to snatch, to steal. *7. தாங்குதல் (வின்.);* to support, prop.

மண்ணடி–த்தல் maṇ-ṇ-aḍi-, *4 செ.கு.வி.*(v.i.) சீர் கெடுத்தல்; to ruin. *'வாழ்வில் மண்ணடித்து விடுவார்கள்' (உ.வ.).*

மண்ணரை–த்தல் maṇ-ṇ-arai-, *4 செ.கு.வி.*(v.i.) சோம்பி யிருத்தல் *(யாழ்.);* to be lazy, to lounge.

மண்ணிடு–தல் maṇṇiḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. சுவருக்கு மண்பூசுதல்;* to plaster with mud. *2. கால்கழுவுகையில் மண்ணால் தூய்மை செய்தல்;* to clean oneself with mud, as after evaculation.

மண்ணு¹–தல் maṇṇu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நீராடுதல்;* to bathe, to perform ablutions."*மண்ணு மங்கலமும்*" *(தொல். பொருள்.68). 2. மூழ்குதல்;* to immerse oneself completely, as in water. "*பனிக்கய மண்ணி*" *(புறநா.79).*

மண்ணு²–தல் maṇṇu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. கழுவுதல்;* to wash, clean by washing. "*மண்ணி மாசற்ற நின் கூழையுள்*" *(கலித்.107). 2. பூசுதல்;* to smear, anoint."*தண்ணருந் தகரங் கமழ மண்ணி*" *(குறிஞ்சிப்.108). 3. செய்தல்;* to do, make, perform. "*ஆவுதி மண்ணி*" *(மதுரைக்.494). 4. ஒப்பனை செய்தல் (பிங்.);* to adorn, beautify, decorate. *5. செப்ப மிடுதல்;* to polish, perfect, finish, as a gem. "*மண்ணுறு மணியின்*" *(புறநா.147).*

மண்ணெடு–த்தல் maṇ-ṇ-eḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *1. குழியி னின்று மண்ணை நீக்குதல்;* to remove earth, as from a pit. *2. மண்ணைப் பறித்துக் கிளப்புதல் (வின்.);* to dig up earth, as rats, white ants etc. *3. கோட்டுமண் கொள்ளுதல் (வின்.);* to toss up earth, as cows with their horns. *4. வயலை வெட்டித் திருத்துதல் (வின்.);* to lower the level of a field by removing earth. *5. மட்கலம் செய்வதற்கான வண்டல் அல்லது களி மண்ணை ஏரியிலிருந்தோ வயலிலிருந்தோ வெட்டி எடுத்து மேட்டுப் பகுதியில் குவித்து வைத்தல்;* to remove silt or clay for making pots from tank beds or paddy fields and stack at uptands.

மண்ணேறு–தல் maṇṇēṟu-, *4 செ.கு.வி.*(v.i.) சுவரில் ஏறுதல்; to scale as a wall. "*திருடன் மண்ணேறிக் குதித்து ஓடிவிட்டான்*" *(உ.வ.).*

மண்புளி–த்தல் maṇ-puḷi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மண் குழைந்து நல்ல சாந்தாதல்;* to ferment and become well-seasoned and sticky, as mortar mixed and pounded on the preceding day. *2. நிலம் மழையால் இளகி மென்மையாதல்;* to become soft by continued rain, as land.

மண்பூசு–தல் maṇ-pūšu-, *5 செ.கு.வி.*(v.i.) சுவர் முதலிய வற்றிற்கு மண் சாந்து தீற்றுதல்; to plaster with mud.

மண்போடு–தல் maṇ-pōḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. கேடு செய்தல் (வின்.);* to ruin a person, as throwing mud into his month. *2. வைது, மண்ணை வாரித் தூற்றுதல்;* to curse one, throwing up mud in the air.

மண்மேடிடு–தல் maṇ-mēḍiḍu-, *20 செ.கு.வி.*(v.i.) ஆறு, வயல் முதலியன மணலால் தூர்ந்து மேடாய்ப் போதல்; to silt, as a river, field, etc.

மண¹–த்தல் maṇa-, *3 செ.கு.வி.*(v.i.) *1. கலத்தல்;* to be united, mingled. "*அறையும் பொறையு மணந்த தலைய*" *(புறநா.118). 2. வந்து கூடுதல்;* to come together. "*நிரை மணந்த காலையே*" *(சீவக.418). 3. நேர்தல்;* to happen. "*மருவுற மணந்த நட்பு*" *(கலித்.46). 4. பொருந்துதல்;* to be fixed, attached. "*மத்தகத் தருவியின் மணந்த வோடையை*" *(சீவக. 2211). 5. கமழ்தல்;* to emit fragrance. "*மணந்த சோலையும்*" *(அரிச்.பு.விவாக.98). 6. விளங்குதல்;* to shine. "*தேவர் மருட மணக்குங் கழல் வீரா*" *(திருப்பு.527).*

மண²–த்தல் maṇa-, *12 செ.குன்றாவி.*(v.t.) *1. திருமணம் புரிதல்;* to wed. "*மணந்தார் பிரிவுள்ளி*" *(நாலடி, 397). 2. புணர்தல் (பிங்.);* to copulate with. "*மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்*" *(கலித்.24). 3. கூடி யிருத்தல்;* to live in company with."*மணக்குங்கான் மலரன்ன தகையவாய்*" *(கலித்.25). 4. அணைத்தல்;* to embrace."*திருந்திழை மென்றோள் மணந்தவன்*" *(கலித்.).*

மணம்பிடி–த்தல் maṇam-piḍi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. மோப்பம் பிடித்தல்;* to perceive by smell or scent, as dogs. *2. நறுமணம் முதலியவற்றால் இழுக்கப்படுதல் (யாழ்ப்.);* to be attracted by dainties, as children; to be attracted by smell, as insects. *3. முடைநாற்றம் வீசுதல் (வின்.);* to stink.

மணம்புரி–தல் maṇam-puri-, *2 செ.குன்றாவி.*(v.t.)திருமணம் செய்தல்; to marry.

மணிதிரள்(ளு)–தல் maṇi-tiraḷ(ḷu)-, *16 செ.கு.வி.*(v.i.) நெற்கதிரில் தவசமணி திரண்டு உருவடைதல்; to mature, as grain in corn-ears.

மணிபிடி–த்தல் maṇi-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) மணிகட்டைப்

பிடித்து நாடி பார்த்தல்; to feel the pulse at the wrist.

மணியூது–தல் maṇi-y-ūdu-, 5 செ.கு.வி.(v.i.) தீயில் ஊதிப் பொன்மணி திரட்டுதல் (யாழ்.அக.); to make gold beads by blowing in a chafing dish.

மத்தாடு–தல் mattāḍu-, 5 செ.கு.வி.(v.i.) பெண்கள் கைகோத்து ஆடுதல் (இ.வ.); to whirl in play, as girls holding each other by the hand.

மத்தி¹–த்தல் matti-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. மருந்து கலத்தல் (கொ.வ.); to mix, as medicine. 2. அடித்தல் (இ.வ.); to beat. 3. தேய்த்தல் (யாழ்.அக.); to rub. 4. மத்தினாற் கடைதல்; to churn. "பாற்சமுத்திரத்தை மத்தித்த திருமால்" (கூர்மபு.).

மத்திடு–தல் mattiḍu-, 17 செ.குன்றாவி.(v.i.) கடைதல்; to churn. "மானிலாவிய நோக்கியர் படிறிடை மத்திடு தயிராகி" (திருவாச.5, 40).

மத–த்தல் mada-, 4 செ.கு.வி.(v.i.) 1. மதங் கொள்ளுதல்; to be furious, as by must, fanaticism. "மிகவு மதத்து மதம் பொழிந்து" (ஞானவா.நிருவா.47). 2. கொழுத்தல்; to be luxuriant or fruitful; to grow fat. 3. காமமிகுதல்; to be wanton or lascivious. 4. களித்தல்; to be intoxicated. 5. செருக்குதல்; to be arrogant. 6. மயங்குதல் (வின்.); to be bewildered.

மதமதர்–த்தல் mada-madar-, 4 செ.கு.வி.(v.i.) களிப்பு மிகுதல்; to be vivacious. "தேய்த்து மதமதர்த்து" (கொண்டல். விடு.193).

மதமேறு–தல் madam-ēṟu-, 5 செ.கு.வி.(v.i.) பெண்களுக்கு மதம் மேன்மேலும் கூடுதல்; increasing of lustiness in woman.

மதர்–த்தல் madar-, 11 செ.கு.வி.(v.i.) 1. செழித்தல்; to flourish; to be fertile, rich or luxuriant. 2. மரமுதலியன பயனறும்படி மித மிஞ்சிக் கொழுத்தல் (இ.வ.); to be too luxuriant to be productive, as soil, plants, etc. 3. மதங் கொள்ளுதல்; to be affected with frenzy, as a bull or elephant. "மதர்விடையிற் சீறி" (பு.வெ.7, 14). 4. செருக்குதல் (வின்.); to be self-conceited, arrogant. 5. களித்தல் (திவா.); to rejoice, to be full of joy. "மதுப்பருகிப் பருவாளை நின்று மதர்க்கு மருங்கெலாம்" (கம்பரா. நாட்டுப்.24). 6. மிகுதல் (திவா.); to increase, abound. "மதரரி மழைக்கண்" (சீவக.2803).

மதாளி–த்தல் madāḷi-, 11 செ.கு.வி.(v.i.) 1. செழித்தல் (வின்.); to thrive, flourish, to be luxuriant, rich and abundant. 2. பயிர் முதலியன பயன்படாதபடி கொழுத்துக் கெடுதல்; to be too luxuriant to be productive, as plants, soil, etc. "பயிர் மதாளித்துப் போனால் நுனிகளை அறுத்துப் போடுகை" (ஈடு, 9, 5, 7, அரும்.).

மதி–த்தல் madi-, 11 செ.குன்றாவி.(v.i.) 1. அளவிடுதல்; to estimate. "மண் விழைந்து வாழ்நாண் மதியாமை" (திரிகடு.29). 2. பொருட்படுத்துதல்; to esteem, regard, respect, reverence. "மண்ணாள்வான் மதித்துமிரேன்" (திருவாச.5,12). 3. கருதுதல்; to think, to consider. "ஆடலை மதித்தான்" (கந்தபு. திருவிளை.1). 4. ஊழ்கம் செய்தல் (தியானித்தல்); to meditate upon. "நந்தியங் குரவனை மதிப்பாம்" (விநாயகபு. கடவுள்.13). 5. துணிதல்; to decide; to ascertain; to be assured of. "தேர்மணிக் குரலென விவண் மதிக்குமன்" (கலித்.126, 7).

மதிகெடு–தல் madi-keḍu-, 20 செ.கு.வி.(v.i.) மயக்குதல்; to stupefy.

மதுங்கு–தல் maduṅgu-, 5 செ.கு.வி.(v.i.) இனிமையாதல்; to be sweet. "மதுங்கிய வார்கனி" (திருமந்.2914).

மந்திரி¹–த்தல் mandiri-, 4 செ.குன்றாவி.(v.t.) 1. மந்திர ஆற்றலால் அடக்குதல்; to keep spell bound, control or enchant by *mandram*. 2.மந்திரத்தால் வலுவுண்டாகச் செய்தல்;to consecrate with *mandram*. "நீரை மந்தரித்துக் கொடுத்தான்" (உ.வ.). 3. மந்திரத்தால் ஒருநிலைப் படுதல்; to recite mystic formulas or *mandram* in worship and to meditate. "மந்திரிப்பார் மனத்துளானை" (தேவா.590, 4). 4. உசாவல்; to consult, take counsel. "மகட்பேசி மந்திரித்து" (திவ். நாய்ச்.6, 3).

மந்திரி²–த்தல் mandiri-, 4 செ.கு.வி.(v.i.) 1. மந்திரஞ் சொல்லுதல்; to utter *mandram* for effecting cure, etc. "சிரத்தினஞ்சுற்ற பின்னை மீண்டிட மந்திரிப்பார்" (பிரபோத. 5, 7). 2. தீய கருத்துகளைச் சொல்லுதல்; to give evil advice.

மப்புகட்டியிரு–த்தல் mappu-kaṭṭi-iru-, 3 செ.குன்றாவி. (v.t.) மழை வருவதற்கு முந்தைய நிலையான முகில் திரண்டிருத்தல்; cloudy sky (க.ப.அக.).

மப்புண்டாகு–தல் mappuṇṭāgu-, 7 செ.கு.வி.(v.i.) மப்பு தோன்றுதல்; feeling loss of appetite.

மய–த்தல் maya-, 3 செ.குன்றாவி.(v.t.) மயங்குதல்; to mistake, misunderstand. "மயந்துளேனுலக வாழ்க்கை யை" (அருட்பா. 4, அபயத்திறன்.14).

மயக்கு¹–தல் mayakku-, 5 செ.குன்றாவி.(v.t.) 1. மனங் குழம்பச் செய்தல்; to bewilder, confuse. "குறளை பேசி மயக்கி விடினும்" (நாலடி,189). 2. வியக்கச் செய்தல்; to puzzle, mystify, to make one wonder. "மாயமயக்கு மயக்கானென்னை வஞ்சித்து" (திவ். திருவாய். 8, 7, 4). 3. உணர்வுறச் செய்தல்; to fascinate, allure, charm. "மயக்கிய முயக்கந் தன்னால்" (கம்பரா. இராவணன்சோ.51). 4. கலத்தல்; to mixup . "பாற்பெய் புன்கந் தோனொடு

மயக்கி" *(புறநா.34). 5. சேர்த்தல்;* to unite, join, as a wick with the oil in a can. "*உயிரெனுந் திரிமயக்கி*" *(தேவா.1189, 4). 6. சிதைத்தல்;* to ruin,destroy. "*எருமை கதிரொடு மயக்கும்*" *(ஐங்குறு.99). 7. நிலை நெகிழ்த்துதல்;* to disturb, unsettle. "*வள்ளை யாய்கொடி மயக்கி*" *(அகநா.6). 8. மூர்ச்சையுறச் செய்தல்;* to make one swoon. "*மதகரியை யுற்றரி நெரித்தென மயக்கி.... துகைத்தான்*" *(கம்பரா .மகுட.5). 9. ஊடலுணர்த்து தல்;* to clear one's misunderstanding as in sulks. "*மயக்கிய வருதி மன்*" *(கலித்.73).*

மயக்கு[2]–தல் mayakku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *பண் படுத்துதல்;* refine."*மயக்கின நந்தாவினம்*" *(தெ.க. தொ.14, கல்.84-2).*

மயங்கு–தல் mayaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மருளுதல்;* to be confused, bewildered. *2. பரவசமாதல்;* to be charmed, allured. *3. வெறி கொள்ளுதல்;* to be intoxicated. *தாமயங்கி யாக்கத் துட் டூங்கி... வாழ்நாளைப் போக்குவார்*" *(நாலடி, 327). 4. மாறுபடுதல்;* to be changed, as in one's mind or body. "*மேனியு முள்ளமும் மயங்காத் தேவர்*" *(கலித்.82:30). 5. நிலையழிதல்;* to be ruined disolated. "*ஆள்பவர் கலக்குற மயங்கிய நன்னாட்டு*" *(மணிமே.23:104). 6. வருந்துதல்;* to be distressed. "*முயங்கல் விடாஅ விவையென மயங்கி*" *(அகநா.26). 7. தாக்கப்படுதல்;* to be disturbed, tossed about, as sea. "*காலொடு மயங்கிய கவிழ் கடலென*" *(பரிபா.8, 31). 8. ஐயமடைதல்;* to be in doubt. *9. தயங்குதல்;* to be overwhelmed with anxiety. '*அந்தச் செயலைச் செய்ய மயங்குகிறான்*' *(உ.வ.). 10. கலத்தல்;* to be mixed up. *11. போலுதல்;* to resemble. "*காரிருள் மயங்கு மணி மேனியன்*" *(பரிபா.15:50). 12. நெருங்குதல்;* to be crowded together. "*முகிழ் மயங்குமுல்லை*" *(பரிபா. 15:39). 13. கைகலத்தல்;* to engage in a fight. "*தமிழ் தலை மயங்கிய தலையாலங் கானத்து*" *(புறநா.19). 14. அறிவுகெடுதல்;* to lose one's sense. "*புலான் மயங்கான்*" *(ஏலாதி, 2). 15. உணர்ச்சியிழத்தல்;* to become unconscious.

மயர்–தல் mayar-, *4 செ.கு.வி.*(v.i.) *1. மயங்குதல்;* to be bewildered, confused. *2. உணர்வறுதல்;* to lose consciousness. "*விடந்தனை யயின்றன ரெனும்படி மயர்ந்து*" *(கந்தப.திருவி.80). 3. சோர்தல்;* to be fatigued, tired. "*மயரு மன்னவன்*" *(கம்பரா. இரணியன்வதை.13). 4. திகைத்தல்;* to wonder. "*வைது கொன்றனனோவென வானவர் மயர்ந்தார்*" *(கம்பரா.கும்பக.244).*

மயிந்து–தல் mayindu-, *5 செ.கு.வி.*(v.i.) பதுங்குதல்; to sneak, slink away.

மயிர்கழி–த்தல் mayir-kaḻi-, *4 செ.குன்றாவி.*(v.i.) *மழிப்பு செய்தல் (இ.வ.);* to shave.

மயிருதிர்–தல் mayir-udir-, *2 செ.குன்றாவி.*(v.t.) *முடி கொட்டுதல்;* to loss of hair, baldness.

மர–த்தல் mara-, *11 செ.கு.வி.*(v.i.) *1.கால் முதலியன உணர்ச்சியறுதல்;* to be numb or insensible, as legs. "*கால் மரத்துப் போயிற்று*" *(உ.வ.). 2. விறைத்தல் (யாழ்.அக.);* to be stiffended.*3. வியத்தல் (யாழ்.அக.);* to be thunder - struck.

மரம்அணை–த்தல் maram-aṇai-, *4 செ. குன்றாவி.*(v.t.) *கட்டுமரத்தடிகளைச் சேர்த்தணைத்துக் கட்டுதல்;* tide the wooden logs to make a boat.

மறுவ. மரம்கட்டல்.

மரமடி[1]–த்தல் maramaḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *உழவுக்குப் பின்னர் நிலத்தைச் சமப்படுத்துவதற்காகத் தடியா லடித்தல்;* leveled the land after plough.

மரமடி[2]–த்தல் maramaḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *பரம்படித்தல் (நெல்லை.);* to harrow a field.

மரி[1]–த்தல் mari-, *11 செ.கு.வி.*(v.i.) *சாதல்;* to die."*அரயன் உடையான் மரித்தமையில்*" *(S.I.I.ii, 311).*

மரி[2]–த்தல் mari-, *11 செ.கு.வி.*(v.i.) *நினைத்தல் (வின்.);* to remember.

மருக்கு–தல் marukku-, *5 செ.கு.வி.*(v.i.) புளி முதலியன சேர்த்து எண்ணெயிலுள்ள கெடுதிகளை நீக்குதல்; to remove dirt. etc. from oil, by adding to it tamarind, etc. and heating it.

மருட்டு–தல் maruṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. மயக்குதல்;* to entice, fascinate, infatuate, bewitch. "*வெல்லாம லெவரையு மருட்டிவிட*" *(தாயு.சித்தர்.10). 2. அச்ச மூட்டுதல் (வின்.);* threaten, menace. *3. மாறுபடச் செய்தல்;* to cause to be changed. "*மாணல மருட்டும்*" *(ஐங்குறு.139). 4. ஒத்தல் (ஐங்குறு.அரும்.);* to resemble. *5. மனங்கவியச் செய்தல்;* to allure, coax. "*மெல்லெனச் செல்க என மருட்டிக் கூறியவாறு*" *(தொல்.பொருள்.506, உரை). 6. ஏமாற்றுதல் (யாழ்.அக.);* to cheat.

மருந்திழை–த்தல் maruntiḻai-, *4 செ.கு.வி.*(v.i.) *மருந்து அரைத்தல்;* mixing or rubbing pills or medicine with the vehicle.

மருந்துவை–த்தல் marundu-vai-, *4 செ.குன்றாவி.*(v.t.) வயப் படுத்தும் மருந்திடுதல் *(இ.வ.);* to administer philter or love - potion

மருந்தெழுது–தல் marundeḻudu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. கண்ணில் மருந்து தீட்டல்;* application of medicine such as collyrium to the eye with a copper, silver or glass rod. *2. அக்கி காணில் செம்மண் பூசுதல்;* application of red-ochre in erysepelas.

மருவழை–த்தல் maruvaḻai-, *4 செ.குன்றாவி.*(v.t.) மணமாகி முதலிரவுக்குப் பின் மணமக்களைப் பெண் வீட்டுக் கழைத்தல்; to invite the married couple from the bridegroom's house to the bride's, soon after their nuptials.

மருவு¹–தல் maruvu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. கலந்திருத்தல்;* to combine, join together,. to be united together in affection. "*மருவார் சாயல்*" *(சீவக.725). 2. வழக்கப்படுதல்;* to arise or be evolved, as a custom."*மரீஇய பண்பே*" *(தொல்.பொருள்.308). 3. தோன்றுதல்;* to appear. "*இச்சா ஞானக் காரியம் காயம் பெற்றான் மருவிடும்*" *(சி.சி.2, 83).*

மருவு²–தல் maruvu-, *5 செ.குன்றாவி.*(v.i.) *1. கிட்டுதல் (சூடா.);* to come near, to approach. *2. தழுவுதல்;* to embrace, to adopt, accept, follow. "*மருவுமின் மாண்டா ரறம்*" *(நாலடி, 36). 3. பயிலுதல்;* to become accustomed to. "*பாத்தூண் மரீஇ யவனை*" *(குறள், 227). 4. புணர்தல்;* to have sexual inter-course with. "*வெம்புலைமாதர்... மருவும் வேட்கையான்*" *(பிரமோத்.4, 5). 5. ஊழ்கித்தல் (தியானித்தல்);* to meditate upon. "*கழல்களை மருவாதவர்மேல் மன்னும் பாவமே*" *(தேவா.501, 1). 6. பதித்தல்;* to encase, set, as a gem. "*கல்லை மருவிவைத்திருக்கிறது*" *(உ.வ.).*

மருள்(ளு)–தல் maruḷ(ḷu)-, *2 செ.கு.வி.*(v.i.) *1. மயங்குதல்;* to be confused, bewildered, deluded. "*பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு மாலை படர்தரும் போழ்து*" *(குறள், 1229). 2. வெருவுதல்;* to be afraid, to be timid. "*சிறார் மன்று மருண்டு நோக்கி*" *(புறநா.46). 3. வியத்தல்;* to wonder."*இவ்வேழுலகு மருள*" *(பரிபா.5:35). 4. ஒப்பாதல்;* to be similar. "*அணைமரு ளின்றுயில்*" *(கலித்.14).*

க. மருள்

மல்காத்து–தல் mal-kāṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.i.) *1. கொடி முதலியவற்றைப் படரவிடுதல்;* to set of lay, as a vine. *2. மல்லாத்து-தல் பார்க்க;* see mallāttu-,

மல்கு–தல் malgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அதிகமாதல்;* to increase. "*மணிநிரை மல்கிய மன்று*" *(பு.வெ.1, 13). 2. நிறைதல் (திவா.);* to be filled with, to abound. "*திசையாவு மல்கின்றே*" *(சீவக.1607). 3. செழித்தல்;* to grow, flourish. "*உயிரனைத்து மல்க மழைமுகி லானாய்*" *(தணிகைப்பு. இந்திர.21).*

மல்லா–த்தல் mallā-, *12 செ.குன்றாவி.*(v.i.) *1. மேல் முகமாகக் கிடத்தல்;* to fall on the back, lie on the face. "*நரகத்தின் மல்லாக்கத் தள்ளி*" *(திருமந்.199). 2. தோற்றுப் போதல் (இ.வ.);* to fail, to be defeated.

மல்லாத்து–தல் mallāttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) முதுகு கீழாக முகம்மேலாகக் கிடக்கச் செய்தல்; to make a person or thing to lie on the back (w.).

மல்லுக்கட்டு¹–தல் mallu-k-kaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. மற்போர் புரிதல்;* to wrestle, to scuffle. *2. பொருதல்;* to qurrel. "*எதிர்மல்லுக்கட்டு மரையரைப் பாடவோ*" *(தனிப்பா.i, 266, 3).*

மல்லுக்கட்டு²–தல் mallu-k-kaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *கட்டாயப்படுத்துதல் (கொ.வ.);* to force, compel. "*நாள்தோறும் அவனைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு மல்லுக்கட்ட வேண்டியதாகியது*".

மற்போர் போல் செய்து வலியுறுத்துதல்.

மலக்கு–தல் malakku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *கலக்குதல்;* to bewilder, as the mind, to disturb, confuse."*மலக்க நாவுடை யேற்கு*" *(திவ்.திருவாய்.6, 4, 9).*

மலங்கழி–தல் malaṅ-kaḻi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. ஆணவ முதலிய மலங்கள் நீங்குதல்;* to be freed from the effects of mu-m-malam. *2. வயிற்றினின்று மலம் வெளியேறுதல்;* (C.G.) to pass stools.

மலங்கு–தல் malaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நீர் முதலியன குழம்புதல்;* to be agitated, to be made turbid, to be perturbed. "*மலங்கி வன்றிரை.... பெயர்ந்து*" *(தேவா.130, 9). 2. மனங் கலங்குதல்;* to be confused, bewildered, to be distressed. "*ஒன்பது வாயிற் குடிலை மலங்க*" *(திருவாச.1, 55). 3. பிறழ்தல்;* to shake, move, tremble, as the eyes. "*நெடுங்கண் புருவங்கண் மலங்க*" *(சீவக.1067). 4. கெடுதல்;* to perish, to be ruined. "*கதிர் வேன் மலங்க*" *(சிவக.1613). 5. ததும்புதல்;* to be full to the trim, as tears in the eyes. "*கண்ணினீர் மலங்கும் பொலந் தொடி*" *(தஞ்சைவா.243).*

மலர்¹–தல் malar-, *2 செ.கு.வி.*(v.i.) *1. பூவின் மொட்டவிழ்தல்;* to open as a flower; to bloom. "*வரை மேற்காந்தள் மலராக்கால்*" *(நாலடி., 283). 2. பரத்தல்;* to be expanded, extended or spread. "*வையகமலர்ந்த தொழின்முறை யொழியாது*" *(பதிற்றுப்.88, 1). 3. மனமகிழ்தல்;* to be cheerful, to beam with joy. "*வரன்கைதீண்ட மலர்குல மாதர் போல்*" *(பெரியபு.தடுத்தாட்.161). 4. தோன்றுதல் (திவா.);* to appear, to rise to view. *5. எதிர்தல் (சூடா.);* to happen, befall. *6. அகலுதல்;* to be wide open, as a gate. "*மலரத் திறந்த வாயில்*" *(குறிஞ்சிப்.203). 7. மிகுதல்;* to abound, become full."*செழுமல ராவி நீங்கு மெல்லையில்*" *(சீவக.3079).*

மலர்²–த்தல் malar-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. மலரச் செய்தல்;* to cause to flower. *2. வாய்ப்புறம் மேலாக நிமிரச் செய்தல்;* to turn the face or mouth upward, as of a pot. "*மண்டை மலர்க்குநர் யாரென*" *(புறநா.103).*

மலர்த்து–தல் malarttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. மூடிய கை, குடை (இ.வ.);* to open out unfold, as a closed hand, or umbrella. "*குடையை மலர்த்து*" *(உ.வ.). 2. மல்லாத்துதல்;* to throw one on one's back, as in wrestling.

மலர்தொடு–த்தல் malar-toḍu-, *4 செ.குன்றாவி.*(v.t.) *பூவிணைத்துக் கட்டுதல் (சூடா.);* to string flowers together.

மலி–தல் mali-, *2 செ.கு.வி.*(v.i.) *1. மிகுதல்;* to abound, to be plentiful. "*கனிப்பொறை மலிந்து நின்ற கற்பகப் பூங்கொம்பு*" *(சீவக.2541). 2. நிறைதல்;* to be full, to increase, to flow, as tide. "*மலிகடற் றண்சேர்ப்ப*" *(நாலடி, 98). 3. நெருங்குதல் (தொல். சொல்.396, உரை);* to be crowded. *4. புணர்ச்சியின் மகிழ்தல்;* to be happy during coition. "*மலிதலுமூடலும்*" *(தொல். பொருள்.235). 5. செருக்குதல்;* to be proud. "*மகிழ்ந்தன்று மலிந்தன்று மதனினு மிலனே*" *(புறநா.77). 6. விம்முதல்;* to become large, swell. "*முலை மலிந்து*" *(பு.வெ.11, பெண்.2). 7. பரத்தல்;* to spread,expand. "*மலை மலிந்தன்ன மார்பும்*" *(பு.வெ.11, பெண்.2). 8. விரைதல்;* to move swiftly, to hasten. "*நீ மலிந்து செல்லாய்*" *(பு.வெ.12, பெண்.4). 9. விலை நயத்தல் (கொ.வ.);* to be cheap in price.

மலிர்–தல் malir-, *4 செ.கு.வி.*(v.i.) *1. பெருகுதல்;* to flood. "*ஓத மில்லிறந்து மலிர*" *(நற்.117). 2. நீர் முதலியன ஒழுகுதல்;* to leak, to drop. "*பின்னு மலிரும் பிசிர்போல*" *(பரிபா.6, 83). 3. பயிலுதல்;* to come frequently. "*கனியின் மலரின் மலிர்கால்*" *(பரிபா.8, 54).*

மலை¹–தல் malai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *1. சூடுதல்;* to wear, put on. "*மாபெருந் தானையர் மலைந்த பூவும்*" *(தொல். பொருள். 60). 2. மேற்கொள்ளுதல்;* to take upon oneself, to enter into, as war. "*பழிமலைந் தெய்திய வாக்கத்தின்*" *(குறள், 657). 3. ஒத்தல்;* to resemble. "*கவிகை மாமதிக் கடவுளை மலைய*" *(கந்தபு.சூரரசிருக்.9). 4. பறித்தல்;* to pluck. "*கழுநீர் மலையு வயன்மா தினரே*" *(கல்லா.). 5. எதிர்த்தல் (சூடா.);* to oppose, fight against.

மலை²–தல் malai-, *2 செ.கு.வி.*(v.i.) *1. பகைத்து மாறுபடுதல்;* to fight, to become opposed. "*இகன் மலைந்தெழுந்த போழ்தில்*" *(சீவக.747). 2. மயங்குதல்;* to be staggered, to be doubtful or confused. "*வேறுவேறு எடுத்துக் காட்டுதல் பற்றி மலையற்க*" *(சி.போ.பா.62, பக்.146). 3. வழக்காடுதல்;* to wrangle, dispute. "*தத்த மதங்களே யமைவதாக வரற்றி மலைந்தனர்*" *(திருவாச.4, 5).*

மலை³–த்தல் malai-, *2 செ.கு.வி.*(v.i.) *1. பொருதல்;* to fight, go to war."*வேந்தனோடு..... மலைத்தனையென்பது*" *(புறநா.36). 2. மாறுபடுதல்;* to become unfriendly. "*மடங்கலிற் சீறி மலைத் தெழுந்து*" *(பு.வெ.3, 24). 3. மயங்குதல் (கொ.வ.);* to be staggered, over weared to be confused, confounded. *4. வியத்தல் (கொ.வ.);* to be amazed, thunderstruck.

மலையேறு–தல் malai-y-ēṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. தெய்வம் இடத்தினின்று நீங்குகை;* to leave, abandon, as a deity from a place or person. *2. முடிவடைதல் (இ.வ.);* to cease to exist, to come to an end. *3. மாவிளக்கு நெய்யற்று அணைந்து போதல் (இ.வ.);* to be extinguished when the oil is consumed, as māviḷakku. *4. மலை மீது ஏறுதல்;* claimbing the hills or mountain.

மழமழ–த்தல் maḻa-maḻa-, *11 செ.கு.வி.*(v.i.) வழவழப்பாதல்; to be soft or smooth.

மழறு–தல் maḻaṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மென்மையாதல்;* to be soft and gentle. "*மழறுதேன் மொழியாளர்கள்*" *(திவ். திருவாய். 6, 25). 2. தெளிவில்லாதிருத்தல் (ஈடு.6, 2, 5, அரும்.);* to be indistinct as speech.

மழி–த்தல் maḻi-, *4 செ.குன்றாவி.*(v.t.) தலையை மொட்டை யடித்தல்; to shave, especially the head. "*மழித்தலும் நீட்டலும் வேண்டா*" *(குறள், 280).*

மழுக்கு–தல் maḻukku-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. கூர் மழுங்கச் செய்தல்;* to blunt, dull the edge or point. *2. ஒளி குறையச் செய்தல்;* to obscure, as lustre as glory. *3. அறிவைக் குறைத்தல்;* to deprive the intellect of its keeness. *4. அடித்தல் (வின்.);* to beat, pound. *5. நெற்குத்துதல்;* to hull by pounding, as paddy.

மழுகு–தல் maḻugu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மழுங்குதல்;* to become blunt. "*நுதிமுக மழுகிய.... வெண்கோட்டு*" *(அகநா.24). 2. ஒளி குறைதல்;* to be dim or obscure. "*முத்துத் தொடை கவிழ்பு மழுக*" *(பரிபா.6, 16).*

மழுங்கு–தல் maḻuṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. கூர் நீங்குதல்;* to be blunt or dull, as an edge or point. "*நுதி மழுங்கிய*" *(புறநா.4). 2. பொலிவழிதல் (திவ்.);* to be obscured, deprived of lustre, of glory; to fade, as a colour, as the lustre of a jewel or the glory of a state. *3. கெடுதல்;* to disappear, to be lost. "*உரவுத்தகை மழுங்கி*" *(கலித். 120). 4. அறிவுக் கூர்மை குறைதல்;* to become dull in feeling, to lose keeness of intellect. "*உதிக்கின்ற புத்தியு மழுங்கிடும்*" *(திருவேங்.சத.15). 5. ஒளி குறைதல்;* to be dim, obscure, as the sun or moon in an eclipse or behind a cloud. "*கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வது போல்*" *(கலித்.146). 6. கவனிப் பின்றி மறைந்து போதல் (வின்.);* to pass by without strict examination inquiry or notice.

மழுப்பு–தல் maḻuppu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. நெகிழ விடுதல்;* to slur or slip over. *2. செயலைப் பயனற்றதாக நெகிழ்த்துதல்;* to bring to naught, make ineffective. *3. சுணக்கப்படுத்துதல் (வின்.);* to put of, protract, delay, as in coming to a decision. *4. ஏமாற்றுதல்;* to deceive. "*யாரையு மழுப்ப வல்லான்*" *(திருவாலவா.30, 24).*

மழுமாறு–தல் maḻu-māṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. அரை மனதாதல்;* to be half-minded, undecided. *2. நுண்ணுத்தி (தந்திரம்) பண்ணுதல்;* to be artful, tricky.

மழுவெடு–த்தல் maḻu-v-eḍu-, *4 செ.கு.வி.*(v.i.) கை, நா முதலியவற்றில் மழுவை யேந்திச் சூளுரைச் செய்தல்; to undergo the ordeal of holding red-hot iron by the hand, tongue etc. "*நாவினான் மழுவெடுத்த ஞானப் பிரகாசர்*".

மழை–த்தல் maḻai-, *11 செ.கு.வி.*(v.i.) *1. மழை நிறைந் திருத்தல்;* to be charged with rain. "*மழைத்த வானமே*" *(கம்பரா. கார்கால.2). 2. கருநிறமாதல்;* to darken, become dark, as a cloud. "*மழைத்திடு மெய்யுடை மாற்றலர்*" *(கந்தபு. சூரன்வதை.132). 3. குளிர்தல்;* to be cool. "*மழைத்த மந்த*

மாருதத்தினால்" (பெரியபு.திருஞான.150).

மழைபெய்–தல் maḻai-pey-, 1 செ.கு.வி.(v.i.) வானின்று நீர் விழுதல்; to rain. "வான் மழை பெய்கிறது" (உ.வ.).

மள்கு–தல் maḷgu-, 5 செ.கு.வி.(v.i.) குறைதல்; to be deficient, defective. "மல்கலில் பெருங் கொடை" (கம்பரா. கார்கால.104).

மளமள–த்தல் maḷa-maḷa-, 4 செ.கு.வி.(v.i.) மரக்கொம்பு முதலியன முறியும்போது ஒலியெலுப்புதல்; to crash, rattle, sound loudly, as branches in snaping.

மற்சரி–த்தல் maṟcari-, 4 செ.கு.வி.(v.i.) போட்டியிடுதல் (இ.வ.); to compete.

மற–த்தல் maṟa-, 3 செ.குன்றாவி.(v.t.) 1. அயர்த்தல்; to forget. "மறவற்க மாசற்றார் கேண்மை" (குறள், 106). 2.அசட்டை செய்தல்; to neglect, disregard. 3.ஒழித்தல்; to put an end to, to give up. "மறத்தல் வெகுளியை யார்மாட்டும்" (குறள், 303).

மறங்கு–தல் maṟaṅgu-, 5 செ.கு.வி.(v.i.) கலங்குதல்; to be bewildered. "கீழ்தான்.... மறங்குமா மற்றொன் றுரைத்து (நாலடி, 342).

மறத்துப்போ–தல் maṟattu-p-pō-, 8 செ.கு.வி.(v.i.) உணர்வு குன்றுதல்; insensation.

மறலு–தல் maṟalu-, 5 செ.கு.வி.(v.i.) 1. மாறுபடுதல்; to oppose. "மன்னரோ டினையவர் மறலி" (சீவக.791). 2. போர் செய்தல்; to give fight. "தெம்முனையுள்.... மறலுங்கால்" (பு.வெ.10, 5).

மறலு²–தல் maṟalu-, 5 செ.குன்றாவி.(v.t.) கொல்லுதல்; to kill. "வேதியனை மறலப்புகுந் தாருன்னுழையோர்" (உபதேசகா. சிவநாம. 24)

மறி¹–தல் maṟi-, 4 செ.கு.வி.(v.i.) 1. கீழ் மேலாதல்; to be turned upside down. "மலைபுரை யானை மறிந்து" (பு.வெ.7:9). 2.மீளுதல் (திவா.); to return, recede."மறிதிரை" (கலித்.121). 3. முதுகிடுதல்; to turn back, retreat. "மைந்தர் மறிய மறங்கடந்து" (பு.வெ.6:14). 4. விழுதல்; to fall down. "நிழன்மணிப் பன்றி யற்று மறியுமோ" (சீவக.2201). 5. சாய்தல்; to bend. "எரி மறிந்தன்ன நாவின்" (சிறுபாண்.196). 6. கிளர்தல்; to rise up, as a wave. "மறிகடல் போன்று" (திவ்.இயற். திருவிருத். 57). 7. முறுக்குண்ணுதல்; to be twisted. "திரிந்து மறிந்துவீழ் தாடி" (கலித்.15). 8.பலகாலுந் திரிதல்; to go about often, to walk to and fro. "நயனாடி நட்பாக்கும் வினைவர் போன் மறிதரும்" (கலித்.46). 9. தடைப் படுதல்; to be checked, arrested. 10. நிலைகுலைதல்; to be ruined in circumstances. "ஆம்பன் முகவரக்கன் கிளையொடு மறிய" (கல்லா. கணபதி.வாழ்.). 11. அறுபடுதல்; to be torn, injured. "உன்காது மறியும்" (திவ்.பெரியாழ்.2, 3, 6, அரும்.). 12. மரிதல், சாதல்; to die. "மறிந்த மகன் றனைச்சுட" (அரிச்.பு.மயான.38). 13. துள்ளுதல் (கொ.வ.); to frisk about, gambol.

மறி²–த்தல் maṟi-, 11 செ.குன்றாவி.(v.t.) 1. தடுத்தல்; to stop, detain, arrest, check. "மறுபிறப்போட மறித்திடுமே" (திருவாச.36, 2). 2. திருப்புதல்; to turn about, to return. 3. மேல்கீழாக்குதல் (வின்.); turn upside down, upset. 4. அழித்தல்; to destroy. "மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்" (தேவா.97, 4). 5. தடுத்தற் குறியாகக் கையசைத்தல்; to wave the hand, as an indication of disapproval. "மாற்றருங் கரதல மறிக்குமாது" (கம்பரா. உண்டாட்.21). 6. திரும்பச் செய்தல் (இ.வ.); to repeat.

மறு¹–த்தல் maṟu-, 11 செ.குன்றாவி.(v.t.) 1. இல்லை யென்னுதல்; to refuse, deny, disown. "அவர் மறுத்தகறல் காணா" (கம்பரா.மிதிலைக்.125). 2. தடுத்தல்; to object, check, contradict. "மறுத்து மறுத்து மைந்தர் சார" (கலித்.104). 3. எதிர்ப்பு எழுப்புதல்; to confute, refute the opinion or argument of another. "உடன்படன்மறுத்தல்" (நன்.11). 4. நீக்குதல்; to put away, reject. "கொல்லான் புலாலை மறுத்தானை" (குறள், 260). 5. மறி²-2, 6 பார்க்க; see maṟi ²-2,6.

மறு²–த்தல் maṟu-, 3 செ.கு.வி.(v.i.) 1. வெட்குதல் (சூடா.); to be ashamed. 2. இல்லாமற்போதல்; to cease to be. "இப்பேறுதான் ஒரு நாளுண்டாய் மற்றை நாள் மறுக்கையின் றிக்கே" (ஈடு.2, 7, 7).

மறுக்களி–த்தல் maṟukkaḷi-, 11 செ.கு.வி.(v.i.) நோய் முதலியன திரும்புதல்; to return, relapse, as disease.

மறுக்கு¹–தல் maṟukku-, 5 செ.குன்றாவி.(v.t.) மனத்தைக் கலக்குதல் (திவ். திருவாய்.4, 9, 6); to perplex.

மறுக்கு²–தல் maṟukku-, 5 செ.கு.வி.(v.i.) எண்ணெய் முதலியவற்றால் தொண்டை கரகரத்தல் (இ.வ.); to be irritated in the throat.

மறுகலி–த்தல் maṟugali-, 4 செ.கு.வி.(v.i.) நோய் முதலியன திரும்புதல் (யாழ்.அக.); to return, relapse, as disease.

மறுகு¹–தல் maṟugu-, 5 செ.கு.வி.(v.i.) 1. சுழலுதல்; to whirl. "மறுகக் கடல் கடைந்தான்" (திவ்.இயற்.2, 68). 2. பலகாலுந் திரிதல்; to go about often, to wander. "மலிவன மறுகி" (குறிஞ்சிப்.97). 3. மனங் கலங்குதல்; to be bewildered, confused, to be unsteady, unsettled. "நெஞ்சின் மறுகல் நீ" (சீவக.946). 4. வருந்துதல்; to be distressed. "கிடந்துயிர் மறுகுவதாயினும்" (அகநா.29). 5. சிதைதல்; to be shattered, torn up. "குடன் மறுகிட" (கம்பரா. இந்திரசித்.19). 6. அரைபடுதல்; to be ground into paste, as sandlewood. "நறுஞ்சாந்து மறுக" (மதுரைக்.553).

மறுகு²–தல் maṟugu-, 5 செ.குன்றாவி.(v.t.) கொண்டு போதல்; to carry. "அவல் வகுத்தோர்.... மது மறுகவும்" (பொருந.27).

மறுத்துப்போ–தல் maṟuttu-p-pō-, *8 செ.கு.வி.*(v.i.) *1. ஆவு கறவை நின்று போதல், பலன் கொடுக்காமற் போதல் (வின்.);* to cease giving milk, as a cow, to stop bearing as a tree. *2. எதிர்ப்பு தெரிவித்துப் போதல்;* to oppose.

மறுத்துரை–த்தல் maṟutturai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *தடை கூறல், எதிர்த்துரைத்தல்;* to contradict. "*மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்*" *(தொல். பொருள். 196).*

மறுதலி–த்தல் maṟutali-, *4 செ.கு.வி.*(v.i.) *1. வேறுபடுதல்;* to vary, deviate. *2. மாறுபடுதல்;* to contradict. "*இவை யொன்றிற் கொன்று தம்மின் மறுதலித்தமையான்*" *(வீரசோ.அலங்.14, உரை). 3. மறுக்களி-, பார்க்க;* see maṟu-k-kaḷi [2]-. *4. (கிறித்.) மார்க்கத்தைவிட்டு நீங்குதல்;* to apostatize.

மறுப்படு–தல் maṟu-p-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. வசை யுறுதல்;* to be blamed. *2. சிதைவுறுதல்;* to be injured, spoiled. *3. புள்ளியுடைத்தாதல்;* to be spotted. *4. துன்பப்படுதல் (யாழ்.அக.);* to suffer.

மறை[1]–தல் maṟai-, *2 செ.கு.வி.*(v.i.) *1. ஒளிந்து கொள்ளுதல்;* to be hidden, shrouded. "*புதன் மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த்தன்று*" *(குறள், 274). 2. தோன்றா தொழிதல்;* to disappear, vanish, to become invisible, to recede, as from sight. "*ஞாயிறு குடமலை மறைய*" *(நற்.239).*

மறை[2]–தல் maṟai-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1. ஒளித்தல்;* to hide, conceal, keep back. "*மறைப்பேன்மற் காமத்தை யானோ*" *(குறள், 1253). 2. மூடுதல்;* to cover, to shroud, to shelter. "*அற்ற மறைத்தலோ புல்லறிவு*" *(குறள், 846). 3. தீது வாராமற் காத்தல்;* to protect, as from harm or danger. "*குடும்பத்தைக் குற்றமறைப்பான்*" *(குறள், 1029).*

மன்றாடு–தல் maṉṟāḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. குறையிரந்து வேண்டுதல்;* to pray, entreat, implore, petition, supplicate. "*வஞ்சியை யாவி வெளவலை யென்றான் மன்றாடா*" *(சேதுபு.சோழ.39). 2. வழக்காடுதல் (பெரியபு. தடுத்தாட்.48);* to carry on litigation. *3. பிறருக்காக வழக்கெடுத் துரைத்தல்;*to intercede, plead the cause of another. "*நித்யசூரிகள் காலி பத்துக்கும்.....மன்றாடுவர்களிறே*" *(திவ். பெரியாழ்.4, 5, 7, வியா.).*

மன்னி–த்தல் maṉṉi-, *4 செ.குன்றாவி.*(v.t.) *குற்றத்தைப் பொறுத்தல்;* to forgive, pardon. "*கொடியேன் குற்றமெலா மன்னித்தருளி*" *(அருட்பா.)*

மன்னு[1]–தல் maṉṉu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. நிலை பெறுதல்;* to be permanent, to endure. "*மன்னர்க்கு மன்னுதல் செங்கோண்மை*" *(குறள், 556). 2. தங்குதல்;* to remain long, to stay. "*உத்திரை வயிற்றின் மன்னிய குழவி*" *(பாகவத.1, பரிட்சத்துவின்றோ.1). 3. பொருந்துதல்;* to agree. "*மன்ன சொகினம்*" *(பு.வெ.10, 11). 4. விடாது முயலுதல் (வின்.);* to persevere. *5. உறுதியாய் நிற்றல் (வின்.);* to be steady. *6. மிகுதல்;* to abound. "*மன்னிய வேதந்தரும்*" *(ஆசாரக்.96).*

L. manere = stay. **L.** remanere; **E.** remain.

மன்னு[2]–தல் maṉṉu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. அடுத்தல்;* to go near, approach. *2. ஆடையை தூக்கிப் பிடித்துக் கொள்ளுதல் (இ.வ.);* to pull or tuck up one's clothes, as in crossing a river. "*சீலையை மன்னிக்கொள்*" *(உ.வ.).*

மனந்தளர்–தல் maṉan-taḷar-, *2 செ.கு.வி.*(v.i.) *ஊக்கங் குறைதல்;* to grow discouraged or dispirited. "*பித்தன் மனந்தளர்ந்தான்*" *(கம்பரா. நிகும்பலை. 127).*

மனந்திருந்து–தல் maṉan-tirundu-, *5 செ.கு.வி.*(v.i.) *மன நேர்மைப்படுதல்;* to change one's mind for the better, to reform in character.

மனந்திரும்பு–தல் maṉan-tirumbu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மனம் மாறுதல் (வின்.);* to change in mind, to be converted. *2. (கிறித்.) செய்த குற்றத்திற்காக வருத்தப்படுதல்;* to repent.

மனநோ–தல் maṉa-nō-, *17 செ.கு.வி.*(v.i.) *வருந்துதல் (வின்.);* to regret, to feel remove.

மனப்படுத்து–தல் maṉa-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. இணக்குதல்;* to cause to agree, to persuade. *2. மனப்பாடஞ் செய்தல் (இக்.வ.);* to get by heart.

மனமிறங்கு–தல் maṉam-iṟaṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *இரக்கத்தின் கரணியமாகவோ நற்செயல்கரணியமாகவோ ஒருவர் மேல் கொண்ட விடாப்பிடியான சினத்தைத் தவிர்த்தல்;* to melt or to become soft as of mind.

மனமிறுகு–தல் maṉam-iṟugu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. மனம் கடினமாதல்;* to be hardened in mind. *2. கருமி குணங் கொள்ளுதல்;* to be miserly or ungenerous."*மனமிறு கியாசை யானராய்*" *(திருப்பு.790).*

மனமுறி–தல் maṉam-muṟi-, *2 செ.கு.வி.*(v.i.) *துன்பத்தால் மனமகிழ்வு குன்றுதல்;* to be broken hearted, dispirited or discouraged. "*பொருட்சேத நேரவே அவன் மன முறிந்தான்*" *(உ.வ.).*

மனிச்சடி–த்தல் maṉi-c-caḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *பெருமை பேசுதல்;* to speak proudly or in a manly way. "*மனிச்சடித்துச் சொல்லாதே*" *(திருவிருத்.30, வியா. பக்.189).*

மனை–தல் maṉai-, *2 செ.குன்றாவி.*(v.t.) *உருவாக்கல்;* to make, create, form, fashion, shape. "*ஒருவன் மனைந்து கொண்டு வர ஒருவன் அழித்துக் கொண்டு வரும்படி*" *(ஈடு.6, 9, 1).*

ம. மன; க. மனெ.

E. manor; **ME., AF.** maner; **OF.** manoir;

E. manse; **ME.** med; **L.** mansus = house; **E.** mansion = large residence.

மனைகோலு–தல் maṉai-kōlu-, *5 செ.கு.வி.*(v.i.) வீடு கட்டுதல்; to build a house.

kh

மாசறு–தல் māšaṟu-, *15 செ.கு.வி.*(v.i.) குற்றம் நீங்குதல்; to be blameless or spotless. "மாசற்றார் கோள்" *(குறள், 311).* "மாசறு பொன்னே வலம்புரி முத்தே" *(சிலப். 2:73).*

மாட்டறி–தல் māṭṭaṟi-, *2 செ.கு.வி.*(v.i.) சான்றுக் கையெழுத் திடுதல்; to sign as witness."சேனை யோகநாச் சண்ணனும் மாட்டறிந்தது" *(S.I.I.iv, 134).*

மாட்டறை–தல் māṭṭaṟai-, *2 செ.கு.வி.*(v.i.) ஆவண முதலிய வற்றின் பின்பக்கத்திற் குறிப்பெழுதுதல் *(யாழ்ப்.)*; to endorse, as on the back of a note.

மாட்டு–தல் māṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1.* இணைத்தல் *(சூடா.)*; to fasten on, button, tackle, hook. "சிறுபொறி மாட்டிய பெருங்கல்லடாஅர்" *(நற்.19). 2.* தொடுத்தல்; to fix, attach. "அம்பினை மாட்டியென்னே" *(கம்பரா. நிகும்பலை.96). 3.* செருகுதல்; to put in, thrust, as fuel. "அடுப்பினின் மாட்டு மிலங்ககில்" *(காஞ்சிப்பு. நகர்.73). 4.* பயன்படுத்துதல்; to use, bring into play. "வள்ளறான் வல்லவெல்லா மாட்டினன்" *(சீவக.1274). 5.* மனத்திற் கொள்ளுதல்; to grasp, comprehend. "சொன்மாலை யீரைந்து மாட்டிய சிந்தை" *(திருவிசை. கருவூ.8, 10). 6.* கற்றுவல்லனாதல்; to be proficient in."கல்வியை மாட்டாராயினும்" *(புறநா.57, உரை). 7.* அடித்தல்; to beat violently. "வின்முறிய மாட்டானோ" *(தனிப்பா.i, 41, 80).* "நன்றாய் மாட்டுமாட்டென்று மாட்டிவிட்டான்" *(உ.வ.). 8.* விளக்கு முதலியன கொளுத்துதல்; to kindle as a fire, to light, as a lamp. "நெய் பெய்து மாட்டிய சுடர்" *(குறுந்.398). 9.* தீப்பற்றவைத்தல்; to burn. "விறகிற்... செந்தீ மாட்டி" *(சிறுபாண்.156).*

மாணியரி–தல் māṇi-ari-, *2 செ.குன்றாவி.*(v.i.) *1.* இனப் பெருக்க அழிவு செய்தல்; to circumcise. *2.* விதை யெடுத்து ஆண் பிள்ளையைப் பேடியாக்குதல் *(வின்.)*; to castrate a man.

மாந்து¹–தல் māndu-, *16 செ.குன்றாவி.*(v.t.) *1.* உண்ணுதல்; to eat, feed. "மடமந்தி..... வாழைத் தீங்கனி மாந்தும்" *(தேவா.909, 5). 2.* குடித்தல்; to drink. "தேம்பிழி நறவ மாந்தி" *(கம்பரா.நாட்டுப்.8). 3.* நுகர்தல்; to experience as pleasure and pain, to enjoy. "கன்னியின் நல மாந்தினள்" *(பாகவத.).*

மாந்து²–தல் māndu-, *16 செ.கு.வி.*(v.i.) *1.* வருந்துதல்; to be distressed."மணி பிரியரவின் மாந்தி" *(கம்பரா. தைல.63). 2.* இறத்தல்; to be ruined, to perish, die. "மயிர்பட மாந்தும் படியிறே இவள்படி" *(ஈடு.7, 3, 2). 3.* அவிந்தடங்குதல்; to be extinct. *4.* ஊக்கமழிதல் *(யாழ்.அக.)*; to become dispirited.

மாப்புவிடு–தல் māppu-viḍu-, *18 செ.குன்றாவி.*(v.t.) மன்னித்தல் *(முகவை. மீன.)*; to excuse, pardon.

மாபிசை–தல் mā-pišai-, *2 செ.குன்றாவி.*(v.t.) பிசறுதல்; mixing.

மாய்–தல் māy-, *2 செ.கு.வி.*(v.i.) *1.* மறைதல்; to hide, vanish. "களிறுமாய் செருந்தியொடு" *(மதுரைக்.172). 2.* அழிதல்; to perish, to be annihilated, terminated. "குடியொடுமாய்வர் நிலத்து" *(குறள்.898). 3.* இறத்தல்; to die."தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்" *(மலைபடு.553). 4.* ஒளி மழுங்குதல்; to become lustreless, as the setting sun. "பகன்மாய" *(கலித்.143). 5.* கவலை மிகுதியால் வருந்துதல்; to suffer from over, annexiety as in love-sickness. *6.* அறப்பாடு படுதல்; to wear oneself to death."அந்த வேலையில் மாய்ந்து கொண்டிருக் கிறேன்" *(உ.வ).*

மாய்²–த்தல் māy-, *2 செ.குன்றாவி.*(v.t.) *1.* மறைத்தல்; to hide. "களிறு மாய்க்குங் கதிர்க் கழனி" *(மதுரைக்.247). 2.* கொல்லுதல்; to kill. "மாய்த்த லெண்ணி வாய் முலை தந்த" *(திவ்.திருவாய்.4, 3, 4). 3.* அழித்தல்; to destroy, put an end to. "குரம்பை யிது மாய்க்க மாட்டேன்" *(திருவாச.5, 54). 4.* வருத்துதல் *(கொ.வ.)*; to afflict. *5.* தீட்டுதல்; to grind and sharpen. "மாய்த்தபோல மழுகு நுனை தோற்றி" *(அகநா.5).*

மார்தட்டு–தல் mār-taṭṭu-, *4 செ.கு.வி.*(v.i.) *1.* போட்டிப் போடுதல்; to challenge, to complete with. "அவர்களையும் ..... சிவனோட மார்தட்டுகிறார்" *(திருவிருத்.96, வியா.பக். 455, அரும்.). 2.* குறித்த துறையில் தான் மேம்பட்டவனென்பதைக் குறிப்பிக்குமாறு மார்பைத் தட்டுதல்; to boast of one's powers in a particular line, as by striking the chest. "அன்னதானத்துக்கு மார்தட்டிய துரை" *(தனிப்பா.ii, 236, 4). 3.* தற்பெருமை யடைதல்; to pride oneself. "நானென்று மார்தட்டும்" *(திருப்பு.1223).*

மாரடி–த்தல் māraḍi-, *4 செ.கு.வி.*(v.i.) *1.* இழவில் அழும்பொழுது மார்பில் மகளிர் அடித்துக் கொள்ளுதல்; to beat the breast, as when bewail the dead. "மாரடித் திரியும்" *(அரிச். பு.நாட்.36). 2.* வருந்துதல்; to worry oneself.

மால்(லு)–தல் māl(lu)-, *16 செ.கு.வி.*(v.i.) மாட்சிப்படுதல்; to be magnified, glorified. "மான்ற பூண் முலையினாள்" *(காஞ்சிப்பு. திருக்கண்.174).*

மால்குறி–த்தல் māl-kuṟi-, *4 செ.கு.வி.*(v.i.) மனை கட்டுவதற்கு முன்பாக எல்லையை வரையறை செய்து அடையாள மாக குச்சி நடுதல் *(முது.வழ.)*; to plant a small stick as pole, to determine the boundry of the housing plot, before construction.

மால்முடி–தல் māl-muḍi-, *4 செ.கு.வி.*(v.i.) வலைபின்னுதல் *(இ.வ.)*; to make a net.

மாலையணி–தல் mālai-y-aṇi-, *2 செ.கு.வி.*(v.i.) *புணர்ச்சியின் பந்துய்த்தல்;* to enjoy sexual pleasure, lit. to adorn with a garland. "*மாலையணிய விலை தந்தான்*" *(பரிபா.20, 79).*

மாலையிடு–தல் mālai-iḍu-, *17 செ.குன்றாவி.*(v.t.) *மாலை சூட்டி மணத்தல்;* to marry, as the bride garlanding the bridegroom. "*கரித்தோலையிட்டாடுந் தொழிலுடை யோனை முன்னாண் மாலையிட்டாயிதென்னே*" *(அருட்பா.1, வடிவுடை.13).*

மாலைவாங்கு–தல் mālai-vāṅgu-, *5 செ.கு.வி.*(v.i.) *பரிசங் கொடுத்தல்;* to pay for sexual pleasure lit. to purchase a garland. "*மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென*" *(சிலப்.3 : 166).*

மாவரை–த்தல் māvarai-, *4 செ.குன்றாவி.*(v.t.) *செய்த செயலையே திரும்பத் திரும்ப செய்தல்;* repeat the same action.

மாவாட்டு–தல் māvāṭṭu-, *5 செ.கு.வி.*(v.i.) *மாவாக ஆகும்படி அரைத்தல்;* grind to paste.

மாழ்கு–தல் māḻgu-, *7 செ.கு.வி.*(v.i.) *1. மயங்குதல்;* to be bewildered, to be fascinated. "*குழறிமாழ்கி*" *(கம்பரா. மாரீசன்வதை.237). 2. கெடுதல்;* to be spoiled or lost. "*ஓதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை*" *(குறள், 653). 3. சோம்புதல் (திவா.);* to grow lazy. *4. கலத்தல் (வின்.);* to mingle, to hold, intercourse. *5. மூழ்குதல், மாய்தல்;* to be engrossed.

க. மாழ்கு.

மாள்(ளு)–தல் māḷ(ḷu)-, *16 செ.கு.வி.*(v.i.) *1. சாதல்;* to die. "*வஞ்சமுண்மையேன் மாண்டிலேன்*" *(திருவாச. 5, 93). 2. அழிதல்;* to perish. "*அனுபவித்தாலும் மாளாத படியான பாபங்கள்*" *(ஈடு.4:7,3). 3. கழிதல்;* to be exhausted, expended or finished. "*மாளாவின்ப வெள்ளம்*" *(திவ். திருவாய். 4, 7, 2). 4. இயலுதல்;* to be within one's ability. "*அது செய்ய மாளாது*" *(உ.வ.).*

க. மாள்; ம. மாள்குக.

மாற்று[1]–தல் māṟṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. வேறு படுத்துதல்;* to change, alter. "*பிறப்பு மாற்றினை*" *(கம்பரா.வீடண.8). 2. செம்மைப்படுத்துதல் (வின்.);* to rectify, convert, cure, set right. *3. நீக்குதல்;* to dispel, relieve, remove. "*அப்பசியை மாற்றுவார்*" *(குறள், 225). 4. கெடுத்தல் (வின்.);* to derange, change or alter for the worse. *5. ஓடச் செய்தல்;* to repel, expel. "*வில்லோர் மாற்றி*" *(ஐங்குறு. 267). 6. தடுத்தல்;* to hinder, prevent. "*மாற்றருங் கூற்றம்*" *(தொல்.பொருள்.79). 7. மறுத் துரைத்தல்;* to deny, refuse. "*உள்ளதின்றென்று மாற்றலன்*" *(கம்பரா. பள்ளியடை.113). 8. அழித்தல்;* to destroy, to cancel, repeal. "*புவிபடைத் தளித்து மாற்றி*" *(கந்தபு.யுத்தகாண்.ஏமகூ.1). 9. ஒடுக்குதல் (வின்.);* to cause involution, reduce the universe to its primitive elements. *10. மறைத்தல்;* to conceal, hide. "*பூழிமாலை தள்ளருஞ் சுடர்கண் மாற்றி*" *(கந்தபு. யுத்தகாண். ஏமகூ.22). 11. நாணயம் மாற்றுதல்;* to change, as money. *12. பண்ட மாற்றுதல்;* to exchange, barter, traffic, trade. *13. இருப்பிட வேறுபடுத்துதல்;* to shift, to transfer, as from a place. "*அவன் வீட்டை மாற்றிவிட்டான்*" *(உ.வ.). 14. (மாலியம்) ஓரிடத்துச் சமைத்தவுணவை வேற் றிடத்துக்கு அனுப்புதல்;* to send food from one place to another (vaisṇ). *15. பெருக்கிச் சுத்தஞ் செய்தல் (வின்.);* to sweep, cleanse, as a house."*நுண்டுகளோடு சுண்ண மாற்றுதி*" *(கந்தபு. அரசுசெய்.7).*

மாற்று[2]–தல் māṟṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. இடைவிடுதல்;* to be interrrupted. "*மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்*" *(திவ். திருப்பா. 21). 2. ஒழிதல்;* to fail, as rains. "*வறந்தெற மாற்றிய வானமும்*" *(கலித்.146). 3. சுணங்குதல் (வின்.);* to detain.

மாறாடு[1]–தல் māṟāḍu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. உருவம் முதலியன மாறுதல்;* to change, vary, as from. "*ஒருவடி வுற்றது மாறாடுறுகாலை*" *(கம்பரா.முதற்போர்.179). 2. தடு மாறுதல்;* to waver in mind. "*மாறாடுதி பிண நெஞ்சே*" *(திருவாச.5, 32). 3. மாறிப் புகுதல்;* to change places with one another. "*விடலையொடு நெஞ்சு மாறாடி*" *(பெருங். மகத.6, 76).*

மாறாடு[2]–தல் māṟāḍu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. எதிர்த்து நிற்றல் (இ.வ.);* to oppose. *2. புரட்டுதல் (வின்.);* to derange, invert. "*அவன் அதை மாறாடப் பார்க்கிறான்*" *(உ.வ.).*

மாறியாடு–தல் māṟi-y-āḍu-, *4 செ.கு.வி.*(v.i.) *காலை மாற்றி நடனமாடுதல்;* to change the leg in dancing, as Šiva at *Madurai*. "*கூத்தனார்..... மாறி யாடினார்*" *(திருவாலவா. 52, 13).*

மாறு[1]–தல் māṟu-, *5 செ.கு.வி.*(v.i.) *1. வேறுபடுதல்;* to become changed, exchanged, altered, reversed. "*மாறா மனங்கொண்டு*" *(திருநூற்.47). 2. பின் வாங்குதல்;* to withdraw. "*சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை*" *(பெரும்பாண்.136). 3. குணமாதல்;* to be cured. "*நோய் இப்போது கொஞ்சம் மாறியிருக்கிறது*" *(உ.வ.). 4. இருப்பிடம் வேறுபடுதல் (இ.வ.);* to have a change of residence. *5. நீங்குதல்;* to cease, as from sleep. "*உறக்கம் மாறினான்*" *(கம்பரா. ஆறுசெ.7). 6. முதுகிடுதல்;* to retreat, as showing one's back. "*மாறாமைந்தின்*" *(மலைபடு.332). 7. கூத்தாடுதல்;* to dance. *8. இறத்தல்;* to die. "*இவ்வான் மாக்கள் மாறிப் பிறந்துவரும்*" *(சி. போ.சிற்.2, 3, பக்.47). 9. இல்லையாதல்;* to be non-existent. "*பரப்புமாறப் பூத்துக்குளிர்ந்த புனலை*" *(ஈடு. 2, 8, 2). 10. பொய்படுதல்;* to become false. "*நாவிற் புனைந்த நன்கவிதை மாறாமை மேவி*" *(பரிபா.6, 8). 11. சரிப் படுதல்;* to be corrected in state, place, form or appearance.

க. மாறு.

மாறு[2]–தல் māṟu-, *5 செ.குன்றாவி.*(v.t.) *1. விற்றல்;* to sell, to exchange, as goods, barter. "*நாண்மோர் மாறும்*" *(பெரும்பாண். 160). 2. பணிசெய்தல்;* to comply with, as an order. "*முன்னின பணிமுறை மாற முந்துவார்*" *(கம்பரா. ஊர்தேடு. 49). 3. கைவிடுதல்;* to forsake, cease to support. "*புரிபுநீ புறமாறி*" *(கலித். 15). 4. பிறனுக் குதவுதல்;* to give, or render help. "*பனவனுக்காப் பாமாறியார்க்கு*" *(குமர. பிர. மீனாட். இரட். 5). 5. கழித்தல்;* to remove, caste away. "*மாறுமென்ன மலரும்*" *(பரிபா. 6, 46). 6. மறுத்தல் (யாழ்ப்.);* to deny. *7. எண் பெருக்குதல்;* to multiply. "*ஐம்பாலும் பொதுவுமான ஆளானும் மாற நூற்றெட்டாம்*" *(நன். 269, மயிலை). 8. அடித்தல் (இ.வ.);* to belabour, thrash.

மாறுபடு–தல் māṟu-paḍu-, *20 செ.கு.வி.*(v.i.) *1. மாறிப் போதல் (சங்.அக.);* to be changed. *2. முரணுதல்;* to be opposed, to disagree, differ, to be discordant, to be in contrest. *3. பகைமை கொள்ளுதல்;* to be inimical. "*மாறுபட்டஞ்சென்னை வஞ்சிப்ப*" *(திருவாச. 6, 11).*

மான்–தல் (மான்றல்) māṉ-, *16 செ.கு.வி.*(v.i.) *1. ஐயுறுதல் (திவா.);* to be doubtful. *2. மயங்குதல் (சூடா.);* to be confused.

மானங்கா–த்தல் māṉaṅ-kā-, *4 செ. குன்றாவி.*(v.t.) ஒருவன் அல்லது ஒருத்தியின் மானத்தைப் பேணுதல்; to preserve one's self-respect, chastity or honour.

மானத்தைவாங்கு–தல் māṉattai-vāṅgu-, *7 செ.கு.வி.*(v.i.) மதிப்பை இழக்கச் செய்தல்; cause or bring disgrace.

மானமூடு[1]–தல் māṉa-mūḍu-, *5 செ.கு.வி.*(v.i.) உடை முதலியவற்றால் உடலை மறைத்து மானம் பேணுதல்; to conceal one's shame by covering the body with dress.

மானமூடு[2]–தல் māṉa-mūḍu-, *5 செ.கு.வி.*(v.i.) வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகை; cloud sky. "*இரண்டு நாளாக மானம் மூடிக்கிட்டு கிடக்குது*" *(பே.வ.).*

மானி[1]–த்தல் māṉi-, *4 செ.கு.வி.*(v.i.) *1. நாணுதல்;* to be bashful, to become ashamed. "*கூற்றமும்... மானித்தது*" *(பு.வெ.7, 25, உரை). 2. செருக்குதல், இறுமாப்புக் கொள்ளுதல்;* to be proud. "*நின்னைப் பணியாது மானித்து நின்ற அரசன்*" *(நீலகேசி, 529, உரை).*

மானி[2]–த்தல் māṉi-, *4 செ.குன்றாவி.*(v.t.) பெருமைப் படுத்துதல்; to respect, honour, treat reverently. "*நாணிமானித் தோமே நாமென்பார்*" *(காளத்.உலா.243).*

Ä

மிகு[1]–தல் migu-, *21 செ.கு.வி.* (v.i.) *1. அதிகமாதல்;* to exceed, surpass; to be in excess. "*முந்திரிமேற் காணி மிகுவதேல்*" *(நாலடி, 346).* "*செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம் போல*" *(கலித்.13:1). 2. பெருகுதல்;* to grow, increase. "*காப்பு மிகின்*" *(இறை.16). 3. பொங்குதல் (பிங்.);* to swell. *4. எழுத்து இரட்டித்தல்;* to be doubled, as a letter. "*மெல்லெழுத்து மிகினும்*" *(தொல். எழுத்து.341).* "*இகர ஈற்று வினையெச்சத்தின் பின் ஒற்று மிகும்*". *5. நெருங்குதல்;* to crowd. "*தலைத்தலை மிகூஉம்*" *(பரிபா.16:14). 6. சிறத்தல்;* to be great, to be excellent. "*அதன்கணின்று மீடல் மிக்கது*" *(இறை.3 பக்.44). 7. ஒன்றின் மேம்படுதல்;* to be superior. *8. எஞ்சுதல்;* to remain; to be left over; to be superfluous. *9. செருக்குறுதல்;* to be self-conceited arrogant. "*மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம் தகுதியான் வென்று விடல்*" *(குறள், 158). 10. தீமையாதல்;* to be evil. "*மிக்கவை செய்தாரை*" *(குறள்.158).*

க. மிகுற்; தெ. மிகுலு.

மிகு[2]–த்தல் migu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. அதிகப் படுத்துதல்;* to augment, make large. "*பீலிபெய் சாகாடும் அச்சு இறும் அப்பண்டம் சாலமிகுத்துப் பெயின்*" *(குறள், 475). 2. விஞ்சுதல்;* to excel, surpass. *3. பெருக்குதல்;* to increase. *4. பெருமையாகக் கருதுதல்;* to regard with pride. '*இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும்*' *(புறநா.77, உரை). 5. மிகுத்து-தல் பார்க்க;* see miguttu-.

க. மிகிசு.

மிகுத்து–தல் miguttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) மிச்சப் படுத்துதல்; to save, spare; to leave over.

மிகை–த்தல் migai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அதிகமாதல்;* to increase, swell. *2. செருக்குறுதல்;* to be proud. '*மிகைத்துச் செல்லும் படை*' *(புறநா.71, உரை).*

மிகைபடு–தல் migai-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. அதிகப் படுதல்;* to increase, to be excessivee. *2. குற்றத்திற்கு உள்ளாதல்;* to be at fault.

மிச்சப்படுத்து–தல் micca-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) செலவாவதைத் தவிர்த்தல், சேமித்தல்; to save. ஒரு சிறந்த பெண்ணானவள் தன் கணவனின் மாத ஊதியத்தில் ஒரு பங்கை மிச்சப்படுத்தி குடும்பம் நடத்துவாள்.

மிசை–தல் miśai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. உண்ணுதல்;* to eat a meal. "*வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்?*" *(குறள். 85). 2. நுகர்தல் (யாழ்.அக.);* to taste, enjoy, experience.

மிஞ்சிப்போ–தல் miñji-p-pō-, *8 செ.கு.வி.* (v.i.) எல்லை மீறிப்போதல்; to exceed limits; to go to far.

மிஞ்சு[1]–தல் miñju-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மீதமாதல்;* be left over; remain. விற்றது போக இரண்டு காணி நிலம் மட்டும்தான் நமக்கு மிஞ்சுகிறது. *2. திறன், இயல்பு,*

அளவு போன்றவற்றை அதிகம் கொண்டிருப்பதால் முன்நிலையில் இருத்தல், முந்துதல், விஞ்சுதல்; excel, outdo. திரைப்படத் துறையில் தன்னை யாரும் மிஞ்சக்கூடாது என்ற எண்ணம் அந்த இயக்குநருக்கு இருந்தது. குருவை மிஞ்சிய சீடனா? 3. குறிப்பிட்ட வரம்பை, ஒழுங்கைக் கடத்தல், கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் போதல், மீறுதல்; exceed; go beyond limits. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் (அமிர்தமும்) நஞ்சு.

தெ., க. மிஞ்சு.

மிஞ்சு²–தல் miñju-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மிகுதல்;* to increase. "பகல்கண் மிஞ்சி" *(சீவக.255).* "மிஞ்சிய கருமம் அஞ்சச் செய்யும்" *(பழ.).* 2. செருக்குதல் *(வின்.);* to become proud; to be elevated.

தெ., க. மிஞ்சு.

மிடி–த்தல் miḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வறுமையுறுதல்; (சூடா.);* to be poverty-stricken, destitute. 'மிடித்தார்க்குச் சுற்றமின்றாயிருந்தது' *(சீவக.2535, உரை).* 2. குறைவுறுதல்; to be scanty.

மிடுமிடு–த்தல் miḍu-miḍu-, *4 செ.கு.வி.* (v.i.) விரைதல் *(யாழ். அக.);* to hasten.

மிடை¹–தல் miḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. செறிதல்;* to be close set or crowded. "வேன்மிடைந்த வேலியும் பிளந்து" *(சீவக. 279).* 2. நிறைதல் *(அரு.நி.);* to be full. 3. கலத்தல்; to be mixed, mingled. "பொய்யோ டிடைமிடைந்த சொல்" *(நாலடி, 80).* 4. வருந்துதல் *(சங்.அக.);* to be distressed.

க. மிடுகு

மிடை²–தல் miḍai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. செறிதல்;* to set closely; to crowd. 2. பின்னுதல்; to weave, as mat, etc. 3. மிகுத்திடல்; to increase.

மிண்டு¹–தல் miṇḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நெருங்குதல்;* to throng. "பொதும்பிடை வரிவண்டு மிண்டி" *(திவ்.பெரியதி.4. 10 : 2).* 2. நிறைதல்; to be full. 3. வலியதாதல்; to be hard. "மிண்டு மனத்தவர்" *(சேந். திருப்பல்.2).* 4. மதங்கொள்ளுதல்; to be exultant, vain. "கருணை மட்டுப் பருகிக் களித்து மிண்டு கின்றேனை" *(திருவாச.6:33).* 5. போரில் கலத்தல்; to join battle. "தேர்மிசைக் கண்டு மிண்டுவீர்" *(பாரத. நிரை.54).*

மிண்டு²–தல் miṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நெம்புதல்;* to try, lift, as with a lever. 2. குத்திக் கிளப்புதல்; to thrust. "மிளிர மிண்டி" *(பெரும்பாண்.92).* 3. செருக்காகப் பேசுதல்; to talk harshly or arrogantly. "பிண்டியர்கள் மிண்டுமொழி" *(தேவா.49, 10).* 4. முன்தள்ளுதல் *(வின்.);* to push, to force forward.

மித–த்தல் mida-, *3 செ.கு.வி.* (v.i.) *1. நீர் முதலியவற்றின் மேற்பரப்பில் மூழ்காமல் நிலைகொள்ளுதல்;* to float. "சுரையாழ அம்மி மிதப்ப" *(நன்.152, விருத்.).* "நீ தண்ணீரில் எவ்வளவு நேரம் மிதப்பாய்? இரும்பு நீரில் மிதக்காது". 2. மேலெழுப்புதல் *(வின்.);* to rise high in the sky. 3. அளவில் மேற்குவிதல்; to be heaped in a measure, as corn. மிதக்க அள. 4. வீண் பெருமை பண்ணுதல் *(வின்.);* to assume, to pretend to a character above the reality. 5. மிகுதல்; to be abundant; to be in excess. "வெம்பு நீர் மிதப்ப மாந்தி" *(விநாயகபு.74:226).* 6. கீழ் இறங்காமல் காற்றில் அலைதல்; to be borne in the air. "பறவைகளின் இறகுகள் காற்றில் மிதந்து சென்றன. அவன், கற்பனையில் மிதக்கிறான்".

மிதமிஞ்சு–தல் mida-miñju-, *5 செ.கு.வி.* (v.i.) அளவுக்கு அதிகமாதல், அளவு கடந்து போதல்; be immoderate, go beyond reasonable limits.

மிதி¹–த்தல் midi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. காலின் அடிப்பகுதிபடும் வகையில் ஒன்றின் மீது காலைப் பதித்தல்; ஒன்றின் மீது வேகத்துடன் காலை இறக்குதல்; உதைத்தல்;* step on, tread or stamp. கோழி மிதித்து குஞ்சு சாகுமா? 2. மிதிவண்டியை இயங்கச் செய்வதற்காக அதற்கான பாகத்தில் காலை வைத்து விசையுடன் அழுத்துதல்; pedal (a bicycle) hard. மழை வருவது போல இருந்ததால் மிதிவண்டியை அவன் வேகமாக மிதித்தான். 3. அடிவைத்தல்; to tread on. மிதித்தாரைக் கடியாத பாம்பு உண்டா? *(பழ.).* சேற்றை மிதிக்காதே. 4. காலால் துவைத்தல்; to tread down, trample on. "மிதித்தேறியீயுந் தலைமேலிருத்தலால்" *(நாலடி, 61).* 5. இகழ்தல்; to insult, dishonour. "மிதித்திறப் பாருமிறக்க" *(நாலடி, 61).* 6. பாய்தல்; to rush or dash against, to attack, as a door of a fort. "போரார் கதவ மிதித்த தமையுமோ" *(கலித்.90:12).*

மிதி²–த்தல் midi-, *4 செ.கு.வி.* (v.i.) குதித்தல் *(சூடா.);* to jump.

மிதியிடு¹–தல் midi-y-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) காலடியால் குறி செய்தல்; to make a tract or impression by one's foot.

மிதியிடு²–தல் midi-y-iḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.) காலால் துவைத்தல்; to tread under foot.

மிரட்டு¹–தல் miraṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தன்நோக்கம் நிறைவேற அல்லது பிறர் நோக்கத்தை முறியடிக்கச் செய்கையாலோ அல்லது பேச்சாலோ அச்சப்படவைத்தல், அச்சுறுத்துதல்;* threaten by word or act, intimidate. "நள்ளிரவில் திருடன் கத்தியைக் காட்டி மிரட்டி வீட்டில் உள்ளப் பொருள்களைக் கொள்ளையடித்தான்". 2. மயக்குதல்; to fascinate, to deceive. "விழித்து மிரட்டி" *(திருப்பு.219).* 3. ஓட்டுதல்; to drive away. "இருநோய் மலத்தைச் சிவவொளியால் மிரட்டி" *(திருப்பு.1042).*

மிரள்(ளு)–தல் miraḷ-, *16 செ.கு.வி.* (v.i.) *1. அச்சத்தினால்*

கலக்கமடைந்து கட்டுப்பாடு இழத்தல்; get frightened or scared, lose control when scared. *2. மயங்கி அஞ்சுதல்;* to be frightened, startled. "குடையைக் கண்டால் மாடு மிரளும்". *(உ.வ.)*

மிலை¹–தல் milai(lu)-, *2 செ.கு.வி.* (v.i.) *சூடுதல்;* to put on wear. "உழிஞைப் பவரொடு மிலைந்து" *(புறநா.77).*

மிலை²–த்தல் milai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. மயங்குதல்;* to be bewildered. "மிலைத்தலைந்தேனை" *(திருவாச.6:40). 2. கனைத்தல்;* to low, as a cow. "எப்படி யூரா மிலைக்கக் குருட்டா மிலைக்கு மென்னும்" *(திவ்.இயற். திருவிருத். 94).*

மிழற்று–தல் miḻaṟṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மழலை போல் இனிமையாகப் பேசுதல்;* to prattle as a child. "பண்கள் வாய்மிழற்றும்" *(கம்பரா. நாட்டு.10). 2. மெல்லக் கூறுதல்;* to speak softly. "யான் பலவும் பேசிற்றானொன்று மிழற்றும்" *(சீவக.1626).*

மிழறு–தல் miḻaṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *மிழற்று-தல் பார்க்க;* see miḻaṟṟu.

மிளிர்¹–தல் miḷir-, *2 செ.கு.வி.* (v.i.) *1. புரளுதல்;* to turn, roll, as eyes. "மீநில மெய்தி மிளிர்ந்துருகா" *(சீவக.1384).* "கெண்டையொண்கண் மிளிர" *(திவ். பெரியதி.3. 7:2). 2. கீழ்மேலாதல்;* to be upset, to be turned topsyturvy. "உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி" *(பெரும்பாண். 92). 3. குதித்தல்;* to jump. "மிளிர்ந்துவீ ழருவியும்" *(சீவக.148). 4. ஒளிர்தல்;* to shine, gleam. "மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" *(திருவாச.1: 38). 5. பெருமையடைதல் (வின்.);* to become famous.

மிளிர்²–த்தல் miḷir-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. புரட்டுதல்;* to roll, turn over. "மால்வரை மிளிர்க்கு முருமினும்" *(நற்.2). 2. கீழ் மேலாக்குதல்;* to upset. "பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கன பெயல்" *(கலித்.45).*

மிறுங்கு–தல் miṟuṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. இறுகுதல்;* to harden. *2. மாறுபடுதல் (திவ். பெரியாழ்.2:6, பிர.பக்.358);* to be opposed or inimical.

மிறை¹–த்தல் miṟai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *துன்புறுத்துதல்;* to oppress, harass. "மிறைத்தார் புரமெய்த வில்லிமை" *(பதினோ. திருவே.தி.59).*

மிறை²–த்தல் miṟai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. விறைத்தல்;* to become stiff, as a limb. "குறைத்தலைமிறைத்துக் கூத்து நின்றாடின" *(கம்பரா.வேள்வி.54).* "ஒருகை யிரும் பிணத் தெயிறுமிறையாக" *(புறநா. 284:6). 2. மிடுக்காயிருத்தல்;* to be stuck up with pride, to be stiff in manners. "அமரர்கள் விரும்பித் தொழ மிறைத்து" *(திவ். பெரியார்.3. 4:10). 3. துன்பப்படுதல் (சூடா.);* to suffer; to be afflicted. *4. பாடுபடுதல் (யாழ்.அக.);* to labour hard.

மின்னு–தல் miṉṉu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மின்னல் பளீரெனத் தோன்றுதல்;* flash. "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" *(பழ.).* "மின்னுவிடச் சிறிய வொதுங்கி மென்மெல" *(அகநா.8:14). 2. ஒளி பட்டுப் பளபளத்தல்; விட்டு விட்டு ஒளிர்தல்;* shine; glitter; dazzle. "கதிரவன் ஒளியில் அவள் கூந்தல் மின்னியது". *3. கண்களில் முகத்தில் ஆர்வம், ஆசை முதலியவை தெளிவாகப் புலப்படும் வகையில் வெளிப்படுதல்; மிளிர்தல்;* glitter, brighten up. "அவன் சொன்ன கதையைக் கண்களில் மகிழ்ச்சி மின்னக் கேட்டுக் கொண்டு இருந்தது குழந்தை".

மினவு–தல் miṉavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நலமறிதல் (யாழ். அக.);* to greet; to make kindly enquiries of.

மினுக்கு¹–தல் miṉukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பளபளப் புண்டாக்குதல், மிளிர்தல்;* to polish brighten, beautify. "தண் புனலின் மினுக்கி யுளைவகிர்ந்தன" *(அழகர்கல. 10).* "ஏனத்தைத் தேய்த்துக் கழுவி மினுக்கி வைத் திருந்தாள்". *2. அரிசி தீட்டுதல்;* to remove bran from rice in polishing.

மினுக்கு²–தல் miṉukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மிளிர்தல்;* polish, brighten. *2. பகட்டுதல், பகட்டுக்காட்டுதல்;* be glamorous; flaunt. "குலுக்கி மினுக்கி வருவதைப்பார்"! *3. துணி முதலியவற்றைத் தேய்த்தல்;* press clothes. இந்த வேட்டியைக் கஞ்சி போட்டு மினுக்க வேண்டும்.

Û

மீ¹–தல் mī-, *2 செ.கு.வி.* (v.i.) *மீந்திருத்தல்;* to remain.

மீ²–த்தல் mī-, *4 செ.கு.வி.* (v.i.) *மீத்து வைத்தல்;* to save for future use. "சம்பளத்தில் மீத்தத் தொகையில் தான் மகளுக்குத் திருமணம் செய்து வைத்தான்" *(உ.வ.).*

மீட்டு¹–தல் mīṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மீளச் செய்தல்;* to cause to return. "போனவனை மீட்டுக் கொண்டு வந்தான்". *2. ஒத்தி முதலியவற்றைத் திருப்புதல் (யாழ்.அக.);* to redeem, as mortgaged property. *3. காத்தல் (யாழ்.அக.);* to save. *4. யாழ் முதலியவற்றின் நரம்பை விரலால் தெறித்தல்;* to fillip the strings of lute, etc. "யாழ் மீட்டினான்" *(உ.வ.). 5. வீணை போன்ற இசைக் கருவிகளின் நரம்பை விரலால் அதிரச் செய்தல்;* to play on the lute. "வீணையை மீட்டிக் கொண்டு பாடத் தொடங்கினான்". *6. நாணேற்றுதல்;* to fasten the string of a bow. *7. அள்ளுதல் (யாழ். அக.);* to take a handful of. *8. நினைவு கூர்தல்;* to recall. "நீங்கள் சொன்னதைத் திரும்பவும் மீட்டிப் பார்க்கிறேன்".

க., தெ. மீடு.

மீட்டெடு¹–த்தல் mīṭṭeḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. காத்தல்;* to redeem, rescue, save. *2. மேலாக எடுத்தல்;* to take out superficially.

மீட்டெடு²–த்தல் mīṭṭeḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *இரையெடுத்தல்;* to chew the cud.

மீத்துவை–த்தல் mīttu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மீதப் படுத்துதல் (உ.வ.), மிச்சப்படுத்துதல்;* to save for future use; to be thrifty; to lay by. "மீத்து வைத்த சொத்தெல்லாம் நெருப்புக்கு இரையாயிற்று".

மீதாடு–தல் mīdāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *கடந்து செல்லுதல்;* to transcend, surpass, go beyond. "வெற்றிக்கருளக் கொடியான்றன் மீதாடா வுலகத்து" *(திவ்.நாய்ச்.13:7).*

மீதூர்[1]–தல் mīdūr-, *2 செ.கு.வி.* (v.i.) *1. மேன்மேல் வருதல்;* to increase, to aggravate, to come crowded."துன்பமே மீதூரக் கண்டும்" *(நாலடி, 60). 2. அடர்தல்;* to press hard. "மெய்யைந்து மீதூர" *(பு.வெ.8:33).*

மீதூர்[2]–தல் mīdūr-, *2 செ.குன்றாவி.* (v.t.) *அடர்த்தல்;* to subdue. "ஒளியாரை மீதூர்ந்தொழுகுவதல்லால்" *(பழ.248).*

மீள்[1](ளு)–தல் mīḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. திரும்புதல்;* to return. "போகத்து மன்னியும் மீள்வர்கள்" *(திவ். திருவாய். 4. 1:8). வளையம் மீளும் தன்மையை இழந்துவிட்டது. 2. இல்லையாதல்;* to disappear, vanish. "பேதைமை மீளச் செய்கை மீளும்" *(மணிமே. 30:119).3.காப் பாற்றப்படுதல்;* to be cured, as of a disease; to be rescued, redeemed, liberated. "சாகும் தறுவாயில் இருந்த பெரியவரை மருத்துவர்கள் பாடுபட்டு மீளக் கொண்டு வந்தனர்".

மீள்[2]–தல் (மீட்டல்) mīḷ-, *13 செ.குன்றாவி.* (v.t.) *1. சிறை யினின்று வெளியேற்றுதல்;* to liberate, extricate, release. *2. திரும்பக் கொணர்தல்;* to bring, back, recover. "எயில்..... இரும்புண்ட நீரினு மீட்டற் கரிதென" *(புறநா.21). 3. போக்குதல்;* to remove; to eradicate, to cause to disappear."தொண்டர் வருத்த மீட்பாராய்" *(பெரியபு. திருநா. 304). 4. செலுத்துதல்;* to cause to go. "மீளாவழியின் மீட்பனவே" *(பெரியபு. நமிநந்தி.33). 5. காத்தல்;* to redeem, restore, rescue. *6. விடுபடுதல்;* recover from, get over. "அதிர்ச்சியில் இருந்து அவர் இன்னும் மீளவில்லை. மீளாத் துயரில் ஆழ்ந்தார்".

மீள்[3]–தல் mīḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *அசை யிடுதல் (யாழ். அக.);* to chew the cud.

மீள்[4](ளு)–தல் mīḷ(ḷu)-,*16 செ.குன்றாவி.* (v.t.) *கடத்தல் (பிங்.);* to pass beyond, to kidnap.

மீள்[5]–தல் mīḷ-, *16 செ.கு.வி.* (v.i.) *1. விடுவித்துத் தம் வயம் பெறுதல்;* to recover, regain, taken aback. "கடத்தல் காரனிடமிருந்து குழந்தையை மீட்டனர்". *2. திரும்பப் பெறுதல்;* redeem, retain. "வீட்டை இந்த ஆண்டாவது மீட்க வேண்டும்".

மீறு[1]–தல் mīṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஆணை முதலியன கடத்தல் (உ.வ.);* to break, as a law, to violate, infringe, as a right, trespass. *2. மேற்போதல் (நாமதீப.763);* to go beyond, exceed ones limit. *3. அதிகாரஞ் செய்தல்;* to dominate.

க. மிறு

மீறு[2]–தல் mīṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. எஞ்சியிருத்தல் (வின்.);* to be in excess, to remain over. *2. மிகுதல்;* to be great. "மீறுகாதலளிக்கும்" *(திருப்பு.923). 3. பெரிதாய் வளர்தல்;* to grow lofty, as a tree, to grow stout, as a person. *4. செருக்கடைதல் (இ.வ.);* to be haughty, to be arrogant. *5. சட்டம், நெறி (விதி) போன்றவற்றைப் பின்பற்றாமல் விடுதல்; புறக்கணித்தல்;* transgress, violate, break rules, etc. "தடை ஆணையை மீறி ஊர்வலம் செல்ல முயன்றவர்கள் கைது சைய்யப்பட்டனர்".

க. மிறு.

மீன்பிடி–த்தல் mīṉ-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வலை மற்றும் தூண்டிலின் மூலம் மீன் பிடித்தல்;* catching of fish with the help of net and fish - hook.

K

முக்கு[1]–தல் mukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முயற்சியால் இறுகப் பிடித்து மூச்சினை ஒலிபட வெளிவிடுகை;* to strain, as a woman in travail. *2.பெருமுயற்சி செய்தல் (உ.வ.);* to make great efforts. "எவ்வளவு முக்கியும் மூட்டையைத் தூக்க முடியவில்லை". *3. ஒரு செயலைச் செய்வதற்காக மூச்சை உள்ளிழுத்து நிறுத்தி அழுத்தம் தருதல்;* strain in order to do something, groan. "எடை அதிகம் உள்ள பாறையை முக்கிமுக்கித்தான் தள்ள வேண்டி இருந்தது".

தெ. முக்கு; க. முக்கிரி; ம. முக்குக.

முக்கு[2]–தல் mukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நிரம்ப வாயிற் பெய்து உண்ணுதல்;* to eat in large mouthfuls. "பாசவன் முக்கி" *(புறநா.63).* "உணவை ஒரு முக்கு முக்கினான்".

முக்கு[3]–தல் mukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *மூழ்குவித்தல்;* to press anything under water, to immerse."தீர்த்தம்..... அதிலெனை முக்கியெடுத்து" *(தணிகைப்பு. நந்தி.60).* "குளத்தில் நன்கு முக்கிக் குளித்தான்".

முக்கு[4]–தல் mukku-, *5 செ.கு.வி.* (v.i.) *மூழ்குதல்;* to immerse one's self."முத்துப் படுந்துறையில் முக்குவார் முகத்தைக் கொடுத்துப் பழங் கொள்ளுவார்கள்" *(திவ். திருமாலை.1, வியாக்.பக்.14).* நீரில் மூழ்கி எழுந்தான்.

முக்குளி[1]–த்தல் mukkuḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *முழுகுதல்;* to dive. அவன் முக்குளிக்க நீரில் பாய்ந்தான். "இரைகவர் ஞெண்டு முக்குளித்தூறு மளறு கிடங்கில்" *(திருச்செந். பிள்ளை. செங்கீரை.10).*

தெ. புக்கிளிஞ

முக[1]–த்தல் muga-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. நீரைக் குழித்தல் அல்லது துளைத்தல் போல மொள்ளுதல்;* to draw,

as water; to bale. "கனையிருள் வானங் கடன்முகந்து" *(கலித்.145).2.நீர்ப்பொருளையும் கூலப் பொருளையும் கலத்தால் அல்லது படியால் மொண்டளத்தல்;* to measure, as grain or liquid. *3. நிரம்பப் பெறுதல்;* to obtain in full measure. *படியால் முகந்து நெல்லை சணல் பையில் போட்டார்கள். முந்நீர் முகந்து செல்லும் முகில் (மேகங்கள்).*"முகந்தனர் திருவருள்" *(கம்பரா. எழுச்சி.2). 4. தாங்கி யெடுத்தல்;* to lift, take up. "முகந்துயிர் மூழ்கப் புல்லி" *(கம்பரா.கும்பகர்ண.129). 5. விரும்புதல்;* to desire, like."மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" *(நல்வழி.24).*

க. மொகெ.

முக[2]–த்தல் muga-,*2* செ.குன்றாவி. (v.t.) மூக்கால் நுகருதல் *(உ.வ.);* to smell.

முகங்கடு–த்தல் mugaṅ-kaḍu-, *4* செ.கு.வி. (v.i.) சினம், வெறுப்பு முதலியவற்றின் குறியாக முகத்திற் கடுமை தோற்றுவித்தல்; to set one's face in anger; to frown.

முகங்கவிழ்–தல் mugaṅ-kaviḻ-, *2* செ.கு.வி. (v.i.) நாணம் முதலியவற்றால் தலை குனிதல்; to bend down one's face, as when put to shame or disgrace; coyness as a feminine.

முகங்கறு–த்தல் mugaṅkaṟu-,*4* செ.கு.வி. (v.i.) ஏமாற்றம், மதிப்பு குறைவு ஏற்படும்பொழுது முகம் பொலிவு இழத்தல்; of the face, fall."உங்களுக்கு இசையைப் பற்றி என்ன தெரியும் என்று கடுமையாகக் கேட்டதும் அவர் முகம் கறுத்துப் போயிற்று".

முகங்கொடு–த்தல் mugaṅ-koḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* இன்முகங் காட்டுதல்; to show a kindly face. "ஆசாலேச முடையார்க்கு முகங் கொடாதவனாய்" *(ஈடு,4. 7:9). 2.* செவிசாய்த்தல் *(வின்.);* to grant a kind hearing. *3.* செல்லங் கொடுத்தல் *(வின்.);* to fondle, treat with indulgence. *பிள்ளைக்கு முகங் கொடுக்காதே (வின்.).*

முகங்கோணு–தல் mugaṅ-kōṇu-, *5* செ.கு.வி. (v.i.) முகத்தில் வெறுப்புக்குறி காட்டுதல்; to indicate dissatisfaction by one's countenance.

முகஞ்சிவ–த்தல் mugañciva-,*3* செ.கு.வி. (v.i.) சினம், வெட்கம், நாணத்தால் முகம் சிவந்து போதல்; blush. "திருமண மேடையில் அவள் வெட்கி முகம் சிவந்து அமர்ந்திருந்தாள்".

முகஞ்செத்துப்போ–தல் mugañ-cettu-p-pō-,*8* செ.கு.வி. (v.i.) தவறு செய்ததால் வெட்கமடைந்து முக வாட்ட மடைதல்; face becoming wan- pale through shame *(சா.அக.).*

முகத்திலடி–த்தல் mugattil-aḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* நேரே பழித்தல்; to abuse or reproach another to his face. *2.* நேருக்கு நேர் கடுமுகங் காட்டிக் கண்டித்தல் *(வின்.);* to condemn or forbid by one's countenance. *முகத்தில் அடிப்பதுபோல் சொல்லி விட்டான்.*

முகம்சுளி–த்தல் mugam-šuḷi-, *4* செ. குன்றாவி. (v.t.) அருவருப்பு முதலியவற்றால் முகத்தில் ஏற்படும் சுருக்கம்; screw up one's face as an expression of dislike, disgust, etc. *தன் மீது சேறுபட்டுவிட்டது கண்டு முகம் சுளித்தான்.*

முகம்புதை–த்தல் mugam-p-udai-, *4* செ.கு.வி. (v.i.) முகத்தை மூடிக்கொள்ளுதல்; to cover one's face. "கையா னகை முகம் புதைத்த தோற்றம்" *(சீவக.2461).*

முகம்மழி–த்தல் mugam-maḻi-, *4* செ. குன்றாவி. (v.t.) முகத்திலுள்ள மயிரை (தாடி, மீசை) நீக்குதல்; to shave one's face.

முகமலர்–தல் muga-malar-, *2* செ.கு.வி. (v.i.) முகப் பொலிவு கொள்ளுதல்; to wear a cheerful countenance. "பூம்புன லூரன் புக முகமலர்ந்த..... கோதை" *(திருக்கோ.363, கொளு.).*

முகமறி–தல் mugam-aṟi-, *2* செ.குன்றாவி. (v.t.) அறிமுக மாதல்; to be acquainted with."முகமறியா விருந் தொன்று" *(இலக். வி.555, உதா).*

முகமறு–த்தல் mugam-aṟu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* இரக்க மின்றிப் பேசுதல்; to speak impartially. முகமறுத் துறவாடு. *2.* கணக்காய்ப் பேசுதல்; to speak accurately.

முகமுறி–த்தல் muga-muṟi-,*4* செ.குன்றாவி. (v.t.) *1.* ஈவு இரக்கமின்றி துன்புறுத்துதல் *(வின்.);* to wound one's feelings; to offend. *2.* சினமூட்டுதல் *(யாழ்.அக.);* to provoke another to anger.

முகர்[1]–தல் mugar-,*2* செ.குன்றாவி. (v.t.) மூக்கால் மோத்தல், மணமறிதல்; to smell.

முகர்[2]–த்தல் mugar-, *4* செ.கு.வி. (v.i.) முகத்தல்; take water in a vessel.

முகி[1]–த்தல் mugi-, *4* செ.குன்றாவி. (v.t.) முடித்தல்; to finish, conclude; to achieve, accomplish. "ஆற்றிற் பாலத்தை முகித்தே னல்லேன்" *(குற்றா.தல. கண்டக. 39).*

முகி[2]–தல் mugi-, *2* செ.கு.வி. (v.i.) முடிதல்; to end, terminate, to be finished. "முகியாத பகுதி புருடர்" *(திருப்பு.681).*

தெ. முகியு; க. முகி.

முகிழ்–த்தல் mugiḻ-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* ஈனுதல்; to bear, bring forth beget."அமரராதியரை முகிழ்த்து" **(விநாயகபு. 81:154). 2.* தோற்றுவித்தல்; to display, to cause to appear. "அற்புத முகிழ்த்தார்" *(காஞ்சிப்பு. பன்னிரு. 163).*

க. முகுள்

முகுளி–த்தல் muguḷi-,*4* செ.கு.வி. (v.i.) குவிதல்; to close, as a flower.

முகை¹–தல் mugai-, *2 செ.கு.வி.* (v.i.) *அரும்புதல்;* to bud. "பொய்கை முகைந்த தாமரை" *(ஐங்குறு.6).*

முகை²–த்தல் mugai-, *4 செ.கு.வி.* (v.i.) *முகை-தல் (வின்.)* பார்க்க; see mugai-¹.

முங்கு–தல் muṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நீரில் மூழ்குதல்;* to plunge into water."கிள்ளை.... முங்கி யெழும்" *(இரகு. தேனு.14). 2. அமிழ்தல்;* to sink. "முன்னிய வங்க முங்கிக் கேடுற" *(மணிமே.29:16). 3. நிரம்பியிருத்தல்;* to be full. "கொலைமுங்குங் களவிடுமால்" *(இரகு. நகரப்.25).*

தெ. முங்கு; ம. முங்ஙு

முச்சு–தல் muccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மூடுதல்;* to cover. "தாட்செருப்புலகெலாந் தோன்முச்சுந் தரம்போல்" *(ஞானவா. மாவலி.8). 2. செய்தல்;* to make. "முச்சியே மரக்கோவை முயற்சியால்" *(சிவதரு.பாவ.81).*

தெ. மீயு; க., து. முச்சு.

முசி¹–தல் muši-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அறுதல்;* to be torn. "மகுடந் தேய்ப்ப முசிந்து... தழும்பேறி" *(பதினொ. காரை.அற்பு.76.). 2. கசங்குதல்;* to be crumpled, as a garment. "முசிந்த புடைவையை யுடைய" *(கலித். 96,உரை). 3. களைத்தல் (இ.வ.);* to be tired. *4. ஊக்கங் குன்றுதல்;* to feel discouraged."முசியாத அத்விதீய காரணமா யென்னுதல்" *(ஈடு,2.8:5).*

முசி²–த்தல் muši-, *4 செ.கு.வி.* (v.i.) *1. களைத்தல் (வின்.);* to faint, become tired. *2. துன்பம் கொள்ளுதல் (திவ்.பெரியதி.1. 9:4, அரும்.);* to be distressed. *3. மெலிதல்;* to grow thin. "என்னை வரவிட்ட பாவி முசித்துச் சதை கழியாமல்" *(தனிப்பா.1, 236:3). 4. அழிதல்;* to perish."முசித்திடாமல் வாழ்ந்திருத்தி" *(பிரபோத.3: 66).*

முசி³–த்தல் muši-, *4 செ.குன்றாவி.* (v.t.) திருகுதல்; to wrench, twist. "அன்னவன் முடித்தலை முசித்து" *(கம்பரா.பொழிலிறு.7).*

முசிப்பாறு–தல் mušippāṟu-, *5 செ.கு.வி.* (v.i.) இளைப் பாறுதல் *(வின்.);* to rest, receive, take comfort.

முசும்பு–தல் mušumbu-, *5 செ.கு.வி.* (v.i.) முணமுணத்தல் *(வின்.);* to mumble, mutter murmur.

முசுமுசு–த்தல் mušu-mušu-, *4 செ. குன்றாவி.* (v.t.) உறிஞ்சுதல்; to snuff up, as a hog.

முஞ்சு–தல் muñju-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சாதல்;* to die. "அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்" *(திருவாச.4:19). 2. முடிதல் (உ.வ.);* to end.

முட்டி–த்தல் muṭṭaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) கோலியாட்டத்தில் தோற்றவனுடைய முட்டியில் வென்றவன் கோலியா லடித்தல் *(நெல்லை.);* to strike the knuckles of a defeated player with the balls, at a game of marbles.

முட்டிக்கொள்(ளு)–தல் muṭṭ-k-koḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. இருட்டு கரணியமாகப் பார்வை குறைவால் எதிர் இருப்பவற்றில் மோதிக்கொள்ளுதல்;* to hit the opposite things when moving in dark. இருட்டில் எதிலும் முட்டிக்கொள்ளாமல் நடந்துவா *(உ.வ.). 2. சினம், கவலை முதலியவற்றால் தலையை மோதிக் கொள்ளுதல் (வின்.);* to hit or dash one's head, as in despair or in anger. *3. பெருமுயற்சியெடுத்தல் (உ.வ.);* to put forth great efforts to try one's utmost.

முட்டிமோது–தல் muṭṭi-mōdu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கூட்டத் தில் நெரிந்து முன்னேறி முயல்தல்;* surge up. திரை அரங்கத்தில் படத்தைப் பார்ப்பதற்காக மக்கள் முட்டி மோதுகின்றனர். சிற்றம்பலத்தானைக் காண மக்கள் முட்டி மோதுகின்றனர்.

மறுவ. முட்டிமுரண்டு-தல்

முட்டு¹–தல் muṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தலையை அல்லது தலையால் ஒன்றின் மீது மோதுதல்;* knock one's head against something, bump one's head against, butt. மஞ்சுவிரட்டு விழாவினை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தவர்களில் சிலர் மாடு முட்டி இறந்தனர். கன்று ஆ(பசு)விடம் முட்டி முட்டிப் பால் குடித்தது. சுவரில் தலையை முட்டிக் கொண்டு கதறி அழுதான்."துள்ளித் தூண் முட்டுமாங்கீழ்" *(நாலடி, 64). 2. தடுத்தல்;* to oppose, hinder. *3. எதிர்த்தல்;* to assault, attack. *4. எதிர்ப்படுதல்;* to meet. "வரையா நாளிடை வந்தோன் முட்டினும்" *(தொல். பொருள்.112) (சூடா.). 5. பிடித்தல்;* to grip, grasp. "குழலாள்... கையினைக் கையாலவன் முட்டிடலும்" *(உத்தரரா. திக்குவி.16). 6. தேடுதல்;* to seek. "நாடிநாங் கொணருது நளினத் தாளைவான் மூடிய வுலகினை முற்றுமுட்டி யென்று" *(கம்பரா.சம்பாதி.7).*

க. முட்டு; ம. முட்டுக.

முட்டு²–தல் muṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. குன்றுதல்;* to be deficient. "முட்டாவின்பத்து முடிவுல கெய்தினர்" *(சிலப். 15:197). 2. முடிதல்;* to end. "முட்டடியின்றிக் குறைவு சீர்த்தாகியும்" *(தொல். பொருள். 435). 3. தடைப்படுதல்;* to be hindered, prevented. "வெண் ணெல்லினரிசிமுட்டாது ... பெறுகுவீர்" *(மலைபடு. 564).* "இத்தன்மமுட்டில்" *(தெ.கல்.தொ.3, 95). 4. பொருதல்;* to fight, attack."குலப் பகைஞன் முட்டினான்" *(கம்பரா. நட்புக்.50). 5. வழுவுதல்;* to fail, stray away. "புண்ணிய முட்டாள்" *(மணிமே.16:49). 6. அழுகை, கண்ணீர், சினம் முதலியவை வெளிப் படுகிற வகையில் நிறைதல், நிரம்புதல்;* surge up of tears, anger, etc. brim with tears, etc, to be full. "தோயமுட்டிய தோடவிர் மலர்த்தடம்" *(காஞ்சிப்பு.கழுவாய்.79).* பேசப்பேச அவன் கண்களில் நீர் முட்டியது. அவனுக்குச் சினம் முட்டிக் கொண்டு வந்தது.

7. நெருங்குதல்; to be close.

முட்டுப்படு–தல் muṭṭu-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. துன்புறுதல்;* to be pressed, perplexed, to be in difficulty or extremity, as one beset by creditors. *2. தடைப்படுதல்;* to be hindered. *'அறத் தொழில்கள் முட்டுப்படாத..... நன்னெஞ்சினோர்' (பட்டினப். 204, உரை).*

முடக்கு¹–தல் muḍakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மடக்குதல்;* to bend, as knee, arm, etc. *"முடக்கிச் சேவடி" (திவ். பெருமாள்.7:2). 2. சுற்றிக் கொள்ளுதல்;* to wind round, wrap, as one's person. *"நாகங்கச்சா முடக் கினார்" (தேவா.955, 1). 3. தடுத்தல் (அக.நி.);* to prevent, hinder. *4. முடங்கச் செய்தல்;* to cause to bend or contract, to disable, as one's limbs. *'வளிநோய் அவனை முடக்கி விட்டது' (வின்.). 5. நிறுத்துதல்;* to cease activity, to stop, discontinue. *பணமுடையால் சீட்டை முடக்கி விட்டான். 6. வேய்தல்;* to roof in, as a hut; to cover. *குடிசை முடக்கி வைத்தேன் (வின்.).*

முடக்கு²–தல் muḍakku-, *5 செ.கு.வி.* (v.i.) *படுத்துக் கொள்ளுதல் (உவ.);* to lie down.

முடக்கு³–தல் muḍakku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. செயல்பாடு தொடர முடியாதபடி தடைப் படுத்துதல்;* stop, so as not to proceed further, cripple. *சிக்கன நடவடிக்கையைக் கரணியம் காட்டி வேலை வாய்ப்புத் திட்டங்களை முடக்கிவிடுதல் கூடாது. போக்குவரத்து நெரிசல் கரணியமாக வழக்கமான பணி சிறிது நேரம் முடக்கப்பட்டது. 2. பணத்தைப் பயன்பாடு குறைவான ஒன்றில் முதலீடு செய்தல்;* lock up capital, funds, etc, make a dead investment. *செயலாக்கத் திறன் இல்லாத திட்டத்தில் பல கோடி உருபாவை இந்த நிறுவனம் முடக்கிவிட்டது. 3. நுழைவு ஆவணம் முதலிய வற்றைப் பயன்படுத்தாதவாறு அல்லது வங்கியில் உள்ள பணத்தைப் பெறமுடியாதவாறு தடுத்தல்;* confiscate, freeze an account. *இரு வங்கிகளில் அவர் கணக்கில் உள்ள பணத்தை முடக்கி வைக்க அரசு ஆணை பிறப்பித்தது. 4. ஒருவரின் நடவடிக் கைகளைக் குறிப்பிட்ட இடத்துக்குள் இருக்கும் வகையில் ஒடுக்குதல்;* confine one's activities. *இவ்வளவு படித்தவளை வீட்டிற்குள் முடக்கி வைப்பது மடமை.*

முடங்கு–தல் muḍaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சுருங்குதல்;* to contract. *"இடங்குறை வாயிலின் முடங்கி யிருந்துழி" (பதினோ.திருவிடைமும்.22). 2. கைகால் இயங்காமற் போதல், ஊனமாதல்;* to become lame or maimed crippled at paralysed. *அவருக்கு அந்த நேர்ச்சி (விபத்து)க்குப் பின் கால் முடங்கி விட்டது. "கைகால் முடங்கு பொறியிலி" (பிரபுலிங். துதி.1). 3. வளைதல்;* to bend. *"அடங்கினன் முடங்கியலம் வந்து" (உத்திரரா. வரையெடுத்த.72). 4. கெடுதல்;* to be spoiled. *"சிறுமை பொருந்திப் பெருமை முடங்கி" (திருப்பு.372). 5. தங்குதல்;* to abide, remain, stay. *"அறுகாற் பறவை முடங்கிய செஞ்சடை முக்கண னார்க்கு" (பதினொ. பொன்வண்.64). 6. படுத்துக் கொள்ளுதல்;* to lie down. *"பசியட முடங்கிய பைங்கட் செந்நாய்" (நற்.103). 7. செயல் தொடராதபடி தடைப்படுதல்;* to be hindred, be crippled. *வேலை நிறுத்தத்தால் மருத்துவமனைப் பணிகளும் முடங்கியுள்ளன. செயல் முடங்கி விட்டது. 8. பயன்பாடு குறைவான ஒன்றில் முதலீடு செய்யப்படுதல், தேங்குதல்;* get locked up. *என் பணம் முழுவதும் நூல் வெளியிட்டதினால் முடங்கி விட்டது. 9. ஒருவரின் நடவடிக்கைகள் குறிப்பிட்ட இடத்துக்குள் இருக்கும் வகையில் ஒடுங்குதல்;* be confined to something. *எனது அம்மா நோய்வாய்ப் பட்டு முடங்கி விட்டார். அவள் பட்டப் படிப்புப் படித்தும் மடப்பள்ளியில் முடங்கி விட்டாள்.*

தெ., க. முடுகு.

முடவு–தல் muḍavu-, *5 செ.கு.வி.* (v.i.) *நொண்டுதல் (யாழ்ப்.);* limp.

முடி¹–தல் muḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சேர்த்து முடிச்சிடுதல்,* சுற்றிக்கட்டுதல்; gather up something in to a knot; tie up, something keeping it in a cloth, etc. *கூந்தலை அழகாக முடித்திருந்தாள். தலையில் துணியை முடிந்து கொண்டாள். கீரை விற்பவள் காசை முந்தாணையில் முடிந்திருந்தாள். 2. தலையில் பூ முதலியவற்றைச் செருகுதல், அணிதல்;* put flowers, etc, on some one's hair. *3. செயல், நிகழ்ச்சி முற்றுப் பெறுதல், முடிவுக்கு வருதல்;* of an act, an event come to an end, come to a close. *"சொன்முறை முடியாது" (தொல்.சொல்.233). விழா இனிதே முடிந்தது. முதல் ஆட்டம் முடிய இன்னும் சிறிது நேரம் தான் இருக்கிறது. 4. ஒருவருக்குக் குறிப்பிடப்படும் வயது முழுமை பெறுதல், நிறைவு அடைதல்;* turn specified age complete. *அவனுக்கு இருபத்தியெட்டு வயது முடிந்து இருபத்தியொன்பது நடக்கிறது. குழந்தைக்கு மூன்று வயது முடிந்து விட்டது. 5. குறிப்பிட்டதில், குறிப்பிடப்படுவதோடு இறுதி நிலை அமைதல்;* end in or with something. *தேர்வில் இரண்டாம் எண்ணில் முடியும் அனைத்துத் தேர்வாளர்களும் வெற்றி பெற்றதாய்க் கூறப்படுகிறது. வாய்ப் பேச்சு கை கலப்பில் முடிந்தது. 6. மூன்றாம் வேற்றுமை அல்லது நான்காம் வேற்றுமை உருபோடு கூடியதான தன்மையில் அமைதல், இயலுதல்;* with instrumental or dative case be able to, have the ability to, can. *"என்னால் முடியாது" என்று சொல்லாதே. "முடியும்" என்று சொல்! யாராலும் மறுக்க முடியாத உண்மை! அவருக்கு முடிந்ததை அவர் செய்து விட்டார். 7. எதிர்மறை வடிவங்களில் உடம்புக்கு ஆற்றல் இருத்தல்;* have energy or health; feel fit. *உடம்புக்கு முடியவில்லை என்று அம்மா படுத்துவிட்டாள். 8. நிறைவேறுதல்;* to be effected or accomplished. *"முட்டின்றி மூன்று முடியுமேல்" (நாலடி.250). 9. அழிதல்;* to be destroyed, to perish. *மூவேந்தர் குலமும்*

16ஆம் நூற்றாண்டோடு முடிந்துவிட்டது. 10. வாழ் நாள் முடிந்து சாதல்; to die."கயலேர் கண்ணி கணவனொடு முடிய" (பு.வெ.10,சிறப்பிற்.9,கொளூ.). 11. தோன்றுதல்; to appear. "முடிந்தது முடிவது முகிழ்ப் பதுமவை மூன்றும்" (பரிபா.13:46). 12. இயலுதல்; to be possible, capable. என்னால் அதனைச் செய்ய முடியும். 13. சண்டை மூட்டுதல்; to incite persons to a quarrel. அவனுக்கும் இவனுக்கும் முடிந்து விட்டான். 14. தொடர்புபடுத்துதல்; to make a marriage alliance. அவளுக்கும் இவனுக்கும் முடிந்து விட்டார்கள்.

ம. முடிக; க. முடி.

முடி[2]–த்தல் muḍi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றுவித்தல்; to end, terminate."நின்னன்னை சாபமு முடித்தென் னெஞ்சத்திடர் முடித்தான்" (கம்பரா. மிதிலை.88). நூல் முழுவதையும் மும்மாதத்திற்குள் எழுதி முடித்துவிட்டார். 2. நிறைவேற்றுதல்; to effect, accomplish. "அருந்தொழில் முடியரோ திருந்துவேற் கொற்றன்"(புறநா.171). 3. அழித்தல்; to destroy. "சேனையை... முடிக்குவன்" (கம்பரா.மிதிலை.98). 4. கட்டுதல்; to fasten tie. "பாஞ்சாலி கூந்தன் முடிக்க" திவ்.பெரியதி.6. 7:8). 5. தலையில் பூவைச் சூடிக் கொள்ளுதல்; to decorate with, put on, as flowers. "கூழையுளே திலாள் கைபுனை கண்ணி முடித்தான்" (கலித். 107:15). பூ முடித்துப் பொட்டுவைத்து அழகு செய்து கொள்ளுதல். 6. செயலை, நிகழ்ச்சியை நிறைவுக்குக் கொண்டு வருதல், நிறைவு பெறும்படி செய்தல்; complete or finish a work, one's studies, etc., end one's speech. சமையலை முடித்து விட்டு வந்து பேசுகிறேன். முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. என்னுடையபையன் இப்போதுதான் பள்ளிப் படிப்பை முடித்திருக்கிறார். அவர் பேச்சை முடிப்பது போல் தெரியவில்லை. 7. குறிப்பிட்டவாறு இறுதி நிலை அமைத்தல்; conclude, end. "கனவு நனவாகட்டும்" என்ற தொடரோடு கதையை முடித்திருக்கிறார். 8. ஒருவரை இல்லாதபடி ஆக்குதல், கொல்லுதல்; bump off some one, put an end to some one. கெடுதி (அநீதி) செய்பவரை அவர்கள் முடித்து விடுவார்கள் போலிருக்கிறது.

முடிச்சவிழ்–த்தல் muḍiccaviḻ-, 4 செ.குன்றாவி. (v.t.) சிக்கலான ஒன்றைத் தீர்ப்பதற்கு முயலுதல்; to find a solution for a problem.

முடிசாய்–த்தல் muḍi-šāy-, 1 செ.கு.வி. (v.i.) 1. படுத்துக் கொள்ளுதல்; to lie down; to rest, as lowering the head. "முகுந்தனுடன் பாண்டவரு முடி சாய்த்து" (பாரத. முதற்.77). 2. தலை வணங்குதல்; to pay homage, bow one's head in reverence. "முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்" (நள. கலிநீங்கு.63). 3. ஒரு பக்கமாகத் தலையைச் சாய்த்தல்; to incline the head sideways.

முடிசூடு–தல் muḍi-šūḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. அரசன் மணிமுடி சூடுதல்; to be crowned as king. 2. மகுடம் அணிதல்; to wear a crown. "முடிசூடு முடியொன்றே" (கலிங். 525). அரசனுக்குப் பின் அவன் மகன் முடி சூடுதலே வழக்கம்.

முடித்துக்கொடு–த்தல் muḍittu-k-koḍu-, 4 செ.குன்றாவி. (v.t.) நிறைவேற்றித் தருதல்; to accomplish, complete, as a piece of business.

முடிபோடு[1]–தல் muḍi-pōḍu-, 18 செ.குன்றாவி. (v.t.) ஒன்றோ டொன்று மாட்டிப் பிணைத்தல்; to tie into a knot.

முடிபோடு[2]–தல் muḍi-pōḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. கணவனும் மனைவியுமாதற்கு நெறி (விதி)யமைதல்; to be pre-destined or ordained to be married to each other. அவனுக்கும் இவளுக்கும் முடிபோட்டிருக்கிறது. 2. சண்டை மூட்டுதல்; to incite persons to a quarrel. அவனுக்கும் இவனுக்கும் முடிபோடுவதே அவர் வேலை.

முடியிறக்கு–தல் muḍi-y-iṟakku-, 5 செ.கு.வி. (v.i.) நேர்ச்சிக் கடனாகத் தெய்வங்களுக்கு வேண்டிக்கொண்டு மயிர் மழித்தல் (இ.வ.); to shave the hair of the head in fulfilment of a vow.

முடிவறி–தல் muḍi-vaṟi-, 2 செ.குன்றாவி. (v.t.) நன்றாக உணர்தல் (யாழ்.அக.); to be advanced in knowledge, to master completely.

முடிவுகட்டு–தல் muḍivu-kaṭṭu-, 5 செ.கு.வி. (v.i.) 1. ஒன்றைக் குறித்து முடிவு எடுத்தல், தீர்மானித்தல்; take a decision, decide on something, finalize. நிருவாகத்தைச் சந்தித்துப் பேசுவதற்கு முன் என்னென்ன கோரிக்கைகளை முன் வைக்கப் போகிறோம் என்று முடிவு கட்டிக் கொள்வோம். 2. தொல்லை விளைவிக்கும் ஒன்று தொடர முடியாத இறுதி நிலையை அடையச் செய்தல்; put an end to something. 'அவனுடைய கொட்டத்திற்கு முடிவு கட்டுகிறேனா இல்லையா பார்' என்று சூளுரைத்தான். கொடுஞ் செயல்களுக்கு இனியும் முடிவுகட்டாவிட்டால் நாடு சிதறிவிடும். 3. எண்ணித்துணிதல்; to come to a conclusion.

முடிவெடு–த்தல் mudivu-edu-, 4 செ.குன்றாவி. (v.t.) ஒன்றைக் குறித்து இறுதியாக முடிவு செய்தல்; decide, put an end. நடித்தால் கதாநாயகனாகத்தான் நடிப்பேன் என்று முடிவெடுத்தான்.

முடுக்கிவிடு–தல் muḍukki-viḍu-, 20 செ.கு.வி. (v.i.) தீவிரமாக அல்லது வேகமாகச் செயல்படும்படி இயக்குதல்; to gear up, step up, accelerate. தேர்தல் நெருங்கியதும் அனைத்துக் கட்சிகளும் தங்களின் கொள்கைகளைப் பரப்பும் பணிகளை முடுக்கிவிட்டன. போட்டி வேட்பாளருக்கு எதிராக அவதூறான மேடைப்

பேச்சைப் பரப்ப ஆளும் கட்சி முடுக்கிவிடப் பட்டிருக்கிறது.

முடுக்கு[1]–தல் muḍukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. பாவை, பொறிகள் முதலியவற்றை இயங்குவதற்காகத் திருகுதல்;* to set in motion, wind. *சீறுந்தில் திறவுகோலை நுழைத்து முடுக்கினான். 2. மாடு முதலியவற்றை விரட்டி ஓட்டுதல்;* to drive away. *வேலிதாண்டி மேயும் மாட்டை முடுக்காமல் வேடிக்கையா பார்த்துக் கொண்டு இருக்கிறாய்? 3. திருகாணி முதலியவற்றை உட்செலுத்துதல்;* to screw something. *மரை தேய்ந் திருப்பதனால் ஆணியைச் சரியாக முடுக்க முடிய வில்லை.* "கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து" *(நெடுநல். 85). 4. விரைவுபடுத்துதல் (வின்.);* to urge, bring pressure on. *5. விரைவாகச் செலுத்துதல்;* to drive, cause to run, as a horse; to set in motion, as a potter's wheel. "கடுகி முடுக்கிலும்" *(விநாயகபு.55 : 7). 6. விரைந்து கடித்தல்;* to bite off hurriedly. "பிணவு நாய் முடுக்கிய தடியொடு" *(மலைபடு.177). 7. உழுதல்;* to plough. "மூரிதவிர முடுக்கு முதுசாடி" *(பரிபா.20:54). 8. தூண்டி விடுதல் (உவ.);* to induce, urge on. *ஏன் அவனுடன் சண்டை செய்யும்படி முடுக்குகிறாய்?*

க. முடுக்கு.

முடுக்கு[2]–தல் muḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. உணர்ச்சி மிகுதல்;* to feel urgently, as the call of nature. *ஒன்றுக்கு முடுக்குகிறது. 2. மிகுதியாதல்;* to increase, as in price. *விலைமுடுக்கிப் போகிறது. 3. விரைதல்;* to hasten. "முடுக்கிவந்து" *(உத்திரரா. இலங்கை யழி. 20).*

முடுகு[1]–தல் muḍugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. விரைந்து செல்லுதல்;* to hasten, to be in haste, to move quickly. "முடுகழலின் முந்துறுதல்" *(பு.வெ.3 : 6). 2. நெருங்கி வருதல்;* to become urgent; to come to a head; to throng and surge. "வெம்மைக் கூற்ற முடுகாதே" *(தேவா.116, 7). 3. வலிமையாதல் (வின்.);* to be strong.

தெ., க. மிடுகு; ம. முடுகு.

முடுகு[2]–தல் muḍugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *எதிர்தல் (பிங்.);* to meet; to advance against.

முடை[1]–தல் muḍai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *பாய், கூடை முதலியவை பின்னுதல்;* to plait a basket; weave a mat. *கூடை முடைவோர்க்குக் குறைந்த கூலியே கிடைக் கிறது. எங்கள் பள்ளியில் பாய் முடையக் கற்றுக் கொடுக்கிறார்கள். 'உலர்ந்த பழுத்தலை முடைந்து வேய்ந்த தனிமனை' (பெரும்பாண். 353, உரை).*

முடை[2]–தல் muḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *மெலிதல் (வின்.);* to become lean.

முண்டி–த்தல் muṇḍi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *மொட்டை யாய் மழித்தல்;* to shave the head completely. "தலை முண்டிக்கு மொட்டரை" *(தேவா.423, 4).*

முண்டியடி–த்தல் muṇḍiyaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *கூட்டத்தில் முன்னேற ஒருவரை ஒருவர் நெருக்கித் தள்ளுதல்;* jostle against, push around. *பேருந்தில் முண்டியடித்து ஏறினார். நடிகரைப் பார்க்கக் கூட்டம் முண்டி யடித்துக் கொண்டு வந்தது.*

முண்டு–தல் muṇḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முரண்டு பண்ணுதல்;* to be unruly, refractory; to act saucily. *2. முனைந்து நிற்றல்;* to attack vehemently. *ஒரு முண்டு முண்டிப் பார்த்தான். 3. சண்டை செய்யும் முனைப் போடு இருத்தல்;* be aggressive.

முணக்கு–தல் muṇakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *உள் வளைத்தல்;* to contract, withdraw, bend. "வள்ளுகிர் முணக்கவும்" *(நற்.114).*

முணங்கு–தல் muṇaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. உள் வளைதல், உள்ளடங்குதல்;* to be contracted, withdrawn, bent. *2. அடங்குதல் (வின்.);* to be subject to. *3. தெளிவற்ற வகையில் மெல்லிய குரலில் பேசுதல், குரலையடக்கிப் பேசுதல் (வின்.);* to speak in a suppressed tone, mutter in a low tone, murmur. *காய்ச்சலால் இரவு முழுவதும் முணங்கிக் கொண்டே இருந்தான்.*

முணுமுணு–த்தல் muṇumuṇu-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. வெறுப்பு, நிறைவின்மை (அதிருப்தி) முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில் தாழ்ந்த குரலில் பேசுதல்;* grumble, mutter, talk in whispers. *எதற்கு முணு முணுக்கிறாய்? கடைக்குப்போக முடியாது என்று சொல்லிவிடு. நான் வரும்போது அவன் காதில் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தாயே. 2. வாய்க் குள்ளாகப் பேசுதல்;* recite mantras, prayers softly. *ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தவாறே கூடத்தில் நடந்து கொண்டு இருந்தார்.*

முணவு–தல் muṇavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வெறுத்தல்;* to dislike, feel aversion to. *'களிறு நிலை முணவுதற்குக் காரணம் இருஞ்சேறாடுதல்' (பதிற்றுப்.64 : 7, உரை). 2. சினத்தல்;* to be angry.

முணை–தல் muṇai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *வெறுத்தல்;* to dislike, feel aversion to. "களிறுநிலை முணைஇய" *(பதிற்றுப். 64 : 7).*

முத்து–தல் muttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சேர்தல்;* to unite, join. "திருமுத்தாரம்" *(சீவக.504). 2. முத்தமிடுதல்;* to kiss. "புதல்வர் பூங்கண் முத்தி" *(புறநா.41).*

முத்துக்குளி–த்தல் muttu-k-kuḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *முத்துச் சிப்பி எடுப்பதற்காகக் கடலுள் மூழ்குதல்;* to dive for pearl-oysters. *முத்துக் குளிப்பவர்களுக்கு நீண்ட நேரம் மூச்சடக்கத் தெரிந்திருக்க வேண்டும்.*

முதலு¹–தல் mudalu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முதலாதல்;* to commence, begin, come first. "*முதலாவேன தம்பெயர் முதலும்*" *(தொல்.எழுத்து.66). 2. தொடக்கமுடைய தாதல்;* to have a beginning."*மூவா முதலா வுலகம்*" *(சீவக.1).*

முதலு²–தல் mudalu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *தலைமை உடைத்தாதல்;* to have as the origin; to begin with. "*அகரமுதல வெழுத்தெல்லாம்*" *(குறள், 1).*

முதிர்¹–தல் mudir-, *2 செ.கு.வி.* (v.i.) *1. மரம், காய் முதலியவை இளமைத் தன்மை நீங்கி முற்றுதல்;* to grow old, to have the qualities of age. *முதிர்ந்த மரங்களை வெட்டுவார்.* "*முதிராக் கிளவியள்*" *(மணிமே. 22:181). 2. பதமாதல், கருநிரம்புதல்;* to become mature, to grow ripe. "*கொண்மூ.... சூன் முதிர்பு*" *(புறநா.161). 3. நிறைதல்;* to excel, surpass, to become satiated, to be saturalted. "*உறைமுதிரா நீரால்*" *(திணைமாலை.103). 4. முற்படுதல்;* to procede. "*முதிர்வினை*" *(சிலப். பதி). 5. ஒழிதல்;* to end, cease. "*கதிரொழிகாறும் கடவுட்டன்மை முதிராது*" *(சிலப்.30:66). 6. உலர்தல்;* to become dry.

தெ. முதுரு; க. முது; **L.** maturar; **F.** maturer; ***M.E.*** maturus (ripe); **E.** mature *(வே.க.).*

முதிர்²–தல் mudir-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. சூழ்தல்;* encompass, surround. "*தீவினை முதிர்வலை*" *(சிலப். 16:156). 2. அகவை நிரம்புதல்;* old; advance-in years. *அவர் வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவர் என்றே நினைக்கிறேன்.*

முந்து–தல் mundu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. காலம், இடம் முதலியவற்றால் முற்படுதல்;* to be prior in time, place, etc."*முதுவருண் முந்துகிளவாச் செறிவு*" *(குறள், 715),* "*முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி*" *(நற்.22:2). 2. எதிர்ப்படுதல்;* to come in front; to advance; to meet. "*முந்தினனருமறைக் கிழவன்*" *(கம்பரா. தாடகை.28). 3. விரைதல்;* to go fast. "*முந்தா நின்ற வேட்கை*" *(ஞானவா.சுக்கி.7). 4. மேலெழுதல்;* to rise up. "*உந்தி முதலா முந்துவளி தோன்றி*" *(தொல்.எழுத்து.83). 5. முதன்மை யாதல்;* to take precedence; to take the lead; to be first. "*அவையத்து முந்தி யிருப்பச் செயல்*" *(குறள், 67). 6. சிறத்தல்;* to surpass, excel. *7. பழமையாதல்;* to be old; to be long-standing. *8. வண்டி முதலியவற்றைக் கடந்து செல்லுதல், கடந்து முன் செல்லுதல்;* go past, over take. *முன்னால் ஓடிக்கொண்டு இருந்தவரையும் கடைசி நிமையத்தில் முந்திவிட்டார். 9. ஒன்றைப் பெறவோ செய்யவோ பிறரைக் காட்டிலும் விரைதல்;* over take some one, rush to get, to do something. *எனக்குத்தான் அந்த வேலை கிடைத்து இருக்க வேண்டும்; ஆனால் அவர் முந்திக் கொண்டார்.*

க. முந்து

முந்துறு¹–தல் munduṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. முன்னிலை யாதல்;* to be in front, as of a person. "*மொய்வளைத் தோளி முந்துற மொழிந்தன்று*" *(பு.வெ.12, பெண்பாற்.1, கொளு.). 2. முற்படுதல்;* to be first; to be in advance. *இல்லைகனா முந்துறாத வினை (பழமொ.12).*"*யாமுந் துறுதல் செல்லேம் ஆயிடை*" *(அகநா.261:11).*

முந்துறு²–த்தல் munduṟu-,*18 செ. குன்றாவி.* (v.t.) *1. தோற்றுவித்தல்;* to cause to appear. "*நோய் முந்துறுத்து நொதுமன் மொழியல்*" *(அகநா.39). 2. காட்டிக் கொள்ளுதல்;* to show, assume. "*பற்றா மாக்களிற் பரிவு முந்துறுத்து*" *(புறநா.29). 3. ஒருவன் முன்னிலையில் அறிவித்தல்;* to disclose in one's presence. "*வேட்கை முந்துறுத்தல்*" *(பு.வெ. 12, பெண்பாற்.1).*

முந்துறு³–த்தல் munduṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *முதலாதல்;* to begin with. "*அச்சமு நாணு மடனு முந்துறுத்த*" *(தொல். பொருள். 99).*

முயங்கு–தல் muyaṅgu-,*5 செ.குன்றாவி.* (v.t.) *1. பொருந் துதல்;* to join, to cling to. "*முலையு மார்பு முயங்கணி மயங்க*"*(பரிபா.6:20). 2. தழுவுதல்;* to embrace.'*முயங்கிய கைகளை யூக்க*" *(குறள், 1238). 3. புணர்தல்;* to copulate with. *4. செய்தல்;* to do, perform. "*மணவினை முயங்க லில்லென்று*" *(சூளா.தூது.100).*

முயல்(லு)–தல் muyal-,*14 செ.குன்றாவி.* (v.t.) *1. விடாது பற்றி ஊக்கத்தோடு செய்தல்;* to practise, persevere, make continued exertion."*செய்தவ மீண்டு முயலப்படும்*" *(குறள், 265). 2. வருந்துதல்;* to take pains. "*தவங்கள் முயன்று செய்தாலும்*" *(தஞ்சைவா.19). 3. தொடங்குதல் (வின்.);* to begin, undertake.

முயற்சி–த்தல் muyaṟci-, *4 செ.குன்றாவி.* (v.t.) *முயலுதல், முயற்சி செய்தல்;* try hard. *எவ்வளவோ முயற்சித்தும் அவனுக்கு வேலை வாங்கிக் கொடுக்க முடியவில்லை.*

முரச்சு–தல் muraccu-,*5 செ.குன்றாவி.* (v.t.) *முற்றுவித்தல்;* to accomplish, make ready. "*முரசுசெயமுரச்சி*" *(பதிற்றுப்.44:16).*

முரசறை–தல் murašaṟai-,*2 செ.கு.வி.* (v.i.) *1. செய்தியை யாவரும் அறிய பறையடித்துச் சொல்லுதல்;* to announce by beat of drum. *2. வெளியிடுதல்;* to proclaim. "*அருமறைகள் முரசறையவே*" *(தாயு. திருவருள்.3).*

முரஞ்சு–தல் murañju-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முதிர்தல்;* to mature, to be old, ancient."*முரஞ்சன் முதிர்வே*" *(தொல்.சொல்.333). 2. வலி பெறுதல்;* to gain strength. "*நோயுடல் முன்செயல் முரஞ்சிய தெவண்*" *(ஞானா.59). 3. நிரம்புதல்;* to be full or abundant. "*பூண்களெல்லா முரஞ்சொளி கான்று மின்ன*" *(காஞ்சிப்பு. தீர்த்த.89).*

முரண்–தல் (முரண்டல்)muraṇ-,*12 செ.கு.வி.* (v.i.) *பகைத்தல்;* to be at variance; to be opposed. "*முரண்டு மாய்க்கவே*" *(பாரத. குரு.49).*

முரண்டு–தல் muraṇḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. விடாப் பிடியாதல்;* to be obstinate, persistent. *2. மாறுபடுதல்;* to be opposed, cross-grained.

முரண்படு–தல் muraṇ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) எதிராக இருத்தல், மாறுபடுதல்; to contradict, to be opposed. நூலில் தெரிவித்திருக்கும் கருத்துக்களோடு முரண்படுகிறேன். ஒன்றிற் கொன்று முரண்பட்ட நிலை.

முரணு[1]–தல் muraṇu-, *12 செ.கு.வி.* (v.i.) மாறுபடுதல்; to be at variance. "தீ முரணிய நீரும்" *(புறநா.2).*

முரணு[2]–தல் muraṇu-,*13 செ.குன்றாவி.* (v.t.) பெருக்குதல்; to multiply. 'இரு திணையும் பொதுவுமான மூன்றினானும் முரணப் பதினெட்டாம்' *(நன்.269, உரை).*

முரல்[1](லு)–தல் mural-, *13 செ.கு.வி.* (v.i.) *1.* ஒலித்தல்; to make sound. "மதுகர முரலுந் தாரோயை" *(திருவாச. 5:16). 2.* கதறுதல்; to cry. "குடுமிக் கூகை குராலொடு முரல" *(மதுரைக். 170).*

க. மெரல்

முரல்[2](லு)–தல் mural-, *14 செ.குன்றாவி.* (v.t.) பாடுதல்; to sing. "ஏழ்புணரின்னிசை முரல்பவர்க் கல்லதை" *(கலித்.9).*

முரற்று–தல் muraṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* ஒலித்தல்; to make sound."கிடப்பதோ முரற்றலின்றி"*(கம்பரா. மீட்சி.308). 2.* கதறுதல்; to cry. "அரற்றியு மயர்ந்து முரற்றியு முயிர்த்தும்" *(பெருங். இலாவண. 19:208). (பிங்.).*

முரி[1]–தல் muri-, *2 செ.கு.வி.* (v.i.) *1.* வளைதல்; to bend. "முரிந்து கடைநெரிய வரிந்த சிலைப் புருவமும்" *(மணிமே.18:161). 2.* கரும்பு கம்பு முதலியவை வளைந்து ஒடிதல் *(சூடா.);* to break off, snap off. "மூத்துவினை போகிய முரிவாய் அம்பி" *(நற்.315:3).* "நல்லெழி னெடும்புதவு முருக்கிக் கொல்லு பேன மாகிய நுனைமுரி மருப்பிற்" *(பதிற்றுப்.16:6,7). 3.* கெடுதல்; to perish, to be ruined."இடைக்கண் முரிந்தார் பலர்" *(குறள்,473). 4.* தோல்வியுறுதல்; to be defeated. "முற்றிய வமரர்சேனை முரிந்தன" *(விநாயகபு.34:15). 5.* சிதறுதல்; to be scattered."பஞ்சினம் பகைமுரிந் தெழுந்தன விண்ணத் தலமர" *(கல்லா.7). 6.* தளர்தல்; to lack in strength, to be gentle, as in gait."முரிந்தநடை மடந்தையர் முழங்கொலியும் வழங்கொலியும்" *(திருவிசை.கருவூ.5:10). 7.* தவறுதல்; to go wrong. "முரியுங்காலைத் தெரிய மற்றதிற் றட்டினள்.... எழுப்பி" *(பெருங்.வத்தவ.12:99). 8.* நீங்குதல் *(சீவக.172);* to separate, leave. *9.* நிலைகெடுதல்; to lose one's position. "இடைமுரிந்து வேந்தனும் வேந்து கெடும்" *(குறள்,899). 10.* குணங்கெடுதல்; to be spoiled."ஒழுகுபால் கதிர் வெயிற் படமுரிந்து" *(திருச்செந்தூர்.பிள்ளைத். செங்கீரை.1.).*

ம., க. முரி

முரி[2]–த்தல் muri-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* வளைத்து ஒடித்தல்; to break off, snap off. "நன்சிலை முரித் திட்டம்பை வாடினன் பிடித்துநின்றான்" *(சீவக.2185). 2.* அழித்தல்; to ruin."மதிலொடு வடவாயிலை முரித்து" *(திருவாலவா.24:4). 3.* தோற்கச் செய்தல் *(யாழ்.அக.);* to defeat. *4.* திறமையாக நடத்துதல் *(வின்.);* to manage, as a business. வெட்டி முரித்தல் என்னும் வழக்கை நோக்குக.

தெ. முரியு; ம. முரிக்க.

முரிமுரி–தல் muri-muri-, *2 செ.கு.வி.* (v.i.) வளைதலைச் செய்தல்; to bend, curve."புருவமும் முரிமுரிந்தவே" *(சீவக. 2310).*

முருக்கு–தல் murukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* அழித்தல்; to destroy, crush, ruin. "விறல்வேன் மன்னர் மன்னெயில் முருக்கி" *(சிறுபாண்.247). 2.* கொல்லுதல் *(திவா.);* to kill. "எற்றி முருக்குவ ரரக்கர் முன்பர்" *(கம்பரா. மகரக்.12). 3.* முறித்தல்; to break in pieces."காப்புடைய வெழுமுருக்கி" *(புறநா.14). 4.* உருக்குதல் *(வின்.);* to melt. *5.* கரைத்தல் *(வின்.);* to dissolve.

முருகு–தல் murugu-,*5 செ.கு.வி.* (v.i.) *1.* முதிர்தல்; to be ripe or mature. "முருகு காதலின்" *(கம்பரா.அகலிகை.54). 2.* காய்ச்சுதலிற் பக்குவம் மிஞ்சுதல்; to exceed the proper limit in heating. நெய் முருகிவிட்டது.

முருங்கு–தல் muruṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* அழிதல்; to perish; to be destroyed."அமரு ளேற்றார் முரண் முருங்க" *(பு.வெ.1:7). 2.* முறிதல்; to break. "கூம்பு முதன் முருங்க" *(மதுரைக்.377). 3.* அடங்கி யெரிதல்; to simmer. "முருங்கெரியிற் புக" *(கம்பரா. கார்முக.29).*

தெ. முருகு

முழக்கு–தல் muḻakku-,*5 செ.குன்றாவி.* (v.t.) *1.* பேரொலி எழுப்புதல்; roar. இடி முழங்கியது. *2.* நீட்டி முழக்க மிடுதல்; shout slogans; thunder. தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை முழங் கினார்கள். *3.* இசைக் கருவியை ஒலிப்பித்தல்; to sound, to beat a sounding instrument."குணில் வலத் தேந்தி முழக்கினாலென" *(கம்பரா.கும்பக.346). 4.* பெருஞ் சிறப்பு *(விமரிசை)* பெறச் செய்தல்; to do a thing pompously.

முழங்கு–தல் muḻaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* இடி, வேட்டுட்கம் *(பீரங்கி)* போன்றவை அல்லது வாச்சியங்கள் பேரொலி எழுப்புதல்; thunder, cannon, etc. roar, rumble, of an ensemble sound loudly. இடி முழங்கி மின்னல் வெட்டிப் பலத்த மழை பெய்தது. பீரங்கிகள் முழங்கத் தரப்பட்ட அணிவகுப்பு மதிப்புரவை இந்திய முதன்மை அமைச்சர் ஏற்றுக் கொண்டார். மேளம் முழங்க மிகவும் அழகாக நடந்தது ஊர்வலம்."எழிலி முழக்குந் திசையெல்லாம்" *(நாலடி.392),* "முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்றுரை" *(அகநா.70:14),* "முழங்கு முந்நீர் முழவதும் வளைஇப்" *(புறநா.18:1),* "நொதுமல் வானத்து முழங்கு குரல் கேட்ட" *(குறுந். 251:7),*"முழங்குதிரை கொழீஇய மூரியெக்கர்" *(நற்.15:1). 2.* உரக்க மேடையில் பேசுதல்; thunder out a speech. நிருவாகத்திற்கு எதிரான செய்திகளைத் தொழி

லாளர்கள் முழங்கினார்கள். கூட்டத்தில் முழங்கி என்ன பயன்? "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் முன்றினு முழங்கும்" (இலக். கொத்.7).

க. முழகு.

முழம்போடு–தல் muḻam-pōḍu, 19 செ. குன்றாவி. (v.t.) 1. கையால் முழவளவாக அளத்தல் (வின்.); to measure with the fore arm. 2. ஆழம் பார்த்தல்; to sound a person. 3. ஆளின் தன்மையை ஆய்ந்து மதிப்பிடுதல்; to measure a person's quality.

முழமிடு–தல் muḻam-iḍu,18 செ.குன்றாவி. (v.t.) முழம் போடு[1]-தல், (வின்.) பார்க்க; see muḻam-pōḍu-[1].

முழவு–தல் muḻavu-, 5 செ.கு.வி. (v.i.) நெருங்கிப் பழகுதல் (இ.வ.); to move on intimate terms.

முழாசு–தல் muḻāšu-,5 செ.கு.வி. (v.i.) கொழுந்து விட்டெரிதல் (யாழ்ப்.); to burst into a flame, blaze up.

முழாவு[1]–தல் muḻāvu-, 5 செ.கு.வி. (v.i.) முழவு-தல் (இ.வ.) பார்க்க; see muḻavu-.

முழாவு[2]–தல் muḻāvu-, 5 செ.கு.வி. (v.i.) நெருங்கிப் பழகுதல் (இ.வ.); familiarity.

முழி[1]–தல் muḻi-, 4 செ.குன்றாவி. (v.t.) உமிழ்தல்; to spit.

முழி[2]–த்தல் muḻi-,4 செ.கு.வி. (v.i.) 1. கண் திறத்தல்; to open the eyes. 2. தூக்கத்திலிருந்து எழுதல்; to wake up from sleep.

முழுக்காட்டு–தல் muḻu-k-kāṭṭu-,5 செ. கு.வி. (v.i.) குளிக்கச் செய்தல்; to bathe some one. குழந்தைக்கு எண்ணெய் தேய்த்து முழுக்காட்டினேன்.

முழுக்காடு–தல் muḻu-k-kādu, 5 செ.கு.வி. (v.i.) எண்ணெய் தேய்த்துக் குளித்தல்; oil bathing. "எண்ணெய் சேர்த்தே முழுக்காடுவார்" (அறப்பளீச்.50).

க. முழுகாடு

முழுக்கு–தல் muḻukku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. அமிழ்த்துதல்; to plunge dip in drown. "அயில்களும் வாளுந் தோள்களின் முழுக்கினர்" (கம்பரா. அதிகாய.98).

க. முழுகிசு.

முழுக்குப்போடு–தல் muḻukku-p-pōḍu-,19 செ.குன்றாவி. (v.t.) இதுவரை இருந்து வந்த தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுதல்; sever one's connection, bid farewell to something, leave something one for all. தன் பேச்சை யாரும் கேட்கவில்லை என்ற சினத்தின் காரணமாக கழகத்திற்கு முழுக்குப் போட்டு விட்டார். படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டுத் தந்தையின் தொழிலில் இறங்கிவிட்டான்.

முழுகவிடு–தல் muḻuga-viḍu-, 18 செ. குன்றாவி. (v.t.) 1. பொருள் முதலியன தொலையும்படி விடுதல்; to let a thing go to ruin. 2. அடைவு வைத்த பொருளை மீட்க முடியாதிருத்தல் (இ.வ.); to be unable to redeem, as a pledged thing.

முழுகாமலிரு–த்தல் muḻugāmal-iru-, 3 செ.கு.வி. (v.i.) கருவுற்றிருத்தல்; to be pregnant. அவன் மனைவி மூன்று மாதமாய் முழுகாமலிருக்கிறாள்.

முழுகிப்போ–தல்muḻugi-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. அமிழ்ந்து போதல்; to sink, founder; to be drowned. நேற்று வந்த பெருவெள்ளத்தில் ஊர் முழுவதும் முழுகிப் போயிற்று (உவ.). 2. அடியோடு கெடுதல்; to be ruined, swallowed up. சூதாட்டினால் அவன் குடி முழுகிப் போயிற்று. 3.அடைவு வைத்த சொத்து மீட்க முடியாது கடனுக்கு உட்பட்டுவிடுதல் (இ.வ.); to be entirely lost beyond redemption. அவன் அடைவு வைத்த நகை முழுவதும் முழுகிப் போய்விட்டது (உவ.).

முழுகு–தல் muḻugu-, 5 செ.கு.வி. (v.i.) 1. குளித்தல்; to bathe the entire body by dipping or pouring. 2. வினை முயற்சித்தல், அழுந்தியிருத்தல்; to be entirely immersed, as in business. 3. அமிழ்ந்து போதல்; to sink. கப்பல் முழுகிவிட்டது. 4. மாதவிடாயடைதல் (வின்.); to be in menses. 5. தீர்க்க முடியாத அளவு கடன் மிகுந்ததால் சொத்து மீட்க முடியாமல் கடனுள் அமிழ்து போதல் (இ.வ.); to be irretrievably involved in debts. அவன் கடனில் முழுகி விட்டான்.

தெ. முனுகு; க. முழு; ம. முழுகுக.

முழுங்கு[1]–தல் muḻuṅgu-, 5 செ.கு.வி. (v.i.) முழுகுதல்; to sink. குடம் தண்ணீரில் முழுங்கி விட்டது.

முழுங்கு[2]–தல் muḻuṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) தொண்டைக்குள் அல்லது வயிற்றிற்குள் முழுகச் செய்தல், விழுங்குதல்; to swallow, gulp, as food. மாத்திரை முழுங்கினான்.

தெ. மிங்கு

முழுசு[1]–தல் muḻušu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முட்டுதல்; to rub, strike against. "பிள்ளைகள் முலைக்கீழ் முழுசின வாறே பால்சுரக்கும்" (ஈடு, 5. 3 : 3). 2. முத்தமிடுதல்; to kiss. "அழுத்தந் தழுவாதே முழுசாதே" (திவ். பெருமாள்.9 : 6).

முழுசு[2]–தல் muḻušu-,5 செ.கு.வி. (v.i.) உட்புகுதல்; to dive, dip, get in, entire. "முழுசி வண்டாடிய தண்டுழாயின்" (திவ். பெரியதி.2.8:7).

முழுத்து–தல் muḻuttu-, 5 செ.குன்றாவி. (v.t.) அமிழ்த்துதல்; to plunge, dip in, drown. "துதிக்கை முழுத்திற்று" (ஈடு, 3.5:1).

முழுவு–தல் muḻuvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முத்தமிடுதல்; to kiss. "வந்தென் முலை முழுவித் தழுவி" (திருக்கோ. 227). 2. பொருந்தித் தொடுதல்; to touch. 3. தழுவுதல்; entwine.

முழை[1]–தல் muḻai-, 2 செ.கு.வி. (v.i.) நுழைதல் (இ.வ.); to enter.

முழை[2]–த்தல் muḻai-, 4 செ.குன்றாவி. (v.t.) துளைத்தல்; to

pierce, bore."முழைத்த வான்புழை" (பாரத. காண்டவ. 17).

முள்கா–த்தல் muḷkā-, 6 செ.கு.வி. (v.i.) குந்தியிருத்தல்; to sit with arms and legs folded. "சான்றோர் முகப்போல முள்காந்திருப்பர்" (நன்.96, விருத்.).

முள்கு–தல் muḷgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முயங்குதல்; to embrace. "இளமுலை முகிழ்செய முள்கிய" (கலித்.125). 2. உட்செல்லுதல்; to enter, pierce. "அமர்க்கணாமா னருநிற முள்காது" (நற்.165).

தெ. மெலிகொது, மெலகு

முளி¹–தல் muḷi-, 2 செ.கு.வி. (v.i.) 1. உலர்தல்; to dry. "முளிமுதல் மூழ்கிய வெம்மை" (கலித்.16), "முளிபுற் கானங் குழைப்பக் கல்லென" (புறநா.160:2),"முளி யிலை கழித்தன முகிழிண ரொடுவரு" (நற்.53:7). 2. வேதல்; to burn; to be scorched. "ஆரெயிலோரழ லம்பின் முளிய" (பரிபா.5:25). 3. கெடுதல்; to perish. "முளிந்த தீவினையான்" (விநாயகபு. 22:2). 4. முற்றுதல்; to mature. "முளிபுல்லுங் கானமுஞ் சேரார்" (ஆசாரக். 57). 5. தோய்தல்; to curdle. "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்" (குறுந்.167).

க. முளி.

முளி²–தல் muḷi-, 2 செ.கு.வி. (v.i.) பொங்குதல்; to boil up. சோறு முளிந்து வருகிறது (உ.வ.).

முளி³–த்தல் muḷi-, 4 செ.கு.வி. (v.i.) 1. உலர்தல் (நாமதீப.757); to dry. 2. வறுத்தல் (யாழ்.அக.); to become dried. 3. காய்தல் (யாழ்.அக.); to become scorched.

முளை–த்தல் muḷai-, 4 செ.கு.வி. (v.i.) 1. பயிரில் முளை முதலியன தோன்றுதல்; to spring, to sprout, as shoots; to germinate as seeds. நிலத்தில் போட்ட விதை முளைத்துவிட்டது (உ.வ.). "ஒன்றாய் முளைத் தெழுந்து" (திருவாச.10: 8). 2. கதிரவன் தோன்றுதல்; to rise, appear, come to light. "காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப" (மணிமே.8:18). "வெள்ளி முளைத்து விட்டது". 3. உடலில் புதிதாக உறுப்புகள் வளர்தல்; to grow as teeth, horns, hair. "மாட்டுக்குக் கொம்பு முளைத்து விட்டது" (உ.வ.), "பையனுக்கு மீசை முளைக்க ஆரம்பித்துவிட்டது" (உ.வ.).

ம. முளை; க. மொளெ; தெ. மொலத்சு.

முளைவிடு–தல் muḷai-viḍu-, 20 செ.கு.வி. (v.i.) விதை போன்றவற்றில் இருந்து முளை கிளம்புதல்; germinate, put forth shoots. "அவரைவிதை முளைத்து விட்டது".

முற்படு–தல் muṟ-paḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. ஒரு செயலைச் செய்ய முயலுதல் அல்லது தொடங்குதல்; attempt or begin to do something. "கையை ஓங்கிக் கொண்டு அடிக்கப் போனவனைத் தடுக்க முற்பட்டார். எரிபொருள் பற்றாக்குறை என்பதற்காகக் காடுகளை அழிக்க முற்படக் கூடாது". 2. காலத்தில் முன்னதாக அமைதல்; precede in time. "இந்த இலக்கண நூல் பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதப் படுகிறது". 3. முந்துதல்; to precede, go ahead. 4. முன் அமைதல்; to come before. "பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல்" (தொல். சொல்.286). 5. எதிர்ப் படுதல்; to meet."சிறுமந்தி முற்பட்ட தந்தையை" (நாலடி, 237).

முற்றி–த்தல் muṟṟi-, 4 செ.குன்றாவி. (v.t.) முடித்தல்; to complete, finish. "முடியாக் கருமமாயினும் முடியும் வாயின் முற்றித்து" (பெருங்.மகத.1:69).

முற்று¹–தல் muṟṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. முதுமையடைதல் (பிங்.); to be advanced in age. 2. முதிர்தல்; to become mature, to ripen. "முற்றி யிருந்த கனியொழிய" (நாலடி.19). "கத்தரிக்காய் முற்றினால் கடைத் தெருவுக்கு வந்து தானே ஆக வேண்டும்" (பழ.). 3. முழுவளர்ச்சியுறுதல்; to be fully grown. "ஓர் முற்றா வுருவாகி" (திவ்.திருவாய். 8.3:4). 4. வயிரங் கொள்ளுதல் (சூடா.); to become hardened, as the core of a tree. 5. முடிதல்; to come to an end, to be finished. "தங்கரும முற்றுந் துணை" (நாலடி, 231). 6. இறத்தல்; to die. "மாற்றமுந் தாரானா லின்று முற்றும்" (திவ். பெரியாழ்.2.10:1).

தெ. முதுரு; க. முது; ம. முத்துக.

முற்று²–தல் muṟṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மூண்டெழுதல், பெருகுதல்; to abound, increase. "முற்றெரிபோற் பொங்கி" (பு.வெ.8:16). 2. தங்குதல்; to abide, dwell. "குடகடன் முற்றி" (மதுரைக்.238). 3. நிறைவேறுதல்; to be fulfilled, as one's desire. "இமையோர்க் குற்ற குறைமுற்ற" (கம்பரா. கடல்காண்.11). 4. போலுதல்; to be similar. "எழுமுற்றுந் தோளார்" (சீவக.1870).

முற்று³–தல் muṟṟu-, 5 செ.கு.ன்றாவி. (v.t.) 1. செய்து முடித்தல்; to complete, finish. "வேள்வி முற்றி" (புறநா.15). 2. அழித்தல்; to destroy, kill. "முற்றினன் முற்றின னென்று முன்புவந்து" (கம்பரா. கும்பகர்.311). 3. மேற் கொள்ளுதல்; to get upon. "சுளிமுகத் துவாவின் முற்றி" (ஞானா.26). 4. தேர்ச்சி பெறுதல்; to become expert in. "புரவிப் போருங் கரப்பறக் கற்று முற்றி" (சீவக.1678).

முற்று⁴–தல் muṟṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. சூழ்தல்; to surround. "பாண்முற்றுக நின்னாண்மகி ழிருக்கை" (புறநா.29). 2. கோட்டையைச் சூழ்ந்து பொருதல், வளைத்தல்; to besiege, blockade. "முற்றிய வகத்தோன் வீழ்ந்த நொச்சியும்" (தொல்.பொருள்.68). 3. அடைதல்; to approach, reach. 'அணிகிளரடுக்கன் முற்றிய வெழிலி' (இலக்.வி.754, உரை).

க. முத்து

முற்று⁵–தல் muṟṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. சில மரங்கள், காய்கள் மிகுதியான வளர்ச்சி அடைதல்; certain

vegetables become over ripe, of coconut, become ripe. 'முருங்கைக் காய் முற்றுவதற்கு முன்பே பறித்துவிடு. முற்றிய தேங்காயாகப் பார்த்து வாங்கிவா'. 2. நோய் குணப்படுத்த முடியாத நிலையை அடைதல்; of illness get to an advanced state. 'நோயை முற்றவிட்டு விடாதே'. 3. சண்டை முதலியவை உச்சக்கட்ட நிலையை அடைதல்; of issues, problem, etc., get aggravated, reach a critical stage. 'அவர்களுக்குள் ஏற்பட்ட வாய்ச் சண்டையானது முற்றிக் கை கலப்பில் முடிந்தது. வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு தொழிலாளர் கோரிக்கை எப்படி முற்றியது'? 4. முடிவுக்கு வருதல், முடிதல்; come to an end, be finished. கதை இந்த இதழோடு முற்றிற்று. அடுத்த ஆண்டோடு படிப்பு முற்றும்.

முற்றுப்பெறு–தல் muṟṟu-p-peṟu-,13 செ.கு.வி. (v.i.) முடிவடைதல்; to be finished. 'மக்கட் தொகைக் கணக்கெடுக்கும் பணி முற்றுப்பெற்றுவிட்டது'.

முறமுற–த்தல் muṟa-muṟa-, 4 செ.கு.வி. (v.i.) 1. தூய்மையாக இருத்தல்; to be neat. 2. முறுமுறுப்பாதல்; to be rough or stiff; to be crisp.

முறி¹–தல் muṟi-, 2 செ.கு.வி. (v.i.) 1. வளைந்து ஒடிதல்; to break, give way, as a branch. "அச்சு முறிந்ததென் றுந்தீபற" (திருவாச.14: 2). 2. நிலை கெடுதல்; to be discomfited. "அரக்க னெடுத்து முறிந்து" (பெரியபு.திருஞா.77). 3. அழிதல்; to perish, cease to exist. "வீரமுறிந்த நெஞ்சினர்" (விநாயகபு. 79:66). 4. தன்மை கெடுதல்; to change in one's nature; to be spoiled. பால் முறிந்து போயிற்று. 5. பதந்தப்புதல்; to exceed the proper stage, as in boiling or heating. நெய் முறியக் காய்ந்ததனாற் கசக்கின்றது. 6. பயனறுதல்; to become ineffectual, as medicine. விட(விடம்) முறிய மருந்து சாப்பிட்டான் (வின்.). 7. குலைதல் (உவ.); to fail, as a business concern.

ம. முரிக்; தெ. முரிக்கொனு; க. முரி.

முறி²–தல் muṟi-,2 செ.கு.வி. (v.i.) 1. தோற்றல்; to be defeated, as an army. 2. அருள்மாறுதல் (இ.வ.); to be ungracious.

முறி³–தல் muṟi-, 2 செ.கு.வி. (v.i.) 1. துண்டாதல்; break, snap, fracture. புயலில் மரம் முறிந்து சாய்ந்தது. கை எலும்பு முறிந்து படுக்கையில் இருக்கும்படி ஆகிவிட்டது. 2. பேச்சுத் தொடர்பு, உறவு தொடராமல் நிற்றல்; அறுபடுதல்; break up. அவர்களிடையே இருந்த நல்லுறவு முறியக் காரணியம் என்ன?

முறி⁴–தல் muṟi-, 2 செ.கு.வி. (v.i.) துளிர்த்தல்; to sprout. "முறிந்தகோல முகிழ் முலையார்" (சீவக.2358).

முறி⁵–த்தல் muṟi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கிழித்தல், வெட்டுதல்; to cut. வேட்டியை இரண்டாக முறி. 2. நிறுத்திவிடுதல்; to close, to discontinue. ஏலச்சீட்டை முறித்துவிட்டான். 3. நெசவுத் தறியில் உண்டை மறித்தல்; to fold, turn back, as the warp in a loom.

முறியடி–த்தல் muṟi-y-aḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஒருவரின் கெட்டத் திட்டத்தைத் தோல்வியடையச் செய்தல், நடக்கவிடாமல் செய்தல்; outman work, to rout, break, crush. தங்கக் கடத்தல் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப் பட்டது. எதிர்க் கட்சிகளின் பொய்யான செய்தி பரப்பும் வேலையை முறியடிப்போம். 2. விரட்டியடித்தல்; beat off; break down. நாட்டைப் பிரிக்கும் ஆற்றல்கள் முறியடிக்கப் பட்டன. கொள்ளைக் கூட்டத்தை முறியடித்தனர். 3. புதிய முயற்சி அருவினை செய்து முந்திய முயற்சியை பின்னடையச் செய்தல்; break old records. இந்தப் போட்டித் தொடரில் பல பழைய முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

முறுக்கிவிடு–தல் muṟukki-viḍu-,18 செ. குன்றாவி. (v.t.) 1. சுழற்றிவிடுதல்; to spin, as a potter his wheel, to wind, to cause to rotate. "முறுக்கி விட்ட குயமகன் றிகிரிபோல" (சீவக.786). 2. திருகிவிடுதல்; to twirl, as the moustache. மீசையை முறுக்கி விட்டான். 3. தூண்டி விடுதல் (வின்.); to induce, instigate. 4. பகை யுண்டாக்குதல் (இ.வ.); to create ill-feeling between, to set one against another.

மறுவ. முடுக்கி விடுதல், சீண்டி விடுதல்.

முறுக்கு¹–தல் muṟukku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கயிறு, நார் முதலியவற்றைத் திரித்தல்; to twist, as a rope. "வாய்மடித் திரண்டு கையு முறுக்கி" (கம்பரா. மருத்து.10). "ஐதுணங்கு வல்சி பெய்துமுறுக் குறுத்த" (அகநா.224:12). 2. முறுக்காணியைத் திருகுதல்; to twirl. 3. மிகைபட முறுக்கி ஒடித்தல்; to break. "பிடிபடி முறுக்கிய பெருமரப்பூசல்" (அகநா.8). 4. சுழற்றுதல்; to spin, as a potter his wheel. "முறுக்கிவிட்ட குயமகன் றிகிரிபோல" (சீவக.786). 5. வெற்றிலையுண்ணுதல் (நாஞ்.); to chew betel. 6. கை கால்களைப் பிசைந்து தேய்த்தல் (வின்.); to chafe, as the hands and legs. 7. துணி முதலியவற்றைச் சுருளும்படி திரும்புதல்; wring clothes, twist. முழுக்கால் சட்டையை நன்றாக முறுக்கி பிழிந்து காயப் போடு. மீசையை முறுக்கிக் கொண்டே பேசினார். 8. பிறர் தன் அருமை தெரிந்து மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற வகையில் ஒருவகை இறுக்கத்துடன் நடந்து கொள்ளுதல்; get in an affected manner be stiff. புது மாப்பிள்ளை கொஞ்ச நாள் அப்படித்தான் முறுக்கிக் கொள்வார்!

தெ. முரகட்டு; க., ம. முருக்கு.

முறுக்கு²–தல் muṟukku-, 5 செ.கு.வி. (v.i.) 1. செருக்குதல் (உவ.); to be proud, haughty, arrogant. 2. மாறுபடுதல்; to disagree. 3. சினத்தல் (யாழ்.அக.); to be angry.

முறுகு¹–தல் muṟugu-, 5 செ.கு.வி. (v.i.) 1. திருகுதல் (பிங்.); to wriggle, twist. 2. விரைதல்; to accelerate, to hasten. "முறுகிய விசையிற்றாகி" (சீவக.796).

ம. முருக்கு

முறுகு²–தல் muṟugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. முதிர்தல்;* to ripen, mature. "*கனி முறுகி விண்டென*" *(சூளா. சீய.7). 2. மிகுதல்;* to increase. "*வேட்கையின் முறுகி யூர்தர*" *(சீவக.1183). 3. கடுமையாதல்;* to become vehement or intense. "*வெயின் முறுக*" *(நாலடி, 171). 4. சுண்டிப் போதல் (கருகிப் போதல்) (உ.வ.);* to be scorched or charred, as in frying. *5. செருக்குதல்;* to be haughty or insolent, to bluster. "*வரையெடுக்கலுற்று முறுகினான்*" *(தேவா. 289,10).*

முறுகு³–தல் muṟugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *மீறுதல் (பிங்.);* to violate or infringe, as a right.

ம. முறுகு

முறுகு⁴–தல் muṟugu-, *5 செ.கு.வி.* (v.i.) *பாகு சூட்டினால் நீர்த்தன்மை குறைந்து இறுகுதல்;* to become thick when over heated of treacle, etc. *சருக்கரைப் பாகு முறுகாமல் பார்த்துக்கொள்!.*

முறை¹–த்தல் muṟai-, *9 செ.கு.வி.* (v.i.) *1. இப்படி இத்தன்மையில் இருக்க வேண்டும் என்ற ஒழுங்கு; பொருத்தமான வரையறையோடு கூடியது;* proper manner, propriety, normal course. *ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறை குமுகாயத்தில் (சமுதாயத்தில்) தொன்று தொட்டு இருந்து வருகிறது. முறையாக இசை கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவருக்கு நெடுநாளாக ஆசை. புதிய மருத்துவமனை முறைப்படி நாளை தொடக்கப்படும். 2. ஒன்று நடைபெறும் தன்மை;* way, manner. *பொருளியல் அமைப்பு மாறும்போது வாழ்க்கை முறையும் மாறும். மனதுக்கு ஆறுதல் அளிக்கும் முறையில் அன்புடன் பேசினார். 3. இத்தனையாவது எனக்கூறும் வரிசை ஒழுங்கு, தடவை;* times. *நகரத்தையே இப்போது தான் முதன் முறையாகப் பார்ப்பது போல் பார்த்தான். எத்தனை முறை படித்தாலும் கொஞ்சம் கூட வெறுப்புத் தட்டாத கதை. 4. ஒன்றையடுத்து ஒன்று, ஒருவரையடுத்து ஒருவர் என வரையறுத்து அமைக்கும் வரிசை, வரிசையில் ஒன்றின் அல்லது ஒருவரின் தடவை;* turn. *வயல்களுக்கு முறை வைத்துத்தான் தண்ணீர் விடப்படும். மருத்துவமனையில் மருத்துவரைப் பார்க்க வரிசையில் தன் முறைக்காகக் காத்திருந்தார். 5. இருவருக்கும் இடையில் இப்படிப்பட்டது என்று வரையறுக்கும் உறவு;* relationship. *அவர் எனக்கு மாமா முறை.*

முறை²–த்தல் muṟai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. நெறித்து நிமிர்தல்;* to become stiff, hard. *2. செருக்குறுதல் (உ.வ.);* to be stiff-necked, haughty. *3. ஏறவிழித்து நோக்குதல்;* to stare.

தெ. முரி; க. முரித்து.

முறைப்படுத்து–தல் muṟai-p-paḍuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வரிசைப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல்;* to arrange, put in an order. *நடந்த நிகழ்ச்சிகளை முறைப்படுத்தி எழுதிக் கொடுங்கள். 2. நெறிமுறைக்கு உட்பட்ட தாக்குதல்;* systematize, regulate. *தனியார் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது இன்னும் முறைப்படுத்தப்படவில்லை.*

முறையிடு¹–தல் muṟai-y-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *உரியவர்களிடம் சொல்லிக் கவனிக்க வேண்டுதல், குறை தீர்க்க வேண்டுதல்;* appeal to the authorities, petition. *குடிநீர் வேண்டி சென்னை நகர மக்கள் அமைச்சரிடம் முறையிட்டுக் கொண்டார்கள். நகராட்சி அதிகாரிகளிடம் பல முறை முறையிட்டும் சாலை செப்பனிடப்படவில்லை.*

முறையிடு²–தல் muṟai-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) குறை சொல்லிக் கொள்ளுதல்; to complain, express grievance. "*சகந்தானறிய முறையிட்டால்*" *(திருவாச. 21:3).*

தெ., ம. மொரயிடு; க. மொரெயிடு.

முன்நிறுத்து–தல் muṉ-niṟuttu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒருவரை அல்லது ஒரு கருத்தை அல்லது ஒரு செய்தியை முதன்மைப்படுத்துதல், முதன்மை அளித்தல்;* bring to the fore, project some one, keep something in focus. *மக்களுக்கு நன்றாக தெரிந்த ஒரு தலைவரை முன்நிறுத்தி செய்தி பரப்பும் பணியைச் செய்தால் தேர்தலில் வெற்றி பெறலாம். மக்களின் நிலையை முன் நிறுத்திப் பார்க்கையில் இதுபோன்ற திருவிழாக்கள் பயனற்றது.*

முன்பதிவுசெய்–தல் muṉpadivu-šey-, *1 செ.கு.வி.* (v.i.) *திரையரங்கம், தொடர் வண்டி நிலையம் முதலிய வற்றில் முன்கூட்டியே இருக்கைகளைப் பதிவு செய்தல்;* reserve seats, etc. in a cinema, train, etc. "*நான் நாளை தொடர்வண்டி மூலமாக மதுரை செல்ல நேற்றே முன்பதிவு செய்துவிட்டேன்*".

முன்மொழி–தல் muṉ-moḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *ஒருவரின் பெயரை அல்லது தீர்மானம் முதலியவற்றை உரியோரின் கவனத்திற்கு முன் வைத்தல்;* propose someone's name, etc. for consideration in a formal meeting. *செயலாளர் பதவிக்குக் கூட்டத்தில் உங்கள் பெயரை நான் முன்மொழிகிறேன். நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவர் முன் மொழிந்தார்.*

முன்வை–த்தல் muṉ-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *முன்னிடுகை, திட்டம் முதலியவற்றை ஆய்வுக்காகத் தக்க முறையில் கவனத்திற்குக் கொண்டு வருதல்;* purpose; put forward resolution, demand, etc. *தொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகளை நிருவாகம் ஏற்கவில்லை. 'முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன்' (பழ.).*

முன்னா–தல் muṉṉā-, *6 செ.கு.வி.* (v.i.) *முன்னதாதல்;* to be first; to be early. "*முன்னான பூதங்கள்*" *(கம்பரா. இரணியன்*

வதை.170).

முன்னிடு–தல் muṉṉiḍu-,18 செ.குன்றாவி. (v.t.) 1.முன் வைத்தல்; to put before. 2. எதிர்ப்படுதல் (வின்.); to meet. 3. முன்னே போகவிடுதல் (வின்.); to let one go before or in advance. 4. நோக்கமாகக் கொள்ளுதல்; to bear in mind. அந்தச் செயலை முன்னிட்டு வந்தான். 5. துணைக் கொள்ளுதல்; to invoke the aid of. இவன் முன்னிடுமவர்களை அவன் முன்னிடும்(ஸ்ரீவசந.2:151).

முன்னில்–தல் (முன்னிற்றல்) muṉṉil-,14 செ.கு.வி. (v.i.) 1. முன்தோன்றுதல்; to appear before. "முன்னின் றாண்டாய்" (திருவாச.21:2). 2. துணை நிற்றல்; to stand by; to assist, guide."முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" (பெரியபு.மனுநீதி.47). 3. தலைமை யேற்றல்; to take the lead. 4. பொறுப்பேற்றுக் கொள்ளுதல்; to assume responsibility.

முன்னு[1]–தல் muṉṉu-,5 செ.குன்றாவி. (v.t.) கருதுதல்; to think, contemplate. "வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந.3).

க. முந்து

முன்னு[2]–தல் muṉṉu-,5 செ.குன்றாவி. (v.t.) 1. எதிர்ப்படுதல்; to meet. "கதிர்முலைக் கன்னி மார்ப முன்னினர் முயங்கி னல்லால்" (சீவக.483). 2. அடைதல்; to reach, arrive at. "முனிவன் முன்னினானால்" (சூளா. தூது. 123). 3. அணுகுதல்; to approach."நகர் நெறியின் முன்னினான்" (சீவக. 1249). 4. பொருந்துதல்; to get to, join. "முன்னுபு கீழ்த்திசை நோக்கி" (சீவக.2636). 5.பின்பற்றுதல்; to adhere to; to follow. "முற்றுடனுணர்ந்தவ னமுத முன்னினார்" (சீவக.2639).

முன்னுரை–த்தல் muṉ-ṉ-urai-,4 செ. குன்றாவி. (v.t.) 1. முற்பட அறிவிப்புச் செய்தல்; to indicate before hand. "முகம்போல முன்னுரைப்பதில்" (நான்மணி. 47). 2. வருவது கூறுதல் (வின்.); to foretell, predict.

முன்னேற்று–தல் muṉ-ṉ-ēṟṟu-,5 செ.கு.வி. (v.i.) உயர் நிலையை அடையச் செய்தல்; மேம்படச் செய்தல்; advance. பொருளியல் துறையில் நாட்டை முன்னேற்றத் திட்டங்கள் போடப்பட்டுள்ளன.

முன்னேறு–தல் muṉ-ṉ-ēṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. தடையைக் கடந்து முன் செல்லுதல்; to make headway against something. போரில் படைகள் முன்னேறியிருப்பதாகச் செய்திகள் வந்தன. சுற்றி நின்ற கூட்டத்தைப் பிளந்து கொண்டு முன்னேற முயன்றனர் காவலர்கள். 2. உயர்நிலைக்குச் செல்லுதல்; மேம்படச் செய்தல்; progress; go forward; develop. வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. நாடு தொழிற்துறையில் முன்னேற என்ன செய்ய வேண்டும்? 3. உடல்நிலை சீரடைதல்; improve of health. தந்தையின் உடல்நிலை முன்னேறுவதை நினைத்து ஆறுதல் கொண்டேன். 4. முந்திக் கொள்ளுதல் (வின்.); to anticipate, forestall.

முனகு–தல் muṉagu-,5 செ.கு.வி. (v.i.) துன்பம் முதலியவை தாங்காமல் மெல்லிய குரலில் தெளிவற்ற வகையில் பேசி எதிர்ப்பைத் தெரிவித்தல்; விருப்பமின்மை, எதிர்ப்பு, சலிப்பு முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில் தெளிவில்லாமல் மெல்லிய குரலில் பேசுதல்; முணுமுணுத்தல்; groan with pain; mutter something, as a protest, etc. இரவு முழுவதும் காய்ச்சலால் முனகிக் கொண்டிருந்தான். எடுபிடி வேலைக்கு நான்தான் கிடைத்தேனா என்று முனகியவாறே சென்றேன். வாய்க்குள்ளே முனகாதே உரக்கப் பேசு!

முணங்கு–தல் muṇaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. குரலை யடக்கிப் பேசுதல்; to mutter, murmur; to grumble. 2. வேதனையாற் புலம்புதல்; to moan.

முனி–தல் muṉi-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. வெறுத்தல்; to dislike. "முனித னினைதல் வெரூஉதன் மடிமை" (தொல்.பொருள்.260). "முனிதக நிறுத்த நல்கல் எவ்வம்" (அகநா.98:4). "முனிபடர் உழந்தபாடில் உண்கண்" (குறு.357:1)."துளிகூர் மனத்தார் முனிபடர் உழக்கும்" (நற்.262:5)."முனித்தலைப் புதல்வர் தந்தை" (புறநா.250:8). 2. சினங் கொள்ளுதல்; to be angry with. "முடிபொருளன்று முனியன் முனியல்"(பரிபா.20:93).

ம., க., து. முனி.

முனை[1]–தல் muṉai-,2 செ.கு.வி. (v.i.) பொருதல்; to fight. "வில்லோர் உழவர் வெம்முனைச் சீறூர்" (நற்.3:5).

க., து. முநி.

முனை[2]–தல் muṉai-,2 செ.கு.வி. (v.i.) ஊக்கங் கொள்ளுதல்; to be zealous, enthusiastic. 'அவன் அந்தச் செயலில் முனைந்திருக்கிறான்' (உ.வ.).

முனை[3]–தல் muṉai-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. சினத்தல்; to be angry with; to resent. 2. வெறுத்தல்; to dislike. "இன்றீம் பாலை முனையின்" (பெரும்பாண்.180).

க., து. முநி.

முனை[4]–த்தல் muṉai-, 4 செ.கு.வி. (v.i.) 1. செயலில் முனைந்து இறங்குதல்; to be active, busy oneself in, bestir oneself. "முனைத்திடா தசத்துச் சத்தின்முன்" (சி.சி.7:1). 2.மூண்டு நிற்றல்; to be deeply engaged. 3. எடை கூடுதல்; to be of overweight. சருக்கரையைக் கொஞ்சம் முனைக்கப் போடு(உ.வ.).4.முயற்சிமேற் கொள்ளுதல்; முயலுதல்; take efforts; attempt. சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட முனைந்தார். ஒன்றைப் பற்றிச் சிந்திக்க முனையும் போது தான் அதில் உள்ள இன்னல்கள் தெரிய வரும்.

முனைமழுங்கு[1]–தல் muṉai-maḻuṅgu-, 5 செ.கு.வி. (v.i.) கூர்மை

கெடுதல்; to become blunt, as the edge of an instrument.

முனைமழுங்கு²–தல் muṉai-maḻuṅgu-, *5* செ.கு.வி. (v.i.) ஊக்கங் குன்றுதல்; to become dispirited, lose courage.

—

மூ–த்தல் mū-, *4* செ.கு.வி. (v.i) *1.* அகவையுயர்தல்; to be senior in age. "மூத்தோன் வருக வென்னாது" *(புறநா.183). 2.* முதுமை யுறுதல்; to become old; to be older than another. "தமியள் மூத்தற்று" *(குறள், 1007). 3.* முடிதல்; to end."மூவா முதலாவுலகம்" *(சீவக.1). 4.* கேடுறுதல்; to be damaged or spoiled. "மதிலெய்த மூவாச்சிலை முதல்வர்க்கு" *(தேவா.936, 4).*

க. மூது

மூக்கறு¹–த்தல் mūkkaṟu-, *4* செ.கு.வி. (v.i.) மூக்கை அறுத்தல்; to disfigure one by cutting off one's nose. "தங்கையும் மூக்கறுத்தாள் தான் தானே" *(இராமநா. உயுத்.44).*

மூக்கறு²–த்தல் mūkkaṟu-, *4* செ.கு.வி. (v.i.) *1.*ஒரு சூழ்நிலையில் தெரிந்தோ தெரியாமலோ ஒன்றை வெளிப்படுத்துவதன் மூலம் ஒருவரை இழிவு படுத்துதல்; humiliate; snub. *2.* மானக்கேடு செய்தல் *(இராமநா.உயுத்.44);* to put one to disgrace. "முதலாளி சொன்னது முத்தாபோச்சு தொழிலாளி சொன்னது மூக்கறுந்து போச்சு" *(பழ.).*

மூக்காலழு–தல் mūkkāl-aḻu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* சிணுங்குதல் *(உ.வ.);* to whine, snivel, indicating discontent or unwillingness. *2.* சிறிய செயலுக்குப் பெருமுயற்சி யெடுத்துக்கொள்ளுதல்; to take more effort for less work. இந்தச் சிறிய வேலை செய்வதற்கே நீ மூக்காலழுகிறாய். நான் இதற்குமேல் செய்திருக்கிறேன் *(உ.வ.).*

மூக்குயர்¹–தல் mūkkuyar-, *2* செ.கு.வி. (v.i.) மூக்கு நீண்டு காணுகை; இது ஒரு வகை இறப்பிற்கான குறி என்பர்; nose appearing to be elongated, this is one of the symptoms of death.

மூக்குயர்²–த்தல் mūkkuyar-, *2* செ.கு.வி. (v.i.) பிறந்த குழந்தையின் மூக்கைச் சப்பையாகாமலிருக்க இழுத்து விடுதல்; to pinch up the nose of a new - born infant to prevent it being flat - nosed. "அண்ணா உரிஞ்சி மூக்குயிர்த்தார்" *(சீவக.2703).*

மூக்கைநுழை–த்தல் mūkkai-nuḻai-, *4* செ.கு.வி. (v.i.) பிறருடைய செய்கையில் அழைப்பில்லாமல் தலையிடுதல்; poke one's nose. நீ அடுத்தவர் வழக்கில் மூக்கை நுழைக்காதே?

மூகா–த்தல் mūgā-, *4* செ.கு.வி. (v.i.) பேசாமலிருத்தல் *(யாழ். அக.);* to be silent.

மூச்சடை–த்தல் mūccaḍai-, *4* செ. குன்றாவி. (v.t.) மூச்சுத் திணறச் செய்தல்; to cause choking.

மூச்சுப்பிடி–த்தல் mūccu-p-piḍi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* மூச்சுக்காற்றை உள்ளடக்குதல் *(வின்.);* to control or suppress the breath. *2.* மூச்சுத் திணறுதல் *(வின்.);* to be short of breath. *3.* இடுப்பில் சுளுக்கிக் கொள்ளுதல்; to be sprained at the hip. மூட்டையைத் தூக்கினேன். மூச்சுப் பிடித்துக் கொண்டு விட்டது. *4.* முழுமூச்சாக முயலுதல்; to strain one's powers.

மூச்சுமுட்டு–தல் mūccu-muṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) மூச்சுத் தடைப்பட்டுத் திணறுதல்; suffocate; breathe hard. சமையல் அறையின் புகையால் அம்மாவுக்கு மூச்சு முட்டியது *(உ.வ.).*

மூச்சுவாங்கு–தல் mūccu-vāṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* மூச்சுக் காற்றை உள்ளே அடக்குதல் *(யாழ்.அக.);* to restrain breath, as in making an effort or dragging a heavy thing. *2.* பெருமூச்சு விடுதல்; to breathe hard. மூச்சு வாங்க ஓடி வந்தான். *3.* வெடிப்புக் காணுதல்; to crack, split open, to give way, as a wall. இந்தக் கட்டடம் மூச்சு வாங்கி விட்டது.

மூச்சுவிடு¹–தல் mūccu-viḍu-, *20* செ.கு.வி. (v.i.) இயற்கையான காற்றை மூக்கின் வழியே உள்ளே இழுத்து, இழுத்த காற்றை வெளியே விடுதல்; to breathe respire. மூன்று மாடி ஏறி வந்திருக்கிறேன், கொஞ்சம் மூச்சு விட்டுக் கொள்கிறேன். "மூச்சு விடுமுன்னே" *(தனிப்பா. 80:160).*

மூச்சுவிடு²–தல் mūccu-viḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* எதிர்மறையில் அல்லது எதிர்மறைப் பொருளில் சிறிதளவு தெரிவித்தல்; make even a mention of say not to breathe a word. அப்பாவிடம் எழுது கோலைத் தொலைத்தது பற்றி மூச்சு விடாதே!. நேரில் சந்தித்த போது தனக்கு வேலை கிடைத்தது குறித்து அவர் மூச்சு விடவில்லை. *2.* மூச்சு வாங்கு-தல் பார்க்க; see mūccu-vāṅgu².

மூசி–த்தல் mūši-, *4* செ.கு.வி. (v.i.) மூச்சிழைத்தல்; gasp.

மூசு¹–தல் mūšu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* மொய்த்தல்; to swarm about, gather round. "வண்டு மூசுதேறன் மாந்தி" *(நெடுநல்.33).* "மிஞ்றுமூசு கவுள சிறுகண் யானை" *(அகநா.159:16).* "புன்மூசு கவலைய முண்மிடை வேலி" *(புறநா.116:4)."*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே" *(அப்பர் தேவாரம்). 2.* மூச்சு விடுதல்; to respire.

தெ. மூசுறு

மூசு²–தல் mūšu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* கெடுதல் *(வின்.);* to go bad, to be spoiled, rancid. *2.* சாதல் *(பிங்.);* to die. *3.*மோப்பம் பிடித்தல்; to sniff. "நாசிமூசி" *(திருவாலவா. 36 : 22).*

தெ.மூட்சூட்சு

மூஞ்சு–தல் mūñju-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.நக்கியுண்ணுதல்;* to lick. *2. மூசு-தல் (வின்.) பார்க்க;* see mūšu-.

மூட்கு¹–தல் mūṭku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அகப்பையால் எடுத்தல் (இ.வ.);* to ladle out, as rice from a pot.

மூட்கு²–தல் mūṭku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *சிக்கலை விடுவித்தல் (இ.வ.);* to unravel, to free, as from an encumbrance.

மூட்டு¹–தல் mūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தீ உண்டாக்குதல்; அடுப்பில் நெருப்பு பற்ற வைத்தல்;* make fire kindle; fire in the hearth. "*கல்லா உமணர்க்குத் தீமூட்டாகும்*" *(அகநா.257:17).* "*மூட்டிய தீ*" *(நாலடி, 224). தீ மூட்டி குளிர் காய்ந்தனர். அடுப்பை மூட்டி உலை வைத்தல். 2. சிரிப்பு, சினம் முதலியவற்றை உண்டாக்குதல் அல்லது ஏற்படுத்துதல்;* make some one laugh or angry; create mischief. *தண்ணீர் குடிக்கும் போது சிரிப்பு மூட்டாதே! உங்களுக்குள் வாய்ச்சண்டை மூட்டி விட்டது யார்?*

மூட்டு²–தல் mūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *சணற்பை, துணி முதலியவற்றில் இரு விளிம்புகள் இணையும்படி சேர்த்தல்; சேர்த்துத் தைத்தல்;* bring closer; sew together. *மிக எளிமையாக நெல் கூலத்தை மூட்டினான். நிறவேட்டி (லுங்கி)யை மூட்டித் தைத்துத்தர ஐந்து ரூபாயா?*

மூட்டு³–தல் mūṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒன்றைச் செலுத்துதல்;* to cause to enter, to put into. "*கடுபுகு கதிர் மூட்டி*" *(கலித்.8). 2. பொருந்துதல், கூடுதல்;* to join, link. "*கால் கொடுத்தெலும்பு மூட்டி*" *(தேவா.631:3). 3. பகையை ஏற்படுத்தி சண்டைக்குத் தூண்டி விடுதல்;* to stimulate, as a quarrel, to stir up, as feelings. *அவனைப் பற்றி இவனிடத்தில் மூட்டினான். 4. தைத்தல்;* to stitch, sew together. *5. மிகைப்படுத்துதல் (வின்.);* to increase. *இருவருக்கும் நன்றாய் மூட்டிவிட்டு விட்டான் (உ.வ.).*

தெ. முட்டிஞ்சு; ம. மூட்டுக.

மூடு¹–தல் mūḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கதவு, பலகணி (சன்னல்) போன்றவற்றை அடைத்தல்;* close of doors, etc., shut a door, etc. *பலகணியை (சன்னலை) மூடாதே! 2. பெட்டி, பை முதலியவற்றின் திறப்பை (ஒரு பொருளை உள்ளே போட முடியாத அளவுக்கு) அடைத்தல்;* be in closed condition of a case, box, etc.; close a case, box, etc. *நான் பார்த்த போது பெட்டி மூடித்தான் இருந்தது. தண்ணீர்த் தவலையை மூட மறந்து விட்டேன். 3. கண், வாய் முதலியவற்றின் இமைகளை, உதடுகளை ஒன்று சேர்த்தல்;* close, close the eyes, mouth. *ஊழ்கத்தின் (தியானத்தின்) போது அவருடைய கண்கள் மூடி இருந்தன. வாயை மூடித்தூங்கு! 4. நீட்டிய நிலையில் இருக்கும் புத்தகம் போன்றவற்றை மடக்கியோ, இணைத்தோ ஒன்று சேர்த்தல்;* close, close the fingers, the book, etc. *பிறந்த குழந்தையின் கை மூடி இருக்கும். கொட்டாவி வந்ததும் புத்தகத்தை மூடினான். 5. மறைக்கப் பட்டிருத்தல் அல்லது மறைத்தல்;* to hide, screen; to obscure. "*மூடி மேனியை*" *(கம்பரா.பிரமாத்திர.173). பனிமூடிய மலை. கையால் காதை மூடினான். 6. கல்வி நிறுவனம், தொழிற்சாலை முதலியவை இடைக் காலமாகவோ நிலையாகவோ செயல்படாமல் நிறுத்தி வைத்தல்;* be closed, shut down for the day or permanently, close a shop, instituions, factory etc, for the day or permanently. *விரைந்து போ, கடை மூடி விடும். நிருவாகம் தொழிற்சாலையை மூடிவிட முடிவு செய்துள்ளது. 7. வெளியேறும் நீர் முதலிய நீர்மங்களைக் குழாய் அல்லது அதன் அமைப்பிலிருந்து வெளி யேறாமல் நிறுத்துதல்;* stop, close, turn off the flow of water etc. from a tap etc. *குழாயை மூடிவிட்டாயா? 8. போர்த்தல்;* to cover, shroud, veil."*மூடித்தீக் கொண்டெழுவர்*" *(நாலடி, 24).* "*மூடி முக்காட்டுக்குள்ளே போகிறவள்தான் ஓடி, ஓடி மாப்பிள்ளை கொள்வாள்*" *(பழ.). 9. அடைத்தல்;* to shut in, enclose; to close, as the eyes; to shut, as the mouth. *கண்மூடித் திறந்தான். 10. சுற்றிக் கொள்ளுதல்;* to surround, encompass. "*ஆர்த்துமண்டி மூடினான்*" *(கம்பரா. நாகபாச. 92).*

தெ. மூயு; க. முச்சு; ம. முடுக.

மூடு²–தல் mūḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *நோய் முதலியன மிகுதல்;* to reach a critical stage, as a disease, to come to a head.

மூதலி–த்தல் mūdali-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மெய்ப்பித்தல், நிறுவுதல்;* to establish with evidence to confront with proof. "*அவன் படியை நெஞ்சுக்கு மூதலிக்கிறார்*" *(ஈடு,1.10 : 5).*

மூதறி–தல் mūdaṟi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அறிவு முதிர்தல்;* to be ripe in wisdom. *2. பழமையான செய்திகளை அறிதல்;* to know the past."*மூதறியு மம்மனை மார் சொல்லுவார்*" *(திவ்.இயற்.சிறிய.ம.19).*

மூதிரி–த்தல் mūdiri-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மூதலி-த்தல் பார்க்க;* see mūdali-.

மூதுணர்–தல் mūduṇar-, *2 செ.குன்றாவி.* (v.t.) *நன்றாக உணர்தல்;* to know thoroughly, to have ripe knowledge of. "*மூதுணர்ந்தவ ரன்றி மொழிவரோ*" *(உபதேசகா. சிவபுண்.229).*

மூய்¹–தல் mūy-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. மூடுதல் (திவா.);* to cover. "*பருமணன் மூஉய்*" *(பரிபா.10 : 4). 2. நிரப்புதல்;* to full. "*கயிறுகுறு முகவை மூயின*" *(பதிற்றுப்.22).*

தெ. மூயு.

மூய்²–தல் mūy-, *1 செ.கு.வி.* (v.i.) *1. நெருங்கிச் சூழ்தல்;* to surround closely."*ஆயிரரு மங்கண் மூயினர் களண்ணலை*" *(கந்தபு. சகத் திரவா.18). 2. முடிதல்;* to end. *கதை மூய்ந்தது.*

மூய்³–தல் mūy-, *2 செ.குன்றாவி.* (v.t.) *துப்புதல் (இ.வ.);* to spit.

மூரலி–த்தல் mūrali, *4 செ.கு.வி.* (v.i.) *புன்முறுவல் செய்தல்;* to laugh, smile. "*மூரலித்த முகத்தினன்*" *(உபதேசகா. அயமுகி.61).*

மூவு–தல் mūvu-, *5 செ.கு.வி.* (v.i.) *விலகுதல் (யாழ்.அக.);* to separate, remove.

த. மூவு-தல்; **E.** move.

மூழ்¹–தல் mūḻ-, *2 செ.கு.வி.* (v.i.) *பற்றிக் கொள்ளுதல்;* to seize, take hold of. "*மூழ்ந்த பிணி நலிய*" *(நன்.417,விருத்.).*

மூழ்²–த்தல் mūḻ-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மூழ்கச் செய்தல்;* to submerge, engulf. "*மூழ்த்த நாளந்நீரை மீனாயமைத்த பெருமானை*" *(திவ். பெரியதி. 6.8:2).*

மூழ்³–த்தல் mūḻ-, *4 செ.கு.வி.* (v.i.) *முதிர்தல் (பதிற்றுப். அரும்.);* to be mature.

மூழ்⁴–த்தல் mūḻ-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மூடுதல்;* to close, as a bud. "*மறவரும் வாய் மூழ்த்தனரே*" *(புறநா.336). 2. மொய்த்தல்;* to swarm round. "*கதழ்பு மூழ்த்தேறி*" *(பரிபா.10 : 18). 3. வளைத்தல்;* to surround. "*முரணுடை வேட்டுவர் மூழ்த்தனர்*" *(பெருங்.உஞ்சைக்.56 : 49).*

மூழ்கு¹–தல் mūḻgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நீர் மட்டத்தின் கீழ் செல்லுதல், முழுகுதல்;* submerge, get drowned; sink. *பயிர்கள் நீரில் மூழ்கி உள்ளன. 2. நினைவு முதலிய வற்றில் அழுந்துதல், துயரம் முதலியவற்றில் ஆழ்தல், அமிழ்தல்;* get buried in thought, etc., be immersed in grief, etc. "*வேட்கை வெந்நீரிற் கடிப்ப மூழ்கி*" *(திருவாச. 6:41).* "*சுரையம்பு மூழ்க*" *(கலித்.6). பழைய நினைவு களில் மூழ்கிப் போனார். வேலையில் மூழ்கிவிட்டால் வீட்டை மறந்து விடுவார்.*

மூழ்கு²–தல் mūḻgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. புகுதல்;* to reach, enter. "*வானமூழ்கிச் சில் காற்றிசைக்கும்*" *(மதுரைக். 357). 2. மறைதல்;* to be hidden, screened. "*வியன்மலை மூழ்கிச் சுடர்கான் மாறிய செவ்வி நோக்கி*" *(சிறுபாண்.170). 3. தங்குதல்;* to abide, to remain. "*முளிமுதன் மூழ்கிய வெம்மை தீர்ந்து*" *(கலித்.16).*

தெ. முநுகு; க. முழுகு; ம. முநுகுக.

மூழ்கு³–தல் mūḻgu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஈடுவைத்த பொருள் திருப்ப முடியாமல் போதல்;* pledged things cannot retained.

மூழ்த்து–தல் mūḻttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஆழ்த்துதல்;* to plunge, immense, weigh down.

மூள்(ளு)–தல் mūḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. நெருப்புப் பற்றுதல்;* kindle, catch fire. "*ஆலையில் மூண்ட நெருப்பைத் தீயணைப்பு வீரர்கள் அணைத்தனர்*". *2. சினம், ஐயம் முதலியவை உள்ளத்தில் எழுதல்;* to rouse the anger, suspicion. *அவன் பார்க்கும் பார்வையைக் கண்டதுமே அவருக்கு ஐயம் மூண்டது. 3. ஊக்கத்துடன் முற்படுதல் (முனைதல்);* to enter upon with earnestness. "*முதலற முடிக்க மூண்டான்*" *(கம்பரா. மாயாசீ.96). 4. இடையூறு (தகராறு), கலவரம் முதலியன ஏற்படுதல்;* to dispute, war, etc. *தலைவர் சுடப் பட்டதால் நாட்டில் கலவரம் மூண்டது. 5. பொருந்துதல்;* to be suitable. *6. கூடுதல், மிகுதல்;* to increase.

bk

மெச்சு–தல் meccu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. புகழ்தல், பாராட்டுதல்;* to praise, extol, to flatter, to land. "*அமரர் மெச்ச மலர்மல்கு பொழில்*" *(தேவா. 543, 9).* "*சிறுவனின் மறத்தன்மையை மெச்சாதவர்கள் இல்லை*" *(உ.வ.). 2. மதித்தல் (வின்.);* to esteem. *3. வியத்தல்;* to admire greatly, wonder. "*மெச்சூது சங்கமிடத்தான்*" *(திவ். பெரியாழ். 2, 1, 1).*

ம. மெச்சுக; க., தெ., குட., பட. மெச்சு; து. மெச்சு. மெச்சி; கோத. மெச்.

மெட்டு–தல் meṭṭu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *காலால் தாக்குதல்;* to spurn or push with the foot. "*நிகளத்தை மெட்டி மெட்டிப் பொடிப்படுத்தி*" *(பழனிப்பிள்ளைத். 12).*

க., தெ., பட. மெட்டு; கோத. மெட்; துட. மோட். மா. மட்யெ.

மெத்து¹–தல் mettu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மிகுதல்;* to abound, increase. "*மெத்து பேரொளியாய்*" *(சேதுபு. தோத். 66). 2. நிரம்புதல்;* to be filled. "*மேவிய வடுவு மெத்தல்*" *(திருவாலவா. 1, 5).*

ம. மெத்துக; க., தெ. மெத்து.

மெத்து²–தல் mettu-, *15 செ.குன்றாவி.* (v.t.) *1. நிரப்புதல்;* to fill. "*மனக்குறை மெத்தவுள்ளுபு*" *(தணிக்கைப்பு. வீராட். 35). 2. அப்புதல்;* to pad, pack, to plaster. "*இறைச்சி மெத்தி*" *(சீவக. 1577). 3. பூசுதல்;* to smear, apply.

க., தெ., து., பட. மெத்து; கொலா. மெத்; நா., பர். மெத்த்.

மெதி–த்தல் medi-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. பாதத்தை ஒன்றன்மேல் வைத்தல், அடிவைத்தல்;* to tread on. *2. காலால் துவைத்தல்;* to tread down, trample on.

ம. மெதி, மெதிக்க, மெதியுக; க. மிதி; தெ. மெதுகு; து. மெதிபுனி, மெதுபுனி, மெத்புனி.

மெதுக்கிடு–தல் medukkiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *மெது வாயிருத்தல்;* to be soft.

து. மெதுஆபினி.

மெதுமெது–த்தல் medu-medu-, *11 செ.கு.வி.* (v.i.) *மென்மையாயிருத்தல் (வின்.);* to be soft to the touch as fruit.

மெய்–த்தல் mey-, *11 செ.கு.வி.* (v.i.) *உண்மையாதல்;* to be true.

"மெய்த்த திருவள்ளுவனார்" (சோமேச. முது. 41).

மெய்செய்–தல் mey-šey-, 1 செ.கு.வி. (v.i.) 1. உண்மையுடன் நடத்தல்; to be true, to be faithful. "காரியத்தில் வந்தால் மெய் செய்வாரைப் போல பொய் செய்து தலைகாட்டும்" (ஈடு. 10, 4, 5, பக். 141). 2. செயலை நிறைவேற்றுதல்; to accomplish a thing. "தொடங்கின செயலை மெய் செய்து வரவேண்டாமா?".

மெய்தீய்–தல் mey-tiy-, 2 செ.குன்றாவி. (v.t.) நேர்மை தவறுதல்; to prove false. "உத்தமநம்பி விகாதம் பண்ணி நியாயம் போலே மெய் தீய்ந்து" (கோயிலொ. 96).

மெய்ப்படு–தல் mey-p-paḍu-, 17 செ.குன்றாவி. (v.t.) 1. உண்மையாதல்; to be true; to prove correct. "மெய்ப்பட வுணர்வு தோன்று" (சீவக. 2726). 2. தெய்வம், பேய் ஆகியன ஏறுதல்; to be possessed, as by a deity or a spirit. "முருகுமெய்ப்பட்ட புலைத்தி போல" (புறநா. 259).

மெய்ப்பி–த்தல் meyppi-, 4 செ.குன்றாவி. (v.t.) எண்பித்தல், நிறுவுதல்; to prove, substantiate. "அவன் மீது கூறிய குற்றத்தை உன்னால் மெய்ப்பிக்க முடியுமா?" (உவ.).

மெய்ம்மற–த்தல் mey-m-maṟa-, 3 செ.கு.வி. (v.i.) 1. அறிவு நீங்குதல்; to swoon, lose consciousness. "மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்" (புறநா.25). 2. (ஒன்றில் ஈடுபட்டு) எங்கு இருக்கிறோம் என்ன செய்கிறோம் என்னும் உணர்வை இழத்தல், தன்னை மறத்தல்; to forget or lose oneself. "கடவுளைக் கண்டு வணங்குதலை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தேன் அதனால் நீ வந்தது தெரியவில்லை". 3. சோர்வடைதல்; to weary. 4. மயக்கமடைதல்; faint. 5. கள் வெறியேறுதல் (போதையாதல்); to be intoxicated.

ம. மெய்மறக்க.

மெய்ம்மையா–தல் meymmai-yā-, 6 செ.கு.வி. (v.i.) 1. உண்மையாதல்; to prove true. 2. இயல்பாதல்; to remain without change. "மெய்ம்மையாதலு முறழத் தோன்றலும்" (தொல். எழுத். 156).

மெய்யுரை–த்தல் mey-y-urai-, 4 செ.கு.வி. (v.i.) உரை சொல்லல்; to write faithful commentary, as true to the text.

மெய்வருத்து–த்தல் mey-varuttu-, 5 செ.கு.வி. (v.i.) உடல் வருந்த உழைத்தல்; to strain the body.

மெருகிடு–தல் merugiḍu-, 18 செ.கு.வி. & செ.குன்றாவி. (v.i.) & (v.t.) பளபளப்பு உண்டாகச் செய்தல் (வின்.); to polish, burnish.

மெருள்(ளு)–தல் meruḷ(ḷu)-, 16 செ.கு.வி. (v.i.) அச்சமடைதல்; to fear, to shy.

ம. மிரளுக.

மெல்(லு)–தல் mel(lu)-, 3 செ.குன்றாவி. (v.t.) 1. கடின அல்லது விழுங்க முடியாத உணவைப் பல்லால் அரைத்து மென்மையாக்குதல், (உணவுப் பொருள் முதலியவற்றைப்) பற்களால் கடித்துக் கரைத்தல், வாயாற் குதட்டுதல்; to chew, as betel, to masticate. "மெல்லிலைப் பண்டியும்" (சீவக. 62). "மாடு புல்லை மென்று கொண்டிருந்தது" (உ.வ.). 2. கடித்தல்; to chide. "இரவும் பகலும் என்னை மென்று கொண்டிருக்கிறான்".

ம. மெல்லுக; க. மெல், மெலி, மெலு, மெல்லு, மெலகு, மெலுகு, மெல்கு, மலகு, மலுகு; தெ. மெக்கு; து. மென்னு; கோத. மெக்; துட. மெள்க்; கூ. ம்ரேட, ம்ரேடி.

மெல்கு–தல் melgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மெதுவாதல்; to become soft. "காலின் மென்மைக்குத் தக்கபடி தானும் மெல்கிற்றிலன்" (சிலப். 15, 138, அரும்.). 2. நொய்ய தாதல் (இலேசாதல்) (வின்.); to be light. 3. இளகுதல்; to melt.

மெல்லப்பேசு–தல் mella-p-pēšu-, 5 செ.கு.வி. (v.i.) 1.குரலைத் தாழ்த்திப் பேசுதல்; to speak softly.

து. மெல்ல பாதெருனி.

மெலி¹–தல் meli-, 2 செ.கு.வி. (v.i.) 1. வலி குறைதல்; to be weak. 2. உடல் இளைத்தல், பருமன் குறைதல்; to become lean, thin. "ஆக்கையைப் போக்கப் பெற்று மெலிகின்ற என்னை" (திருவாச. 6, 10). "நோயினால் மெலிந்த உடம்பு" (உ.வ.). 3. வருந்துதல்; to suffer, to languish. "அளப்பினான் மெலிகிற்பாள்" (காசிக. மகளிர். 8). 4. அழிதல்; to perish. "மெலியு நம்முடன் மேல்வினை யானவே" (தேவா.3,18,10). 5. எளியராதல் (வின்.); to become poor; to be reduced in circumstances. 6. இனமொத்த மெல்லெழுத்தாக மாறுதல்; (Gram.) to be softened, as a hard consonant into the corresonding soft or nasal consonant. "குழைத்த வென்பது குழைந்தவென மெலிந்து நின்றது" (புறநா. 21, உரை). 7. சுரத்திற்றாழ்தல்; (Mus.) to be lowered in pitch. "யாழ்மேற் பாலை யிடமுறை மெலிய" (சிலப். 3, 92).

ம. மெலி; து. மெலி (நோய் போன்றவற்றால் உடல் எடை குறைதல்).

மெலி²–த்தல் meli-, 2 செ.குன்றாவி. (v.t.) 1. வலி குறைத்தல்; to weaken. 2. உடல் மெலியச் செய்தல்; to make thin, lean. 3. வருந்துதல்; to cause suffering. 4. அழித்தல்; to destroy. "கடற்கரை மெலிக்குங் காவிரி" (சிலப். 6, 164). 5. வல்லினவெழுத்தை இனமொத்த மெல்லின வெழுத்தாக மாற்றுதல்; (Gram.) to soften as a hard consonant into the corresonding soft or nasal consonant. "மெலிக்கும் வழி மெலித்தலும்" (தொல். சொல். 403). 6. சுரத்தைத் தாழ்த்தல்; (Mus.) to lower the pitch.

மெலிவடை–தல் melivaḍai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. உடல் வளர்ச்சி குன்றுதல், ஒல்லியாதல்;* to become lean. *2. வலுக்குறைதல்;* to grow weak.

மெலிவுறு–தல் melivuṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. வலுவிழத்தல்;* to grow weak. *2. இளைத்தல்;* to become thin, lean.

மெழுகு–தல் meḻugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. இடத்தைத் தூய்மை செய்வதற்காகச் சாணக் கரைசலால் தேய்த்துப் பூசுதல் அல்லது நீரால் கழுவுதல்;* to cleanse the floor with cow-dung water. "*நின்றிருக் கோயிறா கேன் மெழுகேன்*" *(திருவாச. 5, 14). 2. பூசுதல்;* to smear, as the body with sandal paste. "*முகிண் முலை மெழுகிய சாந்தின்*" *(கம்பரா. பிணிவீ. 53). 3. குற்றத்தை மறைத்துப் பூசிவிடுதல்;* to gloss over, varnish.

மென்றுவிழுங்கு–தல் meṉṟu-viḻuṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *முழுமையாகச் சொல்லத் தயங்கி இடையிடுதல்;* to be hesitant in-expressing openly.'*செலவழித்ததற்குக் கணக்குக் கேட்டால் மென்று விழுங்குகிறான்*' *(உ.வ.).*

மென்னு–தல் meṉṉu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நெம்புதல் (இ.வ.);* to lift with a lever.

மெனக்கெடு–தல் meṉakkeḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. வீணாதல்;* to be wasted, as time, labour, etc."*என் வேலையெல்லாம் மெனக்கெட்டது*". *2. வேறு வேலைகளை விட்டு ஒன்றிற் கவனங் கொள்ளுதல்;* to act with a single purpose; as setting aside everything else."*அதை மெனக்கெட்டுச் செய்து முடித்தான்*".

ம. மெனக்கெடு; து. மெனக்கடு, மெனெக்கடு (ஓய்வு, விடுப்பு, ஒழிவு).

nk

மேக்கடி[1]–த்தல் mēkkaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *ஆப்பறைதல் (வின்.);* to drive in a wedge or stake.

மேக்கடி[2]–த்தல் mēkkaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வஞ்சித்தல் (வின்.);* to deceive.

மேடிடு–தல் mēḍiḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *(அடித்து வரப்படும்) மண்ணால் (பள்ளம்) நிரப்பப்படுதல்;* to silt up. "*வண்டல் அதிகமாகப் படிந்து ஏரிகள் மேடிட்டு விட்டன*".

மேடையேற்று–தல் mēḍai-y-ēṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *நாடகம், நடனம் முதலியவற்றைப் பலரும் கண்டு களிக்க நிகழ்த்துதல்;* to stage (a drama, dance etc.). "*இராமாயண நாட்டிய நாடகத்தை நூறாவது முறையாக மேடையேற்றி நடித்தனர்*".

மேடையேறு–தல் mēḍai-y-ēṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நிகழ்ச்சியாக மேடையில் அளிக்கப்படுதல்;* (to drama, dance, etc.) to be staged. "*நாடகங்கள் பலவும் மேடையேற வாய்ப்பில்லாமல் இருக்கின்றன*".

மேதகு–தல் mē-dagu-, *2 செ.கு.வி.* (v.i.) *மேன்மையாதல்;* to be eminent. "*மேதகு காலினூக்கங் கண்டோன்*" *(திருவாச. 3, 23).*

மேம்படு–தல் mēmbaḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *சிறத்தல்;* to rise high, as in status, to be pre-eminent to be great, as is learning. "*நல்லவையுண் மேம்பட்ட கல்வியும்*" *(திருகடு. 8).*

மேய்[1]–தல் mēy-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. விலங்கு முதலியன உணவு கொள்ளுதல்;* to graze, feed, prey on as beasts or birds, to gnaw, as white ants. "*பெற்றம்..... மேய்ந்தற்று*" *(குறள்.273),* "*மேயுங் குருகினங்காள்*" *(திவ். திருவாய். 6, 1, 1),* "*மாடுகள் புல் மேய்ந்து கொண்டிருந்தன*" *(உ.வ.). 2. பருகுதல்;* drink. "*கலங்கு தெண்டிரை மேய்ந்து*" *(சீவக. 32). 3. கெடுத்தல் (வின்.);* to spoil. "*இந்த வண்டி மாட்டை மேய்ந்துவிடும்*". *4. பறித்து நுகர்தல் (கொ.வ.);* to obtain and enjoy unlawfully. *5. மேற்போதல்;* to dominate, to surpass. "*பேச்சில் அவன் எல்லாரையும் மேய்ந்து விடுவான்*".

ம. மேய்க; க. மே, மேயு, மேய்; தெ. மேயு; து. மேயுணி, மேபிணி, மேபாவுனி; பட. மேயி; கோத. மெய், மெச்; துட. மிய்; கொலா. மி; நா. மீய்; பர். மேய்; கோண். மேயியானா; குவி. மெயலி; குரு. மென்னா; மா. மினெ; பிரா. பெய்.

மேய்[2]–தல் mēy-, *2 செ.கு.வி.* (v.i.) *1. திரிதல்;* to roam. "*உடன்மேயுங் கருநாராய்*" *(திவ். திருவாய். 6, 1, 2). 2. விடனாய்த் திரிதல்;* to lead a profligate life.

மேய்[3]–தல் mēy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கூரை முதலியன வேய்தல்;* to cover fully, to thatch, as with leaves, to roof, as with tiles. "*இறைச்சி மேய்ந்து தோல்படுத்து*" *(தேவா. 838, 4).*

மேய்[4]–த்தல் mēy-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. புல் முதலியவற்றை விலங்குகள் உண்ணச் செய்தல்;* to graze, to feed. "*பசு..... மேய்ப்பாரு மின்றி*" *(திருமந். 2883).* "*அவர்கள் கால்நடைகளை மேய்ப்பதையே தொழிலாகக் கொண்ட வர்கள்*" *(உ.வ.). 2. மருந்து முதலியன செலுத்துதல் (வின்.);* to administer, as physic to horses. "*மசாலை மேய்க்கிறான்*". *3. அடக்கியாளுதல் (கொ.வ.);* to govern.

ம. மேய்க்க; க. மேயிசு, மேசு; தெ. மேபின்சு; து. மேபாவுனி; கோத. மேச்; துட. மேசு; கொலா., நா. மீப்.

மேல்வா–தல் (மேல்வருதல்) mēl-vā-, *18 செ.கு.வி.* (v.i.) *1. எழுதல்;* to rise. "*நாச்செற்று விக்குண் மேல் வாராமுன்*" *(குறள்.335). 2. ஒருவர் மீது எதிர்த்து வருதல்;* to advance against, as an enemy. "*பரதனிப் படைகொடு..... மேல் வந்தான்*" *(கம்பரா. கிளை. 27). 3. நெருங்கி வருதல்;* to approach. "*மூப்பு மேல் வாராமை முன்னே*" *(நாலடி.326).*

மேல்விழு–தல் mēl-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *1. முற்படச்*

சென்று பாய்தல்; to rush, as upon an enemy. "கம்ஸப் ரேரிதராய்..... மேல்விழுவார்கள்" (ஈடு. 10, 3, 9). 2. வலியப் புகுதல்; to volunteer, to offer voluntarily. "மேல் வீழ்ந்து நாமே விளம்பினோம்" (தனிப்பா. ii, 97, 249). 3. ஊக்கத்துடன் செயலில் முந்துதல்; to fall to work with enthusiasm.

க.மேல்பிழு; து.மேலுகு பூருனி (ஒன்றின் மேல் விழுதல், தாக்குதல்); பட. மேலெபுய்.

மேலா[1]–தல் mēla-, *6* செ.கு.வி. (v.i.) *1.* சிறத்தல் (கொ.வ.); to excel. *2.* வெற்றி பெறுதல்; to succeed, overcome.

து. மேலாபுனி.

மேலா[2]–த்தல் mēla-, *12* செ.குன்றாவி. (v.t.) மேற்புற மாக்குதல் (யாழ்.அக.); to turn upward.

மேலிடு[1]–தல் mēliḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* அதிகமாதல்; to increase, grow, as love. *2.* மேலெழுதல் (யாழ்.அக.); to rise above, as water. *3.* உமட்டுதல்; to be vomitted. "சாப்பிட்ட சோறு மேலிடுகிறது".

மேலிடு[2]–தல் mēliḍu-, *18* செ.குன்றாவி. (v.t.) தலைக்கீடு கொள்ளுதல்; to put forward, as a pretext. "மூரிவெஞ் சிலைமேலிட்டு மொய்யமர் மூட்டிவிட்டான்" (கம்பரா. பரசு. 28).

மேலுக்கெடு–த்தல் mēlu-k-keḍu-, *4* செ.கு.வி. (v.i.) வாயிலெடுத்தல் (இ.வ.); to vomit.

மேலெழு–தல் mēleḻu-, *2* செ.கு.வி. (v.i.) *1.* மேற்கிளம்புதல்; to rise up. *2.* மிதத்தல்; to float. *3.* எதிர்நோக்கி வருதல்; to advance against a person. "அடர்ந்து வந்தனன் மேலெழ" (திருவாலவா. 46, 15). *4.* மேம்படுதல்; to be superior.

மேலெழுத்திடு–தல் mēleḻuttiḍu-, *20* செ.கு.வி. (v.i.) ஒப்புக் கொண்டதற்கு அறிகுறியாகக் கையெழுத்திடுதல்; to accept, certify. "எதிரிகள் மதித்து மேலெழுத்திட்ட வீரப்பாட்டுக்கு" (ஈடு. 6, 2, 2).

மேலெறி–தல் mēleṟi-, *2* செ.குன்றாவி. (v.t.) *1.* மேலே வீசுதல்; to upthrow. *2.* பொருள், விலங்கு, மனிதன் போன்றவற்றின் மேல் எறிதல்; to throw upon a thing, animal, person etc.

மேலேறு–தல் mēlēṟu-, *5* செ.கு.வி. (v.i.) மேலே செல்லுதல்; to climb up. "மரத்தின் மேலேறுவதற்குப் பயிற்சி தேவை" (உ.வ.).

து. மேலரி, மேலாரி.

மேலோங்கு–தல் mēl-ōṅgu-, *5* செ.கு.வி. (v.i.) கூடுதலாதல்; to prevail over. "பாவேந்தர் பாக்களில் தமிழுணர்வு மேலோங்கி நிற்பதை எளிதில் உணரலாம்" (உ.வ.). 2. வலிமை பெறுதல்; to get the upper hand of. "குடும்பத்தில் அறிவுள்ள மக்களின் கை மேலோங் கியிருப்பது இயல்பு தானே" (உ.வ.).

மேலோடு–தல் mēl-ōḍu-, *5* செ.கு.வி. (v.i.) எதிர்த்துத் தாக்குதல்; to attack, rush against. "மெய் சொல்லா விராவணனை மேலோடி யீடழித்து" (தேவா.158, 2).

மேவா–தல் (மேவருதல்) mēvā-, *18* செ.கு.வி. (v.i.) பொருத்தமாதல்; to be fitted for. "மேவரக் கிளந்து" (குறிஞ்சிப். 138).

மேவி–த்தல் mēvi-, *11* செ.குன்றாவி. (v.i.) தங்கச் செய்தல்; to cause to stay. "புதல்வி தனை..... திருக்கோயின் மேவித்தான்" (உபதேசகா. உருத்திராக். 171).

ம. மேவல் (தங்குதல்)

மேவு[1]–தல் mēvu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* அடைதல்; to join, to reach. "மேகநாதன் புகுந்திலங்கை மேயநாள்" (கம்பரா. திருவவ.10). 2. விரும்புதல்; to desire. "அவருந்தா மேவன செய்தொழுகலான்" (குறள்.1073). 3. நேசித்தல்; to love. "மேவியன்றாநிரை காத்தவன்" (திவ். திருவாய். 3, 2, 9). 4. ஓதுதல்; to learn, study. "மேவரு முதுமொழி விழுத்தவ" (பரிபா. 8, 9). 5. உண்ணுதல் (வின்.); to eat. 6. சமமாக்குதல்; to level, make even, as the ground. "வயலை மேவினான்". 7. மேலிட்டுக் கொள்ளுதல்; to manifest, assume. "மேவற்க மென்மை பகை வகரத்து" (குறள். 877). 8. வேய்தல்; to thatch, cover over. "தோலைமேவி" (ஈடு. 5, 1, 5).

ம. மேவுக.

மேவு[2]–தல் mēvu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* அமர்தல்; to abide, dwell. "திருத்துருத்தி மேயான்" (திருவாச. 31, 3). 2. பொருந்துதல்; to be attached, to be united, to be fitted or joined. "ஒருமை வினைமேவு முள்ளத் தினை" (பரிபா.13, 49).

மேவு[3]–தல் mēvu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1.* படிதல், பரவுதல்; to spread. "கண்ணுக்கெட்டிய வரை மணல் மேவிக் கிடந்தது". 2. நிரப்புதல்; to spread. "சரளைக் கற்களை மேவிய பிறகு தார் ஊற்றி சாலை அமைத்தனர்".

மேளமடி–த்தல் mēḷamaḍi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* தவில் அடித்தல்; to beat the drum. 2. பக்க இசைக் கருவிகளோடு நாயனம் இசைத்தல்; to play on the pipe with accompaniments. 3. விளம்பரப்படுத்துதல்; to give publicity. 4. ஒத்துப் பேசுதல்; to play second fiddle, to endorse slavishly. 5. வருந்தி முயலுதல்; to strive hard. "சோற்றுக்கு மேள மடிக்கிறான்".

மேளி–த்தல் mēḷi-, *11* செ.குன்றாவி. (v.t.) கூட்டுதல் (இலக். அக.); to assemble, collect.

க. மேளிசு.

மேற்கொள்(ளு)–தல் mēṟ-koḷ(ḷu)-, *10* செ.குன்றாவி. (v.t.) *1.* மேலேறுதல்; to mount, as a horse. "பரிமேற் கொண்ட பாண்டியனார்" (திருவாச. 36, 3). 2. மேம்படுதல்

(வின்.); to gain prominence, to overcome, surpass, to rise above. "அவனை நான் மேற்கொண்டுவிட்டேன்". *3.* உறுதி செய்தல்; to assert, as a proposition. "பிரபஞ்சம் உற்பத்தி திதிநாச முடைத்தென மேற்கொண்டது" *(சி.போ. பா. 1, பக். 43). 4.* ஏற்றுக் கொள்ளுதல்; to embrace, as a doctrine, to accept. "அந்தக் கொள்கையை அவன் மேற்கொண்டவன்". *5.* முயலுதல்; to undertake, attempt. "அவமதனையஃதிலார் மேற்கொள்வது" *(குறள். 262). 6.* பொறுப்பு கொள்ளுதல் *(வகித்தல்);* to assume the responsibility of. "அரசியலை மேற்கொண்டான்". *7.* வஞ்சினமுரைத்தல்; to make a vow, to asseverate. *8.* நடத்துதல்; to conduct. "அனுமதியின்றி கட்டப்பெற்ற வீடுகளைக் குறித்து ஆய்வு மேற் கொள்ளப்படும்". *9.* கைக்கொள்ளுதல்; to take measure, to adopt methods. "நோய் தடுப்பு வழிமுறைகள் விரைவில் மேற்கொள்ள வேண்டும்". *10.* செயல் படுதல்; to function. "தொழிலாளிகள் தங்கள் தேவைகளை நிறைவு செய்தற் பொருட்டு உண்ணா நோன்பு மேற் கொண்டனர்".

மேற்செல்(லு)–தல் mēṟ-cel(lu)-, *13* செ.கு.வி. (v.i.) *1.* தாழ்வான பகுதியிலிருந்து உயர்வான பகுதிக்குச் செல்லுதல்; to go or climb upward as of tree, mountain, upstairs, etc. "நீலமலை, ஆனைமலை, சேர்வரையான் மலை முதலிய மலைகளிலுள்ள இற்றைப் பழங்குடி மாந்தரெல்லாம் கொள்ளைக்கும் போருக்குந் தப்பிக் கீழிருந்து மேற்சென்றவரே". *2.* அப்பாற்போதல்; to go on, go further. *3.* மேற்படுதல்; to excel, surpass. *4.* படையெடுத்தல் *(திவா.);* to invade. *5.* விரைதல்; to hasten. "நல்வினை மேற்சென்று செய்யப்படும்" *(குறள். 335).*

க. மேலுவோகு; *பட.* மேலெகோகு.

மேற்படு–தல் mēṟ-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* சிறந்திருத்தல்; to predominate, preponderate. *2.* குணத்தில் மேம்படுதல்; to excel in quality, to be superior. *3.* அதிகமாதல்; to increase, to be excessive. "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" *(திருவாச. 3, 4).*

மேற்பார்–த்தல் mēṟ-pār-, *4* செ.குன்றாவி. (v.t.) கண்காணித்தல்; to supervise. "மேற்பார்க்க மைந்தரு மூவாவெருதும்" *(தனிப்பா.).*

மேனோக்கு–தல் mēṉōkku-, *5* செ.கு.வி. (v.i.) *1.* மேல் எழுதல் *(வின்.);* to rise. *2.* பெருகுதல்; to increase. *3.* கக்குதல் *(கொ.வ.);* to vomit. *4.* பேரவாக் கொள்ளுதல்; to aspire, ardently, desire. *5.* செருக்குறுதல்; to be haughty.

ik

மை–த்தல் mai-, *11* செ.கு.வி. (v.i.) *1.* கறுத்தல்; to become black. "மைத்திருள் கூர்ந்த" *(மணிமே. 12, 85). 2.* ஒளி மழுங்குதல்; to be dim. "மைத்துன நீண்ட வாட்டங் கண்ணார்" *(சீவக. 2333).*

துட. மொய் *(இருட்டாதல்).*

மையா–த்தல் mai-y-ā, *12* செ.கு.வி. (v.i.) *1.* மயங்குதல்; to be perplexed. "மலர் நாணின் மையாத்தி நெஞ்சே" *(குறள். 1112). 2.* ஒளி மழுங்குதல்; to become dim. "விண் மேலொளியெல்லாமையாந் தொடங்கி" *(பு.வெ.9, 13). 3.* பொலிவழிதல்; to look wan, to look deserted. "மாந்த ரென்ப ரொருவருமின்றி மையாந்த வந்நகர்" *(காஞ்சிப்பு. நகரேற். 101).*

மையிடு–தல் mai-y-iḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* கண்ணுக்கு மையெழுதுதல்; to paint the eyes, with collyrium. "வடிவேல் விழிக்குமையிட்டாள்" *(விறலிவிடு.). 2.* புதைபொருள் முதலியவற்றைக் கண்டுபிடிக்க உள்ளங்கையிலேனும் கண்களிலேனும் மந்திர மை போடுதல்; to apply magic pigment to one's eyes or palm for obtaining a vision of stolen goods or hidden treasure.

மைவை–த்தல் mai-vai-, *4* செ.கு.வி. (v.i.) *1.* மையிட்டு மயக்குதல்; to bewitch, to enchant by means of magic pigment. *2.* கண்ணுக்கு மை *(அஞ்சனம்)* உருவாக்கல் *(இ.வ.);* to prepare collyrium for the eye. *3.* வெறியுண்டாகும்படி கள்குடித்தல்; to drink to intoxication.

bkh

மொக்களி[1]–த்தல் mokkaḷi-, *4* செ.குன்றாவி. (v.t.) செலவில் *(பயணத்தில்)* தடை செய்தல் *(வின்.);* to detain a person in his journey.

மொக்களி[2]–த்தல் mokkaḷi-, *4* செ.கு.வி. (v.i.) பயணத்தில் தங்குதல் *(யாழ்.அக.);* to stop on a journey, to sojuorn.

மொக்குளி–த்தல் mokkuḷi-, *4* செ.கு.வி. (v.i.) *1.* குமிழி யுண்டாதல் *(வின்.);* to bubble up. *2.* திரளுதல் *(யாழ். அக.);* to gather up.

க. முக்குளிசு.

மொக்கைபோ–தல் mokkai-pō-, *8* செ.கு.வி. (v.i.) *1.* அவமானப்படுதல்; to be disgraced. "மொக்கை போகச் செகுத்திடுவார் பொருள்" *(திருப்பு. 603). 2.* முனை மழுங்குதல் *(யாழ்.அக.);* to become blunt, as a knife. "அரிவாள் மணை மொக்கை போய்விட்டது" *(உ.வ.).*

மொக்கையா–தல் mokkai-y-ā-, *6* செ.கு.வி. (v.i.) முனை மழுங்குதல்; to be blunt, as a knife. "கத்தி மொக்கையாய் விட்டது, சற்று தீட்டிக் கொடு" *(உ.வ.).*

மொங்கான்வை–த்தல் moṅgāṉ-vai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.* இடிகட்டையால் நொறுக்குதல்; to ram. *2.* ஏமாற்றுதல் *(கொ.வ.);* to deceive.

மொச்சடி–த்தல் moccaḍi-, *4* செ.கு.வி. (v.i.) தீய *(துர்)* நாற்றம்

வீசுதல் (வின்.); to emit a foul smell, as goats.

தெ. முருகு.

மொசி[1]–தல் mosi-, 2 செ.கு.வி. (v.i.) மொய்த்தல்; to swarm. "கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்" (பதிற்றுப். 71, 6).

மொசி[2]–த்தல் mosi-, 2 செ.குன்றாவி. (v.t.) தின்னுதல்; to eat. "மையூன் மொசித்த வொக்க லொடு" (புறநா. 96).

மொட்டி–த்தல் moṭṭi-, 11 செ.கு.வி. (v.i.) 1. குவிதல்; to close in like a bud. "காமலர் மொட்டித் திருதய மலர" (திருவாச. 4, 84). 2. அரும்புதல் (சங்.அக.); to bud, to shoot forth buds.

மொட்டையடி–த்தல் moṭṭai-y-aḍi, 4 செ.கு.வி. (v.i.) 1. தலை முழுதும் மழித்தல்; to shaven the head entirely. "ஆண்டுக் கொருமுறை மொட்டை யடிப்பதைச் சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்" (உ.வ.). 2. முழுதுங் கொள்ளை கொள்ளுதல்; to strip completely, as a man of his wealth, as tree of its fruits. "மரத்தை மொட்டையடித்து விட்டார்கள்".

மொத்து[1]–தல் mottu-, 5 செ.குன்றாவி. (v.t.) உரக்க அல்லது வலுக்க அடித்தல்; to strike, beat. "எதிர்மொத்தி நின்று" (கம்பரா. முதற்போ. 66). "எல்லாருஞ் சேர்ந்து நன்றாய் மொத்தி விட்டார்கள்" (உ.வ.).

ம. மொத்துக; க. மோது; தெ. மொத்து; து. முத்தெ.

மொத்து[2]–தல் mottu-, 5 செ.கு.வி. (v.i.) வீங்குதல்; to swell. "அவனுக்கு முகம் மொத்தியிருக்கிறது" (உ.வ.).

மொப்படி–த்தல் moppaḍi-, 4 செ.கு.வி. (v.i.) வெடி நாற்றம் வீசுதல் (வின்.); to emit a rancid smell.

மொய்[1]–த்தல் moy-, 11 செ.கு.வி. (v.i.) 1. சுற்றிச் சூழ்தல் அல்லது சூழ்ந்திருத்தல், நெருங்குதல்; to crowd, press, throng, swarm, as flies, bees, ants. "வாளோர் மொய்ப்ப" (புறநா. 13). "ஈக்கள் மொய்த்த பண்டங்களை வாங்காதீர்கள்" (உ.வ.). 2. மேற்பரவுதல் (வின்.); to spread, as an eruption. "கரப்பான் மொய்க்கிறது". 3. இருத்தல் (அக.நி.); to abide in.

க. முசுரு.

மொய்[2]–த்தல் moy-, 4 செ.குன்றாவி. (v.i.) 1. நெருங்கிச் சுற்றுதல்; to crowd round, swarm round. 2. தொல்லைப் படுத்துதல்; to annoy, tease. 3. மூடுதல்; to cover, to enclose.

மொய்யெழுது[1]–தல் moy-y-eḻudu, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மணம் முதலியவற்றில் நன்கொடை யளித்தல்; to give presents on marriage or other special occasions. 2. அற(தரும)த்திற்குச் சிறு தொகை உதவுதல் (வின்.); to subscribe small sums to a charity. 3. கொடுத்துத் திரும்பக் கிடையாதனவற்றைச் செலவாக எழுதுதல்; to write off as irrecoverable.

மொய்யெழுது[2]–தல் moy-y-eḻudu, 5 செ.கு.வி. (v.i.) திருமணம் முதலியவற்றில் அளிக்கும் நன்கொடை களைப் பதிவு செய்தல்; to make a list of presents given on marriage or other special occasions.

மொழச்சு–தல் moḻaccu-, 5 செ.குன்றாவி. (v.t.) மழித்தல் (கொச்சை); to shave.

மொழி–தல் moḻi-, 4 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, speak. "மனத்தொடு வாய்மை மொழியின்" (குறள். 295).

மொழிபிசகு–தல் moḻi-pišagu-, 5 செ.கு.வி. (v.i.) வாக்குத் தவறுதல்; to fail in keeping one's word.

மொழிபெயர்–த்தல் moḻi-peyar, 4 செ.குன்றாவி. (v.t.) நூல் முதலியவற்றை வேறு மொழியில் மொழிமாற்றம் செய்தல்; to interpret, translate. "மொழி பெயர்த்ததர்ப்பட யாத்தல்" (தொல். பொ. 652).

மொழுப்பு–தல் moḻuppu-, 5 செ.குன்றாவி. (v.t.) காரியத்தை மழுப்புதல் (வின்.); to protract, as a business; to delay, put off on frivolous pretences; to evade.

மொள்(ளு)–தல் moḷ(ḷu)-, 2 செ.குன்றாவி. (v.t.) நீர் முதலியன முகத்தல் (அக.நி.); to take in a vessel, as water. "இன்ப மொண்டே யருந்தி யிளைப்பாளினேன்" (தாயு. பாயப்புலி. 27).

மா. முள்கெ.

nkh

மோ[1]–த்தல் mō-, 12 செ.குன்றாவி. (v.t.) மூக்கால் நுகர்தல்; to smell. "மோப்பக் குழையு மனிச்சம்" (குறள். 90). "பழைய சோற்றை நாய் மோந்து பார்த்து விட்டுச் சாப்பிடாமல் ஓடிவிட்டது" (உ.வ.).

க., பட. மூசு.

மோ[2]–த்தல் mō-, 12 செ.குன்றாவி. (v.t.) மொள்ளுதல் (தைலவ. தைல.); to take in a vessel, as water. 2. மேற்கொள்ளுதல்; to undertake. "மோந்த போர் முகத்து" (உபதேசகா. சிவவிரத. 327).

க., பட. மொகெ.

மோகி[1]–த்தல் mōgi-, 11 செ.கு.வி. (v.i.) 1. மனம் தடுமாறுதல் (விநாயகபு. 74, 218); to be confused, bewildered. 2. காமத்தால் மயங்குதல்; to be infatuated with love.

மோசி[1]–த்தல் mōši-, 11 செ.கு.வி. (v.i.) பிசகிப்போதல் (சப்.); to err, to be misled.

மோசி[2]–த்தல் mōši-, 11 செ.கு.வி. (v.i.) விட்டொழிதல்; to give up. "சங்கை மோசிப்பாயே" (கைவல். சந். 21).

மோடிடு–தல் mōḍiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. சோரத்திற் கருப்பமாதல் (இ.வ.);* to become pregnant by illicit inter course. *2.* ஆறு முதலியவற்றில் மணலால் மேடு உண்டாதல்; to form shoals, as in river.

மோது–தல் mōdu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* ஒரு பரப்பில் வேகமாக இடித்தல்; to hit, strike, smite, butt. "*கனகநிற வேத னபயமிட மோது கரகமல*" *(திருப்பு. 543),* "*வேகமாக வந்த பேருந்து மரத்தின் மேல் மோதியது*" *(உ.வ.). 2.* தாக்குதல்; to blow against, dash against, push against with force. "*மோது முது திரையால் மொத்துண்டு*" *(சிலப். 7, கட்டுரை. 7). 3.* அப்புதல் *(வின்.);* to plaster, put as, as earth to a mud wall. "*சுவர்க்கு மண் மோதுகிறது*". *4.* சண்டை போடுதல்; to fight, clash, as of nations. "*போரில் இரண்டு நாடுகளும் கடுமையாக மோதிக் கொண்டன*" *(உ.வ.). 5.* விளையாட்டு, தேர்தல் போன்றவற்றில் போட்டி யிடுதல்; to clash, meet in games, in election etc. "*இறுதிப் போட்டியில் தமிழ் நாட்டணியும் கருநாடக அணியும் மோதிக் கொண்டன*" *(உ.வ.).* "*நண்பர்களா யிருந்த இருவரும் வரும் தேர்தலில் மோதிக்கொள்ள இருக்கின்றனர்*" *(உ.வ.).*

ம. மோதுக; க., தெ., பட. மோது.

மோப்பம்பிடி–த்தல் mōppam-piḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* மணத்தால் உணர்ந்து கண்டறிதல்; to scent, to discern by smell, as hounds on a track. "*கொலை நடந்த இடத்திலிருந்து மோப்பம் பிடித்துக் கொண்டு ஓடிய நாய் அருகிலுள்ள சாலையில் போய் நின்றது*" *(உ.வ.). 2.* காமவிருப்பத்துடன் ஒருத்தியைத் தொடர்தல்; to follow a woman with improper desire.

மோரு–தல் mōru-, *3 செ.குன்றாவி.* (v.t.) முகர்தல்; to smell.

மோளு–தல் mōḷu-, *12 செ.கு.வி.* (v.i.) சிறுநீர் கழித்தல்; to pass urine, to urinate. "*பிள்ளை படுக்கையில் மோண்டு விடுகிறது*" *(உ.வ.).*

மோறா–த்தல் mōṟā-, *7 செ.கு.வி.* (v.i.) *1.* அங்காத்தல்; to gape. "*நரசிம்மத்தினுடைய மோறாந்த முகத்தையும்*" *(ஈடு. 4, 8, 7). 2.* சோம்பியிருத்தல்; to be lazy. "*மோறாந் தொரொரு கானினையா திருந்தாலும்*" *(தேவா. 1051, 3).*

a

யா–த்தல் yā-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* பிணித்தல்; lure, decoy. *2.* ஒன்றோ டொன்று பொருத்துதல், கட்டுதல்; to tie up.“*யானையால் யானையாத்தற்று*” *(குறள், 678). 3.* நீர் முதலியன அணைத்தல்; to dam up, to confine. “*பெருக யாத்தநீர்*” *(காஞ்சிப்பு. நாட். 75). 4.* விட்டு நீங்காதிருத்தல்; to be inseparable from.“*பெருக யாத்தநீர்*” *(காஞ்சிப்பு. நாட். 75).*“*மற்றவனை யாக்குமவர் யாக்கு மணைந்து*” *(ஏலா.8). 5.* அணிதல், கட்டிக் கொள்ளுதல்; to adorn. "*மிடற்றமை மரபின அரைக்கு யாக்குநரும்*" *(புறநா.378:77). 6.* செய்யுள் முதலியன அமைத்தல்; to compose, as a poem. “மொழி பெயர்த்ததர்ப்பட யாத்தல்” *(தொல். பொருள். 652). 7.* சொல்லுதல்; to tell, utter, say. “சூத்திரத் தியல்பெனயாத்தனர் புலவர்” *(தொல்.பொருள்.655). 8.* தொடர்பு கொள்ளுதல்; to contact. "*குன்றா இனனும் அறிந்தியாக்க நட்பு*" *(குறள், 793).*

யாப்புறு–த்தல் – yāppuṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* வலி யுறுத்துதல்; to enforce.“*பெயர்த்துரை அதனை யாப்புறுத்தற் பொருட்டு*” *(குறள், 944, உரை). 2.* கட்டுப்படுத்தல்; to bound.

யாபி–த்தல் yābi-, **4** *செ.கு.வி.* (v.i.) *1.* பொழுது போக்குதல்; to while away one's time. *2.*துய்த்தல்; to enjoy.“*சுசிக்குச் சுசிந்தை சொல்லுக்குத் தேரூர், இருக்கப் பறக்கை, யாபிக்கக் கோட்டாறு*” *(நாஞ்.).*

யாழ்செய்–தல் yāḻ-šey-,*1 செ.கு.வி.* (v.i.) பாடுதல்; to sing, to tune music. *தேனின மலங்கலுண்டியாழ் செயும்*” *(சீவக. 1012).*

யானைபாய்ச்சு–தல் yāṉai-pāyccu-,*5 செ.கு.வி.* (v.i.) யானையை மதம்படுமாறு செய்தல்; to make an elephant go must or musth.“*மறைந்தி யானை பாய்ச்சி விடல்*” *(பழ. 62).*

யானைபிடி–த்தல் yāṉai-piḍi-,*4 செ.கு.வி.* (v.i.) காட்டில் வாழும் யானையைக் குழிவெட்டிப் பிடித்தல்; to catch a wild elephant by the way of digging pit.

t

வக்கணி[1]–த்தல் vakkaṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) விளக்க மாயுரைத்தல்; to expound in detail. “*புராணஞ் சுருதிப் பொருள் வக்கணிப்பவன்*”. *(மேருமந்.244).*

தெ. வக்கணிண்சு; க. வக்கணிசு.

வக்கணி[2]–த்தல் vakkaṇi-, *4 செ.கு.வி.* (v.i.) மனங் கோணி யிருத்தல்; சார்ந்திருத்தல் *(இ.வ.);* to be at variance. ‘வக்கணித்து வழக்குரைத்தவன் வழி முறையின்றி அழிந்து போவான்’.

வக்கரி–த்தல் vakkari-, *4 செ.கு.வி.* (v.i.) கோணி யிருத்தல், முரண்பாடாயிருத்தல்; to be crooked, to be contradictory. "*வக்கரித்தல் நீ வாரா வண்மையென்ன*" *(கொண்டல்விடு. 8.)* வக்கர காளியம்மன் கோவில். *2.* வளைந்திருத்தல், மடங்குதல்; to be bent. 3.மடங்கித் திரும்புதல்; to turn back. 4.ஆலத்தி செய்தல்; to wave, as of camphor,etc.in front

வக்களி–த்தல் vakkaḷi-, **4** *செ.கு.வி.* (v.i.) வளைந்திருத்தல்; to become crooked.

வக்காணி[1]–த்தல் vakkāṇi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *விளக்க மாயுரைத்தல்;* to expound in detail. "*நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்காணித்தறிவான்*" *(சோழவமி. 53).*

தெ. வக்கணின்சு.

வக்காணி[2]–த்தல் vakkāṇi-, *4 செ.கு.வி.* (v.i.)*சொற்போர் புரிதல்;* to carry on disputations.

வக்காளி–த்தல் vakkāḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *வானம் வெளி வாங்குதல் (தஞ்.வழ.);* to clear up, as the sky.

வக்கிணி–த்தல் vakkiṇi-, *4 செ.கு.வி.*(v.i.) *மனங் கோணி யிருத்தல்;* to be at variance. *வக்கிணித்த வீடு வாழாது (உ.வ.).*

வக்கு–தல் vakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வதக்குதல்;* singe, to roast."*கொழுப்பரிந்து... வக்குவன வக்குவித்து*" *(பெரியபு.கண்ணப்.145). 2. தீய்த்தல், பொசுக்குதல்;* to burn.

வகிடெடு–த்தல் vagiḍeḍu-, *4 செ.கு.வி.* (v.i.) **1.** வாகெடுத்தல்; to make partition of hair.

வகிர்[1]–தல் vagir-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1.துண்டாக அறுத்தல் (சது.);* to slice; to cut in slips. *2. பிளத்தல் (சது.);* to split. *3. கீறுதல்;* to cleave."*பகிர்ந்தான் சில வகிர்ந்தான் சில*" *(கம்பரா.அதிகாய.160). 4. கிழித்துத் திறத்தல்;* to tear open. *5. பிரித்தெடுத்தல்;* to rip up. *வாழைமரத்தை வகிர்ந்து தண்டினைப் பிரித் தெடுத்தனர் (உ.வ.).*

வகிரு–தல் vagiru-, *2 செ.கு.வி.* (v.i.) *1. அறுத்தல்;* cutting. *2. பங்கு செய்தல்;* slicing.

வகிரெடு–த்தல் vagir-eḍu-, **4 செ. குன்றாவி.** (v.t.) *உச்சி யினின்றும் நெற்றியின் நடுப்பகுதி வரை மயிரை ஒழுங்குபடப் பிரித்தல்;* to part the hair from the crown to the forehead.

வகு[1]–தல் vagu-, *2 செ.குன்றாவி.* (v.t.) *பிளத்தல்;* to split."*மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணி யொடு*" *(புறநா. 264).*

வகு[2]–த்தல் vagu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கூறுபடுத்து தல்;* to separate, to divide. *2. பகிர்ந்து கொடுத்தல்;* to apportion."*பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து*" *(நெடுநல்.78). 3. இனம்பற்றிப் பிரித்தல்;* to classify. *4. தலைப்புவாரியாக ஒதுக்கீடு செய்தல்;* to allot under different heads. *5. அமர்த்துதல்;* to assign, appoint. "*வகுத்தான் வகுத்த வகையல்லால்*" *(குறள், 377). 6. பகுத்துக் கணக்கிடுதல் (கணக்.);* to divide. *7. வகைப்படுத்திச் சொல்லுதல்;* to narrate categorically. *அவன் கதை வகுப்பாய் (பாகவத.1 ஸ்ரீ. நாரதர். 5). 8. முறையோடு செலவிடுதல்;* to expend methodically. "*காத்த வகுத்தலும்*"*(குறள், 385.). 9. படைத்தல்;* to create, as for a special purpose. "*என்னை வகுத்திலையே லிடும்பைக் கிடம் யாது சொல்லே*" *(தேவா. 643, 2). 10. பூசுதல்;* to daub. "*அஞ்சனம் வகுத்து*" *(பெருங். உஞ்சைக். 34, 15).*

ஒ.நோ. L., facio, to make, do, **E.** manufacture.

வகை[1]–தல் vagai-, *2 செ.கு.வி.* (v.i.) *பிரிவுபடுதல்;* to be divided, sub-divide.

வகை[2]–தல் vagai-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. வகைப் படுத்துதல்;* to arrange a subject."*மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்*"*(கம்பரா.மந்தரை.60.).2.வகிர்தல், பிளத்தல்;* to divide; to cut. "*வாளை யீர்ந்தடி வல்லிதின் வகைஇ*" *(நற்.129.). 3. ஆராய்தல்;* to consider, weigh. "*நகர்நீ தவிர்வாயெனவும் வகையாது தொடர்ந்து (கம்பரா. பிராட்டி.16.).*

வகை[3]–தல் vagai-, *பெ.* (n.) *குறுகலான சந்து;* narrow lane.

வகைகூறு–தல் vagai-kūṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒரு சொல்லிற் குரிய பொருளை பலவாறு வகைப் படுத்திக் கூறுதல்;* to convey the meaning of a word, in various classsifications.

வகைதெரி–தல் vagai-teri-, *2 செ.கு.வி.* (v.i.) *ஒன்றன் தனிச் சிறப்பினைத் தெரிந்து செயல்படுதல்;* to do a thing after considering its special features.

வகைப்படுத்து–தல்vagai-p-paḍuttu-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. பங்கிடுதல் (சங்.அக.);* to divide. *2. வகையாகப் பிரித்தல்;* to classify and arrange.

வகையறி–தல் vagai-y-aṟi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. செய்யும் முறை தெரிதல்;* to know the way, to follow the proper course of action. 2.*கூறுபாடறிதல்;* to understand the bearings."*செல்வின் வகையறியார்*" *(குறள், 713.)*

வகையறு[1]–தல் vagai-y-aṟu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.அடிப் படைப் பொருளை இழத்தல்;* to lose the wherewithal. *2. ஆதரவற்றுப் போதல்;* to become helpless.

வகையறு[2]–த்தல் vagai-y-aṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *1.தெளிவாகப் பகுத்தறிதல்;* to discern. *2. நுணுக்கத்தை வேறுபடுத்தி விளக்குதல்;* to distinguish. *3. மறைக் குறியீடுகளைத் தெளிவுறுத்தல்;* to decipher. *4. சிக்கலறுத்தல், முடிச்ச விழ்த்தல்;* to unravel.

வகையிடு–தல் vagai-y-iḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.) *வகைப் படுத்துதல் (யாழ்.அக.)* பார்க்க; see vagai-p-paḍuttu.-,

வகைவை–த்தல் vagai-vai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. பொருட்டாகக் கொள்ளுதல்;* to pay attention to. *2. கணக்கிலெடுத்துக் கொள்ளுதல்;* to take into account. *இவன் நான் சொல்வதை வகை வைக்காமல் மனம் போனபோக்கில் நடக்கிறான் (நாஞ்.).*

3. கணக்கில் வரவு வைத்தல்; to credit to an account.

வசக்கு[1]–தல் vasakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.வயப் படுத்துதல், பழக்குதல்;* to break in, tame, train, subdue. *மாட்டை உழவுக்கு வசக்க வேணும். 2. வளையப் பண்ணுதல் (யாழ்.அக.);* to bend.

வசக்கு[2]–தல் vašakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *நிலத்தைப் பண்படுத்துதல்;* to reclaim or improve land. *'கட்டை பறிச்சு வசக்கி'* (தெ.கல்.தொ. 5,307).

வசக்கு[3]–தல்vašakku-, *5 செ.குன்றாவி.* (v.t.)*வாட்டுதல்;* to roast.

வசஞ்செய்–தல் vašañ-cey-, *1 செ. குன்றாவி.* (v.t.) *1. வயப்படுத்துதல்;* to entice, allure "*வாய் தரத் தக்கசொல்லி யென்னையுன் வசஞ்செய்வாயேல்*" *(கம்பரா. அங்கதன்றூது. 29); 2. (முற்றிலும் ஆளு கைக்கு உட்படுத்துதல்) அடக்குதல்;* to overcome, subdue. *3. கைப்பற்றுதல்;* to take possession of.

வசந்தப்பு–தல் vašan-tappu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. முறை கேடாதல் (வின்.);* to be on the wrong side, to be in the wrong place. *இது வசந்தப்பிச் சேர்த்திருக்கிறது. 2. அறிவு மயங்குதல்;* to lose conciousness. *அவன் வசந்தப்பி உளறுகிறான் (உ.வ.).*

வசப்படு–தல் vaša-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. கட்டுப் படுதல்;* to submit, to be brought into subjugation. *2. ஆளுமைக்கு உட்படுதல்;* to bring into one's possession. *3. நுண்ணித்தியாய் (தந்திரமாய்) வசமாக்குதல் (இ.வ.);* be entice.

வசப்படுத்து–தல் vašappaḍuttu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. கட்டுப்படுத்துதல்;* to submit, to subjugate. *2. ஆளுமைக்கு உட்படுத்துதல்;* to bring into one's possession. *3. நுண்ணித்தியாய் (தந்திரமாய்) வசமாக்குதல்;* to entice.

வசி[1]–தல் vaši-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. பிளத்தல்;* to split, to cut. *2.வெட்டுதல்;* to cut. "*வசிந்து வாங்கு நிமிர்தோள்*" *(திருமுரு.106).*

வசி[2]–தல் vaši-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வடுப்படுதல்;* to be dented or notched. *2. வளைதல் (பிங்.); (திருமுரு. 106. உரை.);* to bend.

வசி[3]–த்தல் vaši-, *4 செ.கு.வி.*(v.i.) *தங்குதல் (சூடா.), வதிதல், வாழ்தல்;* to dwell, live, abide, reside.

வசை[1]–தல் vašai-, *2 செ.கு.வி.*(v.i.) *வசைகூறுதல், பழித் துரைத்தல், பொய்க் குற்றஞ்சாட்டுதல்;* to censire, blame, calumniate. "*வசையுநர்க் கறுத்த பகைவர்*" *(பதிற்றுப்.32.15).*

வசை[2]–தல் vašai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வளைதல், கோடுதல்;* to bend, incline, to make crooked. *2. சூழப்படுதல்; வேலி போடுதல்;* to be environed, to be encom -passed; to be enclosed.

தெ. வஞ்சு.

வசை[3]–த்தல் vašai-,*4 செ.குன்றாவி.* (v.t.)*1. வளைத்தல்;* to bend, incline to make crooked. *2. சூழ்தல், வளைத்தல்;* to surround, encompass, encircle.

வசைநீங்கு–தல் vašai-nīṅgu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *கண்டனம் அல்லது குற்றத்திலிருந்து விலகுதல்;* to leave censure or blame.

வசைபாடு–தல் vašai-pāḍu-,*5 செ. குன்றாவி.* (v.t.) *1. திட்டுதல்;* to abuse, to scold. *'நீங்கள் ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவதை நிறுத்த வேண்டும்'. சிலர் வசைபாடுதலையே குறிக்கோளாகக் கொண்டுள் ளனர் (உ.வ.). 2. தரம் தாழ்த்திப் பேசுதல்;* to degrade. "*அவர் வசைபாடுவதில் வல்லவர்*" *(உ.வ.).*

வசையழி–த்தல்vašai-y-aḻi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *குற்றம் அல்லது பழியினை முழுதும் போக்குதல்;* to destroy or ruin.

வட்கு[1]–தல் vaṭku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வெட்குதல்;* to be ashamed. "*வட்கின வெனப் பெரிதடைத்தகுயில் வாய்கள்*" *(பாகவத.10, வேய்ங்குழ.6). 2. கூசுதல்;* to be shy, bashful. "*அரன்குன்றென்றே வட்கி*" *(திருக்கோ. 116). 3. கெடுதல்;* to be destroyed. "*அதகங் கண்ட பையணனாகம் போல வட்க*" *(சீவக.403). 4. தாழ்தல்;* to humble, to lower oneself. "*வாடிய காலத்தும் வட்குபவோ*" *(பழமொ. 204). 5. ஒளி மழுங்குதல் (சூடா.);* to be dim, to be lit faintly.

வட்கு[2]–தல் vaṭku-, *5 செ.கு.வி.* (v.i.) *வளம் பெறுதல், பகட்டாயிருத்தல்;* to thrive well, prosper, to flourish, to be luxuriant, as a plant."*முட் கொணச்சுமரம்.... வட்சி நீண்டதற் பின் மழுவுந் தெறும்*"*(சூளா. சீய.72).*

வட்கு[3]–தல் vaṭku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வணங்குதல், வழிபடுதல்;* to worship. *2. வளைதல்;* to bend.

வட்டஞ்சுற்று–தல் vattañ-cuṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *சுற்றி வளைந்து செல்லுதல்;* to go in a circuitous or round about route. "*வட்டஞ் சுற்றியும் வழியே போ*" *(நாஞ்.).*

வட்டணி–த்தல் vaṭṭaṇi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வட்ட மாக்குதல்;* to make round or circular, to encircle.

வட்டம்போடு–தல்vaṭṭam-pōḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *சூடடிக்க நெற்கதிர்களை நிலத்திற் பரப்புதல்;* to spread sheaves of paddy on the threshing floor for being threshed.

வட்டமிடு[1]–தல் vaṭṭam-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பறவை முதலியன சுற்றி வருதல்;* to hover about, as a hawk; to gyrate. *2. உருண்டையாதல்;* to be round or globular. "*வட்டமிட்டடியிட்டு*" *(தனிப்பா. i, 322,16).*

வட்டமிடு[2]–தல் vaṭṭa-iḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *நோக்கங்கொண்டு சுற்றுதல்;* to hang about in order to gain an object, to round about with a view to gain something. *கலுழன் இரையைத் தேடி வானத்தில் வட்டமிட்டுத் திரிகிறது.*

வட்டி[1]–த்தல் vaṭṭi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வட்டமாதல் (யாழ். அக.);* to be round in shape. *2. சுழலுதல், சுற்றிச் சுற்றி வருதல்;* to revolve, to move round and round, to gyrate. "*வட்டித்துப் புயலே நுரைஇய வியலிருணடுநாள்*" *(அகநா.28). 3. வஞ்சினமுரைத்தல், சூளுரைத்தல்;* to swear, to take an oath. "*வட்டித்து விட்டாளெறிந்தாள் (சிலப்.21:45). 4. தாள வொற்றறுத்தல் (இசை.);* to beat time, to deviate from rhyme of cymbals.

க. பட்டிசு.

வட்டி[2]–த்தல் vaṭṭi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தோள் புடைத்தல், வஞ்சினமுரைத்தலால் தோள் விம்மிப் புடைத்தல்;* to slap one's own shoulders, in defiance or challenge. "*செருவறைந்து பாழித்தோள் வட்டித்தார்*" *(பழமொ.326). 2. சுழற்றுதல்;* to whirl, to swing round. "*மருந்தில் கணிச்சி வருந்த வட்டித்து*" *(புறநா.42). 3. உருட்டுதல், சுற்றுதல், சுழற்றி எறிதல்;* rolling or throwing as of dice. "*சுழகத்துத் தவிராது வட்டிப்ப*" *(கலித்.136). 4. உணவு பரிமாறுதல் (வின்.);* to serve, as a meal. *5. கட்டுதல்;* to tie. "*அலகில் மாலை யார்ப்ப வட்டித்து*" *(புறநா. 394). 6. எழுதுதல் (சிலப்.21, 46, அரும்.);* to write. *7. வளைத்தல் (இலக். அக.).* to bend. *8. கடிதல்;* to reprove, reprimand, censure. *அவன் என்னை வட்டித்தான் (வின்).*

வடம்பிடி–த்தல் vaḍam-piḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வடத்தைப் பிடித்துத் தேரிழுத்தல்;* to pull or draw a temple-car by seizing it by its cables or thick ropes.

வடி[1]–தல் vaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஒழுகுதல்;* to drip, trickle, as water. *சீழ் வடிகின்றது. 2. நீர் முதலியன வற்றுதல்;* to be diminished, as water in a river; to flow back, ebb, as tide. "*வடியாத பவக்கடலும் வடிந்து*" *(அஷ்டப். திருவரங். கலம். 93). 3. திருந்துதல்;* to be perfected, as pronunciation. "*வடியா நாவின்*" *(புறநா. 47). 4. தெளிதல்;* to be clear, as sound. "*வடிமணி நின்றியம்ப*" *(பு.வெ.10, 14, பக்.116). 5. அழகு பெறுதல்;* to become handsome. "*வடுவின்று வடிந்த யாக்கையன்*" *(புறநா.180). 6. நீளுதல் (சூடா.);* become long. "*குழைவிரவு வடிகாதா*" *(தேவா.1091, 1).*

வடி[2]–தல் vaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *வீக்கம் வாங்கல்;* diminishing of swalling pus etc.

வடிக்கு–தல் vaḍikku-, *4 செ.கு.வி.*(v.i.) *1. வடியச் செய்தல்;* to filter. *2. களங்க மறுத்தல்;* to strain out. *3. காய்ச்சி இறக்குதல்;* to distil.

வடிகட்டு–தல் vaḍi-kaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.i.) *1. வடித்தல் ;* to strain; to filter. "*நீரை வடிகட்டி யெடு*". *2. சாரத்தைத் திரட்டுதல்;* to epitomise; to give the purport of.

வடிம்பிடு–தல் vaḍim-piḍu, *18 செ. குன்றாவி.* (v.t.) *1. கட்டாயப்படுத்துதல்;* to compel. "*வடிம்பிட்டு ஆசிரயிக்கைக்காக*" *(ஈடு.101, 4). 2. கோயில் தேரினைத் தணிபோட்டுக் கிளப்புதல் (ஈடு, 7, 2, 5, அரும்.);* to rise and start with a lever, as a temple-car. *3. தூண்டுதல், நகருதல்;* to urge, move. "*நெஞ்சிலே வடிம்பிட்டு..... ஸ்தோத்ரம் பண்ணா நின்றாள்*" *(ஈடு. 7, 2, 5). 4. குறை கூறுதல், பழி கூறுதல்;* to slander, blame. "*தாய்மாரும் ஊரவரும் வடிம்பிடுகிறார்களோ வென்று*" *(திவ். திருநெடுந். 21, வ்யா, பக். 170).*

வடியிடு–தல் vaḍi-y-iḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *வடித்தெடுத்தல்;* to be filtered. "*தெள்ளிமறை வடியிட்ட வமுதப்பிழம்பே*" *(தாயு.கருணா.8).*

வடிவமை–த்தல் vaḍivamai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. வடிவம் கிடைக்கும்படி செய்தல்;* to design, shape. *2. உருவாக்குதல்;* to architect. *இந்தத் திரையரங்கத்தை வடிவமைத்தவர் யார்?*

வடு–த்தல் vaḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வெளிப்படுத்துதல்;* to manifest. *2. பார்வைக்குக் காட்சியாக வைத்தல்;* to exhibit. "*வடுத்தெழு கொலை*" *(கல்லா. 5).*

வடுக்கு–தல் vaḍukku-, *5 செ.கு.வி.* (v.i.) *நூற்பாவில், வண்ணமேற்றாத முரட்டு நூலை ஏற்றுதல்;* to thrust undyed coarse thread into spinning mill.

வண்டலடி–த்தல் vaṇḍalaḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வயலுக்கு உரமாக வண்டல் பரப்புதல்* (C.G); to spread, alluvial deposit in fields, as manure. *2. வயல் மண்மேடிடுதல் (கொ.வ.);* to become silted up, as a field.

வண்டலிழை–த்தல் vaṇḍal-iḻai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மணலாற் சிற்றிலிழைத்து விளையாடுதல் (பொருந. 187, உரை);* to make a toy-house out of sand. *2. பருவமகளிர் விளையாட்டுகளுள் ஒன்று;* a play of virgins.

வண்டுகட்டு–தல் vaṇḍu-kaṭṭu-, *5 செ.குன்றாவி.*(v.i.) 1. *பானையின் வாயைச் சீலையால் மூடிக்கட்டுதல்;* to cover and tieup the mouth of a pot with cloth, in preserving things. "*நலமதாய்க் கவசம் தன்னில் நயமதாய் வண்டுகட்டி*".

வண்டுறுக்கு–தல் vaṇḍuṟukku-, *5 செ.கு.வி.* (v.i.) *உதட்டை*

மடக்கிக் கடித்தல் (திருநெல்.); to curl and bite one's lips.

வண்ணம்பூசு–தல் vaṇṇam-pūšu-, 5 செ.கு.வி. (v.i.) வண்ணக் கலவையைச் சுவற்றில் பூசுதல்; to rub the colour or paint.

வண்ணி–த்தல் vaṇṇi-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. புனைந் துரைத்தல்; to depict, describe. "வண்ணித்தலா வதில்லா" (சீவக. 2458). 2. போற்றி வணங்கிக் கூறுதல்; to praise, submissively. 3. மிகைபடக்கூறுதல் (வின்.); to exaggerate. 4. உவமித்தல் (வின்.); to illustrate by anology. 5. விரித்தல்; to expatiate, to write copiously.

வணக்கு–தல் vaṇakku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வளை வித்தல்; to bend, make flexible, as the body. 2. பணியச்செய்தல்; to make submissive. "மழபுலம் வணக்கிய மாவண் புல்லி" (அகநா. 61).

தெ. வந்தசுட (vantsuta) க. பக்சிசு (baggisu).

வணங்கு[1]–தல் vaṇaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நுடங்குதல்; to bend, to yield, as a freed in a flood. "வணங்கிடை" (பு.வெ.7, 27). 2. அடங்குதல்; to be submissive, gentle, modest. "வணங்கிய வாயினர்" (குறள். 419). 3. ஏவற்றொழில் செய்தல்; to perform menial service. "நம்மில் வந்து வணங்கியும்" (கலித். 76).

க. பக்கு.

வணங்கு[2]–தல் vaṇaṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வழிபடுதல், தொழுதல்; to worship, adore, revere, salute, pray respectfully. "எண் குணத்தான் றாளை வணங்காத் தலை" (குறள். 9). 2. சூழ்ந்து கொள்ளுதல்; to surround, encompass. "வணங்குமிப் பிறப்பிவை நினையாது" (திருவாச. 41, 6).

வணர்–தல் vaṇar-, 2 செ.கு.வி. (v.i.) 1. வளைதல்; to bend. "வணர்ந்தேந்து மருப்பின்" (மலைபடு. 37). 2. மயிர் குழன்றிருத்தல்; to curl, as the hair. "வெறிகமழ் வணரைம்பால்" (கலித். 57).

வணை[1]–தல் vaṇai-, 2 செ.கு.வி. (v.i.) வளைதல் (திருநெல்.); to bend.

வணை[2]–த்தல் vaṇai-, 4 செ.குன்றாவி. (v.t.) தண்ணீர் ஊற்றுதல்; to pour, as water from a pot.

வணை[3]–த்தல் vaṇai-, 4 செ.கு.வி. (v.i.) வளைத்தல் (நெல்லை.); to bend.

வத்தி–த்தல் vatti-, 4 செ.கு.வி. (v.i.) உளதாதல்; to exist. "பாருற வத்திக்குங் கொடியாள்" (உத்தரரா. அரக்க. 5).

வத்திவை–த்தல் vatti-vai-, 4 செ.கு.வி. (v.i.) 1. வெடிக் கொளுத்துதல்; to ignite the fuse. 2. சண்டை மூட்டுதல்; to stir up trouble; to instigate; to create misunderstanding as igniting combustibles. 3. கோட் சொல்லுதல்; to apply a piece of cloth soaked airth caustic to a sore.

வதக்கு–தல் vadakku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வாட்டுதல், பொரித்தல்; to roast, to dry. "பன்றி தன்னை யெரியினில் வதக்கி" (பெரியபு. கண்ணப்ப. 117). 2. வருத்துதல்; to harass, annoy.

வதங்கிப்போ–தல் vadaṅgi-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) வாடிப் போதல்; to dry up, to fade, wither. கடும் வெயிலால் பூக்களெல்லாம் வதங்கி விட்டன.

வதங்கு–தல் vadaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. வாடுதல்; to wither, fade, to grow dry. 2. சோர்தல்; to be discouraged or dispirited, to be fatigued.

வதறு[1]–தல் vadaṟu-, 2 செ.கு.வி. (v.i.) 1. வாயாடுதல் (வின்.); to chatter, prate; to be talkative. 2. மழலை மொழியாதல்; to lisp, to babble.

தெ. வதறு; க. ஒதறு.

வதறு[2]–தல் vadaṟu-, 2 செ.குன்றாவி. (v.t.) திட்டுதல்; to abuse, scold. "வாயாலே வதறுகிறவன்" (உ.வ.).

வதி–தல் vadi-, 2 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல்; to dwell, abide; to sojourn, stay. "வதிமண வம்பலர் வாயவிழ்ந் தன்னார்" (பரிபா. 10, 20). 2. துயிலுதல்; to sleep. "ஆற்றாணினையுநள் வதிந்தக்கால்" (கலித். 126).

வதியழி–தல் vadi-y-aḻi-, 2 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல்; to stay, abide, house. 2. பெருகியிருத்தல்; to be a plenty, to be in abundant growth. 'மாம்பழம் வதியழியுது'.

வந்தடை–தல் vandaḍai-, 2 செ.குன்றாவி. (v.t.) இறைவனே வலிய வந்து ஆதனை (ஆன்மாவை) ஆட் கொள்ளுதல்; to unite God voluntarily, with soul. 2. இலக்கு நோக்கிப் பயணித்து வந்து சேர்தல்; to reached the target.

வந்தணை–தல் vandaṇai-, 2 செ.குன்றாவி. (v.t.) வந்தடைதல்; to come near. "வந்தணைந்து நல்லூரின் மண்ணு திருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில்....." (பெரியபு.).

வந்திகட்டு–தல் vandi-kaṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) கட்டாயப்படுத்துதல், வற்புறுத்துதல் (யாழ்.அக.); to compel, to force, pressurise.

வந்தியிறு–த்தல் vandi-y-iṟu-, 4 செ.குன்றாவி. (v.t.) கட்டாயமாக வற்புறுத்தலுக் குட்பட்டு வரி முதலியன செலுத்துதல் (யாழ்.அக.); to pay tax, etc... under compulsion.

வந்தேறு–தல் vandēṟu-, 4 செ.குன்றாவி. (v.t.) புதிதாக வந்து குடிபுகுதல்; to come and settle permanetly, new settler, to immigrate. "இருவினைகள் வந்தேற வழியுமில்லை" (தாயு. ஆனந்த். 10).

வம்படி[1]–த்தல் vambaḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. வீண்சொல் பேசுதல்; indulge in idle talk or unnessary talk. 2. இன்பமொழி பேசுதல்; to indulge in wanton talk. 3. தீதுரைத்தல்; to speak evil. 4. பழித்துப் பேசுதல்; to

talk disparagingly.

வம்படி[2]–த்தல் vambaḍi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. இழித்துப் பழிதூற்றுதல் (கொ.வ.);* to slander, to throw mud with evil words. *2. தீங்கு செய்தல்;* to do harm.

வம்பள[1]–த்தல் vambaḷa-, *3 செ.கு.வி.* (v.t.) *வம்படி. பார்க்க;* see vambaḍi-.

வம்பள[2]–த்தல் vambaḷa-, *3 செ.குன்றாவி.* (v.t.) *பொல்லாங் குரைத்தல்;* to slander, to talk evil. "*அன்னை மாரென்னை வாய் வம்பளக்கின்றதே*" *(அஷ்டப். அழகரந். 70).*

வய–த்தல் vaya-, *4 செ.குன்றாவி.* (v.t.) *விரும்புதல்;* to wish for, to desire. "*வயந்தே யுமக்காட் செய்து*" *(தேவா. 946. 7).*

வயக்கு[1]–தல் vayakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விளங்கச் செய்தல்;* to cause to shine. *2. திருத்துதல் (கல்.);* to improve, reclaim as land.

வயக்கு[2]–தல் vayakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *பழக்குதல் (யாழ்.அக.);* to tame, break in. "*உழவுக்கு மாட்டை வயக்க வேண்டும்*" *(பே.வ.).*

Ma. vaya.kol.vay; Nāk. vay.

வயங்கு–தல் vayaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. ஒளி செய்தல்;* to shine, gleam, glitter. "*வயங்கொளி மண்டிலம்*" *(அகநா.11). 2. விளங்குதல்;* to be resplendent. "*வயங்கிய கற்பினாள்*" *(கலித்.2). 3. தெளிதல்;* to be clear, lucid, as water. "*வயங்கொலி நீர்*" *(பு.வெ.2,14). 4. தோன்றுதல்;* to be exhibited. "*வயங்காக் கூத்து வயங்கியபின்*" *(சீவக. 2704). 5. மிகுதல்;* to abound. "*அணிநிழல் வயங்கு..... மதி*" *(பரிபா. 3, 51). 6. நடத்தல் (யாழ்.அக.);* to walk, go.

வயப்படு–தல் vaya-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *வசமாதல்;* to be brought under another's influence; to be subjugated. "*தீமையுடையார் வருந்தினா ரென்றே வயப்படுவதுண்டோ*" *(பழமொழி. 110).*

வயாவு[1]–தல் vayāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *விரும்புதல்;* to desire, wish. "*காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்*" *(மலைபடு. 476).*

வயிர்–த்தல் vayir-, *4 செ.கு.வி.* (v.i.) *வயிரங் கொள்ளுதல்;* to be solid, to harden. "*வயிர்த்தன ணிலத்தினுயர் வானமினி தென்பாள்*" *(பாரத. சம்பவ. 102).*

வயிர்[2]–த்தல் vayir, *4 செ.கு.வி.* (v.i.) *செற்றங் கொள்ளுதல்;* to be angry, to bear grudge.

வயிரி–த்தல் vayiri-, *11 செ.கு.வி.* (v.i.) *1. மனம் முதலியன இறுகுதல்;* to be hardened, as in feeling. *2. இணங்காதிருத்தல்;* to be obstinate, adamant.

வயிற்றிலடி–த்தல் vayiṟṟil-aḍi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *பிழைப்பைக் கெடுத்தல் (இ.வ.);* to deprive a person of his food or doing harm to the means of livelihood, as striking at the stomach. "*தொழிலாளர் வயிற்றிலடித்துப் பணம் சேர்ப்பது, முதலாளி களுக்குக் கைவந்த கலையாகும்*" *(உ.வ.).*

வயிற்றெரிச்சற்படு–தல் vayiṟṟericcaṟ-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. பொறாமைப் படுதல்;* to envy, to feel envy. *எதிர் வீட்டுக்காரர் மாடமாளிகை கட்டியதற்காக நீ ஏன் வயிற்றெரிச்சற் படுகிறாய்? அவனுக்கு நல்ல வேலை கிடைத்தற்காக நீ ஏன் வயிற்றெரிச்சல் படுகிறாய்? (உ.வ.). 2. மன வருத்தமடைதல்;* to feel vexation.

வயிற்றைக்குறை–த்தல் vayiṟṟai-k-kuṟai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வயிற்றுக்கு ஈயப்படும் உணவளவைக் குறைத்துக் கொள்ளுதல்;* to reduce quantity of diet.

வயிறுகழுவு–தல் vayiṟu-kaḻuvu-, *5 செ. கு.வி.* (v.i.) *அரும்பாடுபட்டு, உணவு தேடிப் பிழைத்தல்;* to manage with great difficulty to get food and live, to eke one's livelihood. *வயிறுகழுவ வழியில்லாதவள் வானுர்தி ஏற நினைக்கலாமா? (பழ.).*

வயிறெரி–தல் vayiṟeri-, *2 செ.கு.வி.* (v.i.) *1. பொறாமை கொள்ளுதல்;* to be envious. *அவள் வளமனையில் வாழ்க்கைப்பட்டதைக் கண்டு வயிறெரிகிறாள். 2. மிகுதுயரமுறுதல் (பிரபுலிங். சித்தரா. 48);* to be greatly moved by sorrow, to mentally upset.

வரப்படுத்து–தல் vara-p-paḍuttu-, *8 செ.குன்றாவி.* (v.t.) *1. நெட்டுருப் பண்ணுதல்;* to cram or mug up as a lesson. *பாடத்தை வரப்படுத்துகிறான். 2. வந்ததைப் பெற்றுக் கொள்ளுதல்;* to credit; to appropriate, to accept whatever is offered. *வந்ததை வரப்படுத்தடா வல்லக்காட்டு, இராமா (இ.வ.).*

வரப்பற்று–தல் vara-p-paṟṟu-, *5 செ. குன்றாவி.* (v.t.) **1.** *தன்வயமாக்குதல்;* to get into one's possession, to take hold of, to clutch eagerly. *2. வந்ததைப் பெற்றுக் கொள்ளுதல் (இ.வ.);* to credit, to appropriate, to accept whatever is offered.

வரப்பார்[1]–த்தல் vara-p-pār-, *4 செ.கு.வி.* (v.i.) *பிறர் வரவுக்காகக் காத்திருத்தல் (யாழ்.அக.);* to await, to wait for some one's arrival.

வரப்பார்[2]–த்தல் vara-p-pār-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வருமாறு செய்தல்;* to cause or arrange to come.

வரப்புகழி–த்தல் varappu-kaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வரப்பினைச் சரி செய்தல்;* shaping or reclaiming the ridges of paddy field.

வரம்புகட்டு–தல் varambu-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அணைகட்டுதல் (யாழ்.அக.);* to dam up. *2. எல்லைக் கட்டுதல்;* to limit. *'கடிப்புண் பரவாதபடி மாந்திரிகன் வரம்பு கட்டினான்' (உ.வ). 3. முடித்தல்;* to finish, to put an end to.

வரவழை–த்தல் vara-v-aḷai-, *4 செ.குன்றாவி.* (v.t.) வருவித்தல், அழைத்தல்; to cause, to come, invite. "மாதை யீங்கு வரவழைத்தே" *(வெங்கைக்கோ. 336).*

வரவுதாழ்–த்தல் varavu-tāḷ-, *4 செ.கு.வி.* (v.i.) காலந்தாழ்த்தி வருதல், நேரங்கடந்து வருதல்; to arrive belatedly, to be delayed. "உணவு வரவு தாழ்த்தது" *(கம்பரா. பிரமாத்திர.88).*

வரவுவை–த்தல் varavu-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) செலுத்திய தொகை குறித்து எழுதி வைத்தல்; to credit in account, to enter the receipt of money, as on a pro-note or document. நான் கொடுத்த பணத்தை வரவுவைத்துக் கொண்டு, மீதம் எவ்வளவு பணம் தரவேண்டுமென்று சொல்லுங்கள் *(உ.வ.).*

வரள்(ளு)–தல் varaḷ(ḷu)-, *12 செ.கு.வி.* (v.i.) *1.* வற்றுதல் *(பிங்.);* to dry up, to evaporate. *2.* உடம்பு மெலிதல் *(வின்.);* to become lean or emaciated.

வரன்று–தல் varaṉṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) வரடுதல்; to scrape, to gather up, to collect. "மணிவரன்றி வீழுமருவி" *(நாலடி, 369).*

M. varaṇṭuka.

வரி¹–தல் vari-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1.* எழுதுதல் *(பிங்.);* to write, pen. *2.* சித்திர மெழுதுதல்; to paint, to draw. "வல்லோன் றைஇய வரிவனப்புற்ற வல்லிப்பாவை" *(புறநா. 33). 3.* பூசுதல்; to smear, daub. *4.* மூடுதல்; to cover, close. "புண்ணை மறைய வரிந்து" *(திவ். திருவாய். 5, 1, 5). 5.* கட்டுதல்; to bind, tie, fasten. "வரிந்த கச்சையன்" *(சூளா. சீய. 11).*

க., தெ. வ்ராயு (vrāyu) vrāyincu, rāyu, rāsu; Ma. variyuka.

வரி²–த்தல் vari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* எழுதுதல்; to write, pen. "வள்ளுகிர் வரித்த சாந்தின் வனமுலை" *(சீவக. 2532). 2.* சித்திரமெழுதல்; to draw, to paint. *3.* பூசுதல் *(சூடா.)*; to smear, daub. *4.* கட்டுதல்; to bind, tie, fasten; to fix, as the reepers of a tiled roof. "வரிக்குங் காட்சியிலா வறிவே" *(ஞானவா. மாவலி.48). 5.* மொய்த்தல் *(யாழ்.அக.);* to swarm round. *6.* கோலஞ்செய்தல்; to adorn, decorate, decks. "புன்னை யணிமலர் துறைதொறும் வரிக்கும்" *(ஐங்குறு. 117).*

வரி³–த்தல் vari-, *4 செ.கு.வி.* (v.i.) ஓடுதல்; to run; to flow. "தலைவா யோவிறந்து வரிக்கும்" *(மலைபடு. 475).*

வரி⁴–த்தல் vari-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1.* தெரிவு செய்தல், தேர்ந்து கொள்ளுதல்; to choose, select. *2.* அமர்த்துதல், பங்கீடு செய்தல்; to appoint, assign, allocate. "கடவுள் வேதியர்களை வரித்து" *(திருவிளை. இந்திரன்முடி. 26). 3.* அழைத்தல்; to invite. "உலோபா முத்திரை தன்னொடும் வரித்து" *(திருவிளை. அருச். 2).*

வரிசெலுத்து–தல் vari-šeluttu-, *5 செ. குன்றாவி.* (v.t.) வரிக்கட்டுதல்; to remit tax. ஒழுங்காக வரி செலுத்துபவர், நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவியவராவர் *(இ.வ.).*

வரிசைசெய்–தல் varišai-šey-, *1 செ.கு.வி.* (v.i.) *1.* சீர், சிறப்பு, மதிப்பு (மரியாதை)ச் செய்தல் *(வின்.);* to salute or render civility or courtesy.

வரியிலிடு¹–தல் variyil-iḍu-, *20 செ. குன்றாவி.* (v.t.) சிற்றூரில் (கிராமத்தில்) உள்ள நில அடங்கலிற் புதிய நில வரிகளைப் பதிவு செய்தல்; to register new taxes in the village land revenue records or accounts. "இவ்வூர் சபையார்க்குக் காசு கொடுத்து விலைக்கு கொண்டு சில சரணசேகர நல்லூர் என்னுந் திருநாமத்தால் வரியிலிட்டு இந்நிலம் ஐவேலிக்கும்" *(திருவாலீசுவரம் கல்வெட்டு).*

வரியிலிடு²–தல் variyil-iḍu-, *20 செ.கு.வி.* (v.i.) வரிப் பொத்தகத்திற் பதிதல் (S.I.I. Vol. III, 115); to enter in the revenue register.

வருட்டு–தல் varuṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* தேற்றுதல்; to assure, convince. "பின்னும் பலகால் வருட்டி" *(பாரத. சம்பவ. 64). (சூடா.). 2.* பார்வையாலேயே தப்ப வியலாதபடி ஈர்த்துப் பிடித்தல்; to charm, fascinate. "வயம்வர வருட்டல் வருவித் திடலகற்றல்" *(திருக்காளத். பு.33, 23).*

வருடு–தல் varuḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) தடவுதல்; to rub, to massage. "செம்புனல் வந்தங் கடிவருட" *(தேவா.112, 5).*

வருத்து¹–தல் varuttu-, *15 செ.குன்றாவி.* (v.t.) *1.* வருவித்தல்; to cause to come, to fetch, to get, obtain. *2.* ஓவியமெழுதுதல்; to paint, sketch, portrait. "நினைப்பென்னுந் துகிலிகையால வருத்தித்து" *(சீவக. 180).* "உமையிடத் துர்க்கையை வருத்தி" *(உபதேசகா. சூராதி. 132). 3.* மனப்பாடஞ் செய்தல் *(இ.வ.);* to learn by heart, as a lesson, mug up.

வருத்து²–தல் varuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.* வருந்தச் செய்தல்; to cause, pain, to afflict vex. "வருத்துந் தெய்வங்களும்" *(மதுரைக். 632). 2.* பயில்வித்தல்; to train. "அன்னான் வருத்து வாளிளைஞர்" *(திருவிளை. அங்கம். 6). 3.* துயரங்கொள்ளச் செய்தல்; துன்பப்பட வைத்தல்; to make one sad; to make one feel sorry. அவரது பேச்சு அவளை மிகவும் வருத்தியது *(உ.வ.).* அல்லும் பகலும் வருத்தும் சிக்கல் இது *(இ.வ.). 4.* ஒருவர், தம்மைக் கடும் முயற்சிக்கு உட்படுத்திக் கொண்டு உழைத்தல்; to strain oneself. உங்களை இப்படி வருத்திக் கொண்டு இரவு பகலாக உழைக்க வேண்டுமா?

வருந்து–தல் varundu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* துன்புறுதல்; to suffer, to be distressed, tortured or grieved. "காமமுழந்து

வருந்தினார்க்கு" (குறள், 1131). படிக்காமல் ஊர் சுற்றியதற்காக இப்போது வருந்திப் பயனில்லை (உ.வ.). உங்களுக்கு உதவ முடியாததற்காக வருந்துகிறேன் (இ.வ.). 2. உடல் மெலிதல்; to become emaciated. "வாணுதன் மேனி வருந்தா திருப்ப" (மணிமே. 23, 62). 3. மிக முயலுதல்; to take pains make great efforts. "ஆற்றின் வருந்தா வருத்தம்" (குறள், 468). 4. வருந்தி வேண்டிக் கொள்ளுதல்; to make a supplication. 'கடவுளை நோக்கி வருந்தினதால் அது கிடைத்தது'. 5. உடல் வலியினை யுணர்ந்து வருந்துதல்; to strain oneself. உடல் வருந்த உழைக்கும் வேளாண் தொழிலால் அதிகப் பலன் இல்லை (இ.வ.).

வருவி–த்தல் varuvi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வரச்செய்தல்;* to cause to come, to fetch, to bring, to get, obtain. *2. பொருண்முடிபுக்கு வேண்டிய சொல்லைப் பெய்து கொள்ளுதல் (இலக்.);* to supply an ellipsis to complete the sense. "நுவலும் என்றதற்கு உலகம் நுவலும் என வருவிக்க" (பதிற்றுப். 61, உரை). *3. கொண்டு வருமாறு செய்தல்;* to bring from somewhere. இந்த மருந்து அயல்நாட்டிலிருந்து வருவிக்கப்பட்டது (இ.வ.). 4. வேண்டாததை ஏற்படுத்துதல்; இயல்பாக இல்லாததை உண்டாக் குதல்; to invite trouble, etc.; to put on a smile. இயற்கையோடியைந்து வாழும் வகை தெரியார் தங்களுக்குத் தாங்களே அழிவை வருவித்துக் கொள்கின்றனர் (இ.வ.). அவள் முகத்தில் பொய்யான சிரிப்பை வருவிக்க முயன்றான்.

வரை–தல் varai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கோடிழுத்தல்; எழுதுதல் (சூடா.);* to write, inscribe, to draw a line. வருகை தந்தமை குறித்து மடலொன்று வரைந்தான் (உ.வ.). 2. ஓவியமெழுதுதல்; to draw with paint. அது யார் வரைந்த படம் (இ.வ.). 3. உறுதி செய்தல், நிலைநிறுத்துதல்; to fix, appoint, to ensure, to instal. "புகழொடுங் கழிக நம் வரைந்த நாளென" (மலைபடு. 557). 4. அளவுபடுத்துதல்; to limit. "வரையாப் பூச லொண்ணுதன் மகளிர்" (புறநா. 25). 5. அடக்குதல்; to restrain. "வரைகிலேன் புலன்க ளைந்தும்" (தேவா. 631, 1). 6. விலக்குதல்; to exclude. "உருவுகொளல் வரையார்" (தொல். எழுத்து. 41). 7. கை விடுதல்; to leave, abandon. "கொள்கலம் வரைதலின்" (கலித். 133). 8. ஏற்றத்தாழ்வுபடுத்துதல், வேறு படுத்துதல்; to differentiate or draw distinctions, to make nice discriminations. "கொடைமட மென்ப தம்ம வரையாது கொடுத்த லாமே" (சூடா. 9, 10). 9. நேர்மையான வழியில் பொருளீட்டுதல்; to acquire or earn by legitimate or honest means. "வரைபொருள் வேட்கையேன்" (சிலப். 10, 51). 10. தனக்குரியதாக்குதல்; to make one's own; to appropriate. "அறன் வரையான்" (குறள், 150). 11. மணஞ்செய்தல்; to marry. "வெளிப்பட வரைதல் படாமை வரைதல்" (தொல். பொருள். 140). 12. புதிய திட்டம் செயற்பாடுகளை உருவாக்குதல்; to draft a rule, resolution, etc. அமைச்சரவை விரைவில் புதிய கல்வித்திட்டத்தினை வரையவிருக்கிறது (இ.வ.).

தெ. வ்ராயு.

வரையறு–த்தல் varai-y-aṟu-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. தீர்மானித்தல், அறுதியிடல், உறுதிசெய்தல்;* to settle, decide, determine, ascertain. இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு ஒழுக்கம் என்பது வேறு படுவதால், அதை வரையறுத்தல் கடினம் (உ.வ.). நீங்கள் தயாரித்த பொருள்கள் நாங்கள் வரையறுத்த தரத்தில் இல்லை (இ.வ.). "மறைகளெல்லா முடிய வரையறுத் துணர்ந்து புகலினும்" (வெங்கைக்க. 89). *2. மதிப்பிடுதல் (பிங்.);* to estimate. *3. எல்லைப் படுத்துதல் (சங்.அக.);* delimit. *4. வளைத்தல் (யாழ். அக.);* surround, encircle.

வரையறைகூறு–தல் varai-y-aṟai-kūṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) ஒன்றன் பண்பை வரையறுத்துக் கூறுதல்; to define or prescribe one's character.

வல்லு–தல் vallu-, *5 செ.குன்றாவி.* (v.t.) செய்யமாட்டுதல்; to be able, to be possible. "வல்லினும் வல்லேனா யினும்" (புறநா. 161).

வல்விரை–தல் val-virai-, *2 செ.கு.வி.* (v.i.) மிக வேகமாதல், விரைதல்; to hurry, speed up. "வள்ளலை வல்விரைந் தெய்த" வக. 328).

வல[1]–த்தல் vala-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. சுற்றுதல்;* to encircle, surround. "புலவுநாறு நெடுங்கொடி..... வாங்குசினை வலக்கும்" (புறநா. 52). *2. பின்னுதல்;* to spin, as a spider its thread; to plait; to weave or knit. "இழைவலந்த பஃறுன்னத்து" (புறநா. 136). *3. தொடுத்தல்;* to string in a series. "உரைத்தேம்..... வலந்து" (பரிபா. 3, 10 - 11). *4. பிணித்தல், கட்டுதல்;* to tie, bind. "குடர்வலந்த வேற்றின்முன்" (கலித்.103). *5. வளைத்தல் (வின்.);* to bend.

வல[2]–த்தல் vala-, *4 செ.கு.வி.* (v.i.) கொழுத்தல் (திவா.); to grow fat, to become bulky.

வல[3]–த்தல் vala-, *4 செ.குன்றாவி.* (v.t.) கேட்போர் மனத்தைப் பிணிக்கச் சொல்லுதல், உரைத்தல்; to say, tell; to narrate or converse. "மருமகன் வலந்ததும்" (சீவக. 187).

வலங்கொள்[1](ளு)–தல் valaṅ-koḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) வெற்றியடைதல்; to be victorious, triumphant. "வலங் கொள் புகழ்பேணி" (தேவா. 668, 8).

வலங்கொள்[2](ளு)–தல் valaṅ-koḷ(ḷu)-, *10 செ.குன்றாவி.* (v.t.) *1. இடவலமாக வருதல்;* circumambulation from left to right. கடவுள் கடிநகர்தோறு மிவனை வலங் கொளீஇ (கலித்.84). *2. வெல்லுதல்;* to conquer.

வலஞ்சுழி[1]–தல் valañ-cuḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. வலமாகச் சுழலுதல்;* to whirl to the right. *2. வலப்புறமாகச் சுழிந்*

திருத்தல்; to curl to the right.

வலஞ்சுழி[2]–த்தல் valañ-cuḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வலமாகச் சுற்றச் செய்தல்;* to cause to whirl to the right. *2. வலப்புறமாகச் சுழியும்படிக் கீறுதல்;* to draw to the right, as a circle.

வலஞ்செய்–தல் valañ-cey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *இடவல மாகச் சுற்றி வருதல்;* to go round from left to right. "*மும்முறை மலைவலஞ் செய்தால்*" *(சிலப். 11, 107).*

வலம்படு–தல் valam-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. வெற்றி யுண்டாதல்;* to be victorious or triumphant. "*வலம்படு முரசின்*" *(பதிற்றுப். 78, 1). 2. இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கஞ் செல்லுதல்;* to pass across one's path from left to right. "*கரிக்குருவி வலம்பட்டது*" *(உ.வ.).*

வலம்வா–தல் valam-vā-, *15 செ.குன்றாவி.* (v.t.) *இடவல மாகத் திருக்கோயிலைச் சுற்றி வருதல்;* to go round from left to right, as of a temple. "*திருமலையே வலம் வந்தனள்*" *(தக்கயாகப். 321).*

வலமாய்வாங்கு–தல் valamāi-vāṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *வயல் வரப்பின் அருகில் உழுவதற்கேற்ப மண் வெட்டியால் வெட்டி யெடுத்து, உழவுக்கு ஏற்றவாறு ஆக்குதல்;* to dredge with spade that portion of the field near its ridge as ploughing is not feasible.

வலி[1]–தல் vali-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. கட்டாயப்படுத்துதல்;* to behave with emel and rough manner, to coerce, to force cruelly, compel. "*வலிந்து பற்றினான்*" *(உ.வ.). 2. மீறுதல்;* to transgress, transcend, surpass. "*அருளினை வலிய மாட்டாமை*" *(பெரியபு. திருநீலக். 34).*

வலி[2]–தல் vali-, *2 செ.குன்றாவி.* (v.t.) *இழுத்தல்;* to draw, pull, to attract, to influence. "*காந்தம் வலியு மிரும்பு போல்*" *(பிரபுலிங். மாயையினுற். 45).*

வலி[3]–தல் vali-, *பெ.* (n.) *1. வன்மை;* strength, power. "*வலியி னிலைமையான்*" *(குறள், 273). 2. தன் முனைப்பு (அகங்காரம்);* arrogance. "*கேள்வி யனைத்தினும் வலியினும் மனத்தினு முணர்வினும்*" *(பரிபா.3, 49). 3. வல் லெழுத்து;* hard consonant. "*ஈற்று மெய் வலிவரி னியல்பாம்*" *(நன்.159). 4. தொகை நிலைத் தொடர் மிக்கு வருஞ் செய்யுட் குணம் (தண்டி.24);* vigour of style, achieved by introducing compounds in quick succession, a merit of poetic composition. *5. பற்றுக் கோடு;* Prop, support. "*தண்ட வலியாக நனி தாழ்ந்து*" *(சீவக.2012). 6 பற்றிரும்பு (பிங்.);* cramp-iron, pincers. *7. துன்பம்;* trouble, difficulty. "*அதைச் செய்வதில் உனக்கென்ன வலி*". *8. நோவு;* pain, ache. "*யான்பட்ட வலிகாண வாராயோ*" *(கம்பரா. சூர்ப்ப.102).*

வலி[4]–த்தல் vali-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கட்டாயப் படுத்துதல்;* to force, compel. "*வலித்தாண்டு கொண்ட*" *(திருவாச. 11, 7). 2. பற்றிக்கொள்ளுதல்;* to seize. "*கொண்டு கைவலித்தல் சூழ்ந்திசின் யானே*" *(அகநா. 76). 3. இடர்ப்பட்டுப் பொருள் கொள்ளுதல் (வின்.);* to understand with great difficulty, to strain, as an interpretation. *4. மெல்லெழுத்தை வல்லெழுத் தாக்குதல் (இலக்.);* to become hard in sound, as a soft consonant. "*வலிக்கும் வழி வலித்தலும்*" *(தொல். சொல். 403). 5. துணிதல்;* to decide, foldly. "*வல்வினை வயக்குதல் வலித்திமன்*" *(கலித்.17). 6. வற்றச் செய்தல் (வின்.);* to dry, scorch, parch, reduce. *7. அழுத்திப் பலுக்குதல் (வின்.);* to stress, as words.

வலி[5]–த்தல் vali-, *4 செ.கு.வி.* (v.i.) *1. திண்ணியதாதல்;* to become hard or strong and verile. "*கல்லென வலித்து நிற்பின்*" *(கம்பரா.வருண. 84). 2. வற்றுதல்;* to become dry, to reduce. "*நீர் நுங்கின் கண்வலிப்ப*" *(புறநா.389). 3. நோவுண்டாதல்;* to ache; to pain; to be painful. "*வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்*" *(தேவா. 946, 7). 4. முயலுதல் (வின்.);* to make efforts, to attemper. *5. கொழுத்தல் (திவா.);* to become stout, fat.

வலி[6]–த்தல் vali-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சொல்லுதல் (சூடா.);* to say, tell, state, narrate, speak. *2. கருதுதல் (பிங்.);* to think, consider. "*வலியா தெனக்கு வம்மீ னீரென*" *(பெருங். வத்தவ. 3, 99). 3. கருத்தோடு செய்தல்;* to do delightly, to execute with undivided attention, as a work. "*திங்கள் வலித்த காலன் னோனே*" *(புறநா. 87). 4. உடன்படுதல் (பிங்.);* to agree to, to consent, to be consonant with. "*செல்லல் வலித்தேனச் செம்மன் முன்*" *(பு.வெ.11, பெண்பாற். 12).*

வலி[7]–த்தல் vali-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. துடுப்பு, கயிறு முதலியவற்றை இழுத்தல்;* to draw, pull; to attract. "*புலித்தோல் வலித்து வீக்கி*" *(தேவா. 910, 3).* "*சார்ங்கம் வளையவலிக்கும்*" *(திவ்.நாய்ச்.5,8). படகுத் துடுப்பு வலிப்பதற்குப் பழக்கம் இருந்தால்தான் முடியும் (உ.வ.). கயிற்றை இடது பக்கமாக வலித்து விடுங்கள் (இ.வ.). 2. வளைத்தல் (சூடா.);* to bend, curve. *3. அழகு காட்டுதல் (திருநெல்.);* to mimic; to make a face at. *தம்பி என்னைப் பார்த்து வலிக்கிறான் (இ.வ.). 4. தண்டாற் படகு தள்ளுதல்;* to row, tug. *5. கப்பற்பாய் தூக்குதல்;* to hoist, as the sails of a vessel or ship. *6. புகை பிடித்தல் (இ.வ.);* to smoke, as tobacco.

வலி[8]–த்தல் vali-, *4 செ.கு.வி.* (v.i.) *1. இசிவு காணுதல்;* to have contortions or convulsions. *2. ஏங்குதல் (வின்.);* to pine, droop, languish, to yearn, crave, desire. *3. உடம்பில் துன்பம் தரும் உணர்வு உண்டாதல்;* to pain; to hurt. *மருத்துவர் ஊசி குத்தும்போது எறும்பு கடிப்பது போலத்தான் வலிக்கும் (உ.வ.). பல் கூசுகிறதா? வலிக்கிறதா? (இ.வ.). பேருந்து நிறுத் தத்தில், கால் வலிக்க நிற்க வேண்டியிருந்தது (இக்.வ.).*

வலிசெய்–தல் vali-šey-,*1* செ.கு.வி. (v.i.) *1.* மிறுக்குச் செய்தல்; to be stiff in manners. "அடிமைக் கணவன் வலி செய்ய" *(திவ். நாய்ச். 5, 10). 2.* வல்வழக்குரைத்தல்; to make an unjust or oppressive claim. "தாரான் வலி செய்கின்றான்" *(பெரியபு. திருநீலகண்ட. 32).*

வலித்துக்கட்டு–தல் valittu-k-kaṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) கயிற்றை இழுத்துக் கட்டுதல்; to tie after tightening the rope. வலிச்சி கட்டுதல் *(உ.வ.).*

வலித்துக்காட்டு–தல் valittu-k-kāṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) பிறரை நக்கல் செய்யும் வகையில் விரலை ஆட்டுதல்; வாயைக் கோணிப் பேசுதல்; to make faces at someone.

வலிந்துகொள்(ளு)–தல் valindu-koḷ(ḷu)-,*16* செ.குன்றாவி. (v.t.) *1.* வலுக்கட்டாயமாய்க் கைப்பற்றுதல்; to annex by force. *2.* இடர்ப்பட்டுப் பொருள் கொள்ளுதல்; to strain, as in interpretation, to understand with great difficulty.

வலிப்படு–தல் vali-p-paḍu-, *20* செ.கு.வி. (v.i.)வன்முறைக்கு ஆட்படுதல்; to undergo for violence or coercion.

வலிப்புறு–த்தல் valippuṟu-, *4* செ. குன்றாவி. (v.t.) *1.* தோற்றுவித்தல், நிலை பெறுத்துதல், நிறுவுதல்; to establish, make firm, to demonstrate, prove, to instal. "வலிப்புறீஇ" *(சீவக. 1143). 2.* வற்புறுத்துதல்; to assure, make sure of, to compel. "நங்களன்பென நாட்டி வலிப்புறீஇ" *(சீவக. 1334).*

வலிபடு[1]–தல் vali-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* வலிமையுறுதல்; to become strong, firm. *2.* மாறுபடுதல்; to compete, rival; to match, to differenciate. "செங் குவளைகளே யிவை..... நின்..... நயனங்களின் வலிபட்டன" *(தக்கயாகப். 317).*

வலிபடு[2]–தல் vali-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) பற்றியிழுக்கப்படுதல்; to be drawn, dragged, to be attracted, influenced. "நீடு முதலையின் வாயில் வலிபடு நீல கிரியை" *(பாரத. ஆறாம். 25).*

வலியச்செய்–தல் valiya-c-cey-, *1* செ. குன்றாவி. (v.t.) ஒரு செயலை வலுக்கட்டாயமாகச் செய்தல்; to do an action forcefully.

வலியாடு–தல் vali-y-āḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) துன்பப் படுத்துதல்; to torment, afflict, to be in missery to torture. "மயிலே யெனைநீ வலியாடுதியோ" *(கம்பரா. கார்கா. 55).*

வலியுறுத்து–தல் vali-y-uṟuttu-, *5* செ. குன்றாவி. (v.t.) *1.*கருத்து, எண்ணம் முதலியவற்றை உறுதிப் படுத்துதல்; to strengthen, to emphasize or stress. தன் கருத்தை வலியுறுத்த பல எடுத்துக் காட்டுகளைக் கூறினார் *(உ.வ.).* முதல் மூன்று பத்திகளும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்து கின்றன *(உ.வ.).* "நெஞ்சை வலியுறீஇ" *(கலித்.142). 2.* உறுதி கூறுதல்; to affirm, assure. *3.* கோரிக்கையை வற்புறுத்துதல் *(வின்.);* to emphasise, insist on, force. தொழிலாளர் கூட்டமைப்பு பத்துக் கோரிக்கைகளை வலியுறுத்திப் போராட்டம் நடத்தி வருகிறது *(இ.வ.). 4.* கஞ்சத்தனஞ் செய்தல்; to be close-fisted, to be miserly. "வளன் வலியுறுக்கு முளமிலாளரொடு" *(புறநா.190).*

வலிவூட்டு–தல் vali-v-ūṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) ஒருவர் தம் கருத்து, செயற்பாடு, கொள்கை முதலானவற்றை உறுதிப்படுத்தி உரைத்தல் அல்லது வலியுறுத்திக் கூறுதல்; to reiterate strongly in one's policy, views, opinion and action etc. என் கருத்துகள் அல்லது செயற்பாடுகளுக்கு வலிவூட்டும் வகையில் தரவுகள் கிடைத்துள்ளன *(உ.வ.).*

வலு–த்தல் valu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* வன்மையாதல்; to be strong or hard. *2.* திரப்படுதல் *(யாழ்.அக.);* to be firm or sustained. *3.* அதிகரித்தல்; to become heavy. மழை வலுத்துவிட்டது *(உ.வ.).*

வலுவடை–தல் valu-v-aḍai-, *2* செ.கு.வி. (v.i.) வலிமை கூடுதல் அல்லது ஆற்றலுடைத்தாதல்; to get strength or vigour. புயல்சின்னம் வலுவடைந்ததால், அதிக மழை பெய்து, பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின *(இ.வ.).*

வலுவிழ–த்தல் valu-v-iḻa-, *3* செ.கு.வி. (v.i.) வலிமை குறைதல் அல்லது செயலிழத்தல்; to loose the strengthen or vigour. காற்றழுத்தத் தாழ்வுமண்டலம் வலுவிழந்தது *(இ.வ.).*

வலுவூட்டு–தல் valu-v-ūṭṭu-, *5* செ.கு.வி. (v.i.) *1.* வலிவூட்டு-பார்க்க; see vali-v-ūṭṭu-. *2.* நோயினால் வலுவிழந்த அல்லது ஆற்றல் குன்றிய உடலுக்கு வலிவூட்டும் ஊக்க மருந்தினைக் கொடுத்தல்; to offer tonic, to energize physical condition.

வலைதப்பு–தல் valai-tappu-, *5* செ.கு.வி. (v.i.) கடலில் இளக்கிய மீன்பிடிவலை அறுபட்டோ அல்லது காணாமலோ போயொழிதல்; to lose fishing net, at fishing - spot.

வலைதள்ளு–தல் valai-taḷḷu-,*5* செ. குன்றாவி. (v.t.) கலத்திலிருக்கும் வலையை, மீன் மற்றும் கடல்வாழ் உயிரிகளை வலைக்குமாறு கடலில் தள்ளுதல்; to throw the net in the sea, placed in the boat or catamaram.

வலைப்படு–தல் valai-p-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1.* வலையில் மீன் மற்றும் கடல்வாழ் உயிரிகள் அகப்படுதல்; to be caught in a net. *2.* சூழ்ச்சிக் குட்படுதல்; to be cheated by a trick, to subject to cheat. "பரமன் வலைப் பட்டிருந்தேனே" *(திவ். நாய்ச். 13, 2).*

வலையடி–த்தல் valai-y-aḍi-, *4* செ.குன்றாவி. (v.t.) பலகணி முதலானவற்றில் வலையினைப் பொறுத்துதல்; to fix net in windows, doors, etc.

வலைவிரி–த்தல் valai-viri-, *4* செ.கு.வி. (v.i.) அகப்படும்படி

தகுந்த ஏற்பாடு செய்தல்; to lay a snare; to trap somebody. திருடர்களைப் பிடிக்க வலை விரிக்கப் பட்டிருக்கிறது (உ.வ.).

வலைவீசு–தல் valai-vīšu-, 5 செ.கு.வி. (v.i.) 1. மீன் முதலியன வலைக்க கடற்பரப்பில் வலையை யெறிதல்; வலிமை சேர்த்தல்; form of energy to spread the net, as in fishing activitis. "வலைவீசின படலம்" (திருவிளை.). 2. வயப்படுத்த முயலுதல்; to try to ensnare or influence a person. 'நடிகை மறுமணம் செய்ய முத்தழகனுக்கு காம வலைவீசினாள்' (உ.வ.).

வவ்வு–தல் vavvu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கவர்தல்; to snatch, take hold of, to take poseession of. "அரசர் செறின் வவ்வார்" (நாலடி, 134). 2. பற்றிக் கொள்ளுதல்; to carry off. "வவ்வித் துழாயதன்மேற் சென்ற" (திவ். பெரியதி.9, 4, 4). 3. வாருதல் (யாழ். அக.); to sweep away.

வழக்கறி–தல் vaḻakkaṟi-, 2 செ.கு.வி. (v.i.) 1. பழக்க வழக்கங்களையறிதல்; to have a knowledge of manners and customs. 2. சட்டமறிதல்; to be versed with law or statute.

வழக்கறு[1]–தல் vaḻakkaṟu-, 2 செ.கு.வி. (v.i.) வழக்கத் தினின்று கிளவியம் மறைந்து போதல்; to become obsolute, as a word, to fall into desuetude.

வழக்கறு[2]–த்தல் vaḻakkaṟu-, 4 செ. குன்றாவி. (v.t.), செ.கு.வி. (v.i.) 1. போக்கைத் தடுத்தல்; to find filter or hinder one's movement. "வழி வழக்கறுக்கும்" (குறுந். 324). 2. வழக்கைத் தீர்த்து விடுதல் (வின்.); to decide, as a case, to settle, as a dispute. உன்னோடு வழக்காடிக் கொண்டிருந்தால், என்வேலை கெட்டுவிடும் (உ.வ.).

வழக்காடு–தல் vaḻakkāḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1.சொற் போராடுதல்; to dispute, wrangle. 2. நயன்மை (நீதி)க்காகப் போராடுதல்; to litigate. உச்ச (நீதி) முறை மன்றத்திலும் வழக்காடிப் புகழ்பெற்றவர் (இ.வ). 3. ஊடுதல்; to sulk."தோளினை யுடையாள் வழக்காட்டிடத்துக் குழைந்தது" (பு.வெ. 12, பெண் பாற். 15, கொளு, உரை).

வழக்கிடு–தல் vaḻakkiḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. சொற்போர் புரிதல், சொல்லாடுதல்; to dispute, to argue. 2.வன்மையாய் வழக்குரைத்தல், பூசலிடுதல்; to wrangle, argue vehemently.

வழக்கு–தல் vaḻakku-, 5 செ.குன்றாவி. (v.t.) போக்குதல்; to cause to go. "வழக்குமாறு கொண்டு" (கலித்.101).

வழக்குத்தொடர்–தல் vaḻakku-t-toḍar-, 2 செ.கு.வி. (v.i.) 1. அற (நீதி) மன்றத்திற்கு வழக்கினை எடுத்துச் செல்லுதல்; to avail court of law, to file a law suit in court. 2. சொற்போரிடுதல்; to carry on a dispute, to aver or argue.

வழங்கு[1]–தல் vaḻaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. இயங்குதல், நகர்தல்; to move, proceed, advance. "முந்நீர் வழங்கு நாவாய்" (புறநா. 13). 2. உலாவுதல்; to walk about. "சிலம்பில் வழங்க லானாப் புலி" (கலித்.52). 3. தொன்று தொட்டு நடைபெற்று வருதல்; to be in existence from the past. 4. புழக்கத்தி லிருத்தல்; to be in usage, as money, words, etc. 5. அசைந்தாடுதல்; to swing one's body backwards and forwards, as an elephant. "மழகளிறு கந்து சேர்பு..... வழங்க" (புறநா. 22). 6. கூத்தாடுதல்; to dance. "பேய் மகள் வழங்கும் பெரும்பா ழாகும்" (பதிற்றுப். 22, 37). 7. நிலை பெறுதல்; to last, to be static, to endure, to stand established. "வானின் றுலகம் வழங்கி வருதலான்" (குறள், 11). 8.பயிற்சி பெறுதல் (வின்.); to be accustomed, practised, to under go training. 9. கொண்டாடப் படுதல்; to be esteemed, honoured, respected, celebrated. "வழங்கு தாரவன்" (சீவக. 2504). 10. பொருத்தமாதல், ஏற்றதாதல், தகுதியுடைய தாதல்; to be fit, suitable. "வாய்க்கு வழங்காத கறி" (வின்.).

க. பழகு

வழங்கு[2]–தல் vaḻaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) மொழி, கதை முதலானவை மக்களது பயன்பாட்டில் அல்லது புழக்கத்திலிருத்தல்; to be current. நல்லதங்காள் கதை இன்றும் மக்களிடையே வழங்குகிறது.அழகர் வரணிப்பு மதுரை மாவட்டத்தில் வழங்குகிறது (இ.வ.). 2. குறிப்பிடுதல்; to call. நாவலந் தேயத்தை (இந்தியாவை) பாரதம் என்றும் வழங்குகிறோம் (இ.வ.).

வழங்கு[3]–தல் vaḻaṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1.பயன் படுத்துதல், கையாளுதல்; to use, practise. தமிழ்ப்புலவர் தனித்தமிழ்ச் சொற்களையே, வழங்குதல் வேண்டும் (உ.வ.). 2. கொடுத்தல், அளித்தல், வழங்குதல், பகிர்தல்; to give, supply, distribute. "வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி" (பெரும்பாண். 26). இந்தப் பகுதியில் அன்றாடம் குடிநீர் வழங்கப்படுகிறது. குற்றவாளிக்கு உரிய தண்டனை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் (இ.வ.). 3. அனுப்புதல், உரிய காலத்தே, பொருத்த மானதைப் பயன்படுத்துதல்; to cause to move, to send, to discharge. "சாபநோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்"(புறநா.14). 4. சொல்லுதல், முணு முணுத்தல்; to tell, speak, utter, to murmur or whisper. "யானோ தேறேனவர் பொய் வழங்கலரே" (குறுந்.21).

க. பழகு (g.)

வழங்கு[4]–தல் vaḻaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நிகழ்ச்சி, படைப்பு முதலியவற்றை புதியதாக உருவாக்கி முன் வைத்தல்; to present entertainments. 2.தொலைக் காட்சி, வானொலி முதலியவற்றில் ஒரு நிறுவனமோ, அல்லது நன்றறியவரப் பெற்றவரோ, நிகழ்ச்சியொன்றைத் தன் செலவில் நடத்த முன்வருதல்; to sponsor a programme on T.V., radio etc. இந்த நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்கியவர்கள் பகட்டு

(ஆடம்பர)ப் பொருட்கள் தயாரிப்பவர்கள். 3. கால், கை முதலியவை இயங்குதல் (இலங்.); to function of limbs. *கால், கை வழங்காமல் போயிற்று (இலங்கை வழக்கு).*

வழவழ–த்தல் vaḻavaḻa-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வழுக்குந் தன்மையதாதல்;* to be slippery, as mire, a polished surface. *வழவழத்த உறவைக் காட்டிலும் வைரம் பாய்ந்த பகை நன்று (பழ.). 2. உறுதியற்றிருத்தல்;* to be slack, loose or unsteady. *3. மழமழத்தல்;* to be smooth. *4. தெளிவின்றிப் பேசுதல்;* to babble, to wishy-washy in talk, to speak without clarity.

வழி[1]–தல் vaḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *1. நிரம்பி வடிதல் (இ.வ.);* to overflow, to surplus. "*வழிந்த கார்விடம்*" *(கம்பரா. சூர்ப்பண. 72). 2. வடிதல்;* to flow, drain.

ம. வழியுக (vaḻiyuka, vaḻikka.)

வழி[2]–தல் vaḻi-, *2 செ.கு.வி.* (v.i.) *தோல் வழலுதல் (நெல்லை.);* to be abraded.

வழி[3]–த்தல் vaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வடித்தல்;* to shed, let flow. "*வழிக்குங் கண்ணீரமுவத்து*" *(கம்பரா. கடல் காண். 5).*

வழி[4]–த்தல் vaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. அரைத்த மாவு சந்தன முதலியவற்றைத் திரட்டியெடுத்தல்;* to wipe, scrape, to gather together, as a pulpy mass. "*மூக்கை வழித்து*" *(தனிப்பா. II, 383). 2. பூசுதல்;* to rub in with the hand, as an ointment, to smear, as sandal paste. "*மார்பின் விரை வழித்து*" *(சீவக. 699). 3. ஆடையைத் திரைத்தல்;* to roll up, as one's cloths. *ஆடையை வழித்துக் கொண்டு ஆற்றில் இறங்கினான்.*

க., ம. பளி.

வழி[5]–த்தல் vaḻi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *மழித்தல் (இ.வ.);* to shave.

வழிகட்டு–தல் vaḻi-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வழி மறித்தல் (யாழ்.அக.);* to lie in wait, to obstruct. *2. ஏற்பாடு செய்தல்;* to prepare, arrange. *3. வழிவகை கூறுதல்;* to suggest suitable ways and means.

வழிகாட்டு–தல் vaḻi-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. செல்லும் நெறியை அறிவித்தல்;* to show the way, to give guide line. *மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய ஆசிரியர்கள் (உ.வ.). 2. நன்னெறி உணர்த்துதல்;* to direct one in the right path moral or religious, to teach ethics. *3. உரிய பாதையைக் காட்டுதல்;* to suggest right ways and means. *4. உதவியாக இருத்தல்;* to be of help. *ஏதேனும் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்ள இந்த நூல் வழிகாட்டும் (இ.வ.).*

வழிதவறு–தல் vaḻi-tavaṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒழுக்கம் தவறி நடத்தல்;* go astray. *வழிதவறியவர்களுக்கு வாழ வழிகாட்டும் அமைப்பு.*

வழிப்படு[1]–தல் vaḻi-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.பயண மாதல்;* to travel, to go on one's way. *2. நேர்படுதல் (யாழ்.அக.);* to be reformed or mended. *3. சந்தித்தல்;* to meet. "*அவன் எங்காவது வழிப்பட்டால் என்னிடம் வரச்சொல்லு*" *(உ.வ.)*

வழிப்படு[2]–தல் vaḻi-p-paḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.). *1. வழிபடு[1], 2 பார்க்க;* see vaḻi-paḍu. "*அமரர் கோன் வழிப்பட்டால்*" *(திவ். திருவாய். 3, 1, 8). 2. வழிபடு[1], 1 பார்க்க;* see vaḻi-paḍu.

வழிப்படு[3]–த்தல் vaḻi-p-paḍu-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. பயணப்படுத்துதல்;* to send on a journey, to despatch. "*மதிநுதலியை வழிப்படுத்து*" *(திருக்கோ. 214, கொளு). 2. நல்ல வழியிற் செலுத்துதல் (சூடா.);* to set on the right path. *3. சீர்திருத்துதல்;* to regulate, to reduce to order, to reform. "*இருமொழியும் வழிப்படுத்தார்*" *(காஞ்சிப்பு. தழுவக். 249). 4. வயப்படுத்துதல் (யாழ்.அக.);* to bring under control, to entice. *5. வணக்கஞ் செய்வித்தல் (வின்.);* to casue one to reverence, to cause to salute.

வழிப்பறி–த்தல் vaḻi-p-paṟi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *இடைவழியிற் கொள்ளையிடுதல் (சூடா.);* to way lay and rob.

வழிபடு[1]–தல் vaḻi-paḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1. பின்பற்றுதல்;* to follow, adhere to. "*வழிபடுதல் வல்லுதலல்லால்*" *(நாலடி, 309). 2. வணங்குதல்;* to reverence, worship. "*வழிபடு வோரை வல்லறி தீயே*" *(புறநா. 10),* "*வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்கு*" *(நற்.9:2).*

வழிபடு[2]–தல் vaḻi-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *வழிப்படு[1]-, 1 (வின்.) பார்க்க;* see vaḻi-p-paḍu.

வழிபடு[3]–த்தல் vaḻi-paḍu-, *4 செ. குன்றாவி.* (v.t.) *வழிப்படு[2]- (வின்.) பார்க்க;* see vaḻi-p-paḍu-.

வழிமறி–த்தல் vaḻi-maṟi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *செல்வதைத் தடுத்தல்;* to stop, obstruct, hinder or prevent, as a person from going.

வழிமொழி–தல் vaḻi-moḻi-, *2 செ. குன்றாவி.* (v.t.) *1. வழிபாடு கூறுதல்;* to praise. "*வலியரென வழி மொழியலன்*" *(புறநா. 239,7). 2. மொழிந்ததைத் திரும்பக் கூறுதல்;* to reiterate, as a statement already made.

வழியொழுகு–தல் vaḻi-y-oḻugu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பின் செல்லுதல்;* to follow, to repeat. *2. நேர்வழியிற் செல்லுதல்;* to go along the right path, to be upright. "*வழியொழுகாச் சலதரன்*" *(காஞ்சிப்பு. கடவுள். 5). 3. ஏவலின்படி நடத்தல்;* to obey, as a direction or command.

"வாய்மையான் வழியொழுகின்று" (பு.வெ.8, 11, கொளூ.).

வழிவா–தல் vaḻi-vā-, *8 செ.கு.வி.* (v.i.) *1. மரபுவழி வருதல்;* to be hereditary. "வழிவருகின்ற வடியரோர்க்கருளி" *(திவ். திருவாய், 9, 2, 2). 2. தொன்றுதொட்டு வருதல்;* to be handed down from generation to generation. "வழிவந்த கேண்மையார்" *(குறள், 809). 3. நற்குடிப் பிறத்தல்;* to hail from a good family. *4. பின்பற்றி ஒழுகுதல்;* to follow, to abide by."மறையின் வழிவந்தார்" *(ஏலாதி, 1). 5. அறநூல்களிற் கூறியவாறு, பிறழாது நடத்தல்;* to follow or adhere strictly the precepts of the sāstras. "குடிகுடி வழிவந்தாட் செய்யுந் தொண்டரோர்க் கருளி" *(திவ். திருவாய். 9,2,1).*

வழிவிடு¹–தல் vaḻi-viḍu-, *20 செ. குன்றாவி.* (v.t.) *1. புறப்பட்டுப்போகச் செய்தல், விடுதல்;* to see one off. "நேச வெகுமானங்கள் செய்தெழுதல் வழிவிடுதல்" *(திருவேங். சத.* **58).** *2. பாதையிலிருந்து விலகுதல்;* to make way for somebody. *தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்த பெண்கள், பெரியவர் எதிர்ப்பட்டதும் வழிவிட்டார்கள் (இ.வ.). புகழ்பெற்ற ஆட்டக்காரர், தாம் இனிப் போட்டிகளிற் கலந்துகொள்ளப் போவதில்லை என்றும், புதுவதாய்க் களமிறங்க விருக்கும் இளம் வீரர்களுக்கு வழிவிட விரும்புவ தாகவும், தொலைக்காட்சி நேர்காணலிற் கூறினார் (இ.வ.). வாழ்க்கைப் பாதையில் முன்னேறிச் செல்பவர்களுக்குத் தடையாக இல்லாமல், விலகி வழிவிடுதல்.*

வழிவிடு²–தல் vaḻi-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. செல்லும் வழி திறத்தல்;* to make or open a way. *2. நெறிதவறுதல் (வின்.);* to stay from the right ways or path. *3. மாற்று வழியின் வாயிலாகச் செயல் முடிக்க ஏற்பாடு செய்தல்;* to devise means, to find a way out, as from a difficult situation. *4. இடையூறுகளைப் போக்குதல்;* to mitigate or remove obstacles or obstructions. *5.இறக்குந் தறுவாயில் கழுவாயாகச் சடங்குகளைச் செய்தல் (இ.வ.);* to perform certain rituals when a person is at the point of death.

வழிவை–த்தல் vaḻi-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சுற்றுலா அல்லது புறப்பாடு தொடங்குதல் (யாழ்.அக.);* to start or commence a journey. *2. முன் செய்து காட்டுதல்;* to begin first, to set an example to be a model. *3. கேடு சூழ்தல்;* to plot one's ruin. *அவனுக்கு வழி வைக்கிறான்.*

வழுக்கு¹–தல் vaḻukku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சறுக்குதல்;* to slip; to slide, as in slippery lands. "வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லான் மற்றியா னறியேன்" *(தேவா. 1110, 1). வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தவன் வாழைப் பழத்தோலில் கால் வைத்ததால், வழுக்கி, விழுந்தான் (இ.வ.). வாழ்க்கைப் பாதையில் வழுக்கி விழுந்தவர் மீள்வது கடினம் (உ.வ.). பாசி படர்ந்த குளத்துப் படி வழுக்கும் (உ.வ.). 2. தவறு செய்தல்;* to err, to commit a mistake or wrong. "கோள் வழுக்கி" *(கலித். 104). 3. தப்புதல்;* to escape. "வழுக்கிக் கழிதலே நன்று" *(நாலடி, 71). 4. மறத்தல்;* to be forgetful. "வழுக்கியும் வாயாற் சொலல்" *(குறள், 139). 5. அசைதல் (வின்.);* to move back and forth, as the eyes.

ம. வழுக்குக.

வழுக்கு²–தல் vaḻukku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. ஒழிதல்;* to exempt, to keep out of account. "ஒன்னார் வழுக்கியுங் கேடீன் பது" *(குறள், 165). 2. அடித்தல்;* to beat, to thrash. *3. மோதுதல் (வின்.);* to dash against.

வழுத்து–தல் vaḻuttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வாழ்த்துதல்;* to bless, to grace. "வழுத்தினாள் தும்மினேனாக" *(குறள், 1317). 2. வணங்குதல்;* to praise. "வழுத்தியுங் காணாமலரடி" *(திருவாச. 4, 9) (சூடா.). 3. மந்திரம் சொல்லுதல்;* to mutter chant, as mantras. "மந்திர நாவிடை வழுத்துவராயினர்" *(சிலம்பு.16:172).*

வழுந்து–தல் vaḻundu-, *5 செ.கு.வி.* (v.i.) தோலுரிதல் *(வின்.);* to be excoriated, wear off, as the skin.

வழுவு¹–தல் vaḻuvu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தவறுதல்;* to err, to swerve from the right, to go astray. "தன்னியல் வழாஅது" *(புறநா. 25). 2. நழுவுதல்;* to miss, as a step, to sway down, as a load, to be turned out of a course. "முகில் வழுவி வீழ்வன" *(சூளா. அரசி. 386). 3. சறுக்குதல்;* to slip. "வழூஉ மருங்குடைய வழாஅ லோம்பி" *(மலைபடு. 215). 4. குறைவுடையதாதல்;* to be inaccurate, to be deficient. "வழுவாத நாழி" (S.I.I.i,115).

வளர்¹–தல் vaḷar-, *8 செ.கு.வி.* (v.i.) *1. பெரிதாதல்;* to grow. "வளர்வதன் பாத்தியுள்" *(குறள், 718). 2. நீளுதல்;* to lengthen, to be elongated. *3. மிகுதியாதல்;* to increase, to wax, as the moon. "துன்பம் வளர வரும்" *(குறள், 1223). 4. களித்தல்;* to rejoice. "வேனல் வளரா மயில்" *(திணைமாலை. 111). 5. கண்டுயிலுதல்;* to sleep. "ஆலிலையின் மேலன்று நீ வளர்ந்தது" *(திவ். இயற். 1. 69). 6. தங்குதல்;* to dwell, rest. "வளர் தாமரை" *(திருக்கோ. 1).*

க. மலெ; ம. வளருக.

வளர்²–த்தல் vaḷar-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பெருக்குதல்;* to cause to increase, to enhance. *2. போற்றிவளர்த்தல்;* to cherish, bring up, as a child, animal, plant etc. *3. வளர்த்து-தல் பார்க்க;* see vaḷarttu-.

வளர்³–த்தல் vaḷar-, *4 செ.கு.வி.* (v.i.) வளரச் செய்தல்; to make grow.

வளர்த்து¹–தல் vaḷarttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) கிடத்துதல்; to stretch as a thing, on the ground. "தயிலத்தோணி வளர்த்துமி னென்னச் சொன்னான்" *(கம்பரா. யுத்த. இராவணன் சோகப்.61).*

வளர்த்து[2]–தல் vaḷarttu-, *5 செ. குன்றாவி.* (v.t.) *1. வளரச் செய்தல்;* to cause to grow. *2. உறங்கச் செய்தல்;* to put to sleep. "*அன்னம்..... வளர்த்திய மழலைப் பிள்ளை*" *(கம்பரா. நாட்டுப்.13). 3. நீட்டுதல்;* to lengthen, to prolong, as talk. *4. பொன் முதலியவற்றைத் தகடாக அடித்தல் (வின்.);* to beat into thin plates, as gold.

வளாவு[1]–தல் vaḷāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. சூழ்தல் (பிங்.);* to surround. "*இள வெயில் வளாவ*" *(பரிபா. 15, 27).* "*மகோததி வளாவும் பூதலம்*" *(கம்பரா. தேரேறு. 42). 2. மூடுதல்;* to cover, jacket. "*பைந்துகில்..... வெம்முலை மேல் வளாய்*" *(சீவக. 2634).*

வளாவு[2]–தல் vaḷāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கலத்தல்;* to mix, as hot water with cold, to dilute. "*தேன் வளாவியும்*" *(கம்பரா. ஆற்றுப். 8),* "*கடல் வெதும்பின் வளாவு நீரில்லாது போலவும்*" *(இறை. 3. பக். 47). 2. அளவளாவுதல் (பிங்.);* to be sociable, intimate.

வளை[1]–தல் vaḷai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. கோணுதல்;* to bend, to become crooked. *2. தாழ்தல்;* to lower down. "*முற்றமூத்துக் கோல்துணையா முன்னடி நோக்கி வளைந்து*" *(திவ். பெரியதி. 1, 3, 1). 3. தோற்றல்;* to be defeated. "*வளையா வயவரும்*" *(பு.வெ.7, 18). 4. திடமறுதல் (சீவக.1068, உரை);* to yield, give way, surrender. *5. நேர்மையினின்று விலகுதல்;* to deviate, as from rectitude. "*வளையாத செங்கோல் வளைந்ததிது வென்கொல்*" *(சிலப்.19, 16). 6. வருந்துதல்;* to suffer, regret. "*வளையார்பசியின்*" *(பதினொ திருவிடை-மும்மணிக்.21). 7. சுற்றுதல்;* to move or round about, as foetus in the womb. '*குழந்தை வயிற்றில் வளைய வருகிறான்*' *(உ.வ.).*

வளை[2]–தல் vaḷai-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1. சூழ்தல்;* to surround, encompass, besiege. "*வளைகடல் வலையிற் சூழ்ந்து*" *(சீவக. 1115). 2. சுற்றி வருதல்;* to hover round, to walk around. "*வையக முழுதுடன் வளைஇ*" *(புறநா. 69),* "*செறிவளை நல்லார் சிலர் புறஞ் சூழ*" *(மணிமே.18-39).*

வளை[3]–த்தல் vaḷai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வளையச் செய்தல்;* to bend, inflect. *2. சூழ்தல்;* to surround. "*இடுமுட் புரிசை யேமுற வளைஇ*" *(முல்லைப். 27). 3. தடுத்தல்;* to hinder, obstruct, prevent. "*வள்ளனீங்கப் பெறாய் வளைத்தே னென*" *(சீவக. 889). 4. பற்றுதல்;* to grasp, seize. *5. கவர்தல்;* to carry off, sweep away, to steal. '*திருடர் வந்து எல்லாவற்றையும் வளைத்துக் கொண்டு விட்டார்கள்*' *(இ.வ.). 6. பேச்சு முதலிய வற்றைத் திருப்புதல்;* to reiterate, to revert again and again. '*வளைத்து வளைத்துப் பேசுகிறான்*' *(இ.வ.). 7. எழுதுதல்;* to paint, delineate. "*உருவப்பல்பூ வொருகொடி வளைஇ*" *(நெடுநல்.113). 8. அணிதல்;* to wear, put on. "*சடை முடிமேல் முகிழ்வெண்டிங்கள் வளைத்தானை*" *(தேவா. 871.1).*

வற்புறு–தல் varpuṟu-, *1 செ.கு.வி.* (v.i.) *1. வலிமையடைதல்;* to become strong. *2. திடப்படுதல்;* to be courageous or firm. *3. ஆறுதல் அடைதல்;* to console, to take heart. "*சொல்லமிர்தினால் வற்புற்றானே*" *(சீவக.1122).*

வற்புறுத்து–தல் varpuṟuttu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உறுதிப் படுத்திச் சொல்லுதல் (திவா.);* to asseverate, affirm, assure. *2. வலிமைப் படுத்துதல் (வின்.);* to strengthen, fortify.

வற்று–தல் varṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. சுவறுதல்;* to grow dry; to dry up, as water; to evaporate. "*காமர் பூம்பொய்கை வற்ற*" *(சீவக. 2075). 2. கடல் நீர் முதலியன வடிதல் (வின்.);* to subside; to ebb, as the tide. *3. புண் முதலியன உலர்தல்;* to become absorbed, as matter in an ulcer. *4. வாடுதல்;* to wither, become dry and shrivelled, as the body. "*வற்றிய வோலை கலகலக்கும்*" *(நாலடி, 256). 5. மெலிதல்;* to become emaciated, as the body. "*வற்றிமற் றாற்றப் பசிப்பினும்*" *(நாலடி, 78). 6. பயனற்றுப் போதல்;* to become worthless or purposeless. "*அது நின்று வற்றுமெனின்*" *(நன். 375, மயிலை.).*

க. பத்து; ம.வரலி; து.வரு.

வற–த்தல் varа-, *4 செ.கு.வி.* (v.i.) *1. காய்தல் (பிங்.);* to dry up. *2. வறங்கூர், 1 பார்க்க;* see varaṅkūr. "*வானம் வறக்குமேல்*" *(குறள், 18). 3. குறைந்து மெலிதல் (வின்.);* to grow lean; to shrink.

க.பறு, பரி; ம.வரு; து.வரெ.

வறக்கு–தல் varakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) வறங்கூர்-தல் *பார்க்க;* see varaṅkūr-. "*வானம் வறக்குமேல்*" *(குறள், 18).*

வறட்டு–தல் varaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வற்றச் செய்தல்;* to cause to dry up, to wither. *2. காயச் செய்தல்;* to parch, scorch. *3. வறுத்தல்;* to fry, roast.

வறண்டு–தல் varaṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. தெள்ளுதல் (பிங்.);* to sift by means of winnowing fan, to winnow by tapping the fan. *2. பிறாண்டுதல் (வின்.);* to scratch, as with finger-nails, claws, or spikes. *3. திருடுதல்;* to rob, steal.

தெ.பருகு; க.பர்கட; ம.வரண்டுக.

வறள் (ளு)–தல் varaḷ(ḷu)-, *16 செ.கு.வி.* (v.i.) *1. வற்றுதல் (பிங்.);* to dry up, to become dry. *2. உடம்பு மெலிதல் (வின்.);* to become slim, lean or emaciated.

வறு[1]–த்தல் varu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. பொரியச் செய்தல்;* to dry, grill, fry, parch, toast. "*வெயில் வறுத்த வெம்பரன்மேல்*" *(திவ். இயற். பெரிய. ம. 50). 2. தொந்தரவுபடுத்துதல்;* to annoy, distress, disturb. "*இரவு முழுவதும் அவனுக்குள் சுரம் வறுத்தெடுத்து விட்டது*" *(பே.வ.).*

Te. ṉaṇḍu; **Ma.** vaṟa, vaṟavu, vaṟal, vaṟukka, vaṟaṭṭuka, vaṟaluga; **To.** paṟf(part); loḍ.bare, bara; **Pa.** vedp; **Kui.** vaja; **Kuwi.** vwajali.

வறு²–தல் vaṟu-, *4 செ.கு.வி.* (v.i.) *வறுபடுதல் (வின்.);* to be fried, parched or grilled, roasted.

வறுகு–தல் vaṟugu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. இறுகப் பிடித்தல்;* to cling to claspfirmly. *2. பிறாண்டுதல்;* to scratch, paw.

தெ.பறுகு.

வறுத்திடி–த்தல் vaṟuttiḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *உணவிற்காகச் சில தவசங்களை, வறுத்து இடித்தல்;* to fry and pound. *கருஞ்சோளம், கம்பு, ஊற வைத்த விதை நெல் போன்றவற்றைச் சிலர் வறுத்து இடித்து உணவாகப் பயன்படுத்துவர். துவரப் பசித்துண்டார் ஓராங் கெய்துவர்.*

வன்னி–த்தல் vaṉṉi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. வண்ணம் வைத்தல்;* to paint. *2. வருணித்தல்;* to describe.

வனை–தல் vaṉai-, *2 செ.கு.வி.* (v.i.) *1. உருவமையச் செய்தல்(பிங்.);* to form, fashion, shape. "*வனை கலத்தி கிரியும்*" *(சீவக. 1839). 2.அழகுபடுத்துதல் (சூடா.);* to adorn. *3. சித்திரமெழுதுதல்;* to draw, paint, engrave. "*வனையலாம் படித்தலா வடிவிற்கு*" *(சீவக. 709).*

th

வா–தல் vā-, *18 செ.கு.வி.* (v.i.) *1. வருதல்;* to come. "*தருசொல் வருசொல்..... தன்மை முன்னிலை*" *(தொல்.சொல்.29). 2. நேர்தல்;* to happen. "*வருப வந்துறுங்க ளன்றே*" *(சீவக.509). 3. உண்டாதல்;* to come into being. "*நலம் வர நாடி*" *(பு.வெ.ஒழிபு.9). 4. பிறத்தல்;* to be born. "*அந்தநன் மரபினில்... சந்தனு... வந்தனன்*" *(பாரத. குருகுல.33). 5. மனத்துப் பதிதல்;* to be known, understood, comprehended. "*அந்தப் பாடம் உனக்கு வந்ததா?*". *6. நன்கறியப்படுதல்;* to become crystal clear, to be attained, as a language, a science. "*அவனுக்கு இலக்கணம் வரும்*". *7. முற்றுப்பெறுதல்;* to be completed, finished. "*ஸ்ரீமான் செய்ததெல்லாம் நன்றாய் வருங்காண்*" *(ஈடு.7,9,9). 8. இயலுதல்;* to be able. "*அது என்னாற் செய்ய வாராது*". *9. மிகுதல்;* to surplus, to abound, increase. "*அணிவரு பூஞ்சிலம்பு*" *(பு.வெ.12, பெண்பாற்.17).*

தெ. ரா; க., து. பா; ம. வா

வாக்கு–தல் vākku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *வார்த்தல்;* to pour. "*அடர் பொற்சிரகத்தால் வாக்கி*" *(கலித்.51).*

தெ. வாக; க. வாகு; **Ko.** va-k; **To.** Po-x; **Kod.** ba-k; **Kol.** va-ng; **Ga.** van(g); **Go.** wāngānā; **Kui.** vānga; **Kuwi.** (f) vwāngali.

வாகெடு–த்தல் vākeḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *தலைமயிர் வகிர்தல்;* to part the hair down the middle.

வாங்கு¹–தல் vāṅgu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வளைத்தல் (சூடா.);* to bend. "*கொடுமரம் வாங்கி*" *(கல்லா.4). 2. நாண்பூட்டுதல்;* to string a bow. "*நாண் வாங்கலாது விற்கொண்டு*" *(இரகு. திக்குவி.231). 3. இழுத்தல்;* to carry away, as a flood, to draw, drag, pull. "*மத்தமொலிப்ப வாங்கி*" *(பெரும்பாண்.156). 4. மூச்சு முதலியன உட்கொள்ளுதல்;* to take in, as breath. "*மூச்சு வாங்குகிறான்*". *5. ஏற்றல்;* to receive, take. "*வருக வென்றென்னை நின்பால் வாங்கிட வேண்டும்*" *(திருவாச.5, 68). 6. விலைக்குக் கொள்ளுதல்;* to buy. "*மாதவி மாலை கோவலன் வாங்கி*" *(சிலப்.3,171). 7. பெறுதல்;* to get, obtain. "*எங்கு வாங்கிக் கொடுத்தாரிதழியே*" *(தேவா. 456, 8). 8. வரைதல்;* to inscribe, indite. "*ககரத்துக்குக் கால் வாங்கினால் காவாகும்*". *9. ஒதுக்குதல்;* to move to one side. "*இந்த வண்டி போம்படி அந்த வண்டியை வாங்கிக் கொள்*". *10. மீட்டும் பெறுதல்;* to get back, take back. "*கொடுத்ததை வாங்கினார்*". *11. செலுத்துதல்;* to shoot, as an arrow; to send forth. "*வாங்கினார் மதிண் மேற்கணை*" *(தேவா.21, 2). 12. தப்பும்படி உய்வித்தல்;* to rescue, deliver. "*சமணர் பொய்யிற் புக்க ழுந்தி வீழாமே போத வாங்கி*"*(தேவா.658,7). 13. தழுவுதல்;* to embrace. "*வருமுலை பொதிர்ப்ப வாங்கி*" *(சீவக.584). 14. ஒத்தல்;* to resemble. "*தூணொடு பறம்பு வாங்கும்..... தோளான்*" *(பாரத. நிவாத. 145). 15. அழைத்தல் (அக.நி.);* to call. *16. நீக்குதல்;* to remove, take away. "*வாங்குமின் மனத்துயர்*" *(கம்பரா. மீட்சிப். 278). 17. பிரித் தெடுத்தல்;* to seperate, eliminate. "*தானே என்றார், புறத்தினை பலவற்றுள் ஒன்றை வாங்குதலின்*" *(தொல். பொருள். 56, உரை). 18. பெயர்த்தல்;* to dig up, as the earth. "*புற்றம்.....வாங்கிக் குரும்பு கெண்டும்*" *(அகநா.72). 19. முறித்தல்;* to break off. "*வேழம்...கரும்பின் கழை வாங்கும்*" *(கலித்.40.). 20. வெட்டுதல்;* to cut off. '*கை கால்களை வாங்கிவிடுவேன்*'. *21. அடித்தல்;* to strike. '*பிரம்பால் அவனை நாலு வாங்கு வாங்கினான்*'. *22. அழித்தல்;* to destroy. "*விண்ணு மண்ணக முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்*" *(திருவாச.5, 96). 23. வைதல்;* to abuse, reproach. '*அவனை நல்ல வாங்கு வாங்கினான்*'.

தெ., ம. வங்கு; க. பாகு; து. பாகுணி; குட. பாங்; கொலா. வாக் (g); **To.** pa-g; **Kod.** baṉ-g; **Nk.** vaaṉg; **pa.** vaṉg; **Kuwi.** (f) vwangali; **Kur**. beṉknā.

வாங்கு²–தல் vāṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. வளைதல்;* to bend. "*வாங்குகதிர் வரகின்*" *(முல்லைப். 98). 2. அலைதல்;* to sway, wave. "*வளி வாங்கு சினைய மாமரம்*" *(பரிபா.7, 14). 3. குலைதல்;* to scatter, disperse. "*பகைவர் தண்டு வாங்கிப் போயிற்று*". *4. மெலிதல்;* to become lean. "*உடம்பு வாங்கிப்*

போயிற்று". 5. குறைதல்; to be reduced. "வீக்கம் வாங்கியிருக்கிறது". 6. தாழ்தல்; to sink, subside. 7. களைத்துப் போதல்; to be exhausted. "வாங்காமல் நீரை இறைத்துக் கொண்டி ருந்தார்கள்" (வின்.). 8. நீங்குதல்; to cease. நோவு வாங்கிப் போயிற்று. 9. ஒரு பக்கமாக ஒதுங்குதல்; to move to one side. 10. பின்வாங்குதல்; to withdraw, retreat. "விரைவின் வாங்கி... பிழைத்த சேனை பின்வர" (திருவாலவா. 49, 50). 11. திறந் திருத்தல்; to be opened. "அந்தக் கடையின் கதவு வாங்கியிருந்தது".

வாசல்தெளி–த்தல் vāšal-teḷi, *4* செ.கு.வி. (v.i.) நீர் தெளித்து வாயிலைத் தூய்மை செய்தல்; sprinkle water on the floor of the courtyard as part of house work.

வாசி–த்தல் vāši-, *11* செ.குன்றாவி. (v.t.) 1. படித்தல்; to read. "ஓலையை..... வாசியென்றனன்" (கம்பரா. எழுச்.3). 2. கற்றல்; to learn. "வாசித்துங் கேட்டும்" (திவ். இயற். நான்மு.63). 3. வீணை முதலியன இசைக்க ஒலிப்பித்தல்; to play on a musical instrument. "மாதவி தன் மனமகிழ வாசித்த றொடங்குமன்" (சிலப்.7, பக்.205). 4. புல்லாங்குழல் போன்ற துளைக்கருவியியக்குதல்; to play.

வாட்டு–தல் vāṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) 1. உலர்த்துதல்; to cause to wither or fade; to dry; to scorch. 2. வதக்குதல்; to roast. 3. வருத்துதல்; to vex, afflict, mortify. "எளியரை வலியர் வாட்டின் வலியரை... தெய்வம் வாட்டும்" (காஞ்சிப்பு. கடவுள் வா.7). 4. கெடுத்தல்; to injure; to destroy. "இனம் போக்கி நின்றாரிகல் வாட்டி" (பு.வெ.2, 5). 5. ஆடை வெளுத்தல்; to wash, as cloth. "ஸ்ரீவைஷ்ணவ வண்ணத்தான் திருப்பரி வட்டங்களை அழகிதாக வாட்டி" (ஈடு.5, 10, 6).

க. பாடு; தெ. வாடு; ம. வாடுக; **Ko.** vaa-r̤.

வாடு[1]–தல் vāḍu-, *5* செ.கு.வி. (v.i.) 1. உலர்தல்; to wither, fade, dry up. "பொதியொடு பீள்வாட" (நாலடி, 269). 2. மெலிதல்; to be emaciated, to become weak. "எந்தோள் வாட" (கலித்.68.). 3. மனமழிதல்; to pine away, grieve. "வாடினேன் வாடி வருந்தினேன்" (திவ்.பெரியதி.1, 1, 1). 4. பொலி வழிதல்; to turn pale. "குழலியென் வாடிப் புலம்புவதே" (திருக்கோ.14). 5. தோல்வியடைதல்; to be defeated. "வாடாவஞ்சி தலைமலைந்து" (பு.வெ.3, 1, கொளு). 6. கெடுதல்; to perish. "காரிகை பெற்றதன் கவின் வாட" (கலித்.124). 7. நீங்குதல்; to be removed. "சூலமும்... கரத்தினில் வாடா திருத்தி" (கல்லா.87, 29). 8. குறைதல்; to diminish, decrease. "வாட்டருஞ் சீர்க்கண்ணகி நல்லாளுக்கு" (சிலப்.9, 40). 9. நிறை குறைதல் (இ.வ.); to fall short in weight.

க. பாடு; குட. பாட்; து. பாடுனி; தெ. வாடு; பார்ஜி. வாட்; குவி. வ்விராலி; ம. வாடுக; **Kod.** ba-d; **pa.** vāḍ.

வாணி–த்தல் vāṇi, *11* செ.குன்றாவி. (v.t.) அமைத்தல்; to form make. "மன்னுதிரு வெண்மணலை வாணித்து" (இலஞ்சி. முருகனுலா,37).

வாத்து–தல் vāttu-, *5* செ.குன்றாவி. (v.t.) 1. வாழ்த்து-, பார்க்க; see vāḻttu-. 2. கண்ணேறு கழிக்க மணமக்கள் முன் மஞ்சள் நீரால் ஆலத்தி சுற்றுதல் (இ.வ.); to wave saffron water before the bridel pair to ward off the evil eye.

வாது–தல் vādu-, *5* செ.குன்றாவி. (v.t.) அறுத்தல்; to cut, tear open. "வாது வல்வயிறே வாதுவல் வயிறே" (தொல். பொருள். 79, உரை, பக்.292).

வாய்[1]–தல் vāy-, *4* செ.கு.வி. (v.i.) 1. நிறை வேறுதல்; to succeed, to be gained. "கல்வி வாயுமே" (திவ். திருவாய்.1, 10, 11). 2. உறுதியாக நிகழ்தல்; to happen with certainty, to come true. "வருதல் வாய்வது" (முல்லை.20). 3. ஏற்றதாதல்; to be fit or suitable. "வாய்ந்த மலையும்" (குறள்.737). 4. நிறைதல்; to be full. "வாய்ந்த புகழ் மறைவளருந் தோணிபுரம்" (தேவா.145,3). 5. சிறத்தல் (வின்.); to excel, surpass.

வாய்[2]–தல் vāy-, *3* செ.குன்றாவி. (v.t.) 1. பெறுதல்; to obtain, realise, possess. "வாய்ந்த மேனியெரி வண்ணமே" (தேவா.582, 6). 2. மனநேர்தல்; to consent to, agree to. "கொய்தழை கைபற்றிச் செய்ததும் வாயாளோ" (பரிபா.6, 66).

வாய்[3]–த்தல் vāy-, *11* செ.கு.வி. (v.i.) 1. செழித்தல்; to flourish; to be luxuriant. "வாய்க்குங் கரும்பும்" (திவ்.திருவாய்.7, 10, 4). 2. மதர்த்தல்; to be over luxuriant in growth. 'உரம் அதிகமாய் விட்டதினால்பயிர் வாய்த்துப்போய்விட்டது' (உவ.). 3. சேர்தல்; to join, unite. "வருடையைப் படிமகன் வாய்ப்ப" (பரிபா.11, 5). 4. திரட்டுதல்; to gather into a mass. "கஞ்சுகம் வாய்த்த கவளம்" (பு.வெ.ஒழிபு.8).

வாய்கட்டு–தல் vāy-kaṭṭu, *8* செ.குன்றாவி. (v.t.) 1. பேசாதிருக்கச் செய்தல்; to silence. 2. மந்திரத்தால் நச்சுயிரிகளின் வாயைத் திறவாமற் பண்ணுதல்; to charm, as a snake or beast, so as to prevent its opening its mouth.

வாய்காட்டு–தல் vāy-kāṭṭu-, *10* செ.கு.வி. (v.i.) 1. அதிகப்படியாகப் பேசுதல் (யாழ்.அக.); to wag one's tongue. 2. கெஞ்சுதல் (கொ.வ.); to cringe.

வாய்குளிறு–தல் vāy-kuḷiṟu-, *2* செ.கு.வி. (v.i.) 1. கூச்சலிடுதல் (வின்.); to bawl out. 2. உறக்கத்தில் கனவு முதலியவற்றால் வாய் குழறுதல்; to cry out in sleep, as from fear.

வாய்கொடு–த்தல்[1] vāy-koḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உறுதிமொழி கூறுதல்;* to give word, promise. *2. பேச்சுக் கொடுத்தல் (கொ.வ.);* to engage one in talk. *3. வாய்ச்சண்டை வளர்த்தல் (வின்.);* to kindle a quarrel; to bandy words.

வாய்கொடு–த்தல்[2] vāy-koḍu-, *4* செ.கு.வி. (v.i.) விளைவுகளை எண்ணிப் பார்க்காமல் தானாகப் போய்ப் பேசுதல்; enter into a conversation voluntarily. 'அந்த முரடனிடம் ஏன் வாய் கொடுத்தாய்?'

வாய்சலி–த்தல் vāy-šali-, *4* செ.கு.வி. (v.i.) பேசி வாயயர்தல்; to be tired of speaking. "அவன் நெடுநேரம் பேசி வாய் சலித்தான்" *(வின்.).*

வாய்திற[1]**–த்தல்** vāy-tiṟa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. வாயை அகல விரித்தல்;* to open one's mouth. 'பணமென்றால் பிணமும் வாய் திறக்கும்'. *2. மலர்தல்;* to blossom; to open, as a flower. "நறுமென்குவளை வாய் திறந்த" *(பிரபுலிங்.பிரபு தே.54). 3. புண் கட்டி உடைதல்;* to break, as a boil. *4. வெள்ளம் கரையை உடைத்தல்;* to make a breach, as a flood. "பெரும்புனல் வாய் திறந்த பின்னும்" *(பு.வெ.3,21).*

வாய்திற[2]**–த்தல்** vāy-tiṟa-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. மலர்த்துதல்;* to cause to open, as the petals of a flower. "வண்டு வாய் திறப்ப... மல்லிகை" *(சிலப்.2,32). 2. பேசுதல்;* to speak. "வாளா கிடந்துறங்கும் வாய்திறவான்" *(திவ். இயற் .நான்மு.35).*

வாய்தீட்டு–தல் vāy-tīṭṭu-, *5* செ.குன்றாவி. (v.t.) படைக்கல முதலியவற்றின் முனை தீட்டுதல்; to sharpen the edge as of a weapon. "கன்மிசை யறிந்து வாய் தீட்டி" *(பெருங். இலாவாண.4,168).*

வாய்நேர்–தல் vāy-nēr-, *3 செ.குன்றாவி.* (v.t.) *1. வழங்குவதாக உறுதிமொழியளித்தல்;* to promise to give or bestow. "அறைபறை மாயன் மணி வண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்" *(திவ்.திருப்பா. 16). 2. நேர்த்திக் கடனைக் குறிப்பிட்டுச் சொல்லுதல்;* to vow to make a specific offering. "நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன்" *(திவ்.நாய்ச்.9, 6). 3. பேச்சால் உடன்படுதல்;* to give one's consent orally. "நெஞ்சு நேர்ந்தும் வாய்நேர்ந்துரையா" *(பெருங். உஞ்சைக்.44,146).*

வாய்ப்பெய்–தல் vāy-p-pey-, *1* செ.குன்றாவி. (v.t.) வாயிலிட்டுத் தின்னுதல்; to take in, as food, to eat. "நிணம் வாய்ப்பெய்த பேய் மகளிர்" *(மதுரைக்.25).*

வாய்பார்–த்தல் vāy-pār, *4 செ.கு.வி.* (v.i.) பிறருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருத்தல் *(இ.வ.);* to listen to a talk without taking part in it.

வாய்பிதற்று–தல் vāy-pidaṟṟu-, *10* செ.கு.வி. (v.i.) நாக்குழறிப் பேசுதல்; to speak incoherently.

வாய்பிள–த்தல் vāy-piḷa-, *3 செ.கு.வி.* (v.i.) *1. அங்காத்தல் (நாமதீப.711);* to open one's mouth wide; to gape. *2. திகைத்தல்;* to be nonplussed. 'கேள்வி கேட்டால் வாய் பிளக்கிறான்'. *3. முடியாதென்று கை விடுதல்;* to plead inability. 'பணத்துக்கு அவனை நம்பியிருந்தேன், அவன் கடைசியில் வாய் பிளந்து விட்டான்'. *4. இறத்தல் (கொ.வ.);* to die, used in contempt.

வாய்புதை–த்தல் vāy-pudai-, *4* செ.கு.வி. (v.i.) பெரியோர் முன்னிலையில் மதிப்புரவுக் குறியாக வாயை வலக்கையால் மூடிக் கொள்ளுதல்; to cover one's mouth with the palm of the right hand, as a mark of respect in the presence of one's superiors.

வாய்பூசு–தல் vāy-pūšu-, *5* செ.கு.வி. (v.i.) *1. வாய் கழுவுதல்;* to wash or rinse one's mouth. "புகுமதத்தால் வாய்பூசி" *(திவ். இயற்.3,70). 2. தூய்மை செய்தல்;* to sip water ceremonially, to perform āšamañam. நீராடிக் கால் கழுவி வாய் பூசி" *(ஆசாரக்.19). 3. வெறும்புகழ்ச்சி பேசுதல்;* to flatter.

வாய்பேசு–தல் vāy-pēšu-, *5* செ.கு.வி. (v.i.) தற்பெருமை பேசுதல்; to brag, boast. "எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசு நங்காய்" *(திவ்.திருப்பா.14).*

வாய்போடு–தல் vāy-pōḍu-, *20* செ.கு.வி. (v.i.) ஒருவன் பேசுகையில் இடையிற் புகுந்து பேசுதல்; to interject or interrupt a person when talking.

வாய்மடி–தல் vāy-maḍi-, *4* செ.கு.வி. (v.i.) கூர்மழுங்குதல்; to become blunt-edged. 'ப்ருஹ்மாஸ்திரம் வாய்மடியச் செய்தே' *(ஈடு.6, 1, ப்ர.).*

வாய்மடு–த்தல் vāy-maḍu-, *4* செ.குன்றாவி. (v.i.) வாயினுட் கொள்ளுதல்; to put into one's mouth. "அடியேன் வாய் மடுத்துப் பருகிக் களித்தேனே" *(திவ். திருவாய். 2, 3, 9).*

வாய்மூடு–தல் vāy-mūḍu-, *5* செ.கு.வி. (v.i.) *1. வாய் புதை-, (யாழ்.அக.)* பார்க்க; see vāy-pudai. *2. பேச்சு, அழுகை முதலியன நிறுத்துதல்;* to cease speaking, crying etc. 'அவரதிகாரத்தில் அழுத பிள்ளையும் வாய்மூடும்'. *3. குவிதல்;* to close, as a flower. "தொக்க கமலம் வாய்மூட" *(பிரபுலிங். பிரபுதே.54).*

வாய்மொழி[1]**–தல்** vāy-moḻi-, *2* செ.குன்றாவி. (v.t.) *1. கூறுதல்;* to speak. "வாய் மொழிந்துரைக்கலுற்றாள்" *(சீவக. 1707). 2. தூய மந்திரங்களை யோதுதல்;* to consecrate by uttering sacred hymns. "வாய் மொழி மங்கலக் கருவி முன்னுறுத்தி" *(சீவக. 2411).*

வாய்விடு[1]–தல் vāy-viḍu, *18 செ.குன்றாவி.* (v.t.) **1.** பேசுதல்; to speak. "*எனப்பல வாய்விடூஉந்தா னென்ப*" *(கலித்.46). 2. வெளிவிட்டுத் தெளிவாகச் சொல்லுதல்;* to speak openly and clearly without any reservation. "*அர்த்த ப்ராப்தமானது தன்னையே இங்கே வாய்விடுகிறார்*" *(ஈடு,10,4,9). 3.வெளிப்படுத்துதல்;* to divulge, as secrets. '*நம்மிருவர்க்கும் நடந்ததை வாய்விடவேண்டாம்*'.

வாய்விடு[2]–தல் vāy-viḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1. மலர்தல்;* to blossom, open, as a flower. "*நிரையிதழ் வாய்விட்ட கடிமலர்*" *(கலித்.29). 2. உரக்க வொலியெழுப்புதல்;* to lift up or raise the voice. '*குழந்தை வாய்விட்டு அழுதது*'. *3. சூளுரை கொள்ளுதல் (சீவக. 592);* to vow. *4. கொட்டாவி விடுதல் (வின்.);* to yawn. *5. கடித்த கடிப்பை விட்டிடுதல்;* to leave off bitting. '*உதிரங் குடித்து வாய்விட்ட அட்டைபோல*' *(ஈடு,4,1,7).*

வாய்வை[1]–த்தல் vāy-vai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. உண்ணுதல்;* to eat. "*சிவன் வாய்வைப்ப னோவாலத்தில்*" *(தனிப்பா.ii,116,295). 2. ஊதுதல்;* to blow, as a wind - instrument. "*நேமியான் வாய் வைத்த வளைபோல*" *(கலித்.105). 3. சுவைத்தல்;* to taste. *4. தலையிடுதல்;* to meddle or interfere. '*அவன் எல்லாவற்றிலும் வாய்வைக்கிறான்*'. *5. சிறிது பயிலுதல்;* to learn a little, to have a desultory knowledge. '*எல்லாத் துறைகளிலும் வாய் வைத்தவன் அவன்*'.

வாய்வை[2]–த்தல் vāy-vai-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. கடித்தல் (யாழ்.அக.);* to bite. *2. கேட்டல் (யாழ்.அக.);* to hear.

வாயடி–த்தல் vāy-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வாயிலே அடித்துக் கொள்ளுதல்;* to beat one's mouth, as in a grief. "*மண்புரண்டு வாயடிப்பவர்*" *(பிரபுலிங். சித்த.49). 2. அலப்புதல்;* to chatter.

வாயாகு–தல் vāy-āgu-, *5 செ.கு.வி.* (v.i.) உண்மையாதல்; to be come true. '*யானறிந் தேனது வாயாகுதலே*' *(தொல். பொருள். 261, உரை).*

வாயுறு–த்தல் vāy-uṟu. *5 செ.கு.வி.* (v.i.) பேச்சினால் மெய்ம்மையை அறிவுறுத்தல்; to preach or expound the truth. "*வாயுறை வாழ்த்தே... வாயுறுத்தற்றே*" *(தொல். பொருள். 424).*

வாயூறு–தல் vāy-ūṟu, *5 செ.கு.வி.* (v.i.) உணவை நினைந்து உமிழ்நீர் சுரத்தல்; secretion of saliva on seing food. "*அமரர் குழாம் வாயூற*" *(அழகர்கல.1).*

வாயெடு–த்தல் vāy-eḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பேசத் தொடங்குதல்;* to begin to speak. *2. குரலெடுத்தல்;* to speak aloud, to raise the voice. "*நன்னாடு வாயெடுத் தழைக்கும்*" *(மணிமே. 25, 237).*

வார்[1]–தல் vār-, *4 செ.கு.வி.* (v.i.) *1. ஒழுகுதல்;* to flow, trickle. "*நெய் வார்ந்தனைய திண்கோல்*" *(சீவக.1697). 2. வெளிவிடுதல்;* to spread, overflow. "*நெடுநீர் வார்குழை*" *(நெடுநல்.139). 3. நெடுமையாதல்;* to be long. "*வார்மயி ருளரினள்*" *(அகநா.102.). 4. நேராதல்;* to be upright. "*வார்ந்திலங்கு வையெயிற்று*" *(குறுந்.14). 5. உயர்தல் (பிங்.);* to rise high. *6. ஒழுங்குபடுதல்;* to be in order, to be arranged in order. "*மணல்வார் புறவில்*" *(மலைபடு.48). 7. நென்மணி முதலியன பால் கட்டுதல்;* to form milk, as grain. "*ஐவன வெண்ணெல் பால்வார்பு கெழீஇ*" *(மலைபடு.114). 8. உரிதல்;* to peel off. "*பீலி வார்ந்து*" *(அகநா.69).*

வார்[2]–த்தல் vār-, *11 செ.கு.வி.* (v.i.) அம்மை நோயில் முத்து வெளிப்படுதல்; to appear, as pock in small-pox. '*அம்மை வார்த்த மூஞ்சி*' *(கொ.வ.).*

வார்[3]–த்தல் vār-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. ஊற்றுதல்;* to pour. "*கிண்ணத்தில் வார்த்தளிக்க*" *(சீவரக. கணபதியு.13). 2. உருக்கி வார்த்தல்;* to cast, as metal in a mould. *3. தோசை முதலிய பணியாரஞ் செய்தல்;* to prepare cakes from dough. '*தோசை வார்த்தான்*'.

வாரி[4]–த்தல் vāri, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. தடுத்தல் (சூடா.);* to hinder, obstruct. *2. ஆணையிட்டுக் கூறுதல் (யாழ்.அக.);* to asseverate, swear. *3. நடத்துதல்;* to conduct, drive, as a horse. "*பரிமா வாரித்த கோமான்*" *(இறை.13, உரை, பக். 91).*

வாரியிறை–த்தல் vāri-y-iṟai-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. சிதறச் செய்தல்;* to scatter. *2. வீணாக்குதல்;* to waste. *3. மிகுதியாகக் கொடுத்தல்;* to give liberally.

வாரு–தல் vāru, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. அள்ளுதல்;* to take by handfuls, to take in a sweep; to scoop. "*உறியொடு வாரியுண்டு*" *(கம்பரா. ஆற்றுப். 15). 2. ஆவலோடு கொள்ளுதல்;* to take in or grasp with avidity. "*வாரிக் கொண்டுன்னை விழுங்குவன் காணில்*" *(திவ். திருவாய். 9, 6, 10). 3. தொகுத்தல்;* to gather. "*கைவளம் வாரினை கொண்டு வரற்கு*" *(பு, வெ.9, 29). 4. மிகுதியாகக் கொண்டு செல்லுதல்;* to remove, carry off in great numbers, as plague, flood, etc. *5. கவர்தல் (திவா.);* to snatch away. *மாதர் வனைதுகில் வாரு நீரால்*" *(கம்பரா. ஆற்றுப். 15). 6. திருடுதல் (யாழ்.அக.);* to rob, steal. *7. தோண்டி யெடுத்தல்;* to dig and take up. "*வள்ளி வாரிய குழியின்*" *(சீவக.1565). 8. கொழித்தல் (திவா.);* to winnow. *9. அரித்தல்;* to sift, as with a sieve or by immersing in water. "*வாராதட்ட வாடூன் புழுக்கல்*" *(பெரும்பாண்.100). 10. மயிர் முதலியன சீவுதல்;* to comb, as the hair. "*கோதி வாரி முடித்த பாரிய கொண்டை*" *(அரிச்.பு.இந்திர.16).*

11. யாழ் நரம்பைத் தடவுதல்; to play upon, as the strings of a lute. "வாரியும் வடித்து முந்தியு முறழ்ந்தும்" *(பொருந.23). 12. ஓலையை எழுதுதற்குரிய இதழாகச் செம்மை செய்தல்;* to trim, as a palmyra leaf to write on. *13. பூசுதல் (நெடுநல்.110, உரை);* to plaster, smear.

க. பாரு, பதசு; ம. வாருக; து. பார்சுனி, பாசுனி, பார்குனி; குருக். பார்னா.

வாலாட்டு–தல் vāl-āṭṭu-, *47 செ.கு.வி.* (v.i.) *1. குறும்பு செய்தல்;* to do mischief, as wagging one's tail. *2. வீண் பெருமை காட்டுதல்;* to put on airs.

வாவு–தல் vāvu-, *5* செ.கு.வி. (v.i.) *தாண்டுதல்;* to jump over, gallop, leap. "குன்றிடை வாவுறு கோளரி போல" *(கம்பரா. பஞ்சசே, 63).*

வாழ்–தல் vāḻ-, *4* செ.கு.வி. (v.i.) *1. இருத்தல்;* to be exist. *2. வாழ்ந்திருத்தல்;* to live. "வாழ்தலுயிர்க்கன்ன ளாயிழை" *(குறள்,1124). 3. செழித்திருத்தல்;* to flourish, prosper. "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" *(தேவா. 1177, 1). 4. மகிழ்தல்;* to be happy. "செம்பொற் குன்றினைக் கண்டு வாழ்ந்து" *(திருவாலவா. 61, 18). 5. மனைக் கிழத்தியாக இருத்தல் (கொ.வ.);* to live the life of a married woman (colloq). *6. விதிப்படி ஒழுகுதல்;* to shape one's life according to a definite set of rules. "தந்திரத்து வாழ்து மென்பார்" *(ஆசாரக். 35),* "வாழ்வாருக்குச் சீதேவி வாயிலே" *(பழ.).*

தெ., ம., து. வாளு; **Ko.** va-ḷ; **Kod.** ba-ḷ; **Tu.** baḷani; **Nk.** batt; **Go.** badaktōr; **Kui.** bārti.

வாழ்க்கைப்படு–தல் vāḻkkai-p-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *திருமணமாதல்;* to be married, to become a wife. "வாழ்க்கைப் பட்டாள் கயற்கண்ணியே" *(தனிப்பா. ii, 1, 1).*

வாழ்க்கைப்படுத்து–தல் vāḻkkai-p-paḍuttu-, *4* செ.குன்றாவி. (v.t.) *திருமணம் செய்து கொடுத்தல் (சீவக. 1490, உரை);* to give in marriage.

வாழ்த்து–தல் vāḻttu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. பாராட்டுதல்;* to felicitate, congratulate, bless. *2. போற்றுதல்;* to praise, applaud. "வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்" *(தேவா. 1203, 7). 3. மங்கலம் பாடுதல் (யாழ்.அக.);* to sing songs of benediction.

க. பாழிசு.

வாழ்வி–த்தல் vāḻvi-, *11* செ.குன்றாவி. (v.t.) *1. வாழ வைத்தல்;* to cause or help one to live. "வாழ்விப்பா னெண்ணமோ" *(அஷ்டப். நூற்றெட். 47). 2. முறைமன்றம் மூலமாகச் சொத்தை உரியவனுக்கு ஒப்படைத்தல் (நெல்லை.);* (legal) to deliver possession through court.

வாழ்விழ–த்தல் vāḻviḻa-, *4* செ.கு.வி. (v.i.) *1. கைம் பெண்ணாதல்;* to be widowed. *2. மனைவியை இழத்தல் (இ.வ.);* to become a widower.

வாளிபோ–தல் vāḷi-pō-, *13* செ.கு.வி. (v.i.) *குதிரை முதலியன வட்டமாயோடுதல்;* to run in a circle, as a horse. "மாதிர முறப்பல வாளிபோதுமால்" *(பாரத. சூது. 121).*

வ. பாலி.

É

விக்கு[1]–தல் vikku-, *5* செ.கு.வி. (v.i.) *1. விக்கலெடுத்தல்;* to hiccup. *2. விம்மி நிறைதல்;* to be superabundant, chokeful. "வயல் விக்கின பொதியும் கதிருமா யிருக்கிறது" *(நாஞ்.).*

விக்கு[2]–தல் vikku-, 5 செ.குன்றாவி. (v.t.) *விக்கிவெளித்தள்ளுதல்;* to hiccup, bring out with interruptions of hiccups. "உண்ணுநீர் விக்கினா னென்றேனா" *(கலித். 51).*

க. பிக்கு.

விகண்டி–த்தல் vigaṇḍi-, *11* செ.கு.வி. (v.i.) *1. குணக்காய்ப் பேசுதல் (யாழ்ப்.);* to raise frivolous or fallacious objections. *2. மறுத்துரைத்தல் (வின்.);* to refute.

விகு–த்தல் vigu-, *11* செ.கு.வி. (v.i.) *செருக்காதல்;* to be tight, stiff or hardened. "வயிறு வில்லைப்போல விகுத்துக் கொள்ளல்" *(சீவரட். 118).*

ma. viṇṇuka; **Ko.** vigu; **To.** pixy; **Ka.** bigi; **Tu.** bigi, bigu, biguta; **Te.** bigi, bigutu, biguvu; **Kui.** bija.

விங்கு[1]–தல் viṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *மிகுதல்;* to be abundant. "திங்கள் ..... ஒளி விங்கி" *(தேவா. 1157, 3).*

விங்கு[2]–தல் viṅgu-, *5* செ.கு.வி. (v.i.) *துளைத்தல் (இலக். அக.);* to drill, pierce.

விசி[1]–த்தல் viši-, *11* செ.குன்றாவி. (v.t.) *இறுகக் கட்டுதல்;* to fasten, bind, tie tightly. "திண்வார் விசித்த முழவு" *(மலைபடு. 3).*

விசி[2]–த்தல் viši-, *4* செ.கு.வி. (v.i.) *விம்முதல்;* to become swollen, over-stretched, as the abdomen from over-eating. "விலாப்புடை மருங்கு விசிப்ப மாந்தி" *(புறநா. 61).*

விசிறியெறி–தல் višiṟi-y-eṟi-, *2* செ. குன்றாவி. (v.t.) *சுழற்றி வீசுதல்;* to cast away, to throw away. 'அவள் நகைகளை வீசியெறிந்தாள்'.

விசிறு[1]–தல் višiṟu-, *5* செ.கு.வி. (v.i.) *1. விசிறியாற் காற்றெழுப்புதல்;* to fan. *2. வாள் முதலியவற்றை வீசுதல்;* to wave to and fro, brandish. "நாந்தகம் விசிறு நம்புருடோத்தமன்" *(திவ். பெரியாழ். 4, 7, 4). 3. வலை முதலியவற்றை விரித்தெறிதல்;* to fling, hurl, cast, as a net. "அலைகடல்வாய் மீன்விசிறும்" *(திருவாச. 8, 2). 4. சுழற்றுதல்;* to whirl round. "விளங்கனிக் கிளங்கன்று விசிறி" *(திவ். பெரியதி. 9, 8, 6). 5.*

சொரிதல்; to pour forth, to sprinkle. 6. வெளித் தள்ளுதல்; to eject, discharge. 'கிடாரி கருவை விசிறி விட்டது'. 7. போக்குதல்; to remove. "பிறவியுமற விசிறுவர்" (தேவா. 618, 4). 8. கை முதலியன வீசுதல்; to swing, as the arms in walking. "வேயன தோள்விசிறி" (திவ். பெரியதி. 3, 7, 5). 9. உயிர்மெய்களுள் இகர ஈகாரங்களின் குறியாக மேல் வளைவுக் கோடிடுதல்; to append the symbols of and to the consonants.

தெ. விசரு; க. பிசுடு; ம. விசருக.

விசிறு[2]–தல் višiṟu-, 5 செ.குன்றாவி. (v.t.) விசிறியாற் காற்றடிக்கச் செய்தல்; to fan.

விசுக்கு–தல் višukku-, 5 செ.குன்றாவி. (v.t.) விரைந்து கைவீசுதல், விசிறுதல்; to fan. 'விசுக்கு விசுக்கென்று நடக்கிறாள்' (இ.வ.).

விசும்பு[1]–தல் višumbu, 5 செ.குன்றாவி. (v.t.) 1. வெறுப்புடன் விலக்குதல் (வின்.); to throw away in contempt, to toss aside, to cast away. 2. கயிறு முதலியவற்றைச் சுண்டியிழுத்தல் (தஞ்சை.); to draw tight, as a rope. 3. தேம்பி அழுதல்; to sob, cry.

விசும்பு[2]–தல் višumbu-, 5 செ.கு.வி. (v.i.) செருக்குக் கொண்டிருத்தல்; to be proud or haughty. 'மாப்பிள்ளை மிக விசும்புகிறான்'.

விசை–த்தல் višai-, 11 செ.கு.வி. (v.i.) 1. விரைவு பண்ணுதல்; to hasten, to cause to move swifty. 2. வீசுதல்; to swing. "கால்விசைத் தோடி" (திருவாசக. 2, 135). 3. துள்ளுதல்; to leap, hop. "நறுநெய்க்கடலை விசைப்ப" (புறநா. 120). 4. சிதறுதல்; to burst, split. "கண்டொறும் விசைத்த கருப்புத் தாளமும்" (கல்லா. 59, 16). 5. கடுமையாதல்; to be forceful. "இரும்பு விசைத் தெறிந்த கூடம்" (பெரும்பாண். 437). 6. சினமுறுதல் (வின்.); to become angry.

விசைதிற–த்தல் višai-tiṟa-, 3 செ.கு.வி. (v.i.) வேகமாக வெளிப்படுதல்; to burst out. "விசைதிறந் துருமுவீழ்ந்த தென்ன" (கம்பரா. இரணிய. 127).

விஞ்சு[1]–தல் viñju-, 5 செ.குன்றாவி. (v.t.) மேலாதல் (பிங்.); to excel, surpass. "விஞ்சிய ஞானம் விளங்கும்" (தாயு. பராபர. 154).

தெ. மிந்த்சு; ம. மிஞ்சு; க., து. மிஞ்சு.

விஞ்சு[2]–தல் viñju-, 9 செ.கு.வி. (v.i.) மிகுதியாதல்; to be excessive. "விஞ்சு குளிர்ப் பல்லவ மனுங்க" (கம்பரா. சூர்ப்ப. 31).

விட்டடி–த்தல் viṭṭaḍi-, 3 செ.குன்றாவி. (v.t.) 1. கைவிட்டுப்போதல்; to desert. 2. வெருட்டி யடித்தல்; to drive out, chase. 3. பந்து முதலியவற்றை வெகுதூரஞ் செல்லும்படி அடித்தல் (இ.வ); to strike a long distance, as a ball.

விட்டி–த்தல் viṭṭi-, 11 செ.கு.வி. (v.i.) மலங்கழித்தல்; to evacuate the bowels.

விட்டுப்பிடி–த்தல் viṭṭu-p-piḍi-, 4 செ. குன்றாவி. (v.t.) 1. ஒரு செயலைச் சிறிது காலம் விட்டிருந்து மீண்டுந் தொடங்குதல்; to abandon a job temporarily and begin again. "அக்காரியந்தன்னை விட்டுப்பிடிக்க அமையும்" (திவ். இயற். திருவிருத். 46, வ்யா. பக். 264). 2. கண்டிக்காமற் சிறிது இடங் கொடுத்தல்; to allow some degree of latitude. 'பையனிடம் கண்டிப்பாயிராமல் கொஞ்சம் விட்டுப்பிடிக்க வேண்டும்'. 3. சற்றுப் பொறுத்து மறுபடியும் தொடர்தல்; to pause a little and resume, as in reading etc. 4. துளைக்கருவியை விரலால் தடவி இசைத்தல்; (MUS.) to run one's fingers over the keys or stops of a holed musical instrument. "தர்ச்சனி முதலாக விட்டுப்பிடிப்பது ஆரோகணம்" (சிலப். 3, 58, அரும்.).

விட்டுப்போ–தல் viṭṭu-p-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. நீங்கிவிடுதல்; to be left, to be abandoned. 2. மிக்க நோவாயிருத்தல்; to have smarting pain. 'கை கால்கள் விட்டுப் போகின்றன'.

விட்டுவிடு–தல் viṭṭu-viḍu, 18 செ.குன்றாவி. (v.t.) 1. பிடிப்பு விடுதல்; to let go, to loose one's hold upon. 2. விலகி விடுதல்; to forego, resign, relinquish, give up, abandon.

விட்டெறி–தல் viṭṭeṟi, 2 செ.குன்றாவி. (v.t.) 1. தூர விழும்படி எறிதல்; to throw away, to fling. "ஒருவரை யொருவர் விட்டெறிவர்" (கம்பரா. வாலிவ. 47.). 2. நீக்குதல்; to leave, abandon.

விடயி–த்தல் viḍayi-, 11 செ.குன்றாவி. (v.t.) பொறிகள் புலனைப் பற்றுதல்; to perceive, to apprehend through the senses. "அவையொன்றையும் விடயியா வாகலான்" (சி.போ. பா.5, 1, பக். 106, சுவாமிநா.)

விடாய்[1]–த்தல் viḍāi-, 11 செ.கு.வி. (v.i.) 1. நீர்வேட்கை யெடுத்தல்; to thirst. "விடாய்த்த காலத்திலே வாய் நீருறுதற்கு" (மலைபடு. 136, உரை). 2. களைப்படைதல்; to grow faint and weary, to be tired out. 'எருது உழுகிறது, உண்ணி விடாய்க்கிறது'. 3. விருப்பப்படுதல்; to long for.

விடாய்[2]–த்தல் viḍāy-, 11 செ.கு.வி. (v.i.) செருக்குக் கொள்ளுதல் (இ.வ); to be haughty, to be stiff with pride.

விடி–தல் viḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. தோற்ற மாதல்; to dawn, to break, as the day. "வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை

யன்றே" (சீவக. 219). 2. முடிவு பெறுதல்; to come to an end, to be ended or finished. "வழிநடப்பதென்று விடியுமெமக் கெங்கோவே" (தனிப்பா. i, 212, 5). 3. நற் காலத்தால் துன்பம் நீங்கி யின்புறுதல். (பரிபா. 7, 85); to see better days.

விடு[1]–தல் viḍu-, 6 செ.குன்றாவி. (v.t.) 1. நீங்குதல்; to leave, quit, part with. "தவ்வையைக் காட்டி விடும்" (குறள், 167), 'அவன் சென்ற ஆண்டே பள்ளியை விட்டுவிட்டான்; சம்பளம் போதாதென்று வேலையை விட்டு விட்டான்'. 2. விலக்குதல்; to remove. 'அவன் காசிக்குச் சென்று வந்ததும் கத்தரிக்காயை விட்டுவிட்டான்'. 3. நீக்குதல்; to get rid of. "தூற்றாதே தூரவிடல்" (நாலடி, 75). 4. பிரித்தல்; to split, separate; to disentangle, as hair. 5. கைவிடுதல்; to abandon, forsake. 'அவன் புதுமணஞ் செய்தவுடன் பழைய மனைவியை விட்டுவிட்டான்'. 6. போகவிடுதல்; to let go. 7. அனுப்புதல்; to despatch, send away. "தவமுது மகளை விட்டு" (குறள். 501, உரை). 8. தொடர்பு விடுத்தல்; to liberate, set free, release. 'அவனுக்கும் எனக்கும் நீண்ட நாட்களாகத் தொடர்பு விட்டுப் போயிற்று'. 9. நிறுத்துதல்; to give up, to leave off, discontinue. 'அந்த பழக்கத்தை விடு', 'வண்டியை விட்ட இடத்திலிருந்து ஓட்டி வந்தான்'. 10. ஒழித்து விடுதல்; to omit, leave out. 'அந்தப் பகுதியை விட்டுப் படித்தான்'. 11. முடித்தல்; to end, finish, conclude. 12. வெளி விடுதல்; to emit, issue, to give out, let out. 13. செலுத்துதல்; to send forth, discharge. "எம்மம்பு கடிவிடுதும்" (புறநா. 9). 14. எறிதல் (பிங்.); to throw. "விடும் விடுங் கரதலத்து" (தக்கயாகப். 413.). 15. சொரிதல்; to pour. "கதிர் விடு தன்மையும்" (கலித். 100). 16. கொடுத்தல்; to give, bestow. "திருப்பணிக்கு விட்டேன்" (S.I.I.iii.121.). 17. சொல்லுதல்; to say, tell. "வேலைகடப்பன் மீளமிடுக்கின்றென விட்டான்" (கம்பரா. மகேந்திர. 4). 18. விளத்தமாகக் கூறுதல்; to describe in detail, to elucidate. 19. வெளிப்படக் கூறுதல்; to publish, expose, tell openly. 20. அனுமதி தருதல்; to permit, let allow. 'அவனை உள்ளே செல்ல விட்டான்'. 21. காட்டித்தருதல்; to indicate, point out. "கெடுதியும் விடீராயின்" (குறிஞ்சிப். 144). 22. வெளிப்படுத்துதல்; to express, give out. "மறைகாவா விட்டவன் புலம்பு விடு குரலோடு" (நெடுநல். 93, 4). 'மனத்தி லுள்ளதை விட்டுச் சொல்' (உவ.). 23. பிதிர் விள்ளுதல்; to solve, as a riddle. 24. உண்டாக்குதல்; to form. "துளைகள் விடுகழை" (திருப்பு. 51). 25. பிடி நெகிழச் செய்தல்; to become loose. 'பணப்பையை எங்கேயோ விட்டுவிட்டான்'. 26. இடத்தினின்று நீங்குதல்; to depart, leave. 'ஊரை விட்டுவிட்டான்' (விரும்பி நீங்குதல்) 'கோட்டையை விட்டுவிட்டான்' (அஞ்சி நீங்குதல்) 27. விடுதலை செய்தல்; to release from the prison. 'அரசரின் முடிசூட்டு விழாவன்று சிறையாளியரையெல்லாம் விட்டு விட்டனர்'. 28. விடுமுறை யளித்தல்; to give holiday. 'வேனிற் காலத்தில் கல்வி நிலையங்களுக்கெல்லாம் விடுமுறை விடப்படும்'. 29. இசைதல்; to consult, agree. 'காசு கொடுத்தபின் ஏவலன் உள்ளே போகவிட்டான்'. 30. பிறருக்காக இழத்தல்; to loss for somebody. 'பொது நலத்திற்காகத் தன்னலத்தை விட்டுக் கொடுத்தல் வேண்டும்'. 31. ஏவுதல்; to set on. 'நாயை விட்டுக் கடிக்கச் செய்தான்'. 32. அடித்தல்; to beat. 'கன்னத்தில் விட்டான் இரண்டு'. 33. வினைக்கமர்த்தல்; to employ, to appoint. 'தண்ணீருக்கென்று நாலாளை விட்டிருக்கிறார்கள்'. 'காடுகெட ஆடுவிடு' (பழ.). 34. அமைத்தல்; to make. 'வீட்டிற்கு நாற்புறமும் வாசல் விட்டுக் கட்டியிருக்கின்றனர்'. 35. ஒளி வீசுதல்; to emit light. 'பட்டை தீர்ந்த கல் நன்றாய் ஒளிவிடும்'. 36. புகுத்துதல்; to put in. 'பாம்புப் புற்றிற்குள் கையை விட்டான்'. 37. இடையில் ஏடு தள்ளுதல்; to slip or miss a leaf in reading or copying. 'கள்ளேடு விட்டுப் படிக்கிறான்'. 38. இடையில் இடம் விடுதல்; to give space. 'ஒற்றையிடைவெளி விட்டுத் தட்டச்சடித்தல் வேண்டும்'. 39. பொறுத்தல்; forbearing. 'கீரையை வளரவிட்டு அறுத்தல் வேண்டும்', 'கொதிக்கின்ற நீரை ஆறவிட்டுக் குடித்தல் வேண்டும்'. 40. ஒழித்தல்; to cause to cease. 'குடியை விட்டு விடு'. 41. ஒதுக்குதல்; to allot. 'புதிய நகரமைப்பிற் கல்விச் சாலைக்குப் போதிய நிலம் விடப்பட்டிருக்கின்றது'. 'விட்டதடா ஆசை விளாம்பழத்து ஓட்டோடே' (பழ.).

விடு[2]–தல் viḍu-, 6 செ.கு.வி. (v.i.) 1. பிரிதல்; to be separated, divided. 2. விள்ளுதல், திறத்தல் (இலக்.அக.); to be opened. 'ஒரு விடுகதை போடு'. 3. கட்டு அவிழ்தல்; to loosen, release. "தளைவிட்ட தாமரை" (கலித். 77). 4. மலர்தல்; to blossom. "தாது பொதி போது விட" (தேவா. 1157, 6). 5. உண்டாகுதல்; to appear; to be formed. 'மரத்தில் தளிர்விட்டிருக்கிறது'. 6. மிகுதல்; to increase. "ஒளிர்விட்ட வாக்கினை" (கலித். 72). 7. தங்குதல்; to stay. "காவினு ணயந்து விட்டார்களே" (சீவக. 1905). 8. தவிர்தல்; to cease, stop. 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை' (பழ.). 9. பிளந் திருத்தல்; to be split, broken or cracked. 'அந்தச்சுவர் விட்டுப் போயிற்று' (வின்.). 10. நிறுத்தல்; to be let off, to be discontinued. 'அது விட்டது தெரியவில்லை'. 11. இடைவெளி விடுதல்; to leave interspace, as in writing. 'இடைவெளி விட்டு எழுத வேண்டும். 12. படிக்கையில் நிறுத்துதல்; to pause, as in reading. 'விட்டு விட்டுப் படிக்க வேண்டும்'. 13. வலுக்குறைதல்; to lose strength. 14. விலகுதல் (இலக்.அக.); to become loose, disjointed. 'மூட்டு விட்டுப் போயிற்று'. 15. அறுபடுதல்; to be cut. 'நூல் விட்டுப்

போயிற்று'.

Ma. viṭuka; **Ko.** viṛ-; **To.** pir; **Ka.** biḍu; **Kod.** buḍ; **Tu.** buḍupuni; **Te.** viḍu, vidusu; **Go.** biṛsānā; **Br.** biting.

விடு[3]–தல் viḍu-, *து.வி.* (aux.) *ஒரு துணை வினை;* an auxiliary verb having the force of certainty, intensity, etc. *'வந்து விட்டான்'.*

விடு[4]–த்தல் viḍu-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. அனுப்புதல்;* to send away, despatch. "போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்" *(தொல். பொ. 39.). 2. போகவிடுதல்;* to let go. "உயிர் விடுத்தலின்" *(கல்லா. கணபதி). 3. தொடர்பு (பந்தம்) விடுவித்தல்;* to free, liberate, release. "பூவலர் கொடியனாரை விடுக்கிய கோயில் புக்கான்" *(சீவக. 2917). 4. நெகிழ்த்துதல்;* to loosen. *5. பிரித்தல்;* to split, separate, to disentangle, as the hair. *'புரை விடுத்துரைமோ' (சீவக. 1732).* "உன்னல் காலே ஊன்றல் அரையே முறுக்கல் முக்கால் விடுத்த லென்றே". *'தலைமயிர் விடுத்துக் கொண்டிருந்தாள்'. 6. பிதிர் விள்ளுதல்;* to slove, as a riddle. *7. செலுத்துதல்;* to send forth, discharge. "ஓருட லிரண்டு கூறுபட விடுத்த... வேலோய்" *(கல்லா. முருகன்றுதி.). 8. சொல்லுதல்;* to stay, tell. "செல்கென விடுத்தன்று" *(பு.வெ.12, பெண்பாற். 19.). 9. வெளிப்படக் கூறுதல்;* to publish, to expose, as a secret, to say openly. *10. வெளிவிடுதல்;* to emit, issue, to let out, give out. "பெருங்காற்று விடுத்த" *(கல்லா. கணபதி). 11. விளத்தமாகக் கூறுதல்;* to elucidate, to describe in detail. *12. விடை தருதல்;* to answer, reply. "வினாயவை விடுத்தல்" *(நன். 40).*

விடு[5]–த்தல் viḍu-, *4 செ.கு.வி.* (v.i.) *1. விடை பெறுதல்;* to receive permission, as from a superior. "விடுத்தேன் வாழிய குரிசில்" *(புறநா. 210). 2. தங்குதல்;* to remain. "விடுத்தான் விடுத்தற் கிடங்கூறி" *(திருவாலவா. 54, 5).*

விடுதா–தல் (விடுதருதல்) viḍu-tā-, *4 செ.குன்றாவி.* (v.t.) *கொடுத்தனுப்புதல்;* to send, as a present. "சிறு தொட்டில்..... உனக்குப் பிரமன் விடுதந்தான்" *(திவ். பெரியாழ். 1, 3, 1).*

விடுதா–தல் (விடுதருதல்) viḍu-tā-, *4 செ.கு.வி.* (v.i.) *தடையின்றி முன் செல்லுதல்;* to advance unchecked. "வெஞ்சின வேந்தன் விடுதர" *(பு.வெ.4, 1, கொளூ.).*

விடை[1]–தல் viḍai-, *3 செ.கு.வி.* (v.i.) *1. பிரிதல் (வின்.);* to become disjointed, to split. *2. சினங் கொள்ளுதல் (வின்.);* to be angry. *3. குற்றஞ்சொல்லுதல் (யாழ்.அக.);* to find fault, to prick holes.

க. பிடய; ம. வெடியுக.

விடை[2]–த்தல் viḍai-, *11 செ.குன்றாவி.* (v.t.) **1.** *வேறுபடுத்துதல்;* to seperate or alter. "விடைப்பருந்தானை வேந்தன்" *(சீவக. 555). 2. அடித்தல்;* to strike. "விடைப்பரே மனிதருந் தம்மில் வெல்லவே" *(சிவதரு. சனன. 63). 3. கண்டித்தல் (வின்.);* to reprove. *4. வெளிப்படுத்துதல் (வின்.);* to reveal or expose.

விடை[3]–த்தல் viḍai-, *11 செ.கு.வி.* (v.i.) *1. மிகுதல்;* to abound; "புன்னை மலர் நாற்றம் விடைத்தே வருதென்றல்" *(தேவா. 69, 2). 2. கடுகுதல்;* to be in haste. "விடைத்துத் தவரை வெகுள்வானும்" *(சிவதரு. பாவ. 36).*

விடை[4]–த்தல் viḍai-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. தடுத்தல்;* to prevent, abstruct, parry. "அவன் புடைத்த கைகளை விடைத்தன னகற்றி" *(பாரத. கீசக. 79). 2. வருந்துதல்;* to affict, cause pain. "விடையா வடந்தை செய் வெள்ளியம் பொருப்பினும்" *(கல்லா. 51).*

விடை[5]–த்தல் viḍai-, *4 செ.கு.வி.* (v.i.) *1. சோர்தல்;* to droop, languish. "விடையா விடையாசரணம்" *(தணிகைப்பு. வீராட்ட.12). 2. விம்முதல்;* to sob. *'விடைக்க விடைக்க அழுகிறான்'. 3. பெருஞ் சினங் கொள்ளுதல் (சூடா.);* to be very angry, to burst into a rage. "விடைத்துவரு மிலங்கைக் கோன்" *(தேவா. 159, 10). 4. வலிப்புக் கொள்ளுதல் (வின்.);* to twitch, as the legs of a beast when dying. *5. விரைத்து நிற்றல்;* to stiffen up, straighten out. *'அவன் விடைத்து நிற்கிறான்'. 6. செருக்குக் கொள்ளுதல்;* to be haughty.

விண்ணப்பி–த்தல் viṇṇappi-, *11 செ.கு.வி.* (v.i.) *1. பெரியோர்முன் பணிந்தறிவித்தல்;* to supplicate. "என் பிழையன்றென..... நின்னடிக்கே விண்ணப்பித்திருந்தேன்" *(அருட்பா. vi, பிள்ளைப்பெரு. 92). 2. செய்யுளைக் கடவுள் திருமுன்பு ஓதுதல்;* to sing sacred hymns in the presence of deity, almighty. *3. விண்ணப்பம் செய்தல்;* to petition.

வித்தரி–த்தல் vittari-, *11 செ.குன்றாவி.* (v.t.) *1. பெருக்குதல்;* to expand, to enlarge. *2. விரித்துச் சொல்லுதல்;* to expound, to narrate in greater detail.

வித்து[1]–தல் vittu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விதைத்தல்;* to sow. "வித்திய வுழவர் நெல்லொடு பெயரும்" *(ஐங்குறு.3). 2. பரப்புதல்;* to spread, broadcast. "அண்ண லிவனேல் விளியாக் குணத்துதி நாம் வித்தாவா றென்னே" *(சீவக.1611). 3. பிறர் மனத்துப் பதியவைத்தல்;* to impress or imprint on one's mind. "செவிமுதல் வயங்குமொழி வித்தி" *(புறநா. 206).*

வித்தெறி–தல் vitteṛi-, *3 செ.கு.வி.* (v.i.) *விதை விதைத்தல் (வின்.);* to sow seeds.

வித–த்தல் viḍa-, *3 செ.குன்றாவி.* (v.t.) *சிறப்பாகப் பிரித்து எடுத்துரைத்தல்;* to make a specific mention of, to indicate specially.

"கசதப மிகும் விதவாதன மன்னே" (நன். 164).

விதறு–தல் vidaṟu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to tremble, to be agitated, to be shaky. "விதறாவகை யாம்பற்றி" (ஞானவா. மனத். 8.) (திருப்பு. 162). 2. பதறுதல் (வின்.); to be over hasty.

தெ., க., து. பெடரு.

விதிர்[1]–த்தல் vidir-, 11 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to tremble, quiver. "மைபுரை மடப்பிடி மடநல்லார் விதிர்ப்புற" (பரிபா. 10, 47). 2. அஞ்சுதல் (வின்.); to be afraid, to fear.

விதிர்[2]–த்தல் vidir-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. சிதறுதல்; to scatter, throw about. "நெய்யுடை யடிசின் மெய்பெற விதிர்த்தும்" (புறநா. 188). 2. தெறித்தல்; to sprinkle. "விதிர்த்த புள்ளியன்" (சீவக. 2010.). 3. அசைத்தல்; to shake, to brandish, as a sword. "கையிற்றிருவாழியை விதிர்த்தான்" (ஈடு. 2, 4, 9.). 4. உதறுதல்; to shake out, throw off. "கலிமா..... எறிதுளி விதிர்ப்ப" (நெடுநல். 180). 5. பலவாகப் போகடுதல்; to cut into pieces, to reduce to fragments. "கொக்கி னறுவடி விதிர்த்த..... காடி" (பெரும்பாண். 309). 6. சொரிதல்; to pour, as ghee in a sacrifice. "நெய் விதிர்ப்ப நந்து நெருப்பழல்" (நான்மணி. 62).

தெ., து. வெதரு, விதுரு; க. பிதிரு; ம். *vitaṟuku*; கொலா. vid, vidy; குர். *bidra*ānā; குய். viti; **malt.** bidrare.

விதும்பு–தல் vidumbu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நடுங்குதல்; to tremble. "மகளிர் வீழ்பூம் பொதும்பருள் விதும்பினாரே" (சீவக. 2718). 2. விரைதல்; to hasten. "அவர் வயின் விதும்பல்" (குறள். 127-ஆம் அதி.). 3. ஆசைப் படுதல்; to desire, long for, hanker after. "பேதையர் விதும்பி நின்றார்" (சீவக. 2530).

விதை–த்தல் vidai-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. விதை தெளித்தல்; to sow seed. 2. பரப்புதல் (இ.வ.); to publish, make public, to spread abroad. 3. செலுத்துதல்; to deliver, throw, discharge. "விதைக்கு மப்பகழிவிற் பொருநன்" (தக்கயாகப். 726).

விதைமுளை–த்தல் vitai-muḷai-, 4 செ.கு.வி. (v.i.) முதிர்ந்த விதை அதற்குத் தகவான சூழ்நிலையில் முளைத்தல்; sprouting.

விம்மு–தல் vimmu, 5 செ.கு.வி. (v.i.) 1. தேம்பியழுதல் (பிங்.); to heave a sob, as a child. "சிதரரிக்கண் கொண்டநீர் மெல்விரலூழ் தெறியா விம்மி" (நாலடி, 394). 2. வருந்துதல்; to be in distress, agony. "கொடியாள் விளைவித்த வினைக்கு விம்மி" (கம்பரா. நகர்நீங்கு. 124). 3. மகிழ்வுறுதல் (வின்.); to rejoice. 4. பருத்தல்; to swell, to become enlarged. "வார்செலச் செல்ல விம்மும் வனமுலை" (சீவக. 469). 5. மிகுதல்; to extend, expand, to increase. "விம்மகிற் புகையின் மேவி" (சீவக. 2667). 6. நிறைதல்; to be full. "விம்ம வங்கமரர்க் கமுதளித்த வமரர் கோவே" (திவ். பெரியாழ். 2, 2, 9). 7. மலர்தல்; to open, as a flower. "விம்மிய பெருமலர்" (கல்லா. 22, 48). 8. ஒலித்தல்; to sound. "கண்மகிழ்ந்து துடிவிம்ம" (பு.வெ. 2, 8, கொளு).

க. பிம்மு; ம. விம்முக; து. பிம்மிக.

விய[1]–த்தல் viya-, 12 செ.கு.வி. (v.i.) 1. வியப்படைதல்; to wonder. "கேட்டவர் வியப்பவும்" (திருவாச. 3, 154). 2. செருக் குறுதல்; to be proud. "செல்வமெய்தி வியந்தனை யுதவி கொன்றாய்" (கம்பரா. கிட்கிந். 81).

து. bediyuni.

விய[2]–த்தல் viya-, 3 செ.குன்றாவி. (v.t.) 1. வியத்தல்; to wonder at. 2. நன்கு மதித்தல்; to esteem, admire, honour. "வம்பமள்ளரை வியந்தன்று மிழிந்தன்று மிலனே" (புறநா. 77). 3. பாராட்டுதல்; to praise, extol, compliment, felicitate. "விழைந்தொருவர் தம்மை வியப்ப" (நாலடி, 339).

வியர்–த்தல் viyar-, 11 செ.கு.வி. (v.i.) 1. உடலின் மேற்புறத்து நீர்த்துளி தோன்றுதல்; to sweat, perspire. "முயங்க யான் வியர்த்தன னென்றனள்" (குறுந். 84). 2. பொறாமை முதலியவற்றால் மனம் புழுங்குதல்; to feel irritated, as from envy. "வியர்த்த லைய மிகை நடுக் கெனாஅ" (தொல். பொ. 260). 3. சினங் கொள்ளுதல் (பிங்.); to be angry.

க. பெமர்.

விரசு–தல் virašu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மிகவும் விரைவுப்படுத்தல்; to press hard, to urge vehemently, to hasten. 2. சொல்லாற் கடிந்து வெருட்டுதல்; to repel by words of rebuke.

விரட்டு–தல் viraṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. துரத்துதல்; to chase, to drive away. 2. அச்சுறுத்துதல்; to frighten, to intimidate. 3. மிகவும் விரைவுப்படுத்துதல்; to urge vehemently.

விரல்விடு–தல் viral-viḍu-, 20 செ.கு.வி. (v.i.) கைவிரலை விட்டு எண்ணுதல் (இக்.வ.); to count with one's fingers.

விரல்வை–த்தல் viral-vai-, 4 செ.கு.வி. (v.i.) குறும்பு செய்தல் (இ.வ.); to do or attempt mischief.

விரவு[1]–தல் viravu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. கலத்தல்; to mix, mingle, to join, unite. "விரவுமலர் வியன்கா" (நெடுநல். 27). 2. அடைதல்; to approach, draw near. "விரவினோர் தணக்க லாற்றா" (காஞ்சிப்பு. தக்கி. 1). 3. ஒத்தல்; to be similar, akin. "மலைவிரவு நீண்மார்வின் மைந்தன்" (சீவக. 1885).

க., து. பெரசு; ம. விரகுக.

விரவு[2]–தல் viravu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பொருந்துதல்;

to be united, joined, to be mingled, mixed. "புலியுரி விரவிய வரையினர்" (தேவா. 450, 1). 2. நட்புக் கொள்ளுதல்; to cultivate friendship, to keep company. "பணிவாரொடே விரவுமின்" (தேவா. 469, 5).

க., து. பெரசு; ம. விரகுக.

விரி[1]–தல் viri-, 4 செ.கு.வி. (v.i.) 1. பரத்தல்; to expand, to spread out. விரிமுக விசும்பு" (சீவக. 329). 2. மலர்தல்; to open, unfold. "மணத்துடன் விரிந்த கைதை" (கல்லா. 2). 3. தொக்க வேற்றுமையுருபு முதலியன வெளிப்பட விரிதல்; (Gram.) to be expanded, as an elliptical sentence, to be elaborated. 4. முற்றுதல்; to become developed. 5. அவிழ்தல்; to be loosened. "விரிந்துவீழ் கூந்தல் பாரார்" (கம்பரா. உலாவியற். 4). 6. பிளவு கொள்ளுதல்; to split, crack, to burst asunder. 'அந்தச் சுவர் விரிந்து போயிற்று'.

தெ. விரியு; க. பிரி; ம. விரியுக; **Kod.** biri; **Tu.** biriyuni; **Pa.** virng; **Kui.** Vringa; **Kuwi.** ringali; **Kur.** berrnā; **Te.** ara-viri.

விரி[2]–த்தல் viri-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. விரியச் செய்தல்; to cause to expand, to open, unfold. 2. விளக்கியுரைத்தல்; to expound, to explain, to elaborate, as in writing or in speaking. "நூல் விரித்துக் காட்டினும்" (நாலடி, 341). 3. பரப்புதல்; to extend, to spread. "பல்கதிர் விரித்தே" (புறநா. 8). "விரித்த நாணல்" (கம்பரா. கங்கை. 50). 4. கூந்தல் முதலியவற்றை அவிழ்த்து நெகிழ விடுதல்; to unite, loosen, as the tresses of a woman. "விரித்த கருங்குழலும்" (சிலப். 20, வெண்பா, 3).

விருந்தாடு–தல் virundāḍu-, 5 செ.கு.வி. (v.i.) ஒரு வீட்டிற்கு விருந்தாகப் போதல் (சென்னை); to go as a guest.

விருந்திடு–தல் virundiḍu-, 20 செ.கு.வி. (v.i.) நண்பர்க்கு உணவளித்து பணிவிடை செய்தல்; to give a feast, to show hospitality.

விரும்பு–தல் virumbu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. விருப்பப்படுதல்; to wish, long for, to covet, to love, like. "நனிவிரும்பு தாளாண்மை நீருமமிழ் தாய்விடும்" (நாலடி, 200). 2. அழுத்தமாய்க் கருதுதல் (வின்.); to think intensely of.

Mu. virumpuka.

விரை–தல் virai-, 12 செ.கு.வி. (v.i.) 1. வேகமாதல்; to be speedy, swift, rapid. "தன்னை வியந்தான் விரைந்து கெடும்" (குறள்.474). 2. பதைத்தல்; to hurry, hasten. 3. சினங்கொள்ளுதல் (வின்.); to be importunate, intent, eager. 4. மனங் கலங்குதல்; to be perturbed, disturbed in mind. "விரையாது நின்றான்" (சீவக. 513).

Ma. Virayuka; **To.** Pern; **Ka.** beragu; **Kod.** beria; **Tu.** birsu.

விரைபோடு–தல் virai-pōḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. விதையிடுதல்; to sow seed. 2. அலுவல் தொடங்குதல்; to make a beginning, to commence.

மறுவ. வித்திடு-தல்

விரையடி–த்தல் virai-y-aḍi-, 4 செ. குன்றாவி. (v.t.) காளை முதலியவற்றின் விதைப் பையிலுள்ள விதையை நசுக்கி ஆண்மை இல்லாமற் செய்தல்; to castrate.

மறுவ. விதைவாங்குதல்

விரைவை–த்தல் virai-vai-, 4 செ.கு.வி. (v.i.) விதைப்பதற்கு நெல்லை அணியப்படுத்துதல்; to prepare paddy seeds for sowing.

வில்–தல் vil-, 4 செ.கு.வி. (v.i.) விற்கப் படுதல்; to be sold. "அது என்ன விலைக்கு விற்கிறது" (வின்.).

To. pil; **Ka.** bill, bili; **Kod.** bele; **Tu.** bilē; **Te.** vil(u)cu, viluva,vela.

வில்லுழு–தல் villuḻu-, 1 செ.கு.வி. (v.i.) விற்போர் செய்து வாழ்தல்; to earn one's living as a bowman. "வில்லுழு துண்மார்" (புறநா. 170).

விலக்கு–தல் vilakku-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. விலகச் செய்தல்; to turn aside; to divert, to avert, to prevent; to cause, to leave, to put out of the way. "விற்படை விலக்குவ" (சீவக. 567). 2. கூடாதென்று தடுத்தல்; to forbid, prohibit. "யாம் வேண்டேமென்று விலக்கவும்" (கலித். 94). 3. தடைசெய்தல்; to check, retard, obstruct. "விண்ணிற் றிங்கள் விலக்குதன் மேயினார்" (சீவக. 902). 4. அழுத்துதல்; to inset, fix. "வேல் விலக்கி" (திணை மாலை. 30). 5. மாற்றுதல் (பிங்.); to change, to vary. 6. வேலையினின்று தள்ளுதல்; to dismiss, as from a post. 7. வேண்டாத வற்றை நீக்கிவிடுதல் (வின்.); to eschew, discard, remove Irrelevent things. 8. கண்டனம் செய்தல் (வின்.); to repudiate, to controvert, to condemn. 9. பிரித்தல்; to separate. 'அவர்களைச் சண்டை செய்யாதபடி விலக்கு'.

Ma. villakkam; **Ka., Te.** vilu.

விலகு–தல் vilagu-, 5 செ.கு.வி. (v.i.) 1. நீங்குதல்; to withdraw; to leave. 2. பின்னிடுதல்; to recede. 3. ஒதுங்குதல்; to step aside and give way. 4. ஒழுங்கு தவறுதல்; to deviate from, to go astray, to err. 5. இடம் விட்டுப் பெயர்தல்; to be dislocated, to fall out of position. 6. பிரிதல்; to separate, to get away. 7. அசைதல்; to move. "விலகு குண்டலத்தன்" (திவ். திருவாய். 8, 8, 1). 8. செல்லுதல்; to proceed, go. "விலகுஞ் சில வேழம்" (இரகு.யாகப். 19). 9. தூரத்தி லிருத்தல்; to be far off. 10. மாதவிடாயாதல்; to be in menstrual periods. 11. ஒளிவிடுதல் (வின்.); to sparkle, shine.

விலங்கடி–த்தல் vilaṅgaḍi-, 4 செ. குன்றாவி. (v.t.)

விலங்குமாட்டுதல்; to bind with fetters or handcuffs. "இருகால் விலங்கடியா தேவிடில்" (பஞ்ச. திருமுக. 1658).

விலங்கு[1]–தல் vilaṅgu-, 5 செ.கு.வி. (v.i.) 1. குறுக்கிடுதல்; to lie athwart, to be transverse. "ஆறுகெட விலங்கிய வழலவிராரிடை" (கலித்.2). 2. மாறுபடுதல்; to change, become different. "விலங்கானே னாதலினால் விலங்கினேன்" (கம்பரா. சடாயு. 22). 3. விலகு-, 1, 2, 3, 5, 6 பார்க்க; see vilagu-. "பருவரை நாடனீங்கி விலங்காது நெஞ்சுடைந்தது" (திருக்கோ.150, உரை). 4. விலகு-, 4 பார்க்க; see vilagu. "வாவெனச் சென்றாய் விலங்கினை" (கலித். 84). 5. விலகு-, 11 பார்க்க; see vilagu. "வில்விலங்கிய வீரரை" (கம்பரா. பிரமாத். 60).

விலங்கு[2]–தல் vilaṅgu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. தடுத்தல்; to hinder, obstruct. "விலங்குந ரீங்கில்லை வெள்வேலோய்" (பு.வெ.12.பெண்பாற்.19). 2. களைதல் (பிங்.); to pluck, pull up and remove. 3. கொல்லுதல்; to slay. "கழல் வேந்தர் படைவிலங்கி" (பு.வெ.7, 15, கொளூ.). 4. அழித்தல்; to destroy. "ஒரு வரங்கொண்டு விலங்கென..... அவனுருவு திரித்திட்டோன்" (பரிபா. 5, 31). 5. எறிதல் (அக.நி.); to throw. 6. செலவிடுதல் (அக.நி.); to let pass.

விலத்து–தல் vilattu-, 5 செ.குன்றாவி. (v.t.) விலக்கு (யாழ். அக.) பார்க்க; see vilakku.

விலாசு–தல் vilāšu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. முற்றுந் தோல்வியுறச் செய்தல்; to rout, to defeat out and out, as in a discussion. 'வாதத்தில் எதிரியை விலாசிவிட்டான்' 2. வலுவாக அடித்தல்; to beat soundly or strongly. 'சண்டையில் நன்றாக விலாசி விட்டான்' (இ.வ.).

விலாடி–த்தல் vilāḍi-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. எண்ணை பிரித்தல் (இ.வ); to seperate. 2. வரி முதலியன இரட்டை மடங்கு கொடுத்தல் (வின்.); to pay doubly, tribute or tax etc. 3. பல மடங்கு கொடுத்தல்; to pay manifold. 'ஒன்றுக்கு ஐந்தாக விலாடிக் கொடுப்பாயானால் கடன் கொடுப்பேன்' (இ.வ.).

விலாவி–த்தல் vilāvi-, 11 செ.கு.வி. (v.i.) அழுதல்; to bewail, lament. "முதுநகர் விலாவிக்கின்றதே" (சீவக. 1092).

விலாவொடி–த்தல் vilā-v-oḍi, 4 செ. குன்றாவி. (v.t.) 1. கடுமையாக வேலை வாங்குதல்; to extract hard work from. 2. பெருஞ் சிரிப்பு மூட்டுதல்; to cause side-splitting laughter. "வீதியினுறுமவர் தங்களை விலாவொடிப்பும்" (திருவாலவா. 54, 22).

விலைதீர்–தல் vilai-tīr-, 4 செ.கு.வி. (v.i.) விலை உறுதியாதல் (வின்.); to settle or confirm the price.

விலைபெறு–தல் vilai-peṟu, 5 செ.கு.வி. (v.i.) 1. தக்க விலை பெறுதல்; to be worth, a good price. "நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறுஉம்" (நாலடி.115). 2. விலைபோ-, பார்க்க; see vilai-pō-. 3. மதிப்பு மேம்படுதல்; to be valued high.

விலைபேசு–தல் vilai-pēšu-, 9 செ.குன்றாவி. (v.t.) விலைபற்றி உசாவுதல்; to bargain or discuss the price of, to negotiate price.

விலைபோ–தல் vilai-pō-, 9 செ.கு.வி. (v.i.) விலையாதல்; to fetch a price. 'நல்ல மாடானால் உள்ளூரிலே விலை போகாதா?'.

விலையுயர்–தல் vilai-y-uyar-, 2 செ.கு.வி. (v.i.) 1. விலைத்தொகை மிகுதல்; to raise in price. 2. பெருமதிப்புடையதாதல்; to be valuable.

விலையேற்று–தல் vilai-y-ēṟṟu-, 5 செ. குன்றாவி. (v.t.) பண்டங்களின் விலை மிகும்படி செய்தல்; to raise the price, as of an article.

விழி–த்தல் viḻi-, 11 செ.கு.வி. (v.i.) 1. கண்திறத்தல்; to awaken; to open the eyes. "இமையெடுத்துப் பற்றுவே னென்றியான் விழிக்குங்கால்" (கலித்.144). 2. உறக்கம் தெளிதல்; to wake from sleep. "உறங்கி விழிப்பது போலும் பிறப்பு" (குறள்,339). 3. விழிப்பாக இருத்தல்; to be watchful, beware of, to be vigilant, to be wide awake alert. 'அவன் சோர்வு போகாமல் விழித்துக் கொண்டிருப்பவன்'. 4. உண்ணித்து நோக்குதல்; to look at attentively or pointedly. " நாட்டார்கள் விழித்திருப்ப... நாயினுக்குத் தவிசிட்டு" (திருவாச. 5, 28). 5. மருண்டு நோக்குதல்; to gaze, stare. "விண்ணின்று மிழியாம லெப்போதும் வானோர் விழிக்கின்றதே" (பிரபோத. 6, 14). 6. ஒளிர்தல்; to shine. "பொன்ஞா ணிருள் கெட விழிப்ப" (சீவக. 2280). 7. தெளிவாதல்; to be clear. "மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" (தொல். சொல். 394). 8. உயிர் வாழ்தல்; to be alive. "அழற்கணாக மாருயிருண்ண விழித்தலாற்றேன்" (மணிமே. 23, 70).

விழு[1]–தல் viḻu-, 4 செ.கு.வி. (v.i.) 1. கீழ் நோக்கி யிழிதல்; to fall, fall down, to descend; to flowdown. "விழூஉமவ்வெள் ளருவி" (பதிற்றுப். 78, 1). 2. நிலம் படியச் சாய்தல்; to lie prostrate, as in reverence. "பாடல் புரிந்து விழுந்தெழுந்து..... பயில்வித்தார்" (பெரியபு. திருநா. 309). 3. சோர்ந்து வீழ்தல்; to fall down exhausted. "வெஞ்சினவீரர் விழுந்தனர்" (கம்பரா. இராவணன்வதை. 36.). 4. நோய் வாய்ப்பட்டுக் கிடத்தல்; to fall sick or ill, to be bed-ridden. 5. தோற்றுப்போதல்; to be defeated or overthrown. 'அவன் வாக்கு வாதத்தில் விழுந்துவிட்டான்'. 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறார்'. 6. தாழ்தல்; to fall low, decline, slash as prices, to sink to a lower leve. 'விலை விழுந்து விட்டது'. 7.

கெடுதல்; to be destroyed, ruined. "விழுந்தன கொடிய தீவினைப் பரப்பெலாம்" (பிரபுலிங். அக்கமா. உற். 11). 8. சாதல்; to die. 'அவர் விழுந்து போனார்'. 9. மறைதல்; to set, as the sun. "விழுந்த ஞாயிறு வெழுவதன் முன்" (கம்பரா. காப்பு. 9). 10. வழக்கிலின்றி ஒழிதல்; to fall into desuetude, to be disused. 11. தங்குதல்; to settle, to be fixed. 'அவன் நினைவு அதிலே விழுந்தது'. 12. திரண்டு கூடுதல்; to crowed to gether, to swarm. 'மக்கள் வந்து விழுகிறார்கள்'. 13. கிடைத்தல்; to be allotted, to fall to one's lot or share. 'சீட்டு அவனுக்கு விழுந்தது'. 14. பதிதல்; to be imprinted. 'புகைப்படம் நன்றாய் விழுந்திருக்கிறது'. 15. வெளித் தோன்றுதல்; to appear, to be formed, to come out. 'துளை விழுந்த மரம்'. 'மாட்டுக்கு இரண்டு பல் விழுந்திருக்கிறது'. 'கிழங்கு விழுந்தது'. 16. நேர்தல்; to take place, happen. 17. கழிதல்; to pass, to pass away. 'இப்படி நாள் விழுகை யாலும்' (S.I.I.V.140). 18. ஒருவன் மீது தாக்கிச் செல்லுதல். 'பகைமேல் விழுந்தான்'. 19. விருப்பங் கொள்ளுதல்; to exhibit desire. "ஐம்புலன் மேல் விழுந்து" (திருநூற். 13). 20. இடத்திற் பொருந்துதல்; to fit into position. 21. உரிமை முதலியன இறங்குதல்; to devolve. 22. பிறத்தல்; to be born, used in contempt. 'பெண் கட்டை விழுந்தது'. 23. சொல் முதலியன வெளிப்படுதல்; to issue, proceed from, as speech. 24. பிரிவு படுதல்; to become detached. 25. கீழ் நோக்கிப் பாய்தல்; to swoop. 26. ஆறு முதலியன கூடுமிடம்; to decharge, empty as ariver. 27. தொங்குதல்; to hang down, droop. 28. கடுஞ்சினங் கொள்ளுதல்; to fall into a rage. 29. முகம் முதலியன வாடுதல்; to lose animation, as face. 30. பணம் முதலியன முடங்கிக் கிடத்தல்; to be locked up, as capital.

க. பீழு; **Ma.** viṟuka; **Ko.** vig; **To.** pid; **Ka.** biṟisu; **Kod.** bu.L; **Tu.** būruni; **Te.** biddu; **Kui.** vṛiva; **Kuwi.** briali.

விழு²–தல் viḻu-, 4 செ.கு.வி. (v.i.) விரும்புதல், விருப்பங்கொள்ளுதல்; to desire. "ஐம்புலன்மேல் விழுந்து" (திருநூற். 13) (வேக.119).

விழு³–த்தல் viḻu-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. விழச் செய்தல்; to cause to fall, to throw down. "பழைய கால்விழுத்த நெடுவேலைவீழ் வெற்பனை" (பாரத. இராசசூய. 64). 2. மடியச் செய்தல்; to cause to die. "நமன்றமர்... விழுப்பதன் முன்" (தேவா. 420. 6). 3. களைதல்; to abandon, to remove, mitigale, etadicate. 'அரைத்துணியை விழுத்து வை'.

விழுங்கு–தல் viḻungu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1. மென்று தின்னாமல் ஒருசேர வுட் கொள்ளுதல்; to swallow, gulp, as food. "தூண்டிற்பொன் மீன்விழுங்கியற்று" (குறள், 931). 2. முற்றும்விழுங்குதல்; to devour, consume, to absorb, to exhaust. 'நெருப்புஎல்லாவற்றையும்விழுங்கிவிட்டது'. 3. தெளிவின்றிப் பேசுதல் (வின்.); to ulter indistinctly. 4. சொற்களை மழுப்புதல்; to be hesitant in speech, slurring over words. 'ஏன் விழுங்கி விழுங்கிப் பேசுகிறாய்'. 5. வெல்லுதல்; to overcome. "வெம்பு காலினை விழுங்கிட... உம்பர் மீதினிமிர் வாசுகி யொத்தான்" (கம்பரா. இராவணன் தானை. 3). 6. கவர்தல்; to seize, capture, rob. "விடையுடை யினநிரை விழுங்கன் மேயினார்" (சீவக. 1817). 7. கொல்லுதல்; to kill. "கல்லாமந்திரி விஷமுங்கப்பட்டான்" (சீவக. 385). 8. எங்கும் நிறைதல்; to pervade; to swarm everywhere. "வானகம் விழுங்கினர் விண்ணவர் வெளியின் றென்னவே" (கம்பரா. திருவவ. 85).

தெ. மிங்கு; க. முங்கு; ம. விழுங்க.

விழுதுவிடு–தல் viḻudu-viḍu-, 20 செ.கு.வி. (v.i.) 1. ஆல் முதலியவற்றின் கிளைகளி னின்றும் வேர் வெளிப்பட்டுத் தோன்றுதல்; to drop or let down aerial roots, as banyan. 2. ஆழமளத்தல் (வின்.); to take soundings, to cast the lead-line.

விழுந்துபோ–தல் viḻundu-pō-, 8 செ.கு.வி. (v.i.) 1. கீழ் விழுதல்; to fall down. 2. இறத்தல்; to die. 3. குறுக்கு வழியாகச் செல்லுதல்; to cut across. 'அந்த ஊருக்கு இந்த வழியே விழந்து போகவேண்டும்'.

விழை¹–தல் viḻai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. விரும்புதல்; to wish, desire, love, to be anxious for, to covet. "இன்பம் விழையான் வினைவிழைவான்" (குறள், 615) 2. நன்குமதித்தல்; to esteem. "ஒன்னார் விழையுஞ் சிறப்பு" (குறள், 630). 3. ஒத்தல்; to resemble. 'மழைவிழை தடக்கை' (தொல். பொ. 289, உரை).

விழை²–தல் viḻai-, 2 செ.கு.வி. (v.i.) நெருங்கிப் பழகுதல் (இ.வ.); to move closely or intimately.

விள்¹(ளு)–தல் viḷ(ḷu)-, 2 செ.கு.வி. (v.i.) 1. மலர்தல் (சூடா.); to open out, expand, to unfold, as a blossom. 2. உடைதல்; to crack. 'அந்தப் பழம் கீழேவிழுந்ததனால் விண்டு போயிற்று'. 3. வெடித்தல் (யாழ்.அக.); to split, burst. 4. மாறுபடுதல்; to be at variance, to be opposed. "விள்வாரை மாறட்ட வென்றிமறவர்" (பு.வெ.1.14). 5. தெளிவாதல்; to become clear.

Ma. viḷḷuka; **Tu.** bulluni; **pa.** veḷṇg; **Kui.** vlēnda; **Kur.** belbelrnā.

விள்²(ளு)தல் viḷ(ḷu)-, 13 செ.குன்றாவி. (v.t.) 1. பிளத்தல்; to break open, to split. 'பழத்தை விண்டான்'. 2. பகைத்தல்; to hate. "விண்டு..... மண்டினார்" (சீவக. 418). 3. நீங்குதல்; to be separated from, to leave. "வினைகளும் விண்டனன்" (தேவா. 928,

7). 4. சொல்லுதல்; to say, tell, state. "தன்னிடத்து வந்து விள்ளான்" (திருவாலவா. 33, 10). 5. வெளிப்படுத்துதல்; to reveal, make known. "உமக்கே விண்டு பேசினல்லால்" (அஷ்டப். திருவரங்கக். 70). 6. வாய் முதலியன திறத்தல்; to open, as the mouth. "வாய்விண்டு கூறும்" (பாகவத. 1. தன்புத்திர. 29). 7. பிதிர் முதலியன விடுத்தல்; to slove, as a riddle or conundrum. 'இந்தப் பிதிரை விள்ளு'. 8. கலத்தல், விரும்புதல்; to mingle, to desire.

விள¹–த்தல் viḷa-, *4 செ.கு.வி.* (v.i.) *விலக்கல்;* to remove.

விளக்கிடு¹–தல் viḷakkiḍu-, *20 செ.கு.வி.* (v.i.) 1. விளக்கேற்றுதல்; to light lamps. 2. கோயிலில் திருவிளக்கேற்றி வைத்தல்; to burn lights in the temple, as an act of piety.

விளக்கிடு²–தல் viḷakkiḍu-, *18 செ. குன்றாவி.* (v.t.) விளங்கச் செய்தல்; to explain to throw light upon.

விளக்கு¹–தல் viḷakku, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. தெளிவாக்குதல்; to make clear, to explain, elucidate. "சொல்லிக் காட்டிச் சோர்வின்று விளக்கு" (மலைபடு. 79). 2. அறிவிப்புப்படுத்துதல்; to make illustrious. "தம்மை விளக்குமால்" (நாலடி.132). 3. துலக்குதல்; to clearn, brighten, polish. 'பல்லை விளக்குகிறான்', 'பாத்திரத்தை விளக்குகிறான்'. 4. தூய்மை யாக்குதல்; to purify. 'குருவினருளிச்செயல் மனத்தை விளக்கும்'. 5. பரிமாறுதல்; to distribute, serve. "அட்டன யாவையும் விளக்கின மிவர்க்கே" (விநாயகபு. 53, 29). 6. துடைப்பத்தாற் பெருக்குதல்; to sweep, clear up. 7. பொடியிட்டுப் பற்றவைத்தல்; to solder. "பொன்னின் பட்டைமேற் குண்டுவைத்து விளக்கின வளை" (S.I.I.ii.182).

விளக்கு²–தல் viḷakku-, *5 செ.குன்றாவி.* (v.t.) பெரிதாக்குதல் (இ.வ.); to enlarge.

விளக்கேற்று–தல் viḷakkēṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) விளக்கையேற்றுதல்; to light lamps.

விளங்கவை–த்தல் viḷaṅga-vai-, *4 செ. குன்றாவி.* (v.t.) 1. தெளிவாக்குதல்; to make position clear, to make record clear. 2. புகழ்பெறச் செய்தல்; to make illustrious or renowned. 'பெற்ற வயிற்றை விளங்க வைக்க வேண்டும்'.

விளங்கு–தல் viḷaṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) 1. ஒளிர்தல்; to shine. "பகல் விளங்குதியாற் பல்கதிர் விரித்தே" (புறநா. 8). 2. வெளிப் படையாதல்; to become renowned, illustrious. 'அவன் பெயர் எங்கும் விளங்கும்'. 3. பளபளத்தல்; to be polished. 4. தெளிவாதல்; to be clear or plain. 'நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை'. 5. வெற்றி வளர்ச்சி யாதல்; to be prosperous, successful. 'அந்தக்குடி விளங்கவில்லை'. 6. மிகுதல்; to excel, become great. "திறல் விளங்கு சேர்த்தானை" (பு.வெ. 4, 8).

க. பெளகு; ம. விளங்ஙுக; தெ. வெளுங்கு, ஒண்மைக் கருத்து.

விளம்பு–தல் viḷambu-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. சொல்லுதல்; to speak, tell, say. "உற்றது விளம்ப லுற்றேன்" (சீவக. 1694). 2. வெளிப்படக் கூறுதல்; to proclaim openly, make public, reveal. "உடையது விளம்பேல்" (ஆத்திசூடி). 3. பரப்புதல் (பிங்.); to spread abroad. 4. பழகுதற்காகப் பிள்ளைகள் எழுத்தின்மே லெழுதுதல் (இ.வ.); to trace letters over the model of a copy. 5. பரிமாறுதல் (நாமதீப. 711); to serve food. 6. ஆய்தல் (வின்.); to inquire into.

ம. விளம்புக; **To.** pily; **Tu.** bulpuni; **Te.** viḷambaramu.

விளர்¹–தல் viḷar-, *4 செ.கு.வி.* (v.i.) 1. வெளுத்தல்; to become pale, to whiten. "விளரும் விழுமெழும்" (திருக்கோ. 193). 2. முதிராதிருத்தல்; to be imperfect, to be immature. "விளரா வன்பின்" (விநாயகபு. 52, 18).

க. பெளர்; ம. விளர்க.

விளர்²–த்தல் viḷar-, *11 செ.கு.வி.* (v.i.) 1. வெளுத்தல்; to become white or pale. "விளர்த்த வாளினை அசைத்து" (பு.வெ.7, 21, உரை). 2. வெட்குதல்; to feel ashamed. "மேய கலைப்பெண் விளர்ப்ப" (பிரபுலிங். மாயை பூசை. 50).

விளாக்கை–த்தல் viḷākkai-, *4 செ. குன்றாவி.* (v.t.) உழுதல்; to plough. "நுகமின்றி விளாக்கைத்து" (திருவாச. 26, 8).

விளாசு–தல் viḷāšu-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. அடித்தல் (கொ.வ.); to beat, strike. 2. மனத்தில் உறுத்தப் பேசுதல்; to harangue.

விளாவு¹–தல் viḷāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) 1. கலத்தல்; to mix, as cold water with hot water. "கடல் வெதும்பினால் விளாவ நீரில்லை" (ஈடு. 2, 2, அவ.). 2. தழுவிக் கொள்ளுதல் (திவா.); to embrace, move in a friendly way with. 3. விளாசு-, பார்க்க; see viḷāšu-.

விளாவு²–தல் viḷāvu-, *5 செ.குன்றாவி.* (v.t.) சுற்றிச்சுற்றி உழுதல்; to plough round and round."பாழ்ச் செய் விளாவி" (திருவாச. 40, 9).

விளி¹–தல் viḷi-, *4 செ.கு.வி.* (v.i.) 1. இறத்தல்; to die. "விளிந்தாரின் வேறல்லர்" (குறள்.143). 2. அழிதல்; to perish, to be ruined, to become extinct. "விளிவதுகொல்..... மறவர் சினம்" (பு.வெ.1.15). 3. குறைதல்; to diminish. "விளியா நோயுழந்து" (கலித். 53). 4. கழிதல்; to pass away. "வேண்டுநாள்

வறிதே விளிந்தால்" (கம்பரா. நிந்தனை. 31). 5. ஓய்தல்; to cease, to be interrupted. "நாரை... விளியாது நரலும்" (கலித்.128). 6. சினம் கொள்ளுதல்; to be angry. 'விளிந்தாரே போலப் பிறராகி' (பழமொழி.182). 7. நாணமடைதல்; to be overcome with shame, ashamed. "கவிதை பரமன் சொலவிளிந்து" (திருவாலவா. 16, 22). 8. இழிவடைதல்; to be dishonoured or disgraced. "கற்றவ ரவைநடு விளிய" (திருவாலவா. 57, 5). 9. வருத்தப்படுதல் (வின்.); to suffer, regret. 10. மறிதல் (வின்.) (சது.); to turn about.

விளி²–தல் viḷi-, 2 செ.குன்றாவி. (v.t.) சொல்லுதல்; to say, speak, tell. "தீவிளி விளிவன்" (திவ். திருமாலை.30).

விளி³–த்தல் viḷi-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. அழைத்தல்; to call, summon. "கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்" (குறள், 894). 2. சொல்லுதல்; to say, speak, tell. "இராமநாமம் விளித்திட" (கம்பரா. சம்பா. 59). 3. பாடுதல்; to sing. "பஞ்சுரம் விளிப்பினும்" (ஐங்குறு. 311), "விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும்" (திரிகடு.11). 4. அழித்தல்; to destroy, ruin, collapse. "முதல் விளிக்கும் வினையைப் புரியற்க" (விநாயகபு. 2, 59). 5. கொல்லுதல்; to kill. "வெஞ்சின வரக்கரை விளித்து வீயுமோ" (கம்பரா. நிந்தனை. 48). 6. சினத்தல்; to anger. "விளிந்தாரே போலப் பிறராகி" (பழமொ. 182) (செல்வி. 77 வைகாசி 475). 7. மறைந்தவனை வெளிப்படுத்துவது போற் கூப்பிடுதல்; to call.

விளிவி–த்தல் viḷivi-, 11 செ.குன்றாவி.(v.t.) 1.பிறனொருவனைக் கூப்பிடும்படி ஆளனுப்புதல்; to send one to call another. 2. கொல்லச் செய்தல்; to cause to kill.

விளை¹–தல் viḷai-, 4 செ.கு.வி. (v.i.) 1. தவசம் முதலியன விளைதல்; to be produced. "ஆற்ற விளைவது நாடு" (குறள், 732). 2. பயன்றருதல்; to be productive. 'இந்த நிலம் நன்றாய் விளையுமா?' 3. உண்டாதல் (பிங்.); to result. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'. 4. முதிர்தல்; to mature, ripen, as grain. "புன்புல மயக்கத்து விளைந்தன தினையே" (ஐங்குறு. 260). 5. நிகழ்வித்தல்; to occur, happen. "நாசமிவடனால் விளைந்த தென்னா" (கம்பரா. மாயாசீ. 62).

க.பெள், ம.விளயுக; **Ko.** veḷu; **To.** peḷ; **Ka.** beḷe; **Kod.** boḷe; **Tu.** bulē; **Te.** velayu, belayu.

விளை²–த்தல் viḷai-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. பயிர் முதலியன வளரச்செய்தல்; to raise cropscet, cause to grow. "செய்விளைக்கும் வாய்க்கா லனையார் தொடர்பு" (நாலடி, 218). 2. உண்டாக்குதல்; to produce, bring into being. "புகழ் விளைத்தல்" (பு.வெ.2.14). 3. புரிதல்; to perform, as worship. "பூசனை விளைத்த வாறும்" (விநாயகபு. பதிக. 22).

விளையவை–த்தல் viḷaiya-vai-, 4 செ. குன்றாவி. (v.t.) 1. முதிரச் செய்தல் (வின்.); to cause to mature or ripen. 2. பயன் படச் செய்தல்; to make a thing serve its purpose, to make use of. 3. விளை வுண்டாகச் செய்தல்; to cause to be productive. 4. இறுகிக் கட்டியாகும்படி விடுதல் (வின்.); to allow to crystallize, harden. 5. அவுரிச்சரக்கை அழுக வைத்தல் (வின்.); to set aside to ferment, as indigo. 6. ஈமக்காட்டில் பிணத்திற்கு நெருப்பு மூட்டுதல் (வின்.); to kindle a fire for burning a corpse in burial ground, to cremate.

விளையாடு–தல் viḷaiyāḍu-, 5 செ.கு.வி. (v.i.) 1. பொழுதுபோக்காக மனத்துக்கு இன்பந்தருஞ் செயலைப்புரிதல்; to play, sport, recreate. "காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி" (திருவாச. 7, 12). 2. துள்ளிக்குதித்தல்; to gambol. 3. வேடிக்கையாகச் செய்தல்; to do an act light-heartedly. 4. பகடி செய்தல்; to be playful, humorous or funny.

விளைவி–த்தல் viḷaivi-, 11 செ.குன்றாவி. (v.t.) 1. விளையச் செய்தல்; to cause to grow, to cultivate. 2. செயற்கை வழியாகப் பயிர் முதலியன வளர்த்தல் (வின்.); to stimulate growth by artificial means. 3. பயன் தருதல்; to yield results, to bring about consequencesd, to be fruitful.

விற்பிடி–த்தல் viṟ-piḍi-, 4 செ.கு.வி. (v.i.) வில்வித்தை பயிலத் தொடங்குதல்; to stand or commence learning archery. "திண்ணன் விற்பிடிக்கின்றா னென்று" (பெரியபு. கண்ணப்ப. 29).

விற–த்தல் viṟa-, 12 செ.கு.வி. (v.i.) 1. செறிதல்; to be dense; close, to be intense. "கலுழ்ந்துவீ ழருவிப்பாடு விறந்து" (நெடுநல். 97). 2. மிகுதல்; to abound, increase. "களிப்பு விறக்கவிடும் பண்டங்கள் பெருகக் கூட்டில்" (பதிற்றுப். 40, 18, உரை). 3. வெற்றி பெறுதல்; to conquer. 4. போர் செய்தல் (வின்.); to fight. 5. வெருவுதல்; to fear. "விறப்பே வெருஉப் பொருட்டு மாகும்" (தொல். சொல். 348).

விறை¹–த்தல் viṟai-, 11 செ.கு.வி. (v.i.) 1. மரத்துப் போதல்; to grow stiff, as from cold, to become numb. 2. குளிர் முதலியவற்றால் நடுங்குதல் (இ.வ.); to shiver, as from cold. 3. வியத்தல்; to become bewildered. 'குதிரை விறைத்துப் பார்க்கிறது'. 4. செருக்குக் காட்டுதல்; to assume airs. 'யாரிடத்தில் விறைக்கிறாய்?'.

க.பெரெ; ம.விரக்க; **Ko.** verk; **Tu.** beṟagu; **Te.** veṟāgu ; **Kui.** brā.

விறை²–த்தல் viṟai-, 11 செ.கு.வி. (v.i.) 1. பெருமை கொள்ளல்; sense of pride. 2. சினத்தல்; get angry.

வினவு–தல் viṉavu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உசாவுதல்;* to question, enquire. "*அனையையோ நீயென வினவுதி யாயின்*" *(கலித். 76). 2.ஆய்வு செய்தல்;* to investigate, to examine or review judicially. "*நமன்றம ரென்றமரை வினவப்பெறுவா ரலரென்று*" *(திவ்.பெரியதி.10, 6, 5). 3.செவியேற்றல்;* to give ear to, listen to, pay attention to. "*மேயாயே போல வினவி*" *(கலித். 82). 4. கேள்விப்படுதல்;* to hear, receive news of. "*மெலிந்திலன் சுதனென..... காரியும் வினவா*" *(அரிசமய.பராங்.25). 5. நினைதல்;* to bear in mind to think over. "*திருவடி வினவாக் கருவுறை மாக்கள்*" *(கல்லா. 8).*

வினாவறி–தல் viṉā-v-aṟi-, *3 செ.கு.வி.* (v.i.) *அறியுந்திறமை யுண்டாதல் (வின்.);* to begin, to have powers of understanding.

வினைதீர்–த்தல் viṉai-tīr-, *4 செ.கு.வி.* (v.i.) *1. முன் வினையைப் போக்குதல்;* to eradicate the bondage of karma. "*வினையேன் வினைதீர் மருந்தானாய்*" *(திவ். திருவாய். 1, 5, 6). 2. இடையூறு நீக்குதல் (யாழ்.அக.);* to remove or dismiss obstacles or constraints.

å

வீ¹–தல் vī-, *4 செ.கு.வி.* (v.i.) *1. அழிதல்;* to perish, to cease, to disappear. "*வீயாச் சிறப்பின்*" *(புறநா.15). 2. சாதல்;* to die. "*சிலைத் தெழுந்தார் வீந்தவிய*" *(பு.வெ.3,7). 3. நீங்குதல்;* to leave. "*வினைப்பகை வீயாது பின்சென் றடும்*" *(குறள். 207). 4. மாறுதல்;* to change, to vary, to deviate as from one's course. "*வானின் வீயாது சுரக்கும்*" *(மலைபடு.76).*

Ka. bī; **Te.** vīgu.

வீ²–த்தல் vī-, *11 செ.குன்றாவி.* (v.t.) *அழித்தல்;* to destroy. "*ஏழுய ருலகமும் வீக்கின்றான்*" *(கம்பரா. முதற்போ. 118).*

வீக்கு¹–தல் vīkku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கட்டுதல்;* to tie up. "*கச்சையும் வீக்கினன்*" *(சீவக. 1836). 2. அடக்குதல்;* to control, restrain. "*புலன்கள் வீக்கியும்*" *(கம்பரா. காட்சிப். 72). 3. தடுத்தல்;* to hinder. "*உயிர்ப்பினை வீக்கி*" *(பாகவத. 2.மாயவனிலை. 8)* "*கொழும்புகை வீக்கி மாடந் திறந்திட*" *(சீவக. 534). 4. அடித்தல் (நெல்லை.);* to strike.

ம. வீக்குக.

வீக்கு²–தல் vīkku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. நிறைத்தல்;* to fill. *2. விரைவாகச் செலுத்துதல்;* to urge, force out. "*வீக்கினான் றாரை வெய்தா*" *(சீவக. 2661).*

வீக்கு³–தல் vīkku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. உயிரைப் போக்குதல்;* to kill. "*வீக்கு..... வெவ்விடத்தை*" *(கம்பரா. இராவணன் வதை. 122). 2. அழித்தல் (யாழ்.அக.);* to destroy, ruin.

வீங்கு–தல் vīṅgu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பருத்தல் (நாமதீப. 710);* to increase in size, to bulge. *2. பூரித்தல்;* to swell. "*மணந்தநாள் வீங்கிய தோள்*" *(குறள், 1233). 3. வீக்கமுறுதல் (பொருநி.);* to become morbidly inflamed and swollen. *4. வளர்தல் (அக.நி.);* to grow. *5. மிகுதல்;* to be copious or excessive; to increase. "*வளம் வீங்கு பெருக்கம்*" *(பதிற்றுப். 24, 17). 6. நெருங்குதல் (சூடா.);* to be close, crowded. *7. இறுகுதல்;* to become tight and pressing. "*வீங்கிறை தடக்கையின்*" *(குறிஞ்சிப். 123). 8. விறைப்பாய் நிற்றல்;* to be taut and not slack; to be stiff. "*விளரூண் றின்ற வீங்குசிலை மறவர்*" *(அகநா. 89. 10). 9. மேனோக்கிச் செல்லுதல்;* to go up, to ascend. "*நாவிளிம்பு வீங்கி*" *(தொல். எழுத். 96). 10. மெலிதல்;* to become emaciated. '*அவன் வீங்கலாயிருக்கிறான்*'. *11. ஏக்கங் கொள்ளுதல்;* to have morbid desires. *12. உறங்குதல் (யாழ்.அக.);* to sleep.

க. பீகு; ம. வீங்ஙுக; தெ. வீகு.

வீசு¹–தல் vīšu, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. எறிதல் (பிங்.);* to throw, fling, as a weapon, to cast, as a net. "*நின்ற மண்ணாயினுங் கொண்டு வீசுமினே*" *(திவ். இயற். திருவிருத். 53). 2. சிறகடித்தல்;* to flap, as wings. "*வீசுஞ் சிறகாற் பறத்திர்*" *(திவ். இயற். திருவிருத். 54). 3. ஆட்டுதல்;* to swing, as the arm. "*மூங்கில் போன்றிருந்துள்ள தோள் வீசி*" *(திவ். பெரியதி. 3. 7. 5. வ்யா). 4. இரட்டுதல்;* to fan. "*முழவுத் தோளோச்சித் தண்ணென வீசியோயே*" *(புறநா. 50. 13). 5. சுழற்றுதல்;* to wave, flourish, as a sword. "*வருமாய ரோடுடன் வளைகோல் வீச*" *(திவ். பெரியாழ். 3, 4, 6). 6. அடித்தல்;* to strike, beat, flog. '*கழியால் அவனை வீசினான்*'. *7. விரித்து நீட்டுதல்;* to open out, spread, to lengthen, stretch. "*இருஞ்சிறை வீசியெற்றி*" *(கம்பரா. சடாயுவுயிர். 107). 8. மிகுத்திடுதல் (அரு.நி.);* to accumulate. *9. வரையாது கொடுத்தல் (பிங்.);* to give liberally. "*இரவலர் புன்கண்டீர நாடொறும் உரைசா னன்கலம் வரைவில வீசி*" *(பதிற்றுப். 54. 8). 10. சிந்துதல்;* to spill. "*கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ*" *(கலித்.145). 11. சிதறுதல்;* to strew, scatter, sow, as seeds. "*கொள்பத மொழிய வீசிய புலனும்*" *(புறநா. 23). 12. களைதல்;* to lay aside, throw off. "*உடலுறு பாசம்வீசா தும்பர்ச் செல்வாரு மொத்தார்*" *(கம்பரா. கடறாவு.*

11). 13. செய்யா தொழிதல்; to abandon, to leave off, to drop. "*சுடுவேனது தூயவன் வில்லினாற்றற்கு மாசென்று வீசினேன்*" *(கம்பரா. சூளா. 18).*

தெ. வீசு; க. பீசு; ம. வீசுக; **Ko.** vic; **To.** pis; **Kod.** bi-j (bi-di); **து.** bijuni; **Go.** mihitānā; **Kui.** vinja; **Kur.** bikhrnā; **malt.** bengre.

வீட்டு–தல் vīṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. கொல்லுதல் (சூடா.);* to kill. "*அந்தகன் றூதர் வீட்டு முன்னரே*" *(உபதேசகா. சிவபுரா. 40). 2. அழித்தல்;* to destroy. "*என்றன் வெந்தொழில் வீட்டிட*" *(திருவாச. 41. 5). 3. நீக்குதல்;* to remove. "*பிணியை வீட்டி மணித்தடந் தோளினாற்குக் கொடுத்தியோ*" *(கம்பரா. மிதிலைக். 97).*

வீடறு–த்தல் vīḍaṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வழக்கு முதலியன தீர்த்தல்;* to settle, as a case or dispute. "*வழக்குமாறுபட்டு வந்தோர்க்கு அவ்வழக்கு வீடறுப்பன்*" *(பொருந. 188, உரை).*

வீடு[1]–தல் vīḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. கெடுதல்;* to perish, to be destroyed. "**வினை..... வீடுமே**" **(தேவா. 360, 8). 2. சாதல்;** to die. "*வீடுமளவும் விடுகின்றிலேனே*" *(திருமந். 1654). 3. ஒழிதல்;* to cease, end. "*தளர் நடை வருத்தம் வீட*" *(பெரும்பாண். 250).*

வீடு[2]–தல் vīḍu, *5 செ.குன்றாவி.* (v.t.) *விடுதல் (வின்.);* to let off, leave off.

வீடுசெய்–தல் vīḍu-šey-, *1 செ.குன்றாவி.* (v.t.) *1. துறத்தல்;* to renounce, relinguish. "*வீடுமின் முற்றவும் வீடுசெய்து*" *(திவ். திருவாய். 1,2,1.). 2. விடுதலை செய்தல்;* to release. *3. வரி முதலியன விட்டுக் கொடுத்தல்;* to remit, as taxes. "*கறை வீடு செய்ம்மென*" *(சிலப். 28, 204). 4. காணிக்கை செய்தல்;* to surrender, as to God. "*உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்ம்மினே*" *(திவ். திருவாய். 1. 2. 1.).*

வீடுசேர்–தல் vīḍu-šēr-, *3 செ.கு.வி.* (v.i.) *அழிதல்;* to be destroyed or ruined. "*வீடுசேரநீர் வேலைகான் மடுத்து*" *(கம்பரா. நாட்டுப். 61).*

வீடுநுழை–தல் vīḍu-nuḻai-, *2 செ.கு.வி.* (v.i.) *தீய வெண்ணத்துடன் பிறன் வீட்டினுட் புகுதல்;* to tresspass; to enter into a house with an evil intent.

வீடுபார்–த்தல் vīḍu-pār-, *4. செ.குன்றாவி.* (v.t.) *மணவினை முடிந்த சின்னாட் சென்ற பின் மணமகள் பெற்றோர் மணமகன் வீடு சென்று தம் மகள் மனையறம் நடத்தும் திறத்தை பார்த்தல் (த.தி.பக். 21);* parent's to be examined their bride's newly married life at her home.

வீடுபெயர்–தல் vīḍu-peyar-, *2 செ.கு.வி.* (v.i.) *இருப்பிடம் விட்டு வேறிடஞ் செல்லுதல் (வின்.);* to change one's residence or abode or habitat; to migrate. '*வீடு பெயர்ந் தாயிற்றா?*' *(உ.வ.).*

வீடுமாற்று–தல் vīḍu-māṟṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *ஒரு வீட்டை விட்டு மற்றொரு வீட்டிற்குக் குடிபோதல்;* to migrate or shift from one house to another.

வீடெடு–த்தல் vīḍeḍu-, *18. செ.கு.வி.* (v.i.) *1. வீடுகட்டுதல்;* to build a house. "*வீடெடுக்க அஸ்திபாரஞ் செய்பவர்*" *(பரத. ஒழிபி. 3. உரை). 2. அடித்தள மிடுதல்;* to lay the foundation. "*நல்ல வீடெடுப்பவர்*" *(பரத. ஒழிபி. 3.). 3. வாடகைக்கு வீடு எடுத்தல்;* to take house for rent.

வீணைமீட்டு–தல் vīṇai-mīṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *யாழ்நரம்பை ஒன்றியுணர்ந்து சுருதி சேர்த்தல்;* to tune the Yāḻ.

வீத்து[1]–தல் vīttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *அடித்தல் (இ.வ.);* to flog.

வீத்து[2]–தல் vīttu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *ஊற்றுதல்;* to pour. '*என் பாத்திரத்திலும் கொஞ்சம் கஞ்சி வீத்துங்கள்*'.

வீரம்பேசு–தல் vīram-pēšu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. தன் வல்லமையைத் தானே புகழ்தல்;* to boast of one's own prowess. *2. ஆண்மைத் திறங்கூறுதல் (வின்.);* to hector, swagger.

வீராய்–தல் vīrāy-, *10 செ.குன்றாவி.* (v.t.) *சிறிதுசிறிதாக ஒன்றுகூட்டுதல் (யாழ்.அக.);* to scrape together; to gather together little by little.

வீரிட்டழு–தல் vīriṭṭaḻu-,*1 செ.கு.வி.* (v.i.) *கூக்குர லெடுத்துக் குழந்தைத் திடுமென்றழுதல்;* as in children - to cry deeply.

வீரிடு–தல் vīriḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *திடீரெனக் கத்துதல்;* to cry out suddenly, to scream, make a sharp, shrill sound. "*வீரிட்டரக்கியர்..... அழ*" *(இராமநா. உயுத். 58).*

வீழ்[1]–த்தல் vīḻ-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வீழச்செய்தல்;* to cause to fall. "*கூற்றென வேழம் வீழா*" *(சீவக. 2283). 2. வீணாகக் கழித்தல்;* to let pass, to waste. "*வீழ்த்தவா வினையேன் கெடுங் காலமே*" *(தேவா. 1203, 7).*

க. பீழிசு; து. பூரு.

வீழ்[2]–த்தல் vīḻ-, *1 செ.கு.வி.* (v.i.) *நோயால் விழச் செய்தல்;* causing to fall as from disease of illness.

வீற்றிரு–த்தல் vīṟṟiru-, *3 செ.கு.வி.* (v.i.) *1. சிறப்போடிருத்தல்;* to sit in state or majestically. "*கேள்விக்கோ வீற்றிருந்த*"

(சீவக. 30). 2. வேறுபாடு தோன்ற இருத்தல்; to sit with unique distinction. "*வீற்றிருந் தேழுலகுந் தனிக்கோல் செல்ல*" *(திவ். திருவாய். 4, 5, 1). 3. இறுமாந்திருத்தல் (சூடா.);* to sit proudly. *4. கவலையின்றி யிருத்தல்;* to be care-free. "*நாடு..... வீற்றிருந்தாண்மோ வென்றான்*" *(சீவக. 2901). 5. தனிமையாயிருத்தல் (யாழ்.அக.);* to sit alone.

வீறு[1]–தல் viṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. மேம்படுதல்;* to be distinguished, to be eminent. "*போரூர் வீறிவா ழாறுமா முகனே*" *(திருப்போ. சந். குறுங்கழி. 3, 1). 2. மிகுதல்;* to increase. "*வீறுமுண்டி மிசைந்திட*" *(கந்தபு. தானப். 20). 3. கீறுதல்;* to scratch, as with the point of an instrument; to tear. "*நின்மெய்க்கட் குதிரையோ வீறியது*" *(கலித். 96).*

M. viṟu; **K.** beṟe; **Tu.** bīruni; **Te.** viṟugā-baḍu.

வீறு[2]–தல் viṟu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. வெட்டுதல்;* to split, cut. "*தெய்வவாள் வீறப் பொன்றினன்*" *(கம்பரா. சம்பா. 43). 2. அடித்தல்;* to beat, flog. '*அவனை நன்றாய் வீறினேன்*' *(இ.வ).*

bt

வெஃகு–தல் vekku-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. மிக விரும்புதல்;* to desire. "*அருள் வெஃகி*" *(குறள்.176). 2. பிறர் பொருளை இச்சித்தல்;* to covet. "*இலமென்று வெஃகுதல் செய்யார்*" *(குறள்.174).*

வெக்களி–த்தல் vekkaḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *வானந் தெளிவாதல்;* to clear up, as the weather; to be bright with sunshine.

வெக்காளி–த்தல் vekkāḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *1.வானந் தெளிவாதல்;* to clear up as the weather, to be bright with sunshine. *2. மனத்துயர்படுதல் (யாழ்.அக.);* to be grieved at heart.

வெகு–த்தல் vegu-, *செ.குன்றாவி.* (v.t.) *மிகுத்தல்;* to be excessive, abundant. *(யாழ்.அக.).*

வெகுமதி–த்தல் vegumati-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. மேலாக மதித்தல்;* to consider to be of great value, to estimate highly. *2. கண்ணியம் பண்ணுதல்;* to treat with respect.

வெகுமானி–த்தல் vegu-māṉi-, *4 செ. குன்றாவி.* (v.t.) *1. கண்ணியம் செய்தல்;* to treat with respect. *2. பண்நயம் காட்டுதல்;* to treat with civility. *3. இனாங் கொடுத்தல்;* to make presents.

வெட்கம்கெடு–த்தல் veṭkam-keḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *இழிவு படுத்துதல்;* to disgrace (w.).

வெட்கப்படு–தல் veṭka-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.நாண மடைதல்;* to be ashamed. *2. கூச்சமடைதல்;* to be bashful."*அந்தப் பெண் புருடர் முன்வர வெட்கப் படுகிறாள்*".

வெட்கு–தல் veṭku-, *5 செ.கு.வி.* (v.i.) *1. நாணப் படுதல்;* to be ashamed. *2. கூச்சப்படுதல்;* to be bashful. *3. அஞ்சுதல்;* to be afraid (w.).

வெட்டி–த்தல் veṭṭi-, *4 செ.கு.வி.* (v.i.) *கடுகடுப்பாதல்;* to be harsh. "*இத்தனை போது படுத்தின சிறுமையாலே வெட்டித்து*" *(திவ்.திருநெடுந்.21, வ்யா.பக்.188).*

வெட்டிக்கொடு–த்தல் veṭṭi-k-koḍu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. தாராளமாகக் கொடுத்தல்;* to give liberally. *2. உதவுதல்;* to help one with.

வெட்டிப்பேசு[1]–தல் veṭṭi-p-pēšu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.எதிர்த்துச் சொல்லுதல்;* to retort. *2. கண்டித்துச் சொல்லுதல் (சங்.அக.);* to rebuke.

வெட்டிப்பேசு[2]–தல் veṭṭi-p-pēšu-, *செ. கு.வி.* (v.i.) *1.கடுமை யாகப் பேசுதல்;* to speak harshly.

வெட்டு[1]–தல் veṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1.வாள் முதலியவற்றால் பிளவுபட எறிதல்;* to cut, as with a sword or axe."*அரியயன்றலை வெட்டி வட்டாடினார்*" *(தேவா.369, 2). 2. எழுத்து முதலியன பொறித்தல்;* to engrave. *3.தோண்டுதல்;* to dig, as a well. "*கிணறு வெட்டபூதம்புறப்பட்டது*". *4.தவச அளவில் தலை வழித்தல்;* to strike of, as the top of a measure, in measuring grain. "*தலை வெட்டி அள*". *5. தலைமுடியைக் கத்தரித்தல்;* to crop, as the head. *6. துணி முதலியன துண்டித்தல்;* to cut, as a cloth. *7. ஆட்டக் காயைப் பயனற்றதாக நீக்குதல்;* to take away, as a piece in chess and other games. *8.புழு கடித்தல்;* to injure, as insects. *9. அழித்தல்;* to destroy. *10. மறுத்துரைத்தல்;* retort, refute. "*எப்போதும் வெட்டியே பேசுகிறான்*". *11. கடிந்து பேசுதல்;* to speak harshly.

வெட்டு[2]–தல் veṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பளிச்சென மின்னுதல்;* to flash suddenly, as light ring. *2. கடுமையாதல்;* to be harsh. "*வெட்டிய மொழியினன்*" *(கம்பரா.குகப்.9). 3. திடீரென்று நற்பேறு உண்டாதல்;* to have a sudden stoke of fortune.

வெடி[1]–த்தல் veḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. பிளவடைதல்;* to crack, to split. "*வெடிக்கின்ற விப்பியுணித்திலம்*" *(தஞ்சைவா. 232). 2. ஓசையெழப் பிளவுறுதல்;* to burst with a noise. *3. அதிர் வேட்டு முதலியன எழுதல்;* to explode. *4. வெடியோசை யுண்டாதல்;* to make an explosive noise. "*வெடித்த வேலை*"

(கம்பரா. இலங்கையெரி.10). 5. மலர்தல்; to blossom. "வெடித்த போதெல்லாம்..... கொய்தான்" *(செவ்வந்திப்பு. உறையூரழி.47). 6. வெளிக் கிளம்புதல்;* to shoor forth, as tender leaves. "இந்தச் செடியில் மூன்றிலை வெடித்திருக்கிறது". *7. விறைத்து மேலே கிளம்புதல்;* to stiffen and stand upright, to be raised. "வெடித்தவாற் சிறு கன்று" *(அரிச்பு.விவாக. 267). 8. பொறாமையால் துடித்தல்;* to burst with envy.

வெடி–தல் veḍi-, பெதுவினை *1. விடிதல்;* to dawn, to break. "சூபாதெல்லா மென்றூழ் வெடியாத போதிற் கொய்தான்" *(செவ்வந்திப்பு. உறையூரழி.47). 2. நற்காலத்தால் துன்பம் நீங்கி இன்புறுதல்;* to see better days. *3. முடிவு பெறுதல்;* to come to an end.

வெடிதீர்–தல் veḍi-tīr-, செ.கு.வி. (v.i.) குண்டு போடுதல்; to fire a shot (w).

வெடிப்படி–த்தல் veḍi-p-paḍi-, *4* செ.கு.வி. (v.i.) *1. நாற்றம் வீசுதல்;* to emit bad odour. *2. வாந்திக் குணமுண்டாதல்;* to be gualmish, as from a bad odour. *3. வெறுப்பாதல்;* to be disgusting (w).

வெடிபடு–தல் veḍi-paḍu-, *20* செ.கு.வி. (v.i.) *1. பேராசை யுண்டாதல்;* to explode with a loud noise. "வெடிபட முழங்குஞ்சொல் லான்" *(சீவ.265). 2. சிதறுதல்;* to scatter. "மாற்றார் வெடிபட் டோடல்" *(புறநா.93). 3. அச்சமுறுதல்;* to fear. "வெடிபட்டு வீற்று வீற்றோடு மயிலினம் போல்" *(கலைவழி.29).*

வெடிவை[1]–த்தல் veḍi-vai-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. துப்பாக்கியாற் சுடுதல்;* to shoot with a gun. *2. கெடுக்கப்பார்த்தல்;* to seek an opportunity to destroy or injure.

வெடிவை[2]–த்தல் veḍi-vai-, *4* செ.கு.வி. (v.i.) *1. திகைக்கும் படி பொய்ச் சொற்கள் சொல்லுதல்;* to make a surprisingly false statement. *2. சண்டை மூட்டுதல்;* to foment or start a quarrel. "இல்லாவற்றையெல்லாஞ் சொல்லி அவன் வெடிவைத்துவிட்டான்".

வெடிவை[3]–த்தல் veḍi-vai-, *4* செ.கு.வி. (v.i.) திட்டம் போட்டுக் கெடுத்தல்; to everthink to undermine ruin. (S.O.). "அதிகாரியிடம் ஏதோ சொல்லி என் வேலைக்கு வெடி வைத்து விட்டான்".

வெண்டு–தல் veṇḍu-, *5* செ.கு.வி. (v.i.) *1. வற்றிப் போதல்;* to dry, as in the sun. "வெண்டிப்பழுத்தெழும்பிய முதுகும்" *(திருப்பு.802). 2. களைத்தல்;* to be exhausted (w.). "வெண்டி வெறித்து வந்தான்". *3. இல்லாததற்கு ஆசைப்படுதல்;* to be in great want, to hanker. "அவன் சோற்றுக்கு வெண்டிக்கிடக்கிறான்" *(உவ.).*

வெதிர்–த்தல் vetir-, *4* செ.கு.வி. (v.i.) நடுங்குதல்; to tremble. "வெதிர்க்குநரகமே" *(தணிகைப்பு.வீராட்ட.50).*

வெதுப்பு–தல் vetuppu-, *5* செ.குன்றாவி. (v.t.) *1. வாட்டுதல்;* to warm, heat gently. "தீயிலே வெதுப்பியுயி ரொடுந் தின்ன" *(தாயு. சிவன் செயல்.5). 2. பழுக்கக் காய்சுதல்;* to make red-hot. "மீட்டும் வெதுப்பியதோர் செவ்வேல்" *(தஞ்சைவா.113).*

வெதும்பு[1]–தல் vetumpu, *5* செ.கு.வி. (v.i.) *1. இளம் சூடாதல்;* to become warm. *2. சிறிது வாடுதல்;* to lose freshness (w.). *3. வெம்மையாதல்;* to be hot or heated. "விண்குளிர் கொள்ள வோங்கும் வெண்குடை வெதும்புமாயின்" *(சூளா. மந்திர.26). 4. கொதித்தல்;* to boil. "விழி நீர்களூற்றென வெதும்பி யூற்ற" *(தாயு. கருணாகர.9). 5. சினங்கொள்ளுதல்;* to be enraged. *6. மனங் கலங்குதல்;* to be disturbed in mind. "வெதும்பி யுள்ளம்" *(திருவாச. 5, 1).*

வெதும்பு[2]–தல் vedumbu-, *5* செ.கு.வி. (v.i.) *1. வாடுதல்;* be withered, wilt. "கடுமையான வெயிலால் வெற்றிலைக் கொடி வெதும்பி விட்டது". *2. (மனம்) குமைதல், வருந்துதல்;* be grieved. "வீட்டின் அவல நிலையை எண்ணி மனம் வெதும்பினார்".

வெதுவெது–த்தல் vetuvetu-, *4* செ.கு.வி. (v.i.) *1. அரை குறையாக வேதல்;* half cooked. *2. இளஞ் சூடா யிருத்தல்;* to become lukewarm. *3. சிறிது வாடுதல்;* to be partially withered (w.).

வெந்தி[1]–த்தல் venti-, *4* செ.கு.வி. (v.i.) *1. சினங் கொள்ளுதல் (திருப்பு.136);* to get angry. *2. சூடாதல்;* to be hot.

வெந்தி[2]–த்தல் venti-, *4* செ.கு.வி. (v.i.) ஒற்றுமையா தல்; to be united.

வெந்தி[3]–த்தல் venti-, *4* செ.குன்றாவி. (v.t.) கட்டுதல்; to bind.

வெந்நிடு–தல் ven-n-iṭu-, *20* செ.கு.வி. (v.i.) புறங்காட்டுதல் *(பு.வெ.7, 12, உரை);* to retreat, as turning one's back.

வெப்பி–த்தல் veppi-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. சூடாக்குதல்;* to heat. *2. மனக்கொதிப்பு உண்டாக்குதல்;* to make one hot with anger. "வென்றடுகிற பாரை வெப்பித்து" *(பழமொ.294).*

வெம்பு[1]–தல் vembu-, *5* செ.கு.வி. (v.i.) *1. மிகச் சூடாதல்;* to be very hot. "மலை வெம்ப" *(கலி.13). 2. வாடுதல்;* to fade. "வேரோடு மரம்வெம்ப" *(கலித்.10, 4). 3. மனம் புழுங்குதல்;* to be distressed in mind.

"வெம்பினா ரரக்க ரெல்லாம்" (தேவா.776, வ.).

வெம்பு[2]–தல் vembu-, 5 செ.கு.வி. (v.i.) 1. விரும்புதல்; to desire. "வெம்ப வூர்ந்துலாம் வேனிலானினே" (சீவக.410). 2. சினத்தல்; to be angry. 3. பிஞ்சில் பழுத்தல்; to become prematurely ripe. 4. வெஞ்சினம்; violent anger.

வெய்துபிடி–த்தல் veytu-piḍi-, 4 செ.கு.வி. (v.i.) 1. ஒற்றடங் கொடுத்தல்; to apply fomentation. 2. நீராவியால் உடலை வேர்க்கச் செய்தல்; to use steam as a sudorific.

வெய்துயிர்–த்தல் veytu-yir-, 4 செ.கு.வி. (v.i.) வெப்பமாக மூச்சு விடுதல்; to breath hot, as in grief."வெய் துயிர்த்துப் பிறைநுதல் வியர்ப்ப" (அகநா.207).

வெய்துறு–தல் veyturu-, 20 செ.கு.வி. (v.i.) 1. மனங் கலங்குதல் (பிங்.); to be perplexed. 2. துன்புறுதல்; to be distressed. 3. சீற்றங் கொள்ளுதல்; to be angry.

வெயர்–த்தல் veyar-, 4 செ.கு.வி. (v.i.) 1. வேர்வை நீர் உண்டாதல்; to perspire. "புனைநுதல் வெயர்க்க" (பாரத. பன்னிரண்.47). 2. சீற்றம் கொள்ளுதல்; to be angry.

வெருட்டு–தல் veruṭṭu-, 5 செ.குன்றாவி. (v.t.) 1.அச்ச முறுத்துதல்; to terrify, frighten. "பாம்பினாடு படர்ச்டை வைகாட்டி வெருட்டி" (தேவா.676, 2). 2. மலைக்கச் செய்தல்; to confuse, stupefy. "வடி வழகாலேநாட்டைவெருட்டித்திரிகிறகாமன்" (ஈடு.2, 7, 8). 3. விலங்குகள் முதலியவற்றை ஓட்டுதல்; to drive away an animals. 4. வேகமாகச் செல்லத் தூண்டுதல்; to drive fast. "வண்டி மாட்டை வெருட்டு" (உ.வ.).

வெருவா–தல் (வெருவருதல்) veruvā-, 8 செ.கு.வி. (v.i.) 1. அச்சந்தருதல்; to be fearful."வெருவெரு தானை கொடு செருப்பல கடந்து (பதிற்றுப்.70, பதி.)." 2. அஞ்சுதல்; to be afraid. "வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின" (குறள்.599).

வெருவு–தல் veruvu-, 5 செ.குன்றாவி. (v.t.) & செ.கு.வி. (v.i) 1. அஞ்சுதல்; to be afraid of, to be alarmed. "யானை வெரூஉம் புலிதாக் குறின்" (குறள்.599).

வெருள்(ளு)–தல் veruḷ(ḷu)-, 16 செ.கு.வி. (v.i.) 1. மருளுதல்; to be startled, perplexed. "எனைக் கண்டார் வெருளா வண்ணம் மெய்யன்பை யுடையாய் பெறநான் வேண்டுமே" (திருவாச.32, 3). 2. அஞ்சுதல்; to be frightened. "பெருங்குடியாக்கம் பீடற வெகுளி" (பெருங். மகத.24, 84). 3. குதிரை முதலியன மருளுதல்; to shy, to be skittish.

வெல்(லு)[1]–தல் vel(lu)-, 7 செ.குன்றாவி. (v.t.) 1. வெற்றி கொள்ளுதல்; to conquer, over come. "எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்" (முல்லைப். 57). 2. ஒழித்தல்; to destroy, remove. "வல்வினை வெல்லவன்" (திருநூற்.99). 3. ஒத்தல்; to resemble. "வேங்கை வென்ற சுணங்கு (ஐங்குறு.324)". செ.கு.வி. (v.i). 4. மேம்படுதல்; to excel.

வெல்(லு)[2]–தல் vel(lu)-, 7 செ.கு.வி. (v.i.) 1. மேம்படுதல்; to excel. "விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே" (பெரியபு. பாயி.4 .)

வெலவெல–த்தல் velavela-, 3 செ.கு.வி. (v.i.) 1. களைத்தல்; to be faint with fatigue. "பசியால் வெலவெலத்துப் போனான்". 2. கைகால் உதறுதல்; to guake, temble, as one's limbs. "குளிரால் கைகால்கள் வெலவெலக் கின்றன". 3. மலைத்தல்; to be dazed, astonished. "அவன் பேச்சைக் கேட்டு வெலவெலத்துப் போனான்".

வெள்கு–தல் veḷgu-, 9 செ.கு.வி. (v.i.) 1. வெட்குதல்; to be ashamed. "வெள்கிடமகுடஞ் சாய்க்கும்" (கம்பரா. வாலிவதை.73). 2. கூச்சப்படுதல்; to be coy, bashful. "தான்றன் வென்றியை யுரைப்பவெள்க" (கம்பரா. திருவடி.9).3. அஞ்சுதல்; to fear. "வெந்தனகள் கொன்டெறிய வெள்கிம் மயிர்க் கவுரிமா விரியுமே" (சீவக.1897). 4. மனங்குலைதல்; to shudder, to be perplexed.

வெள்ளைபூசு–தல் veḷḷai-pūšū-, 5 செ.கு.வி. (v.i.) 1. சுண்ணாம் படித்தல்; to white wash. 2. தவறு முதலியவற்றை மழுப்புதல்; to gloss over, as mistakes.

வெள்ளையெடு–த்தல் veḷḷai-yeḍu-, 4 செ.கு.வி. (v.i.) 1. பாடையுடன் மேற்கட்டியெடுத்தல் (இ.வ.); to carry the pall. 2. அழுக்காடைகளை வெளுத்தற்கு எடுத்துப் போதல்; to take clothes to the wast.

வெள்ளைவிரி–த்தல் veḷḷai-viri-, 4 செ.கு.வி. (v.i.) பெரியோரை வரவேற்கத் தரையில் வெள்ளாடை விரித்தல்; to spread a white cloth on the floor for guests to walk on in a reception.

வெள்ளைவீசு–தல் veḷḷai-vīšu-, 5 செ.கு.வி. (v.i.) 1. வெள்ளாடை அல்லது வெண்கொடியை அசைத்து அடையாளங் காட்டுதல் (வின்.); to make signals with a white flag or cloth. 2. மகிழ்ச்சிக்கான அடையாளமாக ஆடையை மேலே வீசுதல்; to wave one's cloth for joy.

வெள்ளைவெளு–த்தல் veḷḷai-veḷu-, 4 செ.கு.வி. (v.i.)

ஆடையை யழுக்ககற்றி வெள்ளையாக்குதல்; to wash clothes.

வெளி¹–த்தல் veḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* வெளிப் படையாதல்; to be open or public."வெளித்து வைகுவ தரிதென வவ ருரு மேவி ஒளித்து வாழ்கின்ற தருமமன்னாள்" *(கம்பரா. ஊர்தேடு. 136.). 2.* உத்தி முதலியன வெளியாதல்; to come to light, as dishonest tricks.

வெளி²–த்தல் veḷi-, *4 செ.கு.வி.* (v.i.) *1.* விடிதல்; to break, as the day. *2.* தெளிதல்; to clear as the sight after dimness, or the sky after cloudiness, to brighten, as the sun or moon after being obscured, to become clear, as the meaning of an obscure verse. *3.* வெண்ணிறம் கொள்ளுதல் *(கம்பரா. ஊர்தேடு.136);* to become white. *4.* பயனிலதாதல் *(இலக்.அக.);* to become useless. *5.* வெளிதாதல் *(யாழ்.அக.);* to be vacant.

வெளிகாண்(ணு)–தல் veḷi-kāṇ(ṇu)-, *1 செ.கு.வி.* (v.i.) மழை பெய்தபின் வானம் முகிலின்றித் தோன்றுதல் *(இ.வ.);* to clear, as the sky after rain.

வெளிச்சங்காட்டு¹–தல் veḷiccaṅ-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* வழி முதலியன தெரிய விளக்கு முதலியவற்றால் ஒளி காண்பித்தல்; to furnish light, to brandish a torch in order to light one's path. *2.* ஒளியாற் கப்பல் முதலியவற்றுக்கு அடையாளம் தெரிவித்தல்; to show a light as a signal at sea. *3.* ஒளி செய்தல்; to shine.

வெளிச்சங்காட்டு²–தல் veḷiccaṅ-kāṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1.* தோன்றுதல் *(வின்.);* to appear. *2.* பகட்டுப் பேச்சால்மழுப்புதல்(இவ); to put one off with empty words. *3.* வெளிக்குப் பகட்டாகத் தோன்றுதல்; showy, gandy in dress.

வெளிதிற–த்தல் veḷi-tiṟa-, *2 செ.குன்றாவி.* (v.t.) *1.*வெளியிடுதல் *(யாழ்.அக.);*வெளியிடுதல் to let out express. *2.* வெளிப்படையாதல் *(வின்.);* to be frank. "வெளி திறந்து சொன்னான்".

வெளிநாடு–தல் veḷi-nāḍu-, *5 செ.கு.வி.* (v.i.) வெளியிற் காணப்படுதல் *(யாழ்.அக.);* to be seen outside or in public. *2.* தீய நெறியில் ஒழுகுதல் *(இ.வ.);* to lead an immoral life.

வெளிப்படு–தல் veḷi-p-paḍu-, *20 செ.கு.வி.* (v.i.) *1.* வெளியே வருதல்; to come out, issue forth as breath. *2.*வெளிப்படத்தோற்றுதல்; to become manifest or evident, to become public, to be revealed. "பரவா வெளிப்படா... உரவோர்கட் காமநோய்" *(நாலடி.88). 3.* பொருள் விளக்கமாதல்; to be clear, explicit. "வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா" *(தொல்.சொல்.298).*

வெளியாகு–தல் veḷiyāku-, *7 செ.கு.வி.* (v.i.) *1.* *(திரைப்படம் தேர்தல் முடிவுகள் போன்றவை;* be released. " பள்ளி இறுதித் தேர்வு முடிவுகள் நாளை வெளியாகும்". *2. (உண்மை முதலியவை)* வெளிப் படுதல்; become public, become known. "என்றாவது ஒரு நாள் உண்மை வெளியாகும்.".

வெளியிடு–தல் veḷi-yiḍu-, *18 செ.குன்றாவி.* (v.t.) *1.* *(அஞ்சல் தலை, திரைப்படம் முதலியவற்றை)* பயன் பாட்டிற்குக் கிடைக்கச் செய்தல்; release (stamps, film, etc.) "புதிய அஞ்சல் தலையை அரசு வெளியிட்டது". "அந்தப் படம் அடுத்த மாதம் வெளியிடப்படும்". *2.* செய்தி, உணர்ச்சி முதலியவற்றைப் பலரும் அறியும் வகையில் வெளிப்படுத்துதல்; reveal, publish. "தயங்கித் தயங்கி செய்தியை வெளியிட்டான்" ."மேற்கூறிய செய்திகளை அந்தத் தாளிகை வெளியிட்டிருக்கிறது", "தன்னுடை வியப்பை வெளியிடாமல் இருக்க முடியவில்லை". *3. (நூல் முதலியவற்றை)* அச்சிட்டு வெளிக்கொண்டு வருதல்; publish."வெளியிட்ட ஆயிரம் படிகளும் விற்பனையாகிவிட்டன".

வெளியேறு–தல் veḷi-y-ēṟu-, செ.கு.வி. (v.i.) *1.* வெளியே போதல்; to get out, as from a house. *2.* வீட்டை விட்டு ஓடிப்போதல்; to abandon one's home and go away. "அவன் வெளியேறி விட்டான்". *3.* வெளியூருக்குக் குடிபோதல்; to migrate. *4.* ஏதத்தினின்று தப்பித்து வருதல்; to escape from a danger.

வெளிவ(ரு)–தல் veḷi-vā-, *5 செ.குன்றாவி.* (v.t.) *(புத்தகம், கட்டுரை, கதை முதலியவை தாளிகையில்)* வெளியாதல், *(திரைப்படம் முதன் முறையாக)* திரையிடப்படுதல்; (of books etc.) be published, (of films, etc.) be released. "தாளிகையில் தன் கட்டுரை வெளி வந்திருக்கிறதா என்று ஆவலோடு பார்த்தார்". "இப்போது வெளிவரும் படங்களில் கதை இருப்பதாகத் தெரியவில்லை".

வெளிவா–தல் (வெளிவருதல்) veḷi-vā-, *8 செ.கு.வி.* (v.i.) *1.*பலராலுமறியப்படுதல்; to be public. *2.* பலருக்கும் கிடைக்குமாறு பதிப்பிக்கப் படுதல்; to be published.

வெளிவாங்கு–தல் veḷi-vāṅku-, *5 செ.கு.வி.* (v.i.) மழை பெய்தபின் முகில் கலைந்து வெளிச்சமாதல் *(யாழ். அக.);* to become clear, as the sky after rain.

வெளிவிடு–தல் veḷi-viḍu-, *17 செ.குன்றாவி.* (v.t.) பலரறியச் செய்தல்; to reveal, make known.

வெளிறு–தல் veḷiṟu-, செ.கு.வி. (v.i.) *1. வெண்மையாதல்;* to grow white. *2. நிறங் கெடுதல்;* to become pale. "*அவன் முகம் வெளிறிப் போயிற்று*".

வெளு–த்தல் veḷu-, செ.கு.வி. (v.i.) *1. வெண்மையாதல்;* to become white. "*கீர்த்தி வெளுத்ததே*" *(கலிங்.243). 2. நிறங்கெடுதல்;* to become pale, to lose colour. "*அந்தப் புடவை வெளுத்துவிட்டது*". *3. விடிதல்;* to dawn. "*கிழக்கு வெளுத்தது*". *4. உண்மை நிலை வெளிப் படுதல்;* to become clear or manifest. "*அவர் பெருமை யெல்லாம் வெளுத்துவிட்டது*".

வெற்றிலைவை–த்தல் veṟṟilai-vai-, *4* செ.கு.வி. (v.i.) வெற்றிலை பாக்கு வைத்து திருமணம் முதலிய சிறப்பிற்கு உறவினர் நண்பர் முதலியோரை அழைத்தல்; to invite relations, friends, etc, by offering betels and areca-nuts, as to a wedding.

வெறி¹–த்தல் veṟi-, *4* செ.கு.வி. (v.i.) *1. குடியால் மயங்குதல்;* to be drunk, intoxicated. *2. பித்துப் பிடித்தல்;* to become mad. "*வெளித்த நாய்*". *3. மதங் கொள்ளுதல்;* to be frenzied. "*வெறி பொறி வாரணத்து*" *(கலித்.43). 4. திகைத்தல் (வின்.);* to stare. *5. கடுமையாதல்;* to be furious. "*உருமேறு வெறித்து வீழ*" *(கம்பரா. வாலிவ.30). 6. வெருவுதல், அஞ்சுதல்;* to be frightened. "*நெஞ்சம் வெறியா*" *(கலித்.143). 7. விலங்கு முதலியன வெருளுதல்;* to shy, as a beast. "*வெறித்து மேதியோடி*" *(தேவா.693, 3). 8. ஆவலொடு பார்த்தல் (வின்.);* to look with longing eyes. *9. விறைத்து நிற்றல்;* to stand stiff, to stand on end, as hair. "*வெறித்த குஞ்சியின்*" *(காசிக. சிவ. நிருதி.16).*

வெறி²–த்தல் veṟi-, *4* செ.கு.வி. (v.i.) *1. ஆட்களின்றி வெறுமை யாதல்;* to become empty, as a place devoid of inhabitants. "*அரசனில்லாத அரண்மனை வெறித்துப் போயிற்று*". *2. வானந்தெளிதல்;* to clear away, as clouds. "*மழை நின்று வெறித்துவிட்டது*".

வெறி³–த்தல் veṟi-, *4* செ.கு.வி. (v.i.) வெறுமையுடன் உற்று நோக்கல், பார்வை ஒன்றின் மீது நிலைத்தல்; stare blankly, give a vacant stare. "*சாப்பிடப் பிடிக்காமல் சோற்றை வெறித்தபடி உட்கார்ந்திருந்தான்*". *2. (மாடு முதலியவை) மிரளுதல்;* be faightened. "*குடையைக் கண்டால் மாடு வெறிக்கும் என்று தெரியாதா?*".

வெறிகொள்(ளு)–தல் veṟi-koḷ(ḷu)-, *16* செ.கு.வி. (v.i.) *1. மயக்கங் கொள்ளுதல்;* to become dizzy, to be intoxicated. *2. பித்து கொள்ளுதல்;* to be crazy or mad. *3. வெளி⁴-, 3 பார்க்க;* see veṟi⁴-, 3. "*வெறி கொண் மத மலைகளும்*" *(பாரத. பதினாறாம் போர்.25). 4. (மூர்க்கம்) முருடம் கொள்ளுதல்;* to become furious.

வெறிச்சோடு–தல் veṟiccōṭu-, *5* செ.கு.வி. (v.i.) *(ஓர் இடம்) ஆட்கள் நடமாட்டம் இல்லாமல் இருத்தல், வெறுமையாதல்;* wear a desolate look. "*திருமணம் முடிந்த பிறகு வீடு வெறிச்சோடி விட்டது*".

வெறியாடு–தல் veṟi-y-āṭu-, *5* செ.கு.வி. (v.i.) வெறி யாட்டாடு தல்; to dance under possession by skanda.

வெறியெடு–த்தல் veṟi-y-eṭu-, *4* செ.கு.வி. (v.i.) வெறியாட்டு நிகழ்த்துதல்; to conduct a veṟi-y-āṭṭu. "*தமர்வெறி யெடுப்புழி அதனை விலக்கக் கருதிய தோழி*" *(ஐங்குறு.28, உரை.).*

வெறியோடு–தல் veṟi-y-ōṭu, *5* செ.கு.வி. (v.i.) *1.ஒளி மிகுதியால் கண் வெறித்துப் போதல்;* to be dazzled, as eyes by excessive brilliancy. "*பல புண் மின்னலுங் கண்கள் வெறியோடி விட்டனவே*" *(பாரத. பதினேழாம் போர்.168). 2. ஆற்றாமையுறுதல்;* to be in despair, to be inconsolable.

வெறு¹–த்தல் veṟu-, *4* செ.குன்றாவி. (v.t.) *1. அருவருத்தல்;* to detest, loathe. "*வெறுமின் வினைதீயார் கேண்மை*" *(நாலடி.172). 2. பகைத்தல்;* to hate. *3. வெகுளுதல்;* to be angry at. *4. விரும்பா திருத்தல்;* to dislike. *5. பற்றுவிடுதல்;* to renouce, to be free from attachments. "*வெறுத்தார் பிறப்பறுப்பாய் நீயே*" *(தேவா.310, 10).*

வெறு²–த்தல் veṟu-, *4* செ.கு.வி. (v.i.) *1. மிகுதல்;* to abound. "*வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்*" *(புறநா.53). 2. துன்பமுறுதல்;* to be afflicted. "*எதிரேவருமே சுரமே வெறுப்பவொரேந்த லோடே*" *(திருக்கோ.243, உரை).*

nt

வேகவை–த்தல் vēgavai-, *4* செ.குன்றாவி. (v.t.) சூடாற் பக்குவப்படுத்துதல்; to boil.

வேகி–த்தல் vēgi-, *11 4* செ.கு.வி. (v.i.) *1. விரைதல்;* to be swift. "*பாச தரனெதிர் நீலமயிலொரு பாகனென் வேகியா*" *(பாரத. மணி மான்.52). 2. கோபித்தல்;* to be angry. "*சம்பரன் வேகித்து மதமுறு மிமையோர் சேனை வதஞ்செய்வான்*" *(ஞானவா. வீம.16).*

வேகு–தல் vēgu-, *7* செ.கு.வி. (v.i.) காய்தல்; boiling.

வேசறு–தல் vēšaṟu-, *2* செ.கு.வி. (v.i.) *1. மனஞ் சோர்தல்;* to be weary, fatiqued. *2. வருந்துதல்;* to be vexed, distressed. "*என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை*" *(திருவாச. 6, 50).*

தெ. வேசறு; **க.** பேசறு.

வேசாறு–தல் vēšāṟu-, *15 செ.கு.வி.* (v.i.) *1. வேசறு-, (வின்.) பார்க்க;* see vēšāṟu-. *2. களைப்பாறுதல் (யாழ். அக.);* to rest. *3.ஆறுதல் (யாழ்.அக.);* to be consoled or pacified.

வேட்டையாடு–தல் vēṭṭai-y-āḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கொல்லுதற் கேனும் பிடித்தற்கேனும் காட்டிலுள்ள விலங்கு முதலியவற்றைத் துரத்திச் செல்லுதல்;* to chase, hunt. "கானகத் தெய்தி நி வேட்டையாடி விலங்கின மாய்த்து" *(அரிச்.பு.வேட்டஞ்.3).*

வேடிக்கைபார்த்–தல் vēḍikkai-pārt-, *4 செ.குன்றாவி.* (v.t.) *விளையாட்டாகவும் தெம்பாகவும் கவனித்தல்;* enjoy the scenes, witness passively. "நீ அவனை அடித்தால் நாங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு இருப்போமா?".

வேடுகட்டு–தல் vēḍu-kaṭṭu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. பானையின் வாயை சீலையாற் கட்டுதல் (வின்.);* to tie a cloth over the mouth of a pot. *2. பொட்டணங் கட்டுதல் (யாழ். அக.);* to tie into a bundle.

வேண்டிக்கொள்(ளு)–தல் vēṇḍi-k-koḷ(lu)-, *6 செ.குன்றாவி* (v.t.) *வழிபாடு;* to solicit, pray for, request.

வேண்டியிரு–த்தல் vēṇḍiyiru-, *2 செ.கு.வி.* (v.i.) *இன்றியமை யாததாயிருத்தல்;* to be necessary or indispensable. "இந்தக் காலத்திற்குப் படாடோபம் வேண்டி யிருக்கிறது".

வேண்டு[1]–தல் vēṇḍu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *1. விரும்புதல்;* to want desire. "பகலோடு செல்லாது நின்றீயல் வேண்டுவன்" *(கலித்.145). 2. வழிபடுதல்;* to beg, entreat, request. "வேண்டித்தேவ ரிரக்கவந்து பிறந்ததும்" *(திவ்.திருவாய். 6, 4, 5). 3. விரும்பிக் கேட்டல்;* to listen to with eagerness. "அன்னை வாழி வேண்டன்னை" *(ஐங்குறு.101). 4. விலைக்கு வாங்குதல் (நாமதீப. 704);* to buy purchase.

வேண்டு[2]–தல் vēṇḍu-, *5 செ.கு.வி.* (v.i.) *இன்றியமையாத தாதல்;* to be indispensable, to be necessary. "வேண்டுமே காக்கை கடிவதோர் கோல்" *(நாலடி.41).*

வேதி–த்தல் vēdi-, *4 செ.குன்றாவி.* (v.t.) *1. உலோகத்தை மற்றொன்றாக மாற்றுதல்;* transmuting. *2.பிளத்தல்;* splitting, dividing.

வேப்பிலையடி–த்தல் vēppilai-y-aḍi-, *4 செ.கு.வி.* (v.i.) *1. வேப்பிலையால் உடம்பில் அடித்து மந்திரித்து நோய் தீர்த்தல்;* to effect a magic cure by passing a handful of neem twigs over the body. *2. இசையாத புலனத்தில் ஒருவனை இசைவிக்க முயலுதல்;* to coax a person to yield.

வேம்பா–தல் vēmbā-, *6 செ.கு.வி.* (v.i.) *1. கசப்பாதல்;* to be bitter. *2. வெறுப்புக் குரியதாதல்;* to be disliked. "என்னையும் வேம்பாக்கி" *(தனிப்பா. i, 411, 45).*

வேய்[1]–த்தல் vēy-, *2 செ.குன்றாவி.* (v.t.) *ஒற்றராற் செய்தியறிதல் (மதுரைக். 642, உரை);* to spy out. "வேய்த்திறே, களவு காண்பது" *(ஈடு.3, 8, 3).*

வேய்[2]–த்தல் vēy-, *2 செ.குன்றாவி.* (v.t.) *வஞ்சித்தல்;* to deceive.

வேர்–த்தல் vēr-, *4செ.கு.வி.* (v.i.) *1. உடலின் மேல்புறத்து நீர்த்துளி தோன்றுதல்;* to sweat, perspire. "வேர்த்து வெகுளார் விழுமியோர்" *(நாலடி.64). 2. மனப் புழுக்கம்;* to feel irritated. *3. சினங்கொள்தல்;* to be angry, indignant. "பாலன்மேல் வேர்ப்பது செய்த வெங்கூற்று" *(தேவா.82, 7). 4. அஞ்சுதல்;* to be afraid. "வேர்த்தா ரதுகண்டு விசும்புறைவோர்" *(கம்பரா. அதிகா.22).*

க. பேமர்.

வேர்கல்(லு)–தல் vēr-kal(lu)-, *6 செ.குன்றாவி.* (v.t.) *வேரொடு அழித்தல்;* to root out. "அறத்தை வேர் கல்லும்..... பொய்ச் சூதை மிக்கோர்கள் தீண்டுவரோ" *(நள. கலித்தொ.40).*

வேர்த்துக்கொட்டு–தல் vērttu-k-koṭṭu, *5 செ.கு.வி.* (v.i.) *அதிகமாக வேர்வை நீர் வடிதல்;* to perspire profusely.

வேர்விழு–தல் vēr-viḻu-, *2 செ.கு.வி.* (v.i.) *செடி முதலியன நிலத்தில் நிலைத்து நிற்கும் படி வேர் பதிந்தோடுதல்;* to take root.

வேரறு–த்தல் vēraṟu-, *4 செ.குன்றாவி.* (v.t.) *வேரோடு அழித்தல்;* to root out, extirpate. "அவர் வேரெறுப்பென் வெருவன் மின்" *(கம்பரா. அகத்தியப்.22).*

வேரூன்று–தல் vērūṉṟu-, *5 செ.கு.வி.* (v.i.) *1. செடி முதலியன நிலைபெற்று நிற்கும்படி அவற்றின் வேர் நிலத்திற் பதிந்தோடுதல்;* to take root. *2. அசைக்க முடியாத படி உறுதியாய் நிலை நாட்டப்பெறுதல்;* to be established or settled firmly.

வேலிகட்டு–தல் vēli-kaṭṭu-, *5 செ.குன்றாவி.* (v.t.) *கழி முதலிய வற்றால் இடத்தைச் சூழத்தடுத்து வரம்பிடுதல்;*

to hedge, fence, as a field's to make a hedge or fence.

வேலைசாய்¹–தல் vēlai-cāy-, *2* செ.கு.வி. (v.i.) முடிவுக்கு வருதல்; to come an end, as life. "அவர் பாடு வேலை சாய்ந்துவிட்டது".

வேலைசாய்²–த்தல் vēlai-šāy-, *4* செ.குன்றாவி. (v.t.) *1.*மேற்கொண்ட தொழில் முடித்தல்; to finish as a job. "அந்த காரியத்தை வேலை சாய்த்து விட்டான்". *2.* அழித்தல்; to ruin, make an end of. "அவன் அந்தக் குடியை வேலை சாய்த்து விட்டான்". *3.* கொலை புரிதல்; to slay, murder.

வேலைசெய்¹–தல் vēlai-cey-, செ.குன்றாவி. (v.t.) *1.* தொழிலியற்றுதல்; todowork."வேலைசெய்தாற்கூலி;வேடம் போட்டாற் காசு". *2.* மழிப்பு செய்தல்; to shave. *3.* சூழ்ச்சி செய்தல்; to play tricks.

வேலைசெய்²–தல் vēlai-cey-, செ.கு.வி. (v.i.) *1.*(இயந்திரம் முதலியவை) இயங்குதல்; (machine, etc.) function. "கணிப்பொறி வேலை செய்யும் விதமே தனி". *2.* (மருந்து போன்றவை) பாதிப்பை அல்லது பலனைத் தருதல்; (of medicine, etc.) act on, work. "அரை மணி நேரத்துக்கு முன்பு குடித்த மருந்து இப்போதுதான் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது".

வேலைப்பார்–த்தல் vēlai-p-pār-, *4* செ.குன்றாவி. (v.t.) பணிபுரிதல், தொழில் செய்தல்; so work, work (in an office, etc.). "ஒரு உணவு விடுதியில் வேலை பார்க்கிறார்".

வேலைவாங்கு–தல் vēlai-vāṅgu-, *5* செ.குன்றாவி. (v.t.) பிறரை ஏவி வேலை செய்யும்படி ஏவுதல்; to get work done, to exact work from.

வேலைவை¹–த்தல் vēlai-vai-, *4* செ.கு.வி. (v.i.) வீண் வேலையிடுதல்; to cause one to work unnecessarily.

வேலைவை²–த்தல் vēlai-vai-, *4* செ.கு.வி. (v.i.) ஒருவனைக் காணுதல் முதலியவற்றிற்கு நேரங்குறிப்பிடுதல்; to make appointments.

வேள்–தல் (வேட்டல்) vēḷ-, (vēṭṭal), *11* செ. குன்றாவி. (v.t.) *1.* வேள்விசெய்தல்; to offer sacrifices. "ஓதல் வேட்டல்" (பதிற்றுப்.24, 6). *2.* மணம்புரிதல்; to marry. "மெய்ந்நிறை மூவரை மூவரும் வேட்டார்" (கம்பரா. கடிமணப். 102). *3.* விரும்புதல்; to desire."வயவுறு மகளிர் வேட்டுணினல்லது" (புறநா. 20). *4.* நட்பு கொள்ளல்; to love. "மலர்ந்து பிற்கூம்பாதுவேட்டதேவேட்டதா நட்பாட்சி" (நாலடி. 215).

வேள்வெடு–த்தல் vēḷveḍu-, *4* செ.கு.வி. (v.i.) *1.* மணமகன் வீட்டாருக்கு மணமகள் வீட்டாரும் மணமகள் வீட்டாருக்கு மணமகன் வீட்டாரும் விருந்துக்குரிய வரிசைப் பண்டங்களை யனுப்புதல்; to send presents of food-stuffes from the house of the bride groom to that of the bride and vice versa, at a wedding. *2.*பல பண்டந்தேடிக்கொண்டு போதல் (யாழ். அக.); together and carry varied articles.

வேளைபார்–த்தல் vēḷai-pār-, *4* செ.கு.வி. (v.i.) *1.* நன் முழுத்தம் பார்த்தல்; to fix an auspicious hour. "பெண்ணை ஊருக்கு அனுப்ப வேளை பார்க்க வேண்டும்". *2.* தக்க அமையம் பார்த்தல்; to wait for an opportunity.

வேறா–தல் vēṟā-, *6* செ.கு.வி. (v.i.) *1.* பிரிதல்; to be separated, disunited. "உடல் உயிரின் வேறாயது". *2.*பிறிதாதல்; to be different. "உடல் உயிரின் வேறாயது". *3.* மாறுபடுதல்; to become different or altered. "வளம் பெறினும் வேறாமோ சால்பு" (பு.வெ.8, 31). *4.* மனம் மாறுபடுதல்; to change in one's mind. "வினை வகையான் வேறாரு மாந்தர் பலர்" (குறள்.514). *5.*முன்னையதன்மை குலைதல்; to be spoilt, as in quality. "வெறிகொள் வியன் மார்பு வேறாகச் செய்து" (கலித்.93). *6.* சிறப்புடையதாதல்; to be distinguished or particularised; to be special. "நிமித்தஞ் சொல்வார் பலருள்ளும் நினைன் வேறாகக் கொண்டு" (திணைமாலை.90, உரை). *7.*ஒதுக்காதல்; to be away from. "வேறாகக் காவின் கீழ்ப்போதரு" (கலித்.94). *8.* தனியாதல்; to be alone. "சீவக சாமி வேறா விருந்தாற்கு" (சீவ. 1872).

வேறுகொள்(ளு)–தல் vēṟu-koḷ(ḷu)-, *10* செ. குன்றாவி. (v.t.) *1.*தனிமையான இடத்தைச் சேரவிடுதல்; to remove to a secluded place. "கொடிய வல்வினையேன் றிறங் கூறுமின்வேறுகொண்டே"(திவ்.திருவாய்.6,1,9). *2.* சிறப்புடையதாக மதித்தல்; to mark out, to treat with special regard. "வேறு கொண் டும்மையா னிரந்தேன்" (திவ். திருவாய். 6, 1, 10). *3.* மாறாகக் கொள்ளுதல்; to understand differently. "வெளிறிலாக் கேள்வியானை வேறு கொண்டிருந்து சொன்னான்" (சிவக.200).

வேறுசெய்–தல் vēṟu-šey-, *1* செ.குன்றாவி. (v.t.) *1.* பகை விளைத்தல்; to cause dissensions, to create enmity. "வேந்த னும்மையும் வேறுசெய்து" (சீவக.755). *2.* **வேறுகொள்–, 2** பார்க்க; see vēṟu-koḷ-. "வீரனார் வேறுசெய்து தம்முளென்னை வைத்திடாமையால்" (திவ். திருச்சந். 116).

வேறுநினை–த்தல் vēṟu-niṉai-, *4* செ.கு.வி. (v.i.) *1.* திரிபாக

நினைத்தல்; to think differently to is understand. 2. உதவி செய்தவர்க்கு தீங்கு செய்ய எண்ணுதல்; to be ungreateful and think of doung evil.

வேறுபடுத்து–தல் vēṟu-paḍuttu-, 5 செ. குன்றாவி. (v.t.) 1. மாற்றுதல்; to change, alter. 2. வேற்றுமை; to make different. 3. நட்புப் பிரிவினை செய்தல் (குறள்.467, உரை); to sow discord between, to alienate. 4. பிரித்தல் (சங்.அக.); to separate.

it

வை[1]–தல் vai-, 1 செ.குன்றாவி. (v.t.) 1. பழித்தல்; to abuse, revile. "வைதா னொருவ னொருவனை" (நாலடி.325). 2. சினந் துரைத்தல்; to curse. "வைத வைவின்" (கம்பரா.சிறப்.5). 3. ஏய்த்தல்; to deceive. "வையாது வழக்குரைத் தன்று" (புவெ.1, 18, கொளு).

வை[2]–த்தல் vai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. இடுதல்; to put, place. "வழக்கினுள் வைக்குந் தன்னாளை" (குறள.776). 2. அளித்தல்; to bestow. "ஓர் கண்மணி நிற்கென வைத்ததும்" (கம்பரா. சூளா. 81). 3. இருக்கச் செய்தல்; to seat. "புறங்கடை வைத்துவர் சோறும்" (நாலடி.293). 4. பள்ளிக்கு அனுப்புதல்; to put to school. "பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே" (தனிப்பா.). 5. வேலை முதலியவற்றில் அமர்த்துதல்; to appoint. 6. சேமித்தல்; to lay by, deposit, store up. "வைத்த பொருளும்" (நாலடி.273). 7. பாதுகாத்தல்; to keep in custody, to guard. 8. தனியாக ஒதுக்குதல்; to reserve, set apart. "வைத்தன் றனக்கே தலையுமென்னாவும்" (தேவா.351, 1). 9. சிறையிலிடுதல்; to detain, as in prison. 10. உடைத்தாயிருத்தல்; to possess, have, keep, hold in possession. "புன்னை நித்திலம் வைப்பவும்" (சிறுபாண். 149), "நிரம்பப் பணம் வைத்திருக்கிறான்". 11. அமைதல்; to obtain. "இது எத்தனை அறை வைத்த பெட்டி?". 12. ஓர் ஆண் தன் மனைவியல்லாத பெண்ணையும், ஒரு பெண் தன் கணவனல்லாத ஆணையும் வைப்பாக வைத்துக் கொள்ளுதல்; keep company with, to keep, as mistress. 13. நிலை மாறாதபடி செய்தல்; to allow to remain unaltered. 14. உண்டாக்கல்; to create, set up. "வைத்தானை வானோருலக மெல்லாம்" (தேவா. 384, 8). 15. உருவாக்குதல்; to prepare. "குழம்பு வை". 16. நடத்துதல்; to conduct or maintain for profit. "கடை வைத்திருக்கிறான்". 17. மதித்துப் போற்றுதல்; to pay due regard to. "தந்தை தாயாரை வைத்திருப்பதிலிருந்து ஒருவன் குணத்தை அறியலாம்". 18. உண்மையென்று கொள்ளுதல்; to imagine, suppose. 19. வரையறுத்தல்; to fix, determine. "வைத்த நாள்வரை யெல்லை" (திவ். திரவாய். 3, 3, 10). 20. கணக்கு முதலியன எழுதி வருதல்; to maintain, as accounts. 21. எடுத்துச் சொல்லுதல்; to mention. "கண்மணி நிற்கென வைத்ததும் வைப்பாய்" (கம்பரா. சூளா. 81). 22. மனத்திற் கொள்ளுதல்; to consider. "மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்" (குறள்.214). 23. வழிபடல்; to meditate upon. "சிந்தை யிலவன்றன் சேவடி வைத்து" (சிலப். 11, 106).

வை[3]–த்தல் vai-, 4 செ.குன்றாவி. (v.t.) ஒரு துணைவினை; an auxiliary verb. "அங்கே போட்டு வை".

வை[4]–த்தல் vai-, 4 செ.கு.வி. (v.i.) 1. (போட்டி, தேர்வு முதலியவற்றை) நடத்துதல்; conduct, hold (an event). "பொதுக்குழுக் கூட்டத்தை அடுத்த முறை மதுரையில் வைத்துக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது". 2. (ஒன்றை நடத்துவதற்காக நாள்) தேர்ந்தெடுத்தல், முடிவு செய்தல்; fix (a date). "உங்கள் பெண் திருமணத்தை எந்த மாதம் வைத்திருக் கிறீர்கள்?". 3. (உணவுப் பொருள் முதலியவற்றை உண்ணத்) தருதல்; provide (sth. as food), feed. "பசிக்கிறது, சீக்கிரம் சாப்பாடு வை". 4. (கடை) ஏற்படுத்துதல், அமைத்தல், நடத்துதல்; have or run (ashop). "அவர் வெகு நாளாகக் கடை வைத்து நடத்தி வருகிறார்". 5. (தொலைக் காட்சி, வானொலி, இசைத்தட்டு முதலியவற்றை) இயங்கச் செய்தல்; switch on (a radio), play (a record, etc.). "அந்த இசைத் தட்டை இன்னொரு தடவை வை".

வை[5]–த்தல் vai-, 4 செ.குன்றாவி. (v.t.) 1. கடினமான நோய்; severe disease. 2. வையென்னெவல்; put.

வைகு–தல் vaiku-, 7 செ.கு.வி. (v.i.) 1. தங்குதல்; to halt, stay, tarry; to reside dwell. "நெடுந்திமிற் றெழிலொடு வைகிய தந்தைக்கு" (அகநா.60). "மாலெரியாகிய வரதர் வைகிடம்" (தேவா.467, 9). 2. போது கழிதல்; to pass, as time. "அமுது செய்கைக்குப் போது வைகிற்று" (ஈடு. 7, 10, 4). 3. வற்றுதல்; to dry up, as a river. "காவிரி வைகிய காலத்தினும்" (தஞ்சைவா. 71). 4. விடிதல்; to dawn, as the day. "வைகுறு மீனின்" (பெரும்பாண். 318). 5. புணர்தல்; to cohabit. "காசுகண் பரிய வைகி" (சீவக.586).

வைத்துக்கொள்(ளு)[1]–தல் vaittu-k-koḷ(ḷu)-, 10 செ.குன்றாவி. (v.t.) 1. உரிமையாகக் கொள்ளுதல்; to keep for one's self. 2. நிகழ்ச்சிக்காக உண்மைபோல் ஒப்புக் கொள்ளுதல்; to suppose, take for granted. "நீ சொன்ன படியே வைத்துக் கொள்". 3. வைப்பாட்டியாக அல்லது கள்ளக் கணவனாக

அமர்த்திக் கொள்ளுதல்; to keep as a mistress or concubine.

வைத்துக்கொள்[2]–தல் vaittu-k-koḷ-,*10* செ.குன்றாவி. (v.t.) (தருக்கம் முதலியவற்றுக்காக ஒன்றை) ஏற்றல்; suppose (for the sake of argument) assume."அவர் சொன்னது உனக்குப் புரியவில்லை என்றே வைத்துக் கொள்வோம்".

வைத்துக்கொள்[3]–தல் vaittu-k-koḷ-, *10* செ.குன்றாவி. (v.t.) *1.* கவனித்துக் கொள்ளுதல், புரத்தல்; treat, take care of, look after. "அவர் என்னை நன்றாகத்தான் வைத்துக் கொண்டார்".

வைத்துப்பாடு–தல் vaittu-p-pāḍu-, *5* செ.குன்றாவி. (v.t.) மணப்பெண் முதலானவர்களை ஒப்பனை செய்து மணையில் வைத்து நலம்பாடுதல்; to decorate and seat on a platform, as a bride, pregnant woman, etc., and sing auspicious songs.

வைப்புவை–த்தல் vaippu-vai-,*4* செ.குன்றாவி. (v.t.) *1.* வைப்பாட்டியாக ஒருத்தியைக் கொள்ளுதல்; to keep as a concubine. *2.* இன்மை இல்பொருள் (சூனியம்) வைத்தல்; to cause evil by witch craft.

வையஞ்சேர்–தல் vaiyañ-cēr-, *2* செ.கு.வி. (v.i.) *1.* நிலத்தில் விழுதல்; to fall to the ground. *2.* இறத்தல்; to-die. "வையஞ் சேர்வான் அழைத்தது" (கம்பரா. உருக்காட்டுப். 74).

வையாளிவிடு–தல் vaiyāḷi-viḍu-,*18* செ.குன்றாவி. (v.t.) Fâiu ghŒªnjhL«go X£Ljš (É‹.); to gallop a horse.

bts

btsî-jš vouvu-, 5 br.F‹whÉ. (v.t.) 1. if¥g‰Wjš; to seize, snatch. 2. Mwiy¤jš; to commit highway robbery. "btsîe® koa" (mfeh. 1). 3. âULjš (ahœ. mf.); to steal. 4. ft®jš; to rivet attention, fascinate. "f©btsî fh£áa" (Ótf.1774). 5. ght« ngŒ KjÈad g‰¿¡ bfhŸSjš; to attack as sin; to possess, as an evil spirit. "bghŒah Ã‹ thÆšNŸ btstš" (gÇgh.8, 84). 6. nk‰ bfhŸSjš; to undertake. "m› Éujª¤ij btsînth®" (Éehafò. 38, 9).